*Issued*—12-7-1961]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

THURSDAY, 2ND MARCH 1961

VOLUME XL—No. 1

*CONTENTS*


| | | PAGES |
|---|---|---|
| I | Obituary reference to Srimathi M. Anjalai Ammal .. .. | 1 |
| II | Questions and Answers .. .. .. .. .. .. | 1-32, 84-86 |
| III | Announcement—Panel of Chairmen .. .. .. .. | 32 |
| IV | General-discussion on the Budget for the year 1961-62 .. | 32-83 |
| V | Papers laid on the table of the House .. .. .. .. | 83 |


©
GOVERNMENT OF MADRAS
1961

*Legislative Assembly Department*
*Madras*

### *Monday, 6th March* 1961.


| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 315–342 420–422 |
| II | Government Bill—The Madras Entertainments Tax (Amendment) Bill, 1961. | 348 |
| III | General discussion on the Budget for the year 1961–62—*cont.* | 343–349 |
| IV | Papers laid on the table of the House .. .. .. .. | 419 |


### *Tuesday, 7th March* 1961.


| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 423–449, 451–452 |
| II | General discussion on the Budget for the year 1961–62—*cont.* | 449 |
| III | Announcement *re* demise of Sri Pandit Govind Ballabh Pant, Union Minister for Home Affairs. | 450 |


### *Wednesday, 8th March* 1961.


| | | |
|---|---|---|
| I | Condolence Resolution on the death of Sri Govind Ballabh Pant, Union Home Minister. | 453–459 |
| II | Questions and Answers .. .. .. .. .. .. | 459–473, 562 |
| III | Government Motion—Order of taking up of Voting on Demands for Grants. | 473–475 |
| IV | General discussion on the Budget for the year 1961–62—*cont.* | 475–537 |
| V | Voting on Demands for Grants for the year 1961–62—Demand XIV—Police. | 538–561 |
| VI | Papers laid on the table of the House .. .. .. .. | 561 |


### *Thursday, 9th March* 1961.


| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 563–586 |
| II | Government Motions— | |
| | (1) Election to the Committee of Privileges for the financial year 1961–62. | 586–587 |
| | (2) Election to the House Committee for the financial year 1961–62. | 587 |
| III | Announcements *re* Bills passed by the Council .. .. .. .. | 587–588 |
| IV | Voting on Demands for Grants for the year 1961–62—*cont.* | |
| | Demand XIV—Police—*cont.* .. .. .. .. .. | 588–639 |
| | Demand XII—Administration of Justice .. .. <br> Demand XIII—Jails .. .. .. .. .. .. | 639–680 |


# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Thursday, the 2nd March 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at ten of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—OBITUARY REFERENCE TO SRIMATHI M. ANJALAI AMMAL.

**MR. SPEAKER:** *சென்னை சட்ட சபையில் பழைய காலத்தில் அங்கத்தினராக இருந்த ஸ்ரீமதி எம். அஞ்சலை அம்மாள் அவர்கள் கடலூர் பெண் அங்கத்தினர் தொகுதியிலிருந்து அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து சட்ட சபையில் நன்றாகப் பணியாற்றி, ஜில்லா போர்ட் அங்கத்தினராகவும் இருந்து உப்பு சத்தியாகிரஹம், நீல் சிலை சத்தியாகிரஹம் ஆகியவைகளில் கலந்து கொண்டு தேசத் தொண்டு ஆற்றினார். அந்த அம்மையார் காலமான செய்தியை இந்தச் சபைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். காலஞ்சென்ற அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் கனம் அங்கத்தினர்கள் எல்லோரையும் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.*

*(சபை அங்கத்தினர்கள் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக எழுந்து நின்றார்கள்.)*

### II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Apples*

* 500 *Q.*—SRI S. M. ANNAMALAI: *கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) ஆப்பிள் பழ ஆராய்ச்சி நடத்தும் நிலையம் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?*

*(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) The Government have sanctioned a scheme for the establishment of a Research Station in Kodaikanal for the improvement of applea produced in the Southern Part of the Country.

* **SRI S. M. ANNAMALAI:** *சுமார் எவ்வளவு திட்டத்தில் இந்த ஸ்கீம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா?*

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** *ஐந்தாண்டு திட்டத்தில் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மொத்தச் செலவு ரூ. 1,67,440. அதிலே அரசாங்கத்தின் பாகம் ரூ. 1,19,000. 'இந்தியன் கவுன்சில் ஆப் அக்ரிகல்சரல் ரிசர்ச் அதனுடைய பாகம் ரூ. 48,440.*

61377

D

V211, 31 'N61

N62.4035

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

TENTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**Volume XL (Nos. 1 to 7).**

**2nd to 4th, and 6th to 9th March 1961.**

TABLE OF CONTENTS.

*Thursday, 2nd March* 1961.


| | | PAGES |
|---|---|---|
| I | Obituary reference to Srimathi M. Anjalai Ammal .. .. | 1 |
| II | Questions and Answers .. .. .. .. .. .. .. | 1–32, 84–86 |
| III | Announcement—Panel of Chairmen .. .. .. .. | 32 |
| IV | General discussion on the Budget for the year 1961–62 .. .. | 32–83 |
| V | Papers laid on the table of the House .. .. .. .. | 83 |


*Friday, 3rd March* 1961.


| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 87–116, 190–191 |
| II | Permission for a Member for putting all the questions of an absentee Member. | 117 |
| III | General discussion on the Budget for the year 1961–62—*cont.* | 117–188 |
| IV | Papers laid on the table of the House .. .. .. .. | 188–189 |


*Saturday, 4th March* 1961.


| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. .. | 193–220, 305–314 |
| II | Announcements— | |
| | (1) The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1961. | 220 |
| | (2) Business of the House .. .. .. .. .. .. | 247–249 |
| III | Government Bill—The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1961. | 221 |
| IV | General discussion on the Budget for the year 1961–62 .. | 221–246, 249–304 |
| V | Papers laid on the table of the House .. .. .. .. | 304 |

*Weavers' Co-operative Societies*

*501 Q.—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI T. T. DANIEL) : Will the Hon the Minister for Industries be pleased to state—

(a) whether loans for working capital are made available to weavers' Co-operative Societies from the Cess Fund through the Reserve Bank of India;

(b) if so, the total amount allotted;

(c) the amount advanced so far; and

(d) the reason for not paying the whole amount?

THE HOH. SRI R. VENKATARAMAN : (a) No loans from the Cess Fund are given towards working capital of Weavers' Co-operative Societies. The Reserve Bank provides credit facilities to the Apex and the Co-operative Central Banks for financing the working capital requirements of the societies.

(b) For the year 1960–61 the Reserve Bank allotted to the several Co-operative Banks credit limits amounting to Rs. 117·59 lakhs.

(c) Rs. 63.97 lakhs.

(d) The Co-operative Central Banks were awaiting instructions from the Reserve Bank to its Madras Office for operating on the credit limits. The instructions have been received by the Reserve Bank's Madras Office. The Co-operative Banks are now drawing funds from the Reserve Bank for financing the Weavers' Co-operative Societies.

*Ammonium Sulphate*

*502 Q.—SRI N. K. PALANISAMI (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூகா, சோழமூர் கிராம கூட்டுறவு சங்கத்தில் தவறான முறையில் விற்பனை செய்யப்பட்டு, வண்டிகளில் போன சல்பேட் உர மூட்டைகளை குடியாத்தம் ரயில்வே ஸ்டேஷனில் பிடித்துக்கொடுக்கப்பட்டதா ?

(இ) அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(உ) வழக்குக்காக செலவு ஆனது எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir. Twenty-four bags of Urea alleged to have been illicitly sold by the Sholam Co-operative Society were seized by the police at the Gudiyattam Railway Station limits on the night of the 10th December 1959.

(b) The Secretary of the Sholamur Co-operative Society was prosecuted under the Fertiliser (Control) Order, 195? in the Court of the Additional First-class Magistrate, Vellore, for selling



fertiliser without preparing bills in the prescribed form. The accused was convicted and sentenced to pay a fine of Rs. 10. The fertiliser bags seized were ordered to be returned to the purchaser.

(c) No expenditure was incurred.

SRI A. A. RASHEED : What is the value of the ammonium sulphate seized?

THE HON. SRI M. BHAKTAVATSLAM : Sir, I do not have these particulars with me now.

*Mettur Dam*

*503 Q.—SRI V. K. KRISHNAMURTHY (on behalf of SRI S. LAZAR) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there is any proposal to increase the storing capacity of (i) Mettur Dam and (ii) Sathanur Anicut; and

(b) if so, when the work will be commenced?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) There is no proposal at present to increase the storage capacity of Mettur Dam. A proposal to raise the full reservoir level of the Sathanur Reservoir by 20 feet is under consideration.

SRI A. GOVINDASAMI : சாத்தனூருடைய நிலைமையை கவனிக்கின்ற நேரத்தில் கீழ் ஆயக்கட்டுதாரர்கள் அதாவது திருக்கோவிலூர், எலிச்சத்திரம் ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப் படுகிறார்கள். அவர்களுக்கு பாதகம் ஏற்படாத அளவுக்கு அரசாங்கம் உத்திரவாதம் அளிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : இந்தத் திட்டம் எதற்காக ஏற்பட்டிருக்கிறதோ அவ்வாறு நடத்தப்படும். கீழே இருக்கிற ஆயக்கட்டுதாரர்களுக்கு ஏற்கனவே அவர்கள் அடைந்திருந்த நன்மையைக் காட்டிலும் நஷ்டம் ஏற்படாது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI P. S. CHINNADURAI : மேட்டூர் அணைக்கட்டை சுமார் 10 அடியாவது உயர்த்தலாம் என்ற அபிப்பிராயம் இருக்கிறதே ? அந்தக் கருத்தை பரிசீலித்து சர்க்கார் ஆலோசிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது இருக்கிற நிலைமையில் அதை உயர்த்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது காவேரி தண்ணீரில் தட்டு இருக்கிறது. அதோடு புதியதாக கரும்பு சாகுபடிக்கு கோடை காலத்தில் தண்ணீர் கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே மேட்டூர் அணையை இன்னும் உயர்த்தி தண்ணீரை அதிகம் தேக்கி அதன் மூலம் விவசாயிகள் பயன் அடைவதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

[22nd March 1961

**THE HON. SRI P. KAKKAN:** ஏற்கனவே மேட்டூர் ரிசர்வாயரில் எவ்வளவு தண்ணீர் நிரப்பவேண்டும் என்று இருக்கிறதோ அவ்வளவு நிரப்புவதற்கு போதுமான அளவு உயரம் இருக்கிறது. அப்படி இல்லாதுபோனால் உயர்த்துவது பற்றி நினைக்க வேண்டியிருக்கும். போதுமான அளவு உயரம் இருக்கும்பொழுது அவ்வாறு உயர்த்துவதுபற்றி நினைக்கவேண்டிய அவசியம் இல்லை.

**SRI A. A. RASHEED:** When will the work of increasing the capacity of the Sathanur Dam be taken up?

**THE HON. SRI P. KAKKAN:** After a decision is taken by the Government.

**SRI M. R. KANDASWAMI MUDALIYAR:** இந்த அணையை 10 அடி உயர்த்துவதினால் ஆபத்து ஒன்றும் இல்லை என்று என்ஜினியர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிற காரணத்தினாலும், நம்முடைய ராஜ்யத்தில் இன்னும் தண்ணீர் வசதி அதிகமாக ஏற்படவேண்டுமென்ற காரணத்தினாலும் என் இந்த அணையை இன்னும் 10 அடி உயர்த்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கக்கூடாது?

**THE HON. SRI P. KAKKAN:** ஏற்கனவே மைசூர், சென்னை சர்க்கார் ஒப்பந்தத்தில் 10 அடி உயர்த்துவதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். ஆனால், அவசியம் இருந்தால்தான் அதைச் செய்யவேண்டும், அதுபற்றி யோசிக்கப்படும்.

**SRI S. M. ANNAMALAI:** சாத்தனூர் அணையை 20 அடி உயர்த்தினால் அதனால் பயன்படக்கூடிய விஸ்தீரணம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா? வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்று சொல்ல முடியுமா?

**THE HON. SRI P. KAKKAN:** உயர்த்துவது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அது முடிந்த பிற்பாடுதான் எங்கே, எந்த மாவட்டத்தில், எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்று சொல்லமுடியும்.

**SRI T. R. RAMAMIRTHA THONDAMAN:** மேட்டூர் அணையை உயர்த்துவதன் மூலம் தேக்கப்படுகின்ற தண்ணீரை உபயோகித்து காவேரியில் பழைய பாசனத்திற்கு விடப்பட்ட காவேரி பாசனத்தில் தண்ணீர் தட்டு இருப்பதை நிவர்த்தி செய்ய சர்க்கார் முயற்சி செய்யுமா?

(பதில் இல்லை.)

**SRI V. K. KRISHNAMURTHY:** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய சாத்தனூர் அணைக்கட்டில், சேமிப்பை அதிகரிக்க வட ஆற்காடு மாவட்டத்தில் அதிக பலன் இல்லாததினால் மேற்கொண்டு அதிக பலன் கொடுப்பதற்கு, அரசாங்கம் முன்வருமா?



2nd March 1961]

**THE HON. SRI P. KAKKAN:** அதுபற்றித்தான் இப்பொழுது சொன்னேன். அதை உயர்த்துவது பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிற்பாடுதான் எங்கே, எந்த ஜில்லாவிற்கு எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கொடுக்கப்படும் என்ற ஒரு முடிவு எடுத்துக்கொள்ள முடியும்.

**SRI M. C. MUTHUKUMARASWAMY:** மேட்டூர் அணை கட்டுவதற்கு முன்னால் வண்டல் எல்லாம் வந்துகொண்டிருந்தது. இப்பொழுது வண்டல் இல்லாத காரணத்தினால் தஞ்சை ஜில்லா ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் வண்டல் வருவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

(பதில் இல்லை.)

**SRI S. RAMALINGA PADAYACHI:** மேட்டூர் அணை கீழே இருக்கிறது, மைசூர் அணை மேலே இருக்கிறது. இந்த மேட்டூர் அணையின் 'கபாஸிடியை' அதிகரிப்பதற்கு மைசூர் அரசாங்கத்திற்கு என்ன தடை இருக்கிறது? ஏன் அவ்வாறு செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI P. KAKKAN:** தடை ஒன்றும் இல்லை. ஏற்கனவே நாம் ஒரு முடிவு செய்திருக்கிறோம். அந்த முடிவினை எப்பொழுதும் நிறைவேற்றுவதற்கு சித்தமாய் இருக்கிறோம். ஒரு வேளை வண்டல் அதிகமாகப் படிந்து நமக்கு வேண்டிய தண்ணீர் இல்லாமல் போனால், அப்பொழுது உயர்த்துவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**SRI R. SRINIVASA IYER:** சாத்தனூர் அணைக்கட்டில் 20 அடிக்கு உயர்த்துவது என்பது இல்லை. அதிலே இரண்டு 'ஷட்டர்ஸ்' 20 அடிக்கு போடக்கூடிய ஸிஸ்டம் இருக்கிறது. அந்த 'கேட்' வேலை நடந்துகொண்டிருக்கிறது என்று எஸ்டிமேட் கமிட்டி அங்கே போன காலத்தில் சொன்னார்கள். அந்த 'கேட்' வேலை நடந்து பூர்த்தியாகிவிட்டதா என்பதைக் கேட்கிறேன்.

**THE HON. SRI P. KAKKAN:** அது பொறுத்தப்பட்ட பிற்பாடுதான் 20 அடி உயர்த்த முடியும். அது சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதை எடுத்துக்கொள்ளலாமா என்பது பற்றி யோசனையில் இருக்கிறது.

## Gold

* 504 *Q.*—**SRI N. K. PALANISAMI:** Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to exploit gold deposits in Rasipuram taluk, Salem district?

**THE HON. SRI R. VENKATARAMAN:** It is proposed to request the Geological Survey of India to include this item for investigation in their Field Programme for 1961–62. This Government also propose to take up detailed investigation of the area as soon as adequate staff is secured.

**Sri N. K. PALANISAMI :** ஏற்கனவே இது சர்வே செய்யப்பட்டதா? அப்படியானல் அதனுடைய முடிவு என்ன?

**The Hon. Sri R. VENKATARAMAN :** ஜியாலாஜிகல் சர்வே செய்யப்படவில்லை. பரிட்சார்த்தமாக மணலை எடுத்துப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். அப்படிப் பரிசீலனை செய்ததில் மிகக் குறைவான தங்கம் தாளாகக் கிடைக்கிறது. ஜியோபிஸிகல் சர்வே செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**Sri A. VEDARATHNAM :** எத்தனை சதவிகிதம் தங்கம் இருப்பதாக இதுவரை செய்த ஆராய்ச்சிமூலம் தெரியவருகிறது?

**The Hon. Sri R. VENKATARAMAN :** அந்த ஊர் கிராமத்தார்கள் சொன்னது என்னவென்றால், ஒருநாள் பூராவும் அரித்தால், அதிர்ஷ்டம் இருந்தால் 4 அணு தங்கம் கிடைக்குமென்று. இல்லாவிட்டால் அதுவும் இல்லை.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR :** எந்த இடத்திலே பரிசீலனை செய்யப்பட்டது? எந்த இடத்திலே தங்கம் இருக்கிறது?

**The Hon. Sri R. VENKATARAMAN :** கனம் அங்கத்தினர் இதன் மூலமாக லாபம் சம்பாதிக்க விரும்புகிறாரோ, என்னமோ? (சிரிப்பு) அதை எல்லாம் இங்கே தெரிவிக்கமுடியாது.

### *Gypsum*

* 505 *Q*.—**Sri S. RAMALINGA PADAYACHI :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா, அரியலூர் பகுதியில் கிடைக்கும் ஜிப்சம் கல்லைக்கொண்டு தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

(இ) ஆமென்றால், அதன் விவரமென்ன?

(உ) இல்லையென்றால், காரணமென்ன?

The Hon. Sri R. VENKATARAMAN : ( ) No, Sir.

(இ) & (உ) Do not arise.

Sri S. RAMALINGA PADAYACHI : இந்த ஜிப்சத்தை பல மாவட்டங்களுக்கு அனுப்பி பல பொருள்கள் செய்து வருகிறார்க உடையார்பாளையம், பெரம்பலூர் தாலுக்காக்களில் என் இந்த் தொழிலை ஏற்படுத்தக்கூடாது?



**The Hon. Sri R. VENKATARAMAN :** தொழிலை நடத்தலாம். யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை. ஒருவரும் இந்தத் தொழிலை நடத்த முன்வரவில்லை. சர்க்கார் எடுத்து நடத்தக்கூடிய நிலைமையில் இல்லை. யார் நடத்த முன்வந்தாலும், சர்க்கார் வேண்டிய உதவி செய்யும்.

**Sri S. RAMALINGA PADAYACHI :** உடையார்பாளையம், பெரம்பலூர் தாலுக்காக்கள் மிகவும் பிற்பட்ட பகுதிகள் என்பது தெரியும். சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது அங்கே தொழில் அமைச்சர் அவர்கள் வருவது இல்லை. ஆகவே அந்தப் பகுதி மக்கள் முன்னேறுவதற்கு அரசாங்கமே இந்தத் தொழிலை ஏன் எடுத்து நடத்தக்கூடாது?

**The Hon. Sri R. VENKATARAMAN :** நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். சர்க்காரே தொழிலை நேரிடையாகச் செய்வதான கொள்கை இல்லை. தனியார் யாராவது நடத்த முன்வந்தால், பண உதவி, இதர உதவி எல்லாம் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri T. R. RAMAMIRTHA THONDAMAN :** இந்தக் கற்கள் திருச்சி ஜில்லாவிலே பழூர் பிர்க்காவிலே ஏராளமாக 25 மைல் சுற்றளவுக்கு கிடைத்து சுண்ணாம்புக் காளவாய்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கற்களைச் சேர்த்து ஒரு தொழிலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் நல்ல முறையில் பயன் பெறும். லாபகரமான முன்னேற்றமும் காணமுடியும். ஆகவே இதை ஸ்பெஷலாகப் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**The Hon. Sri R. VENKATARAMAN :** இப்பொழுதுதான் நான் சொன்னேன். இதை உபயோகிப்பதற்கு யார் முன்வந்தாலும் சர்க்கார் லைசென்சு கொடுத்து, எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க முடியுமென்றும், சர்க்காரே நடத்த இயலாது என்பதையும் தெரிவித்துக்கொண்டேன். தொழில் செய்ய முன்வரக் கூடியவர்கள், அதாவது தனியார் யாராக இருந்தாலும், பொறுப்பு எடுத்துக்கொண்டு நடத்த முன்வரலாம்.

### *Transport Workers*

* 506 *Q*.—Sri T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given in the Legislative Assembly Question No. 544 on 24th March 1960—

(*a*) whether the investigation has been completed; and

(*b*) if so, the result thereof and the action taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The enquiry into the affairs of the Madras State Transport Department Employees'

[2nd March 1961

SRI A. GOVINDASAMI : பஸ்களில் வேலைசெய்யக்கூடிய தொழிலாளரிடமிருந்து வீடுகட்டுவதற்காக எவ்வளவு பணம் வசூலிக்கப்பட்டது ? அந்தத் தொகை இப்பொழுது யாரிடமிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது கோவாப்பரேடிவ் கிரெடிட் சொசைடி சம்பந்தமான கேள்வி. அங்கத் கேட்பது வேறு விஷயம். தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்கப்படும்.

SRI K. VINAYAKAM : May I know the amount that i posed to have been mishandled or defalcated in this society?

THE HON. SRI R. VENKATARAMAN : This is exactly is under investigation. It has been preliminarily estimatec a sum of Rs. 33,000 has not been properly accounted. Pe all the amount might not be misappropriated because account be missing for a few items. That is being investigated now.

*Industrial Estates*

* 507 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon Minister for Industries be pleased to state—

(a) the number of Industrial Estates in the State;

(b) the number occupied; and

(c) the number and the place where industrial production has been started?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Eight.

(b) Seven.

(c) Production has been started in seven Industrial Estates, namely, at Guindy, Virudhunagar. Madurai, Erode, Tiruchirappalli, Pettai and Marthandam.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : சேலத்திலே ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்துவதாக இருந்ததே. எப்பொழுது ஏற்படுத்தப்படும்? தாமதத்திற்கான காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : 1960-ம் வருஷத்திலே தான் அது சாங்ஷன் ஆயிற்று. எந்த இடத்தில் வைக்கலாமென்று இப்பொழுது நிலம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். முதலில் ஒரு இடத்தை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். அது சரியாக இல்லை. ஆகவே இப்பொழுது வேறு ஒரு இடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

SRI A. A. RASHEED : May I know the reason for the non-occupation of the eigth industrial estate?

THE HON. SRI R. VENKATARAMAN : It has been completed only two months back.



2nd March 1961]

*Crackers*

* 508 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to ban the manufacture of " aeroplahe " and " rocket " crackers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

There is however a proposal to ban the firing and display of the type of crackers known as " aeroplane crackers " under section 74 of the City Police Act so far as the Madras City is concerned.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that several fires have occurred due to firing of aeroplane and rocket crackers? If so, will the Government consider the complete banning of manufacture of these two varieties of crackers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Banning of manufacture is to be dealt with by Government of India. I do not have full particulars about the various incidents. If the hon. Member has come across certain serious incidents, I would request him to give me a note about them.

SRI K. VINAYAKAM : In spite of the ban imposed on use of atom bombs and atom crackers, etc., is the Hon. Minister aware of the fact that they were freely used during the Deepavali festival? May I know whether any cases have been booked against the offenders?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot say that the ban that was imposed was defied. If anybody has used such atom crackers against the ban, action would have been taken. I have no information regarding the cases that have been booked in that regard.

SRI S. M. ANNAMALAI : சென்னை நகரில் மட்டும் தடை விதிப்பதற்குக் காரணம் என்ன? ஏன் மற்ற இடங்களுக்கும் தடையை விஸ்தரித்து சர்க்கார் இதைத் தடை செய்ய முன் வரக்கூடாது? சென்னை நகரில்தான் விபத்துக்கள் அதிகமாக இருக்கின்றனவா? மற்ற இடங்களில் இல்லையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்தலங்களில் இருக்கிற அதிகாரிகள் சிபாரிசு செய்கிறபடி நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. சென்னை நகரில் ஜன நெருக்கம் அதிகம். இங்கே விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப் பட்டதால், அதைப் பரிசிலனை செய்து உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. வெளி ஊர்களிலுள்ள அதிகாரிகள் இதுமாதிரி சிபாரிசு செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI A. A. RASHEED : Will the Government consider question of banning and exploding of atom, rocket and aero crackers near the hospitals in our State?

[2nd March 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That ban is already there.

*Cereals*

* 509 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகள் உற்பத்தி செய்யும் அரிசி, பருப்பு, மிளகாய் விலை குறைந்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) உற்பத்தியாளருக்கு சர்க்கார் உடனடியாக உதவி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Government are constantly keeping the price of these commodities under review with the assistance of an Agricultural Prices Review Committee. They consider that there is no case at present for adopting a price support policy in respect of any commodity.

SRI N. R. THIAGARAJAN : என்னுடைய தொகுதியில் மிளகாய் உற்பத்தியாளர் அதிகம். இந்த ஆண்டு விலை பாதியாகக் குறைந்துவிட்டது. ஆகவே அவர்களுக்கு ஏதாவது மான்யம் கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM இம்மாதிரி விஷயத்திலே மான்யம் கொடுக்கும் கொள்கையை சர்க்கார் அனுசரிப்பது இல்லை.

SRI S. RAMASAMI NAIDU : மிளகாய் வற்றல் விலை குறைந்ததோடு மட்டுமல்ல. உற்பத்தியிலும் 50 சதவிகிதம் விளையாது என்று தெரியவருகிறது. ஆகவே சர்க்கார் விவசாயிகளுக்கு உதவி செய்ய முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே எல்லாம் விவசாயிகள் சர்க்கார் உதவியை எதிர்பார்க்கக் கூடாது.

SRI M. KALYANASUNDARAM : அரிசி, பருப்பு, மிளகாய் விலை குறைந்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா என்பது கேள்வி. சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டு வருவதாக கனம் அமைச்சர் பதில் சொன்னார். அவர்களுடைய பரிசீலனையின் காரணமாக விலை குறைந்துகொண்டு வருகிறது என்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா ? எந்தெந்தப் பொருள்களின் விலை குறைந்துகொண்டு வருகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பிரைஸ் ஸப்போர்ட் பாலிஸி அனுசரிக்க முடியுமா என்பது கேள்வி. இன்னும் அம்மாதிரியான நிலைமை ஏற்படவில்லை என்று சொன்னேன். இந்த விடையிலே ஒன்றும் குறைபாடு இல்லை.



2nd March 1961]

SRI V. SUBBIAH : ப்ரகாசம் அரசாங்க காலத்தில் சோள உற்பத்திக்கு ஏக்கருக்கு பதினைந்து ரூபாய் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஏனென்றால் அதன் உற்பத்திச் செலவு ஏக்கர் ஒன்றுக்கு 150 ரூபாயாகிறது. ஆகவே அதைக் குறைந்த விலையில் உற்பத்தி செய்வதற்கு ப்ரகாசம் அரசாங்க காலத்தில் கொடுத்தது போன்று இந்த அரசாங்கம் கொடுக்க ஏதாகிலும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பு அறிவித்தது போன்று இப்பொழுதுள்ள நிலைமையில் அரசாங்கம் அவ்வப்போதுள்ள விலைவாசியை பரிசீலனை செய்து வருகிறது. ஆகவே இப்பொழுதுள்ள நிலைமையில் அரசாங்கம் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதாக இல்லை.

SRI S. RAMASAMI NAIDU : விவசாயப் பொருள்கள் விலை இப்பொழுது குறைந்து இருக்கிறது என்பது அல்ல என்ற பிரச்னை தனியாக இருக்கிறது. அந்த நிலைமையில் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் இப்பொழுது விற்கக்கூடிய விலையானது அவர்களுடைய கூலி செலவு முதலியவைகளுக்குக் கட்டுபடியாகவில்லை என்பதை சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு இருந்த விலைக்கு இப்பொழுது குறைந்திருக்கிறது என்பது வாஸ்தவம் தான். ஆனால் இப்பொழுது விற்கக்கூடிய விலையானது விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடியதாக இல்லை என்று சொல்வதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது.

*Prohibition*

* 510 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் சென்னை சினிமா ஸ்டுடியோக்களில் இதுவரை எத்தனை தடவை மதுவிலக்கு சோதனை நடந்தன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No raids were conducted in the Cinema Studios in Madras City in 1960.

*Soil conservation*

* 511 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் மண் வளத்தைப் பாதுகாக்க அரசாங்கம் ஏதாவது புதிய திட்டம் வகுத்திருக்கிறதா ? அப்படியானால் அதன் விவரமென்ன ?

(இ) இதன் மூலம் அரசாங்கம் செய்ய உத்தேசித்துள்ள உதவி என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : and (b) A statement * is placed in the table of the House.

* Printed as Appendix I on pages 84–85 infra.

**SRI A. VEDARATHNAM :** இந்தத் திட்டத்தை ஒவ்வொரு ஜில்லாவிற்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா? மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையின்படி அதற்கு என்று ஒதுக்கிய தொகையில் 66 லட்சம் ரூபாய் மாத்திரம் செலவு செய்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறது. மண் வளத்தை பயன்படுத்தக்கூடிய அளவில் செலவு செய்யப்படவில்லை என்றும் பாக்கிப் பணம் லாப்ஸ் ஆகக்கூடியதாக இருக்கிறது என்றும் தெரிய வருகிறது. அப்படி லாப்ஸ் ஆக விடாமல் அடுத்த வருஷக் கணக்கிற்கு அதைக் கொண்டு வரவேண்டுமென்ற கணக்கு விவரங்கள் இருக்கின்றனவா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** பணம் லாப்ஸ் ஆகும் என்பது இல்லை. சில இடங்களில் இன்னும் வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. மண் வளத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று சொல்லப்படுகிற இடங்களில் அது செலவு செய்யப்படும். அப்பொழுது ஒதுக்கப்பட்ட பணம்பூராவும் செலவு செய்யப்படும். புதிய இடங்களிலும் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற திட்டத்தை ஒட்டி இந்த மன்றத்தில் ஒரு சட்டத்தைக்கூட நிறைவேற்றியிருக்கிறோம். அதனால் அடுத்த ஆண்டில் இன்னும் தீவிரமாக இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். அதன் பிறகு இன்னும் தீவிரமாக வேலை செய்ய ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்தத் திட்டத்தை அமைத்து அதை நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கம் நம்புகிறது.

**SRI S. M. ANNAMALAI :** மண் வளத்தை பாதுகாக்கும் காண்டூர் பண்டிங் செய்யக்கூடிய இடங்களில் அதற்கு என்று ஏற்படுத்தப்படுகிற ஸ்டாப்களுக்கு என்று பணம் வசூலிக்கிறார்கள். இந்த ஸ்டாப் சார்ஜையும் அவர்களிடமிருந்து வசூலிக்கிறார்களே அப்படி இல்லாமல் அப்படி ஸ்டாப் சார்ஜ் என்று வசூலிப்பதை குறைந்த அளவில் வசூலிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ? அப்படி வசூலித்தால் இந்த காண்டூர் பண்டிங் வேலை இன்னும் நல்ல முறையில் நிறைவேற்றப்படும் அல்லவா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** ஸ்டாப் சார்ஜ் என்று இருப்பதில் நூறுக்கு 12½ சத விகிதம் சப்சிடி மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. பாக்கி 75 சத விகிதத்தை விவசாயிகளிடமிருந்து பல தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. அதோடு கூட விவசாயிகள் இந்தத் திட்டத்தை அவர்களாகவே நிறைவேற்ற முன் வந்தால் அவர்களுக்குக் கொஞ்சம் அதில் மிச்சம் ஏற்படுகிறது. அதிக செலவும் ஏற்படாது.

**SRI M. A. B. ARUMUGHASAMY:** மதுரை ஜில்லாவில் இந்த திட்டம் நல்ல பலனை கொடுத்திருக்கிறது என்பதை சர்க்கார் அறிவார்களா ? அங்கு ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் செலவு செய்யப்படாமல் இருப்பதற்குக் காரணம் அதற்கு போதிய சிப்பந்திகளை



நியமிக்காமல் இருப்பதுதான் காரணம் என்று அறிகிறதா ? அதனால் திட்டம் சரிவர நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்பது உண்மையா. ஆகவே இனிமேலாவது திட்டம் பூராவும் நிறைவேற்றப்படுவதற்கு போதிய சிப்பந்திகளை நியமித்து திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற அரசாங்கம் முன் வருமா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இந்த திட்டத்தை நிறைவேற்ற விவசாயிகளே முன் வந்தால் நல்ல பலனை அளிக்கிறது என்று நான் முன்னமேயே பதிலளித்திருக்கிறேன். விவசாயிகளே இந்த திட்டத்தை எடுத்து இன்னும் தீவிரமாக வேலை செய்தால் இந்த திட்டத்தை இன்னும் நல்ல முறையில் நிறைவேற்ற முடியும். அதனால் செலவும் குறையும், சிக்கனமாகவும் திட்டத்தை முடித்துவிடலாம்.

**SRI M. R. KANDASWAMI MUDALIYAR :** மண் வள திட்டத்தை அரசாங்கம் எடுத்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இந்த நிலைமையில் ஆத்தூர் போன்ற இடங்களில் மண் வளம் இல்லாத காரணத்தால் அங்குள்ள விவசாயிகள் நிலத்தை சரிவர பயிரிடாமல் தரிசாகப் போட்டு வைத்திருக்கிறார்கள். உணவு பஞ்சம் ஏற்படக்கூடிய காலத்தில் கூட அவர்கள் பயிரிடுவதாக இல்லை. ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் மண் வளத்தை ஏற்படுத்தி விவசாயம் செய்து வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** ஆத்தூரில் மண் வளம் இல்லை என்று சொல்வது சரியல்ல. அங்கு விவசாயிகள் ஓரளவு விவசாயம் செய்து கொண்டு தான் வருகிறார்கள். அங்குள்ளவர்களுக்கும் அரசாங்கம் பணம் கொடுத்து உதவி வருகிறது. அங்குள்ள விவசாயிகளால் மேலும் பயிர் செய்வதற்கு மேலும் கவனம் செலுத்தப்பட்டு தான் வருகிறது.

**SRI T. S. RAMAMIRTHA THONDAIMAN :** தஞ்சை ஜில்லாவில் மண் வள பாதுகாப்பிற்கு வேண்டிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறதா ? அப்படி இருந்தால் அதை விரிவான முறையில் அமுல் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா ? இல்லையானால் அங்குள்ள மண் வளத்தை நல்ல முறையில் பாதுகாக்க முயற்சிக்கப்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கனம் அங்கத்தினருக்கு நான் சொல்லுகிறேன், சாதாரணமாக மண் வள பாதுகாப்புத் திட்டம் புஞ்சை நிலங்களில் தான் அதிகமாக எடுத்து நிறைவேற்றப்படும். தஞ்சை போன்ற டெல்டாயிக் பிரதேசங்களில் அதை நிறைவேற்றுவதற்கு இடம் இல்லை.

**SRI K. VINAYAKAM :** Sir, my question No. 512 may he taken up tomorrow.

[2nd March 1961

**MR. SPEAKER:** If the Hon. Minister has no objection, I have no objection.

**THE HON. SRI R. VENKATARAMAN:** I have no objection.

**MR. SPEAKER:** Question No. 152 will be taken up tomorrow.

*Bridge (Thiparappu)*

* 513 *Q.*—**SRI T. T. DANIEL:** Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to include the construction of the Thiparappu Bridge in Thiparappu Panchayat area in the Kanyakumari district in the Third Five-Year Plan?

**THE HON. SRI P. KAKKAN:** The Member refers to the Kalial bridge at mile 29 of the Kovilur-Kulasekaram road. The Government have already sanctioned the reconstruction of the Kalial bridge under the Second Five-Year Plan. The work of reconstructing the bridge will be commenced in February 1961.

**SRI T. T. DANIEL:** May I know, Sir, the total estimated cost for the construction of this bridge?

**THE HON. SRI P. KAKKAN:** The detailed estimate is Rs. 2.20 lakhs.

*Loans*

* 514 *Q.*—**SRI M. KALYANASUNDARAM:** Will t the Minister for Works be pleased to state with referen Question No. 156 answered on 18th August 1960—

(*a*) the total amount of loans granted to persons bel Backward Classes for starting saloons, laundries and tailor in 1960;

(*b*) the number of persons benefited; and

(*c*) the terms on which such loans have been grant

**THE HON. SRI P. KAKKAN:** (*a*) & (*b*) The schem implemented during the current year in Salem district o selection of beneficiaries, etc., is nearing completion. It is to grant loans to about 150 persons, i.e., for about 50 p each of the occupations of hair-dressing, laundrying and during 1960–61 in the above district.

(*c*) The rules for the grant of loans for the above occupations are under consideration of the Government.

**SRI A. GOVINDASAMI:** சேலம் மாவட்டத்தில் புதியதாக எடுத்துக்கொள்ளப்பட்டு வரும் இந்த திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கக்கூடிய திட்டம் இந்த அரசாங்கத்தினிடம் இப்பொழுது இருக்கிறதா? எந்த ஆட்களை எந்த பிரிவினைக்கொண்டு பொறுக்கப்பட்டு, அந்தச் சலுகை கொடுக்க நிர்ணயிக்கப்படுகிறது?



2nd March 1961]

**THE HON. SRI P. KAKKAN:** ஆட்களைப் பொறுக்குவது என்பதும் அங்குள்ள ஹரிஜனங்களில் யாருக்குக் கொடுப்பது என்பதைப்பற்றியும் அங்குள்ள அதிகாரிகளும் கலெக்டர் முதலியவர்களும் கவனித்து யார் யாருக்குக் கொடுப்பது என்று பரிசீலனை செய்து முடிவு எடுக்கிறார்கள். இந்த திட்டத்தை இதர ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமா என்பதைப்பற்றி அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறது.

*Road*

* 515 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN:** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் ஏலகிரிமலையில் சுமார் 5 லட்சம் ரூபாய் செலவு செய்து புதிதாக ரோட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?

(இ) இதுவரை எவ்வளவு செலவு?

(உ) சென்ற 4 மாத காலமாக ஏன் அந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது?

**THE HON. SRI P. KAKKAN:** (*a*) Yes, Sir.

(*b*) Rs. 4,05,986.

(*c*) The work is in progress and has not been stopped for the past four months.

**SRI V. K. KOTHANDARAMAN:** ஸார், இப்பொழுது ஆறு அல்லது ஏழு மாத காலமாகிறது அந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டு . . . .

**MR. SPEAKER:** கனம் மந்திரி அவர்கள் நிறுத்தி வைக்கப்படவில்லை என்று பதில் அளித்திருக்கிறாரே?

**SRI V. K. KOTHANDARAMAN:** அப்படி வேலை ஏன் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று டிவிஷனல் இஞ்சினியரைக் கேட்டதற்கு அதற்கு வேண்டிய பணம் இப்பொழுது இல்லை என்றும் அதற்கு வேண்டிய பணத்தை எதிர் பார்க்கிறோம் என்றும் அந்தப் பணம் வந்தவுடன் வேலை ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் சொன்னது உண்மையா இல்லையா?

**THE HON. SRI P. KAKKAN:** கனம் அங்கத்தினருக்கு போன இடத்தில் அப்படிப்பட்ட தகவல் கிடைத்திருக்கலாம். எனக்கு அந்தத் தகவல் இல்லை.

**SRI T. KARIA GOUNDER:** இந்த வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? இந்த வேலை எப்பொழுது முடிவு அடையும் என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

[2nd March 1961

**THE HON. SRI P. KAKKAN:** இந்த வேலைக்கு ஒதுக்கப்பட்ட தொகை 16·40 லட்சம் ரூபாய். அதில் 1960-61-ல் ஒதுக்கியதில் மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 1960-ல் நான்கு லட்சத்தி ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஆறு ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள். இந்த வேலையை எந்த விதமான தாமதமும் இல்லாது முழு பணத்தையும் செலவு செய்வது என்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

10-30 a.m. **SRI S. M. ANNAMALAI:** இந்தப் பாதைப்போடுவதற்காக நமது சர்க்காருக்கு மத்திய சர்க்காரிலிருந்து எவ்வளவு பணம் வந்திருக்கிறது? கனம் அமைச்சர் அவர்கள் ரோட்டு போடப் பட்டதாகச் சொன்னார்கள். வெறும் மண் ரோட்டுதான் போடப் பட்டிருக்கிறது. ஐந்து, ஆறு மாதங்களுக்கு மேலாகியும் வேலை நடைபெறவில்லை. அங்கு நானே நேரில் சென்று பார்த்திருக் கிறேன். இந்த வேலை தொடர்ந்து நடைபெறுவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

**THE HON. SRI P. KAKKAN:** மலைப்பிரதேசத்தில் ரோட்டுகள் போடுவதற்கு பாறைகளை உடைத்துப்போடவேண்டும். நவம்பர் மாதம் 1960-லேயே 4 லட்சத்தி 5 ஆயிரத்தி 986 ரூபாய் செலவிடப் பட்டு ரோட்டுபோட ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வேலை நடைபெறுவதற்கு மத்திய சர்க்காரிலிருந்துதான் பணம் வருகிறது. பணம் வந்த பிறகுதான் வேலையும் தொடர்ந்து செய்ய முடியும்.

*Tractor*

* 516 Q.—SRI N. K. PALANISAMI:
SRI A. VEDARATHNAM:
SRI S. M. ANNAMALAI:
SRI A. A. RASHEED:
} Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Madras Government had any talks with an American Company for establishing a factory for the manufacture of tractors and earth-moving machine; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) An industrial concern of U.S.A. has applied to the Government of India for a licence to set up a factory near Madras for the manufacture of tractors, cranes, drills and other items of earth-moving machinery. The application is under the consideration of the Central Government.

(b) No further details can be given at this stage.

Sir, I want to add that this question pelates to earth-moving machinery and lso tractors. A licence has been granted to another Madras Company for the manuufacture of tractors.

**SRI N. K. PALANISAMI:** இந்தக் கம்பெனி எவ்வளவு மூல தனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது? இதில் சர்க்காரின் பங்கு என்ன?



2nd March 1961]

**THE HON. SRI R. VENKATARAMAN:** சர்க்காருக்கு இதில் பங்கு இல்லை. ஆகையால் எவ்வளவு மூலதனத்துடன் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்ற கவலையில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Can the Hon. Minister tell us whether smaller horse-power tractors have also been included?

THE HON. SRI R. VENKATARAMAN: I can answer the question if the hon. Member makes it clear as to what he means by 'smaller horse-power'? If he mentions the actual horse-power, I can reply to his question.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: About 8 to 10 horse-power.

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir. At present, the Madras Company proposed to manufacture 20 to 35 horse-power medium size tractors.

**SRI A. VEDARATHNAM:** சென்னையில் கம்பெனிக்கு லைசென்ஸ் கொடுப்பதன் காரணமாக அமெரிக்கக் கம்பெனி ஆரம் பிக்கப்படும் தொழிற்சாலை தேவைப்படுமா? அல்லது கைவிடப் படுமா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** இரண்டும் நடை பெறும். ஒன்று மீடியம் டிராக்டர் செய்யக்கூடியது. மற்றொன்று ஹெவி எர்த் மூவிங் தொழிற்சாலை கனரகத்தொழிற்சாலை. ஆகவே இரண்டும் நடைபெறலாம்.

SRI A. A. RASHEED: What is the number of tractors that will be manufactured by the Madras firm?

THE HON. SRI R. VENKATARAMAN: Three thousand per annum approximately. That is the figure given in the licence.

**SRI S. RAMASAMI NAIDU:** சென்னையில் அனுமதிக்கப் போகும் கம்பெனியில் எவ்வளவு உற்பத்தி செய்யும்? எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

**THE HON. SRI R. VENKATARAMAN:** டிராக்டர்கள் சம்பந்த மான பொருள்கள் 3, 4 மாதங்களில் உற்பத்தி துவங்கப்படும். எவ்வளவு சீக்கிரம் ஆரம்பிக்கப்படும் என்பது கனம் ஸ்ரீ ராமய்யா அவர்கள் மின்சாரம் கொடுப்பதைப் பொறுத்திருக்கிறது.

**SRI C. NATARAJAN:** அமெரிக்க கம்பெனி ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** எல்லா நடவடிக்கை களும் எடுத்துக்கொண்டுதான் வருகிறது.

**SRI A. GOVINDASAMY:** டிராக்டர்கள் உற்பத்தி செய்யப் படும் கம்பெனிகளின் பெயர்கள் என்ன? அவைகளுக்கு மான்யமோ கடனோ கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

[2nd March 1961

THE HON. SRI R. VENKATARAMAN : டிராக்டர்களை சிம்சன் க்ரூப் கம்பெனி செய்கிறது. ஹெவி எர்த் மூவிங் டிராக்டர்களை அலைஸ் சார்மிஸ் கம்பெனி செய்கிறது. அவர்களுக்கு சர்க்கார் உதவி தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

SRI A. VEDARATHNAM : இந்தத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்போகும் இடங்களைப்பற்றி குறிப்பிடவில்லை. எந்தெந்த இடத்தில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : சிம்சன் குரூப் கம்பெனியின் தொழிற்சாலை செம்பியத்தில் ஆரம்பிக்கப்படும். அலைஸ் சார்மிஸ் தொழிற்சாலை என்னூரில் ஆரம்பிக்கப்படும்.

SRI A. A. RASHEED : May I know whether there is any difficulty in getting electric supply for this firm? If so, will the Government take steps to get the required electric supply for the firm soon?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. But, our expansion for outturns the supply of power. That is one of our major difficulties. That is why we have laid great emphasis on power in our Third Plan.

*Conductors*

*517 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any candidates for conductor's posts were selected for training from the Kanyakumari district;

(b) if so, when and the number trained at Madras; and

(c) how many of them have been appointed as conductors?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) Since December 1958, thirty-nine candidates were trained at Madras.

(c) Thirty-eight candidates have been appointed as conductors and one was appointed as time-keeper.

*Commemoration Stamps*

*518 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் திருவுருவப் படத்தை தபால் தலைகளில் அச்சிட மத்திய அரசாங்கத்திற்கு நம் மாநில சர்க்கார் எழுதியிருக்கின்றார்களா ?

(இ) அதுபற்றி முடிவு ஏதேனும் நம் சர்க்காருக்குத் தெரியுமா ?

(உ) அதன் விவரமென்ன ?

THE HON. M. BHAKTAVATSALAM : (a) No, Sir

(b) & (c) Do not arise.



2nd March 1961].

SRI A. VEDARATHNAM : தமிழகத்தில் சிறந்த தலைவராகிய வ. உ. சிதம்பரம் அவர்களுடைய உருவத்தை தபால் பில்லைகளில் போடுவதற்கு நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறதா ? இது தமிழகத்திற்கு அளிக்கின்ற கௌரவம் ஆகாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் நாம் சிபார்சு செய்யாமலேயே இம்மாதிரி விஷயங்களை செய்துவருகிறார்கள். இந்த இலாக்காவைச் சேர்ந்த மத்திய சர்க்கார் மந்திரிக்கு இதைப்பற்றி தெரியும்.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர்களை கௌரவிப்பதற்காக இருக்கும்பொழுது, அந்தத் தபால் தலைகளை, அதாவது பாரதியார் போன்றவர்கள் தபால் தலைகளை கொஞ்சநாளைக்கு போட்டுவிட்டு நிறுத்திவிடுகிறார்கள். இவைகளை தொடர்ந்து போடுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம் நாட்டுத் தலைவர்களை விளம்பரம் செய்வதற்காக தபால் தலைகள் இல்லை என்பதை கனம் அங்கத்தினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

*Fair Price Shops*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I suggest that question Nos. 519 to 522 may be taken up together.

MR. SPEAKER : Yes.

*510 Q.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of Fair Price or relief shops for rice opened in the City of Madras and what are the figures, divisionwar before the recent rains and floods;

(b) the number opened after floods and gale havoc during the month of November 1960; and

(c) the number opened in slum areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The number of Fair Price shops for rice opened in the City of Madras before the floods and rains was 52. All these 52 shops were opened by the T.U.C.S. in their respective branches in the City. So, Fair Price Shops were opened immediately after the floods and gale havoc during the month of November 1960. However, during December 1960, 44 more shops have been opened. A statement* showing the divisionwar distribution of the 96 shops which were functioning on 31—12—1960 in the City is placed on the table of the Ho

* Printed as Appendix II on pages 85-86 infra.

[2nd March 1961

(c) No separate Fair Price Shops has been opened exclusively to cater the people dwelling in slum areas. The 96 shops so far opened in the City cater to the needs of all the poor people including slum dewellers.

* 520 Q.—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any Fair Price Shops have been opened in Tiruttani taluk, Chingleput district, for seling rice;

(b) if so, how many, taluk-war; and

(c) the amount of rice sold in them per month?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes Sir.

(b) Twenty two Fair Price Shops in Tiruttani taluk and nineteen Fair Price Shops in Pollipet sub-taluk have been opened.

(c) A quantity of 260 bags or 520 maunds or rice per month is sold in each Fair Price Shop.

* 521 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Home be pleased to state the number of Fair Price Shops opened so far during the current year and the total quantity of rice issued through these shops, month by month up to December 1960?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A total number of 441 Fair Price Shops have been opened in the State as a whole up to 31—12—1960. A quantity of 1882 tons has been issued up to 15—12—1960 through the shops according to the information available.

* 522 Q.—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the T.U.C.S. branches in the City of Madras are allowed to sell rice to the public as Fair Price Shops;

(b) how many such branches of T.U.C.S. have been opened to sell rice in slum areas; and

(c) how many instances of T.U.C.S. branches indulging in black marketing activities have been brought to the notice of the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes Sir.

(b) 52 branches of the T.U.C.S. functioning in Madras City are distributing rice. These shops, though they are not directly located in slum areas, cater not only to the needs of the poorer people in the built up areas but also to those living in the slums.

(c) Only one case in which a branch of the T.U.C.S. was alleged to have sold 16 Madras Measures to a person without bill has been reported. The matter is under investigation



2nd March 1961]

SRI K. VINAYAKAM: Are the Government aware of the fact that these Fair Price Shops are intended to cater to the needs of the needy who cannot pay higher prices for better quality rice? if so, may I know, what steps have been taken by the T.U.C.S. authorities to locate these shops in areas where there is actual demand, viz., the slum areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, the Government have sanctioned and opened Fair Price Shops only because they were aware that there was need for the poor people to get rice at fair, lesser prices. The Fair Price Shops are distributed throughout the areas concerned and the poverty of the slum areas is also taken into account when the Fair Price Shops are located in the various places.

SRI M. KALYANASUNDARAM: இந்த 441 நியாயவிலைக் கடைகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா? சமீபத்தில் எந்த ஜில்லாவிலாவது இந்த நியாயவிலைக் கடைகள் மூடப்படும் என்று முடிவு எடுக்கப் பட்டிருக்கிறதா? அப்படியானால் எந்தெந்த ஜில்லாக்கள், என்னென்ன காரணங்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பெப்ரவரி முடிவோடு நியாயவிலைக் கடைகளை மூடி விடுவது என்று ஒரு முடிவு செய்யப் பட்டது. ஆனால் அதற்குப் பிறகு சிற்சிலயிடங்களில் தொடர்ந்து மார்ச் மாதத்தில் கூட நியாயவிலைக் கடைகள் இருந்தால் நலம் என்று தெரிவிக்கப்பட்டது. அதன் மேல் அரசாங்கம் கலெக்டர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் நிலைமையை ஆராய்ந்து எந்தளவு கடைகளை மூடாமல் மார்ச் மாதத்தில் வைத்துக் கொள்ளமுடியுமோ அந்தளவு வைத்துக் கொள்ளலாமென்று மறுபடி உத்தரவு இடப்பட்டது. ஆக மார்ச்சிலும் அக் கடைகள் இருக்கின்றன.

SRI K. VINAYAKAM: While being grateful to the Government for the retention of these shops in Tirutani and Pallipet sub-taluk, is the Hon. Minister aware of the fact that even though revenue officials on the spot have recommended opening of further shops in the Pallpiet sub-taluk, the Collector has not take any action in spite of the directions from the Government and if so, will the Government give fresh instructions to open those shops in the taluk where there is actual need for them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I may tell the hon. Member that the Collector is also a revenue official and he is even called 'Thandal Nayagam'. He does take into account the recommendations of the subordinate officers and he has got the responsibility to decide and recommend to the Government where fair price shops have to be opened and in what places.

SRI R. SRINIVASA IYER: இந்த நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படுகிற அரிசி பூராவும் விற்கப்படவில்லையென்று எந்த ஜில்லாவிலிருந்தாவது சர்க்காருக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறதா?

[2nd March 1961

கோதுமையை நிறைய சப்ளை செய்ய, முன்பு இரண்டு டன் கொடுத்ததை இப்பொழுது 5 டன்னாக கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நியாயவிலை கடைகளில் கொடுக்கப் படுகிற அரிசியைவிட நல்ல ரக அரிசி வாங்கிச் சாப்பிட சக்தியுள்ளவர்கள் இந்த அரிசியை வாங்க மாட்டார்கள். ஆனால் எந்த ஜில்லாவிலும் பூராவும் இந்த அரிசியை யாரும் கேட்பார் இல்லை என்ற தகவல் வரவில்லை. ஆனால் கோதுமையை தாராளமாக கொடுக்க இப்பொழுது ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

SRI A. MARIAPPAN : சேலம் நகரில் மேற்கொண்டு கடைகள் திறக்க வேண்டுமென்று கோரிக்கைகள் இருக்கும்போது நிவாரணக் கடைகள் எல்லாம் மூடப்பட்டு விட்டன. அவைகளை மீண்டும் திறக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்போதைக்கப்போது சம்பந்தப் பட்ட கலெக்டர்களை கேட்கிறோம். அவர்கள் அபிப்பிராயப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படுகிறது. சட்டமன்ற அங்கத்தினர்கள் இங்கு ஏதாவது தெரிவித்தால் அதையும் கலெக்டர்களுக்கு அனுப்புகிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் கலெக்டரிடம் பேசி ஏதாவது சிலயிடங்களில் கடைகள் இருக்க வேண்டுமென்றால் வைத்துக் கொள்ளலாம். ஆனால் இப்பொழுதுள்ள நிலைமையில் புதிதாக கடைகள் திறப்பதாகயில்லை.

SRI K. VINAYAKAM : Arising out of the answer to clause (c) of Question No. 522, what action was taken by the Government against the T.U.C.S. Branch which committed a default in the issue of rice without any proper identification of the party who purchased rice?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already stated that the matter is under investigation. Suitable action is being taken.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, T.U.C.S. Branches are kept open only during specific hours and so labourers who return late at night are not able to get rice. Has any complaint of that sort been brought to the notice of the Hon. Minister and if so, what action has been taken so far?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have not received any such complaint. If labourers go to factories, some other member of their families can go and take rice.

SRI A. A. RASHEED : May I know whether Burma rice is sold in all those shops? In view of the fact that Burma rice is sold at a cheaper rate, will the Government increase the supply of Burma rice to those Fair Price Shops?



2nd March 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is not necessarily Burma rice that is sold. Perhaps sometimes Burma rice is sold. No doubt Burma rice is cheaper but we cannot import rice to the extent people would require and distribute it at reduced prices.

SRI A. GOVINDASAMY : தென் ஆற்காடு மாவட்டத்தில் மொத்தம் இதுவரை 40 கடைகள்தான் திறக்கப்பட்டிருக்கின்றன. அதை அதிகரிக்கவேண்டுமென்று தென்ஆற்காடு ஜில்லா கலெக்டர் அவர்கள் அரசாங்கத்தினிடம் கோரிக்கைகள் விடுத்திருந்தும் அதைக் கவனிக்காதிருப்பதற்குக் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்குத் தெரிந்த வரையில் ஒரு கலெக்டர் இன்னும் அதிகப்படியான கடைகள் வேண்டுமென்று முன்பே தெரிவித்திருந்தால் அப்போதே அவைகள் அனுமதிக்கப் பட்டிருந்திருக்கும்.

SRI T. KARIA GOUNDER : தமிழ்நாடு பூராவும் கொடுக்கப் பட்டிருக்கிற நியாயவிலைக் கடைகள் கூட்டுறவு முறையில் கொடுக்கப் பட்டுள்ளதா ? தனியார்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அநேகமாக கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம்தான் கொடுக்கப் பட்டு வருகிறது. ஒன்றிரண்டு இடங்களில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் தயாராகயில்லை என்றால் அப்பொழுது தனிப்பட்ட நபர்களுக்கு இந்த நியாயவிலைக் கடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

SRIMATHI HEMALATHA DEVI : கூலி வேலை செய்துவிட்டு வருகிறவர்கள் அந்தக் கூலியைக் கொண்டுதான் அரிசி வாங்க வேண்டியிருப்பதால் டீ.யூ.ஸி.எஸ்.-யை இரவு எட்டு மணி வரையில் திறந்து வைக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு அவசியமிருக்கிறது என்று இன்னும் அரசாங்கத்திற்கு புலப்படவில்லை. இப்பொழுது எல்லாக் கடைகளும் நல்லமுறையில் நடந்து கொண்டிருக்கின்றன. நியாயவிலைக்கடைகளில் அரிசி வேண்டுமென்றால் சிலயிடங்களில் கொஞ்சம் அசௌகரியத்தைப் பொருள்படுத்தக் கூடாது.

SRI R. SWAMINATHA MERKONDAR : புஞ்சைப் பிரதேசங்களில் விவசாயம் செய்யும் கூலிகளுக்கு கூலி மிகவும் குறைவாகயிருப்பதால் அவர்கள் குறைந்த விலைக்கு அரிசி பெற அந்தப் பிரதேசங்களில் நியாயவிலைக்கடைகளை தொடர்ந்து நடத்த அனுமதி அளிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சை மாவட்டத்தில் கூட நியாயவிலைக்கடைகள் அமைக்கப் பட்டிருக்கிறதென்றால் தஞ்சை ஜில்லாவிலும் புஞ்சைப் பிரதேசங்கள் இருக்கின்றன. சிலபேர்களுக்கு இது வேண்டியிருக்கிறதென்பதை அரசாங்கம் உணர்ந்துதான் இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[2nd March 1961

**Sri K. ANBAZHAGAN** : இத்தகைய நியாயவிலைக் கடைகள் அனுமதிக்கப்பட்ட இடங்களில், தனியார் சிலருக்கு அனுமதிக்கப் பட்ட கடைகளில் ஒன்றிலிருந்து தஞ்சை ஜில்லாவில் ஓரூரில் தரப்பட்ட எல்லா அரிசியையும் தனிப்பட்ட ஒருவருக்கு நேரடி யாக விற்று விட்டார்கள் என்ற புகார் அமைச்சர் அவர்களுக்கு வந்ததா? அதுபற்றி ஏதாவது விசாரித்திருக்கிறார்களா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அம்மாதிரி தகவல் ஒன்றும் எனக்கு வரவில்லை. ஆனால் அங்கத்தினர் அவர்களிடம் இப்படிப்பட்ட தகவல் இருந்தால் எனக்குத் தெரிவிக்க கோரு கிறேன்.

**Sri M. C. MUTHUKUMARASWAMY** : சமீபத்தில் பெய்த மழை காரணமாக சீர்காழி, நன்னிலம், நாகப்பட்டினம் போன்ற இடங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் அவ்விடங்களில் நியாயவிலைக் கடைகள் வைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இப்பொழுது என்னென்ன ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கிறதோ பரிசீலனையை யொட்டி, அதற்கு மேல் ஒன்றும் செய்யவேண்டிய அவசியமில்லை யென்று இந்த சர்க்கார் கருதுகிறது.

Sri K. VINAYAKAM : Sir, the Fair Price Shops in the Tirutani taluk have been allowed to continue until further orders by the Board of Revenue. Will the Hon. Minister issue instructions that the shops should be continued for a few more months as the impending harvest is supposed to be a failure?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I would tell the hon. Member that he should not wish that those conditions would continue indefinitely. The Government will certainly consider the position. The Collector will review the position obtaining in the Tirutani taluk by the end of March and then decide whether they should continued further or not.

**Sri A. GOVINDASAMY** : மேஜை மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் சென்னையிலுள்ள 100 டிவிஷன்களில் சிலயிடங்களில் கடைகள் இல்லாமலும் சிலயிடங்களில் இரண்டு கடைகள் இருக்க வும் காரணம் என்ன? கடைகள் இல்லாத இடங்களில் கடைகள் திறக்க அரசாங்கம் யோசிக்குமா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இதையெல்லாம் சென்னை கலெக்டரிடம் கேட்டு அவர்கள் சொல்லியபடி வைத்திருக் கிறோம்.

**Sri K. PONNIAN** : ஆளியார், பாலயார், சோலையாறு போன்ற திட்டப் பகுதிகளில் நியாயவிலை கடைகளில் கொடுக்கும் அரிசி ஜனங்களுக்கு போதவில்லை. அதை அதிகப்படுத்த அரசாங்கத் திற்கு உத்தேசமுண்டா?



2nd March 1961]

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினர் அவர்கள் திரும்பி தனது தொகுதிக்கு போகும்போது கலெக்டர் அவர்களிடம இதைச் சொன்னால அவர்கள் கவனித்து வேண்டியது செய்வார்கள்.

*Fruit processing units*

* 523 Q.—Sri N. K. PALANISAMI : } Sri T. DANIEL : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to set up an Industrial Estate for fruit processing units in the City of Madras with the aid of the Union Government; and

(b) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) and (b) A suggestion has been received from the Marketing Development Officer, Fruit Products, Government of India, Ministry of Food, Madras, to establish an Industrial Estate for fruit processing in the State. The matter is under examination.

**Sri N. K. PALANISAMI** : இதற்கு வேண்டிய "ரா மெட்டீரி யல்ஸ்" எங்கு கிடைக்கும்?

**The Hon. Sri R. VENKATARAMAN** : பழங்கள்தான் "ரா மெட்டீரியல்ஸ்". எல்லா ஊர்களிலிருந்தும் இதை வாங்கி வருகிறார்கள்.

**Sri P. M. MUNUSAMI GOUNDER** : இதுமாதிரி பழங்களைப் பக்குவப்படுத்தும் யூனிட்டுகள் தமிழ்நாட்டில் வேறு எங்கேயாவது நிறுவப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அவை எங்கே?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இங்கு சென்னை நகரத்திலேயே "ப்ரூட்நிக்", "ப்ரூட்டோன்" என்று பலவிதமான பழரச பானங்கள் செய்யப்படுகிறது. அவை, "கான்ஸென்ட் ரேட்டட் ஜூஸ்" வாங்கி "ஹைஜீனிக்" முறையில் தயாரிக்கும் திட்டம். அந்தவிதமான திட்டம், பழரசம் தயாரிப்பதில் ஒன்று. இரண்டாவது, பழங்களை வாங்கி அதிலிருந்து சார் எடுத்து அதை சுகாதாரமுறையில் செய்வது இரண்டாவது முறை. பழங்களை ப்ரசர்வ் செய்யும் யூனிட்டுகள் இருக்கிறதா என்று கேட்டால் தனிக்கேள்வி போடவேண்டும்.

Sri T. T. DANIEL : May I know the estimated cost of establishing such an industrial estate as also the particular kind of fruits which the Government intend to use?

The Hon. Sri R. VENKATARAMAN : It is intended to have ten units for this particular industrial estate. At present there are two views. One is, we may start a separate industrial estate for this, viz., a small kind of industrial colony. Another is to have a separate wing in one of the industrial estates, which we contemplate round about Madras. No decision has been taken as to wh

type of industrial estate will come for this particular function. With regard to fruits monstly I understand they will use fruit concentrates which they get from other places.

**SRIMATHI A. S. PONNAMMAL** : தலைவர் அவர்களே, கோடைக் கானல் மலை, நிலக்கோட்டை தாலூகாவில் பெரும்பகுதி—ஆகிய இடங்களில் ஏராளமான பழம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அங்கே ஒரு பழப் பக்குவத் தொழிற்சாலையை ஏற்படுத்துவது பற்றி . . .

**MR. SPEAKER** : இந்தக் கேள்வி சென்னையைப் பற்றியது. கோடைக்கானலைப் பற்றித் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

SRI R. SRINIVASA IYER : The Food Technological Research Institute, Mysore, have evolved a method for mango fruit being preserved by dehydration. Will the Government take steps to preserve the mango products of our State by enabling a private industrialist to start such a processing unit in Madras?

THE HON. SRI R. VENKATARAMAN : We need not go to extra bodies. Even across the railway line in Mambalam there are one or two units which are preserving mangoes, not through dehydration but by preserving it in the natural state. They preserve this in vacuum packets, which is de-hydrated. All facilities are given both by Central and State Governments for development of fruit products. Any person who wants facilities of this kind can always get assistance from Government.

*Chassis*

*** 524 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—**

(*a*) the types of chasis that are being purchased by the Transport Department and the prices of each chassis ;

(*b*) whether discount is given by the companies concerned, and

(*c*) whether any other concessions are given by the companies?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) (1) Leyland Comet 203 inches at Rs. 40,744 each for a single order up to 43 chassis, at Rs. 40,562-10 nP. each for a single order for 50 to 99 chassis; and at Rs. 40,390-90nP. each for a single order for 100 chassis and above.

(2) Tata Mercedes Benz 190 inches at Rs. 30,985-96 nP. each for a single order upto 99 chassis.

(*b*) & (*c*) Except the concession in slab rates shown by Ashok Leyland, Limited no other concession is shown by the companies.



SRI K. VINAYAKAM : Are we left to the predicament of purchasing this from a private company? Why not Government import the chasis through the Government of India?

THE HON. SRI R. VENKATARAMAN : We are trying to develop local industry. Ashok Leyland are getting these things in completely knocked down condition and they are manufacturing nearly 50 per cent of the parts now. I do not think we need revert to the 19th century method of importing chassis.

**SRI C. R. RAMASWAMI** : நாம் வாங்கிய விலைக்கும் இதற்கும் வித்தியாசம் உண்டா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : அதைவிடச் சற்றுக் குறைவானது.

**SRI M. KALYANASUNDARAM** : எந்த எந்த ரக வண்டிகள் வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : 1958-ம் வருஷத்தில் இரண்டே இரண்டு மாடல்—லேலண்டு, மெர்ஸிடஸ் பென்ஸ்-தான் வாங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. பல ரக வண்டிகள் இருந்தால் ஒவ்வொன்றுக்கும் "ஸ்பேர் பார்ட்ஸ்" வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. இந்த இரண்டே இரண்டு மாடல் என்றால் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பது சௌகரியமாக இருக்கும் என்று இப்படிச் செய்யப்பட்டது. இரண்டாவது காரணம் ஒரிரு ரக வண்டிகளை மட்டும் ரிப்பேர் செய்வது என்றால் டெக்னிகல் ஸ்கில் அதிகமாகும். ஆகையால் இந்த இரண்டு ரகத்தைமட்டும் வாங்குவது என்று தீர்மானித்தோம்.

*Handloom*

*** 525 Q.—SRI A. VEDARATHNAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலத்தில் கைத்தறி தொழில் நுட்ப கழகம் துவக்கப் பட்டிருக்கிறதா ?

(இ) இங்கு கைத்தறித் தொழிலில் நூதனமாய் என்ன செய்யப்படுகிறது; அதன் முழு விவரமென்ன ?

(உ) கதர்த் தொழிலுக்கு இதில் இடமுண்டா; அதன் விவர மென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(இ) No new techniques in weaving or designing have been introduced in the Indian Institute of Handloom Technology, Salem since it has started functioning only this year.

(உ) Production of khadi does not form part of the syllabus.

[2nd March 1961

**Sri V. SUBBIAH** : இந்தவிதமான நுட்பத் தறிகளில் வேலை செய்யும் பயிற்சியைப் புகுத்தியிருப்பது எதிர்காலத்தில் விசைத் தறிகளைப் புகுத்துவதற்கு அறிகுறியா? அதற்குத்தான் இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இந்தத் தொழில் நுட்பப் பயிற்சி மூலமாக நல்ல உயர்ந்த ரகக் கைத்தறி நெய்யலாம். சாதாரணமாக வேஷ்டி, சேலைகள் பவர் லூமில் நெய்வது சுலபம். செலவும் குறைவு. இதற்கும் அதற்கும் முரண்பாடு இல்லை. இங்கே சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய உயர்ந்த ரக கைத்தறித் துணிகள் நெய்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**Sri A. VEDARATHNAM** : சேலத்தில் ஏராளமான தறிகள் இருக்கின்றன. மிக உயர்ந்த துணி எல்லாம் நெய்யப்படுகின்றன. அவர்கள் தயார் செய்வதைக் காட்டிலும் வேறு என்ன உயர்ந்த ரகங்கள் இங்கே தயாரிக்கப்படுகின்றன? அங்கே இல்லாத ரகமா?

**The Hon. Sri R. VENKATARAMAN**: இது பயிற்சி அளிக்கக் கூடிய பள்ளிக்கூடம். இங்கே நெசவுத் தொழில் நடப்பதோடு எப்படி எப்படி நெய்யவேண்டுமென்ற போதனை அளிக்கப்படுகிறது. குறிப்பாக—"வீவிங் தியரி, வீவிங் ப்ராக்டீஸ், ஹாண்டு ஸ்பின்னிங், டிராயிங், ஜெனரல் டெக்ஸ்டைல் டெக்னாலஜி, க்ளாத் அனலஜி, கலர் டிசைன்"—இந்தவிதமான பயிற்சிகள் எல்லாம் அளிக்கப் படும்.

**Sri A. VEDARATHNAM** : இந்தப் பயிற்சியை அளிப்பது யார்?

**The Hon. Sri R. VENKATARAMAN** : நம்முடைய ராஜ்யத்தில் இந்தவிதமான பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஆசிரியர்களாக நியமித்திருக்கிறோம்.

**Sri A. MARIAPPAN** : இந்தப் பள்ளியில் குறுகிய காலப் பயிற்சி அளிப்பதாக இருந்ததே. அப்படி குறுகிய காலப் பயிற்சி அளிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

**The Hon. Sri R. VENKATARAMAN** : குறுகிய காலப் பயிற்சியைப் பற்றித் தனிக் கேள்வி போடவேண்டும். சற்றேறக் குறைய 3 வருஷம் உயர்ந்த ரகப் பயிற்சி அளிக்கக்கூடிய திட்டம் இது.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR** : இங்கே குறைந்த மாணவர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. நம்முடைய நாட்டு புராதமான தொழிலாகையால் இதில் அதிகமான மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வசதி செய்யப்படுமா?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இப்போது நாம் சுமார் 30 பேர்களுக்கு பயிற்சி அளித்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் தேவை அதிகரித்தால் சர்க்கார் அதற்கு ஏற்பாடு செய்யும்.



2nd March 1961]

*Rural indebtedness.*

*** 526 Q.—Sri S. M. ANNAMALAI** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ஆண்டு ஏப்ரல் மீ 25வ நட்சத்திரக் குறியிடாத கேள்வி எண் 403-க்கு அளித்த பதிலையொட்டி விவசாயிகள் கடன் அதிகரித்து வருவதற்கான காரணங்களை சர்க்கார் ஆராய்ந்தார்களா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

(உ) அதைப் போக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**The Hon. Sri R. VENKATARAMAN** : No. Special enquiry has been instituted.

(இ) Does not arise.

(உ) With a view to liquidate rural indebtedness, Government have undertaken the implementation of the scheme of Integrated Rural Credit and Marketing under the Second Five-Year Plan. Under this scheme increased credit facilities are being given through co-operatives to the agriculturists for production and marketing of their produce. The co-operatives in this state would supply credit to the tune of Rs. 22·50 crores by the close of the Second Plan period (i.e.), 1960–61, as against the sum of Rs. 7.75 crores provided by the Co-operative institutions at the beginning of the plan. Increased marketing facilities are also being provided to the agriculturists under the said scheme. It is proposed to step up the supply of agricultural credit further under the Third Five-Year Plan so that by the close of the Third Plan period the Co-operatives would cover the entire agricultural population and dispense credit to the tune of Rs. 45 crores.

**Sri S. M. ANNAMALAI** : கடைசியாக சர்வே எப்போது செய்யப்பட்டது? அப்படி சர்வே செய்தபோது ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு கடன் என்று சர்வே செய்தார்கள்?

**The Hon. Sri R. VENKATARAMAN** : 1944-ம் வருஷம் டாக்டர் நாராயணசாமி நாயுடு சர்வே செய்தார்கள். அப்போது 218 கோடி விவசாயக் கடன் இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள். 1951-ல் ரிசர்வ் பாங்க் சர்வே செய்தது. அப்போது தலா ஒரு குடும்பத்திற்கு 745-ரூபாய் கடன் இருக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

**Sri S. M. ANNAMALAI** : ஸார், மற்ற மாநிலங்கள் எல்லாம் பிரிந்து போவதற்கு முன்னால் இந்த சர்வே நடத்தப்பட்டிருக்கிறது. அதன் பின்னால் நம்முடைய மாநிலத்திற்கு மட்டும்,

இரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் பலனாக கடன் பளு அதிகமாயிருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதைப்பற்றி ஏன் சர்வே நடத்தக்கூடாது?

THE HON. SRI R. VENKATARAMAN: கடன் வசதி செய்து கொடுப்பதுதான் முக்கியமே ஒழிய சர்வே செய்வதோ அல்லது இதைப்பற்றி பரிசீலனை செய்வதோ முக்கியமல்ல. அந்த முறையில் பார்த்தால் நம்முடைய ராஜ்யத்தில் கொடுக்கப்படும் கடன் வசதி வேறு எந்த ராஜ்யத்திலும் இல்லை.

*Superintending Engineer's Office*

* 527 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the date on which the Tirunelveli Superintending Engineer's Office (P.W.D.) was bifurcated from Tiruchirappalli district;

(*b*) the reasons for keeping the Tirunelveli Superintending Engineer's Office still at Tiruchirappalli; and

(*c*) the avoidable additional expenditure to the Government in view of the delay?

THE HON. SRI P. KAKKAN: (*a*) 12—5—1960.

(*b*) The main reason for keeping the Office of the Superintending Engineer, Tirunelveli at Tiruchirappalli was acute shortage of buildings in Tirunelveli or Palayamcottai to accommodate the Circle Office and the Officers and staff. Besides, the presence of the Superintending Engineer at Tiruchirappalli was found to facilitate the supervision of the works of Kattalai High Level and Pullambadi Canals which are around Tiruchirappalli. The retention of the Headquarters for some time at Tiruchirappalli is also found useful for the separation of records from the Tiruchirappalli Circle Office. The Government have therefore permitted the retention of the Tirunelveli Circle Office at Tiruchirappalli as a temporary measure and it will be shifted to Tirunelveli as early as possible.

(*c*) No avoidable extra expenditure is incurred by the continuance of the Headquarters of the Tirunelveli Circle at Tiruchirappalli as the Superintending Engineer, Tirunelveli Circle, is in charge of the Kattalai High Level and Pullambadi Canals Division which are around Tiruchirappalli. If the Headquarters of the Tirunelveli Circle had been shifted to Tirunelveli it might have been necessary to meet the Travelling Allowance of the Superintending Engineer for his journeys to the two Canal Divisions from Tirunelveli to Tiruchirappalli. Instead, expenditure is being incurred for the journey of the Superintending Engineer from Tiruchirappalli to Tirunelveli



*Plantation (Vaigai Dam)*

* 528 *Q.*—SRI N. R. THIAGARAJAN: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, வைகை அணைக்கட்டு சுற்றிலுமுள்ள சுமார் 5 சிறு குன்றுகளிலும் செடி வளர்க்க உத்தேசமுண்டா?

(இ) இந்தப் பகுதியை காட்டிலாகாவில் சேர்க்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) There is a proposal to raise fuel plantations over an area of 100 acres scattered in 7 or 8 hillocks around the Vaigai Dam in Madurai District during 1961–62 under the Farm Forestry Scheme.

(*b*) No, Sir.

SRI N. R. THIAGARAJAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் 30 சத விகிதம் காடுகள் இருக்க வேண்டும், அதற்கு நம்மிடம் 17 சத விகிதம்தான் காடுகள் இருக்கின்றன எனறு குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையில் நம்முடைய வனங்களை பெருக்குவதற்கு மதுரை ஜில்லாவில் பல இடங்களில் மண் குன்றுகளாக காட்சியளிக்கும் இடங்களை எல்லாம் ஃபாரஸ்ட்டாக மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வன வளத்தை அதிகமாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் 'பார்ம் பாரஸ்ட்' என்ற திட்டம் வட்டார வளர்ச்சி அடிப்படையில் நடந்து வருகிறது.

*Coastal Highway (Madras-Kanyakumari)*

* 529 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து கன்யாகுமரி வரை அமைக்கத் திட்டமிட்ட கரையோர நெடுஞ்சாலை வேலை எந்த அளவு நிறைவேறியிருக்கிறது?

(இ) இதில் எந்த இடத்தில், என்ன வேலை, எவ்வளவு பாக்கி இருக்கிறது?

(உ) இவை எப்போது பூர்த்தியாகும்?

THE HON. SRI P. KAKKAN: (*a*), (*b*) & (*c*) The Government of India have been addressed to include this Scheme in the Third Five-Year Plan for National Highways. The work will be taken up for execution as soon as the approval of the Government of India is received.

**Sri A. VEDARATHNAM** : இதை நாஷனல் ஹைவேஸ்-ஸாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எப்போது எழுதியது? அதற்கு இதுவரையிலும் பதில் வரவில்லையென்றால், ரிமைண்டர் எழுதி அதை கிடைக்கச் செய்ய அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்யுமா?

**The Hon. Sri P. KAKKAN** : 24-11-1958-ல் மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் எழுதியது. இதைப்பற்றி லோக் சபா எஸ்டிமேட் கமிட்டியும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதோடு வொர்க்கிங் க்ரூப்-ம் சிபாரிசு செய்திருக்கிறது. ஆகவே இவைகள் எல்லாம் நமக்கு சாதகமாகவே இருக்கின்றன. இதற்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து பதில் வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

**Mr. SPEAKER** : Questions are over.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ANNOUNCEMENTS

## PANEL OF CHAIRMEN.

11 a.m. **Mr. SPEAKER** : Under Rule 14 (1) of the Madras Legislative Assembly Rules, I nominate the following to be the panel of Chairmen :—

1 Sri V. K. Krishnamurthy,
2 Sri S. Ranganatha Mudaliar,
3 3 Sri V. K. Kothandaraman,
4 Sri S. M. Annamalai,
5 Sri V. Subbiah and
6 Sri Sattanatha Karayalar.

## IV. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1961-62.

**Mr. SPEAKER** : Now we shall commence the general discussion on the Budget.

I have got at present with me a list of ten-persons who will be participating in the discussion. I will allot fifteen minutes for each speaker and if more persons come forward I will have to reduce the time limit.

The hon. Member, Sri N. K. Palanisami may now speak.

* **Sri N. K. PALANISAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கின்றார்கள். இதை வரவு செலவுத் திட்டம் என்று சொல்லுவதற்குப் பதிலாக ஒரு எலக்ஷன் மானிஃபஸ்டோ என்று சொன்னாலும் மிகையாகாது. பத்து வருஷ காலத்தில் நாம் என்னென்ன சாதனைகள் செய்திருக்கிறோம், இனி என்னென்ன வேலைகளை செய்யப்போகிறோம் என்பவை எல்லாம் விரிவாகவும் விளக்க



மாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் விவசாய அபிவிருத்தியில் எந்த அளவுக்கு நாம் உற்பத்தியை பெருக்கியிருக்கிறோம் என்கின்ற விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, இதில் முக்கியமாக ஆறும் படிவம் வரை எந்தவிதமான கட்டணமும் இல்லாமல் ஏழை மாணவர்கள் படிக்கலாம் என்ற சலுகையை கொடுத்திருக்கிறார்கள். . மேலும் (குறுக்கீடு) இவ்வித குறுக்கீடுகளினால் எனக்கு ஐந்து நிமிடங்கள் போய் விடுகின்றன........

**Mr. SPEAKER** : கனம் பழனிசாமி அவர்கள் பேசும்போது கனம் அங்கத்தினர்கள் குறுக்கிடாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இவ்விதம் குறுக்கிடுவதால் ஐந்து நிமிட நேரம் போய்விடுகிறது என்று சொல்லுகிறார்கள்.

**Sri N. K. PALANISAMI** : பஸ் போக்குவரத்தைப் பொறுத்த மட்டில் 157 புதிய பஸ்கள் போடப்போவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இது போன்ற பல முக்கியமான விஷயங்களையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் இந்த வரவு செலவுத் திட்டத்தை பொதுவாக பார்த்தால் ஒரு ப்ரொடக்ஷன் டார்கெட் என்றுதான் சொல்ல வேண்டும். வெறும் புள்ளி விவரங்கள் கொடுக்கக்கூடிய ஒரு கணக்காய்தான் இருக்கிறதே தவிர கழிந்த ஐந்தாண்டுத் திட்டங்களின் பலனை எந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் போயிருக்கிறது, எந்த அளவுக்கு ரீஜனல் டிஸ்பாரிட்டி, இன்டர்னல் டிஸ்பார்ட்டி போய் இருக்கிறது. எந்த அளவுக்கு இந்தத் திட்டங்களின் மூலமாக நமக்கு நன்மை கிடைக்கும் என்பதைப்பற்றி தெரிவிக்கவில்லை. நாம் போட்டிருக்கும் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கமும் இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் போக வேண்டும் என்பதுதான். இதற்காக இப்போது மூன்றாவது ஐந்தாண்டு திட்டமும் போட்டிருக்கிறோம். இன்றைக்குள்ள நிலைமையை எடுத்துக்கொண்டால் 100-க்கு 56 பேர்கள் கூலி விவசாயிகளாக இருக்கிறார்கள். அதோடு வேலைக்கு தகுதியாக இருந்தும் வேலை கிடைக்காமல் எத்தனையோ பேர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் பார்த்தால் இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் பலனை பாதி அளவுக்குக்கூட வேலையில்லாத் திண்டாட்டம் போகவில்லை என்று தெரிகிறது. அதிலும் சென்னையில்தான் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது என்று தெரிகிறது. டெக்னோ எக்னாமிக்கல் சர்வே என்ற புத்தகத்தில் 'unemployment problem is relatively excessive in Madras' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அகில இந்தியாவில் அர்பன் ஏரியாவை எடுத்துக்கொண்டால் வேலையில்லாதவர்கள் 2 சத விகிதம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால் சென்னையில் 5 சத விகிதம் பங்கு இருக்கிறது, சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால் தொழிலாளர்கள் மத்தியில் 100-க்கு 10 பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த நிலைமையில் Techno-economic survey சிபார்சை வைத்துக்கொண்டு

[Sri N. K. Palanisami] [2nd March 1961

நான் 3-ம் ஐந்தாண்டுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது
என்று நான் நினைக்கிறேன். Techno-economic survey கமிட்டி
சொல்லுகிறார்கள், 1961-ம் வருஷத்திலே வேலையில்லாதவர்களின்
தொகை 30 லட்சம் அளவை எட்டிவிடும் என்று. ஒரு பக்கம்
திட்டம் போடுகிறோம், உற்பத்தியைப் பெருக்குகிறோம், ஆனால்
இன்னொரு பக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்
கொண்டிருக்கிறது. திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு
வருவதில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்று நிதி
அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அப்படிச் சொல்லு
வது செயல்படவேண்டுமானால் சாதாரண ஜனங்களுக்கு இதில்
அக்கறை இருக்க வேண்டும். இந்த இரண்டு திட்டங்களினால்
வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவுக்காவது போயிருந்தால்
மக்களுடைய ஒத்துழைப்பு ஏற்படும்.

ரீஜனல் டிஸ்பாரிட்டியைப் பொறுத்தமட்டில் திட்டக்
கமிஷன் என்ன சொல்லுகிறது. "There should be reduction of
regional disparity of income in the State" என்று சொல்லுகிறது.
தொழில் மந்திரி அவர்கள்கூட தேஷனல் டெவலப்மெண்ட் கவுன்
ஸிலில் பிரச்னையை கிளப்பியிருக்கிறார். இதைப் பற்றியெல்லாம்
நேருஜிகூடச் சொல்லியிருக்கிறார்.

அப்ளேட் எக்கனமிக் ரிஸர்ச் எஸ்டிமேட் பிரகாரம் வருமா
னத்தைப் பார்த்தால், ஆல் இந்தியா சராசரி வருமானம்
ரூ. 271-ஆக இருக்கிறது. நம் சென்னையின் சராசரி ரூ. 229-ஆக
இருக்கிறது. கிட்டத்தட்ட 34 சத விகிதம் அகில இந்திய சரா
சரியை விட மாகாண சராசரி குறைவாக இருக்கிறது. இதற்குக்
காரணம் என்ன? இன்றையதினம் தொழில் வளத்திலே
பம்பாய்க்கும், வங்காளத்திற்கும் அடுத்தபடி சென்னை இருக்
கிறது. விவசாயத் துறையில் சராசரி 1,336 ராத்தல் உற்பத்தி
செய்கிறோம். விவசாயம் அபிவிருத்தியடைந்திருக்கிறது. அந்த
அளவுக்கு தொழில் துறையில் இல்லாவிட்டாலும் கணிசமான
அளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வருமான வித்தி
யாசத்தைப் போக்க மத்திய சர்க்காரின் உதவி அவசியம்
வேண்டும். இப்போது ஜனத்தொகை அடிப்படையில் கொடுக்கப்
படுகிறது. அதற்குப் பதில் எந்த மாநிலம் பின் தங்கியிருக்கிறதோ
அந்த அடிப்படையில் கொடுக்க சர்க்கார் வாதாட வேண்டும்.
அது மட்டுமல்ல, ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசம் இருக்கிறது,
தாலுக்காவிற்கு தாலுகா வித்தியாசம் இருக்கிறது, பிர்க்காவிற்கு
பிர்க்கா வித்தியாசம் இருக்கிறது.

(Sri V. Krishnamurthy in the Chair.)

டெக்னோ எக்கனமிக் சர்வேயில் அவர்கள் சொல்லக்
கூடிய நேரத்தில், தஞ்சையின் சராசரி 136 ரூபாய்,
கோயம்புத்தூர் 109, தென் ஆற்காடு . 127, வட ஆற்காடு
109, திருச்சி 104, சேலம் 86, மதுரை 90 என்று
சொல்லியிருக்கிறார்கள். ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசமாக,



2nd March 1961] [Sri N. K. Palanisami]

குறைந்திருக்கக் காரணம் என்ன? நம் தேசம் அபிவிருத்தியடைந்
திருக்கிறது என்று சொல்லும்போது மாகாணத்தை யூனிட்டாக
வைத்துக்கொண்டு, ஜனங்களுக்கு எந்த அளவுக்கு பொருள்
தேவை, என்னென்ன தொழில் தேவை என்று கணக்குப் போடு
கிறோமே தவிர தாலுகா தாலுகாவாக எடுத்துக்கொண்டு, பிர்க்கா
பிர்க்காவாக எடுத்துக்கொண்டு அந்தந்தப் பகுதியை அபிவிருத்தி
செய்யக்கூடிய அளவில் பார்ப்பதில்லை. ஆகவேதான் சுரேந்திரகார்
நல்லகார் என்ற விவசாயக் கமிட்டித் தலைவர் ஒரு தேசத்தை அபி
விருத்தி செய்வதில் மாகாணத்தை யூனிட்டாக எடுத்துக்
கொள்ளாமல் தகஸிலை யூனிட்டாக எடுத்துக்கொண்டு அபிவிருத்தி
செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

ஆகவே இந்தமாதிரி டிஸ்பாரிட்டியை இரண்டு ஐந்தாண்டுத்
திட்டங்களை நிறைவேற்றியபோதிலும் போக்க முடியவில்லை
என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறையிலும் சரி, விவசாயத் துறையிலும் சரி, அதிக
அளவு உற்பத்தியாயிருந்தபோதிலும் நிதி அமைச்சர் அவர்கள்
உரையிலே சொல்லியிருக்கிறார் தனிப்பட்டவர்களின் வருமானம்
குறைந்திருக்கிறது என்று. அதிக உற்பத்தியாகிறது என்று
சொன்னால் ஜனங்களுக்கு அதிக வருமானம் வரவேண்டும். உற்
பத்தி செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கு, விவசாயிகளுக்கு அதிக
வருமானம் வரவேண்டும். பொது ஜனங்களுக்கு கொஞ்ச விலையில்
அதிகப் பொருள்கள் கிடைக்கவேண்டும். அதுதான் உற்பத்திக்கு
அர்த்தம். ஆனால் உற்பத்தியாகியும் இருக்கிறது. ஓரளவுக்கு
விவசாய உற்பத்தி கொஞ்சம் குறைந்திருந்தாலும் தொழில் துறை
யில் 120 பங்கு அதிகம் உற்பத்தி செய்திருக்கிறார்கள். ரிஸர்வ்
பாங்க் கணக்குப்படி 1953-ல் தனிப்பட்டவர்களின் உற்பத்தி
104-ஆக இருந்தது. 1959-ல் 150-ஆக உயர்ந்திருக்கிறது. லாபத்தை
எடுத்துக்கொண்டால் 1957-ல் 154-ஆக ஆகி இருக்கிறது. இன்றைய
தினம் எந்த அளவு உற்பத்தியாகிறதோ அதைவிட லாபம் முந்திக்
கொண்டு போகிறது. இந்த அளவுக்கு உற்பத்தியானாலும் தொழி
லாளியின் வாழ்க்கைத்தரம் அந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதா
என்று சொன்னால் 1939-ம் வருஷத்தில் எந்த அளவு இருந்ததோ
அதைவிட கொஞ்சம் கூடியிருக்கிறது. இதை நான் சொல்ல
வில்லை. பார்லிமெண்டில் பேசக்கூடிய நேரத்தில் நந்தா அவர்
களே சொல்லியிருக்கிறார். விவசாயத் தொழிலை எடுத்துக்
கொண்டால் இரண்டாவது லேபர் என்க்வொயரி கமிட்டியின்
ரிப்போர்ட் வந்திருக்கிறது. அவர்கள் 1953-54-ல் 42 சத விகிதம்
அவர்களுக்கு கூலி கிடைத்தது; 1955-56-ல் 22 பங்குதான் கிடைக்
கிறது என்று சொல்லுகிறார்கள். இருபது பங்கு அவர்களுக்கு கூலி
குறைந்திருக்கிறது. 1954-ல் 59 நாட்கள் வேலையில்லை. அதே
நேரத்தில் 1956-ல் 150 நாட்கள் வேலையில்லை. ஆகவே ஒரு பக்கம்
உற்பத்தி அதிகம் ஆகிறது. இன்னொரு பக்கத்தில் வேலை நாட்கள்
குறைந்து சம்பளம் குறைகிறது. இவ்வளவு திட்டம் போட்டும்
அந்தப் பலன் பொது ஜனங்களுக்குப் போகவில்லை, தொழிலா

[Sri N. K. Palanisami] [2nd March 1961

ளிக்குப் போகவில்லை, விவசாயிக்குப் போகவில்லை. ரிஸர்வ் பாங்க் கணக்குப்படி விவசாயிக்கு சம்பளம் 1 ரூபாய், முதலாளிக்கு கிடைப்பது 2.39 ரூபாய். ஒரு பக்கத்தில் கான்ஸெண்ட்ரேஷன் ஆப் வெல்த் இருக்கிறது, ஒரு பக்கத்தில் கான்ஸெண்ட்ரேஷன் ஆப் பாவர்ட்டி இருக்கிறது. இன்றையதினம் விலைவாசி ஏறி யிருக்கிறது. சாதாரண ஜனங்கள் உபயோகிக்கக்கூடிய பொருள் களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இதன் மூலம் விலைவாசி அந்த அளவுக்கு மூன்றாவது திட்டத்தில் உயரும் என்று சொல்லப்பட் டிருக்கிறது. எந்த அளவுக்கு இன்வெஸ்ட்மெண்ட் போடப்படு கிறதோ, அந்த அளவுக்கு விலை ஏறுகிறது. இன்வெஸ்ட்மெண்டால் விலை ஏறக்கூடியது ஒன்று. வரியின் மூலமும் விலை ஏறுகிறது. வரி போட வேண்டாமென்று சொல்லவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, are we discussing the Central Budget here? There is no use in making a point on a matter over which we have no control. Therefore, if we are to discuss the taxes imposed by the Central Government in this House, we should have some remedy here and only then it will have some meaning. Now, if the hon. Member were to refer to those taxes here, I must say that the Hon. Union Finance Minister is not here to answer to his points.

SRI N. K. PALANISWAI: Because we are affected by these taxes, I am referring to them.

THE HON. SRI C. SUBRAMANIAM: But, those matters cannot be discussed here.

TEMPORARY CHAIRMAN (SRI V. K. KRISHNAMURTHY: Matters with which this House is not directly concerned should not be discussed here. The hon. Member has got one more minute.

SRI N. K. PALANISAMI: Sir, I have lost some time because of these interruptions. So, I request that I may be given some more time. ஆகவே இப்படிப்பட்ட ஒரு வரி போட வேண்டா மென்று சொல்லவில்லை. ஆனால் இவ்வளவு வரி போட்டும். . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: Again, the hon. Member is persisting in his reference to the Central taxes in spite of the Chair's ruling.

SRI N. K. PALANISAMI: வரி யார்மேல் போடவேண்டுமோ அவர்கள் மேல் போடவேண்டும். திட்டங்களை நிறைவேற்ற பணம் வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட வரிகள் போடுவதினால் சாதாரண ஜனங்கள் . . . . . . . . . .

TEMPORARY CHAIRMAN (SRI V. K. KRISHNAMURTHY): The hon. Member Sri A. P. C. Veerabahu may now speak.

SRI N. K. PALANISAMI: Sir, I may be allowed a few more minutes.



2nd March 1961]

TEMPORARY CHAIRMAM (SRI V. K. KRISHNAMURTHY): No. the hon. Member has already taken up three minutes over and above the time allotted to him.

* SRI A. P. C. VEERABAHU: தலைவர் அவர்களே, நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்த இந்த வரவு செலவுத் திட்டத் தையும், அதைப் பூரணமாக நமக்கெல்லாம் அவர் எடுத்துச் சொல்லிய விவரத்திற்கும் நான் அவரைப் பாராட்டுகின்றேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்கின்றேன். அந்த ஆதரிக் கும் முகத்தான், நான் சில எண்ணங்களை இந்தச் சபையின் முன் வைக்க முற்படுகின்றேன். நமது வரவு செலவுத் திட்டம் இந்த மாகாணத்தினுடைய எகனமிக் கிளைமேட் அதாவது பொருளா தார நிலை நல்லவிதமாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டு கிறது. மூன்று, நான்கு வருஷங்களாக நமது வரவு செலவுத் திட்டத்தை பற்றாக் குறையாக நாம் சமர்ப்பிக்கின்ற காலத்திலி ருந்தாலும்கூட, அது முடிவடைகின்ற காலத்தில் அது உபரியா கவும், ஆனால் அதிகமான உபரித் தொகையாக இல்லாமலும், ஏதோ பற்றாக் குறை என்ற அளவில் இல்லாமல் சரிக்கட்டிக் கொண்டு போகக்கூடிய நிலையைத்தான் நாம் பார்த்து வருகின்றோம். அந்த தைரியத்தோடு கூடிய, அந்த முன்யோசனை யோடு கூடிய அளவில்தான் நம்முடைய வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, பற்றாக்குறையை சரிக்கட்டிக்கொண்டு போகக் கூடிய அளவில் இருந்திருக்கிறது. இப்போதும் அதே முறையில் தான் பற்றாக்குறையை சரிக்கட்டிக்கொண்டு போய்விடும் என்ப தற்காக புதிய வரிகள் எதுவும் இல்லாமல், நமது வருமானம் நாம் வைத்திருக்கக்கூடிய இலக்குகளுக்கு சற்று அதிகமாகவே வரக் கூடிய அளவில் இருக்கிறது என்பதை நமது வரவு செலவுத் திட்டம் காட்டுகின்றது. ஆனால் புதிய வரிகள் நாம் எதுவும் போடவில்லை என்றாலும்கூட, பழைய வரிகளை அதே நிலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நிலையில் நாம் போவது அவ்வளவு சரியல்ல என்று நினைக்கிறேன்.

நிதி மந்திரி அவர்கள் இரண்டு வருஷங்களுக்கு முன்னால் சொன்னதுபோல், இந்த வருஷ வரவு செலவுத் திட்டத்திலே சாப் பாட்டு இனங்களுக்காக அதாவது தானியங்களுக்கு விற்பனை வரி யிலிருந்து விலக்களிக்கப்படுமென்று எதிர்பார்த்தேன். ஆனால் அப்படி ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. 2%-லிருந்து 1%-ஆக குறைக்கப்படும், அதுமாதிரி இன்னும் கொஞ்ச நாட்களில் அது பூரணமாக எடுத்துவிடப்படும் என்று கூறினார்கள். அதைப் பூரணமாக எடுக்காவிட்டாலும், ½%-ஆவது இந்த வருஷத்தில் நீக்கப்படும் என்று நான் எதிர்பார்த்தேன். இப்போது 2½ கோடி ரூபாய் பற்றாக் குறையாக இருக்கும்போது, நாம் எப்படி இந்த விற்பனை வரிக்கு விலக்களிக்க முடியுமென்று நினைத்து, விட்டிருக் கலாம் என்று நினைக்கிறேன். எப்படியிருந்தாலும், சென்ற கால அனுபவத்தைப் பார்க்கும்போது, இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் உபரி ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இரண்டு

வருஷத்திற்கு முன்னால் 68 கோடியாக இருந்த நமது பட்ஜெட் இப்போது 91 கோடியாகி இருக்கிறது. இந்த வருஷத்தில் அது 95 கோடி ரூபாயாக ஆகுமென்று நம்பிக்கைத் தெரிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால், இன்கம் டாக்ஸ் இந்த வருஷத்தில் 6 கோடி என்று போட்டிருக்கிறார்கள். வருகின்ற வருஷத்தில் இது 10 கோடி ரூபாயாக பெருகுகின்ற அளவுக்கு வாய்ப்பு இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். ஆகவே இப்போது பற்றாக்குறை பட்ஜெட்டாகப் போடப்பட்டிருப்பது துண்டு எதுவும் ஏற்படாமல் பூர்த்தியடைய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் சாதாரண மக்களை பாதிக்கக்கூடிய இந்த உணவு தானியத்தின் மேலுள்ள விற்பனை வரியை நீக்கியிருந்தாலும், அதனால் 2 கோடி ரூபாய்தான் துண்டு விழுந்திருக்கும் என்று நினைக்கிறேன். தவிர, இன்னும் மேற்கொண்டும் இந்த விற்பனை வரி இலாகாவின் மூலம் கிடைக்கக்கூடிய 18 கோடி ரூபாய் வருமானத்திலிருந்து, இந்த வருஷம் 20 கோடி அல்லது 21 கோடி ரூபாய் என்று இறுதியில் அதிகமாக வருமானம் வருவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று நினைக்கிறேன். நம்முடைய நாட்டிலே இப்போது தொழில் வளர்ச்சி அதி தீவிரமாக முன்னேறிக்கொண்டு வருகின்ற காரணத்தினாலும், இந்த வருமானம் அதிகமாக ஏற்பட ஒரு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலும், தான்ய விற்பனைக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. கலால் வரியாலும், இந்த வருஷம் அதிகமான வருமானத்தை நாம் எதிர்பார்க்கலாம். நம்முடைய மாகாணத்திலே இப்போது ஜீனி உற்பத்திசாலைகள் நிறைய ஏற்பட்டுக்கொண்டு வருகின்ற காரணத்தினால், இந்த ஜீனி உற்பத்திச் சாலைகளின் மூலம் நமக்கு ஏராளமான வருமானம் வருவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. இதையெல்லாம் நான் ஏன் இவ்வளவு சுற்றி வளைத்துக்கொண்டு சொல்கிறேன் என்று சொன்னால், இந்த உணவு தானியத்திற்கு சற்றுச் சலுகை அளிக்க சர்க்கார் முன்வரவேண்டுமென்பதற்காகத்தான். இந்த உணவு தானியத்தின் மீது எப்படியாவது 2%-லிருந்து, 1½%-க்கு குறைக்க முடியுமா என்று இந்த வருஷத்திலேயே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கவேண்டும். அதைச் சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. புதிய வரிகளை நாம் போடுவதற்கு முயற்சி செய்கின்ற காலத்திலே, இப்போது ஏராளமான தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. அதனால் அர்பன் ஏரியாவில் நிலத்தினுடைய விலைகள் வீடு கட்டும் மனையாக இருந்தாலும் சரி, தொழிற்சாலை நிறுவும் மனையாக இருந்தாலும் சரி, அல்லது தாறுமாறாக ஏறுகின்றன. 1958-லே ஒரு ஏக்கர் 1,000, 1,500 என்றிருந்தது. இப்போதுள்ள நிலையைப் பார்த்தால் அதே நிலம் 5,000 ரூபாய், 7,000 ரூபாய் என்று விலை ஏறிக்கொண்டே போகிறது. இதற்குக் காரணம் பூரணமாக சர்க்கார்தான். பெரிய அபிவிருத்தித்





திட்டங்களை நாம் ஏற்படுத்தும்போது, அந்த இடங்களுக்கு கிராக்கி ஏற்படுகிறது. நியாயப்படி அந்த கிராக்கித் தொகையெல்லாம் சர்க்காருக்குத்தான் சேரவேண்டும். அதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இப்படி நான் நிலத்தின் விலை ஏற்றத்தைப் பற்றிச் சொல்லும்போது, விவசாயத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அதுவும், தொழிற்சாலைகள் உருவாகி வருகின்ற நகரப் பிரதேசங்களில் யாரும் எதிர் பாராத விதமாக 100 மடங்கு, 200 மடங்கு என்று நிலத்தின் விலை ஏறிக்கொண்டு போகிறது. சாதாரண நிலத்திற்கு இந்தவிதமாக விலையைக் கூட்டுவதற்கு நிலச் சொந்தக்காரர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆனால் இந்த விலை சர்க்கார் ஏற்படுத்தும் அபிவிருத்தி திட்ட வேலைகளினால் ஏற்படுவதால், அப்படி நிர்ணயிக்கப்படும் விலையின் பெரும்பகுதி சர்க்காருக்குச் சேரவேண்டும் Tax on unearned income என்றிருக்கிறது. இம்மாதிரி நிலத்தை விற்று, அதன்மூலமாக கிடைக்கக்கூடிய வருமானத்தை ஒருவன் எடுத்துக்கொள்வதைத் தடுக்கவேண்டும். நிலத்தை வாங்கி, ஸ்பெகுலேஷனில் வைத்துக்கொண்டு, அபிவிருத்தித் திட்டங்கள் பின்னால் ஏற்படும், அப்போது லாபத்திலே விற்கலாம் என்றிருந்தால், அப்படி கிடைக்கக்கூடிய லாபத்திலே Tax on capital gains, இன்கம் டாக்ஸ் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி கிடைக்கக்கூடிய ஷேர் நம் மாகாணத்திற்கு வருகிறதென்றாலும், நாம் அதை நேரடியாகப் பெறுவதற்கு முயற்சியை மேற்கொண்டால், பெருவாரியாக நாம் எதிர்பார்ப்பதற்கு மேல் வருமானம் கிடைக்கும்.

பல அபிவிருத்தித் திட்டங்களை நாம் இப்போது மேற்கொள்ளுகிறோம். தூத்துக்குடி துறைமுகத்தை எடுத்துக்கொண்டால், அங்கு விஸ்தரிப்பு வேலை செய்வதற்காக இன்னும் 4 வருஷங்களில் 15 கோடி ரூபாய் செலவிட இருக்கிறோம். துறைமுகத்தைச் சுற்றியுள்ள நிலங்கள் யாருடைய முயற்சியும் இல்லாமல், விலை ஏறுகிறது. அதன் சொந்தக்காரர்களுக்கு பெரிய அளவில் விலை கிடைக்க இருக்கிறது. ஆகவே அதன் பெரும் பகுதியை சர்க்கார் எடுத்துக்கொண்டால், அதன்மூலம் கிடைக்கக்கூடியதை வைத்துக் கொண்டு, உணவு தானியத்திற்கு மானியம் கொடுக்க உபயோகிக்கலாம் என்பதற்காக இப்படி சுற்றி வளைத்துச் சொல்கிறேன். ஆகவே, பற்றாக்குறை பட்ஜெட் என்ற நிலையில் இல்லாமல், 4 கோடி ரூபாய் உபரி கிடைக்கக்கூடிய ஒரு காரணத்தினால், அதே நேரத்தில் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள இருக்கின்ற காரணத்தினால், அப்படி ஏற்படுகின்ற அபிவிருத்தி வேலைகளினால் கிடைக்கக்கூடிய லாபத்தை வைத்துக்கொண்டு, உணவு தானியத்திற்கு சர்க்கார் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க பெருமுயற்சி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாய உற்பத்திக்காக நம் அரசாங்கம் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. உர உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறது. இரண்டு வருஷகாலத்தில் 11-30 a.m.

[Sri A. P. C. Veerabahu] [2nd March 1961

நிலைமை சீர்பட்டுவிடும் என்று சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள்; நமக்கும் அம்மாதிரிச் சீர்பட்டுவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே, இந்த ராஜ்யத்தில் பெரும் தண்ணீர் வசதிகள் அதிகமாக இல்லை, ஆகையால் அதிகமாக பெரும் வேலைகள் எடுக்க வசதியில்லை என்று சொல்லப்படுகிறது. இன்னும் கழிவு போகும் தண்ணீரை சீர்படுத்தி உபயோகிக்கும் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. குளங்களை ஆழப்படுத்தும் திட்டங்களும் போடப்பட்டிருக்கின்றன. சுமார் 50,000 குளங்கள் இருக்கின்றன; அவற்றில் வருஷத்திற்கு ஓராயிரம் குளங்கள் வீதம் எடுத்து மராமத்து செய்வதானால், இந்த வேலை குறைந்த பட்சம் 10 வருஷத்திற்கு மேலும் நீடிக்கும் நிலையில் இருக்கிறது. இந்த வேலையை துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த 50,000 குளங்களையும் வருஷத்திற்கு பத்தாயிரம் என்று எடுத்து வேலை செய்து, இவை எல்லாவற்றையும் மூன்றாவது திட்ட காலத்திலேயே மராமத்து செய்து விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்வதில் பல சங்கடங்கள் இருக்கலாம். இருந்தாலும், தைரியமாக நடவடிக்கைகளை எடுத்து, துரிதமாக செய்த நீர்ப்பாசன வேலையாக அமையவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என் பகுதியில், கோரம் பள்ளம், பேய்க்குளம், ஆறுமுகமங்கலம் முதலியவை வெகு முக்கியமான குளங்கள். அவற்றால் ஒவ்வொரு குளத்திலும் குறைந்த பட்சம் 5,000 ஏக்கராக்கள் சாகுபடியாகும். அப்படிப் பார்க்கும்போது, 15,000 ஏக்கராக்கள் சாகுபடியாகக்கூடிய குளங்கள் இவை. இந்தக் குளங்களை ஆழப்படுத்தவேண்டும் என்று நீண்ட நாட்களாக வற்புறுத்தி வந்திருக்கிறேன். பரீட்சார்த்தத் திட்டங்கள் போட்டும் அவை நிறைவேறாமல் இருக்கின்றன. ஐந்து வருஷகாலமாக முயற்சிகள் செய்தும் அந்தக் குளங்கள் பற்றிய திட்டங்கள் அப்படியே இருக்கின்றன என்பதை கனம் மராமத்து இலாகா அமைச்சரவர்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிலும் பாசன வசதி பெற்ற குளம் என்று பேய்க்குளத்தை பரீட்சார்த்த திட்டத்திற்கு எடுத்துக் கொண்டார்கள். பாசன வசதியைப் பெருக்கவேண்டும், மராமத்துச் செய்யவேண்டும் என்று பரீட்சார்த்தத் திட்டத்திற்கு பேய்க்குளத்தை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் ஐந்து வருஷமாகியும் அது நிறைவேறவில்லை. பரீட்சார்த்தத் திட்டங்களையாவது துரிதமாக எடுத்து, தீவிரமாக வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறோம் என்று, மேலும் செய்ய வேண்டிய காரியங்களில் அசிரத்தையாக இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். நல்ல காரியங்கள் பல செய்திருக்கிறோம்; நல்ல காரியங்களின் விளைவாக, நல்ல பொருளாதார அமைப்பு இருக்கிறது; சமுதாயமும் சீராக இருக்கிறது. ஒரு ஸ்டேபின் கவர்ன்மெண்டையும் அமைத்திருக்கிறோம். ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டிய வேலைகளை, குறைபாடுள்ள வேலைகளை, துரிதமாகச் செய்ய வேண்டும். குளங்களை ஆழப்படுத்தும் வேலையை ஆரம்பிக்கவேயில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த பரீட்சார்த்தத் திட்டத்தை நிறைவேற்ற நட்வடிக்கை எடுக்கவேண்டும்.



2nd March 1961] [Sri A. P. C. Veerabahu]

மேலும் மேலும் விவசாயத்தைப் பெருக்கவேண்டுமென்றால், கிணற்று வசதியைப் பெருக்க வேண்டியது அவசியம். கிணற்று ஊற்றுக்கள் இருக்கக்கூடிய, அதற்கு உதவக்கூடிய குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு, மராமத்து செய்யப்பட்டிருந்தால்தான், அவை நல்ல விதமாகப் பயன்படுத்தப்பட்டால்தான், கிணறுகளில் ஊற்று எடுக்கும். இந்த வருஷத்தில் ஏராளமான மழைபெய்து விட்டிருக்கிறது. ஆனால், குளங்கள் ஆழமில்லாததாக இருந்ததால் ஏராளமான தண்ணீர் வீணாகப் போய் இருக்கிறது. தாம்பரபர்ணியிலிருந்து நாள் ஒன்றுக்கு 20,000 க்யூசெக் அளவில் 45, 50 தினங்களுக்கு தண்ணீர் வீண் அடைந்திருக்கிறது. அப்படிப் போகும் கழவுத் தண்ணீரை நாம் தடுக்க முடியவில்லை. பாசன வசதி பெற்றுள்ள குளங்கள் ஏராளமாக இருக்கையில், அவை நல்லவிதத்தில் மராமத்து செய்யப்பட்டிருந்தால், இருபோகம் தடையின்றி சாகுபடி செய்ய சௌகரியமாக இருக்கும். அது ஊற்று எடுக்கும் கிணற்று வசதிகளையும் பெருக்க முடியும் என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

நம் மாகாணம் தொழில் மயமாக ஆகிக் கொண்டிருக்கின்ற இந்த சமயத்தில், டிரான்ஸ்போர்ட்டு நல்ல விதமாக அமைக்கப்படவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எங்கும் டபிள் லைன் இல்லை. நம் மாகாணத்தில் குமரிப் பகுதியிலும், சேலம்-பங்களூர் பாதையையும் மட்டும் போட்டால் காணாது. திருச்சி-தூத்துக்குடிப் பாதையை பிராட் கேஜாக போட்டாலொழிய, தொழில் வளர்ச்சியடைந்ததாகாது; தொழில் வளர்ச்சியின் பூரண பலனை அடையமுடியாது.

(மணியடிக்கப்பட்டது)

இன்னும் இரண்டு நிமிஷம் கொடுங்கள், ஸார். திருச்சி—தூத்துக்குடிப் பாதையை டபிள் லைனாக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும். நமக்கு ரெயில்வே வளர்ச்சி செண்ட்ரல் கவர்மெண்டில் அதிகமாகக் கொடுக்கவில்லை. என் பிராந்தியத்திற்காக நான் சொல்லவில்லை. அம்மாதிரி எங்கு செய்தாலும் சரி; மதராஸ்-திருச்சி பாதையைச் செய்தாலும் சரி. எதானாலும், ஆரம்ப முயற்சியாவது செய்யத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிக் அயர்ன், கோல் சம்பந்தப்பட்டவரை ஏராளமாக உற்பத்தி செய்கிறோம், ஏற்றுமதி செய்யும் அளவுக்குக்கூட உற்பத்தி செய்கிறோம். என்றாலும், சிறு தொழில்கள் பூராவும் அவற்றை வாங்கி உபயோகிக்கக்கூடிய நிலையில் இல்லை. வாகன் கிடைக்கவில்லை

என்ற கஷ்டமும் இருக்கிறது. நிலக்கரிக்கு அதிக விலை கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவற்றை கப்பல் மூலமாகக் கொண்டு வந்து உபயோகிக்கக்கூடிய அளவுக்கு ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸுகளுக்கு சக்தி இல்லை. நிலக்கரிக்கும் குறைவான பூல் பிரைஸ் விதிக்கலாம். பர்டிலைசர், ஷுகர் போன்றவைகளுக்கு பூல் பிரைஸ் விதிக்கிறோம். ஆகவே நிலக்கரிக்கும், பூல் பிரைஸ் ஏன் விதிக்கக் கூடாது? அப்படிச் செய்தால், சர்க்கார் எடுக்கும் சிறு தொழில் வளர்ச்சிக்கு நல்லவிதமான ஊக்கம் அளித்ததாக இருக்கும். அவைகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று தொழில் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்துக்களுக்கு ஏராளமான பவர்ஸ் கொடுத்து இருக்கிறோம். ஏராளமான பொறுப்புகளையும் கொடுத்திருக்கிறோம். விவசாய முன்னேற்றத்திற்கு வசதியளிக்க, நிதிவசதி செய்து கொடுக்க நிலவரியிலிருந்து பேர்பாதி கொடுப்பதாகச் சொல்லுகிறோம். நிலவரி பூராவையும் கொடுத்தால் நல்லதாக இருக்கும். சென்னை மாகாணத்தில் ஆறு கோடி, ஏழு கோடி கிடைக்கும்; அது பூரணமாக பஞ்சாயத்துகளுக்கு அளிக்கப்பட்டால், அவர்கள் பொறுப்பை வகிக்க நல்ல ஊக்கமளித்ததாக இருக்கும்; ஆகவே, நிலவரியைப் பூரணமாகப் பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM: தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஆளும் தரப்பைச் சேர்ந்தவள் என்ற அர்த்தமற்ற அவசியத்தை விட்டு, அர்த்தத்தோடு அடைந்திருக்கும் அபிவிருத்திகளை எடுத்துச் சொல்ல, அதுவும் இந்தப் பத்தாண்டு காலத்தில் செய்துள்ள நல்ல சேவைப் பட்டியலை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இது கடைசி பட்ஜெட் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சர்க்காரின் முன்னேற்றத் திட்டங்களையும், மக்கள் அடைந்திருக்கும் நன்மைகள் பற்றி கொடுத்திருக்கும் பட்டியலையும் பார்த்து எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இதை ஒரு எலெக்ஷன் பிரசாரமாக எடுத்துக் கொள்ளலாம் என்றார்கள். ஆளும் தரப்பில் மட்டுமல்ல, எதிர்த் தரப்பில் உள்ளவர்கள்கூட இதைத் தேர்தல் பிரசாரத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால், இப்படிப்பட்ட எதிர்க்கட்சி இருந்ததால்தான், இந்த வகையில் திட்டங்கள் கொண்டுவர முடிந்தது சர்க்காரால் என்று எடுத்துக் காட்டும் முறையில் அமைந்திருக்கிறது இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை.

இதிலே, ரூ. 2.85 லட்சம் பற்றாக்குறை என்று குறிப்பிட்டு இருந்தாலும்கூட, பற்றாக் குறையே முன்னேற்றத்தைக் காட்டுகிறது. கடந்த ஆண்டில் ரூ. 33:5 லட்சம் பற்றாக்குறை என்று காட்டினார்கள்; ஆனால், கடைசியில் ரூ. 123·75 லட்சம் உபரி என்று



காட்டக்கூடிய திறமை வாய்ந்த அமைச்சர்கள் இருக்கும்போது, இந்த ஆண்டிலும் இந்த பற்றாக்குறை உபரியாக வரும் என்பதில் சந்தேகமில்லாமல் இருக்கலாம். அந்த வகையிலே திறமையாக பணியாற்றுகிற அரசாங்கம் ஒவ்வொரு இடத்திலும் எவ்வாறு முன்னேறியிருக்கிறோம் என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் விவரமாக. முக்கியமாக விவசாயத்தை எடுத்துக் கொண்டால் நாட்டில் உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு பல திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆரம்பத்தில் உணவு உற்பத்தி 19 லட்சம் டன்னாக இருந்தது இப்போழுது 35 லட்சம் டன்னுக்கு மேலாக நாம் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். அம்மாதிரி திட்டம் போட்டு இப்பொழுது 16 லட்சம் டன் அதிகமாக உணவு உற்பத்தி செய்திருக்கிறோம். அது மட்டுமல்ல. இன்னும் உற்பத்தியை அதிகமாகப் பெருக்கி நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கு விவசாயம் சம்பந்தப்பட்டவரை என்னென்ன திட்டங்கள் தேவையோ அத்தனையும் போட்டிருக்கிறோம். உர உற்பத்தியை அதிகமாக்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்திருக்கிறோம். முன்பு 48,000 டன் உர உற்பத்தி இருந்த நிலைமையில் இப்பொழுது 1 லட்சம் டன் வரையில் உற்பத்தி செய்கிறோம். இன்னும் அதிக உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம். நெய்வேலித் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கும் உரத் தொழிற்சாலை வருகிற வருஷத்திலிருந்து 3½ லட்சம் டன் உரம் உற்பத்தி செய்யும். அதோடுகூட தனியார் துறையிலே நெல்லையில் ஒரு உர தொழிற்சாலை வருகிறது என்பதைக் கேட்க நாங்கள் எல்லோரும் மிகவும் சந்தோஷப்படுகிறோம், அதை வரவேற்கிறோம்.

இதேபோல விவசாய உற்பத்தியை எடுத்துக்கொண்டாலும், அது மிகவும் திறமையாக நடந்துக்கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. பிற மாநிலங்களில் உற்பத்தி ஒரு ஏக்கருக்கு 750 ராத்தலாக இருக்கையில் நம்முடைய மாநிலத்தில் 1,332 ராத்தல் உற்பத்தி செய்து காட்டியிருக்கிறோம். அரிசியில் மட்டுமல்ல இந்த விளைச்சல் அபிவிருத்தி. பருத்தியை எடுத்துக் கொண்டாலும்கூட ஒரு ஏக்கர் ஒன்றுக்கு இரட்டிப்பாக நாம் உற்பத்தியை அதிகப்படுத்திக் காட்டியிருக்கிறோம். அதே போல கரும்பு உற்பத்தியிலும் ஏக்கருக்கு அதிகமாக உற்பத்தி செய்து காட்டியிருக்கிறோம். பிற மாநிலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 14 டன்கள் உற்பத்தி செய்திருக்கிறார்கள். நம் மாநிலத்தில் 25 டன்கள் உற்பத்தி செய்து காண்பித்திருக்கிறோம். இதையெல்லாம் கூறுவதற்குக் காரணம், இம்மாதிரியாக அரசாங்கம் நல்ல வகையிலே நல்ல திறமையோடு இயங்கி, மக்களிடையே அவ்வப்பொழுது எழக்கூடிய தேவையைப் பூர்த்தி செய்து, மக்களிடம் வரிப் பணத்தை வாங்கி அதற்கு நல்ல முறையிலே திட்டங்களை வகுத்து அதை மக்களுக்குத் திறமையாகப் பங்கிட்டுக் கொடுக்கும் நிலைமையில் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[Srimathi Rajathi Kunchithapatham] [2nd March 1961

பெரிய தொழில்களை எடுத்துக் கொண்டால், இந்த நாட்டிலே விவசாயத்தை மட்டும் கவனித்துக் கொண்டால் நாடு நாடாகி விட முடியாது. ஐந்து பேர்களில் நான்கு பேர்கள் விவசாயத்திற்குப் போய்விட்டால், ஏதோ ஒன்றிரண்டு பேர்கள் தொழிலை கவனிக்கக் கூடிய நிலைமையில் தொழில் வளமே ஏற்படாது. உணவுச் சோலையாக மட்டும் ஆகிவிட்டால் போதாது. தொழில் சோலையாகவும் நாட்டை ஆக்கவேண்டும். தொழில் மணம் கமழக்கூடிய அநேக திட்டங்களை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நெய்வேலித் திட்டம் நாம் எதிர்பார்க்கக்கூடிய ஒரு பெரிய காமதேனுவாக தமிழ் நாட்டில் அமையும். அதோடு சேலம் இரும்புக் கனித் திட்டம் இருக்கிறது. அதேபோன்று காவேரிப் பகுதி எண்ணெய் வளர்த் திட்டம்பற்றி நம்பிக்கையூட்டும் அபிவிருத்தி ஏற்படக் கூடும் என்ற நிலைமையிலே இங்கே அறிக்கை கொடுத்திருப்பது நாம் மிகவும் வரவேற்கத் தகுந்ததாக அமைந்திருக்கிறது.

சிறு தொழில்கள் சம்பந்தமாகக் கதர் திட்டத்தைப்பற்றி சொல்லும்பொழுது ஓரிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கதர் திட்டத்தில் ஆரம்பத்தில் 26,500 நூற்பவர்கள் இருந்தார்கள் என்றும் இப்பொழுது 10 ஆண்டுகளுக்குப் பின்னால் 1,81,000 பேர்கள் இருக்கிறார்கள் என்றும், நெசவு செய்பவர்களின் எண்ணிக்கை 716-லிருந்து 9,000-ஆகப் பெருகியிருக்கிறது என்றும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதே சமயத்தில் உற்பத்தி அளவைக் கொடுக்கும்பொழுது ஆரம்பத்தில் 66 லட்சம் கெஜமாக இருந்த கதர் உற்பத்தி இப்பொழுது 80 லட்ச கெஜத்திற்குத்தான் அதிகமாகியிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று என்போன்றவர்களுக்குத் தெரியவில்லை. அதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன். நூற்பவர்களின் எண்ணிக்கை சுமார் ஒன்றுக்கு எட்டு மடங்காகக் கூடியிருக்கும்பொழுது, அதிலே ஈடுபட்டிருக்கிற நெசவாளிகளின் எண்ணிக்கை ஒன்றுக்குப் பத்து மடங்காகக் கூடியிருக்கும்பொழுது, உற்பத்தியாகக்கூடிய ஜவுளி மட்டும் 1-½ பங்கு அளவுகூட முன்னேறாமல், அபிவிருத்தி இல்லாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. முக்கியமாக அம்பர் ராட்டை சர்க்கார் தரப்பிலே செய்யக்கூடிய நிலையிலே, நெல்லையில் பார்த்தோமானால் 5 தடவை 100 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய திட்டத்தில், ஒரு பரிசிரமாலயம் நடந்து முடிந்த பிற்பாடு அதில் 100 பெண்கள் நூற்புப் பயிற்சி பெறுகிறார்கள்; ஆனால் அதிலே 10 பெண்கள்கூட தொடர்ந்து வேலை செய்யாத நிலையைப் பார்க்கிறோம். ஒரு வேளை இந்த நிலையில் நூற்பவர்கள், நெசவாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று முதலில் காட்டிவிட்டு, உற்பத்திக் குறைவாக இருக்கிறது என்றால், அதில் பயிற்சி பெற்ற ஆண்களும், பெண்களும் அதிலே தொடர்ந்து வேலை செய்யாததுதான் காரணமாக இருக்குமோ என்று சந்தேகப்படவேண்டியதாக இருக்கிறது. கதர் திட்டம் முக்கியமாகப் பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய திட்டம். பரவலான முறையில் பெண்கள் அதிலே அதிகமாக ஈடுபடலாம்.



2nd March 1961] [Srimathi Rajathi Kunchithapatham]

குறைந்த செலவிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய ஒரு முக்கியமான தொழில் அது. அந்தத் தொழிலில் இன்னும் அதிகமான கவனம் செலுத்தப்படவேண்டும். இந்தத் திட்டத்திலே ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இன்னும் கவனம் செலுத்தி, ஒவ்வொரு ஜில்லாவிலும் நடக்கக்கூடிய பயிற்சி நிலையங்களை இன்னும் அதிகமாகக் கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோன்று பெரம்பூர் ரெயில் பெட்டி தொழிற்சாலையை ஏற்படுத்தியதன் மூலம் அரசாங்கம் ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறார்கள். சமீப காலத்திலே ஒரு மாதத்திற்கு முன்பு பஞ்சாயத்துத் தலைவர்கள் அத்தனை பேர்களும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இங்கு வந்து பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. மற்ற மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான பேர்கள் வந்து பார்த்தார்கள். நெல்லையிலிருக்கும் தலைவர்களும் இந்தப் பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையை நேரில் கண்டு களித்தார்கள். பேப்பர் அளவிலே அவர்கள் படித்திருந்ததைக் கருத்து அளவிலே அவர்கள் நினைக்க முடியாத அளவிற்கு ஒரு ஆச்சரியத்தை அவர்கள் அனுபவித்தார்கள் என்று அவர்கள் பின்பு சொன்னதைக் கேட்டோம். அதேபோன்று நெய்வேலித் திட்டத்தையும் நேரில் பார்த்துவிட்டு 'எங்களுக்கு உண்மையிலேயே இவ்வளவு பெரிய திட்டம் இருக்கிறது என்று தெரியவே தெரியாதே' என்று கூறிச் சந்தோஷப்பட்டார்கள். 'பெரம்பூர் ரெயில் பெட்டித் தொழிற்சாலை நம் நாட்டில் தொழில் எப்படி வளர்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது, அவ்வளவு சந்தோஷமான நிலை எங்களுக்கு ஏற்படுகிறது, இந்த வசதியை அரசாங்கமே செய்து கொடுத்ததில் எங்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே அது ஏற்பட்டது' என்று சொன்னார்கள். முதல் ஐந்தாண்டு இறுதியில் ஒரு வருஷத்திற்கு 350 பெட்டிகள் கட்ட வேண்டும் என்று திட்டம் போடப்பட்டிருந்த போதிலும், மூன்று ஆண்டுகளிலேயே இந்த இலக்கை அடைந்தாகிவிட்டது. இப்பொழுது வருஷத்திற்கு 600 பெட்டிகள் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு தினத்திற்கு ஏறக்குறைய இரண்டு பெட்டிகள் செய்யக்கூடிய அளவிற்கு நாம் முன்னேறியிருக்கிறோம். நம் நாட்டு தொழிலாளிகளின் திறமையைப் போற்றக்கூடிய நிலைமையில், அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக்கூடிய தொழிலாளர்களின் திறமையினால் தொழிலில் இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம்.

அடுத்தபடியாக, மின்சாரத்தை எடுத்துக்கொண்டு அதைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லாமல் இருக்க முடியாது. நம் நாட்டில் இன்று எத்தனையோ தொழில்கள் வெற்றி நடை போடுகின்றன என்றால், அதற்கு மின்சார வளர்ச்சியே காரணம். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் 12 யூனிட்டுகள் உபயோகப்படுத்திக் கொண்டிருந்த ஒரு நபர் இன்று 60 யூனிட்டுகள் பயன்படுத்தக்கூடிய நிலையில் மின்சாரம் ஓரளவு முன்னேறி இருக்கிறது. அந்த அளவிற்கு மின்சார சக்தி மக்களுக்குப் பயன்

படுகிற நிலையில் இந்த இலாகா முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஏதோ வாயளவிலே, பேசு அளவிலே சொல்லுவது இல்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்கு இது ஒன்றே சான்று போதும். ஒவ்வொருவரும் முன்பு இருந்ததைவிட இப்பொழுது 5 பங்கு அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். இந்த இலாகாவில் 1951-ம் ஆண்டில் ரூ. 3 கோடியாக இருந்த வருமானம் இப்பொழுது ரூ. 15 கோடியாக அதிகரித்திருக்கிறது. இன்னும் 1966-ம் ஆண்டில் இந்த வருமானம் ரூ. 40 கோடியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இது நாம் வரவேற்கக்கூடிய ஒரு அம்சம்.

இதேபோன்று ரோடு வசதியைப்பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ரோடு அமைப்பை எடுத்துக்கொண்டால், ஏதோ ரயில்வே ரோடு மட்டும் போட்டிருக்கிறோம் என்ற பெருமை மட்டும் போதாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக நெல்லையை எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கிற கிராம ரோடுகள் மிகவும் மோசமான நிலைமையில் சில இடங்களில் இருக்கிறது. இதேபோன்று மற்ற மாவட்டங்களிலும் இருந்து வருகிறது என்பதை அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டுவதை நாம் பார்க்கலாம். இதிலே கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலில் தார் ரோடுதான் அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலே 920 மைல் நீளத்திற்குத் தார் ரோடாக இருந்தது. இப்பொழுது 7,111 மைல் நீளத்திற்குத் தார் ரோடு போடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி தார் போடப்பட்டிருப்பது ஒரு நல்ல அம்சம்தான். அதிலே ஒரு நல்ல முன்னேற்றத்தைக் காண்கிறோம். ஆனால் கப்பி போட வேண்டிய ரோடுகள், இன்னும் 'எர்த் வொர்க்' பார்க்க வேண்டிய ரோடுகள் அதிகமாக இருக்கிறது. இதை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும், ஒன்று இல்லாவிட்டால் இன்னொரு காரணத்தைச் சொல்லி சால்ஜாப்பு சொல்லிவிடக்கூடிய நிலைமை தான் இருந்துகொண்டு வருகிறது. ஜில்லா போர்டு ரோடாக இருந்தால் அதை அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டும். அல்லது அதை இனிமேல் பஞ்சாயத்துக்கள் எடுத்துக் கொள்ளுவது என்றால், அதைப் பஞ்சாயத்து யூனியன் கவனிக்க வேண்டும். சூபரிண்டெண்டிங் என்ஜினியரிடமிருந்து, என்ன செய்யப் போகிறார்கள், ரோடு ரோடாகப் போகிறதா, இல்லையா என்பதற்குப் பதிலே கிடையாது. கப்பி போடவேண்டிய ரோடுகள் எத்தனையோ இருக்கின்றன. மண் வேலை செய்யக்கூடிய சாலைகள் எத்தனையோ இருக்கின்றன. இம்மாதிரி விவசாயத்தைப் பெருக்கி மின்சாரத்தைப் பெருக்கி, கிராமங்களில் உள்ள மக்களுக்குப் பல் வசதி செய்துகொடுக்கிறோம் என்று அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டிவிட்டு, ரோடுகளில் பஸ்கள் போகாவிட்டாலும், கால் நடையாகப் போகக்கூட கஷ்டமாக இருக்கும் நிலையில் சாலைகள் வைக்கப்பட்டிருந்தால், அது மிகவும் வருந்தத்தக்கது. ரோடு பராமரிப்புக்கு அவர்கள் ஒதுக்கியிருக்கிற தொகை போதவே போதாது, இன்னும் அதை ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்





கொள்ளுகிறேன். 'எர்த் வொர்க்' பார்க்கப்பட்ட சாலைகளின் முன்பு 7,131 மைல் நீளமாக இருந்தது இப்பொழுது 7,305 மைல் நீளமாகத் தான் இருக்கிறது. அதேபோன்று கப்பி போடப்பட்ட சாலைகள் முன்பு 12,953 மைல் நீளமாக இருந்தது இப்பொழுது 11,143 மைல் நீளமாக இருக்கிறது. இப்பொழுது 1,000 மைல் குறைந்திருக்கிறது. தார் ரோடு அதிகமாக அவசியம் இல்லை. நகர்ப்புறங்களில் தார் ரோடு, காங்கிரீட் ரோடு மிகவும் அவசியமில்லாவிட்டாலும், அவர்கள் சௌகரியமாக இருப்பவர்கள், கஷ்டப்படவேண்டிய நிலை அவர்களுக்கு இல்லை. ஆனால், முக்கியமாக கிராமப் பகுதிகளிலே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் நகர்ப்புறங்களுக்கு வரவேண்டிய நிலையில், கிராமங்களில் போக்குவரத்திற்கு நல்ல வசதி செய்துகொடுக்கப்பட்டால்தான், மக்களுக்கு ஒரு சந்தோஷமான நிலைமை ஏற்படும். ஆகவே, கிராமப்புறங்களில் ரோடு வசதிகள் நன்றாகச் செய்துகொடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நிதி அறிக்கையிலே வரவேற்கத்தக்க அம்சம் கல்வி. குறிப்பாக, 11-வது வகுப்புவரை எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவசக் கல்வி கொடுப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது வரவேற்கத்தக்கது. அதோடுகூட ஆசிரியர்களுக்கும் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறோம். மன நிம்மதியுடன் அவர்கள் பள்ளிகளில் வேலை செய்யவேண்டுமென்று அதிகச் சம்பளம் கொடுத்து வருகிறோம். அதே சமயத்தில் நான் ஒன்று கூற விரும்புகிறேன். ஆசிரியர்களும் அதே மனோபாவத்துடன், அரசாங்கம் எந்த அரசாங்கமாக இருந்தாலும்—ஒவ்வொரு கட்சி அரசாங்கம் ஒவ்வொரு நிலையிலே வரலாம்—ஆசிரியர்கள் கவலைப்படவேண்டியது இல்லை. அவர்கள் மாணவர்களுக்குப் போதிக்கும் பொழுது, இன்று அவர்களுடைய மனதை எவ்வளவு திருப்திபடுத்த வேண்டுமோ அவ்வளவு திருப்திபடுத்த, இந்த அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய திட்டங்களை நிறைவேற்றி வரும்பொழுது அரசாங்கத்தைப் பற்றித் தூற்றுமலாவது ஆசிரியர்கள் இருக்கவேண்டுமென்ற மனப்பான்மையை இந்த அரசாங்கம் அவர்களுக்கு அறிவுறுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். பள்ளிக்குச் சென்று வருகிற மாணவர்கள்—கல்லூரியாக இருந்தாலும் சரி, உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி—இன்றைக்கு லெக்சருக்கு வந்திருந்த ஆசிரியர்கள், பேராசிரியர்கள் என்னென்ன பேசினார்கள், எந்தெந்த அமைச்சர்களைத் தூற்றினார்கள், எந்தெந்தத் தலைவர்களைப் போற்றினார்கள், ஏற்றினார்கள் என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை மாறவேண்டும். கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மாணவர்களுக்கு விஷத்தைப் போதிக்கக் கூடாது. விஷயத்தைச் சொல்ல வேண்டும். ஆசிரியர்களுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய வகையிலே செய்திருக்கிறோம். முக்கியமாக ஜில்லா போர்டு பஞ்சாயத்து யூனியன்களிலே வேலைபார்க்கும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் கிடையாது. நகரசபை ஆட்சியில் இருக்கும்

[Srimathi Rajathi Kunjithapatham] [2nd March 1961

பள்ளிகளிலே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு வீட்டு அலவன்ஸ் கொடுக்கிறோம். ஜில்லா போர்டு, பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு வீட்டு அலவன்ஸ் கொடுக்கப் படுவதில்லை. அவர்களுக்கும் இந்த அலவன்ஸ் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலை விற்பனை வரியிலே இருந்தது. ரூ. 25,000 வரை விற்பனை செய்பவர்களுக்கு விரிவான கணக்கு வைக்காமல் உத்தேச மதிப்பின் பேரில் மொத்தமாக வரி செலுத்தக் கூடிய சலுகை ஒன்றைக் கொடுத்திருந்தோம். இதை 50,000 ரூபாயாக இப்பொழுது உயர்த்தி எதிர்த் தரப்பிலே இருப்பவர்களுக்கு அதிக வேலையில்லாமல் செய்துவிட்ட அமைச் சரைப் பாராட்டி, இந்த நிதி நிலை அறிக்கையை முழு மனதுடன் வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI A. V. P. ASAITHAMBI :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 2.85 கோடி ரூபாய் துண்டு விழுகிற ஒரு பட்ஜெட்டை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே கொண்டுவந்திருக் கிறார்கள். பொதுவாக, நகர சபை போன்ற நிர்வாக ஸ்தாபனங் களிலே வரவு செலவு அறிக்கைகளைத் தயாரிக்கும்பொழுது, துண்டு விழுகிற ஒரு நிலைமையைக் காட்டுவார்கள். அதற்குக் காரணம் நகரசபை என்கிற ஸ்தாபனம் மேலே இருக்கிற அரசாங் கத்திலே மேலும் மேலும் உதவித் தொகை பெறுவதற்கு வேண்டி, தங்கள் இடத்தை அபிவிருத்தி செய்கிற அடிப்படையிலே, துண்டு விழுகிறதைக் காட்டி கடன் பெறுவதை நாம் பார்த்திருக்கிறோம். நம்முடைய அரசாங்கம் நம்முடைய நாடு அபிவிருத்தி அடையக் கூடிய நிலையிலே துண்டு விழுகிற தொகையை இன்றைய தினம் மிகக் குறைந்த அளவிலே காட்டியிருப்பதைப் பார்க்கிறபொழுது, இந்த அரசாங்கம் நம்முடைய நாட்டுக்குத் தேவையான பல அபிவிருத்திகளைக் கணக்கிட்டு அவற்றைச் செய்வதற்குத் திட்ட மிடத் தவறியிருக்கிறது என்பதை நாம் உணர முடியும். நம் முடைய நாடு மிகவும் பின்தங்கிய நிலைமையிலே இருக்கிறபொழுது துண்டு விழும் தொகை மிகக் குறைவாக இருக்கிறது என்று சொன்னால், உள்ளபடியே, நம்முடைய அரசாங்கம் சரிவர என் னென்ன தேவைகள் என்பதைக் கணக்கிட்டுப் போடாத ஒரு நிலைமையைத்தான் நாம் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

இரண்டாவதாக, இந்தத் துண்டு விழுகிற தொகையைச் சரிக் கட்டக்கூடிய அளவுக்கு மத்திய சர்க்காரிடமிருந்து உதவித் தொகையை எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. கடந்த ஆண்டு பட்ஜெட்டிலே குறிப்பிட்டதற்கு மேலாக நமக்குக் கொஞ்சம் உபரியாகக் கிடைத்ததற்குக் காரணம், மத்திய அரசாங் கத்திடமிருந்து உதவி அதிகமாகக் கிடைத்ததுதான் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே நம்முடைய மாகாண அரசு இன்னொரு இடத்திலேயிருந்து தொகையை எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு, நகரசபை போன்று



2nd March 1961] [Sri A. V. P. Asaithambi.]

ஒரு சாதாரண நிர்வாக உறுப்பு மன்றம் மாதிரி இருக்கிறது என்பது இந்த அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. பொதுவாக, எந்த நாட்டிலேயும் இரண்டு பட்ஜெட்டுகள் இருப்பதைப் பார்க்க முடியாது. ஆனால் நாமெல்லோரும் பார்க்கிறோம், இங்கே நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் பட்ஜெட்டும், அங்கே மொரார்ஜி தேசாய் பட்ஜெட்டும், ஆக இரண்டு பட்ஜெட்டுகள் இந்த நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் வெளிவந்திருக் கின்றன. ஒரு நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு பட்ஜெட்தான் இருக்க முடியுமே தவிர, இரண்டு பட்ஜெட்டுகள் இருக்க முடியாது. (குறுக்கீடு : ஏன்?) என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அப்புறம் பதில் சொல்லலாம்.

**THE HON. SRI R. VENKATARAMAN :** பெடரல் கான்ஸ்டி டியூஷன், யூனிடரி கான்ஸ்டிடியூஷன் என்று இரண்டு உண்டு. யூனிடரி கான்ஸ்டிடியூஷனிலே ஒரே பட்ஜெட். பெடரல் கான்ஸ்டி டியூஷனிலே எத்தனை யூனிட்டுகள் இருக்கின்றனவோ அத்தனை பட்ஜெட்டுகள் இருக்கும்; சென்டிரல் பட்ஜெட்டும் இருக்கும்.

**SRI A. V. P. ASAITHAMBI :** இரண்டு வெவ்வேறு நாடுகள், அதாவது ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு அடிமையாக இருப்பதன் அறிகுறியாகத் தான் இரண்டு பட்ஜெட்டுகள் வரக்கூடிய நிலைமை இருக்கும். இந்த அளவிலே, இந்த நாடு இன்னொரு பகுதிக்குச் சட்டபூர்வமாக அடக்கி வைக்கப்பட்டிருப்பதன் அறிகுறியாகத் தான் இரண்டு பட்ஜெட்டுகள் இந்த நாட்டு மக்களைப் பாதிக்கக் கூடிய அளவுக்கு வந்திருக்கின்றன. இந்த பட்ஜெட்டைப் பொறுத்த வரையிலே வரி விதிப்பு எதுவும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசினர் வெளியிட்ட பட்ஜெட்டிலே, இந்த நாட்டு சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்குச் சுமார் 41 இனங்கள் மீது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. 41 இனங்கள் மீது வரி விதிக்கப் பட்டு, இந்த நாட்டு மக்கள் அந்த வரியைச் செலுத்தவேண்டி யிருக்கிறது.

TEMPORARY CHAIRMAN (SRI V. K. KRISHNA-MURTHY) : The hon. Member is requested to speak on the subject under discussion and not refer to the Central Budget.

**SRI A. V. P. ASAITHAMBI :** இரண்டு அரசாங்கமும் ஒன்றோ டொன்று இணைந்திருக்கின்றன. ஆகவே அந்த பட்ஜெட்டையும், இந்த பட்ஜெட்டையும் சேர்த்துப் பேசுவதில் தவறு ஒன்றும் இல்லையென்று நான் கருதுகிறேன். அங்கே 41 இனங்கள்மீது வரி விதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலேதான் இங்கே மேற்கொண்டு வரி விதிக்காதபடி இருக்கிறதே தவிர, உள்ளபடியே இன்றைய தினம் இந்த நாட்டு மக்கள் மீது அதிகப்படியான வரிகள் சுமத்தப் பட்டு வருகிறதை நாம் பார்க்கலாம். மேலும், இது கடைசி பட் ஜெட் என்றும், இது தேர்தல் அறிக்கையைப் போன்று இருக்கிறது

[Sri A. V. P. Asaithambi] [2nd March 1961

பட்ஜெட் மாதிரி இல்லை என்றும் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிட்டதை வைத்துக்கொண்டு எந்த அளவுக்குத் தேர்தல் அறிக்கையாக இருக்கிறது என்று சொன்னால், தேர்தல் அறிக்கை என்று ஒரு கட்சி செய்த சாதனைகளை விளக்கக்கூடியதாக இருக்குமோ, அவ்விதம் இது நல்ல அளவுக்கு சாதனைகளை விளக்கக்கூடியதுதானே என்று எதிர்க்கட்சியினர் பேசினார்கள். தேர்தல் அறிக்கையிலே செய்யாததையும், செய்ய முடியாததையும் செய்தது போன்று காட்டக்கூடிய அளவிலே பல கட்சிகள் செய்வதை நாட்டிலே பார்க்கலாம். அந்த அளவிலே பார்க்கும் போது கடந்த ஆண்டில் இந்த நாட்டில் காங்கிரஸ் என்னென்ன செய்திருக்கிறது என்பதையும் பெரிய அளவில் என்னென்ன செய்திருக்கிறார்கள் என்பதையும் மக்களுக்குத் தெரிவிக்கும் அளவில் இந்த பட்ஜெட்டில் காட்டியிருக்கலாம். கடந்த நான்கு ஆண்டு காலமாக இந்த அரசாங்கம் செய்த சாதனைகளால் மக்களுடைய நிலைமை எந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். உற்பத்தி அதிகமாகி இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களுடன் வருடா வருடம் வேண்டிய கணக்கை பட்ஜெட்டில் குறிப்பிட்டிருக்கிறார். எந்த அளவுக்கு உற்பத்தி அதிகரித்திருக்கிறதோ அந்த அளவுக்கு விலைவாசிகள் கூடிக் கொண்டே தானிருக்கிறது. வதைத் தான் பார்க்கிறோமே தவிர உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க விலைவாசிகள் ஓரளவு குறைந்திருக்கிறதா என்கிற நிலைமையை நாம் பார்க்கிறோமா என்று சொன்னால் இல்லை. உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று காட்டியிருக்கிற கனம் அமைச்சர் அவர்கள் விலைவாசிகளை குறைப்பதற்கு அல்லது விலைவாசி கூடியிருப்பதற்கு உள்ள காரணம் என்ன? அதைத் தவிர்க்கக்கூடிய நிலைமையை அவர்கள் விளக்கவில்லை. என்ன தான் அவர் விளக்கிச் சொன்ன போதிலும் கூட விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமையில் அதிகரிக்கப்படுகிற உற்பத்தியால் இந் நாட்டிற்கு என்ன பயன், அதனால் மக்கள் என்ன பலனை அனுபவிக்கிறார்கள். இவைகளையெல்லாம் நாம் பார்க்கிறபோது உற்பத்தியைக் காட்டி, அதைக் காண்பிப்பதன் மூலமாக இந்த ஆட்சியின் சாதனை எவ்வளவு கூடி இருக்கிறது என்று காட்டுவதன் மூலமாக மக்களை ஏமாற்றக்கூடிய அளவில் முயற்சிக்கப்படுகிறது. இப்படி விலைவாசிகள் கூடியிருப்பதைக் காட்டும்போது அவற்றை எதிர்க் கட்சி எடுத்துச் சொல்லும் போது நிச்சயமாக அரசாங்கத்தினுடைய சாதனை அவ்வாறு இல்லை என்பதை மக்கள் நிச்சயமாக உணரத்தான் போகிறார்கள்.

அது மட்டுமல்ல, இந்த பட்ஜெட்டைப் பொறுத்த வரையில் மத்திய அரசாங்கத்தின் தயவினால் தாம் எதிர் பார்த்த அளவுக்கு அதிகமாகவே பணம் வந்து விட்டது என்று கனம் அமைச்சர் அவர் கூறியிருக்கிறார். அதற்கு அடுத்த பக்கத்திலேயே பார்த்தால் இந்தச் சம்பளங்களைச் சரிக்கட்டுவதற்காக அளிக்கப்படுகிற பணம் இந்த ஆண்டுடன் நிறுத்தப்பட்டு விட்டது, மேலும் தொடர்ந்து கொடுக்க மறுத்து விட்டார்கள் என்று குறிப்பிட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். மத்திய அரசாங்கத்தினிடம் இந்த



2nd March 1961] [Sri A. V. P. Asaithambi]

அரசாங்கம் கேட்ட ஒவ்வொரு விவரத்திற்கும் அவர்கள் அவைகளை மறுக்கப்பட்ட தன்மைக்கும் மேலும் மேலும் நாம் பணிந்து கொடுத்துக்கொண்டு போகக்கூடிய அளவில் தான் இருக்கிறது. கோரிக்கைகளை வைத்து அதே இடத்தில் அவற்றை அவர்கள் வற்புறுத்தியதாகத் தெரியவில்லை. உதாரணமாகச் சேலத்தில் கிடைக்கக்கூடிய இரும்பைப் பயன்படுத்தக்கூடிய அளவில் ஒரு தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்கிற கோரிக்கை வெகு நாட்களுக்கு முன்னதாகவே இந்நாட்டில் எல்லாக் கட்சிகளாலும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதைப்பற்றி இந்த பட்ஜெட்டில் உறுதி அளிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அது நிச்சயமாக இல்லை. ஏதோ சோதனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது வந்த பிறகுதான் அது பூர்த்தி செய்யலாம் என்கின்ற முறையில் அது இருக்கிறதே தவிர அது நிச்சயமாக இங்கே ஏற்படுத்தப்படும் என்கிற தன்மையில் அதற்குள்ள வாக்குறுதி இல்லை. இந்த அளவில் இங்கே இருக்கக்கூடிய இந்த மாநில அமைச்சர்கள் இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களைத் தைர்யமாக அணுகி நமக்கு என்ன வேண்டும் என்பதைக் கேட்பதை விட்டு விட்டு அதற்கு மாறாக வரலாம் என்கிற தோரணையில் மாத்திரம் அவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த ராஜ்யத்தை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு இந்த அரசாங்கம் தவறி விட்டார்கள் என்கிற குற்றச்சாட்டை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சுதந்திரம் அடைந்து இந்தப் பதிமூன்று ஆண்டு காலத்தில் நம்முடைய நாடு, உலகத்திலுள்ள இதர நாடுகள் அடைந்த முன்னேற்றத்தைப் பார்க்கும்போது, இந்த நாடு எந்த அளவில் முன்னேற்ற மடைந்திருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாகச் சொல்லலாம் இந்த நாட்டைப் பொறுத்த வரையில் போதிய அளவில் முன்னேற்றமடையவில்லை என்று. அதற்குக் காரணம் நம்முடைய நாடு அதிலும் நமது தமிழகம் சென்னை ராஜ்யம், ஒரு நகர சபையைப்போல, ஒரு கார்ப்போரேஷனைப்போல இருக்கிறதே தவிர இதற்குப் போதிய அதிகாரம், சுதந்திரம் முதலியவைகள் இந்த நாட்டை பொறுத்த வரையில் இல்லை. இந்த பட்ஜெட்டைச் சமர்ப்பித்த கனம் அமைச்சருக்குச் சொல்லுகிறேன் இந்த ராஜ்யத்திலிருந்து மத்திய அரசாங்கத்திற்கு வரியாக செல்லக்கூடிய தொகை மொத்தத்தில் எவ்வளவு? அதாவது ரயில் மூலமாகவும், தபால் மூலமாகவும், மற்ற வரி இனங்கள் மூலமாகவும் மத்திய அரசாங்கத்திற்குச் செல்லக்கூடிய தொகைகள் வருடா வருடம் எவ்வளவு? நாம் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து பெறக்கூடிய தொகை எவ்வளவு? யார் எவ்வளவு அதிகமாக அனுபவிக்கிறார்கள், அவர்கள் அனுபவிக்கிறார்களா அல்லது நாம் அனுபவிக்கிறோமா என்கிற புள்ளி விவரங்களைக்கூட காட்டவில்லை. மத்திய அரசாங்கம்தான் அதிகமாக அனுபவிக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட முடியும். அதனால் தான் இந்த நாடு புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்லுகிறோம். நாங்கள் மாத்திரம் சொல்லவில்லை. மைசூர் அரசாங்கக் காங்கிரஸ் உறுப்பினர்கூட நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் அதை

எடுத்துப் பேசியிருக்கிறார். அவ்விதமே தென்னாடு புறக்கணிக்கப் படுகிறது என்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கே. டி. கே. தங்கமணி கூடப் பேசியிருக்கிறார். ராஜ்ய கவர்னர்கள் மாநாட்டில் கூட இவைப்பற்றி பேசப்பட்டிருக்கிறது. தொழில் அமைச்சர் கனம் வெங்கட்டராமன் அவர்கள்கூட எடுத்துச் சொல்லி இருக்கிறார். அதற்கு திரு. பண்டித நேருவுக்குக் கோபம் வந்ததே தவிர வேறு ஒன்றுமில்லை. ஆகவே தென்னாடு எந்த வழிகளிலும் புறக்கணிக்கப்படுகிறது என்கிற நிலைமை இருக்கிறது. அதற்கு இந்த அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த அரசாங்கத்திற்கு என்ன தேவை அதைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கம் அவர்களை வற்புறுத்த வேண்டும். இன்னும் சொல்லப் போனால் ஏற்றுமதி, இறக்குமதி என்பதை மத்திய அரசாங்கம் கையில் வைத்துக்கொண்டு அகில இந்தியா பூராவும் ஒரே மாதிரிக் கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் நம்முடைய தேவை என்ன, நமக்கு எவ்வளவு அதன் மூலம் வரவேண்டும், எந்த அளவுக்கு அந்தக் கட்டுப்பாடு இருக்க வேண்டும், எந்த அளவுக்கு நமக்கு ஏற்றுமதி இறக்குமதி வருமானம் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு இங்குள்ள அமைச்சர்கள் சண்டை போட்டு அவற்றைப் பெற முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பணம் வாங்குவதற்கு என்று இங்கிருந்து மூன்று அமைச்சர்கள் போனார்கள். அங்கு 100 கோடி ரூபாயைக் குறைத்தார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாமல் நாம் கேட்பதை அவர்கள் கொடுக்கும் அளவில் அவர்களை வற்புறுத்த வேண்டும். அப்படி வற்புறுத்த முடியவில்லை என்று அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். இதை நினைக்கும்போது இந்நாட்டை அவர்கள் எந்த அளவு காப்பாற்ற முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். மேற்கொண்டு சண்டை போட்டு வாங்கக்கூடிய அளவில் அங்கு வற்புறுத்தியிருக்க வேண்டும். இங்குள்ள கோரிக்கைகளை அங்கே வைத்துச் சண்டை போட்டு வாங்க வேண்டும். இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்நாட்டு மக்கள் எந்த அளவுக்கு முன்னேற்றமடைந்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது போதிய அளவில் முன்னேற்றமடையவில்லை. ஆனால் மின்சார அமைச்சர் சொல்லலாம் எல்லா இடங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பது வாஸ்தவம்தான். ஆனால் எந்த அளவுக்குத் தொழில் துறையில் வழங்கப்பட்டிருக்கிறது? தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தித் திட்டத்தில் சேர்த்திருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறதே தவிர அது எந்த அளவுக்கு இன்றைக்கு ஆரம்பிக்கப்படும் என்பது இன்னும் தெரியவில்லை. இங்கே இருக்கக் கூடிய அமைச்சர்கள் இங்குள்ள திட்டங்களை திட்ட வட்டமாக எடுத்துச் சொல்லி அதற்கு வேண்டிய உதவியை வாங்கி வரவேண்டும். அந்த முறையில் இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமே



தவிர வெற்றிகரமாக பட்ஜெட்டை சமர்ப்பித்து விட்டோம் என்று சொல்வதில் பயன் இல்லை. எவ்வளவு காரியங்களைச் செய்து விட்டோம் என்பதை வரவு செலவு திட்டத்தில் சொல்வதன் மூலமாக இந்த அரசாங்கம் இருந்தால் இந்த நாட்டிற்கு நன்மையை அவர்கள் செய்தவர்களாக மாட்டார்கள். நிச்சயமாக நான் சொல்லுகிறேன், இந்த அரசாங்கம் இந்த ஐந்து வருடகாலத்தில் செய்திருக்கிற சாதனங்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் நிச்சயமாகச் சொல்லுவேன், சாதாரணமாக ஒரு கார்போரேஷன், ஒரு முனிசிபாலிட்டி தங்களுக்குள்ள மக்களுக்கு சிறு ஊர்களைத் திருத்தக்கூடிய அளவுக்குத்தான் இந்த அரசாங்கம் செய்திருக்கிறதே தவிர சுதந்தர நாடு செய்யக்கூடிய அளவில் செய்யவில்லை. இந்தச் சர்க்கார் அந்த அளவில் தங்களுடைய சாதனைகளைச் செய்யவில்லை. அப்படிச் செய்யவும் தவறி விட்டார்கள் என்பதைக் கூறிக்கொண்டு இந்த பட்ஜெட் சுதந்தர நாட்டினுடைய பட்ஜெட் அல்ல, இது ஒரு அடிமை அரசாங்கத்தினுடைய பட்ஜெட்டாக இருக்கிறது என்பதைக் கூறிக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* **Sri A. CHIDAMBARANATHA NADAR**: கனம் தலைவர் அவர்களே, திறமை மிக்க நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைப் பேசலாம் என்று ஆசைப்படுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டினுடையவும், கனம் நிதி மந்திரி கூறியதுபோல இந்த மந்திரி சபையின் கடைசி ஆண்டினுடையவும் பட்ஜெட்டை கனம் மந்திரி அவர்கள் சமர்ப்பித்துள்ளார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி பட்ஜெட்டாகையால் மந்திரி சபையினுடைய கடைசி பட்ஜெட்டாகையால் நல்ல முறையில், பல சிக்கல்கள் இருந்த போதிலும் எவ்வளவோ பற்றுக்குறை இருந்த போதிலும் நல்ல முறையில் கொண்டு வந்திருக்கிறார். நாம் எல்லோரும் அதற்கு ஆதரவு அளித்து அவர் கொண்டு வந்ததை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை நான் பேசினால் அது ஒரு நாளும் மிகையாகாது.

அடுத்தபடியாக கனம் அமைச்சர் அவர்கள் கூறியது போல நமது மாநிலத்தில் விவசாய வளர்ச்சி மிகவும் முன்னேறி இருக்கிறது. எனினும் ரசாயன உரங்கள் குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் போதுமான அளவு கிடைப்பதில்லை. கழிந்த சாகுபடி காலத்தில் எங்கள் மாவட்ட விவசாயிகள் இராசயன உரம் இல்லாமல் தவித்தார்கள். இதை நமது மாநில சர்க்காரும் நல்ல முறையில் அறிந்ததே. இதை நிவர்த்தி செய்வதற்கு நெய்வேலியிலும், தூத்துக்குடியிலும் உரத் தொழிற்சாலை வருவது கண்டு மன மகிழ்ச்சியடைகிறேன். மேற்சொன்ன உர ஆலைகள் உற்பத்தி செய்யும் வரை, நமது தமிழ் நாட்டிற்குக் காலாகாலத்தில் மத்திய அரசாங்கத்திடம் இருந்து தேவையான அளவு உரம் வாங்கி விநியோகிக்க வேண்டுகிறேன்.

[Sri A. Chidambaranatha Nadar] [22nd March 1961

எங்கள் மாவட்டத்தில் இப்போது நிறுவியிருக்கும் சில வாய்க்கால்களை நீட்டுவதற்காக அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அவைகளில் அத்திக்கடை சானல், சம்பக்குளம் சானல், தெங்கம் புதூர் சானல், முட்டம் சானல் முதலியன ஆகும். இந்த வாய்க்கால்களை நீட்டும்போது காவேரி டெல்டாவை மனதில் வைத்துக் கொண்டு இப்போது சானல்களில் இருக்கும் மடையை சுருக்கிக் கொண்டு போனால் அது அபாயகரமாக ஆகும். அது அபாயம் என்பதை அநுபவத்தில் கண்டு கொண்டிருக்கிறோம். காரணம் என்னவென்றால் எங்கள் மாவட்டத்திலுள்ள நிலங்களுக்குத் தினமும் தண்ணீர் விடவேண்டும். அங்குள்ள மண்ணின் தன்மை அது. போதிய அளவுத் தண்ணீர் இல்லாவிட்டால் கரையான் பயிர்களை அழித்துவிடும். எனவே இதை வெற்றிகரமாகச் செய்ய வேண்டுமானால் இப்போது நிலவி வரும் கோதையாறு அணைக் கட்டை உயர்த்தியும், புதிதாக மாம்பழத்துறையார், பொய்கை சிற்றார் 1—2 அணைக்கட்டுகளைக் கட்டி முடிக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

தொழில்துறையில் நமது மாநிலம் மற்ற மாநிலங்களைவிட முன் நோக்கி நிற்கிறது என்பதைக் கேட்டு மிக மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக அரசாங்கத்தையும் பாராட்டுகிறேன். நெய்வேலித் திட்டத்தை விரைவாக முடித்து, சேலம் இரும்புத் தொழிற்சாலையை வெகு சீக்கிரமாக ஆரம்பிக்க அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். எனது மாவட்டம் தொழில் துறையிலும், வியாபாரத் துறையிலும் பின்னணியில் நிற்கிறது. அரசாங்கம் அங்கு ரப்பர் தொழிற்சாலையையோ அல்லது டயர் தொழிற்சாலையையோ நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் நிறையக் காடுகள் இருப்பதால் ஒரு பேப்பர் தொழிற்சாலையை எளிதில் ஆரம்பிக்கலாம். இதை ஆரம்பித்தால் குறைந்த சம்பளத்தில் நிறைய ஆட்களும் கிடைக்கும். மூன்றாவது. ஐந்தாண்டுத் திட்டத்தில் நெல்லை, கன்னியாகுமரி ரயில் பாதையை மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். இக் குறையை நிவர்த்திக்க நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுகிறேன்.

கல்வித் துறையில் நமது மாநில முன்னேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இது நான் சொல்லாமலே உங்களுக்கு விளங்கும். நமது முதல் அமைச்சர் தலைமையில் இருக்கும் அரசாங்கம் ஏழை மக்களுக்குக் கல்வி புகட்டுவதில் தீவிர முயற்சி எடுப்பதை இச்சபை மனமகிழ்ச்சியோடு பாராட்டுகின்றது. 11-வது வகுப்பு வரை ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிப்பதற்கு நமது சர்க்கார், இந்தியாவில் உள்ள எல்லா மாநிலத்தையும்விட முதலாவதாக வந்ததற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அதற்காக நமது மாநில அரசாங்கத்தையும், குறிப்பாக முதலமைச்சரையும், கல்வி அமைச்சரையும் பெரிதும் பாராட்டுகிறேன்.



2nd March 1961] [A. Chidambaranatha Nadar]

நாகர்கோயில் நகரசபையில் விஸ்தரிக்கப்பட்ட இடங்களைச் சேர்த்து பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. எனினும் அவர்களுக்கு நகரசபையில் உள்ள ஒருவிதமான உரிமையும், பலனும் அளிக்கப் படவில்லை. குறிப்பாகக் குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருந்தது. விஸ்தரிக்கப்பட்ட இடங்களிலுள்ள கிணறுகள் 120 அடி முதல் 150 அடி வரை ஆழம் உண்டு. ஆகவே அங்கு குடியிருக்கும் மக்களுடைய கஷ்டங்களை உணர்ந்து நமது காருண்ய மாநில சர்க்கார் முன்வந்து ஒரு பெருந்தொகையைக் குடிதண்ணீர் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறது. இதைக்கண்டு அந்தத் தொகுதி பிரதிநிதி என்ற நிலையில் பெரிதும் மனம் மகிழ்கிறேன். அரசாங்கத்தை வாயார வாழ்த்துகிறேன். இத்திட்டத்தை இந்த நிதி ஆண்டிலேயே அமுல் நடத்தும்படியும், அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும்படியும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக கன்னியாகுமரி மாவட்டம் தாய்நாட்டோடு சேர்ந்து 4½ ஆண்டுகள் நான்கு கழிந்துவிட்டன. சேர்ந்த பிறகு நமது மாநில சர்க்கார் ஒவ்வொரு இலாகா வழியாகவும் அந்த மாவட்டத்தின் நன்மைக்கும், மேம்பாட்டிற்கும் வேண்டி நாங்கள் எதிர்ப்பார்த்ததைவிட பன்மடங்கு பெருந் தொகைகள் செலவு செய்வதைக் கண்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் ஒரே ஒரு கவலை. அங்குள்ள அரசாங்க ஊழியர்களின் சர்வீஸ் இணைப்பு உத்தியோக உயர்வு பரிகாரம் காண சர்க்காரை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இக்குறையைத் தீர்க்க நமது அரசாங்கம் ஒரு தனிக் கமிட்டியை நியமித்து வெகு சீக்கிரத்தில் ஒரு நன் முடிவை எடுக்கத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

* SRI S. RANGANATHA MUDALIAR : Mr. Chairman, Sir, the Budget speech of the Hon. Finance Minister is heartily to be welcomed. His budget proposals have been variously criticised by the Opposition Members in the spirit of Opposition for the sake of Opposition. Some have criticised the same as election stunt. Some others have described it as pre-election budget. We should not bother about those criticisms, for they are merely 'Opposition Stunts'. But one Opposition Member alone has been able to discover a solitary virtue in the budget proposals, viz., the concession to poor students for free education up to XI Standard, irrespective of caste or creed. I congratulate him on that discovery. I agree with him and I further wish to point out that this concession is a great one, a very great one as it shows a change in the policy of Government, according to which educational concessions shall in future be based on economic backwardness of communities and not on communal backwardness. By adopting this new policy our Government have set an example to other States.

The Budget reveas a deficit of Rs. 285 lakhs. Along with that announcement, there is another announcement that there shall be no new taxation proposals. The latter has taken away the element of terror from the former. What the deficit was due has

[Sri S. Ranganatha Mudaliar] [2nd March 1961

been explained in the Budget. The question now is what resources we are going to mobilise in the face of this deficit to make the Third Plan a sucess. The Budget speech hints at two such resources, firstly domestic savings and secondly State Loans. If we are going to depend on domestic savings as one of the resources, our Government should concentrate on the intensification of the Savings Campaign, in such a manner that the poorest man must feel pursuaded to save what he could within his limited means. The poorest man must be made to feel that he too has played his part in the building up of the State Development Schemes on the principle that many a new mickle makes a muckle. The rich man's contribution alone is not sufficient to enable the State to break through the inadequacy of financial resources. As regards State Loans, emphasis must be laid upon investment of the poor man. The poor man must be made to feel the pride that he has directly contributed towards the progress of the State. Our congratulations are due to Government for the determination to attain self-sufficiency in food production not only in normal seasonal conditions but also during adverse seasons. What with the large-scale production of chemical organic manures and what with the increased supply of improved seeds I should feel that this ambition is within the reach of practical politics.

Improvement in food production presupposes improvement in irrigation facilities. In our State almost all the major irrigation projetcs have been completed and our irrigation potentiality has been exploiting to the full. While so taking up of the medium irrigation projects, the contemplated improvement of the supply channels of old irrigation sources and the expansion of well irrigation all these residuary schemes will only touch the fringe of the problem. Our future hopes lie on the surplus of waters of rivers flowing in other States. An integrated approach, as our Hon. Finance Minister has put it, an approach of that kind, on irrigation and power projects for the Southern Region as a whole is urgently needed. Mr. Trivedi, a member of the Planning Commission is his recent address at the conference of All India News papers Editors has said the same thing. I would like to quote what he said,—very similar to what our Finance Minister stated here :—

"If India wants optimum results from the irrigation and power projects it could be possible only through Inter State Co-operation and a strong feeling of national unity ".

Mr. Trivedi added :

" For the development of river and power resources there should be no boundaries except the national boundary ".

In this context it is hoped that our Government will make gallant efforts to induce the sister States to make such common approach for the benefit of each and good of all.



2nd March 1961] [Sri S. Ranganatha Mudaliar]

Coming next to industrial expansion of our State I wish to very gladly inform the House that the achievements of our State are on a scale which is very striking. There has been large scale industrial expansion in our State. But we should not forget the fact that we are only in the initial stages of founding new industries. Tremendous efforts will be necessary at the subsequent stages of operation and expansion. The financing of industrial expansion schemes will prove great problem. Here the advice of the well-known American Economist, Mr. Galbraith requires careful consideration. He says :

" In regard to such financing, the State should adopt the policy of utilising the earnings, the accumulated surpluses of the industrial enterprises instead of depending on such uncertain and exiguous sources as domestic savings ".

The growth of industries pre-supposes improvement of sea ports and a sound transport system. We have been promised that the Madras Harbour is going to be expanded, and that the Tuticorin Port with its concomittant, Sethusamudram Project would also be improved. I would impress upon the Government the urgent need for improvement of such small ports as Pulicat, Cuddalore and Nagapattinam. Equally important and urgent is the widening and deepening of the Cooum and Buckingam Canal to relieve congestion in traffic. In this connection I would request Government to seriously consider the question of forming the Great Eastern 12-30 p.m. Coastal Road from Madras to Tuticorin and to Cape Comorin. It is rather sad to note that the road development in our State has been rather slow. From 21,198 miles in 1950-51 to 25,878 miles in 1960-61 the progress is not encouraging for a decade. It has to be noted that only Rs. 11 crores has been allotted for this purpose which is rather inadequate. It is also noteworthy that for 1961-62 provision has been made only for 182 miles.

Lastly, little has been mentioned about the slum problem. This problem is assuming threatening proportions not only in the City but also in the moffasil centres and towns. In this connection the dispersal of big industries and formation of smaller units of small scale industries in the moffasil places will be necessary to prevent the inflow of population from moffusil areas into the City. It has to be conceded that this slum problem is a staggering one. With all efforts our Government are putting forth to solve the problem, the problem is becoming more and more complicated and we have only to sympathise with our Government, who are groping their way to find quick and effective solution.

We are on the eve of the Third Plan and we can hope for its successful completion given the co-opertion of all parties and all sections of the public in this common endeavour as our Finance Minister said in the concluding portion of his Budget speech.

Thank you, Sir.

[2nd March 1961

* **Sri A. R. MARIMUTHU :** **கனம் தலைவர் அவர்களே,** இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பட்ஜெட் ரொம்ப ஜாக்கிரதையாக, இந்த ஆண்டு எவ்வளவு தூரம் வரி போடாமல் இருக்க முடியும் என்பதைக் கவனத்தில் கொண்டு தயார் செய்யப்பட்டிருக்கிறது. சென்ற பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டிருந்ததைவிட, அதிகப்படி ரெவின்யூ வந்திருக்கிறது 1960-61-ல். ஆனால் சென்ற வருடம் வந்திருக்கக்கூடிய ரெவின்யூவைவிட இந்த ஆண்டு ரெவின்யூ குறைவாக வரும் என்று எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. ஆக, 2 கோடி 85 லட்சம் ரூபாய் துண்டு விழும். இந்த பட்ஜெட்டைத் தயார் செய்து துண்டு விழும் தொகையைச் சரிப்படுத்த எந்தவித வகையும் செய்யப்படாமல் விட்டு விடப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகும் இந்நேரத்தில் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களைவிட மூன்றாவதையும் பெரிதாகப் போட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் இப்பொழுதுள்ள வரிகள் போக மேற்கொண்டு 1,650 கோடி ரூபாய் வேண்டியிருக்கும், அதில் மூன்றில் ஒரு பங்கை ராஜ்ய அரசாங்கங்கள் தயார் செய்யவேண்டுமென்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. ஆக, இப்பொழுதுள்ள வரிகளைவிட அதிகம் போட்டுப் பணம் சேகரம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். இருந்தபோதிலும், தேர்தல் வருவதை மனதில் கொண்டு இந்த வருடம் வரி போடாமல் இருந்தால் நலமாகயிருக்கும் என்ற எண்ணத்தில் இந்த பட்ஜெட் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதனால்தான் மேற்கொண்டு வரிபற்றி இந்த அரசாங்கம் ஒன்றும் கூறாமல் விட்டுவிட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 34 லட்சம் துண்டு விழும் என்று நினைத்தது போக உபரியிருக்கிறது என்று ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, துண்டு விழும் இந்த பட்ஜெட்டை இந்த அரசாங்கம் தைரியமாகக் கொண்டு வந்திருக்கிறதென்றாலும்கூட இதைச் சரிப்படுத்த என்ன வழி வகை செய்யப்பட்டிருக்கிறது? ரொக்க வசதி சம்பந்தமாக, "வேஸ் அன்ட் மீன்ஸ்" பற்றி என்ன செய்திருக்கிறார்கள் என்று கவனிக்கும்போது அதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. எவ்வளவு தூரம் அதிகமாக செலவிட்டு நாம் வரி போடுவதை நிறுத்தியிருக்கிறோம் என்று. சென்ற ஆண்டு பட்ஜெட்டில் 12 கோடி வெளியே கடனும், மத்திய அரசாங்கத்தினிடம் 15 கோடி கடனுமாக ஆக 27 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறோம். ஆனால் இந்த வருடம் 35 கோடி கடன் வாங்குவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. சென்ற ஆண்டு 27 கோடி ரூபாய் கடன் வாங்கி அதில் பழைய கடனைத் தீர்ப்பதற்காக 13 கோடி திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள். அதாவது 25 கோடி கடன் வாங்கி 13 கோடி அளவுக் கடனைத் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு 37 கோடி கடன் வாங்கி 10 கோடி திரும்பக் கொடுக்கப் போகிறார்கள். ஆக,



2nd March 1961] [Sri A. R. Marimuthu]

நமது கடன் நிலை இந்த ஆண்டு மேலும் ஏறியிருக்கிறது என்பது தெளிவு. இந்த ஆண்டு பட்ஜெட் தயாரிக்கும்போது நமது க்ளோஸிங் காஷ் பாலன்ஸ் 5 கோடி சொச்சம் இருந்தது. ஆனால் அடுத்த ஆண்டு 78 லட்சம்தான் க்ளோஸிங் பாலன்ஸ்-ஆகக் காட்டப்பட்டிருக்கிறது. கஜானா காலி செய்யப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக நம் அஸெட்ஸ்-ஐ எடுத்துக் கொள்வோம். எக்ஸஸ் அஸெட்ஸ் ஓவர்லையாபிலிடி குறைந்திருக்கிறது. எப்படியாவது இந்த ஆண்டு நிதி நிலையைச் சரிக்கட்டி விடலாம் என்று நினைத்தாலும், அடுத்த ஆண்டு இது ஒரு பெரிய பாரமாகப் போகும். அப்பொழுது அரசாங்கம் அந்தப் பாரத்தை ஏற்று அந் நிலையைப் போக்க வேண்டியிருக்கும். பொதுவாக நாட்டில் பொருளாதார அபிவிருத்திக்காகத் திட்டங்கள் போடப்பட்டு அதன் மூலம் நம் நாடு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். யாரும் அதை மறுப்பதற்கில்லை.

(Mr. Speaker in the Chair.)

ஆனால் அபிவிருத்திக்காக நாம் எவ்வளவு தொகை ஒதுக்கியிருந்தோம், அத்தொகை மூலம் நாம் எதிர்பார்த்த அளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் நாம் எவ்வளவு தூரம் அபிவிருத்தி ஏற்படும் என்று நினைத்து திட்டம் போட்டோமோ அந்தளவு பொருளாதாரப் பெருக்கத்தை நாம் பெற முடியவில்லை என்ற முடிவுக்குத்தான் வரமுடியும். பொதுவாக உணவு உற்பத்தியை எடுத்துக்கொள்வோம். இரண்டாவது திட்டத்தில், உணவு உற்பத்திப் பெருக்கிற்காக 29 கோடி ரூபாய் நாம் ஒதுக்கியிருந்தோம். அதன் டார்ஜட், 57 லட்சம் டன் உற்பத்தி பெருக வேண்டுமென்று போட்டிருந்தோம் திட்டம். ஆனால் ஒதுக்கப்பட்ட தொகையைவிட ரூபாய் 3 கோடி அதிகமாகச் செலவு செய்தும் 51½ லட்சம் டன்தான் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். இது எந்த நிலையைக் காட்டுகிறது என்றால், எவ்வளவு அதிகப்படியாகச் செலவழித்தாலும் நாம் எதிர்ப்பார்த்த அளவு உற்பத்திப் பெருக்க அளவை எட்ட முடியவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு நாம் அதிகப்படியாகச் செலவு செய்கிறோமோ அதற்கேற்றபடி உற்பத்தியைப் பெருக்கினால் ஒழிய நாட்டில் பண வீக்கத்தைப் போக்க முடியாது. ஒதுக்கப்படும் தொகை, நம் லட்சியம் ஈடேறத்தக்க வகையில் அது செலவழிக்கப்படவில்லை. அதை நாம் கவனத்தில் கொண்டு அதற்கேற்றபடி நடக்கவேண்டும். ரசாயன உரம் இல்லாததினால்தான் உணவு உற்பத்தி அளவைக் கணிசமான அளவு எட்ட முடியவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு காரணம்தான், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் ரசாயன உரத்தை மட்டும் காரணமாக வைத்துக் கொண்டு உற்பத்தியின் அளவைப் பெருக்க முடியவில்லை என்று சொன்னால் அதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. ரசாயன உரம் கொடுக்கிறோம், கடன் வசதி செய்து கொடுக்கிறோம், இவைகளை எல்லாம்

காலாகாலத்தில் செய்து கொடுக்கப் போதுமான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அப்படிச் செய்வதானால் இன்னும் உற்பத்தியை அதிகமாகப் பெருக்கிக் காண்பிக்க முடியும். எந்த நேரத்தில் கடன் கிடைக்கவேண்டுமோ அந்தக் காலத்தில் கிடைப்பதில்லை. ரசாயன உரம்கூட, அதிகமாக இருந்தால் கதிர்கள் முற்றிவிட்ட பிறகுதான் கிடைக்கிறது. அரசாங்கத்திற்கும், இவைகளை வாங்கி விநியோகிப்பதில் சிரமங்கள் இருக்கலாம். எவ்வளவு சிரமங்கள் இருந்தபோதிலும் ஆங்காங்குள்ள ஸ்டாக்கை வைத்துக் கொண்டாவது காலாகாலத்தில் அவைகளைக் கொடுக்க வேண்டும். அதேபோல் கடன் வசதியும் காலாகாலத்தில் கிடைப்பதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் நாம் நமது உற்பத்தியை நல்ல முறையில் பெருக்க முடியும், அதற்கு அவை உதவுபடியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசி ஏற்றத்தை எடுத்துக்கொள்வோம். நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்ட போதிலும் விலைவாசி ஏற்றம் மக்கள் தாங்க முடியாத அளவிற்கு ஏறிப் போயிருக்கிறது. விலைவாசி ஏற்றத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதில் அரசாங்கம் பரிபூர்ண கவனம் செலுத்தவில்லையென்றால் நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அபிவிருத்தியால் சாதாரண மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பயன் கிடைக்காமல் போய்விடும். பொருளாதார ஏற்றத் தாழ்வை எடுத்துக் கொள்வோம். சோஷியலிஸ சொஸைட்டியை நோக்கி நாம் போய்க்கொண்டிருக்கிறோம் என்று சொல்லும்போது பொருளாதார ஏற்றத் தாழ்வை நாம் எந்தளவு போக்கியிருக்கிறோம் என்று பார்த்தால் பொருளாதார ஏற்றத் தாழ்வு குறைந்ததாகத் தெரியவில்லை. அப்படிக் குறைவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆகவே பொருளாதார ரீதியாக இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஏழை எளியவர்கள் நலனை நாம் காப்பாற்ற முடியாது. இன்னும் எடுத்துக் கொண்டால், அரசாங்க நிர்வாகச் செலவுக்காக நாம் வருடா வருடம் அதிகமாகச் செலவு செய்து கொண்டே இருக்கிறோம். இந்த வருடத்திலும் நிர்வாகச் செலவுக்காக அதிகமான அளவில் பணம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் நிர்வாகத் திறமை குறைந்து கொண்டுதான் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். ஒரு டிப்பார்ட்மென்டில் இருக்கிற குறையை எடுத்துச் சொல்லி அதை நிவர்த்தி செய்யவேண்டும் என்று சொன்னால் அந்தக் குறை நீக்கப்பட வேண்டும் என்றால் எவ்வளவோ முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. இதற்காக வருடக் கணக்கில் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. இவ்வளவு திறமைதான் இருந்து கொண்டிருக்கிறது. அரசாங்க நிர்வாகத்தில் இருக்கின்ற குறைகளை எல்லாம் போக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நம் ராஜ்யத்தைத் தவிர வேறு பல இடங்களில் ஒவ்வொரு இலாகாவுக்கும் அமைச்சர்களுக்கு அடுத்தபடியாகப் பார்லிமென்டரி காரியதரிசிகளைப் போட்டிருக்கிறார்கள். அமைச்சருக்கு அடுத்தபடியாக நிர்வாகத்தை ஏற்றுக்கொள்வதற்கு இவ்விதம் பார்லிமென்ட் காரியதரிசிகளை நியமித்திருக்கிறார்கள். அதே போன்று நம்முடைய ராஜ்யத்திலும் இவ்விதம் நியமித்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அரசாங்க வருவாயைப் பெருக்கும் விஷயத்தில் அதிகப்படியான அளவில் வருவாயை பெருக்குவதற்காக அரசாங்கம் பஸ் போக்குவரத்தை எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய பகுதியில் தண்ணீர் பாய்ச்சுவது சம்பந்தமாக இருக்கின்ற கஷ்டங்களைப்பற்றி பல தடவை இதே சபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஜி.ஏ. சானலில் வரக்கூடிய தண்ணீர் கடை மடையில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குப் போய்ச் சேராமல் அவர்கள் வருடா வருடம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வடவார் எக்ஸ்டென்ஷன் வாய்க்காலிலும் சாகுபடி சமயத்தில் தண்ணீர் போய்ச் சேராததின் காரணமாக நிலங்கள் எல்லாம் தரிசாக இருக்கின்றன. இந்தக் கஷ்டம் உடனடியாக நிவர்த்திக்கப்படும் என்று சென்ற வருடம் தெரிவிக்கப்பட்டது. அதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எந்தவிதமான பயனையும் அளித்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இந்தக் கஷ்டத்தை உடனடியாகப் போக்குவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்கு நாம் வருடா வருடம் எவ்வளவோ பணம் ஒதுக்கியிருக்கிறோம். இந்த வருடமும் சுமார் 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் ஜில்லா போர்டில் இருக்கின்ற நிதி நிலை காரணமாக கான்டிரிபியூஷன் கொடுக்க இயலாமல் ஒதுக்கப்படுகிற பணமும் செலவு செய்யப்படாமல் இருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரை, மிகவும் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசாங்கம் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கினால் மட்டும் போதாது, அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்கள் வேலைகளை ஏற்று நடத்தக்கூடிய முறையில் அவர்களுக்கும் வேண்டிய உதவி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அதிராம்பட்டினத்தில் மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் படுகின்ற கஷ்டத்தைப்பற்றி கனம் அமைச்சர் கக்கன் அவர்கள் பார்த்தார்கள். அவர்கள் வெள்ளத்தால் எந்த விதமான கஷ்டமும் அடையாதபடி காப்பாற்றப்படுவார்கள் என்று கூறினார்கள். ஆகவே அதற்காக வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் இலங்கையிலிருந்து திரும்பி வந்தவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு

[Sri A. R. Marimuthu] [2nd March 1961

ஏதாவது வேலை கொடுக்க முடியுமா என்பதைப்பற்றிப் பரிசீலித்து அவர்களுக்கு ஏதாவது வேலை கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்கும் விஷயத்தில் மிகவும் காலதாமதம் ஆகிறது. ஒரு கிராமத்தி லுள்ளவர்களுக்கு மட்டும் மனைக்கட்டுகள் வழங்க நான்கு ஆண்டு கள் காலமாகியிருக்கிறது. ஹரிஜனங்கள் அல்லாமல் ஹரிஜனங்கள் அல்லாதார் கூலி வேலை செய்யக் கூடியவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் குடியிருக்கிற இடத்திலிருந்து, அவர்கள் குடியிருக்கிற இடத்தின் சொந்தக்காரர் இந்த இடங்கள் குடியிருக்கின்றவர்களுக்குச் சொந்தமாகிவிடுமோ என்ற பயத்தின் காரணமாகக் குடியிருக்கின்றவர்களை வெளியேற்றிக்கொண்டிருக்கி றார்கள். இம்மாதிரியான நடவடிக்கை அந்தப் பக்கத்தில் இப் போது பரவலாகப் பரவிக் கொண்டிருக்கிறது. ஆகவே இவ்விதம் ஹரிஜனங்களாய் இருந்தாலும் சரி, ஹரிஜனங்கள் அல்லாதார் களாய் இருந்தாலும் சரி, நிலமில்லாத மக்களுக்கு மனைக்கட்டுகள் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலவரி வசூல் சம்பந்தமாகச் சில வார்த்தை கள் சொல்ல விரும்புகிறேன். வரிகளை அரசாங்கம் வசூல் செய்ய வேண்டியதுதான். வரி வசூல் செய்யாமல் எந்த அரசாங்கமும் நிர்வாகத்தை நடத்த முடியாது. ஆனால் வரி வசூல் செய்யும் காலத்தை நிர்ணயிக்கின்றபொழுது மிகவும் கவனமாய் இருக்க வேண்டும். சாதாரணமாக சாகுபடி காலத்தில் நடவு வேலைக்காக விவசாயிகள் பணம் தயார் செய்து வைத்திருப்பார்கள். அந்த நேரத்தில் கடுமையாக நடவடிக்கை எடுத்து வரிவசூல் செய்வது என்பது சரியல்ல. அறுவடை காலத்தில் வரிவசூல் செய்வதை நான் குறை சொல்லவில்லை. ஆனால் சாகுபடி காலத்தில் வரிவசூல் செய்வதின் காரணமாக சாகுபடி பாதிக்கப்படும். அதன் காரண மாக உணவு உற்பத்தியும் நிச்சயமாக பாதிக்கப்படும். ஆகவே அறுவடை காலத்தில்தான் வரிவசூல் செய்யவேண்டும், சாகுபடி காலத்தில் வரிவசூல் நடத்தக் கூடாது என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் ஸ்டாப் நர்ஸ்கள் நியமித்திருக்கிறோம். அதே போன்று ஜில்லா போர்ட் ஆஸ்பத்திரி களிலும் ஸ்டாப் நர்ஸ்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய சம்பள விகிதத்தில் ஏற்றத் தாழ்வு இருக்கிறது. இதனால் அவர்களுடைய வேலைகள் மாறுபடவில்லை. இருவரும் ஒரே விதமான வேலைதான் செய்து கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றியும் பரிசீலனை செய்து பார்த்து இந்தக் குறையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓரத்தநாடு கால்நடைப் பண்ணையை இன்னும் விஸ்தரித்தால் நன்றாக இருக்கும். இதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



2nd March 1961] [Sri A. R. Marimuthu]

முக்கியமாகத் தரிசு நிலங்களை நிலமில்லாதவர்களுக்கு ஜாரி செய்து கொடுப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. அவற்றை நன்றாகக் கவனித்து உடனடியாக ஜாரி செய்து கொடுப் பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் . . . ,

(மணியடிக்கப்பட்டது.)

* SRI R. SRINIVASA IYER: Sir, this Budget has been generally welcomed by the Press. It indicates the general impression among the public. I was wondering whether anything at all can be said against this Budget. But, when I find that the same old slogans of 'North versus the South', 'the slavish mentality of the Government' etc., are repeated over and over again, I only feel it shows the hollowness of the Opposition comments on this Budget. The Budget speech of the Hon. Finance Minister is a resume of the past events that have taken place in the Second Plan period, what we have done in that period and what we propose to do in the Third Plan period thereby satisfying the public that the ways and means position of this State is good and we can easily raise the resources contemplated and spend the amounts that we have raised by way of loans and by way of subventions or grants from the Central Government in a proper manner. In this connection, though we have spent nearly Rs. 34 crores over and above the Plan provision in the Second Plan, I desire to point out that we have spent Rs. 30·19 crores more on power, Rs.3·86 crores more on Industries but about Rs. 5·13 crores or so on roads, tourism, welfare of backward classes, social welfare and other miscellaneous activities has not been spent. That is, we have spent less than the provision in Second Plan on these.

Sir, I wish to point out that roads are very important for the economic welfare of the country, particularly the village side. We have to increase food production. The agriculturist is toiling hard, but he does not get a good return as he is not able to take his produce to the markets easily and quickly and at cheaper cost. All along, they have been depending upon roads and so, the improvement of the roads is a very great thing. I hope that at least in the future, in the Third Plan period, the provision will be increased from Rs. 11 crores to something more. I hope the Madras Government will be able to get at least Rs. 5 crores more and that the East Coast Road will be taken up in any event by their strenuous efforts in spite of the Minister of Transport and Communications at Delhi and the Planning Commission who have been telling us that the Central Government have no funds to extend the length of National Highways and are not very much in favour of increasing the mileage under National Highways.

Sir, we have got this Budget with a deficit of Rs. 2·85 crores; but certainly, we can expect that this deficit will be made good and we will end with a surplus as we have been doing in the past years. In this connection, I have got to point out that the

[Sri R. Srinivasa Iyer] [2nd March 1961]

income from the General Sales Tax has gradually increased from Rs. 11.50 crores to about Rs. 14 crores. I am constrained to state that with a little more careful administration of the General Sales Tax Act, we can get at least Rs. 18 crores if not Rs. 21 crores which amount we envisaged when Prohibition was first introduced in this State.

We lost Rs. 21 crores by introducing Prohibition We must see that the Sales Tax Department is toned up. On the one side there is a general complaint that there is harassment and on the other side there is evasion and corruption. Both the officers and the public are responsible for this state of affairs. I have come across complaints that certain officers of this department dictate terms and if that is not obeyed, the person concerned would be harassed with vary heavy taxation which he cannot bear and he has to close down his business. At the same time the public also should co-operate with the department in paying their tax properly and maintaining accounts properly. Double sets of accounts have been maintained. I do not know when we are going to have that sort of social mentality to realize that without honestly paying our share of tax, no Government can get on. Sir, in this connection, I want to make an important suggestion for the consideration of the Hon. Minister in charge of the department. The Revenue and the Sales Tax Departments should be amalgamated if possible by inter-change of officers and transfer of officers at least once in two years, if not three years. I know of cases where a person has been transferred for more than five years ago and gets 'mamool' at his former place of employment. If really the 'Kamadhenu', that is the sales tax, is to yield us the expected revenue . . . .

THE HON. SRI R. VENKATARAMAN: If the hon. Member has any such case, the Government would be very grateful if he communicates it in confidence.

SRI R. SRINIVASA IYER: Yes, Sir. The whole difficulty is that so far as corruption is concerned, the public will not come forward to give evidence, because they will be equally guilty. This is what is happening.

THE HON. SRI R. VENKATARAMAN: The hon. Member may communicate it and it will be properly investigated through the 'X' Branch.

SRI R. SRINIVASA IYER: Yes, I shall do so.

At the same time, my suggestion is that to avoid complaints like this, the general feeling among the public is that the department is rather harassing and not really collecting tax. The Revenue Department and the Sales Tax Department may be amalgamated and there may be mutual transfers from one department to another. If we do that, we can get the expected income from the sales tax itself to make good the deficit in the budget rather than think of getting subventions from the Central Government or a share in the additional taxes proposed to be levied by the Central Government and in that way we can make up our deficit.



2nd March 1961] [Sri R. Srinivasa Iyer]

On all sides we have been progressing well, particularly on the food front but at the same time there is a cry that prices have gone up. To-day during Question hour it has been stated that the price of chillies, tamarind and other agricultural products has gone down and that the Government should come forward to help them. At the same time those people who want that the price of food-grains should go down, should know that the cost of production has gone up a great deal. The agriculturist has got to be guaranteed a minimum price which will not make him lose for carrying on his agricultural operations. The basic price should be fixed. It may not be necessary to come to the rescue of the agriculturists now because prices have neither gone up nor gone down too much. As the Hon. Minister for Home has stated this morning, it rose last year and it has come down a little. It does not mean that it has gone down in every respect. At the same time those who induce the labourers to claim more and more wages without a guarantee of efficient work and thus increase the cost of production should be prepared to pay for the commodities produced at such heavy cost.

Sir, with regard to roads and communications which I have mentioned in the beginning, in the Draft Third Plan which was discussed in this House, there is a statement that Rs. 5 crores would be allotted for the development of the East Coast Road, about 450 miles in length in Madras State. In the Tanjore district, it is 141 miles in length. I wish to point out to the Government that about 100 miles are adjacent to the sea. If it is developed into a National Highway, it will be the longest Marina in the world. Apart from the Tourist Traffic, the route from Madras to Rameswaram will be the shortest route along this road. At the same time there is a statement that for want of population, roads cannot be developed. It is good roads that develop the population. We find houses and shops coming up where there are good roads and there will be bus stops. Therefore this Government should exercise all their powers and plead with the Central Government to allot these Rs. 5 crores for the Eat Coast Road. As I was going through the figures contained in the Civil Works Detailed Budget, I found that the Tanjore district had not got as much amount as it ought to get for road development. Especially the backward area requires special treatment, particularly the road from Keeramangalam to Kothamangalam in the Pattukkottai taluk and the road from Avadiarkoil to Kottapalayam in Arantangi taluk—security roads like the roads in the Mudukalathur taluk in the Ramanathapuram district. There are a number of villages where fishermen live in the Tanjore disitrict on the east coast and none of the fishermen villages have been connected to the main road. When the East Coast Road is developed, these village roads also should be developed. As

[Sri R. Srinivasa Iyer] [2nd March 1961

they are very important they should be taken up for execution. After all, these villages are situated about a mile or four furlongs from the main road. With the introduction of a bus route from Sethubavachatram to Pattukkottai, the distance from Pudukkottai to Sethubavachatram is considerably reduced to only a distance of 37 miles and fishermen can be enabled to market their hard-earned produce in an hour and a half to Pudukkottai which is a good market for fish. I request the Government be look into this aspect of the matter.

With regard to road-rail co-ordination, the latest report of the Mehta Committtee has got to be implemented in every respect. In the Tanjore district we have got parallel bus routes along the rail routes. These bus routes must be diverted to feeder routes, i.e., routes which will feed railway stations and other towns and markets. If only feeder routes are developed and the main road is connected with the feeder routes, it will go along way to get over the difficulties experienced by the villagers to carry their produce to the market.

One other important matter I would like to refer—it has also been referred to by the hon. Member, Sri Marimuthu—is that we are not able to have Local Development Schemes because of one snag. Under existing orders of Government, in the first stage Blocks, Local Development works cannot be carried on in spite of the fact that they are committed works and one-fourth contribution has been made by the public. Though provision is made in the Block budget for the first stage blocks also, the amount allotted for road communication is very small. In the Pattukottai taluk there are village roads, other district board roads and major district roads. There is a proposal to develop the Pattukottai Mannargudi road (via) Vadaseri which has been hanging fire for more
1 p.m. than five years.

Sir, the Panchayat Act was passed in 1958. Proposals were made to treat the road from Pattukottai to Mannargudi (via) Vadaseri as a major district road and the Pattukottai to Sethubavachathram road, as a major district board road several years before the Act was passed. But six years have passed and till no orders have been passed. Therefore on the pretext that they are classified as other district board roads, the Panchayat Unions are asked to maintain them. It is impossible to maintain such a long-distance road of 39 miles in a Panchayat Union Block, with a meagre grant by Government of 40 nP. per head of population in each Panchayat Union so far as development of roads is concerned. At least such blocks should be classified as poor blocks, backward blocks and not included in First Class Blocks. More money should be provided for the district board for paying contribution to local development works which have been started and taken up before the introduction of Panchayat Unions. Local development programme which is a good method of tapping local resources should be contained in blocks also.



2nd March 1961] [Sri R. Srinivasa Iyer]

In Tanjore we have the Vedaranyam swamp, where very large quantity of salt is being formed every year and wasted in the winter. A number of investigations have been made and I have been told that if a sum of Rs. 3 crores is invested on a scheme, we could get Rs. 1 crore every year. But that programme has not yet been taken up. At least as a beginning, a research station should be set up. A factory for the manufacture of soda ash or caustic soda in Vedaranyam will be a great boon for the Tanjore district.

I cannot conclude without mentioning about the importance of development minor ports like Athirampattinam, Point Calimere and Kottapatnam. Development of minor ports has become a necessity. If railways cannot cope with extra traffic became of the Third Plan, development of minor ports in the East Coast has got to be given proirity and minor ports in a East Coast have got to be developed. There is a report of the Committee about this.

Lastly I would like to mention about Madras City roads. I expected that the Hon. Finance Minister who is living just opposite the Buckingham Canal would say something about the improvement of Buckingham Canal and the City roads. It would be better and appropriate if the Madras Government could take action under Sections 40 to 44 of the City Municipal Act and take over the roads in the City or at least the main bus routes and cement concrete them at their cost. They have invested about Rs. 40 crores on 750 buses and it works out to half a lakh for each bus. If only the depreciation amount is calculated because of the bad roads, it would be worthwhile to invest largely on roads. (Raja Muthiah Chettiar of Chettinad : Government give grants to Corporation and Corporation should maintain these roads in good condition). In the Corporation, more time is wasted in accusing one party or the other for neglet of roads and the Buckingham Canal. They spend more time on finding fault with others, changing names of streets and so on rather than on improving the City. What I say is that Mount Road and Poonamallee High Road should be taken over by Government. Government should step in and improve these roads. Otherwise the roads would not improve. I am saying this with 50 years' experience in the City. The Queen's visit was welcome and the roads were improved. But when the Queen has gone back to England, the roads improved during her visit and purposely for her visit also seem to be going back to their original condition. The Corporation has failed to take appropriate action to improve our City roads. Government should step in and improve the main roads at least.

The stink from the Buckingham Canal must go at some time or other. We must make it navigable for commercial purposes. Lastly, I want to say that sea water should be let in to fluh the Cooum and the stink should be removed. That is very important.

MR. SPEAKER : Before I call Sri William to speak I want to make an announcement to the House. The House will sit to-day till 2.00 p.m. There will be no sitting in the evening. The House will meet again at 8-30 a.m. to-morrow.

[2nd March 1961

* SRI M. WILLIAM: In supporting the Budget I want to say that the Hon. Finance Minister has kept in view the objective of our Government, i.e., the creation of a Welfare State. In all the steps that have been taken and in all the steps that are proposed to be taken, this objective is kept in view.

(Deputy Speaker in the Chair.)

That is clear from the various provisions that are contained in the Budget. Some members in the Opposition have criticised that this is an election budget, that this is an election stunt or that there is nothing new or worthwhile in it or that it is only a record of past achievements and an indication of things that are to be attained. One cannot but say that this is a budget which contains outstanding features. The most outstanding feature is the concession that is to be granted to students on the basis of economic backwardness, upto XI standard. By that, this Government have accepted a wholesome principle. This State will be the forerunner in this aspect. I am sure that all other States will follow the example set by this State. By this communal harmony is also ensured because in all communities there are large sections of people who belong to the poor class. These people have been entertaining a feeling hitherto that their state is worse than the Harijans but still their case had not been considered by Government. By accepting this wholesome principle, this State has set up a precedent and I think it will result only in communal harmony and would augur well for the prosperity of the State in that no deserving student will be denied facilities for education on account of poverty.

Another important scheme that I would propose is the establishtile class. A lot of inconvenience and harassment is being experienced by the traders who have to wait at the doors of the officers for the inspection of their accounts. They have to wait for two or three days in a week. The facility of compounding in sales tax for small traders with a turnover of not more than Rs. 50,000, now announced in the Budget will be a boon to the mercantile class. Thousands of merchants will welcome this and it would certainly save them the time that they have to spend now at the hands of these officers over the inspection of their accounts.

Another important feature is the expansion of credit facilities to the rural folk. There is an importance provision, viz., the Full Finance Scheme. That is in operation in some Panchayat Unions. It is proposed in this Budget that it would eventually be extended to all Panchayat Unions. So much so every small farmer and cultivating tenant will get credit facilities and the village moneylender will be completely elminated. Our Hon. Finance Minister has even gone to the extent of saying that this Government is even prepared to share any loss that might result by the extension of credit facilities to small farmers and cultivating tenants who cannot furnish sufficient security. This is an important step. This shows that the poorest of the lot are also taken into account in the Budget and that the Finance Minster has kept in view and not lost the objective of our Government.



2nd March 1961] [Sri M. William]

With regard to the agricultural production, it has been said by the Hon. Finance Minister that our State has reached a stage of self-sufficiency in food in normal seasonal conditions. It is also proposed that Rs. 45 lakhs would be given as credit to the agriculturists and that food production would be increased to 07.17 lakhs tons by the end of the Third Plan.

The grant of subsidy of Rs. 2 per maund for producing improved seeds to the agriculturists in the villages and extended facilities to irrigation and the establishment of fertiliser factories both in the public and private sectors—all these things cannot but contribute to the increase of agricultural production and I am sure that the estimate or target in the Third Plan would be achieved.

In the industrial sector also, we find that there are vast developments. There is all round success in all aspects of the economy. Several industries have been started and several industries are proposed to be started. So much so, I am sure that our State will attain the progress that is envisaged in the Third Plan. In this context, I want to say a few words about the district from which I come. Of course, new schemes are mentioned in the Third Plan and one important scheme is Cittar-Pattanamkal scheme. That scheme was included in the Second Plan while we were in the Travancore-Cochin State. Subsequently, during the merger with this State, this was not executed for some reason or other. In the draft plan this scheme has been included now and I request the Government to give top priority to this scheme. It may cost only about a crore and odd. By this scheme 17,000 acres might be brought under cultivation and it would also improve drinking water facilities.

Another important things is the concession granted to the mercanment of a rubber factory in Kanyakumari district. There are possibilities for it. There are enough of raw materials available in the shape of rubber. Private individuals have taken to cultivation of rubber and there is ample quantity of rubber. Small scale industries can be opened in that district. Of course, people in the Kanyakumkari district as a whole are poor and there are no capitalists worth the name to start these industries in the private sector. I, therefore, request the Government to sympathetically consider this aspect and start these industries.

With regard to Palm gur industries, that is one of the nine industries chosen by the All-India Khadi Board. About 50,000 families are dependent on this industry. Under the Second Plan about 12 lakhs of rupees was allotted for this purpose and hardly a lakh was spent. There was a central co-operative society which was mismanaged. I filed an appeal that an Advisory Committee may be appointed and the management may be taken over by that Committee but the society was liquidated. We agitated for the formation of a district federation. A conference was also held about a year ago and proposals were sent to the Government for registration. This is pending for over a year. I request

[Sri M. William] [2nd March 1961

the Government to expedite the matter and get these societies registered. I also request that insurance system may be instituted to benefit the tapper families.

I also request the Government to relax the provision with regard to the catering Establishment Act. Under this, licence has to be taken by merchants. Even small merchants who have invested Rs. 10 or 15 have to pay a licence fee of Rs. 10 and obtain a licence. In the Madras State we find that the first grade Panchayats alone are included. But in Kanyakumari district, irrespective of the financial position of the Panchayats, all panchayats are brought under the Catering Establishment Act. Even small owners of hotels who have been invested Rs. 20 or 25 in the business and who may not even get 2 or 3 rupees per day have to take a licence after paying Rs. 10. This works a great hardship on them. I therefore request the Government to relax the provisions and exempt the panchayat areas.

The Budget that is placed before us is a progressive one which has got in view the prosperity of the people and therefore all praise and credit is due to the Finance Minister who has presented the same.

* **SRI P. S. ELLAPPAN**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வருஷம் பட்ஜெட் விவாதம் ரொம்ப சுலபமாக நடக்கிறது. காரசாரமாக ஒன்றுமே காணோம். பின்னாலே என்ன ஆகுமோ தெரியாது. இந்த நிலையிலே அந்த அளவிற்கு நான் போகவில்லை. அது ரொம்பப் பெரிய விஷயம். தூக்க முடியாத சமாசாரம். ஆகவே என்னுடைய தாலூகாவிலே இருக்கப்பட்ட நிலைமையைப்பற்றி மாத்திரம் ஏதோ ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்லவே விரும்புகிறேன். சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக பெரிய சேதம் மதுராந்தகம் தாலூகாவில்தான் ஏற்பட்டது என்பதை அனைவரும் அறிவர். அதிலே கிட்டத்தட்ட 87 ஏரிகள்—பிரமாதமான ஏரிகளெல்லாம்—உடைந்துவிட்டன. அதுவும் நானிருக்கும் இடத்திற்குச் சமீபத்தில் இருக்கக்கூடிய சூணாம்பேடு பார்டரில் 3 கிராமங்களில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வெள்ளங்கொண்டகரம், புதுப்பட்டு, விளாம்பட்டு ஆகியவை ரொம்பவும் பாதிக்கப்பட்ட கிராமங்கள். ஓங்கூர் ஆற்று வெள்ளம், ஏரி வெள்ளம் இரண்டும் கிராமங்களில் புகுந்து இந்த மூன்று கிராமங்கள் ரொம்பவும் பாதிக்கப்பட்டு மக்கள் நிரபராதியாகத் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். நமது மராமத்து இலாகா மந்திரி அவர்கள் நேராக அங்கு வந்திருந்த போது அந்த இடங்களை எல்லாம் அவருக்குக் காண்பித்தேன். நிலம் எங்கு இருக்கிறது, யாருடையது, பயிரிடப்பட்ட பூமியா, சும்மா கிடந்த பூமியா, அல்லது எப்பொழுதும் மணல் மேடாக இருந்த பூமியா என்று தெரியாத நிலையிலே வெள்ளம் வந்து மணல் மேடாக ஆக்கிவிட்டது. அடியேன் அந்தவகையில் 2½ ஏகரில் நடவு செய்திருந்தேன். அதைத் தவிர எனக்கு வேறு நிலம் கிடையாது. என்னுடைய அதிருஷ்ட



2nd March 1961] [Sri P. S. Ellappan]

மோ என்னவோ தெரியவில்லை. என்னுடைய கழனிக்கு நேராக ஏரி உடைந்துவிட்டது. ஏரி உடைந்து மண் மேடிட்டு நிலம் தூர்ந்துவிட்டது. என்னுடைய நிலத்தில் கல் எங்கே இருக்கிறது என்றுகூட கண்டுபிடிக்க முடியாது. 'கல்கூட தெரியவில்லையே, இது மேடா அல்லது பயிரிட்ட பூமியா, அல்லது எபபொழுதும் மேடாகவே இருக்கும் நிலமா' என்று அமைச்சர் அவர்கள் கேட்டதற்கு 'அடியேனுடைய நிலம்தான் இந்த நிலைக்கு வந்திருக்கிறது' என்று சொன்னேன். 'ஐயோ, பாவமே, உங்களுக்கா இப்படி வந்தது' என்று கனிவுடன் கேட்டார்கள். (சிரிப்பு) எனக்கு வந்தால்தானே மற்றவர்களுக்கும் விமோசனம் தேட முடியும் என்று சொன்னேன். இப்பொழுது 216 சம்சாரிகளான ஹரிஜனங்களும் வன்னியர்களுந்தான் அந்த இடத்திலே பெரும்பாலும் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஏரியின் கீழ்ப் பகுதியிலே பெரிய மிராசுதாரோ, ஜமீன்தாரோ இல்லை. கஷ்டப்படுகிறவர்கள், சிரமப்படுகிறவர்கள் தலையில்தான் ஆண்டவன் கை வைக்கிறார். அந்த கிராமத்தில் இருப்பவர்கள் ரொம்ப மோசமான நிலையில் இருக்கிறார்கள். அடுத்த போகம் பயிரிட முடியாமல் மண் மேடிட்டு இருக்கிறது. கவர்னருடைய உரையிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மடிப்பு சாகுபடிக்குப் பணம் கொடுத்திருக்கிறோம், கடன் கொடுத்திருக்கிறோம், உரம் கொடுத்திருக்கிறோம், ஆகவே பஞ்சத்திற்கு இடமே இல்லை என்று சொன்னார்கள். ஆனால் எங்கள் தாலூகாதான் வெள்ளத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே இன்னும் ஏன் என்று கேட்பார் இல்லை. அங்கு மக்கள் காப்பாரற்றும் கேட்பாரற்றும் நாதியற்றவர்களாகக் கிடக்கின்றனர். எழுதியும் கொடுத்திருக்கிறோம். ஏதாவது கொடுக்கிறார்களா, இல்லையா என்று இன்றுவரை ஒன்றும் கலெக்டர் இடமிருந்து பதில் வரவில்லை. எல்லா உதவியும் கொடுத்திருக்கிறோம் என்று கவர்னர் அவர்கள் உரையில் தெரிவித்திருக்கிறார்கள். மற்றவர்கள் இம்மாதிரி சொன்னால் அது ஒரு மாதிரியாக இருக்கும். ஆனால் கவர்னர் அவர்களே அப்படித் தெரிவித்திருந்தும் நிலைமை அசையாமல் இருக்கின்றது. நமக்குத் தெரியாமல் வேறு யாருக்காவது கொடுத்திருக்கிறார்களோ என்று பார்த்தால் யாருக்கும் கொடுத்ததாகத் தெரியவில்லை. இதே மாதிரி என்னுடைய தாலூகாவிலே சூணாம்பேட்டிலே மடிப்பு சாகுபடி செய்ய முடியாத நிலையிலே ஜனங்கள் தவிக்கின்றனர். அது ஒன்று.

அடுத்தபடியாக சூணாம்பேட்டுக்கும் இடைக்கைநாட்டுக்கும் 5 மைல் இருக்கிறது. அது பாண்டிச்சேரி மாதிரி ஓர் இடம். அந்த இடத்திலே கிட்டத்தட்ட 11,000 ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் மரம் ஏறிகள், மதுவிலக்குச் சட்டம் வந்தது. மதுவிலக்கு ஏற்படுத்திவிட்டோம். இந்த 11,000 பேர்களில் 100-க்கு 90 பேர்கள் மரமேறிகள், அவர்களுக்கு வேறு தொழில் கிடையாது. குடிசைத்தொழில் என்று இப்பொழுது எல்லோரும் ஆரம்பித்திருக்கிறார்களே, அதைத்தான் அவர்களும்

செய்கிறார்கள். (சிரிப்பு) நானும் எதிர்க்கட்சித் தலைவரும், என்ஜினியர், எஸ்டேட் மானேஜர் எல்லோரும் போன மூன்றாவது வருஷம் அந்த இடத்திற்குப் போயிருந்தோம். "ஏன் இந்தத் தகாத காரியத்தைச் செய்கிறீர்கள், காந்தி மகான் இதற்காகவா இவ்வளவு தியாகம் செய்தார், சர்க்காருக்கு விரோதமாக நடக்கிறீர்களே, இப்படிச் செய்தால் நீங்கள் எந்தபடி முன்னேற முடியும்?" என்று கேட்டோம். அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? ஒரு ஐந்து வயதுப் பெண்ணைத் தூக்கி கொதிக்கிற மணலிலே போட்டார்கள். எங்களைப் பார்த்து "இந்தக் குழந்தைக்கு கஞ்சி கொடுப்பது யார்? சட்டத்தைப் போட்டு, மதுவை ஒழித்துவிட்டீர்கள், இந்தத் தொழிலை நாங்கள் செய்து வந்தவர்கள். எங்கள் பிழைப்புக்கு வேறு ஏதாவது தொழிலை ஏற்படுத்துங்கள். அதைச் செய்த பிறகு எங்களைப் பார்த்து நீங்கள் ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? என்று கேளுங்கள்" என்று சொல்லுகிறார்கள். பிழைப்புக்கு வழி சொல்லுங்கள் என்று எங்களைக் கேட்டார்கள். இந்தவிடத்தில் சர்க்கார் ஒரு தொழிலை நடத்தினால் மிகவும் நல்லது. அங்கே நிறைய குடிசைத் தொழில்களை ஏற்படுத்தி, அந்த மக்களுக்கு விமோசனத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் காலத்திலே, அதாவது 1918-க்கு முன் சூணாம்பேடு ஒரு ரிகார்டு போலீஸ் ஸ்டேஷனாக இருந்தது. அந்த வட்டம் 60 கிராமங்களைக் கொண்டது. அதை சித்தாமூருக்கு மாற்றினார்கள். சித்தாமூருக்கும் சூணாம்பேடுக்கும் 11 மைல் தூரம் இருக்கிறது. சூணாம்பேட்டில் இப்பொழுது ஒரு அவுட்போஸ்ட்தான் இருக்கிறது. இந்த மதுவிலக்கு சம்பந்தமான கொலை, கொள்ளை போன்ற விவகாரங்கள் எல்லாம் அங்கேதான் நடக்கிறது. இவ்வளவு தூரம் வந்து இந்த மதுவிலக்குக் கேஸ்களை யார் கண்டு பிடிக்கிறார்கள்? சூணாம்பேட்டை ஒரு ரிகார்டு ஸ்டேஷன் ஆக மாற்ற வேண்டுமென்று 1948-லிருந்து நான் சொல்லி வருகிறேன். ஆனால் என் பேச்சை யார் கேட்கிறார்கள்? ஒன்றும் கவனிப்பதில்லை. ஆகவே சூணாம்பேட்டிலே இருக்கிற அவுட் போஸ்டை ரிகார்டு ஸ்டேஷனாக ஆக்க வேண்டும். வெண்ணாங்குபட்டிலே அந்த அவுட்போஸ்டை அமைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மின்சாரத்தில் நாம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறோம், அதனால்தான் நிறையத் தொழில்கள் நடக்கின்றன, அதனால்தான் நம்முடைய சர்க்காருக்கு நல்ல பெயர் என்று எல்லாம் சொல்லுகிறார்கள். எங்கள் கிராமத்திலே 75 லைட்டுகள் போட்டார்கள். மூன்று மாதம் எறிந்தது. இப்பொழுது மூன்று வருஷ காலமாக எறியவில்லை. பஞ்சாயத்துத் தலைவரிடம் போய்ச் சொன்னால், 'எங்களிடம் பணமிருக்கிறது, அந்தப் பணத்திலிருந்து சேரிகளுக்கு லைட் போடலாமென்று உத்தரவு போடச் சொல்லுங்கள்' என்று சொல்லுகிறார். ஆகவே இதற்கு வேண்டிய உத்தரவை பஞ்சாயத்துக்கு அனுப்ப வேண்டு



மென்று கேட்டுக்கொள்கிறேன். இதை எல்லாம் எடுத்துச் சொல்லத்தான் முடியும், அங்கே சொல்லி நடக்கவில்லை என்றால், வேறு எங்கே போய்ச் சொல்லுவது? இனியாவது நடக்கட்டும் (சிரிப்பு).

அடுத்தபடியாக புறம்போக்கு நிலங்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன், நம்முடைய நாட்டிலே எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று நிதி அமைச்சர் சொன்னார். நான் சொல்லுவதில் நம்பிக்கை இல்லையென்றால், வெளி நாட்டு நிபுணர்கள் சென்னை மாகாணம் ரொம்பவும் முன்னேறியிருக்கிறது என்று எல்லாம் சொல்லுகிறார்களே, என்று அறிக்கை மூலம் சுட்டிக் காட்டுகிறார். நாம் கோடிக்கணக்கிலே திட்டங்களுக்காகப் பணத்தைச் செலவு செய்கிறோம். ஐம்பது ரூபாய், அறுபது ரூபாய் என்று செலவழிப்பதே கிடையாது. அப்படியிருந்தும்கூட இன்றைக்கு நிலைமை எப்படியிருக்கிறது என்றால், ஒரு படி அரிசிக்கு 1 ரூபாய் 6½ அணா கொடுக்கவேண்டும். இரண்டாந்தர அரிசி 14 அணா. அதற்கு அடுத்தபடியாக ஒரு படி 13 அணா. அந்த அரிசி நரிப்பல் மாதிரி இருக்கிறது. (சிரிப்பு). கோடி கோடியாக திட்டங்களுக்குப் பணம் ஒதுக்குகிறீர்களே, ரூபாய்க்கு இரண்டு படி அரிசியாவது கிடைக்கும் நிலைமையை ஏற்படுத்தக் கூடாதா? அப்படிச் செய்தால் ஜனங்கள் எவ்வளவு க்ஷேமமாய் இருப்பார்கள்? புறம்போக்கு நிலங்கள் ஏராளமாகக் கிடக்கின்றன. அவனவனுக்கு பட்டா செய்து, அடமானம் செய்து கொடுத்தால் பஞ்சம் நிவர்த்தியாகும். எல்லாம் சட்டப்படிதான் என்று சொல்லுவதில் என்ன அர்த்தம்? சட்டம் மனிதனுக்காகத்தான் இருக்கிறது. எந்தெந்த வகையிலே ஜனங்களுக்கு நன்மை செய்ய முடியுமோ அந்த வகையிலே சட்டங்களைத் திருத்தி அமைக்கவேண்டும். புறம்போக்கு நிலங்களை ஏழைகளுக்குக் கொடுத்து அவர்களை ஆதரிக்கவேண்டும்.

அடுத்தபடியாக கல்வி வசதியைப் பற்றிச் சொல்லவேண்டும். ஓராசிரியர் பள்ளிகளை எங்கே பார்த்தாலும் திறந்துவிட்டார்கள். ஆனால் உபாத்தியாயர்தான் கிடைக்கவில்லை. ஆசிரியர் இருந்தால் தானே பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க முடியும்? எங்கள் ஜில்லா போர்டு ஆபீசில் கேட்டால், ஆசிரியர்களை "இண்டர்வியூ"-வுக்கு வரச்சொல்லி இருக்கிறோம். நாங்கள் சீக்கிரம் போட்டு விடுவோம் என்று சொன்னார்கள். இண்டர்வியூ ஆகி 6 மாதம் ஆகிவிட்டது. இதுவரை ஆசிரியரைப் போடவில்லை. எங்கள் ஜில்லாவிலே எத்தனை பேருக்கு ஆசிரியராக வருவதற்குப் பயிற்சி அளித்தார்கள்? எத்தனை பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது, எத்தனை பேருக்குக் கிடைக்கவில்லை, ஏன் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பதையெல்லாம் கல்வி அமைச்சர் அவர்கள் விசாரித்து, காலியாய் இருக்கிற பள்ளிக்கூடங்களுக்கு எல்லாம் உடனடியாக ஆசிரியர்களை நியமிக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[Sri P. S. Ellappan] [2nd March 1961

அடுத்தபடியாக என்ன சொல்லுவது என்றே எனக்குப் புரியவில்லை. (சிரிப்பு). ஹரிஜனங்கள் விஷயத்தில் கூடுமான அளவுக்கு நன்மை செய்யவேண்டும். பெரிய தொழிற்சாலைகளை எற்படுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை. பஸ் ரூட் பர்மிட்களோ, காண்டிராக்ட் வேலைகளோ வேறெந்த பிஸினெஸ் பற்றியோ கேட்கவில்லை. "குடி தண்ணீர் வசதி செய்து கொடுங்கள், ஹரிஜனங்களுக்கு வீட்டைக் கட்டிக்கொடுங்கள், பாதையைப் போடுங்கள்" என்றுதான் சொல்லுகிறோம். ஆனால் எல்லாம் ஹரிஜனங்களுக்குத்தான் செய்கிறார்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள். அந்த நிலைமையில் அமைச்சர்தான் என்ன செய்வார்கள்? அவர்களால் ஆனதைச் செய்கிறார். இதுதான் கடைசிக் கூட்டம். பின்னர் நான் இங்கே வரமுடியுமோ என்னவோ. ஆகவே ஹரிஜனங்களுக்கு மனைகள் கொடுக்கும் விஷயம், சேரிகளுக்கு லைட்கள் போடுவது, குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பது, பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்களை நியமிப்பது, புறம்போக்கு நிலங்களை ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுப்பது, இதுபோன்ற விஷயங்களில் ஹரிஜனங்களுக்குக் கூடுமானவரையில் நன்மை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

1-30 a.m. * **Sri S. RAMASAMI NAIDU** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மூன்று ராஜ்யங்கள் ஒன்றாக இருந்த காலத்தில் இருந்த வரவு செலவுத் திட்டத்தைப் போல், இன்று இரண்டு பிரிந்து போயும், அநேக மடங்குகள் வரவைக் காட்டுவதாகவும், அதற்கு உகந்த செலவையும் காட்டக் கூடிய நிலைமையைக் காட்டியிருக்கும் நிதியமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். புது வரி எதுவும் விதிக்கவில்லை என்பதுடன், விழுந்திருக்கும் துண்டையும் சரிக்கட்ட முடியும் என்ற நம்பிக்கை நிதிமந்திரியவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏற்பட்டிருக்கும் துண்டையும் சரிக்கட்டி, அதிகப்படி செலவு செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதைக் குறித்து மகிழ்ச்சி அடைய வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்டமானது, அன்னிய நாட்டார் தயாரித்ததை போன்று இருக்கிறது என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். "போல" "போல" என்றால், இன்னொன்றை மாதிரியாக வைத்துக்கொண்டு சொல்கிறார்கள் என்று கருத்து; ஆகவே, சென்னை ராஜ்யத்துக்கும் தனிப்பட்ட உயிர்நாடி இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டதைப் பற்றி மெத்த சந்தோஷம். இந்த ராஜ்யத்தில் 100-க்கு 80-பேர்கள் விவசாயிகளாகவும், விவசாயக் கூலிகளாகவும் இருக்கிறோம். விவசாயினுடைய நிலைமையை எடுத்துக்கொண்டால், மறைமுகமாக வரிகள் விதித்தாலும், வரிகளையெல்லாம் விவசாயிகளிடமிருந்தே வசூலிக்க வேண்டியிருக்கிறது. வரியின் ஒரு பகுதிதான் மற்றவர்களிடமிருந்து கிடைக்கிறது—விற்பனை வரி போன்றவை. மற்ற நிலத்தீர்வை, தண்ணீர்த் தீர்வை, முதலியவை எல்லாம் விவசாயிகளிடமிருந்துதான் வசூலிக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு ராஜ்



2nd March 1961] [Sri S. Ramasami Naidu]

யத்தில், உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்டிருக்கிறோம் என்றாலும் கூட, எதிர் பார்த்த அளவு அடையவில்லை என்று நிதியமைச்சரவர்கள் ஒரு குறையைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம், சர்க்காருடைய குறை என்று சொல்ல மாட்டேன். விவசாயிகளின் குறை என்றுதான் சொல்லுவேன். கொடுக்கப்படும் கற்பனைகள் வழியில் விவசாயம் செய்யாததால் உற்பத்திக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்லலாம். சர்க்கார் விவசாயிகளுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்து வருகிறார்கள். டிராக்டர், புல்டோசர் போன்ற சாதனங்களைக் கொடுத்தும், விவசாயத்திற்கு வேண்டிய கிணறு, குளம் முதலியவற்றைச் செப்பனிடுவது போன்ற சௌகரியங்களும், பாசன வசதிகளைப் பெருக்குவது முதலியவைகளிலும், அவ்வப்பொழுது வேண்டிய பண உதவியும் செய்து வருகிறார்கள் என்றாலும், விவசாயிகள், ஓரளவுக்கு சர்க்காரைப் புரிந்து கொள்ளவில்லை, திட்டங்களின் எண்ணத்தைப் புரிந்து கொள்ளவில்லை, புரிந்து கொண்டு நிறைவேற்ற முன்வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏதோ சர்க்கார் கடமைக்குச் செய்கிறார்கள், மக்களுக்கு நன்மை என்று சொல்கிறார்கள் என்று விவசாயிகூட சொல்லி, சில சமயங்களில் அப்படி நினைப்பதால் தான், விவசாய உற்பத்தி எந்த அளவுக்குப் பெருக வேண்டுமோ அந்த அளவுக்குப் பெருகவில்லை என்று நிச்சயமாகச் சொல்லுவேன். ஆகவே, எதிர் பார்த்த அளவு உற்பத்தி இல்லை என்றால், விவசாயிகளிடமுள்ள இந்தக் குறைகள் நீங்க வேண்டும். இன்றைக்கு இந்த 10 வருஷமாகத் திட்ட மிட்டு, கிராம விவசாயிகளுக்கு எத்தனை விதத்தில் நன்மைகள் செய்திருக்கிறார்கள் என்பதை எதிர்க் கட்சி அங்கத்தினர்களும் அறிவார்கள். ஆனால், விவசாயிகள் கொடுக்கப்படும் கற்பனைகளை மேற்கொள்ளவில்லை என்பது வருந்தத் தக்கது. அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று, நன்றாக உரக் குழிகள், கம்போஸ்ட் போடுங்கள், விவசாயத்தைப் பெருக்குங்கள் என்றால், அது அவர்கள் படித்த அளவில் சொல்லவில்லை; ஆனால், பரீட்சித்துப் பார்த்து, நன்மை என்று கண்டவற்றைச் சொல்கிறார்கள். நல்ல வித்துக்களைப் போடுவது, ஆழமாக உழுதல் போன்ற முறைகளில் அவர்களைப் பழக்க, நவீன முறையில் விவசாயம் செய்யக் கோருகிறார்கள். அவர்கள் அம்மாதிரிச் செய்திருந்தால், இந்தப் பற்றாக்குறை நீங்கியிருக்கும்.

கிராமங்கள் வளரவேண்டும், அப்படி அவை வளர கிராமங்களில் உற்பத்தி பெருக வேண்டும் என்று கிராமப் பஞ்சாயத்துச் சபைகளை ஏற்படுத்தி, கிராம ராஜ்யத்தை கிராம மக்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். ஆனால், அவர்களுக்கு நிதி விஷயத்தில் சர்க்கார் இன்னும் கொஞ்சம் தாராளமாக உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு விவசாய அபிவிருத்திக்கு, கனம் ஸ்ரீனிவாச அய்யர் சொன்னது போல், ரஸ்தா வசதிகள் பெருக வேண்டும். முடியாதிருந்த நிதியை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஜில்லா போர்டுகள் தங்களிடம் இருந்த ரஸ்தாக்களை நல்லபடியாகச் செப்பனிட நிதி வசதியை உத்தேசித்து, பிரதேச

[Sri S. Ramasami Naidu] [2nd March 1961

அளவில், தலைக்கு 40 பைசா என்று கொடுத்து, பழைய ரஸ்தாக்களை எல்லாம் செப்பனிடுவது என்பது முடியாத காரியம். பழைய ரஸ்தாக்களையும், ஸ்தல அபிவிருத்தி, தேசீய அபிவிருத்தி ரஸ்தாக்களையும், மாகாண ரஸ்தாக்களையெல்லாம் கப்பி போட்டு செப்பனிடுவது கஷ்டம். கிராமத்தில் வரி போட்டு செய்யலாம் என்று ஒரு யோசனை கூறப்பட்டது. பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டு பல வரிகளைப் போட்டு, இன்று வரி இரண்டு மடங்காக இருக்கிறது. பஞ்சாயத்துக்கள் ஏற்பட்ட பிறகு, சட்டப்படி, வீட்டு வரி, மற்றும் பல வரிகளைப் போட்டு, விவசாயிகளும், விவசாயக் கூலிகளும் தாங்கக்கூடிய அளவுக்கு மேல், அவர்கள் இன்றைக்கு வரி கொடுத்து வருகிறார்கள். ஆகவே, அதிகப் படியாக வரி விதித்து, சில காரியங்களைச் செய்வதென்பது இயலாத காரியம். விவசாயத்திற்கு சர்க்கார் உதவிகள் அளிப்பது போல், மற்றும் ரஸ்தாக்களைச் செப்பனிடவும், சுகாதார வசதிக்காகவும், குடிதண்ணீர் வசதிக்காகவும், இன்னும் கொஞ்சம் அதிகப்படியான மானியம் கொடுத்து உதவ முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமங்களுக்கு தாங்களாகவே சுகாதார வசதிகளையும், மற்ற வசதிகளையும் செய்து கொள்ள சக்தி இல்லை. உரக் குழிகள் போட, பொது இடங்களை ஒப்படைக்கச் செய்தால், மிக்க பயன் அளிக்கும். ஒருவர் ஒரு குழி போடுவது அவ்வளவு பிரயோஜனமாக இருக்காது. வீட்டோரங்களையும், ஊரைச் சுற்றியும் கிராமத்தில் சுற்றுப் புற சுகாதாரத்தை நல்ல வகையில் செய்து கொள்ள இயலவில்லை. ஆகவே இதில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் கட்டாயமாக சாக்கடை கட்ட வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டும்; ஒவ்வொரு ஊருக்கும் சாக்கடை கட்ட என்று 50 பர்செண்ட் சர்க்காரிலிருந்து மானியம் கொடுத்து உதவ வேண்டும். அப்படிச் செய்தாலொழிய, கிராமத்தின் தெருக்களில், சாக்கடைகள் வற்றாத ஆறுகளாக ஓடிக்கொண்டிருக்கும்.

கல்வி வசதி கிராமங்களுக்கு நல்ல முறையிலே செய்யப்பட்டிருக்கிறது. கல்வி மந்திரியே, நிதி மந்திரியாகவும் இருக்கும் காரணத்தால், சர்க்காரிலே பல நல்ல திட்டங்களை மேற்கொண்டு, பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். ஐந்து மைலுக்கு ஒரு உயர் நிலைப் பள்ளி என்று அமைத்து விவசாயிகளுக்குப் பயன்படச் செய்கிறார்கள். ஆசிரியர்களுக்கும் சம்பளச் சலுகைகளெல்லாம் கொடுக்கிறார்கள். ஆகவே, கல்வி அதிகமாகப் பரவ சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. கிராமந்தோறும் ஆரம்பக் கல்விச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தற்காலக் கல்வி சம்பந்தமாக அந்த மானியம் வரும்போது பேச சந்தர்ப்பம் எப்படியிருக்குமோ, எனக்கும் எப்படி சௌகரியம் இருக்குமோ என்று இப்பொழுதே அதைப் பற்றியும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



2nd March 1961] [Sri S. Ramasami Naidu]

ஐந்தாவது வகுப்பு வரை கட்டாயக் கல்வி என்று சொல்லப் புகும்போது, அதற்கு இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் முறை பொருத்தமில்லை. ஐந்து வகுப்பு வரை கட்டாயம் இருக்க வேண்டும். முதலில் இருக்கும் மாணவர் எண்ணிக்கை, ஐந்தாவது வரைக்கும் இருப்பதில்லை; 40, 50 சதவிகிதம் மத்தியில் குறைந்து போய் விடுகிறது. ஆகவே, 14 வயது வரை அல்லது 7-வது வகுப்பு வரை என்று சொல்வதற்குப் பதிலாக, 5-வது வகுப்பு வரை கட்டாயம் என்று ஏற்படுத்த அது சம்பந்தமான ஆராய்ச்சி நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பதினாலாவது வயது அல்லது ஏழாவது வகுப்பு வரையில் கட்டாயக் கல்வியை அமுல் நடத்த வேண்டிய தேவையில்லை. இரண்டு அல்லது மூன்று வருஷப் படிப்பு வீணாகப் போகிறது. ஆகவே நான் சொல்லக் கூடிய யோசனை என்னவென்றால் ஆரம்பக் கல்வி என்பதை ஐந்தாவது வகுப்புடன் நிறுத்திக்கொண்டு அதன் மேல் படிப்பு படிக்க உயர்நிலைக் கல்வியாக சேர்த்து விட்டால் நல்லது. ஐந்தாவது வகுப்பு அல்லது பதினோரு வயது வரையில் கட்டாயக் கல்வியும் அதற்கு மேல் உயர்நிலைக் கல்விக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக விவசாயிகளுடைய நிலைமை இன்றைக்கு கணிசமான அளவில் முன்னேற்றமடைந்திருக்கிறது. துண்டு விழும் பணத்தைச் சரிக்கட்டுவதற்கு விவசாயிகளை நல்ல நிலைமையில் வைக்கலாம். அதனால் விவசாயிகளுக்கு என்று அதிகமாகக் கொடுத்திருக்கலாம். இன்றைக்கு ராஜ்யத்திலுள்ள விவசாயிகளுக்கு நல்ல நிலைமையை உண்டாக்குவதற்கும், அவர்கள் கணிசமான அளவில் விவசாயப் பொருள்களைப் பெருக்குவதற்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அவர்கள் வீடுகள் நல்ல முறையில் இருக்கவும், கணிசமான அளவில் விவசாயத்தைப் பெருக்கிக் கொள்ளவும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த முறையில் அவர்களுக்கு மின்சாரம் கொடுப்பதன் மூலமாக பல வசதிகளையும் செய்து கொண்டிருக்கிறோம். மின்சாரம் இப்பொழுது விவசாயத்திற்கு வேண்டிய அளவு தாராளமாக விநியோகிக்கப்படுகிறது. இதற்கு முன் மாடுகளை வைத்துக்கொண்டு விவசாயம் செய்யக்கூடிய இடங்களிலெல்லாம் இப்பொழுது மின்சாரம் கொடுக்கப்பட்டு அதன் மூலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். அப்படி அவர்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படுவதால் முன்பு விவசாயம் செய்ததைவிட இப்பொழுது நான்கு அல்லது ஐந்து, இன்னும் சில இடங்களில் பத்து மடங்கும் உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய வீடுகளில் கூட மின்சாரம் வழங்கப்பட்டு அதனால் அவர்கள் தங்களுடைய வீடுகளையும் அசுத்தமாக வைத்துக் கொள்ளாமல் சுத்தமான நிலைமையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் நல்ல வசதிகூட பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வசிக்கக்கூடிய தெருக்களுக்கு எல்லாம் இப்பொழுது மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் நல்ல முறையில்

[Sri S. Ramasami Naidu] [2nd March 1961

தெருக்களை வைத்துக்கொள்வதற்கும் வசதியாக இருக்கிறது. அந்த முறையில் நம் மாகாணம் முதல் நிலைமையில் இருப்பதற்கு இந்த மின்சாரம் தான் காரணமாக இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு நமது மாகாண சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்கு அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அத்துடன் அந்த இலாகாவைச் சார்ந்த மின்சார அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இத்துடன் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயப் பண்டங்களை நல்ல முறையில் விற்பனை செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது அதற்குச் சரியான முறை இல்லை. அவர்களுடைய பொருள்களை விற்பனை செய்வதற்கு என்று விவசாயக் கூட்டுறவு சங்கங்களையும் மார்க்கெட்டுகளையும் அமைத்தால் அவர்களுடைய பொருள்களை நல்ல விலையில் விற்பதற்கு வசதியாக இருக்கும். அவர்கள் எதிர் பார்க்கக்கூடிய அளவில் விற்பனை ஆகாவிட்டாலும் கூட அவர்களுக்கு கட்டுபடியாகக்கூடிய அளவில் விற்பனை செய்வதற்கு வழி ஏற்படும். இப்பொழுது அப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்படவில்லை. ஆகவே இனிமேலாவது அவர்களுடைய பண்டங்களை விற்பனை செய்வதற்கு வேண்டிய விற்பனைக் கூட்டுறவு சங்கங்களையும் மார்க்கெட்டுகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுதுள்ள நிலைமையில் அவர்கள் வசதியற்றவர்களாக இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடியவைகளைவிட அதிகமான விற்பனைக் கூட்டுறவு சங்கங்களையும் மார்க்கெட்டுகளையும் அமைத்துக்கொடுத்து அவைகள் மூலமாக விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை உண்டு பண்ணிக் கொடுக்கவேண்டும் என்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது மிளகாய் வற்றல் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. அதனால் அதை உற்பத்தி செய்யக்கூடியவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு வேண்டிய மார்க்கெட்டுகள் இல்லாத காரணத்தால் விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குப் பணம் இல்லாத காரணத்தால் தங்களுடைய விவசாயப் பொருள்களை வியாபாரிகளுக்கு அவர்கள் கேட்கக்கூடிய விலைக்கு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி இல்லாமல் கூட்டுறவு சங்கங்களும் மார்க்கெட்டுகளும் இருந்தால் விவசாயிகளுக்குத் தேவையான காலத்தில் அந்தச் சங்கங்களிலிருந்து பணத்தை வாங்கிக் கொண்டு நல்ல விலை விற்கக்கூடிய காலத்தில் தங்களுடைய பொருள்களை விற்கமுடியும். ஆகவே, விவசாயிகள் தங்களுடைய பொருள்களை நல்ல விலையில் விற்கக்கூடிய அளவில் அதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டியது இந்தச் சர்க்காருடைய கடமை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



2nd March 1961] Sri S. Ramasami Naidu]

விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தைப் பெருக்குவதற்கு இன்னும் தாராளமாக தண்ணீர் இறவை இயந்திரங்களைக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வாறு பத்து அல்லது பதினைந்து கூட்டுறவு சங்கங்கள் சேர்ந்து இருக்கக்கூடிய இடங்களில் ட்ராக்டர், புல்டோஸர் முதலியவைகளை வாங்குவதற்கு வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். ட்ராக்டர் முதலியவைகள் உற்பத்தியாவதை முதலில் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்கு முதலிடம் கொடுக்க ஏற்பாடு செய்தால் அதனால் விவசாயிகளுக்குப் பிரயோசனப்படும். அதைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்குத் துணையாக பல சில்லரைத் தொழில்களைச் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். இப்பொழுது சர்க்கார் ஏற்பாடு செய்திருப்பதில் கதர் ஒன்றுக்குத்தான் முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு மற்றவைகள் கணிசமான அளவில் நடைபெறவில்லை. அதனால் பருத்தி உற்பத்தியாகும் இடங்களில் பருத்தியை அடித்து அதை நூலாகச் செய்யக்கூடிய யந்திரங்களை—இப்பொழுது கோயம்பத்தூரில் கண்டு பிடித்திருக்கிறார்கள்—விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்பொழுது மின்சாரம் வீடுகளுக்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் கொடுக்கக்கூடிய காலத்தில் இதைச் செய்தால் அந்த இயந்திரங்களை வைத்துக்கொண்டு நூல் நூற்கக்கூடிய வாய்ப்பு விவசாயிகளுக்கு ஏற்படும்; அதை வைத்துக்கொண்டு அவர்கள் கணிசமான அளவில் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளுவார்கள். அதன் பிறகு விவசாயிகள் இருக்கக்கூடிய ஊர்களில் இந்த நூல்களைக் கொண்டு பனியன் நெசவு செய்வதற்கும் சர்க்கார் ஒரு ஸ்தாபனத்தை அமைத்து அதில் விவசாயிகள் ஈடுபடும்படியாகச் செய்யவேண்டும்.

விவசாயம் அதிகமாக நடக்கும் இந்த காலத்தில், மின்சாரம் அதிகமாக வழங்கக்கூடிய இடங்களில் வேலை இல்லாத் திண்டாட்டம் இப்பொழுது இல்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம். மின்சாரம் இல்லாத நஞ்சைப் பிரதேசங்களில் இன்னும் வேலை இல்லாத் திண்டாட்டம் இருக்கிறது. அதைப் போக்க வேண்டிய நடவடிக்கை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் அதிகப்படியான வருமானம் வரக்கூடிய அளவில் அவர்களுக்குத் துணைத் தொழில்களை ஏற்படுத்திக்கொடுக்க சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அவைகளை ஏற்படுத்திக் கொடுத்து விவசாயிகள் நல்ல நிலைமையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கும் அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதற்கும் சர்க்கார் இன்னும் அவர்களுக்கு அதிகமாக வழிவகைகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த முறையில் இந்த வரவு செலவுத் திட்டத்தை வகுத்து, மக்களுடைய உற்பத்திச் சக்தியைப் பெருக்குவதற்கும், வாங்கும் சக்தியைப் பெருக்குவதற்கும் சகல

வழிகளிலும் அவர்களுக்கு வசதி செய்து கொடுத்து அவர்கள் சுபிட்சமாக வாழ்வதற்கும் வேண்டிய வழிவகைகளைக் காட்டிக் கொடுத்த நமது கனம் நிதி அமைச்சர் அவர்களையும் அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுத்த இந்த சர்க்காரையும் பாராட்டி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI T. IRUSAPPAN** : உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் 1961-62-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப்பற்றிப் பல அங்கத்தினர்கள் பேசினார்கள். நானும் என்னுடைய கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சொல்வதற்கு முன் வந்து நிற்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் தனக்கு உரிய என்றுமுள்ள முறையில் தமிழ் நாட்டின் நலன்களை மிகப் பெரிய அளவில் உயர்த்தியிருப்பதாகக் கூறினார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையிலும் இந்த நிதி நிலை அறிக்கை ஆளும் கட்சியார் வரும் தேர்தலை முன்னிட்டே நாட்டு மக்களின் நாவிலே தேனைத் தடவிய அறிக்கையாகத்தான் இருக்கிறது. வரும் நிதி ஆண்டில் புதிய வரிகள் ஒன்றும் இல்லை என்று கூறி நாட்டு மக்களையும் எங்களைப் போன்ற எதிர்க் கட்சியார்களையும் அகமகிழ வைக்க அரசாங்கம் நினைத்தால் அது வருந்தத் தக்கதாகவே முடியும்.

இந்த நிதி நிலை அறிக்கை இந்நாட்டு ஏழை விவசாய மக்களையோ அல்லது இந்நாட்டில் பலதரப்பட்ட தொழிலாள பெரு மக்களையோ உயர்த்த ஒருவித வழிவகையும் காணப்படவில்லை. பெரிய பாசனத் திட்டங்கள் ஒருபுறம் இருந்தாலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு முக்கியம் கொடுத்து குறிப்பிட்டிருக்கிறார்கள். இருநூறு ஏக்கருக்குக் குறைவாயுள்ள ஆயக்கட்டு ஏரி, குளங்களை எல்லாம் அந்தந்த பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்து அதன் அபிவிருத்தி வேலைகளைச் செய்யச் சொல்லி அப்பஞ்சாயத்து யூனியன்கள் ரூபாய்க்கு நாலணா விதம் புதிய வரிக்குள் அதிகமாக வசூலிக்கும்படியாகத் தூண்டி ஏழை விவசாயிகளுக்கும் அதை நம்பி நாமும் இதர பலர்களுக்கும் அதிக பளுவை ஏற்றி வரி வசூல் செய்யும் முறை புதிய வரி விதிப்புக் கொள்கை ஏன் இல்லை என்று கனம் நிதி அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புகிறேன். இது போன்ற வரி விதிப்புக் கொள்கை கனம் அமைச்சர் அவர்கள் மக்கள் கண்களுக்கு தெரியாது என்று நினைப்பது சரியா என்று நான் தாழ்மையோடு கேட்க விரும்புகிறேன். அதல்லாமல் ஏற்கெனவே பல மறைமுக வரி விதிப்பு இல்லை என்று கூறுவது முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதாகும்.

என்னுடைய தொகுதியில் உள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திலுள்ள புதிய ஏரிகளைக் கட்டுவதற்கும் பழைய ஏரிகளைப் பழுது பார்ப்பதற்கும் கனம் திரு. ராமய்யா அவர்கள் என் தொகுதிக்குச் சுற்றுப் பிரயாணம் வந்திருந்த சமயம் பொது மக்கள் சுமார் 1,300



விண்ணப்பங்கள் கொடுத்ததன் பேரில் கனம் அமைச்சர் அவர்கள் மேற்படி இடங்களைப் பார்வையிட்டு வந்தார். ஆனால் அதன் வேலைகள் நடக்குமா என்ற வழிக்கே ஒரு சிறு ஆதாரங்களும் தெரியவில்லை. அம்மம்பாளையம், காட்டுக்கோட்டை, செருவாச்சூர், மணிவழந்தான், சிவசங்கரபுரம், நாகக்குறிச்சி ஊணத்தூர், வெல்லையூர், காமக்காபாளையம், கூடமலை, செந்தாரப்பட்டி, ராமநாயக்கன்பாளையம், தாண்டானூர், தும்பள், வீரகனூர், தம்மம்பட்டி ஆகிய ஊர்களின் பொது மக்கள் கனம் அமைச்சர் அவர்களுக்கு மனுக் கொடுத்தார்கள். அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பார்க்கப்பட்டது. ஆனால் மேற்படி பகுதி விவசாயிகளின் நீர்ப்பாசன வசதிக்கான வழி பிறக்கும் வாய்ப்புத் தெரியவில்லை.

உணவு உற்பத்தியை அதிகப்படுத்தி, நாட்டு மக்களுடைய வறுமையைப் போக்குவதற்கு சர்க்கார் பல காரியங்கள் செய்வதாகச் சொல்கிறார்கள். இதற்காக அரசாங்கத்தார் தீவிர சாகுபடித் திட்டம் என்று கூறுகிறார்களே தவிர, தகுந்த வசதியுள்ள இடங்களை நடைமுறையில் சாகுபடிக்குக் கொண்டுவர எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதில்லை. என் தொகுதியில் சுமார் 30,000 ஏக்கர் சர்க்கார் தரிசு நிலம் இருந்தும் அங்குள்ள ஏழைகளுக்கும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சரிவர அவை சாகுபடிக்குப் பிரித்துக்கொடுக்கப்படவில்லை. காரணம் அந்தப் பகுதி கணக்குப் பிள்ளை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவர்கள் அந்த வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு நிலம் கொடுக்காமல் வெளியூர்களில் இருந்து, வெளித் தாலுக்காவில் இருந்து வருகிறவர்கள் ஒரு குடும்பத்திற்கே பத்து ஏக்கர், பதினைந்து ஏக்கர், 30 ஏக்கர் என்று கொடுத்துவிடுகிறார்கள். இதைபற்றி மாவட்ட அதிகாரிக்கும், சம்பந்தப்பட்ட இதர அதிகாரிகளுக்கும் பல மனுக்கள் எழுதியும், நேரில் சொல்லியும் இது விஷயம் கவனிக்கப்படவில்லை. உடனடியாய் இதை அரசாங்கம் கவனிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன விவசாயக் கூட்டுறவு காலனி என்னுடைய தொகுதியில் ராமநாயக்கன்பாளையத்தில் ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லப்பட்டது. அதன் காரணமாக 66 அங்கத்தினர்களைச் சேர்த்து 530 ஏக்கர்களைச் சாகுபடி செய்ய மார்ச் முடிவிற்குள் 33 கிணறுகளை வெட்டப்போவதாகச் சொன்னார்கள். ஆனால் அவ்வேலை அப்படியே நின்றுவிட்டது. ஆகவே மேலும் எல்லா நிலங்களையும் ஹரிஜன் ரிசர்வ் நிலமாக ஒதுக்கி முக்கியமாய் உள்ளூர் ஏழை விவசாயிகளுக்கு அடமானம் செய்து கொடுத்து, ஹரிஜன கூட்டுறவு காலனியை உடனடியாய் அமைத்துத் தரவேண்டுமாய் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நாட்டு மக்கள் மத்தியில் கூறி வந்த உச்ச வரம்பு நிலச் சீர்திருத்தச் சட்டம்பற்றி கவர்னர் பெருமான் பிரசங்கத்திலும், கனம் நிதி அமைச்சர் அறிக்கையிலும் அதைப் பற்றிய விபரமே தெரியவில்லை. நில உச்ச வரம்புச் சட்டம் என்ன

வாயிற்று? அது கைவிடப்பட்டதா? இல்லையென்றால், அது அமுலுக்கு வந்தால் வரும்நாள் எப்பொழுது என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடவேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பெரும்பாலும் கிராமப்புறங்களில் விவசாயத்தையே நம்பி வாழ்ந்துவந்த தாழ்த்தப்பட்ட மக்களில் ஒரு பிரிவாகிய அருந்ததியர்கள் மின்சார அபிவிருத்தியால் பரம்பரைத் தொழில் பாதிக்கப்பட்டு வாழ வழியின்றித் தவிக்கிறார்கள். ஆகவே அரசாங்கத்தார் குடிசைத் தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தகுந்த பல உதவிகளை அவர்களுக்கு உடனடியாகச் செய்து கொடுத்து அவர்களும் மனிதர்களாக வாழ வழி செய்யவேண்டுமாய்த் தாழ்மையோடு மிகமிக முக்கியமாயும், குறிப்பாயும் கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு விவசாயத்திற்கு பம்பு செட்டு வைக்கிறபோது ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் என்று இருந்ததை இப்போது மாற்றி முற்போக்கு இடத்திற்கு 45 ரூபாய் எனவும், பிற்போக்கு இடத்திற்கு 35 ரூபாய் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை ஒருபுறம் ஏற்றுக்கொள்வதாய் இருந்தாலும் என்னுடைய தொகுதியைப் பிற்போக்குப் பகுதியாக மாற்றி ஹார்ஸ் பவருக்கு 35 ரூபாயாக நிர்ணயித்துத் தரவேண்டும் என்பதாகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடிதண்ணீர்க் கிணறும், குடியிருப்பு வீட்டுதவியும், நடைபாதை, மயானம், இதர பல சுகாதார வசதிகள் பல செய்துகொடுக்க வேண்டுமாய் அதிகாரிகளுக்குப் பல விண்ணப்பங்கள் கொடுத்தும், நேரில் சொல்லியும் கடந்த நான்கு ஆண்டு காலமாய் நானே சட்ட மன்றத்தில் வலியுறுத்திக் கூறியும் இதுவரை மேற்படிக் குறைகளைத் தீர்க்க முடியவில்லை. ஆகவே அக்குறைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் மணிவிழுந்தான் மாஜி ராணுவத்தினர் காலனியில் சுமார் 100 மாஜி ராணுவ விவசாயிகள் குடியேறி சுமார் 2 வருஷ காலமாய் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். மாஜி ராணுவத்தினர் காலனிக்கென 3,500 ஏக்கர் தரிசு நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. 25—11—60-லிலும், 28—11—60-லிலும் டெல்லியில் இருந்து ரீசெட்டில்மெண்டு ஆபீசர் அவர்கள் அங்கே வந்து தணிக்கை செய்து இருக்கிறார்கள். நாளதுவரையில் அவ்விவசாயிகளுக்கு மத்திய அரசாங்கமோ, நமது மாநில அரசாங்கமோ எவ்வித உதவியும் அளிக்கவில்லை. அப்படியின்றி மாடு வாங்கவும், உரம், விதை, கருவி முதலியன வாங்கவும் அவர்களுக்கு சர்க்கார் எல்லா வகையிலும் உதவி செய்யவேண்டுமாய் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்





கொள்கிறேன். இப்படிப் பல காரியங்களைச் செய்யாது பேசுவது வெறும் தேர்தல் பிரசாரமாகத்தான் இருக்கும் என்று சொல்லிக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம். 2-00 p.m.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8–30 a.m. tomorrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—*STATUTORY RULES AND ORDERS.*

168. *Amendments to the Madras Industrial Establishments (National and Festival Holiday Rules), 1959 issued in G.O. Ms. No. 4318 Industries Labour and Co-operation (Labour), dated 12th September 1960. (Laid on the table of the House under section 12 (3) of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Act, 1958 (Madras Act XXXIII of 1958).*

### B.—*REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.*

* 75. *Supplement to Detailed Budget Estimate (1) Second Five year Plan (2) Third Five Year Plan.*

* 76 *Review of the Second Plan—Madras State.*

*77. வரவு செலவுத் திட்டச் சொல்லகராதி (ஆங்கிலம்-தமிழ்).

78. *Short Reviews of the activities of the Madras Record office, Tribunal for Disciplinary proceedings and the Madras Public Service Commission for the first half of 1960–61.*

79. *Amendments to the Private Sanitary Conveniences (Constructions, Maintenance and Supervision) Rules, 1941 issued in G.O. Ms. No. 2470, Health, dated 1st October 1960 under the Madras Public Health Act, 1939 (Madras Act III of 1939).*

* Placed on the table of the House on 25th February 1961.

## APPENDIX I.

[Vide answer to the starred question No. 511 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 2nd March 1961, page 11 supra.]

*A.*—(i) and (ii) Yes, Sir. Soil conservation programme is in operation in eight out of the twelve districts in this State viz., The Nilgiris, Coimbatore, Salem, South Arcot, Chingleput, North Arcot, Tiruchirappalli and Madurai.

Its details and the assistance accorded for such works are furnished below :—

The soil conservation programme in this State was first formulated in 1952 after a series of experiments conducted at Hagari and Nanjanad. This programme aims at the prevention of soil erosion in eroded areas and also at indirectly conserving the moisture in the soil, which attributes to its fertility. The various measures that are adopted are contour bunding, gully plugging, construction of check dams and waste weirs in the plain areas and bench terracing work in the hilly areas. The average cost of these measures in the plains is Rs. 50 per acre, while the work in the hilly areas involve an expenditure of Rs. 350 to Rs. 400 per acre.

2. During the first Plan period, the programme was in operation in the districts of the Nilgiris and Coimbatore only and a sum of Rs. 12·23 lakhs was spent covering an area of nearly 17,130 acres. By experience gained in the programme during the first-Plan and also on account of the co-operation offered by the public, taking into consideration the advantages of the programme, it has been possible to make substantial progress during the Second-plan period. Out of a sum of Rs. 100·20 lakhs provided for the programme for this period, a sum of nearly Rs. 66 lakhs has been spent up to 30th June 1960 and an area of nearly 94,300 acres has been covered against the target of 100,900 acres. This year being the last year of the programme, it is proposed to complete the target fixed for the Second Five-year Plan by the end of March 1961. A sum of Rs. 233 lakhs has been provided for the Third-plan period and the physical target fixed is above 20 lakhs acres.

3. In addition to the developmental activities referred to in paragraph 2 above, several research and training schemes are also contemplated under the programme, the most important of which is the dry farming measures to be adopted in combination with contour bunding works, which is expected to increase yield by about 50 per cent. The other projects are survey and soil conservation work in river valley catchments, reclamation of saline and alkaline lands, checking of sand dunes spreading on to agricultural lands and similar other works, which are necessary to check soil erosion.



4. The soil conservation work is at present executed by obtaining agreements from the cultivators and the expenditure on the works is initially met by the State Government. The Government of India are paying a grant of 12½ per cent of the cost of soil conservation work and work-charged establishment and 50 per cent of the cost of afforestation, while the State Government also contribute a similar share of expenditure. In addition, the State Government bears 90 per cent of the cost of the machinery and tools used for the scheme, which is on indirect subsidy paid to the ryots for the execution of soil conservation works. It may thus be seen that the ryot pays only 75 per cent of the cost of the soil conservation work and work charged staff, the entire cost of non-work-charged staff and contingencies and 10 per cent of the cost of machinery used in the schemes. Even this share of the ryot is recovered from him only in 20 equated annual instalments commencing after two years from the date of completion of the work.

The Madras Land Improvement Schemes Act, 1959, which contemplates execution of soil conservation work in the State by legislative measures has since been brought into force and it is hoped that under this Act the entire extent of waste lands in this State will be brought under cultivation by adopting the required measures under the soil conservation programme.

## APPENDIX II.

[Vide answer to the starred question No. 519 asked by Sri K. Vinayakam at the meeting of the Legislative Assembly held on 2nd March 1961, on page 19 supra.]

*Statement showing the division-war particulars of number of fair price shops for rice functioning in Madras City.*

| Division number. | Number of shops. | Division number. | Number of shops. | Division number. | Number of shops. |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 15 | Nil. | 29 | Nil. |
| 2 | 1 | 16 | 1 | 30 | 2 |
| 3 | 1 | 17 | 1 | 31 | 1 |
| 4 | 1 | 18 | 1 | 32 | 2 |
| 5 | 1 | 19 | 1 | 33 | 1 |
| 6 | 1 | 20 | 1 | 34 | 1 |
| 7 | 1 | 21 | Nil. | 35 | 1 |
| 8 | 2 | 22 | 1 | 36 | 1 |
| 9 | 1 | 23 | 1 | 37 | 1 |
| 10 | 1 | 24 | Nil. | 38 | 1 |
| 11 | 1 | 25 | 1 | 39 | 1 |
| 12 | Nil. | 26 | 1 | 40 | 1 |
| 13 | 1 | 27 | 1 | 41 | Nil. |
| 14 | Nil. | 28 | Nil. | 42 | 1 |

[2nd March 1961

| Division number. | Number of shops. | Division number. | Number of shops. | Division number. | Number of shops. |
|---|---|---|---|---|---|
| 43 | 1 | 63 | 1 | 83 | 1 |
| 44 | 1 | 64 | 1 | 84 | Nil. |
| 45 | 1 | 65 | Nil. | 85 | 1 |
| 46 | 1 | 66 | 1 | 86 | 2 |
| 47 | 1 | 67 | 1 | 87 | 2 |
| 48 | 2 | 68 | Nil. | 88 | 1 |
| 49 | 1 | 69 | 1 | 89 | 2 |
| 50 | 1 | 70 | 1 | 90 | 1 |
| 51 | 1 | 71 | Nil. | 91 | Nil. |
| 52 | 1 | 72 | 1 | 92 | 1 |
| 53 | Nil. | 73 | 1 | 93 | 2 |
| 54 | 1 | 74 | 1 | 94 | 1 |
| 55 | 1 | 75 | 2 | 95 | 2 |
| 56 | Nil. | 76 | Nil. | 96 | 2 |
| 57 | 1 | 77 | 1 | 97 | 1 |
| 58 | 1 | 78 | 1 | 98 | 2 |
| 59 | 1 | 79 | 2 | 99 | 2 |
| 60 | 1 | 80 | Nil. | 100 | 1 |
| 61 | 1 | 81 | 1 | | |
| 62 | 1 | 82 | Nil. | | |
| | | | | | 96 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

## Friday, 3rd March 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

MR. SPEAKER : The hon. Member Sri N. K. Palanisami has requested me that his short-notice question might be taken up on 7th March 1961. If the Hon. Minister has no objection to that, I have no objection.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no objection, Sir. From that it is obvious that it need not be a short-notice question.

MR. SPEAKER : As a special case, we will allow. Short-notice question No. 5 will be taken up on 7th March 1961.

*Electricity for Singarathope*

* 442 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state the action taken so far to extend electricity to Singarathope in Tindivanam, South Arcot district?

THE HON. SRI V. RAMAIAH : In December 1960 the Superintending Engineer, Vellore system, sanctioned a proposal for extension of supply of electricity to 48 street lights in Singarathope street, Tindivanam Town, South Arcot district. He has also issued necessary instructions to the field staff to take up the work expeditiously.

*Bus permits*

* 449 *Q.*—SRI M. P. SARATHI: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) 1959-1960-ம் ஆண்டுகளில் முறையே புதிதாக வழங்கப் பட்ட பஸ் பர்மிட்டுகள் எத்தனை?

(இ) அவைகளில் (1) கூட்டுறவு சங்கங்களுக்கு, (2) தனி முதலாளிகளுக்கு வழங்கப்பட்ட பர்மிட்டுகள் எத்தனை ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Nnmber of stage carriage permits granted during the year :—

1959—158

1960—122

[3rd March 1961

(*b*) (1) & (2).—Number of stage carriage permits granted to Registered Co-operative Societies during the year :—

1959—7

1960—8

Number of stage carriage permits granted to private individuals during the year :—

1959—97

1960—58

**SRI S. M. ANNAMALAI:** கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கருதுகிற சர்க்கார் தனிப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சாதாரண சலுகையைவிட கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகமாகக் கொடுத்து மேலும் ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI V. RAMAIAH:** இப்பொழுது அமுலில் இருக்கும் வசதி முறைப்படி அவர்களுக்கு விசேஷ சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு மார்க்கு சிஸ்ட அடிப்படையில் கூட்டுறவு போக்குவரத்து ஸ்தாபனங்களாக இருந்தால் ஒரு மார்க்கு அதிகமாகக் கொடுத்து பிரத்யேக சலுகை கொடுக்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM : May I know, out of the new permits given to the private owners, how many were new entrants other than fleet owners?

THE HON. SRI V. RAMAIAH : I do not have those details. We have a system of issuing permits. If any route falls within a radius of 15 miles, usually it is given to new-comers.

**SRI V. K. KOTHANDARAMAN :** கூட்டுறவு சங்கங்கள் என்றால் எந்தெந்த கூட்டுறவு சங்கங்களுக்கு பஸ் பர்மிட் வழங்கப் படுகிறது ? பஸ்ஸிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களினால் நடத்தப்படும் ஸ்தாபனத்திற்கு பர்மிட் வழங்கப்படுகிறதா ?

**THE HON. SRI V. RAMAIAH:** தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க முன்வந்தால் அவர்களுக்குச் சலுகை கொடுக்கப்படும்.

**SRI N. MARUDACHALAM :** ஹரிஜனங்கள் விண்ணப்பித்தால் பர்மிட் கொடுப்பார்களா ?

**THE HON. SRI V. RAMAIAH:** ஹரிஜனங்கள் என்ற காரணத்திற்காக இப்பொழுது இருக்கும் சட்டப்படி ஒன்றும் செய்வதற்கில்லை. அவர்கள் எல்லாம் சேர்ந்து கூட்டுறவு சங்கங்கள் அமைத்தால் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் வசதிகள் அவர்களுக்கும் கொடுக்கப்படும்.

**SRI A. VEDARATHNAM:** பர்மிட் வழங்குவது மார்க் சிஸ்ட அடிப்படையிலே என்று சொன்னார்கள். அது எந்த அடிப்படையிலே அளிக்கப்படுகிறது ?

**THE HON. SRI V. RAMAIAH:** தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.



3rd March 1961]

**SRI K. B. S. MANI:** கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை கொடுப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஹரிஜனங்கள் ஏதாவது கூட்டுறவு சங்கங்கள் அமைத்து பஸ் பர்மிட்டுக்காக மனு போட்டார்களா ? அப்படியில்லையென்றால் தனிப்பட்டவர்கள் எத்தனை பேர் மனு போட்டார்கள் ?

**THE HON. SRI V. RAMAIAH:** பஸ் பர்மிட் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்பவர் ரீஜினல் டிரான்ஸ்போர்ட் அதாரடி. என்ன மனு போட்டார்கள் எப்படிப் போட்டார்கள் என்பதற்கெல்லாம் தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கப் படும்.

### *Arcade (Round Tana)*

* 450 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Electricity be pleased to state the present stage of the proposal to construct an arcade with sub-way at the Round Tana?

THE HON. SRI V. RAMAIAH : The Government have accorded administrative approval to the scheme. Detailed plans and estimates for the arcade are under preparation by the Corporation of Madras.

SRI N. K. PALANISAMI : May I know the details of the scheme?

THE HON. SRI V. RAMAIAH : I have just now stated that they are under preparation by Corporation of Madras.

SRI A. A. RASHEED : May I know what the other places in Madras City are where sub-ways with arcade will be constructed?

THE HON. SRI V. RAMAIAH : I think we are proceeding with the present scheme only. With regard to others, I have no information.

SRI K. VINAYAKAM : What are the exact buildings abutting Mount Road in Round Tana which will be affected by this sub-way? At what point this sub-way would be constructed?

THE HON. SRI V. RAMAIAH : Details are being worked out. I require a separate question for this.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is the entire expenditure met by local Government or by Corporation?

THE HON. SRI V. RAMAIAH : The expenditure during the current financial year is shared by state Government and the Corporation.

### *Mettur Tunnel Scheme*

* 468 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Sri T. S. RAMASWAMI) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Mettur Tunnel Scheme was arranged to be inaugurated by the President of India originally and was given up later.

[3rd March 1961

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the expenses incurred for the arrangements for the President's inauguration function?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

*Sales-tax*

* 512 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Industries be please to state—

(*a*) the annual sales-tax collected on glass bangles and beads for the past three years;

(*b*) whether any representation has been received from the merchants dealing in those goods for either exemption from or reduction in sales tax; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Figures are not available for the years 1957–58, and 1958–59.

1959–60—Rs. 1,10,066 for glass bangles alone.

(*b*) Yes, Sir. Representations have been received requesting exemption from sales-tax in respect of bangles; none in respect of beads;

(*c*) The representations are under the consideration of the Government.

SRI K. VINAYAKAM : Is it not a fact that glass bangles on which the rate of tax was raised from 1/2 per cent to 2 per cent and then subsequently to 6 per cent at single point, do not come under schedule I of item 54 of the Act of 1959?

THE HON. SRI R. VENKATARAMAN : It is not so. On the other hand all glass articles come under this. Therefore bangles will be covered.

SRI K. VINAYAKAM : Is it not a fact that due to representation by persons interested in this trade that this sales-tax was totally abolished in States like Madhya Pradesh, Mysore and Maharashtra?

THE HON. SRI R. VENKATARAMAN : I cannot answer questions about Madhya Pradesh and Mysore.

SRI V. K. KRISHNAMURTHY : தங்கம் மங்கையர்களுக்கு மங்கலச் சின்னமாக விளங்குவதால் இதற்கு விற்பனை வரியை அகற்ற அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி என்னமோ சங்கிலி மாதிரி இருக்கிறது. இப்பொழுது விற்பனையை அகற்றுவதற்கு உத்தேசம் இல்லை.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. the Minister aware of the fact that there is a tendency among the merchants dealing in this trade to go away from our State and establish their business



3rd March 1961]

in places like Tirupati, Chittoor and Bangalore where this commodity is exempted from taxation and in view of the fact this is a poor women's luxury?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have received some representation that on account of the imposition of single point sales-tax on bangles, there is a tendency for this trade to shift itself to other States. We are examining this question. I am told that even if they shift to other States they will have to pay 1 per cent Central tax plus 6 per cent sales tax here.

SRI K. VINAYAKAM : Sir, lastly, at least on compassionate grounds and considering this as a poor woman's luxury, will the entire Government be kind enough to reconsider this request?

THE HON. SRI R. VENKATARAMAN : It is not a question Sir, but it is only a suggestion.

*Single-teacher school.*

* 530 *Q.*—SRI S. M. ANNAMALAI : *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

*(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் தாலூகா படவேடு மதுரா தேவணைங்குளத்தில் ஓராசிரியர்-பள்ளி இவ்வாண்டு திறக்க உத்தரவாகி யிருப்பதற்கு மாறாக சாமந்திபுரத்தில் திறந்திருப் பதைப் பற்றி பொது மக்களின் ஆட்சேபணைகள் 2—6—1960-லும், 6—10—1960-லும் சர்க்காருக்குக் கிடைத்ததா?*

*(இ) அப்படியானால், அவை மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?*

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No petition, dated 2nd June 1960 was received by the Government. The objection petition, dated 6th October 1960 was however received and it was transferred to the Director of Public Instruction.

(*b*) The President, Panchayat Board has been requested to shift the school to Devanankulam village.

SRI S. M. ANNAMALAI: சென்ற சட்டமன்ற கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்தயிடத்தில் ஸிங்கிள் டீச்சர் ஸ்கூல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்று. ஆனால் அந்த ஸ்கூல் பஞ்சாயத்து போர்ட் மூலம்தான் ஆரம்பிக்கப்பட்டிருக் கிறது. பஞ்சாயத்து போர்ட் மூலம் அதை ஆரம்பித்துக் கொள்ளலாம் என்று மாவட்ட கல்வி அதிகாரி அவர்கள் உத்தர விட்டு விட்டார்கள். ஆகவே, இது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஸிங்கில் டீச்சர் ஸ்கூல் என்றும், பஞ்சாயத்து போர்டு ஸ்கூல் என்றும் மாறிச் சொல்கிற மாதிரியிருக்கிறது. பஞ்சாயத்து போர்டு ஆரம்பித்தாலும் ஒரு உபாத்தியாயர் இருந்தால் அது ஸிங்கில் டீச்சர் ஸ்கூல்தான். இனி பஞ்சாயத்து யூனியன் மூலம் பள்ளிக்கூடங்கள் நடக்கயிருப்பதால் அதில் தவறு எதுவும் இல்லை.

[3rd March 1961

*Housing schemes*

* 531 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of housing schemes for weavers in the State;

(*b*) the cost of each house under this scheme;

(*c*) the nature of financial aid given by the Government; and

(*d*) whether there is any proposal to start Housing Colonies for Weavers in Kalkulam and Vilavancode taluk, in the Kanyakumari district?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 17.

(*b*) Rs. 3,600.

(*c*) The Government meet 66 and 2/3 per cent of the cost of house as loan and the balance of 33 and 1/3 per cent of the cost as grant. Besides, loan assistance is given towards the entire cost of providing amenities such as roads, water-supply and drainage.

(*d*) No, Sir.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether the entire amount that is allotted for these schemes has been utilised?

THE HON. SRI R. VENKATARAMAN : I can give the physical target.

The number of houses sanctioned during the Second Five-Year Plan—1,630.

The number of houses completed—1,230.

About 400 houses are in various stages of construction and completion.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether any representation has been sent to the Government from Kanyakumari district with regard to the construction of houses for weavers under this scheme?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. The Government have received representations from various areas. But it depends on the availability of funds and also the number of people who come forward to put up a colony. We want at least 50 houses for a colony. As the required number of people are not forthcoming, we are not able to take them up.

SRI A. MARIAPPAN : *நெசவாளர் காலனிகளில் குடியிருப்பவர்களில் பெரும்பாலோர் அதைத் திருப்பிச் செலுத்தக் கூடிய நிலையில் இல்லாதிருப்பதால் வட்டியில்லாக் கடனுக்கு சர்க்கார் முயற்சித்ததே, அது கிடைத்ததா?*

THE HON. SRI R. VENKATARAMAN: *இல்லை.*



3rd March 1961]

SRI T. K. SUBBIAH : *நெசவாளர்களுக்குக் குடியிருப்பு மனை வாங்குவதற்காக சலுகைகள் அளிக்க சர்க்கார் முன்வருமா?*

THE HON. SRI R. VENKATARAMAN: *அந்தவிதமான திட்டம் இப்பொழுது இல்லை. ஆனால் ராஜ்ய சர்க்கார் இப்போது சென்னை நகரத்தில் பல வெளிப் பகுதிகள் வாங்கியிருக்கிறார்கள். அதில் நெசவாளர்களுக்காக ஒரு பகுதி ஒதுக்குவதாக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.*

*Weavers' Co-operative Society (Tiruppur)*

* 532 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Weavers' Co-operative Society at Tiruppur was closed; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Tiruppur Sri Kumaran Memorial Weavers' Co-operative Society was closed during the period from 14th August 1960 to 24th August 1960.

(*b*) The ex-President of the Society did not hand over charge to the new Board of Directors which was elected on 10th August 1960, as there was some difference of opinion regarding certain dues payable by the ex-President and the ex-Vice-President. The ex-President locked the Society on 14th August 1960. On the intervention of the Senior Inspector (Weavers), the Society was re-opened on 24th August 1960, when the new Board took charge.

SRI N. K. PALANISAMI: *இருக்கக்கூடிய போர்டு 8,600 ரூபாய்க்கு மேல் மோசடி செய்து அதன் பேரில் சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்து அதை மூடியது பற்றி, அதற்கு மேல் டையரக்டர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று டிப்டி ரெஜிஸ்ட்ரார் சிபார்சு செய்து இருந்து ஆறு மாதங்கள் ஆகியும் இன்னும் ஏன் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை?*

THE HON. SRI R. VENKATARAMAN : *அங்கத்தினர் அவர்கள் சொல்லும் தகவல் என்னிடம் இல்லை. அவர்கள் கேட்ட கேள்வி வேறு விஷயத்தைப்பற்றியது. அவர்களது கேள்வி, இந்த சொஸைட்டி எதற்காக மூடியிருந்தது என்று. பழைய போர்டார் சார்ஜ் கொடுக்கவில்லையென்ற காரணத்தால் மூடியிருந்தது என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் அவர்களிடம் வேறு தகவல் இருந்தால் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*Plastic Industry*

* 533 *Q.*—SRI S. RAMALINGA PADAYACHI : *கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) திருச்சி ஜில்லாவில் உடையார்பாளையம் தாலுகாவில் பிளாஸ்டிக் தொழிற்சாலை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?*

[3rd March 1961

(இ) அப்படியாயின், அதன் விபரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

**SRI S. RAMALINGA PADAYACHI:** *உடையார்பாளையம் தாலுகாவில் 30,000 ஏக்கர் வரையில் இந்த முந்திரிச் செடியிருக்கிறது. 75,000, 80,000 மூட்டை வரையில் முந்திரிக் கொட்டை கிடைக்கிறது. ஆகவே, அங்கு ஏன் ஒரு ப்ளாஸ்டிக் தொழிற்சாலை ஏற்படுத்தக்கூடாது?*

**THE HON. SRI R. VENKATARAMAN:** *நேற்றே சொன்னேன், நன்றாக வைக்கலாமென்று. யாரும் வைக்க வேண்டாமென்று சொல்லவில்லை. அதற்கு, யாராவது முன் வந்தால் சர்க்கார் உதவி செய்யும். ஒருவரும் தொழிற்சாலை வைக்க முன்வராமல் இருக்கும் போது எப்படி வைப்பது என்று புரியவில்லை.*

SRI K. R. VISWANATHAN : May I know, Sir, whether the Government will come forward to start any industrial co-operative society to extract oil from the plentiful cashewnut that is found here?

THE HON. SRI R. VENKATARAMAN : Even if it is so, somebody should come forward and must take the initiative to organise a co-operative society. Without promoters, it is not possible for the Registrar of Co-operative Societies to start the industry.

### *Workshop (Transport Department)*

* 534 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the amount allotted for the construction and equipment of the Transport Department Workshop at Rani Thottam, in Kanyakumari district;

(b) the amount spent so far;

(c) when it will start functioning; and

(d) what are the sections which are planned to commence in that workshop?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Rs. 6,20,500.

(b) Rs. 4,89,250.

(c) The electrification of workshop is pending. The workshop will start functioning as soon as the electrification work is completed and the machineries are installed.

(d) The sections that are planned to be commenced are as follows :—

Monthly maintenance section.

Chart III section.

Fitness certificate section (half-yearly and annual overhaul section).

Blacksmithy section.

Carpentry section.



3rd March 1961]

Electrical section.

Tyre retreading section.

Fuel pump calibration section.

Machine shop.

Stores. ...

SRI T. S. RAMASWAMI : The building and everything are completed. Giving of electric connection is pending for a long time. May I know, Sir, the reasons for the delay in giving power connection?

THE HON. SRI R. VENKATARAMAN : We are awaiting power connection. We will be able to get it in a short time.

SRI T. T. DANIEL : May I know, Sir, the total number of workers that will be employed in this workshop and also whether it is a fact that this is the best workshop in the whole of South India?

THE HON. SRI R. VENKATARAMAN : I thank the hon. Member, Sri T. T. Daniel for the compliment he has given. As regards the number of workers to be employed, we have not yet decided the strength of the workshop.

### *Third Five-Year Plan*

* 535 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the State outlay for the Third Five-Year Plan has been reduced by Rs. 100 crores by the Planning Commission and the Central Government; and

(b) if so, the reason therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) Taking into consideration the total resources available in the country, the plans of all States had to be pruned down. The Plan of Madras State had also to be reduced in the course of this adjustment.

SRI A. A. RASHEED : May I know, Sir, whether the Government have made any representation to the Planning Commission and the Government of India against this reduction in the State outlay?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no question of making representation against reduction. As a matter of fact, we sit with the Planning Commission and discuss and after discussion the plan was re-adjusted.

SRI A. A. RASHEED : May I know, Sir, what the schemes and projects are which were affected by this reduction in the State outlay?

THE HON. SRI C. SUBRAMANIAM : We had elaborate discussion during the discussion on the Governor's Address and we can have a discussion during the budget discussion also. I have given details in my budget speech.

[3rd March 1961

**Sri S. M. ANNAMALAI** : *மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 10,200 கோடியிருக்கும்போது 398 கோடி வேண்டுமென்று நம் மாநிலத்திற்குத் திட்டமிட்டோம். ஆனால் அவர்கள் அதில் 100 கோடி குறைத்து விட்டார்கள். இப்பொழுது அதை உயர்த்தி, 12,000 கோடியாகியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே அதையொட்டியாவது நமது மாநிலத்திற்குத் தரவேண்டிய பணத்தை மேலும் உயர்த்தவேண்டுமென்று மத்திய சர்க்காரை ஏன் இந்த சர்க்கார் வற்புறுத்தக்கூடாது?*

**The Hon. Sri C. SUBRAMANIAM:** *அங்கத்தினர் அவர்களே வற்புறுத்தியிருக்கிறார்கள். இதில் 291 கோடி என்று சொல்வது ராஜ்ய திட்டங்களுக்கு மட்டும். ராஜ்ய திட்டங்கள், மத்திய அரசாங்கத் திட்டங்கள், தனிப்பட்டவர்கள் திட்டங்கள், இவை மூன்றும் சேர்ந்துதான் 10,200 கோடி, 12,000 கோடி என்று சொல்வது. ராஜ்ய திட்டங்களை மட்டும் எடுத்துக் கொள்ளும்போது இதில் அதிகக் குறைவு இல்லை.*

*Wells*

**Mr. SPEAKER** : *கேள்வி நம்பர் 536-ம் 537-ம் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.*

* 536 *Q.*—Sri T. S. RAMASWAMI (on behalf of Sri K. SATTANATHA KARAYALAR) Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether loans for sinking deep bore-wells are given; and

(*b*) if so, the places and the basis on which they are given?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) Loans are granted in all the districts in the State except the Nilgiris and Madras up to a maximum of Rs. 4,500 per well besides Rs. 500 as subsidy which will be allowed on satisfactory completion of the well.

* 537 *Q.*—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of exploratory tube-wells proposed to be sunk in the Madras State district-war and the cost of each well; and

(*b*) whether sufficient number of power drills are available for sinking these wells?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The Madras Government propose to participate in the second phase of operations for the sinking of exploratory tube-wells by the Exploratory Tube-wells Organization of the Government of India. The number of tube-wells that will be sunk in each district is not known at present. One hundred and fifty wells are proposed to be sunk under the State Scheme during the Third Five-Year Plan; of these, 75 wells will be sunk by the Exploratory Tube-wells Organisation on behalf of the State Government and the remaining 75 wells will be sunk by the State Agricultural Engineering Branch. The



3rd March 1961]

number of wells that will be sunk in each district under the scheme has not yet been fixed. The cost of a well is expected to range from Rs. 30,000 to Rs. 60,000 according to the depth.

(*b*) So far as the Exploratory Tube-wells Organization is concerned, it has the required rigs, etc. As for the wells to be sunk by the State Agricultural Engineering Department, steps are being taken to increase the number of drills, etc., so as to enable it to undertake the programme envisaged.

Sri K. R. VISWANATHAN : May I know whether the power drills that were sought to be purchased from foreign countries have been made available to us now?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Whatever power drills we have will be made available for these purposes.

**Sri A. R. SUBBIAH MUDALIAR** : *இப்படி ஜில்லா அடிப்படையில் கொடுக்கும்போது, பஞ்சப் பிரதேசமாக இருக்கும் இடங்களைப் பார்த்தும் வரண்ட பிரதேசமாக இருக்கும் இடங்களைப் பார்த்தும் பிராஜெக்ட் இல்லாத இடங்களாகப் பார்த்தும் அந்த இடங்களுக்கு முதல் சலுகை கொடுக்க ஆலோசிக்குமா?*

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : *வறண்ட பிரதேசம், அல்லது பஞ்சப் பிரதேசம் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு சலுகை கொடுக்க முடியாது. தண்ணீர் கிடைக்க வேண்டும், அது தான் முக்கியம். வரண்ட பிரதேசமாக இருந்தாலும் தண்ணீர் இல்லாமல் இருந்தால் எந்தவிதமான பிரயோசனமும் கிடைக்காது.*

**Sri S. RAMASAMI NAIDU**: *ஆழகுழி கிணறுகள் வெட்டுவதற்கு சலுகை கொடுக்கும்போது இறவை சாதனங்கள் இருப்பதையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற நிபந்தனையைத் தளர்த்த அரசாங்கம் ஆலோசனை செய்யுமா? அதாவது பம்பு செட் வைக்க வேண்டுமென்று நிபந்தனையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தளர்த்த அரசாங்கம் ஆலோசிக்குமா?*

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : *பம்பு செட் இல்லாமல் இதைச் செய்ய முடியாது. பம்ப் செட்டைத் தாங்களே வைத்துக்கொள்ள முன் வந்தால் அதற்கு அனுமதி கொடுக்கப்படும்.*

*Travelling Allowance*

Mr. SPEAKER : As the hon. Member who gave notice of Q. No. 538 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

*** 538 *Q.*—Sri N. R. THIAGARAJAN**: *கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) 1957 ஏப்ரல் முதல் 1960 ஏப்ரல் வரையில் மதுரை ஜில்லா பிளானிங் போர்டு அண்டு டெவலப்மெண்ட் கவுன்சில்*

[3rd March 1961

கூட்டங்களில் கலந்துகொண்ட எம்.எல்.ஏ.-க்களுக்கும், எம்.பி.-க்களுக்கும் இதுவரை பிரயாணப்படி கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) அப்படியானால் இது விஷயமாய் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) No Sir, Travelling Allowance has been disbursed to all persons who have preferred their claims for attending the meetings of the erstwhile District Planning Boards and the present District Development Councils held during the period from April 1957 to April 1960. No Travelling Allowance claim relating to the period in question is pending either with the Collector or with the Government.

(b) Does not arise.

*Ancient Inscriptions*

***539 Q.—SRI A. VEDARATHNAM:** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா திருவையாற்றில் சமீபத்தில் புராதனக் கல்வெட்டுச் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டனவா ? அப்படியானால், எப்போது ? எங்கே ?

(இ) அவை பற்றிய முழு விவரம் என்ன ?

(உ) கல்வெட்டுப் பரிசோதகர்கள் அவற்றை ஆராய்ச்சி செய்தார்களா ? அதன் விவரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Yes, Sir. Some inscriptions have been recently noticed by a local scholar, in the Siva Temple at Perumbuliyur near Thiruvaiyaru.

(இ) & (உ) No expert opinion has so far been obtained. The matter has been remitted to the Government Epigraphist for India, Ootacamund. for necessary action.

*Jain idol*

***540 Q.—SRI A. VEDARATHNAM:** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, பாபநாசம் தாலூகா, முன்னியூர் கிராமத்தில் சமண சிற்பம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) அதுபற்றிய விவரமும் நிபுணர் அபிப்பிராயமும் என்ன ?

THE HOO. SRI C. SUBRAMANIAM: (அ) Yes, Sir. (இ) No expert opinion has so far been obtained. The matter has been remitted to the Superintendent, Department of Archaeology, Southern Circle, for necessary action.



3rd March 1961]

**SRI A. VEDARATHNAM:** தலைவர் அவர்களே, இங்கிருந்து கிடைத்த கல்வெட்டுகளிலிருந்து நம்முடைய சரித்திரத்திற்குப் பயன்படக்கூடிய வகையில் ஏதாவது விவரங்கள் கிடைத்ததா ? அதைப்பற்றி ஏதாவது ஆராய்ச்சி செய்யப்பட்டதா ? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன என்பதை அறிவிக்க முடியுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இன்னும் அதனுடைய விவரங்கள் தெரியவில்லை. இதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ஆர்கியலாஜிக்கல் டிப்பார்ட்மெண்ட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**SRI A. VEDARATHNAM:** பாபநாசம் தாலூகா அருகில் சமணர்களுடைய விக்கிரகம் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. இதைத் தவிர வேறு என்னென்ன விக்கிரகங்கள் கிடைத்தன ? கிடைத்த விக்கிரகத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்த நிபுணர்களுடைய அபிப்பிராயம் என்ன ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** என்னென்ன விக்கிரகங்கள் கிடைத்தன என்கின்ற விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. இதில் கிடைத்த விக்கிரகமும் ஆர்கியலாஜிக்கல் டிப்பார்ட்டுமெண்டுக்கு ஆராய்ச்சி செய்வதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

**SRI V. K. KRISHNAMURTHY:** தலைவர் அவர்களே, கல்வெட்டுகளிலிருந்து கிடைக்கும் விவரங்களை நூல் வடிவமாக்க பல்கலைக் கழகமாவது அரசாங்கமாவது முன் வருமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இதைப்பற்றி இப்போது இந்து மத பரிபாலன போர்டும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதைத் தவிர அரசாங்கமும் தனியாக எந்த அளவுக்கு இதில் முயற்சி எடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. நமக்கு என்று தனியாக ஒரு ஆர்கியலாஜிக்கல் டிப்பார்ட்மெண்ட் ஏற்படுத்தவும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

**SRI A. VEDARATHNAM:** இப்போது நமக்குக் கிடைத்திருப்பதைத் தவிர இன்னும் சின்னங்களையும் கல்வெட்டுகளையும் வெட்டி எடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** எண்ணெய், மற்றும் ஏதாவது உலோகங்கள் கிடைக்குமா என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்ற நேரத்தில் இம்மாதிரிப்பட்ட சின்னங்கள் கிடைத்தால் அதைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யப்படும்.

SRI S. RANGANATHA MUDALIAR: Is there any proposal to start an Archaeological Department for our State and if so, may I know how long will it take to form such a Department?

THE HON. SRI C. SUBRAMANIAM: I have already stated that attempts are being made in that direction. However, I am unable to say just now how soon it would be set up?

[3rd March 1961

*Handloom cloth*

*541 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நட்சத்திரக் குறியிடாத கேள்வி எண் 300-க்கு 1960-ம் ஆ. ஏப்ரல்மீ 20-ல் அளித்த பதிலையொட்டி கைத்தறித் துணி ஏற்றுமதி குறைந்து வருவதைப் போக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : The fall in the export of handloom fabrics is due to competition from other countries in our traditional markets, production of inferior quality cloth by our handlooms, changes in fashion and price variation. Government cannot take any measure against competition from other countries in the foreign markets. Following measures have however been taken by the Government of India to facilitate larger exports of handloom cloth :—

(i) Several export promotion incentive schemes have been introduced under which manufacturers and exporters are permitted to import certain percentage of raw materials required for handloom industry against export of handloom cloth.

(ii) A quality marking scheme has been introduced to ensure the maintenance of standards of quality of cloth intended for export.

(iii) A scheme for issue of certification Trade Mark in respect of handloom cloth produced in South India and exported, has been introduced.

(iv) A delegation sponsored by the Madras State Handloom Weavers' Co-operative Society visited the East Asian Countries in September 1960 to explore markets for Bleeding Madras and other varieties of handloom fabrics. The report submitted by the delegation is under examination of Government.

(v) The Government of India had sent a delegation to West African countries to explore markets for Indian handloom fabrics. The report of the delegation is awaited by the Government of India.

SRI S. M. ANNAMALAI: ஸார், பிற நாடுகளில் எந்தெந்த இடங்களில் நமக்கு மார்க்கட்டுகள் இருக்கின்றன என்பதைச் சொல்ல முடியுமா? நமது வியாபாரிகளால் அனுப்பப்படும் துணியின் தரம் குறைவாக இருப்பதால்தான் பிற நாட்டின் மார்க்கட்டுகளில் போட்டிபோட முடிவதில்லை என்று தெரிகிறது. ஆகவே அசாங்கம் முன் வந்து தரக் கட்டுப்பாட்டைக் கொண்டு வர ஆலோசிக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற விவரம் எல்லாம் என்னுடைய முதலாவது பதிலில் இருக்கின்றது.



61377

3rd March 1961]

SRI V. SUBBIAH: இலங்கையில் லுங்கி போ[illegible]கங்களுக்கு அந்த அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. இத[illegible]ணமாக நம்முடைய துணியை ஏற்றுமதி செய்ய முடிவதில்[illegible] அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN: ஒவ்வொரு சுதந்திர நாடும் தங்களுடைய வளத்தைப் பெருக்கிக்கொள்வதற்காகப் பல தடைகளை விதிக்கலாம், அதை நம்மால் தடுக்க முடியாது. அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் மூலம் தான் இதைப்பற்றி நடவடிக்கை எடுக்க முடியும். அவ்விதம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். நம்முடைய பொருட்களை அவர்களுக்கு ஏற்றுமதி செய்யவும் அவர்களுடைய பொருட்களை நமக்கு அனுப்பவும் டிரேட் அக்ரிமென்ட் செய்கிறோம். இவ்விதமாகச் செய்யப்படுகின்ற டிரேட் அக்ரிமென்டில் இதையும் சேர்த்துக் கொள்ள மத்திய அரசாங்கம் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI: ஸார், மில் துணிகளுக்கும் கைத்தறித் துணிகளுக்கும் இருக்கின்ற போட்டியைத் தவிர்க்க, அகில இந்திய ரீதியாக, மில் துணிக்கு 400 கோடி கெஜமும், கைத்தறிக்கு 300 கோடி கெஜமும் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்தக் கேள்வி கைத்தறித் துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாவதைப் பற்றியது. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் விவரங்கள் இப்போது என்னிடமில்லை.

VRI, 3, N61

SRI V. K. KOTHANDARAMAN: தரக் குறைவு இருப்பதால் தான் வெளிநாடுகளில் மார்க்கட்டுகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே தரக் குறைவு இல்லாத வகையில் கைத்தறித் துணிகளை மாகாண கைத்தறி சொஸைட்டியோ அல்லது அகில இந்தியக் கூட்டுறவு சொஸைட்டியோ பொறுப்பெடுத்து, நல்ல ரகத் துணிகளைத் தயார் செய்து ஏற்றுமதி செய்ய அரசாங்கம் முன் வருமா?

N62.4035

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த ராஜ்யத்திலுள்ள வியாபாரிகளும் சுதந்திரமாக நடத்தவேண்டும் என்ற அடிப்படையில்தான் நாம் அனுமதித்துக்கொண்டிருக்கிறோம். சர்க்காரே **Monopoly** -யாக இருக்கவேண்டும் என்பது நமது விருப்பமல்ல. வெளிநாடுகளிலிருந்து ஸ்டேட் சொஸைட்டிகளுக்கு ஆர்டர் கிடைக்கிறது. தனிப்பட்ட சொஸைட்டிகளுக்கும் ஆர்டர் கிடைக்கிறது. தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் ஆர்டர் கிடைக்கிறது. பொதுவாக தரக் குறைவு இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதை நீக்குவதற்கு 'க்வாலிட்டி மார்க்கிங் ஸ்கீம்' ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் பண்டங்கள் வாங்கினால் இந்தமாதிரியான தரக் குறைவு ஏற்படாது.

SRI K. VINAYAKAM : Sir, is it a fact that there is no .00 a.m.
serious competition felt for specialised goods like Madras lungis, Madras handkerchiefs and Bleeding Madras and if so, why should

there be a fall in exports in these three categories apart from other handloom goods which are beset with difficulty, and also what steps have been taken by the Government to maintain at least the standard of exports in these categories which I have mentioned?

THE HON. SRI R. VENKATARAMAN : So far as Bleeding Madras is concerned, the market has been ruined by bad quality. Similar as handkerchiefs are concerned there is a competition form mill-made goods in West Africa. So far as lungis are concerned there is protection now imposed by Indonesia and Ceylon.

*Black diamond*

* 542 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to exploit black diamond found in Pattiveeranpatti, Madura district?

THE HON. SRI R. VENKATARAMAN : No occurrence of diamond is reported in this area. Hence the question of exploitation does not arise.

*Good Attendance Allowance*

* 543 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any of the technical staff amongts the transferred personnel of the Transport Department have been getting the good attendance allowance at any time; and

(*b*) whether this allowance has been stopped; if so, from when?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir. They were getting a ' Good Attendance Allowance ' of Rs. 5 (Rupees five) per mensem.

(*b*) No, Sir. An Attendance Bonus Scheme has been introduced in the State Transport Department with effect from 1st October 1960. Under this Scheme, the technical staff including the transferred personnel are paid an attendance bonus of Rs. 5 per mensem in lieu of the 'Good Attendance Allowance.'

*Milk*

* 544 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that milk from Madhavaram Milk Project is distributed to the consumers in bottles of unequal sizes; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Distribution of milk under the Madras Dairy and Milk Project is being made in ½ and ¼ litre standard bottles with effect from 1st October 1960.

SRI A. A. RASHEED : Has the attention of the Government been drawn to the criticism in the English dailies that milk has been supplied in bottles of unequal sizes?



THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already stated that the milk is distributed in ½ and ¼ litre standard bottles with effect from 1—10—1960. Before that, milk was distributed in ½ litre and 1 litre standard bottles but ½ litre bottle would hold 1·1 lb. of milk. Therefore, to avoid loss to the Government, the Milk Factory has been instructed to fill 1 lb. of milk. So, there is no basis for the criticism.

SRI A. A. RASHEED : May I know whether the Government have taken any steps to get enough bottles of equal sizes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot say that the Government have got enough number of bottles. To the extent it is available it will be distributed.

*Sales-tax*

* 545 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to axempt the following articles from sales tax—

(i) Mudpots manufactured by co-operative societies;

(ii) ready-made garments;

(iii) articles like quilts and pillows; and

(iv) biscuits and cakes (unpacked)?

THE HON. SRI R. VENKATARAMAN : The answer to this question was prepared on 25th January 1961. It reads as follows :—

(i) to (iv) Since the question anticipates the Budget proposals, Government decline to answer the question.

*Railway track (Tambaram-Villupuram)*

* 546 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாம்பரம்-விழுப்புரம் ரயில் பாதையில் எந்த மின் சாரத்தை உபயோகிப்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது? ஏ.ஸி.யா? டி.ஸி.யா?

(இ) இதனால் ஏற்படக்கூடிய அனுகூலமென்ன?

(உ) எப்போது இவ்வேலை துவக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Our information is as follows :—

(*a*) The electrification will be done on the A.C. system of traction.

(*b*) The A.C. system of traction has been found to be more economical in first cost and running costs. The A.C. locomotives possess superior qualities especially in starting heavy loads.

(*c*) The work on the field is expected to be commenced by the middle of 1961.

SRI A. VEDARATHNAM: இந்த வேலையை எவ்வளவு காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்று ஏதேனும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா? அப்படியானால் அந்தக் காலவரையறை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: 1963-ம் ஆண்டு முடிவிற்குள் வேலையெல்லாம் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*Elephant*

* 547 *Q.*—SRI N. K. PALANISAMI: SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the public of Pulliangudi, Tirunelveli district, regarding the growing elephant menace;

(*b*) if so, the action taken thereon; and

(*c*) whether any casualty had occurred due to this menace?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes Sir.

(*b*) Immediate action was taken by the Forest Department to scare away the elephants by beat of drums and firing of crackers, etc. There was no further complaint from the villagers about the elephant menace.

(*c*) One of the women who was attacked by an elephant subsequently died in the Hospital.

SRI A. A. RASHEED: What is the total damage caused to the crops by elephant menace?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not have with me an assessment of the actual damage that has been caused. There was damage to palmyrah trees and some field crops like cotton in the area adjoining Pulliangudi.

SRI N. MARUDACHALAM: ஸார், மேற்கு வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் உள்ள கிராமங்களில் யானை உபத்திரவம் அதிகமாக இருக்கிறது என்று விவசாயிகள் விண்ணப்பித்திருக்கிறார்களா? அப்படியானால் அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஆனால், யானைகளைப் பொறுத்த மட்டில் அவைகளுக்கு மொழி வேற்றுமை இல்லை. மலையாள யானைகள் வருகின்றன. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

*Compulsory Education*

* 548 *Q.*—SRI T. S. RAMASAMI: SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) in how many centres compulsory free education has come into force this year;

(*b*) the number of additional teachers employed: and

(*c*) the additional expenditure incurred thereby this year?



THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) In about 3,400 villages, Sir.

(*b*) 2,875 teachers may be appointed.

(*c*) The estimated expenditure during the current year will be of the order of Rs. 24 lakhs.

* 549 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கட்டாய ஆரம்பக்கல்வி இம்மாநிலத்தில் மூன்றில் ஒரு பகுதியில் முதலில் துவக்க இருக்கும் பகுதி எது?

(இ) எப்போது முதல் அமுலுக்கு வரும்?

(உ) பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்கள் விஷயத்தில் அவர்களைத் தூண்ட என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) In about 3,400 villages Sir. The places selected will be notified in the Gazette.

(இ) From 1960-61, Sir.

(உ) The penal provisions in the Madras Elementary Education Act, 1920, will be enforced. Apart from these, there will be inducements such as free supply of midday meals, books and slates.

SRI A. A. RASHEED: May I know whether enough number of training schools for teachers have been opened?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir.

SRI T. T. DANIEL: In view of the fact that there should be free compulsory education for all children within the age group 6-11, according to the provisions of the Constitution, may I know whether the Government have estimated the total expenditure which they will have to incur if free compulsory education is to be enforced throughout the State? Also may I know the target year before which our Government will be able to enforce the scheme for free compulsory education?

THE HON. SRI C. SUBRAMANIAM: I am sure hon. Members are aware that the targets have been revised. During the Third Plan period, children of the age-group 6-11 would be compulsorily brought into the schools and the children of the age-group 11-14 may be brought into the school during the Fourth Plan period. Estimates have been framed for the purpose of bringing all those children into the school during the Third Plan period and allotment also has been made in the Third Plan.

SRI A. VEDARATHNAM: கட்டாயக் கல்வி ஆரம்பித்த போதிலும் கூட, பல பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புவதில்லை, வறுமை காரணம் என்று மதிய உணவு அளிப்பதாக

[3rd March 1961

அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது மாத்திரமல்லாமல் இப்போது கல்விச்சாலைகளில் போதிக்கப்படுகிற கல்வி தங்கள் தொழிலுக்குப் பயனற்றதாக இருக்கிறது, பள்ளி செல்வதால் தொழிலில் வெறுப்பு வந்துவிடுகிறது என்று கருதுவதால் அனுப்பாமல் இருக்கிறார்களே, அவர்கள் விஷயத்தில் தொழிலில் தேர்ச்சி அளித்து அதில் கவர்ச்சி உண்டாகும்படி செய்ய அரசாங்கம் திட்டம் வகுக்குமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்வதில் பிரயோசனம் இருக்காது. கல்வி கற்பதால் தொழிலில் இஷ்டமில்லாமல் போவது என்பது பழங்காலத்தில். முன்பு 8-வது படித்துவிட்டால்தான் அதிகம் படித்து விட்டதாக நினைத்துக்கொள்வான். ஆனால் இப்போது எல்லோரும் 8-வது படிக்கும்போது—அவர்கள்தான் மிகவும் குறைவாகப் படித்தவர்கள் என்று இருக்கும்போது—தானே வேலை செய்யவேண்டிய நிலை ஏற்படும்—அவர்கள் இஷ்டப்பட்ட வேலையை எடுத்துச் செய்யவேண்டி வரும்.

**SRI V. K. KRISHNAMURTHY:** ஸார், இந்தக் கல்வி முறையில் வர்ண பேதத்திற்கு இடமில்லாமல் சரியான முறையில் எல்லோருக்கும் நல்லதொரு சந்தர்ப்பத்தை உண்டாக்க அரசாங்கம் முன்வருமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இப்போது ஜாதி பேதம், நிற பேதம் இல்லாமல் கல்வி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது எந்த பேதமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**SRI K. B. S. MANI:** கட்டாயக்கல்வித் திட்டத்தைப் பரப்புவதற்கு சர்க்கார் எடுத்துள்ள கிராமங்கள் எந்தெந்த மாவட்டங்களில் என்று தெரிவிக்க முடியுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** எல்லா மாவட்டங்களிலும் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : Whereas the City of Madras has been declared long ago as an area for the introduction of free compulsory elementary education, how does the Hon. Minister account for the fact that more than 35 per cent of the school-going children have not yet been brought under the scheme of free compulsory education?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think the hon. Member is correct. Thirty-five per cent relate to the whole State average. In the City it cannot be the same percentage. It should be more than the average.

SRI A. A. RASHEED : Is there any proposal to give free books, slates and note-books to these children in the compulsory areas?

THE HON. SRI C. SUBRAMANIAM : Those things also have to be given to the poorer sections of the community.



3rd March 1961]

**SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM :** தலைவர் அவர்களே, இம்மாதிரியான கட்டாயக் கல்வி சொல்லிக் கொடுக்கக் கூடிய இந்தப் பகுதிகளிலே பெண்களுக்கும் சரியான சதவிகிதம் கொடுக்கப்படுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இது எல்லாக் குழந்தைகளுக்கும் கொண்டுவரப்படுகிறது என்று சொல்லும்போது, பெண்களும்தான் வந்து சேரவேண்டும். அப்படி எல்லாக் குழந்தைகளும் சேர்க்கப்பட்ட பிறகு, கணக்குப் பார்த்தால் ஆண்களைவிட பெண்கள்தான் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பார்களென்று நம்புகிறேன்.

*Co-operative Farming*

* 550 Q.—SRI A. A. RASHEED :
SRI N. K. PALANISAMI :
SRI A. VEDARATHNAM :
} Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal ta start mechanised farming on co-operative basis; and

(b) if so, where and when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A proposal for starting mechanised farming in the available waste lands of Attur taluk in Salem district is under the consideration of the Government. But it is too early to say whether it would be started on Co-operative basis.

SRI A. A. RASHEED : Since the Government believe in large-scale mechanised farming, may I know the reason for fragmenting the lands by the Land Ceiling Bill?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Government do not find any difficulty in reconciling one with the other.

**SRI N. K. PALANISAMI:** ஸார், பட்ஜெட் பிரசங்கத்தில் இதைப்பற்றி ஒரே ஒரு வரிதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே சர்க்கார், சுதந்திரா பார்டி செய்யக்கூடிய கிளர்ச்சி......

MR. SPEAKER : The Hon. Member is going away from the main question. He is mentioning about some party. We are not concerned with any party so far as this question is concerned. The question is whether there is any proposal to start mechanised farming on a co-operative basis. How can the Hon. Member talk about a party?

**SRI N. K. PALANISAMI:** ஆகவே, இப்போது கூட்டுறவு பார்மிங் இந்த முறையிலே கடைப்பிடிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** பட்ஜெட் பிரசங்கத்திலே ஒரே ஒரு வரி இருந்தாலும், கனம் அங்கத்தினர் அவர்கள் அதைப்பற்றி தன்னுடைய விவாதத்திலே அதிகம் பேசலாம். அதற்கு மேலும் அரசாங்கம் விளக்கும்.

[3rd March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரே ஒரு வரிதான் போடப்பட்டிருக்கிறது என்றாவது சொன்னாரே, ஒன்றுமே போடவில்லை என்று சொல்லாமல். (சிரிப்பு.)

SRI A. VEDARATHNAM: இந்த மெக்கனைஸ்ட் பார்மிங் இதற்கு முன் எங்காவது பரீட்சார்த்தமாக நடத்தப்பட்டு இருக்கிறதா? அப்படி இருந்தால், அது எங்கே நடத்தப்பட்டிருக்கிறது? அதன் பலன் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பெரிய அளவிலே இந்த மெக்கனைஸ்ட் பார்மிங் இதுவரையில் பண்ணவில்லை. ஆனால் நிலத்தை டிராக்டர்களைக் கொண்டோ, புல்டோசர்களைக் கொண்டோ திருத்துவதெல்லாம் மெக்கனைஸ்ட் பார்மிங்கைச் சேர்ந்ததுதான். மண் அரிப்புத் தடை வேலை செய்வதுகூட ஓரளவு மெக்கனைஸ்ட் பார்மிங்தான். இதிலே இப்போதுள்ள பிரச்னை என்னவென்றால், ஒரே பிளாக்காக பெரிய நிலப்பரப்பு கிடைத்தால், பெரிய பண்ணையாக ஏற்படுத்தலாம் என்பதுதான்.

SRI M. R KANDASWAMI MUDALIYAR, ஸார், இந்தக் கூட்டுறவுப் பண்ணையில் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் எந்த முறையைக் கையாண்டு வருகின்றார்கள் என்பதைச் சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மெக்கனைஸ்ட் முறை என்பது ஒன்று. கூட்டுறவு முறை என்பது மற்றொன்று. கூட்டுறவு முறையில் செய்ய முடியுமா என்பது இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதனால், இதற்குள்ளாகவே நான் விவரங்களைச் சொல்வதற்கில்லை.

SRI A. A. RASHEED : What is the extent of land that will be brought under mechanisation? Have the Government received any machines from Russia in this Respect?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We have not yet received any machinery for this purpose from any country. The whole question depends upon the extent of land that is available as a block. That is being examined now.

SRI A. R. SUBBIAH MUDALIAR : இந்தத் திட்டத்திற்கு சுமார் எவ்வளவு செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது பரிசீலனை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும்போது, எப்படி மதிப்பீட்டைச் சொல்ல முடியும்?

SRI V. K. KOTHANDARAMAN: சார், துண்டு துண்டாக இருக்கக்கூடிய நிலங்களை ஒன்று சேர்த்து, கூட்டுறவுப் பண்ணை முறையிலே விவசாயம் செய்வதற்கு விவசாயிகள் முன் வந்தால், அவர்களை ஒன்று சேர்த்து கூட்டுறவுப் பண்ணை நடத்துவதற்கான சலுகை காட்டுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?



3rd March 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது எந்தெந்த இனங்களை எப்படி சாகுபடிக்கு சரிவர கொண்டு வருவது என்பதுதான் பிரச்னை. ஆகவே, இந்தப் பிரச்னை பரிசீலனை செய்யப்பட்டு முடிந்த பிறகு இதுபற்றிச் சொல்வதற்கு முடியும்.

SRI A. VEDARATHNAM: குறைந்தபட்சம் எத்தனை ஏக்கர்கள் இந்த முறையிலே பண்ணை அமைப்பதற்குத் தேவைப்படும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஐந்து ஏக்கர்களிலே கூட இந்த முறையிலே பயிர் செய்யலாம். இதை வைத்துக் கொண்டு உழுதால், அதுவும் மெக்கனைஸ்ட்தான். பெரிய அளவிலே 10,000 ஏக்கர் இருந்தால் செய்யலாம். நான் அமெரிக்க நிபுணர்களிடம் சமீபத்திலே பேசிக்கொண்டு இருந்தபோது, 5,000 ஏக்கரிலே கூட செய்யலாம் என்று அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

SRI T. IRUSAPPAN: தலைவர் அவர்களே, ஆத்தூர் வட்டாரத்திலே எத்தனை கூட்டுறவு ஹரிஜன காலனித் திட்டங்கள் இதிலே ஈடுபட்டிருக்கின்றன? அவைகள் இப்போது எடுக்கப்படுமா அல்லது எடுக்கப்படாதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஹரிஜனங்கள் விவசாயம் செய்வதற்கு முன்வந்தால், கூட்டுறவு முறையிலே விவசாயம் செய்ய வசதி அளிக்கப்படும், அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தாலுகாவிலே முன்பு எக்ஸ்-சர்வீஸ் மென்களுக்கு இம்மாதிரியான வசதி அளிக்கப்பட்டு, அங்கு சரிவர நடைபெறவில்லை.

*551 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவுப் பண்ணையை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

According to the decision of the Government of India on the report of the Working Group on Co-operative Farming, 3,200 Co-operative Farms will be organized during the Third Five-Year Plan period in pilot project areas.

In pursuance of this decision the Sub-Working Group on Co-operation consisting of the representatives of Planning Commission, State Government, etc., has approved the provision of a sum of Rs. 20 lakhs for the organization of 12 Pilot Projects during the Third Five-Year Plan period in this State. During 1961–62, three Pilot Projects are proposed to be organized. Each project will consist of 10 societies preferably within a block. Details are yet to be worked out.

[3rd March 1961

Co-operative Farming Societies will also be organized in non-pilot project areas wherever feasible. The expenditure on such schemes will be outside the Plan ceiling.

**SRI S. M. ANNAMALAI:** ஸார், இந்தக் கூட்டுறவுப் பண்ணைகளை விஸ்தரிப்பதில் சர்க்காருடைய நிலையான கொள்கை என்ன? இரண்டு ஆண்டுகளாக இந்த சர்க்காரால் கூட்டுறவுப் பண்ணைகளைப் பற்றி அதிகமாகப் பேசப்பட்டு வந்தது. இப்போது நாளாவட்டத்தில் இந்த விஸ்தரிப்பு விஷயத்தில் உற்சாகம் காட்டப்படவில்லை என்பது உண்மையா? எல்லா நிலங்களையும் கூட்டுறவுப் பண்ணையில் கொண்டு வருவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள்?

**THE HON. SRI R. VENKATARAMAN:** கனம் அங்கத்தினர் பட்ஜெட் பிரசங்கம் செய்கிறார். இதைப்பற்றி பட்ஜெட் விவாதத்தில் தம்முடைய கருத்தைத் தெரிவித்தால், அதற்குத் தகுந்த பதிலை கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொடுப்பார்கள்.

**SRI A. R. SUBBIAH MUDALIAR** ஜாயிண்ட் கோவாப்பரேடிவ் பார்மிங் வேண்டும் என்று எத்தனை மனுக்கள் தனிப்பட்டவர்களிடமிருந்தும், நான்கைந்து பேர்கள் சேர்ந்தும் வந்திருக்கின்றன? அவைகளில் இன்னும் எத்தனை பெண்டிங்காக இருக்கிறது? எத்தனை மனுக்கள் சென்ற வருஷ காலத்தில் பரிசீலனை செய்யப்பட்டிருக்கின்றன?

**THE HON. SRI R. VENKATARAMAN:** மனுக்கள் ஏராளமாக வந்திருக்கின்றன. ஆனால் இதிலே கஷ்டம் என்னவென்றால், முதலிலே 10 பேர்கள் ஒன்று சேர்ந்து மனுக்கள் போட்டு விடுகிறார்கள். அதற்குப் பிறகு, நம்முடைய கூட்டுறவு ரிஜிஸ்திரார்கள் நேரிலே சென்று விசாரிக்கும்போது, இரண்டு மூன்று பேர்கள் சற்று இப்படி மாற்றி அமைக்கவேண்டுமென்று தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லுகிறார்கள். அதனால் அவர்கள் எல்லோரும் சேர்ந்து அமைப்பதில் காலதாமதம் ஆகிறது. சர்க்காருக்கு வரும் மனுக்களுக்கு மாத்திரம் குறைவில்லை.

**SRI T. R. RAMAMIRTHA THONDAMAN:** ஸார், இந்தக் கூட்டுறவு சாகுபடியாளர்கள் சார்பில் இதுவரையில் நல்ல அம்சங்கள் ஏற்பட்டு இருக்கிறது. அந்த முறையிலே கூட்டுறவு முறையில் சாகுபடி செய்வதற்கு விவசாயிகளிடமிருந்து மனுக்கள் பல வந்தாலும்கூட, அதற்குரிய நிலங்கள் அவர்களுக்குக் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதுமாதிரி கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காகவும், விவசாயிகளுக்கு நிலங்கள் கிடைப்பதற்கும் மடாலயங்களிலிருந்தும், தேவஸ்தானங்களிலிருந்தும், நிலச்சுவான்தார்களிடமிருந்தும் சர்க்கார் உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு முயற்சி செய்வார்களா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** கனம் அங்கத்தினர் தாங்கள் நடத்தக்கூடிய கூட்டுறவுப் பண்ணையின் அனுபவத்தை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். கூட்டுறவுப் பண்ணை என்று சொன்னால், அவரவர்களுடைய நிலங்களைச் சேர்த்து ஒன்றாக அமைப்பது என்பது பொருள். ஆகவே அந்தவிதமாக ஸ்தாபனத்தை அமைத்து வருகின்றபோது, இப்படி நிலத்தை எடுத்துக் கொள்வதற்கான அத்தியாவசியமே ஏற்படாது. டெனண்ட் பார்மிங் சொஸைடி அமைப்பது என்பது தான் நம்முடைய பிரச்னையாக இருக்கிறது. அதையும் கடந்த இரண்டு ஆண்டுகளாக நாம் ஏராளமாகச் செய்து வந்திருக்கிறோம். தஞ்சை ஜில்லாவில் 67 கூட்டுறவு டெனண்ட் பார்மிங் சொஸைடிகள் ஏற்படுத்தப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன.



3rd March 1961]

**SRI S. M. ANNAMALAI:** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்போகும் கூட்டுறவுப் பண்ணைகளில் 'ஜாயிண்டு பார்மிங் சொஸைடீஸ்' எத்தனை, 'டெனண்ட் பார்மிங் சொஸைடீஸ்' எத்தனை என்று சொல்ல முடியுமா? அவைகளை மேலும் மேலும் ஊக்குவிக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா? சர்க்கார் இதில் அதிக கவனம் செலுத்தவில்லை என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** 'ஜாயிண்டு பார்மிங் சொஸைடீஸ்' எவ்வளவு, 'டெனண்டு பார்மிங் சொஸைடீஸ்' எவ்வளவு என்று இப்பொழுது பிரித்துச் சொல்ல முடியாது. ஏனென்றால் எல்லாம் கோவாப்பரேடிவ் பார்மிங்கின் கீழ் வரும். எந்த முறையில் கோவாப்பரேடிவ் பார்மிங் நடத்த முன்வருகிறார்களோ, அதன்படி இதை நாம் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். அதில் சர்க்காருக்கு ஊக்கம் இல்லை என்று சொன்னால், அதை ஒரு 'கிரிடிஸிஸமாக' 'பட்ஜெட் ஸ்பீச்சில்' சொல்லலாம். அதற்குப் பதில் கிடைக்கும்.

*Roads (Kanyakumari district)*

* 552 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the amount allotted in the Second Five-Year Plan for the formation of new roads in the Kanyakumari district;

(*b*) whether the whole amount has been spent; and

(*c*) if not, the reasons thereof?

THE HON. SRI P. KAKKAN: (*a*) A provision of Rs. 10.49 lakhs was made in the Second Five-Year Plan for formation of new roads in Kanyakumari district against which schemes costing Rs. 9·11 lakhs have bkeen sanctioned. The budget allotment so far made for these schemes is Rs. 4·56 lakhs.

(*b*) Only Rs. 1.83 lakhs has been spent.

(*c*) The short-fall is due to difficulties encountered in tho acquisition of lands for New Formation Works. In view of this, the Government have permitted the Chief Engineer to take up six blacktop works costing Rs. 6·38 lakhs in order to spend the budget allotment in full. The remaining New Formation works will be taken up after completion of land acquisition proceedings.

*Satellite towns*

* 553 *Q.*—SRI A. A. RASHEED
SRI N. R. THIAGARAJAN } Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal for the creation of "Satellite Towns" near Madras ?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no proposal to set up 'Satellite' towns but two proposals for developing 'neighbourhood' in Madras are under implementation.

SRI A. A. RASHEED : What is the population that will be settled in these neighbouring towns and what is the Government expenditure on these neighbouring towns ?

THE HON. SRI R. VENKATARAMAN : The area for the West Madras neighbourhood will be 1,200 acres and the area for Vyasarpadi neighbourhood will be 1,000 acres, and naturally after giving due allowance for roads, and other facilities, such as park, playgrounds, etc., the rest will be available for distribution to the people. The cost of this will be estimated at five crores of rupees, of which the Government will give one crore and some money will be collected from the people and used over and over again.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : What exactly is the difference between a neighbouring town and a satellite town? What is the extra cost that will be involved for establishing satellite towns ?

THE HON. SRI R. VENKATARAMAN : Satellite town is one which is started outside the municipal limits. For instance, if we develop Tambaram, it will be a satellite town. Neighbouring town is one which is within the City and developed area which is on the fringe and sometimes which is just a little beyond the City municipal limits. In the matter of giving amenities to neighbouring towns reliance is placed on the City facilities like drainage, water-supply, etc. In a satellite town there must be independent sources of water-supply, drainage and other facilities.

SRI A. A. RASHEED : May I know, Sir, whether the Government have received any aid or grant from the Central Government for these neighbouring towns?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes. The Central Government do give us a loan for the development of these neighbourhood towns.

*Tobacco*

MR. SPEAKER : We shall take up the next two questions (Nos. 554 and 555) together.

*** 554 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI N. R. THIAGARAJAN ):** *கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) நமது ராஜ்யத்தில் புகையிலை எத்தனை ஏக்கரில் பயிரிடப்படுகிறது ?*



*(இ) எங்கெங்கு புகையிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது ?*

*(உ) புகையிலைப் பயிர் வளர்ச்சிக்கு சர்க்கார் செய்யும் உதவிகள் என்ன ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) About 30,000 acres during 1960–61.

(*b*) Raw tobacco is not exported from this State to foreign countries. It is however sent to other States in India, namely, Andhra Pradesh, Maharashtra, Uttar Pradesh, West Bengal, Kerala and Mysore.

(*c*) A comprehensive scheme for development of tobacco is functioning in this State from 30th August 1960. The object of the scheme is to improve the yield and quality of chewing and smoking tobacco by imparting knowledge to tobacco growers by propaganda and demonstration in the scientific methods of cultivation, harvesting, curing, processing, handling, grading, storage and disposal. The scheme also contemplates payment of subsidies to growers for purchase of manures, plant protection measures, and conduct of demonstration plots. Further, steps are also being taken to organise co-operative societies for storage and marketing of cured produce.

* 555 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether tobacco grown in our State is exported;

(*b*) if so, the quantity exported during the past two years and its quality; and

(*c*) whether there are any proposals for improving the present varieties grown in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Tobacco grown in this State is not exported to foreign countries, but is exported to other States in India.

(*b*) Jaffna chewing tobacco and Vattakappal chewing tobacco and raw tobacco are exported to other States. The quantity sent out during the past two years are as follows :—

1957—6.2 million lb.

1958–59—5·2 million lb.

(*c*) The Indian Central Tobacco Committee is running a Research Station at Vedasandur in Madurai district for improving the existing varieties of cigar and cheroot tobacco grown in this State.

A comprehensive scheme for the development of tobacco in the entire State is functioning from 30th August 1960. The object of the scheme is to improve the yield and quality of chewing and smoking tobacco by imparting knowledge to tobacco growers by propaganda and demonstration of the scientific methods of cultivation, harvesting, curing, processing, handling, grading, storage and disposal.

[3rd March 1961

**SRI K. SATTANATHA KARAYALAR :** நமது மாகாணத்தில் வளர்க்கக்கூடிய தகுதியான ஒரு தரத்தை ஏதாவது ஆராய்ச்சி மூலமாகக் கொண்டு வருவதற்கு உள்ள முயற்சி நடைபெறுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A scheme for the improvement of Meenampalayam (chewing) tobacco at Bhavanisagar, Coimbatore district, financed by the Indian Central Tobacco Committee functioned in this State from 1st September 1956 to 31st August 1960.

**SRI R. KRISHNASAMI NAIDU :** கனம் சபாநாயகர் அவர்களே, புகையிலைப் பயிர் வளர்ச்சிக்காக சர்க்கார் செய்யும் பல உதவிகளிலும் விளம்பரத்திலும் கூட நல்ல தரமான புகையிலையை உபயோகப்படுத்தும்படியான விளம்பரமும் அதில் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** புகையிலை உபயோகப்படுத்துவதற்கு விளம்பரம் தேவையில்லை என்று நான் நினைக்கிறேன்.

**SRI A. VEDARATHNAM :** வெளி நாடுகளிலிருந்து நம்முடைய நாட்டிற்கு 'சூயிங் டுபாகோ' நிறைய இறக்குமதி செய்யப்படுகிறதே? அந்தத் தரத்தை நம்முடைய நாட்டிலே வதற்கு அரசாங்கம் ஏதேனும் முயற்சி எடுத்து வருகிறார்களா ? வதற்கு அரசாங்கம் ஏதேனும் முயற்சி எடுத்து வருகிறார்களா ? அப்படியானால் தயவுசெய்து அதன் விவரத்தை அறிவிக்க முடியுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** புகையிலையின் தரத்தை உயர்த்துவதோடு, புகையிலை அளவையும் அதிகப்படுத்துவதற்கு இப்பொழுது பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**SRI T. S. RAMASWAMI :** கன்யாகுமாரி ஜில்லாவில் சென்ற 10, 15 ஆண்டுகளாக யாழ்ப்பாணம் புகையிலை நல்ல முறையில் பயிரிடப்பட்டு வருகிறது. இப்பொழுது அங்கு அதற்கு ஒரு நோய் ஏற்பட்டிருக்கிறது. அதை அகற்றுவதற்கு அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A scheme was under execution in Kanyakumari district for the development of tobacco in this State. The scheme contemplated to extend the area of tobacco cultivation in that district to popularise agronomic practice suited to local conditions and also to organise demonstrations covering cultural, manurial and plant protection measures.

**SRI S. SADASIVAM :** புகையிலை உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருளை விற்பனை செய்யும் பொழுது நல்ல முறையில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் கிடைக்காததால், வியாபாரிகள் இதிலே இடைத்தூருக இருப்பதினால், இதை நல்ல



3rd March 1961]

முறையில் விற்பனை செய்ய, மற்ற மாகாணங்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கனம் அங்கத்தினர் சொல்லுகிற காரணத்தினால் இந்தப் புகையிலை விற்பனையைக் கூட மார்க்கெட்டிங் கமிட்டியின் கீழ் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

**SRI T. K. SUBBIAH :** வட்டார வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமோனியம் சல்பேட் கொடுக்கக்கூடிய திட்டத்தில் புகையிலைப் பயிருக்கு கொடுக்க முடியாது என்று வட்டார வளர்ச்சி அதிகாரிகள் சொல்லுகிறார்கள். புகையிலைப் பயிருக்கும் அமோனியம் சல்பேட் வழங்க சர்க்கார் உதவி புரியுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** ரசாயன உரம் பற்றாக்குறையாக இருக்கும் காரணத்தினால் முதலில் உணவுப் பொருள்களின் தேவைக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேல் மிச்சம் இருந்தால் புகையிலைப் பயிருக்கும் கொடுக்கலாம்.

*Flood*

*** 556 Q.—SRI A. VEDARATHNAM :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கம் நிறுவியுள்ள வெள்ளக்கட்டுப்பாடு போர்டு மூலம் இம் மாநிலத்தில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த ஏதேனும் திட்டம் உண்டா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.
(b) Does not arise.

**SRI A. VEDARATHNAM :** சமீபத்தில் டெல்லியில் நடந்த விவசாயக் கண்காட்சியில் சைனா முதலிய நாடுகளில் வெள்ளத்தினால் சேதம் ஏற்படுவதற்குப் பதிலாக, அதைப் பயன் உள்ள முறையில் பயன்படுத்துகிற முறைகளெல்லாம் அங்கே கையாளப்படுவதாக காண்பிக்கப்பட்டதே ? அத்தகைய முறைகளை ஆராய்ந்து அதை நம்முடைய மாநிலத்தில் அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் யோசிக்குமா ?

**THE HON. SRI P. KAKKAN :** நமது மாகாணத்தில் வெள்ளம் ஏற்பட்டு அதனால் சேதம் உண்டானால், அம்மாதிரி சேதத்தைத் தடுப்பதற்கு இந்த மாநில சர்க்காரே தக்க ஏற்பாடுகள் செய்வதற்குத் திட்டம் வைத்திருக்கிறார்கள்.

*Grants (Colleges)*

* 557 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of private Colleges in Arts and Sciences and Engineering Colleges to which Government grants have been given during the last two years ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Arts and Science Colleges—49.

Engineering Colleges—5.

* 558 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of seats allotted during the admission to the management of each of the private Engineering Colleges; and

(*b*) the amount of grant given to each of them?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

*B.D.Os.*

* 559 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of B.D.Os. selected under the Community Development department in each district on the ground of either being political sufferers or of relations to political sufferers in 1960; and

(*b*) the qualifications of each of them?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.

*Nylon*

* 560 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) கரும்புச் சக்கையினால் நைலான் தயாரிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.
(*b*) Does not arise.

சக்கையிலிருந்து நைலான் தயாரிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று கேள்வியில் போடப்பட்டிருக்கிறது. மொலாஸஸிலிருந்து என்று எடுத்துக் கொண்டுதான் நான் பதில் கொடுத்திருக்கிறேன். பாகஸேயிலிருந்து நைலான் செய்ய முடியாது. மொலாஸஸிலிருந்துதான் செய்ய முடியும். அந்தமாதிரி எடுத்துக் கொண்டுதான் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : Sir, to what useful purpose is this bagasse now put?

THE HON. SRI R. VENKATARAMAN : Now, it is used as fuel for the boilers in the sugar factories.

MR. SPEAKER : Questions are over.

NOTE.—An asterisk (*) at the commencement of a speech indicates Revision by the member.

---

[a] Printed as Appendix I on page 190 infra.



II.—PERMISSION FOR A MEMBER FOR PUTTING ALL THE QUESTIONS OF AN ABSENTEE MEMBER.

MR SPEAKER : I have received a letter from hon. Member Sri M. A. B. Arumughaswamy requesting me to permit him to put all the questions standing in the name of another hon. Member Sri N. R. Thiagarajan. I am sorry I cannot grant such an amnibus permission. The hon. Member Sri Arumugaswamy will have to get up whenever the question given notice of by hon. Member Sri N. R. Thiagarajan are taken up, and say that he is putting the questions on his behalf. He cannot however, be grant- an omnibus permission to do like this always. 9.30 a.m

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1961-62.

MR. SPEAKER : We shall now proceed with the general discussion on the Budget. Today, hon. Member Sri P. S. Chinnadurai will speak first. He may speak for 25 minutes.

SRI P. S. CHINNADURAI : I would like to have half an hour, Sir.

MR. SPEAKER : I have got in my list the names of ten hon. Members who want to speak today. If I give more time to the hon. Member, I may have to cut the time for other speakers. Anyway, let us see as the discussion proceeds. The hon. Member can definitely speak for twenty-five minutes. I shall ring the bell at the end of twenty-five minutes.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கடந்த 14 ஆண்டு காலமாக நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஏகபோகமாக ஆட்சி நடத்துவதற்கு வாய்ப்பினைப் பெற்ற காங்கிரஸ் கட்சி, ஸோஷலிஸ சமுதாயத்தை அமைப்பது என்று உறுதி எடுத்துக்கொண்ட காங்கிரஸ் கட்சி நடத்துகிற ஒரு சர்க்காரின் நிதிநிலை அறிக்கையாக எனக்கு இந்த பட்ஜெட் தோற்றம் அளிக்கவில்லை. இதைக் குறித்து ½ மணி நேரம் அல்ல, 6 மணி நேரம் வேண்டுமானாலும் மிகமிக விளக்கமாக எடுத்துக் கூறி, காங்கிரஸ் கட்சியின் ஒவ்வொரு அங்கத்தினரும் அவர்கள் செய்யத் தவறியதை உணரும்படியாக நினைவு படுத்த முடியுமென்று நினைக்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை ஒரு ஆண்டு நிதி நிலை அறிக்கையாக வெளியிடாமல் கடந்த 10 ஆண்டுகளாகக் காங்கிரஸ் சர்க்கார் செய்த சாதனைகளை விளக்குகிற அறிக்கையாக கனம் அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். நானும் அதை அப்படியே எடுத்துக் கொள்கிறேன். இதுதான் கடந்த 10 ஆண்டு காலத்திலே வேறு எவருடைய குறுக்கீடும் இடைஞ்சலும் இல்லாமல், ஏகபோகமாக ஆட்சி நடத்துவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருந்தும், அவர்கள் பயன்படுத்தி இந்த அதிகாரத்தைக் கொண்டு சாதித்த சாதனைகள் என்று அவர்களே இதனை எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று நான் நம்புகிறேன். யாரும் எவ்விதமான இடைஞ்சல்களையும் இடையூறுகளையும் விளைவிக்கவில்லை. ஏகபோகமாக

ஆட்சி நடத்துவதற்கான வாய்ப்பு இந்த ராஜ்ய சர்க்காருக்கு கடந்த 10 ஆண்டு காலத்திலே இருந்திருக்கிறது என்பதிலே ஐயம் கிடையாது. அதிகமாக இதைப்பற்றி நான் சொல்லுவதைக் காட்டிலும் கனம் அமைச்சர் அவர்களே சொல்லிவந்திருக்கிறார்கள். "எங்களுக்கு தேவைக்கு மீறிய மெஜாரிட்டி இருந்து வந்திருக்கிறது" என்று அவர்கள் சொல்லியதை நான் அவர்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். ஸோஷலிஸத்தை நோக்கி நாட்டை முன்னேற்றம் செய்வதிலே இந்த ராஜ்ய சர்க்கார் கடந்த 10 ஆண்டுகளாக ஒவ்வொரு துறையிலும் என்ன சாதித்துள்ளது என்பதைப் பற்றி ஆரஅமர அவர்கள் ஆலோசித்துப் பார்க்கவேண்டுமென்று நான் வேண்டுகிறேன்.

விவசாயத் துறையிலே எந்தெந்த அளவுக்கு விளைச்சலை செய்திருக்கிறோம் என்று எடுத்துரைத்தார்கள். மொத்தத்திலே 1951-ம் ஆண்டிலே இருந்ததற்கும் 1961-ம் ஆண்டிலே இருப்பதற்கும் உற்பத்தியிலே மிகப் பெரிய உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களைக் கேட்க விரும்புவது என்னவென்றால், மொத்தத்திலே இந்த விவசாய விளைச்சல் அதிகரித்திருக்கிறது என்று அவர்கள் கூறினாலும், அகில இந்திய சராசரி அளவிலே விவசாயினுடைய வருமானத்தை உயர்த்துவதில் நாம் ஏதாவது முன்னேற்றம் கண்டிருக்கிறோமா, நம்முடைய ராஜ்யத்தில் ஆரம்ப காலத்தில் இருந்து வருகிற குறையானது இன்னும் குறையாக இருக்கவில்லையா என்பது தான். சர்க்கார் நியமித்த ஒரு பொருளாதாரக் கமிட்டியின் அறிக்கைப்படி அகில இந்திய ரீதியிலே ஒரு விவசாயினுடைய வருமானம் ரூபாய் 113. ஆனால் நம்முடைய தமிழ் நாட்டிலே விவசாயினுடைய சராசரி வருமானம் 94 ரூபாய்தான்.

(Deputy Speaker in the Chair.)

இது டெக்னோ எகனமிக் சர்வே ஆப் மெட்ராஸ் என்ற அறிக்கையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. எவ்வளவுதான் மொத்தத்திலே விவசாய உற்பத்தியைப் பெருக்கினாலும், அகில இந்திய சராசரி உற்பத்தியைக் காட்டிலும் அதிகமாக விளைச்சலை காட்டினாலும், நம்முடைய ராஜ்யத்திலே விவசாய உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கிறவர்களுடைய சராசரி வருமானத்தை அகில இந்திய அடிப்படையிலே உள்ள அளவுக்கு உயர்த்துவதற்குக்கூட நம்முடைய சர்க்காரால் உருப்படியாக எதுவும் இந்த 10 ஆண்டு காலத்திலே சாதிக்க முடியவில்லை என்பதை நாம் உணரவேண்டும். இதனை நாம் உணர மறுத்து, நாம் எவ்வளவோ முன்னேறிவிட்டோம், திட்டம் போட்ட அளவுக்கு மேலேயே முன்னேறிவிட்டோம் என்று சொன்னால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதன் மூலமாக நிச்சயமாக நமது எதிர்கால முன்னேற்றம் வெகுவாகத் தடைப்படுமென்று சொல்ல விரும்புகிறேன். மேலும் விவசாய உற்பத்தியை இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலே நாம் எந்த அளவுக்கு உயர்த்த



வேண்டுமென்று தீர்மானித்தோமோ அந்த அளவுக்கு நம்மாலே அதிகரிக்க முடியவில்லை. 12 லட்சம் டன் சொச்சம் அதிகமாக உற்பத்தி செய்வது என்று தீர்மானித்தோம். சென்ற ஆண்டு குறிப்பிட்டபோது இந்த இலக்கை எய்திவிடுவோம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பொழுது இந்த ஆண்டிலே கனம் நிதி அமைச்சர் அவர்கள் 'இந்த இலக்கை நம்மால் எய்த முடியவில்லை, சுமார் 7 அல்லது 8 லட்சம் டன் அளவுக்குத்தான் உயர்வு ஏற்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார். மேற்கொண்டு நம்மால் உயர்த்த முடியவில்லை என்றால், அதற்கு முக்கியமான காரணம் போதுமான ரசாயன உரம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். ரசாயன உரப் பற்றாக்குறை மட்டுமல்ல. நீர்ப் பாசன வசதியைப் போதுமான அளவுக்குப் பெருக்குவதற்குத் தவறியிருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் சுமார் 27,000 பழைய குளங்கள், ஏரிகள் இருக்கின்றன என்று அரசாங்கம் கணக்கிட்டிருக்கிறது.. அது தவிர அமைக்கப்பட்ட நீர்நிலை ஆதாரங்களைக்கூட சரிவரப் பயன்படுத்துகிற நிலையிலே நாம் இருக்கவில்லை. 27,000 குளங்கள் இருக்கின்றன என்றால், அவை அத்தனையும் சரியாக வைக்கப்பட்டிருக்கின்றனவா? கிடையாது. இந்த அரசாங்கம் ஏற்படுத்திய புதிய குளம், குட்டைகள் எத்தனை? கடந்த பத்தாண்டு காலத்தில் எத்தனை குளங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன? இவர்களாகச் செய்தது ஒன்றுமில்லை. நம் முன்னோர்கள் நாட்டின் நலத்திற்காக ஏற்படுத்திச் சென்ற 27,000 குளங்கள் தான். அவைகளிலிருந்து வண்டல் மண்ணையாவது இவர்களால் எடுக்க முடிந்ததா? இந்த 27,000 குளங்களிலும் படிந்திருக்கும் வண்டல் மண்ணை தூர் எடுத்து, ஆழப்படுத்தி நல்ல நீர் நிலையாகப் பாசனத்திற்கு லாயக்குள்ளதாக ஆக்க முடிந்ததா? பூராவும் செய்யாவிட்டால் போகட்டும்; பாதியளவாவது செய்ய முடிந்ததா? 25 சதவிகிதம்கூடச் செய்யவில்லை என்பதைப் பார்க்கிறோம்; அரசாங்கப் புள்ளி விவரங்களே காட்டுகின்றன. உற்பத்தி குறையாமல் என்ன செய்யும்? எப்படி இலக்கை அடைய முடியும்? எப்படி 15 லட்சம் டன் அதிக உற்பத்தி செய்வது? மூன்றாவது திட்டத்திலாவது இந்தக் குளங்களைத் தூர் எடுக்க, பாசன வசதி செய்து கொடுக்க ஏதாவது ஏற்பாடு உண்டா என்று பார்த்தால், ரூ. 8 கோடி செலவு செய்யப்படும் என்கிறார்கள். எட்டு கோடி என்று சொன்னாலும், இந்த 27,000 குளங்களிலும் படிந்துள்ள வண்டல் மண்ணைத் தூர் வார, இந்தத் தொகை போதாது, பாசன வசதி உள்ளவைகளாகச் செய்யப் போதாது என்பதைத் தான் பார்க்கிறோம். நீர்ப் பாசன வசதிகளைச் சரிவரச் செய்ய இந்த அரசாங்கம் தவறி இருக்கிறது; அதன் காரணமாக உற்பத்தி குறைந்திருக்கிறது. குறையாமல் என்ன செய்யும்? நாம் நிர்ணயித்த இலக்கை எப்படி அடைய முடியும்? ஆகவே, நம் உற்பத்தி பெருகாததற்குப் பெரிய காரணம் ரசாயன உரம் பற்றாக்குறை மட்டுமல்ல; போதுமான அளவு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுக்காததும் ஆகும் . . . .

[3rd March 1961

(ஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமி நாயுடு எழுந்தார்)

**SRI P. S. CHINNADURAI:** அப்புறம் பேசுங்கள். என் காலம் குறைந்துவிடும். . . . .

DEPUTY SPEAKER: The hon. Member is not yielding.

**SRI P. S. CHINNADURAI:** ஆறு லட்சம் டன் ரசாயன உரம் உற்பத்தி செய்வோம் என்றது மொத்தமாக, தோராயமாக நிபுணர்கள் கொடுத்த கணக்கு. அது குறைவா, சரியா என்று கணக்கில் புகுந்து பார்க்க விரும்பவில்லை. இது பின்னால் 2½ லட்சம் டன்னாகக் குறைந்து, உண்மையில் நாம் கொடுத்தது ஒரு லட்சம் சொச்சம் டன்கள் தான். நம்மால் சொன்னபடி கொடுக்க முடியவில்லை. என்ன காரணம் என்று நான் ஆராய்ந்து பார்க்க விரும்பவில்லை. உண்மையில் முயற்சிகள் எடுத்தோம். ஆனால் முடியவில்லை. 'எதிர்காலத்தில் நாம் சில ரசாயன உர பாக்டரிகளை உண்டாக்கி விடுவோம், பற்றாக்குறையைச் சமாளிப்போம்' என்று சொல்கிறார்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். நெய்வேலியில் தயாராகும் உரம் அவ்வளவும், தனிப்பட்ட நபர்களால் தயாரிக்கப்படும் உரத்தை விட்டுவிடுகிறேன், நெய்வேலி உரம் அவ்வளவும் இங்கேயே வைக்கப்படுமா? அதற்கு அமைச்சரவர்கள் சரியான பதில் அளிப்பார்கள் என்று நம்புகிறேன். (குறுக்கீடு). சரி, அப்படி வைக்கப்படுமானால் ரொம்ப நல்லது. ஆனால், அப்படி வைக்க முடியாது என்றே எண்ணுகிறேன். காரணம், அப்படியென்றால், சிந்திரியில் உற்பத்தியாகும் உரம் நமக்கு வராது. (குறுக்கீடு). இங்கே கொடுத்திருக்கும் விளக்கத்தின்படி ஒரு தவறான எண்ணம் மக்களிடையே வரக்கூடும். நெய்வேலியில் அமைக்கப்பட்டு வரும் உரத் தொழிற்சாலை மூலமாக 3·5 லட்சம் டன் அளவில் உரம் உற்பத்தியாகும் என்றும், மற்ற இடங்களில் உற்பத்தியாகும் உரம் இவைகளைக் கொண்டு பற்றாக்குறையைச் சமாளிப்போம் என்றும் சொல்லியிருப்பதிலிருந்து, மக்கள் என்ன நினைப்பார்கள் என்று, விவசாயிகள் என்ன எண்ணுவார்கள் என்று சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். . . . .

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இந்த முயற்சி நம் தமிழ்நாட்டோடு நின்றுவிடவில்லை; ஒவ்வொரு ராஜ்யத்திலும், அவரவர்கள் உற்பத்திக்காக இம்மாதிரி ஏற்பாடுகள் செய்கிறார்கள். ஒரு பக்கத்தில் உற்பத்தியாகும் உரம் மற்ற பகுதிக்கும் போகாது என்று சொல்லத் தயாரில்லை; சில ரகங்கள் இங்கிருந்து அங்கேயும், அங்கிருந்து இங்கேயும் போகும். நாடு முழுவதிலும் பற்றாக்குறையைப் போக்க முயற்சிகள், நம் ராஜ்யத்தில் மட்டுமன்றி, மற்ற இடங்களிலும் எடுத்து இருக்கிறார்கள்

**SRI P. S. CHINNADURAI:** இந்த ஐந்து நிமிஷத்தையும் உதவி சபாநாயகர் அவர்கள் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (சிரிப்பு)

**DEPUTY SPEAKER:** இது ஐந்து நிமிஷமா? ஒரு நிமிஷம் இருக்கும்.



3rd March 1961]

**SRI P. S. CHINNADURAI:** நம்முடைய நாட்டிலே புதிதாக உர பாக்டரிகள் தோன்றினாலும், நம் உரத் தேவைப் பூரணமாகப் பூர்த்திசெய்யும் அளவில் அது இருக்குமா, அவற்றால் உற்பத்திப் பெருக்கம் கிடைக்குமா என்று தெள்ளெனத் தெரியவில்லை. நம் அமைச்சரவர்கள் சொல்வதிலிருந்து, வரும் ஆண்டிலாவது இந்த ஆறு லட்சம் டன் உரம் நம் ராஜ்யத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்ற உத்தரவாதம் கிடையாது. இந்த நிலையில் உற்பத்திக்கு வேண்டிய ரசாயன உரம் கிடையாது, உற்பத்திக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை, இந்த நிலையில், எப்படி நாம் மேற்கொண்டு 15 லட்சம் டன் தானியங்களை உற்பத்தி செய்யப் போகிறோம் (குறுக்கீடு: திறமையால்).

பருத்தி விளைச்சல் சம்பந்தமாக 4·2 லட்சம் பேல் உற்பத்தி செய்திருக்கிறோம், வருங் காலத்தில் ஒரு லட்சம் பேல் அதிகமாக உற்பத்தி செய்வோம் என்கிறார்கள். எப்படிச் செய்வார்கள்?

எண்ணெய் வித்துக்கள் சம்பந்தப்பட்டவரை, விலை ஏற்றத் தாழ்வின் காரணமாக நிலக் கடலை உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது எண்ணெய் வித்துக்களுக்கு மட்டுமின்றி, எத்தனையோ விளைபொருள்களில்கூட அதே நிலை தான். விவசாயிகளுக்குக் கட்டுபடியாகும் முறையில் விலைகளை நிர்ணயிக்க இந்த ராஜ்ய சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும், அகில இந்திய ரீதியிலாவது செய்ய வேண்டும் என்று இந்த மன்றத்திலும், வெளியிலும், அங்கத்தினர்கள் பலராலும் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. ஆனாலும், இதுவரை இந்தப் பத்தாண்டு காலத்தில் விவசாயப் பண்டங்களுக்கு உற்பத்திக்குத் தக்க விலைவாசிகள் கிடைக்க ஏற்பாடுகள் இந்த ராஜ்ய சர்க்காரால் செய்யப்படவில்லை. வருங்காலத்திலாவது செய்யப்படும் என்பதற்கும் உத்தரவாதம் கிடைக்கவில்லை. இதிலே எண்ணெய் வித்துக்களுக்கு நியாயமான விலை கிடைக்கும்படி ஏற்பாடு செய்து 12 லட்சம் டன் உற்பத்திப் பெருக்கம் செய்வோம் என்று சொல்லி இருக்கிறார்கள். எண்ணெய் வித்துக்களுக்கு மட்டும் செய்தால் போதாது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் அத்தனை பண்டங்களுக்கும் கட்டுபடியாகும் விலை நிர்ணயம் செய்தாக வேண்டும். அப்பொழுதுதான் விவசாயிகள் உற்பத்தியில் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் ஈடுபடுவார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

விவசாயத்திற்கு முக்கியமானது மின்சாரம். மின்சாரக் கட்டணம் உயர்ந்துகொண்டே இருக்கிறது. கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று பல முறைகள் முறையிட்டு இருக்கிறோம். இதற்கு முன்னாலும் முறையிட்டிருக்கிறோம். "குறைக்கிறேன்" என்று சொன்ன மந்திரியவர்களும், உத்தரவாதத்தை விட்டு, கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள். ஒரு ஆண்டு காலமாக இந்த மின்சாரக் கட்டண உயர்வின் காரணமாக விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முக்கியமாக, கோவை

மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம் போன்ற இப்படிப்பட்ட மாவட்டங்களில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும்கூட, இந்தப் புதிய நிதிநிலை அறிக்கையில் இன்னும் கட்டணம் உயரும் என்பதற்கான அறிகுறிகள்தான் காணப்படுகின்றன. ஆகவே, மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க ஒரு ஏற்பாடும் செய்யாமல், ரசாயன உரமும் போதுமான அளவு கிடைக்கச் செய்யாமல், இதர நீர்ப்பாசன வசதிகளையும் சரிவரச் செய்து கொடுக்காமல், தண்ணீரை விவசாயத்திற்கு இறைக்க வேண்டிய சக்திக்குக் கட்டணத்தை அதிகப்படுத்தி, இப்படிப் பலவகையிலும் இடையூறுகளைச் செய்துவிட்ட பிறகு விவசாயிகள் என்ன விளைவிப்பார்கள்? விளைச்சலில் ஈடுபட்ட விவசாயிகள், ஊக்கத்தோடு ஈடுபட, நிச்சயமாக சர்க்காரின் கொள்கை மாறவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்க எடுக்கப்படும் முயற்சிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக சமதர்ம லட்சியத்தை ஏற்றுக்கொண்ட எந்தச் சர்க்காரும் இதைச் செய்வது இயல்பு. ஆனால், நம்முடைய சர்க்கார், தமிழ்நாட்டு சமதர்ம சர்க்கார் கடந்த பத்தாண்டு காலத்தில் கூட்டுறவுத் துறையில் என்ன சாதித்திருக்கிறார்கள் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலிருந்து பார்க்க முடிகிறது; வருகிற ஐந்தாண்டுக் காலத்தில் என்ன சாதிப்போம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மிகவும் மனமுவந்து, கூட்டுறவுப் பண்ணைத் திட்டமும் தொடர்ந்து நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, வரும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 20 லட்சம் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு பண்ணைகளுக்கு இவ்வளவுதானா? ஏன் இந்தத் தயக்கம்? யாருடைய எதிர்ப்பைக் கண்டு கலக்கம் அடைந்து இந்த கூட்டுறவு பண்ணைகளை அவலம்பிக்கிறார்கள் என்று தெரியவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் சரியான பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். போதுமான அளவில் அதை விஸ்தரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவில்லை. கடந்த ஆண்டுகளில் சர்க்காரால் நடத்தப்படக்கூடிய கூட்டுறவு பண்ணைகள் தமிழ் நாட்டில் அதிகமாக இல்லை. தமிழ் நாட்டிலுள்ள எல்லா நிலங்களையும் எடுத்து அவைகளைக் கூட்டுறவு பண்ணையின்கீழ் கொண்டு வரவேண்டுமென்று கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகவே தான் நாங்கள் சொல்லிக் கொண்டு வந்தும் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

கூட்டுறவு இலாகாவைப் பொறுத்த வரையில், அவர்கள் சோஷலிச சர்க்காரின் கொள்கை என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், கூட்டுறவு இலாகா எந்த அளவு செயல்படுகிறது என்று பார்த்தால் அது அவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்வதாகவே இல்லை. அந்த இலாகாவை எடுத்து நிர்வகிக்கிற அமைச்சர் எனக்கு வேண்டியவராக இருந்த போதிலும் அந்த இலாகாவைப்பற்றி குறை கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை. அந்த இலாகா



சரிவர செயல்படவில்லை என்றுதான் சொல்லவேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய பரிகாரத்தைக் காண வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த இலாகா இப்பொழுது அவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்யவில்லை. அந்த இலாகா மக்களிடத்தில் எவ்வளவு தொடர்பு கொள்ள வேண்டுமோ அந்த அளவு தொடர்பு கொள்ளாமல் இருக்கிறது.

(Mr. Speaker in the Chair.)

அடுத்தபடியாக, தொழில் வளத்தைப்பற்றி பேசும்போது தொழில்கள் எல்லாம் கணிசமான அளவில் முன்னேற்றமடைந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். புதிய புதிய பல தொழிற்சாலைகளையும் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதில் எந்த உண்மையை நாம் காண்கிறோம். தொழில்கள் ஓரளவிற்குப் புதியதாகத்தான் தோன்றி இருக்கின்றன. ஆனால் கடந்த பத்து ஆண்டு காலத்தில் தோன்றிய தொழில்கள் எல்லாம் உண்மையில் எந்த அளவு முன்னேற்றமடைந்திருக்க வேண்டுமோ அந்த அளவில் முன்னேற்றமடைந்ததாகக் காட்டவே இல்லை, எந்த அளவில் முன்னேற்றமடைந்திருக்க வேண்டுமோ எந்த அளவில் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்க வேண்டுமோ அந்த அளவில் முன்னேற்றமும், தொழிற்சாலைகளும் ஏற்படவில்லை என்பதைத் தான் நாம் காண்கிறோம். யுத்த காலத்தில் எவ்வளவோ சீரழிந்த நாடுகளாகிய இடாலி, ப்ரான்சு, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகள் கடந்த பத்து ஆண்டு காலத்தில் எவ்வளவோ தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கின்றன. சுதந்திரம் அடைந்த நாடாகிய இந்தியாவுக்கு உதவி செய்யக்கூடிய அளவில் அந்த நாடுகள் முன்னேற்றமடைந்திருக்கின்றன என்று தெரிகிறது. அந்த நாடுகள் கடந்த பத்து ஆண்டுகளில் எவ்வளவு வளப்படுத்திக் கொண்டிருக்கின்றன. நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இடாலிய நாடு சுமார் 100 கோடி ரூபாய் அளவிற்கு உதவி செய்வதாகச் சொல்லுகிறார்கள். மற்றும் மேற்கு ஜெர்மனி, பிரான்சு, ஜெக்கோசுலவேக்கியா முதலிய நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு நமக்கு உதவி செய்ய முன் வருகிறோம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அந்த நாடுகள் தொழில் வளத்தில் முன்னேற்றமடைந்திருக்கின்றன. ஆனால் அந்த நாடுகளை விட எவ்வளவோ பெரிய நாடாகிய இந்தியா, தொழில் வளத்தில் முன்னேற்றமடைய முடியாத காரணத்தால் அவர்கள் உதவி செய்ய முன் வருகிறோம் என்று சொல்லுகிறார்கள். நம்மை விட சின்னச் சின்ன நாடுகள்கூட நமக்கு உதவி செய்ய முன் வருகிறார்கள். அந்த அளவில் அங்கேயெல்லாம் தொழில் வளம் பெருகி இருப்பதை நாம் பார்க்கிறோம். அந்த அளவுக்கு நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் தொழில் வளத்தை பெருக்கிக் கொள்ள முடியவில்லை.

அடுத்தபடியாக, டெக்ஸ்டைல். இதிலும் நாம் போதிய அளவில் முன்னேற்றமடையவில்லை. அதற்கு வேண்டிய மெஷினரிகளை நாம் இப்பொழுது வைத்துக் கொள்ளவில்லை. டெக்ஸ்டைல்

[Sri P. S. Chinnadurai] [3rd March 1961

சம்பந்தமாகவும் நாம் அந்நிய நாட்டை எதிர்பார்க்க வேண்டியதாக இருக்கிறது. நமக்குப் போதிய அளவில் டெக்ஸ்டைல் மில்கள் கிடையாது. அவைகளை ஆரம்பிக்க வேண்டுமானால் நாம் அந்நிய நாட்டின் உதவியை எதிர்ப்பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அந்த மெஷின்களை இங்கேயே தயார் படுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்பு நமக்கு இப்பொழுது இல்லை. அதற்கு வேண்டிய இயந்திரங்களை நாமே தயாரித்துக்கொள்ளக் கூடிய அளவில் இங்கு நாம் மெஷின்களை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இங்கு அதிகப்படியாக டெக்ஸ்டைல் மில்கள் இருப்பதால் க்ளோ ரும் மெஷினரி வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதைத் தயாரிக்கக்கூடிய மெஷின்கள் நம்மிடத்தில் இல்லை. ஆகவே அப்படிப்பட்ட இயந்திரங்களை இங்கேயே தயாரிக்கக்கூடிய அளவில் இங்கு மெஷினரிகளை அமைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய முயற்சிகள் இந்தக் கடந்த பத்து ஆண்டுகாலமாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இயந்திரங்கள், பல விஞ்ஞான நுணுக்கங்கள் எல்லாம் போதிய அளவில் நமக்கு இல்லை. அவைகள் வேண்டுமென்றால் இன்றைக்கு அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகளை நாட வேண்டியதாக இருக்கிறது. அவைகளை நம்முடைய நாட்டிலேயே தயாரித்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு நம்மிடையே கிடையாது. அதை உண்டாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். தனியார் துறையில் இவைகளை வைத்து நடத்துவதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. எந்தத் தொழிலை இங்கே ஆரம்பிக்க வேண்டுமானாலும் அதற்கு வேண்டிய இயந்திரங்களை வாங்குவதாக இருந்தால் அவைகளை அந்நிய நாட்டிலிருந்து வாங்கக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. அவைகளை இங்கேயே தயாரித்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இப்பொழுது நமக்கு இல்லை. நம்முடைய நாட்டில் இப்பொழுது தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதாக இருந்தால் அதற்கு வேண்டிய இயந்திரங்கள் இல்லை. வெகு குறைவாகத்தான் இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் நாம் வெகு துரிதமாக முன்னேற முடியவில்லை. இப்படி ஒவ்வொன்றுக்கும் நாம் அந்நிய நாட்டை எதிர்பார்க்க வேண்டியதாக இருப்பதால் அது பெரிய ஆபத்தில் தான் கொண்டு போய் விடும். இதன் காரணமாகத் தனியார் துறையில் தொழில்களை ஆரம்பிப்பதாக இருந்தால்தான் அதற்கு முதலீடு செய்வோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இப்பொழுது அந்நிய நாடுகள் வந்திருக்கின்றன. அதன் காரணமாக நம்முடைய பொருளாதாரம் பாதிக்கக்கூடிய அளவில் அது திணிக்கப்படும் என்பதை நாம் பார்க்கிறோம். தனியார் துறையில் வளர்ச்சி அடையச் செய்வதற்கு இந்த ராஜ்ய சர்க்கார் விரும்பியோ அல்லது விரும்பாமலோ நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே இந்த முறையிலும் கடந்த பத்து ஆண்டு காலமாகச் சரியான ஏற்பாடுகள் செய்யவில்லை



3rd March 1961] [Sri P. S. Chinnadurai]

என்பதை நாம் பார்க்கிறோம். தனியார் துறையை எடுத்துக் கொண்டால் உண்மையிலேயே பிரமிக்கத்தக்க அளவில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு குறிப்பிட்டிருக்கிறார். தனியார் கம்பெனிகள் அதிகமாக வளர்ச்சி அடைந்திருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண்டு காலத்தில் 908 கம்பெனிகள் புதிதாகத் தோன்றி இருக்கின்றன. அதில் பப்ளிக் லிமிடெட் கம்பெனி மூலதனம் நான்கு கோடி என்றால் ப்ரைவேட் லிமிடெட் கம்பெனி மூலதனம் நாற்பது கோடிக்கு மேல் இருக்கிறது. முதலாளிகள் அதிகப்படியாக மூலதனத்தைப் போட்டிருக்கிறார்கள். சர்க்காருடைய முயற்சிகள் பயனாக தனியார் கம்பெனிகள் எவ்வளவோ அதிகமாக ஏற்பட்டு வளர்ச்சி அடைந்திருக்கின்றன. பப்ளிக் லிமிடெட் கம்பெனி வளர்ச்சி அடைவதற்குப் பதில் ப்ரைவேட் லிமிடெட் கம்பெனி வளர்ச்சி அடைந்திருக்கின்றன. இப்பொழுது ப்ரைவேட் கம்பெனிகளுக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். அதற்கு நான் என் நன்றியைச் செலுத்துகிறேன். ஆனால் தனியார் துறையில் தொழிலை வளர்ப்பதன் மூலம் முதலாளித்துவத்தை நாம் அதிகப்படியாக வளர்க்கிறோம். இது ஒரு பக்கம் இருக்க தனியார் துறையில் உள்ள முதலாளிகள் அந்நிய நாடுகளை நம்பி இருக்கும் இந்த நிலைமையில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன.

அடுத்தபடியாக, நமது சர்க்கார் போக்குவரத்துத் துறையில் சாதித்ததைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். போக்குவரத்துத் துறையில் புதிய ரயில் பாதைகள் போடுவதைப்பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடவில்லை. கடந்த பத்து ஆண்டு காலத்தில் புதிய ரயில் பாதைகளே போடவில்லை. எத்தனை மைல்களுக்குப் புதிய ரயில் பாதைகள் போடப்பட்டிருக்கிறது என்றும் சொல்லவில்லை. இது வரையிலும் ஒன்றும் செய்யாவிட்டாலும் இனிமேலாவது ஏதாவது செய்யப்படுமா என்பதைப்பற்றியும் சொல்லவில்லை. அப்படிச் சொல்லி இருந்தாலும் அதைச் செய்வதற்கு அவர்களுக்குச் சக்தி இல்லாமல் இருக்கலாம். ஆனால் இங்கு உட்கார்ந்து கொண்டிருந்தால் அந்தச் சக்தி இருக்காது. ஆனால் அங்கே போய் உட்கார்ந்திருந்தால் அந்தச் சக்தி இருக்கும். கடந்த பத்து ஆண்டு காலத்தில் புதிய ரயில் பாதைகள் அமைக்க முடியவில்லை. தேசிய மயமாக்கும் கொள்கையை எடுத்துக் கொண்டால், அந்த வகையிலும் ஒன்றும் செய்யவில்லை. பஸ் போக்குவரத்தை அவர்கள் தேசிய மயமாக்கி இருந்தாலும் கடந்த பத்து ஆண்டு காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் எந்த விதமான சாதனையையும் செய்யவில்லை. குறிப்பிடத்தக்க சாதனையைச் செய்ததாகச் சொல்லிக்கொள்வதற்கு ஒன்றுமே இல்லை என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தொழில் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, விவசாயத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, முதலாளித்துவ அடிப்படையில் தான், முதலாளித்துவ கண்ணோட்டத்துடன் தான், முதலாளித்துவ திட்ட ரீதியில் தான் எல்லாக் காரியங்களும் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். எந்தத்

துறைகளிலும் அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் எவ்வளவோ முன்னேற்றத்தைக் காணலாம். இந்தத் துறைகளில் எந்த அளவுக்குக் காரியங்களைச் செய்ய வேண்டுமோ அந்த அளவில் செய்யவில்லை என்றுதான் தோன்றுகிறது. அதற்குச் சொல்லாமல் சட்டப்படி முதலாளித்துவ அடிப்படையில் காரியங்களை ஒவ்வொரு கட்டத்திலும் செய்து கொண்டு போகிறோம் என்றும், அந்த அளவில் எல்லாக் காரியங்களும் நடைபெற்று வருகின்றன என்றும், அரசியல் ரீதியாக எல்லாம் வளர்ந்திருக்கிறது என்றும் சொல்லுவார்கள். ஆனால் இன்றைக்கு நாம் என்ன பார்க்கிறோம். ஏற்கெனவே நன்மைகளை அடைந்த முதலாளிகள் தங்களுடைய பேராசையின் காரணமாக இப்பொழுது கிடைத்திருக்கக்கூடிய நன்மைகளைக் காட்டிலும் அதிகப்படியான நன்மைகளைப் பெற வேண்டும், ஜனநாயக ஸ்தாபனத்தை அமைத்துக்கொண்டு நன்மைகளை அடைவதற்குப் பாடுபட வேண்டும் என்று நினைத்து புதியதாக அரசியல் கட்சிகளை ஏற்படுத்தி, அப்படி ஒரு புதிய அரசியல் கட்சிகளை ஸ்தாபித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதன் மூலம் தங்களுடைய நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதையும், அதன்மூலம் மேலும் உரிமைகளை, அரசியல் சாதனங்களை உண்டாக்கிக் கொள்வதற்கு முயற்சிப்பதையும் நாம் பார்க்கிறோம். இந்தச் சர்க்காருடைய தொழில் கொள்கை பொதுவாக பொருளாதாரக் கொள்கையும் முதலாளிக்கு உதவி செய்வதாகத்தான் இருக்கிறது.

10 a.m.

முதலாளித்துவ மனப்பான்மை வளர்ந்திருக்கிறதே தவிர வேறு இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். திட்டங்களை நிறைவேற்ற எல்லா மக்களுடைய ஒத்துழைப்பையும் பெறவேண்டுமென்ற எண்ணம் கொண்டதாக இல்லை. இந்த விஷயத்தில் நமது ராஜ்ய சர்க்கார் ஒருதலைப் பட்சமாகத்தான் இருக்கிறது. காக்காய் பிடிப்பவர்களுக்கு வேண்டிய காரியங்கள் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைமை காங்கிரஸ்காரர்கள்தான் உண்டாக்கி இருக்கிறார்கள். சென்ற 10 ஆண்டு காலத்தில் இந்த நிலைமையைத்தான் உண்டாக்கியிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் சிபார்சு இருந்தால்தான் காரியம் நடக்கிறது. ஆஸ்பத்திரியில் ஒருவரைச் சேர்க்க வேண்டுமென்றால்—பெருந்துறை சேனிடோரியத்தில் வியாதியஸ்தரை சேர்க்கவேண்டுமென்றால் காங்கிரஸ்காரர்களுடைய சிபார்சு இருந்தால்தான் முடியும். கல்லூரிகளிலோ, பள்ளிக்கூடங்களிலோ மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்றால் காங்கிரஸ்காரர்களுடைய சிபார்சு வேண்டியிருக்கிறது. வேறு வகையில் சிபார்சு இருந்தால் பிரயோஜனம் இல்லை. என் அநுபவ ரீதியிலே நான் சொல்லவேண்டுமென்றால் அவ்வாறு நிலைமை ஏற்படுகின்றதென்றால் மற்றவர்களுக்கு என்ன சொல்வது?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** கனம் அங்கத்தினர் எப்பொழுது அவ்வாறு சிபார்சு செய்து பலன் ஏற்படாமல் போயிற்று?





**SRI P. S. CHINNADURAI :** நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் போதுமான மக்களுடைய சக்தியைப் பயன்படுத்திக்கொள்ளமுடியவில்லை. இப்பொழுது சொல்கிறார்கள் சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலமாக உதவி பண்ண வேண்டுமென்று. சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவி செய்ய இன்றைக்குத் தொழிலாளி வர்க்கம் தயாராய் இருக்கிறது—உதவி இருக்கிறார்கள். இதற்கு பல சான்றுகள் இருக்கின்றன. ஆனால் நான் என்ன சொல்கிறேன் என்றால் அப்படித் தொழிலாளிகள் சிறுகச் சிறுகச் சேமித்துக் கொடுக்கும் பணத்தை சர்க்கார் உருப்படியான வேலைகளுக்கு உபயோகப்படுத்தவேண்டும், ஊதாரித்தனமாகச் செலவிடக்கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன். திட்டங்கள் பேரிலே சென்ற பல ஆண்டுகளாக பல ஊதாரித்தனங்கள் நடைபெற்றுவருகின்றன. முதலாளிகளுக்குச் சலுகை கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலே திட்டங்கள் தவறான வழியில்தான் நிறைவேற்றப்படுகின்றன. இந்த நோக்கத்தோடுதான் சர்க்காருடைய நிர்வாகத்தில் பல்வேறு இனங்களில் கோடிக்கணக்கான தொகைகளை ஊதாரித்தனமாக செலவிடுகிறதே தவிர சர்க்கார் நிர்வாகத்தில் சிக்கனம் கையாளப்படவில்லை. யுத்தகாலத்தில் பலர் கொள்ளை அடித்துத் திடீர் பணக்காரர்கள் ஆகிவிட்டார்கள். இப்பொழுது யுத்தகாலத்திற்குப் பதிலாக திட்டகாலம் நடைபெறுகிறது. திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கும் பணத்தை கொள்ளையடித்து திடீர் பணக்காரர்கள் ஆகிவிடுகிறார்கள். பரம்பிக்குளம் திட்டத்திற்கு 30 கோடி ரூபாய் செலவிட இருக்கிறது. இதில் எத்தனை கோடி ரூபாய் ஊதாரித்தனமாகவும், எத்தனை கோடி ரூபாய் உண்மையாகவும் செலவிடப்படும் என்று தெரியவில்லை. இதற்கு முக்கியமாகக் கவனக்குறைவாலும், வேறு காரணமாகவும் இப்படிச் செலவாகிறது. இதற்கு அமைச்சர் அவர்களே பொறுப்பு என்று சொல்லவில்லை. ஆனால் இந்தத் திட்டங்களை மேற்பார்வையிடும் அதிகாரிகள் போதுமான திறமையுடன் இந்த வேலைகளைக் கவனிக்காமல் இருப்பதுதான் இதற்குக் காரணம். ஆகவே அரசாங்கம் இதில் போதிய கவனம் செலுத்தினால் சிக்கனப்படுத்த முடியும்.

அடுத்தபடியாக இன்றைக்கு இலங்கையில் வாழும் மக்களைப் பற்றி, அவர்களின் குறைகளைப்பற்றி நமது அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். அங்குள்ள தமிழ் மக்கள்மீது இலங்கை அரசாங்கம் . . . . . . . . .

**THE HON. SRI C. SUBRAMANIAM :** Sir, I am afraid the hon. Member is crossing his bounds when he begins criticising another Government.

**MR. SPEAKER :** கனம் அங்கத்தினர் வேறு விஷயத்திற்குப் போய்விட்டார்.

**SRI P. S. CHINNADURAI :** அவர்களின் நிலைமையைக் கவனித்து, அவர்கள் படும் கஷ்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது நமது உணர்ச்சியை எழுப்பக் கூடியதுதான்.

ஆனால் இந்த உணர்ச்சியைப் புறக்கணித்துவிட முடியாது. காங்கோ நாட்டில் நடக்கும் விவகாரத்திற்கெல்லாம் இங்கு உணர்ச்சி ஏற்படுகிறது. அப்படியிருக்கும்போது இலங்கையில் வாழும் நம்முடைய தமிழ் மக்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து எப்படி உணர்ச்சி ஏற்படாது இருக்க முடியும்? இதைச் சர்க்கார் நன்கு ஆராய்ந்து துணிச்சலாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER:** 14 அங்கத்தினர்கள் பேசவேண்டுமென்று என்னிடம் பெயர் கொடுத்தார்கள். ஒவ்வொரு அங்கத்தினரும் 15 நிமிஷம் பேசலாம் என்று நினைக்கிறேன். இன்னும் அதிகமானவர்கள் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்தால் 15 நிமிஷம் என்பது குறைந்துவிடும்.

*** SRI R. SUBRAMANIAM:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டில் பற்றுக்குறையாக 285·84 லட்சம் இருக்கிறது. இது ஒன்றும் அதிகமான டெபிசிட் இல்லை. ஏனென்றால் இந்த வருஷ ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வருவாயைவிட 841·73 லட்சம் அதிகமான வருமானம் கிடைத்திருக்கிறது. செலவினத்திலும் 685.36 லட்சம் அதிகமாகச் செலவாகி இருக்கிறது. பட்ஜெட் இப்பொழுது பற்றுக்குறையாக இருந்தாலும், பற்றுக்குறை அதிகமான தொகை என்று சொல்லிவிடமுடியாது. இந்த வருஷத்தில் சிக்கனமாக வேலைகள் செய்தால் இதை சரிக்கட்டிவிடலாம். இந்த பட்ஜெட்டில் எந்தவிதமான குறையும் சொல்வதற்கில்லை. ஆனால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயார் செய்திருக்கும் பட்ஜெட்டில் எதிர்க்கட்சிக்காரர்கள் குறை சொல்வதற்கு ஒன்றும் இடம் கொடுக்காமல் தயார் செய்திருப்பதுதான் குறை. நேற்று பேசும்போது ஒரு அங்கத்தினர் கனம் நிதி அமைச்சர் அவர்கள் பற்றுச்குறையை சரிகட்ட வேண்டுமென்ற காரணத்தால் பல காரியங்களை விட்டிருக்கிறார் என்று சொன்னார். ஆனால் சர்க்கார் என்னென்ன காரியங்களை நிறைவேற்றாமல் விட்டுவிட்டார்கள் என்று சொல்லவில்லை எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் தனியார் துறைக்கு சர்க்கார் சலுகை அளித்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். உண்மையில் சர்க்கார் துறையில் என்னென்ன காரியங்கள் நடைபெறவேண்டும், தனியார் துறையில் என்னென்ன காரியங்கள் நடைபெறவேண்டும் என்று முன்பே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு இருக்கும்போது சர்க்கார் முதலாளிகளுக்கு மாத்திரம் சலுகை அளிக்கிறார்கள் என்று எப்படி சொல்ல முடியும். ஆகவே பேசுவதற்கு எதுவும் இல்லாததினால் எதையாவது சொல்ல வேண்டும் என்கிற ரீதியில் சர்க்கார் மீது குற்றம் சாட்டவேண்டும் என்கிற ரீதியில் ஏதேதோ பேசுகின்றார்கள் என்று எண்ண வேண்டியிருக்கிறது. அத்துடன் காங்கிரஸ்காரர்கள் சிபார்சு செய்தால் எல்லாம் நன்றாக நடக்கிறதாகச் சொன்னார்கள்.



உண்மையில் எங்களுக்குள்ள குறைகள் காங்கிரஸ்காரர்களாக இருப்பதனால் தான் எதிர்க்கட்சிக்காரர்களைப்போல் காரியங்களை சாதித்துக் கொள்ள முடியவில்லையென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்மைவிட எதிர்க்கட்சிக்காரர்கள் பயமுறுத்திக் கொண்டு அதிகாரிகளிடத்தில் போய்ச் சொல்லி அதிக அளவில் காரியங்களைச் சாதித்துக்கொள்கிறார்கள் என்ற எண்ணம் காங்கிரஸ்காரர்களிடையே நிலவி வருகிறது. அதைவிட்டு காங்கிரஸ்காரர்கள் எல்லாவற்றையும் சாதித்துக்கொள்கிறார்கள் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது என்றே சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் நம் ராஜ்யத்தில் நல்ல மழை பெய்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் காவிரி நதி காச்மெண்டு ஏரியாவிலும் நல்ல மழை பெய்திருக்கிறது. ஆனால் சென்ற வருஷம் இரண்டு தடவை மேட்டூர் டாம் 120 அடிக்கு நிரம்பியிருந்தது. இவ்வருஷமோ, மேட்டூர் டாம் பல நாட்கள் அடைக்கப்பட்டிருந்தாலும்கூட, சென்ற வருஷத்தைவிட இவ்வருஷம் காச்மெண்டு ஏரியாவில் மழை பெய்திருந்தபோதிலும் கூட, ஒரு தடவைகூட 120 அடி தண்ணீர் மட்டத்தை மேட்டூர் டாம் அடையவில்லை. இதற்குக் காரணம் என்ன? இதில் பலதரப்பட்ட முரண்பாடுள்ள கருத்துக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, 1924-ம் வருஷ அக்ரிமெண்டை மீறி மைசூர் சர்க்கார் ஏதாவது செய்கிறார்களா? இல்லையா? இவற்றைப்பற்றியெல்லாம் அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் சென்ற வருஷத்தைவிட இவ்வருஷம் 1½ லட்சம் டன் அதிகமாக அரிசி நம் ராஜ்யத்தின் உற்பத்தியாகியிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்போது விளைபொருள்கள் அதிகமாக உற்பத்தியாகிறதோ அப்போது அவற்றின் விலை குறைய வேண்டும். ஆனால் இவ்வருஷம் அறுவடை காலத்தில் 1½ மணங்கு மூட்டை, சென்ற வருஷம் அறுவடை காலத்தில் விற்றவிலையைவிட சராசரி 3 ரூபாய் அதிகமாகவே விற்றுக் கொண்டிருக்கிறது. சென்ற வருஷத்தைவிட இவ்வருஷம் உற்பத்தி அதிகம் என்றால் விலை குறைய வேண்டாமா? இப்படிக் குறையாமல் அதிகமாகவே விற்பதற்குக் காரணம் என்ன? ஒன்று அதிகாரிகள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரம் தவறாக இருக்கலாம். அல்லது அது தவறில்லை என்றால் விலைகள் உயர்ந்துக்கொண்டே போவதற்குக் காரணம் வேறு இருக்கவேண்டும். இதன் காரணத்தைக் கண்டுபிடித்து விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமாய் நான் சர்க்காரைக் கேட்டுக் கோள்கிறேன்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் எந்த அளவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று இலக்கு வைத்திருந்தோமோ அந்த இலக்கைவிட 5 லட்சம் டன் குறைவாகவே உற்பத்தி செய்திருக்கிறோம். இதற்குக் காரணம் போதுமான ரசாயன உரம் கிடைக்கவில்லை" என்று குறிப்பிட்டார்கள். நமக்கு

ஏதோ ஒரு அளவு இப்போது ரசாயன உரம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த உரத்தை நல்ல சமயத்தில் விநியோகப்படுத்த வேண்டும். காலாகாலத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும். காலாகாலத்தில் விநியோகம் செய்யவேண்டும் என்று சொல்லும்போது காலம் அல்லாத காலத்திலும் விநியோகம் செய்யக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். சாதாரணமாக சல்பேட் ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதத்தில் தான் ஒவ்வொரு ஆண்டும் தேவைப்படுகிறது. ஆனால் இப்போது சல்பேட்டை மாதாந்திரக் கோட்டாவாக வைத்திருக்கிறோம். ஆகஸ்டு முதல் நவம்பர் வரையில் கொடுக்கப்படுகிற சல்பேட் சரியான முறையில் விவசாயிகளுக்குப் போய்ச் சேர்ந்து பலனளிக்கிறது என்றாலும் மற்ற மாதங்களில் கொடுக்கக் கூடியது ப்ளாக் மார்கெட்டுக்குப் போகத்தான் ஏதுவாக இருக்கிறது. அதுவும் தஞ்சை ஜில்லாவில் சென்ற வருஷம் அதிகமாக இப்படி ப்ளாக் மார்க்கெட்டிற்குப் போய் இருக்கிறது என்கிற விவரம் தெரிய வருகிறது. ஆகவே இதை மாதாந்திரக் கோட்டாவாகக் கொடுக்காமல் அங்கங்கே சேமித்து வைத்து இந்த நான்கு மாதத்திற்குள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யத்தக்க வகையில் ஸீஸனல் கோட்டாவாகக் கொடுத்தால் அதிக உபயோகமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் இப்போது 22 ப்ளாக்குகளில் தீவிரச் சாகுபடித் திட்டம் நடந்து வருகிறது. இதற்காகச் சென்ற வருஷம் 8,500 டன் அமோனியம் சல்பேட் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் என்ன என்னவோ சலுகைகள் கொடுக்கிறார்கள். அவ்வளவும் விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்றே சொல்கிறேன். குத்தகை விவசாயிகளில் நூற்றுக்கு 20 பேர்கள் தீவிரச் சாகுபடி திட்டத்தின்கீழ் கொடுக்கப்படுகிற சலுகைகளைப் பெறுகிறார்கள் என்றால் இதுவே அதிகம். பாக்கி 80 சதவிகிதம் குத்தகை விவசாயிகளுக்கு எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை. தீவிர சாகுபடி திட்டத்தின்கீழ் ஒரு குத்தகை விவசாயிகளுக்கு 125 ரூபாய் உதவி அளிக்கிறார்கள்—இதில் 40 ரூபாய்க்கு காசாகவும், பாக்கி 85 ரூபாய்க்கு விதை மற்ற விவசாயத்திற்கு வேண்டிய சாமான்கள் வாங்கிக்கொள்வதற்கு பர்மிட்டாகவும் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த உதவியைப் பெறுவதற்கு நிலச் சொந்தக் காரரிடம் இருந்து, நிலக் குத்தகைக்காரன் "இவன்தான் என்னுடைய குத்தகைக்காரன்" என்ற அத்தாட்சிப் பத்திரத்தை வாங்கிப் போகவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் நிலக்காரர்கள் எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் நிலத்தைத் தங்கள் வசம் ஆக்கிக்கொள்வதற்கு ஏற்றவகையில் குத்தகைச் சீட்டு மற்ற சீட்டு எதுவும் இல்லாத வகையில் குத்தகைக்கு விட்டு வைத்திருப்பதால் நிலக் குத்தகைக்காரர்களுக்கு "இவன்தான் என்னுடைய குத்தகைக்காரன்" என்பதாக அத்தாட்சிப் பத்திரம் கொடுக்க மறுக்கிறார்கள். அந்த அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற முடியாத காரணத்தினால் நூற்றுக்கு 80 பேர்களுக்கு மேல் இவ்வித வசதி எதுவும் பெற முடியாது போய்விடுகிறது. ஆகவே, இதற்குச் சர்க்காரே



காரண்டி கொடுக்கவேண்டும். அதோடு அடுத்துவரும் ஆண்டிலும் இந்தத் தீவிர சாகுபடித் திட்டத்தை இன்னும் விரிவாக்குவதற்கு யோசனை இருந்து வருகிறது. அதை வரவேற்கிறேன். ஆனால் அதேசமயத்தில் நான் சொன்னபடி விவசாயிகளுக்குச் சர்க்காரே காரண்டி இருந்து தீவிரச் சாகுபடித் திட்டத்தின்கீழ் கொடுக்கிற உதவிகளை எல்லா குத்தகை விவசாயிகளும் பெறும்படியாகச் செய்யாவிட்டால் இந்தத் தீவிர சாகுபடித் திட்டத்தினால் எவ்விதப் ப்ரயோசனமும் ஏற்படாது போகும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஆடுதுறையில் மண்வளப் பரிசோதனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். அதோடு நீண்ட நாளாக தஞ்சை ஜில்லாவில் விவசாயக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கை இருந்து வருகிறது. விவசாயத் தொழிலே சிறந்து நிற்கும் ஜில்லா அது. ஆகவே உடனடியாக ஆடுதுறையில் ஒரு விவசாயக் கல்லூரியையும் ஏற்படுத்தித் தரவேண்டுமாய் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தைத் தவிர வேறு எந்தவிதமான தொழிலுக்கும் லாயக்கான ஜில்லா இல்லை என்று சொல்லப்பட்டு வந்த தஞ்சை ஜில்லா தொழில் துறையிலும் சிறந்து நிற்கவேண்டுமென்று சர்க்கார் சிரத்தை எடுத்துக் கொண்டார்கள். அதன்பேரில் தொழில் பேட்டை, சைக்கிள் தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை இவை எல்லாம் அங்கே வளர்ந்து வருகிறது. இன்னும் பல தொழில்கள் ஏற்படவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படுவதைப் பாராட்டுகிறேன். நூல் நூற்பு ஆலையும் அங்கே ஏற்படுத்தப் போவதாகக் கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அதோடு கரும்புச் சக்கை, மூங்கில், வைக்கோல் போன்ற மூலப்பொருள்கள் அதிகம் கிடைப்பதால் அந்த ஜில்லாவில் காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்த முடியுமா என்பதும் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயமாகும். அதே போல வேதாரண்யம் பக்கம் 150 சதுரமைலுக்கு மேல் உள்ள நிலங்களில் தானாக விளையக்கூடிய உப்பைக்கொண்டு பாக்டரி ஏற்படுத்தலாம். காஸ்டிக் சோடா, ப்ளீச்சிங் சோடா போன்ற பொருள் உற்பத்தி செய்யலாம். இந்த இரண்டு தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தித் தரும்படியாக நான் தொழில் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri G. NARAYANASWAMI NAIDU**: அன்புமிக்க தலைவர் அவர்களே, இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்றும், வாழ்த்தியும், சில யோசனைகளைக் கூறியும் என்னுடைய உரையை ஆரம்பிக்கலாம் என்று கருதுகிறேன். சென்ற பல வருட காலமாக இம்மாதிரி நிதிநிலை அறிக்கைகள் கொடுக்கப்பட்டு அவைகளை நாங்கள் வரவேற்றுத் தொடர்ந்து பேசி வந்திருக்கிறோம். இது வரையிலும் அதில் எந்தவிதமான குறைபாடும் நிகழவில்லை. குறை

[Sri G. Narayanaswami Naidu] [3rd March 1961

பாடுகளைப் பற்றி மட்டும் எச்சரிக்கை செய்யும் சிலபேர்களுக்கு இந்தத் தடவை மிக மிக கஷ்டமாயிருக்கிறது. காரணம், இது ஒரு கட்சியின் தேர்தல் அறிக்கையாகயிருக்கிறது என்று அவர்கள் கூறுவதிலிருந்தே இதில் குறை சொல்ல வாய்ப்பில்லை என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். எல்லாமே கெட்டுப் போய் விட்டது, தனியார் துறை மிகவும் வளர்ந்து விட்டதென்று சிலர் குறை சொல்கிறார்கள். நிறைகளையும் கூறி, குறைகளையும் கூறினால் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதாகயிருக்கும். சிலருக்குக் குறைகளை மட்டும்தான் பார்க்கும் கண் இருக்கிறது. நல்லவைகளையும் பார்க்கிற கண்ணோட்டம் அவர்களுக்கு வந்து விட்டால் நன்றாகயிருக்கும். சில விஷயங்கள் விட்டுப் போயிருக்கின்றன, சில விஷயங்கள் பெருமைப் படத்தக்க அளவில் இருக்கின்றன, என்று சொல்லி இன்னின்னது விட்டுப்போய் விட்டதென்று சொன்னால் அது மாண்புடையதாகயிருக்கும். ஆயிரம் கண்களுடன் பார்க்கவேண்டுமென்று எனக்கு முன்னால் பேசிய நண்பர் ஒருவர் குறிப்பிட்டார். பழைய காலத்தில் மாரியம்மனைத் தூக்கி வருகிறவர் 'ஆயிரம் கண் உடையாள', என்று பாடிக்கொண்டு வருவதைக் கேட்டிருக்கிறோம். கண் கொண்டு பார்க்கும்போது குறைகளை மட்டும் கவனிக்காமல் நிறைகளையும் பார்த்து அதையும் சொன்னால் அதற்கு மதிப்பும், அதைக் கவனிக்கும் நிலைமையும் ஏற்படும். இல்லாவிடில் குறைசொல்லிகள் என்று சொல்லும் நிலைதான் ஏற்படக்கூடும். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை, வரவேற்பதோடு, அதில் சில திருத்தங்களையும் செய்தால் நன்றாகயிருக்குமென்று சில யோசனைகள் கூற விரும்புகிறேன். கூட்டுறவு முறையில் விவசாயிகளுக்குப் பலவிதமான நன்மைகள் ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். பலயிடங்களில் நிலமில்லாதவர்களுக்கு நிலம் கிடைக்கவும், ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்யவும், கடன் உதவி கொடுக்கவும் ஆக வேண்டிய உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. முதலாளி வர்க்கம் பூராவும் மறைமுகமாக அதை எதிர்த்துக்கொண்டு வருகிறார்கள். மடங்களும் தேவாலயங்களும் கடுமையாக அதை எதிர்க்கிறார்கள். ஒருசில மடாதிபதிகள் கொடுத்து அதைக் கெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்கிறார்கள். வேறு சில மடங்கள் ஒன்றும் கொடுக்காமல் கெடுதல் செய்து கொண்டிருக்கிறார்கள். சில மடங்கள் எதிர்க்கட்சிகளுக்குப் பணம் கொடுத்து இதை உடைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். சர்க்காரே இதை நல்லமுறையில் கவனிக்காவிடில் இவ்வருடம் சில விபரீதங்கள் ஏற்படும் நிலை ஏற்படும் என்று கருதுகிறேன். தஞ்சை ஜில்லாவில் அபரிமிதமாகப் பெய்த மழை காரணமாக விவசாயிகள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கரையோரப் பிரதேசங்கள் பூராவிலும் நெல் விளைவு குறைவாக கண்டு முதலாகியிருக்கிறது. மேற்குப் பகுதிகளில் சிறிது நன்கு விளைவு இருந்தாலும் கிழக்குப் பகுதிகளில் விளைவு கெட்டுவிட்டிருக்கிறது. ஜில்லாக் கலெக்டர், புகார் பேரில் கண்டு முதல் கணக்கு எடுத்திருக்கிறார்கள். ஒரு சென்டுக்கு அரை சேர் நெல்லும், சிலயிடங்களில் அதுவும் இல்லாமல், சிலயிடங்களில் 1, 1½ சேரும் கண்டு முதலாகி யிருக்கிறது, என்றால் கரையோரம் பகுதிகள் பூராவும் நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருள்.



3rd March 1961] [Sri G. Narayanaswami Naidu]

இதற்கு எவ்விதமான பரிகாரமும் இதுவரை தேடப்படவில்லை. தங்கள் நிலம் வீணாகப் போய் விட்டதென்றும் அதற்குப் பரிகாரம் வேண்டும் என்றும் இவ்வாண்டு மிராசுதார்கள் எந்தயிடத்திலும் கூக்குரல் எழுப்பவில்லை என்பதைச் சர்க்கார் கவனிக்க வேண்டும். காரணம் என்ன? சர்க்காரிடம் இது பற்றி கேட்டால் விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சர்க்கார் உணர்ந்து கொண்டு விடுகிறார்கள். ஆகவே, வரி வஜா இல்லாவிட்டாலும் சென்ற வருட முதலிலிருந்து அதைக் கொடுத்துக் கொள்ளலாம், என்று நினைக்கிறார்கள். அதோடு விவசாயிகளை வெளியேற்ற இது ஒரு நல்ல வாய்ப்பு என்ற முறையில் முன்கூட்டியே அவர்கள் நோட்டீஸ் விட்டிருக்கிறார்கள்; எப்பொழுதோ கொடுக்கவேண்டிய நெல்லை இப்பொழுது அளக்க வேண்டுமென்று. சிலர் ஒரு படி கூட தள்ளிக்கொடுக்க முடியாதென்று சொல்கிறார்கள். சுமார் 2,000-க்கு மேற்பட்ட விவசாயிகள் இன்று தங்கள் நிலத்தை இழக்கும் நிலையில் இருக்கிறார்கள். சிலயிடங்களில் விவசாயிகளை அப்புறப்படுத்தி விட்டு தங்கள் விருப்பம்போல் புதியவர்களை, சென்ட்டுக்கு 3 ரூபாய் வீதம் வாங்கி புதிய விவசாயிகளை தயார் செய்யவும் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறபடியால் இந்தப் பிரச்னையை நன்கு கவனிக்க வேண்டும். இந்த பட்ஜெட் எவ்வளவு முக்கியமானதோ, அவ்வளவு முக்கியமானது இது. இந்த விவசாயிகள் முழு மூச்சில் காப்பாற்றப் படவேண்டும். சென்ற வருடப் பாக்கியைத் தரா விடில் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப் பட்டு விடுவார்கள் என்று கோர்ட் வழி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும் தருவாயில், இந்த ஆண்டும் மகசூல் சரியான முறையில் காணாவிட்டால், சென்ற ஆண்டு பாக்கியையே இந்த ஆண்டு கொடுக்க முடியாதிருக்கும்போது இந்த வருடம் அவர்கள் எப்படிக் கொடுப்பார்கள் என்பதை சர்க்கார் கவனிக்கவேண்டும். ஐந்தாண்டுகளில் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்யும் படியானதொரு நிலை ஏற்பட்டால்தான் அவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படாதிருக்கும் நிலை ஏற்படும். ஒரு உபமானம் சொல்கிறேன், உண்மை. கடலூரில் 150 ரூபாய் சர்க்கார் சம்பளம் வாங்கும் ஒருவர் மாயவரம் தாலூகாவில் ஒரு குத்தகை கிராமத்தில் சாகுபடி செய்து கொண்டிருப்பதாக கணக்கு எழுதப்பட்டு அதற்கு வேண்டிய ரிக்கார்டுகள் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர் பாக்கிக் குடிகளை வீணாக்கக் கருதி மடங்களில் இருந்து சில்லறை பெற்று குத்தகை வேண்டாமென்று விலகிக் கொண்டால் அவர் கீழுள்ள நூற்றுக்கணக்கான சாகுபடிதாரர்கள் அப்புறப்படுத்தும்படியான நிலை ஏற்படும். ஆகவே, இதை நன்கு ஆராயவேண்டும். எந்தச் சட்டத்தைச் செய்து மக்களுக்கு நன்மை தேடினோம் என்று சொல்லிக் கொண்டிருந்தோமோ அதே சட்டத்தின் பலத்தை உபயோகப்படுத்தி இவ்வாண்டு பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தும்படியான ஹேதுக்கள் இருக்கின்றன என்பதைச் சர்க்கார் கவனிக்க வேண்டும். இடைப்பட்ட குத்தகைக்காரர்களை விலக்க வேண்டுமென்று கோரிக்கை இன்றைய, நேற்றைய தல்ல. சென்ற

[Sri G. Narayanaswami Naidu] [3rd March 1961]

16 ஆண்டு காலமாக இந்தக் கோரிக்கையைத் திரும்பத் திரும்ப விடுத்தும்கூட அதுபற்றி கவனிக்கப்படாமல் சமீபத்தில், கர்ப்பத்திலிருக்கிற நிலச் சீர்திருத்தச் சட்டம் அவர்களை இன்னும் பலப்படுத்தி, அவர்களுக்கு இன்னும் ஆதரவு தேடும் முறையில்தான் எழுதப்பட்டிருக்கிறது. இது மாற்றப் படவேண்டும். இவர்களிடமுள்ள நிலத்தை புதிய சாகுபடிதாரர்களுக்குக் கொடுத்து அவர்களிடமிருந்து பணம் பெறும் வாய்ப்பு நடந்து கொண்டிருக்கிறது. என்னிடம் பத்து வேலி நிலம் இருக்கிறது, இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்தால் நான் விலக்கப்பட்டு விடுவேன். ஆகவே ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு பணம் கொடுங்கள் என்று சொல்லிப் பணம் வாங்கிக் கொண்டு புதிய சாகுபடிதாரர்களுக்கு அவர்கள் இஷ்டம் போல் விடுகிறார்கள். இதை மடங்கள் மறைமுகமாக ஆதரிக்கின்றன. நாங்கள் ஒரு விவசாயக் கூட்டுறவு சங்கம் வைத்திருக்கிறோம். மந்திரியவர்கள் நேரில் வந்து அந்த நிலத்தைப் பெற்றுக் கொண்டார்கள். நாங்கள் அதில் உழைத்தோம், குத்தகை முறையை கான்சல் செய்து 4,800-க்கு கூட்டுறவுச் சங்கத்திற்காக அந்த நிலத்தை ஏற்றுக் கொண்டோம். இன்னும் அந்த நிலம் சட்ட ரீதியாக எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இதில் நாங்கள் உழைத்து வருகிறோம், பாக்கி ஒன்றும் இல்லாது அளந்து விட்டோம். அவர்கள் இந்தச் சங்கத்தை உடைப்பதற்காகக் கூட்டுறவு சங்கத்திலுள்ள ஒரு சிலருக்குச் சலுகைகள் காண்பித்து சிலயிடங்களில் நஞ்சையை மட்டும்தான் உங்களுக்குக் கொடுத்தோமே தவிர புஞ்சையில் கொடுக்கவில்லை என்று நோட்டீஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படியாவது அதை உடைக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். சர்க்கார் அதிகாரிகள் பல இடங்களை சோதனை செய்து நெல் விளைவு சரியாகயில்லை என்று தெரிந்தும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். விளைவு குறைவாக இருந்தாலும், கூடுதலாக இருந்தாலும் நெல் அளந்துதான் தீரவேண்டும், ஏற்கனவே லாபம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே எப்படியாவது நெல் அளக்க வேண்டுமென்று ஆஸ்திகத்தைப் பரப்ப ஆயிரக்கணக்கான ரூபாய்களை அள்ளி வீசிக் கொண்டிருக்கிற பண்டார சந்நதி அவர்கள் நோட்டீஸில் செய்வீகத்தோடு, அராஜனமின்றி, நீங்கள் நெல் அளிக்கவேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை என்று அவர்கள் எப்படியும் பணம் வேண்டும், பணம் வேண்டும் என்று சொல்லி அதைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வதும், பெரியார்களைக் கூப்பிட்டு திருக்குறள் படிப்பதும், அபிஷேகம் செய்வதும், காவடி எடுப்பதும், இப்படியாகக் கணக்கு எழுதிக் காண்பிட்டதைத் தவிர வேறு என்ன செய்கின்றனர். அவர்கள் வருமானத்தைக் குறைக்க வேண்டுமென்று கூறவில்லை.

(Sri V. K. Krishnamurthy in the Chair.)

10-30 a.m. இதுவரையில் அவர்கள் எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அதை அவர்களுடைய வருமானத்திலிருந்து கொடுத்து விட்டு அதற்கு மேல் அவர்கள் சாகுபடி செய்வதற்கு என்னென்ன செய்ய



3rd March 1961] [G. Narayanaswami Naidu]

வேண்டுமோ அவைகளைச் செய்து கொடுத்தால் நிலங்களை எல்லாம் சரியான முறையில் விவசாயத்திற்குக் கொண்டுவர முடியும். அப்படிக் கொடுத்தால் கோவில் வருமானமும் குறையாமல் இருக்கும். ஆனால் அவர்கள் விரும்புவது அப்படியல்ல; தங்களுடைய இஷ்டத்திற்குத் தருந்தவாறு நிலத்தைக் கொடுப்பதற்கும், ஒரு சிலரை நிலங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்கும் ஒரு சிலருக்குச் சலுகை காட்டுவதற்கும் மடங்களிலுள்ளவர்கள் விரும்புகிறார்கள். இவர்கள் மட்டுமல்ல. கோவில்களில் இருக்கின்ற அதிகாரிகளும் இதைத்தான் விரும்புகிறார்கள். இந்த நிலைமையை நிச்சயமாக நமது அற நிலையப் பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் மாற்றியாக வேண்டும். இதில் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் மிகவும் கஷ்டமான நிலைமை வந்து சேரும். கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி, தஞ்சாவூர் ஜில்லாவில் 63 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் 60 சங்கங்கள் மூட வேண்டிய நிர்பந்தமான நிலைமை ஏற்படும். சமீபத்தில் அமைச்சர் அவர்கள் அங்கு சுற்றுப் பிரயாணம் செய்த போது இந்த நிலைமைகளை நன்றாக அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அதோடு மட்டுமல்ல, பல இடங்களிலிருந்தும், கூட்டுறவுத் தொழிலாளர்கள் சங்கம் போன்றவைகளில் நம்பிக்கையில்லாத திரு. தியாகராஜ பிள்ளை அவர்களுடைய கோவிலில் இருந்தும் இப்போது ஏற்பட்டிருக்கின்ற நிலைமைபற்றி தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அறநிலைய அமைச்சர் அவர்களும், கூட்டுறவு அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்து இடைத்தரக் குத்தகைக்காரர்களை ஒழிக்க வேண்டும். சீட்டுக் கொடுக்காமல் விற்பனை செய்து கொள்ளக்கூடிய நிலைமையை எல்லாம் தடுக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களை ஒழிப்பதற்கு மடங்கள் செய்கின்ற சதியிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால், விவசாயிகளுக்காகப் போடப்பட்ட 60 வாரச் சட்டம், பாதுகாப்புச் சட்டம் இவைகள் எல்லாம் நாசமாகப் போய்விடும். அதற்கான இயற்கை வசதிகளும் அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இன்னும் ஒரு மாதத்திற்குள் இதைத் தடுக்கப் புதிய விதிகளைக் கொண்டுவராவிட்டால் எல்லா இடங்களிலிருந்தும், கச்சேரிக்கு வழக்குகளை கொண்டு போக வேண்டிய நிலைமைதான் ஏற்படும். அதோடு கொடுக்க வேண்டிய பாக்கியை உடனடியாகக் கொடுக்கும்படி வற்புறுத்தாமல், ஐந்து வருடங்களுக்குள் கொடுக்கும்படியாக வசதி செய்து கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் பல வழக்குகள் ஏற்பட்டு அவைகள் எல்லாம் கன்ஸிலியேஷன் கோர்ட்டுக்குப் போகக் கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், இல்லாவிட்டால் மாயவரம் பகுதியில், ஆடுதுறை, நன்னிலம் போன்ற இடங்களில் கிட்டத்தட்ட பதினெட்டு ஆயிரம் விவசாயிகள் அப்புறப்படுத்தப்படுவார்கள் என்பதைச் சர்க்காருக்கு ஒரு எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதில் உடனடியாகவே நானேயே

செய்ய வேண்டிய வேலையாக இருக்கிறது என்பதையும்
தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு பல இடங்களிலும்
பூச்சித் தொல்லை ஏற்பட்டதின் காரணமாக நெல்லின்
கனம் குறைந்து கொண்டு வருகிறது. நமக்கு ஏற்பட்டிருக்கும்
5 லட்சம் டன் பற்றுக்குறையைச் சரிகட்டி விடலாம் என்று எதிர்
பார்த்தோம். ஆனால் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட மழை
காரணமாக விளைச்சல் சரியாக இல்லாததால், சேகரித்து வைத்
திருக்கும் நெல்லில் ஒவ்வொரு மூட்டைக்கும் ஒரு மரக்கால் வீதம்
குறைந்து கொண்டே வருகிறது. இந்த நிலைமையில் விவசாயி
களால் கொடுக்கப்படவேண்டிய நெல் கொடுக்க முடியாத நிலை
ஏற்படும். இதை வைத்துக் கொண்டு அவர்களை நிலத்திலிருந்து
வெளியேற்ற முயற்சிப்பார்கள். ஆகவே இதைத் தடுக்க உடனடி
யாக நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் முக்கியம். இதற்கு
உடனடியாகப் பரிகாரம் தேட, உயர்தர அதிகாரிகளை அனுப்பி
ஜில்லா கலெக்டர் மூலமாக அந்தந்த இடங்களில் போய்ச் சமா
தானம் செய்யவேண்டும். அதோடு புதிய சட்டத்தின் மூலமாகப்
பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் தேட வேண்டும். அவர்கள்
கொடுக்கவேண்டிய பாக்கியை ஐந்து வருடங்களில் கொடுக்கலாம்
என்றும், இந்த வருடம் யாரையும் எவிக்ஷன் செய்யக் கூடாது
என்றும், யாரையும் அப்புறப்படுத்தக் கூடாது என்றும் உத்தரவு
பிறப்பிக்க வேண்டும். அதோடு கோர்டுகளுக்கு விவசாயிகளுடைய
வழக்குகள் போய்விட்டால் அதுவும் விவசாயிகளுக்கு உடனடியாக
எந்தவிதமான பயனும் கிடையாது. 100 வழக்குகள் கோர்டுக்குப்
போனால் 97 வழக்குகள் விவசாயிகளை அப்புறப்படுத்தக்கூடிய
தாகத்தான் இருக்கிறது. விவசாயிகளை காப்பாற்றக்கூடியதாக
இல்லை. ஆகவே விவசாயிகளை காப்பாற்றுகின்ற முறையில் புதிய
சட்டங்களைச் சீக்கிரமாக கொண்டு வரவேண்டுமென்று சர்க்காரைக்
கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI SATHIYAVANIMUTHU : மதிப்பிற்குரிய தற்கா
லிகத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் இறுதிநிதி நிலை
அறிக்கையாக நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சமர்பித்துள்ள
இந்த அறிக்கையைக் குறித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்பு
கிறேன். இறுதி அறிக்கையாக இருப்பதினாலோ என்னவோ,
அடுத்த தேர்தல் நெருங்குகிறது என்பதினாலோ என்னவோ
வழக்கத்திற்கு மாறாக, 60 பக்கங்களைக் கொண்ட பெரும் அறிக்
கையாகத் தயார் செய்து, அதனை இந்த மன்றத்தில் கொடுத்திருக்
கிறார்கள். 60 பக்கங்களையும் பொறுமையோடு படிக்கத் தந்த கனம்
நிதி அமைச்சர் அவர்களை நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்க
முடியாது. அதைக் குறித்து எதிர்க்கட்சியில் இருப்பவர்கள், இது
தேர்தல் அறிக்கையாகத்தான் காட்சி அளிக்கிறது என்று
கருத்துத் தெரிவித்தார்கள். அதில் தவறு ஒன்றும் இல்லை என்று
தான் நானும் கருதுகின்றேன். பத்து ஆண்டு காலத்தில்
என்னென்ன சாதித்துக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பக்கம்
பக்கமாகச் சொல்லிக் கொள்ளும் இந்த அறிக்கையில் எந்த
சாதனை வெற்றியாக முடிவடைந்திருக்கிறது என்பதை
இதிலிருந்து நம்மால் பார்க்க முடியவில்லை. வழக்கம் போல
ஒவ்வொரு ஆண்டும் சொல்லுவதுபோல், பெருந் தொழில்
களும், பெருந் தொழில் அகங்களும் இனி வரும் என்றுதான்





இந்த ஆண்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புதிய தொழில்கள்
ஏதாவது உடனடியாக நாட்டில் ஏற்படுத்தப்படுமா என்று
கேட்டால், அதற்கு ஆருடம் கூறுவது போன்றுதான், அதற்
காக ஆராய்ச்சி செய்யப்படுகிறது, இதற்கான நம்பிக்கை இருக்
கிறது, அதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம், அதற்
கான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்றுதான் சொல்லப்
பட்டிருக்கிறதே தவிர நிச்சயமாக முடியும் என்று சொல்லுவதற்கு
இல்லை. உற்பத்தி நாட்டில் அதிகமாகி யிருக்கிறது என்று சொல்லி
கிற வகையில் பார்த்தால், விலைவாசி குறையவில்லை, ஆனால்
விளைச்சல் அதிகமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது என்கின்ற
பழைய பல்லவி இதில் தொனிப்பதை நம்மால் காண முடிகின்றது.
இதைத் தவிர விலைவாசி குறைத்து மக்களின் வாழ்வு உயர்ந்திருப்ப
தாகச் சொல்லுவதற்கில்லை. இன்னும் சமுதாய நலத் திட்டத்திற்கு
என்று சர்க்கார் பணத்திலிருந்து லட்சக்கணக்கான ரூபாய் செல
வழித்துக் கொண்டிருக்கிறோம். அது சரியாகப் பயன்படுத்தப்பட
வில்லை என்கின்ற குற்றச்சாட்டை நாங்கள் வழக்கமாகச் சொல்லிக்
கொண்டிருக்கிறோம். இதற்காகச் செலவு செய்யும் பணம் வெறும்
காங்கிரஸ் கட்சியின் பிரசாரத்திற்காகத்தான் உபயோகப்படுத்தப்
படுகிறதே தவிர மக்களுக்காக பயன்படவில்லை. இதிலிருக்கின்ற
அதிகாரிகளும் கட்சிப் பிரசாரம்தான் செய்து கொண்டிருக்கிறார்
கள். தாங்கள் முழு நேர காங்கிரஸ் ஊழியர்கள் போன்று காட்சி
யளிக்கிறார்களே தவிர தாங்கள் மக்களின் தொண்டர்கள், தாங்கள்
மக்களின் வரிப் பணத்திலிருந்து வேலை செய்கின்ற அரசாங்க ஊழி
யர்கள் என்கின்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதாகவே தெரிய
வில்லை. காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்திற்காகவே பணம் செல
வழிப்பது போன்று இதற்கும் பணம் செலவு செய்யப்படுகிறது.
சென்னையில் சமீபத்தில் நடந்த காங்கிரஸ் வைர விழாவில் பல
அரசாங்க அதிகாரிகள் கலந்து கொண்ட காட்சியை காண
முடிந்தது. இதேபோன்று பல பகுதிகளிலும் நடந்திருக்கின்றன.
ஹரிஜன விழா கொண்டாடுகிறோம் என்று இந்த வருடம் இந்த
அரசாங்கம் கொண்டாடியது. . . . . . . . .

THE HON. SRI P. KAKKAN : இந்த வருடம் மட்டும் அல்ல,
கழிந்த வருடமும் கொண்டாடியிருக்கிறோம்.

SRIMATHI SATHIYAVANIMUTHU : சென்னையில் கொண்டாடிய
இந்த ஹரிஜன விழாவுக்குச் சென்னையில் இருக்கும் என்னைக்
கூட அழைக்கவில்லை, அதில் பார்வையாளராக கலந்து கொள்
வதற்குத்தான் வாய்ப்புத் தரப்பட்டதே தவிர என்னுடைய கருத்
துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புத் தரப்படவில்லை,
அதற்கு என்ன காரணம் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தலைவர் அவர்களே, அம்மையார்
அவர்கள் ஹரிஜன வார விழாவில் அவர்களுடைய கருத்தைச்
சொல்வதற்கு அழைக்கப்படவில்லை என்று கூறினார்கள். விழா
கொண்டாடப்படும்போது இவர்களை அழைத்து இவர்கள் அங்கே
நாட்டைப் பிரிக்கும் கருத்தைச் சொன்னால் என்ன செய்வது
என்று கருதி அதிகாரிகள் அம்மையாரை அழைக்கவில்லையோ
என்னவோ என்று எண்ணுகிறேன்.

[3rd March 1961

SRIMATHI SATHIYAVANIMUTHU : எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்களின் ஒத்துழைப்புடன்தான் நாங்கள் ஜனநாயக அடிப்படையில் எதுவும் செய்கிறோம் என்று சொல்லுகிற சர்க்கார் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களை அழைத்தால் கட்சிப் பிரசாரம் செய்துவிடுவார்கள் என்று நினைத்து அழைக்காதிருப்பார்களேயானால், நாட்டிலே எந்தக் கட்சியும் இல்லாமல் ஏகபோக ஆட்சி இருக்க வேண்டும் என்று நினைப்பவர்களாகத்தான் கருத வேண்டும். (குறுக்கீடு.) அரசாங்கமே ஒரு கட்சியின் சார்பில் நடைபெறுமானால் இது நிச்சயமாக மக்களாட்சியல்ல.

அதேபோன்று ஹரிஜன மக்களது முன்னேற்றத்திற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லி, அதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்று சொல்லி, ஒரு குழுவையும் அமைத்து அந்தக் குழுவில் இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலும் பங்குகொண்டதாகவோ, அதிலும் சென்னை மாவட்டத்தில் இருப்பவர்கள் பங்கு கொண்டதாகவோ நான் தெரிந்துக் கொள்ள முடியவில்லை. சென்னை மாவட்டத்தில் இருக்கின்ற எதிர்க் கட்சி உறுப்பினராக இருப்பதால் இதில் பாரபட்சம் காட்டப்படுகிறது என்று நான் கருதுகிறேன். இப்படி இருக்குமானால் சமுதாய நலத் திட்டம் வெறும் கட்சிப் பிரசாரமாக இருக்கிறது என்று சொல்வதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

நிலச் சீர்திருத்தம் பற்றி அடிக்கடி பேசிக்கொண்டு வருகிறோம். அதற்காக தனி மசோதாகூட கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதை குறித்து நாட்டில் பரவலாகப் பேசப்பட்டது. மக்களுக்கு நிலம் சொந்தமாக்கப்படும் என்று மக்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். அதைக் குறித்து இந்த மன்றத்தில் மேன்மை தங்கிய அவர்கள் பேச்சிலும், அல்லது இந்த உரையிலேயும் ஒரு வரி, ஒரு வார்த்தைகூட இல்லாது, மக்களுடைய கண் துடைப்புக்காக சீர்திருத்தம் என்று எண்ணும்படி இருக்கிறதே தவிர நல்ல எண்ணத்தோடு செய்யப்படவில்லை என்று ஒரு குறையாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று பெருந் தொழில்கள் என்ற வகையில் தனி மனிதனின் வருமானம் வரவரக் குறையக்கூடிய நிலை ஏற்பட்டு வருகிறது என்று அமைச்சர் ஒத்துக் கொள்வதிலிருந்து எவ்வளவு தான் அதிகப்படியாக கோடிக் கணக்கான பணத்தைச் செலவழித்துத் தொழிலை உற்பத்தி செய்கிறோம், அதிகரிப்பு செய்கிறோம் என்று சொன்னாலும், வருவாய் குறையக் கூடியதை ஒத்துக்கொள்வதன் மூலம் தனி மனிதன் நல்ல வாழ்வு பெறவில்லை என்று மறைமுகமாக ஒத்துக்கொள்வதாக முடிகிறது.

நெய்வேலி நிலக்கரியை வெட்டி எடுக்கிறோம், வெட்டி எடுக்க முடியும் என்று நம்புகிறோம் என்று சொன்னால் 12 ஆண்டு காலம் பரீட்சை செய்து பார்த்தும் வேலை பூர்த்தியாகவில்லையென்றால் எப்போது பூர்த்தியாகப் போகிறது? ஒவ்வொரு அறிக்கையிலேயும் திட்டம் போட்டுவிட்டோம் என்று பேசிப் பெருமைபடுகிற



3rd March 1961] [Srimathi Sathiyavanimuthu]

சர்க்கார் ஏன் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டக்கூடாது. துரிதமாக வேலை செய்ய ஏன் மேலும் ஊக்கம் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று எங்களால் ஊகித்துக்கொள்ள முடியவில்லை.

மேலும் எதிர்க் கட்சியில் இருக்கிற நாங்கள் இந்த மன்றத்திற்கு வருவதற்கு முன்னால் எது எது தமிழக மக்களுக்கு சாதிக்க வேண்டும், உற்பத்தி ஆகவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வந்தோமோ, எதை எதை எடுத்துச் சொல்லி வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லி வந்தோமோ அந்தத் திட்டங்களையெல்லாம் இதிலே குறிப்பிட்டு இதோ நாங்களும் இந்தத் திட்டங்களையெல்லாம் செய்கிறோம் என்று சொல்லக்கூடிய முறையில் இருப்பதாக இங்கு தரப்பட்டிருக்கிற திட்டங்களைப் பார்த்து யூகிக்க முடிகிறது. காவிரி வட்ட எண்ணை வேண்டுமென்று சுவரொட்டிகள் மூலமாக எழுதிக் காட்டினோம். உதகையில் கச்சா ஃபிலிம் தொழிற்சாலை வேண்டுமென்று சொன்னோம், சேலம் இரும்பை இன்னமும் எடுக்காமல் இருப்பதை சுட்டிக் காட்டினோம், சேது சமுத்திரம் ஆழமாக்கப்படவில்லை என்று எடுத்துக் காட்டினோம், தூத்துக்குடி துறைமுகம் விஸ்தரிக்கப்படவேண்டுமென்று சொன்னோம். இதற்கெல்லாம் பதில் தருவதைப் போல, இத்தனைக்கும் திட்டத்தைத் தீட்டிவிட்டோம் போதாதோ என்று சொல்லுகிறதாக, இதைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறோம், நிபுணர்கள் வருகிறார்கள், யோசித்துக்கொண்டிருக்கிறோம், திட்டமிட்டு வருகிறோம் என்று சொன்னால் என்றைக்கு மக்கள் உள்ளத்திலே மகிழ்ச்சிகரமான முடிவாக வரும் என்று நம்பிக்கையோடு என்னால் எதிர்பார்க்க முடியவில்லை. இதை எண்ணும்போது இது தேர்தல் அறிக்கையாக காட்சியளிக்கிறது என்று எதிர் கட்சியினர் கூறுவதை நானும் ஒத்துக்கொள்கிறேன் என்று கூற விரும்புகிறேன்.

கல்வித் துறையில் சில சலுகைகள் தரப்படுவதன் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் ஜாதி அடிப்படையில் சில சலுகைகள் தரப்பட்டு வந்தன. அதைக் குறித்து உண்மையிலேயே ஆளுகிற கட்சியைச் சேர்ந்தவர்கள் பெருமையாகப் பேசி வந்தார்கள். ஆனால் இந்த அறிக்கையில் பொருளாதார அடிப்படையில் அத்தனை பேர்களுக்கும் 11-வது வகுப்புவரையில் இலவசமாக கல்வி கற்பிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது வரவேற்கத் தகுந்தது, பாராட்டத் தகுந்தது என்று சொன்னாலும் ஜாதி அடிப்படையில் இருப்பதைத்தான் என்னைப் போன்றவர்கள் இருக்கவேண்டும் என்று விரும்புவார்கள். இன்னமும் எவ்வளவுதான் சலுகைகள் தந்துகொண்டிருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றம் அடையவில்லை. கல்வியில் மற்ற சமுதாயத்தினரைப் போல பூர்ணத்துவம் பெறவில்லை. அதற்காக நான் இப்போது கேட்டுக்கொள்வதெல்லாம் இந்தச் சலுகைகள் ஜாதி அடிப்படையில் இருந்தால்தான் மேலும் தாழ்த்தப்பட்ட மக்களும், பின்தங்கிய மக்களும் பலனடைவதில் எண்ணிக்கையில் அதிகரிக்க முடியும். பொருளாதார அடிப்படையில் இருக்கும் என்பது பெரும் அச்சத்தை உண்டு பண்ணுகிறது. பொருளாதார அடிப்படையில் தரப்படும் சலுகை

[Srimathi Sathiyavanimuthu] [3rd March 1961

கொஞ்சம் கொஞ்சமாக, நாள் ஆக ஆக தகுதி, திறமை என்ற அடிப்படையில் வேலை வாய்ப்பைத் தருவதும், தகுதி திறமை அடிப்படையில் உத்தியோக உயர்வு தருவதும், வேறு பல முன்னேற்றங்களைத் தருவதுமாக முடிந்துவிடுமோ என்று நான் உண்மையில் அஞ்சுகிறேன். நல்ல எண்ணத்தில் பொருளாதார அடிப்படையில் இருக்கவேண்டுமென்று சொன்னால், நல்லெண்ணம் இருக்குமானால் வரவேற்கிறோமே தவிர, கொஞ்சம் கொஞ்சமாக தகுதி, திறமையில் கொண்டு விடுமானால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் இந்தச் சலுகை அவர்களை உண்மையில் மூடி வைத்து கழுத்தை அறுக்கும் திட்டமாக இருக்குமே தவிர வாழ வைக்கும் திட்டமாக இருக்காது. ஆக, ஜாதி அடிப்படையில் இந்தச் சலுகைகள் கொடுத்தால்தான் பின்தங்கிய மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், முன்னேற முடியும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவதில் கிராமங்களில் கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகளும், சென்னை போன்ற இடங்களில் கட்டிக்கொடுக்கப்படுகிற வீடுகளும் அவர்கள் வாழ்வதற்கு வசதியற்றதாக இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கட்டப்படும் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கும் போதே இடிந்து இருப்பதைக் காண்கிறேன். கட்டக்கூடிய வீடுகளில் சில வீடுகள் கட்டி முடிந்து மேலும் சில வீடுகள் சாமான்கள் இல்லாமல் இருந்தால் கட்டிய வீடுகளைப் பிரித்து எடுத்து வேறு வீடுகளைக் கட்டுவதைக் காணும்போது, மக்கள் வாழ்வதற்காகக் கட்டுகிறார்களா அல்லது சென்ற ஆண்டு 10 வீடு கட்டினோம், இந்த ஆண்டு 7 வீடு கட்டினோம் என்று எண்ணிக்கை கொடுப்பதற்காகக் கட்டுகிறார்களோ என்று அச்சப்படுகிறேன். இப்படி அமைச்சர் கக்கன் அவர்கள் தொகுதியில் நான் நேரில் கண்டேன். அவர்கள் வாழுகின்ற முறையில் கட்டுவதற்காக முறையாக பணத்தை ஒதுக்கப்படுகிறதே தவிர சென்னை போன்ற இடங்களில் முழுப் பணத்தையும் செலவு செய்து முடிக்கவில்லை. ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்னால் கனம் அமைச்சர் வெங்கட்ராமன்கூட ஒதுக்கிய பணத்தைச் செலவு செய்ய முடியவில்லை, தேவையான இரும்பு, சிமெண்ட் முதலியவைகள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். சிமெண்டும், இரும்பும் கொண்டுதான் இவர்களுடைய வீடுகள் கட்டப்படுகிறதா, மற்றவர்களுக்குக் கட்டும்போது கிடைப்பதில்லையா, மற்ற கட்டிடங்களைக் கட்டும்போது இல்லையா, இவர்களுக்குக் கட்டும்போது மட்டும் கிடைக்காமல் போவானேன், ஒதுக்கிய பணத்தைச் செலவழிக்காதது ஏன்? அரிஜனங்களுக்கு அதிகப்படியான தொகை ஒதுக்கப்பட்டு, அதிகப்படியாக செலவு செய்கிறோம் என்பதாக இந்தச் சர்க்கார் மிகப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறது; பிரசாரம் செய்கிறது. ஆனால் அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணம் நல்ல முறையிலே செலவழிக்கப்படுகிறதா என்று பார்த்தால், வீடுகள் கட்டுவதற்கு இன்னென்ன பொருள்கள் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு சொல்வது அந்த அரிஜன மக்களை ஏமாற்றுவது போலாகும் என்பதை இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல் இந்தக் கல்விச் சலுகையை எடுத்துக்கொண்டாலும்,



3rd March 1961] [Srimathi Sathiyavanimuthu]

இது அவர்களுக்கு வருங்காலத்தில் பெரிய ஏமாற்றத்தைத்தான் அளிக்கும். எனவே, கல்வி முறை அமைப்பிலே எனது ஆட்சேபணையைத் தெரிவித்துக்கொண்டு, ஜாதி அடிப்படையில்தான் அதை அமைக்க வேண்டுமென்பதை வற்புறுத்திக் கொண்டு, இந்த வரவு செலவுத் திட்டம் நிலையான அறிக்கையாக இருப்பதினால், இந்த சர்க்காரின் வெறும் தேர்தல் பிரசார அறிக்கைதான் இது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI G. VAGHEESAM PILLAI**: சபைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை விவரமாக இந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இலக்கைவிட 34 கோடி அதிகம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. பொது மக்களிடத்திலே நல்ல ஒத்துழைப்பு ஏற்பட்டதின் காரணத்தினால்தான், இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களையும் நல்ல முறையிலே முடிக்க முடிந்தது. அதேபோல் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் நல்ல முறையில் நடைபெற்று பலனடைய வேண்டுமானால், பொதுமக்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். அந்த நம்பிக்கை பொதுமக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதில் கட்சிப் பிரச்னை பற்றி எதுவும் எடுத்துக்கொள்ளாமல், அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த வரவு செலவுத் திட்டப் பிரசங்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது மிகவும் முக்கியம் என்று நான் கருதுகிறேன். இந்தத் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு வேண்டுமென்று சொன்னேன். இப்போது பொது மக்கள் நல்ல விழிப்புடன் இருந்துகொண்டு, நாம் செய்யக்கூடிய காரியங்களை கவனித்துக்கொண்டு வருகிறார்கள். இருந்தாலும், நாம் செய்யக்கூடிய காரியங்கள் அனைத்தையும் அவர்களிடையே இன்னும் தீவிரமாக நாம் பரப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு நல்ல முறையில் பிரசாரம் செய்யவேண்டும்.

பயிர்கள் நன்றாக வளருவதற்கு இயற்கை உரம் 75 சதவிகிதமும், செயற்கை உரம் 25 சதவிகிதமும் போதுமென்பது என்னுடைய கருத்து. பல விவசாயிகளும் இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் 75 சதவிகிதம் இயற்கை உரமிட்டு பயிர் செய்து வருகிறார்கள். இயற்கை உரமாகிய பசுந்தாள் உரத்தைப்பற்றி இப்போதுள்ள வரவு செலவுத் திட்டத்திலேகூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. பசுந்தாள் உரம் இந்த ஆண்டு 1,500 டன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும். எல்லா நிலங்களும் இந்தப் பசுந்தாள் உரத்தின் மூலம் நல்ல விளைச்சலைக் கொடுக்கும். அதிக விளைச்சல் வேண்டுமென்று சொல்லக்கூடிய காலத்தில், இந்த உர விநியோகத்தின் மூலம் நல்ல உற்பத்தியை நாம் உண்டாக்க முடியும். ஆகவே, இப்போது கொடுக்கப்பட்டுள்ளது போதாது. இன்னும் அதிகமாகக்

[Sri G. **Vagheesam** Pillai] [3rd March 1961

கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது ஒவ்வொரு பிளாக்குகளிலும் 100-க்கு 20 பர்செண்ட் சப்சிடி கொடுத்து இந்த பசுந்தாள் உரம் விநியோகிக்கப்படுகிறது. இதைக் குடியானவர்கள் வாங்கி நல்ல முறையில் பயனடைகிருர்கள். ஆகவே இதை இன்னும் தீவிரமாகச் செய்யவேண்டும். அதேபோல் கால்நடைகளின் மூத்திரங்கள் வீணுகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பல வழிகள் உண்டு. இதைப்பற்றி விவசாய இலாகாவினர் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு, குறைந்த செலவில் உரம் தயாரிப்பதற்காக தீவிரமாகப் பிரசாரம் செய்யவேண்டும்.

அம்மோனியம் சல்பேட் போன்ற செயற்கை உரம் 25 சதவிகிதம் அதேமாதிரி நிலத்திற்குத் தேவைப்படுகிறது. ஆனுல் இந்த உரத்திற்கு நம்முடைய நாட்டிலே இப்போது பற்ருக்குறை இருக்கிறது. பற்ருக்குறையைப் பூர்த்தி செய்வதற்காக இந்தியாவிலே கிடைப்பதற்கு மேல் தேவைப்படும் உரத்தை வெளி நாடுகளிலிருந்து அவசியம் இறக்குமதி செய்யவேண்டும். அப்போதுதான் நாம் நல்ல விளைச்சலைப் பெற முடியும். அதேபோல் சூபர் பாஸ்பேட் உரத்தையும் விவசாயிகள் உபயோகப்படுத்தி, அதிகப் பலனைக் கண்டு வந்தார்கள். இதுவும் நல்ல முறையிலே கிடைப்பதற்கு தொடர்ந்து முயற்சி செய்யவேண்டும்.

விவசாயத்திலே முக்கியமாக நல்ல விதை வேண்டும். அதற்காக அரசாங்கம் இப்போது ஒவ்வொரு பிளாக்கிலும் உள்ள கிராமத்திலுள்ள குடியானவர்களிடம் உள்ள விதைகளில் நல்ல விதை வைத்திருக்கக்கூடிய ஒரு குடியானவனைத் தேர்ந்தெடுத்து, அவனிடமிருந்து அவ்விதைகளை மணங்கு ஒன்று இரண்டு ரூபாய் வீதம் வாங்கிக்கொள்கிறது. இது நல்ல காரியம்தான். ஆனுல் ஒருவர் மாத்திரம் என்பது போதாது. சில கிராமங்களில் இரண்டு மூன்று பேர்கள் என்று எடுத்துக்கொண்டால் நல்லது. அப்படி அவர்கள் கொடுக்கக்கூடிய விதைகள் பேரிலே அவர்கள் பெயரை குறிப்பிட வேண்டும். ஏனென்ருல், அவர்கள் பெயரைக் குறிப்பிட்டால், அவர்கள் கொடுக்கக்கூடிய விதைகள் நன்கு விளைய வேண்டுமென்பதற்காக, நல்ல விதைகளைக் கொடுப்பார்கள். ஆகவே, யார் கொடுத்தாலும் அதிலே அவர்கள் பெயர் குறிப்பிட வேண்டும். இவ்வாறு குறிப்பிடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அநேகமாக நம்முடைய நாட்டிலே இப்போது பெரிய அணைக்கட்டுகள் எல்லாம் கட்டி முடித்தாகிவிட்டது. நாம் தொடர்ந்து செய்துக்கொண்டு வருகின்ற அபிவிருத்தி வேலைகளுக்கு இனி கிருஷ்ணு, கோதாவரி நதிகளின் தண்ணீர் அவசியம் வந்தாக வேண்டும். அதைப் பெறுவதற்கு தேசிய அடிப்படையில் அணுக வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே முறையில் இந்தத் திட்டத்தை நாம் பெறுவதற்குத் தொடர்ச்சியாக முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். சீக்கிரத்திலே அதற்கு ஒரு ஆரம்பமாவது செய்ய முயற்சி செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

டெல்டா பிரதேசங்களிலே புதிதாக வாய்க்கால்கள் வெட்டி வடிகால் வசதி செய்துகொடுக்க வேண்டும். கிருஷ்ணு, கோதாவரி போன்ற புதிய டெல்டாக்களில் சிமெண்ட் போடப்பட்டு, நல்ல



3rd March 1961] [Sri G. **Vagheesam** Pillai]

முறையில் சாண்ட்விச் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கு 60, 70 பர் செண்ட் அதிக சாகுபடி செய்ய முடிகிறது. நம்முடைய பழைய டெல்டாக்களிலே இது தூர்ந்து போய் விடுகிறது. சில சமயங்களில் நீர் குறைந்துள்ள காலங்களில் 40 பர் செண்ட் தான் சாகுபடி செய்ய முடிகிறது. ஆகவே இதை அனுசரித்துத்தான் ஒரு ஜீ. ஓ.கூட இருக்கிறது. ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டு இருக்கக்கூடிய இடங்களுக்கு சர்க்கார் செலவிலேயே இந்த வசதியைச் செய்துகொடுக்க இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த உத்திரவும் தொடர்ச்சியாக இருக்கச் செய்தால், மிகவும் உதவியாக இருக்கும். இது எப்பொழுதும் இருக்கும் என்று நிரந்திரமான ஒரு உத்திரவு போட்டால் நல்லது. அப்படி இருந்தால், அதை உத்தேசித்து எஸ்டிமேட் முதலியவை போடுவதற்கும் வசதியாக இருக்கும். அப்படி இல்லாவிட்டால், அடுத்த வருஷம் இருக்குமோ என்னவோ என்ற முறையிலே இவ்வேலை தொடர்ந்து நடைபெறுவதில் கஷ்டமேற்படும். ஆகவே, இந்த உத்திரவைத் தொடர்ந்து நிரந்திரமாக நீடிக்க சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழைய குடிமராமத்து ஆக்ட்டை நாம் புதுப்பிக்க வேண்டும். அதை நல்ல முறையில் மாற்றி அமைக்க வேண்டும். சின்ன சின்ன வாய்க்கால்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டு, அவைகளை நல்ல முறையில் வெட்டி, அதற்காகும் செலவை ஜனங்களிடத்திலே வசூல் செய்துகொள்ளலாம். அதைப் பரவலாக ஏற்படுத்த வேண்டும். இதற்கு டெக்னிகல் ஸ்டாப் போதாது என்று சொன்னுலும்கூட, ஒவ்வொரு சப்-டிவிஷனுக்கும், அல்லது ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஒரு ஸ்பெஷல் ஆபீசர் போட்டு இந்த வேலையைச் செய்தால் அதன்மூலம் நல்ல பலன் கிடைக்கும். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானுல், சிதம்பரம் தாலுகாவிலே இதனுல் இருபோக சாகுபடி நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 1956-ம் வருஷத்திலே 15,000 ஏகரா என்று இருந்த இடத்திலே, இப்போது 50,000 ஏக்கரா இந்த இருபோக சாகுபடியில் இருந்து வருகிறது. இதற்குக் காரணம், இங்கு இந்த வாய்க்கால்களை வெட்டியதுதான். ஆகவே, பெருவாரியான ஏரி, குளங்களை வெட்டுவதிலே் இன்னும் தீவிர கவனம் செலுத்த வேண்டும். தென் ஆற்காடு மாவட்டத்திலே அதிக ஏரிகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் செப்பனிடப்பட வேண்டும். ஒவ்வொரு பழைய அணைக்கட்டுக்கும் அருகாமையில் ஒரு ஏரி இருக்கிறது. இவைகளில் தண்ணீர் தேக்கப்பட்டு, வெள்ளத்தைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும். இவைகள் எல்லாம் நல்ல முறையில் தூர்ந்து போகாமல் அவ்வப்போது செப்பனிடப்பட்டு வரவேண்டும்.

என்னுடைய மாவட்டத்திலே நீர்ப்பாசனத்திற்கான பல ஆறுகள் இருக்கின்றன. கெடிலம், மணிமுத்தாறு, வெள்ளாறு போன்ற ஆறுகள் அங்கிருக்கின்றன. முன்பெல்லாம் நீர்ப்பாசன மகாநாடுகள் நடந்துகொண்டு வந்தன. இப்போதும் அம்மகாநாடுகள் நடந்துகொண்டு வருகின்றன. இந்த மகாநாடு ஆறு மாதத்திற்கு ஒரு முறை மிக நல்ல முறையில் நடைபெறும். இந்த மகாநாடு நடைபெறுவதை எந்தக் காரணத்தைக் கொண்டும்

நிறுத்திவிடக்கூடாது. இதற்கும் ஜீ.ஓ. இருக்கிறது, இந்த உத்திரவின்படி முன்னால் நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைகளைப் பற்றி என்னென்ன காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று விவாதிக்க வேண்டும். இதுபோல் விவாதிப்பதால், 100-க்கு 75 பர் செண்ட் வேலைகள் நல்ல முறையிலே நடந்திருக்கும். ஆகவே, இந்த நீர்ப்பாசன மகாநாட்டை தொடர்ந்து ஆண்டுக்கு இரண்டு முறை ஒவ்வொரு ஜில்லாவின் தலைநகரிலும் நடத்த வேண்டும். அப்படி நடத்தும்போது அதற்கு நல்ல முறையில் விளம்பரம் கொடுக்க வேண்டும்.

மத்திய அரசாங்கத்தினுடைய உதவியைக் கொண்டு ஆங்காங்கு தோண்டப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திட்டம் தென் ஆர்க்காடு ஜில்லாவிலே வழுதலம்பட்டு, பார்வதிபுரம் ஆகிய இரண்டு இடங்களில் நல்ல முறையில் நடந்து வருகிறது. இதனால் அதிகமாக செலவாகிறது என்று சொல்வதற்கும் இல்லை. இந்த இரண்டு இடங்களைப் பொறுத்தவரையில் அங்கு அதிஷ்டவசமாக நிறைய நீர் ஊற்றுக்கள் இருக்கின்றன. அங்கு 80 ஆர்டிஷியன் கிணறுகள் தோண்டி, 7,000 ஏக்கராக்கள் வரை நல்ல முறையில் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் எந்தவித நஷ்டமும் இல்லை. ஆகவே, இம்மாதிரியான கிணறுகளைத் தோண்டி அதற்காகும் செலவைச் சீக்கிரத்திலே வசூல் செய்துகொள்ளலாம். இப்படிச் செய்வதால் இன்னும் கூடுதலான பகுதிகளில் நல்ல விளைச்சல் ஏற்படுத்த
11 a.m. முடியும். இன்னும் 100 கிணறுகள் கூட சாங்க்ஷன் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டிருக்கிறேன். அதையும் சீக்கிரம் சாங்க்ஷன் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது ரொம்ப 'பாபுலராக' இருக்கிறது. நான் முன்பு சொன்னது 'ஆர்டிஷியன்' கிணறுகள். 'சப் ஆர்டிஷன்' குழாய்க் கிணறுகள் கூட 75 சாங்ஷன் செய்திருக்கிறார்கள். இதற்கு ரூ. 4,500 கடனாகக் கொடுக்கப்படுகிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் 55 கிணறுகளில் நல்ல ஜலம் கிடைத்திருக்கிறது. இது விவசாயிகளுக்கு மிகவும் பயன்படுவதால் இதை பரவலாக அதிகப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக் கொள்ளுகிறேன். பட்ஜெட் உரையிலேகூட பரீட்சார்த்தமாக மத்திய அரசாங்கம் சில குழாய்க் கிணறுகளை வெட்டினார்களென்றும், அதற்கு அதிகமாக செலவு ஆகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு அதிகமாக செலவு ஆகாது. குறைந்த செலவில் பல விவசாயிகள் நன்மை அடைகிறார்கள். ஆகவே, இதில் தீவிரமாக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்கு நான் ஒரு ஸ்கீம் கொடுத்தேன். அதாவது 'நோ பிராபிட் நோ லாஸ் ஸ்கீம்'. சர்க்கார் செலவிலே 'சப் ஆர்டிஷன்' குழாய் கிணறுகள் போட்டு, மின்சாரத்தைக் கொடுத்து, அந்தச் செலவை கிராமத்தார்களே ஒத்துக் கொள்ளுகிறார்கள். அதாவது அரசாங்கமே செலவு செய்துவிட்டு அதை மக்களிடமிருந்து தீர்வையாக வசூலித்துக்கொள்ளலாம். ஆர்டிஷன் குழாய் கிணறுகள் எப்படி





வசதியாக இருக்குமோ, அதேமாதிரி இது நல்ல முறையில் வசதியாக இருக்கும். ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் இதைச் செய்யலாம். ஏனென்றால் அங்கே 100, 150 அடியில் நீர் ஊற்று இருக்கிறது. 20,000, 25,000 ஏக்கர் நிலங்கள் நல்ல முறையில் இருபோக சாகுபடி செய்யக்கூடிய அளவிற்கு நல்ல பலன் கிடைக்கும். அரசாங்கத்திற்கு அதிக நஷ்டம் இல்லை. அதற்கு வேண்டிய கருவிகள் இருந்தால் அதை நல்ல முறையில் அமைத்துச் செய்யலாம். அதை பரீக்ஷார்த்தமாக எடுத்துக்கொள்ளலாம். அது அரசாங்க செலவில் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அதனால் அதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

கால்நடை அபிவிருத்தி சம்பந்தமாக நம்முடைய நாட்டிலே இன்னும் அதிகமாக கவனம் செலுத்தப்படவேண்டும். நான் விளம்பரம் வேண்டும் என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், விவசாயிகளுக்கு பல இடங்களில், 'அப் கிரேடிங்' 'ஆர்டிபிஷியல் இன்ஸெமினேஷன்' இவைகளைப் போன்ற விஷயங்கள் தெரியாமலே இருக்கிறது. இவைகளை இன்னும் அதிக தீவிரப்படுத்தவேண்டும்.

'பெர்காபிடா இன்கம்' பஞ்சாப் ராஜ்யத்தில் அதிகமாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் அங்கு 'மிக்ஸட் பாரம்' மாடு வளர்ச்சி, கோழி வளர்ச்சி,, பழத் தோட்டம், 'கமர்ஷியல் கிராப்' 'ரொடேஷன் ஆப் கிராப்ஸ்' ஆகியவைகளெல்லாம் அங்கு இருக்கின்றன. அதனால்தான் பெரிய தொழிற்சாலைகள் இல்லாத பஞ்சாப் ராஜ்யத்தில் 'பெர்காபிடா இன்கம்' அதிகமாக இருக்கிறது. நமது ராஜ்யத்திலும் பெரிய தொழிற்சாலைகள் வந்து கொண்டிருக்கிறது. நாமும் 'மிக்ஸட் கிராப்' பயிர் செய்யக்கூடிய அளவிலே ஒரு திட்டம் வகுக்கவேண்டும். ரிசர்ச் ஸ்டேஷனில் 5 ஏக்கர், 10 ஏக்கர், 20 ஏக்கர் நிலத்தில் ரீஜினல். வாரியாக—ஒரு இடத்திற்கு இடம் நிலைமை மாறலாம்—என்னென்ன முறையில் என்னென்ன பயிர் செய்தால் அதிக பலன் கிடைக்கும் என்று திட்டங்களை வகுத்துக்கொடுக்கவேண்டும். ரிசர்ச் ஸ்டேஷனில் இம்மாதிரி திட்டங்களை எடுத்துக்கொண்டு 'மிக்ஸட் பாரம்' ஏற்படுத்தி அதிகப்படியான உற்பத்தி செய்வதில் தீவிர கவனம் செலுத்தினால், 'பெர் காபிடா இன்கம்' நம்முடைய ராஜ்யத்திலும் அதிகரிக்கும். அதிலும் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்தல அபிவிருத்தி திட்டம் சம்பந்தமாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய அரசாங்கம் கடைசி 2, 3 வருஷங்களுக்கு உதவி கொடுக்கவில்லை, நம்முடைய அரசாங்கம் ஒரு வருஷம் ஒரு தடவை கொடுக்கிறேன் என்று உத்தரவு கொடுத்து, அந்த வருஷத்தோடு நிறுத்திவிடப்போகிறோம் என்று சொன்னதிலே, கடைசி 2, 3 வருஷங்களில் ஸ்தல அபிவிருத்தித் திட்டம் சரியான முறையில் நடைபெறாமல் விட்டுப்போய்விட்டது. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஸ்பஷ்டமாக 5 கோடி ரூபாய் இந்திய அரசாங்கம் கொடுக்கிறது, நம்முடைய சென்னை அரசாங்கம் கொடுக்கும் பணமும், மற்றும் பொது மக்களுடைய பணமும் சேர்ந்து 11 கோடி ரூபாய் செலவழிக்கப்படும் மூன்றாவது

ஐந்தாண்டு திட்ட காலத்தில் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது நல்ல திட்டம். இதனால் ஸ்தல அபிவிருத்தி திட்டங்களுக்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன.

அடுத்தபடியாக மின்சாரத் துறையில் நல்ல முறையில் அபிவிருத்தி காணப்படுகிறது. 12 யூனிட் உபயோகப்படுத்திக் கொண்டிருந்த ஒரு நபர் இப்பொழுது 60 யூனிட் உபயோகப் படுத்தக்கூடிய அளவிற்கு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. 1951-ல் 14,000 பம்பு செட்டுகள் இருந்தன. 1960-ல் 116,000 பம்பு செட்டுகள் இருக்கின்றன. ஒரு பங்கிற்கு 7 மடங்கு, 8 மடங்கு விருத்தி அடைந்திருக்கிறது மின்சாரம். ஒரு சிலர் சொல்லுவது போல் வெளிச்சம் போடுவதற்கு மட்டும் இல்லாமல் விவசாயத் துறையில் 7 பங்கிற்கு அதிகமாக மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு பெரிய சாதனை என்று சொல்லவேண்டும். ஒரு குதிரை ஓட்டத்திற்கு ரூ. 50 'மினிமம் சார்ஜ்' இருக்கிறது. டெல்டா பிரதேசங்களில், இருபோக சாகுபடி பிரதேசங்களில் அதிகப் பேர்கள் பம்பு செட்டுகள் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்கள் வருஷத்தில் 4 மாதங்களுக்குத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகவே, இந்தப் பிரதேசங்களிலும் 'மினிமம் சார்ஜை' ரூ. 35-ஆக குறைத்தால் நலமாக இருக்கும்.

துறைமுக அபிவிருத்தியில் பரங்கிப்பேட்டையையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அது பழைய காலத்தில் போர்சுகீஸ் காலத்திலிருந்து துறைமுகமாக இருந்தது. அந்தத் துறைமுகத்தை செப்பனிடுவதையும் துறைமுக அபிவிருத்தி திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

11-வது வகுப்பு வரை எல்லோருக்கும் இலவசக் கல்வி வசதி செய்துகொடுப்பதாக கல்வி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையில் அறிவித்தார். உடனே அவர் சிதம்பரம் வந்தபொழுது எல்லோரும் அதை நல்ல முறையில் வரவேற்றார்கள். எல்லா சமூகத்தினரும் இது குறித்து சந்தோஷப்படுகிறார்கள். இதுபோக பின் தங்கிய சமூகங்களும், ஹரிஜன சமூகத்திற்கும் மற்ற சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன. ஆந்திரா பிரிவதற்கு முன்னால் 1950-51-ல் ஹரிஜன முன்னேற்றத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 69 லட்சமாக இருந்தது. இப்பொழுது ஆந்திரா பிரிந்த பிறகு 1960-61-ல் ரூ. 355 லட்சமாக அதிகரித்திருக்கிறது. அரசாங்கம் இதற்காக செலவழிக்கும் தொகையை 'கம்பாரடிவாக' பார்க்க வேண்டும். முன்பு இருந்ததைவிட பல மடங்கு அதிகமாக செலவழிக்கிறார்கள்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கு ஒரு வெடரினரி காலேஜ் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் தாலூகாவில் ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் கொடுக்கும் விஷயம்தான் ரொம்பவும் முக்கியமான பிரச்னை. நஞ்சைப் பிரதேசங்களை 'அகவயர்' செய்வதிலே கஷ்டம் இருக்கிறது. இதற்காக தனியாக 2 தாசில்தார்கள் போட்டிருந்தார்கள். மற்ற தாலூகாக்களும் 'எனக்கு வேண்டும், உனக்கு வேண்டும்' என்று கேட்டதில் அங்கிருந்து ஒரு தாசில்தாரை எடுத்து வேறு





இடத்திற்கு அனுப்பிவிட்டார்கள். எப்பொழுதும் இருந்தபடி அங்கு இன்னொரு தாசில்தாரைப் போட்டு இதை நல்ல முறையில் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI R. J. SUNDAR SINGH:** கனம் தலைவர் அவர்களே, 1961-62-ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தை ஆதரித்து, இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக முடித்திருக்கிறோம். மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோள்களையும் அடைவோம் என்று நம்பிக்கை ஊட்டும் வகையில் இந்த வரவு செலவுத் திட்டம் இந்தச் சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களைப் போலவே, இந்தத் திட்டத்திலும் விவசாயத்திற்கு முக்கியமான பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் மேற்கொண்ட அபிவிருத்தி பணிகளின் காரணமாக இன்று குடியானவர்களிடையே ஒரு ஊக்கமும் விவசாயத்தின் பேரில் ஒரு ஆர்வமும் ஏற்பட்டுள்ளது. உரங்களை நல்ல முறையில் பயன்படுத்தவும், பாசன வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளவும், மற்றும் அரசாங்கம் கொடுக்கும் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ளவும் இன்று அவர்களுக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இதில் அவர்கள் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள். ஆனால் அரசாங்கத்தினிடம் இருக்கும் சில குறைகள் அவர்களுடைய ஆர்வத்தை பாதிக்கும் வகையில், உணவு உற்பத்தியை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன.

ஐம்பது, 60 வருஷ காலமாக தாம்பரபரணி பாசனத்தில் நஞ்சை சாகுபடி செய்துவரும் நிலங்கள் இன்னமும் புஞ்சையாக கருதப்படுகிறது. அதேபோன்று இருபோகம், மூன்று போகம் சாகுபடி செய்துவரப்படும் நிலங்கள் ஒருபோக சாகுபடி நிலங்களாக கருதப்பட்டு, அந்த நிலங்களுக்கு தண்டத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. அவர்கள் நஞ்சை சாகுபடி செய்தாலும் அல்லது ஒரு போகத்திற்கு மேல் இரண்டு போகம், மூன்று போகம் சாகுபடி செய்தாலும், அதற்கு தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. அம்மாதிரி தண்டத் தீர்வை விதிக்கப்படுவதினால் விவசாயிகளுடைய உற்சாகமும் ஆர்வமும் அதிகமாக பாதிக்கப்படுகிறது. அவர்கள் கோர்ட்டுகளுக்குச் சென்று தங்களுடைய உரிமைகளை ஸ்திரப்படுத்தும்படியான நிலைமை இங்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு வேளை அவர்களுக்கு கொடுக்கக்கூடிய அளவிற்கு தண்ணீர் இல்லை என்று சொன்னால், தண்டத் தீர்வை விதிக்கலாம். ஆனால், அவர்கள் 50, 60 வருஷங்களாக விவசாயம் செய்து வருகிறார்கள். ஐம்பது, அறுபது வருஷங்களாக தண்ணீர் இருந்திருக்கிறது. இப்பொழுதும் அதிகமாக தண்ணீர் கடலில் திறந்துவிடப்படுகிறது. ஆகையினால் அவர்களுக்கு தண்ணீர் வசதி இருக்கிறது. என்றாலும், ஏதோ, அரசாங்கத்தினுடைய ஒரு திட்டத்தினால் ஒரு போகத்திற்கு மேல் அல்லது புஞ்சை நிலத்தில் நஞ்சை சாகுபடி செய்வதற்காக தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. இந்தக் குறையை அரசாங்கம் நிவர்த்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri R. J. Sundar Singh] [3rd March 1961

அதுமட்டுமல்ல, இந்த ஜமீன் ஒழிப்பு இடங்களில் செட்டில்மென்டு இப்பொழுது வந்துள்ளது. இந்த செட்டில்மெண்டு அங்குள்ள நிலைமையை **'It has unsettled the conditions there'** என்று சொல்லப்படுகிறது. அவர்கள் சில இடங்களில் பனைகளை எத்தனையோ வருஷக்கணக்கில் உண்டுபண்ணி, அவர்கள் பேரில் அவைகள் பட்டா ஆகி, அவர்கள் அதற்கு தீர்வை செலுத்தி, அவர்கள் அதை விற்பதற்கும், வெட்டுவதற்கும் உரிமை இருந்தும், இன்று ஜமீன் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் அந்தப் பனைகள் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டவை என்று சொல்லி, அவைகள் 'பல்மைரா என்யூமரேஷன் அக்கவுண்டில்', கொண்டுவரப்பட்டுள்ளன. இதன் காரணமாக அந்தக் குடியானவர்களுடைய பனைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இது ஒரு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் குறையை அரசாங்கம் பரிசீலனை செய்து பழையபடி அவர்களுக்கே பட்டா கொடுத்து, அவர்களுக்கு பனைகளை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு உரத் தொழிற்சாலையை அமைக்கப்போவதாகவும், ஆழ் கடல் மீன் பிடிப்பதற்கு ஒரு திட்டம் வகுத்திருப்பதைப் பற்றியும், மேலும் ரசாயனப் பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை அங்கு வரலாமென்பது பற்றியும், துறைமுக அபிவிருத்தித் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேலும் சேதுசமுத்திரத் திட்டத்தை அமல் நடத்துவதற்கு தொடர்ந்து முயற்சிகள் எடுக்கப்படுமென்றும் கூறியிருப்பது குறித்து உண்மையிலேயே சந்தோஷப்படுகிறேன். அதே நேரத்தில் இந்தத் தொழில்களுக்கு அதிகத் தண்ணீர் தேவைப்படும் என்று கருதப்படுகிறது. இந்தத் தொழில்கள் நடைமுறைக்கு வரும்பொழுது நாள் ஒன்றுக்கு சுமார் 4 லட்சம் அல்லது 5 லட்சம் காலன் தண்ணீர் தேவைப்படலாமென்று கருதப்படுகிறது. பெரும் அளவுக்கு இந்தத் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டுமானால், தூத்துக்குடியிலிருந்து 13 மைல் தூரத்திலுள்ள தாமிரபரணி ஆற்றிலிருந்துதான் கொண்டு வரமுடியுமென்ற கருத்து இருக்கிறது. ஆனால் அந்த இடத்தில் தண்ணீர் உப்பாக இருக்கலாம், நல்ல தண்ணீர் ஒருவேளை கிடைக்காமல் இருக்கலாமென்றும் கருதப்படுகிறது. ஆனால் அதிலே சிறு அணைகள் கட்டி ஆற்றுத் தண்ணீரைத் தேக்கி வைப்பதினால் கீழ் மட்டத்துத் தண்ணீர் நல்ல தண்ணீராக மாறக்கூடும், அதே சமயத்தில் தொழில்களுக்கு வேண்டிய தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யலாமென்ற கருத்தும் நிலவுகிறது. இதனையெல்லாம் பரிசீலனை செய்து. அரசாங்கம் தண்ணீர் சப்ளைக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தூத்துக்குடி நகரத்தின் நடுவில் ஒரு ஓடை அமைந்துள்ளது. பலத்த மழை பெய்த காரணத்தினால் இந்த ஓடையில் வெள்ளம் வந்து உடைப்பு ஏற்பட்டு, நகரத்திற்குள்ளேயெல்லாம் தண்ணீர் வந்து அதிக சேதத்தை உண்டுபண்ணியிருக்கிறது. 1960 டிசம்பர் மாதத்திலும், இந்த வருஷம் ஜனவரி மாதத்திலும் இரு முறை அவ்விதம் உடைப்பு ஏற்பட்டு, நகரத்திற்குள்



3rd March 1961] [Sri R. J. Sundar Singh]

தண்ணீர் வந்து அநேக வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த அபாயத்தை நிரந்தரமாகத் தடுப்பதற்கு தூத்துக்குடி நகர மன்றம் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசினரின் வெள்ளக் கட்டுப்பாடுக் குழுவின் உதவி பெற்று, அவர்களிடமிருந்து நிதி வசதி பெற்று, இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஜனவரி மாதத்திலே தூத்துக்குடித் துறைமுகத்தில் ஏற்பட்ட புயலின் காரணத்தால் பல கோணிகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன. அவைகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும், அல்லது அவர்களுக்குக் கடன் உதவியாவது செய்யவேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கடன் உதவி அவர்களுக்கு அளிக்கவேண்டும். போர்ட் டிரஸ்டில் அதற்கு பணம் இருக்கிறது. அதிலிருந்தாவது உதவி செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த உதவியை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**SRI D. S. AUTHIMOOLAM :** தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பட்ஜெட் உரை ரொம்பவும் விரிவான ஒரு உரை. சென்ற வருஷத்து உரையே கிட்டத்தட்ட 44 பக்கங்கள் இருந்தன. அந்த உரையை அவ்வளவு நீளமாக எழுதிவிட்டேன், எல்லோரும் மன்னிக்கவேண்டுமென்றுகூட கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த வருஷத்து உரையோ 60 பக்கங்கள் இருக்கின்றன. எவ்வளவோ நீண்டுகொண்டே போகிறது. வாஸ்தவத்தில் சர்க்கார் காரியங்களும் நீண்டு கொண்டே போகின்றன. (சிரிப்பு.) எங்கே பார்த்தாலும் ரொம்ப செழிப்பு என்று சொல்லுகிறார்கள். 1960-61-ல் 81 கோடி ரூபாய் நாம் எதிர்பார்த்தோம். ஆனால் சுமார் 87.50 கோடி ரூபாய் நமக்கு வந்திருக்கிறது. அதேமாதிரி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, நமது கனம் நிதி மந்திரி அவர்கள் நாம் அதிகப்படியாக 34 கோடி ரூபாயை நாம் போட்ட திட்டத்திற்கு மேல் செலவழித்து வெற்றிகரமாக நடத்திவிட்டோம் என்று கூறினார்கள். 1954-55-ல் தமிழ் நாட்டு சர்க்காரின் வருமானம் 43 கோடியாக இருந்தது; இந்த வருஷம் 88 கோடி ரூபாயாக, அதாவது இரு மடங்கு உயர்ந்திருக்கிறது. மேற்கொண்டு இந்திய சர்க்கார் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 12,000 கோடி ரூபாய் செலவழிக்கப் போகிறார்கள். இது எல்லாம் எதைக் காட்டுகிறது? இந்த தேசத்தில் ரொம்பவும் பெரிய பெரிய திட்டங்களை அரசாங்கம் தீட்டி, பணத்தினுடைய மதிப்பை இழக்கும்படியாகச் செய்து, எங்கே பார்த்தாலும் விலைவாசிகள் விஷம்போல் ஏறி இருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறதே தவிர, வேறு விசேஷமான செழிப்பு எதுவும் ஏற்படவில்லை. செழிப்பு எங்கே இருக்கிறது? அரசாங்கத்துக்கு வேண்டியவர்கள் அல்லது இந்த தேசத்தில் உள்ள சாமர்த்தியமான தொழில் அதிபர்களிடம் செழிப்பு இருக்கலாம். ஆனால் நீங்கள் இப்பொழுது போட்டுக் கொண்டு வரும் திட்டங்கள் மூலம் மாட்டிக் கொண்டது யார்? நடுத்தர மக்கள், அதாவது ஒரு குறிப்பிட்ட

[Sri D. S. Authimoolam] [3rd March 1961

மாத வருவாயைப் பெறுபவர்கள். ஆகவே இதற்கு பரிகாரம் கண்டுபிடிக்கவேண்டியது ரொம்பவும் அவசியம். முப்பத்திநான்கு கோடி ரூபாய் அதிகப்படியாகச் செலவழித்துவிட்டார்கள் என்று சொன்னால், எந்தெந்த இனங்களில் செலவு செய்திருக்கிறார்கள் என்று மந்திரி அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தால் அதைப் பற்றிப் பெருமைப்படலாம். அப்படி இருந்தால் குறிப்பிட்டு இருப்பார். ஏதோ எஸ்டிமேட்டுகளைத் திருத்தி திருத்தி, அந்த முறையிலே கூடுதலாக 34 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். நம்முடைய தேசத்திலே அரசாங்கம் என்ன செய்கிறது? அந்நிய நாடுகளிலிருந்து கோடிக்கணக்கான ரூபாயைக் கடனாக வாங்கி, ஊதாரித்தனமாகச் செலவு செய்து, கண்டிராக்டர்களைக் கொழுக்க வைத்து திட்டங்களைத் தீட்டுகிறார்கள். இப்படிச் செய்யக் கூடியவர்கள்தான், நமது நாடு ஒரு விவசாய நாடு என்று நமது மதிப்பிற்குரிய பிரதம மந்திரியிலிருந்து சாதாரண தொண்டரடிப்பொடி ஆழ்வார் வரையில் பேசுகிறார்கள். இது ஒரு பெரிய விவசாய நாடு, விவசாயத்திற்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். சென்ற வருஷம் நிதிநிலை அறிக்கையில், கனம் நிதியமைச்சரவர்கள் சொல்லியிருந்தார்கள், உர சப்ளை விஷயமாக: 1959-60-ல் ஒரு லட்சத்து ஒன்பதாயிரம் டன் அம்மோனியம் சல்பேட் வழங்கப்பட்டது, 1960-61ல் இரண்டு லட்சத்து ஏழாயிரம் டன்கள் உரம் வழங்கப் போகிறோம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதற்கு மாறாக, ஒரு லட்சத்து மூன்றாயிரம் டன்தான் வழங்கப்பட்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது? விவசாயத்திற்கு வேண்டிய இந்த உரம்கூட உங்களால் இந்த நாட்டில் சப்ளை செய்ய முடியவில்லை. எண்பத்தைந்து சதவிகிதம் விவசாயிகளைக் கொண்டிருக்கும் இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை ஸ்திரத்தன்மை உள்ளதாக ஆக்க, பேசிக்காக உள்ளது இந்த விவசாய வளர்ச்சி. அதற்கு நீங்கள் உரம் ஒழுங்காக சப்ளை செய்ய முடியவில்லை. ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம், பல லட்சங்கள், கோடிகள் செலவழிக்கிறீர்கள். நெய்வேலியில் உர பாக்டரி ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லுகிறீர்கள். விவசாயிகளுக்கு வேண்டிய உரம் அத்தனையும் கட்டுப்படியாகும் விலையில் கிடைக்கும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று உத்தரவாதம் கொடுக்கக்கூடிய முறையில் கனம் அமைச்சரவர்கள் பதில் அளிக்கவேண்டும்.

விவசாயத்திற்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுப்பதில், அவைகளை நல்ல முறையில் நிறைவேற்ற இன்னும் பணத் தட்டுப்பாடு—இந்த பணச் செழிப்புக்கு மத்தியிலே, சென்னை சர்க்காருக்கு—தமிழ் நாடு சர்க்காருக்கு; யாராவது சண்டைக்கு வருவார்கள்—இந்தத் திட்டங்களைப் பற்றி அகில இந்திய ரீதியில் பாராட்டுகள் கிடைக்கின்றன; நம்மை நாமே மார் தட்டிக் கொள்ளவும் செய்கிறோம். அப்படி மார் தட்டி எழுதுகிறார்கள். இருந்தும் நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. ஆற்றுப் பாசனம் சம்பந்தப்பட்டவரை, பெரிய பெரிய நதிகளை மறித்து,



3rd March 1961] [Sri D. S. Authimoolam]

அணைகளைக் கட்டி விட்டார்கள்; அங்கும் அநேக வேலைகள் ஆங்காங்கே இருக்கின்றன. இருந்தாலும் அவ்வேலைகளை எல்லாம் நிறைவேற்றி விட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். சிறு பாசன சம்பந்தமாக, சிறிதும், பெரிதுமாக 27,000 ஏரிகள் இருக்கின்றன. அதற்குப் போதுமான நிதிகளை ஒதுக்க வில்லை. இவை சென்ற 50, 60 வருஷங்களாக மாராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன; மேடு தட்டி தண்ணீர் தேங்கி நிற்பதில்லை. குள நீர்ப்பாசனத்தை சரிசெய்து கொடுத்திருந்தால், தண்ணீர் தட்டில்லாமல் விவசாயிகள் விவசாயம் செய்திருப்பார்கள். அப்படிச் செய்யத் தவறி விட்டதால், பல லட்சக் கணக்கான ஏக்கர்கள் சரியாகச் சாகுபடி செய்யப்படாமல் போய்விட்டன. அவற்றை மாராமத்து செய்ய ஏன் பணங்களை ஒழுங்காக ஒதுக்க வில்லை நீங்கள்? அவர்களுக்கு அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று சட்ட சபையிலும், மேடைகளிலும் பிரசங்கம் செய்கிறீர்களே. ஏன் அவர்களுக்காக பல கோடிக்கணக்கான ரூபாய்களை, அந்த நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் என்ற மேலிடத்தில் வாதாடி வாங்கக்கூடாது? இந்த அறிக்கையின் 9-வது பக்கத்தில், மூன்றாவது திட்ட காலத்தில் இந்தப் பணிக்காக 80 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு, 1961-62-ல் 15 லட்ச ரூபாய் செலவழிக்கப்படும் என்று சொல்கிறீர்கள். இந்தச் சிறு ஏரி, குளங்கள், இவற்றின் சில்லரை வேலைகளைச் செய்ய 15 லட்ச ரூபாய்தான் 1961-62-ல் இந்த ராஜ்யத்திற்கு. இந்த ராஜ்யம் 12 ஜில்லாக்களைக் கொண்டது; ஆக ஒரு ஜில்லாவிற்கு 1-¼ லட்சம் ரூபாய். இந்த 1-¼ லட்சத்தில் சிறு குளம், ஏரிகள் மாராமத்து செய்யப் போகிறீர்கள். இன்னொரு இனத்தில் இன்னும் 40 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, ஒரு ஜில்லா என்பது 8 அல்லது 9 தாலுக்காக்களைக் கொண்டது, ஒரு தாலுக்காவிற்கு சுமார் 15 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். இந்தத் தொகை எதற்குக் காணும்? நீங்கள் இந்த நாட்டை எங்கு பார்த்தாலும் பெரிய பெரிய திட்டங்களைப் போட்டு, ப்ளாக் மார்கெட் ஆக்கிவிட்டீர்கள்.

முந்தாநாள், இந்திய சர்க்கார் பட்ஜெட்டைப் பார்த்ததும், கிருஸ்னாயில், ஒரு புட்டிக்கு ஒரு அணா ஏறிவிட்டது; சாப்பாட்டுக் கடையில்கூட 20 நயாபைசா அதிகம் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். வரிகளை கண்ணை மூடிக்கொண்டு போட்டு, பெரிய பெரிய திட்டங்கள் போடுகிறோம் என்று சொல்லிக்கொண்டு, சில்லரை வேலைகள் இந்த சர்க்காரால் கவனிக்கப்படுவதில்லை. இது எதைக் காட்டுகிறது? நீங்கள் டில்லிக்கு ஏன் செல்லுகிறீர்கள்? ஏன் பணம் கேட்டு வாதாடக் கூடாது? லைசென்ஸ் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று போகிறீர்கள். அப்படித்தான் இந்த சர்க்கார் நடக்கிறது.

இப்பொழுது பார்த்தால், கரும்பு ஆலைகளை ஆரம்பிக்கப் போகிறோம் என்கிறீர்கள். நூறு கரும்பு ஆலைகள் ஆரம்பிப்போம் என்கிறீர்கள். இப்பொழுதே அரிசி படி ஒரு ரூபாய்க்கு மேல் விற்கிறது. நூறு கரும்பு ஆலைகள் கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க ராஜ்ய சர்க்காரும், இந்திய சர்க்காரும் கடன்களை வேண்டிய ஆள்களுக்கு கொடுத்து, எலெக்ஷன் பண்ட் வாங்கி, காரியங்கள் செய்து

கொண்டு போகும்போது, இந்த நாட்டு மக்கள் கரும்பைச் சாப்பிடுவார்களா, அரிசிக்குப் பதிலாக? நீங்கள் இந்த நாட்டில் செய்திருக்கக்கூடிய காரியம் பூராவும் 'இன்ப்ளேஷன்' என்ற ஒரு காரியத்தைத்தான் செய்கிறீர்கள். நீங்கள் திறமையான சர்க்காரை நடத்தவில்லை. உங்களிடம் பிரிட்டிஷ்காரர்கள் எவ்வளவு ஒழுங்கான ராஜ்யத்தை ஒப்புவித்தான்? பெல்ஜியன் காங்கோவை நடத்தியது போலவா? ஒழுங்கான சீரான ராஜ்யத்தைக் கொடுத்தான். நமது பிரதம மந்திரி பம்பாயில் ஒரு தடவை பேசும்போது சொன்னார்: "நாங்கள் பக்ராநங்கலை 150 கோடி ரூபாயில் நிறைவேற்றியிருக்கிறோம்; அதனுடைய பெருமை பூராவும், செண்ட் பர்செண்ட் எங்களுக்குத்தான்" என்று. அப்பொழுது ஒரு பத்திரிகை எழுதியிருந்தது; இந்தத் திட்டத்தை 70 வருஷ காலமாக வெள்ளைக்காரன் ஆராய்ச்சி செய்து, ப்ளான், எஸ்டிமேட் எல்லாம் தயாரித்து . . . . . . . . .

(மணி அடிக்கப்பட்டது.)

இன்னும் ஐந்து நிமிஷம் இருக்கிறது, ஸார். கொஞ்சம் கொடுங்கள். அவர்கள் ப்ளான், எஸ்டிமேட் எல்லாம் தயாரித்து, ப்ளூப்ரிண்ட்கூட ட்ராயர்களிலே போட்டு இருந்தார்கள். ஆகவே அதை நிறைவேற்றியதற்கு உங்களுக்கு பெருமை 25 பர்செண்ட்தான் வைத்துக்கொள்ளலாம், பாக்கி 75 பர்செண்ட் உங்களுக்கு இல்லை. ஆகவே இதெல்லாம் எதைக் காட்டுகிறது? (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்: வெள்ளைக்காரனுடைய பெருமையைக் காட்டுகிறது!) ஆம், அவர்களுக்கு பெருமை உண்டு; அவன் பெருமையால்தான் நீங்கள் சர்க்காரை, இந்த வண்டியை ஓட்டுகிறீர்கள். ஆகவே நீங்கள் எதற்கெடுத்தாலும், ஐந்தாண்டுத் திட்டம், ஐந்தாண்டுத் திட்டம் என்று விளம்பரம் செய்துகொண்டு ஜனநாயகத்தையே புறக்கணிக்கிறீர்கள். சிறு தொழில்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு சின்னத் தொழில் என்றால், அதற்கு ஐந்து சாமான்கள் வேண்டுமென்றால், ஐந்து டிபார்ட்மெண்டுகளுக்கு, டில்லி சர்க்காரிலும், நம் சர்க்காரிலும் போக வேண்டும். ஆகவே இம்மாதிரி இந்த நாட்டை ஒரு லைசென்ஸ் நாடாக, ப்ளாக் மார்க்கெட் நாடாக ஆக்கிவிட்டீர்கள். விவசாயத்திற்கு வேண்டிய உதவிகளை பிரமாதமான முறையில் செய்யாவிட்டாலும் தொந்தரவு இல்லாமல் வரிகளை நியாயமான முறையிலாவது போடவேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

11-30 a.m. இந்த ரோடு அபிவிருத்தியை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த அறிக்கையில் ரோடு அபிவிருத்தி பற்றி 37-வது பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அபிவிருத்தியெல்லாம் ஆகிவிட்டதாக இந்த அறிக்கையில் இருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது). எனக்கு பதினைந்து நிமிஷங்கள் வேண்டும் என்று நான் கேட்டிருக்கிறேன். ரோடுகள் அபிவிருத்தி பண்ணும் விஷயமாக கணிசமான அளவில் அபிவிருத்தி ஏற்படவில்லை. பக்கத்தை திருப்புவதற்குள் கனம் சபாநாயகர் மணி அடித்து விடுகிறார், அதனால் அதை அப்படியே விட்டு விடுகிறேன். ஜில்லாவுக்கு 25 மைல்களுக்கு மேல் ரோடு போடுவதாக திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அது எந்த





அளவுக்கு பொருத்தமாக இருக்கும் என்பதை யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் காரியங்களைச் செய்யும்போது நல்ல முறையில் செய்ய வேண்டும். ஜனநாயகம் ஒழுங்காக நடக்க வேண்டும். ஜனநாயகத்தை ஒழுங்காக பாதுகாக்க வேண்டும். ஜனநாயகம் என்று சொல்லும்போது கனம் அங்கத்தினர்களுடைய உரிமையை முதற்படியாக பாதுகாக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேன்மை தங்கிய ராணி வந்திருக்கும்போது சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரையும் ரொம்பவும் கண்ணியக் குறைவான முறையில் நடத்தி விட்டார்கள். முதலில் ராஜாஜி ஹாலுக்கு அழைப்பு கொடுத்த வரையிலும் அவர்கள் விரிவாக ஏற்பாடு செய்திருந்தார்கள். பெரிய பந்தோபஸ்து செய்திருந்தார்கள். அங்கத்தினர்கள் குடும்பங்களுடன் வருகிறவர்களுக்கு சௌகரியமாக இருப்பதற்கு என்று மூன்று வித பாஸ் கொடுத்திருந்தார்கள். ஆனால் சட்டசபை அங்கத்தினர்களை தேடுவார்கள் கிடையாது. ராஜ் பவனத்தில் சுமார் 1,500 பேர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தும் சட்டசபை அங்கத்தினர்களாகிய 250 பேர்களுக்கு அழைப்பு அனுப்பாமல் அவர்களை புறக்கணித்திருக்கிறீர்கள். கார்ப்பொரேஷன் ஸ்டேடியத்தில் குழந்தைகள் விழா நடத்துகிறார்கள். சர்க்காருக்காக அதை நடத்துகிறவர்கள் கல்வி இலாகா. அதற்கு ஆயிரக்கணக்கான பாஸ்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கவே இல்லை. எந்தக் காரியத்திலும் சட்டசபை அங்கத்தினர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆனால் கனம் அமைச்சர்களுக்கு என்று முப்பதாயிரம், நாற்பதாயிரம் என்று செலவு செய்கிறார்கள். அவர்கள்தான் எல்லாவற்றையும் அனுபவிக்கிறார்கள். கனம் அங்கத்தினர்களை மட்டும் நிர்தாட்சண்யமாக நடத்துகிறார்கள்.

**MR. SPEAKER:** இரண்டு தடவை மணி அடித்தும் நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். இனிமேல் பேசுவதை நிறுத்தி விட வேண்டும். அடுத்தபடியாக கனம் சுப்ரமணிய கௌண்டர்.

*** SRI K. S. SUBRAMANIA GOUNDER:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் 1961-62 ஆண்டிற்காக சமர்ப்பித்திருக்கிற நிதி நிலை அறிக்கையை வரவேற்று நான் சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். எல்லோரும் வரவேற்கத் தக்க வகையில் இந்தத் தடவை விரிவான ஒரு நிதி நிலை அறிக்கையை கொடுத்தார் என்பதற்கு மாத்திரம் அல்ல, இந்தத் தடவை பல புதிய அம்சங்களைச் சேர்த்திருந்த போதிலும் புதிய வரிகள் எதுவும் போடாமல் ஒரு நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்ததில் உண்மையிலேயே அது வரவேற்கக்கூடிய விஷயம். எந்த வரியும் போடாவிட்டாலும் இரண்டு பெரிய சலுகைகளையும், அதிலும் முக்கியமான சலுகைகளையும் அவர் கொடுத்திருக்கிறார் என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. குறிப்பாக பதினோராவது வரையில் எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும், மாணவர்களுக்கும் கல்விச் சலுகை கொடுத்திருப்பதானது உண்மையிலேயே வரவேற்கத் தக்க காரியம்தான். பல ஆண்டு காலமாக எல்லோரும்

[Sri K. S. Subramania Gounder] [3rd March 1961

எதிர்பார்த்த இந்தக் காரியத்தை இந்த ஆண்டு கனம் நிதி அமைச்சர் அவர்கள் அதைக் கொடுத்ததானது உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

அடுத்தபடியாக, சிறிய வியாபாரிகள் கணக்கு வைத்துக் கொள்வதில் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள், கணக்கு வைப்பதில் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும் வியாபாரம் செய்யக்கூடியவர்கள் கணக்கு வைக்காமல் அவர்களுக்கு மொத்தமாக விற்பனை வரி விதிக்கலாம் என்பதானது உண்மையிலேயே சில்லறை வியாபாரிகளைப் பொறுத்தவரையில் அனுகூலம் செய்யக் கூடிய அளவில் இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த வரையில் பல அம்சங்களை கனம் அமைச்சர் அவர்கள் விரிவான முறையில் எடுத்துக் கூறி இருக்கிறார். நம்முடைய ராஜ்யத்தில் விவசாய உற்பத்தியானது பெரிதும் அபிவிருத்தி அடைந்திருந்தும் இன்னும் செய்ய வேண்டிய காரியங்கள் அதிகமாக இருக்கின்றன, அதைச் செய்ய முடியாததற்குக் காரணம் இயற்கை கோளாறுதான் என்றும் அவர் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். அண்டை மாநிலங்களிலிருந்து தண்ணீர் கிடைத்தால் ஒழிய நாம் பெரிய திட்டங்களை எடுத்துக் கொள்வதற்கு இல்லை என்பதையும் அவர் எடுத்துச் சொல்லி இருக்கிறார். பக்கத்து ராஜ்யத்திலிருந்து நமக்கு தண்ணீர் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

விலைவாசிகள் இன்னும் அதிகமாகப் போகாமல் இருக்கவேண்டுமானால் அதற்கு அரசாங்கம் உணவுக் கொள்கையை விரிவான முறையில் அமைத்து நியாய விலைக்கடைகளை மேலும் வைப்பதற்கு ஓரளவு முயற்சி செய்தால் விலைவாசி ஓரளவு குறைவதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அரசாங்க கோடவுன்களில் அரிசி ஸ்டாக் இருக்கிறது. அதே சமயத்தில் நியாய விலைக்கடைகளில் அரிசி நல்ல முறையில் விற்பனையும் ஆகிக் கொண்டிருக்கிறது. அதனால் அந்தக் கடைகளை தொடர்ந்து நடத்தினால் இன்னும் நல்ல முறையில் விலை அதிகமாகப் போகாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். சமீபத்தில் அந்தந்த ஜில்லாக்களில் உள்ள கலெக்டர்கள் எது வரைக்கும் நியாய விலைக் கடைகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றார்களோ அதுவரை வைத்துக்கொள்ள முடிவு எடுத்திருக்கிறார்கள். அப்படி இல்லாமல் அவர்கள் எவ்வளவு அரிசி நல்ல முறையில் விற்பனை ஆகின்றதோ அந்த அளவுக்கு நியாய விலைக்கடைகளை வைத்துக்கொள்வதற்கு முடிவு செய்ய வேண்டும். ஆகவே இப்பொழுதுள்ள முடிவை புனராலோசனை செய்ய வேண்டும் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விலைவாசிகள் எந்த அளவுக்கு குறைய வேண்டும் என்று அரசாங்கம்



3rd March 1961] [Sri K. S. Subramania Gounder]

நினைக்கிறார்களோ அந்தக் காலம் வரைக்கும் நியாய விலைக்கடைகளை நடத்துவது நலம் என்றும் அது மிகவும் உசிதமாக இருக்கும் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அம்மோனியம் சல்பேட் பற்றாக் குறையாக இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார். நெய்வேலியிலிருந்து உற்பத்தியாகக்கூடிய யூரியா கிடைக்கும் வரையில் இந்தப் பற்றாக்குறை இருக்கும். ஆகவே இன்னும் அதிகப்படியான அம்மோனியம் சல்பேட்டை வெளிநாட்டிலிருந்து தருவித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்வது மிகவும் உசிதமாகயிருக்கும்.

இப்பொழுது அம்மோனியம் சல்பேட் விநியோகிப்பதில் தாசில்தார் லோன் பர்மிட்டுகளைக் கொடுப்பதன் காரணமாக அம்மோனியம் சல்பேட் விநியோகத்தில் பல சிக்கல்கள், தவறுகள் நடக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சாதாரணமாக இப்பொழுது லோன் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி நிர்ணயித்து அந்த அளவு அமோனியம் சல்பேட்டாக அது தேவைப்பட்டாலும் தேவைப்படாவிட்டாலும் கொடுக்கிறார்கள். இந்த நிலைமையில் கடன் கேட்கிறவர்களுக்கு உரம் கேட்கும்போது அவர்களுக்குத் தான் கொடுக்கவேண்டும். மற்றபடி. ரொக்கத்திற்கு வாங்கக் கூடியவர்களுக்கு கொடுக்கக்கூடாது என்று பல இடங்களில் அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள். இது விவசாயிகள் மத்தியில் ஒரு குழப்பத்தையும் மனக் கசப்பையும் உண்டு பண்ணி இருக்கிறது. ஆகவே அம்மோனியம் சல்பேட் விநியோகம் செய்வதில் எல்லோருக்கும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக அரசாங்கம் சீக்கிரமான ஒரு முடிவை எடுக்க வேண்டும். லோன் பர்மிட்காரர்களுக்குத் தான் விநியோகம் செய்ய வேண்டும் என்பதை அரசாங்கம் உடனடியாகக் கை விட்டால் அதில் இருக்கக்கூடிய சிக்கல்கள், மனக்கசப்பு இவைகள் எல்லாம் பெரும் அளவில் போய்விடும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இப்பொழுது தஞ்சை ஜில்லாவில் பாக்கேஜ் ஸ்கீமை நடத்துகிறார்கள். அதனால் அங்கே பெரும் அளவில் உரம் கொடுத்து விடுகிறார்கள். அதன் காரணமாக மற்ற ஜில்லாக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரம் போதிய அளவு கிடைக்காமல் போய் விடுகிறது என்றும் தெரியவருகிறது. தஞ்சை ஜில்லாவிற்கு வேண்டுமானால் அதிகமான அளவில் கொடுக்கலாமேயொழிய அதனால் மற்ற ஜில்லாக்களுக்குக் கிடைக்க வேண்டியது குறைந்து போகக்கூடாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவில் பாக்கேஜ் ஸ்கீம் எடுத்துக்கொண்டிருப்பதைப் போல மற்ற ஜில்லாக்களிலும் அதை சீக்கிரத்தில் விரிவுபடுத்த வேண்டும் என்றும், தஞ்சை ஜில்லாவிற்கு என்ன சலுகைகள் கொடுத்திருக்கிறார்களோ அதே சலுகைகளை மற்ற ஜில்லாக்களுக்கும் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri K. S. Subramania Gounder] [3rd March 1961

இப்பொழுது இருக்கக்கூடிய விற்பனை வரி சட்டத்தில் கூட்டுறவு மார்க்கெட்டிங்கைப் பொறுத்த வரைக்கும் பெரிதும் பாதிக்கக்கூடிய அளவில் அந்தச் சட்டம் இருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விற்பனை வரிச் சட்டத்தில் விவசாய ப்ராசெஸ்ட் ஆர்ட்டிகிளுக்கு மாத்திரம் வரி சிங்கிள் பாயின்ட் விதிக்கலாம் என்று இருந்தாலும் பல விதமாக வியாக்யானம் செய்கிறார்கள். மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கு எல்லாம் மற்ற முறைப்படி வரி வசூலிக்க வேண்டும் என்ற அளவில் அர்த்தம் பண்ணுகிறார்கள். அப்படி இருப்பதானது கூட்டுறவு மார்க்கெட்டிங்கை பெரிதும் பாதிக்கக்கூடிய அளவில் இருக்கிறது. ஆகவே இதை மாற்றி அமைக்க அரசாங்கம் சீக்கிரமாக முடிவு எடுக்க வேண்டும். சாதாரணமாக மார்க்கெட்டிங் செய்வது கஷ்டமான காரியம். சட்டத்தில் 'டீலர்' என்ற பதத்திற்கு ஒரு விதமான அர்த்தம் செய்வதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இப்படி வியாக்யானம் செய்வது என்று ஆரம்பித்தால் மார்க்கெட்டிங் சரியாக நடைபெறாது. ஆகவே சட்டத்தைத் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயப் பொருள்களுக்குள்ள மார்க்கெட்டிங் சட்டம் சமீபத்தில்தான் சட்டமாக்கப்பட்டது. அதற்கு இன்னும் ரூல்கள் இயற்றாமல் இருப்பதன் காரணமாக அந்தச் சட்டம் இன்னும் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை. ஆகவே சீக்கிரமாக அதற்கு ரூல்களை ஏற்படுத்தி அந்தச் சட்டத்தை தாமதமின்றி அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். அதைக் கொண்டு வரும்போது அந்தச் சட்டத்தில் கண்டிருக்கும் பிரகாரம் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கு அந்த சட்டத்திலுள்ளபடி அதிகாரத்தைக் கொடுத்து சீக்கிரமாக மார்க்கெட்டிங்கை கூட்டுறவு முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாய அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானது மின்சாரம். அதுவும் கிராமாந்திரங்களில் விவசாயத்திற்கு மின்சாரத்தைக் கொடுப்பதானது உண்மையில் நாம் அதிக உணவுப் பொருள் உற்பத்தி செய்வதற்கு உதவியவர்களாவோம். இந்தக் கொள்கையில் அரசாங்கம் தங்கள் பகுதிகளில் எல்லா விவசாயிகளுக்கும் மின்சார வசதியைக் கொடுத்து வந்தாலும், கம்பெனி ஏரியாக்களில் உள்ளவர்களுடைய கஷ்டம் நீடித்துக்கொண்டே போகிறது. இன்றைக்கு அங்கே மின்சார விஸ்தரிப்பு நல்ல முறையில் நடைபெறவில்லை. குறிப்பாக சேலம் ஜில்லாவில் எஸ்.இ.டி. கம்பெனிக்கு லைசென்சு அந்த ஏரியாவுக்கு வழங்கப்பட்டது. அதை எடுத்துக்கொள்ள வாய்தா நோட்டீஸ் கொடுத்திருந்தாலும், அந்தக் காலம் முடிந்தும் அதை இன்னும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அதனால் அங்குள்ள விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். குறிப்பாக அந்தப் பகுதிகளில் உள்ளவர்கள் கிணறுகளை நம்பித்தான் விவசாயம் செய்கிறார்கள். அந்தப் பகுதிகளில் கம்பெனி மின்சார விஸ்தரிப்பு வசதி செய்யாவிட்டாலும், அதை எடுத்துக்கொள்வது பற்றி முடிவு தெரியும் வரையில் ஒத்திப் போட்டுக் கொண்டே …ாக இருப்பதானால் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. அந்தப்



3rd March 1961] [Sri K. S. Subramania Gounder]

பகுதிகளில் உள்ள எல்லா கிராமங்களுக்கும், மின்சார விஸ்தரிப்பு ஏற்படுத்தித்தர தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் ஜில்லாவில் ஒரே ஒரு காலேஜ் இருக்கிறது. அதை அரசாங்க காலேஜாக மேற்கொண்டுள்ளார்கள். அதைத் திரும்பவும் விரிவுபடுத்தவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் சேலத்தில் என்ஜினியரிங் காலேஜ் ஆரம்பிக்கவேண்டும். அதற்குச் சர்க்காரே பூராப் பணமும் போடாவிட்டாலும், ரெயில்வே செஸ் பண்டு பணம் இருக்கிறது. அதை வேறுவிதத்தில் விநியோகிக்காமல் என்ஜினியரிங் காலேஜ் வைக்க பூரணமாகப் பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்தில் இருக்கக்கூடிய இரும்புக் கனி நல்லவிதத்தில் பயன்படும் என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறதை நான் பாராட்டுகிறேன். அதோடு சேலத்திலேயே இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலியில் இப்போது பல தொழிற்சாலைகள் வர இருக்கின்றன. எல்லாத் தொழிற்சாலைகளையும் ஒரே இடத்தில் ஏற்படுத்துவதற்குப் பதிலாக இந்த இரும்புத் தொழிற்சாலையை சேலத்திலேயே ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். அதோடு இங்குதான் ப்ராட்கேஜ், மீட்டர்கேஜ் ரெயில் வசதி இருக்கிறது. ஆகையால் இங்கேயே வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் எப்போதும் குடிதண்ணீருக்குக் கஷ்டப்படும் ஒரு ஜில்லா. காவேரியில் இருந்து அந்த ஜில்லா நகரங்கள் எவற்றுக்கு எல்லாம் தண்ணீர் சப்ளை வசதி செய்ய முடியுமோ அவற்றுக்கு குடிதண்ணீர் சப்ளை வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள கிணறுகளை எவ்வளவு ஆழப் படுத்தினாலும் மழை அடிக்கடி குறைவாகப் போய்விடுகிற காரணத்தினால் கிணற்று நீர் வற்றிவிடுகிறது. திரும்பவும் கிணறு வெட்டினாலும் குடிதண்ணீருக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. சங்ககிரி போன்ற தாலுக்கா தலைநகரங்களுக்கு எல்லாம் சீக்கிரத்தில் காவேரி தண்ணீர் கொடுப்பதற்கு வேண்டிய திட்டத்தை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆஸ்பத்திரியை எடுத்துக்கொண்டாலும் சங்ககிரியில் ஏற்கனவே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பது என்பது சௌகர்யமாக இல்லை. தனியாகப் புதிதாகக் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல் சேலத்திலும்—அது எவ்வளவு பெரிய தலைநகரமாக இருந்தாலும்—ஆஸ்பத்திரி வசதி கஷ்டமாக இருக்கிறது. இருக்கக்கூடிய ஆஸ்பத்திரியை விரிவுபடுத்துவது இல்லாமல் புதிதாகவே நல்லமுறையில் ஆஸ்பத்திரிகளைக் கட்டவேண்டும். அப்படி சேலத்தில் ஒரு புது ஆஸ்பத்திரியை ஆரம்பித்தால், பின்னால் மெடிகல் காலேஜ் ஏற்படுத்தும்போது இது வசதியாக

இருக்கும். இதை உத்தேசித்து சேலத்தில் ஒரு ஆஸ்பத்திரியை பின்னால் மெடிகல் காலேஜ் ஏற்படுத்தும் வசதியோடு ஆரம்பித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **SRI S. THANGAVELU**: கனம் சபாநாயகர் அவர்களே, 1961-62-ம் வருஷத்திற்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்து, தன்னுடைய உரையில் எல்லா விஷயங்களையும் அலசிப் பார்த்து எந்த எந்த முறையில் காரியங்களை நடத்திச் செல்கிறோம் என்று விளக்கி இருப்பதற்கு என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொன்னார்கள், அறுபது பக்கம் கொண்ட அவரது உரை தேர்தல் பிரசாரத்திற்கு வேண்டிய அறிக்கை என்று. உண்மையில் அந்த அறிக்கையை அவர்கள் வாசித்து அந்த அம்சங்களை, அதில் இருக்கும்படியான திட்டங்களைப் படித்துப் பார்த்திருப்பார்களேயானால் அந்த வகையில் பேசியிருக்க மாட்டார்கள் என்பது உறுதி. கல்வி வகையில் எடுத்துக் கொண்டால் முன்பு இருந்ததைவிடப் பன் மடங்கு அபிவிருத்தி இந்த ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதுவும் கிராமாந்திரங்களில் உள்ள ஏழை விவசாய மாணவர்கள், ஹரிஜன மாணவர்கள் எல்லோரும் படிப்பதற்குப் பல வசதிகளை இந்தச் சர்க்கார் செய்து கொடுத்துக் கொண்டிருப்பதற்கு நாம் எல்லோரும் பாராட்ட வேண்டும். அதுமட்டுமல்ல. சில நெருக்கடிகள் இருக்கின்றன. ஒரு மைலுக்குள் கிராமங்களில் நூறு பிள்ளைகள், ஐம்பது பிள்ளைகள் படிக்க வேண்டும் என்றால் அங்கே பள்ளிக்கூடம் ஏற்படுவதற்கு வசதி செய்து தர வேண்டுமாய் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மதிய உணவுத் திட்டமும் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறது. சர்க்கார் உதவியோடு, பொதுமக்களின் உதவியையும் பெற்று இத்திட்டம் நடைபெறுகிறது. பொது மக்களிடம் இருந்து கிடைக்கும் பணம் போதுமான அளவில் இல்லாவிடினும், கோயில்களில் கிடைக்கும் வருவாய்களை இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு உதவும்படியாக ஏற்பாடு செய்யும்படி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதுவும் இந்தச் சர்க்கார் ஹரிஜன பெருங்குடி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஸ்காலர்ஷிப் வசதி, உடை வசதி, வீட்டு வசதி போன்ற பல நன்மைகளைச் செய்துகொண்டு வருவதற்காக சர்க்காரைப் பாராட்டுகிறேன்.

ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் ஆர்ஜிதம் செய்யும் விஷயத்தில் சர்க்கார் சற்று தீவிரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மராமத்து விஷயமாக, பல ஏரிகள் மராமத்து செய்யப்பட்டிருக்கின்றன. சிறியநீர்பாசன வசதி விஷயத்தில் இன்னும் சற்று அதிகப்படியான கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத்தைப் பொறுத்தமட்டில் எனது தொகுதியில், பன்ருட்டி பிர்க்கா, குறிஞ்சிப்பாடி பிர்க்கா, நெல்லிக்குப்பம் போன்ற பிர்க்காக்களில்





மின்சாரவசதி செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். பட்டாம்பாக்கம், பெருமாள்நாயக்கன்பாளையம், அங்குசெட்டிப் பாளையம், குள்ளன் சாவடி பிர்க்கா போன்ற இடங்களில் மின்சாரவசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக மின்சார இலாகாவிலிருந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதாக அறிகிறேன். அதை சர்க்கார் கவனித்து வேண்டிய நடவடிக்கைகளை கூடியசீக்கிரத்தில் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக காட்டு இலாகாவைப் பொறுத்தமட்டில், பெரிய மரங்கள், செடிகள், கொடிகள் உள்ள இடங்களை காட்டு இலாகா உபயோகித்து, அவை ஒன்றும் இல்லாது தரிசாகக் கிடக்கும் இடங்களை, அதில் பணம் செலவு செய்து காடுகளை வளர்ப்பதைவிட அவைகளை ஏழை மக்களுக்கு பயிரிடக் கொடுத்து, அங்கு ஆர்டிஸன், சப்-ஆர்டிஸன் வெல்ஸ் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்வதினால் நாம் நமது உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். அப்படிப்பட்ட தரிசு நிலங்களை, ஏழை மக்களுக்கு, அவர்கள் ஹரிஜனங்களாகயிருந்தாலும் சரி அல்லது முற்போக்கு சமுதாயமான பிராமணர்களாகயிருந்தாலும் சரி, அவர்கள் விவசாயம் செய்ய முன்வந்தால் அவர்களுக்கும் இந்த நிலங்களை பயிரிடக் கொடுக்கலாம். ஜில்லாதோறும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்த போதே தரிசு நிலங்கள் ஆதித்திராவிடர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலம் என்று பல இடங்களில் அப்படி ஒதுக்கப்பட்டிருந்தது. எனது தொகுதியில் வேகாக்கொல்லை, சிலம்பநாதன் பேட்டை, மருங்கூர் போன்ற இடங்களில் இப்படி நிறைய நிலங்கள் இருக்கின்றன. அறுநூறு ஏக்கர்கள் உள்ளன. அவைகளில் எல்லா மக்களும் விவசாயம் செய்துகொண்டு வருகிறார்கள். முந்திரி போட்டு வருகிறார்கள். அதன் மூலம் சர்க்காருக்கு என்ன வருவாய் வருகிறது என்ற கணக்கு என்னிடம் இல்லை. அவைகளை ஏழை ஜனங்களுக்கு பட்டா செய்துகொடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர், ரசாயன உரம் சம்பந்தமாக கடன் கொடுக்கப்படுகிறது. ஐந்நூறு, ஆயிரம் வேலி வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு கொடுக்க வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் நிலத்திற்குத் தக்கபடி கொடுக்கப்பட வேண்டும். இரண்டு, ஐந்து, பத்து ஏக்கர்கள் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த லோன் கிடைப்பதில்லை. ஆகவே, லோன் கொடுப்பதை நிறுத்தி எல்லாருக்கும் உரம் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியில் வடலூர், குறிஞ்சிப்பாடி போன்ற இடங்களில் ஆர்டிஸன், சப்-ஆர்டிஸான் வெல்ஸ், 80, 90 அடி தோண்டப்பட்டு பம்ப்கள் அமைக்கப்பட்டு நிறைய தண்ணீர் வருகிறது. இத்திட்டத்தை அங்குள்ள மக்கள் ஆதரிக்கிறார்கள். ஆகவே, இம்மாதிரிப்பட்ட குழாய் கிணறுகளை அங்கு நிறைய வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த குழாய் கிணறு திட்டத்தை விஸ்தரித்தால்

[Sri S. Thangavelu] [3rd March 1961

நன்கு பயிர் செய்ய வசதி ஏற்படுவதோடுகூட நமது உணவு
உற்பத்தியையும் அதிகரிக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்
கிறேன். அதற்காகும் செலவை விவசாயிகளிடமிருந்து பெற்றுக்
கொள்கிறோம், ஆகவே சர்க்காருக்கு எந்தவிதமான நஷ்டமும்
ஏற்படாது. ஆகவே, இத்தகைய குழாய் கிணறுகளை அதிகப்
படியான அளவில் அமைக்கவேண்டும் என்றும் அதற்காக
வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளவேண்டு
மென்றும் சர்க்காரை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.
காடாம்புலியூர், வழுதலம்பட்டி, வடகுத்து போன்ற இடங்களில்
குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு நிறைய நிலங்கள் பயிரிடப்
படுகின்றன. ஆகவே, நான் சர்க்காரை வேண்டிக்கொள்வதென்ன
வென்றால், இப்படிப்பட்ட குழாய் கிணறுகளை புஞ்சைப் பிரதேசங்
களில் வேண்டிய அளவு அமைத்தால் நாம் நமது விவசாய
உற்பத்தியை கணிசமான முறையில் அதிகரிக்க முடியும். அதோடு,
அப்படி விவசாய உற்பத்தியை அதிகரிக்கும்போது நமது நாட்டின்
இன்றைய உணவுப் பற்றாக்குறையையும் அதனால் தீர்க்க முடியும்.
ஆகவே, எங்கெங்கு குழாய் கிணறுகள் தேவைப்படுகிறதோ, அங்
கெல்லாம் அவைகளை அமைக்க வேண்டிய நடவடிக்கைகளை
அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். என் தொகுதியில் உள்ள பின்தங்கிய பகுதிகள் குறிஞ்சிப்
பாடி பிர்க்கா, கடாம்புலியூர் பிர்க்காக்களில் புஞ்சை நிலங்கள்
அதிகமாக இருப்பதால் அங்கு இந்தக் குழாய் கிணறுகளை
வேண்டிய அளவு நிறுவும்படி சர்க்காரை பணிவுடன் கேட்டுக்
கொள்கிறேன். அடுத்தபடியாக, என் தொகுதியில் பூலோகநாதர்
கோவில் என்று ஒரு கோவில் இருக்கிறது. அது, பாடல் பெற்ற
ஸ்தலம். அக்கோவிலுக்கு வேண்டிய அளவு நிறைய நிலம்
இருக்கிறது. அக்கோவில் கடலூர்-திருக்கோவிலூர் ரோட்டில்
இருக்கிறது. அக்கோவில் முன்பு எப்படியிருந்திருக்குமோ
அப்படியேதான் இன்றும் இருக்கிறது. அதாவது, அது
செப்பனிடப்படாமல் அப்படியே இருக்கிறது. நான் சொல்வது,
அக்கோவிலின் நிலத்திலுள்ள வருமானத்தைக் கொண்டாவது
அதைச் செப்பனிடவேண்டும். அப்படி அக்கோவிலை செப்பனிட்டு,
அங்கு மக்கள் போய் கடவுளை பூஜிக்க வேண்டிய வசதி செய்து
கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கோவி
லிற்குள்ள நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாயை என்ன செய்
கிறார்கள் என்றே தெரியவில்லை. ஆனால் அக்கோவில் புதுப்பிக்கப்
படாமலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அதைப் புதுப்
பிக்க வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்
நல்ல பல திட்டங்கள் தீட்டப்பட்டு அவைகள் நன்கு இயங்கி
வருவதை யாரும் மறுப்பதற்கில்லை. நமது மாநில சர்க்கார்
செய்யும் திட்டங்களை புரிந்து கொள்ளாது எதிர்கட்சி நண்பர்கள்,
எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதை நாங்கள் சொல்லித்தான்
காங்கிரஸ் சர்க்கார் செய்கிறது அல்லது செய்தது, இல்லாவிட்டால்
செய்யாது என்று வாய் வீச்சு வீசுகிறார்களே தவிர இந்த அறிக்
கையை அவர்கள் நன்கு படித்துப் பார்க்கவேண்டும். நான் ஒரு



3rd March 1961] [Sri S. Thangavelu]

கிராமத்திலிருந்து வருகிறவன் என்ற முறையில் கிராமங்களின் நிலை
எப்படியிருக்கிறது, அங்கு என்னென்ன அபிவிருத்திக் காரியங்கள்
நடக்கின்றன என்பதெல்லாம் எனக்குத் தெரியும். வுட்லண்ட்
ஸிலோ, அசோக் பவனிலோ தங்கி விட்டு மேடைகளில் மட்டும்
பேசினால் போதாது. கிராமங்களுக்குச் சென்று பார்க்க
வேண்டும், அங்கு என்னென்ன காரியங்கள் நடக்கின்றன என்பதை
ஆக, பல நல்ல காரியங்கள் நடப்பதை வரவேற்காமல், நமது நிதி
யமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த பட்ஜெட் ஒரு
தேர்தல் பட்ஜெட் என்று மட்டும் சொல்லிவிட்டால் போதாது.
அப்படி இது ஒரு தேர்தல் பட்ஜெட் என்று சொல்வது தவறு.
நிலங்கள் அப்படியே இருக்கிறது, ஆனால் மனித உற்பத்தி நாளுக்கு
நாள் பெருகி விலைவாசிகளும் உயர்ந்துகொண்டே போகிறது.
அதற்காக சர்க்காரையோ அல்லது ஆளும் கட்சியையோ குறை
சொல்லி என்ன பிரயோஜனம்? விலைவாசிகள் உயராமல் இருப்ப 12
தற்காக ஆளும் கட்சியில் இருப்பவர்களும், எதிர்கட்சியில் இருப்ப noon
வர்களும் சேர்ந்து ஒத்துழைத்தால் கூடிய சீக்கிரத்திலேயே விலை
வாசி குறைந்துவிடும் என்று நான் கருதுகிறேன். குடும்பக்
கட்டுப்பாடு அவசியம் என்று நாம் இங்கு வரவேற்றுப் பேசு
கிறோம். ஆனால் வெளியில் போய் காங்கிரஸ் சர்க்கார் குழந்தை
பெறக்கூடாது என்று சொல்கிறது என்று பிரசாரம் செய்கிறார்
கள் பலர். இந்த சட்டசபையில் அதற்காக பல யோசனைகளை
சொல்லுகிறோம், அதற்கான திட்டங்களை எல்லாம் வரவேற்றுப்
பேசிவிட்டு வெளியில் போய் காங்கிரஸ் சர்க்கார் குழந்தை பெற
வேண்டாம் என்று சொல்லுகிறது என்று பிரசாரம் செய்வது
வருந்தத்தக்கது. அம்மாதிரியான விஷமப் பிரசாரம் மக்க
ளிடையே செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜன
வாரம் கொண்டாடுவதைப்பற்றி இங்கு பலர் குறை சொன்னார்கள்.
அவர்கள் சமூகத்தில் இன்றைக்கு பின்தங்கிய நிலையில் இருக்
கிறார்கள். அவர்கள் பொருளாதார ரீதியில், படிப்பில் மிகவும் பின்
தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் செய்து கொண்டி
ருக்கும் சாதனைகளைப்பற்றி விளக்கிச் சொல்லவேண்டியது மிகவும்
அவசியமாகும். அதைச் சொல்லுவதற்காகத்தான் அதிகாரிகளா
லேயே இந்த ஹரிஜன வார விழா கொண்டாடப்படுகிறது. (மணி
அடிக்கப்பட்டது.)

*SRI C. NATARAJAN: சட்டமன்றத் தலைவர் அவர்களே,
இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என் கருத்தைச் சொல்ல
விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்களின் அறிக்கையில் இவ்
வாண்டு தனிப்பட்ட மனிதனுடைய வருவாய், அல்லது ஏழைகளி
னுடைய வருவாய் உயர்ந்திருப்பதாக எதுவும் காட்டப்படவில்லை.
ஏழைகள்தான் நாட்டில் டீயும் காப்பியும் அதிகமாக உபயோகித்து
வருகிறார்கள். அவர்கள் உபயோகின்ற டீ-க்கு ஒரு நாளைக்கு ஓர்
அணா வரி கொடுத்தால்கூட ஒரு மாதத்திற்கு இரண்டு ரூபாய்
ஆகிறது. வருடத்திற்கு 24 ரூபாய் வரியாக கொடுக்கவேண்டி
யிருக்கிறது. அதே நேரத்தில் டீயை வெளிநாடுகளுக்கு அனுப்பு
வதற்கு வரி கிடையாது. இதனால் பாதிக்கப்படுவது நாட்டிலுள்ள
ஏழை மக்கள் என்பதை அறிந்து இந்த அரசாங்கம் டெல்லி

அரசாங்கத்திற்கு கண்டனம் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் நமது நிதி அமைச்சர் அவர்கள் தன் உரையில் மூன்றாவது பக்கத்தில் உணவு உற்பத்தி அதிகரிப்பதைப்பற்றியுள்ள அளவை காட்டியுள்ளார். இந்நிலையில் ஆண்டு தோறும் மக்கள் தொகை அதிகரிப்பதால் உணவு குறைவாகக் கிடைக்கிறது என்பதில் சந்தேகமில்லை. முக்கியமாக விவசாயம் வளருவதற்காக பின்தங்கிய கள்ளக்குரிச்சி போன்ற பகுதிகளில் பல வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் நான் நான்கு ஆண்டுகளாக கூறி வரும், கோமுக நதி திட்டம், மணி முத்தாறு அணைத் திட்டம் போன்ற டாம் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அதோடு விவசாயிகளுக்குத் தேவையான அமோனியம் சல்பேட் எந்த அளவுக்கு தேவையோ அதற்கு தகுந்தபடி கொடுக்கவேண்டும். அதே போன்று விவசாயக் கருவிகள், பொறுக்கு விதைகள் இவைகள் எல்லாம் அவர்களுக்கு தேவையான நேரத்தில் கொடுக்கவேண்டும். கிணறு வெட்டுவதற்கான கடன் உதவி கொடுக்கவேண்டும். அவ்விதம் கொடுக்கப்படும் கடனை உடனடியாக திருப்பித் தர வேண்டும் என்று வற்புறுத்தாமல் போதிய தவணைகள் கொடுக்க வேண்டும்.

தொழில் வளம் பெருகவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், எங்கள் பக்கத்தில் கரும்பு அதிகமாக கிடைப்பதால் அங்கு ஒரு கரும்பு சர்க்கரை ஆலை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதற்காக மக்களுடைய தொகை ஒரு லட்சம் வேண்டும் என்று கேட்கிறார்கள். எங்கள் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் இந்தப் பணத்தை அந்த பகுதியிலுள்ள மக்களால் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இரண்டு லட்சம் ரூபாயை அரசாங்கம் கடனாக தந்துதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய நீர்பாசனத் திட்டங்களுக்காக சர்க்கார் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். எங்களுடைய பகுதியில் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் எவ்வாறு இருக்கிறது என்பதை கனம் மராமத்து அமைச்சர் அவர்களே நேரில் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அதிலும் முக்கியமாக எங்கள் பகுதியில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கக்கூடிய சின்னசேலம், சங்கராபுரம், தியாகதுருகம், வடக்கந்தல், கள்ளக்குறிச்சி முதலிய இடங்களில், ஏரிகள் எல்லாம் ஆங்கிலேயன் காலத்தில் எப்படியிருந்ததோ அதே நிலையில் ஆழப்படுத்தாமல் தான் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த ஏரிகளை எல்லாம் பிரிவுபடுத்தியும் புதிய ஏரிகள் அமைப்பதற்கு அதிகமாக பணம் ஒதுக்கித்தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair)

இப்போது ஆட்டு ஆராய்ச்சிப்பண்ணை ஒன்று சின்னசேலம் பகுதியில் இருக்கிறது. அதோடு இதன் பக்கத்தில் ஆயிரக் கணக்கான ஏக்கர் புல் நிலங்கள் இருப்பதால் மேலும் ஒரு மாட்டுப் பண்ணை ஏற்படுத்தவேண்டும் என்ற என் ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்ததாக, பல ஆண்டு காலமாக சமுதாய நலத்திட்டத்தை நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்த இலாகா காங்கிரஸ் கட்சியின் ஒரு விளம்பர இலாகாவாகத்தான் இயங்கி வந்து கொண்டிருக்கிறது. அதோடு தியாகிகளுக்கு வேலை கொடுக்கவும், அவர்கள்மூலம் வோட்டு சேகரிக்கவும்தான் இந்த இலாகா பயன்படுத்தப்படுகிறது. இதன் காரணமாக பல இடங்களிலும் காங்கிரஸ்காரர்களுக்கும், மாற்றுக்கட்சியினருக்கும் பாகுபாடு காட்டப்படுகிறது. இவ்விதமான நிலைமை இல்லாமல் மக்களுக்கு பயன்படக்கூடிய முறையில் செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, பல இடங்களில் பஞ்சாயத்து தலைவர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இடையே சட்டத்தின் காரணமாக பலவிதமான வேறுபாடுகள் இருக்கின்றன. சட்ட வரம்பு ஒவ்வொருவருக்கும் இவ்வளவு என்று வரையறுத்து கூறப்படாததன் காரணமாக இந்த நிலைமை ஏற்படுகிறது. ஒரு காரியத்தை யார் செய்யலாம், யார் செய்யக்கூடாது என்பதை வழிவகுத்து சொல்லப்படவில்லை. இதன் காரணமாக பல தகராறுகள் ஏற்படுகின்றன. ஆகவே இவர்களுக்குள் ஒற்றுமை நிலவுகின்ற முறையில் சட்டத்தை வழிவகுத்து கொடுக்க வேண்டும். அதோடு பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு அதிகமாக அதிகாரம் கொடுக்கவும் வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையில் வளர வேண்டுமென்று நேரு முதல் இங்கேயிருக்கின்ற தலைவர்கள்வரை சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இதற்காக பல இடங்களிலும் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு பலவிதமான கடன்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கிராமங்களைப் பொறுத்தவரை, கடனுக்கு நெருங்கினால் ரூ. 500 வரை கொடுக்கப்படுகிறது. அந்தக் கடனை அடுத்த ஆண்டுக்குள்ளாகவே திருப்பித்தர வேண்டும் என்றும் கேட்கப்படுகிறது. ஆகவே இவ்விதம் கொடுக்கப்படுகின்ற தொகையை ரூ. 5,000மாக உயர்த்தி பத்து ஆண்டு காலம் தவணையில் கொடுக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு எங்கள் பகுதியில் தியாகதுருவத்தில் விவசாய கடன் பாங்க் ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சின்ன சேலத்தில் இரும்பை உருக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கவேண்டும். அதற்கான வசதி இங்கிருப்பதாகவும், இதற்கான கனிப்பொருள் இங்கு கிடைப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருப்பதால் அங்கு ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பக்கத்திலுள்ள மலைப்பிரதேசத்தில் அதிகமான அளவு மூங்கில் கிடைக்கிறது. அங்கு சரசமான விலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அதன் பக்கத்தில் இருக்கக்கூடிய வடக்கநந்தலில் ஒரு காகித தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri C. Natarajan] [3rd March 1961

அடுத்ததாக, கனம் அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் 33-வது பக்கத்தில் எல்லா கிராமப் பகுதிகளுக்கும் மின்சாரம் கிடைத்துவிட்டதாக பெருமையாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில் பல கிராமங்களுக்கும் இதுவரையிலும் மின்சாரம் கிடைக்கவில்லை. அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் குறிப்பாக சங்கராபுரம், வடக்கநந்தல், சின்ன சேலம், தியாக துருவம், கள்ளக்குறிச்சி முதலிய கிராமப் பகுதிகளுக்கு மின்சாரம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் பெருகவும், விவசாயம் அபிவிருத்தி அடையவும் மின்சாரம் முக்கியம். அதே போன்றுதான் போக்குவரத்தும் முக்கியமாக இருக்கிறது. ஆகவே இந்த சட்டசபையில் நான்கு ஆண்டுகளாக சொல்லி வரும், திருவண்ணாமலை-சின்னசேலம் புதிய ரயில்பாதையை ஏற்படுத்துவதற்கு நமது சர்க்கார் டெல்லி சர்க்காரை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, எங்கள் பகுதியிலுள்ள ரஸ்தாக்களை அமைச்சர் அவர்களே நேரில் பார்வையிட்டிருக்கிறார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன் உரையில் ரஸ்தாக்கள் எல்லாம் நல்ல முறையில் இருப்பதற்காக மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் போகும்போதுதான் சில ரஸ்தாக்கள் அமைக்கப்படுகின்றன. அமைச்சர்கள் போன பின்னால் அந்த ரஸ்தாக்களும் போய்விடுகின்றன. அவ்வாறு இல்லாமல் நிரந்தரமான ரஸ்தாக்களை அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கதர் துணிக்கு சலுகை காட்டுவதுபோல் கைத்தறித் துணிக்கும் காட்டவேண்டும். கைத்தறித் துணியை ஆதரிப்பதில் பல சிக்கலான முறைகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்கள் பகுதி சின்ன சேலம், சங்கராபுரம் பிர்க்காவில் ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கும் வீட்டு மனைகள் கொடுப்பதிலும் கடன் வசதி கொடுப்பதிலும் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரை எல்லாக் கிராமங்களுக்கும் பள்ளிக்கூடங்கள் கட்டிக்கொடுத்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் கட்டவேண்டுமானால் மக்களுடைய பங்கு தொகை கொடுக்கவேண்டும். எங்கள் பகுதியைப் பொறுத்தவரை மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால் இலவசமாகவே பள்ளிக்கூடங்களை கட்டிக்கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பாடப் புத்தகங்களில் மாணவர்களுடைய கருத்துக்குப் புறம்பான பாடங்களை ஏற்படுத்தாமல் மாணவர்களுடைய அறிவு வளர்ச்சி அடைகின்ற முறையில், பல நல்ல அறிஞர்களுடைய கருத்துக்களை பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மனிதர்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு சுகாதாரம் முக்கியமாக இருக்கிற காரணத்தினால், என்னுடைய பகுதியில் ஆஸ்பத்திரிகள் நல்ல நிலையில் இல்லாததால், கள்ளக்



3rd March 1961 [Sri C. Natarajan]

குறிச்சி அரசாங்க ஆஸ்பத்திரியில் படுக்கைகளை அதிகப்படுத்தியும், சின்ன சேலம் லோக்கல்பண்ட் ஆஸ்பத்திரியை அரசாங்க ஆஸ்பத்திரியாக மாற்றியும், தியாக துர்க்கம், மேலூர் முதலிய இடங்களில் பிரைமரி ஹெல்த் செண்டர்கள் ஏற்படுத்தியும் மக்கள் சுகாதாரமாக நல்ல முறையில் இருப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அங்கு இருக்கக்கூடிய கிராமங்களில் சுகாதார வசதி நல்ல முறையில் இல்லாத காரணத்தினால், மக்கள் நல்ல குடி தண்ணீர் கிடைக்காது, அசுத்த தண்ணீர் குடிப்பதால் நரம்புச் சிலந்தி முதலிய வியாதிகள் வந்து மக்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு நல்ல வடிகட்டிய டாங்மூலம் தண்ணீர் கிடைக்க அரசாங்கம் பணத்தை ஒதுக்கி தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், கடந்த நான்கு ஆண்டுகளாகச் சொல்லியும் அமைச்சர்களும் மற்றவர்களும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமலிருந்தாலும் இப்போதாவது அன்புகூர்ந்து கவனிக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* SRI M. R. KANDASWAMI MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை முன் வந்திருக்கும் நிதிநிலை அறிக்கையை வரவேற்று சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த உணவுத் தட்டுப்பாடு, உணவு விலையேற்றம் என்ற கூச்சலும் கூக்குரலும் இருக்கிற நேரத்திலேயும்கூட நம் அமைச்சரவை எந்த வித வரியையும் போடாமல், எந்தவித வரியையும் அதிகப்படுத்தாமல், இப்போது இருக்கக்கூடிய நிலையில் பட்ஜெட்டைத் தயாரித்துக்கொண்டுவந்திருப்பது மிகவும் பெருமைக்குரிய விஷயம். அதுமட்டுமல்லாமல், வரி போடாததன் காரணமாக தனிப்பட ஏதாவது செய்யவேண்டிய திட்டங்களை விட்டுவிட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. முன்னேற்றகரமான முறையில் பல திட்டங்களையும், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் செய்வதைக் காட்டிலும் முற்போக்கான நிலையில் பல திட்டங்களுக்கு அதிகத் தொகையை ஒதுக்கி இந்த பட்ஜெட்டைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அது பாராட்டுதற்குரிய விஷயம். எப்போதும்போல பட்ஜெட் உரையைப்பற்றி எதிர் கட்சிகள் குறை கூறக்கூடியது சகஜமாக இருந்தாலும்கூட, ஒரு நண்பர் பேசியதைக் கேட்டபோது ஆச்சரியத்தில் மூழ்கவேண்டியிருந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்தபோது இருந்ததைக் காட்டிலும் ஒன்றும் சிறப்பாக தற்போது இல்லை என்று சொன்னார். அவர் இந்த நாட்டிலே நடக்கும் செயல்களைப் பார்த்துச் சொல்லுகிறாரா அல்லது அசெம்பிளியில் பேசவேண்டுமென்று பேசுகிறாரா என்று ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது. உணவு விஷயத்திலேயும்கூட உணவுப் பொருள்கள் விலையேற்றம் தவிர, இந்த நாட்டிலே ஏற்கெனவே நபர் ஒன்றுக்கு 5-6 அவுன்ஸ் என்று இருந்த நிலையை மாற்றி ஜனப் பெருக்கம் ஒவ்வொரு வருஷத்திலேயும் அதிகமாகிக்கொண்டிருக்கும் நேரத்திலேயும், உணவு இல்லாமல் பட்டினி கிடக்கிறார்கள் என்ற நிலை இல்லாமல் உணவு உற்பத்தியாகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு நம் ராஜ்யம் நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்தியதின் மூலமாக

[Sri M. R. Kandaswami Mudaliyar] [3rd March 1961

இப்போது 21 லட்சம் டன் அளவுக்கு உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரித்திருக்கிறது. அது மாத்திரமல்லாமல் இந்த 10 ஆண்டு காலத்தில் 341 ஆயிரம் ஏக்கருக்கு அதிக நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்ததன் காரணமாக உணவுத் தட்டுப்பாடு நீங்க வேலை செய்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. ஏற்கெனவே பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்த காலத்தில் இந்த வேலைகளைச் செய்திருந்தால் இத்தனை கோடி ரூபாயை அரசாங்கம் செலவு செய்து அணைக்கட்டுகளைக் கட்டவேண்டிய அவசியம் இருந்திருக்காது. இதை நண்பர் புரிந்துகொள்ளாதது ஆச்சரியமாக இருக்கிறது. அதிலும் ஒரு சட்டசபை உறுப்பினர் இப்படிப் பேசுவது இன்னும் ஆச்சரியமாக இருக்கிறது.

ரசாயன உரத்தை எடுத்துக்கொண்டால், திட்டத்திற்கு முன்பு 9,600 டன் அளவுக்கு உற்பத்தியாக வந்தது இப்போது 60,000 டன் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் விவசாயிகளுடைய நன்மையில், உணவு உற்பத்தியில் எவ்வளவு தூரம் அக்கறை செலுத்தியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வகையில் அரசாங்கத்தைப் பாராட்டத்தான் வேண்டியிருக்கிறது.

அதோடு கைத்தறித் தொழிலுக்கு அரசாங்கம் மிகவும் ஒத்துழைப்பு கொடுத்து வந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அப்படி ஒத்துழைக்கவில்லையென்றால் இத்தனை லட்சம் கைத்தறி நெசவாளர்கள் நல்ல நிலையில் இருக்க முடியாது என்பதை யாரும் மறுக்க முடியாது . இருந்தபோதிலும் சென்ற 1½ ஆண்டு காலமாக குறிப்பிட்ட விலையில் நூல் கிடைக்காமல் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் பல மாநாடுகளைக் கூட்டியும் மில் அதிபர்களைக் கூட்டியும் குறைந்த விலையில் நூல் கொடுக்க வேண்டும் என்றும் சொற்ப லாபம் வைத்துக் கொடுக்கவேண்டும் என்றும் கைத்தறி நெசவுத் தொழில் வாழ வேண்டும் என்ற முறையில் மில் அதிபர்கள் வேலை செய்தால்தான் மில் தொழிலும் நல்ல முறையில் நடைபெற முடியும், எந்த அளவுக்கு நீங்கள் கைத்தறித் தொழில் வாழும் முறையில் ஒத்தாசை செய்கிறீர்களோ அந்த அளவுக்கு நீங்களும் வாழ முடியும், அதற்கு ஏதாவது அழிவு ஏற்படுமானால் நீங்களும் அழிய வேண்டியதுதான் என்று எச்சரிக்கை செய்தும், மத்திய அரசாங்கம் எல்லா மில் அதிபர்களையும் கூட்டிப் பேசியபோது மில் அதிபர்கள் இந்த விலையில் (குறைந்த விலையில்) நூல் கொடுக்கிறோம் என்று அவர்களாகவே, சர்க்கார் தலையீடு ஏதுமில்லாமல், ஒப்புக்கொண்டும், அந்த ஒப்பந்தத்தை 1 வாரம் அல்லது 15 நாட்கள் அமுல் நடத்துகிறார்களே தவிர, மில் டெப்போக்களில் ஒத்துக்கொண்ட விலைக்குக் கொடுக்காமல் கையிலே பணத்தை வாங்கிக்கொண்டு அவர்கள் இஷ்டப்பட்ட விலைக்குக் கொடுப்பதால் கைத்தறி நெசவாளர்கள் உணவுப் பண்டங்களின் விலையேற்றத்தாலும், நூல் விலையேற்றத்தாலும் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். நமது அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களுக்கு மில் அதிபர்கள் ஒத்துக்கொண்ட விலைக்கு நூலை வாங்கி அரசாங்கமே டெப்போ மூலம் வினியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



3rd March 1961] [Sri M. R. Kandaswamy Mudaliyar]

அதிலும் இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களில் கூட்டுறவு இயக்கத்தில் இருப்பவர்களுக்கு ரிபேட் கொடுப்பதால் அவர்களுக்கு வசதி இருக்கிறது. பல வேளைகளில் இந்த உதவித் தொகை அவர்களுக்குச் சேராத காரணத்தினால் அவர்களும் பல வகைகளில் கஷ்டப்படுகிறார்கள். அரசாங்கம் நூலை மில் அதிபர்கள் ஒத்துக்கொண்ட விலைக்கு வாங்கி கூட்டுறவு சொஸைட்டிகளில் இருக்கக்கூடியவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்தால் எல்லா கைத்தறி நெசவாளர்களும் பயனடையக்கூடிய நிலைமை ஏற்படும். அரசாங்கம் பல லட்சக்கணக்கான ரூபாயைச் செலவழித்து ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதை விட பல லட்சக்கணக்கான குடும்பங்கள் இதில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக இந்தத் தொழில் நல்ல முறையில் நடைபெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தால்தான் இந்தத் தொழில் நசித்துப் போகாமல் வளர்ச்சி அடைய முடியும். ஆகையால் குறைந்த விலையில் நூலை வாங்கி விற்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எங்கள் சேலம் ஜில்லா ஏற்கெனவேயே மழை இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி நான் 2-3 ஆண்டுகளாகவே சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டும் எல்லா இடங்களிலும் மழை அதிகம் பெய்து நாசம் ஏற்பட்டிருக்கிற நேரத்தில், எங்கள் ஜில்லாவில் மழை பெய்யாது குடிக்கக் கூட தண்ணீர் இல்லாமல் வறண்டிருக்கிறது. நான் இங்கே வரக்கூடிய காலத்தில்கூட கலெக்டரிடம் இதைப்பற்றிச் சொன்னேன். இங்கு இருக்கக்கூடிய குடிதண்ணீர் கிணறுகளை ஆழப்படுத்திக் கொடுக்க வேண்டும். 4-5 ஆண்டு காலமாக பருவ மழை இல்லாமல் இருக்கிறது.

அதைப் பஞ்சப்பிரதேசமாக எடுத்துக்கொண்டு, அங்கே கிணறு முதலியவைகளை ஆழத்தோண்டி, குடிதண்ணீர் வசதியை உடனடியாகச் செய்துகொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் சொல்லியதுபோல் சேலத்தில் ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது. சேலம் ஜில்லாவிலே அதிகமான ஜனத்தொகை இருக்கிற காரணத்தினால், அந்த அடிப்படையை வைத்துக்கொண்டாவது இப்போது சமீபத்திலே ஏற்படுத்த இருக்கும் அடிஷனல் கல்லூரிகளில் அவசியம் சேலத்திலே ஒரு என்ஜினியரிங் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மின்சார அமைச்சர் அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நான் இப்போது சொல்லக்கூடிய பிரச்னையைக் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். அதாவது மின்சார சார்ஜை எல்லா இடத்திற்கும் ஒரு குதிரைப் பவருக்கு ரூ. 35 ஆக்க வேண்டுமென்று சொல்லி வந்திருக்கிறேன். எந்த இடத்திலே அதிகம் தேவையோ அந்த இடத்திற்கு மட்டும் ரூ. 35 என்று போட்டிருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. ராசிபுரம், சேலம்,

[Sri M. R. Kandaswamy Mudaliyar] [3rd March 1961

திருச்செங்கோடு முதலிய தாலூகாக்களுக்கு குதிரைப் பவர் ஒன்றுக்கு ரூ. 45 என்று வைத்திருக்கிறார்கள். இது தவறு. சேலம் ஜில்லாவில் இருக்கக்கூடிய எல்லா தாலூகாக்களுக்கும் ஒரே மாதிரியான விகிதத்தில் இந்த சார்ஜ் விதிக்கப்பட வேண்டும். ஆகவே சேலம் ஜில்லாவில் எல்லாத் தாலூகாக்களுக்கும் ஒரே மாதிரியாக ஒரு குதிரைப் பவருக்கு ரூ. 35 என்று விதிக்க வேண்டுமென்று கனம் மின்சார இலாகா அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். கனம் மின்சார அமைச்சர் அவர்கள் அங்கு வந்திருக்கும் போது கிணறுகளில் 120 அடி ஆழத்திலிருந்து நீர் எடுத்து வ்வசாயம் செய்யக்கூடிய நிலைமையையும், கஷ்டத்தையும் நேரிலேயே பார்த்திருக்கிறார்கள். மின்சார அமைச்சர் அவர்கள் மின்சாரத்தின் பெருமையைப் பற்றியெல்லாம் புகழ்ந்து சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில், இங்குள்ள நிலைமையை அவசியம் கவனத்தில் வைத்துக்கொண்டு சேலம் ஜில்லா பூராவுக்கும் ஒரே விதத் தொகையை நிர்ணயிக்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, குடிதண்ணீர் வசதியைப் பொறுத்தவரையில் ராசிபுரம், திருச்செங்கோடு ஆகிய இடங்களில் மிகவும் கஷ்டப்படக் கூடிய நிலைமைதான் இன்றும் இருக்கிறது. பட்ஜெட்டிலேகூட குடிதண்ணீர் வசதியைப் பெருக்குவதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே முக்கியமாக ராசிபுரம், திருச்செங்கோடு ஆகிய இடங்களை எடுத்துக்கொண்டு, மோகனூர் கால்வாயிலிருந்து, காவேரி நதியிலிருந்தும் குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, ராசிபுரம் தாலூகாவில் வெண்ணந்தூரில் ஒரு பிரசவ ஆஸ்பத்திரியை ஏற்படுத்த வேண்டுமென்று கடந்த நான்கு ஆண்டுகளாக கேட்டுக்கொண்டு வரப்படுகிறது. அதைச் சுற்றியுள்ள கிராமத்தில் 25,000 ஜனத்தொகைக்கு மேல் இருக்கிறார்கள். அங்கு பிரசவ ஆஸ்பத்திரி இல்லாமையால், 10 மைலிலுள்ள ராசிபுரத்திற்குப் போகவேண்டும், இல்லாவிட்டால் 16 மைல் தொலைவிலுள்ள சேலத்திற்கு வரவேண்டும். அதனால் அங்கு அவசியம் ஒரு பிரசவ ஆஸ்பத்திரியை ஏற்படுத்த வேண்டும். அங்குள்ள மக்கள் இதற்காக பங்குத் தொகைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். இந்தப் பங்குத் தொகையை அவர்கள் சேர்த்து தயாராக வைத்திருக்கிறார்கள். இதையும் இந்த ஆண்டிலேயே எடுத்துக் கொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, முக்கியமாக சேலம்-பங்களூர் ரயில்பாதையைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். மூன்றாவது திட்டத்திலே இதற்கு முதலிடம் கொடுக்கப்படும் என்று நமது நிதி அமைச்சர் அவர்கள்கூட சென்ற கூட்டத்தில் இந்தச் சபையிலே சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஏற்கனவே இருந்த திட்டம்தான். ஆகவே இந்தத் திட்டத்தை அவசியம் மூன்றாவது திட்டத்திலே எடுத்துக்கொண்டு, சேலம்-பங்களூர் ரயில் பாதைக்கு முதல் ப்ரையாரிடி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



3rd March 1961] [Sri M. R. Kandaswamy Mudaliyar]

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கல்வியிலே பெரும் பங்கு எடுத்துக்கொண்டு, மிகவும் அக்கறை எடுத்துக்கொண்ட காரணத்தினால் இந்தப் பத்து ஆண்டு காலத்திலே நம்முடைய சென்னை ராஜ்யத்திலே 16,700 பள்ளிக்கூடங்களைக் கட்டியிருக்கிறார்கள். அதிலே இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு, கல்வித் துறையில் இவ்வளவு முன்னேற்றம் செய்திருப்பதற்காக நான் அவருக்கு நன்றி செலுத்திக்கொள்கிறேன். இந்த அரசாங்கம் என்ன நல்ல காரியங்களைச் செய்துவிட்டது என்று ஒரு நண்பர் பேசும்போது குறிப்பிட்டதை இப்போது நினைத்துப் பார்த்தால் வேதனையாகத் தான் இருக்கிறது. 6 வயது முதல் 11 வயது வரையில் இப்போது 48 லட்சம் மக்கள் படித்துக்கொண்டு வருகிறார்கள். இதற்கு முன்பு நம்முடைய நாட்டிலே 17 லட்சம் பேர்களே கல்வி கற்று வந்தார்கள். இப்போது நாம் இந்தத் துறையிலே 75 சதவிகிதம் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். இது நம்முடைய அரசாங்கத்தின் சாதனை என்பதை அந்த நண்பர் சற்று கவனித்துப் பார்த்தால் நல்லது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, வேம்படித்தாளத்தில் ஒரு ரயில் பாலம் இருக்கிறது. இப்பாலத்தை கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். கனம் மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்களும் பார்த்திருக்கிறார்கள். அந்தப் பாலத்தில் ஒரு பஸ்கூட போக முடியாது. ஒரு சிறிய வண்டிதான் போகமுடியும். ஒரு லாரி போகக்கூடிய நிலைமையில் அந்தப் பாலம் இல்லை. இப்படி இந்தப் பாலம் இருப்பதினால், ஒரு மைலில் போகக்கூடிய தூரத்திற்குப் பதிலாக, 10 மைல் சுற்றிக்கொண்டு போகக்கூடிய ஒரு நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தப் பாலத்தை கூடிய சீக்கிரம் சென்னை அரசாங்கம், அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பாலத்தை புதுப்பிக்க வேண்டுமென்று நீண்டகாலமாக கேட்டுக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தப் பாலத்தின் பிரச்னை தீராமல் இருக்கின்றது. இனாம் நிலங்களை சர்வே செய்யாத காரணத்தினால், விவசாயிகள் மின்சாரத்தை உபயோகப்படுத்தி, விளைச்சல் அபிவிருத்தி செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசாங்கம் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு, இனாம் நிலங்களை சர்வே செய்து அவர்களுக்கு பட்டா கொடுத்தால், அவர்கள் மின்சாரத்தின் உபயோகத்தை சீக்கிரமாகப் பெற்று உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஆகவே இதையும் சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பம் கொடுத்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **Sri R. SWAMINATHA MERKONDAR**: சட்டமன்ற உபதலைவர்
சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே நமது நிதி மந்திரி அவர்கள் எந்தவிதமான உபரி வரியும் இல்லாது, ஆச்சரியப்படும் வகையிலே கொண்டு வந்த இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கின்றேன். சென்ற நான்கு கூட்டத்

தில் எதிர்க் கட்சியினர் ஆற்றிய உரைக்கும், இவ்வாண்டு அவர்கள் ஆற்றிவரும் உரையையும் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எல்லோருமே ஒரேமுகமாக "தேர்தல் பட்ஜெட்" என்று சொல்லி வருகின்றார்கள். வரவு செலவுத் திட்டம் என்பது, எந்தெந்த வகையிலே வரவு வருகின்றது, எந்தெந்த வகையிலே அடிப்படையிலே செலவாகின்றது என்பதை விவரமாக சபை முன்பு வைப்பதுதான் வரவு செலவுத் திட்டம் என்பதாகும். அவ்வாறு இருக்க இதைத் தேர்தல் திட்டம், தேர்தல் பட்ஜெட் என்று சொல்வது என்னைப் போன்றவர்களுக்கு வருத்தத்தைத் தரக்கூடியதாக இருக்கிறது. எதிர்க் கட்சியிலே இருக்கக்கூடிய ஒரு அம்மையார் சொன்னார், தற்காலத்திலே ஏழை மாணவர்களுக்குக் கல்விச் சலுகை இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்பட்டு இருக்கிறது. அதனால் பிற்பட்ட சமூகத்தினர், ஹரிஜனங்கள் பாதிக்கப்படுவதுபோல் அந்த அம்மையார் அவர்கள் சொன்னார்கள். நானும் ஒரு பிற்பட்ட சமூகத்தினர் என்ற அடிப்படையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த இலவசக் கல்விச் சலுகை பிற்பட்ட சமூகத்தினரையோ அல்லது ஹரிஜனங்களையோ எந்தவிதத்திலும் பாதிக்காது. நமது தேசப் பிதா காந்தி மகான் ஜாதி மத பேதமற்ற அடிப்படையிலே சமுதாயம் வளர வேண்டுமென்று சொன்னாரோ, அந்த முறையிலேதான் இன்று இந்தக் கல்விச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை எல்லா பிற்பட்ட மக்களும், ஹரிஜனங்களும் முழு மனதுடன் ஆதரிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது எதிர்க் கட்சியிலுள்ள சோஷியலிஸ்ட் அங்கத்தினர் ஒருவர், நம்முடைய இந்த வருஷத்திய பட்ஜெட்டிலே துண்டு விழுந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்தத் துண்டை கனம் அமைச்சர் அவர்கள் எப்படி சரிக்கட்டுவார்கள் என்று அவர் குறிப்பிட்டார். சென்ற ஆண்டுத் திட்டத்தை அவர் நன்கு பார்த்தால் சென்ற ஆண்டிலே 33 லட்சம் துண்டு விழுந்தது. ஆனால் கடைசியில் அது 122 லட்க்ஷ ரூபாய் உபரியாக சரிக்கட்டப்பட்டது. அந்த அறிக்கையை அவர் கவனித்திருந்தால், நமது கனம் நிதி அமைசர் அவர்கள் இந்தத் துண்டை திறமையுடன் சமாளிக்க முடியும் என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம்.
12.30 p.m. அந்தத் திறன் நமது நிதி அமைச்சர் அவர்களைச் சார்ந்தது 14 லட்சம் ஏக்கரா நஞ்சை விவசாயத் துறையிலே இருக்கும் தஞ்சை ஜில்லாவில் ஒரு விவசாயக் கல்லூரி இருக்கவேண்டியது அவசியம் என்பதை நான் இந்தச் சபை முன்பு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சை ஜில்லா பெரும்பாலான விவசாயத் தொழிலாளிகள் வாழ்கின்ற இடமாக இருப்பதால், அங்கு விவசாயக் கூலி மிகவும் குறைவாக தற்காலம் இருந்துவருகிறது. அந்த நிலையிலே அவர்கள் அதிகமாக ரூபாய் கொடுத்து உணவு தானியங்களை வாங்க முடியாமல் இருக்கிறார்கள். ஆதலால் அங்கு தற்பொழுது நடந்துவரும் நியாயவிலைக் கடைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும் எங்கெங்கு விவசாயப் புள்ளிகள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் தொடர்ந்து நியாயவிலைக் கடைகள் நடத்தப்பட்





அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி; தஞ்சை, ஒரத்தநாடு தாலுகாவில் சிலபகுதி புஞ்சை பிரதேசமாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலே புஞ்சையில் வேலை செய்யும் கூலி ஆட்களுக்கு கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. அந்தக் காரணத்தினால் அவர்கள் கூடுதலான விலை கொடுத்து அரிசி முதலிய உணவு தானியங்கள் வாங்க முடியாத நிலையில் இருப்பதால், அங்கு குறைந்த விலையில் விற்கும் நியாய விலைக் கடைகளை அவசியம் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நமது நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் முன்பு நான் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் பகுதியிலே கட்டளை வாய்க்கால் திட்டம் என்ற ஒரு திட்டம் ரூ. 186 லட்சம் செலவில் 20,000 ஏகராவுக்கு பாசனம் அளிக்கக்கூடிய முறையில் நடந்து, அது வெற்றிகரமாக தற்பொழுது நல்ல பலனை அளித்து வருகிறது என்பதற்கு அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் இன்று அதில் என்ஜினியர்கள் சொல்லுகிறார்கள், எதிர்பார்க்கிறார்கள், உபரியாக 7,000 ஏக்கராவுக்குகூட நீர் சப்ளை செய்யப்படும் என்று. அவ்வாறு இருக்கும்பொழுது அந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும். அருகாமையில் உள்ள சில குளங்களுக்கும் வேதாரண்யத்தில் ஏற்படுத்தியிருக்கும் 'லிப்டு இர்ரிகேஷன் ஸ்கீம்' படி அங்கும் ஒரு திட்டத்தை ஏற்படுத்தினால் நன்மை பயக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தற்பொழுது அந்த இடத்திலே பூதலூர் பிளாக் என்று ஒன்று நடைமுறையில் நடந்து வருகிறது. அதற்கு ரூ. 12 லட்சம் சர்க்காரால் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையிலே விவசாய அபிவிருத்திக்காக என்று ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த தொகையிலிருந்தாவது 'லிப்டு இர்ரிகேஷன்' திட்டத்தை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதனால் மக்கள் நல்ல பயனை அடைவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தென் பகுதியில் உள்ள காடாரம்ப பிரதேசங்களில் 'பவர் டிரில்லிங் ஸ்கீம்' திட்டத்தையும் விஸ்தரித்துக் கொடுத்தால் காடாரம்ப பிரதேசத்தில் உள்ள மக்கள் நல்ல பலனை அடைவார்கள் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri S. RAMASAMI THEVAR :** சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். புது வரிகள் எதுவும் போடவில்லை என்று அநேகர் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இதிலே நாம் மகிழ்ச்சி அடைவதற்கு ஒன்றும் இடையாது. நமது மாநிலத்திலே புது வரிகள் போடாவிட்டாலும்கூட, மத்திய சர்க்கார் பல வரிகளை போட்டிருக்கிறார்கள் என்று நமக்கு தெரிய வருகிறது. இன்னும்கூட ஏழைகளை பாதிக்கக்கூடிய அளவிலே அங்கு வரிகள் போடப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக ஏழைகள் போடக்கூடிய பாக்கிற்குக்கூட அதிக வரி போடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நான் அதிகம் விவரிக்கத் தேவையில்லை.

[Sri S. Ramasami Thevar] [3rd March 1961

அதிக வரிகள்தான் போடவேண்டும் என்றாலும்கூட, எந்த வரி யாவது நீக்கப்பட்டிருக்கிறதா அல்லது எந்த வரியாவது குறைக்கப் பட்டிருக்கிறதா என்பதை நாம் கவனிக்கவேண்டும். சென்ற கால சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் 1939-ம் ஆண்டிலே நமது மாகாணத்தோடு ஆந்திரா போன்ற மாகாணங்கள் இணைந்து இருந்த காலத்தில் 16 கோடி ரூபாய்க்கு மேல் வரி விதிக்கப்பட்ட தில்லை. இன்று ரூ. 82 கோடி அளவிற்கு வரிகள் விதிக்கப்பட்டிருக் கின்றன. எத்தனையோ மடங்கு அதிக வரிகள் போடப்பட்டிருக் கின்றன. எத்தனை மடங்கு வரிகூட போடப்பட்டிருந்தும்கூட, மக்கள் சுபிட்சம் கண்டிருக்கிறார்களா வரி போடப்பட்ட அளவிற்கு, அந்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக் கிறார்களா என்று பார்க்கும்பொழுது, இல்லவே இல்லை என்று தான் சொல்ல முடியும். நமது நாட்டில் 80 சதவிகிதம் விவசாயத் தொழிலாளர்கள் என்று சொல்லுகிறார்கள். விவசாயிகளை எடுத்துக்கொள்வோமானால் நடுத்தர விவசாயிகள், சிறு விவசாயிகள், மற்றும் தொழிலாளிகள் எல்லோரும் பழைய கருப்பனே கருப்பன் என்ற முறையிலேதான் வாழ் கிறார்கள். அவர்கள் ஒருவிதமான முன்னேற்றமும் காண வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பழைய குடிசை, பழைய கந்தல், அந்த நிலையில்தான் விவசாயிகள் இருக் கிறார்கள். போடப்பட்டிருக்கிற வரியைக் கொடுக்க முடியாமல், கடன் பளு தாங்கமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் அவர்கள் வரி கட்ட முடியாத நிலை ஏற்பட்டிருக் கிறது. அப்படியிருக்கும்பொழுது வரியே போடவில்லை வரியே போடவில்லை என்று சந்தோஷப்படுவதற்கு இடமே இல்லையே? வெறும் பேச்சு அளவிலே பேசுவதில் பயனில்லை. அடுத்துப் பார்க்கும்பொழுது புதிய வரி போடவில்லை என்று சந்தோஷப் படுகிறோம். ஆனால் அதே சமயத்தில் பஞ்சாயத்துகளுக்கு புதிய வரிகள் போட அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வீட்டு வரி, தொழில் வரி, வாகன் வரி, செஸ் வரி 45 நயே பைசே வரையில்—இன்னும்கூட செஸ் வரியை அதிகப்படுத்து வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது—இப்படியெல்லாம் வரி போடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னுமா மக்களுக்கு வரி போடவேண்டும்? அவர்கள் தலையிலே வரிச் சுமையை வைத்துக் கட்டவேண்டும்? இந்த நிலையில் வரியே போடவில்லை என்று சந்தோஷப்படுவதில் என்ன நியாயம் இருக் கிறது என்று நான் சர்க்காரை கேட்க விரும்புகிறேன்.

நமது வரிப்பணமெல்லாம் திட்டப்படி நல்ல முறையில் செலவு செய்யப்படவில்லை. எதற்கு எடுத்தாலும் நிர்வாகச் செலவு அதிக மாகிறது. நிர்வாகத் துறையில் போடுகிற வரியெல்லாம் விழுங்கப் பட்டுவிடுகிறது. நிர்வாகச் செலவு அதிகமாகிவிட்டது. எடுத்த தற்கெல்லாம் பல உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். முன்பு ஒன்றிரண்டு உத்தியோகஸ்தர்கள் செய்த வேலையை இன்று 10, 20 பேர்கள் செய்து வருகிறார்கள். அப்படியிருந்தும்கூட திறமையாக நல்ல முறையில் வேலைகள் செய்யப்படவில்லை என் பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



3rd March 1961] [Sri S. Ramasami Thevar]

விவசாயத்தில் அதிக முன்னேற்றம் கண்டுவிட்டோம், உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம் என்று சொல்லப்பட்டு வருகிறது. உணவு சம்பந்தப்பட்டவரை இந்த நாடு பற்றாக்குறை நாடாக இருக்கிறது என்பதை அறிவோம். அன்று பர்மாவி லிருந்து தானியங்களை இறக்குமதி செய்தோம். இன்றும் பர்மா, எகிப்து, கனடா போன்ற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதை நாம் பார்த்து வருகிறோம். அப்படி யிருந்தும் உணவு உற்பத்தியை பெருக்கிவிட்டோம், பெருக்கி விட்டோம் என்று சொல்லிக்கொள்ளுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது?

அடுத்துப் பார்ப்போம். அறுவடைக்குப் பின்னால் விலை வாசிகள் குறைவது எப்பொழுதும் வழக்கமாக இருந்திருக்கிறது. ஆனால் இன்று பார்த்தால் மூட்டைக்கு ரூ. 3 முதல் 5 வரையில் விலை கூடியிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? அதிக விளைச்சல் கண்டிருந்தால் ஏன் இப்படி விலை ஏறவேண்டும்? நியாய விலைக்கடைகளை மூடவேண்டும் என்று சொல்லப்பட்டு வந்தது. ஆனால் இன்று நியாயவிலைக் கடைகளை யெல்லாம் மறுபடியும் திறக்க வேண்டிய நிலை இருக்கிறது. முக்கியமாக அதிகப்படியான நியாய விலைக் கடைகளையும் திறந்தால் அன்றி, விலைவாசி ஏற்றத்தை நாம் தடுக்க முடியாது.

நமது மாகாணத்தில் உள்ள விவசாயிகள் திறமைசாலிகள், நல்ல முறையில் உணவு உற்பத்தியை பெருக்குகிறார்கள் என்று சொல்லப் படுகிறது. அவர்களை நாம் பாராட்ட வேண்டும், வரவேற்க வேண்டும். இன்னும் அவர்களுக்கு காலாகாலத்தில் உரங்களை கொடுத்திருந்தால் கடன் வசதி செய்து கொடுத்திருந்தால் இன்னும் அதிக உற்பத்தி செய்திருக்க முடியும். மற்ற தொழில் போல் அல்ல விவசாயம். அதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். காலாகாலத்தில் பயிர் செய்யவேண்டும். காலாகாலத்தில் உரம் இடவேண்டும். காலம் தவறி எவ்வளவு உரம் இட்டாலும்கூட, நல்ல விளைச்சல் காண முடியாது. கோப்பு தப்பினால் குப்பையும் பயிர் ஏறாது என்று சொல்லுவார்கள். எதையும் காலாகாலத்தில் செய்யவேண்டும். காலம் தவறி உரம் இட்டால் விளைச்சல் காண முடியாது. காலாகாலத்தில் உரம் கொடுக்க அரசாங்கம் தவறிவிட்டது என்பதைக் காண்கிறோம். உரம் பற்றாக்குறை நமது நாட்டில் இருக்கிறது. உணவுப் பிரச்னை தான் முக்கியமான பிரச்னை நமது நாட்டில். அப்படியிருந்தும் கூட நமது மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் புண்ணாக்கு முதலியவைகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதை பார்க்கிறோம். வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவது போல இருக்கிறது இது. நமக்கு பற்றாக்குறை இருக்கும்போது வெளி நாடுகளுக்கு ஏன் புண்ணாக்கு போன்றவைகளை அனுப்ப வேண்டும் என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு இங்கே நதிகள் கிடையாது, சிறிய நீர்ப்பாசனம்தான் வழி என்று சொல்லப்படுகிறது. ஆனால் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கி இருக்கும் தொகையோ மிகக் குறைவு. குறிப்பாக,

அம்மாபட்டணம், கோட்டைபட்டணம் ஆகிய சிறிய துறைமுகங்கள் என்னுடைய பகுதியிலே இருக்கின்றன. இந்தத் துறைமுகங்கள் எல்லாம் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இவைகளைச் சீர்திருத்தினால் போக்குவரத்து வசதி அதிகரிக்கும். மீன் பிடிப்புத் தொழிலும் வளரும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

**SRI A. MARIAPPAN :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த 1960-61-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எதிர்க் கட்சியிலே உள்ள இரண்டொருவர்கள் நாட்டிலே என்ன நடந்திருக்கிறது, ஒன்றும் நடக்கவில்லையே என்று கூறினார்கள். பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திருவாளர் சின்னதுரை அவர்கள். அப்படி என்ன நடந்திருக்கிறது என்று கேட்டார்கள். சர்க்காரோடு ஒத்துழைக்காவிட்டாலும் கெடுதல் செய்ய வேண்டிய அவசியமில்லை. சேலத்திலே உருக்குத் தொழில் ஏற்படுத்தவில்லையா, நெய்வேலியிலே என்ன செய்துவிட்டார்கள் என்றெல்லாம் எதிர்கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள். அங்கே அவர்கள் சென்று பார்த்தால் தெரியும். நெய்வேலியிலே பழுப்பு நிலக்கரி வெட்டி எடுப்பதற்காக அங்கே ஒரு புதிய பட்டணமே ஏற்படுத்தப்பட்டு காரியங்கள் நடந்து வருகின்றன. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இந்த மாதிரி இடங்களுக்குச் சென்று பார்ப்பதில்லையோ, என்னமோ, தெரியவில்லை. கைத்தறி நெசவாளரைப் பொறுத்தவரையில் சர்க்கார் தேவையான அளவுக்கு உதவி செய்ய முடியவில்லை என்றாலும், சென்ற எட்டு ஆண்டுகளிலே அவர்களுடைய வாழ்க்கைத் தரம் கணிசமாக உயர்ந்திருக்கிறது என்பதை அந்தக் கைத்தறியாளர் பகுதியிலிருந்து வருகிற நான் ஒப்புக்கொள்கிறேன். இதற்கு முன்னர் அவர்களுக்கு ஆண்டுதோறும் வேலைவாய்ப்பு இருக்காது. ஆறு மாதங்கள்தான் வேலை கிடைக்கும். அந்த 6 மாதத்திலேயும் 3 மாதங்களுக்குத்தான் ஓரளவுக்குக் கூலி கிடைக்கும். மூன்று மாதத்தில் உற்பத்தி செய்த துணியை மிகவும் குறைந்த விலைக்கு விற்றுக் கொண்டிருந்த நிலைமை மாறி, சென்ற எட்டு ஆண்டுகளாக அவர்களுக்கு முழு வேலை கிடைப்பதற்கான உதவியை சர்க்கார் செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கைத்தறி நெசவாளர்கள் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் சம்பாதிக்காவிட்டாலும்கூட, 35 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். நிதியமைச்சரவர்கள், புதிய வரிகள் போடாமலும், சிறிய வியாபாரிகளுக்கும், 50,000 ரூபாய் வரை உத்தேச மதிப்பின்பேரில் வரி விதிக்கும் சலுகையைக் கொடுத்திருப்பதற்காகவும், அவர்களை பாராட்டுகிறேன். அதே நேரத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். உணவு தானியங்கள் பேரிலுள்ள வரியையும் எடுத்திருந்தால் ஏழை எளிய மக்களுக்கு உதவியாக இருந்திருக்கும். பல இடங்களில் வியாபாரிகள் ஒழுங்காக வரி செலுத்திக் கொண்டு வந்தாலும், விற்பனை



வரி இலாகா அதிகாரிகள் அவர்களையும் மிகக் கேவலமான முறையில் நடத்துகிறார்கள். சேலத்தில் பெரிய மார்கெட் இருக்கிறது. தானியங்கள், மற்றப் பொருள்கள் வரும்போதும்; போகும் போதும். ஒழுங்காக விற்பனை வரி செலுத்தி வருகிறார்கள் ஆனால், சில விற்பனை வரி அதிகாரிகள் வேண்டுமென்றே, பல அதிகாரிகள் நல்ல முறையில் நடந்தாலும், சிலர் அவர்களை நன்றாக நடத்துவதில்லை. அங்கே ஜாயிண்ட் ஸி.டி.ஓ. என்று ஒருவர் இருக்கிறார். அவர்தான் அதிகத்தொந்தரவு கொடுக்கிறார். ஏதாவது என்றால், "ஏன்; எல்லாம் உங்கள் சர்க்கார் தானே" என்கிறார். அவர் நினைக்கிறார் போலும், ஒரு சிலருக்காக சர்க்கார் தனியாக இருப்பதாக. எல்லா அதிகாரிகளும் அப்படி என்று நான் சொல்லவில்லை. பெரும்பாலோர் நல்ல முறையில் நடந்தாலும், ஒரு சிலர் இம்மாதிரி சர்க்கார் யாருக்காகவோ நடப்பது போலும், அவர்களுக்குச் சம்மந்தம் இல்லாதது போலவும் பேசுகிறார்கள். அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்க்காரை, அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்த வரை, நார்பட்டு நல்ல முறையில் வினியோகிக்கப் படுவதில்லை. பல ஆண்டுகளாக நார் பட்டு நூல் கிடைப்பதில்லை. பெரிய தொழிலாளிக்கு மட்டுமே கிடைத்து வந்தது. மற்றவர்களுக்கும், ஆறு ரூபாய் பவுண்டுக்கு விற்ற நார் பட்டு, 12 ரூபாய்க்கு கிடைத்தது. கள்ள மார்கெட்டு இல்லாவிட்டாலும் அதுவாவது பரவாயில்லை. கூட்டுறவு சங்கங்களுக்கும் வெளியே உள்ளவர்களுக்கும் இறக்குமதி லைசென்ஸ் கொடுக்க தீவிர பரிசீலனை செய்து தனிப்பட்ட நெசவாளர்களுக்கும், அவர்கள் கஷ்டங்களை உணர்ந்து வாஸ்தவமாக அந்த தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலம் ஆத்தூர் தாலுக்காவில், கூட்டுறவு இயந்திர சாகுபடி செய்ய அந்தப் பகுதியை அபிவிருத்தி செய்ய பல ஆண்டுகளாக வேலை நடந்து வந்திருக்கிறது. அதை இன்னும் கொஞ்சம் தீவிரப்படுத்தி இயந்திர சாதனங்களால் சாகுபடி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரும்பு தொழிற்சாலை சம்பந்தப்பட்டவரை, பூர்வாங்க ஏற்பாடுகளுக்காக 75 லட்ச ரூபாய் மாநில சர்க்கார் ஒதுக்கியிருப்பதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையை நிறுவ ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும் என்றும் மாகாண சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேலம் நகரத்தைப் பொருத்த வரையில், பாதாள சாக்கடைக்கு அவசியமிருந்தபோதிலும், அது இந்த திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. அங்கே பாதாள சாக்கடைகள் அமைக்க சேலம் நகரசபைக்கு வேண்டிய கடனும், மானியமும் கொடுத்து உதவ வேண்டிய ஏற்பாடுகளை மாகாண சர்க்கார் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரோடு போக்குவரத்துக்கள் மிகவும் மோசமாக இருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு சென்னை நகரம் இருந்தது போல் இருக்கிறது. அதை நல்ல முறையிலே சீர் படுத்த மாகாண சர்க்கார் உதவிகள் அளிக்க வேண்டும்.

சேலத்தில் நீண்ட நாளாக இருக்கும் குறை அங்கு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு, போன்றவை இல்லாமல் இருப்பது. அங்கு இந்தக் கோர்ட்டுகளை வைக்க தாராளமாக இடவசதிகள் இருக்கின்றன. 50, 60 ஏக்கரா நிலம் காலியாக இருக்கின்றன. மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டி, ஏற்பாடுகள் செய்தால் நலமாக இருக்கும். தலைமை ஆஸ்பத்திரியில் போதிய வசதிகள் இல்லை. அது 30 லட்சம் ஜனத்தொகை கொண்ட, மாகாணத்திலேயே பெரிய ஜில்லா. அங்கு தற்போது 80 பெட்டுகள் தான் இருக்கின்றன. அது போதாது. ஏற்கனவே ஸ்ரீ. சுப்பிரமணிய கௌண்டர் சொன்னது போல, சேலத்தில் ஒரு மெடிகல் காலேஜ் ஏற்படுத்த வேண்டும். 16 ஸ்பிண்டில்கள், 32 ஸ்பிண்டில்கள் கொண்ட இயந்திரங்கள் சிறு தொழிலாளிக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்ற காரணத்தினால், இம்மாதிரித் தொழிலை அபிவிருத்தி செய்ய, அதிகப் படியான யூனிட்டுகளை ஏற்படுத்த வேண்டும். 50 யூனிட்டுகள் மட்டும் போதாது. பெரிய அளவில் அந்த யூனிட்டுகளை ஆரம்பித்து நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த ஒரு மாதகாலமாக 80-ம் நெம்பர் 10 ராத்தல் கொண்ட கண்டு 10 ரூபாய் விலை ஏறியிருக்கிறது. அதன் காரணமாக கைத்தறி நெசவாளர்கள் கூலியை இழக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இயக்கத்திற்கு உதவி செய்யும் முறையில், பைனான்ஸ் கார்பொரேஷன் ஏற்படுத்த முன் வந்ததற்காக சர்க்காரைப் பாராட்டுகிறேன். அதற்குப் பணம் போதாது, அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கூட்டுறவு இயக்கத்திற்கு வெளியே இருக்கக்கூடியவர்கள் கடன் பட்டிருந்தால் அவர்களுடைய கடனையும் அடைத்து, கூட்டுறவு இயக்கத்தில் கொண்டுவர பணங்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காகவும் சர்க்காரைப் பாராட்டுகிறேன்.

பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கும் பதினோராவது வரை இலவசக் கல்வியளிக்க முன் வந்ததற்காக சர்க்காரைப் பாராட்டுகிறேன். அப்படி பாராட்டுவதோடுகூட, அம்மையார் அவர்கள் இம்மாதிரி எல்லோருக்கும் வசதிகள் அளிப்பதைக் குறித்து வருத்தப்பட்டார்கள். நானும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன்தான். இம்மாதிரிச் சலுகை கொடுப்பதனால் பின் தங்கியவர்களுக்கோ, ஹரிஜனங்களுக்கோ எந்த விதமான கெடுதலும் இல்லை. யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. குறிப்பாக, பின்தங்கிய பிராமண வைச்ய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். எங்கள் பக்கத்திலேயே பல ஏழைகள் அவர்களிடையே இருக்கிறார்கள். போதிய வருமானம்



இல்லாமல் தங்கள் குழந்தைகளுக்கு கல்வி போதிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். பல அக்கிரகாரங்கள் அழிந்து வேறுபலர் குடியிருக்கும் நிலையிருக்கிறது. அம்மாதிரி நிலையிலே, பொருளாதாரத்தில் பின்தங்கிய எல்லோருக்கும் உதவியளிப்பது என்பதனால், பின் தங்கியவர்கள்; ஹரிஜனங்கள் யாருக்கும் பாதகம் வந்துவிடாது. அதே சமயத்தில் பின் தங்கிய, ஹரிஜன வகுப்பினருக்குக் கொடுக்கும் உதவிகளுக்காக அதிகமாகப் பணத்தை ஒதுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏற்கனவே அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல, சேலத்தில் ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது, ஆகவே ஆரம்பிக்க இருக்கும் ரீஜனல் எஞ்ஜினியரிங் காலேஜை, தமிழ் நாட்டிலே அமைத்து; அதையும் சேலத்திலேயே ஏற்படுத்த வேண்டும் என்று சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக எடுத்துக் 1 p.m. கொண்டால் ஹரிஜன மக்களுக்கு உதவி செய்யப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அந்த உதவி நகரப்புறங்களில் இருக்கக்கூடிய ஹரிஜன மக்களுக்கு கிடைக்கவில்லை. குறிப்பாக சேலத்தை எடுத்துக்கொண்டால் அங்குள்ள ஹரிஜன மக்கள் ரொம்பவும் கேவலமாக இருக்கிறார்கள். அவர்கள் வாழக்கூடிய இடங்கள்கூட மிகவும் கேவலமாக சுகாதாரமற்ற நிலைமையில் இருக்கிறது. கனம் மந்திரி கக்கன்ஜி அவர்கள்கூட அதை வந்து பார்வையிட்டிருக்கிறார். மிகவும் மோசமான நிலைமையில் சுகாதாரக் கேடான இடங்களில் அங்குள்ள ஹரிஜனங்கள் வாழ்கிறார்கள். அவர்கள் நகரங்களில் இருக்கிறார்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு இந்த உதவி கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே அந்த முறையை மாற்றி நகரங்களில் இருக்கக்கூடிய ஹரிஜனங்களுக்கு சர்க்காருடைய உதவி கிடைக்கும் அளவில் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்லம் க்ளியரன்ஸ் சம்பந்தமாக அவர்கள் செய்யப்படும் காரியங்கள் தாமதமாக நடைபெறுகிறது. அதைத் தவிர்த்து சீக்கிரமாக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேலம் நகரத்தில் திருமணிமுத்தார் ஓடுகிறது. அந்த நதியில் வருஷத்தில் பெரும்பாலும் தண்ணீர் ஓடுவது இல்லை. அது சாக்கடை போல்தான் இருக்கிறது. அந்த நதிக்கு ஒரு ரிவெட்மெண்ட் கட்டிக் கொடுத்து அங்குள்ள மக்கள் சுகாதார முறையில் வாழ்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மத்திய சர்க்கார் சுகாதார இலாகா அமைச்சர் கூட அந்தப் பகுதியை பார்வையிட்டு அது மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார். ஆகவே அங்குள்ள நிலையைப் போக்குவதற்கு சர்க்கார் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நகரங்களில் கூட்டுறவு அர்பன் பாங்கியில் குடியிருப்புக்கும் வீடுகள் கட்டுவதற்கும் கடன் கொடுக்கப்பட்டு வந்தது. அப்படி ...களாக கொடுத்து வந்தார்கள். கடந்த மூன்று ஆண்டு

[Sri A. Mariappan] [3rd March 1961

களாக அதைக் குறைத்து விட்டார்கள். எல்லா இடங்களிலும் கடன் வசதி அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் நகரங்களில் வாழக்கூடிய மக்களுக்குக் கொடுப்பதாகவே இல்லை. ஆகவே அதைத் தொடர்ந்து கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக சேலம் ஜில்லாவில் இதனால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே பத்து வருஷங்களாக அர்பன் பாங்கு கடன் கொடுத்து வந்ததைத் தொடர்ந்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரிபேட் தொகை பொறுத்த வரைக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு ரிபேட் தொகை கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். அப்படி சாங்கிஷன் செய்திருந்தும் அதற்கு என்று போதிய சிப்பந்திகள் நியமிக்கப்படாமல் இருப்பதால்கூட சுமார் ஒன்பதுமாத காலமாகியும்கூட கைத்தறி நெசவாளர்களுக்கு ரிபேட் தொகை கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே போதிய சிப்பந்திகளை உடனடியாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போல் ஆடிட் பகுதியில் போதிய சிப்பந்திகள் இல்லாத காரணத்தால் கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களில் ஆடிட் சீக்கிரத்தில் செய்ய முடிவதில்லை. ஆகவே இந்தப் பகுதியிலும் போதிய அளவில் சிப்பந்திகளை நியமிக்க வேண்டும். அப்படி நியமித்து ஆடிட் வேலைகளை துரிதமாக நடைபெறுவதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுகொண்டு இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமக்கு முன்னால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற அறிக்கையில் குறிப்பாக இரண்டு அம்சங்கள் பார்க்க முடிகிறது. ஒன்று "நாங்கள் புதிய வரிகள் போடவில்லை, பார்த்தீர்களா?" என்பது. "பதினோராவது வகுப்பு வரையில் இலவசக் கல்விக்காக வேண்டி நாங்கள் வசதி செய்துவிட்டோம்" என்பது இரண்டு. தேர்தலுக்கு முன்னால் வோட்டுக்கள் பிடிப்பதற்காக இதை பயன்படுத்திக்கொள்வதற்காக இருந்தபோதிலும்கூட பதினோராவது வகுப்பு வரையில் இலவசக் கல்வி கொண்டு வந்ததை நாங்கள் வரவேற்கிறோம். (ஆரவாரம்). அதே நேரத்தில் புதிய வரி போடவில்லை என்பதைப் பார்க்கும் போது அது தேர்தலுக்கு முன்னால் இப்படித்தான் இருக்கும். இருந்த போதிலும் இன்றைக்கு ஏழை மக்கள் சாதாரணமாக உபயோகப்படுத்தக்கூடிய பல பொருள்கள் மீது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இங்கே பேசக்கூடாது என்று சொன்னாலும் மத்திய அரசாங்கத்திற்கும் இந்த அரசாங்கத்திற்கும் தொடர்பு இருக்கிறது என்ற காரணத்தினால் அதைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. மத்திய சர்க்காருடன் தொடர்பு இல்லை என்று திட்ட வட்டமாகச் சொல்லி விட்டால் அதைப்பற்றி நாங்கள் இங்கே பேச மாட்டோம். அந்தக் காரணத்தினால் அவர்



3rd March 1961] [Sri V. K. Kothandaraman]

கள் வரிகளைப் போட்டு விட்டு அதன் பிறகு ரகசியமாக அதில் பங்கு கொள்ளலாம் என்ற அடிப்படையில் அங்கே வரிகளைப் போடப்பட்டிருப்பதாக இருக்கிறது. மறைமுக வரி, பகிரங்க வரி என்று இரண்டு வித வரிகள் இருக்கின்றன. இப்படி இப்பொழுது போட்டு விட்டு அதை தனியாக பங்கு வாங்கிக்கொள்வது என்பது மூன்றாவது ரகமான வரியாக இருக்கிறது. இங்கு வரி போட்டால் மக்கள் கிளர்ச்சி செய்வார்கள் என்று நினைத்து அவர்களை போடச் சொல்லி விட்டு அதன் பிறகு அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்வதாக இருக்கிறது. நாங்கள் என்ன செய்வோம், மத்திய சர்க்கார் தான் வரி போட்டு விட்டார் என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. அந்த அளவில் தான் இங்கு வரி போடவில்லை என்று இருக்கிறது என்பதை முதலில் நாம் மறந்துவிடக்கூடாது. வரி போடாத பட்ஜெட் என்று சொல்வது சரியல்ல.

குறிப்பாக விலைவாசிகள் உயர்ந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில் அதைப்பற்றி திட்ட வட்டமாக சொல்லவில்லை, விலைவாசிகளைக் கட்டுப்படுத்த என்ன விதத்தில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளபோகிறோம் என்பதைப்பற்றி சொல்லவே இல்லை. அதைப் பற்றி சொல்லி இருந்தால் அது வரவேற்கக்கூடியதாக இருக்கும். இதைப்போலவே பல பிரச்னைகள் இருக்கின்றன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதைப் பற்றியும், வேலை இல்லா திண்டாட்டத்தைப் போக்குவதைப்பற்றியும், அதற்கு என்ன வழிவகை செய்யப் போகிறோம் என்பதைப்பற்றியும், அல்லது பஸ், லாரி, போன்ற போக்குவரத்தை தேசிய மயமாக்குவது பற்றியும் இது போன்று காவிரிக் கரையில் எண்ணெ வளம் இருப்பதை பயன்படுத்துவதைப்பற்றியும், அதை வெட்டி எடுக்க எப்பொழுது ஆரம்பிக்கப் போகிறோம் என்பதைப்பற்றியும் இது போன்று பல பிரச்னை இருக்கின்றன. அவைகளைப்பற்றியும், திட்ட வட்டமாக என்ன செய்யப் போகிறோம் என்பதைப்பற்றியும் திட்ட வட்டமாக ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் கனம் அமைச்சர் சொல்லலாம் எண்ணெயை உடனடியாக எடுக்க முடியாது என்றும், அதற்கு வேண்டிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு வசதி இல்லை என்றும், ஆரம்பிக்க வேண்டிய தொழிற்சாலைகள் எல்லாம் இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்றும்தான் சொல்லப்படுகிறது. இன்னும் அந்நிய நாட்டிலிருந்து இயந்திரங்கள் வரக்கூடிய நிலைமையில் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. அதன் டெக்னிக் எங்களுக்குத் தெரியாது, அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு ரொம்பவும் நாட்களாகும் என்றும் சொல்லுகிறார்கள். சமீபத்தில் சோவியத் ரஷ்யாவிலிருந்து டில்லிக்கு வந்திருந்த உள்நாட்டு அமைச்சருடன் இதைப்பற்றி பேசியபோது "அதெல்லாம் கிடையாது, எந்த அளவுக்கு வேண்டுமானாலும் எண்ணெ எடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது, ஆனால் இன்றைக்கு

வெளி நாட்டிலிருந்து தொடர்ந்து வாங்க வேண்டுமென்ற நிலைமை இருப்பதால் ஒரு சிலர் இவர்களுக்கு தவறான எண்ணத்தை கொடுத்திருக்கிறார்கள்" என்று அவர் வெளிப்படையாக எடுத்துக் கூறி இருக்கிறார் என்பதை நாம் பத்திரிகை வாயிலாக பார்த்திருக்கிறோம். ஆகவே தான் இது போன்ற பல புள்ளி விவரங்களைக் கொடுத்து அதன் மூலம் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குவதற்கு எந்த அளவிலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள்.

ஆனால் வரி போடப்படவில்லை என்று கூறுகிறார்கள். இப்பொழுது 1958-ம் வருஷத்திய பஞ்சாயத்து போர்டு சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. அதனால் பல கிராமங்களில் மேலும் மேலும் வரி போடக்கூடிய அளவில் வரியைப் போட்டிருக்கிறார்கள். இன்னும் அதிகப்படியான வரி போடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பஸ் ரூட்டுகளை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான வருமானத்தைக் கொடுக்க முடியும். ஆனால் அந்த அளவுக்குச் செய்ய நாம் தயாராக இல்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமை நமக்கு முன்னால் இருக்கிறது என்பதை நம்மால் பார்க்க முடிகிறது. அதே போன்று இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களுக்கு ஏராளமான பணம் கொடுக்கிறோம். வேண்டிய செஸ் வேறு கொடுக்கிறோம். அதே சமயத்தில் அதன் ஏற்றுமதி குறைந்திருக்கிறது. இன்று காலையில் கூட கேள்வி நேரத்தில் பதில் சொல்லும்போது பவர்லூமைக் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதைக் கொண்டு வந்தால் இன்றைக்கு பத்து தறிகளில் நெய்யக்கூடியதை ஒரு பவர் லூம் நெய்து விடும். அந்த நிலைமையில் இந்த ராஜ்யத்தில் இருக்கக்கூடிய ஐந்து லட்சம் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படக்கூடியதாக இருக்கிறது. ஆகவே பவர் லூமைக் கொண்டு வந்தால் அதனால் சாதகம் ஏற்படுமா அல்லது பாதகம் ஏற்படுமா என்பதைப்பற்றி அவர்களுடன் கலந்து யோசித்துத்தான் அதைக் கொண்டு வரவேண்டும். அதைக் கொண்டு வந்தால் உண்மையில் அவர்களிடையே வேலை இல்லா திண்டாட்டம் தான் ஏற்படும். அவர்களிடையே வேலை இல்லா திண்டாட்டத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர அதை அதிகப்படுத்தக் கூடாது.

இப்பொழுது கைத்தறி சொஸைட்டிகள் இருக்கின்றன. அங்குள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யவேண்டும். ப்ராவிடெண்ட் பண்ட் கொடுக்கக்கூடிய அளவில் அந்தச் சட்டத்தில் இடம் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட விஷயங்களில் எல்லாம் அவர்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும்.

அடுத்தபடியாக, ஹரிஜன முன்னேற்றம். ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு என்று மனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மையிலேயே அவர்களுக்கு வீடுகள் கட்டிக்



கொள்வதற்கான நிலைமை ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. ஏதோ சிலருக்கு வீட்டு மனைக்கட்டுகள் கொடுத்துவிட்டால் அவர்களுடைய வீடு மனைக்கட்டு கஷ்டம் தீர்ந்து விட்டது என்று அர்த்தமல்ல. சுமார் பத்து அல்லது பதினைந்து வருஷ காலமாக வீட்டு மனைக்கட்டு பிரச்னையிலிருந்து வருகிறது. பல கிராமங்களில் அந்த பிரச்னை இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது. பல கிராமங்களில் அவர்களிடமிருந்து பணம் வசூல் செய்தும் கூட அவர்களுக்கு இன்னும் மனைக்கட்டுகள் வழங்கப்படவில்லை. இதற்கெல்லாம் காரணம் இங்குள்ள டிஸ்திரிக்ட் ஹெல்த் ஆபீசர்கள் தான், ஹெல்த் டிபார்ட்மெண்ட் தான். அங்குள்ள ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் சர்க்கார் கொடுக்கக்கூடிய வீட்டு மனைக்கட்டுகள் வீடுகள் கட்டுவதற்கு லாயக்கில்லை என்று சொல்லி விடுகிறார்கள். ஒரு இடம் சரியாக இல்லை என்று அவர்கள் ஒரு எழுத்து எழுதி விட்டால் போதும். உடனே அந்தப் பணக்காரர் கள் அந்த நிலம் வீட்டு மனைக்கு லாயக்கு இல்லை என்று அதிகாரி களைவிட்டே எழுதச் செய்துவிடுகிறார்கள். இதுவே ஏழை காங்கிரஸ்காரர் ஒருவருடைய நிலமாக இருந்தால் வீட்டு மனைக்கு லாயக்கற்றதைக்கூட "வீட்டு மனைக்கு லாயக்குள்ள நிலம்" என்ப தாக எழுதச் செய்துவிடுகிறார்கள். இப்படி எதிர்க்கட்சி என்று இல்லை காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பணம் படைத்தவனுக்கு ஒரு நிலை, ஏழைகளுக்கு ஒரு நிலை, என்று சூழ் நிலை வளர்ந்து கொண்டே போனால் ஏழை பணக்காரன் என்ற வர்க்கப் போராட்டத்திற்கு தான் காங்கிரஸ் உதவி செய்வதாக ஆகிறது. ஆகவே இதை அவசியம் கவனத் தில் எடுத்து வீட்டு மனை கொடுக்கவேண்டும். தொழில் செய்வ தற்கு தொழில் கருவிகள் கொடுப்பதற்குக் கூட ஒரு கமிட்டி கிடை யாது. அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.-க்களைக் கலந்துகொண்டு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. வடாற்காட்டைப் பொறுத்த வரையில் 23 எம்.எல்.ஏ. இருக்கிறார்கள் என்றால் ஐந்து வருஷத் திற்கு ஒரு முறை அந்தக் கமிட்டியைக் கூட்டவே நிலைமை ஏற் படுகிறதே தவிர காரியத்தில் தொழிலாளிகளுக்கு நன்மை செய்வ தற்கு எங்கும் வழியே கிடையாது.

ஒரு பக்கத்தில் கோயில்களில் ஹரிஜனங்களை விட்டோம், விடு கிறோம் என்று சொல்கிறார்கள். ஒன்று சொல்கிறேன். 5-ந் தேதி பள்ளிகொண்டான் கோயிலில் ஹரிஜனக் கல்யாணம் ஒன்று நடப் பதற்கு கோயில்காரர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அங்குள்ள புரோகிதர் "நான் வந்து கல்யாணத்தை நடத்தி வைக்கமாட்டேன்" என்றார். இந்தத் தகராறு முற்றி ஹரி ஜனங்களுக்கும் புரோகிதருக்கும் சண்டை முற்றினால் இதை கம்யூனிஸ்டு தூண்டிவிட்டார்கள், திராவிடக் கழகத்தினர் தூண்டி விட்டார்கள் என்று சொல்லக்கூடிய நிலைமைதான் ஏற்படும். இந்த ஹரிஜன நல இலாகா ஹரிஜனங்களுக்குப் பல நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று நினைத்தபோதிலும் அதிகாரிகளோ, சின்ன காங்

கிரஸ்காரர்களோ வேலையைக் கெடுக்கிறார்கள். நாங்கள் ஏதாவது மந்திரிகளிடம் எழுதிக்கொடுத்தாலும் அதைக் கீழே அனுப்பு கிறார்கள். பழைய குருடி கதவைத் திறடி என்று அவர்கள் தங்கள் செயலை ஸ்தாபித்து மேலே அனுப்பி விடுகிறார்கள். நிலைமை அவ்வளவு தான்.

பீடித் தொழிலாளர்களுக்காகச் சட்டம் கொண்டுவந்தோம், ஹோட்டல் தொழிலாளர்களுக்காகச் சட்டம் கொண்டுவந்தோம் என்றுதான் முன்பு பேசப்பட்டது. ஆனால் 2 வருஷம் ஆகியும் கூட எந்த நோக்கத்தோடு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார் களோ அந்தப் பலன் இதுவரையிலும் அத்தொழிலாளர்களுக்குக் கிடைக்கவில்லை. போனசை எடுத்துக்கொண்டாலும் வருஷா வருஷம் அமைச்சர் அவர்களிடத்தில் காவடி எடுக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜஸ் ஆக்ட் என்று வந்தது. சட்டம் சட்டப் புத்தகத் தில்தான் இருக்கிறதே தவிர அமுல் செய்யப்படவில்லை. கேட்டால் ஆலையை மூடுகிறார்கள். அமைச்சரிடம் வந்தாலோ "அவர்கள் மூடலாம். திறக்கலாம். அவர்களுக்குப் பூரண உரிமை இருக்கிறது" என்று பேசப்படுகிறது. இப்படி எந்த இடத்திற்கு வந்தாலும் வர்க்கப் போராட்டம் வளருவதற்கே தான் சர்க்கார் உதவி செய்து வருகிறதே தவிர வேறு யாரும் இதைத் தூண்டிவிட வேண்டிய அவசியம் இல்லை.

போலீசாரின் தலையீட்டை எடுத்துக்கொண்டாலும் ஏழைகளா அடி, உதை சித்ரவதை செய் என்கிற நிலைதான் வளருகிறது. ஏழைகளின் பக்கத்தில் எத்தனை நியாயம் இருந்தாலும் கேள்வி இல்லை. பணக்காரன் சொன்னால் சரி, உதை இவர்களை என்று போகிற போக்கு நியாயமில்லாதது. இப்படித்தான் இன்னும் பல நகரங்களிலும் நடந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஸ்தல ஸ்தாபனம். பஞ்சாயத்தைப் பொறுத்த வரையில் சட்டப்படி அதிகாரிகள் கையில் அட்மினிஸ்ட்ரேஷன், ஆடிட்டா, டெக்னிகல் அசிஸ்டெண்டா எல்லாம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. இதனால் ஊழல்தான் அதிகமாகிறது மேலும். மேலும். ஏற்கனவே இதைப்பற்றிக் கேட்டதற்கு ஆடிட்டர் தனியாகப் போடுகிறோம், அட்மினிஸ்ட்ரேஷனுக்காக தனி அதி காரிகளை நியமிக்கப் போகிறோம் என்றார்கள். ஆனால் இது வரையில் நடைமுறைக்கு அது வரவில்லை.

நகர சபைகளில் மானேஜர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தான் நல்ல அநுபவம் உண்டு. ஆனால் கமிஷனர்களாக இவர்களை ப்ரமோஷன் செய்வதில்லை. டைரக்ட் ரெக்ரூட் என்று செய்பவர் களுக்கு அநுபவம் கிடையாது. அதனால் பலவித ஊழல் அங்கே ஏற்படுகிறது. ஆகவே முனிஸிபல் கமிஷனர்கள் அப்பாயின்ட் மெண்டு லிஸ்டில் சர்வீஸ் கணக்குப்படி முனிஸிபல் மானேஜர் களையும் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று சானிடரி இன்ஸ்பெக்டர்கள். இதில் பல ரகம்; பல வேறுபாடு—எல்லோருக்கும் ஒரே படிப்பு, ஒரே டிரெயினிங், ஒரே சம்பளம்தான் என்றாலும்—இன்றும் நீடிக்கிறது. இவர்களை ஹெல்த் ஆபீசர்களாகப் பிரமோட் செய்வதில்லை. இவற்றை யெல்லாம் நன்கு பரிசீலனை செய்து பார்த்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு சம்பந்தப்பட்ட வரையில் அங்கத்தினர்களைச் சேர்த்துவிட்டோம், சொஸைட்டிகளை ஏற்படுத்திவிட்டோம் என் றெல்லாம் சொல்லலாம். ஆனால் அங்கே ஊழல் எந்த அளவுக்கு வளர்ந்து போகின்றன, எந்த அளவுக்கு உடனடியாக அவற்றைத் தீர்க்கும் நிலைமை இருக்கிறது என்று பார்த்தால் தெரியும் உண்மை. ஊழல் உடனடியாகத் தீர்க்கப்படுவதே கிடையாது.

குடியாத்தம் நகரத்தில் ஒரு கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸ் டைரெக்டர்கள் நான்கு பேர் சேர்ந்துகொண்டு 30 ஆயிரம் கையா டினார்கள், 40 ஆயிரம் கையாடினார்கள் என்று சொல்லி அவர்கள் மேல் வழக்குப் போட்டார்கள். ஒரு டைரெக்டர் தூக்கு போட்டுக்கொண்டு செத்தே போய்விட்டார். பத்து வருஷங்களா கின்றன. இன்னும் விசாரணையில் இருக்கிறது, விசாரணையில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே தவிர அந்த வழக்குத் தீர்ந்தபாடில்லை. அந்த ஊழல் நீக்கப்படவில்லை. இப்படி இருந் தால் யார் கூட்டுறவு இயக்கத்தில் சேர விரும்புவார்கள், அதை நம்புவார்கள். ஊழல் நடந்தால் உயர்ந்தபட்சம் ஆறு மாதத்திற்கு மேல் இது நடக்கக்கூடாது என்று திட்டவட்ட மாகச் செய்து, எல்லா ஊழல்களையும் அப்படி நிவர்த்தி செய்தா லொழிய இந்த இயக்கம் வளராது.

அதேபோன்று இந்த ஸ்தாபனங்களுக்கு பகிரங்கமாக கைதூக்கி தேர்ந்தெடுக்கும் முறையை மாற்றவேண்டும். எல்லா வற்றுக்கும் இரகசிய வோட்டு முறையைக் கொண்டுவந்து விட்டோம். சட்டப்படியே இதற்கும் அந்த முறையை விஸ்தரிக்க வேண்டும்.

கடைசியாக நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட வரையில்.

**DEPUTY SPEAKER :** உங்களுக்கு நேரமாகிவிட்டது. இதைப் பற்றி டிமாண்டின்போது பேசிக்கொள்ளலாம். அடுத்தபடியாக ஸ்ரீ எம். பி. சாரதி பேசுவார்.

**SRI M. P. SARATHI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படு கிறேன். முதலிலே பட்ஜெட்டைப்பற்றிப் பேசுவதற்கு முன்பாக இன்று காலையில் "காங்கிரஸ்காரர்கள் சொன்னால் கேட்கிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் சொன்னால் கேட்பது இல்லை" என்று திரு. சின்னதுரை சொன்னபோது நிதி அமைச்சர் அவர் கள் "என்னிடம் சொல்லுங்கள், நான் முடித்துக் கொடுக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசும்போது, எந்த
அலுவல்களுக்கும் எதிர்க்கட்சிக்காரர்களை அழைப்பதில்லை. குறிப்
பாக சென்னை நகரில் நடந்த ஹரிஜன விழாவில் நான் ஹரிஜன
மெம்பராகயிருந்தும்கூட எனக்கு அதில் பங்கு கொள்ள இடம்
கொடுக்கப்படவில்லையென்று கூறும்போது மராமத்து இலாகா
அமைச்சர் அவர்கள் சர்க்காரை நீங்கள் எதிர்த்துப் பேசுவீர்கள்,
பிரிவினை பற்றி பேசுவீர்கள், அதனால்தான் உங்களை அழைக்க
வில்லைபோல் இருக்கிறது என்று சொன்னார்கள்.

THE HON. SRI P. KAKKAN : சர்க்காரை எதிர்த்துப் பேசு
வதால் என்று சொல்லவில்லை, பிரிவினை பற்றி சொல்வீர்களோ
என்று நினைத்து அழைக்கவில்லையோ என்று சொன்னேன்.

SRI M. P. SARATHI : காங்கிரஸ்காரர்கள்தான் இத்தகைய
அலுவல்களில் கலந்து கொள்ளலாம், மற்றவர்கள் கலந்து
கொள்ளக்கூடாது என்று ஒரு சட்டம் இயற்றலாமே, நீங்கள்
155 பேர்கள் இருக்கிறீர்களே, அதையாவது செய்யுங்கள்.
எங்களுக்கு என்ன பொறுப்பில்லையா ? எங்களுக்கு
எதை எதை செய்யவேண்டுமென்பது எங்களுக்குத்
தெரியாதா ? இதை சர்க்கார் உணர வேண்டும். இப்படி சர்க்காரை
வளர்த்துக் கொண்டுபோனால் மக்கள் சரியான பாடம் கற்பிப்
பார்கள்.

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜன விழாவை நடத்திய
ஹரிஜன இலாகா டயரக்டர் அவர்கள், எதிர்க்கட்சி அங்கத்தினர்
களை பேச அழைத்திருந்தால், அப்படி அழைக்காதீர்கள் என்று
நான் ஒருக்காலும் சொல்லியிருக்க மாட்டேன். சிலரை அழைத்து
சிலரை அழைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் இந்தக் கட்சி
யைச் சார்ந்தவர்கள் என்பதால்தான் அழைத்தார்கள் என்று
அம்மையார் அவர்கள் பேசியதை ஆதரித்து பேசுவது சரியல்ல.

SRI M. P. SARATHI : இந்த முறையை வளர்க்காமல் இருந்தால்
நல்லது என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். அடுத்த
படியாக, இந்த நிதிநிலை அறிக்கை பற்றி பேச விரும்புகிறேன்.
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடிப்பதற்கு 13 கோடி
ரூபாய் நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் 20 கோடிக்கு மேல்
சேர்ந்துவிட்டது என்று நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்
கள். கடன்மூலம் பல கோடி பெற்றிருக்கிறோம் என்றும் சொல்லி
யிருக்கிறார்கள். அப்படி அதிகப்படியான பணம் வந்தும்கூட
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், 12.79 லட்சம் டன்
உணவு உற்பத்தி செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருந்ததாகச்
சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டாவது திட்டம் முடி
வடைந்திருக்கிற இத்தருணத்தில் 7 அல்லது 8 லட்சம் டன்தான்
உணவு உற்பத்தி செய்யமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிற
தென்று சொன்னால் திட்டத்திற்கு என்ன பொருள் ? ஒரு
திட்டம் போட்டால் அரை, அல்லது ஒரு லட்சம் ஏறக் குறைய
இருக்கலாம். ஆனால் 12.79 லட்சம் என்று போட்டுவிட்டு
ஏழல்லது எட்டு லட்சம்தான் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்





படுகிறதென்று சொன்னால் என்ன பொருள் ? அதுவும் நமக்கு
அதிகளவு பணம் வந்து விட்டது என்று பெருமையோடு
சொல்லிக்கொள்கிறார்கள். மணிலா எண்ணை ஏற்றுமதி மூலம்
15 கோடி ரூபாய், மற்றப் பொருள்கள் மூலம் இவ்வளவு கோடி
ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்
டிருக்கிறது. ஒரே வஸ்துவின் மூலம் 15 கோடி ரூபாய் வருமானம்
வரும்போது வேறு பெரிய தொழில்களை எடுத்துக்கொண்டால்
எவ்வளவு வருமானம் வரும் என்று பார்க்கவேண்டும்.
நெய்வேலியை எடுத்துக்கொண்டால் அது மத்திய அரசாங்கத்
திட்டம். நமக்கு இருப்பது கோச் பாக்டரி ஒன்றுதான். அதற்கு
போடப்பட்டுள்ள மூலதனம் 7-½ கோடி ரூபாய். இன்னும் 3-½
கோடி செலவு செய்து அபிவிருத்தி செய்யப்போவதாக காட்டப்
பட்டிருக்கிறது. இந்த கோச் பாக்டரியை வைத்துக்கொண்டு
அந்நிய நாட்டிலிருந்து தலைவர்கள் யார் வந்தாலும் சரி, ஜெர்மனியி
லிருந்து வந்தாலும் சரி, ரஷ்ய நாட்டிலிருந்து வந்தாலும் சரி,
வந்து பாருங்கள் எங்கள் கோச் பாக்டரியை என்று சொல்லி
யார் வந்தாலும் அங்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள்.
அதைக் காண்பித்து பெருமை அடித்துக்கொள்கிறார்கள். மணிலாவி
லிருந்து 15 கோடி வருமானம் வரும்போது அதற்கு ஈடாக
மத்திய சர்க்காரிலிருந்து பெரும் தொகை வாங்க இந்த சர்க்
காருக்கு வகையிருக்கிறதா ? இங்கு இரும்புத் தொழிற்சாலை
அமைக்க வேண்டுமென ஒவ்வொரு பட்ஜெட்டிலும் அதுபற்றி
குறிப்பிட்டுக் கொண்டு வருகிறார்கள். இன்னும் அது சோதனையில்
இருப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. இரும்புக் கனிகள்
20,000 டன் அளவிற்கு நமது துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி
செய்யப்பட்டு வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்
லட்சக் கணக்கில் ஏற்றுமதி செய்யப்போவதாக குறிப்பிடப்பட்
டிருக்கிறது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், இங்கு
இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படாமல் ஏற்றுமதி செய்
வதில் ஈடுபட்டிருக்கிறோம் என்று பெருமையோடு சொல்லிக்
கொள்கிறார்கள். ஏற்றுமதி செய்வதில் அபிவிருத்தி
காணப்போகிறோம் என்று சொன்னால் இங்கு எப்படி
இரும்புத் தொழில் ஏற்பட முடியும் என்பதை
அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். நாற்பது லட்சம்
டன்னுக்கு ஏற்றுமதி செய்யப்போவதாக ஆண்டு அறிக்
கையில் சொல்லியிருக்கிறார்கள். அடுத்தபடியாக கதர் அபி
விருத்தித் திட்டம் பற்றி குறிப்பிடும்போது இதற்காகும் செலவு
2-½ கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. வருமானம் எவ்வளவு
கிடைக்கிறது என்றால் 2 கோடிதான் வருமானம் வந்திருக்கிறது.
ஆக இதை நஷ்டத்தில் நடத்துகிறார்கள் என்றால் கதர் அபி
விருத்தி என்று சொல்வதை விட்டு விட்டு காங்கிரஸ் அபிவிருத்தி
காகத்தான் இந்த சர்க்கார் வேலை செய்கிறது என்று சொன்னால்
அதை ஒருக்கால் ஒத்துக்கொண்டால் நலமாயிருக்கும். அதை
யாவது சர்க்கார் ஒத்துக்கொள்கிறார்களா என்று தெரியவில்லை.
நல்ல வருமான இனங்கள் எல்லாம் விற்பனை வரி தவிர, மற்றவை
படிப்படியாக குறைந்து மத்திய அரசாங்கத்திற்குப் போய்

[Sri M. P. Sarathi] [3rd March 1931

விட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது, வரி விதிப்பெல்லாம் நம் நாட்டிலேயே இருக்கவேண்டுமென்றும், எங்கள் சர்க்கார் அதைத் திறமையாக நடத்த முடியும் என்றும் கூறி, அதற்கான பணத்தைத் தேக்கி, வேண்டிய தொழிற்சாலைகளை இங்கேயே நிறுவ ஏற்பாடு செய்ய வழிவகை செய்யலாம். ஆனால் அப்படி செய்யக் காரணம், அப்படி செய்ய முற்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர், தொழிலாளர்களின் ஊதியம் பற்றி எடுத்துக்கொண்டால் மற்ற ராஜ்யங்களில் 1,233.9 வரை இருக்க நமது ராஜ்யத்தில் மட்டும் 978.9 என்றால் அது குறைவாக யிருக்கிறது. ஆனால் இந்நாட்டில் தொழிலாளர்களின் நிலை உயர்ந்து விட்டதென்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். மற்ற ராஜ்யங்களைவிட நம் ராஜ்யத்தில்தான் வரி விதிப்பு முறை அதிகம் என்று இங்கேயே சொல்லப்பட்டிருக்கிறது. வெளி மாநிலத்தில் வரி விகிதம் 13.3 என்று இருந்தால் இங்கு நம் ராஜ்யத்தில் 14.4 என்று வரி விதிப்பு இருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது.)

1-31 p.m. DEPUTY SPEAKER : "டைம்" ஆகிவிட்டது.

SRI M. P. SARATHI : இந்த அரசாங்கத்தின் நிர்வாகம் எவ்வளவு பிற்போக்கான நிலையில் போய்க்கொண்டிருக்கிறது என்பதை உங்கள் புள்ளிவிவரங்களே காட்டுகிறது. 25,000-த்திலிருந்து 50,000 ரூபாய் வரை உள்ளவர்களுக்கு விற்பனை வரி சலுகை வழங்கப்படயிருக்கிறது. ரூபாய் 10,000 முதல் 25,000 வரை விற்பனை செய்பவர்களுக்கு விரிவான கணக்கு வைக்காமல் உத்தேச மதிப்பின்பேரில் மொத்தமாக வரி செலுத்தக்கூடிய சலுகை கொடுக்கப்பட்டிருந்ததை மேற்கண்டவாறு செய்திருப்பதை பாராட்டினாலும், 5,000 ரூபாய்க்கு விற்பனை செய்தாலும் கணக்கு காட்டவேண்டுமென்று சொல்லியிருப்பது சிறிய வியாபாரிகளை தொந்தரவுக்குள்ளாக்கும் . . .

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m., tomorrow.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A Statutory Rules and Orders.

169. Notification issued with G.O. Ms. No. 1383, Local Administration, dated 18th August 1960 declaring each of the local areas forming a Development Block in the Nilgiris Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development, to be a Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union. [*Laid on the Table of the House under Section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

170. Notification issued with G.O. Ms. No. 1391, Local Administration, dated 18th August 1960 declaring each of the local areas forming a Development Block in South Tirunelveli Development District, for the purposes of the National Extension Service



3rd March 1961]

Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union. [*Laid on the Table of the House under Section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

171. Notification issued with G.O. Ms. No. 1394, Local Administration, dated 19th August 1960 declaring each of the local areas forming a Development Block in North Salem Development District, for the purpose of the National Extension Service Scheme of Community Development, to be a Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union. [*Laid on the Table of the House under Section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

### B. Reports, Notifications and other Papers.

* 80 *An Economic Classification of the Madras Government Budget for* 1961-62.

81. *Report on the Administration of the Survey and Land Records Department for the first six months of the financial year* 1959-60 (*April* 1959 *to September* 1960).

82. *Report on the activities of the Medical and Public Health Departments for the half-year ended* 30*th June* 1960.

†83. *Statement with reference to Assurance No.* 1088 (*Question No.* 436, *asked by Sri A. A. Rasheed, M.L.A., on* 5*th September* 1960).

* Placed on the table on 2nd March 1961.

† Printed as Appendix II on page 191 infra.

## Appendix I.

[Vide answer to the starred question No. 558, asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly held on 3rd March 1961, page 116 supra.]

(*a*) *Number of seats allotted during admission to the management of each of the Private Engineering Colleges.*—The number of seats allotted during admission to the management of each of the Private Engineering Colleges is 20 per cent of the strength of each of the Private Colleges. The admission strength of each of the Private Engineering Colleges is as follows :—

| | Basic course only. |
|---|---|
| 1 P.S.G. College of Technology, Coimbatore .. | 120 |
| 2 A.C. College of Engineering and Technology, Karaikudi. | 120 |
| 3 Coimbatore Institute of Technology, Coimbatore. | 120 |
| 4 Thiagarajar College of Engineering, Madurai .. | 120 |

(*b*) *Amount of grant given to each of them.*—The following amounts of grants have been paid by the State Government to each of the Engineering Colleges up to November 1960 :—

| *Serial number and name of institution.* | *Non-recurring grant* *For buildings.* | *Non-recurring grant* *For equipment.* | *Recurring grant.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | RS. | RS. | RS. |
| 1 P.S.G. College of Technology, Coimbatore. | 1,27,730 | 2,79,591 | 1,69,576 |
| 2 A.C. College of Engineering and Technology, Karaikudi. | 2,45,885 | 3,12,884 | 1,31,040 |
| 3 Coimbatore Institute of Technology, Coimbatore. | 2,02,500 | 2,00 000 | Under consideration of Government. |
| 4 Thiagarajar College of Engineering, Madurai. | 2,75,000 | 1,37,500 | Under consideration of Government. |



## Appendix II.

[Vide Assurance No. 1088 in answer to Legislative Assembly starred question No. 436, asked by Sri A. A. Rasheed, on 5th September 1960, page 189 supra.]

*Q.*—Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of houses estimated to be constructed in the Second Five-Year Plan in the Madras City by the City Improvement Trust and Corporation of Madras; and

(*b*) the number of houses actually constructed till now?

*A.*—(*a*) & (*b*) A statement is placed on the Table of the House.

*Statement showing the number of houses estimated and constructed during the Second Plan period in the Madras City.*

| *Serial number and name of housing agencies.* | *Number of houses estimated.* *Houses.* | *Number of houses estimated.* *Tenements.* | *Number of houses constructed.* *Houses.* | *Number of houses constructed.* *Tenements.* | *Number of houses under construction.* *Houses.* | *Number of houses under construction.* *Tenements.* | *Proposals.* *Houses.* | *Proposals.* *Tenements.* |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 City Improvement Trust, Madras. | 818 | 1,170 | 531 | 500 | 31 | 89 | 169 | 303 |
| 2 Corporation of Madras. | 209 | 1,500 | 113 | 222 | 60 | 344 | 60 | 150 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

## Saturday, 4th March 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Fertilizer*

*561 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இவ்வாண்டு வடாற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட ரசாயன உரம் எவ்வளவு ?

(இ) அது கள்ளமார்க்கெட்டில் விற்கப்படுகின்றதென்று புகார்கள் வந்தனவா ?

(உ) அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The quantities allotted so far are as follows :—

| | TONS. |
|---|---|
| Ammonium Sulphate ... ... ... ... | 4,800 |
| Urea ... ... ... ... ... | 1,380 |
| Ammonium Sulphate Nitrate ... ... | 600 |
| Calcium Ammonium Nitrate ... ... | 140 |

(*b*) & (*c*) No complaints were received except a case relating to an illicit sale of 24 bags of Urea by the Secretary of the Edakrishnapuram Co-operative Society, Gudiyatham, North Arcot district. The Secretary of the Society was convicted and fined Rs. 10 in the above case for contravention of clause 4 of the Fertiliser (Control) Order, 1957.

SRI S. M. ANNAMALAI : ஸார், வட ஆற்காடு மாவட்டத்தி லிருந்து ரசாயன உரங்கள் பக்கத்தில் ஆந்திர மாகாணத்தில் இருக்கும் சித்தூருக்கு கள்ள மார்க்கெட்டில் விற்பதற்காக கொண்டுசெல்லப்படுவதாக டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன் ஸிலில் கூட சொல்லப்பட்டதே. பிற மாநிலங்களுக்குச் செல் வதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப் பற்றி மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

[4th March 1961

*Crop and cattle insurance*

* 562 Q.—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state whether the State Government have suggested that there should be a crop and cattle insurance in the Third Plan for the State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : On the advice of the Government of India the State Government have made a provision of Rs. 3 lakhs for cattle insurance in the Draft Third Five-Year Plan. No provision has however been made for crop insurance.

Sri T. T. DANIEL : In view of the fact that agriculturists suffer largely because of failure of seasons, will the Government think of starting some kind of crop insurance scheme also and include it in the Third Plan?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Government are of the view that unless our farmers can be insurance-minded, any scheme of crop insurance will not serve the purpose.

**Sri V. SUBBIAH :** பயிர் இன்ஷ்யூரன்ஸ், கால்நடை இன்ஷ்யூரன்ஸ் இல்லாததால் சமீபத்தில் பெய்த மழையினால் பாதிக்கப்பட்டு பல விவசாய குடும்பங்கள் நஷ்டம் அடைந்திருக்கின்றன. இப்படிப்பட்ட இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களை பரீட்சார்த்தமாகவாவது ஓரிரு பிர்க்காக்களில் ஆரம்பிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** நான் முன்பே விடையளித்தேன். இன்ஷ்யூரன்ஸ் திட்டம் என்றால் அதன் பலனை விவசாயிகள் பரிபூர்ணமாகப் பயன் படுத்திக்கொள்ளும் நிலை ஏற்படவேண்டும். அந்தப் பக்குவம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது. ஆகையால்தான் பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை மேற்கொள்ளவில்லை.

Sri T. T. DANIEL : May I know the reasons for the Government coming to a decision that our farmers have not got the crop-insurance mind at present?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : That is the impression of Government. If the hon. Member were to convince Government that it is otherwise, Government will take that into account.

*Taxis*

* 563 Q.—Sri V. K. KOTHANDARAMAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரிலுள்ளதுபோல் ராஜ்யத்திலுள்ள எல்லா டாக்ஸிகளுக்கும் இரு நிற வர்ணங்களைப் பூசும்படி உத்தரவு போட உத்தேசமுண்டா?

(இ) அதேபோல் சர்க்கார் பஸ்களுக்கும் ஒரு குறிப்பிட்ட வர்ணங்களைப் பூசுவதற்கான ஏற்பாடு உண்டா?



4th March 1961]

The Hon. Sri V. RAMAIAH : (a) No, Sir.

(b) The buses of the State Transport Department are already painted in colours which are distinctive enough.

**Sri V. K. KOTHANDARAMAN :** ஸார், மற்ற நகரங்களில் இருக்கக் கூடிய டாக்ஸிகளும் சரி கார்களும் சரி ஒரே வித கலரில் இருப்பதால் வித்தியாசம் தெரியாத நிலையில் பொது மக்கள் ஏமாற்றம் அடையக்கூடிய தன்மை இருப்பதால் இந்த கலரை யாவது போடுவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா?

The Hon. Sri V. RAMAIAH : The hon. Member is only making a suggestion.

Sri A. A. RASHEED : May I know the special reason for using black and yellow for the taxis, Sir?

The Hon. Sri V. RAMAIAH : That would look very distinctive.

**Sri N. MARUDACHALAM :** கோவை நகரிலே மீட்டர் இல்லாத கார்கள் அநேகமாக இருக்கின்றன. மீட்டர் போடுவதைப் பற்றி பல தடவைகள் சொல்லியும் போடவில்லை. இப்படி போடாததற்குக் காரணம் என்ன? எவ்வளவு நாட்களில் போடப்படும் என்று தெரிவிக்க முடியுமா?

**Mr. SPEAKER:** மூலக் கேள்வி பெயிண்டிங் பற்றியது. கனம் அங்கத்தினர் கேட்கக் கூடிய கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அமைச்சர் பதிலளிப்பதாக இருந்தால் எனக்கு ஆட்சேபணையில்லை.

**(No answer.)**

Sri K. VINAYAKAM : Even the distinct colour of the Government Transport Buses plying in the City is not so distinct as to be recognised during nights. Will the Hon. Minister pass on this information to the Hon. Minister in charge of City Transport and see that the name-boards as well as the numbers are made clearly visible during nights by the fixing of a bulb at the correct place? That could throw more light.

The Hon. Sri V. RAMAIAH : I understand that there is already a bulb at the place showing the route on which the bus plies and at the place the number of the bus is written. If there is any failure, the Transport Department will look into that.

**Sri A. VEDARATHNAM :** ஸார், டாக்ஸிகளுக்கு இப்போது தேர்ந்தெடுத்திருக்கின்ற வர்ணத்தை மாற்றி இன்னும் அழகான வர்ணம் பூச அரசாங்கம் யோசிக்குமா? இப்போது இருக்கிற வர்ணம் பூசிய கார்களில் உட்கார்ந்து செல்லவே வெட்கமாக இருக்கிறது. அதை மாற்ற அரசாங்கம் முன் வருமா?

**The Hon. Sri V. RAMAIAH :** டாக்ஸிகளை சுலபமாகக் கண்டு பிடிப்பதற்காக இந்த இரண்டு வர்ணங்களை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. சில அங்கத்தினர்களுக்கு இந்த வர்ணம் பிடிக்க

[4th March 1961

...லில் என்றால் இது கஷ்டமாகத்தான் இருக்கும். எல்லா அங்கத்தினர்களும் சேர்ந்து எந்த வர்ணம் நன்றாக இருக்கும் என்று பட்ஜெட் விவாதத்தில் சொன்னால் அரசாங்கம் அதை கவனிக்கத் தயாராக இருக்கிறது.

*Basic Schools*

* 564 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of SRI P. G. MANICKAM) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ம் வருஷத்தில் எத்தனை பள்ளிக்கூடங்கள் ஆதாரப் பயிற்சி பள்ளிக்கூடங்களாக மாற்றப்படும்?

(இ) வருஷந்தோறும் எத்தனை உபாத்தியாயர்களுக்கு ஆதாரப் பயிற்சி போதனை அளிக்கப்படுகிறது?

(உ) இதற்காக 1960-61-ல் எவ்வளவு தொகை செலவிடப் படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) None Sir.

(இ) About 8,000 Sir.

(உ) Rs. 76·22 lakhs.

SRI N. K. PALANISAMI: இப்போது கட்டாயக் கல்வி அடிப் படையில் எலிமெண்டரி எடுகேஷனில் ஆதாரக் கல்வியைக் கொண்டுவருவதாக உத்தேசம் இருக்கிறது. ஏற்கெனவே இந்த ஆதாரக் கல்விக்கு எந்த அளவு தேசத்தில் செல்வாக்கு இருக் கிறது? இந்த ஆதாரக் கல்வியில் படிப்பு குறைவாக இருப்பதால் மக்கள் இதை எதிர்ப்பது சர்க்காருக்குத் தெரியுமா? ஆகவே எலிமெண்டரி எடுகேஷனுக்கு பழைய முறையிலேயே ஏற்பாடு செய்ய அரசாங்கம் யோசிக்குமா?

MR. SPEAKER : The hon. Member could make a speech when the Education Demand comes up before the House. The hon. Member is going on speaking on matters of policy while putting questions. The hon. Member is going beyond the question. I won't allow it. Let the hon. Member read the question. It refers to number of teachers, etc.

(No answer.)

SRI A. VEDARATHNAM : இப்போது புதிதாக மாற்றப் படும் பள்ளிகளில் ஆதாரக் கல்வியின் அடிப்படைத் தத்துவம் கிராஃப்ட் மீடியம்—தொழில் மூலம் போதனை—கோரிலேடெட் டீச்சிங் இரண்டும் குறைவாக இருப்பதால் பல பள்ளிகளில் சரிவர அனுஷ்டிக்காமல் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதைச் சரிவர நடைமுறைக்குக் கொண்டுவர சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கேள்வி ஆதார பயிற்சி பள்ளிகளைப்பற்றியது.



4th March 1961]

SRI K. VINAYAKAM : In the matter of conversion of elementary schools into basic schools, has the Government felt any resistance from management of these schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : The main question is with reference to training schools.

SRI K. R. VISWANATHAN : May I know whether Government has taken any decision with regard to conversion of non-basic training schools into basic training schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : The policy decision is that all training schools should be converted into the basic type. There are a few school left. They also would come in the basic pattern.

*Pumpsets*

MR. SPEAKER : As the hon. Member who gave notice of Question No. 565 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 565 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

காவிரி ஆற்றிலிருந்து சேலம் ஜில்லா நாமக்கல், திருச்செங் கோடு தாலுக்காக்களில் எத்தனை பம்ப் செட்டுகளுக்குத் தண்ணீர் எடுக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI P. KAKKAN : No pumpset for taking water from the river Cauvery either in the Namakkal or the Tiruchengode taluk in Salem district has so far been regularised as certain modifications to the main conditions for the grant of permission proposed by the Collector of Salem are under consideration.

*Electricity charges*

* 566 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of SRI S. PAKKRISWAMI PILLAI) : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any revision of the rates in the consumption charges of electricity for household purposes in the City of Madras after the Madras State Electricity Board has been set up?

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.

SRI A. A. RASHEED : As the consumers in Madras City have to pay more for the same number of units consumed, will the Government revise these rates?

THE HON. SRI V. RAMAIAH : When the revision was made all the different aspects were carefully considered and then the new rates were fixed. Before announcing the new rates, it was actually discussed in the Consultative Committee and the decision was taken only after that.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த ரேட்டு திருத்தப்பட்டு அமைப்பதற்கு முன்னால் எப்படி இருந்தது? 1,000 யூனிட்டுகள் உபயோகிப்பவர்களுக்கு சலுகைகள் தரப்பட்டு இருக்கிறது. அப்படி இல்லாமல், யார் யார் குறைவாக உபயோகிக்கிறார்களோ, அவர்களுக்கு அதிகப்படியான ரேட்டுகள் கொடுக்க வேண்டு மென்று இருப்பதால், அதை மாற்றியமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கக் கூடாதா?

THE HON. SRI V. RAMAIAH : 1,000 யூனிட்டுகள் என்று எப்படி கன்ஸம்ஷன் வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இப்போது என்னிடத்தில் உள்ளது 50 யூனிட்டுகள் வரை தான். சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய வீடுகளிலுள்ள விளக்குகளுக்கும், பங்காக்களுக்கும் பழைய ரேட்டு ரூ. 13-12 ந.பை. திருத்தி அமைக்கப்பட்ட ரேட்டு ரூ. 16-50 ந.பை. விளக்குகளுக்கு மட்டும் பழைய ரேட்டு ரூ. 15. திருத்தி அமைக் கப்பட்ட ரேட்டு ரூ. 16-50 ந.பை. ஆகையால் 1,000 யூனிட்டு என்று எப்படி டொமஸ்டிக் கன்ஸம்ஷன் வந்தது என்று தெரிய வில்லை.

SRI K. VINYAKAM : Sir, when the Madras Electric Supply Corporation was in chanrge of distribution of electricity in the City of Madras there was an item in the electricity bill known as 'war surcharge' and this has been now added on to the actual rates after the Board took over the concern. Since the conditions obtaining during the war are not now in force, will the Government consider the reduction of that portion of the surcharge which was added on to the rates and go back to the old rates?

THE HON. SRI V. RAMAIAH : In the present bills the words 'war surcharge' will not at all be there. The Committee already went into the question, considered the different aspects and consolidated and fixed the new rates.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, விளக்கு களுக்கு அதிகக் கட்டணமும், மின்சார விசிறி, ரேடியோ போன்ற வைகளுக்கு குறைவான கட்டணமும் இப்போது விதிக்கப்பட் டிருக்கிறது. இந்த மாதிரி ஏற்பாட்டினால், ஏழைகளுக்கு எந்த விதமான அனுகூலமும் ஏற்படவில்லை. காரணம், ஏழைகள் மின்சார விசிறி, ரேடியோ போன்றவைகளை உபயோகிப்பதில்லை. ஆகவே இதை மாற்றி அமைத்தால் ஏழைகள் பயனடைவார்கள். இதைப் பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

(பதில் இல்லை)

### *Hill stations*

* 567 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to develop hill stations like Kodai and Nilgiris during the Third Five-Year Plan period; and

(b) if so, the details thereof?





THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The following schemes are proposed to be taken up during the Third Plan period for the benefit of tourists visiting the hill stations in this State :—

(i) Construction of a Low Income Group Rest House at Ootacamund.

(ii) Construction of a Low Income Group Rest House at Kodaikanal.

(iii) Construction of a Low Income Group Rest House at Yercaud.

(iv) Provision of boating facilities in and desilting of the lakes at Ooty and Kodaikanal.

SRI N. K. PALANISAMI : May I know, Sir, whether the Government are aware of the fact that heavy rents have been collected even for the 'Dak Bungalows' which were already constructed? Is there any proposal to reduce the rent, Sir?

THE HON. SRI C. SUBRAMANIAM : The accommodation available there is limited. Generally, officials only will get priority there. That is why low income group rest houses are proposed to be built.

SRI N. K. PALANISAMI : May I know the number of houses to be constructed . . .

MR. SPEAKER : Ithink the hon. Member means how many rest houses are going to be built in each place, viz., Kodaikanal, Yercaud, etc.

THE HON. SRI C. SUBRAMANIAM : One house at each place.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், கொடைக்கானல், நீலகிரியைத் தவிர வேறு எங்கெங்கே இம்மாதிரியான மலை வாசஸ் தலங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?

MR. SPEAKER : ஏற்காடு என்று மூலக்கேள்வியின் பதிலி லேயே இருக்கிறதே!

SRI A. A. RASHEED : What are the steps that the Government have taken to provide more water-supply in Ootacamund?

MR. SPEAKER : How is it relevant? I think, it is a far-fetched question.

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. Now steps have been taken to improve the water-supply at Ootacamund.

SRI J. MATHA GOWDER : ஸார், அமைச்சர் அவர்கள் பதிலிலே குறிப்பிட்ட வீடு ஒரு குடும்பம் மட்டும் இருப்பதற்குத் தான் உபயோகப்படுமா? அல்லது பலர் தங்குவதற்கு அறை கள் கட்டப்படுமா என்பதைச் சொல்வார்களா?

[4th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : ரெஸ்ட் ஹவுஸ் என்று சொன்னால் ஒரு குடும்பம் மட்டும் தங்குவதற்கு இல்லை. பலர் தங்குவதற்கு ஏற்ப 30 அறைகள், 40 அறைகள், 50 அறைகள் என்று இருக்கும்.

*Law College*

* 568 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any Government servants have been allowed to study in the Law College without taking leave;

(b) if so, how many; and

(c) whether they attend classes during office hours?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) One.

(c) The office hours have been suitably adjusted without any reduction, so far as the candidate is concerned.

SRI T. S. RAMASWAMI : May I know, Sir, whether this concession will be extended to other non-gazetted officers or other Government officials as it is given to this particular gentleman?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. If there are cases where conditions and the office hours of work could be suitably adjusted, the Government will consider such extension in particular cases.

SRI K. VINAYAKAM : Would the Hon. Minister consider the feasibility of introducing a course in the Law College where classes would be held in the evening to enable persons working in different institutions to take to legal studies, as is done in other Universities, viz., Uttkal, Mysore, etc.?

THE HON. SRI C. SUBRAMANIAM : There are already sufficient number of Law Graduates. I do not think there is a case for the extension of these facilities for study in Law. I can very well understand if it is extended to Engineering and other Technical education.

SRI S. RANGANATHA MUDALIAR : Apart from the increasing number of Law Graduates, from the point of view of income to the Government, will the Government consider the feasibility of starting an evening Law College at Madras?

THE HON. SRI C. SUBRAMANIAM : I thank the hon. Member for having given this suggestion. Particularly as Finance Minister. I have to thank him.

*Madras Zoo*

* 569 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Corporation of Madras has requested the Government for the allotment of a site to accommodate Madras Zoo; and

(b) if so, the nature of the reply sent to the Corporation?



4th March 1961]

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) No, Sir.

(b) Does not arise.

SRI A. A. RASHEED : Since there is no room for the expansion of the Madras Zoo at the present site, will the Government consider the allotment of a bigger site for the Madras Zoo?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The question relates to request made by the Corporation for the allotment of a site to accommodate the Madras Zoo and I have given the reply. If the hon. Member Sri A. A. Rasheed puts a separate question, I will answer.

SRI K. VINAYAKAM : May I know, Sir, what happened to the proposal that was in the offing with the Corporation for shifting the zoo to the Government Estate, Guindy, where His Excellency also offered to place some portion of his Estate at the disposal of the Corporation?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : I thank the hon. Member, Sri K. Vinayakam for the information he has given. If he puts a separate question, I will answer him in detail.

*Pay Commission's recommendations*

* 570 Q.—SRI M. P. SARATHI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க சம்பளக் கமிஷன் சிபாரிசு செய்த சம்பள விகிதங்களிலிருந்து குறைக்கப்பட்டுள்ள உத்தியோக இனங்கள் எத்தனை?

(இ) அவ்வாறு குறைக்கப்பட்டது ஏன்?

(உ) இந்த நடவடிக்கையின் பலன் (நிதி அளவில்) எத்தகையது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) to (c) The Government have generally gone on the basis of accepting the Pay Commission's recommendations in respect of all categories of staff. In a few cases, however, marginal deviations from the scales recommended by the Commission have been made in the interests of uniformity and rationalisation. It will not be desirable to publish the detailed reasons for each change.

SRI K. VINAYAKAM : Has the Government revised the scales of pay as recommended by the Pay Commission for all the teachers both in the Government institutions and private institutions?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, as far as possible this being done.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், பஞ்சாயத்து போர்டுகளிலே வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளுக்கு இதுவரையிலே இந்த சம்பளக் கமிஷன்படி சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதை கொடுக்க உத்தேசமா அல்லது எப்போது கொடுக்கப்படும்?

[4th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member may put a separate question.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that in some institutions like the Higher Elementary Schools in Kodambakkam, the teachers have not been given the revised scales of pay recommended by the Pay Commission even after a lapse of two years and inspite of many reminders sent to the Department?

THE HON. SRI C. SUBRAMANIAM : It came into effect only from 1st June 1960. Kodambakkam seems to be a peculiar place. If the hon. Member, Sri K. Vinayakam brings to my notice any case, I will look into it.

*Girls' High School (Shencottah)*

* 571 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the waterman, gardener, sweeper of the Girls' High School, Shencottah, are getting their pay only after the 15th of each month; and

(*b*) if so, the reasons therefor and the period for which they are receiving their pay after the 15th of each month?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

*Deputy Inspector of Schools*

* 572 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any advanced Tamil language test is prescribed for the post of Deputy Inspector of Schools; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) An Advanced Language Test has been prescribed for probationers in the combined cadre of Deputy Inspectors of Schools, School Assistants, Headmasters and Headmistresses in the Madras Educational Subordinate Service who possess, at the time of selection by the Madras Public Service Commission, the B.Sc. Degree of the Madras University.

(*b*) The Deputy Inspectors, School Assistants, Headmasters and Headmistresses should possess knowledge of B.A. Part II Standard in the regional language, if they are to do their inspection or teaching work with a fair degree of efficiency. As the holders of 2 year B.Sc. Degree of the Madras University would not have studied a language other than English in their degree course, the Advanced Language Test, which is of the B.A. Part II Standard, has been prescribed for such degree holders in the combined cadre.



4th March 1961]

*Tannery*

* 573 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் போளூர் சமுதாயநலத்திட்டம் சந்த வாசல் கிராமத்தில் மாதிரி தோல் பதனிடும் தொழிற்சாலை (Model tannery) ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

SRI A. A. RASHEED : May I know the capacity of the tannery and what are the types of skins that would be tanned there?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I do not have all these particulars with me just now. The cost of the scheme works out to Rs. 25,600.

*Harijan Christians*

* 574 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the various concession given to Christian-Harijans; and

(*b*) whether the Government have made any representations to the Central Government that there should not be any difference between the Christian and Hindu-Harijans in the matter of concessions?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A paper[a] is placed on the table of the House.

SRI T. T. DANIEL : From the paper placed on the table of the House, we find that there are differences in the matter of giving concessions between the Christian-Harijans and the Hindu-Harijans. In view of the fact that our country has been declared a Secular State and the fact that we have also declared that there shall not be any discrimination on grounds of religion, will the Government make representations to the Central Government so that the definition of the term ' Scheduled Castes ' as found in the Standing Order of 1950 may be modified in such a way that ' Scheduled Castes ' may include also Harijans who belong to religions other than Hinduism?

THE HON. SRI P. KAKKAN : Sir, convert-Harijans are not eligible for any of the concessions given by the Central Government Grant-in-aid. This Government have addressed the Government of India in the matter. If any more facilities are to be given, the Constitution will have to be amended. Then only we can do something; otherwise, we cannot do anything in the matter.

SRI A. VEDARATHNAM : மேஜைமீது வைக்கப்பட்டிருக்கிற ஏட்டில், கிளாஸ் பி-ல் மத்திய அரசாங்கம் மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு எந்தச் சலுகையும் கொடுப்பதில்லை என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அப்படியிருக்கிற பொழுது நம்முடைய மாநில

[a] Printed as Appendix I on page 305 infra.

[4th March 1931

அரசாங்கம் மாத்திரம் அதற்கு புறம்பாக நடப்பது ஏன்? அப்படி இவர்கள் நடக்கிற காரணத்தினால் இந்தச் சலுகையை பயன் படுத்திக்கொண்டு ஏராளமான ஹரிஜனங்கள் மதம் மாற்றப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் அவர்களை பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN: இந்து மதத்திலிருந்து கிறிஸ்துவ மதத்திற்கு மாறக்கூடாது, கிறிஸ்துவ மதத்திலிருந்து இந்து மதத்திற்கு வரக்கூடாது என்ற நோக்கத்தோடு தான், அந்தந்த மதத்தில் இருப்பவர்கள் அந்தந்த மதத்தை உண்மையாக நேசிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் வீடு கட்டிக் கொடுப்பது, விவசாயத்திற்கு வேண்டிய உதவி செய்வது, தொழில் துறையிலே உதவி செய்வது, இம்மாதிரி உதவிகளெல்லாம் மத்திய அரசாங்கத்திலிருந்து மதம் மாறிய கிறிஸ்துவ சகோதரர்களுக்கு கிடைப்பது இல்லை. இதரர்களுக்கு கிடைக்கிறது. மதம் மாறிய கிறிஸ்துவர்களும் ஏழைகளாக இருப்பதால் அவர்களுக்கும் ஒத்தாசை செய்யவேண்டும் என்ற காரணத்தினால்தான், அவர்களுக்கு மாகாண சர்க்காரிலிருந்து ஸ்காலர்ஷிப் கொடுப்பது, ஸ்கூல் அண்டு ஹாஸ்டல் பெனிவிடைஸ் கொடுப்பது, 'மிட் டே மீல்ஸ்', 'ப்ரொவிஷன் ஆப் ப்ரீ ஹவுஸ் ஸைட்ஸ்', 'ப்ரொவிஷன் ஆப் டிரிங்கிங் வாடர் வெல்ஸ்', 'ஸானிடரி அமினிடீஸ்', முதலிய எல்லா வசதிகளும் செய்து கொடுப்பதற்கு முன் வந்திருக்கிறோம். அவர்களும் ஹரிஜன ஏழைகள் மாதிரி தான். அதனாலே மதம் மாற்றும் கொள்கை இதிலே வராது என்று நினைக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: The position is this. Scheduled Castes are entitled to special privileges and special assistance, because they were considered as untouchables in the Hindu society. Therefore, the Constitution itself provides safeguards for them. So far as the Scheduled Castes who get converted as Christians or Muslims, they cease to be untouchables and they belong to a separate category. But still, the economic backwardness and the educational backwardness are there. That is why in our State, they are treated as 'Other Backward Classes' and facilities are offered to economically and educationally backward people. I do not think this is in contravention of and contradictory to the policy adopted by the Central Government.

SRI T. T. DANIEL: In view of the fact that Christian-Harijans are also in need of house-sites and a majority of them are living in poramboke lands, will the Government extend the concession of purchasing house-sites for them also?

THE HON. SRI P. KAKKAN: Money for the purchase of house-sites is given to the Christian-converts also.

SRI M. K. SOMASUNDARAM: மத்திய அரசாங்கம் கொடுக்காவிட்டாலும், நம்முடைய மாகாணத்தில் மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கு கொடுக்கிற சலுகைகளோடு ஜாதி ஹிந்துக்களுக்குக்



4th March 1961]

கொடுக்கக்கூடிய சலுகைகளான மாடுகள் வாங்கிக் கொடுப்பது, வீடுகள் கட்டிக் கொடுப்பது ஆகிய சலுகைகளையும் சேர்த்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI P. KAKKAN: தனியாக ஒரு கேள்வி போட்டால் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

*Agricultural Ministers' Conference*

*575 Q.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the details of the decisions of the Agricultural Ministers' Conference held in Delhi during the last week of August; and

(b) whether any resolutions were passed in that Conference regarding the lack of co-ordination among the departments?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) A note[a] on the "Conclusions and Recommendations of the Conference of State Ministers of Agriculture held in August 1960" received from the Government of India is placed on the table of the House.

(b) No resolution was passed. It was however, stressed at the Conference that steps should be taken in each State for ensuring proper co-ordination between the Departments dealing with Agricultural Development, namely, Irrigation, Co-operation, Community Development and Agriculture at all levels. To eliminate divided responsibility, it was also suggested that all these Departments might be put in charge of one Minister.

SRI T. S. RAMASWAMI: May I know the further steps taken by the Government to implement these recommendations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No doubt, every subject is related to agricultural development and it is not possible for one Minister to handle all these subjects for the purpose of securing co-ordination and better assistance. But so far as this Government is concerned, there is no difficulty felt about lack of co-ordination under the existing arrangements and I have mentioned this to that Conference.

SRI A. A. RASHEED: One of the recommendations of this Conference is to establish a State Veterinary Council. May I know whether this Council has been established and if not, the reasons for the delay in establishing the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The State Veterinary Council, so far as this State is concerned, was formed before this conference discussed that question.

*Students Aid Society*

*576 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to open "Students Aid Society" to help students in technological institutions?

---

a Printed as Appendix II on pages 306-309 infra.

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no proposal to open " Students Aid Society " in technological institutions to help students. A " Students Aid Fund " has however been ordered to be instituted in all colleges in the State including technological institutions at the instance of the University Grants Commission.

SRI A. A. RASHEED : Since the cost of the books on technology is very high and prohibitive, will the Government open such a Society to help those students who study in technological institutions?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is why this Fund has been constituted.

SRI K. VINAYAKAM : What exactly are the functions of this Students Aid Society and how it is being utilized for the benefit of the educationally backward students, educationally backward in the sense that those who are not able to cope up with the standard of education as given in the technical institutions?

THE HON. SRI C. SUBRAMANIAM : They have financial assistance for the purchase of books, for paying tution fees, etc. As for the other matter raised by the hon. Member, it is a different matter altogether and does not come under this.

*Tractors*

* 577 Q.—SRI M. P. SARATHI: கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1960-ல் விவசாய இலாகாவைச் சேர்ந்த டிராக்டர்கள், புல்டோசர்கள் பழுதுபட்டு சீர்படுத்தப்படாமல் இருப்பவை எத்தனை ?

(இ) அவைகள் எவ்வளவு காலமாக பழுதடைந்து இருக்கின்றன ?

(உ) எப்பொழுது சீராக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Tractors, 20, bulldozers, 28.

(b) From one year to three months.

(c) Out of 20 tractors and 28 bulldozers, 5 tractors and 10 bulldozers are under minor repairs. These units will be commissioned within a month.

The remaining 15 tractors and 18 bulldozers are under major repair. These repairs will be taken up after the receipt of the final report from the Special Officer appointed for the purpose of inspecting all the departmental units and for reporting about the suitability to repair them economically so as to retain them or to condemn and auction them as the case may be.

SRI M. P. SARATHI: விவசாயிகளுக்குத் தேவையான பொழுது கேட்கும்பொழுது எல்லாம், அது பழுது அடைந்து விட்டது என்ற ஒரே குறைதான் எப்பொழுதும் இருந்து



வருகிறது. பழுதடைந்துள்ள டிராக்டர்களை உடனடியாக ரிபேர் செய்து கொடுப்பதற்கோ அல்லது புதியதாக டிராக்டர்களை தருவித்துக் கொடுக்கவாவது அரசாங்கம் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பற்றி அவ்வப் பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஸ்பேர் பார்ட்ஸ் தருவிப்பதற்கு அன்னிய செலாவணி வேண்டியிருக்கிறது. அது ஓரளவுக்குத்தான் கிடைத்திருக்கிறது. நாம் அதிகமாக கேட்ட பொழுது 2 லட்சம் ரூபாய்க்குத்தான் கொடுக்கப்பட்டது. அது ஒரு குறைபாடு. மேலும் புதியதாக டிராக்டர்கள் வாங்குவதற்கும் இப்பொழுது அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR: இந்த ஸ்பெஷல் ஆபீஸர் இந்தத் திட்டத்தை 'கண்டினியூ' செய்வதுபற்றி 'இன்வெஸ்டிகேட்' பண்ணுவதற்கு போடப்பட்டதா ? அல்லது குற்றங் குறைகளை கவனிப்பதற்கு போடப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : டிராக்டர்களை எல்லாம் பரிசீலனை செய்து எதை வைத்துக்கொள்ளலாம், எதை விற்றுவிடலாம், எது பயனற்றது என்பதையெல்லாம் பார்த்துச் சொல்லுவதற்குத்தான் ஸ்பெஷல் ஆபீஸர் போடப்பட்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : How many tractors are we likely to get and when are we going to get them? Is there any proposal to start a factory in collaboration with a Japanese firm?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : About the last part of the question, I would like to have notice. Regarding tractors that were not repaired for the past one year, there are no such tractors at all. Only four bulldozers come under that category. Those that are under repair for the past six months are 12 tractors and 11 bulldozers and those which are under repair for less than 6 months are 8 tractors and 13 bulldozers. Others are in working order.

SRI M. K. MARIAPPAN: ஹொசூர் தாலூகாவிலே ஒரு வருஷமாக ஒரு புல்டோசர் பழுதுபட்டிருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இனி மேலாவது அதைச் செப்பனிட சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹொசூர் தாலூகாவிலுள்ள நிலைமை சர்க்காருக்குத் தெரியாது. சில இடங்களில் பழுதுபட்டுத்தான் இருக்கின்றன. நல்ல நிலைமையில் இருப்பவற்றைத்தான் அப்போதைக்கப்போது அனுப்புகிறோம். புதிதாக டிராக்டர்கள் வந்தபிறகுதான் பற்றாக்குறை நீங்கும்.

*Travellers' bungalow (Courtallam)*

* 578 Q.—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether it was a fact that the Executive Engineer (P.W.D.), Ramanathapuram Division and the Executive Engineer (P.W.D.), Madurai Division, were staying in Courtallam Travellers Bungalow during the first week of June 1960 on official duty; and

(b) if so, the nature of duty they performed during their stay in Courtallam?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir. It was a fact that the Executive Engineer, Public Works Department, Tiruchirappalli Division, Tiruchirappalli, and (not Executive Engineer, Madurai Division, Madurai, as mentioned in the question) and the Executive Engineer, Ramanathapuram Division, Madurai, halted at Courtallam on 3rd June 1960 on official duty.

(b) They visited, under permission, the recently constructed Rest House at Courtallam to enable them to keep in touch with the modern trend in construction.

*Rubber*

* 579 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the cost of cultivating rubber per acre in the Government plantations;

(b) the area planted till now;

(c) the details of the scheme for future plantation ;

(d) how the budding is done at present and under whose guidance; and

(e) the nature of the technical assistance received by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (e) A statement [a] is placed on the table of the House.

SRI T. S. RAMASWAMI : May I know the total expenses incurred till now on rubber cultivation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : About 141 acres of rubber plantations have been raised in 1960-61. The cost on an average works out to Rs. 700 per acre.

SRI T. T. DANIEL : While welcoming the decision of Government to implement a scheme to plant rubber in 2,000 acres during the Third Plan Period, has the Government any proposal to extend it a little more so that we can have 15,000 acres of rubber plantations at the end of the Third Plan Period?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Our experts feel that it will be difficult to extend it to an unlimited level. The total target for rubber cultivation is about 3,000 acres. Therefore this scheme will be extended even beyond the Third Plan period.

SRI M. A. B. ARUMUGHASAMY: கொடைக்கானல் மலைப் பகுதியிலே ரப்பர் பயிர் செய்வதற்கு லாயக்காக இருக்கிறதா என்பதை சர்க்கார் பரிசீலித்தார்களா? லாயக்காக இருந்தால் அங்கே ரப்பர் பயிர் செய்வதற்கு சர்க்கார் முன் வருவார்களா?

[a] Printed as Appendix III on pages 310–312 infra.



THE HON. SRI M. BHAKTAVATSALAM : கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் ரப்பர் பயிரிடுவதற்கு லாயக்காக இருக்கிறது என்று இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. வேறு பிராந்தியங்களில் இப்போது விஸ்தரிப்பதாக இல்லை.

DR. (SRIMATHI) SOUNDARAM RAMACHANDRAN: மணி முத்தாறு போகிற வழியிலே, அதாவது நீர்த்தேக்கம் இருக்கிற வழியிலேயும், அதற்கடுத்து மாஞ்சோலை முதலிய இடங்களிலும் ரப்பர், தேக்கு முதலியவை நன்ருக வரும் என்று சொல்லுகிருர்கள். அந்த வட்டாரத்தில் இப்பொழுது ஒரு குறிப்பிட்ட அளவில் இதைப் பயிர் செய்து வருகிருர்கள். இதை விஸ்தரிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா? இந்த 700 ரூபாய் முதல் வருஷத்திலே ஒரு ஏக்கர் நிலத்தைப் பயிர் செய்வதற்கு செலவழிக்கப்பட்டதா? இதைக் காட்டிலும் குறைந்த செலவில் வேறு இடங்களில் இதைப் பயிரிட சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த 700 ரூபாய் முதல் வருஷத்திலே ஏற்பட்ட செலவு. மேற்கொண்டு செலவு குறையுமென்றுதான் எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுதுதான் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இதைப்பற்றி மேலும் பரிசீலனை செய்த பிறகுதான் வேறு இடங்களுக்கு விஸ்தரிப்பதைப் பற்றி அரசாங்கம் கவனிக்க முடியும்.

*Kundah Project*

* 580 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the generator in the first stage of Kundah is working to its capacity ?

THE HON. SRI V. RAMAIAH : Yes, sir.

SRI A. A. RASHEED : What is the capacity of the generator? What is the present production of electricity?

THE HON. SRI V. RAMAIAH : For the first generator and first power house, it is 20,000 KW. With the present generator, both the generators in the First power house are generating electricity. Two generators in the second power house also generate power.

*Electric power supply*

* 581 Q.—SRI M. P. SARATHI: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்திற்கு எந்தெந்த அண்டை ராஜ்யங்களிலிருந்து எவ்வளவு மின்சாரம் வாங்கப்படுகிறது?

(இ) எந்தெந்த அண்டை ராஜ்யங்களுக்கு எவ்வளவு மின்சாரம் வழங்கப்படுகிறது?

(உ) கேரள ராஜ்யத்திலிருந்து அதிக மின்சாரம் கேட்டு கோரிக்கை வந்ததா?

(எ) அதனுடைய முடிவு என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) Bulk supply of power is being obtained up to a maximum demand of 3,560 K.V.A. from Kerala State and 3,000 K.V.A. from Andhra Pradesh.

(b) Bulk supply of power is being made from this State to the adjoining States up to a maximum demand of 12,370 K.V.A. to Kerala Stete, 6,625 K.V.A. to Pondicherry State and 700 K.V.A. to Andhra Pradesh.

(c) Yes, Sir. Requests were received for an additoial supply of 10,000 K.W. to meet the power demand of Messrs. Fertilizers and Chemicals Limited, Alwaye and additional supply of 400 K.W. at the Uppatti point to meet the increased load demand in Malabar area.

(d) In view of the acute power position in this State, their requests were not complied with.

SRI M. P. SARATHI: நமக்கே மின்சாரம் பற்றாக்குறையாக இருந்து வெளி மாகாணங்களிலிருந்து வாங்கும்பொழுது, நாம் இன்னொரு மாகாணத்திற்கு மின்சாரம் வழங்குவது எந்த அடிப்படையில் பொருந்தும்?

THE HON. SRI V. RAMAIAH : நமது மாகாணத்திலே மட்டுமல்ல. பக்கத்து மாகாணங்களிலும் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. ஒவ்வொருவரும் சில இடங்களில் கொடுத்து உதவி செய்ய வேண்டியிருப்பதால், நாம் அவர்களிடமிருந்து வாங்குகிறோம். நாமும் சில கட்டத்தில் அவர்களுக்குக் கொடுக்கிறோம்.

SRI S. M. ANNAMALAI : நம்முடைய மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் மின்சார சக்தி எந்தவிதமான பண அடிப்படையில் மாற்றிக்கொள்ளப்படுகிறது. அப்படியானால் பிற மாகாணங்களிலிருந்து நாம் வாங்குகிற மின்சார சக்திக்கு பணம் அதிகமாக வழங்கப்படுகிறதா? இந்த மாநிலத்திற்கும் பிற மாநிலங்களுக்குமுள்ள வித்தியாசம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI V. RAMAIAH :பிற மாகாணத்திலிருந்து நமக்கு எவ்வளவு மின்சார சக்தி கிடைக்கும், நாம் எவ்வளவு கொடுக்க முடியுமென்பதுதான் இப்பொழுது அரசாங்கத்தின் முன்பு இருக்கக்கூடிய பிரச்னை. எவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமென்பது பிரச்னையல்ல. எவ்வளவு பணம் கொடுத்தாவது மற்றவர்கள் வாங்குவதற்குத் தயாராயிருக்கிறார்கள். இப்பொழுது பிரச்னையெல்லாம் எப்படி அதிகமாக சக்தியை வாங்கமுடியும் என்பதுதான். எந்த ஒப்பந்தத்திற்கு வந்தாலும், நன்றாகப் பரிசீலனை செய்தபிறகுதான் முடிவு எடுக்கிறோம்.

*Primary education*

* 582 Q.—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the places where compulsory primary education has been introduced;

(b) the basis on which these places are chosen; and



(c) the percentage of school-going children in the age-group (6-7) that are enrolled?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) About 3,400 villages have been selected. The places selected will be notified in the Gazette.

(b) Selection of the villages has been made on the following basis :—(a) existance of a sufficietly high percentage of voluntary enrolment, (b) availability of public support in large measure, for providing midday meals, (c) evidence of enthusiasm in the local people in an abundant measure to provide additional accommodation.

(c) 6.6 per cent of the target for the Third Five-Year Plan.

*School Improvement Scheme*

* 583 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the total amount of money and value of materials, so far collected under the School Improvement Scheme ; and

(b) whether they have been handed over to the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Rs. 3.99 crores.

(b) No, Sir. The donations received in cash are generally handed over to the local School Improvement Conference Committees. Donations received in kind are handled over directly to the schools concerned.

SRI A. A. RASHEED : What is the total amount of money promised? What is the value of the materials collected? What is the actual amount collected?

THE HON. SRI C. SUBRAMANIAM : The total value of the schemes promised to be undertaken was Rs. 6.3 crores. Actually implemented Rs. 3.99 crores.

SRI S. M. ANNAMALAI: இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடத்த உத்தேசம் உண்டா? அப்படியாயின் எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப் பற்றி இறுதியாக ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை.

SRI K. VINAYAKAM : May I know why this School Improvement Scheme has not been given effect to in Madras City? What are the factors that work as implements for extension of this scheme to the City?

THE HON. SRI C. SUBRAMANIAM : This purely depends on voluntary effort. Perhaps in theCity many people are not prepared to come forward with donations. Rural centres set better example.

SRI A. VEDARATHNAM: இந்த கல்விச் சீரமைப்புக்குக் கொடுக்கப்படும் பொருள்களெல்லாம் பற்றி சரியான கணக்கு வைக்கப்படுகிறதா? அப்படி வைக்கப்படும் கணக்குகளின் நகல்கள் சர்க்காரிடம் உள்ளனவா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இது ஒவ்வொரு பள்ளி சீரமைப்பு மகா நாட்டின் போதும் அச்சடித்து கொடுக்கப்படுகிறது. அது சம்மந்தமாக ஒவ்வொரு பள்ளிக்கும் அந்தப் பொறுப்பு கொடுக்கப்படுகிறது. இது சர்க்காருடைய பணமோ அல்லது திட்டமோ அல்ல. ஆங்காங்கே இருக்கக்கூடிய பள்ளி அதிகாரிகள், கமிட்டிகள் பரிசீலனை செய்கிறார்கள்.

SRI M. P. SARATHI: இந்த கல்விச் சீரமைப்பிற்காக வசூலிக்கப்படும் பொருள்களையும், பணத்தையும், சர்க்காரே வினியோகிக்கிறார்களா அல்லது அந்தந்தப் பள்ளிகளுக்கே விட்டுவிடுகிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதுதான் சொன்னேன்; அந்தந்தப் பள்ளிகளுக்கே விட்டுவிடப்படுகிறது.

SRI V. SUBBIAH: இந்த கல்விச் சீரமைப்பு மாநாடுகளைச் சிறப்பாக நடத்த என்று ஆங்காங்கே இருக்கும் கமிஷன் கடைகளிலிருந்து அரிசி, பருப்பு முதலிய பண்டங்களைக் கொண்டுவந்து வைத்து, பிறகு எடுத்துப் போகிறார்களே. அதெல்லாம் கணக்கில் வருகிறதா? அம்மாதிரி நிகழ்ச்சிகள் பல மாநாடுகளில் நடந்திருக்கிறதே.

THE HON. SRI C. SUBRAMANIAM: சில இடங்களில் அம்மாதிரிப் புகார்கள் வந்தன, ஆனால் பரிசீலனை செய்ததில், அது உண்மையல்ல, இந்த இயக்கத்தில் பொறாமை கொண்டவர்கள் சொன்ன வெறும் புகார்கள் என்ற முடிவுக்குத்தான் வர முடிந்தது.

*Fish*

MR. SPEAKER: I think Questions 584 and 585 relate to the same subject and may be taken up together.

*584 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை கடலில் விஷ மீன்கள் இருப்பதாக கூறப்படுவதன் விவரமென்ன?

(இ) இதுவரை அவைகளால் ஏற்பட்ட தொந்திரவு என்ன?

(உ) இந்த விஷ மீன்களிடமிருந்து மீனவர்களையும், கடலில் ஸ்நானம் செய்வோரையும் காப்பாற்ற அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது?

(எ) இதுவரை இந்த விஷ மீன்களால் ஏற்பட்ட சேதம் எப்படி தவிர்க்கப்பட்டது?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (*a*) to (*d*) The presence of a variety of jelly fish, whose sting causes swelling, was reported near the sea coast off Madras during October 1960.





Presumably this has been mistaken as a poisonous fish. The Government are not so far aware of any specific instances where any casualty was reported to have been caused by this jelly fish off Madras coast. However, wide publicity was given by the Government through leading local dailies of Madras, regarding the reported occurrence of jelly fish and the fishermen were warned against coming into contact with this jelly fish. During the last three months, the occurrence of stinging jelly fish has been brought to the notice of the State Fisheries Department only once. The occurrence of this variety of jelly fish is rare and there is no cause for alarm.

SRI A. VEDARATHNAM: இவ்வளவு காலமும் இல்லாமல் இருந்து திடீரென்று இந்த மாதிரி விஷ மீன்கள் எப்படி வந்தன; இம்மாதிரிக் கிளர்ச்சிக்கு காரணம் என்ன? அந்த விஷ மீன்கள் இப்பொழுது என்ன நிலையில் இருக்கின்றன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இந்த வகையான மீன்கள் எப்படி வந்தன என்று சொல்வதற்கில்லை. இதனால் அபாயம் இல்லை; சொரி போன்றவை ஏற்படுகிறது. இவை எப்பொழுதும் காணப்படுவதும் இல்லை.

*585 *Q.*—SRI M. P. SARATHI: கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1958-59, 1959-60 ஆண்டுகளில் முறையே இந்த ராஜ்யத்தில் பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு என்ன?

(இ) வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது எவ்வளவு? அவைகளின் விலை மதிப்பு எவ்வளவு?

(உ) வெளி ராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மீன்களின் அளவும், நிதி மதிப்பும் எவ்வளவு?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (*a*), (*b*) & (*c*) The particulars (*a*) are placed on the table of the House.

SRI M. P. SARATHI: 1958-59-ல் ஏற்றுமதி செய்வதைவிட 1959-60-ல் ஏறக்குறைய 100 லட்ச ரூபாய்கள் குறைந்திருக்கிறது. ஏற்றுமதி செய்ய சர்க்காரால் முடியவில்லையா? ஏன்?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: எவ்வளவு மீன்கள் தேவைப்படுகிறதோ அவ்வளவுதான் ஏற்றுமதி செய்ய முடியும். மேலும் நம் நாட்டில் மீனுக்கு கிராக்கி அதிகமாக இருக்கிறது.

*Council of Scientific and Industrial Research*

*586 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the schemes for which assistance is received from the Council of Scientific and Industrial Research; and

(*b*) the nature of the assistance received?

---

Printed as Appendix IV on page 313 infra.

[4th March 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Financial assistance is being received from the Council of Scientific and Industrial Research for the Scheme for Research on the Development of Essential Oils Industry which has been undertaken in the Government Cinchona Plantations at Anamallais in the Coimbatore district and at Dodabetta in the Nilgiris district. The entire expenditure incurred on staff, labour, etc., and other incidental charges on the above scheme is met by the Council of Scientific and Industrial Research.

SRI K. SATTANATHA KARAYALAR: இரண்டாவது திட்டத்தில் எவ்வளவு கொடுப்பதாக இருந்தது? எவ்வளவு கிடைத்தது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: 1960-ல், செப்டம்பர் 30 வரை இதற்கு உதவி கிடைத்தது 13 ஆயிரத்துச் சொச்ச ரூபாய்.

*Music*

*587 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken by the Government to give encouragement to music, dances and drama?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [a] is laid on the table of the House.

SRI T. S. RAMASWAMI : இந்த லலித்கலா அகாடமி எங்கு நிறுவப்படும்? தாகூர் ஸென்டினரி ஸெலிப்ரேஷன் தியேட்டர் எங்கு வைக்கப்படும்? இந்த ஓபன் ஏர் தியேட்டர்கள் ஐந்தும் எங்கெங்கு வைக்கப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொன்றாகக் கேட்டால் நல்லதாக இருக்கும். தாகூர் ஸென்டினரி விழாவை ஒட்டி கட்டப்படும் நாடக அரங்கு கொச்சின் ஹௌஸ் பக்கத்தில் அமைக்கப்படும். அது எங்கு இருக்கிறது என்று கேட்டால், அவர்கள் (கனம் அங்கத்தினர்) அந்தப் பக்கத்திலிருந்து வருவதால், அதைச் சொன்னேன். . . .

SRI T. S. RAMASWAMI : It is said here, 'there is a proposal to constitute a Lalitkala Academy.

THE HON. SRI C. SUBRAMANIAM : The proposal has not yet been finalized and we are in correspondence with the Government of India.

SRI A. VEDARATHNAM : ஸார், இந்த மேஜைமீது வைக்கப்பட்டிருக்கும் ஏட்டில், நாலாவது பாராவில் "Inter State Exchange of Cultural Troupes" என்ற அடிப்படையில் கலைப் பரிவர்த்தனை செய்துகொள்வதாக இருப்பது விரும்பத்தக்கது, வரவேற்கத்தக்கது. எனினும், அது கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஹிந்துஸ்தானி கலையையும் பரிவர்த்தனை செய்துகொள்ள முயற்சிகள் ஏதாவது உண்டா? எடுக்கப்படுமா?

[a] Printed as Appendix V on page 314 infra.



4th March 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

SRI N. K. PALANISAMI : Apart from Bharatanatyam and Oriental dances, now dance-drama is gaining influence among the public. May I know, Sir, whether the Government have devoted any special attention towards this?

THE HON. SRI C. SUBRAMANIAM : If it is gaining influence does the hon. Member, Sri N. K. Palanisami, want to take counter-action against that art? (Laughter).

SRI A. VEDARATHNAM : இந்த ஏட்டின் பத்தாவது பாராவில் கண்டிருக்கிறது ஐந்து சென்டர்கள் வைக்கப்படும் என்று. எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப்படும்? அங்கே சங்கீத போதனா முறைப் பயிற்சி உண்டா? இல்லையென்றால், புதிதாக ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : போதனா முறை கொடுப்பதாக இல்லை; ஓபன் ஏர் தியேட்டர்கள் ஏற்படுத்துவதாக உத்தேசம். ஐந்து இடங்கள் எவை என்று இங்கே உடனடியாகக் காண முடியவில்லை.

SRI A. A. RASHEED : May I know, Sir, whether western classical music and ballet dances are also taught in the schools and colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is a novel suggestion. Some institutions may take note of it.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know, Sir, from the Hon. Minister on what basis these five centres have been selected and on whose advice? Were the Music Academy and other institutions consulted?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. It is on the recommendation of the Music Academy these places are selected.

SRI K. VINAYAKAM : Sir, in the matter of giving encouragement to music, dances and dramas serious difficulties are felt in giving advertisement to these functions like display of posters in the public. Will the Government lift the ban on at least these posters concerning these music festivals and dramas and dance festivals where no objectionable material is displayed in the posters?

THE HON. SRI C. SUBRAMANIAM : The prohibition is in accordance with the law passed by this House. I do not think we should consider any exemption. If there is any difficulty in the law, then we will look into it.

SRI S. M. ANNAMALAI : சில நாடக மன்றங்கள் கிராண்ட் கோரி விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டனவே, அது எந்தெந்த மன்றங்கள்? கிராண்ட் தரலாம் என்று இந்த சர்க்கார் எவை எவைக்கு சிபாரிசு செய்திருக்கிறது? எந்த அடிப்படையில்?

[4th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே வந்திருக்கக்கூடிய விண்ணப்பங்கள் ஐந்து ஸ்தானங்களிலிருந்து; அவை மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவை, சென்னை-கேரள சமாஜம், ஸௌத் இண்டியன் ஆர்ட்டிஸ்ட்ஸ் அசோசியேஷன், திருச்சி சங்கீத சபா, கரந்தை சங்கம், நெல்லை சங்கீத சபா.

*Parasite Breeding Stations*

*588 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number and places where Parasite Breeding Stations are located; and

(b) the nature of assistance given to the agriculturists during 1959 and 1960?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There are Five Parasite Breeding Centres located at Nagercoil (Kanyakumari district), Gudiyatham (North Arcot district), Coimbatore (Coimbatore district), Pattukottai (Thanjavur district) and Udangudi (Tirunelveli district).

(b) The parasites were regularly released in the affected coconut gardens in all the districts except Nilgiris. The number of parasites released and the number of trees benefited during 1959–60 and 1960–61 up to 30th September 1960 as follows :—

| | 1959–60. | 1960–61 (Up to 30th Sept. 1960). |
|---|---|---|
| *Nagercoil Centre—* | | |
| Number of parasites released .. .. | 807,616 | 795,221 |
| Number of trees benefited .. .. .. | 39,680 | 35,381 |
| *Gudiyatham Centre—* | | |
| Number of parasites released .. .. | 230,550 | 194,990 |
| Number of trees benefited .. .. .. | 27,206 | 10,466 |

In the other centres at Coimbatore, Pattukottai and Udangudi which have been started recently, more attention was given to the multiplication of parasites and this work is in progress.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த பாரசைட் உற்பத்தியானது தேவைக்கு அதிகமாக இருக்குமானால் அண்டையில் இருக்கக்கூடிய ராஜ்யங்களுக்கு அதை விலை வைத்துக் கொடுக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா? அப்படிச் செய்தால் அண்டை ராஜ்யங்களுக்கும் அது நல்லதாக இருக்கும் என்ற அளவில் அப்படி ஒரு நல்ல திட்டம் வகுக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இங்கு உற்பத்தியாகக்கூடிய பாரசைட் அண்டை ராஜ்யங்களுக்கு வேண்டுமானால் அண்டை ராஜ்யங்கள்தான் அதற்கு தேவை என்று கருதி அதை இங்கிருந்து விலைக்கு வாங்கிக்கொள்வதற்கு அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். பாரசைட் உற்பத்தி நமக்கு போதிய அளவுக்கு மேல் இருக்கிறது. நிறைய பெஸ்ட் கண்ட்ரோல்



4th March 1961] [Sri M. Bhaktavatsalam]

அங்கங்கே செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கேயெல்லாம் இந்த பாரசைட்டை உபயோகப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. அதை உபயோகப்படுத்துவதன் முன்பு அது எவ்வளவு வேண்டும் என்று மதிப்பிட வேண்டியதாக இருக்கிறது. இந்த ராஜ்யம் பூராவும் 1959-60-ம் ஆண்டில் லட்சத்தி தொண்ணூத்தி ஐந்தாயிரத்து தொள்ளாயிரம் ரூபாய் அளவிற்கு விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, இதன் உற்பத்தியில் இன்னும் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த மருந்து வகை, ஆற்று நீர் முதலிய வகைகள் பல துறைகளில் அண்டை ராஜ்யங்களுக்கு வழங்கும் வகையில் இணைந்து வாழ வேண்டும் என்று நினைக்கிற கனம் அங்கத்தினர்கள் எல்லா ராஜ்யங்களும் இணைந்து வாழ்வது நல்லது என்று கருதி எல்லா ராஜ்யங்களும் இணைந்து வாழ்வதற்கு அவர்கள் பாடுபடுவார்களா?

MR. SPEAKER : How does this arise from the main question?

SRI P. M. MUNUSAMI GOUNDER : இந்தக் கேள்வியில் "பாரசைட் ப்ரீடிங்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை தமிழில் "ஒட்டுண்ணி" என்று இருக்கிறது. இரண்டுக்கும் வித்தியாசம் என்ன என்று தெரியவில்லை. அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தென்னை மரங்கள் காய்க்கிறபோது அதில் ஒரு வித பூச்சி விழுகிறது. அதனால் காய்ப்பு பாதிக்கப்படுகிறது. மனிதர்களுக்கு எப்படி வியாதிகளுக்கு ஒரு வித மருந்து குத்துவது போன்று தென்னை மரங்களுக்கும் ஒரு வித மருந்தை vaccinate பண்ண வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு மருந்தை உற்பத்தி செய்து இந்த தென்னை மரங்களுக்கு vaccinate செய்யப்படுகிறது. அப்படி தென்னை மரங்களுக்கு இந்த மருந்தை உபயோகப்படுத்தி தேங்காய்கள் காப்பாற்றப்படுகின்றன.

SRI K. SATTANATHA KARAYALAR : சில சமயங்களில் அண்டை ராஜ்யங்களில் இந்த மருந்தை உபயோகப்படுத்தாமல் இருப்பதால் அந்த நோய் இங்கும் பரவுவதற்கு வழி ஏற்படுகிறது. அதனால் இங்கு அந்த பாரசைட்டை உபயோகப்படுத்தினாலும் பிரயோசனப்படாமல் போய்விடுகிறது, இங்கே நல்ல முறையில் பயன்படுத்த முடியவில்லை. அந்த முறையில் இந்த பாரசைட்டை அண்டை ராஜ்யங்களுக்கு அனுப்புவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா? அப்படி அனுப்புவதற்கு ஏதாவது வழி வகை செய்யப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன், இதற்கு அண்டை ராஜ்யங்கள்தான் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று. நாங்களாகவே இதற்கு ஏற்பாடு செய்ய முற்பட்டால் அதற்கு எதிர்ப்பும் கிளர்ச்சியும் மற்றெல்லாமும் வரும்.

SRI T. S. RAMASWAMI : In view of the useful work done by these parasites- for example in 1959, 39,000 trees were benefited by them and in 1960, 35,000 trees were benefited y them—will the Government consider the question of changing their name from 'parasites to something else?'

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the Hon. Member that there is nothing in the name.

*Pablo Boats*

* 589 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any damage was caused to the Pablo Boats of Fishermen during October 1958;

(b) the nature and amount of loss to the Government and the concerned fishermen;

(c) whether there was in the agreement that the boats shall be at the risk of the hirer;

(d) whether any amount was written off against this specific provision; if so, why; and

(e) who were the concerned parties?

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : (a) Seven Pablo boats suffered damage on account of the unexpected gale in Royapuram bay on 6th October 1958. Of these four belonged to Fishermen Co-operative Societies, one to a group of fishermen and two to the Fisheries Department. The hulls of two boats belonging to the Fisheries Department were damaged beyond repairs, but the engines were put to use again after repairs. The damage to the remaining five boats was minor in nature.

(b) The amount of loss sustained by Government was estimated at Rs. 19,425 as follows :—

| | RS. |
|---|---|
| (i) Loss of two hulls of Pabo boats allotted to, but not taken over by Madras Fishermen Co-operative Federation .. | 12,675 |
| (ii) Repair to the two engines of above two boats ... | 1,000 |
| (iii) Repair charges met by the Government for the two Pablo boats surrendered by the Kasimedu Fishermen Co-operative Society which was unable to carry out repairs ... | 5,750 |
| Total ... | 19,425 |





The amount of loss sustained by the hirers was Rs. 5,216 as follows :—

| *Name of hirer.* | *Amount of loss.* |
|---|---|
| | RS. |
| Madras District Fishermen Co-operative Federation .. .. .. .. .. | 2,950 |
| Balakrishnan and Group, Madras (Salvage charges approximately) .. .. .. | 350 |
| Ayodhya Kuppa Fishermen Co-operative Society .. .. .. .. | 1,916 |
| Total .. | 5,216 |

(c) Yes.

(d) & (e) During the gale the two hulls of pablo boats allotted to but not taken over by the Madars District Fisherment Co-operative Federation were damaged beyond repairs. The question of writing off a sum of Rs. 12,675 being the cost of hulls is under consideration. The question of sanction of a sum of Rs. 1,000 for carrying out repairs to the engins is also under consideration. A sum of Rs. 5,750 was sanctioned as a special case for carrying out repairs to two pablo boats surrendered by the Fishermen Co-operative Society, Kasimedu, to the Fisheries Department as the Society was unable to carry out the repairs.

*Cooum river*

* 590 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether a scheme to flush the Cooum river and lay a railway line over it for the transport convenience of the people in the City has been brought to the notice of the Government;

(b) if so, the details thereof; and

(c) the estimated cost of this scheme?

THE HON. SRI P. KAKKAN : (a), (b) & (c) Sri S. Sivarama Krishnan, retired Accountant-General, has suggested the closing of the Buckingham Canal as a waterway within city limits and utilizing it for a sub-way electric railway track. The suggestion has been referred to the Chief Engineer (Irrigation) for remarks. There is no proposal for filling up the Cooum river within city limits and setting up a railway track.

SRI K. VINAYAKAM : கூவம் ஆற்றிலிருந்து வருகிற நாற்றத்தை போக்குவதற்கு பீரியாடிகலாக அதிலுள்ள தண்ணீரை ப்ளஷ் அவுட் செய்ய வேண்டுமென்று ஒரு திட்டம் செய்தார்களே அது ஏன் இப்பொழுது கைவிடப்பட்டுவிட்டது? அதைச் செய்வதன் பொறுப்பு கார்பொரேஷனுக்கா? அல்லது நமது பொது மராமத்து இலாகாவைச் சேர்ந்ததா? அப்படி

[Sri K. Vinayakam] [4th March 1961.

நம்மைச் சேர்ந்ததாக இருந்தால் இந்த அரசாங்கம் அதை எடுத்துக்கொண்டு இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது ப்ளஷ் அவுட் செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்வார்களா? அந்த முறையில் அதனுடைய துர் நாற்றத்தை போக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI P. KAKKAN : இதைச் செய்வதற்கு ஒரு கமிட்டியை நியமித்து அது நல்ல முறையில் இதைப்பற்றி பரிசீலனை செய்து அவர்கள் ஒரு ரிப்போர்ட்டைக்கூட கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த ரிப்போர்ட்டின்படி 120 லட்சம் ரூபாய் அதற்கு செலவு ஆகும் என்று சொல்லி இருக்கிறார்கள். கூடுமானவரையில் அவர்களுடைய ரிப்போர்ட்டின்படி ஆற்றில் தண்ணீர் எப்பொழுது ஏறி இறங்கிக்கொண்டு இருக்கும்படியும் அதற்கு வேண்டிய சாமான்களை எல்லாம் தருவித்து வைத்துக்கொள்ளவேண்டும் என்றும், அதற்கு என்ன செலவாகும் என்பதற்கு கணக்கெடுத்து அதை வைத்துக்கொள்ளவேண்டும் என்றும், கூவம் நதியினுடைய வாய் ( mouth ) நல்ல முறையில் வைத்துக்கொண்டு அதன் வழியாக எப்பொழுதும் தண்ணீர் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கும்படியான அளவில் வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார்கள். அந்த முறையில் நல்ல முடிவு ஏற்படும் என்று நம்புகிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : கூவம் நதியை மூடி அதன்மீது ரயில் போக்குவரத்து ஏற்பாடு செய்வது சாத்தியம் இல்லை என்று மத்திய அரசாங்க உதவி ரயில்வே அமைச்சர் கனம் ராமசாமி அவர்கள் பேசி இருக்கிறாரே, அப்படி அவர் பேசியது இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு பேசினாரா அல்லது அவராகவே அப்படி பேசியிருக்கிறாரா? அப்படி அவர் இந்த அரசாங்கத்தைக் கேட்காமல் பேசியிருந்தால் அதைப்பற்றி இந்த அரசாங்கம் பரிசிலனை செய்து ஒரு முடிவுக்கு வருமா?

MR. SPEAKER : இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எப்படி எழும்?

THE HON. SRI P. KAKKAN : அதைப்பற்றி எங்களுக்குத் தெரியாது. அவர் சொல்லியபடி செயல்பட முடியாது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

MR. SPEAKER : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENTS

(1) THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1961.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in the Legislative Assembly of the Madras Agricultural Incomee-tax (Amendment) Bill, 1961.



4th March 1961]

## III.—GOVERNMENT BILL.

### THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1961.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1961. 9-30 a.m.

MR. SPEAKER : Motion moved—

"That leave be granted to introduce the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1961 ".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1961-62.

MR. SPEAKER : இன்றையதினம் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் பேசப்போகிறார்கள். அரை மணி நேரம் அவருக்காக ஒதுக்கியிருக்கிறேன். மொத்தம் 16 அங்கத்தினர்கள் பேசுவதற்கு இதுவரைக்கும் பெயர் கொடுத்திருக்கிறார்கள். பத்து மணியில் இருந்து 1½ மணிவரையில் உள்ள நேரத்தில் அவர்கள் பேசவேண்டும். ஆகவே ஒரு அங்கத்தினருக்கு 10 நிமிஷம் என்று ஒதுக்குகிறேன். இன்னும் அதிக அங்கத்தினர்கள் பேசப் பெயர் கொடுத்தால் 5 நிமிஷமாக அதைக் குறைக்க நேரிடும். தயவுசெய்து என்னிடம் யாரும் கோபித்துக் கொள்ளக்கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

* SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன் அறிக்கையில் வெகு விளக்கமாக எல்லோரும் எளிதில் புரிந்துகொள்ளும் நிலைமையில் விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதில் உள்ள எல்லா விவரங்களையும் வாசித்துத் தெரிந்துகொள்ளவே மனசு செல்கிறது. இந்த மாதிரியான ஒரு விளக்கவுரை, அவர் மேல்நாடுகளுக்குச் சென்று வந்தபின் தம் அநுபவங்களை பத்திரிகையில் எழுதி வருகிறார். அரசியல் ஞானக் கண்ணோட்டத்துடன் அந்தக் கட்டுரைகளை எவ்வளவு தெளிவாக, விளக்கமாக எழுதி வருகிறாரோ அதே ரீதியில் இந்த அறிக்கையும் அமைந்திருப்பதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

(Sri S. Ranganatha Mudaliar in the Chair.)

பொதுவாக இந்த பட்ஜெட்டானது சர்வசாதாரணமானது. சர்வசாதாரணம் என்று சொன்னால் பண வருவாய்க்கு ஏற்ற மாதிரியான செலவினங்களைச் சரிக்கட்டிக் கொடுக்கப்பட்ட பட்ஜெட்தான். வருவாயை அதிகப்படுத்த எவ்வித நடவடிக்கையும் இல்லை. ஆனால் ஒரு விசேஷம் 11-வது வகுப்புவரையில் ஏழை பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி அளிக்க வசதி செய்திருப்பதுதான். ஆனால் இதில் ஏழைப் பிள்ளைகள் யார் என்று நிர்ணயிப்பதில்தான் கஷ்டம் இருக்கிறது. சுமார் 100 ரூபாய் வருமானம் உள்ளவர்கள்,

[Sri S. Pakkirisami Pillai] [4th March 1961]

அதற்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இந்தச் சலுகை என்றால் கொஞ்சம் அதற்குமேல் வருமானம் என்றால் அவர்களுக்குக் கிடையாது என்பது சரியாக இருக்காது. 1939-ம் வருஷத்தில் 26 ரூபாய் சம்பளம் வாங்கியவர்கள் என்றால் இன்றைக்கு 100 ரூபாய் வாங்குபவர்களுக்குச் சமம். நூறு ரூபாய் சம்பளம் என்பது எந்தவகையிலும் சிறப்பானது இல்லை. அதுவும் இரண்டு, மூன்று பிள்ளைகள் அவர்களுக்கு இருந்துவிட்டால் அவர்களுடைய குழந்தைகளுக்கு சர்க்கார் உதவி இல்லாமல் எப்படி கல்வி வசதி அளிக்க முடியும்? அவர்கள் குடும்பம் நடத்துவதே மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆகவே இப்போதுள்ள முறைப்படி 11-வது வகுப்புவரை இலவசக் கல்வி பெறும் மாணவர்கள் எண்ணிக்கையில் குறைவாகவேதான் இருப்பார்கள். இதனால் உண்மையிலேயே ஏழை மாணவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டுமென்று விரும்பினால் குறைந்தபட்சம் அந்த வருமான வரம்பு 150 ரூபாயாகவாவது உயர்த்தப்படவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவுப் பொருள்களின் விலையும் இப்போது ஏறிக்கொண்டே போகிறது. அதைத் தடுப்பதற்கு எந்த முயற்சியும் அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டார்கள் என்று நாம் சொல்ல முடியவில்லை. நம் ராஜ்யத்தில் மாத்திரம் இல்லை. இதர ராஜ்யங்களிலும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இதனால் விலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போகிறது. இப்படி விலை ஏறிக்கொண்டே போகும்போது நாம் தொழிலாளர்களுக்கு சம்பளத்தோடு பஞ்சப்படியும் வாழ்க்கைப் புள்ளி விவரக் கணக்குபடி அதிகமாகக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். சமீபத்திலே டிசெம்பர் மாதத்தில் வாழ்க்கைப் புள்ளி 488 ஆக உயர்ந்திருந்தது. இதனால் இதற்கேற்ப பஞ்சப்படியை சுமார் 2 லட்சம் தொழிலாளர்கள் பெற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனால் திடீரென்று இந்தப் புள்ளி 18 குறைந்துவிட்டதாக ஜனவரியில் அதிகாரிகள் அறிவித்தார்கள். இதனால் சுமார், 4, 4½ ரூபாய்வரையில் ஒவ்வொரு தொழிலாளருடைய பஞ்சப்படியும் குறைந்தது. அந்த ஒரு ரூபாயை வாங்க தொழிலாளர்கள் கட்டுப்பாட்டை உண்டாக்கி வேலை நிறுத்தஞ்செய்யப் போவதாக பயமுறுத்தி வாங்கும் நிலைமையில் இருக்கிறது. ஒரு ரூபாய் கூட்டிக்கொடுப்பது என்றால் எந்த முதலாளியும் சம்மதிப்பதில்லை. ஆனால் இப்படி திடீரென்று அதிகாரிகள் வாழ்க்கைப் புள்ளி குறைந்ததாகக் கணக்குக் காட்டி அவர்கள் சம்பளம் 4 ரூபாய்க்கு மேல் குறைய வழி செய்துவிட்டதானது—முதலாளிகள் இதில் ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறார்கள். முதலாளிகளுக்கு அனுகூலம் செய்வதற்காகவே அரசாங்க டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள்கூட இப்படிச் சூழ்ச்சி செய்கிறார்கள். இல்லாவிட்டால் விலைவாசிகள் உயர்ந்த நிலையிலேயே இருக்கும்போது வாழ்க்கைப் புள்ளி எப்படி 18-க்கு மேல் திடீரென குறைய முடியும் என்று எல்லோரும் சந்தேகப்படுகிறார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN: அப்போதே அதுபற்றி கேள்வி போட்டிருப்பதுதானே.



4th March 1961]

SRI S. PAKKIRISAMI PILLAI: (Statistical) ஸ்டாடிஸ்டிகல் டிபார்ட்மென்டில் இருந்து இரண்டு குமாஸ்தாக்கள் குறிப்பிட்ட சில கடைகளைப் பார்த்து மிளகாய் விலை, புளி விலை முதலியவைகளை விசாரித்து கணக்குப்போட்டு மாதாமாதம் கஜட்டில் பதிவு செய்வது வழக்கம். இம்மாதிரி சிறுக சிறுக பல அரசியல் காரணமாக வாழ்க்கை புள்ளி விவரம் உயர்ந்துக்கொண்டுபோவதை நாம் பார்க்கிறோம். உயர்ந்துபோனபின் சாதாரணமாக குறைவது கிடையாது. ஜனவரி மாதத்தில் 18 புள்ளி குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். முதலாளிகளுக்குச் சாதகமாக அதிகமான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்தில்தான் கனம் நிதி அமைச்சர் அவர்களும் திடீர் என்று விறகு, எண்ணெ கடைகளையும் பார்வை செய்திருக்கிறார். அவர் பார்வையிட்ட நாளில் இருந்து இந்த நாள்வரையிலும் விறகின் விலையும், எண்ணெ விலையும் ஏறிக்கொண்டுதான் போகிறது. ஒன்றும் குறைந்தவிடவில்லை. 18 புள்ளி குறைவு என்று சொல்வதற்கு எந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதேமாதிரியான நிலைமை மேல் நாடுகளிலும் இருந்துக்கொண்டிருக்கிறது. ஆஸ்த்ரேலியா போன்ற நாடுகளில் வாழ்க்கை புள்ளி விவரம் உயர உயர அதற்கேற்ப பஞ்சப்படி கொடுக்கும் திட்டம் அங்கேயும் இருக்கிறது. மேல்நாடுகளில் பொறுப்புள்ள தொழிற்சங்கங்கள் கூடி விலை விவரத்தைத் தயார் செய்து புள்ளி விவரங்களைத் தயாரிக்கின்றன. இதனால் முதலாளிகளுக்கும் சந்தேகம் கிடையாது. ஆனால் நம் நாட்டில் சாதாரண குமாஸ்தாக்கள் கணித்துக்கொண்டு வருகிறார்கள். அதை மாற்றுவதற்கு மேல் அதிகாரிகளுக்கு அதிகாரம் இருக்கிறது. இங்கும் இதற்கு ஒரு நீதிபதியை ஏற்பாடு செய்யவேண்டும். தொழிலாளர்களுக்கும் டிபார்ட்மெண்டின்மீது நம்பிக்கை ஏற்படும். ஸ்ரீ ராஜாஜி அவர்கள் முதல் மந்திரியாக இருக்கும்போது இந்தமாதிரி புகார் வந்தது. டிபார்ட்மெண்ட் அதிகாரியைக் கூப்பிட்டு அவர்கள் எச்சரிக்கை செய்தார்கள். மறுமாதம் முதல்கொண்டு புள்ளி விவரம் சரியாகக் கிடைத்துக்கொண்டு வந்தது. இந்த நிலைமையில் 18 புள்ளி வளர்ச்சி அடைந்ததற்கு காரணம் என்ன என்று தெரிவிக்கும்படியான பொறுப்பில் இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் நீதிபதியை அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம் நாட்டில் இதர ராஜ்யங்களில் வீடுகள் கட்டி வசதிகள் அதிகமாக செய்யப்பட்டு இருக்கின்றன. நம் ராஜ்யத்தில் வீடுகட்டும் திட்டம் ஆரம்பித்த பிறகு நிலத்தின் விலை அதிகமாகிவிட்டது. கட்டட மனைகளின் விலை அதிகமாக உயர்ந்துக்கொண்டே போகிறது. மொத்தமாக பணம் கொடுத்து வாங்கக்கூடிய ஸ்தாபனம்தான் வீடுகட்டும்படியான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. தொழிலாளிகளுக்கு வீடுகட்டுவதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து உதவி கிடைத்தும் சில முதலாளிகள் வீடுகள் கட்டிக்கொடுக்காமலேயே இருந்துக்கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் ஸ்தாபனத்திற்கு இது மாதிரி மான்யம் கிடைத்தும், கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருந்தும், வீடுகள் கட்டும்படியான நிலைமையில் இல்லை. இந்த நிலைமையிலே

[Sri S. Pakkirisami Pillai] [4th March 1961

அரசாங்கம் குடிசைப் பிரதேசங்களை சீர்த்திருத்திக்கொள்வதற்கு திட்டம் போட்டிருக்கிறது. ஆனால் ஒரு பிரத்தியேக குடிசைப் பிரதேசம்கூட திருத்தப்படவில்லை—அரசாங்கத்தாராலும், கார்ப்பொரேஷனாலும் முடியவில்லை. ஏனென்றால் நிறைய கஷ்டம் இருக்கிறது. குடிசைப் பிரதேசங்களில் தொழிலாளர்கள் வீடுகள் கட்டுவதற்குண்டான நிலைமையில் வசதிகள் இல்லாது இருக்கின்றன. கனம் ஸ்ரீ ஆர். வெங்கடராமன் சொன்னமாதிரி 100 ரூபாய்க்குமேல் வருமானம் பெறக்கூடிய தொழிலாளர் குடும்பங்கள் இருந்து வருகின்றன. மிகச் சிறிய வீடாக கட்டிக்கொள்ளவேண்டுமானால் கூட வசதிகள் கிடையாது. சாதாரணமாக இண்டஸ்ட்ரியல் ஹவுசிங் ஸ்கீம்லே மத்திய அரசாங்கம் மான்யம் கொடுப்பதன் மூலமாக வசதிகள் செய்து வருகிறது. அந்தமாதிரி திட்டத்தின் மூலமாக கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி குடிசைப் பிரதேசங்களில் வாழும் மக்களும் சொந்த வீடுகள் கட்டும்படியான சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுக்குண்டான இன்ஷூரன்ஸ் திட்டம் தமிழ்நாட்டில் பல இடங்களில் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்ஷூரன்ஸ் திட்டம் தொழிலாளர்களுக்கென்று அவர்கள் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றப்படுவதற்காக என்று சொல்லி அவர்களிடமிருந்து பணம் வசூலிக்கப்படுகிறது. இந்த இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனில் பணம் நிறைய சேர்க்கப்பட்டிருக்கிறது. செலவு கொஞ்சம்தான் இருக்கிறது. பணம் நிறைய இருக்கும்போது தொழிலாளர்களுக்கு சரியான மருந்து கொடுக்கும்படி செய்யவேண்டும். இன்ஷூரன்ஸ் டிபார்ட்மெண்டு இலாகா சாதாரணமாக ஒரு தொழிலாளர்களுக்கு லீவு கொடுக்கும்படியான ஸ்தாபனமாக இருந்துக்கொண்டுதான் இருக்கிறதே தவிர, கொஞ்சம் கடுமையான நோய்களை குணமாக்கும் நிலைமையில் உயர்தர மருந்துகள் கொடுக்கப்படுகிறதில்லை.

உயர்தர மருந்துகள் வாங்குகிறார்கள், விநியோகிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அங்கு போய் பார்த்தால், சாதாரண லோக்கல் பண்ட் டிஸ்பன்ஸரி அல்லது கார்ப்பரேஷன் டிஸ்பன்ஸரிகளில் உள்ள மருந்துகள், மலிவான மருந்துகள், எப்படி கொடுக்கப்படுகிறதோ அந்த நிலைதான் அங்கும் இருந்து கொண்டிருக்கிறது. ஆரோக்கியத்தை கொடுக்கும் முறையில் இந்த இன்ஷூரன்ஸ் டிஸ்பன்ஸரிகள் இல்லை. லீவ் கொடுக்கும் ஸ்தாபனமாகத்தான் இது இருந்துகொண்டு வருகிறது. இவைகளை போதுமான அளவு நன்கு ஸூப்பரவைஸ் செய்து கட்டுத்திட்டத்திற்கு கொண்டு வருவதற்கு ஆள் இல்லை. டயரக்டர்ஸ், மெடிகல் ஆபீஸர்கள் இவர்கள் எல்லாம் ஆபீஸ்களில் இருந்து கொண்டு வேலை செய்கிறார்களே தவிர சுற்றி வந்து பார்ப்பதில்லை. அடுத்தபடியாக, நிதி அமைச்சர் அவர்கள் மேல்நாடுகளுக்கு சென்றுவிட்டு வந்த பிற்பாடு அங்கு அரசாங்க அதிகாரிகள் அதிகாலையில் போய் தங்கள் ஆபீஸ் காரியங்களை பார்க்கிறார்கள் என்று தெரிந்துகொண்டு அம்மாதிரியான ஒரு திட்டத்தை நம்



4th March 1961] [Sri S. Pakkirisami Pillai]

ராஜ்யத்திலும் ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இங்கு 8½ அல்லது 9 மணிக்கு ஆபீஸுக்கு வரும் நிலையில் அரசாங்க சிப்பந்திகள் இருக்கிறார்களா? மேல்நாடுகளில் உள்ள சூழ்நிலை வேறு. அவர்களுக்கெல்லாம் வீடுகள் ஆபீஸ் அருகாமையில் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு நல்ல வாகன வசதிகள் இருக்கின்றன. ஆனால் இங்கோ வில்லிவாக்கம், அரக்கோணம், திருவள்ளூர், பொன்னேரி, செங்கல்பட்டு போன்ற இடங்களிலிருந்து, தொலைவிலிருந்து வந்து உத்தியோகம் பார்க்கிறார்கள். காலைக் கடன்களை முடித்துவிட்டு வரும்போது குறைந்தது 10 மணியாகத்தான் செய்யும். ஆகவே, அதிகாலையில் ஆபீஸ்கள் ஆரம்பிக்கும் திட்டம், மற்ற சூழ்நிலைகளை சரியானபடி ஏற்படுத்தினால் தவிர சாத்தியமாகாது. அதுவும் பட்டணத்தில் சாத்தியமாகாது. கிராமங்களில் சாத்தியமாகுமோ இல்லையோ அது வேறு விஷயம். பட்டணத்தில் மிகவும் கஷ்டம் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN: தலைவர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தை நிதானமாக ஆனால் தைரியமாக சமர்ப்பித்ததற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். இதை தேர்தல் கால பட்ஜெட் என்று எதிர்கட்சி நண்பர்கள் பேசி தங்கள் பேச்சுக்களை தேர்தல் கால பேச்சைப் போல் விஸ்தாரமாக பேசியதைக்கேட்டு நான் ஓரளவில் சந்தோஷப்பட்டேன். ஏனெனில் அதை சீக்கிரத்தில் ஆரம்பிப்பது அவர்கள் கொள்கையானால் அது எல்லோருக்கும் நல்லதுதானே. அடுத்தபடியாக, சில பிரச்னைகள்மீது எனக்குத் தெரிந்த சில ஆலோசனைகளைக் கூறிவிட்டு முடித்துக்கொள்கிறேன். முதலாவதாக, விவசாயம். நீர்பாசனத் திட்டங்கள் உள்ள இடங்களில் தண்ணீர் சேதமாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதற்காக இப்பொழுது கால்வாய்கள் செப்பனிட்டு வருவதைப் பார்க்கிறோம். கன்னடியன்கால்வாயை எடுத்துக்கொண்டால், அது அம்பாசமுத்திரம் தாலுகாவில் இருக்கிறது. நான் அங்கு அடிக்கடி பிரயாணம் செய்வதால் எனக்கு நன்கு தெரியும். அங்கு தண்ணீர் பல இடங்களில் நதி போல் ஓடுகிறது. சில இடங்களில் வாய்க்கால்களாக இருக்கிறது. தண்ணீரை சேதமடையும்படி விடாது எங்கெங்கு அந்தத் தண்ணீரை உபயோகித்து பாசனத்திற்கு கொடுக்க முடியுமோ அப்படிக் கொடுப்பதற்குவேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடனா நதி நீர்த்தேக்கம் பற்றி பேச்சு நடப்பது இப்போது அப்போதல்ல. திருநெல்வேலி கஸெட்டீயரில் 10,000 ஏக்கர் ஸ்டபிலைஸ் செய்து புதிதாக கொடுக்கமுடியும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு அண்டை நாடுகளுடன் பேச்சு வார்த்தையோ அல்லது ஒப்பந்தமோ செய்யவேண்டிய அவசியமில்லை. அங்கு நெல் விளையும் இடத்தில் ஒரு போகம் கடலை போடுவதைப் பார்க்கும் போது மனதிற்கு மிகவும் சங்கடமாகயிருக்கிறது. அது, முதல் தரமான விவசாய இடம். ஆகவே, சிறிய சிறிய அணைகளை சரி செய்து அங்கு தண்ணீர் சேதமாகாமல் பார்த்துக்கொள்ள

[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அங்கு சராசரி ஏக்கர் ஒன்றுக்கு 4,000 பவுண்ட் விளையும். அடுத்தபடியாக கொடவனாறு பற்றி ஒரு வார்த்தை. போன தடவை இந்த சபையில் எதிர்கட்சி நண்பர் ஒருவர் தன்னை பாவி என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. புண்ணியவாளன் என்றுதான் சொல்வேன். அங்கு ஏற்கனவே ஒரு நீர்த்தேக்கம் முடியும் தருவாயில் இருக்கிறது, காமராஜசாகரம். வேடசெந்தூர், திருச்சி-கரூர் தொகுதிக்கு தண்ணீர் கொடுக்கும் திட்டம் பற்றி தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பாவி இருப்பதால் என் தொகுதிக்கு தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் தான் ராஜிநாமா செய்துவிடுகிறேன் என்று எதிர்கட்சி நண்பர் சொன்னார். அவரும் அவரது கட்சியும் இந்த இடத்தில் காங்கிரஸ்க்கு போட்டியின்றி விட்டுக் கொடுக்கத் தயாரா? ஒரு நீர்தேக்கம் தவிர இரண்டாவதற்கு சாத்தியப்படாது என்று சொன்னால் நம் ஊர் என்ஜினீயர்கள் பின் எதற்காக இருக்கிறார்கள் என்று குதர்க்கம் பேசுகிறார்கள். அடுத்தபடியாக, தொழில் துறையில் நம் ராஜ்யம் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. துணிச்சலோடு திட்டங்கள் நடத்த வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் மெட்ராஸிலிருந்து அம்மை, காலரா இவைகளை அடியோடு ஒழித்துக் கட்டி விட்டோம் என்று நினைத்தது போக இன்று சின்ன அம்மை, பெரிய அம்மை, டைபாய்ட் இவைகள் எக்காலத்திலும் இருந்து கொண்டிருக்கிறது. கிண்டி, என்னூர், அம்பத்தூர், போன்ற இடங்களில் பெரிய பெரிய தொழிற்சாலைகளை கட்டிக்கொண்டுபோனால் தொழில் ஒருயிடத்தில் குவிவது. மட்டுமல்ல, அதனால் ஏற்படக்கூடிய பிரச்னைகள் இப்போதிருப்பதைவிட பன்மடங்கு பெருகும் எதிர்காலத்தில். பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் இருக்கும் இட நெருக்கடியை மனதில் கொண்டு ரெயில் வசதி, இதர வசதிகள் இவைகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கெல்லாம் இத்தொழில்களை நிறுவ சர்க்கார் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக தொழில் பேட்டைகளை கூட்டுறவு இயக்கங்கள் ஒன்றும் இல்லாத இடங்களில் அதிலும் எந்தவிதமான நீர்பாசன வசதியும் இல்லாத இடங்களில், வரண்ட இடங்களாகப் பார்த்து அந்த இடங்களில் தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தி கொடுப்பது நமது கடமையாகும். நீர்பாசன வசதியில்லாத இடங்களில் மின்சார வசதி அதிகமாக செய்துகொடுக்கலாம். கால்நடை வளர்ப்புக்கு அதிகமாக வசதி செய்துகொடுக்கவேண்டும். அதன் காரணமாக அந்த இடங்களில் பரவலாக சிறு சிறு தொழில் பேட்டைகள் ஏற்படவும், சர்வீஸ் செண்டர்கள் ஏற்படவும் டிரெயினிங்-கம்-ப்ரொடக்ஷன் செண்டர் ஏற்படவும் முடியும். விவசாயத்திற்கு நாம் முதலிடம் (டாப் பிரையாரிட்டி) கொடுப்பது போல் நீர்பாசன வசதி இல்லாத இடங்களுக்கு தொழில் பேட்டை அமைப்பதற்கும் முதலிடம் கொடுக்கவேண்டும்.



[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

அப்போதுதான் நாட்டில் தொழிற் வளர்ச்சி சீராக பெருக முடியும். ஆகவே தொழிற் பேட்டைகள் தொழிற் நிலையங்கள் மிகவும் பிற்பட்ட இடங்கள் என்று மட்டும் பார்க்காமல் வேறு எந்தவிதமான வசதியும் இல்லாத இடங்களாகப் பார்த்து அந்த இடங்களில் ஸ்தாபிக்கவேண்டும் என்பதை சர்க்காருக்கு மிகவும் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். கூட்டுறவு முறையில் தொழில்களை ஆரம்பிக்கவேண்டும் என்று சொல்லும்போது ஒன்றிரண்டு விஷயங்களை கூற விரும்புகிறேன். சாதாரணமாக இதில் உத்யோகப்பற்றற்றவர்கள்தான் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதில் ஆசை கொள்ளையாக இருப்பதின் காரணமாக உத்யோகப்பற்றற்றவர்கள் பல வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் பலர் இதில் சேர்ந்து நடத்துகிறார்கள். இதில் முக்கியமாக கணக்குகள் தணிக்கை செய்து இரண்டு மூன்று வருடங்கள் ஆன பின்னால்தான் இதிலுள்ள குற்றங்களைப்பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கவேண்டியிருக்கிறது. இதன் காரணமாக உத்தியோகப் பற்றில்லாதவர்கள் இதில் வந்து சேர்ந்து ஒத்துழைப்பதற்கு முன்வர பயன்படுகிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலைமை இல்லாத வகையில் கூட்டுறவு துறையில் வழிவகை செய்யவேண்டும். உத்தியோகப் பற்றில்லாதவர்கள் இதில் அதிகமாக பங்கு கொள்ள வேண்டுமானால் கணக்கு தணிக்கையில் அதிக சுறுசுறுப்பும் வேகமும் இருக்க வேண்டியது அவசியம். அதற்கான முறையில் கூட்டுறவு இயக்கத்தை பலப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் ஒன்றிரண்டு விஷயங்களை கூற விரும்புகிறேன். ஜிப்சம், சுண்ணாம்பு போன்றவைகள் கிழக்கு ராமனாதபுரத்திலும் முதுகுளத்தூர் பகுதியிலும் கிடைத்துக்கொண்டிருக்கிறது. எங்கள் பக்கத்தில் பாளையம், கரூர் என்ற இடத்திலும் இம்மாதிரியான பொருட்கள் கிடைக்கிறது. இதை இப்பொழுது சிமண்டுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். இதை நான் ஆட்சேபிக்கவில்லை. இதே போன்று சிமெண்ட் பாக்டரியை நினைத்தவுடன் எந்த இடத்திலும் ஆரம்பித்து விட முடியாது என்றதும் எனக்குத் தெரியும். ஜிப்சம், சுண்ணாம்பு போன்ற பொருட்களை சிறிய அளவில் எப்படி உபயோகிக்க முடியும் என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து பார்த்து அதை முன்னோடியாக ஒன்றிரண்டுத்திட்டங்களையாவது ஆரம்பிக்க சர்க்கார் முயற்சி செய்யவேண்டும். இதை ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ், வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் என்ற இனத்தின் கீழோ அல்லது வேறு எந்தவிதமாவது சிறு கைத்தொழில் முறையில் இதை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கதர், கிராம கைத்தொழில் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது). எனக்கு இன்னும் சிறிது நேரம் அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காதி அல்லது கதரைப்பற்றி சொல்லும்போது கதரும் கைத்தறி என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். கதர் என்று தனியாக கிடையாது. கைத்தறியினால் ஒரு குடும்பம் பிழைக்கிறது என்று சொன்னால் கதரினால் ஐந்து முதல் பத்து

[4th March 1961

[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

குடும்பங்கள் வரை பிழைக்கின்றன. ஆகவே கதரை அல்லது கதர் தொழிலை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் உட்பட எல்லோரும் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு முக்கியமாக கைக்குத்தல் அரிசி விஷயத்தில் நாம் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். டாக்டர் என்ற முறையில் சொல்லுகிறேன், நாம் அனைவரும் கைக்குத்தல் அரிசியை உபயோகித்தால், இப்போது நாம் உற்பத்தி செய்யும் அளவிலிருந்து இன்னும் 10 சத விகிதம் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விஷயத்தைப்பற்றி நான் அடிக்கடி கூறியிருக்கிறேன். இவ்விதம் நாம் அனைவரும் கைக்குத்தல் அரிசி உபயோகித்து வந்தால் வைட்டமின் மருந்துகள், இன்ஜெக்ஷன் இவைகள் எல்லாம் உபயோகிக்க வேண்டிய தேவையே ஏற்படாது. ஆகவே இதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பெண்கள் குழந்தைகள் நலன் விஷயத்தில், இப்போது அதை பார்த்துக்கொள்வதற்கு பல டிப்பார்ட்மெண்டுகள் இருக்கின்றன. இதைப்பற்றி எவ்வளவோ விரிவாக பேச வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் பின்னால் பேசிக்கொள்கிறேன். சமூகத்தில் பெண்களுக்கு ஏதாவது தவறு நடந்துவிட்டால் அது புருஷர்களை ஒன்றுமே பாதிக்காது. அதனால் புருஷர்கள் எந்தவிதத்திலும் காயப்படுவது இல்லை. இழுக்கு எல்லாம் பெண்களுக்குத்தான் வந்துசேருகின்றது. இம்மாதிரிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு ஒரு டிபார்ட்மெண்ட் வேலை செய்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் சாதாரண ஏழை பெண்களை காப்பாற்றுவதற்கு வேறு ஒரு டிபார்ட்மெண்ட் வேலை செய்துகொண்டிருக்கிறது விஜிலன்ஸ் டிபார்ட்மெண்ட் ஸ்கீம், சர்டிபை ஸ்கூல் ஸ்கீம், ஆர்பனேஜ் ஸ்கீம் போன்ற பல ஸ்கீம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவ்விதம் இல்லாமல் குழந்தைகள், பெண்கள் விஷயத்தில் கைகால் இல்லாதவர்கள், செவிட்டு குழந்தைகள், கண் இல்லாத குழந்தைகள் இவர்கள் எல்லோரையும் காப்பாற்றுகின்ற முறையில் இந்த இலாக்காக்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து வாலன்டிரி இன்ஸ்டிட்யூஷன்-ஆக வருவதையும் ஒன்றாகச் சேர்த்து, பொருளாதார வகையில் நல்ல பலன் பெறக்கூடிய வகையில் எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் அமைக்க வேண்டும். அதோடு அவர்கள் சமூகத்திற்கு ஒரு பளு என்றில்லாத முறையில் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை கொண்டு வரவேண்டும். இதற்கான திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**SRI A. VEDARATHNAM :** கனம் தலைவர் அவர்களே, நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் இவ்வாண்டு சமர்ப்பித்திருக்கின்ற ஒரு பிரமாதமான வரவு-செலவுத் திட்டத்தை பாராட்டும் முகத்தான் சில வார்த்தைகள் இங்கே கூற விரும்புகிறேன். இதில் கண்டிருக்கின்ற நல்ல அம்சங்களை பாராட்டுவதற்கு மனம் இல்லாத போனாலும் குறை கூறாமல் இருக்கலாம். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள். உண்மையிலேயே இந்த [illegible]



4th March 1961] [Sri A. Vedarathnam]

பேரில் அவர்கள் அபிமானம் உள்ளவர்களாக இருந்தால் இதில் கண்டிருக்கின்ற நல்ல விஷயத்தை குறிப்பிட்டு விட்டு, விட்டுப் போன விஷயம் ஏதாவது இருந்தால் அவைகளையும் நல்ல முறையில் நாட்டின் அபிவிருத்தியை கருதி அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கலாம். இதற்கு மாறாக முக்கியமாக எதிர்க்கட்சி பிளாக்கிலிருக்கக்கூடிய கனம் கோவை அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இது தேர்தல் அறிக்கையாக இருக்கிறது என்று. ஆம், இது தேர்தல் அறிக்கை என்று சொல்லுவதில் தவறு இல்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஏனென்றால் ஜனநாயக அரசாங்கத்தில் தேர்தல்தான் முக்கியம். மக்களுக்கு கொடுத்திருக்கின்ற சுப்ரீம் பவர்தான் இந்த வாக்கு. அதை எந்தக் கட்சியினர் பெறுகின்றார்களோ, அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதுதான் ஜனநாயக தத்துவத்தில் இருக்கின்ற முக்கியமான அம்சம். ஆனால் கம்யூனிஸ்டுகளுக்கு இதைப் பற்றி கவலையில்லை. மக்களுடைய வாக்கு, மக்களுடைய அபிமானம் என்பது அவர்களுடைய கட்சியில் கனவில்கூட நினைத்துப் பார்க்கவேண்டிய அவசியமில்லை. அவர்களுடைய கட்சியில் இதைப்பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்றிருப்பதால்தான் அவர்கள் இதை வோட்டு பெறுவதற்காக தயாரிக்கப்பட்டிருக்கும் ஒரு அறிக்கை என்று கேலி செய்கின்றார்கள் என்று நினைக்கிறேன். ஜனநாயக ஆட்சியை விரும்பும் மக்களாலு ஆட்சியை அமைக்க மக்கள் எதை விரும்புகிறார்களோ, அதை செய்து கொடுப்பதற்கு என்னென்ன திட்டங்கள் போடப்படுகிறதோ, அவைகளை நிறைவேற்றுவதற்கு என்னென்ன முறைகள் கையாளப்படுகிறதோ அவைகள் எல்லாம் தேர்தலுக்காக செய்யும் சூழ்ச்சித்தான் என்று சொல்லுவார்களேயானால் அதை நான் வரவேற்கிறேன். அந்த மாதிரியான முயற்சியை எல்லோரும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இந்த அறிக்கையின்மீது பல குற்றச் சாட்டுகள் கூறப்பட்டன. இதற்கெல்லாம் பதில் சொல்லுவதற்கு நேரமில்லை, நேற்றிலிருந்து இன்று 5 நிமிட நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் பின்னால் சந்தர்ப்பம் வருகின்றபோது சொல்லிக்கொள்கிறேன்.

சிபாரிசின் பேரில்தான் எல்லா காரியங்களும் நடைபெறுகின்றன என்று குறிப்பிட்டதைப்பற்றி நான் ஒன்று நினைவூட்ட விரும்புகிறேன். நாங்கள் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலாவதாக மந்திரிசபை அமைத்த பின்னால்தான் இன்சினீயரிங் காலேஜ், மெடிக்கல் காலேஜ் போன்ற காலேஜ்களுக்கு அட்மிஷன் நடந்து கொண்டிருந்தது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அப்போது சபையிலே இந்த குற்றச்சாட்டு எடுத்துக் கூறப்பட்டது. அந்த காலேஜ்களுக்கு சிபாரிசு மூலமாகத்தான் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கப்படுகிறது என்பது அந்தக் குற்றச்சாட்டு. அப்போது அவையிலே எப்போதும் பேசாத கனம் முதலமைச்சர் அவர்களும், கனம் நிதி அமைச்சர் அவர்களும் எழுந்து சொன்னார்கள், மூன்று நாட்கள் அவகாசம் கொடுக்கிறோம், எங்கேயாவது ஒரு மாணவனுக்கு இந்த

[Sri A. Vedarathnam] [4th March 1961

மந்திரி சபையில் இருக்கக்கூடியவர்களில் யாராவது சிபாரிசு செய்
திருக்கிறார்கள் என்று ப்ரூவ் செய்தால் தக்க பரிகாரம் செய்கிறோம்
என்று. அந்த மூன்று நாட்கள் அவகாசத்தில் ஒரு கேஸ்கூட
அவர்களால் நிரூபிக்க முடியவில்லை என்ற காரணத்தினால் அதை
இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எல்லாம் சிபாரிசு என்று
சொல்லுவது, இப்படி பொதுப்படையாகக் கூறுவது நிரூபிக்க
முடியாத ஒரு குற்றச்சாட்டு. ஒரு அரசியல்வாதியை ஸ்பை
என்று சொன்னால் அது நிரூபிக்க முடியாது, ஒரு வியாபாரியை
பிளாக் மார்க்கெட்டியர் என்று சொன்னால் அது நிரூபிக்க முடி
யாது, ஒரு பெண்ணை கற்பற்றவள் என்று சொன்னால் அதை
நிரூபிக்க முடியாது, ஒரு உத்தியோகஸ்தரை கரப்ட் என்று
சொன்னால் அதை நிரூபிக்க முடியாது, வக்கீல்களை எதிர் கட்சி
யிடம் ஃபீஸ் வாங்குகின்றவர்கள் என்று சொன்னால் அதை
நிரூபிக்க முடியாது. இந்தமாதிரி குற்றச் சாட்டுகளைக் கூறி அர
சாங்கத்தின்மீது இப்படி தவறான எண்ணத்தை உண்டாக்க முயற்
சிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த
மாதிரி அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுகள், கனம் மந்திரி
அவர்கள் பதில் சொல்லமுடியாத குற்றச்சாட்டுகள்—நாங்கள்
பதில் சொல்ல வேண்டிய குற்றச்சாட்டுகள் பல இருந்தும், அவ
காசம் இல்லாத காரணத்தினால் இதை இத்தோடு நிறுத்தி
விட்டு மற்ற விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

நம் மாநிலம், அகில இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களை
எடுத்துக் கொண்டால், உண்மையில் விடுதலை பெற்ற பிறகு எந்த
அளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று பார்க்கும்போது,
இந்த அளவு முன்னேற்றம் அடைந்த நாடு வேறு இல்லை என்பதை
எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்பட யாரும் மறுக்க முடியாது
என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வித் துறையில் எடுத்துக்கொண்டால், சமீபத்திலே நடந்த
யூனெஸ்கோ மாநாட்டில், ஆசியா கண்டத்திலேயே நம் தமிழகத்
தில் செய்திருக்கின்ற அளவுக்கு கல்வி முன்னேற்றம் இன்று
வேறு எங்கும் இல்லை என்று சொன்னால் இதற்கு வேறு சான்று
கள் தேவையில்லை.

தொழில் துறையில் எடுத்துக்கொண்டால், நேற்று முன் தினம்
கம்பெனி சட்ட காரியதரிசி—மத்திய சர்க்கார் அலுவலர்—வந்தி
ருந்தார். அவர்கள் செய்த ரேடியோ பிரசங்கத்தைப் பலர் கேட்டி
ருக்கலாம், பத்திரிகைச் செய்திகள் பல வந்திருப்பதையும் கனம்
அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள். அதைப் பற்றிச் சிறிது
குறிப்பிட விரும்புகிறேன். பதினைந்து மாநிலங்களிலும் சேர்ந்து
5,000 தொழில் ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.
அவற்றுள் தென்மண்டலத்தில் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்
டுள்ளது 1,150. நம் தமிழகத்தில் இந்த 1,150-ல் 788 ஆரம்பிக்கப்பட்
டுள்ளன. (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்டராமன் : இது கம்பெனிகள்.)
நம் தமிழகத்தில் மாத்திரம் 788 ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றால்
பாக்கி இருக்கக்கூடிய கேரளம், கர்நாடகம், ஆந்திரம் இங்கு
எல்லாம் சேர்ந்து 362 தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று



[4th March 1961 [Sri A. Vedarathnam]

சொன்னால், நம் எண்ணிக்கையில் பாதியைவிடக் குறைவாக பாக்கி 3 மாகாணங்களிலும் இருக்கிறது என்று சொன்னால்—இதை நான் சொல்லவில்லை, மத்திய சர்க்கார் காரியதரிசி சொல்லுகிறார், அவர் ஒரு காங்கிரஸ்காரர் அல்ல—தென் நாடு தேய்கிறது, வட நாடு வாழ்கிறது என்று குற்றச் சாட்டைக் கூறுகின்றவர்கள் கண்களை விழித்து இந்தப் புள்ளி விவரத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**SRI A. V. P. ASAITHAMBI :** இந்த அளவு முன்னேற்றத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தான் காரணம்.

**THE HON. SRI R. VENKATARAMAN :** கனம் அங்கத்தினர் ஆசைத்தம்பி அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். முன்னேற்றம் இருக்கிறது என்று சொன்னால், அந்தப் பெருமையை அவர்கள் அடைவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

**SRI A. VEDARATHNAM :** உலகம் இப்படி இருப்பதே திராவிட முன்னேற்ற கழகத்தினால்தான் என்றுகூட சொல்லிக் கொள்ளலாம். அவர்களால்தான் எல்லாமே நடக்கிறது என்று கூறிக்கொள்ளலாம். அதைப்பற்றி ஆக்ஷேபனை இல்லை. கோழி கூவித்தான் பொழுது விடிகிறதென்று கோழி நினைத்துக் கொண்டதாம். இவர்கள் இருந்தாலும் இல்லையென்றாலும் இந்த முன்னேற்றம் இந்த மாநிலத்தில் ஏற்பட்டுத்தான் தீரும். இதை யாரும் நிறுத்திவிட முடியாது என்று நண்பர் ஆசைத்தம்பி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்கள் முட்டுக்கட்டை போடாமலிருந்தால் இதைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமான முன்னேற்றம் ஏற்படும் என்று அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**SRI A. GOVINDASAMY :** தேர் ஓட முட்டுக்கட்டை அவசியம்.

**SRI A. VEDARATHNAM :** அவசியமான இடத்தில் அவசியம் தான். அவசியமில்லா இடத்தில் முட்டுக்கட்டை போட்டு ஓட்டத்தையே தடை செய்து விடுகிறார்கள் என்பதுதான் விஷயம்.

இந்த வருஷத்திலே புதிதாக வரி போடவில்லை என்பதில் ரொம்பக் குறை சில பேர்களுக்கு. ஆடு நனைகிறது என்று ஓநாய் குந்தி அழுததாம் என்று ஒரு பழமொழி உண்டு. அந்த மாதிரி வரி போடவில்லை என்று ரொம்ப வருத்தம் பல பேர்களுக்கு. அதனால் இது தேர்தல் அறிக்கை என்று சொல்லுகிறார்கள். தேர்தல் வருகின்ற காரணத்தினால் வரி போடாமல் பற்றாக்குறை இருந்தபோதிலும் விட்டு விட்டார்கள் என்று கூறுகிறார்கள். நான் ஒரு விஷயத்தை நினைவூட்டுகிறேன். கடந்த ஆண்டு இந்தச் சபையில் நிதி அமைச்சர் அவர்கள் செய்த பிரசங்கத்தை கூர்ந்து கவனித்திருந்தால் தெரிந்திருக்கும். இனி இந்த மாநிலத்தில் புது வரி கிடையாது என்று கடந்த ஆண்டு குறிப்பிட்ட விஷயத்தை நினைவூட்ட விரும்புகிறேன். வரப்போகிற ஆண்டு தேர்தல் காரணத்தினால் வரி போடாமல் விட்டிருக்கிறார்கள் என்று

யாராவது நினைத்தால் அது தவறு. சென்ற வருஷமே அவர் முன் கூட்டி சொல்லியிருக்கிறார்—அப்போதே ப்ரிடிக்ட் செய்திருக்கிறார். அவர்கள் கூறியதை கனம் அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அந்த வரவு-செலவுத் திட்டம் இப்போது இருக்கிற சபைக்கு கடைசி வரவு-செலவுத் திட்டம் என்று குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினால் வரப்போகின்ற சபைக்கு இந்தச் சபை சில யோசனைகள் சொல்லவேண்டுமென்ற முறையில் நான் சில யோசனைகளைக் கூற விரும்புகிறேன். எனது தொகுதி சம்பந்தமாக பல விஷயங்கள் இருந்தபோதிலும் அதற்கு மான்ய விவாதங்கள் வரும்போது சந்தர்ப்பம் கிடைக்கும், அப்போது சொல்லிக் கொள்ளலாம் என்று விட்டுவிடுகிறேன். பதினாறு கோடி ரூபாய் வருமானம் இருந்து, 4 மாநிலங்கள் ஒன்றாக இருந்த காலத்தில் 10 மந்திரிகள் இருந்து நிர்வாகத்தை நடத்தி வந்தார்கள். அதைவிட 6 மடங்கு அதிகமாகி 90 கோடி ஆகி அடுத்த பட்ஜெட்டில் 100 கோடியானாலும் அதிசயமில்லை THE HON. SRI V. RAMAIAH : இப்போதே வந்தாயிற்று . இப்போதே வந்தாயிற்று என்று கனம் மின்சார அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். குறைந்த பட்சம் நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய 12 'ஜில்லாக்களுக்கும் ஒரு ஜில்லாவிற்கு ஒருவர் வீதம் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். The weaver knows where the shoes pinches என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். அந்த மாதிரி தஞ்சை ஜில்லாவிற்கு, சுதந்திரம் வந்த பிறகு இந்தத் தடவை தான் மந்திரி சபையிலே இடம் கிடைத்தது. இந்த மாதிரி இடம் கிடைக்காத காரணத்தினால் எங்களுக்கு கொஞ்சம் கஷ்டம் நேர்ந்திருக்கிறது என்ற விஷயத்தை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு மந்திரி என்ற முறையில் இருந்தால் அந்தந்த ஜில்லாவின் நிறைகுறைகளை அறிந்து வேண்டியதைச் செய்ய வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினால் நம் மாகாணத்திற்கு 12 பேர்கள் மந்திரிகள் இருப்பது தவறில்லை, அது ஒரு செலவில்லை என்ற விஷயத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு பார்லிமெண்டரி செக்ரெட்டரிகளும் வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். மத்திய சர்க்காரில் செகண்ட் லைன் ஆப் லீடர்ஷிப் இல்லாததால்தான் இப்போது கஷ்டம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் அரசியலில் பயிற்சி கொடுப்பதற்கு பார்லிமெண்டரி செக்ரட்டரிகள் அத்தியாவசியம் என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் மூலப்பொருள்கள் கிடையாது, அதனால்தான் பெரும் தொழில்கள் ஆரம்பிக்க முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. நூற்றைம்பது மைல் நீளத்திற்கு, ஒரு வித முயற்சியும் செலவும் இல்லாமல் 20 லட்சம் டன் உப்பு எங்கள் பகுதியில் தயார் செய்யப்படுகிறது. அதை வைத்து ஒரு கெமிக்கல் இண்டஸ்ட்ரி ஆரம்பித்தால் அது ஒரு பெரிய கனரகத் தொழிலாக அமையும். தங்கம் எடுப்பதில் ஒரு நாள் பூராவும் பாடுபட்டால் 4 அணா



கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். இந்த உப்பைக்கொண்டு பல தங்கத்தைக் காட்டிலும் மதிப்புள்ள ரசாயனப் பொருள்கள் எடுக்க முடியும் என்பது கனம் தொழில் அமைச்சருக்குத் தெரியும். இதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனுஷ்கோடி துறைமுகம் பயனற்றதாகப் போயிற்று என்று பத்திரிகைகளில் வந்திருந்தது எல்லோருக்கும் தெரியும். அதற்கு வேறு துறைமுகம் கண்டுபிடிக்கவேண்டும் (குறுக்கீடு) தற்காலிகமாக லாயக்கற்றதாக இருக்கிறது. இலங்கையின் வடபாகத்தில் தமிழர்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதியாகிய யாழ்ப்பாணத்திற்கு வெகு அருகாமையில் இருக்கக்கூடியது கோடிக்கரை. இதை மேஜர் போர்ட்டாகச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து இலங்கைக்கும், இந்தியாவுக்கும் போக்குவரத்தை உண்டாக்க கோடிக்கரையில் ஒரு துறைமுகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுகூட வேதாரண்யத்தில் யாழ்ப்பாணத் தெரு என்று ஒன்றிருக்கிறது. அதில்லாமல் யாழ்ப்பாணக் கோவில் ஒன்றிருக்கிறது. அந்தக் கோவிலுக்கு யாழ்ப்பாணத்தார்களே டிரஸ்டிகளாக இருந்து வருகிறார்கள். அவர்கள் இனத்தைச் சார்ந்தவரே குருக்களாகவும் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர்களுக்கும், இங்குள்ளவர்களுக்கும் கொள்வினை-கொடுப்பினை நடந்துவந்தது. அந்தத் தொடர்பு வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் ரத்து செய்யப்பட்டது. மீண்டும் அந்தத் தொடர்பை ஏற்படுத்த இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவேரித் தண்ணீர் அவ்வளவும் பயன்படுத்தப்படுகிறது என்ற ஒரு பெரிய தப்பான எண்ணத்திலே நம்முடைய அரசாங்கம் இருந்து வருகிறது. இன்னும் அதிக அளவுத் தண்ணீர் கடலுக்குள் போய்விழுந்து கொண்டுதான் இருக்கிறது. அப்படி எவ்வளவுத் தண்ணீர் போய் விழுகிறது என்ற கணக்குகளைப் பார்த்தால் பாசனத்திற்குத் தண்ணீர் கொடுக்க முடியும். அதற்கு அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நம்முடைய மாகாணத்தைப் பொருத்தவரையிலே மின்சாரம் முதன்மையான ஸ்தானம் வகிக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் என்னுடைய ஜில்லாவைப் பொருத்தவரையில், என்னுடைய ஜில்லாவிற்கு அடுத்துள்ள ஜில்லாவைச் சேர்ந்த நம்முடைய கனம் மின்சார அமைச்சர் அவர்கள் அவர்களுடைய ஜில்லாவிற்குக் காவேரித் தண்ணீர் கொடுக்கவில்லை என்ற காரணத்தினாலோ, என்னவோ அவ்வளவு அதிகம் கவனம் செலுத்தாமல் விடப்பட்டிருக்கிறது. எப்படி சந்திரனில் கிரகணம் பிடித்துக் கொள்கிறதோ, அப்படி மற்ற ஜில்லாக்கள் எல்லாம் வெளிச்சமாக்கப்பட்டு என்னுடைய ஜில்லா மட்டும் இருள் சூழ்ந்து இருக்கிறது. ஆகவே, இந்த இருளை போக்கி வெளிச்சத்தைக் கொடுக்க கனம் மின்சார அமைச்சர்

அவர்கள் எங்கள் ஜில்லாவிற்கும் இந்த வசதியைச் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : கனம் தலைவர் அவர்களே, 1961-62-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை நமது மாநில நிதி அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்தின் முன்னால் வைத்திருக்கிறார்கள். இதைப் பார்க்கின்றபோது, வியாபாரிகளுடைய வரவு செலவுத் திட்டம்தான் இது என்று என்னால் சொல்ல முடியும். வரவைச் சிறிது குறைத்துக் காண்பித்து, செலவை அதிகமாகக் காண்பித்தால்தான் ஒரு வியாபாரி தான் விற்பனை வரியைக் குறைத்துக் கொள்ள முடியும். அதைப்போலவே நமது நிதி அமைச்சர் அவர்களும் செலவை அதிகமாக்கி, வரவைக் குறைத்து சென்ற ஆண்டு வரவு செலவைத் திட்டத்தைக் காண்பித்து இருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு ரெவின்யூ ரெசிட்ஸ் 80.88 கோடி ரூபாய் வருமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் கிடைத்தது 89.29 கோடி ரூபாய். இதைப் பார்க்கின்றபோது 11 சதவிகிதம் அவர்கள் போட்ட திட்டத்தைவிட அதிகமாக ரெவின்யூ ரெசிட்ஸ் கிடைத்திருக்கிறது. இதைத்தான் ஏற்கனவே பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் சொல்லியிருக்கிறோம். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் கீழ்க்கண்டவாறு அடிக்கடி சொல்லப்பட்டு வந்திருக்கிறது.

"The Committee reiterates its recommendation made in previous years that the Departments should correctly estimate their requirements and work up to them with the closest degree of approximation making a periodical examination of the progress of expenditure during the closing months."

அப்படி சொல்லப்பட்டு இருந்தும் இந்த வரி விகிதம் 11 சதவிகிதம் இந்த வரவு செலவுத் திட்டத்தில் உயர்ந்திருக்கிறது. 3 சதவிகிதம் வேண்டுமானால் அதிகமாகப் போகலாமே ஒழிய, இப்படி 11 சதவிகிதம் என்று அதிகப்படக் கூடாது. சென்ற ஆண்டு 34 லட்சம் துண்டு விழுந்தது. இந்த ஆண்டு துண்டு விழுவதற்குப் பதிலாக 89 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைத்து. அதில்கூட மொத்தம் ஏறத்தாழ 123 லட்சம் ரூபாய் மீதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த வரவு செலவுத் திட்டத்தை நாம் சரியான முறையிலே தீட்டினோமேயானால், இன்னும் பல திட்டங்களை நாம் உண்மையிலேயே இந்த மாநிலத்திலுள்ள மக்களுக்கு தீட்டியிருக்கலாம். அதைப் போலவேதான் இந்த முதல் ஐந்தாண்டுத் திட்டத்தையும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்க்கின்றபோது டெபிசிட் அட்ஜெஸ்ட்மெண்ட் செய்யப் பட்டிருக்கிறதா என்று பார்த்தால், உண்மையிலேயே விவசாயத் துறையைப் பொருத்தவரையில் இது இடையவே கிடையாது. அதைப் போலவே நம்முடைய பெரும் கைத்தொழில்களை எடுத்துக் கொண்டாலும், அவைகளிலே ரிஜினல் டிஸ்பாரிடி காட்டப்படுகிறது. இந்த சட்ட மன்றத்திலே கனம் நிதி அமைச்சர் அவர்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட நகலிலே



இந்த ரிஜினல் டிஸ்பாரிடி காட்டப்பட்டிருப்பதாக அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். அதைப் போலவேதான், சென்னை தேசிய மாநில பொருளாதாரக் கமிட்டியின் அறிக்கையிலும் இந்தப் பாகுபாடு காட்டப்பட்டிருப்பது நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய நண்பர் சர்தார் ஏ. வேதரத்னம் அவர்கள் பேசும்போது, மற்ற மாகாணங்களைவிட நம் மாகாணம் எவ்வளவோ முன்னேறி இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் ஸ்ரீ. லோகநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள இந்த அறிக்கையைப் பார்ப்போமேயானால், பிற மாகணங்களுக்கும் நம்முடைய மாகாணத்திற்குமுள்ள உண்மையான வேறுபாடுகள் நன்கு தெரியும்.

இந்தியத் துணைக் கண்டத்தினுடைய பிற மாகாணங்களின் பர் காபிடா 261-ஆக இருக்கிறது. நம்முடைய மாகாணத்தினுடைய பர் காபிடா 227-ஆகத்தான் இருக்கிறது. இதைப் பார்க்கின்றபோது நிச்சயம் இந்த மாகாணத்தின்மீது ரீஜனல் டிஸ்பாரிடி காட்டப்பட்டு வருகிறது என்பது தெரியும். ஏதோ இந்த மாகாணத்தில் பெரும் கைத்தொழில்களை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாமே தவிர, உண்மையிலே நமக்கு ஒருவித பிரயோசனமும் கிடையாது. ஆகவே இவைகளையெல்லாம் பார்க்கின்றபோது, எல்லாப் பெரும் கைத்தொழில்களும் நம் மாகாணத்திற்கு இல்லை, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பிற மாகாணங்களுக்குத்தான் என்று சொல்ல முடியும். இதைக் குறித்து பிளானிங் கமிஷனிலேகூட பேசப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். அப்போது இது குறித்து முதன் முதலில் ஸ்ரீ. சாவான் அவர்கள்தான் பேசியதாகத் தெரிகிறது. இதைத் தொடர்ந்து நமது கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் பேசும்போது, பிரதம மந்திரி அவர்கள் எழுந்திருந்து, "இந்தக் கேள்வியை நீங்கள் எதை வைத்துக் கொண்டு கேட்கிறீர்கள்?" என்று கேட்க, அதைப்பற்றி பிரதம மந்திரியை எதிர்த்துப் பேச முடியாமல், நமது கைத்தொழில் அமைச்சர் உட்கார்ந்து விட்டார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தோம். உண்மையிலேயே நம்முடைய மாகாண தொழில் அமைச்சர் அவர்கள் நம்முடைய மாகாணம் ஒரு பிற்பட்ட மாகாணம், மற்ற மாகாணங்களைவிட இந்த மாகாணத்தில் பெரும் கைத்தொழில்கள் இல்லையென்று எடுத்துக்கூற முற்பட்டார் என்பதை இது விளக்குகிறது. ஆனால் அந்த இடத்தில் சென்று அதாவது டெல்லிக்குச் சென்று கேட்கக்கூடிய தைரியம், புள்ளி விவரங்களோடு விவாதிக்கக்கூடிய தைரியம் அவர்களிடத்திலே இல்லாத காரணத்தினால்தான், நம்முடைய மாகாணத்திற்கு பெரும் தொழில்கள் ஏற்படுத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, இந்த சட்ட மன்றத்தின் முன்னால் வைத்திருக்கக்கூடிய வரவு செலவுத் திட்டத்திலே "வரி இல்லை, வரி இல்லை" என்று சொல்லப்படுகிறது. ஆனால் மத்திய அரசாங்கத்திலே மறைமுகமான வரி ஏறத்தாழ 57 கோடி ரூபாய்க்கு போடப்பட்டிருக்கிறது. அதைப்போலவே நேரடியான வரியும் ஏழைகளை பாதிக்கக்கூடிய வகையில் 3 கோடி ரூபாய்க்கு போட்டிருக்கிறார்கள். நம்முடைய பட்ஜெட்டிலே வேண்டுமானால் வரியில்லை என்று

சொல்லாமே தவிர, மக்களுக்கு வரியே போடவில்லை என்று சொல்ல முடியாது. 6 நயா பைசா விற்றுக்கொண்டிருந்த தீப் பெட்டி இப்போது 7 நயா பைசாவாக விற்கிறது. அதைப் போலவே, காப்பி, டீ போன்ற பல பொருள்களை எடுத்துக் கொண்டால், சாதாரண பாமர மக்கள் அன்றாடம் உபயோகிக்கக் கூடிய பொருள்களின் மீதெல்லாம் வரிகளைப் போட்டிருக்கிறார்கள், இதை மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது வரி போடவில்லை என்று சொல்லலாம். அதற்குக் காரணம் இப்படி பட்ஜெட்டிலே இப்போது 235 லட்ச ரூபாய்க்கு துண்டு விழுந்திருக்கிறது என்று குறைத்துக் காண்பித்தால்தான், மத்திய அரசாங்கம் தரக்கூடிய மான்யத் தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது, தொடர்ந்து கிடைக்கும் என்பதற்காகத் தான். இப்படி கொடுக்கப்பட வேண்டியதை மத்திய சர்க்கார் நிறுத்தி வைத்திருப்பது இந்த மாகாணத்தைப் பொருத்த மட்டிலுமா அல்லது மற்ற மாகாணங்களிலுமா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

THE HON. SRI R. VENKATARAMAN: இது சம்பந்தப்பட்ட மட்டில் எல்லா ராஜ்யங்களுக்கும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

SRI S. M. ANNAMALAI: அப்படி மத்திய அரசாங்கம் நிறுத்தி வைத்துள்ள பணத்தை மேலும் தொடர்ந்து பெறவேண்டு மென்பதற்காகத்தான் இந்த வரவு செலவுத் திட்டம் இப்படித் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே, 11-வது வகுப்பு வரையிலே இலவசக் கல்வி வசதியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று இந்த சட்ட மன்றத்தில் பெருமையாகப் பேசப்பட்டு வந்தது. ஆனால் ஒதுக்கப்பட்டுள்ள 58 லட்ச ரூபாயைப் பார்க்கும்போது, உண்மையிலேயே இந்த 58 லட்ச ரூபாயை வைத்துக்கொண்டு எத்தனை பேர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப் போகிறார்கள் என்று பார்க்கும்போது, உண்மையான அடிப்படையில் இந்தத் தொகை ஒதுக்கப்படவில்லை என்று தான் சொல்லவேண்டும். ஏதோ கனம் முதன் மந்திரி அவர்கள் சொல்லிவிட்டார்களே என்பதற்காகத்தான், இதை இந்த வரவு செலவுத் திட்டத்திலே புகுத்தியிருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இது இந்தக் குறுகிய மனப்பான்மையுடன் செய்யப்பட்டதே தவிர, உண்மையிலேயே எல்லோருக்கும் 11-வது வரை இலவசக் கல்வி கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஏற்கனவேயே மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் பெறுபவர்களுக்கு இலவச

10-30 a.m. ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டு வருகிறது. ரூ. 100 என்றால் சாதாரணமாக ஒரு குமஸ்தாகூட தற்காலத்தில் ரூ. 100 பெற்றுக்கொண்டு வருகிறார். அவருக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 1,200 வருமானம் வருகிறது. ரூ. 1,200 வருமானத்தை வைத்துக்கொண்டு அவர்களுடைய பிள்ளைக்கு இலவச கல்வி உண்மையிலேயே பெற முடியாது. ஆகையினால் ரூ. 100 என்று இருப்பதை ரூ. 200 என்று உயர்த்தி அந்த அடிப்படையிலே இலவசக் கல்வி அளிக்க





முன்வரவேண்டும். ஆகவே இந்த ரூ. 53 லட்சத்தை மேலும் உயர்த்துவதற்கு சர்க்கார் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல நிர்வாகத் துறையிலே 50.8 சதவிகிதம் செலவிடப் படுகிறது என்று சொல்லப்படுகிறது. நம் மாநிலத்தில் வருவாயில் பாதிக்குமேல் நிர்வாகத் துறைக்காக செலவழிக்கப்படுகிறது. அதே சமயத்தில் நிர்வாகத்தை சரிவர இயங்குவதற்கு வேண்டிய அளவில் வைக்கவேண்டும். நம்முடைய மாநிலத்தில் ஒரு பழக்கம் இருந்துகொண்டு வருகிறது. சென்னையில் ஒரு அமைச்சர்கூட இல்லாமல் வெளியில் சுற்றுப்பிரயாணம் செய்யப்போய் விடுகிறார்கள். இந்தப் பழக்கத்தை நாம் எந்த மாநிலத்திலும் உண்மையாக பார்க்க முடியாது. தலைநகரத்தில் யாராவது ஒரு அமைச்சர் இருந்தாகவேண்டும். இருந்தால்தான் மக்களுடைய குறைகளை கேட்டு அறிய முடியும். ஒரு பத்திரிகையில் பார்த்தால் 'ஊரில் ஒரே ஒரு மந்திரி', இன்னொரு பத்திரிகையில் பார்த்தால் 'ஒரு மந்திரிகூட இல்லை' என்று போடப்பட்டிருக்கிறது. மக்கள் என்ன நினைப்பார்கள் இந்த அமைச்சர் அவையைப் பார்த்து? நிர்வாகத் துறை மேலும் மேலும் ஊழலாக இருந்து வருகிற காலத்தில் அமைச்சர்கள் சிலராவது நகரத்திலிருந்து நிர்வாகத் துறையை கவனிக்கவேண்டும். இல்லாவிட்டால் மேலும் நிர்வாகம் சீரழிந்து கொண்டுதான் வரும்.

சட்டசபைக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவு திட்டத்தின் கொள்கை என்னவென்று சொல்லவேண்டும். சென்ற ஆண்டு சொன்ன கொள்கையானது இந்த ஆண்டு கைவிடப் பட்டிருக்கிறதே? ஒன்று மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏதோ நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் மக்கள் சுழலில் சிக்கிக்கொண்டு இருந்தார்கள், சுழலில் சிக்கிக்கொண்டு இருந்தவர்களை தப்பிவித்துவிடப் போகிறோம், விலைவாசியை கட்டுப்படுத்த போகிறோம் என்று சொன்னார்களே? அந்தக் கொள்கை என்ன ஆயிற்று? ஏன் அந்தக் கொள்கையை கைவிட்டுவிட்டார்கள்? இந்த வரவு செலவு திட்டத்தில் அதைப்பற்றி குறிப்பிடப்பட வில்லை. விலைவாசி மேலும் மேலும் ஏறிக்கொண்டு போகிறது. விலைவாசியைக் குறித்து உங்களுடைய அபிப்பிராயம் என்ன? சேலம் இரும்புக் கனியை தோண்டி எடுக்கவேண்டுமென்றால், அதை பரிட்சார்த்தமாகப் பார்த்து அதற்குப் பிறகு செய்யப்படும் என்று சொல்லுகிறார்கள். ரயில்வே பாதைகள் சம்பந்தப்பட்டவரை 'இப்பொழுது மத்திய சர்க்கார் பட்ஜெட் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபொழுது நம்பிக்கை ஏற்படுகிறது,' என்று சொல்லுகிறார்கள். அணுசக்தி மின்சார நிலையம் பற்றிக் கேட்டால் 'நாங்கள் நம்பிக்கொண்டிருக்கிறோம்' யோசித்துக்கொண்டிருக் கிறோம்' என்று சொல்லுகிறார்கள். அதேபோல கனரக மின்சாரக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றி 'சர்வே' செய்யப்பட்டிருக்கிறது, பரிசீலனை செய்துகொண்டிருக் கிறோம்' என்று சொல்லப்படுகிறது. எதை எடுத்தாலும் 'நம்பிக் கொண்டிருக்கிறோம். முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்; பட் ஜெட்டை பார்த்துக்கொண்டிருக்கிறோம்' என்று சொல்லுவது தானா கொள்கை? சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு

செலவு திட்டத்தில் இதுதானு கொள்கை? இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூட்டுறவு பண்ணையைப் பற்றி வற்புறுத்திச் சொல்லி வந்தார்கள். இந்த மாநிலம் பூராவும் அதைப் பற்றி பெரிய புரட்சியாக இருந்துகொண்டிருந்தது. இப்பொழுது அந்த கூட்டுறவுப் பண்ணை முறை எங்கே போயிற்று? அதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் ஒன்றும் பேசவில்லை. அது பற்றி கொள்கை என்ன? எந்த அளவிற்கு திட்டம் போட்டிருக்கிறார்கள்? எந்த அளவிற்கு நிலங்களை கூட்டுறவுப் பண்ணையில் கொண்டுவரப்போகிறார்கள்? கூட்டுறவுப்பண்ணை முறை நடக்கப் போகிறதா? அல்லது ஏதோ ஒரு புரட்சி நடந்திருக்கிறது. அதற்கு பலத்த விரோதம் இருக்கிறது. இந்த மாநிலத்தில் அது வராது. கூட்டுறவுப் பண்ணையை நாங்கள் கைவிடப் போகிறோம் என்று சொல்லுகிறார்களா? அதுபற்றி கொள்கை விளக்கம் இந்த சட்டமன்றத்தில் தேவை. அதுபோல கனரக மின்சாரக் கருவிகள் செய்யக்கூடிய தொழிற்சாலை இந்த மாநிலத்திற்கு தேவை. பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பித்தால் தான் உண்மையிலேயே இந்த மாநிலத்தில் 'பெர்காபிடா இன்கம்' அதிகரிக்கும். கனரக மின்சாரக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு அனைத்தும் உண்மையிலேயே நம்முடைய மாநிலத்தில்; அதிலும் வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிறது என்று நான் கேள்விப்பட்டேன். அதை மேலும் வற்புறுத்திப் பெறவேண்டும். அதுபோல ரயில்வே பாதைகள் பற்றி பாராளுமன்றத்தில் நம்முடைய உறுப்பினர்கள் கட்சி பேதமின்றி பேசியிருக்கிறார்கள். ரயில்வே பாதைகள் மேலும் நம் மாநிலத்தில் அமைப்பதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அணுசக்தியை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும் நம் மாநிலத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது)

* SRI A. Y. S. PARISUTHA NADAR: கனம் அவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவு திட்டத்தை முழு மனதோடு ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கல்வி, விவசாயம், சுகாதாரம், கைத்தொழில்கள், இன்னும் பல துறைகளிலே நமது மகாணமானது முன்னேற்றம் அடைந்து கொண்டிருப்பதைப் பற்றி நாம் எல்லோருமே பெருமைப்படக்கூடிய ஒரு நிலையில் இருக்கிறோம். அதிலும் முக்கியமாக தஞ்சை ஜில்லாவில் விவசாயிகளுக்கு அநேக உதவிகள் செய்தபோதிலும்கூட, பயிர் பார்வைக்கு நன்றாக இருக்கிறது, ஆனால் நெல் கிடைப்பதோ கடைசியிலே குறைவாக இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கவர்னர்பெருமான் அவர்களும் முதல் அமைச்சர் அவர்களும் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே தானியங்கள் கிடைப்பது குறைந்து போனாலும்கூட, மற்ற பிரதேசங்களில் அதிகப்படியான தானியங்கள் கிடைத்து உற்பத்தி பெருகியிருக்கிறது என்று சொன்னார்கள். கடைசி முறையாக நாம் பார்க்கிறபொழுது அவ்விதமாக இல்லை. எதிர்பார்த்த அளவிற்கு ரொம்பவும் தானியங்கள்





குறைந்து விட்டன. இதற்கு முக்கியமான காரணங்களை கண்டுபிடிக்க முயற்சி செய்த பெரிய நிபுணர்களாக இருக்கக்கூடியவர்கள் கூட அதிலே ஏமாந்துபோய் விடுகிறார்கள். அப்படியிருக்கும் பொழுது சாதாரண விவசாயிகள் அதை எப்படி ஆராய்ச்சி செய்ய முடியும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த நிலைமையை உண்டாக்காமல் நல்ல முறையிலே தானியங்களின் உற்பத்தியை பெருக்குவதற்கு வேண்டிய வசதிகளை சர்க்கார் பொது மக்களுக்கு செய்துகொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நமது சென்னை ராஜ்யத்தில் மற்ற மகாணங்களைவிட பெரிய சாலைகளெல்லாம் நல்ல முறையில் வைக்கப்பட்டிருப்பதைக் குறித்து நாம் பெருமைப்படுகிறோம். ஆனால் கிராமங்களிலுள்ள சிறு ரோடுகளெல்லாம் நல்ல முறையில் வைக்கப்படவில்லை. ரொம்பவும் பழுதடைந்திருக்கிறது. தஞ்சை ஜில்லாவிலே கிழக்கு மேற்கிலே போகக்கூடிய ரோடுகளெல்லாம் பெரும்பாலும் 90 சதவிகிதம் ஆற்றங்கரையிலே இருந்துகொண்டிருக்கிறது. பி. டபிள்யூ. டி-யைக் கேட்டால் நீர்ப்பாசன திட்டங்களைச் கவனிப்பதுதான் எங்கள் வேலை, ரோடுகளை சரிப்படுத்துவதில் அவர்களுக்கு பங்கு இல்லை என்று சொல்லுகிறார்கள். ஜில்லா போர்டாரைக் கேட்டால் ஏதோ சிறிய தொகை பி. டபிள்யூ. டிபார்ட்மெண்டு கொடுக்கிறது. அது ஆயிரத்தில் ஒரு பங்குகூட போதாது என்று சொல்லுகிறார்கள். ஆகையினால் விவசாயப் பொது மக்களுக்கு தானியங்களை கிராமங்களிலிருந்து நகர்புறங்களுக்குக் கொண்டுவந்து விற்பதற்கு சாலை வசதி இல்லாமல் இருப்பதினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் விலைகூட மூட்டைக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் குறைவாகக் கிடைக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அதனால் சிறு விவசாயிகளுக்கு மிகவும் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த சாலைகளை உடனடியாக 'ஹைவேஸ் டிபார்ட்மெண்டிடம்' ஒப்படைத்து அவர்கள் இந்த ரோடுகளை செப்பனிட்டு நல்ல முறையில் பராமரித்து வைத்துக் கொள்ளவேண்டும் என்ற என்னுடைய கருத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மானுங்கோரை, திருச்சோற்றுத்துறை என்று இரண்டு கிராமங்கள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. இந்த இரண்டு பஞ்சாயத்திற்கும் நடுவிலே உள்ள ஒரு சிறிய பாலம் 10,000 அல்லது 12,000 ரூபாய்க்குள் கட்டி முடிக்கலாம். லோகல் டெவலப்மெண்ட் ஸ்கீமில் கட்டி முடிக்கலாம் என்றால் அங்குள்ள மக்கள் மிகவும் ஏழைகள். ரூ. 2,000 கூட மக்களிடமிருந்து வசூல் செய்ய முடியாத ஒரு கிராமமாக இருக்கிறது அது. ஆகையினால் இதை 'ஹைவேஸ் டிபார்ட்மெண்டு' எடுத்துக்கொண்டு முக்கியமாக சென்ட்ரல் ரோடு பண்டு என்று இருக்கிறதே அந்தத் தொகையிலிருந்தாவது இதைச் செய்து முடிக்கவேண்டுமென்று அரசாங்கத்தை தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மேட்டூர் ஹைட்ரோ எலக்டிரிக் டன்னல் ஸ்கீம் என்பதைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மின்சாரத்துறையில் அதிகமாக அபிவிருத்தி ஏற்பட்டிருப்பது பற்றி

சந்தோஷப்படுகிறேன். அதுபற்றி ஒரு சிறிய விளக்கம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். 'ஆப் ஸீஸனில்', அதாவது நீர்ப்பாசனம் இல்லாமல் கோடை காலமாக இருக்கும்பொழுது அந்த 'டர்பைன்கள்' எல்லாம் வேலை செய்யாவிட்டால், ஆற்றில் இருந்து வரக்கூடிய தண்ணீர் நின்று விடும். தஞ்சை நகரிலும். தஞ்சைக்கு கீழ்ப்பகுதியில் உள்ள நகரத்திலும்கூட குடி தண்ணீர் வசதி இல்லாமல் போய்விடுகிறது. ஆற்றிலே கீழ் ஊற்று இல்லாத காரணத்தினால் 'சர்பேஸ் வாடரைக்' கொண்டுதான் குடி தண்ணீர் வசதி ஏற்படுத்த முடியும்.

அடுத்தபடியாக, கோடைகாலத்திலே, மேட்டூர் தேக்கத்திலே தண்ணீரை அடைத்து விடுவார்களேயானால், 5 அல்லது 6 மாதங்களுக்கு பல நகரங்களில் குடி தண்ணீர் வசதி பாதிக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சை நகரில் தண்ணீர் விஸ்தரிப்புத் திட்டம் நடந்துகொண்டு வருகிறது. இன்னும் 2 அல்லது 3 லட்சம் செலவு செய்தால், மேலும் இடித்துப் புதிதாகக் கட்டுவதற்குப் பதிலாக, கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் வாய்ப்பை ஏற்படுத்தலாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவிலே நாகப்பட்டிணத்திலே ஒரு துறைமுகம் இருக்கிறது. நான் ஒன்றும் பெரிய திட்டத்தைச் சொல்லவில்லை. கப்பலிலிருந்து பிரயாணிகள் வந்தால் ஒரு நாளோ, இரண்டு நாட்களோ தங்குவதற்குக் கூட வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு ரெஸ்ட் ஹவுஸ் கட்டி இந்தப் பிரயாணிகளுக்கு வேண்டிய வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது அவர்கள் தங்குவதற்கு நிழல் வசதி கூட இல்லை. பாத்ரூம் வசதியும் இல்லை. ஆகவே, ஒரு ரெஸ்ட் ஹவுஸ் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் வேதரத்னம் பிள்ளை அவர்கள் சொன்ன கருத்தை நானும் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். மின்சார சக்தி நமக்கு எவ்வளவோ குறைவாக இருந்துகொண்டிருக்கிறது. மற்ற ஜில்லாக்களைவிட தஞ்சை ஜில்லாவிலே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. தஞ்சை நகரைப் பொறுத்த வரையில் 500 அல்லது 600 சர்வீஸ் கனெக்ஷன்கள் கொடுக்காமல் இருப்பதனால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதிகப்படியாக மின்சார சக்தி கொடுக்க வேண்டும், மற்றும் விவசாயத்திற்கு வேண்டிய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை கொடுத்த தலைவருக்கு என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

* SRI T. KARIA GOUNDER : கனம் தற்காலிகத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு தமிழ் நாட்டின் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்ததற்காக எனது நன்றி அறிதலான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாடு என்று பெயரிட்ட பிறகு, இங்கே உள்ள நண்பர்கள்





இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்றுப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் எனது நண்பர் கோவிந்தசாமி அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தங்களுக்குத் தேவையானதைக் கொடுத்துவிட்டால், இன்னொன்று வேண்டுமென்று சொல்லுவார்கள். ஆகையால் இதற்கு ஒரு முடிவே இருக்காது என்றுதான் நான் எண்ணுகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆளும் கட்சியிலே இருக்கிற அங்கத்தினர்கள் மட்டும் போற்றவில்லை. இந்த மாகாணத்திலுள்ளவர்களும், வெளி மாகாணங்களிலுள்ளவர்களும் சென்னையைப் பாருங்கள் என்று சொல்லுகிற நிலை இருக்கும்பொழுது, இவர்கள் கண்ணுக்கு மட்டும் ஏன் இப்படித் தோன்றுகிறது என்பது ஆச்சரியமாக இருக்கிறது. இதை ஒரு தேர்தல் பிரசார வரவு செலவுத் திட்டம் என்று சொல்லுகிறார்கள். தேர்தல் பிரசாரம் என்று சொல்லும்பொழுது, எங்களுடைய நோக்கத்தை எடுத்துச் சொல்ல வேண்டியது ஆளும் கட்சியிலுள்ள எங்களுடைய முழுப் பொறுப்பு என்று சர்தார்ஜி சொன்னார்கள். என்னுடைய நண்பர்கள் திட்டங்கள் இல்லையென்று சொல்லுகிறார்கள். இன்னென்ன திட்டங்களைச் செய்யப் போகிறோம், இன்னென்ன திட்டங்களை வகுத்திருக்கிறோம் என்று அந்தத் திட்டங்களை வகுத்தபின்னர் நாங்கள் வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கிறோமே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. ஆகையினால் நண்பர்கள் இந்தமாதிரியான ஒரு எண்ணத்தை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி எல்லாம் சொல்லி பொது மக்களுடைய மனத்தைக் குழப்பி சர்க்கார் மேலே ஒரு கெட்ட எண்ணத்தை உண்டாக்காமல் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். அசெம்பிளியில் அதாவது Within the four walls of the Assembly என்னவேண்டுமானாலும் பேசலாமென்று இருந்தாலும், வெளியிலே ஆளுகிற கட்சியை அவதூறாகப் பேசாமல் இருக்கவேண்டுமென்பது என்னுடைய விருப்பம். ஏதோ கனம் முதலமைச்சர் அவர்கள் பொது மேடையிலே சொல்லிவிட்டார்கள், அதனால் எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுப்பதாக சுருக்கமாகச் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரையில் எங்கே பார்த்தாலும் சென்னையைப் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் மத்தியான உணவுத் திட்டம் கொண்டுவந்து, ஏழைப் பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடுகிறோமென்றால், பள்ளிக்கூடத்தை சாவடிச் சத்திரமாக ஆக்கிவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றி பொதுமக்கள் வருகிற தேர்தலிலே முடிவு சொல்லுவார்கள். பொருளாதாரத் துறையிலே பின்தங்கிய மக்களுக்கு கல்விச் சலுகை அளிக்க வேண்டுமென்று அரசாங்கம் திட்டம் வகுத்திருக்கிறது. உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, முற்போக்கு அடைந்த ஜாதி என்றெல்லாம் ஜாதிப் பாகுபாடு இல்லாமல் இருக்க வேண்டுமென்று அந்த அடிப்படையில் செய்திருக்கிறார்கள். ஆனால் நேற்று பேசிய எனது மதிப்பிற்குரிய சத்தியவாணிமுத்து அவர்கள் இந்த ஜாதி வகுப்பு இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். மத்தியச் சலுகை பெறுவதற்கு கான்ஸ்டிடியூஷனைத் திருத்துவதற்கு நாங்கள் குறுக்கே நிற்கமாட்டோம். இந்த சர்க்காரிலே

[Sri T. Karia Gounder] [4th March 1961

ஜாதி வேற்றுமை இருக்கவேண்டாம், எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்று எண்ணுகிற இந்த நேரத்திலே தேர்தல் பிரசாரத்திற்காக என்ன வேண்டுமானாலும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசுவார்கள் போல் இருக்கிறது. நாங்கள் முந்திக்கொண்டு விட்டதனால், அவர்கள் பொறாமைப்படுகிறார்கள். இதிலேகூட குற்றம் கண்டுபிடிக்கிறார்கள். கட்டாயக் கல்வி இந்த நாட்டிலே நடைபெறுமாவென்று எதிர்க் கட்சியிலே உள்ளவர்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. கிராமங் களுக்குச் சென்று பார்த்தால், அங்கே பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு கியூ வரிசையில் நிற்கவேண்டியிருக்கிறது. உலக சரித்திரத்தி லேயே புகழ் பெறுகிற மாதிரி இந்த வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 90 கோடி ரூபாயில் 20 கோடி ரூபாய் சர்க்கார் இந்தத் திட்டத்திற்காக செலவு செய்கிறார்கள். இதை எப்படி குற்றம் சொல்ல முடியுமென்று கேட்கிறேன்.

விவசாயத் துறையிலே நாம் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறோம். உணவுத் துறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். மின்சார சக்தியின் காரணமாக நாம் முன்னேறியிருக்கிறோம். ஆனால் விலைவாசிகள் எல்லாம் உயர்ந்துவிட்டன என்று பேசுகிறார்கள். விலைவாசிகள் உயர்ந்திருக்கலாம். ஆனால் உற்பத்தி பெருகுகிற விதத்தைப்பற்றி ஒருவரும் சிந்திக்கமாட்டேன் என்கிறார்கள். நாங்கள் கரும்பு சாகுபடி செய்கிறோம். எங்கள் பகுதியிலே சர்க்கரை மில் வைத்திருக்கிறார்கள். எங்களுடைய சர்க்கரை மில்லுக்கு 7,000 ஏக்கர் சாகுபடி இருந்தால் போதுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே 20,000 ஏக்கருக்கு மேல் கரும்பு பயிரிடுகிறார்கள். இப்படி கரும்பு பயிரிடுகிற நேரத்திலே வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள். சென்ற வருஷம் வரையில் கொழும்பிற்கு ஏற்றுமதி செய்து வந்தோம். இன்றைக்கு மூட்டை ஒன்றுக்கு 20 முதல் 23 வரையிலும் வெல்லம் விற்கிறது. கொழும்பிலே 75 ரூபாய்க்கு அந்த வெல்லம் விற்கப்படுகிறது. நமது மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருடன் பேசி இதற்கு ஏதாகிலும் ஒரு வழி வகை செய்தால்தான் விவசாயிகளாகிய நாங்கள் முன்னேற்றப் பாதையில் செல்ல முடியுமென்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பாலாற்றைப்பற்றிச் சொல்லும்பொழுது சென்ற ஆண்டிலே நமது நிதி அமைச்சர் அது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப்பிட்டார். இரண்டு நாட்களுக்கு முன்பு மத்திய சர்க்காருக்கு நமது நிதி அமைச்சர் போகப்போகிறார் என்ற ஒரு செய்தி வெளி வந்தது. அதை மறந்து விட்டார்களோ என்னவோ. ஆகவே, பாலாற்றுக்கு ஒரு வழிவகை செய்ய வேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத்திற்கு முதல் இடம் கொடுத்திருப்பதுபற்றி மெத்த நன்றி. இந்த மின்சாரத்தில் மினிமம் சார்ஜ் கட்ட வேண்டியிருப்பதாலே, விவசாயிகளுக்கு கஷ்டம் நிறைய இருக்கிறது. எங்கள் ஜில்லாவிலே



4th March 1961] [Sri T. Karia Gounder]

மின்சாரம் இல்லாத இடமே இல்லை. அம்மாதிரி செய்திருப்பதற்காக சர்க்காருக்கு நன்றி. அதே நேரத்தில், மின்சாரம் மாகாணம் பூராவும் பரவினால்தான் உணவு உற்பத்தி பெருகமுடியும்.

குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக, சர்க்கார் கொள்கைக்கு எதிர்க்கட்சி நண்பர்கள் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நண்பர்கள் சிரிக்கிறார்கள். அவர்கள் வேறுவிதமாக எடுத்துக்கொள்ளாமல், அவர்களும் இந்த திட்டம் நாட்டுக்கு நல்லது என்ற முறையில் அவர்களும் சர்க்காரோடு சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னால், ரஷ்யாவில் அது இல்லை என்கிறார்கள். ரஷ்யாவில் ஜனத்தொகை குறைவு; ஆகையால், அங்கே சர்க்கார் அதிகக் குழந்தைகள் பிறப்பதற்கு சன்மானங்கள் கொடுக்கிறார்கள். அம்மாதிரி இல்லாமல், வருடந்தோறும், மக்கள் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கும் இந்த நாட்டில், கட்டுப்பாடு வேண்டியது அவசியம். ஆகவே, அதில் எல்லோரும் முழு மனதோடு ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையில், சேலம் இரும்புத் தொழில்பற்றி சொல்கிறார்கள். நான் போய்ப்பார்த்தேன். உடனே செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். ஜெர்மானிய நிபுணர்கள் பார்க்கிறார்கள். பழுப்பு நிலக்கரியையும், இரும்புக் கனியையும் கொண்டு எப்படிச் செய்வது என்று ஆராய்ச்சி செய்து ஒரு முடிவுக்கு வருவதில் நம் சர்க்கார் தீவிர பங்கு கொண்டு இருக்கிறது. உடனே செய்யவில்லை என்று ஆத்திரப்படுகிறார்கள். தொழில் துறையில் முன்பு பேசிய சர்தார்ஜி சொன்ன மாதிரி, அதிக முன்னேற்றம் கண்டு இருக்கிறோம்.

நிதியமைச்சர் டெபிஸிட் பட்ஜெட் கொடுத்தார் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் எப்படி அரசாங்கத்திற்கு வருவார்களோ தெரியாது. அப்படி நேர்ந்தாலும், எப்படி இதைவிடத் திறமையான வரவு செலவு திட்டத்தை தயாரிக்க முடியும் என்பது சந்தேகமே. உலகமே போற்றும் அளவில் வரவு செலவு திட்டத்தை தயாரித்துள்ள நம் நிதியமைச்சரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதோடுகூட, இந்த மாநிலத்தின் பெயரை தமிழ் நாடு என்று மாற்றியமைத்தற்காகவும், இந்த வரவு செலவுத் திட்டத்தைப் போற்றியும் கனம் நிதியமைச்சரவர்களுக்கு என் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, தலைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* SRI A. V. P. PERIAVALAGURUVA REDDI : கனம் தலைவர் அவர்களே, இவ்வாண்டு வரவுசெலவு அறிக்கையை கனம் நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதைப் பார்த்தால் மிகவும் அழகாகவும் இன்னும் எல்லாத் துறையிலும் முன்னேற்றம் அடைந்து நம் தமிழ் மாகாணம் சிறப்புற்று ஓங்கும் நிலையில் இருப்பதைக் காட்டும் அறிக்கையாக அமைந்திருக்கிறது என்பதில் ஆட்சேபணை இல்லை. விவசாயத்திற்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். அதிலும் மிகவும் முன்னேற்றம் அடைய ஏதுவாக இருக்கும். ஆனாலும், இது எந்த நிலையில் இருக்கிறது என்று

பார்த்தால், சினிமாவைப் பார்த்தது போல் இருக்கிறது. சினிமா
வைப் பார்த்துவிட்டு, கொட்டகையை விட்டு வெளியே வந்ததும்
ஒன்றுமே ஞாபகத்திற்கு வராது. அதே நிலையில்தான் இருக்கிறது
இதுவும். ஆனாலும் உள்ளபடியே நம் நாடு முன்னேற யாதொரு
குறையும் இல்லை. இருந்தாலும் குறைபாடுகளைத் தவிர்க்க
வேண்டும். விவசாயத்தை எடுத்துக்கொண்டால், ஒருவன் கடன்
வாங்க வேண்டுமானால், யமலோகத்திற்கே போய் வருவது போல்
இருக்கிறது. 45 கோடி விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்
போகிறோம் என்று சொல்லுகிறார்கள். அதிலிருக்கும் கஷ்டத்தை
நான் நன்றாக அறிந்திருப்பதால் சொல்லுகிறேன். கணக்கப்
பிள்ளையிடம் நாள் கணக்காக, மாதக்கணக்காக அலைய வேண்டி
யிருக்கிறது. 500 ரூபாய் கடன் வாங்குகிறான் என்றால், 320
அல்லது 350 ரூபாய்தான் அவன் கைக்கு வருகிறது. அதற்
குள்ளாகத்தான் வருகிறது. சொச்சமெல்லாம் இப்படியும் அப்படி
யும் போய்விடுகிறது. இந்த நிலையில்லாமல், கடன் வாங்க வேண்டு
மானால், அதிகாரி ஒரு குறிப்பிட்ட நாளில், ஒரு வாய்தா போட்டு,
அங்கு அன்றைக்கு கணக்கப்பிள்ளையையும் வரச் சொல்லி, அம்
மாதிரி இருக்கும் 20, 30 மனுதார்களை ஒன்றாக வரச்சொல்லி,
வில்லங்க சர்ட்டிபிகேட் வேண்டுமானாலும் வாங்கி வரச்சொல்லி,
ஒரே நாளில் எல்லாவற்றையும் பார்த்து சாங்ஷன் செய்து, மறு
நாளாவது அவர்களுக்குப் பணம் கிடைக்கச் செய்ய வேண்டும்.
இதை மந்திரியவர்கள் செய்தால், விவசாயிகளுக்கு மிக்க நன்மை
யாக இருக்கும். இன்னொன்றும் சொல்லுகிறேன். எங்கள்
தாலுகாவிலுள்ள கள்ளிக்குடி கிராமத்து விவசாயி ஒருவன் ப்ளாக்
ஆபீசருக்கு ஒரு ஜோடி வண்டிப் பட்டைகளுக்கு மனுப் போட்
டான். அது சென்னைக்கு வந்து, இரும்பு கண்ட்ரோலர் அவற்றை
கோயம்புத்தூரில் வாங்கிக்கொள்ளச் சொல்லி உத்தரவு போட்
டார்கள். கல்லுக்குடி எங்கு இருக்கிறது, கோயம்புத்தூர் எங்கு
இருக்கிறது. 256 மைலில் இருக்கிறது. இரண்டு வண்டிப்
பட்டைக்கு இவ்வளவு தூரம் போவதா? ஆக, அந்த மனுஷன்
ப்ளாக் மார்க்கெட்டில் 92 ரூபாய்க்கு இரண்டு வண்டிப் பட்டைகள்
வாங்க வேண்டியிருந்தது. இந்த கண்ட்ரோலருக்கு கல்லுக்குடி
எங்கிருக்கிறது, கல்லுக்குடிக்கும் கோயம்புத்தூருக்கும் எவ்வளவு
தூரம் என்றெல்லாம் தெரியாது. வார் காலத்தில் போல் விவசாய
டிபார்ட்மெண்டுக்கோ, அல்லது வேறு டிபார்ட்டுமெண்டுக்கோ
இந்த வினியோகத்தைக் கொடுத்துவிட்டால் நலமாக இருக்கும்.
ப்ளாக்கில் 36 பேர் சும்மா இருக்கிறார்கள்; அவர்கள் இதை
யெல்லாம் செய்யலாம். வண்டிப்பட்டை, மண் வெட்டி, கொழு
கம்பு முதலியவற்றை, இந்த விவசாய சாமான்களை, அவர்களே
கொடுத்தால் ரொம்ப நலமாக இருக்கும். விவசாயிகள் படும்
கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. லோன் கொடுத்தாலும் கொடுக்கா
விட்டாலும், விவசாய சாதனங்கள் கொடுக்கும்போது, விவசாயி
களுக்குக் கஷ்டம் இல்லாமல் மந்திரியவர்கள் அதை அக்கறை
யோடு பார்க்கவேண்டும். கிராமத்தில் இருப்பதால் விவசாய
மக்களின் கஷ்டத்தை கண்டதால் சொல்லுகிறேன்.





(Mr. Speaker in the Chair)

கிணறு வெட்டுவதில் நல்ல பலன் கண்டிருக்கிறோம். இப்
பொழுதெல்லாம் எங்கள் பகுதிகளில் பல கிணறுகள் வெட்டி
புஞ்சை விவசாயம் நன்றாகச் செய்கிறார்கள். கிணறுகள் வெட்டி
பம்புகள் போட்டிருக்கிறார்கள். இதிலே சில கஷ்டங்கள், மின்சார
மந்திரிக்குச் சொல்லுகிறேன். ஒரு கிராமத்திற்கு மின்சாரம்
கொடுக்க மினிமம் சார்ஜ் கேட்டிருக்கிறார்கள், 20 பம்புசெட்டுகள்
கொடுப்போம் என்று உத்தரவாதம் கேட்கிறார்கள். எட்டு
வருஷத்திற்கு அக்ரிமெண்ட் எழுதுகிறார்கள். அடுத்த வருஷத்தி
லேயே 3,000, 4,000 என்று லாபம் கிடைக்கிறது. இருந்தாலும்
மினிமம் சார்ஜ் மட்டும் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். முத
லில் 150, 200 என்று கட்டவேண்டியிருக்கிறது. பின்னால் அடுத்த
வருஷத்திலேயே லாபம் கிடைத்தாலும் தொடர்ந்து மினிமம்
சார்ஜை கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிக் கொடுத்துத்
தான் ஆகவேண்டுமென்று விவசாயிகளை இம்சிக்கிறார்கள். அப்படி
எட்டு வருஷத்திற்கு வாங்குகிறார்கள். இது விஷயமாக மின்சார
போர்டில் யோசனை செய்து இந்த மினிமம் சார்ஜ் உபத்திரவத்தை
எடுத்து விட்டால், கிணற்று விவசாயம் நன்றாக நடைபெறும்.

நாம் போட்டிருக்கும் அணைக்கட்டுகளால் தமிழ் மாகாணம்
பூராவும் செழிப்படைந்திருக்கிறது. புஞ்சை நிலங்கள் ஏராளமாக
இருக்கின்றன. ஏராளமாக விவசாயமும் செய்கிறார்கள்.

விலைவாசிகளை கட்டுப்பாடு செய்யவேண்டும். இப்பொழுது
இரண்டு மூன்று தினங்களாக மூட்டை ஒன்றுக்கு 5 ரூபாய் ஏறி
இருக்கிறது. கிளப்பில் கூட 90 நயா பைசா கொடு என்கிறான்; தயிர்
கொண்டுவா என்றால், 15-க்குப் பதிலாக 30 நயா பைசா கொண்டு
வா என்கிறான். அந்தமாதிரி விலைவாசிகள் ஏறி இருக்கின்றன. இப்
பொழுது மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சுமார் 67
லட்சம் டன் உற்பத்தியாகும் என்று சொல்லுகிறார்கள். 1950 முதற் 11-00
கொண்டு இதுவரைக்கும் அதாவது 31 லட்சம் டன் முதற்கொண்டு a.m.
67 லட்சம் டன் வரைக்கும், உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று
சொல்லுகிறார்கள். இவ்வளவு தானியம் அதிகமாக உற்பத்தியாகி
யிருந்தும் உணவு பற்றாக்குறை என்று சொல்வதற்குக் காரணம்
ஜனப் பெருக்கம் என்று சொல்லுகிறார்கள். குழந்தை பிறந்த
உடனேயே அரிசி சாப்பிட ஆரம்பித்து விடுகின்றனவா என்று
கேட்கிறேன். அது அப்படி இல்லை. இங்கு விளையக்கூடிய அரிசி
யெல்லாம் வியாபாரிகள் வாங்கி அவற்றை மலையாளத்திற்குக்
கொண்டுபோய் விடுகிறார்கள். அங்கிருந்து இலங்கைக்குப் போவ
தாகச் சொல்லப்படுகிறது. அதுதான் பற்றாக்குறைக்குக் காரண
மாக இருக்கிறதேயொழிய வேறு ஒன்றும் இல்லை. அதனால்தான்
இங்கே அரிசி விலை குறையவே இல்லை.

உப்பு உரங்களை எடுத்துக்கொண்டால் கூட்டுறவு பாங்குகளுக்கு
சிந்திரி உப்பு உரங்களைக் கொடுக்கிறார்கள். அங்குள்ள ஜில்லா
கலெக்டர் ஒவ்வொரு சொசைட்டிக்கும் இவ்வளவு மூட்டை என்று
கொடுக்கிறார். அந்த சொசைட்டிகள் தங்களுடைய டைரக்டர்
களுக்கு தலைக்கு ஒரு மூட்டை என்று கொடுத்து விட்டு பாக்கியை

[Sri A. V. P. Periavalaguruva Reddi [4th March 1961

வியாபாரிகளுக்குக் கொடுத்து விடுகிறார்கள். அதை வியாபாரிகள் வாங்கிக்கொண்டுபோய் அதிக விலைக்கு விற்கிறார்கள். நாங்கள் போய் கேட்டால் “ நாங்கள் என்ன செய்வது, அவர்கள் வாங்கிக் கொண்டு போய் விட்டார்களே ” என்று சொல்லுகிறார்கள். வியாபாரிகள் அந்த மூட்டைகளை 36 ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு போய் 78 ரூபாய்க்கு விற்கிறார்கள். எதிர் கட்சியில் இருக்கிறேன் என்பதால் சொல்லவில்லை. கண்ணால் பார்த்ததைத்தான் சொல்லுகிறேன். மதுரையில் இம்மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. இந்த விதமாக வியாபாரிகள் சுமார் 500 மூட்டைகள் வரையில் வைத்து வியாபாரம் செய்கிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு கண்ட்ரோல் விலையில் உரம் உப்பு கிடைக்கவில்லை. இதைத் தடுக்கவேண்டும் என்று கலெக்டரைக் கேட்டால் அதைப் பிடிக்க தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாமல் இப்படி வியாபாரம் செய்கிறவர்களை கலெக்டர் பிடித்து தண்டிக்கக்கூடிய அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட வியாபாரிகளிடமுள்ள மூட்டைகளை கலெக்டர்கள் பிடுங்கி விவசாயிகளுக்குக் கொடுக்கும் அளவில் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும். இப்படிச் செய்தால்தான் ப்ளாக் மார்க்கெட்டை தடுப்பதற்கு வழி ஏற்படும். ஆகவே இம்மாதிரி செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அத்துடன் பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள 200 ஏக்கர் பாசனமுள்ள கண்மாய்களை பஞ்சாயத்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படி அவைகளை எடுத்துக்கொண்டு மண் அடித்து சீர்திருத்தம் செய்தால் சுமார் 150 ரூபாய் செலவு செய்துவிட்டு 1,500 ரூபாய் செலவு செய்ததாக கணக்கு காட்டுகிறார்கள். இம்மாதிரி பஞ்சாயத்துக்களில் நடந்துகொண்டிருக்கிறது. அப்படி கண்மாய்களை பஞ்சாயத்தில் எடுத்துக்கொள்வது நல்லதுதான். ஆனால் இப்படியெல்லாம் அதிகப்படியாக செலவு செய்வதைத் தடுக்கவேண்டும். இதனால் அந்தப் பஞ்சாயத்திலுள்ள மக்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவைகளைப் பற்றி புகார் செய்தால் அதை கவனிப்பதாகவே இல்லை. அப்படிப் புகார் செய்தால் காங்கிரஸ்காரர்கள் அதில் தலையிட்டு புகார்களை சரியானபடி விசாரிக்காமல் விட்டு விடுகிறார்கள். இந்த நிலைமை இருக்கக்கூடாது. ஆகவே காங்கிரஸ்காரர்கள் இவைகளில் தலையிடாமல் பார்த்துக்கொண்டு மக்களிடமிருந்து புகார் வந்தவுடன் அதை நல்ல முறையில் விசாரித்து நியாயம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த வருஷம் பேய் மழை பெய்ததன் காரணமாக மதுரை, திருமங்கலம் வட்டாரங்களில் மிளகாய், பருத்தி அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிக விளைச்சல் இல்லை. அவர்களுக்கு வரி வஜா செய்வதோடல்லாமல் இந்த வருஷம் விவசாயிகள் கொடுக்கவேண்டிய கடன்களையாவது ஒத்தி வைத்தால் விவசாயிகளுக்கு நலமாக இருக்கும். அப்பொழுதுதான் அவர்கள் தங்களுடைய குடும்பங்களை நல்ல முறையில் நடத்த முடியும், அவர்களுக்கு எப்படி விளைபொருள்கள் கிடைக்குமோ தெரியவில்லை. ஆகவே இதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.



4th March 1961]

II—ANNOUNCEMENTS—*cont.*

(2) BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER: I have to inform the House that the Business Advisory Committee, which met this morning, has decided as follows with regard to the programme of business of the House. A copy of the programme will be circulated to all members.

## (i) Calender for Tenth Session—March 1961—

| | | |
|---|---|---|
| Saturday, the 4th .. | General Discussion on the Budget for the year 1961-62. | .. |
| Sunday, the 5th .. | Holiday. | |
| Monday, the 6th .. / Tuesday, the 7th .. | General Discussion on the Budget for the year 1961-62. | .. |
| Wednesday, the 8th .. | XIV—Police .. .. .. .. .. .. | 4 hours. |
| Thursday, the 9th .. | XII—Administration of Justice .. .. / XIII—Jails .. .. .. .. .. .. | ,, |
| Friday, the 10th .. | XXII—Industries and Cinchona .. / XLI—Capital Outlay on Industrial Development. | ,, |
| Saturday, the 11th .. | III—Forest Department .. .. .. / XVIII—Agriculture .. .. .. / XIX—Fisheries .. .. .. .. / XX—Animal Husbandry .. .. / XXXVII—Capital Outlay on Forest .. / XL—Capital Outlay on Agriculture .. | ,, |
| Sunday, the 12th .. | Holiday. | |
| Monday, the 13th .. | VII—Irrigation .. .. .. .. .. / XXXVIII—Capital Outlay on Irrigation | ,, |
| Tuesday, the 14th .. | XXV—Harijan Uplift .. .. .. | ,, |
| Wednesday, the 15th .. | XXIV—Labour including Factories .. | 2 hours. |
| | XXXV—Road Transport Schemes .. / XLIII—Capital Outlay on Road Transport Schemes. | 2 hours. |
| Thursday, the 16th .. | VIII—Head of State, Ministers and Headquarter staff. / IX—State Legislature .. .. .. / X—Elections .. .. .. .. | 4 hours. |
| Friday, the 17th .. | Holiday—Telugu New Year's Day. | |
| Saturday, the 18th .. | I—Land Revenue Department .. .. / II—Stamps Administration .. .. / XI—District Administration and Miscellaneous. | 3½ hours |
| | XXXVI—Compensation to Zamindars .. | |
| | IV—Registration Department .. .. | ½ hou |

[Mr. Speaker] [4th March 1961

### (i) Calendar for Tenth Session—March 1961—*cont.*

| | | |
|---|---|---|
| Sunday, the 19th .. | Holiday. | |
| Monday, the 20th .. | XVI—Medical .. .. .. .. <br> XVII—Public Health .. .. .. <br> XXXIX—Capital Outlay on Public Health. | 4 hours. |
| Tuesday, the 21st .. | Presentation of— <br> (i) the Statement of Demands for Grants for Excess Expenditure in 1957–58. <br> (ii) the Final Supplementary Statement of Expenditure for 1960–61. | |
| | V—Motor Vehicles Acts Administration. | 4 hours. |
| Wednesday, the 22nd .. | XV—Education .. .. .. .. | |
| Thursday, the 23rd .. | XXVII—Civil Works—Works .. .. <br> XLII—Capital Outlay on Civil Works .. <br> XXVIII—Civil Works—Establishment and Tools and Plant. | 2 hours, |
| | XXIX—Civil Works—Grants-in-Aid .. | " |
| Friday, the 24th .. | XXVI—Community Development Projects etc., <br> XXXIV—Other Miscellaneous Contributions and Assignments. | 4 hours. |
| Saturday, the 25th .. | XXXII—Stationery and Printing .. | 2 hours |
| | 1. Discussion and Voting on Demands for Grants.— <br> (i) for Excess Expenditure in 1957–58 <br> (ii) for Final Supplementary Statement of Expenditure for 1960–61. <br> 2. Introduction of Appropriation Bills. | |
| Sunday, the 26th .. | Holiday | |
| Monday, the 27th .. | VI—General Sales Tax and Other Taxes and Duties Administration. | 2 hours. |
| | XXI—Co-operation | |
| | XXIII—Khadi .. .. .. .. | 1 hour. |
| | XXX—Famine .. .. .. .. | .. |
| | XXXI—Pensions .. .. .. .. | .. |
| | XXXIII—Miscellaneous .. .. .. | .. |
| | XLIV—Commuted Value of Pensions .. | .. |
| | XLV—Capital Outlay on Schemes of Government Trading. | .. |
| | XLVI—Loans and Advances by the State Government. | .. |
| | Introduction of Appropriation Bills | |
| Tuesday, the 28th .. | Passing of Appropriation Bills .. .. | .. |
| Wednesday, the 29th .. | Official Business .. .. .. .. | .. |
| Thursday, the 30th .. | Do. .. .. .. | .. |

(ii) The discussion on voting on Demands for Grants will continue till 27th March 1961. The Guillotine will be applied at 1 p.m. on the 27th March 1961.

(iii) The House will also sit on the 28th March 1961 for considering and passing the Appropriation Bills.



4th March 1961] [Mr. Speaker]

(iv) The House will sit on the 29th, 30th March 1961 and 1st April, 1961 for considering Official Business.

(v) The House as at present programmed will adjourn on the 1st April 1961.

SRI A. VEDARATHNAM: ஸார், 18-ம் தேதி அசெம்பளி உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: 18-ம் தேதி அசெம்பளி கூட்டம் இருக்கிறது.

### IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1961-62—*cont*

*SRI C. R. RAMASWAMI: கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற ஒன்பது வருஷ காலமாக இந்த மாகாணத்தினுடைய நிதி நிலை அறிக்கையை நாம் பார்த்து வருகிறோம். அதிலும் நானும் இந்த ஒன்பது வருஷ காலமாக இந்தச் சட்ட சபையின் அங்கத்தினராக இருப்பதால் இந்த மாகாணத்தினுடைய வளர்ச்சியை ஓரளவு நேரடியாக பார்த்து வந்து அதைப்பற்றி சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பு என்னிடம் இருக்கிறது. இந்த ஒன்பது வருஷ காலமாக நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்து வருகிறார். இந்த வருஷம் தமிழில் இந்த அறுபது பக்கமுள்ள ஒரு பெரிய பிரசங்கத்தை அவரே எழுதி யிருக்கிறார்கள் என்பதையும், ஆங்கிலத்தில் எழுதி அதை மொழி பெயர்க்காமல் தானாகவே தமிழில் எழுதியிருப்ப தாகவும் கேள்விப்பட்டேன். இது ஒரு புது விஷயம்தான். இதைப் படிக்கும்போது இந்த மாகாணத்தினுடைய நிலையை நன்றாக தெரிந்துகொள்ள முடியும். எந்தெந்த வழிகளில் இந்த மாகாணம் வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது என்பது இதை வாசித்தால் நன்றாகத் தெரியவரும். எல்லா துறைகளிலும், குறிப்பாக தொழில் துறையில் எந்த அளவு முன்னேற்றமடைந் திருக்கிறது என்பதைப்பற்றி அவர் இதில் எடுத்துக்காட்டி யிருக்கிறார். இந்த மாகாணம் எந்த அளவில் முன்னேற்ற மடைந்திருக்கிறது, பொருளாதாரத் துறையில் எந்த அளவு முன்னேற்றமடைந்திருக்கிறது, பொருளாதாரத் துறையில் நாம் மந்தமாக இருக்கிறோமா என்பதையெல்லாம் அவர் எடுத்துக் காட்டி இருக்கிறார். எந்த வகையில் எடுத்துக்கொண்டாலும் நம் மாகாணம் முன்னணியில் இருக்கிறது என்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது. நம் மாகாணத்தைக் கண்டு இந்தியா தேசத்தில் மட்டும் அல்லது வெளிநாடுகளிலும் நமக்கு எவ் வளவோ பெருமை இருக்கிறது. எல்லோரும் பெருமைப்படக் கூடிய அளவில் நம் மாகாணம் செயல்பட்டு வருகிறது. அந்த அளவில் நாம் இருந்துகொண்டு வருகிறோம். 'மெட்ராஸ்' என்று சொன்னாலே அதற்கு ஒரு தனியான மரியாதையும் தனியான மதிப்பும் இருக்கிறது என்று சொல்லலாம். மெட்ராஸ் சிறந்ததாக இருக்கிறது, அதற்குத் தனி மதிப்பு இருக்கிறது. ஆகவே இந்த தேசத்தில் இந்த மாகாணத்தில் இப்பேர்ப்பட்ட வளர்ச்சியைப் பார்த்து நாம் பெருமைப்பட வேண்டியதாக இருக்கிறது. அது நம்முடைய கடமையாகும்.

[Sri C. R. Ramaswami] [4th March 1961

இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் நாம் 186 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறோம். எவ்வளவோ அதிகப்படியாக உணவு தானியங்களை உற்பத்தி செய்திருக்கிறோம். இன்னும் பல துறைகளில் முன்னேற்றத்தை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் எதிர் கட்சியிலுள்ளவர்கள் சொல்லுகிறார்கள், மத்திய அரசாங்கத்தினிடமிருந்து அதிகப்படியான உதவியைக் கேட்பது இல்லை, அவர்களும் கொடுப்பதாக இல்லை என்று. மத்திய அரசாங்கம் நமக்குக் குறைவாகத்தான் கொடுக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் நான் கணக்கிட்டுப் பார்த்தவரையிலும் இந்த ஒன்பது வருஷ காலத்தில் மத்திய அரசாங்கத்தின் உதவி எப்படி இருக்கிறது என்றால் நாம் கேட்ட போதெல்லாம் அவர்கள் கொடுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள்.

அவர்கள் கொடுக்கக்கூடியதை மூன்று வகையாக பிரித்துக் கொள்ளலாம். நமது கனம் நிதி அமைச்சருடைய பேச்சை மூன்று அம்சங்களாக பிரித்துக்கொள்ளலாம். முதலாவதாக ஸ்டேட்ஸ் ஷேர் அப் செண்ட்ரல் டாக்சேஷன். அதிலிருந்து நமக்கு வரக்கூடிய வருமானம் இருக்கிறது. அதை எடுத்துப் பார்த்தால் 1959-60-ல் நமக்கு 13 கோடி ரூபாய் வந்திருக்கிறது. 1960-61-ல் நமக்கு 16 கோடி ரூபாய் வந்திருக்கிறது. 1961-62-ல் நமக்கு 17 கோடி ரூபாய் வருவதாக இருக்கிறது. அவர்கள் வசூல் செய்து சென்னை மாகாணத்திற்கு 1959-60-ல் 40 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். 1960-61-ல் 40 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். 1961-62-ல் 40 கோடி ரூபாய் எதிர்ப்பார்க்கலாம். ஆகவே சரி பாதியாக அவர்கள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். டைரெக்ட் டாக்சேஷன் மூலமாகவும் அவர்கள் கொடுப்பதும் மானியமாகக் கொடுப்பதும் இதில் இருக்கிறது. அவர்கள் கொடுக்கக்கூடிய பங்கும் இங்கு வசூலிக்கக்கூடியதும் சரியாக இருக்கிறது.

மற்றும் நாம் செலவு செய்ய வேண்டியவைகளை அவர்களைக் கொண்டே நேரடியாக செலவு செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டும். அவர்கள் சொல்லலாம், நெய்வேலி ஸ்தாபனத்தை ஏற்படுத்தி விட்டோம் என்று. பழுப்பு நிலக்கரி எடுக்கக்கூடிய ஸ்தாபனத்தை அவர்கள் அமைத்து விட்டதாகச் சொல்லலாம். அதைத் தவிர இன்னும் எவ்வளவோ மூலபொருள்கள் நமக்கு வர வேண்டியதாக இருக்கிறது. மற்ற மாகாணத்திலிருந்து நமக்கு பல மூல பொருள்கள் வரவேண்டியதாக இருக்கிறது. பீகாரிலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. அதற்கு நமக்குள்ள ரயில் பாதை போதவே போதாது. ஆகவே ரயில் பாதைகளை விஸ்தரிக்கச் சொல்ல வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். கல்கத்தாவிலிருந்து வரக்கூடிய ரயில் பாதை இப்பொழுது ஒன்றுதான் இருக்கிறது. அதை இரண்டாக்க வேண்டும். அப்பொழுதுதான் அதிகப்படியான தொழிற்சாலைகளை இங்கு ஏற்படுத்தலாம். அதன்



[4th March 1961] [Sri C. R. Ramaswami]

பிறகு அதிகப்படியான மூலப்பொருள்களைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். ஆகவே இதைச் செய்யச் சொல்லி தூண்டுகோல் போட வேண்டும்.

இதைத் தவிர துறைமுகங்களை விஸ்தரிக்க வேண்டும். சென்னை துறைமுகத்தைத்தான் விஸ்தரித்து வருகிறார்கள். தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்யப் போவதாகச் சொல்லுகிறார்கள். அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்போவதாகச் சொல்லப்படுகிறது. அதை செய்தால் நல்லது தான். அப்படிச் செய்தால் அந்த துறைமுகங்களின் பக்கத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம். இப்பொழுது அவைகள் இல்லாமல் இருப்பதால் சென்னை நகரத்திற்கு வர வேண்டியதாக இருக்கிறது. அதேபோன்று நாகப்பட்டணம், கடலூர், பாண்டிச்சேரி போன்ற சின்னச்சின்ன துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்யச் சொல்ல வேண்டும். அவைகளையும் நல்ல முறையில் சீர்படுத்தினால் அநேக கப்பல்களைக் கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கும். 5,000 அல்லது 10,000 டன் கப்பல்களைக் கொண்டு வந்து நிறுத்துவதற்கு சௌகர்யமாக இருக்கும். அதன் மூலம் அதிகப்படியான சாமான்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு வசதியாக இருக்கும். அதற்கு மத்திய அரசாங்கத்தினிடம் சொல்லி ஏற்பாடு செய்யச் சொல்ல வேண்டும். அவற்றிற்கெல்லாம் அவர்களைக் கொண்டே செலவு செய்யச் சொல்ல வேண்டும். மற்றும் பல சில்லரை வேலைகள் எல்லாம் இருக்கின்றன. அவைகளையும் அவர்களைக் கொண்டே நடத்தச் சொல்ல வேண்டும். அதிகப்படியாக அவர்களுக்கு நாம் தொந்தரவைக் கொடுத்து அவர்களையே செலவு செய்யச் சொல்ல வேண்டும். அதிகப்படியான ரயில் பாதைகளைப் போடச் சொல்ல வேண்டும். துறைமுகங்களை அதிகப்படுத்தச் சொல்லவேண்டும். அரசாங்கம் நடத்தக்கூடிய ஷிப்பிங் கார்பொரேஷன் இருக்கிறது. அதன் மூலம் கோஸ்டல் ஷிப்பிங் ட்ரேடை நடத்த வேண்டும். அவைகளுக்கு அதிகப்படியாக அவர்களைச் செலவு செய்யச் சொல்ல வேண்டும். இப்படி அதிகப்படியான கப்பல்களுக்கு வசதி செய்து கொடுத்தால் ரயில்வேயிலுள்ள பாட்டில்நெக் கொஞ்சம் குறைவதற்கு வழி ஏற்படும். அதன் மூலம் இந்நாட்டின் தொழில் வளம் பெருகும். இவைகளுக்கு ஏற்பாடு செய்தால் தொழில் வளம் பெருகும் என்பதில் சந்தேகமில்லை. இம்மாதிரியான முறையிலே அவர்கள் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தொழில் வளர்ச்சி நம் ராஜ்யத்தில் ஏற்படவேண்டுமானால் ரெயில் பாட்டில்நெக் போகவேண்டும். நிலக்கரி, இரும்பு, அமோனியம் சல்பேட் போன்ற எல்லாச் சாமான்களும் வரவேண்டியதாக இருக்கிறது. எல்லாவற்றுக்கும் முட்டுக்கட்டையாக இருப்பது ரெயில் பாதை. ரயில்கள் மூலமாகத்தான் ஒவ்வொரு சாமானும் வந்து சேர்ந்தாகவேண்டி இருக்கிறது. ஆகவே இந்த ரெயில் பாதை விஸ்தரிப்பில் அவர்கள் நேரிடையாக ஈடுபடவேண்டும் என்பதை வற்புறுத்தவேண்டும் என்று திரும்பவும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

[Sri C. R. Ramaswami] [4th March 1961

நமது மாகாணத்தைப் பொறுத்தவரையில் உணவு தான்ய உற்பத்தியில் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். அரிசியைப் பற்றிக் கவலை கிடையாது. நிறைய உற்பத்தி செய்கிறோம் பஞ்சம் ஏற்படாது என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் மிளகாய், புளி, எண்ணை போன்ற பொருள்களின் விலை அதிகமாக ஏறிக் கொண்டே போகிறது. இதற்குக் காரணம் என்னவென்று அலசிப் பார்க்கவேண்டும். நல்லெண்ணையை எடுத்துக்கொண்டால் விலை ஏற்றத்திற்கு முக்கிய காரணமாய் அந்த வியாபாரிகள் சொல்வது உற்பத்திக் குறைவுதான். நாட்டுச் செக்கு ஒன்றினால்தான் எண்ணை ஆட்ட முடியும். மழை காலத்திலும் அவை வேலை செய்ய முடிவதில்லை. நாட்டுச் செக்கு வேலை செய்யக்கூடிய காலத்திலும் அதிகமாக உற்பத்தி செய்யமுடிவதில்லை. மெக்கனைஸ்டு ப்ராஸஸ் பின்டோ சிஸ்டம் கையாளலாம் என்றாலும் அதற்கு தனியாக எக்ஸைஸ் டியூடி எல்லாம் போடப்படுகிறது. அதனால் தேவைக்கு ஏற்ற அளவு உற்பத்தி செய்ய முடியவில்லை என்கிறார்கள். இப்படி அரிசியைத் தவிர மிளகாய், புளி, எண்ணை இவற்றின் விலை ஏகமாக ஏறிக்கொண்டு போவதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து அதைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் அபிவிருத்தியைப் பொறுத்த மட்டில் நம் ராஜ்யம் முதன்மையாக இருக்கிறது. அதுவும் இந்த ஐந்து வருஷ காலத்தில் மிகவும் துணிச்சலாக நம்முடைய தொழில் மந்திரி வேலை செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை நானும் பாராட்டுகிறேன். பல புதிய தொழில்கள் நம் ராஜ்யத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அலுமினியம் தொழிற்சாலை, பேப்பர் தொழிற்சாலை என்று இப்படி பல தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இம்மாதிரியாக நாட்டில் பல தொழில்கள் பெருகினால்தான் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். அதுவும் வேலை இல்லாமல் திண்டாடுகிறவர்கள் நம் நாட்டில் அதிகம். நானே ஒவ்வொரு நாளும் 20 பேர்களுக்கு வேலைக்காகச் சிபார்சு கடிதம் கொடுக்கிறேன். வேலை கிடைக்கிறதோ என்னமோ. இப்படி வேலை இல்லாமல் திண்டாடுகிறவர்களுடைய பிரச்னை ஒரு பக்கத்தில் இருந்துகொண்டே இருக்கிறது. ஆகவே சிறிய, பெரிய தொழிற்சாலைகள் பல நம் ராஜ்யத்தில் ஏற்பட்டாகவேண்டும். அப்போதுதான் வேலையில்லாத் திண்டாட்டம் போகும்.

இப்போது கிண்டியில் நடைபெற்று வருகிற இண்டஸ்டிரியல் எஸ்டேட் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. சமீபத்தில் நான் கூட அங்கே சென்று ஒவ்வொரு வேலை அமைப்புகளையும் பற்றி நேரில் பார்வையிட்டேன். இந்தியாவில் மற்ற இடங்களில் இல்லாத உயர்ந்த கருவிகள் எல்லாம் அங்கே இருக்கின்றன. அதுவும் டாடா தொழிற்சாலையின் பிரதம என்ஜினியர் அங்கே வந்திருந்து அங்குள்ள டூல் ரூமைப் பார்த்துவிட்டு சில கருவிகளுக்குக் கூட ஆர்டர் கொடுத்ததாகச் சொன்னார். இதுமாதிரியான கருவிகள் எங்கும் கிடைக்கவில்லை? ஆனால் இங்கு கிடைக்கிறது என்பதற்குப் போதுமான விளம்பரமே செய்யப்படவில்லையே என்று சொன்னார். சரியான முறையில் இங்கு நடைபெறும் வேலைகள்



4th March 1961] [Sri C. R. Ramaswami]

இருக்கும் கருவிகள், இதனால் செய்யக்கூடிய பல தொழில்கள் இவற்றைப்பற்றியெல்லாம் தொழில் இலாகா பிரசாரம் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி தொழில்பேட்டைகள் இன்னும் பல நம் ராஜ்யத்தில் ஏற்பட்டாக வேண்டும். அதுவும் மதுரை, கோயம்புத்தூர் போன்ற பல நகரங்களில் ஏற்பட்டால்தான் இந்த ராஜ்யம் பூராவும் ஆங்காங்கே பல தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கு வழியேற்படும். அதுவும் இந்தத் தொழிற்சாலைகள் விஸ்தரிக்கப்பட்டு பலவிடங்களிலும் பரவலாக ஏற்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இங்கே இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று எல்லோரும் ஆவலோடு இருக்கிறார்கள். கிழக்கு ஜெர்மன் நிபுணர்கள் பார்வையிட்டார்கள், மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் பார்வையிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. கிழக்கு ஜெர்மன் நிபுணர்கள் ரிப்போர்ட் கொடுத்திருந்தாலும் மேற்கு ஜெர்மன் நிபுணர்களிடமும் கோரவேண்டும். அவர்களாகக் கொடுக்க மாட்டார்கள். எல்லாவற்றையும் வாங்கி விசாரித்து எந்தக் கம்பெனியார் கொடுக்கிற ரிப்போர்ட் நமக்குச் சாதகமாக இருக்கிறதோ அதை ஏற்று, அவர்கள் உதவியை நாடி இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும். நெய்வேலிச் சுரங்கம் வேலை செய்ய ஆரம்பித்தால் நமக்குக் கரி கிடைத்துவிடும். இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்திவிட்டால் நம் நாடு எல்லா வகையிலும் அபிவிருத்தி அடையும், பல தொழில்கள் ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **SRI A. R. SUBBIAH MUDALIAR:** *1961-62*-ம் வருஷத்து வரவுசெலவுத் திட்டத்தை ஆதரித்து சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதற்கண் இந்த வரவுசெலவுத் திட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். காரணம் கடந்த பத்து வருஷங்களாக செய்யப்பட்டு வந்துள்ள ஆக்கவேலைகள், திட்டங்களைப் பற்றி நன்றாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒருவகையில் ஜாதகக் குறிப்பு என்று கூடச் சொல்லலாம். அந்த ஜாதகக் குறிப்பைப் பார்த்தவுடன் எதிர்க்கட்சிக்காரர்களுக்குக் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. வரும் தேர்தலில் இந்த ஜாதகக் குறிப்புத்தான் வழிவகுக்கும். ஒன்றும் குறை சொல்வதற்கில்லையே என்று அவர்களே கலக்கம் அடைந்திருக்கிறார்கள். அதோடு இந்த பட்ஜெட்டில் 11-வது வரை ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிப்பது, 15 ஆயிரம் வரை சேல்ஸ் டாக்ஸ் கட்டுப்பாடு கொடுத்திருப்பது இவை எல்லாம் நல்ல அம்சங்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சங்கரன்கோயில் குடிதண்ணீர் திட்டத்திற்கு வழி செய்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். இது நெடுநாளாக எதிர்பார்த்த திட்டம்.

விவசாயத்தைப் பொறுத்த வரையில் நாம் எதிர்பார்த்தபடி 12 லட்சம் டன் உற்பத்தி செய்யாவிட்டாலும் 8 லட்சம் டன் உற்பத்தி செய்திருப்பதாகக் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தியை எதிர்பார்த்தபடி பெருக்க முடியாததற்குக் காரணம்

[Sri A. R. Subbiah Mudaliar] [4th March 1961

உரக் குறைவு, பாசன வசதிக் குறைவு என்று சொல்லப்படுகிறது. உரம் போதுமானபடி கிடைக்கவில்லை என்று சொல்லிமட்டும் தப்ப முடியாது. அதில் இருக்கக்கூடிய ஊழல்களைப் போக்க வேண்டும். சாதாரணமாக மார்க்கெட்டில் 60 ரூபாய், 70 ரூபாய்க்கு உரம் கிடைக்கிறது. காரணம் அடுத்த மாகாணத்தில் இருந்து நம் மாகாணத்திற்கு வருகிறது. இதற்குக் காரணம் மத்திய சர்க்காரின் கொள்கையில் இருக்கக்கூடிய ஊழல்தான். இதைப்பற்றியெல்லாம் விவசாய மந்திரிகளின் மகாநாட்டிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மகாநாட்டின் ரிப்போர்ட்டில்

"... a suggestion of the West Bengal Government for regulating the movement of fertilizers from one State to another and suggests the Minister for Food and Agriculture might undertake the examination of the various points involved in regulation of inter-Statemovement of fertilizers".

என்று ஒரு பாரா இருக்கிறது. இதன் மூலமாக என்ன தெரிகிறதென்றால் ஏதோ நஞ்சையை கணக்கு எடுத்துக்கொண்டு அதற்குத் தகுந்தபடி உரம் வாங்க கணக்கு காட்டுகிறார்கள். அந்தந்த மாகாணங்கள் உர வினியோகத்தை செவ்வனே செய்யாததினால் தான் லாரிகள் மூலமாக மத்திய பிரதேசத்தில் இருந்தும் இதர மாகாணங்களில் இருந்தும் சென்னை மாகாணத்திற்கு உரம் வருகிறது. இது ஒரு விதத்தில் பிரயோஜனமாக இருந்தாலும் வினியோக முறையில் தவறு இருக்கிறதென்ற குறை சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். மத்திய சர்க்காருடைய பங்கீட்டு முறையில் குறை இருக்கிறபடியால் நமக்குக் கிடைக்க வேண்டிய உரம் கிடைக்க வில்லை. ஆனால் தேவையில்லாதவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அதன் காரணமாக அந்த மூட்டைகள் எல்லாம் லாரி மூலமாக நமக்கு வருகிறது. இதனால் விலை ஏறுகிறது. இடையில் இருப்பவர்கள் அதிகமான லாபம் அடைகிறார்கள். ஆகவே உரம் வினியோகம் செவ்வனே நடப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். டீசல் எண்ணெய் சம்பந்தமாக சலுகை வேண்டுமென்று முறையிட்டும் இன்றுவரை அதற்கு முடிவு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது.

விவசாயம் சம்பந்தமாக இன்றைக்கு தேவைப்படுவது ஆராய்ச்சி. விவசாயக் கல்லூரி அப்கிரேட் செய்யப்பட்டு அதற்குச் சலுகை கொடுக்கப்பட்டு விவசாய ஆராய்ச்சி சம்பந்தமாக அதிகமான வேலைகள் செய்யப்படுகின்றன. விவசாயத்திற்கு அதிகமாக தேவைப்படுவது கால்நடைகள் இன்ஷூரன்ஸ், கிராப் இன்ஷூரன்ஸ்ம்தான். இதைப்பற்றி நான் பலதடவை வற்புறுத்தியிருக்கிறேன். இன்றுகூட ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் "கால்நடை இன்ஷூரன்ஸுக்கு வழி வகுக்கப்போகிறோம். கிராப் இன்ஷூரன்ஸுக்கு ஜனங்களிடத்தில் ஆதரவு இல்லை" என்று சொன்னார்கள். பயிர்களுக்கு இன்ஷூரன்ஸ் மிகவும் அவசியமானது. பரீட்சார்த்தமாக சில பகுதிகளுக்கு இதைக் கொண்டுவரலாம். பயிர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் வந்துவிட்டால் பிளான்ட் ப்ரொடக்ஷனுக்கு



4th March 1961] [Sri A. R. Subbiah Mudaliar]

இன்னும் தீவிரமாக வேலை செய்து பயிர்களுக்கு வரும் நோய்களைத் தடுக்க முடியும். இதனால் அதிக உற்பத்தி பெருகுவதற்கு ஏதுவாக இருக்கும். முக்கியமான தேவை பயிர்களுக்கு பாதுகாப்பு. பயிர்களுக்கு நோய்வருகிறது. இதைத் தடுப்பதற்கு செவ்வனே வழி வகுத்துக்கொடுத்தால்தான் நல்லது. ஒரு ஜில்லாவிற்கு ஒரு பிளாண்ட ப்ரொடக்ஷன் யூனிட் இருக்கவேண்டியது அவசியம். கிராப் இன்ஷூரன்ஸ் வந்துவிட்டால் ஒரு வழி ஏற்பட்டுவிடும்.

பருத்தி சம்பந்தப்பட்டமட்டில் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள பருத்தி வெளிநாட்டிலிருந்து வருகிறது. பருத்தி சம்பந்தமான ஆராய்ச்சியில் நாம் அதிகமான முன்னேற்றம் அடையவில்லை. ஆகையால் இது சம்பந்தமான ஆராய்ச்சி செய்து இப்பொழுது உற்பத்தி செய்வதைவிட அதிகமாக உற்பத்திசெய்வதற்கு வழி செய்யவேண்டும். ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு சாயில் டெஸ்டிங் யூனிட் தேவைப்படுகிறது. எந்த நிலத்தில் என்ன பயிர் செய்தால் நல்லது என்பது விவசாயிகளுக்குத் தெரியாமல் இருக்கிறது. கோவில்பட்டியில் இந்த வருஷம் ஒரு சாயில் டெஸ்டிங் யூனிட் ( Soil Testing Unit ) வைக்க திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு சாயில் டெஸ்டிங் யூனிட் அவசியமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பாசன வசதிகளை எடுத்துக்கொண்டால் பெரிய திட்டங்கள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டன. சிறிய திட்டங்களுக்கு 145 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை போதாது, காணாது. நம்முடைய மாகாணம் சம்பந்தப்பட்டவரை இரண்டு முக்கிய தேவைகள் இருக்கின்றன. 'Remodelling of all channels' தான் முக்கியமான தேவை. இப்பொழுது கால்வாய்களில் தண்ணீர் குறைவாக வந்துகொண்டிருக்கிறது. இந்தத் தண்ணீர் ஒழுங்காக வினியோகிக்கப்படவேண்டுமானால் இருக்கும் கால்வாயை மராமத்து செய்யவேண்டும். முக்கியமாக ஜமீன் ஒழிப்பு பிரதேசங்களில் பல வருஷங்களாக வேலை செய்யாமல் மதகுகள் தூர்ந்துபோய்விட்டன. கால்வாய்கள் தூர்ந்துபோய் இருப்பதால் தண்ணீர் ஒழுங்காக போனபாடில்லை. ஆகையால் 'Remodelling of channels' மிகவும் அவசியம்.

'Desilting' சம்பந்தமாக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மிக்க்குறைவாக இருக்கிறது.

ஒவ்வொரு ஆற்றிற்கும் ஒரு ரிசர்வாயர் இருந்துவிட்டால் மழை காலங்களில் வரும் தண்ணீரை தேக்கி வைத்து மற்ற காலங்களில் இதைப் பயன்படுத்த முடியும். இந்த வருஷம் பெய்த மழைத்தண்ணீர் அங்கங்கே சமுத்திரத்தில் போய் சேர்ந்துவிட்ட நிலையைப் பார்த்தோம். ஆகையால் ஒவ்வொரு நதிக்கும் ரிசர்வாயர் மாதிரி ஏற்பட்டுவிட்டால் வெள்ளம் வரும் நேரங்களில் தேக்கமுடியும்.

[Sri A. R. Subbiah Mudaliar] [4th March 1961

புது கிணறுகள் வெட்டுவதற்கு திட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆர்டிசான் வெல்கள், சப்-ஆர்டிசான் வெல்கள் ஜாஸ்தியாக பொறுத்துவதற்கு வழி செய்யவேண்டும். ஏனென்றால் பிராஜக்ட் இல்லாத ஏரியாக்களில் இதை உபயோகிக்க தயாராய் இருக்கிறார்கள். நான்கு ஆயிரம் ரூபாய் செலவானாலும் அவர்களுக்கு கடன் வசதியும், உதவித்தொகையும் கொடுத்தால் இதை எடுத்து நடத்தத் தயாராய் இருக்கிறார்கள். இதைக் கூடுதலாக விநியோகிப்பதற்கு திட்டம் வகுக்கவேண்டும். சில இடங்களில் பூமிகளில் தண்ணீர் இருந்தும் அதை வெளியில் எடுக்கமுடியாமல் தனிப்பட்டவர்கள் கஷ்டப்படுகிறார்கள். புறம்போக்கு நிலங்களாக இருந்தால் அங்கு இத்தகைய கிணறுகள் வெட்டுவதற்கு தனிப்பட்டவர்களால் முடிவதில்லை. சர்க்காரே இந்த இடங்களில் இத்தகைய கிணறுகள் வெட்டுவது நல்லது என்று நினைக்கிறேன்.

காட்டு இலாக்கா சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சிறு குன்றுகளில் மரங்கள் வைத்து வளர்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அங்கங்கே உள்ள பஞ்சாயத்து பொறுப்பில் விட்டுவிட்டால் காட்டுவளத்தை பெருக்க முடியும். ஒவ்வொரு ஜில்லா தலைநகரத்தில் இருக்கும் ஜில்லா அதிகாரிகளுக்கு டெலிபோன் தேவை. அவர்களுக்கு டெலிபோன் வசதி இல்லாததால் தொடர்பு வைத்துக்கொள்ள கஷ்டமாக இருக்கிறது. எஸ்டிமேட் கமிட்டி நீர்ப்பாசன சம்பந்தமாக ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து அதில் சொல்லப்பட்டிருக்கும் சிபார்சுகளை அமுல் நடத்துவது நலம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI P. U. SHANMUGAM**: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1961-62-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது விவாதம் நடைபெறுகிற இந்த நேரத்தில் நான் என்னுடைய கருத்துக்களை சொல்லி விவாதத்தில் கலந்துகொள்ளுகிறேன். 1961-62-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை அமைச்சர் அவர்கள் வெகு சிரமப்பட்டு 60 பக்கங்கள் எழுதி வைத்தார் என்று எனக்கு முன் பேசிய திரு. ராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒருவேளை 60 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டதினால் 60 பக்கம் எழுதிவைத்தாரோ என்னவோ எனக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும் 60 பக்கங்கள் எழுதிவைத்த அமைச்சரை உள்ளபடியே பாராட்டுகிறேன், இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டதற்காக.

நாட்டின் பொருளாதாரம் குறித்து கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது நான் இந்த புஸ்தகத்தில் துருவித் துருவிப் படித்ததில் என்னுடைய சிற்றறிவிற்கு எட்டியதெல்லாம் பொருளாதார வளர்ச்சியைக் குறித்து அமைச்சருக்கு பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறதென்றுதான் நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதே புஸ்தகத்திலிருந்து அமைச்சருடைய குழப்பத்திற்கு அறிகுறியாக என்னென்ன இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறேன். அதற்கான விளக்கங்கள் அதன் மூலம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.



4th March 1961] [Sri P. U. Shanmugam]

(குறுக்கீடு) குழப்பத்தைத் தீர்த்து வைத்தால் வரவேற்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முடிந்தவரை நானும் முயற்சிக்கிறேன். என்னால் தீர்க்க முடியாவிட்டால் மேற்கொண்டு அதற்கு மருந்து அண்ணா அவர்கள் தருவார்கள். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயமே அடிப்படையாக அமைந்துள்ளது.

11-30 a.m.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயமே அடிப்படையாக அமைந்துள்ளது என்று, விவசாயம்தான் பொருளாதார வளர்ச்சியின் அடித்தளம் என்று வர்ணித்துவிட்டு விவசாய வளர்ச்சி பற்றி நிதியமைச்சர் அவர்கள் வற்புறுத்தி, வலியுறுத்தி, விளக்கம் தந்திருக்கிறார்கள். விவசாயத்தை மட்டும் நம்பி நமது பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என்றால் இதே அறிக்கையில் 19-ம் பக்கத்தைப் புரட்டிப் பார்க்கலாம். "பொதுவாக தேசிய வருமானம் வளர்ச்சி அடைந்து வருகின்றது என்றாலும் 75% மக்கள் விவசாயத்திலேயே ஈடுபட்டிருக்கக்கூடிய காரணத்தினாலும் மக்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போகின்ற காரணத்தினாலும் தனி மனிதனின் வருமானம் வர வர குறையக்கூடிய நிலைமை ஏற்பட்டு வருகின்றது, பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் ஒரு சிறு பகுதியினரே விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கின்றனர், மற்றப் பெரும் பகுதியினர் வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர், அந்நிலையை நம் நாட்டிலும் ஏற்படுத்துவதன் மூலமாகத்தான் நாட்டிலுள்ள வறுமையைப் போக்க முடியும். ஆகவேதான் நம்முடைய திட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு பெரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது" என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னொரு இடத்தில் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, மக்களின் வாழ்க்கைத் தரம் கணிசமாக உயரவேண்டுமென்று சொன்னால் பெரிய அளவில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்துவது அவசியம் என்றும் கூறியிருக்கிறார்கள். விவசாயத் துறையில் வளர்ச்சி அவசியம் என்று சொல்லிவிட்டு தொழில் துறையில் வளர்ச்சி அவசியம் என்று இன்னொருயிடத்தில் கூறியிருக்கிறார்கள். தொழில் துறை நமது மாநிலத்தில் வளர முடியாத நிலையில் மத்திய அரசு நம் அரசின் கைகளை இழுத்துக் கட்டியிருக்கும் நிலையில் விவசாயத் துறை வளர்ச்சித்தான் முக்கியம் என்கிறார்கள். ஆனால் உண்மையை ஒப்புக்கொள்ளும்போது தொழில் துறை வளர்ச்சியும் அவசியம் என்று ஒப்புக் கொள்கிறார்கள். தொழில் துறை வளர்ச்சி என்று கூறும்போது சர்தார் வேதரத்னம் அவர்கள் சொல்லியது எனக்கு நினைவிற்கு வருகிறது. தமிழ் நாடு எல்லாத் துறையிலும் முன்னேறியிருக்கிறது என்றார்கள். என்னைவிட அவருக்கு நீண்டகால அனுபவம் இருக்கலாம். ஆனால் சர்தார் வேதரத்னம் அவர்களைவிட சிறந்த அரசியல் மேதை என்று தென்னாடு மட்டுமல்ல இந்திய உப கண்டமே ஏற்றுக்கொண்டிருக்கிற ஸர். ஏ. ராமசுவாமி அவர்கள் சில நாட்களுக்கு முன்பு கூறியிருப்பதை நான் பத்திரிகையில் பார்த்தேன். "பல மாகாணங்களையும் சுற்றி சுற்றிப்

[Sri P. U. Shanmugam] [4th March 1961

பார்த்தேன், அதன் பேரில் கூறுகிறேன், தமிழ் நாடுதான் எல்லா மாகாணங்களிலும் பின் தங்கியிருக்கிறது என்று. கேரளா, ஆந்திரா, கர்நாடகா இவைகளுக்கு தமிழ் நாடு முந்தியிருக்கலாம், ஆனால் மற்ற மாநிலங்களோடு தமிழ் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ்நாடு பின்தங்கித்தான் கிடக்கிறது" என்று சர் ஏ. ராமஸ்வாமி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் படித்துப் பார்க்கும் போது உள்ளபடியே மெத்த வருத்தமாயிருக்கிறது. தென்னாடு தேயவில்லை, வட நாடு வளரவில்லை என்று அமைச்சர்கள் முதற் கொண்டு ஆளும் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள் அனைவரும் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுவது கண்டு பரிதாபப் படுகிறேன். மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களின் சொற்பொழிவு களைப்பார்க்கும்போது மற்ற மாகாணங்களைவிட நம் மாகாணம் வளர்ந்துக் கொண்டிருக்கிறது என்று எந்த அமைச்சரும் ஆளும் கட்சியினரும் சொல்லி நான் கேட்டதில்லை. துர்பாக்கிய மாக தமிழ் நாடு அமைச்சர்களும், இங்குள்ள ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும்தான் தமிழ் நாடு வளர்ந்திருக்கிறது, தமிழ் நாடு வளர்ந்திருக்கிறது, மற்ற பகுதிகள் தேய்ந்திருக்கின்றன என்று ஒப்பாரி வைப்பது கண்டு நான் வேதனைப் படுகிறேன், வெட்கப் படுகிறேன். 1957-58-ல் நான் சட்டசபையில் வந்த நாளி லிருந்து வருகிற நிதிநிலை அறிக்கைகளை துருவி துருவிப் பார்த்திருக்கிறேன். 1957-58-ல் நிதியமைச்சர் அவர்கள், சேலம் இரும்பு பற்றிய ஆராய்ச்சி ஜெம்ஷட்பூரில் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். இந்த ஆண்டு அறிக்கையைப் பார்க்கும்போது இங்கிருந்து இரும்பு கனிகளையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி யையும் ஜம்ஷெட்பூருக்கு அனுப்ப ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். 1957-58-ல் ஆராய்ச்சி நடை பெற்றுக் கொண்டிருக்கிறதென்று சொல்லிவிட்டு, இப்பொழுது ஆராய்ச்சி செய்வதற்காக இரும்புக்கனி அனுப்ப ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது என்று சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த இரும்புக் கனி ஆராய்ச்சி எப்பொழுது முடியப் போகிறதோ, சோதனை, சோதனை என்று சொல்லி எவ்வளவு காலம் தள்ளிப் போடப் போகிறார்கள் இந்த அரசாங்கம். நம் மாநிலத்தில் ஒரு இரும்பு உருக்கு தொழிற்சாலை ஏற்படுத்த இருப்பதுபற்றி குறிப்பிட்டிருப்பது கண்டு பாராட்டுகிறேன். ஆனால் இதை விரைவில் வாங்குவதற்கு, வாதிட்டு வாங்க, இந்த அரசாங்கத்திற்கு ஏன் திராணியில்லாது போய்விட்டது. நமது மாநில கவர்னர் அவர்களைப் பார்த்தாவது அமைச்சர்களுக்கு கொஞ்சம் மானம், வெட்கம், ரோஷம் வளர்ந்திருக்க வேண்டும். ஆலாமில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை கொண்டு வருவதற்கு அவர்கள் போரிட்டு, வாதிட்டு மத்திய அரசுடன் சண்டைபோட்டு வாங்கினார்கள் தனது மாநிலத்திற்காக என்பதை தெரிந்து கொண்டிருந்தும் இவர்கள் இன்னும் தெளிவு பெற வில்லையே. அந்தத் துணிவு இந்த அரசாங்கத்திற்கு ஏன் வரவில்லை. சேலம் இரும்புக் கனி இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறது. முன்பு



[Sri P. U. Shanmugam] [4th March 1961

சொன்னார்கள், சண்முகத்தின் வார்த்தையைக் கொண்டே சேலம் இரும்பை உருக்கிவிட முடியுமா என்று. வார்த்தையைக் கொண்டு இரும்பை உருக்கிவிட முடியாது. அமைச்சர்களின் உள்ளத்தை கூட எங்கள் வார்த்தை உருக்க முடியவில்லையென்றால், சேலம் இரும்பை உருக்கிவிட முடியுமா? இரும்பைவிட கெட்டியாகயிருக் கிறது அமைச்சர்களின் உள்ளம். பின்னர், தூத்துக்குடி துறை முகத்தை விரிவுபடுத்தலாம், பின் சேதுசமுத்திரத் திட்டம் பற்றி முயற்சிக்கலாம் என்றும் இருக்கிறது. நான் கேட்கிறேன், சேது சமுத்திரத் திட்டத்தை ஏன் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவில்லை, அப்படிச் சேர்ப்பதற்குள்ள துணிவு இவர்களுக்கு ஏன் வரவில்லை. சேதுசமுத்திரத் திட்டம் என்ன தள்ளிப்போட வேண்டிய திட்டமா? இதன் முக்கியத்துவத்தைப்பற்றி குறிப் பிட்டுவிட்டு பின்னர் ஏன் இது தள்ளிப்போடப் பட்டிருக்கிறது? மத்திய அரசாங்கத்தோடு வாதிட்டு ஏன் இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முயற்சிக்கக் கூடாது? அதே போல் நெய்வேலியில் பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுமென்று 1957-58-லேயே ஆசை காட்டிவிட்டு அவை இன்னும் துவங்கப்பட வில்லை. 1960-க்குள் நெய்வேலிப் பகுதியில் மின்சார உற்பத்தி, பின்னர் பல தொழிற்சாலைகள் துவங்கப்படுமென்று சொல்லப் பட்டது. ஆனால் இது வரை காணோம். இப்பொழுது சொல்கிறார் கள் 1961-க்கும் பிறகுதான் ஆரம்ப வேலைகள் நடைபெறுமென்று. இவ்வளவு காலதாமதம் தென்னகத்திற்கு மட்டும் ஏன் ஏற்பட வேண்டும்? தென்னாடு வளர்ந்திருக்கிறது, வளர்கிறது என்றால் அது தொழில் துறையில் அல்ல, பிச்சைக்காரர்கள் வளர்கிறார்கள் இந்நாட்டில். வறுமை வளர்கிறது இந்நாட்டில், வேலையில்லாத் திண்டாட்டம் வளர்கிறது இந்நாட்டில், இங்கிருந்து வெளி நாடு களுக்கு ஓடினாலோ அங்கு வேலை கொடுப்பார் யாரும் இல்லை, மாறாக அங்கு நாய்களைப் போன்று அடித்து நொறுக்கப் பட்டாலும் அவர் களுக்கு நாதியில்லை. தமிழ் நாட்டிற்காக வாதிட்டு எடுத்துச் சொல்ல ஏன் நிதியமைச்சர் அவர்கள் தயங்குகிறார்கள். கடைசி யாக முடிக்கிற நேரத்தில் ஒரு வார்த்தை முக்கியமாக சொல்ல வேண்டும். இது, பட்ஜெட்டின் எந்தப் பக்கத்தில் இருக்கிறதென்று நிதியமைச்சர் அவர்கள் என்னைக் கேட்க வேண்டாம். மூன்று நான்கு நாட்களுக்கு முன்னர் எனது தொகுதிக்கு அடுத்த தொகுதியில் மந்திரி மாணிக்கவேலர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். அப்பொழுது அங்குள்ள ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், டெப்டி கலெக்டர் அவர்களையும் கூட்டிச் சென்று தேர்தல் நிதி வசூலித்தார்கள். இல்லையென்று மறுக்க முடியுமா? இதை நான் நிரூபிக்கத் தயார். டெப்டி கலெக்டரையும் அழைத்து சென்று 10,000 ரூபாய் வரை தேர்தல் நிதி வசூலித்தார்கள். என்ன துணிச்சல். ஏன் இப்படிச் செய்கிறார்கள், இதுதான் முறையா? பஸ் ஓனர்களை அழைத்து தேர்தல் நிதிக்கு பணம் வாங்கிவிட்டு பஸ் பெர்மிட் கொடுக்கிறார்கள். தேர்தல் செலவிற்கு கொடுத்த பணத்தை ஈடுகட்ட தேர்தல் முடிந்து பிறகு சேலத்திற்கும் ஓதம் பாத்திற்கும் பஸ் ரூட்கள் கொடுக்கிறார்கள். ஆனால் அவரது

4th March 1961] [Sri P. U. Shanmugam]

ஹெட்குவார்ட்டர்ஸ் சேலத்திலும் அல்ல, சிதம்பரத்திலும் அல்ல, பின் ஏன் சேலம்-சிதம்பரம் பஸ் ரூட் அவருக்கு கொடுக்கப்பட்டது? மாணிக்கவேலருக்கு தேர்தலில் பணம் செலவு செய்து வேலை செய்தார் என்பதினால்தான் கொடுக்கப்பட்டது என்பதைத் தவிர வேறு என்ன காரணம் கூறுவது. (குறுக்கீடு) டெப்டி கலெக்டரை அழைத்துச் சென்று தேர்தல் நிதி வசூல் செய்தது மூன்று நான்கு நாட்களுக்கு முன். வரப்போகிற தேர்தலானால் என்ன, முன்பு நடந்த தேர்தல் ஆனால் என்ன. நான் குற்றம் சாட்டும்போது ஆதாரமின்றி கூறவில்லை. டெப்டி கலெக்டரை அழைத்துச் சென்று நிதி வசூலித்தார்கள். இதை என்னால் நிரூபிக்க முடியும். எந்த விசாரணையாகயிருந்தாலும் சரி நான் கிராம மக்களை உடன் அழைத்து வந்து கட்டாயம் நிரூபிக்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இது முறையென்று கருதினால் ஜனநாயகம் இந்த நாட்டில் செத்து விட்டது என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: Since the hon. Member, Sri P. U. Shanmugam, dragged my name I have to reply to that. Now as regards someone getting a transport permit and all that I do not know why he should drag my name in that. If anybody gets any permit or anything at once some Minister or somebody is alleged to be connected with it. If the hon. Member makes any allegation, he must be able to prove it with facts and figures and instead of that making sweeping allegations is not fair.

Then as regards the collection of funds, I want to say this. The Minister goes on tour connected with the public work. Naturally officers accompany the Minister. After finishing the official business, he devotes some time in attending to public functions. Apart from that, he utilizes the leisure hours to do party work. From this one should not draw an inference that the officials were used for party work. Therefore it is entirely wrong to indulge in making sweeping allegations against me and unnecessarily dragging my name in this matter.

THE HON. SRI C. SUBRAMANIAM: May I also point out, Sir, that the hon. Member, Sri P. U. Shanmugam, does not know what democracy is. He thinks that the Deputy Collector is more important than the Minister and that the Minister requires the help of a Deputy Collector to collect funds. I really deplore the ignorance of the hon. Member with regard to democratic practice and the democratic set up. He has unnecessarily dragged the name of the Minister and has made irresponsible statement and allegations here.

SRI K. ANBAZHAGAN: ஸார், பாயிண்ட் ஆப் ஆர்டர், சட்ட மன்றத்தில் பேசப்படுகின்ற கருத்துக்கள், அவைகள் அமைச்சர்களை குறிப்பிடுவதாக இருந்தாலும் அவைகளை ஜனநாயகத்தில் சொல்லப்படுகின்ற கருத்துக்களாக ஏற்றுக்கொள்ள முடியாதா?



4th March 1961] [Sri K. Anbazhagan]

இவ்விதம் கூறப்படுகின்ற கருத்துக்களை 'இக்னரன்ஸ்' என்ற முறையில் சொல்லப்படுகிறது என்று சொல்லுவது முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அறியாமையாகப் பேசினால் அது அறியாமை என்று எடுத்துக்காட்ட வேண்டியது என் கடமை.

SRI P. U. SHANMUGAM: ஸார், பாயிண்ட் ஆப் பர்ஸனல் எக்ஸ்பிளனேஷன் . . .

MR. SPEAKER: நீங்கள் இதில் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது?

SRI P. U. SHANMUGAM: நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு பதில் அளிக்க விரும்புகிறேன்.

MR. SPEAKER: அப்படியானால் பேசுங்கள், ஆனால் சுருக்கமாகப் பேசவேண்டும்.

SRI P. U. SHANMUGAM: கனம் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நிதி அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி பேசும்போதும், அதிலுள்ள எங்களைப்பற்றி பேசும்போதும், நாங்கள் எல்லாம் அரசியல் தெரியாதவர்கள்; அறியாமையில் மிதக்கின்றவர்கள் என்றெல்லாம் கூறுகிறார்கள். ஜனநாயகத்தை முற்றிலும் தெரிந்த மேதைகள்தான் இந்த நாட்டை ஆளுகின்றார்கள் என்பதை நாங்கள் மறந்து விடவில்லை. இவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள எங்களுடைய கௌரவத்தைப் பற்றியோ, மதிப்பைப் பற்றியோ . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: அதுதான் தெரியாதா, சந்தி சிரிக்கிறதே.

SRI P. U. SHANMUGAM: உங்கள் காரியமும்தான் சந்தி சிரித்தது.

SRI A. GOVINDASAMI: உங்களுக்குள் திருப்பரங்குன்றத்திலும், திருச்செங்கோட்டிலும் கல்லெறி நடந்து கொண்டதும் எங்களுக்குத் தெரியாதா . . .

SRI P. U. SHANMUGAM: ஆகவே நிதி அமைச்சர் அவர்கள் எங்களைப்பற்றி கவலைப்படுவதை . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் இன்னொரு பிரசங்கமே செய்கிறார் . . .

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் அவர்கள் இன்னொரு பிரசங்கம் செய்யக் கூடாது. அதை நான் அனுமதிக்கவும் மாட்டேன். அடுத்தபடியாக ஸ்ரீமதி பொன்னம்மாள் அவர்கள் பேசுவார்கள்.

[4th March 1961]

* **SRIMATHI A. S. PONNAMMAL:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரவு செலவுத் திட்ட அறிக்கையை முழு மனதோடு ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இங்கே சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு சில அங்கத்தினர்கள் இந்தத் திட்டத்தினால் என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது, ரயில்வே மூலமாக வருகின்ற பணம், போஸ்டல் மூலமாக வருகின்ற பணம் எல்லாம் மத்திய அரசாங்கத்திற்குத்தான் போகிறது, இதிலிருந்து நமக்கு சரியான பங்கு வாங்க வேண்டாமா, அதற்கு இந்த அரசாங்கத்திற்கு சக்தியில்லையே என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி என்னவெல்லாமோ பேசுகிறார்கள். நாங்களும், பொருளாதாரம் பேசுகிறோம், எம்.எ.எக்னாமிக்ஸ் எல்லாம் நாங்களும் படித்திருக்கிறோம் என்ற முறையில் பொருளாதாரம் பேசுகின்றார்கள். உண்மையில் தென் பிராந்திய ரயில்வேயை எடுத்துக்கொண்டால் அது லாபத்தில் நடந்துக் கொண்டிருக்கிறதா அல்லது நஷ்டத்தில் இருக்கின்றதா என்பதையும் நாம் பார்க்கவேண்டும். நஷ்டத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் கொஞ்சம் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல, உலகத்திலுள்ள நாடுகளை எல்லாம் தன் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற ஆசை ஒவ்வொரு நாட்டுக்கும் இருந்து கொண்டிருக்கின்றது. அவ்விதமான ஆசை இருக்கும் வரை ஒவ்வொரு நாட்டுக்கும் ராணுவம் பலமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். நாட்டினுடைய வருமானத்தில் 250 கோடி ரூபாய் ராணுவத்திற்காக செலவு செய்யப்படுகின்றது என்பது உண்மைதான். ஆனால் அதே நேரத்தில் திராவிட நாடு பிரிந்தால் கூட அன்றைக்கும் ராணுவம் இருக்கவேண்டியது அவசியம் என்பதை இவர்கள் உணராமல் மத்திய அரசாங்கம் ராணுவச் செலவுக்காக அதிகமாக செலவு செய்கின்றது என்று மக்களுக்கு ஒன்றுமே தெரியாது என்ற நினைப்பில் இதை ஒரு தேர்தல் பிரசாரமாக எண்ணிக்கொண்டு மக்களிடத்தில் சொல்லி வருவது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. இன்றைக்கு நாட்டிலுள்ள மக்கள் எப்படியிருக்கிறார்கள் என்றால் ஒவ்வொரு பிரச்னையையும் மக்கள் அலசிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டும் அல்ல, பொருளாதாரத்தைப் பற்றி பேசுகிறார்கள் எதிர்க்கட்சியிலுள்ள சில அங்கத்தினர்கள். என்னவெல்லாமோ ஸ்டாடிஸ்டிக்ஸ் என்று சொல்லிக்கொண்டு, ஒரிசாவைப் பாருங்கள், வங்காளத்தைப் பாருங்கள், அந்த மாகாணத்தைப் பாருங்கள், இந்த மாகாணத்தைப் பாருங்கள் என்றெல்லாம் பேசுகின்றார்கள். அந்த நாட்டில் என்ன மூலப் பொருட்கள் கிடைக்கின்றன, நம் நாட்டில் என்னவெல்லாம் மூலப்பொருட்கள் கிடைக்கின்றன என்பதை எல்லாம் இவர்கள் எண்ணிப்பார்ப்பதே கிடையாது. தமிழ் நாட்டிலுள்ள பொருளாதார உயர்வைப் பற்றியோ, தாழ்வைப்பற்றியோ சொல்ல வேண்டுமானால் 1958-59-ல் எப்படியிருந்தது, 1959-60-ல் எப்படியிருந்தது, இப்போது எப்படி-



4th March 1961] [Srimathi A. S. Ponnammal]

யிருக்கிறது என்பதைப்பற்றி புள்ளி விவரங்களை காட்டி சொன்னால் அதை நாம் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு மாகாணமும் வளர்ந்து கொண்டு வருகிறது. அந்த முறையில் பார்த்தால் நம் நாட்டில் எந்த விதமான குறையும் இருப்பதாக சொல்ல முடியாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் சிலர் சில குறைகளைப்பற்றி சொன்னார்கள். அதற்கு சர்தார் ஐயா அவர்கள் எவ்வளவு அழுத்தமாகவும், அழகாகவும் சொல்ல வேண்டுமோ, அவ்வளவு அழுத்தமாகவும் அழகாகவும் எடுத்துக் கூறிவிட்டார்கள். இருந்தாலும் கூட அதைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன் . தொழில்களைப் பற்றியும் தொழிற்சாலைகளைப்பற்றியும் பேசும்போது எதிர்க்கட்சியிலுள்ள சில அங்கத்தினர்களும் அம்மையார் அவர்களும் கூறினார்கள், பாருங்கள், நெய்வேலியில் நிலக்கரி தொழிற்சாலை, நீலகிரியில் பிலிம் தொழிற்சாலை, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை இவைகள் எல்லாம் வரவேண்டும் என்று நாங்கள் கேட்டோம், சுவரொட்டிகளை அடித்து ஒட்டியிருந்தோம். இவ்வளவு எல்லாம் செய்தும் கூட அவைகளில் இன்னும் சரியான அளவுக்கு வேலை ஆரம்பிக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். சினிமாத்துறையில் வேண்டுமென்றால் நினைத்தவுடன் ஒருவர் கதை எழுதிவிடலாம், நடிக்க வேண்டுமானாலும் நடித்துவிடலாம், பாடத் தெரியாவிட்டாலும் கூட இன்னொருவர் பாடி, அவர் மூலமாக நடித்துவிடலாம். அதைப் போன்று இந்தத் திட்டங்களை எல்லாம் செய்துவிட முடியாது. எத்தனையோ இன்சினியர்களை நியமித்து அவர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து பார்த்து எப்படி எப்படி காரியங்களை எல்லாம் செய்து முடிக்க வேண்டும் என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து தான் இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டும். ஆகையால் சினிமாவைப் போன்று இதை (கம்பேர்) மதிப்பிடக் கூடாது என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு சமயத்தில் கனம் அங்கத்தினர் அம்மையார் அவர்கள் கூறினார்கள் அரிஜன விழாக்கள் நடத்தப்படுகின்றன, ஆனால் அவைகளில் எதிர்கட்சி அங்கத்தினர்களை பேசுவதற்கு அழைப்பதில்லை என்று எல்லாம் கூறினார்கள். அரிஜன விழா என்பது ஒரு அபிஷியல் ஃபங்ஷனாக நடத்தப்படுகிறது. அரிஜனங்களுக்கு அரசாங்கம் என்னென்ன காரியங்களை செய்கிறார்கள், அரிஜனங்களுக்கு அரசாங்கம் என்னென்ன உதவிகளை செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது, அவர்களுடைய பொருளாதார நிலை எப்படியிருக்கிறது, அதை உயர்த்துவதற்கு அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி பேசவேண்டுமே தவிர, ஏதோ அரசாங்கம் அரிஜனங்களுக்காக செய்கின்ற காரியங்களில் எல்லாம் அப்படி ஊழல் இருக்கிறது, இப்படி ஊழல் இருக்கிறது என்று பேச வேண்டுமென்றால் நிச்சயமாக அதற்கு, காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சி அங்கத்தினர்களாக இருந்தாலும் சரி கலெக்டர் அவர்கள் அனுமதி தர மாட்டார்கள் என்பதை அழுத்தமாக கூற விரும்பு

[Srimathi A. S. Ponnammal] [4th March 1961]

கிறேன். உண்மையாகவே அரசாங்கத்தார் அரிஜனங்களுக்கு என்னவெல்லாம் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி சொல்லுவதற்கு எதிர்கட்சி அங்கத்தினர்கள் முன் வருவார்கள் என்றால் அவர்களுக்கும் அங்கு முதலிடம் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய உரையைப்பற்றி பேச வருவோமேயானால், அதில் முதலாவதாக விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலில், நாம் எதிர்பார்த்த அளவுக்கு இன்றைக்கு உற்பத்தியை பெருக்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது ஓரளவுக்கு உண்மையாக இருந்தாலும் கூட, நாம் விவசாய உற்பத்தியை பெருக்கிக்கொண்டுதான் இருக்கிறோம். இதில் முக்கியமாக விவசாயிகளுக்கு அவசியப்படுகிற நேரத்தில் போதுமான அளவு உரம் கிடைக்காமல் இருப்பதாலும் போதிய அளவு உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. உற்பத்தியை அதிகமாக பெருக்குகின்றவர்களுக்கு மான்யங்கள் பரிசுகள் இவைகள் எல்லாம் நாம் கொடுக்கிறோம். இதே போன்று இயற்கை வளம், கம்போஸ்ட் உரம் இவைகளை அதிகமாக தயாரிக்கும் விவசாயிகளுக்கும் மான்யங்கள், உதவிகள், பரிசுகள் இவைகள் எல்லாம் கொடுக்கக் கூடிய ஒரு திட்டம் வகுத்தால் நம்முடைய நாட்டில் செயற்கை உரத்தை எதிர்பார்க்காமல் இதைக் கொண்டே அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி இதற்காக வேண்டிய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்றுதான் நீர்ப்பாசன வசதிகளை பொறுத்த மட்டிலும் பின்தங்கிய இடங்களில் நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுப்பதற்கு எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்துகொண்டிருக்கிறோம். அதில் முக்கியமாக சில இடங்களில் சில நீர்ப்பாசனத் திட்டங்கள் அன்-எக்னமிக்கல்-ஆக இருக்கிறது என்கிற காரணத்திற்காக அதை விட்டு விடக் கூடாது. உதாரணமாக என்னுடைய தொகுதியில் இருக்கிற சாத்தியாறு திட்டம் பல முயற்சிகளுக்குப் பின்னால் தான் இப்போது செக்ரட்டரியேட்டுக்கு வந்து ரீ-சர்க்குலேஷனுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே இம்மாதிரியான வரண்ட பிரதேசங்களில் நடக்கவிருக்கும் திட்டங்களை துரிதமாக நடத்த வழிவகை செய்யவேண்டும். அதேபோன்றுதான் ஆழமான கிணறுகள் வெட்டுவதற்கும் பல உதவிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. சாதாரணமாக இதற்காகக் கொடுக்கப்படும் தொகையைவிட இரண்டு மடங்கு செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அம்மாதிரியான கிணற்றிற்கு மின்சாரம் பொருத்தும் போது அதன் செலவும் இரட்டிக்கும். அம்மாதிரியான இடங்களுக்கு மின்சார கட்டணத்தையும் குறைக்கவேண்டும். கிணறுகளுக்கு பம்ப் செட் வைப்பதற்கு பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸ்களிலிருந்து கடன் வழங்கப்படுகிறது. ஆனால் சில இடங்களில் செக்யூரிட்டி போதாது



4th March 1961] [Srimathi A. S. Ponnammal]

என்று கடனை கொடுக்க மறுத்துவிடுகிறார்கள். இதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே இதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றால், ஒருவனுக்கு 4 ஏக்கர் டிரை லான்டாக இருக்கிறது என்றால் அதை செக்யூரிட்டியாக எடுத்துக்கொள்ள போதாவிட்டால் கொடுக்கும் பம்ப் செட்டையே செக்யூரிட்டியாக வைத்துக்கொண்டு கடன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் மிகவும் பின் தங்கிய பகுதிகளில்-வரண்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, தொழில் வளர்ச்சியைப்பற்றி சர்தார் ஐயா அவர்கள் விளக்கமாகக் கூறினார்கள். நமது நாட்டில் தொழில் பல நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டு வருகிறது. இருந்தும் கூட பலருக்கு வேலை வாய்ப்பு தரமுடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது, ஆகவே தொழிற்சாலைகளை ஏற்படுத்தும்போது ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் எல்லாவற்றையும் ஏற்படுத்த வேண்டுமென்று இல்லாமல் பரவலாக எங்கு எங்கெல்லாம் மூலப்பொருட்கள் கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அங்குள்ளவர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்பை அளிக்கவேண்டும் என்று மிகவும் பணிவோடும் தாழ்மையோடும் கேட்டுக்கொள்கிறேன். காகிதத் தொழிற்சாலை ஒன்றை எனது தொகுதியில் ஆரம்பிக்கவேண்டும் என்று நான் பல முறை கூறியிருக்கிறேன். எங்கள் பகுதியில் செங்கல் தொழிலைத் தவிர வேறு இல்லை. இப்போது பாண்டிய ராஜபுரத்தில் சர்க்கரை மில் ஒன்று இருக்கிறது. அங்கே கரும்புச் சக்கை நிறைய இருக்கிறது. அதைக் கொண்டு காகிதம் தயாரிக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட தொழிற்சாலை ஒன்றை வாடிப்பட்டியில் ஏற்படுத்தினால் பின்தங்கி இருக்கக்கூடிய பகுதிக்கு வசதியாக இருக்கும்.

அதே போல் மூங்கில். பெரியாறு வாய்க்கால் பகுதியில் மூங்கிலை உற்பத்தி செய்து, பிற்பட்ட பகுதிகளில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிராமத் தொழில்கள். கைத்தறி பற்றிப் பேசுகின்றவர்கள், கைத்தறிக்காக கண்ணீர் வடிக்கிறோம் என்று பேசக்கூடியவர்கள் கையால் நூற்கக்கூடிய கதரை ஆதரிக்காமல், கதர் கட்டினால் காங்கிரஸ்காரர் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமும், சர்வ சேவா சங்கமும் சேர்ந்து ஏறக்குறைய 5 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அம்பர் சர்க்காவை கிராமங்களில் விரிவுபடுத்தினால் இந்தத் தொகை 6 அல்லது 7 லட்சமாக உயர்ந்து விடும். அதனால் அந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். உதாரணமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் என்னுடைய தொகுதியாகிய திலக்கோட்டையில் ஒரு பெண் நூல் நூற்று மாதம் 90 ரூபாய் சம்பாதிக்கும் அளவுக்கு வேலை செய்கிறாள் என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[Srimathi A. S. Ponnammal] [4th March 1961

அடுத்தபடியாக குடிநீர் திட்டம். இதில் இப்போது நேஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீமில் ஆற்றுப் பாசன கால்வாயிலிருந்து எடுத்திருக்கிறார்கள். எனது தொகுதியில் 98 கிணறுகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவைகள் 1961-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்படவில்லையென்றால் அடுத்த ஆண்டிலிருந்து சில பிளாக்குகளைத் தவிர பாக்கி இடங்களில் இந்தத் திட்டம் நிறுத்தப்படும் என்று ஒரு சிலர் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வேலை நடக்காததற்குக் காரணம் மின்சாரம் இல்லாததுதான். அதனால்தான் பல கிணறுகள் வேலை ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன. ஆகையால் மின்சாரத்தை அதிகமாகக் கொடுத்து 1961-62, 1962-63, 1963-64-ம் ஆண்டுகளுக்கு இந்தத் திட்டத்தை நீடித்து எல்லாப் பகுதிகளுக்கும் பூராவாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதியை எடுத்துக்கொண்டால் தொழில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள், விவசாயிகளுக்கு வீடு கட்டும் திட்டம் இருக்கிறது என்று. இந்தத் திட்டத்தின்படி 87½ சத விகிதம் சர்க்கார் கடன் கொடுக்கிறது என்றும் பாக்கி 12½ சத விகிதம் விவசாயிகள் முன் பணம் போட்டு வீடு கட்டிக்கொள்ள திட்டம் வகுத்திருக்கிறது என்று சொன்னார்கள். திட்டம் வகுத்திருந்தும் மக்களுக்கு இது தெரியவில்லை. எல்லா பிளாக்குகளுக்கும் இந்த உத்திரவை அனுப்பி மக்களுக்கு அறிவிக்க ஏற்பாடு செய்தால் சௌகரியமாக இருக்கும்.

கடைசியாக கல்வித் திட்டத்தை எடுத்துக்கொண்டால் எல்லா குழந்தைகளுக்கும் ஜாதி மத வித்தியாசம் இல்லாமல் 11-வது வகுப்பு வரையில் இலவசமாக படிப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அம்மையார் அவர்கள் பேசும்போது ஜாதியே இருக்கவேண்டும் என்று கூறினார்கள். ஜாதி இருக்கவேண்டுமென்று ஒத்துக்கொண்டாலும், ஹரிஜனங்களிலே கூட ஒரு சிலர் பணக்காரர்களாக இருக்கிறார்கள். எவ்வளவு இருந்தாலும் அவர்கள் இனாமாகப் படிக்கிறார்கள் என்று கூறிக்கொள்ளுகிறேன். மேலும் மேலும் ஜாதி ஜாதி என்று வித்தியாசத்தை வளர்த்துக் கொண்டு போகவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். பகல் உணவுத்திட்டத்தில் 10-12 லட்சம் பேர்களுக்கு உணவு கொடுக்கிறோம். துணி கொடுக்கிறோம். இப்போது இருப்பது போல் 6 நயா பைசா என்ற அடிப்படையில் கொடுக்காமல் எவ்வளவு அரிசி வேண்டும் என்ற அடிப்படையில் . . . . . (மணியடிக்கப்பட்டது.)

**MR. SPEAKER :** மணி அடித்ததும் அங்கத்தினர் உட்கார வேண்டும். 'கடைசியாக' என்று சொன்னவுடன் சீக்கிரத்தில் பேச்சை முடித்து விடுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் மூன்று நிமிஷங்கள் ஆகிவிட்டன. மணியடிப்பதைத்தவிர எனக்கு வேறு வழியில்லை. இப்பொழுது வி. கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுவார்.



4th March 1961]

* **SRI V. K. KRISHNAMURTHY :** அவைத் தலைவர் அவர்களே, மதிக்கும், நிதிக்கும், நீதிக்கும் அமைச்சராய் விளங்கும் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அமைத்த வரவு செலவுத் திட்டம் இவண் இலங்குகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இனிதே முடிந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் மலரும் பொழுது தமிழ் நாடு என்ற பெயர் பெற்று வரவு செலவுத் திட்டம் விளங்குகிறது.

பல்லாற்றானும் தமிழகம் நலம் பெற்று, வளம் பெற்று விளங்கல் வெள்ளிடை மலை. கழிந்த பத்தாண்டுகளில் எய்திய சாதனைகளும், மேற்கொண்டு எய்த இருக்கும் சாதனைகளுக்குரிய வழிவகைகளும் விளங்குகின்றன. நலத்தை நல்கி, வளத்தை வழங்கிய இத்திட்டம் பழம் மலிந்த சருக்கமெனத் திகழ்கிறது என்றாலும், இதைப் பழிமலிந்த சருக்கமெனத் திரித்துக்கூறும் இயல்புடையோரில்லாமலில்லை.

தமிழ்நாடு பொருளாதாரத் துறையில் பெரு வளர்ச்சி எய்தியிருப்பது நாடாளும் அமைச்சரவையின் திறமைக்கோர் எடுத்துக் காட்டு. நாடு முன்னேற்றம் எய்தி விரைந்து சென்று மன்பதை மகிழ்வில் திகழும் என்ற நல்ல நம்பிக்கையூட்டுகிறது.

வரியில்லாமலிருக்கிறது என்றதும் இன்புறாமலிருக்க இயலவில்லை.

ரூ. 25,000 வரை விற்பனை செய்யும் வியாபாரத்திற்களித்த சலுகை ரூ. 50,000 வரை நீடிக்கப்பட்டிருப்பதைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

6 முதல் 11 வயது வரையில் உள்ள எல்லா மாணவர்களுக்கும் கட்டாயக் கல்வி அளிக்கும் திட்டம் மிகச் சிறந்த திட்டம். 300 மக்கள் இருக்கும் ஏனைய கிராமங்களிலும் பள்ளிக்கூடம் இருந்தே தீரவேண்டுமென்ற திட்டம் நல்ல திட்டம். எல்லா ஏழை மாணவர்களுக்கும் 11-வது வகுப்புவரை இலவசமாக கல்வி அளிக்கும் திட்டம் மிக மிக நல்ல திட்டம். சமுதாயத்திற்கு வாழ்வளிக்கும் இவ்வரவு செலவுத் திட்டத்தை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

ஆண்ட ஆங்கிலேயன் அகன்ற பிறகு அந்த ஆட்சியே சிறந்த ஆட்சி என்றும், உயர்ந்த ஆட்சி என்றும் உயர்த்திக் கூறியதை ஆராய்தல் வேண்டும். ஆங்கிலேய ஆட்சியிலே தமிழகத்தில் ஒரே அணைக்கட்டு இருந்தது; இன்று தமிழகத்தில் பதின்மூன்று அணைக்கட்டுகள் இருக்கின்றன. இதைவிடச் சிறந்த சாதனை வேறு என்ன வேண்டும்?

உணவு உற்பத்தியை உற்று நோக்கின் 1950-51-ல் அரிசி 19·5 லட்சம் டன்; 1960-61-ல் அரிசி 35·5 லட்சம் டன்; 16 லட்சம் டன் அரிசி அதிக உற்பத்தியல்லவா? மற்ற மாநிலங்களை விட ஓர் ஏக்கருக்கு தமிழகத்தில் நிரம்ப உற்பத்தி என்பது நன்கு புலனாகிறது. அதாவது 1,332 ராத்தல்; இந்த அளவிற்கு வட நாட்டில் உற்பத்தியில்லை; உற்பத்தி இல்லை என்று வடநாடு வாடுகிறது; உற்பத்தி அதிகமென்று தமிழகம் தழைக்கிறது.

[Sri V. K. Krishnamurthy] [4th March 1961

மற்ற மாநிலங்களில் சராசரி கரும்பு உற்பத்தி ஓர் ஏக்கருக்கு 14·7 டன்; ஆனால், நம் தமிழகத்தில் சராசரி ஓர் ஏக்கருக்கு 25·9 டன். வட நாடு வாடுகிறது; தமிழகம் தழைக்கிறது.

பெரிய நீர்ப் பாசனத் திட்டங்களால் 25·36 லட்சம் ஏக்கர் நிலம் கால்வாய்ப் பாசனம் பெற்றுள்ளன. இது நாட்டு வளர்ச்சியைக் காட்டுகிறதா? அல்லது தளர்ச்சியைக் காட்டுகிறதா?

கடந்த பத்து ஆண்டுகளில் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு செலவிட்ட தொகை ரூ. 8 கோடி; ஆனால், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 8 கோடி.

அன்று ஆங்கில ஆட்சியில் விளங்கிய பள்ளிக்கூடங்கள் எத்தனை? இன்று விளங்குகின்ற பள்ளிக்கூடங்கள் எத்தனை? பள்ளிக்கூடம் இல்லாக் கிராமம் இல்லை. அன்று இருந்ததா இவ்வாறு? சார் பிடியிலிருந்து விலகிய ரஷ்யா, மூன்றாம் ஜார்ஜ் பிடியிலிருந்து விலகிய அமெரிக்கா, எந்த அளவிற்கு ஆரம்பக் கல்விக்குச் செலவு செய்ததோ அதைவிட தமிழகம் ஆரம்பக் கல்விக்கு அதிகமாகச் செலவு செய்து கல்வியைப் பரப்பி இருக்கிறதே; இதை மறுக்க முடியுமா? இந்த அளவிற்கு இந்தியாவில் எந்த மாநிலத்தில் செலவு செய்யப்படுகிறது?

ஏழை மாணவர்களுக்கு இலவச நண்பகல் உணவு நல்கி, உடை நல்கி, பலகை, புத்தகங்கள் நல்கி, அறிவறிந்த மக்களாக்கும் அறப் பணி சமுதாயத்திலே மலர்ந்து தமிழகத்திலே திகழ்ந்து மற்ற மாநிலங்களிலே பரவி, இந்தியாவில் இணையற்றதாக இலங்கி, கீழ் நாட்டிலே கீர்த்தி பெற்று உலகத்திலே உயர்ந்த முதல் உன்னத திட்டமாக உலவுகிறதே பள்ளிச் சீரமைப்புத் திட்டம். பச்சிளங் குழந்தைகளிடையே நிலவியுள்ள பட்டினியை விரட்டியடிக்கும் திட்டமல்லவா? இந்தியாவிற்கு வழிகாட்டுகிறதே; உலகுக்கும் வழி காட்டுகிறதே; இது மலர்ந்தது தென்னகத்திலா அல்லது வட நாட்டிலா?

மின்சார இயக்கம் மின்னல் வேகத்தில் பரவியிருக்கிறது. 1951-ல் சராசரி 12 யூனிட் அனுபவித்தனர். ஆனால், தற்பொழுது 1961-ல் சராசரி 60 யூனிட் அனுபவித்து வருகிறதைக் கண்கூடாகக் காண்கிறோம். இன்று தமிழகத்தில் பன்னீராயிரம் கிராமங்களுக்கு விவசாயத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அளவிற்கு வட நாட்டில் எந்த மாநிலத்தில் மின்சாரம் இயங்குகிறது?

வியக்கத்தகு சாதனைகளால் தமிழகம் அடைந்துள்ள முன்னேற்றங்கள் புலப்படவில்லை. குருட்டரசனுக்குக் கொளுத்திய விளக்காக அல்லவா விளங்குகிறது? தமிழகம் ஒளி பெற்று விவசாயம் வளர்ச்சியுற மின் இயக்கம் பரப்பப்பட்டிருப்பதை பாராட்டாமல் என்ன சாதனை என்று ஏதமுற வினாக்கள் எழுகின்றனவே? என் செய்வது?



[Sri V. Krishnamuthy] [4th March 1961

வேலையில்லாத் திண்டாட்டம் தீரவில்லை என்று கூப்பாடு போடுகிறார்கள். இரண்டாம் யுத்த பிற்காலத்தில் எந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கி இருக்கிறது? பெரிய யந்திரங்களை வைத்து நாட்டு வளர்ச்சிக்குப் பாடுபடும் மேல் புல நாடுகளிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் மறைந்தபாடில்லை. குறைந்தபாடில்லை.

மேல் புலத்தை இதயத்தில் வைத்து இந்த நாட்டு நிலையை நவின்று எள்ளி நகையாடுகின்றார்கள். வளர்ச்சி இல்லை, முன்னேற்றம் இல்லை என்று கூப்பாடு போடுகிறார்கள். எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன், அந் நாடுகளையும், நம் நாட்டையும் ஒப்பு நோக்கி. ஒரு சதுர மைலுக்கு மக்கள் நெருக்கம் சுமார் 40; மற்ற நாட்டில் ஒரு சதுர மைலுக்கு மக்கள் நெருக்கம் சுமார் 36; இந்தியாவில் சராசரி ஒரு சதுர மைலுக்கு மக்கள் நெருக்கம் சுமார் 300 அல்லது 350; தமிழகத்தில் இதைவிட ஒரு சதுர மைலுக்கு மக்கள் நெருக்கம் சிறிது கூடுதலாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலன்றோ நம் நாட்டு நிலையை நன்கு ஆராய வேல்டும். மிகக் குறைந்த நெருக்கமுடைய நாடுகளை, மிக மிக அதிகமான பன்மடங்கு நெருக்கம் நிறைந்த நம் நாட்டுடன் ஒப்பு நோக்கி எள்ளிநகையாடல் பொருந்தாக் கூற்று. நம் இந்தியாவைவிட எண் மடங்கு நிலப்பரப்பில் அதிகமும் மக்கள் தொகையில் பாதியும் கொண்ட ரஷ்யாவை இழுத்து வளர்ச்சியைப் பார் என்றும், அவர்களுடன் ஒத்துப் பாடுபவர்களும் கூறுவார்கள். மாக்சீய அரசியல் சமுதாயப் பொருளாதாரச் சித்தாந்தமோ அல்லது மற்ற அரசியல் சமுதாயப் பொருளாதாரச் சித்தாந்தமோ நம் நாட்டுக்கு வழி வகையை வழங்க இயலுமா?

இந்நாட்டு இயற்கை நிலை, வளமை நிலை, மூலப் பொருள் நிலை, சமுதாயப் பண்பு நிலை, இவைகளைக் கொண்டே நடைமுறைக்கு ஏற்ற, பலனளிக்கும் வகையில் எதிர்பார்த்ததைவிட நற்பலன் கிட்டியிருக்கும் வகையிலும், துறையிலும் பணி புரிந்து முன்னேற்றம் எய்த வைத்த இந்த அமைச்சர் அவையைப் பாராட்டுகிறேன். இதைவிடச் சிறந்த முறையை, வழியை, துறையைத் துருவி ஆராய்ந்து அறிந்தவர்கள் யார்?

ஹரிஜன முன்னேற்றத்தை, அமெரிக்காவிலுள்ள நீக்ரோ முன்னேற்றத்தை, ஆகிய இரண்டையும் ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டும். செல்வங் கொழிக்கும் அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்களைவிட நம் அரிஜன மக்கள் நன்கு முழு உரிமையுடன் வாழ்கிறார்கள். இங்கு அரிஜனங்கள் செல்லாத இடமில்லை. வழிபடாத கோயில் இல்லை. பெறாத உத்தியோகமில்லை. அடையாத சலுகை இல்லை. ஒத்தாரும், உயர்ந்தாரும், தாழ்ந்தாரும் ஒருமையுளராகி உலகியலை இயங்கவைக்க ஆற்றிய பணியில் பலன் கண்டது இன்றைய அமைச்சர் அவை.

[Sri V. K. Krishnamurthy] [4th March 1961

இவை எல்லாவற்றையும் ஒப்புநோக்காது திரித்துக் கூறும் இயல்புடையவர்களைக் கண்டு வருந்துகின்றேன். கனரகத் தொழில், சேலம் இரும்பு, தென்னாற்காடு நிலக்கரி விரைவில் உருவாகவில்லை என்று ஊறுற உரைக்கின்றனர். வளர்ச்சிக்கு அமைச்சர் அவை ஆவன புரிகிறது. கற்பனையில் கதை தீட்டி, கட்டுரை புனைந்து, பாத்திரங்களை படைத்து படத்தில் காட்டுவது அன்று தொழில் வளர்ச்சி, தொழில் முன்னேற்றம். ஆனால், அறிவியலார், அயல்நாட்டு நிபுணர்கள் ஆய்வின் முடிவை அடிப்படையாகக் கொண்டிருப்பதேயன்றி படம் எடுப்பதைப் போன்றதன்று.

12 noon வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த அளவில் ஆறு இருந்தும் நீரில்லை; உள்ள நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கூடாதென்ற 'பாலார் பேஸின் ஆக்ட்' இப்பொழுது அமுலில் இருக்கிறது. இந்த சட்டத்தை ரத்து செய்து வரண்ட வடாற்காட்டிற்கு வாழ்வளிக்க அமைச்சரவையைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வடாற்காடு மாவட்டத்தில் மிகச் சிறந்த முறையில் விரைந்து விவசாயத்திற்கு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. என்றாலும், சில பகுதிகள் தனியார் துறையில் கட்டுண்டிருப்பதால் (வேலூர் எலெக்ட்ரிஸிடி கார்ப்பரேஷன்) மின்சாரம் பரப்பப்படவில்லை. குறிப்பாக, கணியம்பாடி பகுதி வட்டார வளர்ச்சியில் இருப்பினும் மின்சாரம் பரப்பப்படவில்லை. ஆதலால், அருள் கூர்ந்து மின்சார அமைச்சர் தலையிட்டு கணியம்பாடிப் பகுதிக்கு மின்சாரம் பரப்ப ஆணையிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமப் பகுதிகளில் போக்குவரத்திற்கு அரண் செய்யும் பாதைகள் இல்லை. விளைந்த பொருள் வெளியே போகவும், வெளியார் வந்து பெற்றுச் செல்லவும் பாதை இல்லை. இதைத் தெரிந்து கிராமப் பகுதிகளில் அதிகமாகப் பாதைகள் போட்டு, கிராம மக்கள் வளம்பெற ஆவன செய்யலாம்.

வேலூர் தாலுக்காவில் அணைக்கட்டு, அப்புக்கல், கீழ்க்கொத்தூர், ஒடுகத்தூர் இவ்வழியாக நல்ல பாதை போட்டே தீர வேண்டும். கழிந்த முப்பது ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட பகுதி.

வேலூர் நகரத்திலிருந்து போகும் டவுன் பஸ்களை 15 மைல் தொலைவிற்கு விரிவாக்கவும், வேலூரிலிருந்து ஊசூர் வரை டவுன் பஸ் போக ஏற்பாடு செய்யவும், வேலூரிலிருந்து கல்பட்டு வரை பஸ் போகவும் ஆவன செய்யவேண்டும்.

இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தைப் பாராட்டி வரவேற்கின்றேன். வாழ்த்துகின்றேன். வணக்கம்.

**Sri N. MARUDACHALAM :** சபாநாயகர் அவர்களே, இன்றைய 1961-62 வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். அதாவது இந்த



4th March 1961] [Sri N. Marudachalam]

வரவு செலவுத் திட்டத்திலே முக்கியமாக விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயமானது சென்ற வருஷத்திலே எந்த அளவிலே தானிய உற்பத்தியிலே அதிகரித்திருந்ததோ, அதைவிட பன்மடங்கு இந்த வருஷம் அதிகரித்திருக்கிறது என்பதை இந்த வரவு செலவுத் திட்டத்திலே இருந்து தெரியவருகிறது. அப்படி அதிகரித்திருந்தும், எவ்வளவுக்கெவ்வளவு அதிகரித்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு விலைவாசிகள் இரட்டிப்பாக உயர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம் என்னவென்று தெரியவேண்டும். அதாவது இன்று தானியமானது விளைந்து, விவசாயினுடைய வீட்டிற்கு வரும் போது, அந்த தானியத்தின் விலையானது குறைந்துவிடுகிறது. அதே சமயத்தில் ஒரு வியாபாரியினுடைய கைக்கு அந்த தானியம் மாறுகின்ற போது விலைவாசி அதிகமாக உயர்ந்துவிடுகிறது. இதற்குக் காரணம் தனிப்பட்ட ஒரு முதலாளிக்கு ஊக்கம் கொடுப்பதுதான். அவர்கள் தங்கள் இஷ்டம் போல் விலைவாசிகளை உயர்த்துவதற்கு ஒரு சந்தர்ப்பமும், சூழ்நிலையும் ஏற்படுகிறது. அதே சமயத்தில் நாம் தொழில் துறையில் முன்னேறிக்கொண்டு வந்திருப்பது வாஸ்தவம்தான். அப்படி தொழில்துறையிலே நாம் முன்னேறி இருந்தாலும்கூட, வேலை இல்லாத் திண்டாட்டம் ஒழிந்த பாடில்லை. நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு, இன்றைக்கு அரசாங்கம் இந்த தனிப்பட்ட முதலாளிகளுக்கு சலுகைகள் எதுவும் கொடுக்கக் கூடாது. அப்படி சலுகைகள் கொடுக்காவிட்டால், இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து விட முடியுமென்று கருதப்படுகிறது. ஆகவே இதைப் போக்குவதற்கு சர்க்கார் உடனடியாக ஒரு முறையைக் கையாள வேண்டும். அதாவது இன்றைக்கு ஒரு மில்லை ஒரு தனிப்பட்ட முதலாளி கட்டி, அதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டால், உடனடியாக எந்தவித நிபந்தனையும் இல்லாமல் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. சர்க்காரின் அனுமதியின் பேரில்தான் மில் கட்டப்படுகிறது. அப்படி மில்லைக் கட்டும்போது, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டுமானால், இன்றைக்கு இந்த நாட்டிலே உள்ள ஹரிஜன மக்களுடைய வாழ்க்கைத் துறையையும், பொருளாதாரத் துறையையும் உயர்த்த வேண்டுமானால், அவர்கள் அப்படி மில்லைக் கட்டும்போதே ஒரு கட்டுப்பாட்டை விதிக்கவேண்டும். அதாவது 100-க்கு 35 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை விதித்து, அவர்களுக்கு லைசன்ஸ் கொடுப்பார்களேயானால், அதன்மூலம் இந்த நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும். அதே சமயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கு ஒரு வசதி செய்து கொடுக்க முடியும். இந்த முறையைச் சர்க்கார் கையாண்டு, முதலாளிகளுடைய சலுகைகளை ஓரளவு கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்கு வேலை கிடைப்பதிலே பல கஷ்டங்கள் ஏற்படுகிறது. நேரடியாக ஒவ்

வொரு இடத்திலும் இதைச் சென்று பார்த்தால் தெரியும். இன்றைக்கு பாப்பநாயகன்பாளையத்தில் ஒரு மில் கட்டப்பட்டிருக்கிறது. அங்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை கொடுப்பதில்லை. தங்களைச் சார்ந்தவர்களைத்தான் அவர்கள் வேலைக்கு வைத்திருக்கிறார்கள். ஆகவே இப்படி ஒரு நிபந்தனை விதித்தால்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த முறையைச் சர்க்கார் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். தனிப்பட்டவர்களுடைய மூலதனத்திலே நாம் கை வைப்பது தவறு என்று சர்க்கார் எண்ணினால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த நிபந்தனையால் நன்மை ஏற்படுகிறது என்று எண்ணும்போது இதில் இப்படி தலையிடுவதில் தவறில்லை என்று நினைக்கிறேன்.

அதே சமயத்திலே, இன்றைக்கு எங்கள் பகுதியிலே குளங்கள் மராமத்து செய்யப்படாமல் இருக்கிறது. ஆனால் பொதுவாக எல்லாப் பகுதிகளிலும் குளங்கள் மராமத்து செய்யப்படுவதாகப் பேசப்படுகிறது. சென்ற 10 ஆண்டு காலத்திலே 8 கோடி ரூபாய் இதற்காக செலவிடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்படுகிறது. எங்கள் பகுதியிலே 15 குளங்கள் இருக்கின்றன. ஆனால் இப்படி 8 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டும், அந்தக் குளங்களில் ஒன்றுகூட மராமத்து செய்யப்படவில்லை. காரணம் என்னவென்று தெரியவில்லை. எதிர்க் கட்சியைச் சேர்ந்தவன் என்பதால், அப்படி மராமத்து செய்யப்படாமல் விடப்பட்டிருக்கிறதோ என்னவோ. ஆகவே இன்றைக்கு இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எங்கள் பகுதியிலே எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் கிடையாது. குளத்தை நம்பித்தான், கிணற்றை நம்பித்தான் அங்கு நஞ்செய் நிலங்களை பயிர் செய்கிறார்கள். அதற்காக வேண்டி குளங்கள் மராமத்து செய்ய வேண்டியது அவசியம். அப்படி மராமத்து செய்தால்தான் நாளடைவில் விளைச்சலை அதிகப்படுத்த முடியும். ஆகவே இதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுகூட, இன்றைக்கு ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதியை எடுத்துக்கொண்டால், அங்கெல்லாம் காங்கிரஸ்காரர்களுடைய தலையீடு அதிகமாக இருக்கிறதை கண்கூடாகப் பார்க்கிறோம். அதாவது இன்றைக்கு சிறுவாணிப் பகுதியிலே பல தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதி இருக்கிறது. அங்கெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் பல குடிசைகள் கட்டிக் கொண்டு வசித்து வந்தார்கள். அதை திடீரென்று ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்தவர்கள் பிரித்து எறிந்து விட்டார்கள். அது இப்போது சர்க்கார் நிலமா, அல்லது தனிப்பட்ட சொந்தக்காரர்களைச் சார்ந்ததா என்று பரிசீலனையில் இருக்கிறது. அப்படி பரிசீலனையில் இருக்கும்போது தாசில்தாரும், ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் சேர்ந்து கொண்டு பிரித்து எறிந்து விட்டார்கள். காரணம்



தெரியவில்லை. அந்தப் பகுதிகளிலே இப்போது காங்கிரஸ்காரர்கள் புகுந்து, நீங்கள் எல்லாம் காங்கிரசிலே சேர்ந்து விட்டால், உங்களுக்கு மீண்டும் அதே இடத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் என்று கையெழுத்துப் போட்டு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். காட்டவேண்டுமென்று சொன்னாலும் காட்டுகிறேன். இந்த மாதிரி நஞ்சுண்டாபுரத்திலே இருக்கக்கூடிய ஒரு இடத்திலே குடியிருப்புக்குப் பக்கத்தில் ஒரு கோயில் கட்டி வழிபட்டுக் கொண்டு வருகிறார்கள். அந்த ஊர்ப் பஞ்சாயத்துப் போர்டு தலைவர் ஒரு பெரிய காங்கிரஸ்காரர். அவர் அந்த நிலத்தை ஆக்கிரமிப்பதற்காக வேண்டி, அந்த இடத்திலே ஒரு பங்கு கட்ட வேண்டுமென்று சொல்லி அந்த இடத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்கிறார். ஆகவே இந்த மாதிரி தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கு தோன்றிய நாள் முதற்கொண்டு, வழிபட்டுக்கொண்டு வருகிற இந்தக் கோவிலை, 10 ஆண்டு காலமாக அனுபவித்துக் கொண்டு வருகிற இந்தக் கோவிலை அவர்களுக்கே சர்க்கார் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களும் தங்களுக்கு ஒதுக்க வேண்டு மென்று சர்க்காருக்கு பல விண்ணப்பங்கள் செய்திருக்கிறார்கள். நானும் அமைச்சர் அவர்களிடம் இதைப்பற்றி எடுத்துக் கூறி இருக்கிறேன். ஆகையினால் உடனடியாக இந்த மாதிரி தலையீடுகள் செய்யாமல் அவர்களுக்குத் தகுந்த வசதிகளை செய்து கொடுப்பதற்கு சர்க்கார் முன்வரவேண்டும். குறை கூறுகிறார்களே என்று சொன்னால், குறை இருந்தால் சொல்லத்தான் செய்வார்கள். இம்மாதிரியான குறைபாடுகள் அந்தப் பகுதியிலே இருக்கின்றன.

(Deputy Speaker in the Chair.`

தானியங்களின் விலைவாசிகள் இன்றைக்கு அதிகப்படியாக உயர்ந்து கொண்டே போகிறது. விலைவாசிக்குத் தகுந்தமாதிரி தானியம் அதிகமாக விளைச்சலாகிறது என்று கூறுகிறார்கள். ஒரு உபமானம் சொல்ல விரும்புகிறேன். தேனாறு பாய்கிறது, மக்கள் வயிறு காய்கிறது என்று சொல்லுவார்கள். சாதாரண மக்களுக்கு தானியம் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் சர்க்கார் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதோடு அல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகளை உடனடியாக சரிப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**SRI P. M. MUNUSAMI GOUNDER :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1960-61-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்து நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றியிருக்கும் உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமாக இந்த உரையானது ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய உரையிலேயே குறிப்பிட்டார்கள். காரணம் என்னவென்றால் இதுவரையில் சென்னை ராஜ்யம் என்று இருந்த பெயரை தமிழ்

[Sri P. M. Munusami Gounder] [4th March 1961

நாடு என்று மாற்றியிருப்பதை குறிப்பிட்டார்கள். அதோடு அல்லாமல் எந்தவிதமான வரியும் இல்லாமல் இந்த வரவு செலவுத் திட்டத்தை அவர்கள் தயாரித்திருப்பது வரவேற்கக்கூடிய விஷயமாகும் என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த சந்தர்ப்பத்தில் 11-வது வகுப்பு வரை ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி கொடுக்கவேண்டும் என்பதையும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரி குறிப்புகள் அடங்கிய 9 ஆண்டுகளாக இல்லாத ஒரு வரவு செலவுத் திட்டத்தை கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதற்காக நாம் அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பூராவும் படித்துப் பார்க்கும்பொழுது எந்த விதமான ஒரு குற்றங் குறை இல்லாமல் எல்லாவிதமான நல்ல அம்சங்களும் அடங்கியிருப்பதினால், எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசும்பொழுது நல்ல விஷயங்களை விட்டுவிட்டு, ஏதோ அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள், ஏதோ பணம் வசூல் செய்கிறார்கள் என்று தவறான எண்ணத்தைக் கொண்டு பேசுகிறார்கள். அது மிக்க கண்டிக்கத்தக்க விஷயம். கட்சி நிலையிலே அவரவர்களுடைய கட்சியை பலப்படுத்தவேண்டும் என்று அவரவருக்கு ஆவல் இருப்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது. அதுமாதிரி இருக்கும்பொழுது அவரவர்கள் தொகுதிக்குப் போகும்பொழுது அவரவர்கள் கட்சியை பலப்படுத்தவேண்டிய ஒரு நிலையும் ஏற்படுகிறது. அந்த நிலையை அவர்கள் உணர்ந்திருப்பார்களானால் இதுமாதிரியான குற்றச்சாட்டை ஒரு பொறுப்புள்ள அங்கத்தினர் சொல்லமாட்டார்.

இந்த நிலையில் அதை விட்டுவிட்டு நமது அமைச்சர் அவர்கள் உரையின் மீது குறிப்பாக சில விஷயங்களை எடுத்துக்கொண்டு அதுபற்றி சொல்ல ஆசைப்படுகிறேன். நமது முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக எல்லாவிதமான வேலைகளும் வெற்றிகரமாக நடந்த காரணத்தினால் தான் உணவு அதிகமான அளவிற்கு உற்பத்தி ஆகியிருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்களுடைய உரையில் திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 1950-51-ல் 30·94 லட்சம் டன்களாக இருந்த உணவு உற்பத்தி 1960-61-ல் 51·67 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது நம்முடைய திட்டத்தின் மூலமாக அடைந்த வெற்றியை எடுத்துக்காட்டுகிறது. நமது திட்டங்கள் வெற்றிகரமாக நடந்து மக்கள் அதன் மூலம் பலன் பெறாமல் இருந்திருந்தால் விவசாயத்தின் மூலம் உணவுப் பொருள்கள் அதிகமாக விளைச்சல் கண்டிருக்காது. ஏழைக் குடியானவர்களுக்கு கடன் வசதி செய்து கொடுப்பது, கிணறுகள் வெட்டிக் கொடுப்பது, நீர்ப்பாசன வசதிகள் செய்துகொடுப்பது, உரம் முதலிய சாதனங்கள் நல்ல முறையில் கிடைக்க வசதி செய்து கொடுப்பது ஆகியவைகள் மூலம் விவசாயம் நல்ல முறையில் முன்னேற்றம் அடையக்கூடிய நிலையை ஏற்படுத்தினார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. பல அங்கத்தினர்கள் சொன்னதிலிருந்து ரசாயன உரம் பற்றாக்குறை



4th March 1961] [Sri P. M. Munusami Gounder]

யாக இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் அதே சந்தர்ப்பத்தில் நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். நமக்கு உற்பத்தி என்ன ஆகியிருக்கிறது, செலவு என்ன ஆகியிருக்கிறது என்று பார்க்கும்பொழுது, தேவையான அளவு ரஸாயன உரம் நமக்குத் தற்பொழுது கிடைக்கவில்லை. இதிலே பிளாக் மார்க்கெட் செய்கிறார்களா அல்லது சாதாரணமாகப் போய் வாங்கி விற்கிறார்களா என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். கூட்டுறவு முறையில் அதைப் பெற்று அதில் ஏதோ லாபம் அடைய வேண்டும் என்ற முறையில் விற்கிறார்களே தவிர, மற்றபடி சர்க்கார் இம்மாதிரி ஏற்பாடுகள் செய்ததில் தவறு செய்துவிட்டது என்ற முறையில் கூறும்பொழுது அது வருந்தத்தக்க விஷயம் என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உரத்தைப் பொறுத்த வரையில் நெய்வேலியிலும், தூத்துக்குடியிலும் தொழிற்சாலைகள் ஏற்பட்டு அதன் மூலம் உரம் அதிகமான அளவு கிடைப்பதினால் நமது பற்றாக்குறை நீங்கும் என்று நிதி அமைச்சர் அவர்கள் உரையில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசன வசதியை எடுத்துக்கொண்டால் சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கும் நல்ல முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறோம், சென்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் 8 கோடி ரூபாய் அளவிற்கு செலவு செய்துள்ளோம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் 8 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளோம் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக சேலம் ஜில்லாவில் இம்மாதிரி சிறிய நீர்ப்பாசன வசதிகள் செய்துகொடுக்கவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். ஹொசூர் சின்னாற்றில் தொட்டஹல்லா என்ற இடத்தில் ஒரு சிறிய அணைக்கட்டு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே கட்டவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதை உடனடியாகக் கட்டவேண்டும். ஊத்தங்கரையில் பாம்பாற்றில் ஒரு சிறிய அணைக்கட்டும், ஹரூரில் முள்ளிக்காட்டில் ஒரு சிறிய அணைக்கட்டும் கட்டிக்கொடுக்கவேண்டும். இது மராமத்து இலாகா அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 8 கோடி ரூபாய் செலவழிக்கும்பொழுது இதுமாதிரி சிறிய அணைக்கட்டுகளை கட்டிக்கொடுத்தால் விவசாயிகளுக்கு நல்ல வசதியாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ரோடு வசதிகளைப் பார்க்கும்பொழுது, 1961-62-ம் வருடத்தில் 182 மைல் அளவிற்கு புதிய ரோடுகள் போடப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்த பொழுது வேப்பனம் பள்ளியிலிருந்து 12 மைல் நீளம் உள்ள தீர்த்தம்-பேரிகை ரோடு போடவேண்டும் என்று ஜனங்கள் கூக்குரல் எழுப்பியதை அறிவார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத்

[Sri P. M. Munusami Gounder] [4th March 1961

திட்டத்தில் அதற்கு முதல் இடம் கொடுத்து இந்த 182 மைல் நீளம் உள்ள ரோடுகளில் அதுவும் அடங்கியிருக்கவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக குடி நீர் வசதியைப் பார்க்கும்பொழுது சேலம் ஜில்லாவில் மிக்க மலைப்பாங்கான பிரதேசம் என்பதை நண்பர் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த மலைப் பிரதேசத்தில் பிளாஸ்டு யூனிட்ஸ் கொடுத்து ஆழப்படுத்தினால்தான் தண்ணீர் கிடைக்கும். இதை தனிப்பட்ட முறையில் பரிசீலனை செய்து நிதி அமைச்சர் அவர்கள் கிணறுகளை ஆழம் செய்து குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, குடிதண்ணீர் வசதியைப் பற்றிச் சொல்லும் பொழுது கிருஷ்ணகிரியில் சுகாதார அமைச்சர் அவர்கள் வந்திருந்தபொழுது தெரியும், அங்கு குடிப்பதற்கு தண்ணீர் என்பதே கிடையாது. மூன்று மைல் அருகாமையில் கிருஷ்ணகிரி ரிசர்வாயர் பக்கத்தில் இருந்தும்கூட அங்கு குடிதண்ணீர் வசதி கிடையாது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துச் செய்வதாகக் குறிப்பிட்டார்கள். அதையும் செய்துதரவேண்டும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக சிறிய தொழில்கள் யூனிட்கள் கிண்டி எஸ்டேட்டில் இருப்பதைப் போன்று மற்ற ஜில்லாக்களிலும் பரவலாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதில் கிருஷ்ணகிரியையும் குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதற்காக அவருக்கு என் நன்றியைச் செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறேன். அதேமாதிரி சிறு யூனிட்டுகளுக்கு ஏற்பாடு செய்யும்பொழுது, நமது ரயில்வேக்களையும் விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலத்தில் மூன்று இடங்களில் ரயில்வே எடுக்கப்பட்டது. திருப்பத்தூர்-கிருஷ்ணகிரி, சமால்பேட்டை-தருமபுரி, தருமபுரி-ஹோசூர் ஆகிய ரயில்வேக்கள். அடுத்த திட்டத்தில் இது மாதிரியான சிறு சிறு தொழில் யூனிட்டுகள் வரும்பொழுது ரயில்வே வசதி அவசியம். ஆகவே இந்த ரயில்வேக்கள் மறுபடியும் வரவேண்டியது அவசியம். அடுத்தபடியாக, கிருஷ்ணகிரித் தாலூகாவிலே வேப்பனப்பள்ளி பிர்காவில் தங்கம் கிடைக்கிறது. இரண்டொரு தரம் இதைப்பற்றி சட்டசபையில் குறிப்பிட்டிருக்கிறேன். ராசிபுரத்திலே ஒரு ரூபாய்க்கு 4 அணா தங்கம்தான் கிடைக்கிறது என்று சொன்னார்கள். வேப்பனப்பள்ளியிலே ஒரு ரூபாய்க்கு ரூபாய்த் தங்கம் கிடைக்கிறது. பேரிகை எஸ்டேட் இருந்த இடத்தில் அப்படியே இருக்கிறது. இந்த இடங்களை எல்லாம் பரிசோதனை செய்து, தங்கச் சுரங்கத்தை ஏற்பாடு செய்யவேண்டும், பெரிய பெரிய கைத்தொழில்களையும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.



4th March 1961]

* SRIMATHI T. N. ANANDANAYAKI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இதுவரை இந்த சபை முன்பு வைக்கப்பட்ட வரவு செலவு அறிக்கைகளைக் காட்டிலும், இது மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் இருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது நமது நிதி அமைச்சர் அவர்களை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. சுருங்கச்சொல்லி விளங்கவைத்துப் பேசி இருக்கலாம் கனம் அமைச்சர். ஆனால் அப்படி விளங்கக்கூடிய ஆற்றல் எதிர்க்கட்சிகளுக்கு இல்லை என்ற காரணத்தால்தான் இவ்வளவு தெளிவாகவும், விரிவாகவும் அவர் இந்த அறிக்கையைக் கொண்டு வந்தது மிகவும் பாராட்டத் தக்கது. அப்படிப் புரிந்து கொள்ளட்டும் என்று கொண்டுவந்தும்கூட இன்னும் குறை சொல்லுகிறார்கள் எதிர்க் கட்சிக்காரர்கள்.

இதைத் தேர்தல் பட்ஜெட் என்று அழைக்கிறார்கள். ஆம், இது தேர்தல் அறிக்கைதான். நமக்கு மாத்திரம் அல்ல, எதிர்க் கட்சிக்கும்தான். அவர்கள் ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டும் கூட, இந்த அளவுக்கு தமிழகம் முன்னேறியிருக்கிறது என்றால், மக்கள் அவர்களைத் தேர்ந்தெடுப்பதா, வேண்டாமா என்று கட்டாயமாக முடிவு செய்யக்கூடிய வரவு செலவு அறிக்கைதான் இது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த வரவு செலவு அறிக்கை மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் அமைந்திருப்பது மிக மிகப் பாராட்டத் தக்கது என்பதை யாரும் மறுக்க முடியாது. இதே மாதிரி வெள்ளையர்கள் காலத்திலே ஆட்சி சிறந்ததாக இருந்தது என்று சொல்லி மக்களை ஏமாற்றலாமென்று நினைத்துக்கொண்டு ஏதாவது கோமாளித்தனமாகச் சொன்னாலும்கூட மக்கள் அதை அலசிப் பார்த்து முடிவு செய்யவேண்டுமென்ற முறையில், எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறோம், எந்த அளவுக்கு சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்பதை தெள்ளத் தெளிவாகப் புரிந்து நல்ல ஒரு நிலைமைக்கு வரக்கூடிய அறிக்கையாக இருக்கிறது. இதுபோன்ற அறிக்கை மீது பேசுவதற்குப் பதிலாக, அமைச்சர் நிதி திரட்டினார் என்று சொன்னால், அதற்கும் இதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லாமல், சட்டசபையிலே நேரத்தை வீணாக்குகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. இப்படி உண்மைக்குப் புறம்பாகப் பேசி, கூட்டத்திற்கு வரி போட்டு வாங்குகிறார்களே, அவர்களுக்கு ஒரு வரி போடுங்கள், கட்டாயமாக நல்ல பணம் வசூல் ஆகும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே, வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிப் பேசவேண்டியவர்கள், அமைச்சர் நிதி திரட்டினார், அதுவும் டெபுடி கலெக்டர் ஆதரவோடு திரட்டினார் என்று சொன்னால், மந்திரி வந்த நேரத்தில் டெபுடி கலெக்டரே கேட்கவேண்டுமென்று கேட்டாலும், அதைவிட அதிகமாகக் கிடைக்கும் அளவுக்கு காங்கிரஸ் குழு மக்கள் மத்தியிலே மதிப்புப் பெற்றிருக்கிறது என்பதே தவிர, அவர்கள் மாதிரி அரசாங்க ஊழியனைச்

[Srimathi T. N. Anandanayaki] [4th March 1961

சார்ந்துதான் வாழவேண்டுமென்ற நிலைமை எங்களுக்குக் கிடையாது என்பதை எடுத்துரைக்க விரும்புகிறேன். அத்தகைய ஒரு நல்லாட்சி நடத்துகிறோம் என்பதை இந்த வரவு செலவுத் திட்டம் மிகத் தீவிரமான முறையிலே எடுத்துக்காட்டுகிறது.

1953-54-லிலே விற்பனை வரி மூலம் நமக்கு 8 கோடி ரூபாய் கிடைத்தது. இன்றைக்கு 19 கோடி ரூபாய் விற்பனை வரி மூலம் மட்டும் வருகிறது என்று சொன்னால், அந்த அளவுக்கு வாங்கும் சக்தி மக்கள் மத்தியிலே வளர்ந்திருக்கிறது, அந்த அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது, அந்த அளவுக்கு வளமை பூத்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படியிருந்தும் இனிமேல் முன்னேற்றம் தேவையில்லை என்று சொல்லும் அளவுக்கு ஆளும் கட்சியினர் இல்லை. இன்னும் நல்ல முறையில் செய்ய வேண்டும், இன்னும் திறமையோடு நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்றுதான் சொல்லுகிறோம். அந்த முறையிலே, விற்பனை வரியிலே இன்னும் அதிகமாக அக்கரை செலுத்தினால் இன்னும் அதிக வருமானம் வரும் என்பதில் சந்தேகமில்லை. சமீபத்திலே தான் விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்தி அமைத்தோம். புதிய சட்டத்திலே ஏற்பட்டுள்ள சில தகராறுகளையும் சிக்கல்களையும் பார்க்கும்பொழுது, அமைச்சர் அவர்கள் அவற்றை சற்று மாற்றியமைப்பார்களேயானால், 18 கோடி அல்ல, சுமார் 40 அல்லது 50 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கலாமென்று நினைக்கிறேன். கண்ணாடி வளையல்களுக்கு பக்கத்து மாகாணத்திலே பல முனை வரி போட்டிருக்கிறார்கள். ஆந்திராவிலே 2 சதவிகிதம் வரி. மைசூரிலே வரி கிடையாது, மகாராஷ்டிரத்திலே வரி கிடையாது. மத்தியப் பிரதேசத்திலே வரி கிடையாது. வரி வேண்டாம் என்று நான் சொல்லத் தயாராக இல்லாவிட்டாலும், பக்கத்திலே இருக்கிற ஆந்திரா மாகாணம் 2 சதவிகிதம் பல முனை வரியைப் போட்டிருக்கும்பொழுது, அதேமாதிரி இங்கே போட்டால் ஓரளவுக்கு இந்த வியாபாரிகள் தமிழகத்தை விட்டுத் துரத்தப்படாமல் இருக்கலாம். தமிழகம், தெலுங்ககம் என்று வியாபாரிகள் பார்க்கமாட்டார்கள். பணத்தைத்தான் பார்ப்பார்கள். இப்படி தமிழ் நாட்டை விட்டு ஓடிவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிற ஒரு சில வியாபாரங்களுக்காவது நாம் பாதுகாப்பு அளிக்கவேண்டும். அந்தக் காலத்திலே அறியாமையினால் ஒரு முனை வரி வேண்டுமென்று கேட்டிருந்தாலும், இன்றைக்கு நடைமுறையில் இருக்கும் சிக்கல்களைப் புரிந்துகொண்டு வருகிறார்கள். ஆகவே இந்த விற்பனை வரியை சற்று மாற்றியமைப்போமேயானால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று வேறு சில பொருள்கள் இருக்கின்றன. ஒரு முனை வரி என்று போடும்போழுது அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். வைரத்திற்கு 6 சதவிகிதம் போட்டிருக்கிறார்கள். இரண்டாயிரம் ரூபாய்க்கு கம்மல் வாங்குகிறவர் இன்னும் 120 ரூபாய் மேலே



4th March 1961] [Srimathi T. N. Anandanayaki]

கொடுக்க முடியாதா என்று கேட்கலாம். அவருக்கு 2,000 ரூபாய் பெரிதாகத் தெரியாது. இந்த வரிதான் பெரிதாகத் தெரியும். ஆறு சதவிகிதம் கொடுப்பதற்கு பயந்துகொண்டு, வாங்குகிறவர் பில் போடவேண்டாமென்று சொல்லுகிறார். விற்பவரும் பில் போடுவதில்லை. கடைசியில் ஏமாறுவது யார் என்றால் அரசாங்கம். ஒரே அடியாக அதிக ஆசைப்பட்டு அதிக நஷ்டம் அடையாமல், 6 சதவிகிதம் என்பதைக் குறைத்து 1 அல்லது 2 சதவிகிதம் ஆக்கினால், அது நலமாக இருக்கும். ஒரு முனையிலே வசூலிப்பதில் கஷ்டமில்லாமல் இருக்கலாம். தமிழகத்தின் வருமானத்தைப் பெருக்க வேண்டுமானால் விற்பனை வரியிலே இன்னும் சற்று அதிக அக்கரை செலுத்தி வியாபாரிகளுக்கு கசப்புத் தட்டாமலும், நமக்கு கஷ்டமில்லாமலும் வசூலிக்கத் தகுந்த முறையில் நிதி இலாகா யோசனை செய்வார்களேயானால் நமக்கு அதிக வருமானம் கிடைக்கும்.

அடுத்தபடியாக நில வரி 1953-54-ல் வருமானம் ரூ. 6 கோடியாக இருந்தது. இன்றைக்கும் கிட்டத்தட்ட அதே வருமானம் தான் வருகிறது. ரூ. 6 கோடியிலேயே நின்று கொண்டிருக்கிறது. இதிலே மட்டும் ஏன் வசூல் செய்வதில் கஷ்டம் ஏற்படுகிறது என்று தெரியவில்லை. ரெவின்யூத் திட்டத்திலே இருக்கும் குறைபாடோ அல்லது அமல் நடத்துவதிலே உள்ள கஷ்டமோ என்னமோ தெரியவில்லை. இதற்கு காரணங்கள்தான் முக்கிய காரணம். அவர்கள் மனது வைத்தால் எதையும் செய்வார்கள். அவர்களுடைய குறைகளை நீக்கி நல்ல முறையில் இந்த நில வரியை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும். நமக்கும் வருமானம் அதிகரிக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பல துறைகளுக்கு நல்ல முறையில் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். விவசாயம் வளர்ந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. விவசாயத் துறையில் எவ்வளவு முன்னேறவேண்டுமோ அவ்வளவு முன்னேறியிருக்கிறோம். நல்ல விதைகள், நல்ல உரங்கள் கிடைக்கின்றன. ஆங்காங்கே சில குறைகள் இருந்தாலும் நல்ல முறையில் முன்னேறியிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக லாண்டு ரெவின்யூவைப் பார்க்கும் பொழுது "gross receipts including portions due to irrigation" என்று கூறியிருக்கிறார்கள். புதிதாக நீர்ப்பாசன வசதி கொடுத்தும்கூட, பல லட்சக்கணக்கான ஏக்கர்களை சாகுபடிக்குக் கொண்டுவந்தும்கூட, வருமானம் அதிகரிக்கவில்லை என்றால் எங்கேயோ தவறு இருக்கவேண்டுமென்றுதான் தோன்றுகிறது. அதைப் பரிசிலனை செய்து சரிப்படுத்த வேண்டும்.

உணவு உற்பத்தியை எவ்வளவு பெருக்கவேண்டுமோ அந்த அளவுக்குப் பெருக்கியிருக்கிறோம். தழை எருவுக்கு ஆதரவு கொடுப்பது நல்லது. கேரள மாகாணத்திலே தழை எருவுக்காக அரசாங்கம் புறம்போக்கு குத்தகைப் பாட்டம் என்று கொடுத்து,

[Srimathi T. N. Anandanayaki] [4th March 1961

அவர்களுக்கு வேண்டிய உரத்தை அவர்களே உற்பத்தி செய்யலாமென்ற முறையை கொண்டுவந்திருக்கிறார்கள். அதுபோன்று நம்முடைய மாகாணத்திலே புறம்போக்கு நிலத்திலே ஒருசில ஏக்கர்களை விவசாயிகளுக்கு ஒதுக்கிக் கொடுத்து மரத்தை நட்டு தழை எரு உற்பத்தி செய்தால் அது வரவேற்கத் தகுந்தது. அது போன்று இன்று பஞ்சாயத்து யூனியன்களிலே "பாரம் காடுகள்" திட்டம் வரவேற்கத் தகுந்தது. அதோடு மட்டுமல்லாமல் விதைப் பண்ணைகள் மிகவும் முக்கியம். அரசாங்கத்தின் மூலமாக விதைப் பண்ணைகள் நடத்தினால் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு வெற்றி கிடைக்குமோ, கிடைக்காதோ என்றாலும், நிலச் சீர்திருத்தம் செய்யும்பொழுது 30 ஏக்கர் என்று ஸீலிங் வைத்திருக்கிற நேரத்திலே விதைப் பண்ணைக்காக 2 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி அதற்கு உச்ச வரம்பிலிருந்து விதிவிலக்கு கொடுப்போமேயானால் அவர்களே நல்ல விதைகளை உற்பத்தி செய்ய முடியும்.

12-30 p.m. அப்பொழுது இரண்டு ஏக்கர் நிலத்தில் நல்ல விதை உற்பத்தி செய்வார்கள். அதை மற்ற விவசாயிகளுக்கு விற்பார்கள். ஆகவே விதைப் பண்ணைக்கென்று ஒதுக்கப்படும் நிலத்தை உச்சவரம்பிலிருந்து விதிவிலக்களித்தால் நலமாக இருக்கும்; இதனை உணவு இலாகா யோசித்து ஆவன செய்தால், விதைப் பிரச்சினை தீர்ந்ததாகும். 40 ஏக்கராவுக்கு வேண்டிய விதையை ஒரு ஏக்கர் நிலத்தில் உற்பத்தி செய்யலாம் என்கிறார்கள். ஆகவே, தாராளமாகவே நாம் இரண்டு ஏக்கர் என்று விட்டால், நலமாக இருக்கும் என்பதை உணவு இலாகா யோசிக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஆயில் ஸீட்ஸ். இன்றைக்கு புளி, மிளகாய் விலையெல்லாம் சற்று குறைந்திருக்கிறது. நாலு ரூபாய் விற்ற மிளகாய் 2½ ரூபாய்க்கு வந்திருக்கிறது. புளி விலையும் 1½ ரூபாய்க்கு இறங்கியிருக்கிறது. ஆனால், எண்ணெய் விலையோ ஏறிக்கொண்டே போகிறது. இன்றைக்கு அது 4¾ ரூபாய் ஆகியிருக்கிறது. ஆகவே, எங்கோ, ஏதோ தவறு இருக்கிறது என்பது தெரிகிறது. பம்பாய், கல்கத்தா, சென்னை முதலிய முக்கிய நகரங்களில் சென்னையில்தான் விலைவாசிகள் மிகவும் அதிகமாக ஏறி இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகவே இந்த விஷயத்திலும் சர்க்கார் அக்கரை காட்டி விலைக் கட்டுபாடு செய்தாக வேண்டும்.

நகர சபையைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்லி, ஒரு நிமிடத்தில் முடிக்கிறேன். இன்று 1½ கோடி ரூபாயை ரோடுகளைச் செப்பனிடவும், ட்ரெயினேஜுக்காகவும், சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். காரியம் நடைபெறவேண்டுமானால், இப்படி சும்மா அவர்களிடம் பணத்தைக் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. 30 லட்ச ரூபாயை வைத்துக்கொண்டு சும்மா இருந்தவர்களிடம் 58 லட்ச ரூபாயையும் கொடுத்தால் இந்தக் காலத்தில் வேலை நடக்காது. ஆகவே, இந்த ரூபாயை அவர்களை நம்பிக் கொடுத்து விடாமல், ஹைவேஸ் டிபார்ட்மென்ட், ட்ராபிக் டிபார்ட்மென்ட், கார்ப்பொரேஷன் எல்லோரும் சேர்ந்து, இந்த 58 லட்ச ரூபாயை ஒழுங்காகப் பயன் படுத்துகிறார்களா, இந்தப் பணத்தைச் செலவழிக்கிறார்களா என்று பார்க்க ஒரு கமிட்டியை சர்க்கார் அமைத்தால், இந்தப் பணத்தை சென்னை நகரத்தின் நன்மைக்கு உபயோகிக்கலாம்.



4th March 1961] [Srimathi T. N. Anandanayaki]

வாட்டர் சப்ளை சம்பந்தப்பட்டவரை, 56-ல் செகண்ட் மெயின் போட்டோம்; அது இன்னும் முடியவில்லை. சொல்கிறார்கள், குழாய்க்கு பம்பு வாங்கி விட்டார்களாம். அதன் பிறகு அதற்கு பாரின் எக்ஸ்சேஞ்ச் இன்னும் எத்தனையோ தொல்லைகள். ஒரு பெரிய பம்புக்கு இரண்டு வருஷமாக அநியாயச் செலவு, மோசமான காரியம். ஆகையினால், வாட்டர் சப்ளை ஸ்கீமிலும் அக்கரை காட்டி கொடுக்கும் பணத்தை சரியாகச் செலவழிக்கிறார்களா என்று பார்த்தால்தான் நல்லது, இல்லாவிட்டால் பிரயோஜனம் இல்லை.

ரெயில்வே பாலம் வேண்டுமென்று ஐந்து வருஷகாலமாகச் சொல்லி வருகிறோம், திருவொற்றியூர் பக்கத்தில், ஒரு அஸ்திவாரக் கல்கூட இன்னும் போடவில்லை. கார்ப்பொரேஷனும் சர்க்காரும் சேர்ந்து மக்கள் அவதியைப் போக்க அங்கு ஒரு ஓவர் ப்ரிட்ஜை கட்ட, அஸ்திவாரக் கல்லாவது போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு நேரம் போதாததால் இத்துடன் முடிக்கிறேன். வணக்கம்.

* **Sri P. K. MOOKIAH THEVAR:** தலைவர் அவர்களே, 1961-62-ஆம் வருஷ நிதிநிலை அறிக்கையைப்பற்றி எனக்கு முன் பேசிய பல கனம் அங்கத்தினர்கள், குறிப்பாக ஆளும் கட்சியாளர்கள் "எதிர்கட்சிக்காரர்களுக்கு அறிவு கிடையாது, அறியும் திறனும் கிடையாது. ஆகவே 60 பக்கத்தில் விளக்கமாக விரிவான அறிக்கையை விரித்துக் கொடுத்திருக்கிறோம். மூன்றாவது திட்டம் வருகிறது. அதுபற்றியெல்லாம் மக்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம்" என்று இந்த நிலையில் அலட்சியமாக, கோபமாக, வேகமாகப் பேசினார்கள். எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று விரித்துக்காட்டத் தேவையில்லை. நிறை குடம் ததும்பாது என்பார்கள். சாதனைகள் செய்து சக்தி பெற்றிருந்தால், நிச்சயமாக இம்மாதிரி வேகம், கோபம் வராது. உண்மையான தாய் தன் கஷ்டத்திலும் தன் பிள்ளைகள் வேண்டுவனவற்றை கொடுக்கத்தான் நினைப்பாள். அதற்கு மாறாக கொடுமைப்படுத்துவாளானால் அவள் தாய் அல்ல, மாற்றாந்தாய். அந்த மாற்றாந்தாய் ரூபத்தில்தான் இன்று ஆளும் கட்சி எதிர்கட்சிகளை நடத்துகிறார்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிய பத்தாண்டுகளாக திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணம் வட்டிக்கு வாங்கி 6 ஆயிரம் கோடி ரூபாய்களுக்கு மேல் செலவழித்திருக்கிறோம். இதை அரசாங்கப் பத்திரிகையே சொல்லுகிறது. அத்தனை பணமும் செலவழிந்து போய் இருக்கிறது. சாதனை பற்றியும் புள்ளிவிவரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இவ்வளவு காலமும், பணமும் செலவழித்திருந்தும், காரியத்தில் ஒன்றுமே இல்லை. சாதனையின்

வெற்றியை மக்களின் முகத்தைப் பார்த்தால் தெரிகிறது. அவர்கள் முகத்தைப் பார்க்கத் தேவையில்லை. இன்னும் பசி பட்டினி குறைந்தபாடில்லை. பிச்சைக்காரர்கள் பெருக்கம் குறையவில்லை. மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் கோபத்திற்குப் பதிலாக, உண்மையிலேயே சாதனை நடந்திருக்கிறதா என்று தயவுசெய்து நெஞ்சிலே கையைவைத்து பார்க்க வேண்டும் என்று நமது மந்திரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறேன். 1937-ல் வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் 75 ரூபாயில் நடத்திய குடும்பம் இன்று 375 ரூபாயிலும் முடியவில்லை என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் அனுமதிக்கிறது. குற்றங்களைப் பேசுவதே தவறு என்றால், அது ஜனநாயகத்தில் நடக்கக்கூடியது அல்ல. சர்வாதிகார ஆட்சியில் அப்படி நடக்கும். இங்கேயும் அப்படிச் சொல்வதானால், அது ஜனநாயகமாகாது. 47-ல் சுதந்திரம் வந்தவுடன், கட்சியின் பெயரைச் சொல்லி, காந்தியைச் சொல்லி, காரியங்களை நடத்தி வந்தார்கள். அதெல்லாம் போய்விட்டது. மக்கள் மனப்பான்மை மாறாமல், மாற்ற முடியாமல் 1952-ல் சோஷலிஸ்ட் பாட்டர்ன் திட்டமிட்ட பொருளாதாரத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். பொருளாதார நிபுணர்கள் எழுதியிருக்கிறார்கள், இதெல்லாம் சர்வாதிகார நாட்டில் நடக்கும், வற்புறுத்தலால்தான் நடக்கும் என்று புத்தகம் எழுதியிருக்கிறார்கள், சாதாரண ஜனநாயக நாட்டில் வரமுடியாது. நிபுணர்கள் சொல்கிறார்கள். "The control of the production of wealth is the control of the human life itself" என்று சொன்னால், காந்தீயத்தைச் சொல்லி பின்னால் இன்று அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று மக்கள் மனதைத் திருப்புகிறார்கள். "ப்ளான் மாங்கர்ஸ்" களாகி, அதிகாரத்தையெல்லாம் தங்களிடம் குவித்துக் கொண்டு, அதிலும், மாகாண சர்க்காருக்கு ஒன்றுமில்லாமல் மத்திய சர்க்காரிடம் கொடுத்து விட்டு, நம் மந்திரிகளும் எதுவும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். விலைபோகும் மாடு வீட்டில் விலைக்கு போனால் சந்தைக்கு வரவேண்டிய அவசியமே இல்லை. எங்கே பார்த்தாலும் குறைகள். உங்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலைமை. இன்றைக்கு பஞ்சாயத்து போர்டுகளை ஏற்படுத்தி அதன் அதிகாரங்களை நீங்கள் பிடுங்கிக் கொள்ள பார்க்கிறீர்கள். இது ஈவு இரக்கம் இல்லாத செயல். இது எங்களுக்கு புரியாது என்கிறீர்கள். அறியாதவர்கள், புரியாதவர்கள் என்று கோபிக்கிறீர்கள். ஏன் இனி இந்த சட்டசபையில் பேசுவதே கூடாது, எதிர்கட்சிகளே கூடாது என்று சட்டமே போட்டாலும் போடுவீர்கள். இதையெல்லாம் பார்த்தால் குழாய் சண்டையைப் போல் இருக்கிறது இன்று சட்டசபை. இந்த நிலையில்தான் இருக்கிறோம்.

DEPUTY SPEAKER : The Honourable Member should withdraw that word என்ன சொன்னீர்கள், ஏதோ சண்டை என்று . . . .

SRI P. K. MOOKIAH THEVAR : வாட்டர் ஸ்கேர்ஸிடியின் போது பெண்கள் குழாயில் போடும் சண்டையைச் சொன்னேன் . . .



DEPUTY SPEAKER : All right, the honourable Member may continue.

SRI P. K. MOOKIAH THEVAR : இன்னும் அரசாங்கத்தில் அநேக டிபார்ட்மெண்டுகள் இருக்கின்றன. அவற்றைப் பார்த்தால் அவை அரசாங்க டிபார்ட்மெண்டா அல்லது காங்கிரஸ் கட்சி டிபார்ட்மெண்டா என்று தெரியவில்லை. இன்பர்மேஷன் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. Development Department இருக்கிறது. இங்கு மினிஸ்டீரியல் சர்வீசுக்கு என்று சர்வீஸ் கமிஷனுக்குப் போகாமல், குறிப்பிட்ட, வேண்டிய சமுதாயத்தினருக்கே உத்தியோகங்கள் நிறைய கொடுக்கவும், வேண்டாத சமூகத்தினரைப் புறக்கணிக்கவும் உபயோகப்படுகிறது. மந்திரிகள் செய்வது சாதாரணக் காரியமாகயிருந்தாலும் நேரிடையாகச் செய்ய முடியாது. ஆகவே, காரியங்களைச் செய்யவேண்டுமானால் அதிகாரிகளை வைத்துத்தான் செய்யமுடியும். ஆகவேதான் மந்திரி கூடவே காங்கிரஸ் கட்சி வசூலுக்காக Revenue Inspector, Deputy Collector இவர்களை அழைத்துப் போகிறார்கள் என்ற புகாரும் வந்தது. அதற்கு நமது நிதி மந்திரி அவர்கள் மிகவும் கோபமாக சிறு அதிகாரிகள் தயவில் வசூலிக்க அவசியமில்லை என்று அதிகாரம் இருக்கிறபடியால் பதில் சொல்கிறார்கள். மந்திரி அவர்கள் கோபித்துக்கொள்ள தேவையில்லை. காரணம் ஆங்காங்கு அதிகாரிகளுக்குத்தான் எந்தெந்த இடத்தில் யார் யார் முக்கியஸ்தர்கள், யார் யாருக்கு என்னென்ன தேவை, எப்படி செய்தால் வசூலாகும் என்ற உள்விவகாரம் அத்தனையும் தெரியும். மந்திரிகளுக்குத் தெரியாது. உடனடியாக உத்தரவு போடுகிறார்கள். அதிகாரிகள்தான் தங்கள் ஜாதிக்காரர்களையே போடுகிறார்கள். உத்தியோகத்தில் அமர்த்துவதும், அம்மாதிரி, உத்தியோக உயர்வு கொடுப்பதிலும் அம்மாதிரியே செய்கிறார்கள். போலீஸ் டிபார்ட்மெண்டில் டிஸ்மிஸல்ஸ், சஸ்பென்ஷன்கள் காரணமில்லாமல் இருக்கின்றன. வெள்ளைக்காரன் காலத்தில், இன்று மந்திரியாக இருக்கும் அவரையே வேட்டியை உருவி, அடித்தவர்கள் இன்று உத்தியோகத்தில் மேல்பதவிகளில் போடப்பட்டு, அவர்களெல்லாம் மந்திரிகளோடு சுற்றுகிறார்கள்; மந்திரிகளுக்கு வேண்டிய ஜாதிக்காரர்கள் என்ற காரணத்திற்காக இதெல்லாம் நடக்கிறது. அதற்கு பதிலாக அந்த சமூகத்திற்கு தகுதியும் திறமையும், வசதியும், வாய்ப்பும் இருந்தும்கூட அந்த சமூகம் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பது பகிரங்கமாகத் தெரிகிறது. கடந்த பத்து ஆண்டு காலத்தில் ஜாதிவாரியாக உத்தியோகங்களைக் கொடுத்து வந்ததைப் பார்த்தால், அந்த புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்தால் இதன் உண்மை நன்றாகத் தெரிய வரும். ஆனால் அப்படிப்பட்ட புள்ளி விவரங்களை அவர்கள் கொடுக்க மாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட ஜாதி புறக்கணிக்கப்படுவது அவ்வளவு நியாயம் அல்ல. ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கு வேண்டிய சலுகைகளை கொடுக்காவிட்டாலும் பாதகம் இல்லை. அந்த ஜாதியை மிகவும் அவமானப்படுத்துகிறார்கள், கொடுமைப்படுத்துகிறார்கள். முக்குலத்தோர் ஜாதியைப்பற்றி மெட்ராஸ் இன்பர்மேஷனில் அவமானமாக எழுதியிருக்கிறார்கள். 1960-ம் வருஷம் ஜூன்-ஜூலை வெளி

யிட்டில் அவர்களைப்பற்றி அவதூறாக எழுதியிருக்கிறார்கள். என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதைப்பற்றி வாசித்துக்காட்ட முடியும். ஆனால் அதற்கு வேண்டிய அவகாசமும் இல்லை. ரொம்பவும் கேவலமாக எழுதியிருக்கிறார்கள். முக்குலத்த சமூகத்தினர் மாடு பிடிப்பவர்கள் என்றும் அவர்கள் சித்தப்பன், பெரியப்பன் மகளைக் கலியாணம் செய்துகொள்ளுகிறார்கள் என்றும் இன்னும் பலவகையில் அவர்களைப்பற்றி இழிவாகவும் அவமானமாகவும் எழுதியிருக்கிறார்கள். இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய கள்ளர்கள் மொத்தம் ஐம்பதாயிரம் பேர்கள்தான் என்று எழுதியிருக்கிறது. இப்படியெல்லாம் பொய்யாக எழுதுவது சரியா? 1960-ம் ஆண்டில் அவர்களைப்பற்றி இப்படி இழிவாக எழுத வேண்டிய அவசியம் என்ன? அதைப்பற்றி ஏதாவது மறுப்பு தெரிவித்தால் அதற்கு பதில் கிடையாது. பத்திரிகையில் எழுதினாலும் பதில் கிடையாது. அதைப்பற்றி மறுப்போ, பதிலோ கொடுக்காமல் இருக்கிறார்கள். இப்படியெல்லாம் செய்வதற்குக் காரணம் என்ன? அந்த சமுதாயத்தை அழித்து விட வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறதா? இந்தக் காலத்தில் இப்படியெல்லாம் எழுதலாமா, நடக்கலாமா என்று கேட்கிறேன். எதிர் கட்சியில் முக்குலத்தவரைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக இப்படியெல்லாம் கேவலப் படுத்தலாமா? காங்கிரஸ் கட்சியில்தான் அதிகமாக 20, 22 முக்குலத்தவர்கள் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் 2, 3 பேர்கள்தான் இருக்கிறோம். அப்படியிருந்தும் எதிர்கட்சியில் இருக்கிறவர்களை அழித்து விடவேண்டும் என்று இப்படி எழுதலாமா? இந்த சமுதாயத்தை அவர்களுடைய அரசியல் விரோதிகளாகக் கருதலாமா?

அடுத்தபடியாக இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. சமீபத்தில் போலீஸ் நூற்றாண்டு விழா நடைபெற்றது. அது சம்பந்தமாக ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் பல விஷயங்களைப்பற்றி எழுதி இருக்கிறார்கள். அதில் குறிப்பாக "Police and Politics" என்று வரும் தலைப்பில் தலைவர் முத்துராமலிங்க தேவரைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். முதுகுளத்தூரில் அவர்தான் கலவரத்தைத் தூண்டிவிட்டார் என்றும் அவரை பிடித்த பிறகு கலவரங்கள் எல்லாம் நின்று போய்விட்டன என்றும் அவரைப்பற்றி கேவலமாக எழுதி இருக்கிறார்கள். ஒரு தேசிய தலைவரைப்பற்றி இப்படியெல்லாம் எழுதலாமா? ஒரு கொலை கேஸ் நடந்தது. அதில் சம்பந்தப்படுத்தத்தான் அவரை கைது செய்தார்கள். கேஸ் கோர்ட்டில் நடந்தது. அதன் பிறகுதானே அவர் குற்றமற்றவராய் வெளியில் வந்தார். வேண்டுமென்றே கொலை கேசுக்காகத்தான் அவரை கைது செய்தார்கள். வேறு ஒன்றுக்கும் இல்லை. கொலைக்கோ, கலவரத்திற்கோ அவர் சம்பந்தமில்லை. அவர் கைது ஆவதற்கு பத்து நாளைக்கு முன்னாலேயே கலவரம் நின்றுவிட்டது என்று பத்திரிகைகளெல்லாம் ஒருமுகமாக அப்பொழுதே எழுதியிருந்தது எல்லோருக்கும் தெரியும். இந்த நிலைமையில் அவரைப்பற்றி கேவலமாக





எழுதலாமா? இந்த காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தை நடத்துவதற்கு அவர்தான் பொறுப்பு என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். அவரைப்பற்றி சத்தியமூர்த்தி அவர்கள்கூட எழுதியும் பேசியும் இருக்கிறார். தென்னாட்டில் இந்த மூன்று ஜில்லாக்களிலும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் முத்துராமலிங்கத் தேவர்தான் என்று 1937-ம் ஆண்டிலேயே மதுரையில் திலகர் திடலில் காமராஜ் அவர்கள்கூட உட்கார்ந்திருக்க சத்தியமூர்த்தி அவர்கள் பேசியிருக்கிறார். காங்கிரஸ் ஜெயித்து வந்திருப்பதற்கு அவர்தான் காரணம் என்று எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் அவர் இன்றைக்கு எதிர் கட்சியில் இருக்கிறார் என்ற காரணத்தினால் அவரைப்பற்றி இப்படியெல்லாம் கேவலமாக எழுதலாமா? இந்நாட்டிற்கு அவர் எவ்வளவோ பாடு பட்டிருக்கிறார். அப்படி தேசத்திற்காக பாடுபட்ட ஒரு தேசீயத் தலைவரைப்பற்றி இப்படியெல்லாம் எழுதுவது அவ்வளவு நல்லதல்ல. அதற்காக சரித்திரத்தை மாற்றி எழுத வேண்டாம் என்பதைச் சொல்லி என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri A. VEDARATHNAM: On a point of information, முக்குலத்தவர்களைப்பற்றி இழிவாக எழுதியிருப்பதாக கனம் அங்கத்தினர் சில வார்த்தைகளைப் பேசியிருக்கிறார். எந்த இடத்தில் யாரால் அப்படி எழுதப்பட்டது என்பதை தெளிவாகச் சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

**DEPUTY SPEAKER: The honourable Member Sri A. Vedarathnam wants clarification.**

Sri P. K. MOOKIAH THEVAR: தலைவர் அவர்களே, வாசிக்கிறேன். 1960-ம் வருஷத்திய ஜூலை மாதம் மெட்ராஸ் இன்பர்மேஷன் என்ற பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. அதை எழுதியவர் ஜெயதேவ் என்பவர்.

* Sri J. MATHA GOWDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1961-62 ஆண்டினுடைய நிதி நிலை அறிக்கையை கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்ததைக் கண்டு அதை நான் பாராட்டி, வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் படித்த பிறகு அதைக் கண்டு எதிர்கட்சி அங்கத்தினர்கள் கதி கலங்கிப் போய் விட்டார்கள். கடைசி வருஷமாகிய இந்த வருஷத்தில் அதாவது 1962-தேர்தலுக்கு முன் இந்த சந்தர்ப்பத்தில் ஏதாவது ஒரு குறை இருந்தால் அதை வைத்துக்கொண்டு மக்களிடம் சென்று அதைப் பற்றி சொல்லி தேர்தலில் வோட்டுகள் வாங்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு இந்த அறிக்கையில் எந்தவிதமான குறையும் இல்லாமல் இருப்பதைக் கண்டு அவர்கள் கதி கலங்கிப் போய் விட்டார்கள். அப்படி குறைகளைச் சொல்லி வோட்டுகளைப் பெற்று 1962-ம் ஆண்டுக்குப் பிறகும் இங்கே வந்து உட்காரலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு ஏமாற்றத்தைக்

[Sri J. Matha Gowder] [4th March 1961]

கொடுத்து விட்டது. ஆகவே இந்த அறிக்கையை வைத்துக் கொண்டு மக்களிடத்தில் அவர்களால் வோட்டு பெற முடியாது. ஆகவே இந்த அறிக்கையினால் நிச்சயமாக அவர்களால் 1962-ம் ஆண்டுக்குப் பிறகு இங்கே வர முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள். இந்த பட்ஜெட் அறிக்கையைப் பார்த்த பிறகும்கூட எதிர்க் கட்சியின் பிரசாரத்தைக் கண்டு மக்கள் ஏமாறமாட்டார்கள். இதை வைத்துக்கொண்டு எதிர் கட்சிக்காரர்கள் மக்களை ஏமாற்ற முடியாது, வோட்டுக் கேட்க முடியாது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் கனம் நிதி அமைச்சரை மட்டும் ஒரு விஷயத்தில் நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அதாவது இப்படிப்பட்ட ஒரு நிதி நிலை அறிக்கையை தயாரித்திருப்பதால் ஒருக்கால் எதிர்க்கட்சிகளே 1962-க்குப் பிறகு இல்லாமல் போய் விடுமோ என்று தோன்றுகிறது. அடுத்த தேர்தலுக்குப் பிறகு இந்த சட்ட மன்றத்தில் எதிர் கட்சியே இல்லாமல் போய் விடுமோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. மற்ற மாகாணத்தைப் பார்த்தால் எதிர்க் கட்சிகள் இருந்து கொண்டிருக்கும்போது தமிழக மன்றத்தில் மட்டும் எதிர் கட்சி இல்லாமல் இருக்கிறது என்ற ஒரு நிலை வந்து விடுமோ என்று கூட தோன்றுகிறது. அந்த அடிப்படையில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையை தயாரித்திருக்கிறார்கள். அதற்குத் தான் அவரை நான் குற்றம் சாட்ட வேண்டியதாக இருக்கிறது. கண்டிப்பாக இந்த அறிக்கையை வைத்துக்கொண்டு மக்கள் முடிவு கொடுக்கப் போகிறார்கள். தேர்தலில் அவர்கள் வருவதற்கு ஒரு வாய்ப்புக்கொடுக்காமல் கனம் நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் அறிக்கையை தயாரித்துவிட்டார்கள். அறிக்கையில் ஏதாவது ஒரு குறையை வைத்து தயாரித்து இருந்தால் அவர்கள் வந்து இங்கே உட்காருவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அப்படிச் செய்யாததால் அதைக் கண்டு நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன்.

அடுத்தபடியாக விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகிறது என்று குறை கூறுகிறார்கள். அதே சமயத்தில் உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் எதிர்க் கட்சியிலுள்ளவர்கள். ஜனப் பெருக்கத்தைப்பற்றி காங்கிரஸ் சொன்னால் அதை வேறு விதமாக எதிர்க் கட்சிக்காரர்கள் ஜனங்களிடத்தில் சொல்லுகிறார்கள். காங்கிரஸ் சர்க்கார் குழந்தை பிறப்பிக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள் என்று பிரசாரம் செய்கிறார்கள். மற்றும் எதிர்கட்சி அங்கத்தினர் சொல்லுகிறார், குழந்தை பிறந்து விட்டால் உடனே அரிசி சாப்பிடுகிறதா என்று கேட்கிறார். அரிசிதான் சாப்பிடுகின்றன. ஆகவே ஜனப்பெருக்கத்தைக் குறைத்தால் விலைவாசிகள் குறையும் என்று சொன்னால் அதற்கு விரோதமாக பிரசாரம் செய்கிறார்கள். ஆகவே அவர்கள் பிரசாரம் செய்வதில் ஒன்றுக்கு ஒன்று வித்தியாசமாக இருக்கிறது. ஜனப்பெருக்கம் குறைந்தால் உணவு அதிகமாக கிடைக்கும், அதனால் விலைவாசிகள் குறையும் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். ஆகவே, ஜனப்பெருக்கம் குறைந்தால் நிச்சயமாக விலைவாசிகள் குறையத்தான் செய்யும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



4th March 1961] [J. Matha Gowder]

மத்திய சர்க்காரிடமிருந்து சண்டை போட்டு வாங்கி வர வேண்டும் என்றும், இப்பொழுது சண்டை போட்டு வாங்கி வருவதில்லை என்றும் குறிப்பிட்டார்கள். அப்படியேதான் கடந்த நான்கு ஆண்டுகளாகவும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். எப்படி சண்டை போடுவது, இவர்களுக்குச் சண்டை போடத் தெரியாது தான். கனம் ஆசைத்தம்பி போன்ற சண்டை போடத் தெரிந்தவர்களைக் கொண்டு ஒரு குழுவை அமைத்து அவர்களை வேண்டுமானால் மத்திய சர்க்காரிடம் போய் சண்டை போட்டு வாங்கி வரச்சொல்லலாம் என்று தோன்றுகிறது. ஆகவே அந்த முறையிலாவது சண்டை போடக்கூடியவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து மத்திய சர்க்காருக்கு அனுப்பலாம் என்று தோன்றுகிறது.

அடுத்தபடியாக பள்ளிக்கூடத்தை எடுத்துக்கொண்டால் இந்நாட்டில் இதற்கு முன்பு 16,000 பள்ளிக்கூடங்கள் இருந்தன. இன்றைக்கு எவ்வளவு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்று பார்த்தால் 26,700 பள்ளிக்கூடங்கள் இயங்கி வருகின்றன என்றால் எவ்வளவு பள்ளிக்கூடங்களை அதிகமாக ஏற்படுத்தியிருக்கிறோம் என்று தெரியவரும். இவ்வளவு பள்ளிக்கூடங்களை ஏன் அதிகமாக ஏற்படுத்தி இருக்கிறோம் என்றால் கிராமங்களிலுள்ள மக்கள் எல்லோரும் நன்றாகப் படித்து அரசியல்வாதிகள் அவர்களை ஏமாற்றாமல் இருப்பதற்காகத்தான் அவர்கள் எல்லோரும் படித்துவிட்டு முன்னேற்றமடைய வேண்டுமென்ற எண்ணத்தில் இவ்வளவு பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த முறையில்தான் இப்பொழுதுள்ள காங்கிரஸ் சர்க்கார் இயங்கி வருகிறது. அந்த முறையில்தான் காங்கிரஸ் சர்க்கார் எல்லா கிராமங்களிலும் பள்ளிக்கூடங்களை அமைத்து வருகின்றன. இதற்கு முன்பு இந்த மாகாணத்தில் 45 சத விகிதத்தினர்தான் படித்திருந்தார்கள் என்றால், இப்பொழுது 75 சத விகிதத்தினர் படித்திருக்கிறார்கள். இதைப் பார்த்தால் எவ்வளவு தூரம் நம் மாகாணம் படிப்பு விஷயத்தில் முன்னேற்றமடைந்து இருக்கிறது என்பது தெரிய வரும். இப்படி ஒவ்வொரு இனத்தையும் இந்த நிதி நிலை அறிக்கையில் கவனித்தால் ஒவ்வொன்றும் அதிகரித்துக்கொண்டே வந்திருப்பதைப் பார்க்கலாம். ஏழை மாணவர்கள் பத்தாவது வரைக்கும் இலவசக் கல்வி பெறலாம் என்று நமது முதல் அமைச்சர் அடிக்கடி சொல்லிக் கொண்டு வந்ததை இப்பொழுது காரியத்தில் செய்திருக்கிறார். அப்படி அவர் செய்வது இதில் மட்டும் அல்ல. பேச்சில் மாத்திரம் அப்படி இல்லை. காரியத்திலும் செய்துவிட்டார். இனி ஏழை மாணவர்கள் 11-வது வகுப்பு வரையில் இலவசமாகப் படிக்க முடியும். இனி எதிர்க் கட்சிக்காரர்கள் வோட்டு வாங்குவது எங்கே? "நீங்கள் உங்கள் குழந்தைகளை எப்படிப் படிக்க வைப்பீர்கள்? நாங்கள் வந்தால் உங்கள் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி அளிப்போமே" என்று அந்த ஏழை மக்களிடம் இனி எதிர்க்கட்சிக்காரர்களுடைய ஏமாற்றுப் பேச்சுப் பலிக்காது. பணக்காரர்களிடத்திலாவது போகலாம் என்றால் அங்கும் சுதந்திரக் கட்சி ஊன்றிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைய தினம் நடுவில் இருக்கும் கட்சிகள் திண்டாடிக்கொண்டிருக்கின்றன.

[J. Matha Gowder] [4th March 1961

அடுத்தபடியாக ஒன்றிரண்டு கருத்துக்களை என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டவரையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று கேள்வி நேரத்தில் உதகையில் சிறிய வருமானம் உள்ளவர்களுக்கு ரெஸ்ட் ஹவுஸ் கட்டப்போவதாக அமைச்சர் சொன்னார். உதகை, கோத்தகிரி, குன்னூர் ஆகிய மூன்று இடங்களிலும் அம்மாதிரி கட்டவேண்டியது அவசியமாகும். குன்னூரும் சுகவாசஸ்தலமாக இருப்பதால் அங்கு அவசியம் ஒரு ரெஸ்ட் ஹவுஸ் குறைந்த வருமானக்காரர்களுக்குக் கட்டித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் முன்பு நீலகிரி ஜில்லாவில் வேலை செய்த ஆசிரியர்களுக்கு சம்பளத்தில் பாதி மலை அலவன்சாகக் கொடுக்கப்பட்டு வந்தது. அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் போதவில்லை என்றுதான் சம்பளத்தை உயர்த்தினோம். ஆனால் சம்பளத்தை உயர்த்திவிட்டு மலை அலவன்சு அங்கு வேலை செய்பவர்களுக்கு இன்றும் கொடுக்கவில்லை. அதனால் பி.டி. ஆசிரியர்கள் நீலகிரி ஜில்லாவில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு வரமாட்டேன் என்கிறார்கள். சமவெளிப் பிரதேசத்தில் கொடுக்கப்படுகிற சம்பளம்தான் அங்கும் என்றால் சமவெளிப் பிரதேசத்தில் இருப்பவர்களைவிட மலைப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்குச் செலவு அதிகமாகிறது. ஆகவே, கண்டிப்பாக சம்பளத்தை உயர்த்தியதுபோலவே மலை அலவன்சை உயர்த்திக் கொடுக்கவேண்டும். அப்படி உயர்த்திக் கொடுப்பதுதான் நியாயம். அடிப்படைச் சம்பளத்தில் பாதியாவது மலை அலவன்சாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் அவ்விஷயம் பரிசீலனையில் இருப்பதாக காலம் தாழ்த்திக்கொண்டிருக்காமல் உடனடியாக அந்த அலவன்சைக் கொடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சென்ற போகத்திலே கிழங்குகள் விலை மிகவும் குறைந்துவிட்டது. மற்ற உணவு தானியப் பொருள்களின் விலை உயர்ந்திருக்கும்போது கிழங்குகள் மிகவும் பாதிக்கப்பட்டு விலை இறங்கிவிட்டது. இதனால் சாகுபடிக்காக அந்த கிழங்கு சாகுபடியாளர்கள் சர்க்காரிடம் இருந்து கடன் வாங்கிப் போட்ட பணத்தைக்கூட எடுக்க முடியாது போய்விட்டது. ஆகவே, தயவுசெய்து ரெவின்யூ அமைச்சர் அவர்கள் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க ஒரு வருஷ வாய்தாவாவது கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீலகிரியில் 6 ஆயிரம் டன் கெட்டி அட்டை உற்பத்தி செய்கின்ற வசதி இருப்பதாக சென்னை ராஜ்ய தொழில் நிபுணர்களே சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தொழிலையும் உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



4th March 1961] [Sri J. Matha Gowder]

அடுத்தபடியாக ஒரே ஒரு வார்த்தை. தேயிலையைப் பொறுத்தவரையில் பச்சைத் தேயிலைக்கு விற்பனை வரி இவ்வாண்டு முதல் கிடையாது என்று வைத்திருக்கிறோம். ஆனால் சென்ற 1959-ம் ஆண்டில் முதலில் ஒரு முனை வரி என்றும், அக்டோபர் முதல் பலமுனை வரி என்றும், திரும்ப டிசெம்பரில் ஒரு முனை வரி என்றும் பலமாதிரியாகப் போட்டு அவர்களைத் தொல்லைக்கு உள்ளாக்கியிருக்கிறோம். சின்னச்சின்ன விவசாயிக்குக்கூட ஐந்து ரூபாய், பத்து ரூபாய் வருமானமுள்ளவர்களுக்கும் வரி போடப்பட்டது. அதை வாங்கக்கூடாது என்று சொல்லவில்லை. அவசரப்படாமல், மெதுவாக, நிதானமாக வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு வணக்கம் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **SRI T. R. RAMAMIRTHA THONDAMAN**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1961-62-ம் வருஷத்து நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்தில் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதை நான் பாராட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை இந்த மாநிலத்தில் உள்ள சகல மக்களுக்கும், குறிப்பாக பின் தங்கிய மக்கள், ஹரிஜன மக்கள், எல்லா தாழ்த்தப்பட்ட மக்கள்—இதுபோன்றவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை நல்ல முறையில் உயர்த்துவதற்கு, ஏற்ற வகையில் அமைந்திருக்கிறது. எல்லோராலும் பாராட்டத் தக்க பெருமதிப்பு வாய்ந்ததாக இருக்கிறது என்பதை நம் மாநிலத்தில் உள்ள மக்கள் அனைவரும் தெளிவாக உணருவார்கள். இந்த பெருமதிப்பு வாய்ந்த அறிக்கையைப்பற்றிக்கூட மாற்றுக் கட்சி அங்கத்தினர்கள் சோஷலிஸ்ட், தி.மு.க. கம்யூனிஸ்டுகள் பலவிதமான குறைகளைச் சொன்னார்கள். இந்த அறிக்கையில் ஒன்றும் இல்லை என்று சொன்னது ஒருபுறம். இந்த அறிக்கையில் ஒன்றும் காணோம் என்று சொன்னது ஒருபுறம். அறிக்கையில் பொதுத் துறையில் பல தொழில்களை ஆரம்பிக்காமல் எல்லாம் தனியார் துறையில் ஆரம்பிக்க இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறதே என்று சொன்னது ஒருபுறம். இப்படி ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் தெரிவித்தார்கள். இது எல்லாம் எதைக் குறிப்பிடுகிறது என்றால் இவர்கள் சென்ற காலத்தையும், தற்காலத்தையும் சரியான முறையில் சீர்தூக்கிப் பார்க்கவில்லை என்பதைத்தான் குறிப்பிடுகிறது. சென்ற காலத்தில் உள்ள நிலைமைக்கு எவ்வளவோ மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒரு ஹரிஜனப் பெண்மணியை மிராசுதார் பிடித்து இழுத்துவந்து வாயில் வந்தபடி திட்டுவதோடு ஆட்களையும் விட்டு அடித்து தலைவிரிகோலமாக்கி அவளை ரத்தம் சொட்ட நிற்க வைத்திருக்கும்போது அவள் புருஷன் அங்கே வந்தாலும் "இன்னும் அடியுங்கள், அப்போதுதான் அந்த பெண்பிள்ளைக்கு நல்ல புத்தி வரும்" என்று பயத்தோடு தானும் சேர்ந்து சொன்ன நிலைமை மாறிப்போய் இன்று அதே நிலச்சுவாந்தார்கள் ஹரிஜனப் பெண்மணிகளிடம் பேசும்போது மரியாதையாக "அம்மா" என்று அழைப்பதைத் தவிர வேறு ஒரு சின்ன வார்த்தை சொன்னாலும்கூட தன்

[Sri T. R. Ramamirtha Thondaman] [4th March 1961

மான உணர்ச்சியோடு கிளர்ச்சி முற்றி நிலச்சுவாந்தார் சிறைக்குப் போகக்கூடிய நிலைமைக்கு நாட்டு மக்களின் நிலைமை, அதுவும் விவசாயப் பெருங்குடி மக்களின் நிலைமை முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை மறைத்துப் பேசிப் பயன் இல்லை என்பதை எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். குறை காண்கிறவர்கள் நாட்டில் இருந்த குறை என்ன, அவை நீக்கப்பட்டிருக்கின்றனவா, இல்லையா என்று பார்த்து குறைகளைச் சொல்லி அவைகளைத் தீர்க்கவேண்டும் என்று சொன்னால் நலமாயிருக்கும். விவசாயிகள் சம்பந்தப்பட்ட வரையில் நிலச்சீர்திருத்தத்தைப் பற்றியும், நில உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றியும் குறிப்பிடவில்லையே என்று குறைபட்டுக் கொண்டவர்கள், நல்லதொரு நிலச்சீர்த்திருத்தச் சட்டத்தை வகுத்துக்கொண்டிருக்கும் நிலையில், அதை அவசரப்பட்டு கொண்டுவராவிட்டாலும் இன்றைய நிலைமை என்ன, முன்பு இருந்த நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டாமா? நிலத்தில் சாகுபடி செய்து கொண்டிருந்த ஒரு சாதாரண ஹரிஜன் சென்ற காலத்தில் நிலத்தில் உழைத்ததோடு சரி, ஆண்டை நினைத்தால் நிலத்தைவிட்டு வெளியேற்றலாம், மிகக் கெஞ்சினால் உழைத்த கூலியில் பாதி பெறலாம் என்று இருந்த நிலைமை மாறி, இன்றைக்கு தன் உழைப்புக்கேற்ற கூலியைப் பெறுவதோடு, நிலத்தில் இருந்து நினைத்தபோது வெளியேற்ற முடியாது என்கிற பாதுகாப்பைப் பெற்றதோடு—இந்த உரிமையும் பாதுகாப்பும் மீறப்படுகிறபோது ரெண்ட் கோர்ட்டில் இருந்து சுப்ரீம் கோர்ட் வரையிலும்கூட சென்று தன் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள வசதியும், வாய்ப்பும், விழிப்பும் பெற்றிருக்கிறான் என்பதை யாரும் மறுக்க முடியாது, மறைக்கவும் முடியாது. இன்றைக்கு வள்ளுவர் சொன்னதுபோல

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்."

என்கிற நிலைமையை நாம் உண்மையாக ஆக்கியிருக்கிறோம் என்றால் இது ஒரு பெரிய முன்னேற்றம் இல்லையா? இன்றைக்கு ஒரு நிலச்சுவாந்தார் தன் இஷ்டம்போல சாகுபடியாளரை நிலத்தில் இருந்து வெளியேற்ற முடியாது என்றால் அதற்குக் காரணம் இந்தச் சர்க்கார் சாகுபடியாளர்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளித்திருக்கும் பாதுகாப்புத்தான் என்பதை எல்லோரும் உணர்வர். நிலச்சுவாந்தார் வீட்டு வாசலிலே நாள் கணக்காக தான் உழைத்த உழைப்புக்குச் சேரவேண்டிய கூலியைப் பெறுவதற்காக தவம் கிடந்த நிலைமை மாறி தன்னுடைய உரிமை, தன்னுடைய ஊதியம் மறுக்கப்படுகிறது என்றால் தன் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள சாதாரண விவசாயி கூட ஹைகோர்ட் வரையில்கூட சென்று வெற்றியோடு திரும்புகிறான் என்றால் அதற்காக இந்தச் சர்க்காரை எல்லோரும் பாராட்டத்தான் வேண்டும்.

மேலும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சிலர் வெள்ளையர் காலத்தில் எவ்வளவோ நல்லதாக இருந்தது என்று சொன்னார்கள். வெள்ளையர் ஆட்சியில் சௌகரியம் அடைந்தவர்கள் சொல்வார்கள்.



4th March 1961] [Sri T. R. Ramamirtha Thondaman]

வெள்ளையர் காலத்தில் எனக்குத் தெரியாதா என்ன? இந்த நாட்டில் பெரிய ஜமீன்தார்களாக இருந்தவர்கள் நம் நாட்டைக் காட்டி கொடுத்த பட்டதாரிகள் சமஸ்தான மன்னர்கள்தான் வெள்ளையர் காலத்தில் இந்த மன்றத்தில் இருந்தார்கள். அந்த பெரிய பெரிய ஜமீன்தார்கள் மற்றவர்கள்கூட ஒரு சாதாரண வெள்ளை உத்தியோகஸ்தனைக் காணச் சென்றால் அங்குள்ள டவாலி ப்யூன் "துறை தீனி தின்கிறார், இப்போது பார்க்க முடியாது, போ" என்றுதான் விரட்டி அடித்திருக்கிறான். ஆனால் இன்றைக்கு அமைச்சர்களில் இருந்து, பெரிய அதிகாரிகள் யாராக இருந்தாலும் சரி—யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் யாரும் காணலாம், கண்டு பேசி குறைகளைச் சொல்லிக் கொள்ளலாம் என்கிற நிலைமை நாட்டில் உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றால் இது முன்னேற்றம் இல்லையா என்று கேட்கிறேன். கல்வி சம்பந்தப்பட்ட வரையில் எடுத்துக்கொண்டால் என்னுடைய தொகுதியையே எடுத்துக்கொண்டாலும் ஆரம்பப் பள்ளிகளில் இருந்து ஆரம்ப உயர்நிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் பல வளர்ந்துகொண்டே போவதோடு, ஆடுதுறையில் ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கை வரும் அளவுக்கு, எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவசமாக 11-வது வரையில் படிக்கலாம் என்கிற நிலைமை அளவுக்கு முன்னேற்றம் வளர்ந்துகொண்டே போகிறது என்றால் இதை யார் மறுக்க முடியும்? இவையெல்லாம் வளர்ச்சி இல்லையா? நாட்டு மக்களிடையே இத்தனை விழிப்பு உணர்ச்சி உண்டாவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? ஏதோ வெள்ளையர் காலத்தில் போட்ட திட்டத்தைத்தான் இவர்கள் நிறைவேற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். வெள்ளையன் காலத்தில் நானோ, பேசுகிற நண்பர்களோ இங்கு இருக்க முடியாது. நாம் நம் நாட்டுக்குகந்த திட்டத்தைத் தீட்டுகிறோம். வெள்ளையன் காலத்தில் இருந்தது என்ன? அதைப்பற்றியே பேசுகிறார்களே தவிர இங்குள்ள நிலைமை என்ன? இங்கு அடைந்திருக்கும் முன்னேற்றம், வளர்ச்சி என்ன இவற்றைப் பார்க்காதவர்களைப்பற்றி என்ன சொல்வது என்று எனக்குப் புரியவில்லை. அவர்களை ஜன்னி கண்டவர்கள் என்றுதான் நினைக்கிறேன். சாதாரணமாக ஒரு புருஷன் தன் வீட்டிற்கு வேண்டிய எல்லா சாமான்களும் வாங்கிப்போட்டு, தன் வீட்டிற்கு வேண்டிய எல்லா வசதி சாதனங்களையும் வாங்கிப் போட்டு, தன் மனைவிக்கு வேண்டிய ஆடை அணிகளை எல்லாம் வாங்கிக் கொடுத்து, குடும்பத்தை நல்ல முறையில் ரட்சிக்கும் போது அந்தப் பெண் சொந்த புருஷன் முன் அடுத்த வீட்டுக்காரனது குணத்தையும், அவனுடைய அழகு அந்தஸ்தையும் பற்றி பேசுவாள் என்றால் அந்தப் பெண்ணைப்பற்றி அவள் புருஷன் என்னவிதமாக நினைக்கவேண்டும்? ஒன்று அவன் விவாகரத்து செய்துகொள்ள வேண்டும் அல்லது அவளை துலைத்து கட்ட வேண்டும் அல்லது அவளை மணந்துகொண்டதற்காக தற்கொலை தான் செய்துகொள்ள வேண்டும். நம்முடைய நாட்டை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடையச்செய்ய பலவிதமான தியாகங்களைப் புரிந்ததோடு சுதந்திரம் பெற்றபின் நாட்டு மக்கள் ஒருவரை

[Sri T. R. Ramamirtha Thondaman] [4th March 1961

ஒருவர் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் அவல நிலையைப் போக்குவதற்கும், உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை என்ற வித்தியாசத்தை ஒழிப்பதற்கும் பலவிதமான காரியங்களைச் செய்து தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய, ஹரிஜன ஏழை பாட்டாளி மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் இவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பலவிதமான சட்டங்களையும், திட்டங்களையும் வகுத்து, கல்வியில் எல்லா ஏழை மக்களும்கூடச் சிறந்து நிற்க வழிவகை வகுத்து, சுகாதார வசதி, வைத்திய வசதி எல்லாவற்றையும் பெருக்கி, அதுவும் காலரா போன்ற நோய்க்கு நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகிக்கொண்டிருந்த பகுதிகளில் எல்லாம் அந்தத் தொத்து நோய் தோன்றாதவாறே ஒடுக்க தீவிர நடவடிக்கை எடுத்து—இப்படி ஒவ்வொரு துறையிலும் பலவிதமான காரியங்களைச் செய்து நாட்டை சுபீட்சப் பாதையில் இட்டுச் செல்கிற ஒரு சர்க்காரைப் பார்த்து எவ்விதமான முன்னேற்றமும் செய்யவில்லை என்று இவர்கள் சொன்னால்—நாம் பரிதாபப்படாமல் என்ன செய்வது? எதிர்க்கட்சிக்காரர்களுக்கு வரும் தேர்தலில் ஒரு சீட்கூட கிடைக்கமுடியாத நிலையில் அவ்வளவு நன்மைகளையும் வரி போடாமல இந்த சர்க்கார் நிறைவேற்றிவிட்டதே என்று பார்த்தவுடன் இந்த நிலையில் எதிர் கட்சிகள் மோதுகின்றன என்பதைத்தான் உணரவேண்டியிருக்கிறது. மேலும் இந்த நிலை ஒன்றுமேயில்லை என்று சொல்வது 1 p.m. எதைக் குறிக்கிறது என்று சொன்னால் எதிர்க்கட்சிகளுக்கு இருந்த சுரம் வியாதி ஜன்னியாக மாறி உளறல் இங்கே ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது என்பதைக் காட்டும் முறையில்தான் எதிர்க் கட்சி அங்கத்தினர்களின் பிரசங்கங்கள் இருக்கின்றன என்பதைத் தவிர வேறு எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை. பொருளாதார வளர்ச்சி ஏற்படவில்லை, முன்பெல்லாம் விலைவாசி குறைந்திருந்தது, இப்பொழுது அவை ஏறிவிட்டது என்றெல்லாம் கூறுகிறார்கள். மதிப்பிற்குரிய எனது எதிர்கட்சி நண்பர் கருணாநிதி அவர்கள் பேசுவதற்கு, சிறப்புக் கூட்டம் போடுகிறார்கள். ஒரு ரூபாய் கட்டணமும் வாங்குகிறார்கள். பேச்சுக்குப் பணம் வாங்குவது என்ற முறையில் பார்த்தால் அவர் பேச்சைக் கேட்பதற்கு ஆயிரக்கணக்கில் மக்கள் போகிறார்கள். டிக்கட் வாங்கிக்கொண்டு போவதோடு போக்குவரத்து சிலவு வேறு. ஆயிரக்கணக்கில் பொருளாதாரம் வளர்ச்சியடையவில்லை யென்றால் பின் அவர்கள் டிக்கட் வாங்கிக்கொண்டு பெருமளவில் எப்படி அவர் கூட்டத்திற்கு போக முடிகிறது? இதைக் கண்டால் பார்த்தும்கூட பொருளாதார வளர்ச்சியில்லையென்றால் அது நியாயமா? ஆகவே, இது ஜன்னியின் உளறல் என்பதைத் தவிர வேறு எதுவுமாகயிருக்க முடியாது. கல்வித்துறையிலும், பொருளாதாரத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் இப்படி பல்வேறு துறைகளில் இந்த அரசாங்கம் அபிவிருத்தி செய்து வருவதை கண்டு அதை எதிர்க்க முடியாது, தனிப்பட்ட முறையில் எதிர்த்து கட்சி சேர்த்து முறியடிக்க முயற்சித்தும் அதுவும் முடியாததால் கூட்டு சேர்ந்தும்



4th March 1961] [Sri T. R. Ramamirtha Thondaman]

முடியாமல் சிதைந்து விடுமோ என்று அஞ்சித்தான் இப்படிப் பேசுகிறார்களோ, என்னவோ தெரிய முடியாது திகைக்க வேண்டிய நிலையில்தான் இருக்கிறது இன்றைய நிலை.

நம் நாடு பல துறைகளில் முன்னேறியிருக்கிறது. கல்வித் துறை, தொழில்துறை, சுகாதாரத்துறை, போன்ற எல்லாத் துறைகளிலும் முன்னேறியிருப்பதைக் கண்டும் அதைப் புரிந்துகொள்ள முடியாவிடில் சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் செயல்படும் செயல்களை அவர்கள் பார்க்கட்டும். (மணியடிக்கப்பட்டது.) விவசாயம் சம்பந்தமாக ஒரு வார்த்தை. தீவிர உணவு திட்டம் அமுலில் இருக்கும் என் பகுதியில் பந்தநல்லூர் சரகம் கருப்பூரில் கலப்பு உரம் தயார் செய்வதற்கு ஏ. கே. ரங்கநாத அய்யர் மனு போட்டிருக்கிறார். அதை கவனித்து அங்கு கலப்பு உரம் தயார் செய்யும் ஒரு தொழிற்சாலை நிறுவ வேண்டும். அதுபற்றி அநேக மனுக்கள் கொடுக்கப்பட்டும் அவை சிபார்சு செய்யப்படாமலிருக்கிறது. இப்பொழுது அந்த ஏ.கே.ஆர். பண்ணையில் ஏக்கருக்கு 60 கலம் சாதாரணமாக விளைகிறது. ஆகவே, அதைக் கவனித்து அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை அனுமதித்தால் சுமார் 3,000 ஏக்கருக்கு உரம் அதன்மூலம் கிடைக்கும். பின்னர், இப்பொழுது விவசாயிகள் வெளியேற்றப் படுவதாக புகார்கள் வருகின்றன. குறிப்பாக பாபநாசம் தாலூகா கீழ விட மடல் கருப்பூரில் நிலச்சுவாந்தார்கள் உழவர்களை வெளியேற்றுவதை தடுக்கவேண்டும். பின்னர், உடையார்பாளையம் தாலூகாவில் குடி தண்ணீர் இன்றியும், பாசன வசதியின்றியும், பாதிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்கள் அநேகம் இருக்கின்றன. மின்சார அமைச்சர் அவர்களின் முயற்சி காரணமாக அங்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு அமைச்சர் அவர்களின் சிலகூட கட்ட ஏற்பாடுகள் செய்கிறார்கள் என்று நம்புகிறேன். கீழே இருக்கும் நீரை மேலே கொண்டுவந்து குடி தண்ணீர் வசதிகள், பாசன வசதிகள் செய்யவேண்டும். மேலும் வேண்டிய வசதிகளை உடையார்பாளையம் தாலூகாவில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் என் தொகுதியில் சோழபுரத்தில் ஒரு ஹைஸ்கூலும், பந்தநல்லூரில் ஒரு ஹைஸ்கூலும், திருப்பனந்தாளில் ஒரு ஹைஸ்கூலும் கேட்டு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அதை இந்த வருஷமே ஆரம்பிக்க அங்கீகாரம் அளிக்க கேட்டுக்கொள்வதோடு, ஆடுதுறையில் ஒரு காலேஜ் ஏற்படுத்த திருப்பனந்தாள் மடாதிபதி உதவியால் நடைபெறும் முயற்சிக்கு உதவியாக அங்கு ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI K. ANBAZHAGAN**: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை வெளியிட்ட அமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையைப் படிக்கிறபோதே தன்னையும் அறியாமல் தளர்ச்சியடைந்ததை அவர் அறிக்கையைப் படிக்கும்போது நான் கவனித்துக் கொண்டிருந்தேன். நீண்ட அறிக்கையைத் தயாரித்ததாலும் படித்ததாலும் ஏற்பட்ட

களைப்போ அல்லது இவ்வளவு நீண்ட அறிக்கையைத் தயாரித்தும்
நாட்டு மக்கள் அதற்குரிய முழுப் பலனையும் பெற மாட்டார்களே
என்ற நினைப்பினால் ஏற்பட்ட சலிப்போ அவர் தளர்ச்சியடைந்
தார். அவர் அவ்வறிக்கையைப் படிக்கும்போது அதைக் கேட்டுக்
கொண்டிருந்த நாமும் தளர்ச்சியடைந்தோம். இந்த அறிக்கை
யைப் பின்னர் படித்த நாட்டு மக்களும் தளர்ச்சியடைந்திருக்
கிறார்கள். ஆகவே, இதனால் அனைவருக்கும் ஏற்பட்டுள்ள தளர்ச்
சியை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் புனராலோசனை செய்ய
வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு
நிதிநிலை அறிக்கை ஓரளவு இழப்புக் கணக்கைக் காட்டுவதாக
யிருந்தாலும் ஒருவேளை காங்கிரசுக்கு அது லாபக் கணக்கைக்
காட்டுமென்று எதிர் பார்க்கிறார்களோ என்று ஐயுறுகிறேன்.
இழப்புக் கணக்கைக் காட்டியும் புதிய வரி விதிக்காமல் இருப்
பதால் நாட்டு மக்களுக்கு நன்மை செய்து தருவதாக, வரி விதிக்
காமலேயே அவர்களுக்காகத் தாங்கள் அரசு நடத்துகிறோம்
என்பதைக் காட்ட இந்த அறிக்கை பயன்பட்டிருக்கிறது. சட்ட
மன்றக் கூட்டங்களில் பேசுகிறபோது அமைச்சர்கள் இதை ஒரு
தனி அரசாங்கமாகக் கருதிப் பேசினாலும் டெல்லி சர்க்கார் இந்
நாட்டு மக்களுக்கு நாளும் பல அறிவிப்புகள் தந்து கொண்டிருப்
பதை மக்கள் நன்கு அறிவார்கள். இங்குகூட ஒரு உறுப்பினர்
பேசியதற்கு மறுப்பளித்த அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்,
சமஷ்டி சர்க்கார் அப்படித்தான் இருக்க முடியுமென்று. நான்
தமிழ்நாட்டு மக்கள் சார்பில் பேசுகிறேனே தவிர எட்டு அமைச்
சர்களின் சார்பில் அல்ல. அவர்கள் சார்பில் யாரும் நீண்ட
நாட்கள் பேசவும் முடியாது. தமிழ்நாட்டு மக்கள் இன்றையதினம்
டெல்லி சர்க்காரின் நிதிநிலை அறிக்கைக்கு உட்பட்டவர்களாகத்
தான் இருக்கிறார்கள். டெல்லி சர்க்காரின் நிதிநிலை அறிக்கை
வெளியானவுடன் மண்ணெண்ணை விலை ஏறிவிட்டது. மக்கள்
பயன்படுத்தும் மண்ணெண்ணை விலை ஏறாது என்று மத்திய
அரசாங்க அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதை
வாங்கச் செல்லும் மக்கள் அதற்குக் கடைகளில் அதிகம் விலை
தரவேண்டிய நிலை இரண்டு நாட்களாக ஏற்பட்டிருக்கிறது. தீப்
பெட்டியின் விலையும் ஏறுவதாகயிருக்கிறது. காப்பியின் விலை
ஏறிவிட்டது. உணவும் விலை ஏறிவிட்டது. பாக்கும்—புகையிலையும்
விலை ஏறுகின்றன. அமைச்சர்களின் மதிப்பைத் தவிர மற்றவை
களெல்லாம் இப்பொழுது விலை ஏறிக் கொண்டிருக்கின்றன. மத்திய
அரசாங்கத்தின் புதுவரி விதிகள் காரணமாக நம் நாட்டு மக்கள்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்க வரி விதிப்பு
காரணமாக நம்நாட்டு மக்கள் எவ்வளவு பொருள் இழக்கப்
போகிறார்கள், எவ்வளவு இலாபம் நன்மை அடைந்திருக்கிறார்கள்
என்பது குறித்து நிதியமைச்சர் அவர்கள் ஒரு புள்ளிவிவரம்
தருவார்களேயானால் நான் மகிழ்ச்சியடைவேன். வரி போடுவது
மத்திய சர்க்கார் அல்லவா, அப்படியிருக்க நீங்கள் ஏன் எங்களைக்
குறை கூறுகிறீர்கள் என்று நிதியமைச்சர் அவர்கள் கேட்கக்
கூடும். டெல்லி சர்க்கார் வரி போடுவதினால் பஞ்சாப் பாதிக்கப்



படுவதை விட, மத்திய அரசினர் வரி விதிப்பினால் மேற்கு
வங்காளமும், உத்தரப் பிரதேசமும் பாதிக்கப்படுவதைவிட தமிழ்
நாட்டு மக்கள்தான் குறிப்பாகத் தென்னாட்டு மக்கள்தான் மிகுதி
யாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்தப் பகுதிகளில்
பின்தங்கிய மக்கள் வாழ்கிறார்களோ அந்தப் பகுதிகள்
தான், இந்த வரிகளால் மிகுதியாகப் பாதிக்கப்படும்.
ஏழைகள் மடியில் இருக்கும் பணத்தை—சில்லரைக்
காசுகளைக் கைப்பற்றும் முறையில்தான் டெல்லி சர்க்கார்
வரி போட்டிருக்கிறதே தவிர இது பணக்காரர்களுக்குப்
போடப்பட்டிருக்கும் வரி அல்ல. காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள்
சோஷியலிஸ தர்மத்தைக் கடைப்பிடிக்கிறோம் என்று சொல்
கிறார்களே அதே சோஷியலிஸத்திற்கே இன்று வரி போடுகிறது
மத்திய அரசு. பணக்காரர்களுக்கு வரி போடவில்லை, ஆனால் சம
தர்மத்திற்கு வரி போடுகிறது. இதை முதலாளிகளுக்கு போட்ட
வரியாக யாரும் கருத மாட்டார்கள். நாங்கள் வரி போடவில்லையே
என்று நீங்கள் சொல்லலாம், ஆனால் மற்றார் வரி போடுவதைப்
பார்த்துக்கொண்டே இருந்துவிட்டு, நாங்கள் ஒன்றும் வரி போட
வில்லையே என்று சொல்லுவது அரசியல் தந்திரமாக இருக்கலாமே
தவிர வேறு அல்ல என்பது அரசியல் தெரிந்தவர்களுக்கு நன்கு
விளங்கும். காங்கிரஸ் ஆட்சி வரி போடுகிறது. அது மொரார்ஜீ
தேசாயாகயிருந்தாலும் சரி அல்லது நிதியமைச்சர் சுப்பிரமண்யம்
அவர்களாகயிருந்தாலும் சரி, காங்கிரஸ் ஆட்சி வரி போட்டு
மக்களை கசக்கிப் பிழிகிறார்கள் என்ற உண்மை மக்களுக்குத்
தெரியாமல் போகாது. ஆனால் நிதியமைச்சர் சுப்பிரமண்யம்
அவர்கள் சொல்லக்கூடும் நானா வரி போட்டேன் என்று. அதற்கு
நான் சொல்லக்கூடிய பதில், நீங்கள் இல்லாவிட்டால் உங்கள்
அண்ணன் வரி போட்டிருக்கிறார், அதுவும் மக்களுக்குத் தொல்லை,
தீமை விளைவிக்கக் கூடியதென்று. இப்படி மத்திய அரசாங்கம்
நடந்து கொண்டிருக்கும்போது இம்மாநில அரசாங்கமாவது
தமிழ்நாட்டு மக்களை முன்னேறுவதற்கு ஏதாவது புது திட்டத்தை
மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய திட்டங்களை
நிறைவேற்றியிருக்கிறார்களா என்றுதான் எவரும் கேட்பர்.
மக்களின் சராசரி வருமானத்தை எடுத்துப் பார்த்தால் மற்ற
மாநிலங்களில் இருப்பதை விட நம் மாநிலத்தில் மனிதனின் சரா
சரி வருமானம், "பெர்காப்பிட்டா இன்கம்" இரண்டணா அல்லது
நாலணா அதிகமாகியிருந்தால் அதை நான் நிச்சயமாகப் பாராட்டு
வேன். 1950-ல் இருந்ததைவிட அதிகமாகியிருக்கலாம் இப்
பொழுது. ஆனால் அதேசமயத்தில் விலைவாசி ஏற்றம் எந்த அள
விற்கு இருக்கிறது, எந்த அளவு விலைவாசி ஏறியிருக்கிறது என்
பதை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இந்த விலைவாசியேற்றத்
தினால் பாதிக்கப்படக்கூடிய மக்கள் யார்? நடுத்தர மக்களும்,
பிற்பட்ட மக்களும்தான். எந்த எந்த திட்டங்களால் சராசரி
வருமானத்தை உயர்த்தினோம் என்பது குறித்து விளக்கம் கொடுத்
தால் அது மகிழ்ச்சியளிக்கக் கூடும். ஆனால் இதுபற்றிய கருத்தை
நிதியமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை.
பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாயிருப்பது விவசாயம்

[Sri K. Anbazhagan] [4th March 1961

என்று தொடங்கி, அதை மட்டும் நம்பி நாம் முன்னேற முடி
யாது என்பதை ஒப்புக்கொண்டு, தொழில் துறை வளர்ச்சி
மூலம்தான் நாம் முன்னேற முடியுமென்று குறிப்பிட்
டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்
சிக்கு என்று மொத்தமாக எவ்வளவு மூலதனம் போடப்
பட்டிருக்கிறதென்று எங்கேயாவது காட்டியிருக்கிறார்களா
என்றால் இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்
தின் கீழ் நம் மாநிலத்திற்காக 291 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது
நம் பங்காக. அமைச்சர் அவர்கள் அதையே திரும்பத் திரும்பச்
சொல்கிறார்களே தவிர மற்ற துறைகளில் நமக்குக் கிடைக்க
வேண்டிய நிதி கிடைப்பதற்கு என்ன வழி செய்துள்ளார்கள்?
அந்த வழியில் கிடைக்கவேண்டிய தொகை கிடைக்காவிட்டால்
தமிழ்நாடு எப்படி முன்னேற முடியும்?

நான் ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், மாநில
அரசாங்கத் துறையில் மூன்றாவது திட்டத்தில் 300 கோடி செலவு
செய்யப் போகிறோம் என்று சொன்னாலுங்கூட, அது மத்திய
அரசாங்கம் நேரடியாகச் செலவிடும் மூலதனம், நெய்வேலியில்
நிலக்கரிச் சுரங்கம் ஏற்படுத்துவதாக இருந்தாலும் சரி, அல்லது
அதை ஒட்டிய வேறு தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதாக இருந்தா
லும் சரி, சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்துவ
தற்கு 25 கோடி செலவிடப்போவதாக இருந்தாலும் சரி, மொத்தத்
தில் எவ்வளவு என்பதும், இத்தனையும் தவிர, தனியார் துறையில்
தொழில் வளர மூலதனம் போடுவதாக இருந்தாலும் சரி, மொத்த
மாகத் தமிழ்நாட்டுக்கு என்று எத்தனை கோடி அளவு மூலதனம்
போடப்படுகிறது என்பதற்கு அமைச்சர் அவர்கள் கணக்குக் கூற
வேண்டும். எந்தத் துறையில் மூலதனம் போடுகிறார்கள் என்பது
கூட ஒரு பக்கத்தில் இருக்கட்டும். பஸ் முதலாளிகள் மூலம்
போடும் முதலாக இருந்தாலும், கணக்கு வேண்டும். பஸ் முதலாளி
களுக்குத் தரும் புதுப்புது அனுமதி எந்த அளவுக்கு அமைச்சர்
களுக்குப் பயன்படுகிறது, அல்லது பஸ் முதலாளிகளிடத்தில்
சென்று நிதி வசூல் செய்வதற்குப் பயன்படுகிறது என்பதை
நாங்கள் அறிந்திருக்கின்றோம். அவர்களிடத்தில் சென்று நிதி
வசூல் செய்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னால், அதைப்
பார்த்து அமைச்சர்கள் வெட்கப்படாத அளவுக்குச் சமாளிக்கிறார்
கள். அது மட்டுமல்ல, இதைப்பற்றிப் பேசுவதே இவர்களுக்கு
வழக்கம் என்று சிரித்துக்கொண்டே சொல்லுகிறார்கள். இந்த
நிலைமையில் இந்த நாட்டுக்குக் கிடைக்கவேண்டிய தொகை தனி
யார் துறையில் கிடைத்தாலும் சரி, தொழில் வளர வழியுண்டு
என்று எண்ணலாம். ஆனால் அதே நேரத்தில் இதற்கான பல
கருவிகள் வரவழைக்கவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்
கின்ற நேரத்தில் வெளிநாட்டுச் செலாவணி இல்லை என்று
சொல்லி மறுத்துவிடுகிறார்கள், இந்த நிலையில் தமிழ் நாட்டில்
போடப்படுகின்ற மூலதனம் எந்த அளவுக்குப் பயன்படும் என்
பது பலருக்கும் நன்றாகத் தெரிந்திருந்தாலும்கூட இந்த நாட்டி
னுடைய தொழில் வளர்ச்சிக்காக மொத்தமாக எவ்வளவு தொகை



4th March 1961] [Sri K. Anbazhagan]

ஒதுக்கப்படுகிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் விளக்க
மாகச் சொல்ல முன்வரவேண்டும். எனக்கும் நிதி அமைச்சர்
அவர்களுக்கும் ஏற்பட்டுள்ள நட்பின் விளைவோ என்பது தெரிய
வில்லை, பெரும்பாலும் நான் பேசும்போது நிதி அமைச்சர் அவர்
கள் இந்த சபையில் இருப்பதில்லை. இவர் இங்கு இல்லாவிட்
டாலும்கூட நான் கூறுகின்றவைகளுக்குப் பதில் அளிப்பார்கள்
என்றால் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இப்படிப்பட்ட உரிமையான காரியங்களில் கவனம் செலுத்தாமல்
இந்த நாட்டில் உணவு உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்று
சொன்னால், அதற்கு நான் சொல்லக்கூடியது இதுதான். இந்த
நாட்டு மக்களுடைய சொந்த வாழ்க்கையில்தான் உற்பத்தியின்
திறமையையும் பலனையும் காண முடிகிறதே தவிர, நாட்டில்
விவசாய உற்பத்தியில் தக்க பலன் ஏற்பட்டிருப்பதாகத் தெரிய
வில்லை. முன் கிடைத்ததைவிட அதிகப்படியான விளைச்சல்
ஏற்பட்டிருக்கிறது என்றால், விலைவாசி ஏற்றம் தடைபட்டிருக்
கிறதா என்றால் இல்லையே. விலைவாசி ஏறிக்கொண்டே இருக்
கிறதே என்று நாம் கேட்டால், மக்களிடத்தில் வாங்கும் சக்தி
அதிகமாகியிருக்கிறது என்று காரணம் சொல்லப்படுகிறது.
அப்படியென்றாலும் கொடுக்கும் காசு அதிகமானதே தவிர, கொடுக்
கப்படும் காசுக்கு வாங்கப்படும் பொருட்கள் அதிகமாகக் கிடைக்
கிறதா என்றால் இல்லையே. ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி
வாங்கிக் குடும்பம் நடத்தியோர், இப்போது ஒன்றேகால் படி அரிசி
வாங்கும் சக்தி பெறவில்லை. ஐந்து ரூபாய்க்கு ஒரு வேட்டியும்
ஒரு துண்டும் வாங்கியிருந்தோம் என்றால் இப்போது அதே
ஐந்து ரூபாய்க்கு ஒரு வேட்டியும், ஒரு துண்டுங்கூட வாங்க
வில்லை. குடும்பச் செலவு எவ்வளவு ஆகும் என்று தெரியாத
அமைச்சர்களும் நம்மிடத்தில் இருக்கிறார்கள், அவர்கள் மற்ற
வர்கள் சொல்லித்தான் குடும்பச் செலவைப்பற்றித் தெரிந்து
கொள்ளவேண்டும். உண்மையிலேயே வாங்கும் சக்தி அதிகமாகி
யிருக்கிறது என்றால் கொடுக்கிற காசுக்கு வாங்குகிற பண்டம்
தேவையை நிறைவேற்றக் கூடியதாக இருக்கவேண்டும். சராசரி
வருமானம் உயர்ந்திருந்தால்தான் அது முடியும். ஆகவே
இன்றைய நிலையில் சராசரி வருமானம் தாழ்ந்துதான் இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து, எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய
உறுப்பினர் ஒருவர் மின்சாரத் துறையில் நாம் மகத்தான வளர்ச்
சியை அடைந்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். இந்தச்
சந்தர்ப்பத்தில் நான் 'டெக்னோ எகனமிக் சர்வே ஆப் மெட்ராஸ்'
என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதைக் கருத்து அளவில் சொல்ல
விரும்புகிறேன். இங்கே நீர்விசையினால் கிடைக்கின்ற மின்சார
சக்தியின் அளவானது மற்ற தெர்மல் முறைகளினால் கிடைக்கின்ற
மின்சார சக்தியைவிட மிகவும் அதிகமாக இருக்கிறது, மொத்தத்
தில் ஏறத்தாழ 75 விழுக்காடாக இருக்கிறது. அகில இந்திய
ரீதியில் கணக்கெடுத்துப் பார்த்தால் 45 சதவிகிதம் என்று
இருக்கிறது. ஒரு பக்கத்தில் நீர்விசை முறையில் மின்சாரம்

[Sri K. Anbazhagan] [4th March 1961

அதிகமாக உற்பத்தி செய்தும்கூட, அதனால் முழுப்பயன் கிடைக்கவில்லை. காரணம் என்னவென்றால் மின்சாரத்தை நெடுந் தூரம் கொண்டு செல்லுகிறபொழுது, அப்படிச் செல்வதால் ஏறத் தாழ 21 சதவிகிதம் (விழுக்காடு) கழிவு ஏற்படுகிறது. நீர்விசையில் இருந்து எடுப்பதால் நெடுந்தொலைவு கொண்டு செல்ல நேருகிறது. 'In Madras, however, the loss in transmission and distribution was 21 per cent higher than in any other State and can be directly ascribed to the longer distances over which the hydro-electricity is to be transmitted.' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தில் ஐந்தில் ஒரு பங்கு இடை யில் பாழாகிறது என்று இந்த சர்வே செய்தவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். கிராமங்களில் அதிகமாக மின்சாரம் பரப்பப் பட்டு, விளக்கு போடப்படுகிறது என்று வேண்டுமானால் சொல்ல லாம். கிராமங்களில் அமைச்சர்கள் போகும்போது இருட்டில் போகாமல் மின்சார வெளிச்சத்தில் போய்க்கொண்டிருக்கிறோம் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் தொழில் துறையில் அதிகப்படியான அளவுக்கு மின்சாரம் உபயோகப்படுத்தப்பட வேண்டுமானால், மற்ற வழிகளில் மின்சார உற்பத்திக்கான திட்டங் களை மேற்கொண்டாக வேண்டும். அமைச்சர்கள் வேண்டுமென்றால் கிராமங்களில் சுற்றுப் பயணம் செய்யும்போது அதிகாரிகளை யும் அழைத்துக் கொண்டுபோய் தேர்தல் நிதி வசூலிப்பதற்கு மின்சார வெளிச்சம் இப்பொழுது பயன்படலாம். அந்த அளவுக்கு அரசியல் நிலைமை தடுமாறிப் போய்க்கொண்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தில் எனக்கு முன்னால் பேசிய தி.மு.க. உறுப்பினர் நண்பர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கூறியதை அமைச்சர்கள் கூர்ந்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கொஞ்சம் உணர்ச்சியோடு கூறியதற்காக வேண்டுமென்றால் அமைச்சர் அவர்கள் கோபம் அடையலாம். அதே நேரத்தில் இந்த நிலைமைதான் நாட்டில் இருந்து கொண்டிருக்கவேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார் கள், தேர்தல் நிதி வசூல் செய்வதற்கு அமைச்சர்களுக்கு வேண்டிய ஆற்றல் இல்லை என்று எண்ணுகிறீர்களா? அமைச்சர் களை விடவா கலெக்டர் அவர்கள் சக்தி படைத்தவர்கள் என்று கருதுகிறீர்கள்? நாங்கள் கலெக்டர் அவர்களுடைய ஆதரவைத் தேடவேண்டிய அவசியமில்லை—எங்களுக்கு டெப்டி கலெக்டர் தேவையில்லை, தனியாகவே நிதி வசூல் செய்ய முடியும் என்று. நிதி அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிக் கொஞ்சம் அமைதியாக இருந்து ஆத்திரப்படாமல் சிந்தித்துப் பார்த்தால் இந்த நிலைமை யைக் கண்டு மக்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள் என்கிற முடி வுக்கு நிச்சயமாக வருவார்கள். அதுவும் அமைச்சராக இருந்து கொண்டிருக்கிற நேரத்தில் அதிகாரிகளுடன்போய் நிதி வசூலிப்பது அமைச்சர்களுக்கு அழகல்ல, முறையுமல்ல. அமைச்சர்களுக்கு அழகு (மந்திரிக்கழகு) வரும் பொருள் உரைத்தல், வரும் பொருள் திரட்டல் அல்ல. அதுவும்



4th March 1961] [Sri K. Anbazhagan]

கட்சிக்குப் பொருள் திரட்டல் அல்ல, வேண்டுமென்றால் நாட்டுக்கு நிதி திரட்டலாம். அமைச்சராக இருந்துகொண்டு தங்களுடைய கட்சிக்கு நிதி திரட்டுவது என்று சொன்னால் அது அமைச்சர் திரு. மாணிக்கவேலு அவர்களாக இருந்தாலும் சரி, வேறு எவராயினும் அது குற்றம்தான். இப்படித் தான் செய்வோம் என்று வேண்டுமானால் அவர்கள் சொல்லக் கூடும். காங்கிரஸ் கட்சிக்கு அது பெருமைதான் என்று வேண்டு மானாலும் வாதிடக்கூடும். நல்ல காலமாக மகாத்மா காந்தியார் அவர்கள் உயிரோடு இல்லாத காரணத்தால் அமைச்சர்கள் தைரிய மாகவே பேசலாம். "அமைச்சராக இருந்துகொண்டு தேர்தல் நிதி வசூலிப்போம், அதிகாரிகள் அமைச்சர்களோடு வந்தார்கள் என்றால் அவர்கள் நிதி வசூலித்தார்கள் என்று பொருளா? நாங்கள் போகும்போது அவர்கள் எங்களோடு வருகிறார்கள், அதனால் அவர்கள் நிதி வசூலிக்கப் பயன்பட்டார்கள் என்று அர்த்தமா?" என்று கேட்கிறார்கள். உங்களோடு வருகின்ற டெப்பூடி கலெக்டர் போன்றோர் நாளைய தினம் நீங்கள் இல்லாதபோதும் இந்த செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்த மாட்டார்கள் என்று அமைச்சர் அவர்களால் உறுதி சொல்லமுடியுமா? காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் நிதி வசூல் செய்யட்டும், வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. ஒவ்வொரு பஸ் முதலாளியினிடத்திலும் போய் வசூல் செய்யட்டும். ஐந்து ஆயிரம் அல்ல, பத்தாயிரம் வரை கேளுங்கள். அவர்களும் எந்த எந்த 'ரூட்டுகள்' கேட்க வேண்டுமோ அதற்கேற்ப கொடுப்பார்கள். ஒவ்வொரு வணிகரிடத் திலும் போய்க் கேளுங்கள். எவ்வளவு தொகை கொடுத்தால் எத்தனை ரூபாய் வருமான வரியிலிருந்து தள்ளுபடி கிடைக்கும் என்று அவர்களுக்கும் தெரியும். அதற்கு மாறாக காங்கிரஸ் கட்சித் தேர்தல் நிதிக்காக அமைச்சர்களே நேரடியாகப் புறப்பட்டுப் போவது என்று சொன்னால் அது நாட்டு மக்களிடத்தில் உண்மை யிலேயே மனக்கசப்பை வளரச் செய்யும் என்பதை அமைச்சர் களுக்கு எச்சரிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங் கக் காரியத்திற்காகப் போகும்போது அமைச்சர்கள் ஓய்வு இருந்தால் கட்சிக் காரியத்தில் ஈடுபடக் கூடாதா என்று கேட்கப் படுகிறது. அமைச்சர்களில் யாராவது கட்சிக்காரியங்களுக்காக விடுமுறை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா? வேண்டுமென்றால் 15 நாட்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு கட்சி வேலையில் ஈடுபடுவது தானே? யார் வேண்டாம் என்று சொன்னார்கள். அவ்விதம் முறைப்படி செய்யாமல் இருப்பதுடன் அதிகாரத்தை உபயோ கித்து தங்கள் கட்சியைக் காப்பாற்றி விடலாம் என்ற நம்பிக்கை யில் அமைச்சர்கள் இருந்தால், அது ஒரு நாளும் நிறைவேறாது. அதிகாரத்தால் கட்சியை வளர்த்துவிட எண்ணி வீழ்ச்சி அடைந்த வர்களை நாம் பார்த்திருக்கின்றோம். ஆகவே அதிகாரத்தில் இருந்து கொண்டு இவ்வாறு தவறு செய்வது முறையல்ல என் பதை அமைச்சர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக மிகவும் வருத்தத்தோடு ஒரு செய்தியைத் தெரி வித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சி தமிழர்களைக் காப்பாற்று வதற்காகத்தான் இருக்கிறது என்று பேசப்படுகிறது. தமிழர்

களுக்காகவே பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இப்படி அமைச்சர்கள் அரிய திட்டத்தை நிறைவேற்றிவிடுவதால் எங்கே எதிர்க்கட்சியே பூண்டோடு இல்லாமல் போய்விடுமோ என்று கவலைப்படுவதாக ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் பேசினார். ஒரு வேளை எதிர்க் கட்சியைக் காப்பாற்ற, அவரே நாளைக்கு எதிர்கட்சிக்கு வந்து விடுவாரோ என்று ஐயுறுகிறேன் நான். இன்றைக்கு அமைச்சர்களாக இருப்பவர்களில் எத்தனை பேர்கள் திரும்பியும் அமைச்சர்களாக வரப்போகிறார்கள் என்பதையும் நான் அறிய மாட்டேன். இந்த நிலையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சிக்காகவே கவலைப்பட்டுக்கொள்வதை இன்றுதான் நான் கண்டேன். எதிர்க் கட்சி உறுப்பினர்களைக் காப்பாற்றப் புறப்படுகிற இவர்கள் இலங்கையில் உள்ள தமிழர்களுடைய நிலையைப்பற்றி ஆட்சியாளர்கள் செய்தது என்ன என்று கேட்டார்களா? அவர்களுக்காக இந்த அரசாங்கம் அல்லது இந்த சட்டசபை போராட வேண்டும் என்றுகூட நான் கூறவில்லை. ஆனால் இங்குள்ள அமைச்சர்கள் டெல்லி சர்க்கார் மூலமாக இலங்கை சர்க்காருக்கு தங்கள் வருத்தத்தை, தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டாமா? இலங்கையில் மனித நீதி கொல்லப்படுகிறது, தமிழ் மக்கள் அவமானப்படுத்தப் படுகிறார்கள், தமிழ் இனம் அடிமைப்படுத்தப்படுகிறது, தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகிறது. இந்நிலையில் இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அங்கே நடைபெறுகின்ற அநீதிகளை நீக்குவதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம் என்றாவது தெரிவிக்க வேண்டும் நமது அரசாங்கம். இங்கே அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் காட்டுகிற தமிழ்ப்பற்று, அவர் போடுகிற கதர் சட்டையோடு அந்தப்பற்று ஒட்டிக்கொண்டு விடுகிறது என்றுதான் நான் நினைக்கிறேன்.[1] தமிழர்கள்மீது அவர்களுக்கு ஆழ்ந்த பற்று இருக்கிறது என்றால் இலங்கையில் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் தமிழர்களுக்காக அவருடைய கடமையை ஆற்றவேண்டுமல்லவா? அது அந்நிய நாட்டுப் பிரச்னை என்று சொல்லக்கூடும். இதில் தமிழ் நாட்டு மக்களுக்கு அதிகத் தொடர்பு இருக்கிறது—பொறுப்பு இருக்கிறது. சென்னை அரசாங்கம் நல்ல அரசாங்கமாக இருந்தால் இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்க முயன்றிருக்க வேண்டும். இந்தச் சென்னை மாநிலத்தில்—இது வரையில் சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்டு, தமிழ்நாடு என்றுகூடப் பெயர் வைக்க இசையாதிருந்து இப்போது ஏதோ ஒப்புக்குத் தமிழ்நாடு என்று வாயளவில் அழைக்கப்படுகின்ற இந்த மாநிலத்தின் சட்டசபை உறுப்பினராக வாழ்கின்ற நான் இலங்கைக்குச் செல்லவேண்டுமென்று விண்ணப்பித்தால் இந்திய அரசாங்கத்தால் அனுமதியும் (பாஸ்போர்ட்) மறுக்கப்படுகிறது. அந்த அதிகாரம் கூட இங்கே இல்லை. மந்திரிகளுக்கு—கனம் மந்திரிகளுக்கு இந்த லேசான சீட்டுத் தரும் அதிகாரம்கூட—பயண அனுமதி வழங்கும் உரிமை கூட—இந்த நாட்டில் இல்லை என்றால் இந்த வெட்கக்கேடான



நிலைமை நீங்கி தமிழ்நாட்டு மக்கள் உரிமை [illegible]ல்தான் இலங்கையில் வாழக்கூடிய தமிழர்களைத் துயரத்திலிருந்து காப்பாற்ற முடியும்—மலேயாவிலும், பர்மாவிலும் வாழக்கூடிய தமிழர்களையும் காப்பாற்ற முடியும். ஆக இவர்களைக் காப்பாற்ற நிலையில் இங்கு வழங்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை அவல நிலை பட்ஜெட்டே தவிர ஆட்சி நிலை பட்ஜெட் ஆகாது என்ற கருத்தைத் தெரிவித்து எனது உரையை முடிக்கின்றேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU**: As my name has again been drawn, I have to explain the position. என்னமோ தெரியவில்லை, முன்னமேயே சொல்லியும் என் பெயரை மறுபடியும் இழுத்திருக்கின்றார். அவருக்கு ஒரு mirage ஏற்பட்டிருக்கிறது. ஒரு அமைச்சருக்குத் தன்னுடைய தொகுதிக்குப் போக உரிமை உண்டு. தொகுதிக்குப் போகும்போது பள்ளிக்கூடம் திறப்பது போன்ற அலுவல்கள் இருந்தால் செய்யலாம். அவர் சாப்பிடலாம். ஒரு மணி நேரம், 2 மணி நேரம் நடக்கலாம். "நீ ஆபீஸ் வேலையாய்ப் போனாயே ஏன் சாப்பிட்டாய், ஏன் நடந்தாய்?" என்று கேட்பது மாதிரி இருக்கிறது. உத்தியோகஸ்தர்கள் நிதி வசூலில் ஈடுபடக்கூடாது—அவர்கள் ஈடுபடவும் இல்லை. ஈடுபட வேண்டிய அவசியமும் இல்லை. காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களோடு போய்ச் செய்தேனே தவிர, உத்தியோகஸ்தர்களை உபயோகிக்கும் சுபாவம் என்னிடத்தில் கிடையாது—எங்கள் கட்சிக்காரர்கள் வேறு யாரிடமும் கிடையாது.

* **SRI V. ARUNACHALA THEVAR**: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த 1961-62-ம் ஆண்டின் வரவு செலவு அறிக்கையை நமது நிதி அமைச்சர் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தை யாரும் வரவேற்காமல் இருக்கமுடியாது. இந்த மாகாணத்திலுள்ள ஏழைப் பிள்ளைகள் எல்லோருக்கும் இனமாகப் படிப்பு வசதி கொடுக்கப்படும் என்று சொல்லியிருப்பதை யாரும் வரவேற்காமல் இருக்க முடியாது. ஆரம்பப் பள்ளிகளும், ஹைஸ்கூல்களும் நூற்றுக் கணக்கில் அல்ல, ஆயிரக் கணக்கில் நமது மாகாணத்தில் கடந்த 10 வருஷங்களிலே ஆரம்பித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இந்த 2 வருஷங்களிலே 300 ஜனத்தொகை இருக்கக்கூடிய கிராமங்களில் ஏராளமான பள்ளிகளை அமைத்து இங்கேகூட பிள்ளைகளுக்கு இடமில்லாமல் இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அவர்களுக்கு கஷ்டத்தின் காரணமாக பள்ளிக்குப் போய் படிக்க வசதி இல்லையே என்றெண்ணி பகலுணவு அளிப்பது பாராட்டத் தக்கது.

கடந்த 10 ஆண்டுகளில் நமது நாடு முன்னேறவில்லையே என்று எதிர்க் கட்சியினர் சொல்லுகிறார்கள். ஆனால் நம் மாகாணத்தில் 10 வருஷங்களுக்கு முன்னதாக எத்தனை பஸ் ஸர்வீஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன, இன்று எத்தனை பஸ் ஸர்வீஸ்கள் ஓடிக்கொண்டி

[Sri V. Arunachala Thevar] [4th March 1961

ருக்கின்றன, இவைகள் எல்லாம் ரோட்டில் சும்மா ஓடுகின்றனவா அல்லது மக்களை ஏற்றிக்கொண்டு செல்லுகின்றனவா அல்லது ஜனமாக ஓடுகின்றதா. கையில் காசில்லாமல் போக்குவரத்து வசதியில்லாமலிருந்த மக்கள் யாவரும் இன்று எப்படிக் காட்சி யளிக்கிறார்கள் என்பதைக் காண்கின்றோம். அதிலும் கூட்டுறவு முறையில் பார்க்கப்போனால் 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையோடு இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இன்று ஒவ்வொரு கிராமத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் பயனடையக் கூடிய முறையில் கூட்டுறவு சொஸைட்டிகள் ஏற்பாடாகி நிலம் இல்லாதவர்களும் விவசாயம் செய்யச் சக்தியில்லாதவர்களும்கூட கடனை வாங்கிப் பயன் அடையும் காட்சியைக் காண்கின்றோம். இதெல்லாம் நம் நாட்டின் சாதனை என்பதில் சந்தேகம் இல்லை. அடுத்தபடியாக நமது நாட்டில் எத்தனையோ அணைக்கட்டுத் திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன. எத்தனையோ கோடிக்கணக்கில் செலவு செய்து லட்சக் கணக்கான ஏக்கர்களில் உணவு தானியம் விளைகிறது. அதிலும் குறிப்பாக மணிமுத்தாறு, ஆரணியாறு, சாத்தனூர், கிருஷ்ணகிரி, அமராவதி, வைகை, பவானி திட்டங்களிலே கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து நம் அரசாங்கம் அணைக்கட்டுகளைக் கட்டி லட்சக்கணக்கான ஏக்கர்களில் சாகுபடி செய்வதால்தான் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் அந்த உணவு தானியங்கள் எல்லாம் எங்கே போகின்றன? நமது மக்கள்தான் சாப்பிடுகிறார்கள். ஏராளமான குழந்தைகளைப் பெறுகிறார்கள். ஒரு வயது ஆனவுடனேயே குழந்தைகள் சாப்பிட ஆரம்பிக்கின்றன. மக்கள் தொகை அதிகமாவதன் காரணமாக மறுபடியும் பற்றாக்குறை ஏற்படுகிறது. பாலைவனம் போன்று இருந்த இந்த இடங்களில் அணைக்கட்டுகளின் காரணமாக ஏராளமான நிலங்களில் சாகுபடி செய்து தானியம் விளைகின்றது. இதையெல்லாம் பார்த்தும்கூட நாடு முன்னேறவில்லை என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது.

அடுத்தபடியாக என்னுடைய பகுதியைப் பொறுத்தமட்டில் அடிக்கடி சொல்லியும் எந்தத் திட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை. இவ்வளவு நேரம் முன்னேறி இருக்கிறது என்று சொல்லி விட்டு எந்தத் திட்டங்களும் நிறைவேறவில்லை என்று சொல்லுகிறேனே என்று நினைக்கலாம். மற்ற பகுதிகள் முன்னேறி இருந்தாலும் சில பகுதிகளில் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அதைத்தான் எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது.

நமது சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள், காவிரித் தண்ணீர் சமுத்திரத்திற்கு வீணாகப் போகிறது, அதைப் பயன்படுத்தலாம் என்று. நிபுணர்கள் தண்ணீர் போகவில்லை என்று சொல்லுகிறார்கள். நாங்கள் சொல்லுகிறோம் தண்ணீர் போகிறது என்று. அதை எங்களுக்குக் கொடுங்கள் என்று 10 ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். எங்கள் பகுதியில் மணப்பாறையில் ஆரம்பித்து, புதுக்



4th March 1961] [Sri V. Arunachala Thevar]

கோட்டை வழியாக அறந்தாங்கி வரையில் ஏராளமான குளங்கள் இருக்கின்றன. ஆடிமாத வாக்கில் ஒரு முறை கொடுக்க இந்தத் தண்ணீர் பயன்பட்டாலும் புரட்டாசி, ஐப்பசி காலத்தில் மழை பெய்யும்போது சாகுபடி பூர்த்தி செய்யலாம். காவிரித் தண்ணீர் வருவதற்கு லெவல் இல்லையென்று சொல்லுகிறார்கள். ஜேடர் பாளையத்திலிருந்து லெவல் சாதனங்கள் எல்லாம் இருக்கின்றன. அதை அரசாங்கம் செய்யவில்லையே என்ற குறையை எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. அப்படி இல்லையானாலும்கூட எங்கள் பகுதியில் அக்கினியாறு, கோரையாறு, வெள்ளாறு போன்ற காட்டாறுகள் இருக்கின்றன. அந்தக் காட்டாறுகளில் அணைக்கட்டுகளைக் கட்டினால் மக்கள் பயனடைவார்கள் என்பதைக் கடந்த 10 ஆண்டுகளாக எடுத்துச் சொல்லியும் அது பரிசீலனை செய்யப்படுகிறது என்றும், எஸ்டிமேட் தயார் செய்யப்படுகிறது என்றும் சொல்லி இதுவரையில் இன்ஜினியர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே என்று வருத்தத்தோடு சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக புதுக்கோட்டைப் பகுதியை ஒரு ஜில்லாவாக ஆக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். இதற்காக மக்களால் மாநாடு போடப்பட்டிருக்கிறது. அங்கே அநேக சர்க்கார்க் கட்டிடங்கள் இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அரசாங்கக் கட்டிடங்கள் ஏராளமாக இருக்கின்றன. முன்பு இந்த புதுக்கோட்டை ஒரு சமஸ்தானமாக இருந்தது. அதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று எத்தனையோ தடவைகள் சொல்லியதோடல்லாமல் மாநாடுகளில் தீர்மானங்கள் போட்டும் அமைச்சர்கள் வந்தபோதும்கூட எடுத்துச் சொல்லப்பட்டது.

ஆனால் புதுக்கோட்டைப் பகுதியிலே பிறந்து அடிமை 1-30 p.m. விலங்கை அறுத்தெறிந்து, இந்த நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட நமது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்களின் சொந்த ஊராகிய இந்தப் புதுக்கோட்டைப் பிராந்தியத்தை ஒரு தனிப்பட்ட ஜில்லாவாக்க நமது அமைச்சர்கள் தக்க நடவடிக்கை எடுக்கக் கூடாதா என்று கேட்கிறேன். அவர் செய்த சாதனைகளுக்காவது அல்லது அவர் செய்த தியாகங்களுக்காவது அல்லது அவர் இந்த நாட்டிற்காகப் பட்ட கஷ்டத்திற்காகவும், சுதந்திரம் வாங்குவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்த இப்பகுதியை ஒரு தனி ஜில்லாவாக ஆக்கக்கூடாதா? இதை இனிமேலாவது அவசியம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே இப்போது எங்கள் ஜில்லாவைச் சேர்ந்த கனம் மின்சார அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். பன்னிரண்டாயிரம் கிராமங்களுக்கு நாம் மின்சார வசதி செய்து கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறோமே, அதே போல் எங்கள் கிராமங்களுக்கும், எங்கள் பகுதிகளுக்கும் மின்சார வசதி செய்து கொடுங்கள் என்று இரவு 3 மணி வரையிலும் மக்கள் மகஜர்கள் கொடுத்தார்கள். அதை நான் ரொம்ப வருத்தத்தோடு சொல்லவேண்டியிருக்கிறது. தஞ்சாவூர் பக்கத்

[Sri V. Arunachala Thevar] [4th March 1961

திலே உள்ள கந்தர்வகோட்டையிலிருந்து, புதுக்கோட்டையிலுள்ள எல்லாப் பகுதிக்கும் சரியான முறையில் இந்த மின்சார வசதி விஸ்தரிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது. இதை அமைச்சர் அவர்களே பார்த்தார்கள். இதைப்பற்றியே நாங்கள் சென்ற ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மக்கள் சொன்னதைப் பார்த்தால் தெரியும். ஆனால் மக்கள் அரசாங்கத்தைக் குறை கூறவில்லை. அரசாங்கம் செய்கின்ற வேலைகளுக்காக அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். எதிர்க் கட்சியினர் கூறுவதைப்போல் அல்ல. இரவு மூன்று மணி வரையிலும் காத்திருந்து எங்களுக்கு இன்னும் அனேக நன்மைகளைச் செய்யவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்கள் கேட்பது என்னவென்றால், "எங்களுக்கு ஏரிகள் மராமத்து செய்ய இல்லை. காட்டாறுகளில் அணை கட்ட இல்லை. இருக்கின்ற கிணறுகளிலுள்ள தண்ணீரை உபயோகப்படுத்தி விவசாயம் செய்வதற்காவது மின்சார வசதி செய்து கொடுங்கள்" என்றுதான் கேட்கிறார்கள். நமது காருண்யமுள்ள அரசாங்கம் இதைக் கூடிய சீக்கிரத்தில் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக . . . . . . . . .

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m., on Monday, the 6th March 1961.

The House then adjourned.

## V. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—*Statutory Rules and orders.*

172. *Notification issued with G.O. Ms. No. 1980, Public (General-M), dated 14th December 1960, regarding the introduction of Tamil in Government Offices up to District level. (Laid on the table of the House under section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956).*

### B.—*Reports, Notifications and other papers.*

*Nil*



4th March 1961]

## APPENDIX I.

[Vide answer to starred question No. 574 asked by Sri T. T. Daniel at the meeting of the Legislative Assembly held on 4th March 1961, page 203 supra.]

**A.—(a) The following are the various concessions given to Christian Harijans :—**

**The Harijan welfare Department is giving concessions such as scholarships, school and hostel facilities, midday meals, provision of free house sites, drinking water wells, sanitary amenities, etc., to Harijans entirely from State funds. The converts from Harijans have been classified as 'Other Eligible Communities' by the Harijan Welfare Department and they are eligible for the above concessions given entirely from State funds.**

Certain schemes have been formulated for the benefit of Harijans under the Second Five-Year Plan with half grant or full grant from the Government of India such as construction of houses, facilities to develop agriculture and cottage industries and subsidy to technically trained persons to enable them to settle down in trade. The converts from Harijans are not eligible for any of the above concessions given with half grant or full grant from the Government of India in view of the fact that according to the Constitution (Scheduled Castes) Order, 1950, as subsequently amended, no person who professes a religion different from the Hindu or Sikh religion shall be deemed to be a member of Scheduled Caste.

*Full fee concessions.*—With effect from the academic year 1957-58 the converts to Christianity from Harijans have been made eligible for full fee concessions in educational institutions on a par with Hindu Harijans.

*Admission in colleges and public services.*—For the purpose of reservation of seats for admission to colleges and technical institutions and Public Services, Scheduled Caste converts are treated as Backward Classes, provided they are themselves converts.

(b) The Government of India do not recognise Scheduled Caste converts to Christianity as Scheduled Castes. Hence, no representation has been made to them in the matter.

[4th March 1961

APPENDIX II.

[Vide answer to starred question No. 575 asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly held on 4th March 1961, page 205 supra.

*Conclusions and recommendations of the Conference of State Ministers of Agriculture held in New Delhi on the 26th and 27th August* 1960.

1. *Integrated Agricultural District Programme.*—Realising the importance of the Intensive Agricultural District Programme in stepping up agricultural production, the Conference welcomed the decision to extend it to one district in each State and one Union Territory. As it would not be possible to accommodate the financial provisions required for this programme within the ceiling contemplated for the Agricultural Sector, the Conference recommended that additional provision of Rs. 25 crores should be made separately for this programme in addition to the ceiling of Rs. 625 crores for the agricultural programme.

2. *Fertilisers.*—The Conference noted that although the demand for chemical fertilisers has been going up rapidly in recent years, it is not being met in full because of the inadequacy of internal production and non-availability of foreign exchange for import of fertilisers. As fertilisers are the surest and quickest means of increasing the agricultural production, the Conference stressed that the supply of adequate quantities of fertilisers should be assured under the Third Five-Year Plan. It was noted that the Planning Commission had already intimated the State Governments the yearly break-up of the supply of fertilisers during the Third Plan period. To achieve the target of 100–105 million tons of foodgrains, the need for providing adequate foreign exchange for import of fertilisers was emphasised.

3. The Conference took note of the suggestion of the West Bengal Government for regulating the movement of fertilisers from one State to another and suggested that the Ministry of Food and Agriculture might undertake an examination of the various issues involved in the regulation of the inter-State movement of fertilisers.

4. In order to ensure timely distribution of available supplies of fertilisers, the Conference recognised that there should be suitable storage facilities for stocking fertilisers at appropriate places in different states, from where they could be distributed to cultivators speedily and in time. The assistance available in the form of grants and loans under the co-operative sector for building up of storage godowns might be availed of.

5. *Agricultural requisites.*—The Conference noted the shortage of agricultural machinery such as tractors, bulldozers, power-sprayers and dusters, as also of pesticides, nylon nets, etc., within the country and recommended that the possibility of manufacturing them should be explored as this shortage is retarding the progress of agricultural proction. It also recommended that adequate foreign exchange should be provided for the import of these agricultural requisites till such time as their internal production could be organised.



6. *Improved implements.*—Recognising the need for propagating improved agricultural implements on a large scale, the Conference recommended that steps should be taken to arrange for adequate manufacture and popularisation of these improved implements. In one centre in each State improved implements might be kept for dissemination of knowledge regarding these implements. The Conference felt that selective mechanisation has a definite place in Indian agriculture and should be promoted. Pilot machines and implement centres should be set up on a regional basis in each State.

7. *Allocation of iron and steel.*—The Conference noted that although allocations of iron and steel have recently been raised, the position regarding the actual supplies has continued to be unsatisfactory. It, therefore, recommended that the existing arrangements for the distribution of iron and steel should be streamlined and that adequate supplies should be made available in time. In view of the proposed drive for large-scale popularization of improved agricultral implements, the Conference recommended that adequate supply of iron and steel for their manufacture should be assured and that there should be a separate quota for agriculture. Although iron and steel for agriculture was proposed to be included in the 'Core' of the Plan, it was not subsequently done. The Conference emphasised that iron and steel for agriculture should have the same priority as for the 'Core' projects under the Plan.

8. *Co-ordination between various departments.*—As the implementation of agricultural development programmes is being hampered by lack of co-ordination between the various departments, the Conference stressed that steps should be taken in each State for ensuring proper co-ordination between the departments dealing with agricultural development, namely, Irrigation, Co-operation, Community Development and Agriculture at all levels. To eliminate divided responsibility, it was suggested that all these departments might be put in charge of one Minister.

9. *Agricultural Commodities Advisory Committee.*—The Conference welcomed the proposal to set up an Agricultural Commodities Advisory Committee and felt that this was a step in the right direction. With a view to providing adequate incentive to the farmers for the adoption of improved agricultural practices and thereby increase production, the Conference also recommended that minimum prices should be fixed for principal agricultural commodities and that these should be announced well before the sowing season.

10. *Agricultural demonstration on cultivators' fields.*—The Conference noted the important role played by agricultural demonstrations on cultivators' fields in ensuring adoption of improved

agricultural techniques and practices by the farmers and felt that such demonstrations should be organised on a large scale during the Third Five-Year Plan period.

11. *Ravine reclamation.*—Realising the urgent need for undertaking ravine reclamation work on a big scale, the Conference recommended that proper surveys should be made for ascertaining the extent of area affected by the ravine erosion and that a comprehensive programme of reclamation should be chalked out on the basis of this survey and included in the Third Five-Year Plan. The Conference was of the view that the development of these areas will not only lead to greater agricultural production, but also contribute to the improvement of law and order situation.

12. *Water-logging.*—The Conference noted that the problem of water-logging in Punjab has been assuming serious proportions and urged that increasing lengths of drains should be constructed to relieve water congestion.

13. *Flood control.*—In view of the severe damage caused to crops, property and life by frequent floods, the Conference recommended that highest priority should be given to measures relating to flood control and drainage in the vulnerable areas.

14. *Hybrid maize.*—The Conference recognised the need for special arrangements for augmenting the production of hybrid maize and supported the proposal of the Ministry of Food and Agriculture for the setting up of a Central Seed Corporation at All-India level. Further, it was recommended that appropriate organisations should also be set up in the States so that maximum possible fillip is given to the production of hybrid maize in the country.

15. *Development of horticulture.*—Realising the important place occupied by the development of horticulture and vegetable seeds in the hilly areas of Himachal Pradesh, Kashmir and Assam, the Conference recommended that high priority should be given to horticulture and vegetable seed programmes in these areas, as apart from contributing to improved nutritional standards, this would also result in earning or saving valuable foreign exchange. The development measures needed for this purpose should also include provision for transport and marketing facilities.

16. *Potato cultivation.*—The Conference recognised that greater attention should be paid to the improvement and expansion of potato cultivation in the country and that the Ministry of Food and Agriculture should consider the question of setting up suitable organisations for the development of production and marketing of potatoes.

17. *Jute Seed Development Programmes.*—In view of the great importance of good quality seed in jute development programme, the Conference recommended that the States should promulgate Seed Acts for ensuring rapid spread of approved varieties.



18. *Tube-wells.*—The Conference suggested that the feasibility of State Governments procuring their own rigs and having suitable organisations for tubewells construction might be explored.

19. *Soil tests and analysis.*—Recognising the importance of soil tests and analysis, the Conference recommended that the soil testing work should be continued and expanded, where necessary, and that proper co-ordination of the work done in the various States should be ensured.

20. *Rural Universities.*—While recognising the need for the development of more Rural Universities in the country, the Conference suggested that programmes in this regard should be carefully drawn up, keeping in view the limited resources made available for this scheme and the relative state of preparedness of different areas.

21. *Development of animal husbandry.*—The Conference emphasised the need for paying greater attention to programmes for development of animal husbandry, with particular reference to breeding of cows.

22. *Veterinary Councils.*—Recognising the importance of Veterinary Councils, the Conference recommended that the State Governments should expedite action for the establishment of State Veterinary Councils.

[4th March 1961

APPENDIX III.

[Vide answer to starred question No. 579, asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly held on 4th March 1961, page 208 supra.]

(a) The cost of cultivating rubber per acre in the Government Plantations—

An amount of Rs. 700 (Rupees seven hundred only) per acre has been adopted for the first year (formation) of the rubber plantation.

(b) The area planted till now—

An area of about 149 acres has been planted up with rubber during 1960.

(c) The details of the scheme for future plantation—

About 2,000 acres will be planted with rubber during the Third Five-Year Plan period at the rate of 400 acres per year. An area of 852 acres will be planted during the years 1966-67 and 1967-68 at the rate of 400 acres and 452 acres respectively.

(d) How the budding is done at present and under whose guidance?

The following is the method of budding adopted :—

*Budded stumps.*—A budded stump is a seedling, to which a bud has been successfully grafted and which is subsequently pulled out and stumped in the proper manner for transplanting. Seedlings, which have attained the normal size for transplanting in the field as stumps (i.e., a girth of 2½ inches or more at collar) are also suitable for budding. Budding should be planned in such a way that it is done about four weeks before the plant is due to be pulled out and stumped for planting.

Like seedlings, budded plants also can be pruned down in the nursery about seven days before they are due to be pulled out and transplanted in the field. This should, however, be done only after about seven days had elapsed, after the bandage over the grafted bud is removed. The pruning treatment has the same effect, as in the case of seedling and stimulates the development of the dormant grafted bud. In many cases, the bud may swell up and indicate early signs of growth. The delay in transplanting should be sufficient to promote the rapid development of bud, but should not be so long as to result in growth before transplanting. The pruning in this case should be done 3 to 6 inches above the bud-patch. This is better done with a hand-saw, the pruned surface slanting away on the opposite side of the bud patch at about 45 degrees. For pulling out, the budded stump should be held only on the portion above the bud patch. Otherwise the grafting bud may be damaged. This may be found more difficult than pulling out the whole plant. Digging up the soil on one side of the plant may be necessary in difficult cases. Where the nursery had been



4th March 1961]

properly prepared and the soil had not hardened, this operation may not be difficult, with the exception of large sized plants. This method of pruning *in situ*, just as in the case of seedlings, should be adopted only, if planting out in the field could be carried out as soon as regular south-west monsoon sets in and favourable weather conditions are expected during the following two months.

When circumstances are not favourable for adopting the above method, the budded plants may be pulled out from the nursery like the unbudded seedlings and the stem stumped at a distance of 3 to 6 inches from the top of the bud patch in a slanting direction as described above, with a very sharp knife or a hand-saw. The roots are pruned and trimmed as in the case of seedling stumps Planting in the field is also done in the same manner as the seedling stumps, care being taken to see that the bottom of the bud-patch is in level with the soil surface. There is a practice of planting budded stumps with the bud-patch facing north. This is to protect the grafted bud against direct rays of the hot sun falling on it. This practice might be useful particularly, if spells of sunny weather are expected in the locality, after planting.

For transporting to planting places budded stumps may be packed in the same manner as the seedling stumps. If the means of transport are such that damage to the grafted bud is likely, it would be advisible to protect the bud-patch by tying a piece of banana sheath large enough to cover.

*Stumped buddings.*—Young buddings can be stumped and transplanted in the field as stumped buddings. Budded plants remaining in the nursery after the required number is used for transplanting in the field, may be cut back and the bud allowed to grow in the nursery for subsequent transplanting as stumped buddings in order to supply vacancies in the field. The budding in this case will be ready for pulling out and stumping, when it has developed brown bark to a height of about 6 feet. After pulling out, the stem is stumped at a distance of 5 to 6 feet from the union, and a few inches above the level of a leaf whorl, so that shooting may take place near the top of the stump. The cut surface may be waxed or painted with corboletum. The tap root should be pruned at about 3 feet below the collar and the lateral roots trimmed as in the case of seedling and budded stumps. When planting, particular care should be taken to press the soil firmly. In planting stumped buddings, better success is often obtained by doing the filling also at the same time. The stump is held upright in the centre of the pit and soil put in. It is then easy to press the soil down and around the stump with the feet every time 3 or 4 spades of earth are put in. It is also important that planting of stumped budding should be done as soon as the regular south-west monsoon sets in so that it will get the benefit of the whole monsoon season. Success depends mainly on favourable weather conditions.

Transport of stumped buddings to planting places is usually difficult and expensive owing to their large size. If each plant is not packed carefully, its bark may be damaged. Owing to uncertainty of favourable weather conditions for a sufficiently long period following planting and transport difficulties, planting stumped buddings is not adopted as a routine plantation practice, except for supplying failures in the field. The growth of these plants, when successfully established, may not be so backward, as supplies of budded stumps.

Budding is done under the guidance of the General Manager and the Superintendent.

(*e*) The nature of the technical assistance received by the Government.

Technical assistance is being obtained from the Rubber Board, Kottayam, Kerala, as and when necessary.



## APPENDIX IV.

[Vide answer to starred question No. 585 asked by Sri M. P. Sarathy at the meeting of the Legislative Assembly held on 4th March 1961, page 213 supra.]

| | 1958-59. | 1959-60. |
|---|---|---|
| (*a*) Quantity of fish landed— | | |
| (i) Marine (M. tons) .. .. .. .. | 73,894 | 81,910 |
| (ii) Inland (M. tons) .. .. .. .. | 41,504 | 42,468 |
| (*b*) Fish exported— | | |
| (*c*) (i) to Foreign countries— | | |
| Quantity (M. tons) .. .. .. | 17,560 | 12,402 |
| Value (Rs. in Lakhs) .. .. .. | 342.4 | 248.8 |
| (ii) to other States— | | |
| Quantity (M. tons) .. .. .. | 2,997 | 2,460 |
| Value (Rs. in lakhs) .. .. .. | 25.13 | 20.26 |

APPENDIX V.

[Vide answer to starred question No. 587 asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly held on 4th March 1961, page 214 supra.]

**The following measures have been adopted by this Government** to give encouragement to music, dance and dramas in this State :—

**(1) A College of Karnataka Music was opened in the year 1949. This College provides instruction in vocal and instrumental music of high proficiency.**

**(2) Provision has been made for the study of music in schools and Colleges, especially for girls and women.**

(3) The Madras State Sangeetha Nataka Sangam is co-ordinating the activities relating to music, dance and drama in this State. The Government are giving financial assistance to the Sangam towards its activities.

(4) Under the Scheme of 'Inter-State Exchange of Cultural Troupes', this Government arranged recently for the performances in the city and in mofussil, by the Kuchupuli Dance-Drama Troupes of Andhra Pradesh. Similarly, this State have deputed a Cultural Troupe for giving performances in the Mysore State.

(5) The Government of India are rendering financial assistance to artists and musicians, who are in indigent circumstances. The State Government make recommendations to the Government of India in regard to the present financial position and the artistic attainments of these artists, for granting financial assistance from the Centre Under the revised arrangement agreed upon, the State Government may meet a portion of the cost of the Scheme.

(6) This Government have recommended application from Cultural Organizations in this State for building grant promised by the Government of India.

(7) This Government have recommended applications from certain professional dramatic troupes for grants from the Centre for the production of new plays.

(8) There is a proposal to constitute a Lalit Kala Academy in this State.

(9) A theatre is to be constructed at metropolis at a cost of Rs. 5 lakhs in commemoration of the Tagore Centenary Celebrations to be held in May 1961; and

(10) Five Centres have been selected in rural parts of this State, for the erection of open air theatres under the scheme sanctioned by the Government of India.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

## Monday, 6th March 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Cost of living index.*

* 6 *S.N.Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the cost of living index of working class has come down by 18 points recently; and

(*b*) if so, in what articles did the fall occur?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement[a] is pdaced on the table of the House.

**SRI A. VEDARATHNAM :** விலைவாசிகள் 18 புள்ளிகள் குறைந்து இருக்கிறபொழுது மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட் வெளிவந்த உடனேயே வியாபாரிகள், ஹோட்டல்காரர்கள் எல்லோரும் அவரவர்களுடைய ரேட்களை எல்லாம் உயர்த்தி விட்டார்களே? இம்மாதிரி தவறான காரணங்களைக் காட்டி அமித லாபம் சம்பாதிப்பவர்கள்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்?

**THE HON. SRI R. VENKATARAMAN :** நாட்டிலே ஸ்பெகுலேஷன் இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி வியாபாரிகள் விலையை உயர்த்துகிறார்கள் என்று சொன்னால் அது அவர்கள் செய்கின்ற தவறே அல்லாமல், நாட்டில் இருக்கக்கூடிய நிலையின் காரணமாக அல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேட்டால், இப்பொழுது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு ஒன்றும் இல்லை. விலைவாசிகள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தினால்தான் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், பொதுவாக பொருளாதார நிலைமையை ஒட்டித்தான் விலைவாசிகள் இருக்க முடியும். சிறிது காலம் திடீரென்று விலை உயர்ந்தாலும் மீண்டும் சரியான நிலைமைக்கு வந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

SRI A. A. RASHEED : Though there is a decline of 18 points in the cost of living index, still the cost of living for working class is high. If so, what steps are the Government going to take to bring down the cost of living for working class?

(a) Printed as Appendix 7 on pages 420-421 infra.

[6th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : This cannot be explained during question time.

THE HON. SRI R. VENKATARAMAN : The statement made by the hon. Member is incorrect. Independent enquiry conducted by market surveys has shown that the price of foodstuffs has come down; particularly price of rice has come down. I want to add that the market correspondent of *The Hindu* in the issue of *The Hindu*, dated 16th January 1961, stated as follows :—

" Daily arrivals of Andhra rice into the markets in Madras City have reached an avarage of 200 tons during this week and the price for all descriptions has tended lower due to pressure of heavy arrivals and large floating stocks."

The market correspondent of *The Mail* has said as follows—

" With increased arrivals of rice and paddy from production centres and with absence of buyers on a large scale, price of paddy and rice was marked down on a broad front in the city wholesale foodgrains market last week. Advices from production centres were lower."

This is confirmed by enquiry by Statistical Department where as many as 396 recordings were made in respect of vegetables and more than 42 recordings in respect of rice and other foodstuffs.

SRI K. VINAYAKAM : In view of the high cost of living in spite of the tendency to lower down the index level when compared to the purchasing power in the country, what steps do the Government propose to take to stabilize the price, fix the prices at a reasonable level and then stabilize them so as to help the consuming public?

THE HON. SRI R. VENKATARAMAN : If the hon. Member means that prices should be held at a particular level, nothing short of complete control alone could achieve it. In an economy in which we allow considerable free flow of supply and demand, it is not possible to peg down prices at particular level for all times.

SRI A. VEDARATHNAM : மேஜையின் மீது வைத்திருக்கிற ஏட்டின் மூன்றாவது பாராவில் மிளகாய் போன்ற பல சாமான்களின் விலை 'டு எ மச் ஸ்மாலர் எக்ஸ்டெண்ட்' அதாவது, குறைந்திருக்கிறது மிகக் குறைவான அளவிற்கு என்று கூறப்பட்டிருக்கிறது. மிளகாய் விலை பாதிக்கு அதிகமாக குறைந்து இருக்கிறதே, அப்படி இருக்கையிலே 'ஸ்மாலர் எக்ஸ்டென்ட்' என்று கணக்கிட்டிருக்கிறார்களே, இந்த புள்ளிவிவரம் எந்த அடிப்படையில் கணக்கிடப்படுகிறது? இம்மாதிரி 'விடுதல்' இருந்தால் அதைச் சரிக்கட்ட என்ன முயற்சி என்ற விவரத்தைத் தயவுசெய்து அறிவிக்க முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸ்டாடிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்டில் இருக்கக்கூடிய நிர்வாகிகளும், அதிகாரிகளும் எல்லோரும் பல கடைகளுக்கு அவ்வப்போது சென்று விசாரணை செய்கிறார்கள். அவ்வாறு விசாரணை செய்து என்ன விலை விற்



6th March 1961]

கிறது என்பதையெல்லாம் ரெகார்டு செய்து கொள்ளுகிறார்கள். அதனுடைய மாதாந்திர சராசரியை எடுத்து விலை என்ன என்று நிர்ணயிக்கப்படுகிறது. இது ஜனவரி மாதத்தில் பார்த்தது. ஜனவரி மாதத்தில் அரிசி விலை குறைந்ததைவிட மிளகாய் விலை குறைவாக குறைந்திருக்கிறது என்று கண்டிருக்கிறது. அது தான் நிலைமை.

SRI N. K. PALANISAMI : விலைவாசி ஏறுவதற்குத் தகுந்த மாதிரி போன வருஷம், சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு கொஞ்சம் அதிகமாக சம்பளம் கொடுக்கப்பட்டது. மறுபடியும் விலைவாசி புள்ளி அதிகமாக ஏறிவிட்டது. இங்கிலாந்தில் இருப்பதைப்போல் எந்த அளவிற்கு விலைவாசி புள்ளி ஏறுகிறதோ அந்த அளவிற்கு 'ஆடோமாடிகாக' 'டியர்னஸ் அலவன்ஸ்'-ஐ உயர்த்திக் கொடுக்கப்படுகிறமாதிரி, எந்த அளவிற்கு விலைவாசிகள் ஏறுகிறதோ அந்த அளவிற்கு புள்ளிவிவரத்திற்கு தகுந்தமாதிரி இங்கும் பஞ்சப்படி கொடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

MR. SPEAKER : How does this arise from the main question? If the Hon. Minister is prepared to answer, I have no objection.

THE HON. SRI R. VENKATARAMAN : I want your indulgence for answering this question since I want to clear a misapprehension.

MR. SPEAKER : All right.

THE HON. SRI R. VENKATARAMAN : இன்றைக்கு நம்முடைய நாட்டில் விலைவாசிக்குத் தகுந்த மாதிரி அந்த அளவிற்கு பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. ஒரு புள்ளிக்கு 3 அணா வீதம் சென்னை ராஜ்யத்தில் கொடுக்கப்படுகிறது. கடந்த டிசம்பர் மாதத்தில் புள்ளி ஏறிய பொழுது தொழிலாளர்களுக்கு ரூ. 2, 1-12-0 அளவிற்கு உயர்ந்தது. அதைப் போலவே புள்ளி குறைகிறபொழுது, அவர்களுக்கு பாயிண்டுக்கு 3 அணா அளவிற்கு குறையும். கனம் அங்கத்தினர் அவர்கள் ஏறினால் கொடுக்க வேண்டும், இறங்கினால் குறைக்கக்கூடாது என்று சொல்லுவார்களேயானால் அந்த வாதத்தை பொதுவாக ஒத்துக்கொள்ள முடியாது என்பதை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

## *Adulteration (milk)*

* 591 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் பாலில் தண்ணீரைக் கலந்து விற்றதாக எத்தனை பேர் தண்டிக்கப்பட்டனர்?

THE HON. SRI M. A. MANICKAVELU : 1,526 persons.

SRI S. M. ANNAMALAI : இதில் எவ்வளவு பணம் வசூலிக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா? எந்தெந்த நகரங்களில் எவ்வளவு பேர்கள் தண்டனை அடைந்தார்கள் என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : The total amount of fines levied is Rs. 18,115.

[6th March 1961

SRI K. VINAYAKAM : Since adulteration of milk with water has become a common feature in the City of Madras, what steps do the Government propose to take to strengthen the machinery for detecting these offences more than what is being done in this connection by Corporation officials?

THE HON. SRI M. A. MANICKAVELU : As far as the City is concerned, the test is done in the laboratory where facilities are afforded by the Corporation. As regards mofussil areas, it is done at the King Institute, Guindy. Facilities there are not adequate. We are trying to increase the facilities. As regards other preventive steps to be taken, now there is increase in scope of punishment from one year imprisonment or fine to four years' imprisonment or fine.

*Transferred villages.*

* 592 *Q.*—SRI N. MARUDACHALAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சித்தூர் ஜில்லாவிலிருந்து குடியாத்தம் தாலூகாவில் சேர்ந்துள்ள பாதராமி கிராமத்தில் சுத்து வட்டாரப் பகுதிகள் ரொம்பவும் மோசமான, பின்தங்கிய நிலையிலுள்ளது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) அதற்காக சர்க்கார் மேற்கொண்டுள்ள திட்டமென்ன ?

(உ) இதுவரை என்ன செய்யப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes Sir.

(*b*) & (*c*) Efforts are being taken for providing amenities such as drinking water facilities, school buildings, formation of roads, etc., to the villages in the transferred area. With the extension of the provisions of the Madras Panchayats Act, 1958 to this area, it is expected that the backwardness of the area will be remedied early.

SRI K. VINAYAKAM : Sir, may I know whether any efforts are being taken in this connection to locate a Block Development Office and bring that area under the Block Development Scheme?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, in due course that also will be done.

*Kurichi Panchayat*

* 593 *Q.*—SRI N. MARUDACHALAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை குறிச்சி மேஜர் பஞ்சாயத்தை 1958-ல் சர்க்கார் முனிசிபாலிட்டியாக அறிவிக்கப்பட்டதா ?

(இ) 1960-ல் மேற்படி முனிசிபாலிட்டியை மீண்டும் பஞ்சாயத்தாக அறிவிக்கப்பட்டதற்கு காரணம் என்ன ?



6th March 1961]

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir. Kurichi Panchayat was constituted into a municipality with effect from the 1st October 1958.

(*b*) The Kurichi Municipality was abolished with effect from 1st October 1960. The attention of the member is in this connection invited to the paper placed on the table of the House on the subject (sent by post on 1st November 1960).

SRI N. MARUDACHALAM: கோவையில் குறிச்சி பஞ்சாயத்தை முனிசிபாலிட்டி ஆக்கியபிறகு மறுபடியும் ஒரு வருஷத்திற்கு ஸ்பெஷல் ஆபீசர் போட்டு வேலை செய்யப்பட்டு வந்தது. முனிசிபாலிட்டியை மறுபடியும் பஞ்சாயத்து ஆக்க வேண்டுமென்று காங்கிரஸ் பிரமுகர்கள் மகஜர் கொடுத்தார்களா ? நேரடியாக மந்திரியிடம் ஒரு தூதுகோஷ்டி வந்து இதை மறுபடியும் பஞ்சாயத்து போர்டாக ஆக்கவேண்டுமென்று சொன்னார்களா ? அதன் பேரில் என்ன செய்யப்பட்டது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இந்தப் பஞ்சாயத்தை முனிசிபாலிட்டி ஆக்கவேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தது. தேர்தல் நடக்கவில்லை. அதே சமயத்தில் வேறு சில பகுதிகளையும் சேர்த்து முனிசிபாலிட்டி ஆக அமைக்க வேண்டிய நிலையில், அப்பொழுது அந்த கிராமத்திலுள்ளவர்கள் நாங்கள் பஞ்சாயத்தாகவே இருக்கிறோம் என்று சொன்னதினால் அது கைவிடப்பட்டது.

SRI V. SUBBIAH: பஞ்சாயத்துக்குள்ள ஜனத்தொகையும் வருமானமும் உள்ள எத்தனை பஞ்சாயத்துக்கள் முனிசிபாலிட்டியாக ஆகாமல் இருந்துக்கொண்டிருக்கின்றன. அவைகள் எப்பொழுது ஆக்கப்படும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

*Cine artistes*

* 594 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Madras Film Enquiry Committee has submitted its report to the Government; and

(*b*) whether it has recommended to the Government the setting up of a High Power Committee to draw up a code of conduct for film artistes?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : ஆபாசப் படங்களைக் கட்டுப்படுத்தவும், இன்னும் இந்தத் தொழிலிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளை ரெகுலரைஸ் செய்யவும் சர்க்கார் ஒரு கமிட்டி போட்டுப் பரிசீலனை செய்வார்களா ?

[6th March 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆபாசப் படங்களைப் பரிசீலனை செய்வதற்கு இப்பொழுது சென்சார் போர்டு இருக்கிறது. அவர்கள் சரியாக பணியாற்றி வருகிறார்கள் என்றே நம்புகிறேன். தொழிலாளிகளைப் பொறுத்த வரையிலும் பாக்டரி சட்டம், மற்றும் பல சட்டங்கள் இருக்கின்றன.

SRI A. A. RASHEED : May I know whether the Government have appointed any committee to enquire into this matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have not appointed a committee as such but a committee consisting of the various interests concerned in the film industry has been constituted and they are going into the whole matter and I expect a report will be submitted to the Government soon.

SRI K. VINAYAKAM : When the Hon. Minister for Finance took part in a function where this kind of committee was being sponsored, was it represented to him that top-ranking artistes of the film industry have been giving incessant trouble to the producers by not coming in time, not keeping up punctuality and such other things and if so, to ward off such difficulties, was a committee appointed at the instance of the Hon. Minister for Finance?

MR. SPEAKER : I do not know how it is relevant to the main question. But if the Hon. Minister for Finance is prepared to answer, I have no objection.

THE HON. SRI C. SUBRAMANIAM : When the Hon. Speaker says that it is not relevant. . . . .

MR. SPEAKER : It is not relevant.

SRI N. K. PALANISAMI: இம்மாதிரி ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறதென்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார். அந்த கமிட்டி என்னென்ன விஷயங்களைப் பரிசீலனை செய்யும்? அதிகப் படியாகப் பணம் வாங்குவது, குறைந்த சம்பளம் கொடுத்து அதிகப்படியான சம்பளத்திற்கு கையெழுத்து வாங்குவது போன்ற விஷயங்களைப் பரிசீலனை செய்வார்களா?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ விநாயகம் ஆங்கிலத்தில் கேட்ட கேள்வியையே கனம் அங்கத்தினர் தமிழில் கேட்கிறார் (சிரிப்பு).

*Assistant Directors of Fisheries*

* 595 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of Assistant Directors of Fisheries that have been posted to Kanyakumari district for the last four years?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The post was filled up in November 1957 for the first time and 10 persons have held this post since then.



6th March 1961]

*Sarada Act*

* 596 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(i) the number of cases registered.

(ii) Persons prosecuted; and

(iii) convicted under Sarada Act (Child Marriages Act) in 1958–59 and 1959–60?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

| | 1958–59. | 1959–60. |
|---|---|---|
| (i) .. .. .. .. | Nil. | 2 |
| (ii) .. .. .. .. | Nil. | 8 |
| (iii) .. .. .. .. | Nil. | Nil. |

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that in villages still many child-marriages are conducted, and if so, will the Government enforce this Act more vigorously?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think that child marriages are so largely prevalent in the villages or towns nowadays.

SRI T. T. DANIEL : May I know whether there is any proposal to bring forward a legislation prohibiting marriages where the age-differences between the parties to the marriage is beyond 16 years?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As far as the Government are concerned, there is no such proposal.

SRI A. A. RASHEED : Although there were so many prosecutions still none was convicted and what is the reason for that?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I had just now stated that in 1958 there were no prosecutions at all.

SRI K. VINAYAKAM : What is the *modus operandi* which the Government adopt to find out the infringement of the Sarada Act. Do the Government depend entirely upon some private person complaining to the Government about this kind of offence or do they employ C.I.D. of the Police Department for this purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Action is taken only on private complaints.

SRI A. A. RASHEED : Will the Government help those spinsters who are 30 years old to enable them to find husbands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I can tell the hon. Member that the Government have not set up any matrimonial organisation.

*Iron ore*

* 597 *Q.*—SRI S. SOWDI SUNDARA BHARATHI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will hte Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of small pilot plants that are functioning for the exploitation of the iron ore in Salem;

(*b*) the quantity of iron extracted by these plants; and

(*c*) the rate of production per ton?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) None, Sir. There is however one small pig iron plant in the private sector, functioning at Coimbatore which utilises iron ore mined in the Nilgiris district.

(*b*) This plant has an installed production capacity of 50 tons a day.

(*c*) The Government have no information regarding the cost of production of pig iron.

* 598 *Q.*—SRI S. SOWDI SUNDARA BHARATHI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the entrepreneurs in Salem and Coimbatore licensed to exploit iron ore are receiving any assistance from the State; and

(*b*) if so, the nature thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI K. VINAYAKAM : What is the percentage of iron-content in this ore?

THE HON. SRI R. VENKATARAMAN : The ore which is used by this plant is the ore available in the Nilgiris district. It is somewhere between 48 and 50 per cent.

SRI K. VINAYAKAM : Does it prove to be an economic unit?

THE HON. SRI R. VENKATARAMAN : This particular unit does not sell pig iron at the market but utilise it for its own castings Therefore, we presume that it must be economic for the unit.

**SRI J. MATHA GOWDER:** *நீலகிரியிலே எவ்வளவு இரும்புக் கனி கிடைக்கிறது என்று சர்வே செய்யப்பட்டிருக்கிறதா? இப்பொழுது லைசென்சு வாங்கினவர்கள் தொடர்ச்சியாக எடுத்துக் கொண்டிருக்கிறார்களா? அதை அனுப்பி, பரிசீலனை செய்து, அது தேன் இரும்பா அல்லது வேறு இரும்பா என்று கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?*

THE HON. SRI R. VENKATARAMAN : Investigation regarding both the quantity and quality of the iron ore in the Nilgiris district is now being conducted by the Geological Survey. So far as the



percentage of iron content is concerned, it is estimated to be between 48 and 50 per cent. The final analysis alone will show what exactly is the iron-content?

SRI K. VINAYAKAM : May I know at what stage does the scheme regarding iron ore available in Salem stand?

THE HON. SRI R. VENKATARAMAN : We have mentioned it in the Budget statement itself that immediately after lignite becomes available, 1,000 tons of lignite and 100 tons of iron ore will be sent to East Germany for pilot project test. There is also a further test in the National Metallurgical Laboratory under contemplation.

*Primary Health Centres*

* 599 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI N. R. THIAGARAJAN) : *கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரை ஜில்லாவுக்குரிய திட்டங்களில் தேனியிலும், வடவீரநாயக்கன்பட்டியிலும் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிக்கத் திட்டமிட்டும் இது வரை ஆரம்பிக்காததற்குக் காரணம் என்ன?*

THE HON. SRI M. A. MANICKAVELU : There was no proposal for the opening of Primary Health Centres at Theni and Vadaveeranaickenpatti in the Second Five Year Plan. The question of dropping the proposal does not therefore arise.

**SRI M. A. B. ARUMUGHASAMY:** *மதுரை ஜில்லாவிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எத்தனை பிரைமரி ஹெல்த் சென்டர்கள் திறப்பதாக திட்டமிடப்பட்டது? அப்படி திட்டமிட்டதிலே எத்தனை திறக்கப் பட்டன? எத்தனை திறக்கப் படாமல் இருக்கின்றன? திறக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?*

**THE HON. SRI M. A. MANICKAVELU:** *1960-61-ல் 8 சென்டர்கள் திறப்பதாக இருந்தது. அதிலே 6 முன்கூட்டியே திறக்கப்பட்டு விட்டன. அவைகள் தாடக்கொம்பு, நத்தம், திருப்பரங்குன்றம், தொம்பாச்சேரி, அலங்காநல்லூர், ஆத்தூர் சென்டர்கள். பாப்பாம் பட்டியிலே ஒன்றைத் திறப்பதற்கு உத்தரவு ஆகியிருக்கிறது. மார்ச் மாதத்திற்குள்ளே எட்டாவது சென்டரும் திறக்கப்படும். இடம் குறிப்பிடப்படவில்லை. திட்டம் போட்ட பிரகாரம் 8 சென்டர்களும் உண்டு.*

**SRI M. A. B. ARUMUGHASAMY:** *திறக்கப்பட இருக்கிற எட்டாவது சென்டரில் ஆத்தூர் ப்ளாக்கில் ஒன்றை திறக்க ஏற்பாடு செய்யப்படுமா? இரண்டாவதாக ஆத்தூர் ப்ளாக்கில் கேட்டால் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

[6th March 1961

**THE HON. SRI M. A. MANICKAVELU :** இப்பொழுதெல்லாம் ஸ்டேஜ் 1 ப்ளாக்கில் திறக்கப்பட்டு வருகின்றன. அதுவும் ஸ்டேஜ் 1 ப்ளாக்கில் இருந்தால் அந்த அடிப்படையில் அங்கேயும் ஒன்று திறக்கப்படும்.

*Mid-day meals*

***600 Q.—SRI A. VEDARATHNAM:** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் எத்தனை பள்ளிகளில் எத்தனை மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது?

(இ) உடைதானம் எத்தனை மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

**SRI A. VEDARATHNAM :** இன்னும் மதிய உணவு திட்டத்தை ஆரம்பிக்கவேண்டிய ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் எவ்வளவு இருக்கின்றன? அவற்றிலும் இந்த மதிய உணவு திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இருபத்தைந்தாயிரத்து இருநூற்று தொண்ணூற்றி நான்கு பள்ளிக்கூடங்களில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய மொத்த பள்ளிக்கூடங்கள் சுமார் 26 ஆயிரத்தி சொச்சம். ஆகவே பாக்கி இருக்கக்கூடிய ஆயிரத்தி சொச்சம் பள்ளிக்கூடங்களில் இந்த ஆண்டிற்குள் ஆரம்பிக்கப்பட்டு விடும்.

**SRI A. VEDARATHNAM:** அரசாங்கமே இதற்கு உதவி அளித்து வருகிற காரணத்தால் அதை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கம் ஏன் அவர்களை வற்புறுத்தக்கூடாது ஆகவே பள்ளிக்கூடம் நடத்துகிறவர்களை அரசாங்கம் தூண்ட முன் வருமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இப்பொழுதுள்ள சமுதாயத்தில் பத்தில் நான்கு பங்கு அவர்கள் கொடுக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. அதனால் கிராமங்களில் இருக்கிறவர்கள் ஓரளவு அக்கறை எடுத்துக்கொண்டு வந்தால்தான் இந்தத் திட்டம் நல்ல முறையில் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். அதைப் பற்றியும் இப்பொழுது பரிசீலனை செய்து முடிவு எடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டு அது தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. அதைப்பற்றி பரிசீலனை செய்து அந்த முறையில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதைப்பற்றி முடிவு செய்யப்படும்.

SRI T. T. DANIEL : In view of the fact that there are students studying even in Middle and High Schools without mid-day meals, has the Government any proposal to extend this mid-day meal scheme to these schools through (social service agencies) like Bharat Sevak Samaj as is being done in Kanyakumari district?

---

[a] Printed as Appendix II on page 422 infra.



6th March 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : This scheme is in operation in 506 Secondary schools where mid-day meal is provided for 13,619 students.

**SRI S. M. ANNAMALAI :** மதிய உணவு திட்டத்திற்கு அரசாங்கம் பணம் கொடுத்து உதவுகிறதே அப்படி இல்லாமல் அரிசியாக வழங்க ஏதாவது அரசாங்கத்தினிடம் உத்தேசம் உண்டா? அது பரிசீலனையில் இருக்கிறதா? அதைப் போலவே எல்லோரும் ஒரே மாதிரியான உடையை அணிந்து கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திற்கு உத்தரவு போட உத்தேசம் ஏதாகிலும் உண்டா?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** மதிய உணவு திட்டத்தைப்பற்றி கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. துணியைப்பற்றி இல்லை. ஆகவே துணியைப்பற்றி கேட்பதாக இருந்தால் தனிக் கேள்வி போட வேண்டும். அரிசி கொடுப்பதைப்பற்றி பரிசீலனை செய்து முடிவு செய்யவேண்டும்.

**SRI T. K. SUBBIAH :** இந்த மதிய உணவு திட்டம் சம்பந்தமாக சில கிராமங்களில் புரம்போக்கு நிலங்களை அடமானம் செய்ய வேண்டும் என்று மக்கள் கேட்டால் சர்க்கார் அடமான உத்தரவு கொடுக்குமா? அப்படி அடமானம் செய்வதாக இருந்தால் யார் பேரால் எந்த அடிப்படையில் அடமானம் செய்வது என்பதைப் பற்றி விளக்குவார்களா?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** அதைப்பற்றி சர்க்கார் இன்னும் முடிவு செய்யவில்லை.

**SRIMATHI HEMALATHA DEVI :** தற்போது மதிய உணவு திட்டத்திற்கு சர்க்கார் ஆறு நயா பைசா கொடுக்கிறார்களே அதை ஒன்பது நயா பைசாவாக உயர்த்திக் கொடுக்க முன் வருவார்களா?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** உயர்த்துவதைப்பற்றி யோசிப்பதற்கு முன் இப்பொழுது இருப்பதையே சரியாக உபயோகப்படுத்தினால் அதன் மூலமே நல்ல பலன் ஏற்படும்.

SRI K. VINAYAKAM : Sir, whereas in the City of Madras the City Corporation finances from its resources the mid-day meal scheme, the private institutions could not undertake the scheme as the rate of subsidy paid to them is very low. Will the Government consider and come forward to enhance the rates, if any, given to the private schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : If the hon. Member, Sri K. Vinayakam has got any scheme he might submit it to the Government.

**SRI K. PERIANNAN :** மதிய உணவு கொடுக்கும் திட்டத்தில் ஆறு நயா பைசா கொடுப்பது மிகவும் பிற்போக்காக உள்ள கிராமங்களுக்குப் போதாமல் இருப்பதால் அந்த ஆறு நயா பைசா என்பதை இரண்டணாவாக மாற்றி அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் ஒன்பது நயா பைசா, இரண்டணா, மூன்று அணா என்பது அல்ல ஆறு நயா பைசா வீதம் கொடுப்பதாலேயே 137 லட்சம் ரூபாய் ஆகிறது என்று கணக்கிட்டு அதை அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு மேலும் ஒதுக்க முடியுமா என்பதைப் பற்றி பட்ஜெட் சமயத்தில் விவாதிக்கும்போது அவர்கள் ஆலோசனை சொல்லலாம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: The Government have constituted a Committee to go into the question. Will the Hon. Minister tell whether the Committee has submitted its recommendations, and if so, what are the proposals?

THE HON. SRI C. SUBRAMANIAM: The report was submitted only day before yesterday to the Government. It is under scrutiny.

SRI A. A. RASHEED: Sir, is the Hon. the Minister aware of the fact that monotonous meal of the same variety is supplied to the students? Will the Government consider to provide a tasty and nutritious mid-day meal to the students?

THE HON. SRI C. SUBRAMANIAM: The supply is being made by the Village Committee. Certainly it is within the competence of the Committee to change the diet.

SRI N. MARUDACHALAM: மதிய உணவு திட்ட அடிப் படையில் பொது ஜனங்களுடைய உதவியை அரசாங்கம் நாடு வதால் சிலர் கொடுக்க முன் வருவதில்லை. அதனால் சில இடங்களில் பள்ளிக்கூடங்களை மூடி விடுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதனால் இந்தத் திட்டம் சரியாக நடைபெறவில்லை என்பதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: கொடுக்கிறவர்கள் கொடுத் துக்கொண்டுதான் இருக்கிறார்கள். கொடுக்க மறுக்கிறவர்கள் மறுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

SRI T. IRUSAPPAN: மதிய உணவு திட்டம் சரிவர நடக்கிறதா என்று பரிசீலனை செய்ய சேலம் மாவட்டத்தில் ஒரு கமிட்டி சுற்றுப்பிரயாணம் செய்து அது சரிவர நடைபெறவில்லை என்று ஒரு ரிபோர்ட் அனுப்பி இருக்கிறதே அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது சமீபத்தில் தான் சமர்ப்பித்திருக்கிறார்கள். அது இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது.

*Harijan hostel*

* 601 *Q.*—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any request has been made by the public of Valanur, Tiruppullani Block, to the Hon. Minister for Works to open an Harijan hostel immediately at Kilakarai town, Ramanathapuram taluk, for accommodating Harijan students of suburban areas; and





(*b*) the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN: (a) & (b) There is no proposal at present. It will, however, be considered when necessity arises.

SRI K. VINAYAKAM: Was any request made to the Government when he visited this area that the mofussil students of the Harijan community studying in Keelakarai are finding it difficult to get accommodation in the town?

THE HON. SRI P. KAKKAN: When I toured that area, poor people made a request to start a hostel there. The Government are considering to start a hostel there.

SRI M. K. MARIAPPAN: 1961-62-ம் ஆண்டில் மேற்கொண்டு அதிக ஹரிஜன மாணவ விடுதிகளைத் திறக்க சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

THE HON. SRI P. KAKKAN: கீழ்க்கரைக்கு பக்கத்தில் ஹாஸ்டல் ஏற்படுத்துவதைப்பற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI K. PERIANNAN: ஹரிஜன மாணவர்களுக்கு விடுதிகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. அதைப்போலவே ஹரிஜன மாணவி களுக்கும் கட்டிக் கொடுக்க அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI P. KAKKAN: எங்கேயெல்லாம் மாணவர்களுக்கு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறதோ அங்கேயெல்லாம் மாணவிகளுக்குக் கட்டுவதற்கும் முக்கியத்துவம் கொடுத்து அதற்கு வேண்டியவற்றை அரசாங்கம் கவனித்து வருகிறது.

*Traveller's Bungalow (Kilakarai)*

* 602 *Q.*—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a Traveller's Bungalow at Kilakarai, Ramanathapuram district;

(*b*) if so, the estimated cost; and

(*c*) when it would be executed?

THE HON. SRI P. KAKKAN: (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

SRI K. VINAYAKAM: Sir, whereas the town Keelakarai is a travellers' paradise and whereas it is a great fishing centre and chank diving centre, will the Government be pleased to construct a Travellers' Bungalow to suit the convenience of the travellers that go to that part of the country?

THE HON. SRI P. KAKKAN: Keelakkarai Mandal Congress Committee has sent a resolution requesting the Government to construct a Travellers' Bungalow. It was examined by the P.W.D.

Engineer and he has sent a report stating that it is not necessary to construct a Travellers' Bungalow since there are no irrigation and building schemes in that area. The District Revenue Officer also has sent a report stating that there is a Travellres' Bungalow within 10 miles at Ramanathapuram and that it is not necessary. But the Government have got a plan to construct a Circuit House at Rameswaram.

*Rural dispensary (Javadu Hills)*

9 a.m. * 603 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஜவ்வாது மலையில் வைத்தியசாலை (Rural Dispensary) ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.

SRI S. M. ANNAMALAI: ஸார், ஜவ்வாது மலைக்கு ஒரு மொபைல் யூனிட் இருந்தது. அது பிறகு காவலூருக்கும், பிற்பாடு ஆலங்காயத்திற்கும் மாற்றப் பட்டிருக்கிறது. இரவில் பிரசவம் ஏற்பட்டால், ஆலங்காயத்திற்குப் போவது மிக்க கஷ்டமாக இருக்கிறது. இது பற்றி என்னைவிட அமைச்சருக்கு ஜவ்வாது மலையில் எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள் என்று தெரியும். ஆகவே அங்கே ஒரு தனி ஆஸ்பத்திரியை ஏற்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU: அங்கே ஒரு மொபைல் யூனிட்டு இருந்தது. இப்பவும் இருக்கிறது. அது கோமட்டூரிலிருந்து ஆலங்காயத்திற்கு மாற்றப்பட்டது. அங்கே டாக்டர் நிலைக்கவில்லை; அப்படியிருக்க மலைமீது டாக்டர் போகப் போவதேயில்லை. டாக்டர் இல்லாத ஆஸ்பத்திரி வேண்டுமானால் ஏற்படுத்தலாம்.

SRI S. M. ANNAMALAI: சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அந்த மாதிரி நிலைமை இருந்தது. ஆனால் இன்று பல அதிகாரிகள் மலைமேலேயே இருக்கிறார்கள். பீ-கீபிங், நர்சரிகள், எல்லாம் வைத்திருக்கிறார்கள். ஆகவே அங்கு ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்த மறு பரிசீலனை செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: மற்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால், டாக்டர்கள் அங்கே போவதில்லை. சிகிச்சை வசதி செய்யவேண்டியது அவசியம்தான். இப்பொழுது மொபைல் யூனிட் கொஞ்சம் கொஞ்சம் பரவி வருகிறது. டாக்டர் இருக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தினால், அங்கே ஆஸ்பத்திரி வைக்கலாம். இப்பொழுது, மொபைல் யூனிட்டு மூலம் வசதி செய்யப்படுகிறது.

SRI NAGARAJA MONEGAR: அங்கத்தினர் மேல்நாட்டு வைத்திய வசதியைக் கேட்கிறார்களா அல்லது தென்னாட்டு முறையைக் கேட்கிறார்களா?



MR. SPEAKER: எதுவானால் என்ன? தாங்கள் எப்படி அங்கத்தினரைக் கேள்வி கேட்கலாம்?

*Agriculture*

* 604 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் ஆபீசிலேயும் விவசாய அபிவிருத்திக்காக கீழ்க்கண்ட நவீன கருவிகளை வைப்பதற்கான உத்தேச முண்டா?

(1) டிராக்டர்கள்.

(2) புல்டோஜர்கள்.

(3) ராக் ட்ரில்லிங் மெஷின்கள்.

(இ) ஒவ்வொரு யூனியன் ஆபீசிலும் எத்தனை கருவிகள் வைக்கப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED: Is there any proposal to keep this machinery in every taluk, if not, in every panchayat union?

THE HON. SRI C. SUBRAMANIAM: Here, we are organising the supply of these tractors and bulldozers and other machines. It is not, however, possible to say whether we will be able to locate them in every taluk headquarters.

SRI S. SADASIVAM: இந்த ராக் ட்ரில்லிங் மெஷீன் மாகாணத்தில் குறைந்த அளவில், இருப்பதால், மழை குறைவான காலத்தில், உபயோகமாக இருக்க, ப்ளாக் யூனிட்டுகளுக்குக் கொடுக்க முயற்சி எடுக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: எங்கெங்கே அவசியம் இருக்கிறதோ அங்கேயெல்லாம் இந்தக் கருவியைக் கொடுக்க சர்க்கார் முயற்சி செய்கிறது.

*Price control*

* 605 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the latest recommendations of the National Development Council regarding price control; and

(*b*) the recommendations of the Planning Commission with regard to price control?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) The Sub-Committee of the National Development Council set up for studying the problems of Price Policy and for making recommendations has met three times and considered various aspects of the problem. The committee has yet to finish its work.

[6th March 1961

* 606 *Q.*—Sri N. K. PALANISAMI :
Sri A. VEDARATHNAM : } Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any decision has been taken at the meeting of the National Development Council held in September 1960 regarding selective control in respect of State Trading and procurement of foodgrains; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Attention is invited to the answer given for Legislative Assembly Question No. 605 (Starred).

**Sri N. K. PALANISAMI:** ப்ரைஸ் பாலிஸி சம்பந்தமாக ப்ளானிங் கமிஷனும் நம் சர்க்காரும் விலைவாசியைப்பற்றி அடிக்கடி யோசனை செய்வதாக சட்டசபையில் சொல்லுகிறார்கள். ஆனால், விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. சீமை எண்ணெய் நாலு அணாவிலிருந்து ஆறு அணாவாக நாலு நாளில் உயர்ந்திருக்கிறது. இந்த விலையேற்றத்தை கட்டுப்பாடு செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : This does not relate to the main question at all. Probably, it is a point for discussion during the Budget Debate.

Sri K. VINAYAKAM : May I know when this question was taken up by the National Development Council? May I also know when the recommendations will see the light of day?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, this has been taken up ever since planning was taken up by the Government of India and the various State Governments. A Committee was, however, constituted to go into the question about a year back. This is not such an easy problem to find an easy solution.

**Sri A. VEDARATHNAM:** தேசீய அபிவிருத்திக் கௌன்சில் கூட்டத்தின் முடிவைப்பற்றி அறிவித்தது விளங்கவில்லை. அதை மறுமுறை விளக்கக் கோருவதோடு, அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்ற விவரமும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM:** நான் பதில் சொன்னது விலைக் கட்டுபாடு பற்றி பரிசீலனை செய்து சிபாரிசுகள் செய்ய நாஷனல் டெவலப்மெண்ட் கௌன்சில் மூன்று தடவை கூடியிருக்கிறது பரிசீலனை செய்திருக்கிறது. ஆனால், விலை பற்றி இன்னும் முடிவுக்கு வரவில்லை என்று சொன்னேன்.



6th March 1961]

*Electrical industry*

* 607 *Q.*—Sri A. A. RASHEED :
Sri A. VEDARATHNAM :
Sri S. M. ANNAMALAI :
Sri V. K. KOTHANDARAMAN : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to locate a heavy electrical industry in Madras; and

(*b*) if so, where and when?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government of India propose to set up two Heavy Electrical Machinery Factories in the Third Five-Year Plan period. It is understood that one of them will be located in North India and the other in the south. The site for the Heavy Electrical Project in the Southern Region has not yet been decided.

* 608 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a Technical Committee inspected any sites in our State for locating a heavy electricals plant; and

(*b*) if so, the sites so inspected, and their findings?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Technical Committee constituted by the Government of India to advise them in regard to the location of two Heavy Electrical Plant factories proposed to be set up during the Third Five-Year Plan period recently inspected sites at Ranipet, Arkonam and Ilandaipatti (a village near Tiruchirappalli). The recommendations made by the Committee are not known.

Sri A. A. RASHEED : Since Madras State is the foremost in the consumption of electricity and also in production, will the Government emphasise this fact to the Government of India and arrange to have this Industry located in the Madras State?

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, Government have more valid reasons for establishing this factory in Madras.

**Sri A. VEDARATHNAM:** அது பப்ளிக் செக்டாரில் ஆரம்பிக்கப்படுமா அல்லது ப்ரைவேட் செக்டாரில் ஆரம்பிக்கப்படுமா, என்ன மூலதனம், மத்திய சர்க்கார் உதவி எவ்வளவு, நம் சர்க்கார் உதவி எவ்வளவு ?

The Hon. Sri R. VENKATARAMAN : This will be in the public section, by the Government of India with the colloboration of the Zecholovokian Government.

**Sri S. M. ANNAMALAI:** கன ரக தொழிற்சாலைக்குத் தேவையான எல்லா வசதிகளும் இங்கே இருக்கின்றன என்ற காரணத்தால், சர்க்கார் அந்தத் தொழிற்சாலையை இங்கே அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்களா, அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

[6th March 1961

**THE HON. SRI R. VENKATARAMAN:** இதிலே, எந்த இடம் தொழிற்சாலை வைக்க தகுதியானது என்பது பற்றி நிபுணர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள், அப்படிப் பலவிஷயங்களை அவர்கள் கவனிப்பார்கள்: நிலப்பரப்பு எவ்வளவு, சமவெளியாக இருக்குமா, தரைக்கு அடியில் நீர் மட்டம் எப்படி இருக்கிறது, போதிய தண்ணீர் கிடைக்குமா, சீதோஷ்ண நிலை எப்படியிருக்கிறது, ஈரம் எவ்வளவு இருக்கிறது என்றெல்லாம் பார்த்துத்தான் முடிவு செய்வார்கள்.

SRI A. A. RASHEED : Since the Government have got more valid reasons for establishing this Industry in this State, may I know whether they will consider the question of locating it at Arkonam or Katpadi which are more centrally situated and which have many facilities?

THE HON. SRI R. VENKATARAMAN : I wonder whether it is the expert who is going to decide on the location of the industry or Hon. Member Sri Rasheed.

*Block Development Officers*

***609 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY (on behalf of SRI N. R. THIAGARAJAN) :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எத்தனை ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டது ?,

(இ) எத்தனை பேர் இதில் ரெவன்யூ இலாகா அல்லாத வேறு இலாகாக்களைச் சேர்ந்தவர்கள் ?

(உ) நேரடியாக பீ.டி.ஓ.-ஆக நியமிக்கப்பட்டவர்கள் யாருக்காவது பதவி உயர்வு அளிக்கப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Presumably the Honourable Member refers to the promotions made in the Rural Development and Local Administration department only. The Block Development Officers are recruited by transfer from different Departments or by promotion from the category of Social Education Organizers. In the Community Development Department itself, the Block Development Officers could be promoted only to Gazetted rank or the post of Assistant Development Commissioner (Training). Within the Department, there have been only 3 such promotions. In number of other cases Block Development Officers have been promoted in their parent Departments.

(*b*) The persons did not belong to the Revenue Department.

(*c*) No.

**SRI M. A. B. ARUMUGHASAMY:** ப்ளாக் டெவலெப்மெண்டு ஆபீசர்களை பதவியில் அமர்த்தும்போது அவர்களுடைய உழைப்பின் காலம், உழைப்பின் தரம், பிற்பட்ட வகுப்பா, இல்லையா என்பன போன்றவைகள் எல்லாம் மனதில் கொண்டு உத்தியோகம் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.



6th March 1961]

**THE HON. SRI C. SUBRAMANIAM :** சீனியாரிடி, மெரிட் இவைகளைக் கவனித்துத்தான் கொடுக்கப்படுகிறது.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : எஸ்.இ.ஓ.-க்களாக நியமிக்கும்போது அவர்கள் பி.டி.ஓ.-க்களாகப் பிரமோஷன் செய்யப்படலாம் என்ற விதி இருக்கிறது. எஸ்.இ.ஓ.-க்களாக ஆண்களும் நியமிக்கப்படுகிறார்கள், பெண்களும் நியமிக்கப்படுகிறார்கள். இப்படி நியமிக்கப்பட்டவர்களில் எத்தனை ஆண்கள் பி.டி.ஓ.-க்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ? எத்தனை பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** பெண்கள் இன்னும் பி.டி.ஓ.-க்களாக வரவில்லை. ஆண்களில் 3 பேருக்குக் கொடுத்திருப்பதாகச் சொன்னேன்.

**SRI M. K. MARIAPPAN:** இப்படி பிரமோஷன் கொடுத்திருப்பதில் ஷெட்யூல்ட் காஸ்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** தனிக் கேள்வி போட வேண்டும்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : எஸ்.இ.ஓ.-க்களாக நியமிக்கப்படுபவர்கள் பி.டி.ஓ.-க்களாக நியமிக்கப்படலாம் என்ற விதி இருப்பது தெரியும். இருந்தாலும் ஒரு பெண்ணைக்கூட நியமிக்கவில்லை என்றால் பெண்களை நியமிக்கக் கூடாது என்று விதி ஏதாவது மாற்றப்பட்டிருக்கிறதா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** பெண்கள் யாரும் வரக் கூடாது என்று விதி எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. இன்னும் வரவில்லை யாரும் என்றால் வருவதற்குரிய தகுதியை அவர்களில் யாரும் பெறவில்லை என்பதுதான் காரணம்.

*Sugar*

***610 *Q.*—SRI A. VEDARATHNAM:** கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்திற்காக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட சர்க்கரையின் அளவு எவ்வளவு ?

(இ) அது எங்கிருந்து சப்ளை செய்யப்படுகிறது ?

(உ) இதுவரை வந்த சர்க்கரையின் அளவு எவ்வளவு ?

(எ) பாக்கியிருந்தால், அது வராததின் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government of India were allotting at the rate of 10,000 tons per month up to May 1960. They increased it to 11,000 tons per month from June 1960.

**(*b*) The allotment is made from factories in this State, from Andhra Pradesh and also from North Indian factories.**

[6th March 1961

(c) The entire quota allotted up to October 1960, except for a small quantity relating to October, 1960 has been received. The balance due for October is in transit.

(d) The balance is in transit and is likely to be received shortly.

* 611 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to decontrol the price, allotment and distribution of sugar; and

(b) if so, when?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) There is no proposal at present to decontrol the price, allotment and distribution of sugar, so far as information is available with the Government.

(b) Does not arise.

**Sri A. VEDARATHNAM:** *இந்த மாநிலத்தின் சர்க்கரை தேவை ஆண்டுக்கு எவ்வளவு? இப்போது உற்பத்தியாவது எவ்வளவு? பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?*

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** *கனம் நிதி அமைச்சருடைய பட்ஜெட் உரையில் அவை குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது 11 ஆயிரம் டன் மாதா மாதம் வாங்குகிறோம் என்றால் அதுதான் நம் ராஜ்யத்தின் தேவை என்று எடுத்துக்கொள்ளலாம். எவ்வளவு உற்பத்தியாகிறது என்ற புள்ளிவிவரம் இல்லை. அகில இந்தியாவையும் சேர்த்துப் பார்க்கிறபோது உற்பத்தி பெருகியிருக்கிறது. அதனால் அந்நிய நாட்டுக்குக்கூட ஏற்றுமதி செய்யலாம் என்று மத்திய அரசாங்கம் யோசித்து வருகிறது.*

Sri A. A. RASHEED : If there is more stock of sugar available, what is the reason for not decontrolling the price of sugar?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Before taking steps to decontrol the price of sugar, all other aspects of the matter have to be looked into. Just now if there is sugar available in plenty everywhere, we should not take any hasty decision about decontrolling sugar. Sometimes the position fluctuates.

Sri S. NAGARAJA MONIGAR : *சிலசமயம் சர்க்கரை பற்றாக்குறை ஏற்படுவதற்குக் காரணம் ரெயில்வே போக்குவரத்து சாதனங்களினால் ஏற்படும் கஷ்டமா? அல்லது சப்ளை செய்ய வேண்டிய இடங்களில் இருக்கும் கஷ்டமா?*

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** *கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல சில சமயங்களில் ரயில்லே போக்குவரத்தினால் ஏற்படுகின்ற இடைஞ்சல் தற்காலிக பற்றாக்குறையை அங்கங்கே ஏற்படுத்துகிறது.*



6th March 1961]

**Sri S. M. ANNAMALAI:** *அமைச்சர் அவர்கள் சொல்லும் போது இதர மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படுகிற சர்க்கரை இங்கு தருவிக்கப்படுவதாகச் சொன்னார். நம் மாநில உற்பத்தி வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறதா? அப்படி அனுப்பப் படுமானால் அதை இங்கேயே விநியோகம் செய்து வெளி மாநிலத்தில் இருந்து வருவதை குறைத்துக்கொண்டால் இங்கே விலை குறையாதா?*

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** *இந்த மாநிலச் சர்க்கரையைச் சாப்பிடுவதோடு, வெளி மாநிலச் சர்க்கரையையும் சாப்பிட்டால்தான் ருசி பார்த்து நன்றாக இருக்கிறதா என்று தெரிந்துகொள்ளலாம்.*

**Sri T. K. SUBBIAH** *மத்திய அரசாங்கம் வெளி தேசங்களுக்கு வெல்லத்தை ஏற்றுமதி செய்ய நமது சர்க்கார் யோசனை கூறுமா?*

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** *வடநாட்டிலேயே வெல்லத்தைச் சீந்துவார் இல்லை என்றால் வெளி நாட்டிற்கு இதை அனுப்புவது சாத்தியம் என்று தோன்றவில்லை. முன் இருந்த ஏற்றுமதிகூட குறைந்துவருகிறது. தற்போது வெல்லம் விலை குறைந்தும் இருக்கிறது.*

*Health Centre (Kandamanaickanur)*

* 612 *Q.*—**Sri M. A. B. ARUMUGHASAMY (on behalf of Sri N. R. THIAGARAJAN):** *கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுகா, ஆண்டிப்பட்டி பிர்க்கா ப்ளாக் டெவலப்மெண்ட் பகுதியில், கண்டமநாயக்கனூரில் ஹெல்த் சென்டர் திறக்க ப்ளாக் அட்வைஸரி கமிட்டியில் நிறைவேறிய தீர்மானம் சென்ற இரண்டு ஆண்டு காலமாக நிறைவேறாத காரணம் என்ன?*

The Hon. Sri M. A. MANICKAVELU : The Primary Health Centres are opened according to a phased programme and the question of opening a centre in the Andipatti block during the current year is under consideration.

*Motor car headlights*

* 613 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state the reason for prohibiting the use of motor car headlights in the City ?

The Hon. Sri V. RAMAIAH : Headlights which dazzle the drivers of other vehicles are in obvious source of inconvenience and danger which may lead to accidents. Therefore, under existing provisions of the Madras Motor Vehicles Rules, the high beam of the headlights should not be used and the beam should be kept deflected downwards by means of the dipping device that is fitted on all motor vehicles. It is only the high beam of the headlights and not the dipped beam that is prohibited under the rules. Action is being taken to enforce this provision in the interests of safer traffic within the limits of the City.

[6th March 1961

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that in spite of this rule, dazzling headlights are still used in the Madras City and if so, what steps the Government have taken to enforce it vigorously and stop the use of dazzling headlights?

THE HON. SRI V. RAMAIAH : I have just now stated in my answer the steps taken.

SRI K. VINAYAKAM : Were similar instructions given in respect of the heavy motor vehicles run by the State Transport Department as well as lorries which ply on the streets of the Madras City during the night?

THE HON. SRI V. RAMAIAH : This rule is applicable to all vehicles.

SRI A. A. RASHEED : Is there any proposal to extend this rule to the taluk headquarters and district headquarters?

THE HON. SRI V. RAMAIAH : This is applicable throughout the State.

*Hospital (Polur)*

*614 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம், போளூர் ஆஸ்பத்திரிக்கு கட்டிடம் கட்டுவது எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Government have decided to acquire the lands required for the construction of new buildings for the Government Hospital, Polur, during the current year. Proposals are awaited from the District Revenue Officer, North Arcot.

SRI S. M. ANNAMALAI: இந்த ஆஸ்பத்திரிக்கு கட்டிடம் வாங்க இடத்தகராறு இருந்தது. அதையொட்டி அமைச்சர் அவர்களே அங்கு வந்து பார்வையிட்டதாகக் கேள்விப்பட்டேன். குறிப்பிட்டதற்கு மேற்கே இடம் செலெக்ஷன் செய்திருக்கிறார்களா ? கிழக்கே செய்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்காகத்தான் நான் நேரில் போய்ப் பார்த்தேன். கனம் அங்கத்தினர் தொகுதி அது பி.டி.ஓ., டி.ஸி,, கர்ணம், முன்சீப் ஆகிய எல்லா அதிகாரிகளும் வந்திருந்தார்கள். பார்வையிட்டபின் சாப்பிடப் போனேன். அப்புறம் வேறு காரியத்தையும் கவனித்தேன். வந்தேன். இது இன்னும் முடிவாகவில்லை.

*Post graduate instruction*

*615 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் போஸ்ட் கிராட்ஜுவேட் பயிற்சி எங்கெங்கே அளிக்கப்படுகிறது ?

(இ) அவற்றுள் ஆதாரக் கல்வி ஆப்ஷனல் பயிற்சி எங்கெங்கே நடைபெறுகின்றன ?



6th March 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) In the Meston Training College, Madras, Sir.

(*b*) The instruction is given in the following colleges :—

1. Lady Willingdon Training College for Women, Madras.
2. St. Christopher's Training College, Madras.
3. Meston Training College, Madras.
4. R. M. Vidalaya Teachers' College, Perianaickenpalayam.
5. V.O.C. Training College, Tuticorin.
6. Teachers' College, Saidapet.

SRI A. VEDARATHNAM: இப்போது மாநிலத்தில் உள்ள எல்லா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் போஸ்ட் க்ராஜுவேட் பட்டதாரிகள் இருக்கிறார்களா ? இல்லையானால் அந்தப் பற்றாக் குறையை நீக்குவதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்போகிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அந்தப் புள்ளிவிவரம் என்னிடத்தில் இல்லை. எனக்குத் தெரிந்தவரையில் பற்றாக்குறை இருப்பதாக என் கவனத்திற்கு வரவில்லை.

SRI R. KRISHNASAMI NAIDU: கனம் சபாநாயகர் அவர்களே, தலைமை ஆசிரியர்களாக நியமிப்பது சர்க்கார் கொள்கை என்றாலும் ஆசிரியர்கள் பள்ளிகளிலே போஸ்ட் க்ராஜுவேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களே இல்லாமல் பல வருஷங்களாக ஆசிரியர்களை நியமனம் செய்யாமல் இருக்கிறார்கள். ஆகையால் இந்தப் பள்ளிகளிலே சமீபத்தில் வெளிவந்த சர்க்கார் அறிக்கையின்படி இந்தமாதிரி மற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : சீனியர் பேசிக் ஸ்கூல், போஸ்ட் பேசிக் ஸ்கூல், மல்டி பர்ப்பஸ் ஸ்கூல்களிலே சைன்ஸ் சப்ஜட்டுக்குத் தகுந்த பி. டி. பட்டம் பெற்றவர்கள் கிடைப்பதில்லை. ஆகையால் பெரியநாயக்கன்பாளையத்திலிருக்கும் காந்தி கிராமத்தில் இருக்கும் ரூரல் இன்ஸ்டிடூஷனிலே இருப்பவர்களுக்கு பி. டி. பயிற்சிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது பேசிக் எடுகேஷனைப் பொறுத்தது. This question refers to basic education at post-graduate level. The question which the hon. Member is putting does not arise out of the main question.

SRI K. VINAYAKAM : Are there factors that work as implements in the introduction of these post-graduate studies like M.Ed. in Teachers' College, Saidapet?

[6th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : This is with reference to post-graduate basic education. M. Ed. course is conducted in Meston Training College. If there are demands and more number of applicants, certain other facilities would be made available.

SRI A. VEDARATHNAM: இந்த போஸ்ட் கிராஜுவேட் பட்டப் படிப்பு எந்தெந்த கல்லூரிகளிலே எத்தனை மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த மாதிரி மெஸ்டன் டிரெய்னிங் காலேஜில் வருஷத்திற்கு 6 பேர் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

SRI K. VINAYAKAM : Is any extra remuneration given to the trainees who undergo this post-graduate teaching course? Are they given special posts and do they handle special classes after their study?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. Certain posts carry special scales of pay for which post-graduate qualfication is required.

*Powerlooms*

* 616 *Q*.—SRI S. M. ANNAMALAI :
SRI T. S. RAMASWAMI : } கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இப்போது எவ்வளவு விசைத்தறிகள் இம் மாநிலத்தில் உள்ளன ?

(இ) மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் எவ்வளவு விசைத்தறிகள் ஏற்படுத்தப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There are 3,380 powerlooms working in this State.

(*b*) It has been tentatively proposed to introduce about 2,500 powerlooms during the Third Five-Year Plan period. The details of the scheme have not been worked out as yet.

* 617 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to issue licences for the installation of more powerlooms; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) It has been decided to permit weavers' co-operative societies to install powerlooms if they make an application. The number of powerlooms to be so permitted will be a certain percentage of the number of handlooms working in the societies. The appropriate percentage to be fixed is under consideration.



6th March 1961]

SRI S. M. ANNAMALAI : இந்த விசைத்தறிகளைப் புகுத்துவதினால் கைத்தறி நெசவாளர்கள் பல பேர்களுக்கு வேலையில்லாமல் போய்விடுவதனால் அவர்களுக்கு மாற்று வேலை தேடித்தருவதற்கு அரசாங்கம் முன்வருமா ? இதற்குமுன்னால் அரசாங்கம் இதைப் பற்றி ஸ்டேட் ஹாண்ட்லூம் போர்ட்டை கலந்தாலோசித்ததா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது நாம் விசைத்தறி முறையைப் புகுத்தும்போது பொதுவாக கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. கூட்டுறவு சங்கங்கள் விரும்பினால் விசைத்தறிகள் 10 அல்லது 15 சத விகிதம் கொடுக்கப்படும். இதனால் யாருக்கும் வேலையில்லாமல் போகவில்லை. கூட்டுறவு சங்க அங்கத்தினர்கள் வருவாயைப் பெருக்குவதற்கு இந்த திட்டம் உதவியாக இருக்கும்.

SRI N. K. PALANISAMI : இருபது கைத்தறி உற்பத்தி செய்யக் கூடியதை ஒரு பவர்லூம் செய்கிறது. ஏற்கெனவே கைத்தறித் துணிகள் தேங்கியிருப்பதனால், சர்க்காரே வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

பதில் இல்லை.

SRI R. KRISHNASAMI NAIDU : ஏற்கெனவே அரசாங்கம் விசைத்தறிகளை நிறுவுவதை எதிர்த்துவந்த கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் அதாவது இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை பகுதிகளிலுள்ள நெசவாளர்கள் சங்கங்கள் இப்பொழுது விசைத்தறிகள் தங்களுக்கு வேண்டுமென்று விண்ணப்பம் செய்துள்ளார்களா ? அப்படியிருந்தால் அவர்களுக்கு வழங்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சென்ற ஐந்து வருஷங்களுக்குமுன்னால் இருந்த நிலைமை இப்போது இல்லை. கூட்டுறவு சங்கங்களே இப்பொழுது விசைத்தறிகள் வேண்டுமென்று சொல்கிறார்கள். தனிப்பட்டவர்களும் வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இப்பொழுது கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் அரசாங்கம் உதவி செய்துவருகிறது.

*Paddy*

* 618 *Q*.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜப்பானிய உபகரணங்களுடன் நெல் சாகுபடியை இயந்திரமயமாக்கும் திட்டத்தில் பங்கு கொள்ளுமாறு மத்திய விவசாய இலாகா நம் மாநில சர்க்காரைக் கேட்டுள்ளதா ?

(இ) இதற்கு நம் சர்க்கார் என்ன பதிலளித்திருக்கிறது ?

(உ) இத்திட்டத்திற்கு மத்திய அரசாங்க உதவி என்ன கிடைக்கும் ?

[6th March 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Government of India have been informed that this State would like to participate in the scheme.

(*c*) No assistance in the form of loan or grant will be available from Government of India in their proposals forwarded to this Government.

* 619 *Q.*—SRI V. K. KOTHANDARAM : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜப்பானிய சர்க்காரின் உதவியைக்கொண்டு நமது ராஜ்யத்தில் மாதிரிப் பண்ணைகளுடன் கூடிய நெல் சாகுபடி பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானல், எந்தெந்த ஜில்லாக்களில் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government of India have forwarded a draft scheme to be implemented in collaboration with the Japanese Government for the mechanisation of rice cultivation with the Japanese type of farm implements and for the training of Indian farmers in the use of such implements and have asked for the reactions of this Government. The Government have accepted the scheme.

(*b*) It is proposed to be set up in Thanjavur district.

SRI A. VEDARATHNAM : இந்த முறையை போதிப்பதற்கு ஜப்பானிய நிபுணர்கள் வந்து போதித்திருக்கிறார்களா ? அல்லது நம் நாட்டில் இருக்கும் நிபுணர்களுக்கு போதனை அளிக்கப்பட்டு அவர்கள் இந்தக் காரியத்தைச் செய்கிறார்களா ? இது முதலில் தஞ்சை ஜில்லாவில் எந்தப் பகுதியில் எடுத்துக்கொள்ளப்படும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : For the information of the hon. Member and the House, I shall mention a few salient features of the scheme—

(1) A farm of suitable size, say, ten to twenty five acres of land with irrigation facilities would be earmarked for setting up a demonstration farm to be operated by a maximum of five junior Japanese technicians to be loaned by the Japanese Government.

(2) The farm excluding the buildings would be given on the usual lease terms.

(3) A complete set of agricultural farm implements generally used by the Japanese farmers would be provided by the Japanese Government and the junior technicians will demonstrate the feasibility under Indian conditions of raising the yield or rice to very high level with the use of these implements.



6th March 1961]

(4) After successful demonstration of possible increase that could be obtained by the use of improved agricultural implements and practices mentioned above, a few Indian farmers in the neighbourhood of the demonstration farm will be selected and given a free set of improved implements which could be owned normally by the Indian farmers for rice cultivation. The power implements would, however, be kept in the pool in the demonstration farm and will be available for hire or service to selected farmers for undertaking operation requiring the use of such implements.

(5) The selected farmers will also be trained in the use of Japanese implements in the demonstration farms.

(6) Based on its success, the scheme will be extended within a few years to cover most of the villages.

(7) The Japanese Government will also provide a maximum of five senior Japanese technicians to supervise, to assist the technicians in charge of the demonstration farms.

(8) It is expected that the scheme would cost nothing to the State Government except the expenditure on the buildings for housing the Japanese technicians. The above scheme is already working in Uttar Pradesh and has been proposed to be extended to other rice growing areas.

SRI A. VEDARATHNAM : எப்போது இந்தத் திட்டம் அமுலுக்குவரும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சீக்கிரத்தில் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR : இந்தத் திட்டம் தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் ஆரம்பிக்கப்படுமா ? அல்லது ஒன்று இரண்டு இடங்களில் ஆரம்பிக்கப்படுமா ? எந்தெந்த இடங்களில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீர்ப்பாசனம் உள்ள இடங்களில் முதல் முதலில் பரீட்சார்த்தமாக செய்வதற்கு தஞ்சையில் சில கிராமங்களில் எடுத்துக்கொள்ளப்படும். வெற்றிகரமான பிறகு மற்ற இடங்களில் எடுத்துக்கொள்ளப்படும்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்களுக்கு ஒரு வேண்டுகோள். கேள்வி நேரத்தின்போது கேள்வியின் நம்பரைச் சொன்னவுடன் கேள்விக்கு நோடீஸ் கொடுத்திருக்கும் அங்கத்தினர் எழுந்து நின்று கேள்வி போடவேண்டும். அதுமாதிரி உப கேள்வி போடும்போதும் அந்த அங்கத்தினர் கையைத்தூக்க வேண்டும். அவ்வாறு சில அங்கத்தினர்கள் செய்வதில்லை. உதாரணமாக ஸ்ரீ வேதரத்தினம் அவர்கள் கேள்வி வரும்போது எழுந்து நின்று போடுவதில்லை. கனம் அங்கத்தினர் நான் அதைக் குற்றமாக சொல்வதாக நினைத்துக்கொள்ளவேண்டாம், கேள்வி

[6th March 1961

போடும்போது நோடீஸ் கொடுத்த அங்கத்தினர்கள் எழுந்து நின்றால் என்னுடைய வேலைக்கு அனுகூலமாக இருக்கும் என்று இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன்.

*Taxis*

* 620 *Q*.—SRI A. VEDARATHNAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் தற்சமயம் உள்ள பெரிய டாக்ஸி, பேபி டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா இவை ஒவ்வொன்றின் எண்ணிக்கை என்ன ?

(இ) பிரயாண வசதிக் குறைவை நிவர்த்திக்கும்பொருட்டு பேபி டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா இவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

(உ) மேற்கண்ட வாகனங்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை நபர் பிரயாணம் செய்யலாம் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Baby Taxis—1124. Big Taxis—107 Autorickshaws—261.

(*b*) Permits for taxis and auto-rickshaws are granted liberally to the applicants every month by the Regional Transport Authority, Madras, to meet the demand for transport facilities in Madras City.

(*c*) Auto-rickshaws—2 persons; besides the driver; Big taxis—5 persons, besides the driver; Baby taxis—3 or 4 persons, besides the driver.

9-30. a.m. SRI A. VEDARATHNAM : இன்னும் பேபி டாக்ஸிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் இவைகளுக்கு விண்ணப்பங்கள் நிரம்ப வந்திருக்கின்றனவா ? இப்பொழுது டாக்ஸிகளின் பற்றாக்குறை காரணமாக ரயிலில் வருகிற பிரயாணிகள் மணிக்கணக்கில் காத்து நின்று வாகன வசதிக்காகத் திணறுகிறார்கள். ஆகவே, இதை நிவர்த்தி செய்ய இன்னும் அதிக டாக்ஸிகள் அனுமதிக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : டாக்ஸிகளின் தேவைப்பற்றி அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு போதுமான பெர்மிட்டுகளை ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டி வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் நகரத்தை பொறுத்தவரையில் பெர்மிட் வாங்கியவர்கள் எத்தனையோ பேர்கள் டாக்ஸிகளை விடாமல் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது.



6th March 1961]

SRI A. VEDARATHNAM : டாக்ஸி பெர்மிட் வாங்கியவர்கள் அதை பயன்படுத்தவில்லையானால் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அதை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தி அதற்குள் அவர்கள் டாக்ஸி விடவில்லையென்றால் பர்மிட் கொடுத்ததை ரத்து செய்து விட்டு அது வேண்டுமென்று விரும்புகிற மற்றவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : விதிமுறைப்படி, ஒரு குறிப்பிட்ட காலம் வரை பொறுத்திருக்க வேண்டியிருக்கிறது. அதற்குள் டாக்ஸி ஓடாவிட்டால் அது ரத்தாகிவிடுகிறது. பின், தேவையைப் பூர்த்தி செய்ய இன்னும் பல மாதங்கள் ஆகிறது. இப்படியே தடைப்பட்டுக் கொண்டு போகிறது. அதில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடியவர்கள் தேவையை உணர்ந்து அதற்குத் தகுந்தாற்போல் டாக்ஸி விட முன்வருவதில்லை.

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—GOVERNMENT BILL.

### THE MADRAS ENTERTAINMENTS TAX (AMENDMENT) BILL, 1961.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras Entertainments Tax (Amendment) Bill, 1961.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Entertainments Tax (Amendment) Bill, 1961.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1961-62—*cont*.

MR. SPEAKER : The hon. Member, Sri V. K. Ramaswamy Mudaliyar, will lead the discussion on the Budget for the year 1961-62.

[6th March 1961]

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, நமது மாநில நிதியமைச்சர் அவர்களால் 1961-62-க்குள்ள நிதிநிலை அறிக்கை இந்த சபை முன்பு நான்கு தினங்களுக்கு முன்பு சமர்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையைப் பார்ப்போமேயானால் மக்களுக்கு அது ஒரு ஏமாற்றத்தைத்தான் கொடுத்திருக்க வேண்டுமென்று சொல்லவிரும்புகிறேன். விலைவாசிகள் எல்லாம் நாளுக்குநாள் விஷம் போன்று ஏறிக் கொண்டே வருகிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு சர்க்கார் யாதொரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. அதுபற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்கள் என்பதுபற்றியும் அறிக்கையில் நிதியமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக ஒன்றுமே குறிப்பிடவில்லை. அதைப் பார்த்து நாம் எல்லோரும் வருத்தப்படவேண்டியது மட்டுமல்லாமல் அது ஒரு பெரிய ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கிறது என்றும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் புது வரிகள் எதுவும் இல்லை என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. உண்மை. ஆனால் அதற்குப் பதிலாக, அதாவது இம்மாநில சர்க்காருக்குப் பதிலாக மத்திய சர்க்கார் சுமார் 60 கோடி ரூபாய் வரையில் வரி போட்டிருக்கிறார்கள். இதனால் எல்லா மாகாணங்களும் ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் நமது மாநிலம் இதனால், இந்த வரி விதிப்பினால் அதிகமாக பாதிக்கப்படும் என்பது பற்றி நான் பினனால் சொல்லும் உதாரணங்களினால் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நமது மாநிலசர்க்காரானாலும் சரி அல்லது மத்திய சர்க்காரானாலும் சரி வருடாவருடம் வரியைப் போட்டுக் கொண்டே போவதினால் மக்களின் வாழ்க்கைத்தரம் நாளுக்குநாள் குறைந்து கொண்டு போகிறதே தவிர வாழ்க்கைத்தரம் கொஞ்சமாவது உயரவேயில்லை, என்று நான் திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஐந்தாண்டுத் திட்டங்கள், பின்னர் வேறு பல திட்டங்கள் போட்டு மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக நாங்கள் பாடுபடுகிறோம் என்று சொல்லிக் கொண்டே போய்க் கொண்டிருந்தால் அதனால் இன்றைய தலைமுறையில் இருக்கும் மக்கள் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். எதிர்காலத்தில் வரக் கூடிய மக்களுக்காக நாங்கள் பாடுபட்டு அவர்கள் நல்ல முறையில் இருக்கவேண்டுமென்று பாடுபடுகிறோம் என்று சொல்கிறார்கள். அது ஒரு விதத்தில் உண்மை என்றிருந்தாலும் இன்றைய தலைமுறையில் இருக்கக் கூடியவர்கள் கசக்கி பிழியப்பட்டு, பலவித வரிகள் போடுவதால் இத்தலைமுறையினர் எவ்வளவுதூரம் துன்புறுத்தப் படுகிறார்கள் என்று யோசித்துப்பார்த்தால் அது மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது. வரிகளை போட்டுக்கொண்டே போனால் அதன் முடிவு என்ன? இந்த வருடம் நம் மாநில சர்க்கார் வரி போடவில்லை. காரணம், தேர்தல் வருகிறது என்பதினால்தான். நான் திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன், வருகிற தேர்தல் முடிந்தவுடன் அடுத்த வருடம் ஒன்றுக்கு இரண்டல்லது மூன்று பங்கு வரிகளைப் போட்டு மக்களை கசக்கிப் பிழியப் போகிறார்கள், இதை யாரும் மறுக்க முடியாது என்று நான் திட்டவட்டமாக



6th March 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அடுத்தபடியாக, உணவு உற்பத்தியை எடுத்துக் கொண்டால் உற்பத்தி சிறிது பெருகியிருந்தபோதிலும் நமது டார்ஜட்படி. உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோமா என்று பார்த்தால் இல்லை. பின்னால் இது பற்றிய புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறேன். இவ்வாண்டு பட்ஜெட்டில் 2 கோடி 85 லட்சம் ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. மத்திய சர்க்கார் போட்டிருக்கக் கூடிய வரிகள் காரணமாக உணவு உற்பத்தியிலானாலும் சரி அல்லது டிரான்ஸ்போர்ட்டை எடுத்துக் கொண்டாலும் சரி இன்னும் மற்ற பல துறைகளிலும் மக்கள் அதிகமாக பாதிக்கப்படப் போகிறார்கள். புகையிலை, காப்பி, மண்ணெண்ணை போன்ற பண்டங்கள் எல்லாம் மக்களின் அவசியமான பண்டங்கள் இல்லை என்று மத்திய சர்க்கார் நிதியமைச்சர் அவர்கள் கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இப்பொழுது இப்பண்டங்களை மக்கள் அதிகவிலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. இதனால் ஏழை மக்களும், நடுத்தர மக்களும் அதிகமாக பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். பொருள்களின் விலை விஷம் போல் ஏறிக் கொண்டே போகிறது, இதைத் தவிர்க்க அரசாங்கத்தார் என்ன செய்யப் போகிறார்கள் என்பது குறித்து சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மத்திய அரசாங்க நிதி அமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாக கம்பெனிகளுக்கு போட்டிருக்கும் போனஸ் வரிகளை குறைத்திருக்கிறார்கள். சாமர்த்தியமான விஷயம். அதனால் கம்பெனி நடத்துகிறவர்களை திருப்திபடுத்தி அவர்களிடமிருந்து தேர்தலுக்கு எவ்வளவு தூரம், பணம் வாங்க முடியுமோ அதை வாங்குவதற்கு வேண்டிய வழிகளை எல்லாம் செய்திருக்கிறார்கள். அதுதான் முக்கிய விஷயம். பின்னர், மத்திய அரசாங்க அறிக்கை ஒன்றை படித்தேன். டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரி-க்கு 16 கோடி ரூபாய். (Incidence of taxation) 1960-61-ல் வசூலித்ததை விட பன்மடங்கு இப்பொழுது அதிகமாக போய்க் கொண்டிருக்கிறது. (Handloom industry) (கைத்தறி தொழிலை) எடுத்துக்கொண்டால் 1 கோடி 27 லட்சம் மில்கட்கு மட்டும் போட்டிருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன் ஒரு மில் அதிபரோடு பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் இந்த புள்ளிவிவரம் போட்டுக் கொடுத்தார்கள்.

அது தவிர காஸ்டிக்சோடா போன்ற பொருட்களுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் பல பொருட்களின் விலையும் ஏறிக்கொண்டேபோகிறது. அதோடு 11-ம் நம்பர் நூலுக்கும் 40-ம் நம்பர் நூலுக்கும் வரி போடவில்லை என்று மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாகாணத்தை எடுத்துக் கொண்டால் புடவைகள், வேட்டிகள், பெட்ஷீட்டுகள் (Bed sheets) இவைகளெல்லாம் நாம் அதிகமாக உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு பெரும்பாலும் 40-ம் நம்பர் நூலைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். துண்டுகளை எடுத்துக் கொண்டால் பெரும்பாலும் 11-ம் நம்பருக்கு குறைவான நூல்களி

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [6th March 1961

லேயே உற்பத்தி செய்கின்றோம். இவை எந்த நூலில் உற்பத்தி செய்வதாக இருந்தாலும் இம்மாதிரி பொதுவாக நூலுக்கு வரி போடுவதின் காரணமாக கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள் என்பது மட்டும் நிச்சயம். ஆட்டோமெட்டிக் லூம் (Automatic loom) களை எடுத்துக்கொண்டால், இந்தியாவில் 14,800 ஆட்டோமெட்டிக் லூம்கள் இருக்கின்றன, இதில் தென் பிராந்தியத்தில் மட்டும் 6,000 ஆட்டோமெட்டிக் தறிகள் இருக்கின்றன இவைகளுக்கு நம் நாட்டில் வரிகள் இல்லாது இருந்த போதும், மத்திய சர்க்கார் இதற்கு நிறைய செலவு செய்து வருகிறார்கள். 1960-61-க்கு சுமார் 61 கோடி ரூபாய் மாகாணங்கட்கு ஒதுக்கியிருந்த போதிலும் 1961-62-ம் ஆண்டுக்கு மாகாணங்களுக்கு எல்லாம் 214 கோடி ரூபாய் பிரித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களை எல்லாம் பார்த்து நீங்கள், வரி ஒன்றும் போட வேண்டாம், நாங்களே வரி போட்டு பிரித்து ராஜ்யங்களுக்கு கொடுத்துவிடுகிறோம் என்கிறார்கள். ராஜ்யங்களே வரி போட்டால் எலக்ஷன் சமயத்தில் பாதகம் ஏற்படும் என்கிற ஏற்பாட்டில் தான் இவ்விதம் செய்து வருவதாக தெரிகிறது. ஆனால் தென் பிராந்தியத்தைப் பொறுத்தவரையில் நமக்கு எவ்வளவு கொடுக்கப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. இந்த விதத்தில் எல்லாம் மத்திய சர்க்கார் நமக்கு ஒன்றும் கொடுக்காமல் இருந்து வருகிறார்கள் என்பதை நான் அதிகமாக சொல்ல வேண்டியதில்லை. பட்ஜெட் மெமோரண்டம் 6-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்ப்போமேயானால் முதலில் 33 லட்சம் துண்டு விழும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் திருத்த மதிப்பீட்டில் ஒரு கோடி 23 லட்சம் ரூபாய் உபரியாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு சம்பள கமிஷன் சிபாரிசு பிரகாரம் சம்பளம் உயர்த்தியதற்காக 4 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியெல்லாம் அதிகமாக செலவு செய்து இருந்தும் எப்படி உபரி ஏற்பட்டது, அப்படியானால் ஏன் துண்டு விழும் என்று முன்பு கணக்கிடப்பட்டது? இம்மாதிரியான புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது அது சரியானதாக தெரியவில்லை. 'ஜக்ளரி ஆப் ஃபிக்கர்ஸ்' " Jı ggleı y of figures " ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா? மத்திய சர்க்காரிடமிருந்து சம்பள உயர்வு கொடுப்பதற்காக உதவி பெற்று இருக்கிறோம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் அவர்களுடைய கோரிக்கையின்படி மத்திய சர்க்கார் ஊழியர்களைப் போன்றே இவர்களுக்கும் கொடுத்திருக்கலாம் அல்லவா, அவ்விதம் கொடுக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன? மத்திய சர்க்காரும் அவர்களுடைய ஊழியர்களுடைய சம்பளத்தை உயர்த்தினார்கள், முதலாவதாக இந்தச் செலவுக்கு மத்திய சர்க்கார் கொடுப்பார்கள் என்று சொல்லப்பட்டதிலிருந்து இப்போது அவர்கள் பின் வாங்குவதற்கு காரணம் என்ன? இவைகளை எல்லாம் நிதி அமைச்சர் அவர்கள் தனது பதிலில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



6th March 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

அடுத்தபடியாக இரண்டு கோடி குறைந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது, அதே சமயத்தில் மைனஸ் (Minus) காலத்தில் 33 லட்சம் காட்டப்பட்டிருக்கிறது. இது எப்படி பொருந்தும் என்றும் தெரியவில்லை.

இது தவிர விலைவாசிகள் அதிகமாக ஏறிக்கொண்டே போவதின் காரணமாக அரசாங்க ஊழியர்களுடைய சம்பளத்தைப்பற்றியும் இனி பரிசீலனை செய்ய வேண்டியிருக்குமோ என்கிற பயம் ஏற்படுகிறது. அவ்விதம் பரிசீலனை செய்து பார்த்து அவர்களும் சம்பளம் கூடுதலாக கொடுக்கவேண்டும் என்றால் அதற்கான தொகைக்கு நாம் எங்கே போவது, இதைப்பற்றியும் நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. முக்கியமாக ஐந்தாண்டுத் திட்டங்களை எடுத்துக்கொண்டால் முதல் முதலாக பட்ஜெட் மெமோரண்டம் 35-வது பக்கத்தில் மைனர் இரிக்கேஷன் அல்லது சிறிய நீர்பாசனத்திற்காக 133-வது ஐட்டத்தில் 163 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இது மிகவும் குறைவு என்றே எண்ணுகிறேன். மைனர் இரிக்கேஷன் திட்டங்களைப் பொறுத்தவரையில் வெகு துரிதமாக வேலை நடத்தப்படவேண்டும். இவைகள் எல்லாம் நல்ல முறையில் வேலை செய்ய வேண்டும் என்ற ஏற்பாட்டிற்காக ஃபுட் புரொடக்ஷன் டிப்பார்ட்மென்ட் (உணவு உற்பத்தி இலாகா) எல்லாம் தனியாக ஏற்படுத்தியும் கூட இவைகளினுடைய வேலை ஆமை வேகத்தில்தான் போய்கொண்டிருக்கிறது. அவ்வாறு இல்லாமல் துரிதமாக வேலை செய்து திட்டங்களை எல்லாம் பூர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவிரவும் 43-வது பக்கத்தில் வெளி மார்க்கட்டில் பத்துக் கோடி ரூபாய் பொதுக் கடன் எழுப்ப உத்தேசித்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியானால் இந்தக் கடனை எப்போது திருப்பிக்கொடுக்கப் போகிறோம் என்று தெரியவில்லை. இதன் காரணமாக பெர் காப்பிட்டா (per capita) வருமானம் உயரும் என்று நினைக்க முடியாது. அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டுகளை எல்லாம் பார்க்கும் போது அநேகமாக போடப்படும் எல்லா ஸ்கீம்களும் லாபகரமாக இல்லை என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சம்பளமும் அலவன்ஸ் விஷயத்தை எடுத்துக்கொண்டால் பெரும் பகுதி இதற்காக செலவு செய்யப்படுகிறது. சுமார் 27 கோடி ரூபாய் வரை இதற்கு செலவு செய்யப்படுகிறது. இவ்வளவு தொகை இதற்கு அவசியமா என்பதைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும். அதற்காக வேலையில் இருப்பவர்களை வெளியில் போகச்சொல்லவேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை. டிப்பார்ட்மென்ட்-கள் எல்லாம் விஸ்தரித்துக்கொண்டே போகிறது. இவ்வளவு தூரம் விஸ்தரிப்பதற்கு தகுந்தவாறு வேலை அதிகமாக துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்வதற்கில்லை. சிப்பந்திகள் இப்போது வேலை செய்வதைவிட இன்னும் அதிகமாக வேலை செய்தால் நல்லமுறையில் துரிதமாக வேலை நடக்கும். சிப்பந்திகளுடைய சம்பளத்தைப் பொறுத்தவரையில் இனியும் விஸ்தரிக்காதவாறு பார்த்துக்

கொள்ளவேண்டும். இருக்கின்ற சிப்பந்திகளைக் கொண்டே இன்னும் அதிகமான அளவில் வேலை துரிதமாக நடைபெற ஏற்பாடு செய்யவேண்டும். புதிதாக உத்யோகஸ்தர்களை நியமிக்கின்ற விஷயத்திலும் நல்ல ஆலோசனை செய்து பார்த்து மிகவும் அவசியம் தானு என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். அதேபோன்று டெல்லிக்கோ அல்லது மற்ற இடங்களுக்கோ அமைச்சர்கள் போகும் போது, அவர்களோடு பத்து பதினைந்து உத்தியோகஸ்தர்கள் போகிறார்கள். அமைச்சர்களுக்கு உதவியாக ஒருவர் அல்லது இரண்டு பேர் போனால் போதாதா என்பதைப்பற்றியும் ஆலோசனை செய்யவேண்டும். இதில் எவ்வளவு தூரம் செலவை குறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தொழில்களைப் பொறுத்தவரையில் நம்முடைய பிராந்தியத்தில் அதிகமான அளவில் தொழில்கள் நிறுவப்படவில்லை. அவ்விதம் நிறுவப்படாமல் இருந்து கொண்டிருந்தால் வேலையில்லாத்திண்டாட்டம் இருந்து கொண்டேயிருக்கும். பொருளாதாரத் துறையிலும் நம் பிராந்தியம் முன்னேற முடியாது. அதோடு நாட்டிலுள்ள மக்களுடைய வருமானம் பெர் காப்பிட்டா வருமானமும் உயராது. நம்முடைய நாட்டிலுள்ள மக்களுடைய வருமானம் பெருகுகின்ற அளவுக்கு பெர் காப்பிட்டா உயருகின்ற அளவுக்கு, நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சொல்லி, வேறு பல துறைகளில் நம்முடைய பிராந்தியம் புறக்கணிக்கப்பட்டிருந்தாலும் கனரகத் தொழில்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலியைப்பற்றி நாம் அதிகமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதில் உற்பத்தியாகப் போகின்ற மின்சாரம் நமக்குப் போதுமானதாக இருக்காது என்று சொல்லுகிறார்கள். அதனால் வரப்போகின்ற தொழில்களும் போதுமானதாக இருக்காது. முக்கியமாக வெளி மாகாணங்களிலிருந்து நமக்கு (manufacturing goods) மானுஃபாக்சர்ட் குட்ஸ் உற்பத்தியான பொருள்கள் அதிகமாக வரவேண்டியதாக இருக்கும். இம்மாதிரி வருவதற்குத் தடையாக இருப்பது போக்குவரத்து சாதனங்கள். ரயில் வசதி போதுமானதாக இல்லை. அதன் காரணமாக நமக்குப் பலவித நெருக்கடிகளும் கஷ்டங்களும் இருக்கின்றன. சில நாட்களுக்கு முன்பு கூடப்பார்த்தோம். போக்குவரத்து சாதனங்கள் இல்லாததன் காரணமாக இங்கே coal ஸ்கார்ஸிட்டி நிலக்கரி பற்றாக்குறை வந்திருக்கிறது. அநேக இடங்களில் நாளுக்கு நாள் கட்டிடங்களை விஸ்தரித்துக்கொண்டே போகின்றோம். ஆனால் கட்டிடங்களைக் கட்டுவதற்கு முக்கியமாக செங்கல் கிடையாது. கிடைத்தாலும் விலை அதிகமாக இருக்கிறது. முக்கியமாக கோல் இல்லாததால்தான் இவைகளின் விலையானது விஷம்போல் ஏறுகின்றது. இதையெல்லாம் தடுக்க போக்குவரத்து சாதனங்கள்தான் மிகவும் முக்கியமானது. உதாரணமாக நம் நாட்டிலிருந்து இரும்புக்கனி வெளி நாடுகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டு உற்பத்தி செய்யப்





பட்ட பொருள்களை இங்கே கொண்டுவந்து (Competitive rate) காம்பிடிடிவ் ரேட்டில் கொடுக்கிறார்கள் என்றால் நாம் ஏன் போக்குவரத்து சாதனங்களை விருத்தி செய்து இங்கேயே உற்பத்தி செய்ய முடியாது என்று கேட்கிறேன்.

இன்னும் இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால் எவ்வளவு தூரம் எக்ஸ்பான்ஷன் விஸ்தரிப்பு இருந்தபோதிலும் அநேக துறைகளில் நன்றாக அவைகள் இயங்கவில்லை. முக்கியமாக ஆர்ட்டிஸான்களுக்கு ட்ரைனிங் ஸெண்டர்களை (Artisan Training Centre) ஏற்படுத்தி அவர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டியது முக்கியம்—அதை நான் ஆதரிக்கிறேன். அதே நேரத்தில் நாம் வியாபாரத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், முக்கியமாக திண்டுக்கல் லாக் யூனிட்டை எடுத்துக் கொண்டால் லட்சக்கணக்கான ரூபாய் அளவுக்கு பொருள்கள் மார்க்கெட்டில் விலை ஆகாமல் தேங்கிக் கிடக்கின்றன. அந்த மாதிரித்தான் (Shoes) ஷூஸ், பூட்சுகள். இந்த மாதிரி பல வழிகளில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். சமீப காலமாக இந்த டிப்பார்ட்மெண்ட் ஒன்று மட்டும் நான்கு மடங்கு விருத்தியாகியிருக்கிறது. இவ்வளவு தூரம் விருத்தியாகவேண்டுமா? கைத்தொழில் விருத்தியாக வேண்டும் என்று இருந்தபோதிலும் இவ்வளவு தூரம் விருத்தியாக வேண்டுமா; அதன் காரணமாக எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். முக்கியமாக கட்டிடங்களை எடுத்துக் கொண்டால் செலவுகள் அநாவசியமாக ஏற்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். தனியாக ஒரு சீஃப் என்ஜினீயர் போட்டு (Chief Engineer) இண்டஸ்ட்ரியல் ட்ரைனிங் ஸ்கூல்களை அவர்களிடம் கொடுத்து, (Technical education) டெக்னிகல் எஜுகேஷன் மாதிரி இலாக்காக்களை அவர்களிடம் கொடுத்து லேபர் மினிஸ்டரின் கீழேயே இருந்தால் நல்ல முறையில் வேலைகளைச் செய்ய முடியும்—அதைப் பற்றியும் யோசிக்கவேண்டும். இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட் இன்னும் பல துறைகளில் விருத்தியாகி நல்ல முறையில், சிக்கன முறையில் வேலை செய்தால் நல்லபடியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(Department of Publicity) டிபார்ட்மெண்ட் ஆஃப் பப்ளிஸிட்டியை எலெக்ஷனுக்காக ஆளும் கட்சி வைத்துக்கொண்டிருப்பதாக எண்ணுகிறேன். பப்ளிஸிட்டி டிபார்ட்மெண்ட் என்று தனியாக வேண்டுமா, எடுகேஷன் டிபார்ட்மெண்டோடு இதை சேர்த்து வைத்துக்கொள்ளக் கூடாதா என்று கேட்கிறேன். இந்த மாதிரி வைத்துக்கொண்டிருப்பதன் காரணமாக அநேகவித செலவுகள் ஆகின்றது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஐந்தாண்டுத் திட்டங்களைப் பிரசுரிக்கவும் மற்றும் அநாவசிய வேலைகளைச் செய்யவும் இந்த இலாகா இருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை. கல்வி இலாகா மூலமாக அதை ஏன் நிர்வகிக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [6th March 1961

நான் நிதி அமைச்சர் அவர்களை ஒன்றுக்காக பாராட்ட விரும்புகிறேன்—அதாவது 11-வது ஸ்டாண்டர்ட் வரையில் இலவசக் கல்விக்கு ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதற்காக—அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்தச் சலுகை 100 ரூபாய மாத வருமானம் வருபவர்கள் மட்டில் என்று போட்டிருப்பதன் காரணமாக இது அநேகம் பேர்களுக்கு நன்மை விளைவிக்காது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். இப்போது ஒரு ரூபாய் மதிப்பு (Rupee value) 4 அணாதான் என்று சொல்லுகிறார்கள். அதைவிட இன்னும் குறையுமோ என்பது எனது சந்தேகம். அதாவது 2 அணா அல்லது 3 அணாதான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். பொருளாதார நிபுணர்கள்தான் இதைப்பற்றிச் சொல்லவேண்டும். நான்கு அணா என்று வைத்துக்கொண்டாலும் 25 ரூபாய் சம்பளம் இருப்பவர்களுக்குத் தான் இந்தச் சலுகை கொடுப்பதாக இருக்கும். இதனால் அநேகம் பேர்களுக்கு அனுகூலம் இருக்காது. இந்த கல்வி சலுகை கொடுப்பதற்கு குறைந்தது 300 ரூபாய் என்றாவது இருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட உத்தியோகஸ்தர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி கொடுக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு). அதாவது 300 ரூபாய் மாத வருமானம் இருக்கக் கூடியவர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மத்தியகால உணவுத் திட்டத்தைப் பற்றி இன்றைய கேள்வி நேரத்தின்போதுகூட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் ஒரு கமிட்டி போட்டு விசாரணை நடந்து இப்போது அந்தக் கமிட்டி அறிக்கை சமர்ப்பித்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சற்று பரிசீலனை செய்யவேண்டும். நான் இதை முழு மனதோடு வரவேற்கிறேன். இருந்தாலும் இதில் சில கோளாறுகள் இருக்கின்றன. என்னை வரவழைத்து கமிட்டி தலைவர் அவர்கள் கூட கேள்விகள் கேட்டார்கள். நான் அபிப்பிராயத்தை சொல்லியிருக்கிறேன். எனது பகுதியிலும், மற்ற பகுதிகளிலும் ஓராசிரியர் பள்ளிகளிலும், இரண்டு ஆசிரியர் பள்ளிகளிலும் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்கள் அநேகம் பேர்கள் பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுக்கு நிதி சேகரிக்க போகவேண்டியிருக்கிறது. அதனால் பள்ளிக்கூடத்திற்கு வர முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அதனால் அநேகம் பள்ளிகள் மூடப்பட்டிருக்கின்றன. உண்மையாக சில இடங்களில் போகிறார்கள். சில இடங்களில் போகாமலும் இருக்கலாம். இதன் மூலமாக பள்ளிகள் நல்ல முறையில் நடக்கவில்லை என்பதை யோசிக்கவேண்டும். இப்போது அந்தக் கமிட்டி ரிப்போர்ட் அனுப்பியிருப்பதன் காரணமாக இதை நன்றாக பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர எங்கள் பிராந்தியத்தில் வருஷக் கணக்கில் இன்ஸ்பெக்ஷன் இல்லாத காரணத்தினால் அநேக பள்ளிகள் நல்ல முறையில் நடக்கவில்லை. அதன் காரணமாக மக்களுக்கு அதிருப்தி உண்டாகியிருக்கிறது. அதற்கும் திட்டம் போட்டோமேயொழிய



6th March 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

பின்னிட்டு பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்து எப்படி ஜில்லா ரீதியில் சர்க்கார் மூலமாக நல்ல முறையில் நடக்க என்ன செய்யப்போகிறார்கள் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருபது கோடி ரூபாய் வரையில் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கைப்படி கல்விக்காகச் செலவழிக்கப்போகிறோம். ஆதாரப் பள்ளிகள் நல்ல முறையில் நடக்காவிட்டால் உயர்நிலைப்பள்ளிகள் நல்ல முறையில் நடக்குமா என்பதை யோசிக்கவேண்டும். ஆகையால் பள்ளிகளை இன்ஸ்பெக்ஷன் செய்வது நல்ல முறையில் நடக்கவேண்டும், இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எனது அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ரெவின்யூ டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால் அதில் ஊழல்கள் நிறைய இருந்துகொண்டே போகின்றது. எங்கு பார்த்தாலும் பேப்பர்கள் டிலே. லஞ்ச ஊழல்கள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகிறதேயொழிய குறைந்தபாடில்லை. இப்போது செங்கல்பட்டு, கன்யாகுமரி மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில் ரெவின்யூ அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தபோதிலும் நிறைய (Personal Assistant) பர்ஸனல் அஸிஸ்டெண்ட்கள் கலெக்டருடன் கீழ் இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் இந்த ஊழல்கள் இருந்துகொண்டே இருக்கிறது. இது மக்களுக்கு பெரிய அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. எனக்குத் தெரிந்த நண்பர்கள் இரண்டு பேர்கள் சொன்னார்கள். சினிமாவுக்கு லைஸென்ஸுக்காக அப்ளை செய்தால் 6 மாதம் அல்லது 8 மாதம் வரையில் கலெக்டர் ஆபீஸை விட்டு பேப்பர்கள் போவதில்லையாம். அதன் காரணமாக (Entertainment tax) எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் சர்க்காருக்கு நஷ்டம். அதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் யாதொரு பிரயோசனமும் இல்லை. இந்த பேப்பர்கள் கலெக்டர் ஆபீஸிலிருந்து போர்ட் ஆபீஸ் வர வேண்டும், அதன் பிறகு சர்க்காருக்கு வரவேண்டும். அதிக கால தாமதம் ஆகின்றது. சினிமா சொந்தக்காரர்கள் இதுவரை சிப்பந்திகளை வைத்து சம்பளம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் அநேக கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். அரசாங்கத்திற்கு நஷ்டம். இதைப் பொறுத்த வரையில் என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

அதேமாதிரி இப்போது ரைஸ் மில்லை எடுத்துக்கொண்டால், ஒரு வியாபாரி அதற்கு லைசென்ஸ் வேண்டுமென்று விண்ணப்பித்தால் உடனடியாகக் கிடைப்பதில்லை. என்னுடைய பிராந்தியத்தில் ஒரு வியாபாரிக்கு 2-½ வருஷம் ஆகியும், போர்டிலிருந்து அந்தப் பேப்பர் வெளிவராமல் இருக்கிறது. அதற்குக் காரணம் ரைஸ் மில்லைப் பற்றி சர்க்காரின் திட்டவட்டமான புரோகிராம் என்னவென்று தெரியவில்லை. கைக்குத்தல் அரிசியைப் பாப்பு

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [6th March 1961

வதற்கு ஆதரவா, அல்லது மெஷின் அரைப்பு அரிசியை ஆதரிக்கப் போகின்றார்களா என்பதைப்பற்றி என்ன முடிவு செய்வது என்று கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக யோசித்துக்கொண்டு வருகிறார்கள். இதனால் நம் மாகாணத்தில் 500, 600 பெடிஷன்கள் போடப்பட்டு போர்டு ஆபிசிலே குவிந்து கொண்டு இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அதைப் பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கின்றன. அப்படி எடுக்காவிட்டால் இன்றைக்கு ரைஸ் மில்லுக்கு லைசன்ஸ் கொடுக்க முடியாது என்ற நிலைமை ஏற்படுகிறது. இப்படி 500, 600 விண்ணப்பங்கள் போடப்பட்டு, அவைகளின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காவிட்டால், அவைகளினுடைய கதி என்ன? அநேகம் பேர் மெஷின் வாங்கியிருக்கிறார்கள். சிலர் கட்டிடத்தையும் கட்டியிருக்கிறார்கள். இப்படி சும்மா இருந்தால் சர்க்காருடைய பாலிசி (Policy) என்னவென்று தெரியவில்லை. ஒன்று நாங்கள் கைக்குத்தல் அரிசியைத்தான் ஆதரிக்கப் போகின்றோம், மில்களுக்கு லைசன்ஸ் கொடுக்க முடியாது என்றாவது திட்டவட்டமாகச் சொல்லி விடவேண்டும். ஆகவே சர்க்காரின் திட்டவட்டமான கொள்கை என்னவென்பதைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, (takkavi) தக்காவி லோன் விஷயத்தில் இதுவரை சுமார் 8 கோடி ரூபாய் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இப்போது மேலும் கொடுக்கப் போவதாக தீர்மானித்திருக்கிறார்கள். பழைய பாக்கிகள் இன்னும் நிச்சயமாக வசூலித்து விடமுடியுமென்ற நிலையில்லாமல் இருக்கிறது. இதைப் பற்றித் தனியான ரிஜிஸ்தரும் கிடையாது. அதன் காரணமாக, அநேகம் பேர்கட்கு சரியான புள்ளிவிவரங்கள் கிடைக்காமல் பலவித கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதைப்பற்றி பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் பரிசீலனை செய்தோம், சர்க்காருக்கு சில யோசனைகள் சொல்லி இருக்கிறோம். ஆனால் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

Administration of justice அட்மினிஸ்ட்ரேஷன் ஆப் ஜஸ்டிஸ், நீதி வழங்கும் இலாகா பற்றிய விஷயத்திலே நிறைய டிபார்ட்மெண்டுகள் அநேக இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்போதுகூட எங்கள் மாவட்டத்திலே ஒரு சப்-ஜட்ஜ் நியமித்திருக்கிறார்கள். இப்படி இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் எல்லாவிடங்களிலும் எக்ஸ்பாண்ட் செய்துகொண்டு வருகிறார்கள். அநேக பிராந்தியங்களிலே இப்படி போடப்பட்டும், கேஸ்களைப் பைசல் செய்வதில் காலதாமதம் ஆகிக்கொண்டே இருக்கிறது. சில கேசுகள் 3, 4 வருஷங்கள் ஆகியும் பைசல் செய்யப்படாமல் காலதாமதமாகிக் கொண்டு வருகின்றன. அதன் காரணமாக ஜஸ்டிஸ் டிலே அதாவது ஜஸ்டிஸ் டினை செய்யப்படுகிறது. அதன் காரணமாக மக்களிடையே பெரிய அதிருப்தி ஏற்படுகிறது. இதைப்பற்றியும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



6th March 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

அடுத்து வெல் சப்சிடி ஸ்கீம், கிணற் மான்யம். இந்த ஸ்கீமுக்கு 546 லட்ச ரூபாயிலிருந்து புது பட்ஜெட்டின் 327-வது பக்கத்தைப் பார்த்தால் இத்தொகையை 74,000 ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக இனிமேல் சர்க்கார் கிணற்றுக்கு சப்சிடி கொடுக்கப் போவதில்லையா? கிணறு ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் சப்சிடி கொடுப்பதாக கனம் விவசாய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் புதுத் திட்டத்தின்கீழ் அடுத்த 1961-62 வருஷத்திற்கு இத்தொகையை இவ்வளவு குறைத்திருக்கிறார்களே, இப்படிக் குறைத்தால் உணவு உற்பத்தியானது அதிகப்படுமா என்பதை நாம் யோசிக்க வேண்டும். என்னுடைய மாவட்டத்திலே யுத்த காலத்திலே உணவு உற்பத்தியானது மிகவும் பாதிக்கப்பட்ட காரணத்தினால், யுத்தம் முடிந்தவுடன் சுமார் 10,000 கிணறுகள் தோண்டப்பட்டது. அப்போது மத்திய சர்க்கார் சப்சிடி கொடுத்ததின் காரணமாகத்தான் மக்கள் எல்லோரும் முன்வந்து நிறைய கிணறுகள் தோண்டினார்கள். அப்போது சுமார் 10,000 கிணறுகள் தோண்டியதன் காரணமாக, சுமார் 10,000 ஏக்கர் நிலங்களில் நன்செய் சாகுபடி செய்ய முடிந்தது. அதனால் உற்பத்தி பெருகிற்று. அப்படி இருக்கும்போது, திடீரென்று இத்தொகையை 74,000-ஆக குறைத்திருப்பதால், இனி சப்சிடி கொடுக்கப் போவதில்லையா? என்ன காரணத்தினால் இத்தொகை இவ்வளவு குறைக்கப்பட்டது என்பதை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கம்யூனிடி டெவலப்மெண்டைப் பற்றிப் பார்த்தால், அதிலே ஒரு கோடி ரூபாய் பே அண்ட் அலவன்சாக எஸ்டாபிளிஷ்மெண்டுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மொத்த டிமாண்ட் 502 லட்சம் ரூபாய். இது எப்படி செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைப் பற்றியெல்லாம் எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரியும். இதில் எவ்வளவு தூரம் வீண் செலவுகள் எல்லாம் செய்யப்படுகின்றன என்பதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும். அநேக இடங்களில் இந்தப் பிராந்தியங்களில் அபிவிருத்தி ஸ்கீம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வளவு நாளாகியும் ரோடுகளை போடவில்லை. ஜீப்புகள்கூட போகமுடியாத அநேக ரோடுகள் இருக்கின்றன. சில பிராந்தியங்களில் போடப்பட்டுள்ள ரோடுகள் நல்ல நிலையில் இல்லாமல் சிர்கேடான நிலைமையில் இருக்கின்றன. அங்கெல்லாம் புதிய ரோடுகள் போட வேண்டும். அதற்கும் சரிவர நடவடிக்கை எடுக்கவில்லை. தவிர, ஜில்லா போர்டுகளிலும் அநேகமான பஸ் போகும் இடங்களில் நல்ல ரோடுகள் போடப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. இதை யார் போடுவது என்று சர்க்காருக்கும், ஹைவேஸுக்கும் கரஸ்பாண்ட் செய்யப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இதில் சர்க்கார் முன்னுக்கு வந்து, இந்த பெரிய சாலைகளையெல்லாம் உடனே தாங்கள் எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். ஏதோ (maintenance) மெயின்டெனென்சுக்காக கிராண்டு கொடுக்கிறார்களே தவிர, திட்டவட்டமாக சர்க்காரே எடுத்துக் கொண்டு அதைத் துரிதமாகச் செய்வதற்கு முன்வரவில்லை. இந்த

பெரிய ரோடுகளையெல்லாம் சர்க்கார் எடுத்துக் கொண்டால்தான், சிறிய ரோடுகள் எல்லாம் பிளாக்கு டெவலெப்மெண்ட் டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். டெவலெப்மெண்ட் பிளாக்குகள் எல்லாம் எப்படியும் 1961 அக்டோபருக்குள் எடுத்து பூர்த்தி செய்யப்போவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதற்குள்ளாகவே அந்த ரோடுகளையெல்லாம் போட்டு முடிக்க வேண்டுமென்றால், சிறிய ரோடுகளையெல்லாம் பிளாக்குக்கு கொடுத்துவிட்டு, கூடிய சீக்கிரத்தில் பெரிய ரோடுகளை சர்க்கார் போடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு, சிறிய ரோடுகளையும் சீக்கிரம் போட்டு முடிப்பதற்கு பிளாக்குகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொடுத்து, இதைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, இந்தப் பஞ்சாயத்துக்களை இன்ஸ்பெக்ஷன் செய்வதற்காக ஐ.எல்.பி. நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்போது இதற்கு ஒரு டிபுடி செகரட்டரி, ஐ.எல்.பி. என்று இரண்டு பேர்கள் செக்ரடேரியேட்டிலேயே இருந்து வருகிறார்கள். முக்கியமாக முனிசிபாலிடிகளையெல்லாம் இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு இவர்களும், பஞ்சாயத்துக்களையெல்லாம் இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு பிளாக்குகளுக்கும் பொறுப்பு கொடுத்திருந்தாலும், ஐ.எல்.பி. இல்லாவிட்டால் இந்தப் பஞ்சாயத்துக்கள் எல்லாம் நல்ல முறையில் நடைபெறுமா என்பதை பரிசீலனை செய்யவேண்டும். முன்பு ஜில்லா போர்டுகள் எல்லாம் இருக்கும்போது, அவைகளை இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு ஐ.எல்.பி., கலெக்டர் ஆகியோர் இருந்தார்கள். ஆனால் இப்போது பிளாக்குகளுக்கு ஒரு டிவிஷனல் இன்ஸ்பெக்டர் போடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கும், பீ.டீ.ஓ.-வுக்கும் எப்படி உறவு என்று தெரியவில்லை. இவர் அவருக்குப் பொறுப்பா அல்லது அவர் இவருக்குப் பொறுப்பா என்று சொல்லப்படவில்லை. இந்தப் பஞ்சாயத்துக்களையெல்லாம் மேற்பார்வையிடுவது யார் என்று தெரியவில்லை. பீ.டீ.ஓ. இருந்தபோதிலும், பஞ்சாயத்துப் போர்டு தலைவர்கள் இருந்தபோதிலும், மேற்கொண்டு இவர்கட்குமேல் இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு, இந்தப் பஞ்சாயத்து ஆக்ட் பாஸ் செய்தபிறகு, திட்டவட்டமான காரியங்களை இப்படி செய்யப்போகிறோம் என்பதற்கு எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஒருசில இடங்களில் நான் கேள்விப்பட்டேன். அங்கு கொடுக்கப்பட்டுள்ள ஜீப்பை பீ.டீ.ஓ. உபயோகப்படுத்துவதா அல்லது பஞ்சாயத்து போர்டு தலைவர் உபயோகப்படுத்துவதா என்பதில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டதாம். இதற்கெல்லாம் காரணம், இந்தப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் திட்டவட்டமான விதிகள் எதுவும் செய்யப்படாததேயாகும். ஏன் இதைப்பற்றி ஒரு சட்டத்தை இந்தச் சபையில் இதுவரையில் சமர்ப்பிக்கவில்லை என்று தெரியவில்லை. இப்போது எங்கும் பஞ்சாயத்து ராஜ்யம் என்று பேசப்படுகிறது. ஆனால் பஞ்சாயத்து ராஜ்யம் அமைக்கப்பட்டு, அதை நடத்தும்





விதத்தைப் பார்த்தால் பல இடங்களில் சங்கடமான நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு தனிப்பட்ட இன்ஸ்பெக்ஷன் அதிகாரி இருக்கவேண்டும். கலெக்டர்களை மட்டில் நம்பிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. கலெக்டர்களுக்கு பலவித வேலைகள் இருப்பதால், இவைகளைக் கவனிக்க முடியாது. ஆகவே அவசியம் ஒரு இன்ஸ்பெக்ஷன் அதிகாரியை இதற்கு நியமித்து, பஞ்சாயத்து நல்லமுறையில் நடக்க திட்டவட்டமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவைப் பொறுத்தவரையில் பார்த்தால், எங்கும் கூட்டுறவு பண்ணை (Farming ) பற்றி பேசிக்கொண்டு வருகிறோம். இப்படி பேசிக்கொண்டு வருகின்ற அதே நேரத்திலே, உடனடியாக உச்சவரம்பு ( ceiling ) கொண்டு வரவேண்டுமென்றும் பேசிக்கொண்டு இருக்கிறோம். கூட்டுறவு ஸ்தாபனமானது நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆனால் அதிலே அரசியலைக் கொண்டு வந்து புகுத்தி விடுகிறோம். இம்மாதிரி புகுத்துவதன் காரணமாக சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மூன்று நான்கு தினங்களுக்கு முன்பு நான் படித்தேன். ஒரு இடத்தில் நம்முடைய ரிசர்வ் பாங்கு கவர்னர் ஸ்ரீ எச். வி. ஆர். அய்யங்கார்,

, "It is not in the country's interest that political parties should intrude into the business of Co-operation. I have heard of elections in some Co-operative Banks and Societies being fought on party lines. Nothing can be more fatal to the co-operative spirit than political partisanship." என்று பேசி இருக்கிறார்கள்.

இப்பொழுது என்ன நடக்கிறது என்றால், எல்லாம் அரசியல் காரணத்தினால் இவைகளெல்லாம் நடந்துகொண்டே போகிறது. சமீபத்திலே எங்களுடைய மாவட்டத்தில் ஒரு பாங்கு பிரஸிடெண்டு எலெக்ஷன் நடந்தது. அதில் பார்த்தால் அரசியலை உள்ளே கொண்டுவந்து புகுத்தி, அநேக கார்கள், ஜீப்கள் எல்லாம் வேலை செய்து ஏதோ ஒருவிதமாக நடந்தது. எதைப்பற்றி சொல்லுகிறேன் என்றால், கூட்டுறவு ஸ்தாபனம் நல்ல முறையில் இயங்கவேண்டுமென்றால், அரசியலை கொஞ்சம் அப்புறப்படுத்தி வைக்கவேண்டும். தவிர, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு கூட்டுறவு ஸ்தாபனம் வழி செய்யாது என்பதை திட்டவட்டமாக சொல்லிக்கொள்ளுகிறேன். புள்ளி விவரங்களைப் பார்க்கும்பொழுது ஜப்பானில் ஒரு ஏக்கருக்கு 3,750 பவுண்டு நெல் விளைகிறது. அமெரிக்காவில் 3,000 பவுண்டு நெல் விளைகிறது. இந்தியாவில் ஒரு ஏக்கருக்கு 600 பவுண்டு தான் சராசரி விளைகிறது. உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு தனியார் துறையில் அவர்களுக்கு உற்சாகம் கொடுத்து, முக்கியமாக 'இர்ரிகேஷன் பெஸிலிடீஸ்' நீர்பாசன வசதிகள் வேண்டிய 'பெர்டிலைஸர்ஸ்' ரசாயன உரம் ஆகியவைகளெல்லாம் வேண்டியபடி டயத்தில் கொடுத்தால் தான் உணவு உற்பத்தியை நல்ல விதமாக பெருக்குவதற்கு

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [6th March 1961

இயலும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீப காலத்திலே ஒரு சில மாதங்களுக்கு முன்பு மத்திய சர்க்கார் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "உணவு அமைச்சர்களை மட்டும் நீங்கள் நம்பி இருப்பதில் பிரயோசனம் இல்லை. உணவு அமைச்சர்களால் தான் தங்கு தடைகள் இருக்கிறது என்று நீங்கள் நினைக்கக் கூடாது. மற்ற அமைச்சர்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். ஒவ்வொரு டிபார்ட்மெண்டிற்கும் 'கோவார்டினேஷன்' இருக்க வேண்டும். இப்பொழுது 'கோவார்டினேஷன்' போதுமானதாக இல்லை" என்று சொல்லியிருக்கிறார். அப்பொழுது அமைச்சர் அவர் சொல்லியிருக்கிறார் :

"The Ministry of Irrigation and Power is responsible for utilising the water potential, Community Development for food production, Commerce and Industry for more fertilisers, the Health ministry for controlling increase in population, the Railways for transporting staffs and finally, the State Governments for the execution of the works and policies concerning the Food Ministry."

ஆகையால் எல்லா டிபார்ட்மெண்டுகளும் ஒத்துழைக்கவேண்டும். ஒரு டிபார்ட்மெண்டிற்கும் மற்றொரு டிபார்ட்மெண்டிற்கும் சில டயத்தில் 'கோவார்டினேஷன்' (co-ordination) கிடையாது. இப்பொழுது எவ்வளவோ செய்திருக்கிறோம். விதைகளெல்லாம் கொடுப்பதற்காக ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். அப்படிச் செய்திருந்தும் சில விதைப் பண்ணைகள் நல்ல முறையில் இயங்கவில்லை. முன்பு நல்ல விதைப் பண்ணைகள் எடுக்கப்படவில்லை. ஆனால் இப்பொழுது அவைகளெல்லாம் பரிசீலனை செய்து மறுபடியும் விதைப் பண்ணைகளை எடுக்கும்பொழுது நல்ல பிராந்தியங்களில் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய இடத்திலே எடுக்க வேண்டும் என்று திட்டவட்டமாக ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அதுபற்றி பாராட்டுகிறேன். அதற்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும். முக்கியமான 'கிரீன் மென்யூர் விதைகள்' நான் ஒரு வாரத்திற்கு முன்பு கேட்டேன். விதைகள் இல்லை என்று சொன்னார்கள். இப்பொழுதுதான் 'மென்யூர் ஸீட்ஸ்' பசுந்தாள் விதை (manure seeds) எல்லாம் விதைக்கவேண்டும். எப்பொழுது கொடுப்பது. இவைகளையெல்லாம் முன்னிட்டே தேவைப்படும்பொழுது உடனுக்குடன் கொடுக்காத காரணத்தினால் சில பிராந்தியங்களில் விவசாயிகளுக்கு உற்சாகம் குன்றிவிடுகிறது. விவசாயத்திற்கு 'டாப் பிரையாரிடி' (top priority) முதல் இடம்) கொடுக்கவேண்டும், அவர்களுக்கு வேண்டிய உதவிகளை உடனுக்குடன் கொடுப்பதற்கு சர்க்கார் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விதைப்பண்ணைகள் பற்றி மிகவும் சிந்திக்க வேண்டிய சமாசாரம். விதைப்பண்ணைகளை பஞ்சாயத்துக்களுக்குக் கீழே விடப்போவதாகக் கேள்விப்படுகிறேன். பஞ்சாயத்துக்களுக்குக் கீழே இந்த விதைப்பண்ணைகள் இயங்கினால் அவைகள் உருப்படுமா? இது ஒரு முக்கியமான சமாசாரம். இதைப்பற்றி நன்றாக



6th March 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயப் பண்ணைகள் விவசாய டிபார்ட்மெண்டின்கீழ் நிறுவப்படுவதுதான் நலமே ஒழிய, பஞ்சாயத்து யூனியன்கள் இதை சூபர்வைஸ் செய்து விதைகள் கொடுப்பதைவிட, விதைகள் கொடுக்காமல் இருப்பதே நல்லது. இது மிகவும் கவனிக்க வேண்டிய விஷயம். பழையபடியே விதைப்பண்ணைகள் விவசாய டிபார்ட்மெண்டின் கீழ் கண்ணும் கருத்துமாக கவனிக்கப்படுவதுதான் நல்லது .....

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கிறது என்றால் சாதாரணமாக கிராமங்களில் இருக்கிற விதைப்பண்ணைகளைதான் பஞ்சாயத்துக்களின் பொறுப்பின்கீழ் விடலாம் என்று யோசனை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR அப்படியானால் சரி. பஞ்சாயத்துகளுக்கு விதைப்பண்ணைகளை கொடுப்பது என்றால், அதனால் என்ன கெடுதல் ஏற்படுமோ என்று கொஞ்சம் பயந்துவிட்டேன். அம்மாதிரி இல்லாமல் இருப்பதைப் பற்றி சந்தோஷம்.

கடைசியாக நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், விவசாயிகள் பலவிதமாக கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் டயத்தில் செய்துகொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாம் எவ்வளவு தூரம் பலவிதங்களில் முன்னேறிவந்தாலும்கூட, சிறு கைத்தொழில்களிலும் நாம் முன்னேறவேண்டும். அதற்கு வேண்டிய வழிகளையெல்லாம் செய்யவேண்டும். எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு நாம் சிறு சேமிப்பு மூலம் நிதி சேர்த்தாலும் சரி, நம்முடைய பிராந்தியத்திற்கு போதுமான நிதி உதவி மத்திய சர்க்கார் கொடுக்காமல் இருப்பதுபற்றி நான் வருந்துகிறேன். நம் ராஜ்யம் முன்னேறவேண்டுமானால் முக்கியமாக பெரிய தொழிற்சாலைகளெல்லாம் ஏற்படவேண்டும். அதற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை. கோஸ்டல் ரோடு (Coastal Foad) போடுவதற்கு நமக்கு வேண்டிய உதவிகள் செய்து கொடுக்கவில்லை. 'எலெக்டிரிஸிடி எக்ஸ்பான்ஷன்' (மின்சார விஸ்தரிப்பு) நாமே செய்து கொண்டோமே ஒழிய, அதற்கு வேண்டிய உதவியை மத்திய சர்க்கார் நமக்குக் கொடுக்கவில்லை. தவிர, கன ரகத் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கும், துறைமுகங்களையெல்லாம் அபிவிருத்தி செய்வதற்கும் வேண்டிய வசதிகளையெல்லாம் செய்யாத காரணத்தினாலே, மற்ற மாகாணங்களுக்கும் நம்முடைய மாகாணத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. வாழ்க்கைத்தரம் குறைந்துகொண்டு போகிறதே ஒழிய, வாழ்க்கைத்தரம் அதிகமாக உயரவில்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டே போவதில் பிரயோசனம் இல்லை. கண்டிப்பாக திட்டவட்டமாக நான் சொன்ன யோசனைகளை நன்றாக எடுத்துக்கொண்டு பொருளாதாரத் துறையில் நம்முடைய பிராந்தியம் முன்னேறுவதற்கு

எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்யவேண்டும். இல்லாவிட்டால் நிலைமை உங்களுக்கு பெரிய கஷ்டத்தைத்தான் விளைவிக்கும். நீங்கள் கண்ணும் கருத்துமாக இருந்து உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** இன்னும் 190 நிமிஷங்கள் பாக்கி இருக்கிறது. பத்தொன்பது அங்கத்தினர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒரு அங்கத்தினருக்கு 10 நிமிஷம் வீதம் கணக்கு சரியாக இருக்கிறது. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பேசுவதற்கு 10 நிமிஷங்கள் ஒதுக்கி வைத்திருக்கிறேன். மணி அடித்ததும் தயவுசெய்து அங்கத்தினர்கள் உட்கார வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **Sri A. S. DORAISWAMI REDDIAR :** அன்பார்ந்த சபா நாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் 'ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை' என்று எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டம் தமிழில் ரொம்பவும் அழகாகவும், சுலபமாக குழந்தைகள்கூட அறிந்துகொள்ளும்படியான எளிய தமிழ் நடையிலே அமைந்திருக்கிறது. (இந்த சமயத்தில் ஸ்ரீ எஸ். எம். அண்ணாமலை தலைமை வகித்தார்.) நான்கு வருஷ காலமாக யாதொரு வரியும் போடாமல் வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதோடுகூட சென்ற வரவு செலவுத் திட்டத்திலே சம்பளக் கமிஷன் சிபார்சை ஒட்டி உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதற்கு நிதி ஒதுக்காமல் இருந்தபோதிலும்கூட, இந்த பட்ஜெட் திட்டத்தில் அதிகம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்கள் இம்மாதிரி பட்ஜெட் சமர்ப்பித்ததற்காக அவரை நாம் வாயாரப் புகழவேண்டும். நமது நிதி அமைச்சர் அவர்கள் நமது மாநிலத்திலேயே இருந்து 4 வருஷங்களுக்கு பட்ஜெட் சமர்ப்பித்ததில் யாதொரு புதிய வரியையும் போடாமல் இருப்பதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சந்தோஷப்பட்டாலும், அடுத்த தேர்தல் ஆனவுடனேயே வரி போடுவார் என்று இப்பொழுதே சொல்லுகிறார்கள். தேர்தலுக்காகத்தான் வரிபோடவில்லை என்று சொல்லுகிறாரே? நான்கு வருஷமாக போடவில்லையே? அப்படியிருக்கும் பொழுது இந்த வருஷம் மாத்திரம் தேர்தலுக்காக வரி போடவில்லை என்று எப்படி சொல்லுகிறார் என்று தெரியவில்லை.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** இவர்கள் போடாவிட்டால் அவர்கள் மத்திய சர்க்கார் போடுகிறார்களே?

**Sri A. S. DORAISWAMI REDDIAR :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பார்லிமெண்டிற்குப் போனால் அங்கு வரி போடக்கூடாது என்று சொல்லலாம். இப்பொழுது நம் மாநிலத்





தைப்பற்றி சொல்லுகிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நம்முடைய மாநிலத்தில் வரி இல்லாமல் பட்ஜெட் சமர்ப்பித்திருப்பது பற்றி சந்தோஷப்படுகிறேன். மத்திய சர்க்காருக்கு அவர்கள் போகப்போகிறார் என்று நான் கேள்விப்படுகிறேன். (சிரிப்பு). அவர்கள் மத்திய சர்க்காருக்கு போகக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். முதல் அமைச்சர் அவர்களையும் அவரை விடாமல் இங்கேயே வைத்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** அங்கு போனாலும் நமக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் கொடுப்பார்.

**Sri A. S. DORAISWAMI REDDIAR :** உதவிகள் செய்வார். ஆனாலும் அவர் இங்கேயே இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தமிழரசுக் கழகம் தமிழுக்காக ரொம்பவும் கஷ்டப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். தமிழரசுக் கழகத்திற்கு இருக்கும் ஆர்வத்தைவிட நிதி அமைச்சருக்கு தமிழில் ஆர்வம் அதிகம். கேள்விப்பட்டியலில் தமிழ்நாடு சட்டசபை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழிலே அவருக்கு ரொம்ப ஆர்வம் இருப்பதினால் கோவைக் கம்பரை 'கவர்ண்மெண்டு விப்பாக' நியமித்திருக்கிறார்கள். அவருக்கு தமிழில் அவ்வளவு ஆர்வம் இருக்கிறது. விலை ஏறுகிறது, விலை ஏறுகிறது என்று சொல்லுகிறார்களே? விலை ஏறுவது இயற்கை. விலை ஏறுகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்களே தவிர, அதைத் தடுக்க என்ன செய்வது என்று பரிகாரம் சொல்லவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் விலைவாசிகள் உயர்ந்து போய்விட்டன என்று சொல்லுகிறார். இப்பொழுது ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு விற்கிறது. இதே எட்டணாவுக்கு விற்றால் அவரே கூச்சல் போடுவார். விலை ஏறுவது இயற்கை. மார்க்கெட்டிலே சரக்கு வந்தால் விலை தானாகவே இறங்கும். நான் சின்னப் பையனாக இருக்கும் பொழுது, அதாவது 10 அல்லது 15 வயது வரையிலே க்ஷவரத்திற்கு அரை அணாத்தான் கொடுத்து வந்தேன். (சிரிப்பு). இப்பொழுது கிராப் செய்வதற்கு 8 அணா கொடுக்கவேண்டியிருக்கிறது. இன்னும் சில இடங்களில் 2 ரூபாய் வரை கொடுக்கவேண்டியிருக்கிறது. மேல் நாடுகளுக்குச் சென்று வந்த நிதி அமைச்சர் அவர்கள் 15 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அந்த நாட்டுக்கும் நம் நாட்டுக்கும் எவ்வளவு ஏற்றத்தாழ்வு பாருங்கள். ஆகையால் விலை ஏறுவதும் இறங்குவதும் இயற்கையே. விலை ஏறிப்போச்சு, விலை ஏறிப்போச்சு என்று சொன்னால் மாத்திரம் போதாது. விலைவாசியைக் குறைப்பதற்கு தக்க யோசனைகள் சொல்லவேண்டும்.

அடுத்தபடியாக, கல்விக்காக நமது நிதி அமைச்சர் எவ்வளவோ செய்திருக்கிறார். இந்தியாவிலேயே கல்வித் துறையில் நமது மாகாணம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் நமது கல்வி டைரக்டருக்கு "பத்மஸ்ரீ" பட்டம் வழங்கியிருக்கிறார்கள். ஏழைப் பிள்ளை

களுக்கு மதிய உணவுக்காக சென்ற ஆண்டு 84 லட்சம் ரூபாய் வரை செலவு செய்திருக்கிறோம். அதற்காக இப்பொழுது 135 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் தாழ்த்தப் பட்டவர்களுக்கு கல்விச் சலுகை கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது பொருளாதார அடிப்படையில் எல்லா ஏழை மாணவருக்கும் கல்விச் சலுகை அளிப்பதற்கு திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோல, வியாபாரிகள் சம்பந்தப்பட்ட வரையில் ரூ. 10,000 முதல் 25,000 வரை கணக்கு வைக்காமல் உத்தேசமாக வரி செலுத்தக்கூடிய சலுகை இருந்தது. இப்பொழுது ஆண்டு விற்பனை 50,000 ரூபாய் வரை உள்ளவர்களுக்கும் இச் சலுகையை வழங்கியிருக்கிறார்கள். இந்தச் சலுகையை எல்லா வியாபாரிகளும் போற்றுகிறார்கள்.

இந்த வரவு செலவுத் திட்டம் உண்மையிலேயே நல்ல முறையில் அமைந்திருக்கிறது. அப்படியிருந்தும் இதிலே ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்? வரவு செலவுத் திட்டத்திலே என்ன இருக்கும்? சினிமாவா இருக்கும்? அல்லது நாவலா இருக்கும் ? (சிரிப்பு) வரவு செலவுத் திட்ட விளக்க நூல் ஒன்றும் கொடுத்திருக்கிறார்கள். நான் அதை இரண்டு தடவை படித்தேன். வரவு செலவுத் திட்டம் என்றால் என்ன, அதை எப்படிப் படிக்கவேண்டும் என்றெல்லாம் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். நல்ல நல்ல திட்டங்களை எல்லாம் சேர்த்திருக்கிறார்கள் சென்ற வருஷத்திலே என்னென்ன செய்தோம், இந்த வருஷத்திலே என்னென்ன செய்யப்போகிறோம் என்பதைப் பற்றி மிகவும் அழகாக இந்த பட்ஜெட்டிலே எழுதியிருக்கிறார்கள். இதை நாம் எல்லோரும் போற்றவேண்டும். ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனே இதைப் போற்றும் வகையில் அமைந்திருக்கிறது. இதை எல்லாம் விட்டு விட்டு, ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று சொன்னால், பட்ஜெட்டிலே என்ன இருக்கவேண்டும் என்று நான் கேட்கிறேன். இப்படிச் சொல்லிக் கொண்டேயிருந்தால் கடைசியில் ஒன்றுமில்லாமலே போய்விடும். புதிய வரி போடாமலேயே திட்டத்தை தயாரித்திருக்கிறார் நமது நிதி அமைச்சர்.

நாடு செழிமை அடையவில்லை என்று சொல்லுகிறார்கள். என்னுடைய செங்கற்பட்டு ஜில்லாவுக்கு வந்து பார்த்தால், அது எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பது நன்கு தெரியும். அங்கே என்ன தொழில் இல்லை. திருகாணியிலிருந்து மோட்டார் கார் வரை திருவொற்றியூரிலே செய்கிறார்கள். நேஷனல் கார்பன் கம்பெனி இருக்கிறது, வெஸ்ட் இந்தியா மாச் பாக்டரி இருக்கிறது, சௌத் இந்தியா கம்பெனி இருக்கிறது, கார்பொரண்டம் யுனிவர்சல் இருக்கிறது, இன்னும் எத்தனையோ கம்பெனிகள் இருக்கின்றன. நான் என் கையில் எங்கள் ஜில்லாவிலுள்ள கம்பெனிகளை எல்லாம் குறித்து வைத்திருக்கிறேன். ஆனால் 10 நிமிஷத்திற்குள் இதை எல்லாம் படித்துச் சொல்ல முடியாது. எங்கள் ஜில்லாவிலே மூன்று டெக்ஸ்டைல் மில்கள் இருக்கின்றன. கரும்பு ஆலை இருக்கிறது.



**Sri A. V. P. ASAITHAMBI**: காங்கிரஸ் கமிட்டி தலைவர்கூட உங்கள் ஜில்லாவில்தான் இருக்கிறார். (சிரிப்பு).

**Sri A. S. DORAISWAMI REDDIAR**: காங்கிரஸ் கமிட்டி தலைவர் என்ன, மந்திரி பக்தவத்சலம்கூட எங்கள் ஜில்லாவைச் சேர்ந்தவர்தான். அவர் எல்லா காபினெட்டுகளிலும் மந்திரியாக இருந்து வந்திருக்கிறார். அவர் திறமைசாலி. நல்ல ராஜ தந்திரி. ஆலோசனை சொல்லுவதில் மிகவும் கெட்டிக்காரர். அவரைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள். (சிரிப்பு) நிதி மந்திரியும் இருக்கிறார். ஏன் அவர்கள் எல்லோரும் நிரந்தரமாய் இருக்கக் கூடாது? எங்கள் ஜில்லாவில் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ ஆளகேசன் இருக்கிறார். அவர் வந்த பிறகு காங்கிரஸ் கட்சி பலப்பட்டிருக்கிறது. இதை எல்லாம் பார்த்து பொறாமைப் படுவதில் பிரயோஜனம் இல்லை.

நான் சென்ற 4 வருஷங்களாக இந்த சபையில் இருக்கிறேன். 1957-க்கும் 1961-க்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. நான் 8-வது மைலிலிருந்து வருகிறேன். இப்பொழுது வருகிற வழியிலே பார்த்தால் முன்பு பொட்டைக் காடாக இருந்த இடத்திலெல்லாம் அழகான கட்டிடங்கள் வானளாவ கட்டப்பட்டிருக்கின்றன. பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டி இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ஒரு கிராமத்தை சர்க்கார் எடுத்துக் கொண்டு அங்கே கனரகத் தொழில் பயிற்சிக்கூடம் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ரெயில்வே கோச் பாக்டரி இருக்கிறது. பின்னி கம்பெனி இருக்கிறது. சென்ற நாலு வருஷத்திலே பார்த்தால் எத்தனையோ பிரம்மாண்டமான தொழிற்சாலைகள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று இங்கேயே உட்கார்ந்துகொண்டு சொல்லுவதில் என்ன அர்த்தமிருக்கிறது. நேரில் எங்கள் ஜில்லாவுக்கு வந்து எல்லோரும் பார்க்கட்டும். என் தொகுதியிலே பள்ளிக்கூடம் இல்லாத கிராமமே கிடையாது. மின்சாரம் இல்லாத கிராமமே கிடையாது. பஞ்சாயத்து இல்லாத கிராமமே கிடையாது. குடிதண்ணீர் இல்லாத கிராமமே கிடையாது. எனக்கு இப்பொழுது 66 வயது ஆகிறது. 1957-ல் என்னுடைய தொகுதிக்குப் போய் பார்த்திருக்கிறேன். இப்பொழுது அங்கே போய்ப் பார்த்தால் "இந்த கிராமம் தான் முன்னால் இருந்ததா" என்று சொல்லக்கூடிய அளவுக்கு எவ்வளவோ மாறிப் போயிருக்கிறது. அடையாளமே தெரியவில்லை. அவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

சைதாப்பேட்டையிலிருந்து சென்னை வரையில் ஏதாவது காலியாக இருக்கிறதா? சர்க்கார் 5 தாசில்தார்களைப் போட்டு நிலங்களை தொழிற்சாலை நிறுவுவதற்காக வாங்கிக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். புதிய புதிய தொழில்களை ஏற்படுத்துவதற்காக என்னவெல்லாமோ செய்து வருகிறார்கள். கிண்டியிலே ஒரு தொழிற்பேட்டை இருப்பதுபோல் தனியார் துறையிலே திருவொற்றியூரிலும் செய்யப்

போகிறார்கள். என்னுடைய தொகுதியிலே பள்ளிக்காணி கிராமத்திலே 2,000 ஏக்கர் நிலமிருக்கிறது. இது சும்மாக் கிடக்கிறது. ஏற்கெனவே ஒரு ஸ்கீம் போட்டார்கள். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. இந்த 2,000 ஏக்கர் நிலத்தையும் சர்க்காரே வாங்கி நல்ல தொழில்களுக்கு உபயோகம் செய்தால் நலமாக இருக்கும். ஆகவே அதைச் செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்துக்குப் பக்கத்தில் 5 கோடி ரூபாய் செலவில் சர்க்கார் இரண்டு புதிய நகரங்களை விஸ்தரிக்கப் போகிறார்கள். ஏற்கெனவே சென்னையைச் சுற்றி சில நகரங்கள் இருக்கின்றன. இவைகளுக்கு குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதியில்லை. ஐந்து கோடி ரூபாய் செலவு செய்து புதிதாக இரண்டு நகரங்கள் நிர்மாணிப்பதற்கு முந்தி இருக்கிற இடங்களுக்கு குடி தண்ணீர் வசதி, சுகாதார வசதி செய்து கொடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிறகு புது நகரங்கள் ஏற்படுத்துவது நலம்.

எங்கள் ஜில்லா தலைநகரத்திலே ஒரு தலைமை ஆபீஸு ஒன்றும் கிடையாது. காஞ்சிபுரத்தை ஜில்லா தலைநகரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இச்சமயத்தில் மணி அடிக்கப்பட்டது.)

* **Sri S. SADASIVAM** : மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த நிதி நிலை அறிக்கையின்மீது ஒருசில வார்த்தைகள் பேச எனக்கு அனுமதி கொடுத்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த மூன்று நாட்களாக இங்கே நடக்கும் இந்த விவாதத்தில் கலந்துகொண்ட பெரும் பகுதியான என் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்றும், எதிர்க் கட்சித் தோழர்கள் இந்த நிதி நிலை அறிக்கையானது ஒரு தேர்தல் பிரசார அறிக்கை என்ற அடிப்படையில் பேசியிருப்பதைக் கண்டு அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் ஏனென்றால் என்போன்ற ஊழியர்களும், என்னைச் சேர்ந்த ஆளும் கட்சியும், இந்த அமைச்சரவையும் இந்தத் தேர்தலை எந்த முறையிலே நடத்தவேண்டுமென்ற அடிப்படையிலே ஒரு நல்ல அபிப்பிராயத்தை மக்களுக்கு எடுத்துக்காட்டி இந்த மன்றத்திலே பேசினதை நான் வரவேற்கிறேன். வல்லரசுகள் என்று சொல்லக் கூடிய பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலே தேர்தல் நடந்ததை நாம் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறோம். அங்கே தேர்தல் நடக்கும்பொழுது ஆளும் கட்சியினர் தங்களுடைய ஆட்சி காலத்திலே தாங்கள் என்னென்ன திட்டங்களை செய்து முடித்திருக்கிறார்கள், என்னென்ன திட்டங்களைச் செய்யப் போகிறார்கள் என்று மக்களுக்கு எடுத்து உரைக்கிறார்கள். அம் மாதிரி நல்லதொரு வாய்ப்பை நாமும் பெற்றிருக்கிறோம் என்பதை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இம்மன்றத்தில் எடுத்துரைத்திருக்



கிறார்கள் என்பதைக்கண்டு மகிழ்கிறேன். ஆகவே அந்த முறையில் தேர்தலை நடத்த வேண்டியதுதான். அதேபோல் எதிர்கட்சியினரும் தங்களுடைய திட்டங்களை மக்களிடத்தில் வைத்து தேர்தல் பிரசாரம் செய்வதுதான் நல்லமுறை. மக்களிடத்தில் சொல்வதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எல்லாக் கட்சியினரும் தேர்தல் 10 a.m.
காலங்களில் தங்களுடைய திட்டத்தை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி, வெற்றி பெறவேண்டும் என்பதுதான் என் அவா. அந்த முறையிலேயே எல்லோரும் தேர்தலை வெற்றிகரமாக நடத்துவதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த அறிக்கையில் நல்ல இரண்டு அம்சங்களை கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஒன்று 11-ஆவது வகுப்பு அதாவது எஸ்.எஸ்.எல்.சி. வரையில் ஏழை மாணவர்களுக்கு இலவச கல்வி அளிக்கப்படும் என்பது. அது மிக மிக வரவேற்கக் கூடியதுதான். அதே போன்று கணக்குகளை சரியாக வைத்துக் கொள்ள முடியாத வியாபாரிகளுக்கு, அதாவது 25 ஆயிரம் ரூபாய் வரையில் இது வரையில் கணக்கு இல்லாதவர்களுக்கு சலுகை காட்டப்பட்டு வந்ததை இப்பொழுது 50 ஆயிரம் ரூபாய் வரையில் வியாபாரம் செய்கிறவர்கள் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டாம் என்று சொல்லி இருப்பது மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் விவசாயத்திற்கு பெரும் பங்கு கொடுத்திருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தைக் காட்டிலும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் தொழில் துறைக்கு இந்த ஆண்டில் அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கக்கூடிய ஒரு அம்சமாகும். விவசாயத் துறையில் முன்னேற்றம் காண பல புதிய திட்டங்கள் அமைக்கப் பட்டிருந்தும் இந்த ஆண்டில் மூன்று வித முக்கியமான அம்சங்களை எடுத்து நிறைவேற்றுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் முக்கியமானது பரம்பிக்குள திட்டம். இந்தத் திட்டம் இதில் அமைந்திருப்பதைக் கண்டு வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. ஏனென்றால் இந்த திட்டத்தினால் சுமார் 2-½ லட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படப் போவதைக் கண்டு அதை வரவேற்காமல் இருக்க முடியாது. வரப் போகிற மூன்றாவது திட்ட காலத்தில் போதிய நிதி இருக்குமோ இருக்காதோ என்று நினைக்கும்படியாக இருந்தது. அதனால் மத்திய தர நீர்ப்பாசன திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியுமோ முடியாதோ என்று இருந்ததை கவர்னர் உரையிலும் இந்த உரையிலும் அதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ் நிலை வந்திருப்பதைக் கண்டு நான் வரவேற்கிறேன். இன்னும் நடுத்தர பாசனங்கள் இருக்கின்றன. அவைகளை எடுத்துக் கொள்வதற்கு ஒரு உறுதியான அமைப்பை எடுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் மத்திய 'அரசாங்க

திட்ட அமைச்சர் அவர்களை கலந்து முடிவு செய்து நல்ல முறையில் அமைந்துள்ள திட்டங்களை எடுத்து நிறை வேற்றுவதற்கு என்று நமது முதல் அமைச்சர் அடங்கிய ஒரு நிரந்தரக் குழுவை அமைத்து திட்டங்களை சரிவர நிறைவேற்றுவதற்கு என்று எடுத்துக்கொண்ட நடவடிக்கை ரொம்பவும் வரவேற்கக்கூடிய அம்சமாகும். அந்த வகையில் என் பகுதியில் மூன்றாவது ஐந்தாட்டுத் திட்ட காலத்தில் பல திட்டங்களை எடுத்து நிறைவேற்றப்படும் என்று கருதுகிறேன். அந்த முறையில் இஞ்சினியரிங் இலாகாவினரால் மிகச் சிறந்த திட்டம் எனக்கருதும் எங்கள் தொகுதியிலுள்ள நொய்யல், குடகனாறு போன்ற திட்டங்களை எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் இருக்கின்றன. அவைகளுக்கு அதிகப்படியான தொகை ஒதுக்காமல் இருப்பதால் அவைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அந்த திட்டங்கள் எல்லாம் தடைப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் எடுத்து நிறைவேற்ற வேண்டும்.

தற்போது பல கிணறுகளை வெட்டக்கூடிய திட்டம் இருக்கின்றன. கிணறுகளை அதிகமாக உபயோகப்படுத்தினால் அதிலுள்ள நீர் ஊற்று குறைந்து போய் விடுகிறது என்று சொல்லப்படுகிறது அப்படிக் குறையும் நீர் மட்டத்தை ஆழத்தில் இருந்து எடுக்க குழாய் கிணறு திட்டங்களை அமைக்கப்போவதாகக் கேள்விப்பட்டேன். அதை நான் ரொம்பவும் வரவேற்கிறேன். அது சம்பந்தமாக நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிணற்றிலுள்ள ஊற்று நீர் கீழே போகாமல் இருக்க அமைச்சர் அவை திட்டமிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது, அத்துடன் நானும் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதிகப்படியாக குளங்கள் இல்லாத இடங்களில் இப்பொழுது கிணறுகளை வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி கிணறுகள் வெட்டப்படும் இடங்களில் குளங்கள் இல்லாத காரணத்தால் மழை பெய்யக்கூடிய காலத்தில் ஆற்றில் வரக்கூடிய தண்ணீர் எல்லாம் சின்ன ஓடைகள் வழியாக ஆறுகளில் கலந்து கடலில் போய் விழுகின்றன. அதனால் தண்ணீர் தேக்கம் இல்லாமல் அடி மட்ட ஊற்று வரண்டு போய் விடுகின்றன. ஆகவே அந்த முறையில் மழைத் தண்ணீரெல்லாம் கடலில் போய் விழாதபடி அவைகளை தேக்கி வைத்துக்கொள்வதற்கு, சிறு சிறு அணைகளைக் கட்டி வைத்துக்கொண்டால் அதற்கு "செக் பண்ட்ஸ்" என்றுகூட சொல்வார்கள், தண்ணீர் அங்கே தேங்கி நின்று கிணற்று ஊற்றுத் தண்ணீர் ரொம்பவும் கீழே போகாமல் மேல் மட்டத்திலேயே இருக்கும். இப்படியே கோயம்பத்தூரில் பல இடங்களில் அமைத்திருக்கிறார்கள். இந்த திட்டத்தை பொது மராமத்து இலாகா எடுத்துக்கொண்டு நிறைவேற்ற முடியாது என்று கருதினால் அரசாங்கத்தை இந்த திட்டத்தை எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று வரண்ட பிரதேசங்களில் குழாய்க் கிணறுகளை அமைத்து வருகிறார்கள் அப்படியே என் தொகுதி போன்ற எல்லா வரண்ட





பிரதேசங்களிலும் அதிகப்படியான குழாய்க் கிணறுகளை அமைக்க வேண்டிய வழிவகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கால்நடை சம்பந்தமாக பேசும்போது விவசாயிகளுக்கு பெரும் உருத்துணையாக இருக்கக்கூடியது கால்நடை. கால்நடை வளர்ப்பில் நமது அரசாங்கம் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வெற்றி கண்டிருக்கிறார்கள். பல சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். இரண்டாவது திட்ட காலத்தில் 39 செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த நிலையங்களில் பயனைப்பற்றி அந்தப் பகுதியிலிருந்து வரக்கூடிய மக்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். அவர்கள்தான் இவைகளைப்பற்றி நன்றாக உணர முடியும். வேறு யாரும் அந்த அளவில் உணர முடியாது. இந்த நிலையங்கள் விவசாயத்திற்கு ஒரு நல்ல உருத்துணையாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையங்களுக்கு அங்கங்கே கட்டிடங்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. இவைகளுக்கும் கால்நடை ஆஸ்பத்திரிகளுக்கும் அரசாங்கம் வாடகைக் கட்டிடத்தைதான் அமைத்திருக்கிறார்கள். அவைகளுக்கு எல்லாம் அரசாங்கம் சொந்தக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்தால் எவ்வளவோ நலமாக இருக்கும். வாடகைக் கொடுக்கக் கூடிய பணத்தை வைத்துக்கொண்டே சொந்தக் கட்டிடமாக கட்டிக் கொள்ளலாம். ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் கொஞ்சம் யோசனை செய்து அவைகளுக்கு எல்லாம் சொந்தக் கட்டிடம் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு அந்தப் பகுதியிலுள்ள மக்கள் ஒரு பங்கு பணம் கொடுக்கக்கூட தயாராக இருக்கிறார்கள். ஆகவே அவர்களிடமிருந்து அதிகப்படியான தொகை வாங்காமல் குறைவாக தொகை வாங்கி, அரசாங்கமே அதிகப்படியாக தொகை ஒதுக்கி அந்த ஆஸ்பத்திரிகளுக்கு சொந்தக் கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதிக நேரம் பேசுவதற்கு இல்லாததால் இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRI M. KARUNANITHI :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1961-62-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை இங்கே கூறுவதற்கு விரும்பி நிற்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையினுடைய துவக்கத்தில் "தமிழ் நாடு சட்ட மன்றம்" என்று குறிப்பிட்டிருப்பதை மிகவும் பெருமையுடன் அந்த அறிக்கையை முதலில் வாசித்த கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையின் ஆங்கில மொழி பெயர்ப்பு எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை பிரிக்கிற நேரத்தில் அதைக் கண்டு நாம் அகமகிழ்வதற்கு வழி இல்லை. அது வேதனையைத் தருவதாக இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். "தமிழ் நாடு சட்ட மன்றம்" என்று அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவது என்பது அரைக் கிணறு தாண்டிய அளவில்

ஏற்பட்ட மகிழ்ச்சிதான் என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. நல்ல மொழியில் எழுதக்கூடிய நல்ல வல்லமை பெற்ற வல்லுனர், அறிஞர் டாக்டர் ஜெபர்ஸன் அவர்கள் இதைப்பற்றி வெகு அழகாக குறிப்பிட்டிருக்கிறார். ஒரு ஊரின் பெயரையோ அல்லது நாட்டின் பெயரையோ தலை நகரத்தின் பெயரையோ மாற்றுவது என்பது ஒரு லேபிளை எடுத்து விட்டு மற்றொரு லேபிளைப் போடுவது என்பது அல்ல என்று அவர் எழுதி இருக்கிறார். அதேபோன்று ஒரு நாட்டின் மக்களுடைய ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்களின் விருப்பப்படி மாற்றுவதற்கு அவருடைய பொன் மொழிகளை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே தமிழ்நாடு சட்ட மன்றம் என்று மாற்றி எழுதிவிட்டால் மட்டும் மகிழ்ச்சி அடைந்து விட முடியாது என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அறிக்கையை வாசிக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் மிகவும் பெருமையுடன் வாசித்தார். இந்த அறிக்கையில் எந்தவிதமான வரியும் இல்லை என்கிற நிலையில் பெருமையுடன் வாசித்தார். ஆனால் மத்திய அரசாங்கத்தாரால் விதிக்கப்பட்ட வரியைக் கண்டு தமிழ் நாட்டு மக்கள் எல்லோரும் அதைத் தாங்க முடியாமல் வேதனைப்படுகிறார்கள். அதைக் கண்டு இவர்கள் பெருமைப்படுவார்களா என்பதை மறந்து விடக்கூடாது. இங்கு வரி விதிக்கவில்லை என்ற பெருமையை இங்குள்ள மக்கள் அனுபவிக்க முடியாமல் மத்திய அரசாங்கத்தினுடைய வரிக் கொடுமை இவர்களை வாட்டிக்கொண்டிருக்கிறது. ஆகவே இங்கு வரி இல்லை என்ற பெருமையை இங்குள்ள அமைச்சர்கள் பூரணமாக அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதனால் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய பிணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டால் தான் இந்தப் பெருமையை அவர்களும் பூரணமாக அனுபவிக்க முடியும். அவர்களுக்காக நாமும் நிச்சயமாக அந்தப் பெருமையை பூரணமாக அனுபவிக்கக்கூடும். ஏனென்றால் அறிக்கையிலே உணவுப் பிரச்னையைப்பற்றி கூறப்படுகிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு உணவு உற்பத்தி மிகக் கணிசமான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது என்றும், மூன்றாவது திட்ட காலத்திற்குள்ளாக 15 லட்சம் டன் அதிகப்படியான உணவு உற்பத்தி லட்சிய இலக்கை எதிர்பார்க்க முடியும் என்றும் தம் நம்பிக்கையைத் தெரிவித்து, அதே நேரத்தில் அந்தத் திட்ட லட்சிய அளவை எட்ட முடியாததற்குத் தடையாக இருப்பது ரசாயன உரம் என்றும் 1957-ம் ஆண்டு நமக்கு 1.2 லட்சம் டன்தான் கிடைத்தது, 1961-ம் 1.3 லட்சம் டன் அளவில் தான் கிடைக்கும் என்ற வருத்தமான செய்தியையும் அதோடு பாசன வசதி பெருகாவிட்டால் திட்ட லட்சிய அளவை அடைவது சிரமமாக இருக்கும் என்றும் தெரிவித்தார். உணவு தான்ய உற்பத்தியில் லட்சிய அளவை அடைவதற்குத் தடையாக இருப்பது பாசன வசதிக் குறைவு என்று சொல்லி தப்பிவிடுவதைக் காட்டிலும், எனக்கு முன் பேசிய ஒரு நண்பர் அவர்கள் தம்முடைய தொகுதி நீர்வளம், நிலவளம் நிரம்பப் பெற்றது என்று குறிப்பிட்டதோடு தமிழகம் எங்கிலும் அத்தகைய வளங்கள் எல்லாவற்றையும் பார்க்கலாம் என்று பெருமையோடு சொன்னார். ஆனால்



குறிப்பாகவும், சிறப்பாகவும் நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற குளித்தலை தொகுதியில் குடகநாறு திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்தச் சட்டமன்றத்தில் பலமுறையும் சொல்லி வந்திருக்கிறேன். ஏழாயிரத்து ஐம்பது ஏக்கராவுக்கு மேல் பாசன வசதி பெறக்கூடிய அந்தத் திட்டத்திற்கு 20 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு இது மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதுவும் (B) பி-வரிசையில் எட்டாவதாக இடம் பெற்றிருக்கிறது என்கிறபோது இது வெறும் கண்துடைப்பாகச் சேர்க்கப்பட்டிருக்கிறதே தவிர இத் திட்டம் நிறைவேற்றப்படுமா? அதற்குரிய செயல்களை இந்த அரசாங்கத்தார் எடுத்துக்கொள்வார்களா என்கிற ஐயப்பாடு எழுந்துகொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட சிறிய சிறிய பாசனத் திட்டங்கள் எல்லாம்கூட 20 லட்சம், 10 லட்சம் என்று செலவாகக்கூடிய திட்டங்கள் எல்லாம்கூட நிறைவேற்றப்படாமல் இருப்பதற்குக் காரணம் நாம் கேட்ட பங்குத் தொகை, தமிழகத்திற்குரிய பங்குத் தொகை கொடுக்கப்படாததுதான். கேட்டதில்கூட நூறு கோடி ரூபாயைக் குறைத்துப் போய்விட்டுவா என்று புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆகையால்தான் கொடகனாறு போன்ற சிறிய திட்டங்கள் எல்லாம்கூட நிறைவேற்றப்படாமல் கைவிடப்படுகின்றன. அதுவும் இவர்கள் தங்கள் சிப்பந்திகளுடைய சம்பளத்தை உயர்த்தியதனால் ஏற்பட்ட கஷ்டத்திற்கு உதவியாக அவர்கள் கொடுத்துவந்த தொகையைக்கூட இவ்வாண்டில் இருந்து இழக்கக்கூடிய பரிதாபகரமான நிலையில்—நாங்கள் கேட்டோம், கெஞ்சினோம்— மன்றாடினோம்—மண்டியிட்டும் பலனில்லை என்று கையை விரிக்க வேண்டிய நிலை எதனால் ஏற்படுகிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்காவிட்டாலும் விலைவாசிகள் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே போகின்றன? அதைக் கட்டுப்படுத்த இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? இலங்கை பாராளும் மன்றத்தில் நிறைவேறிய ஒரு மசோதாவைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றியமையாத பொருள்களின் விலையும், உணவுப் பொருள்களின் விலையும் அங்கே ஏறிக்கொண்டு போவதைத் தடுக்க, ஓர் அளவிற்குள் கட்டுப்படுத்துவதற்கு இலங்கைப் பாராளு மன்றம் ஒரு மசோதாவை நிறைவேற்றியிருக்கிறது. எந்த வணிகரானாலும் அவர்கள்மீது சட்டத்தை மீறிய குற்றத்திற்காக கடுமையாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வகை செய்கிறது அந்த மசோதா. அதைப் பத்திரிகையில் பார்க்கிறோம். இந்த அரசு அத்தகைய ஒரு மசோதாவைக் கொண்டுவர முடியுமா? அப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டுவருவதற்குத் திராணியற்றது இது, வகையற்றது இது என்பதை நான் அறிவேன். மத்திய அரசினருக்கு எடுத்துச் சொல்லி விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏன் முயற்சி செய்யக்கூடாது என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் கேட்க

[Sri M. Karunanithi] [6th March 1961

விரும்புகிறேன். இவ்வளவு பெரிய பேரரசில் எவ்வாறு அப்படிப்பட்டதொரு மசோதாவைக் கொண்டுவர முடியும் என்று கேட்கலாம். அதனாலேயே சொல்கிறேன். இவ்வளவு பெரிய பேரரசாக இருக்கத் தேவையில்லை. சிறிய நாடாக இருந்தாலும், இலங்கையைப் போன்று இருந்தாலும் போதும். தமிழகம் தனித்து இயங்கினால்தான், திராவிடநாடு தனி அரசாகத் திகழ்ந்தால்தான் இந்த நாட்டு தமிழ்ப் பெருங்குடி மக்களைக் காப்பாற்ற முடியும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1952-ம் ஆண்டு இரண்டாம் ரக அரிசியின் விலை 7% ஆக உயர்ந்திருந்தது. 1960-ம் ஆண்டு அது 73% ஆக உயர்ந்திருப்பதை வருத்தத்தோடு தெரிவிக்கவேண்டும். அடுப்புக்கரி 25%, விறகு 38%, ஜவுளி 31% என்று இப்படி ஒவ்வொரு பொருளும் விலை உயர்ந்துகொண்டே போகிற நேரத்தில் அதைக் கட்டுப்படுத்தாமல் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதானது குதிரை கொழுக்கிறது, ஆனால் அதற்கான கடிவாளம் இல்லை, மாடு கொழுத்து வருகிறது, அதற்கான மூக்கணாங் கயிறு இல்லை என்ற அளவில் விட்டுவைத்துக்கொண்டே போனால் நாடு சீரழியும். ஆகவே உடனடியாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசிடத்தில் வற்புறுத்தவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உணவு உற்பத்தியைப் பற்றி பிரமாதமாகப் பேசப்படுகிற நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் புயலினாலும், பெரு மழையினாலும், பெரும் அளவுக்குப் பயிர்கள் பாதிக்கப்பட்டது என்று ஒரு அமைச்சர் வெளியிடவும், இன்னொரு அமைச்சர் பாதிக்கப்படவில்லை என்று வெளியிடவும், அறுவடையாகிற இந்தக் காலத்தில் நெல் மணிகளைப் பார்த்தால் எல்லாம் பதருகிப் போயிருக்கிறது என்கிற நிலைமை தெரிவித்துவிட்ட பிறகும் அந்த நிலங்களுக்கு வரி விலக்குச் செய்யவேண்டுமென்ற நல்லெண்ணம் இந்த அரசுக்கு வரவில்லை என்பதை இந்த நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறுகிற விவாதத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சேதுசமுத்திரத் திட்டத்தில் தூத்துக்குடித் துறைமுக விஸ்தரிப்புத் திட்டம் அடங்கியுள்ளது என்று மூன்றாவது திட்ட வரைவு பக்கம் 97-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தூத்துக்குடித் துறைமுக அபிவிருத்தியுடன் இணைந்திருப்பது சேது சமுத்திரத் திட்டம் என்று நிதி நிலை அறிக்கை கூறுகிறது. அதோடு தூத்துக்குடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை மூன்றாவது திட்டத்தில் வலியுறுத்துவதாக சொல்லப்படுகிறது. தூத்துக்குடி இல்லை, சேதுசமுத்திரமும் இல்லை என்று நிலைமை இப்படிப் போனால் இவைகளைப் பற்றிக் கேட்கிறபோது வடக்கு, தெற்கு பேசுகிறார்கள், இப்படியெல்லாம் பேசுவது சரியல்ல என்கிறார்கள். "நாட்டுப் பிரிவினை தானே உங்களுக்குத் தெரியும்" என்று ஸ்ரீ கக்கன் சொல்கிறார். திரு. அண்ணா அவர்களும், மற்றவர்களும் பேசுகின்ற சர்வ கட்சிக் கூட்டங்களில் நிதி அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே



6th March 1961] [Sri M. Karunanithi]

பேசப்படுகிற விஷயங்களை அவர்கள் தெரிந்துகொண்டதில்லையா? ஜனநாயகத்தை வலியுறுத்திப் பேசுகின்றபோது, ஜனநாயகம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா என்று கேட்பதும், இது அறியாமை என்று சொல்வதும், உங்கள் கட்சியின் நிலைமைதான் சந்தி சிரிக்கிறதே என்று எடுத்துக் காட்டுவதும்—யார் கட்சி சந்தி சிரிக்கிறது என்பது மக்களுக்குத் தெரியாதா—எங்களைச் சந்தி சிரிக்கச் செய்யாது. நேற்று ஆந்திராவில் இருந்து டெல்லிக்குப் போய் அவர்கள் கட்சி சந்தி சிரிக்கிறது. மைசூர் விஷயம் சந்தி சிரிக்கிறது, அதிகாரிகளை அழைத்துக்கொண்டு போய் அமைச்சர்கள் தேர்தல் நிதி வசூலிப்பது சந்தி சிரிக்கிறது—இவற்றை எல்லாம் உணர்ந்து பார்க்கவேண்டும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. The hon. Member can speak only about the Budget and this House is not a party platform to conduct any propaganda. I am not able to understand the hon. Member referring to 'Santhi siruppu' and I want a ruling from the Chair whether it is parliamentary.

TEMPORARY CHAIRMAN (SRI S. M. ANNAMALAI) : That is not a point of order.

AN HON. MEMBER : It is not a point of order.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Only the Chair can say that and not the hon. Member.

**SRI M. KARUNANITHI :** பட்ஜெட் உரையில் என்ன பேச வேண்டுமென்பதை நான் அறிவேன். அம்மையாருக்கு அது தெரியாததை நினைந்து அமைச்சர் பாஷையில் அவர்களது அறியாமையைக் கண்டு வருந்துகிறேன்.

**SRI A. GOVINDASAMY :** தலைவர் அவர்களே, அம்மையார் குறிப்பிடும்போது 'பாயின்ட் ஆப் ஆர்டர்' இல்லை என்று குறிப்பிட உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று சொன்னார்கள். அது சபை நடவடிக்கையில் ரெக்கார்டு ஆகியிருக்குமானால் அதை 'எக்ஸ்பஞ்சு' பண்ணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, I never meant the Chair. One hon. Member has stated that it is not a point of order and I have stated that only the Chair can say that and not that hon. Member.

TEMPORARY CHAIRMAN (SRI S. M. ANNMALAI) : அங்கத்தினர் ஒருவரைப் பற்றி அப்படிக் குறிப்பிட்டார்களே தவிர, தலைவரைப் பற்றி அப்படிக் குறிப்பிடவில்லை. அடுத்தபடியாக லட்சுமிகாந்தம்மாள் பேசுவார்கள்.

* **SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM :** கனம் தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தில் 2 நிமிஷங்கள் வீணாகப் போய் விட்டது. அதற்காக இன்னும் 2 நிமிஷம் முடிவில் எனக்குச் சேர்த்துத் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

1960-61-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை நான் மனதாரப் பாராட்டி ஒரு சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். இந்த பட்ஜெட் உரையில் ஒன்றும் இல்லை என்று சொல்பவர்கள் சிலர்.

இந்த பட்ஜெட் உரையானது தேர்தலுக்காகத்தான் உரைக்கப்பட்ட உரை என்று சொல்பவர்கள் சிலர். இப்படி ஏதாவது இதில் ஒரு சில குற்றங்களையாவது சொல்லவேண்டும் என்பதற்காகத் தான் இப்படிச் சொல்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். ஆனால் உண்மையிலேயே எல்லா விஷயங்களும் அடங்கியுள்ள பாராட்டத்தக்க பட்ஜெட் இது என்று சொன்னால் மிகையாகாது என்று கூறி இதற்காக நமது நிதி அமைச்சர் அவர்களுக்கும் மகிழ்ச்சியோடு பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்சி நிதி திரட்டுகிறார்கள் மந்திரிகள் என்று எதிர்க்கட்சியில் பலர் சாதாரணமாக கூறுகிறார்கள். கட்சி அடிப்படையில்தான் அரசாங்கம் நடைபெறுகிறது என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள் போல் இருக்கிறது. பார்லிமெண்டின் ஜனநாயக முறை என்றால் கட்சி அடிப்படையிலேதான் அரசாங்கம் நடைபெறும். காங்கிரஸ் கட்சி மாத்திரம் நிதி திரட்டவில்லை. எல்லாக் கட்சிகளும் நிதி திரட்டுகிறார்கள். இதை எல்லாம் அவர்கள் மறந்துவிட்டு காங்கிரஸ் மந்திரிகள் நிதி திரட்டுகிறார்கள் என்று சொல்லுவது மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம் என்பதுபோல் இந்தச் சபையில் நமது மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் மாமியாராக ஆக்ட் பண்ணுவது குறித்து ஒரு புறம் வருத்தமும், ஒரு புறம் மகிழ்ச்சியும் அடைகிறேன். அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு சொல்லுக்கும் நிதி திரட்டுகிறார்கள் என்பதை மறந்துவிட்டார்கள் போல் இருக்கிறது. எந்த கட்சியும் நிதி திரட்டுவதில் தவறு இல்லை என்பதை இந்த மன்றத்தில் கனம் சபாநாயகர் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். மந்திரிகள் என்றால் 24 மணி நேரமும் மந்திரிகள் ஆகவே இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. தனிப்பட்ட மாணிக்கவேலராகவும், தனிப்பட்ட சுப்பிரமணியமாகவும் இருக்கலாம். கட்சியின் அடிப்படையில் வந்தவர்கள் கட்சிக்கு நிதி திரட்டுவதிலே எந்தவிதமான குற்றமும் இல்லை.



கூடிய சக்தியைப் பெற்றிருக்கிறார்கள். இதன் காரணமாக தேசிய வருமானம் உயர்ந்திருககிறது என்பதை நன்றாக அறிகிறோம். இருந்தாலும் எதிர்க்கட்சியினர் தேசிய வருமானம் உயரவில்லை என்று சொல்லுகிறார்கள். தேசிய வருமானம் உயர்ந்துதான் இருக்கிறது. இருந்தாலும்கூட விலைவாசி கட்டுப்படுத்தப்படவேண்டும். விலைவாசி உயர்வுக்கு தகுந்தாற்போல் தேசிய வருமானம் உயர்ந்திருந்தாலும் இனனும் மேலும் மேலும் விலைவாசி உயர்ந்துபோனாலும் நம்முடைய திட்ட செலவுகளும் அதிகமாகும், மேலும் நம்முடைய நாட்டிலே இருக்கும் மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டிருக்கிற காரணத்தினால் இப்போது விலை உயர்வை கட்டுப்படுத்தாவிட்டால் இதனால் பல கஷ்டங்கள் ஏற்படும். இந்தக் கஷ்டத்தை அனுபவிப்பவர்கள் நடுத்தர வகுப்பினரும், ஒரு குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தை வாங்கும் மக்களும்தான். ஆதலால் இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதில் அடிக்கடி நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மதுரை ஜில்லாவானது நெசவாளர்கள் நிறைந்த ஒரு பகுதி. குறிப்பாக மதுரை நகரத்தில் நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைப்பதற்கு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரவேண்டும். நியாயமான விலையில் நூல் கிடைக்க ஏற்பாடு செய்யாவிட்டால் நடைமுறையில் இந்த விலையில் நூல் கிடைப்பது அரிதாக இருக்கிறது. 20-ம் நம்பர் நூல் தேவையாக இருந்தால் 60-ம் நம்பர், 80-ம் நம்பர் நூலை வாங்கினால்தான் 20-ம் நம்பர் நூல் தரக்கூடிய நிலை சில இடங்களில் இருந்துவருகிறது. ஆகையால் அங்கே டிப்போ வைத்து அதன் மூலமாக நியாயமான விலையில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

தனியார் துறை, பொதுத் துறை என்று இரு துறைகளுக்கும் ஆதரவு தருவது சர்க்காருடைய கொள்கைதான். ஆகையால் கூட்டுறவு சங்கத்திலே சேர்ந்த நெசவாளர்களுக்கு சர்க்கார் கொடுக்கும் பல சலுகைகளை மற்றவர்களும் அடையச் செய்யவேண்டும். வீடு கட்டும் திட்டங்கள் போன்றவை சம்பந்தமாக கூட்டுறவிலே சேர்ந்து இருக்கும் நெசவாளர்களுக்கு சலுகை அளிப்பதுபோல் கூட்டுறவிலே சேராத நெசவாளர்களுக்கும் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Srimathi P. K. R. Lakshmikantham] [6th March 1961

மூட்டைக்கு 4 அணா, 4-½ அணா கமிஷன் பெற்றுக்கொண்டு அதை விற்றுக் கொடுக்கிறார்கள். அவர்களும் வியாபாரிகள் என்று கருதி அங்கே விற்கப்படும் நெல்லுக்கு விற்பனை வரி விதிக்கிறார்கள். இம்மாதிரியாக மற்ற ஜில்லாக்களில் இல்லை என்று நினைக்கிறேன். மதுரையில் மாத்திரம்தான் இருக்கிறது. ஆகையால் அப்படி விற்கப்படும் நெல்லுக்கு விற்பனை வரி இல்லாமல் செய்ய வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் அரசாங்க உதவி பெற்றும் படிக்கிறார்கள். தங்களுடைய செலவிலும் படிக்கிறார்கள். ஆனால் நான்கு, ஐந்து வருஷங்கள் படித்தபிறகு ஹவுஸ் சர்ஜனாக ஆஸ்பத்திரியில் அவர்கள் அப்பியாசப் பயிற்சி பெறுகிறார்கள். அப்போது அவர்களுக்கு எந்தவிதமான சம்பளமும் கொடுப்பதில்லை. ஒரு சிலருக்கு மாத்திரம் 90 அல்லது 100 ரூபாய் மாதம் கொடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஹவுஸ் சர்ஜனாகப் பணியாற்றும் எல்லோருக்கும் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் சம்பளம் என்றோ வேறு எந்த பெயரிலோ கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் 4, 5 வருஷங்கள் செலவு செய்து படித்துவிட்ட காரணத்தால் மேலும் செலவு செய்வது என்பது கஷ்டமாக இருக்கும் என்று உத்தேசித்து ஹவுஸ் சர்ஜனாக பணியாற்ற ஒரு வருஷ காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் கொடுத்து உதவி செய்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாய நலத் திட்டம் போன்ற பல திட்டங்கள் மூலமாக நமது கிராமத்தில் இருக்கும் பெண்களுக்கு எத்தனையோ நன்மைகள் செய்கிறோம். ஆனால் நகரத்தில் இருக்கும் ஏழை பெண்களுக்கு எந்தவிதமான உதவி செய்வதற்கும் நம்மிடத்தில் திட்டமில்லை, முடிவதில்லை. ஆகையால் நகரத்தில் இருக்கும் மிக ஏழை பெண்களுக்கு பால்மாடு வாங்கிக்கொள்வதற்கு மான்யமாக பணம் கொடுக்கவேண்டும். அவர்கள் தையல் மெஷின் வாங்கவும் உதவி செய்யவேண்டும். கிராமத்தில் ஏழை பெண்கள் இருக்கிறார்கள். இம்மாதிரி நகரத்திலும் ஏழை பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் உதவி செய்வது அரசாங்கத்தினுடைய கடமை என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



6th March 1961]

அடுத்த வருடத்திய வரவுசெலவு திட்டத்தை இதோடு ஒப்பிட்டு பார்க்கும்படியான சந்தர்ப்பத்தை அளிப்பதுதான் வரவுசெலவுத் திட்டத்தின் பூர்ண அமைப்பு என்று கூறினால் அது மிகையாகாது. இன்னும் விரிவாக இந்த அறிக்கை இருப்பது மேலும் பொருத்தமாகயிருக்கும். சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் தெரிந்துகொள்வதற்காக அல்லாது இம்மாநிலத்திலுள்ள சாதாரண மக்களும் நமது ராஜ்யத்தில் என்ன நடக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தைக் கருதியேனும் பத்திரிகைகளில் விரிவாக வரும் செய்திகளைத் தெரிந்துகொண்டு நிலைமையை அவர்கள் உணர்ந்துகொள்ளும் வாய்ப்பினை இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் தருகின்றன. இந்த அறிக்கை நல்ல முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பதினால் இதை நான் ஆதரிக்கிறேன். அரைக்கிணறு தாண்டுகிற மாதிரி தமிழ்நாடு என்று பெயரிடப்பட்ட விஷயம் அம்மாதிரி இருக்கிறதென்றும் அன்பர்கள் குறிப்பிட்டார்கள். அரைக்கிணறு தாண்டுகிறவன் நீந்தத் தெரியாதவனாகயிருந்தால் அவன் இறந்து போயிருக்க வேண்டும். அப்பொழுது அவனால் அரைகுறை மகிழ்ச்சியடைய முடியாது, கிணற்றில் தண்ணீர் இல்லாதிருந்தால் அவன் கை அல்லது கால் முறிந்து போயிருக்கும். ஆக அரைகுறை மகிழ்ச்சி என்று சொல்லும் உதாரணம் பொருத்தமல்ல. எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும், நாம் நினைத்த அளவு காரியங்கள் கைகூடி மகிழ்ச்சி—தரத்தக்க அளவில் அவை நமக்கு பலனளித்துக்கொண்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. கிராமங்களுக்கு சென்று பார்த்தால் தெரியும், நமது ஐந்தாண்டுத் திட்டச் சாதனைகள் எப்படியிருக்கிறதென்பது. நியாயபுத்தியுள்ள ஒவ்வொருவரும் அங்கு நமது சாதனைகளை சரிவர புரிந்துகொள்ள முடியும். ஆகவே, அது பற்றிய விவாதத்தை அதிகப்படுத்த வேண்டாமென்று கருதுகிறேன்.

—

விலைவாசி உயர்வுபற்றி சொல்லப்படுகிறது, உண்மை. அதை மறுப்பதில்லை. அதைத் தடுப்பதற்கு என்ன மார்க்கங்கள் உள்ளன என்பதை சற்று யோசித்துப் பார்த்தால் என் அறிவிற்கு போதிய யோசனைகள் எனக்குக் கிடைக்கவில்லை. அதற்கு என்னுடைய அறிவுக் குறைவு அல்லது திறமைக் குறைவு காரணமாகயிருந்து இருக்கலாம். இதுபற்றி சிந்தனை பலர் மனதிலும் குடி கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. எந்தப் பகுதியில் உணவு உற்பத்தி செய்யப்படுகிறதோ, விவசாயிகள் அல்லது விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் எங்கு வசிக்கிறார்களோ அந்தக் கிராமங்களுக்குச் சென்று விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள், விவசாயத் தொழிலாளர்கள். நிலச் சொந்தக்காரர்கள் இவர்கள் இந்த விலைவாசி

[Sri R. Krishnasami Naidu] [6th March 1961

கேட்டுக் கொள்கிறேன். கிராமப் பகுதிகளில் இந்த விலைவாசி சம்மந்தமான கருத்துக்கள் வேறுபட்டதாயிருக்கிறது, நம் கருத்துக்கு மாறுபட்டதாகயிருக்கிறது. நான் என் சொந்த கிராமத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் சென்றிருந்தேன். அங்குள்ளவர்களுக்கு முழுநேர வேலையிருக்கிறது. 14 வயது பெண்கள்கூட ஆறு மணியிலிருந்து எட்டு மணிவரை 5 அணாவிற்கு களை எடுக்கிறார்கள், சாப்பிடாமலேயே வேலை செய்கிறார்கள். 9 மணிக்கு களை வெட்டச் சொல்கிறார்கள். அதற்கு 12 அணா. இப்படியாக ஏழை எளிய மக்கள், ஒரு குடும்பத்தில் மூன்று நான்கு பேர்கள் இருந்தால் அக்குடும்பத்திற்கு நாள் ஒன்றுக்கு 5 முதல் 7 ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது. வருடத்தில் 220 நாட்களுக்கு அவர்களுக்கு இவ்வருமானம் வருகிறது என்பதைக் கேட்டு நான் மிகமிக சந்தோஷப்பட்டேன். ஆக, விலைவாசி உயர்வு ஒரு பக்கம் இருந்தாலும், கிராமங்களிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வருமானமும் அதிகமாக கிடைத்து, விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் சுபிட்சமாக பல பொருள்களை வாங்கி தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். அவர்களது வாழ்க்கைத் தரமும் உயர்ந்திருக்கிறதென்பதை அங்கு சென்று பார்த்தால் தெரியும். இப்படி பல உதாரணங்கள் கொடுத்துக்கொண்டே போகலாம்.

இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு சில யோசனைகள் கூற விரும்புகிறேன். உணவு உற்பத்தி சம்பந்தமாக, உரத் தட்டுப்பாடு இருக்கிறது. ரசாயன உரம் போதுமானதாகயில்லை. உற்பத்திக்கான ஏற்பாடுகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அது நம்பிக்கையளிப்பதாகயிருக்கிறது. ஆனால் ரசாயன உரம் சம்பந்தமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் எந்தெந்த பருவகாலத்தில் எந்தெந்த ஜில்லாக்களுக்கு எவ்வளவு எவ்வளவு போய் சேரவேண்டுமோ அவ்வாறு பகிர்ந்தளிப்பதில் ஏதோ கோளாறு இருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் நாம் நினைத்த காலத்தில் உரம் வராததால் பருவக் காலத்தில் அந்தந்த ஜில்லாக்களுக்கு வேண்டிய உரம் போய்ச் சேருவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய முடியவில்லை என்றிருந்தாலும் முற்றிலும் அக்காரணத்தை ஒப்புக்கொள்ள முடியாத நிலைதான் இருக்கிறது. ஆக, உரம் நன்கு பகிர்ந்தளிக்க வேண்டிய விஷயத்தில் சிறந்த முறைகள் கையாளப்படவேண்டியது அவசியம்.

பின்னர், பருத்தி நம் நாட்டில் 41 கோடி ரூபாய் அளவிற்கு இறக்குமதி செய்யப்படுகிறதென்று, இவ்வறிக்கையில் காணப்படுகிறது. இந்த ராஜ்யத்திலேயே நீண்ட இழை பருத்தி அதிகமாக உற்பத்தி செய்யக் கூடிய இடம் என் தொகுதிதான். ராஜ்யம் முழுமைக்கும் மெட்ராஸ் உகண்டா நம்பர் 2 விதையை அளிப்பது ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள உகண்டா பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு மார்க்கட்டிங் சொஸைட்டி தயாரிப்பதுதான். அந்தாலுகாவில் கிட்டத்தட்ட 25,000



6th March 1961] [Sri R. Krishnasami Naidu]

ஏக்கர் இந்த நீண்ட இழைப் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதற்கு எங்கிருந்தோ வியாதி, பூச்சி வந்துவிடுகிறது. நமது விவசாய இலாகாவைச் சேர்ந்த நிபுணர்கள் இதற்கான ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள், ஆனால் அது பலனளிக்கவில்லை. ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 10,000 பேல் பஞ்சு கிடைப்பது இந்த நோயால் பாதிக்கப்படுகிறது. 10,000 பேல் என்றால் 5,000 கண்டி. அதன் இப்போதைய விலையை எடுத்துக் கொண்டால் 60 லட்சமாகும். இவ்வளவு அதிகமான நஷ்டம். ஒரு தாலுகாவில் மட்டும் இவ்வியாதியால் உண்டாகிறது. இதற்காக சென்ரல் காட்டன் கமிட்டி மற்ற ராஜ்யங்களில் பூச்சி தடுப்பிற்கு ஏற்பாடுகள் செய்ய நிரந்தர ஆராய்ச்சி நிலையங்கள், அதற்கு வேண்டிய நிபுணர்கள் இவைகளை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் உருவாக்கும் முயற்சிகள் காணப்படுகின்றன. ஆனால் நம் ராஜ்யத்திற்கு சென்ட்ரல் காட்டன் கமிட்டி ஒரு திட்டமும் உருவாக்கவில்லையென்று தெரிந்து, இப்பொழுது ஒரு திட்டம் நமது விவசாய இலாகா மூலம் அனுப்பப்பட்டிருக்கிறது. அரசாங்கம் இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது நீண்ட இழைப் பருத்தி உற்பத்தி செய்யும் பகுதிகளில், அவைகளுக்கு பூச்சி நோய்களால் ஏற்படும் ஆபத்துக்களை தவிர்க்க ஒரு நிரந்தர ஏற்பாட்டினை செய்ய அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதியில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவ விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது. சர்க்கரை ஆலை நன்கு செயல்படத்தக்க சூழ்நிலை அங்கிருக்கிறது. அதற்கு இவ்வரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்து அதற்கான அனுமதி பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட மட்டில், என் தாலுகாவில் பிளவைக்கல் அணை, கிளவன்கோவில் அணை என்று இரண்டு இருக்கின்றன. 20,000 ஏக்கர்களுக்கு, இரண்டு போக சாகுபடி செய்ய அவை வாய்ப்பளிக்கும் திட்டம். மழைக்காலங்களில் அதிகமாக ஆற்றில் போகும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தி அதை பாசன வசதிக்கு உபயோகித்துக் கொள்ள வேண்டியது செய்யவேண்டும்.

பின்னர், பஞ்சாயத்து யூனியன்கள் சம்பந்தப்பட்ட சட்டம், சமீபத்தில் செய்யப்பட்ட சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. பலயிடங்களில் பரவலாக மக்களுக்கு ஆட்சிப் பொறுப்பை பகிர்ந்தளிக்கும் வகையில் நல்ல திட்டமாக அமைந்திருக்கிறது. இவைகள் சரிவர செயல் படுவதற்கு உத்தியோகத்துறையில் உள்ள எல்லா அலுவலர்களும் சிரத்தையாகவும், மனப்பூர்வமாகவும் இதற்கான காரியங்களை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. உண்மையைக் கூற தயங்கவில்லை. இப்பொழுது இருக்கக் கூடிய பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் இவைகளில் உத்தியோகப் பற்றற்றவர்களாக பணி புரியக்கூடியவர்களுக்கு இன்னும் புதிய

பொறுப்புகளையும் கடமைகளையும் ஏற்று நிர்வகிக்கத் தக்க அளவிற்கு அடிக்கடி அவர்களுக்கு இது விஷயமாக பயிற்சிகள் அளிக்கக் கூடிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொடர்ந்து அதைச் செய்து கொண்டு வர வேண்டும். புதுப்பணிகளை, கடமைகளை ஏற்றுச் செய்வதற்கு வேண்டிய பயிற்சி கொடுத்து அவர்கள் விரிவான அனுபவம் பெறுவதற்கு என்னென்ன செய்யப்பட வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் வகையில் சில விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. சட்டத்தின் நோக்கம் பாதிக்கப்படாத வகையில், எந்த நோக்கத்தோடு இச்சட்டம் கொண்டுவரப்பட்டதோ வதற்கு என்னென்ன செய்யப்பட வேண்டுமோ அவைகளைச் வேண்டும், இதில் வேண்டிய கவனம் செலுத்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI K. SATTANATHA KARAYALAR:** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதாவது 1961-62-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த அறிக்கையில் வரவு ரூ. 87 கோடி 59 லட்சமாகவும், செலவு ரூ. 90 கோடி 30 லட்சமாகவும் மதிப்பிட்டு ஒரு அறிக்கை இந்த சபை முன் உள்ளது. இந்த பட்ஜெட்டைப்பற்றி பல நண்பர்கள் பேசும்போது, எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் இதை ஒரு தேர்தல் பட்ஜெட் என்று குறிப்பிட்டதை ஆட்சேபித்து பேசினார்கள். இதை ஒரு காபந்து சர்க்காருடைய பட்ஜெட் என்று விமர்சனம் செய்தால் கூட அதில் எந்தவிதமான தவறும் இருப்பதற்கில்லை என்று தான் நான் கருதுகிறேன். சர்க்காரிலிருந்து வெளியிடப்பட்டிருக்கும் 'எக்னமிக்ஸ் கிளாஸிஃபிக்கேஷன்' என்ற புத்தகத்தில் சில நல்ல புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது இந்த பட்ஜெட்டின், நிதிநிலை அறிக்கையின் விவரங்களுக்கு உதவி செய்வதாக இருக்கிறது. இதில் வரும் ஆண்டில் அதாவது 1961-62-க்கு பொதுவாக வருவாய் இனத்திலும் செலவு இனத்திலும் பல விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எக்ஸ்பென்டிச்சர் இனத்தில் 'கன்ஸம்ஷன் எக்ஸ்பெனடிச்சர்' என்கிற இனத்தில் கழிந்த ஆண்டு ரூ. 46 கோடி 25 லட்சம் இருந்தது இந்த ஆண்டு ரூ. 49 கோடி 30 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அடுத்ததாக 'டிரான்ஸ்ஃபர் பேமென்ட்ஸ்' என்கிற இனத்தில் மான்யமாகவும் வட்டியாகவும் கழிந்த ஆண்டில் ரூ. 29 கோடி 2 லட்சமாக இருந்தது இந்த ஆண்டு ரூ. 31 கோடி 29 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ரெவின்யூ இனத்தில் மத்திய சர்க்காரிடமிருந்து வரவேண்டியது என்று குறிப்பிட்டிருக்கிற இனத்தில் கழிந்த ஆண்டு ரூ. 14 கோடி 22 லட்சம் என்று குறிப்பிட்டிருந்தது, இந்த ஆண்டு ரூ. 11 கோடி 44 லட்சமாக குறைந்து காணப்படுகிறது. இந்த இனத்தில் சுமார் 2 கோடி 78 லட்சம் ரூபாய் குறைவாகத்தான் நமக்கு கிடைக்கும். ஆகவே [illegible] இனத்தில் அதிகப்படுகின்ற 3 கோடி 65 லட்சம் ரூபாயும்,





இதில் குறைவாக கிடைக்கின்ற 2 கோடி 78 லட்சம் ரூபாயும், ஏற்கனவே நமக்கு துண்டு விழக்கூடிய இரண்டு கோடி ரூபாயும் சேர்த்து சுமார் எட்டு அல்லது ஒன்பது கோடி ரூபாய்க்கு நாம் வழிவகை செய்தாக வேண்டும். இதை எப்படியோ சமாளிக்கிற முறையில் 'மஜீஸ்ஷியன்' போல வரி ஒன்றும் விதிக்காமல் சரிக்கட்டி இந்த அறிக்கையை தயாரித்திருக்கிறார்கள். வரிகள் ஒன்றும் இந்த ஆண்டு விதிக்கப்படவில்லை என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும் என்று பல காங்கிரஸ் அங்கத்தினர்கள் சொன்னார்கள். அது மட்டுமல்ல, "சேவிங்ஸ் ஆன் கரன்ட் அக்கௌன்ட்" என்ற இனத்தில் கழிந்த ஆண்டு ரூ. 7 கோடி 83 லட்சமாக இருந்தது இந்த ஆண்டு வெறும் ரூ. 18 லட்சமாக வந்து நிற்கின்ற நிலைமையைத்தான் நாம் காண முடிகின்றது. அதோடு 'கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸ்' என்ற இனத்தில் 'இன்கிரீஸ் இன் காஷ் பாலன்ஸ்' கழிந்த ஆண்டு ரூ. 71 லட்சமாக இருந்தது, அதே நேரத்தில், "டிக்கிரீஸ் இன் காஷ் பாலன்ஸ்" இந்த ஆண்டு ரூ. 4 கோடி 35 லட்சமாக காண்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நம்முடைய யதார்த்த நிலை என்ன என்பதைப் பார்த்தால் நமக்கு மத்திய சர்க்காரிடமிருந்து வரவேண்டிய வருமானம் மிகவும் குறைந்திருக்கிறது. அதே நேரத்தில் மத்திய அரசாங்கத்திலிருந்து கிராண்டாகவும் லோன் என்ற இனத்தின் கீழும் அதிகமாக கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். அக்கௌன்ட் நம்பரில் 'மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கக்கூடிய லோன்' இனத்தில் கழிந்த ஆண்டு ரூ. 15 கோடி 1 லட்சம் என்று இருந்தது இந்த ஆண்டு ரூ. 25 கோடி 93 லட்சமாக உயர்ந்து காணப்படுகிறது. அவர்களிடத்திலிருந்து கிடைக்கக்கூடிய தொகை மான்யமாகவும் கடனாகவும்தான் கிடைக்கிறது. அமைச்சர் அவர்களுடைய பட்ஜெட் மெமோராண்டத்தில் நமக்கு ஏற்படுகின்ற குறைகளை சரிக்கட்டுவதற்காக மத்திய சர்க்காரிடத்தில் அதிகமான தொகை தர வேண்டும் என்று கோரியுள்ளோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மீண்டும் இதை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய வருமானத்தில் துண்டு விழக்கூடிய 3 கோடி ரூபாயை உபரியாக மத்திய சர்க்காரிலிருந்து தருவதற்கு அவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இருக்காது. நம்முடைய மாகாணத்தின் நிலைமையை எடுத்துக் கூறி மீண்டும் அதிக தொகை தர வேண்டும் என்று மத்திய சர்க்காரிடத்தில் கேட்க வேண்டும். (**THE HON. SRI. C. SUBRAMANIAM: What about other States?**) மற்ற மாகாணங்களுக்கும் கொடுக்கவேண்டியது தான். நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரையில் நமக்கு இருக்கின்ற இன்டர்னல் ரிஸோர்ஸ்-களை பார்த்து நமக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று நமது சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 11-வது வகுப்பு வரையிலும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக படிப்பு அளிப்பது என்று செய்திருக்கிற முடிவை நான் வரவேற்கிறேன். ஆனால் இதில் உண்மையிலேயே ஏழையாக இருக்கின்ற பலருக்கு இந்த நன்மை கிடைக்காமல்

[6th March 1961 [Sri R. Krishnasami Naidu]

போகலாம். குறிப்பிட்ட சம்பளம் வாங்கக்கூடிய ஒருசிலருக்கு இதனால் எந்த வித நன்மையும் கிடைக்காமல் போகலாம். அரிஜன வெல்பேர் டிப்பார்ட்மெண்ட்டிலிருந்து கொடுக்கப்படும் சில சலுகைகள் வாங்குவதற்காக சர்டிபிக்கேட்டுகளை கொடுத்து சலுகைகளை பெற்று விடுகிறார்கள். ஆகவே தாரதம்மியம் இல்லாமல் சகல மாணவர்களுக்கும் இந்தச் சலுகையை விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்விதம் இதை எல்லா மாணவர்களுக்கும் விஸ்தரித்தால்தான் நன்றாக இருக்கும். இதனால் பெரிய நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டு விடாது. ஆகவே இதையும் உடனடியாக அமலுக்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையை நன்றாகப் பார்க்கும் போது இது ஒரு தேர்தல் அறிக்கை போலவே உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏனென்றால் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் வேலையைப் போல் அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ள முடியாது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டாகிய இந்த ஆண்டில் ரூ. 48 கோடி செலவு செய்ய வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதைப்பார்க்கும் போது அடுத்த ஆண்டு ரூ. 58 கோடி செலவு வேண்டியிருக்கும், அதற்கு அடுத்த ஆண்டு 64 கோடி ரூபாய், அதற்கு அடுத்த ஆண்டு 74 கோடி ரூபாய் இவ்விதம் செலவு செய்து கொண்டேயிருக்க வேண்டும். அதற்கான பண வசதிகளை நாம் தேடித்தானாக வேண்டும். ஆகவே, இந்த ஆண்டு தாங்கள் சேகரித்த பணத்தை எப்படியெல்லாம் செலவு செய்வது என்கின்ற அடிப்படையில் திட்டங்களைப் போடாமல் இருக்கின்ற வசதிகளை ஐந்து ஆண்டுகளுக்குமாக பங்கிட்டு வரவு இவ்வளவு இருக்கிறது, செலவு இவ்வளவு என்று கணக்கிட்டு இந்த அறிக்கையை தயார் செய்து தருவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். அப்படியில்லாத முறையில் தேர்தலுக்காக தயாரித்த ஓர் அறிக்கையைப் போன்று இது காட்சி அளிப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இந்தத் திட்டங்களின் காரணமாக மக்கள்மீது வரிச்சுமை அதிகமாகும். இந்த ஆண்டு இல்லாவிட்டாலும்கூட அடுத்த ஆண்டு மக்கள் இதோடு இன்னும் அதிகமான அளவு வரிச்சுமையை தாங்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதை ஒரு தேர்தல் அறிக்கையாக எடுத்துக்கொண்டாலும்கூட இதைப்பார்த்து நாட்டிலுள்ள மக்கள் ஏமார்ந்துவிட மாட்டார்கள். சமீபத்தில் ஒரு குறுகிய காலத்திற்குள்ளாகவே ஒரு பெரும் வரிச்சுமையை தாங்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. விலைவாசிகள் எல்லாம் ஒவ்வொரு நாளும் ஏறிக்கொண்டேயிருக்கிறது. எந்த விதமான சம்பந்தமும் இல்லாமல், சில பொருட்களின் மீது விலை அதிகமாக உயர்ந்துகொண்டே போகிறது. சமீபத்தில் பாக்கு, தேயிலை, காப்பி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரிகளுக்கு எந்தவிதமான பொருத்தமும் இல்லாத முறையில், வியாபாரிகள் விலையை உயர்த்திக்கொண்டே [illegible] ...ர்கள். இப்போதுள்ள முறையை [illegible]



6th March 1961] [Sri K. Sattanatha Karayalar]

எக்ஸைஸ் மான்யத்தில் கிடைப்பதில் நமக்கு ஒரு பங்கு கிடைக்கக்கூடும். அதே சமயத்தில் தேசத்தின் வருமானம் எல்லாம் ஒரு சிலரின் கையில்தான் போய் சேருகிறது. அப்பேர்ப்பட்ட வியாபார சூதாடிகள் இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். இதை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும். இதற்காக கட்டுத்திட்டங்கள் இருக்கவேண்டும். நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் இதைப்பற்றி விவாதித்து சில கட்டுத்திட்டங்களை கொண்டுவர வேண்டும். இதில் பாரபட்சம் இல்லாமல், நியாயத்திற்கு புறம்பான நிலையில் இல்லாமல் இருக்கின்ற ஒரு நல்ல முறையை வகுக்கவேண்டும். எக்ஸைஸ் இனத்தைப் பொறுத்தவரையில் நான் விரும்புவது எல்லாம், இந்த நாட்டில் இதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் முழுவதும் இந்த நாட்டுக்கே கிடைக்கக்கூடிய வழி இருக்க வேண்டும். இந்த இனம் ஒன்றுதான் எலாஸ்டிக்காக எதற்கும் விரிவுபடுத்தக்கூடிய முறையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதில் கிடைக்கின்ற வருமானத்தை நம்முடைய நாட்டு மக்களின் அடிப்படையிலோ அல்லது வேறு எந்த விதத்திலாவது நாம் பெறுகின்ற வகையில் இந்த மான்யம் இருக்கவேண்டும். ரயில்வே வருமானத்தை பொறுத்தவரையில் ரயில்வே பேர், ரயில் டாக்ஸ் என்று தனித்தனியாக இருக்கிறது. சமீபத்தில் வெளிவரக்கூடிய மத்திய சர்க்கார் அறிக்கையைப்பார்த்தால் இதில் நமக்கு வரவேண்டிய வருவாய்கூட மத்திய சர்க்கார் கையில் போய்விடுமோ என்று தோன்றுகிறது. இவைகளை எல்லாம் நாம் கொடுத்துவிட்டால் நாம் எந்த அளவுக்கு மத்திய சர்க்காரிடத்திலிருந்து கிராண்டாக வாங்கப் போகிறோம் என்பதை திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். இதில் சர்க்காருடைய கருத்து என்ன என்று தெரிவிக்கவேண்டும். இந்த முறையில் கொடுக்கக்கூடாது என்று நமது சர்க்கார் வற்புறுத்தவேண்டும். அப்படியே கொடுத்தாலும் எக்ஸைஸ் மான்யம் முழுதும் நமக்குக் கிடைக்கும் அளவுக்கு இந்தத் திட்டம் இருக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பொறுத்த மட்டில் தேர்தல் கண்ணோட்டத்தோடு தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டாக இருந்தாலும், நாட்டின் சோஷலிஸ லட்சியத்தை எட்டிப்பிடிக்க கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸ் ஏற்படுத்திவருகிறோம் என்று சொன்னாலும், வரக்கூடிய வருமானம் எப்படிப் போய்ச் சேருகிறது என்று சொன்னால் ஒரு சிலருடைய கையில் மட்டும் போய்ச் சேருகிறது—பணக்காரர்கள் கையில் போய்ச் சேருகிறது. இதைத்தவிர சோஷலிஸ சித்தாந்தப்படி இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒரு காரியமும் இல்லை. இடைக்காலத்தில் ஸ்டேட் டிரேடிங் எடுக்கப்போகிறோம் என்று சொன்னார்கள், ஆனால் அதுவும் கைவிடப்பட்டிருக்கிறது.

அடிப்படையில் முதலாளித்துவத்திற்கு எதிராக இருக்கும் சர்க்கார் சோஷலிஸத்தைக் கொண்டுவருவதாகக் கூறிக்கொண்டு, அதே முறையைக் கையாண்டிருக்கிறதே தவிர, சோஷலிஸ லட்சி

யத்தை நோக்கி அழைத்துக்கொண்டு போகக்கூடிய திட்டங்கள் யாதொன்றுமில்லை என்று கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **Sri K. P. PALANISAMI :** கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நிதி நிலை அறிக்கையைப்பற்றி எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். எதிர்க்கட்சி நண்பர்கள் சிலர் இது எலெக்ஷன் மானிஃபெஸ்டோ என்று சொன்னார்கள். உண்மையில் காங்கிரஸ் கட்சி மாத்திரமல்லாமல் சட்ட சபையில் உட்கார்ந்திருக்கின்ற மற்ற கட்சிக்காரர்களும் இதைப்பற்றி பெருமையடைய இடமிருக்கிறது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். நம்மைத் தேர்ந்தெடுத்த லட்சக்கணக்கான மக்கள் சட்ட சபையில் என்ன நடக்கிறது என்று பேப்பரில் ஆவலோடு படித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் இந்த நாட்டில் கல்வி அறிவு பெருகியிருக்கின்ற காரணத்தினால் எல்லோரும் பேப்பர் படித்து நாட்டின் நிலையை உணர்ந்துகொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் இந்த பட்ஜெட்டில் ஒன்றும் தவறில்லை என்று நான் கூறுகிறேன். எதிர் கட்சிக்காரர்கள் வேண்டுமானால் தவறு என்று கூறலாம்.

குறிப்பாக இந்த அறிக்கையில் நமது நாட்டு மக்கள் எல்லோரும் கல்வி பெறவேண்டும் என்று எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் இலவசமாகக் கல்வி கற்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் 10 ஆண்டு காலம் சலுகை கொடுத்திருந்தோம். இருந்தும் அவர்கள் இன்னும் நல்ல முறையில் கல்வியறிவு பெறவில்லை. ஆகையால் அவர்களுக்கு கம்பல்ஸரி எடுகேஷன் கொடுப்பது நலம் என்று நினைக்கிறேன். நன்றாக கல்வி கற்றவர்கள் இவர்களில் 100-க்கு ஒருவர்கூட இல்லை. ஒரு சிலர் வேண்டுமானால் படித்து பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார்கள். கம்பல்ஸரி எடுகேஷன் கொண்டுவந்தால்—ப்ரொஹிபிஷன் வைத்திருப்பதால் பயந்து குடிக்காமல் இருக்கிறார்கள், அப்படிக் குடித்தாலும் வெளியில் தெரிவதில்லை, முன்பெல்லாம் குடித்துவிட்டு வீதியில் வருவார்கள், அந்த மாதிரி—ஹரிஜன சமுதாயத்தினர் நல்ல முறையில் கல்வி கற்க வசதி ஏற்படும் என்று நான் நினைக்கிறேன். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நமது நாடு விவசாய நாடு. 75 பர்செண்டுக்கு மேல் விவசாய மக்கள். பத்து ஆண்டு காலத்தில் சிறு கைத்தொழில்களும் கனரகத் தொழில்களும் வந்திருக்கின்றன. விவசாய நாட்டிலே விவசாயிகளுக்கு வேண்டிய கடன் வசதிகளை சர்க்கார் தாராளமாகக் கொடுக்கிறது. முன்பெல்லாம் செக்யூரிட்டி வைத்துக்கொண்டுதான் கடன் கொடுத்தார்கள். இப்போது பர்ஸனல் செக்யூரிட்டி மூலமாகக்கூட கடன் கொடுக்கிறார்கள். ஒரு குடியானவன் கிணறு வெட்டவும் பம்ப்செட் வைக்கவும் 3,000 ரூபாய் கடன் கேட்டால், அதில் கிணறு வெட்ட 1,500 ரூபாய் கொடுக்கிறார்கள். 30 அடி ஆழம் வெட்ட வேண்டுமென்று



குறிப்பிட்டுக் கொடுக்கிறார்கள். 20 அடி ஆழம் வெட்டியானவுடனேயே தண்ணீர் வந்து விடுகிறது. அதை இறைப்பதற்கு பம்ப்செட் வேண்டும். அந்த பம்ப்செட்டுக்கு பணம் கொடுக்க பி.டி.ஓ.விற்கோ, தாசில்தாருக்கோ அல்லது ஆர்.டி.ஓ.விற்கோ அதிகாரம் இல்லை. சர்க்காருக்குப் போய்த்தான் ஸாங்ஷன் ஆகி வர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதையும் பரிசீலனை செய்ய வேண்டும். ஏழைக் குடியானவன் 1,500 ரூபாய் செலவழித்து கிணறு வெட்டி பம்ப்செட் கிடைக்கவில்லையானால் அவன் மேற்கொண்டு வேலை செய்ய முடிவதில்லை. 30 அடி ஆழம் வெட்டுவதற்கு வெளியில் வாடகைக்கு பம்ப்செட் வாங்கி கிணற்றை பூர்த்தியாகக் கட்டிய பிறகுதான் பணத்தை வாங்க முடியும் என்று சொல்லுகிறார்கள். இந்த மாதிரி சட்டம் இருக்கலாம்.

**(Mr. Speaker in the Chair.)**

அல்லது கவலை மூலமாக இறைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா ஜில்லாக்களிலும் பல திட்டங்கள் இருந்தும் கோவை ஜில்லாவிற்கு ஒரு திட்டம்கூட கிடையாது. நமது நிதி அமைச்சருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். நொய்யல் நதி என்று ஒரு நதி ஓடுகிறது. அதன்கீழ் 5,000 ஏக்கர் பாசனம் நடக்கிறது. அதுகூட கோவை தாலூக்காவில் கிடையாது, அவனாசியில் கிடையாது. நிதி அமைச்சரையும், முதலமைச்சரையும் கேட்டிருக்கிறோம். குந்தா கழிவு நீரை கோவைக்கும் அவனாசிக்கும் கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று கோவை மக்கள் சார்பாக, அவனாசி மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் பருத்தி போதவில்லையென்று வெளி நாட்டிலிருந்து 45,000 டன் வாங்கி வருகிறோம். அவ்வளவு பருத்தியையும் நம் மாநிலத்திலேயே உற்பத்தி செய்ய முடியும். கோவையின் வடக்கு பகுதியில் 3 லட்சம் ஏக்கர் இருக்கிறது. கரிசல் மண்ணும் களி மண்ணும் கலந்த பூமி. கம்போடியா பருத்திக்கு லாயக்கான பூமி. இந்த வசதியை ஏற்படுத்திக்கொடுத்தால் பருத்தியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய கஷ்டம் இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜனங்கள் விஷயத்தில் நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறோம். அப்படிச் செய்யும்போது ஏக்கர் பூமி 5,000 ரூபாய் வரையில் ஆகிறது. இந்த ஆண்டு 5,000 ரூபாய் இருந்தால் அது அடுத்த ஆண்டு 10,000 ரூபாயாக மாறுகிறது. ஏனென்றால் பக்கத்து பூமிக்காரர்கள் வேண்டுமென்றே சர்க்கார் வாங்குவார்கள் என்று இன்னொரு நண்பருக்கு அதிக விலை போட்டு விற்கிறார்கள், விற்று தொகையை அதிகப்படுத்திக் காட்டுகிறார்கள். அதைப் பார்த்து மற்றவர்கள் விலை ஏறியிருக்கிறது என்று சொல்லி, 5,000 ரூபாய் இருந்ததை 10,000 ரூபாய் கொடுத்து வாங்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. அதைத் தடுக்க ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும்.

100 பேர்களுக்கு சேர்த்து சர்க்கார் வாங்கும்போது சர்க்கார் அதிகத் தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது. இதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, கோவை நகரத்தில் குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் அதிகமாக கஷ்டப்படுகிறார்கள். இந்த ஆண்டு மழை சுமாராக இருந்ததால் தண்ணீர் சுமாராகக் கிடைக்கிறது. மேற்குப் புறத்தில் சில இடங்களில் தண்ணீர் கிடையாது. இப்போது அங்கு ஆட்சி வேறு மாறியிருக்கிறது. சீட்டு கொடுத்து சீட்டு மூலமாக தண்ணீர் எடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இது பெரிய பிரச்னையாக இருக்கிறது. 20-30 வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்ட ரிஸர்வாயர் 25,000 பேர்களுக்குத்தான் போதுமானதாகக் கட்டப்பட்டுள்ளது. இப்போது 4 லட்சம் ஜனங்கள் வசித்து வருகிறார்கள். ஆக இந்த ரிஸர்வாயரை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் சர்க்கார் மான்யம் கொடுத்தால், லோகல் போர்டு மூலமாக அவர்களும் பணம் போட்டு நல்ல முறையில் வசதி செய்ய முடியும். கோவை ரூரல் ஏரியாவில் 8 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. 30,000 வரையில் ஜனத்தொகை இருக்கிறது. அங்கே குடிதண்ணீர் போதவில்லை. பெரியநாயக்கன்பாளையத்தில் கவர்ன்மெண்ட்பிரஸ் ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்காக பவானி ஆற்றிலிருந்து அந்த இடத்திற்கு தண்ணீர் கொண்டுவர ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து 9 மைல் தூரம் கொண்டுபோனால் மற்ற ஏரியாவிலும் தண்ணீர் சப்ளை செய்யமுடியும். குழாயின் டயாமீட்டரை அதிகப்படுத்தி, கோவை டவுன் ஏரியா, ரூரல் ஏரியா எல்லாவற்றிற்கும் தண்ணீர் வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கோவை மாவட்டம் கல்வி விஷயத்தில் கடந்த 10 ஆண்டுகளில் முன்னேறியிருக்கிறது. ஏற்கெனவே மெடிகல் காலேஜ் வேண்டுமென்று நண்பர்கள் விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு முன்பு டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் மூலமாக தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். ரெயில்வே ஸெஸ் பண்டில் 25 லட்சம் ரூபாய் இருக்கிறது. அதோடு கோவை உள்வட்டாரத்தில் கொஞ்சம் வசூலித்துக் கொடுக்கலாம். சர்க்காரும் கொஞ்சம் பணம் போட்டு மெடிகல் காலேஜை ஸாங்ஷன் செய்யவேண்டுமென்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். அதை கூடிய சீக்கிரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்—வணக்கம்.

11-30 a.m. * SRI A. A. RASHEED: Mr. Speaker, Sir. There is a misconception regarding the functions of the Members of this House. Many people think that we are only members of a particular party with party affiliations and they forget that we are members elected by the people. We represent a certain particular population of the country. Whenever opportunities come, it is our duty that we should express the various acts of commission and omission to the Government. I think it is natural that even the members of the party in power should speak occassionally on certain things and



bring them to the notice of the Government though they may not be palatable to the Government. I am not prefacing my speech with the view to attack the Government, for it is not necessary that one should support the Government always and not say about various actions of commission and omission.

Sir, the Budget speech of the Minister for Finance has been welcomed by all, being a Budget of the common man, a Budget without taxes, a Budget which records the past developments, a Budget which inspires confidence in the future. On the other hand it has been criticised as a pre-election Budget which does not give any concern regarding the ever increasing price of food articles, a Budget which does not solve the educated unemployment and also has been attacked for various other things. The Budgt speech of the Finance Minister has been the longest since the last 5 years which gives the past achievements and also the various steps taken for the implementation of the Third Five-Year Plan.

While welcoming the Hon'ble Minister's speech in not levying new taxes this year, I wish to state it is not only a short lived pleasure, since the Union Government have compensated this by levying taxes which affect from prince to peasant throughout the country. Sir, whether taxes are paid in the form of sales tax or excise duty or import duty it is the people who have to pay the tax. Whether the melon falls on the knife or the knife falls on the melon it is the melon which is cut. In the same way whether the State Government or the Central Government levies the tax it is the people who are affected by it. Recently the price of kerosene, tea, cloth and several other articles have risen because excise duties on these have been increased. I request the Government to see that the prices are brought under control.

I welcome the proposal of the Government to give free education to all poor boys up to XI Standard. But we must remember that poverty is not the monopoly of the socially backward communities alone but poverty exists even in the so-called forward communities. Even scholarships should be awarded only on the basis of poverty and not on the basis of communal status.

I regret to state that the Government have not expressed its concern regarding the ever increasing price of food articles.

Sir, let us remember that a pyrrhic victory in the economic battle field is not a victory. A victory which is gained after an enormous cost is no victory at all. We say that the production has increased, but at the same time the prices have also increased. Recently in an answer to a question the Home Minister, the Hon. Sri M. Bhaktavatsalam, said that the increase in price is due to the increase in population and also due to the increase in purchasing power and spending power of the public. I do not know how far this is true.

Many members recently expressed their concern regarding the decline in the price of agricultural produce. But they have not cared to think of the interest of the consumers.

[Sri A. A. Rasheed] [6th March 1961

As far as salaried persons and wage-earners are concerned, the prices have gone up beyond their reach. After all let us remember if this is not checked there will be a demand for more wages and more salaries and this will go on in a vicious circle.

I would like to congratulate our Government on maintaining communal harmony in our State. Our State has been free from communal discard and riots. Although there were some troubles here and there for the last four years, our Government have been very strict. I would request the Government to ban all the communal organizations whether they belong to this community or that community. The organization which sows seeds of discard must be totally banned. Election is fast approaching. These people may take advantage of it and will see that communal riots are started to further their own interest.

I would like to point out to this House that Muslims are also citizens of this country and they have got every right in the administration. Hence they cannot be classified as somebody. Their loyalty must not be doubted. Whatever the Government do they should do it in the interests of all communities and not in the interests of a particular community.

We have been relying too much on the Neyveli Project. We have put all our eggs in one basket. I do not know whether it is proper to rely too much on the integrated projects. It is true that we will be starting many industries because of this one project. But let us also think of the danger that lies ahead. I feel as far as this project is concerned there may not be any risk. At the same time I would also request the Hon. Minister to emphasise once again to the Central Government the need for the starting of a steel plant. Criticism is levelled against the Union Government that steps for starting of a steel plant are taken in a leisurely manner. It may or may not be true. So far as we are concerned, our State, which is industrially backward, should get a steel plant as early as possible.

I must also say that the Minister at the Centre has damped all our hopes of getting oil refinery for our State. It has been said that we have oil in the Cauvery basin. If there is oil in the Cauvery basin why should there be delay in starting oil refinery for our State. After all there is not a single refinery in South India.

Sir, I regret to say that the leather industry has always been treated in a step-motherly fashion. The Government seems to be guided by the bureaucracy which knows nothing about the trade. They do not seem to care for either the advice of the people in the trade or of the experts. Auction should be held in Madras for E.I. Tanned Goat and Sheepskins. By holding an auction for this industry in the Madras State we will be saving Rs. 50 lakhs by way of commission and we will be able to give employment for thousand people. But the Hon. Minister for Industries recently said that he was not in favour of holding such an auction here.



6th March 1961] [A. A. Rasheed]

Sir, recently, the tanners approached the Government for leave to pay the arrears of sales tax in instalments. Even that request has not been granted. Instead of coming to their help, coercive steps are being taken against them. It is but proper on the part of the Government that they should go to the aid of the industry which is suffering. Though there may not be slump in the industry nobody can deny the fact that this industry requires a lot of help and co-operation from the Government.

We are living in an age of mechanisation. But we are spending too much money on cottage industries. I wish to refer to one particular matter in this connection. Though the number of people engaged in the production of Khadi has increased from 26,500 to 181,000 in a period of 10 years, i.e., from 1950-51 to 1960-61, the production of Khadi has gone up from 66 lakhs yards to only 80 lakhs yards. I do not know the reason for such meagre return for such large investment. There are still certain industries where we find that the return that we have is very small and I request the Government that they should enquire into the working of these industries to see how far they can get income and proper return from them.

SRI T. L. SASIVARNA THEVAR : *கனம் சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்பித்துள்ள வரவு செலவு திட்டத்தின்மீது சில வார்த்தைகள் தெரிவித்துக்கொள்ள இஷ்டப் படுகிறேன். அமைச்சருடைய பிரசங்கமானது வருங்கால தேர்தல் அறிக்கைக்கு ஒப்பாக இருந்தது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னதை இங்கு ஆளும் கட்சிக்காரர்கள் பல முறை பல கோணங்களிலிருந்து எதிர்த்தார்கள். ஆனால், அமைச்சர் அவர்களுடைய பிரசங்கமானது பரிபூரணமாக, ஒன்று அல்லது இரண்டு முறை அல்ல பல முறை படித்துப் பார்த்தாலும்கூட தேர்தல் பிரசங்கம் செய்யப்பட்டிருப்பது போல என் போன்றவர்களுக்குத் தென்படுகிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்று உங்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறேன்.*

*முதற்கண் இந்த நாட்டில் உள்ள நிலைமையைப்பற்றி, விலைவாசி ஏற்றத்தால் மக்கள் படக்கூடிய அவதியைப்பற்றி ஒரு வார்த்தை கூட அமைச்சர் அவர்களுடைய பிரசங்கத்தில் கூறப்படவில்லை. இங்கு பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டதும், அதை அடுத்து மத்திய சர்க்கார் பட்ஜெட் சமர்பிக்கப்பட்ட பிற்பாடும் மக்களிடையே திருப்தி இருக்கிறதா என்பதைப் பொறுத்துத்தான் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமே ஒழிய ஆளும் கட்சியினர் பட்ஜெட்டை ஆதரிப்பதினாலும், எதிர்க்கட்சிக்காரர்கள் பட்ஜெட்டை எதிர்ப்பதினாலும் நிலைமை ஒன்றும் மாறிவிடாது என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.*

*நமது நாடு விவசாய நாடு. பெரும்பாலும் விவசாய முன்னேற்றத்திற்கு முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதாக அவர்களும் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. பெரிய*

[Sri T. L. Sasivarna Thevar] [6th March 1961

நீர்ப்பாசன திட்டங்கள் பூராவும் அநேகமாக முடிந்துவிட்டது. என்று அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அடுத்து முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று சொல்லியிருந்தாலும், அம்மாதிரி கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. ஒரே ஒரு காரணத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நமது மாநிலத்தில் 27,000 குளங்கள் இருக்கின்றன. அதில் பெரும் பகுதி குளங்கள் மேடாக இருக்கின்றன. இந்தக் குளங்களின் பரப்பைக் குறைத்து ஆழப்படுத்தினால், மழை பெய்தால் பூரா தண்ணீரும் அதில் தேங்கி அதிகமாக பிரயோஜனப்படும் என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்காக ஒதுக்கப்பட்ட தொகையை பார்த்தால் மிகவும் சுருக்கமாக இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தத் திட்டத்திற்காக சற்றேறக்குறைய 36 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் மராமத்து செய்யப்பட்ட குளங்கள் 47. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் பூராவுக்குமே சேர்ந்து 80 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப் பார்க்கப்போனால் வரக்கூடிய ஐந்தாண்டு காலத்தில் இன்னும் வேண்டுமானால் 100 குளங்கள் மராமத்து செய்யப்படலாம். அதற்கு மேற்பட்டு முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 1966-ல் 100 குளங்கள் செப்பனிடப்படும் என்றால், 27,000 குளங்களை சரிவர மராமத்து செய்வதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். (குறுக்கீடு.) சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு எதேஷ்டமான பணம் ஒதுக்கவேண்டும் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

கிழக்கு ராமனாதபுரம் மிகவும் பிற்பட்ட பகுதி என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். அந்தப் பகுதிக்கு இன்றியமையாத இரண்டு திட்டங்களும் இந்த பட்ஜெட்டில் சேர்க்கப்படவில்லை. ஒன்று அப்பர் பெரியார் ஸ்கீம். அதைப்பற்றி பேச்சே காணோம். சமீபத்தில் பேசிய கேரள மந்திரி அவர்கள் கூட பெரியார் தண்ணீரை தமிழ் மகாணத்திற்கு திருப்பிவிட வேண்டும் என்ற கோரிக்கையை நம்முடைய மாநில சர்க்கார் கேட்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். கிழக்கு ராமனாதபுரம் பகுதிக்கு இன்னொரு அத்தியாவசியமான திட்டம் சேதுசமுத்திர திட்டம். அதுவும் சேர்க்கப்படவில்லை. தூத்துக்குடி துறைமுகத் திட்டம் சேர்த்திருப்பதைப்பற்றி சந்தோஷப்படுகிறேன். ஆனால் சேதுசமுத்திரத் திட்டம், தூத்துக்குடி திட்டம் இரண்டையும் சேர்த்தால்தான் நன்மை பயக்கும் என்று கவர்னர் அவர்களின் உரையின்மீது விவாதம் செய்தபொழுது நான் பேசியிருக்கிறேன். அதை மனப்பூர்வமாக நிதி அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டு சொல்லியிருக்கிறார்கள். சேதுசமுத்திரத் திட்டம் இல்லாதவரையில், தூத்துக்குடி திட்டம் மாப்பிள்ளை இல்லாமல் கலியாணம் செய்வது போன்று இருக்குமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அப்பர் பெரியார் திட்டம் இப்பொழுது நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லுகிறபொழுது கிழக்கு ராமனாதபுரத்தின் முன்னேற்றமானது ஒரு ஐந்து வருட காலத்திற்கு தள்ளிப் போடப்பட்டிருக்



6th March 1961] [Sri T. L. Sasivarna Thevar]

கிறது என்று தான் சொல்லவேண்டும் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதை இன்னும் பரிசீலனை செய்து அதற்குரிய இடத்தை கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பெரியார் திட்டம் அரசியல் காரணத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றுகூட சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. அதுமாதிரி இல்லையென்றால், சற்றேறக்குறைய ஐந்தாண்டு காலமாக பலமுறைகள் கேட்டுக்கொண்ட போதிலும்—நான் மட்டும் அல்ல ஆளும் கட்சி அங்கத்தினர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் — உடனே அதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுக்காத போனால், நிச்சயமாக அரசியல் காரணத்திற்காகத்தான் இது ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற சந்தேகம் மீண்டும் வலுக்கும் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான பிரச்னையை சொல்ல இஷ்டப்படுகிறேன். இந்த மாநிலம் எந்த வகையில் முன்னேற்றம் அடையாமல் போனாலும்கூட வேறு இரண்டு வகைகளில் சிறப்பான முன்னேற்றம் அடைந்திருக்கிறது ஒன்று கள்ளச்சாராயம் காய்ச்சுவது, இரண்டாவது கள்ள நோட்டு அடிப்பது. இந்த இரண்டு காரியங்களையும் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் ஒன்றுமே கூறவில்லை. தமிழகம் சம்பந்தப்பட்ட மட்டில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது . . .

**THE HON. SRI C. SUBRAMANIAM:** உங்கள் சர்க்கார் ஏற்படும்பொழுது நீங்கள் இந்த மாதிரி சிறப்புக் காரியங்களை குறிப்பிடுங்கள்.

**SRI T. L. SASIVARNA THEVAR:** இந்தக் காரியங்கள் இல்லாமல் செய்வதற்கு நாங்கள் முயற்சி செய்வோம். இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழில் மாநிலம் பூராவும் ஒரு குடிசைத் தொழிலாக பரவி இருக்கிறது அது சீரும் சிறப்பாக இயங்கிக்கொண்டு வருகிறது. வரவர தேர்தல் நெருங்க நெருங்க அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தோடு சம்பந்தப்படுத்தப்படுகிறார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கள்ளச் சாரயம் காய்ச்சுபவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் இளைஞர் காங்கிரஸ் அங்கத்தினர்களாகவும், தலைவர்களாகவும் சேர்க்கப்பட்டு ஜமாவாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

கள்ள நோட்டுகள் அச்சடிக்கும் தொழிலும் நாட்டிலே பரவலாக இருக்கிறது. சமீபத்தில் நடந்த வழக்கின் காரணமாக நாட்டிலே மக்கள் 100 ரூபாய் நோட்டுகளை வாங்கவே பயந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் மத்திய சர்க்கார் அறிக்கை ஒன்று வெளி வந்தது. இம்மாதிரி கள்ள நோட்டுகள் புழக்கத்தில் இருப்பது வாஸ்தவம் என்றாலும், அது மிகவும் உபாயமான அளவிற்குத்தான் இருக்கிறது, அதைப்பற்றி பயப்படவேண்டிய அவசியம் இல்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதன் காரணமாக கள்ள நோட்டுகள் நல்ல நோட்டுகள் மாதிரி எங்கு பார்த்தாலும் நல்ல முறையில் புழக்

[Sri T. L. Sasivarna Thevar] [6th March 1961

கத்தில் இருக்கிறது. பொருளாதார அடிப்படையில் நான் சொல்லுகிறேன். நம் நாட்டில் இந்தப் பழக்கம் அனுமதிக்கப் பட்டால் பொருளாதார அடிப்படையில் இயங்கும் ஆட்சி முறைக்கே ஒரு பெரிய ஆபத்து ஏற்படும் என்பதை ஞாபக மூட்ட விரும்புகிறேன். ஒரு கட்சிக்காரர்கள் செய்து வருகிறார்கள், அல்லது தனிப்பட்டவர்கள் செய்துவருகிறார்கள், என்று நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை. ஆனால் பரவ லாக இம்மாதிரி கள்ள நோட்டுகள் அச்சடிக்கப்பட்டு புழக் கத்தில் இருக்கின்றன என்பதை எங்கு பார்த்தாலும் மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கூடிய சீக்கிரம் இந்த நிலைமையைப் போக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இதை அனுமதித்தால், இந்தத் தொழில் சீரும் சிறப்பாக தமிழக மட்டுமல்லாமல், நாடு பூராவிலுமே பரவிவிடும் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறேன்.

நமது நிதி அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியினர் மீது தாக்கு தல் செய்வதை இப்பொழுது சர்வசாதாரணமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தைப் பற்றி ஜாஸ்தியாக அவர்கள் பேசுகிறார்கள். நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம். ஜனநாயக அடிப்படையில் ஆட்சி நடக்கிறது. ஜனநாயகத்தில் அவர்கள் பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்களா, ஜனநாயக முறையில் நடக்கிறார்களா என்றால், மந்திரி சபையோ அல்லது முக்கியமாக நிதி அமைச்சர் அவர்களோ அம்மாதிரி நடக்கிறார் களா என்று பார்க்கப்போனால், அம்மாதிரி அவர்கள் நடப்பதில்லை என்பதற்கு பல சான்றுகள் கூறலாம். முக்கியமாக ஒரு சான்று கூறுகிறேன். அண்மையில் ஒரு தகராறு நடந்தது உங்களுக்குத் தெரியும். நமது நிதி அமைச்சர் இலாகாவிலிருந்து நடந்த கவர்ன் மெண்ட் பிளீடர் நியமனம் சம்பந்தமாக ஹைகோர்ட்டு அவரை நியமனம் செய்தது நல்ல முறையில் அல்ல என்று தீர்ப்பு அளித்தது. உண்மையில் நிதி அமைச்சர் அவர்கள் உடனே ராஜிநாமா செய்துவிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர் அப்படி செய்யவில்லை. சமீபத்தில் ஆந்திராவில் ஒரு தகராறு ஏற் பட்டது. ஆந்திராவிலும் காங்கிரஸ் மந்திரி சபைதான் நடக்கிறது. இங்கேயும் காங்கிரஸ் ஆட்சிதான் நடக்கிறது. ஆனால் ஆந்திராவில் ஒரு காரியம் தவறாகச் செய்யப்பட்டது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததன் காரணமாக உடனே சம்பந்தப்பட்ட மந்திரி ராஜிநாமா செய்ததாக பத்திரிகையில் பார்த்தோம். அங்கேயும் காங்கிரஸ் ஆட்சிதான் நடக்கிறது. இங்கேயும் காங்கிரஸ் ஆட்சி தான் நடக்கிறது. நாம் எல்லோரும் ஜனநாயக அடிப்படையிலே உயர்நீதி மன்றத்திற்கு கொடுக்கும் மதிப்பில் தவறக்கூடாது. நம் எல்லோருக்கும் முக்கியமான பாதுகாப்பு ஸ்தாபனம் உயர்நீதி மன்றம்தான். அந்த மன்றத்தின் தீர்ப்புக்கு நாம் கீழ்ப்படிய மறுத் தோமேயானால், அது ஜனநாயகம் அல்ல என்பதை நிதி அமைச்சருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று முன் இங்கே பேசிய நேரத்தில் ஒரு எதிர்க்கட்சி அங்கத்தினர்மீது



[Sri T. L. Sasivarna Thevar]

கடுமையான வார்த்தையை உபயோகித்து நிதி மந்திரி அவர்கள் கூறினார்கள். எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு ஜனநாயகமே தெரிய வில்லை என்று சொன்னார்கள். இதைச் சொன்னபொழுது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மேலே நான் எடுத்துக் கூறியதுபோல் ராஜிநாமா செய்யத் தவறியவர்கள் எங்களுக்கு ஜனநாயகத்தைப் பற்றி உபதேசித்தால், இங்கே ஜனநாயகம் எப்படி இருக்கிறது என்பதைத்தான் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த மந்திரி சபை ஆரம்ப காலத்தில் அவர்களுக்கு ஓட்டுப்போடவில்லை என்ற காரணத்திற்காக எங்கள் பகுதியிலே 5 பேரைக் கட்டி வைத்து சுட்டார்கள். இது உலகு அறிந்த விஷயம். இந்த மாதிரி சபையை ஒரு கொலைகார மந்திரிசபை என்று நான் கூறுவேன். அந்த மாதிரி அவர்கள் செய்யவில்லை என்று நிரூபித்தார்களா என்று கேட்கிறேன். ஆகவே சர்வாதிகாரத் போக்கை ஜாஸ்தியாகக் கையாண்டு கொண்டு, ஜனநாயகத்தைப் பிரசாரம் செய்வது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்களில் எல்லாம் எங்கள் பகுதி புறக்கணிக்கப் பட்டே வந்திருக்கிறது. ஆகவே சேதுசமுத்திரத் திட்டம், மேல் பெரியாறு திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* Sri A. S. SUBBARAJ : சபைத் தலைவர் அவர்களே, *1960-61*-வது பட்ஜெட்டை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மிகவும் அழகாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் இந்த பட்ஜெட்டை தயார் செய்த கனம் நிதி மந்திரி அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக, உணவு உற்பத்திக்கு முதலிடம் கொடுத்திருப் பதை நான் வரவேற்கிறேன். அதிகமான அணைக்கட்டுகளைக் கட்டி எல்லாப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பூர்த்தி செய்துவிட்ட போதிலும், கல்லாறு, மேல் பெரியாறு திட்டங்கள் மூலமாக நாம் இன்னும் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். இந்தத் திட்டங் கள் பல ஆண்டுகளாக பேசப்பட்டு வந்த திட்டங்கள்.. கேரள சர்க்காருடன் கலந்து, அவர்களை அணுகி, அவர்களுக்கு வேண்டிய மின்சாரத்தைக் கொடுத்தாவது நமக்கு வேண்டிய தண்ணீரைப் பெற நமது நிதி அமைச்சர் அவர்களும், முதல் மந்திரி அவர்களும் முயற்சி எடுத்துக்கொண்டால் நிச்சயமாக இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று நினைக்கிறேன். இந்த மாதிரித் திட்டங்களை மத்திய சர்க்கார் மூலம் வற்புறுத்திச் செய்யும்படி நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இவைகளின் மூலமாக வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் இன்னும் அதிகமாக உற்பத்தியைப் பெருக்க முடியும்.

மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களிலே அதிகமான ஜமீன்கள் இருக்கின்றன. இந்த ஜமீன் பிரதேசத்தில் பல குளங்கள் சரியாக செப்பனிடப்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

[Sri A. S. Subbaraj] [6th March 1961

இதற்குப் போதுமான தொகை ஒதுக்கப்படவில்லை. ஆகவே இன்னும் அதிகமான தொகையை ஒதுக்கி உடனடியாக இவைகளை எடுத்துக் கொண்டால் உணவு அபிவிருத்தியிலே நல்ல முன்னேற்றம் காணமுடியும்.

அடுத்தபடியாக, கால்நடை அபிவிருத்தியை எடுத்துக் கொண்டால் எங்கள் பிராந்தியத்திலே மேற்குத் தொடர்ச்சி மலை இருக்கின்ற காரணத்தினால் புல் வளர்ப்புக்கு அங்கே சௌகரியமாக இருக்கிறது. ஆகையால், திட்டத்தில் குறிப்பிட்டிருக்கும் 5 மேச்சல் பண்ணைகளில் ஒன்றை எனது தொகுதியில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டு வளத்தை எடுத்துக்கொண்டால், கணிசமான அளவுக்கு நாம் முன்னேறியிருக்கிறோம். மதுரை ஜில்லாவிலே, அதுவும் என்னுடைய பிராந்தியத்திலே அதிகமான அளவுக்கு இலவம் பஞ்சு மரங்களை விவசாயிகள் வளர்க்கிறார்கள். இந்த மரங்கள் அங்கே அதிகமாக விருத்தியாகின்றன. முந்திரி மரங்களை நடுவது போல், காட்டு இலாகாவினரே இந்த இலவம் பஞ்சு மரங்களை நட்டால், அதிக வருமானம் வரும். அங்கே ஜமீன்கள் ஒழிந்தவுடனே, பல விவசாயிகள் மரங்களை நட்டு அதன் மூலமாக நல்ல பலனை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு பட்டா கொடுக்காமல் இருப்பதால் மிகவும் அவதியான நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டாக்களைக் கொடுக்குமாறு நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியை எடுத்துக்கொண்டால் நம்முடைய நாடு நல்ல முறையில் முன்னேறியிருக்கிறது. நம் நாட்டிலே வளருகிற தொழில்களைப் பார்க்கும்பொழுது, ஆச்சரியமான மாறுதல் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. சென்னை நகரிலும் முக்கியமான நகரங்களிலும் கனரகத் தொழில்களும், மற்ற தொழில்களும் அதிகமாக ஏற்பட்டுள்ளன. இந்தத் தொழில்களுக்கெல்லாம் ஒரே பகுதியில் லைசென்சு கொடுக்கப்பட்டு அங்கே நடைபெறுகின்றன. இனிமேல் வரக்கூடிய தொழில்களையாவது பரவலான முறையில் பிற்போக்கான பகுதிகளிலே ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரெயில்வே வசதி, மற்ற வசதிகள் வேண்டுமென்று சொன்னாலும்கூட அம்மாதிரி வசதியுள்ள சில இடங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த மாதிரி இடங்களுக்கு லைசென்சு கொடுத்தால் நெருக்கடியை ஓரளவுக்குத் தவிர்க்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



6th March 1961] [Sri A. S. Subbaraj]

அதோடு, கூட்டுறவுத் துறையில் பார்த்தால் நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. வீடு கட்டும் சங்கங்களில் இப்பொழுது 5 மடங்கு தொகை கடனாகக் கொடுக்கிறார்கள். ஏழைகளும், குறைந்த வருமானமுள்ளவர்களும் வீடுகள் கட்ட வேண்டுமென்று சொன்னால், இதைப் பத்து மடங்காக உயர்த்துவது அவசியம். அதன்மூலம் நாம் பணத்தை வீணாக்காமல், இன்னும் அதிகமான வீடுகளைக் கட்ட முடியுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி கொடுத்திருப்பதானது மிகவும் போற்றத்தக்கது. அதை யாரும் மறுக்க முடியாது. எனக்கு முன்பு பேசியவர்கள் எடுத்துக் காட்டியது போல், சாதாரண சம்பளம் வாங்கக்கூடிய அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் இன்னும் கூடுதல் சலுகை கொடுத்தால் சௌகரியமாக இருக்கும்.

நம் நாட்டிலே மிகவும் ஏழ்மையாக இருக்கக்கூடிய மண் பாண்டத் தொழில்களுக்கு விற்பனை வரி வசூலிக்கிறார்கள். இந்த விற்பனை வரியை எடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* SRI S. NAGARAJA MONIGAR : கனம் சபாநாயகர் 12
அவர்களே, மக்கள் நமக்கு ஓட்டு அளித்து அனுப்பிய பின் கடைசி noon
முறையாக இந்த பட்ஜெட்டின்மீது பேசுகிறோம். சென்ற பட்ஜெட் போதே சொன்னேன்: மிக உன்னதமான யானைமீது, வெற்றிகரமாக சர்க்கார் போய்க் கொண்டிருக்கிறது என்று உதாரணம் போல் சொன்னேன். இப்பொழுதும் சொல்ல விரும்புகிறேன். அந்த உன்னதமான யானையின் பேரில் காமராசர் என்ற சேவைத் தொண்டன் கோலாகலமாக மக்கள் உள்ளங்களில் பவனி வருகிறார்; மதியும், நிதியும் மேற்கொண்ட அமைச்சரவர்கள் நிதி இலாகாவை நடத்தி மக்களின் உள்ளங்களை கொள்ளைகொண்டு வருகிறார்கள். அப்படிச் சிறப்பு கொண்ட சர்க்காரும், அரசாங்க அதிகாரிகளும், சிப்பந்திகளும் திறமையாக நாம் முன்னேறி செல்ல பணிபுரிந்து, இந்த இந்திய நாட்டிலேயே இந்த சென்னை ராஜ்யமே முன்னணியில் நிற்கிறது என்ற வகையில் பணி புரிந்து சேவை செய்து வருகிறார்கள் என்று கூற விரும்புகிறேன். அவர்களைப் பாராட்டுகிறேன். இதிலே எதிர்க்கட்சிக்காரர்களும் சேர்ந்து பணி செய்திருக்கிறார்கள். ஏதோ ஒரு இடத்தில் சமீபத்தில் தங்களுடைய, தங்களுக்குள்ளே ஏற்பட்ட சர்ச்சை காரணமாக வேறு விதமாக இருக்கலாம் என்று கூடி பேசினார்கள். கூடிப்பேசி வெளி வந்தார்கள். வெளியே ஏராளமான அபிமானிகள் தலைவர்கள் எப்படி வெளியே வருகிறார்களோ, சண்டை போட்டுக்கொண்டோ அல்லது வேறு விதமாகவோ என்று ஏக்கத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் தலைவர்கள் கைகோத்துக் கொண்டு வெளியில் வந்தபோது ஆனந்தமடைந்தார்கள் என்று பத்திரிகையில் படித்தோமல்லவா. இன்றையதினம் எதிர்க்கட்சிக் காரர்களும் வித்தியாசமின்றி சேர்ந்து திறமையாக வேலை செய்து இந்த 13 வருஷ காலமாக அரசு நடத்தி இப்பொழுது ஐந்து

[Sri S. Nagaraja Monigar] [6th March 1961

வருஷக் கடைசியில் வரி இல்லாமல் சிறப்பான பட்ஜட்டைக் கொடுத்திருக்கிறார்கள் என்று ஏகோபித்து பாஸ் செய்து ச்ந்தோஷமாக நாம் அனைவரும் வந்தால் பொதுமக்கள் சந்தோஷமாக வரவேற்பார்கள் அல்லவா? வெளியிலே மக்கள் எப்படி இதையெல்லாம் வரவேற்கிறார்களோ அப்படியே எதிர் கட்சிக்காரர்களும் ஏன் இருக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். எல்லோரும் சேர்ந்தே ஒரு குடும்பம் போல் ஏன் இருக்கக் கூடாது என்று கேட்கிறேன். தேவையான அளவில் நாடு முன்னேற வேண்டும் என்று மட்டும் இருந்தால் அப்படி இருக்க வேண்டும். இல்லை பதவிக்காக, எப்படியாவது மந்திரிகள் ஆவதற்காக என்றால், அதைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

எதிர்க்கட்சி மக்களிடத்திலும், மாணவர்களிடத்திலும், இங்கே சொல்லக்கூடாது அந்த வார்த்தையை, அந்த வார்த்தையை நான் சொல்லவில்லை. அந்த வார்த்தையை எதிர்கட்சிகள் பச்சையாக சொல்லி வாதாடினால் என் னசெய்வது. அம்மாதிரி சொல்லி, நிலைமையைக் கெடுக்கும் விதத்தில் ஆகிவிட்டது. இந்த பட்ஜெட்டில் வரியில்லையென்றால், மத்திய சர்க்கார் பட்ஜெட் வரியைப்பற்றி பேசி என்ன பலன். அங்கே இருக்கும் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள், சம்பத் முதலானவர்கள் ராஜீனமா செய்து வெளியே வரவேண்டும். அதை விடுத்து, இந்த இடத்திலே வரி போடவில்லை. ஆதலால் இது ஒரு தேர்தல் பட்ஜட், இன்று இல்லையென்றால், அடுத்த மூன்று ஆண்டுகளில் கசக்கிப் பிழிவார்கள் என்றெல்லாம் எதிர்கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ. ராமசாமி முதலியார் சொன்னார்களே தவிர, திட்டமாக என்ன அவர் சொல்கிறார் வரிபோடச் சொல்கிறாரா வேண்டாமென்கிறாரா என்று பார்த்தால் ஒன்றுமே தெரியவில்லை. அதுவும் புரியவில்லை. இதிலே எதிர்கட்சி, கம்யூனிஸ்ட் சகோதரர்களையோ, சோஷலிஸ்ட் சகோதரர்களையோ, ப்ரஜா சோஷலிஸ்ட் சகோதரர்களையோ, ஜனநாயக காங்கிரஸ்காரர்களையோ பற்றி கொஞ்சம் நம்பிக்கை இருக்கிறது. அவர்களில் பலர் தேசிய விடுதலைக்காலத்தில், எங்களுடன் இருந்தவர்கள். கம்யூனிஸ்டுகள் இன்னும் மேலே உலக சமுதாயத்தையே விரும்புகிறார்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் வழிமுறைகளில்தான் வித்தியாசம். வேறு தாங்கல் இல்லை. உலக நாடுகள் ஒன்று சேர்ந்து பஞ்சசீலம் பேசும்போது பரந்த உலகத்தில் பரந்த எண்ணம் இன்றி குறுகிய எண்ணத்தோடு கருகிய நோக்குடையவர்களைப் பார்த்தால்தான் புரிந்து கொள்ள முடியவில்லை. மக்களெல்லாம் ஜாதி, இனம் இவற்றையெல்லாம் மறந்து ஒன்று பட்டுவரும் இந்நேரத்தில், இவர்கள் ஜாதி வேண்டும்; இனம் வேண்டும் என்றெல்லாம் சொல்வதும், மக்களை, குறிப்பாக மாணவர்களை சினிமா மேலும், காதல் மேலும் எதையாவது சொல்லி வாழ்க்கையே கெடுக்க செல்வது . . . . . . . .



[6th March 1961

**MR. SPEAKER** பட்ஜட் பற்றிப் பேசுகிறார். ஒழுங்கில்லை என்று எப்படிச் சொல்ல முடியும். அங்கத்தினர் பேசட்டும்.

**SRI S. NAGARAJA MONIGAR:** இவர்களின் தமிழில் காதல்தான் முக்கியமானது. இன்றைக்கு இந்த பட்ஜட்டை தேர்தல் பட்ஜட் என்று சொல்கிறார்கள். அப்படியானால், இதை நேற்று இன்று வந்தவர்களா போட்டிருக்கிறார்கள்? இதைக் கண்டா மக்கள் ஏமாந்து விடுவார்கள்? ஏமாந்து விட இன்றைக்கு வந்தவர்களல்லவே. இவர்களை 13 ஆண்டுகளாகப் பார்த்திருக்கிறார்கள். தேர்தல் பிரசாரம் இன்றுதானா? 75 ஆண்டுகளுக்கு முன்பே, தேர்தல் பிரசாரம் சுதந்தரத்திற்காகச் செய்திருக்கிறோம். இதை செய்வார்களா, செய்யமாட்டார்களா என்பது மக்கள் அறிவார்கள். ஆகவே எதிர்க்கட்சிகள் சொல்வதையெல்லாம் மக்கள் கேட்க மாட்டார்கள், கேட்கவும் கூடாது.

ஒன்று சொல்ல விரும்புகிறேன். உலகத்தில் தென்னாட்டு காந்தி என்றிருந்தோமே, இப்பொழுது என்ன இந்த காமராஜ் தென்னாட்டு காந்தியாக விளங்குகிறான் என்ற வயிற்றெரிச்சலோ என்னமோ, என்னவெல்லாமோ சொல்லிப் பார்க்கிறார்கள். கனம் ஆசைத்தம்பி எங்களால்தான் காங்கிரஸுக்கு நன்மைகள் நடக்கின்றது என்கிறார். தலை வணங்குகிறோம். மெத்த சந்தோஷம், தாராளமாகச் சொல்லுங்கள். கனம் கோதண்டராமன் சொல்கிறார், 11 வயதுவரை இலவசக் கல்வி கொடுப்பதைப் புகழ்கிறேன் என்று. அது ஒன்று. கனம் சாரதி சொன்னார்கள் ஒரு கோச் பாக்டரியை வைத்துக் கொண்டு பெரிதாகச் சொல்கிறீர்களே என்று. இப்படி நன்மை செய்வதை மறந்து பேசியவர்கள் எப்பொழுதுமே இப்படி மறைத்து பேசமுடியாது என்பதை அறிந்து கொண்டார்கள். இன்னும் சில ஆண்டுகள் பொறுத்தால் எல்லா நன்மைகளையும் செய்ததாக ஒப்புக்கொள்ளச் செய்ய முடியும் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆனல். இந்த நாட்டில் அக்கரை கொண்டவர்கள் எப்படிப் புகழ்கிறார்கள். ஆட்லிப் பிரபு வந்தபோது, சென்னையை நான் மிகவும் விரும்புகிறேன் என்று சொன்னார்கள். இவர்கள் எல்லோருமே வந்திருந்தார்கள். இவர்கள் வந்திருந்ததற்கு மெத்த சந்தோஷப்படுகிறேன். முப்பது நாடுகளிலிருந்து நேருஜி அவர்களை வரவேண்டும் என்று கூப்பிடுகிறார்கள். ஆயிரத்து நூற்று ஐம்பது தொழில்களில், ஆரம்பிக்கும்போது தென்னாட்டில் 750, சென்னை ராஜ்யத்தில் இருக்கும். இதை அங்கத்தினர் கனம் வேதரத்னம் அவர்களும் சொன்னார்கள், பத்திரிகையிலும் வந்திருந்தது. மீதியிருக்கும் ராஜ்யங்கள் கேரளம், மைசூர். அங்கெல்லாம் குறைவாக இருக்கிறது என்று ஒரு வார்த்தைகூட இந்த திராவிட நாடு கோருகிறவர்கள் திராவிட நாட்டிற்காக முதலைக்கண்ணீர் விடுகிறவர்கள் சொல்லக் காணோம்.

தமிழ் நாட்டில் இரும்புத் தொழிற்சாலையை சேலத்தில் சீக்கிரம் தொடங்கவேண்டும் என்றும், ரெயில் போடவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். சேலம் பெரிய ஜில்லா. பின்தங்கிய ஜில்லா. அங்கே ஒரு கல்லூரிதான் இருக்கிறது. இதை கல்வி அமைச்சர் நன்கு அறிவார். அங்கே இன்னொரு கல்லூரியை ஏற்

[Sri S. Nagaraja Monigar] 6th March 1961]

படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதிலும் கால
தாமதம் இல்லாமல் கவனிப்பார்கள் என்று பெருமிதம் அடை
கிறேன். பதினைன்று வயது வரை இலவசக் கல்வி
கொடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். ஐம்பது ஆயிரம்
ரூபாய் வரை வியாபாரிகளுக்கு சலுகை கொடுத்ததும்,
வியாபரிகளைக் கிளப்பி விட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு ஒரு
அடியாக அமைந்தது. தமிழகம் என்ற பெயர் அறிவிக்கப்பட்டது.
அந்த கோரிக்கையைக்கூட கதர் கட்டிய எங்களைச் சேர்ந்த
ஒருவர்தான் தமிழரசு கழகம் நடத்தியது. அதில்கூட இவர்கள்
கலந்து கொள்ளவில்லை. கலப்பதற்கு தயங்கினார்கள். ஏன் என்றால்
அப்பா ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடுதான்
கிடைக்கும் என்று. வேறெந்த வெங்காய நாடும் கிடைக்காதென்று.
இவர்கள் திராவிட நாடு கேட்பார்கள். ஆகவே இவர்களது
நிலைமையை இவர்களே உணரவேண்டும்.

> "விடம்கொண்ட மீனைப்போலும் வெந்தழல் மெழுகுபோலும்
> படம்கொண்ட பாந்தாள்வாயில் பற்றியதே ரைபோலும்
> திடம்கொண்ட இராமபாணம் செருக்களத் துற்றபோது
> கடன்கொண்டார் நெஞ்சம்போலும் கலங்கினாள் இலங்கை
> வேந்தன்."

என்பது போல் இதெல்லாம் அவர்களுக்கு
திடீர் திடீர் என்று விழும் அடிகள். தமிழகம் எனப்பெயர்
கொடுத்துவிட்டார்கள். இது ஒரு அடி. பதினொருவது வகுப்புவரை
இலவசக் கல்வி என்றார்கள். இது இரண்டாவது அடி. ஐம்பது
ஆயிரம் ரூபாய் வரை வியாபாரிகளுக்கு வியாபார வரி விஷயத்தில்
அனுகூலம் என்றார்கள். இது ஒரு அடி. இப்படி அவர்களுடைய
மார்பில் திடீர் திடீர் என்று இராம பாணம் பாய்கிறது. அவர்
களுக்குச் சொல்லுகிறேன், "ஆடிப் பிழைத்தாலும் பாடிப் பிழைத்
தாலும் அன்பும் பண்பும் இல்லையடி" என்பது இவர்களுடைய
பாட்டு. அன்பும் பண்பும் எங்கிருக்கின்றது. அன்பும் பண்பும்
இல்லையடி என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். "பண்பும்
அன்பும் இல்லை" என்று சொல்லும் வண்ணம் இருக்கக்கூடாது
என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

* **Sri P. S. SANTHANAM**: கனம் சட்ட மன்றத் தலைவர்
அவர்களே, நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கிற 1961-62-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப்பற்றி
என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.
இந்த மாமன்றத்தில் கனம் அங்கத்தினர்கள் இது வரையிலும் பேசி
வந்ததை நாம் கேட்டு வந்தோம். சிலர் கட்சி கண்ணோட்டத்துடன்
தான் பேசி வந்தார்கள். ஆனால் நாங்கள் நல்ல எண்ணத்தோடு
தான் பேசிக்கொண்டு வருகிறோம்.

(Deputy Speaker in the Chair.)

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடத்தைப்பற்றிதான் பேசிக்
கொண்டு வருகிறது. கேரளம், ஆந்திரம், கர்நாடகம், தமிழ் எல்லா
வற்றையும் சேர்த்துத்தான் நாங்கள் பேசிக்கொண்டு வருகிறோம்.



6th March 1961]

எல்லோரும் சேர்ந்து இந்தப் பகுதியின் குறைகளை அகற்ற
வேண்டும் என்றுதான் சொல்லி வருகிறோம். இங்குள்ள மக்கள்
நல்ல வாழ்வு வாழ வேண்டும் என்றும்தான் சொல்லிக்கொண்டு
வருகிறோம். எல்லா குறைகளையும் எடுத்துச்சொல்லி அந்தந்த
வகையில் அவற்றிற்கு நிவர்த்தி காணவேண்டும் என்றுதான் இந்த
மாமன்றத்தில் எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறோம். முதன்
முதலாக மனிதனை நல்ல முறையில் வாழ வைக்க வேண்டும்
என்பதுதான் எங்களுடைய கருத்து. "ஆடுவதும் பாடுவதும் ஆள்
அடிமை செய்வதும் ஓடுவதும் தேடுவதும் ஞானதங்கமே ஒரு
சாண் வயிற்றுக் கோடி." ஆடுவதும், பாடுவதும், ஓடுவதும் மனித
னுடைய வாழ்க்கையைப் பெருக்குவதற்குத்தான் என்று பல
பெரியோர்கள் பாடியிருக்கிறார்கள். அதற்கு ஏற்றவாறுதான்
மக்கள் நல்ல வாழ்வு வாழ வேண்டும், அதற்கு வேண்டிய வழிவகை
செய்யவேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டிருக்
கிறோம். மனிதனுக்கு வேண்டியது உண்ண உணவு, உடுக்க உடை,
நிற்க நிழல். இந்த மூன்றும்தான் அவசியமாக வேண்டியிருக்கிறது.
அதைக் கொடுக்க வேண்டும் என்றுதான் அதிலுள்ள குறைகளை
எடுத்து சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதைச் சொல்லும்போது
அதைத் தட்டிக் கழிக்காமல் அரசாங்கம் இருக்கவேண்டும்
என்பதற்குத்தான் நாங்கள் கேட்டுக்கொண்டு வருகிறோம்.

இதே நேரத்தில் பட்ஜெட் அறிக்கையை படிக்கும்போது 1950-
51-ல் 19·5 லட்சம் டன்களும் 1951-52-ல் 20;95 டன்களும் இப்படி
அதிகப்படியாக உணவு உற்பத்தி பெருகிக்கொண்டு வந்திருக்கிறது
என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், எவ்வளவு அதிகப்படி
யாக உற்பத்தி செய்தாலும் எங்கு பார்த்தாலும் பட்டினியாகத்
தான் இருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் பஞ்சம்தான், எங்கு
பார்த்தாலும் வறுமைதான். எத்தனையோ பேர்கள் பட்டினியால்
செத்துப்போவதை நாம் பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறோம்.
(சிரிப்பு) (கனம் ஸ்ரீ சி. சுப்ரமணியம்: எந்தப் பத்திரிகையில்
வந்திருக்கிறது என்று சொல்ல முடியுமா?) அப்படி எவ்வளவோ
பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது. அதை நாம் கண்கூடாகப்
பார்க்கிறோம். உண்மையில் மனிதன் வறுமையால் பாதிக்கப்
பட்டிருக்கிறான். எவ்வளவோ பேர்கள் வாடி வதங்கி இருக்கிறார்
கள். விலைவாசிகள் எவ்வளவோ உயர்ந்து இருக்கிறது. நிலச்
சுவான்தார்களைத் தவிர மற்றவர்கள் வறுமையால் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள். நிலச்சுவான்தார்கள், மிராசுதார்கள்தான்
நல்ல வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகிறார்கள்.
என்னைப்போலுள்ள ஏழை மக்கள்தான், பாமர மக்கள்தான்
பட்டினி கிடந்து உணவு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.
அவர்களைப் பார்த்தால் முன்பு இருந்ததைப்போல் இப்
பொழுது இல்லை. அந்த நிலைமை அங்குள்ள பாமர மக்களுக்
குத்தான் நன்றாகத் தெரியும். மிராசுதார்களுக்கும், நிலச்சொந்த
தாரர்களுக்கும் அவ்வளவாகத் தெரியாது.

[6th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM: ஜனம் அங்கத்தினர் ஐந்து வருஷங்களுக்கு முன் இருந்ததைப்போலவேதான் இப்பொழுதும் இருக்கிறார், எந்தவிதமான மாறுதலையும் காண முடியவில்லை. அவருடைய உருவம் எந்த விதத்திலாவது மாறியதாகத் தெரியவில்லை.

SRI P. S. SANTHANAM: பாமர மக்கள் அப்படி உரு மாறியிருக்கிறார்கள் என்று சொல்லுகிறேன். நிறைய உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொல்லுகிறார்களே தவிர விலைவாசிகள் குறையவே இல்லை.

உரத்தை எடுத்துக்கொண்டால் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்படுகிற சல்பேட் முதலிய உரம் கிடைக்கவில்லை. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக பயிர் செய்வதற்கு தழை உரங்களையும், கம்போடியா உரத்தையும் கொடுத்துக்கொண்டு வந்தோம். ஆனால் இப்பொழுது தழை உரம் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அதிலும் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அவர்களுக்குக் கிடைக்கும்படி வழி செய்யவேண்டும். இன்றைக்கு காடு வளர்க்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். காட்டில் மரங்களை வளர்க்கிறார்கள். ஆனால் கிராமங்களில் சென்று பார்த்தால் காடுகளிலிருந்து தழை உரம் கிடைப்பதாகவே இல்லை. அப்படி தழை, உரம் கிடைத்தாலும், அது ஏழை பாமர மக்களுக்குக் கிடைப்பதில்லை. அங்குள்ள பணக்காரர்கள்தான் வாங்கிக்கொள்ளுகிறார்கள். ஏழை பாமர மக்களுக்குக் கிடைக்கும்படியாகச் செய்தால் நலமாக இருக்கும். அப்படி காடுகளில் போய் ஏழை விவசாயிகள் தழை உரங்களைக் கொண்டு வரவேண்டும் என்று நினைத்தாலும் அதற்கு சர்க்கார் தடை விதிக்கிறார்கள். ஏனென்றால் காடுகளுக்குச் சென்று தழைகளை வெட்டுகிறோம் என்று மரங்களை வெட்டிவிடுகிறார்கள் என்று தடை விதிக்கிறார்கள். ஆகவே ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கும் அளவில் தழை உரங்களை வளர்க்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி உற்பத்தி செய்து விவசாயிகளுக்குக் கொடுத்தால் உண்மையிலேயே விவசாயத்தை அதிகப்படியாக உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

அதே நேரத்தில் இன்றைக்குப் பார்த்தால் காட்டு வளர்ப்பை பஞ்சாயத்துக்கே கொடுக்கப் போகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், எலியை வளர்த்து பூனை கையில் கொடுப்பது போல் இருக்கிறது. இதற்கு முன் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் காடுகள் எல்லாம் பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதனால் காடுகள் எல்லாம் தரை மட்டமாக்கப்பட்டு விட்டன. மீண்டும் அதைப்போலவே பஞ்சாயத்துக்களிடம் காடுகளை ஒப்படைத்தால் காடுகள் எல்லாம் தரை மட்டமாகி விடும். ஆகவே பஞ்சாயத்துக்களுக்கு மறுபடியும் காட்டிலாகாவைக் கொடுக்கக் கூடாது என்று மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நீர்ப்பாசனத்தை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு சென்னையில் சுமார் 18 ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன. சிறிய நீர்பாசனம் செய்யக்கூடிய குளங்கள் இந்த ராஜ்யத்தில்



6th March 1961] [Sri P. S. Santhanam]

சுமார் 27 ஆயிரம் இருக்கின்றன. அவைகள் எல்லாம் செப்பனிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது; 200 ஏக்கருக்குக் குறைவாக ஆயக்கட்டு உள்ள ஏரி, குளங்களை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. இன்றைக்குப் பார்த்தால் பஞ்சாயத்து நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால் பஞ்சாயத்து தலைவர்களாக வரக்கூடியவர்களும் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக வரக்கூடியவர்களும் நல்ல முறையில் நடந்துகொள்வதாகத் தெரியவில்லை. அந்த நிர்வாகத்தில் எவ்வளவோ ஊழல்கள் இருக்கின்றன. பலர் பஞ்சாயத்து பணத்தை கையாடல் செய்து வருகிறார்கள். சுமார் மூன்று நான்கு மாதங்களுக்கு முன்னதாக என்னுடைய பகுதியில் கீழநாச்சுப்பட்டு என்ற கிராம பஞ்சாயத்துத் தலைவர் சுமார் நாலாயிரம் ரூபாய் வரையில் கையாடல் செய்து விட்டார். அதைப்பற்றி மூன்று மாதகாலமாக இந்த சட்ட மன்றத்திலும் அந்த நிர்வாக அமைச்சருக்கும் தந்தி மூலமாகவும், தபால் மூலமாகவும், ரிஜிஸ்தர் மூலமாகவும் தகவல் அனுப்பி இருந்தும், ஏழை மக்களுடைய பணத்தை, அதிலும் 100 ரூபாய் மதிப்புக்கு ஒரு அணா வீதம் வரி வசூல் செய்த பணத்தை, கையாடல் செய்திருக்கிறார் என்று புகார் செய்திருந்தும் அதைப்பற்றி கேட்பதற்கு யாரும் இல்லை. எந்தவிதமான நடவடிக்கையும் இது வரையிலும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அந்த நிர்வாகத்தில் அவ்வளவு ஊழல்கள் இருக்கின்றன.

THE HON. SRI C. SUBRAMANIAM: எல்லா பஞ்சாயத்து தலைவர்கள் மீதும் சேர்மன்கள் மீதும் அப்படி குற்றம் சாட்டுகிறார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன். தயவு செய்து மற்ற பஞ்சாயத்து தலைவர்களைப்பற்றி பேசும்போது கொஞ்சம் நேர்மையாகவும் ஜாக்கிரதையாகவும் பேச வேண்டும். ஏதோ ஒரு பஞ்சாயத்து தலைவர் தவறாக நடந்து கொண்டு விட்டால் எல்லா பஞ்சாயத்து தலைவர்களைப்பற்றியும் குற்றம் சொல்லக் கூடாது. அப்படிச் சொல்வது இந்த சபைக்கு அழகல்ல என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI P. S. SANTHANAM: நான் சொல்லும்போது ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்து தலைவரைப்பற்றிதான் குறிப்பிட்டேன். அவர் இருக்கக்கூடிய கிராமத்தின் பெயரையும் சொல்லி இருக்கிறேன். ஆகவே அவர் பேரில் இது வரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த நிலைமை நீடித்துக்கொண்டிருந்தால் பஞ்சாயத்து நிர்வாகம் பெரிய அளவில் பாதிக்கப்படும் என்பதைப்பற்றி உண்மையிலேயே இந்த மாமன்றத்தில் கூற விரும்புகிறேன்.

விவசாயத்துறையில் கரும்பு சாகுபடி நல்ல முறையில் சாகுபடி செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்த திட்ட காலத்தில் அடுத்த ஆண்டு மேலும் பத்து லட்சம் டன் அதிகப்படியாக கரும்பு உற்பத்தி செய்யப் படவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கேள்வி நேரத்தில் சர்க்கரையை வெளி நாட்டில் இறக்குமதி ஏற்றுமதி செய்வதைப்பற்றி கேட்கப்பட்டது. கரும்பு அதிகப்படியாக உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொல்லி

[Sri P. S. Santhanam] [6th March 1961

யும் சில சமயம் சர்க்கரை பற்றுக்குறை ஏற்படுகிறது.
நிலையில் திருவண்ணுமலையில் ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க
வேண்டும் என்று சுமார் 12 ஆண்டுகாலமாக கேட்டுக்கொண்டு வரப்
பட்டும் இதுவரையிலும் அங்கே ஏற்படவில்லை. ஒரு சமயம் அங்கு
ஒரு சர்க்கரை ஆலை வரும் தருவாயில் இருந்தும் கூட பிறகு அது
வராமல் தாமதப்பட்டு விட்டது. அதன் காரணம் என்ன என்று
தெரியவில்லை. ஆகவே அங்கு ஒரு சர்க்கரை ஆலையை ஆரம்பித்து
கரும்பு உற்பத்தியை கூட்டுறவு சொசைட்டிக்குக் கொடுத்தால்
சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்கலாம். ஏராளமாக வரக்கூடிய
நிலைமை ஏற்படும், அதற்கு சர்க்கார் வழிவகை செய்யவேண்டும்.
(மணி அடிக்கப்பட்டு பேச்சு முடிவுற்றது).

* SRI M. A. MUTHIAH CHETTIAR: கனம் உதவிசபா
நாயகர் அவர்களே, நமது அரசாங்கத்தினுடைய நிதி நிலை
அறிக்கையைப்பற்றி எல்லோரும் பாராட்டியிருக்கிறார்கள்.
அதுவும் இந்த வருடம் நமது நிதி அமைச்சர் அவர்கள் பத்துவருட
காலமாக ஏற்பட்டுள்ள சாதனைகளைப் பற்றியும் இரண்டு
ஐந்தாண்டுத் திட்டங்களின் பொருளாதார நிலைமையைப் பற்றியும்
குறிப்பாகவும், தெளிவாகவும் எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.
இவ்வாண்டு நிதி நிலை அறிக்கையில் பத்துவருஷ அபிவிருத்திகளை
யும், முன்னேற்றங்களையும் ஒருசேர தொகுத்துச் சொல்லியிருப்ப
தற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்
காக அவர் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியையும் பாராட்ட
வேண்டும். வரும் ஐந்து வருஷத் திட்டத்தைப்பற்றியும் குறிப்
பாகச் சொல்லியிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்
திற்காக நமக்கு 291 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும், சொல்லி
யிருப்பது பெருமைப்படத்தக்கதாகும். டெல்லியில் நமக்கு 291
கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதோடு இன்னும் வருங்காலத்தில்
ஏதாவது புதுத் திட்டம் சொன்னாலும் அவற்றையும் நிறைவேற்ற
உதவி அளிப்பதாகச் சொன்னார்களே அதுதான் மிகவும் பாராட்
டத்தக்கது. நமக்குப் பெருமை அளிப்பது, விவரமாகப் பேச
நேரம் இல்லாததால் சுருக்கமாகச் சிலவற்றைச் சொல்ல ஆசைப்
படுகிறேன்.

கல்வி விஷயத்தில் 11-வது வரையில் இலவசக் கல்வி அளித்திருப்
பதைப் பாராட்டுகிறேன். ப்ரீ யுனிவர்ஸிடியை ஏற்படுத்தியதே
தவறு என்று அமைச்சர் கருதுவது போல நானும் கருதுகிறேன்.
அதுவிஷயம் நம் கையில் இல்லை. முன்பே சொன்னேம். சர்வகலா
சாலைகள் அதைச் செய்துவிட்டன. ஆனால் நமது மந்திரி கையில்
ஒன்று இருக்கிறது. பிரி யுனிவர்ஸிடியும், இதர 3 வருஷ கல்லூரிப்
படிப்பும் கல்லூரியிலேயே இருக்கும்படித்தான் செய்யவேண்டும்.
நான்கு வருஷமாவது கல்லூரியில் படித்தால்தான் நல்லது. அதை
விட்டு ப்ரி யுனிவர்ஸிடியைப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவந்து
விட்டால் எல்லாம் அடியோடு போய்விடும். கல்வியின் தரம் மிக
மட்டமாக ஆகிவிடும். ஆகவே ப்ரி யுனிவர்ஸிடி படிப்பைப் பள்ளிக்
குக்கொண்டுவராதபடி அமைச்சர் அவர்கள் கவனித்துக் கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



6th March 1961] [Sri M. A. Muthiah Chettiar]

இன்னென்று. நான் நேற்று தஞ்சை போயிருந்தேன். அங்கே உள்ள சரஸ்வதி மகால், சங்கீத மகால் இவையெல்லாம் நம் நாட்டுப் பொக்கிஷங்கள். சங்கீத மகாலில் மைக் இல்லாமலேயே பேசலாம். எல்லோருக்கும் நன்றாகக் கேட்கும். கனம் பக்தவத்சலம் அவர்கள் கூடச் சொன்னார்கள், எந்த மூலையில் உட்கார்ந்து வீணை வாசித்தாலும் எல்லா இடங்களிலும் கணீரென்று கேட்கும் என்று. ஸ்ரீ டி. கே. பழனியப்பன் கலெக்டராக இருந்தபோது அவற்றையெல்லாம் நல்லமுறையில் சீர்படுத்தியிருக்கிறார். இன்னும் நாம் எத்தனையோ வளர்ச்சிபெறச் செய்ய வேண்டியிருக்கிறது. சரஸ்வதி மகால் லைப்ரரியில் இப்போது புதிதாக ஏட்டுச்சுவடி சேகரிக்கும் வேலையில் ஈடுபட முடியவில்லை என்று கேள்விப்பட்டேன். அவற்றை நல்லமுறையில் ஒரு கல்சரல் சென்டராக வைத்துக்கொள்ள வேண்டும். அது பெரிய சொத்து. நமக்கு 50 ஆயிரம், லட்சம் என்பது எல்லாம் பிரமாதமில்லை. திருமலை நாயகன் மகாலும் அப்படித்தான்... கோர்ட்டை வைத்து சீரழிக்கிறார்கள், அதை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும். இரண்டாண்டுக்கு முன்பு அசெம்பளியை ஊட்டிக்குக் கொண்டு சென்றோம். அதுபோல இவ்வாண்டு நமது சட்டசபைக் கூட்டத்தை தஞ்சை சரஸ்வதி மகால் மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். எல்லா சட்டசபை அங்கத்தினர்களும் அங்கே சென்று பார்க்க வேண்டியவைகள் அநேகம் இருக்கின்றன. இதற்காகச் செலவானாலும்கூடப் பரவாயில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அங்கே நான் இருந்தது 20 நிமிஷம்தான். இன்னும் எவ்வளவோ அற்புதங்கள் அங்கே இருக்கின்றன. அந்தச் செல்வங்களை நல்ல முறையில் பேணிக் காப்பாற்ற வேண்டியது நம் பொறுப்பு. இதை அமைச்சர் அவர்களும் ஒத்துக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. இந்த சட்டசபைக் கூட்டத்தை அங்கே வைக்கவும் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்..

நீர்ப்பாசனம் சம்பந்தமாக நான் கேரளாவோடு கட்சி பேச வேண்டும் என்று சொல்லவில்லை. நம் ராஜ்யத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி விட்டோம். கேரள முதல் அமைச்சர் பட்டம் தாணுப் பிள்ளை, கடலில் கலந்தாலும் கலக்கட்டும் இதற்கு ஒரு சொட்டுக் கூடத் தரமாட்டோம் என்று சொல்லலாம். எல்லாம் 1½ வருஷம் தான். அவர் சொல்லிக்கொண்டிருந்துவிட்டு போகட்டும். அதற்காக நாம் அதைப்பற்றிய ஆராய்ச்சி, முயற்சி எதையும் கைவிட்டு விட வேண்டாம். அப்பர், பெரியார், வைகை என்று ஒவ்வொன்றாக அடக்கி எல்லாத் திட்டத்தையும் வெற்றிகரமாகச் செய்யவேண்டும். வெல் இர்ரிகேஷனைப் பொறுத்தவரையிலும்—இன்னும் ராமநாதபுரம் ஜில்லாவில் அதிக அளவு கிணறுகள், ட்யூப் வெல்ஸ் எல்லாம் ஏற்படுத்தவேண்டும். இந்த நீர்ப்பாசனத்தோடு கால்நடைகளைப் பற்றியும் சொல்லவேண்டும். அந்த இலாகா நல்லமுறையில் வேலை செய்து வருவதற்காகப் பாராட்டவேண்டும். வெட்டர்னரி ரிசர்ச் போதாது. மெட்ராசில் மட்டும் ஒரு காலேஜ் இருந்து பயன் இல்லை. கோயமுத்தூர் பகுதியில் ஒன்றும், ராமநாதபுரம், மதுரை,

[Sri M. A. Muthiah Chettiar] [6th March 1961

திருச்சி பகுதியில் ஒன்றும் என இன்னும் இரண்டாவது ஏற்பட
வேண்டும். வெட்டர்னரி காலேஜோடு, வெட்டர்னரி ரிசர்ச் அதிகப்
படவேண்டும்.

நம் ராஜ்யத்தில் ஏற்பட்டுள்ள தொழில் அபிவிருத்திக்காக
தொழில் மந்திரியையும் நிதி மந்திரியையும் பாராட்டவேண்டும்.
பல பெரிய பெரிய தொழில்கள் எல்லாம் இங்கே ஏற்பட்டிருக்
கிறது என்றால் அதற்குக் காரணம் அவர்களுடைய பெரு முயற்சி
யேதான். இன்னொன்று. நெய்வேலியைப்பற்றி நாம் கவனிப்பதே
இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.
நான் ஏதோ ஆயாசத்தோடு சொல்வதாக நினைக்கக்கூடாது. நெய்
வேலி நம் ராஜ்யத்தில் இருக்கிறது. அதன் அட்மினிஸ்ட்ரேஷனில்
நமக்கும் பங்குண்டு. ஆனால் நமது மந்திரிகள் அதைப்பற்றிக்
கவலைப்படுவதே இல்லை. நெய்வேலி எங்கோ இருக்கும் வேலியைப்
போல நினைக்கிறார்கள். அந்தப் பக்கம் எத்தனையோ கல்லூரிகள்
இருக்கின்றன. மாணவர்கள் யாரும் ரிசர்ச்சுக்காகக்கூட
அனுமதிக்கப்படுவதில்லை. ட்ரெயினிங் சென்டர் இல்லாமல்
இருக்கலாம். பார்க்கக்கூட அனுமதி கிடையாது. அது என்ன
வேலி. (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி: நமக்கெல்லாம் அது முள் வேலி)
முள் வேலியாக இருந்தால்கூட அதை அகற்றிப் போகலாம்.
மின்சார வேலியாக இருக்கிறது. இனிமேலாவது இத்தகைய நிலை
இல்லாதவாறு--நமது அமைச்சர் அவர்கள் அத்திட்டத்தில் அதிக
கவனம், அதிக ஊக்கம், நெருங்கிய தொடர்பு கொண்டு அதை
நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பவரைப்பற்றி பேசவேண்டும். உண்மையில் மின்சாரத்
துறையில் குந்தா போன்ற பெரிய திட்டங்களை நிறைவேற்றி
முன்னேறியிருக்கிறோம். ஹைட்ரோ ப்ளான்ட் முடிவு அடைந்து
விட்டது. தர்மல் ப்ளான்ட் வேண்டும். வெளியாரின் உதவியோ
டாவது இன்னும் இரண்டு தர்மல் ப்ளான்ட் ஏற்படுத்தி க்ரிட்டோடு
இணைத்தால்தான் நல்லது. பத்து வருஷம். பதினைந்து
வருஷம் என்று வெளிநாட்டாருக்கு லீசுக்காவது கொடுத்து
அவர்களே ஏற்படுத்தலாம் என்றாவது சொல்லவேண்டும்.

ரெயில்வே லைனைப்பற்றி சொல்லிக்கொண்டே இருக்கிறோம்.
டெபுடி மினிஸ்டர் போய் 4 வருஷம் ஆகிறது. ஒன்றும் கிடையாது.
பரமக்குடி, மணியாச்சி, பங்களூர், சாம்ராட் லைன், சேலம்;
பங்களூர் என்று இப்படி சொல்லிக்கொண்டே இருக்கிறோம்.
ஒன்றும் நடக்கவில்லை. அவற்றையும் துரிதப்படுத்த வேண்டும்.

அதேபோன்று சென்னை ஹார்பருக்காக அதன் விஸ்தரிப்புக்கு
86 ஏக்கரா கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். சென்னை
ஹார்பர் விஸ்தரிப்புக்கு என்று இவர்கள் இந்த இயற்கையான
கடற்கரையைக் கொடுத்தது தவறானது என்று சொல்வேன்.
...லிலேயே 5 மைல் தள்ளித்தான் கப்பல்கள் நின்று இருக்
கின்றன. அதுவும் சென்னைத் துறைமுகம் 1805-ல்தான் ஏற்
... இப்பொழுதே இரும்பு பாலம் வரையில் தெற்கே
...ப்பட்டுவிட்டது. இனி தெற்கே போகக்கூடாது.



6th March 1961] [Sri M. A. Muthiah Chettiar]

முன்பே இதைப்பற்றி ஆட்சேபனை செய்தேன். அப்போது பணம்
இல்லை, நான் சொன்னதைக் கேட்டார்கள். இப்போது பணம்
ஏராளம் இருக்கிறது. இதனால் இஷ்டப்படி போகிறார்கள். இனி
யாவது இரண்டாவது கட்டம், மூன்றாவது கட்டம் என்று எடுத்
துக்கொள்ளும்போது ராயபுரத்திற்கு வடக்கே இந்த அபிவிருத்தி
களைச் செய்துகொண்டே போகவேண்டும். எனக்குத் தெரிந்து
இங்கே பல சேரிகள் அழிந்துவிட்டன. ஒரு சேரி அழிந்தது
எனக்கே தெரியும்.

தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றிச் சொன்னதையும்
பாராட்டுகிறேன். தூத்துக்குடி துறைமுகம் அபிவிருத்தி அடைந்
தால்தான் சேதுசமுத்திரத் திட்டம் அபிவிருத்தியாகும்.

நான்கைந்து நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் பார்த்தேன்.
ஈஸ்டர்ன் ஷிப்பிங் கம்பெனிக்கு கப்பல் விடுகிற அனுமதி அங்கே
கொடுக்கப்போவதாக தெரிகிறது. இன்னும் 2 வருஷம் கழித்துத்
தான் அவர்கள் கப்பல் விடப்போகிறார்கள். ஆனால் அதற்குள்
இப்போதே அங்கு போக்குவரத்து தடை செய்யப்பட்டுவிடும்.
ஒவ்வொரு நாளும் வடநாட்டு யாத்திரிகர்களும் சரி தென்னாட்டு
யாத்திரிகர்களும் சரி சேதுசமுத்திர ஸ்னானத்திற்காகத்தான்
இராமேசுவரம் போகிறார்கள். ஸ்டேஷனுக்குச் சென்று பார்த்தால்
தெரியும், நமது ராஜ்யத்திற்கு தினந்தோறும் எவ்வளவு பேர்கள்,
வட இந்தியாவிலிருந்து வருகிறார்கள் என்பது. ஆகவே, இந்த 15 12-30
லட்சம் ரூபாயை நம் சர்க்காரே கொடுக்கவேண்டும். பின்னர், p.m.
கோயில்களைப்பற்றி சிலருக்கு அக்கறையில்லாதிருக்கலாம். ஆனால்
பலருக்கு அக்கறையிருக்கிறது, மந்திரிசபைக்கும் அக்கறையிருக்
கிறது. ஆகவே, இதை "ஈஸ்டர்ன் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு"
கொடுக்கக்கூடாது, அதுபற்றி ஆலோசனை செய்யவேண்டியிருக்
கிறது என்று இச்சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுத வேண்டும்.
பத்து நாட்களுக்குள் அதை ஒப்புவிக்கப் போகிறார்கள். ஆகவே,
சீக்கிரமாக எழுத வேண்டும். ஆகவே, சேதுசமுத்திரத்தில்
ஸ்நானம் செய்யவேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட
வேண்டும்.

அடுத்தபடியாக தஞ்சாவூர் ராஜகோபுரத்தைப் பார்க்க
அக்கோவிலிலுள்ள ஹிந்துக்களைத் தவிர வேறு யாரும் போகக்
கூடாது என்றிருக்கிறதாம். பூட்ஸை அகற்றிவிட்டுக்கூட
வெள்ளைக்காரன் போகக்கூடாதாம். அங்கு நிறைய பெயின்டிங்க்ஸ்
இருக்கின்றன. இதுபற்றிய ஒரு ரெஸல்யூஷன்கூட போடப்
பட்டிருக்கிறதாம். ஆகவே, அதுபற்றியும் கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ஹௌஸிங் விஷயம். நகரில் ஸி.ஐ.டி., இருக்
கிறது, அதில் நானும் ஒரு மெம்பர்தான். பல இடங்கள் இப்
பொழுது அதனால் வாங்கப்படுவதால் விலை ஏறிவிட்டது. ஒன்றை
அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் விளக்கமாக சொல்ல
வேண்டும். சென்னை நகருக்குள் இடங்கள் எடுக்கப்போவதில்லை,
வெளியில்தான் எடுக்கப்போகிறோம் என்று கூறியிருக்கிறார்கள்.
அதுபற்றி விளக்கமாக கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு
கிறேன். சென்னைக்கு சிறிது மைல் தொலைவில் "ஸாட்டலைட்ஸ்

[Sri M. A. Muthiah Chettiar] [6th March 1961

டௌன்ஸ்" ஏற்படுத்த வேண்டும். சென்னை நகருக்கு மேற்கே ஏற்படுத்தப் போகிறார்கள். பூந்தமல்லியில் ஒரு டவுன் ஏற்படுத்த வேண்டும். ஸி.ஐ.டி.-யில் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்குத் தான் கொடுக்க முடிகிறது. மற்றவர்களுக்கு அதிகமாக கொடுக்க முடிவதில்லை. பூந்தமல்லிக்கும் செண்ட் தாமஸ் மவுண்ட்-க்கும் நடுவில் இடம் இருக்கிறது. அங்கு ஒரு 3,000 ஏக்கர் எடுத்து ஒரு டவுன் அமைக்கவேண்டும். பின்னர், லோன் பாலிஸிபற்றி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சென்னை சர்க்கார் வெளியிட்ட லோன்கள் இதுவரை கீர்த்தியோடு நடந்திருக்கிறது. ஆனால் அடுத்த லோன் அப்படி கீர்த்தியோடு நடக்காது என்று எச்சரிக்க விரும்புகிறேன். இது அவர்களுக்கும் தெரியும். ஆகவேதான் அது பற்றி ஜாடையாக, சொல்லப்பட்டிருக்கிறது. காரணம், ரிசர்வ் பாங்கின் பைனான்ஷியல் பாலிஸி தவறாகயிருக்கிறது. 12-ம் தேதி பாங்கர்ஸ் கான்பரன்ஸ் நடக்கயிருக்கிறது. ரிசர்வ் பாங்கின் பைனான்ஷியல் பாலிஸியை மாற்றச் சொல்லவேண்டும், அமைச்சர் அவர்கள். இப்பொழுதுள்ள மார்க்கட்படி மூன்று, நான்கு கோடி ரூபாய்கூட வராது. தாசில்தார்களை, ரெவின்யூ இன்ஸ்பெக்டரை அழைத்துச் சென்று வசூல் செய்கிறார்கள் என்று எதிர்கட்சிக் காரர்களின் ஆட்சேபனைக்காக நிறுத்திவிட்டார்கள். இப்பொழுது பைனான்ஷியல் மார்க்கட் மாறியிருக்கிறது. நம் நிதியமைச்சர் அவர்கள் சொன்னால் அவர்கள் கட்டாயம் கேட்பார்கள். நமது நிதியமைச்சர் அவர்கள் நிதி விஷயத்தில் நல்ல அனுபவம் பெற்றவர்கள். ஆக, ரிசர்வ் பாங்கின், கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவின் பைனான்ஷியல் பாலிஸியை மாற்றினாலொழிய, 200 கோடி கொடுத்தால்தான் மார்க்கட் சீர்படும். அப்பொழுதுதான் செப்டம்பரில் லோன் கிடைக்கும். அமைச்சர் அவர்களுக்கு தெரியாததை நான் சொல்லவில்லை. இதை அழுத்தந் திருத்தமாக சொல்வதற்கே சொல்கிறேன். ஆக, நம் நாட்டின் நிலையை உயர்த்திக்கொண்டு வருவதற்காக பாடுபடும் நிதியமைச்சர் அவர்களையும் சர்க்காரையும் பாராட்டிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI R. CHIDAMBARA BHARATHI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை பூர்ணமாக வரவேற்று நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். ஜனநாயகப் பண்பில் ஊறிப்போன காங்கிரஸ் ஸ்தாபனத்தின்மீது எழுந்த காங்கிரஸ் சர்க்கார் மக்களிடம் பூர்ண நம்பிக்கை வைத்ததின் காரணமாக முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பிக்கயிருக்கிறபடியாலும், தேர்தலுக்கு முந்திய காலமாகயிருக்கிறபடியாலும் மக்களுக்கும், மக்கள் சார்பில் இந்த சபைக்கும் செலுத்தவேண்டிய கடமையை நன்கு ஆற்றியிருக்கிறார்கள். அப்படி ஆற்றும் வகையில் 60 பக்கங்களும், ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட 44 விஷய கோரிக்கையோடு இந்த நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருப்பதற்காக நான் நிதியமைச்சர் அவர்களுக்கும், இந்த சர்க்காருக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஜனநாயக பண்பிலே பழக்கமில்லாதது மட்டுமல்ல ஜனநாயகம் இங்கு ஏற்படுமானால்



6th March 1961] [Sri R. Chidambara Bharathi]

நமது சொந்த நலன்கள் பாதிக்கப்படுமே என்று ஆங்கில சர்க்காரை பல ஆண்டு காலமாக அடி வருடிக்கொண்டிருந்த ஒரு கூட்டந்தார் இதை எதிர்க்கலாம். ஜனநாயக பண்பு நீடித்திருக்க செயல்படுகிற உணர்ச்சி மேலோங்கியதால் அதிலிருந்து விலகியவர்கள் இந்த அறிக்கையை எதிர்க்கலாம். மற்றவர்கள் இந்த அறிக்கையை எதிர்ப்பதற்கு எந்தவித காரணமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல, சுதந்திரம் அடைவதற்கு முன்பாக தமிழ் நாட்டைச் சுற்றிப்பார்த்த எந்தத் தமிழனும் இன்றைய தினம் சுற்றி வந்தால் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவடைந்திருக்கும் இத்தருணத்தில் நகரங்கள்தோறும் புதுப் புதுக் கட்டிடங்களும், புதுப் புதுக் கலாசாலைகளும், மேற்கொண்டு உல்லாசப் பயணம் செய்யும் விதத்தில் அதற்கேற்ற ஸ்தலங்கள், நீர் தேக்கங்கள் இவைகள் எல்லாம் ஏற்பட்டிருப்பது மட்டுமல்ல, இன்றையதினம் சோம்பேறியாக இருக்கக்கூடிய யாராவது பட்டினியாகயிருக்கலாம். ஆனால் செயல் புரிய மனம் உள்ளவர்கள் பட்டினியாகயிருக்கிறார்களா என்றால் அவர்கள் நாடகத்தில் நடிப்பதுபோன்று கூறுவதற்கு ஒப்பாகுமே அல்லாது உண்மையை சொல்லுவதாக மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இன்றைய தினம் கிராமங்களுக்கு சென்று பார்த்தால், 13 ஆண்டுகளுக்கு முன்னால் விவசாய வேலைக்கு 4 அணா கிடைத்துக்கொண்டிருந்த போது, இன்று 2 ரூபாய் கொடுத்தாலும் ஆள் கிடைப்பதில்லை. பெண்களாகயிருந்தாலும், 1½ ரூபாய்க்கு ஆள் கிடைப்பதில்லை. அவ்வளவுதூரம் பொருளாதாரம் உயர்ந்திருக்கிறது. அதற்கேற்றாற்போல் இல்லாது கொஞ்சம் விலைவாசியும் ஏறியிருக்கிறது. இந்த விலைவாசியேற்றம் முன்பு மாதிரியல்ல. 13 ஆண்டுகளுக்கு முன்பு மத்தியில் இருக்கக்கூடியவர்கள் அதிக லாபம் அடைந்தது போல் அல்ல இன்றைய விலைவாசியேற்றம் இருப்பது. இது குறித்து தமிழ்நாட்டின்மீது அன்புடையவர்கள் சிந்திக்கப் பார்க்கட்டும். விலையேற்றம் ஒரு சிலரைப் பாதிக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. நகரங்களில் உத்தியோகங்களில் இருப்பவர்களும், மாதாந்திரச் சம்பளம் பெறக்கூடியவர்களும் இந்த உயர்வால் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இவர்களைவிட அதிக ஜனத்தொகையுள்ள விவசாயிகள், மத்தியதர தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் இவர்களை எடுத்துக்கொண்டு எந்தளவு விலைவாசியேற்றத்தைக் குறைப்பது, எந்த நிலையில் குறைப்பது என்பதைச் சொல்லாமல், அப்படிச் சொன்னால் தேர்தலில் விவசாயிகளிடமிருந்தும், மத்தியதர தொழில் வகுப்பாரிடமிருந்தும் தங்களுக்கு பலன் கிடைக்காது, தேர்தல் பிரசாரமாக பயன்படுத்த முடியாதென்று கருதுகிறார்கள். இப்பொழுதே எதிர்கட்சியினருக்கு தேர்தல் ஜுரம் ஆரம்பமாகிவிட்டது. 102, 105, 106 என்று மேலே போய்க் கொண்டிருக்கிறது. இப்படி மேலேயே போய் அவர்கள் ஹிருதயம் வெடித்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அம்மாதிரி எதிர்கட்சிகளினுடைய இருதயம் வெடித்துவிடாத அளவுக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அறுபது பக்கங்களில் 44 யோசனைகளை தெரிவித்திருக்கிறார்கள். இவ்வகைளில் மேலும் சில யோசனைகள் சொல்லப்பட

வில்லை, இன்னும் சிலவற்றை சேர்க்கவேண்டும் என்று தெரிவித்தால் நன்றாக இருக்கும். அப்படி தெரிவிப்பதாக இருந்தால் சென்ற தேர்தலில் 15 பேர்கள் வந்தது, அப்படியே இந்த தேர்தலிலும் வர முடியும். இல்லையென்றால் இந்த நம்பரையும்கூட எதிர்பார்க்க முடியாமல் போய்விடக்கூடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற சட்டசபையிலும் இதே போன்றுதான் கம்யூனிஸ்டு தோழர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் 15 பேர்கள் இருந்தவர்கள் அடுத்த தேர்தலில் 4 பேர்களாக குறைந்துவிட்டார்கள். பேசுகின்ற நேரத்தில் நாட்டிலுள்ள மக்களுக்கு இன்னின்ன திட்டங்களை நிறைவேற்றிக்கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று ஆராய்ச்சி செய்து பார்த்து சொல்ல வேண்டும். அப்படியிருந்தால்தான் எதிர்கட்சியில் ஏற்பட்டிருக்கும் டெம்பரேச்சரும் குறையும். அதன் காரணமாக அவைகளினுடைய இருதயமும் வெடித்துப் போகாமல் இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கு எதிர்கட்சியிலுள்ள பலர் சொல்லுவது, நீங்களும் எங்களைப்பற்றி குறை சொல்லிவிட்டு பின்னால் எங்களுக்கும் பல குறைகள் இருக்கின்றன, அவற்றை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்கிறீர்களே என்று எதிர்கட்சியிலுள்ள திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும் கேட்கிறார்கள். ஆளும் கட்சி எங்கள் கட்சியாக இருந்தாலும்கூட எல்லோரும் தீர்க்கதரிசிகளாக இருக்கமாட்டார்கள். எங்களைப்போன்ற பெரியவர்கள் யாரும் இல்லை என்று நாங்கள் நினைப்பதில்லை. என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை எங்கள் கட்சி அங்கத்தினர்களும் கூறிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த முறையில்தான் காங்கிரஸ் கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் நடந்துகொள்கிறார்கள். அந்த முறையில் நான் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அப்பர் பெரியாறு திட்டத்தைப் பொறுத்தவரை அது மிகவும் அவசியமான ஒரு திட்டமாகும். அந்த திட்டத்தை இந்த சர்க்கார் விட்டுவிட்டது என்று அரசியல் காரணத்திற்காக வேண்டும் என்றால் பிரசாரம் செய்யலாம். ஆனால் நமது சர்க்கார் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மத்திய சர்க்காரோடு நேரிடையாக தொடர்பு கொண்டிருக்கிறது. ஆகவே, உண்மையில் இதனால் பயன்பெறுகின்ற மக்கள் மீது இங்குள்ளவர்களுக்கு அபிமானம் இருக்குமானால் நிச்சயமாக இந்தப் பிரச்னையைப்பற்றி ஓரளவுதான் இங்கு பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் அந்த பேச்சு மூலம் ஓரளவுக்கு இந்தத் திட்டம் தடைபட்டாலும் தடைபடலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இதைப்பற்றி மாநில சர்க்கார் என்னென்ன செய்துகொண்டிருக்கிறது என்பதைப்பற்றி இந்த சபையில் பல தடவை சொல்லப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் மின்சார உபயோகத்திற்காக விட்டுக் கொடுக்க வேண்டுமானாலும் விட்டுக்கொடுத்து இதை நிறைவேற்றி, இதன் மூலம் திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை போன்ற இடங்களிலுள்ள மக்கள் பயன்படுகிற அளவுக்கு, அதோடு சுமார் 5 லட்சம்



ஏக்கர் பயன்படுகிற அளவுக்கு இந்தத் திட்டத்தை சீக்கிரமாகவே செய்து முடிக்கவேண்டிய முயற்சிகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் வைகை நதியை ஒரு பாசன நதியாக ஆக்குவதற்கு தகுந்தவாறு வைகை அணை அமைந்திருக்கிறது. அதன் மூலமாக கிழக்கு ராமநாதபுரம் பகுதியிலுள்ள இடங்கள் நீர்ப்பாசன வசதி பெறத்தக்க வகையில் வைகையில் இரு கரைகளிலும் கால் வெட்டுவதென்று ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதை சீக்கிரமாகவே நிறைவேற்ற வேண்டும். அதோடு வைகை அணை தண்ணீரை விநியோகம் செய்வதிலும் வரமுறையாக சட்டத்திற்குட்பட்ட முறையை வகுக்க வேண்டும். அப்படி ஏற்படுத்துவோமேயானால் ஏராளமான ஏக்கர் நிலங்களில் சிறப்பாக விவசாயம் செய்யமுடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு வரிவிதிப்பு விஷயத்தில், குறிப்பாக விற்பனை வரி விஷயத்தில் எங்கள் பக்கத்தில் தோல் தொழிலில் அதிகமான பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் ஒன்றரை ரூபாய்க்கு இந்தத் தொழிலை செய்தாலும் அதற்கும் வரி விதிக்கப்படுகிறது. இதில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் பர்மாவிலிருந்தும், சிலோனிலிருந்தும் விரட்டப்பட்டு வந்தவர்கள். இவர்களின்மீது விதிக்கப்படுகின்ற வரியை மாற்றி வேறு ஏதாவது ஒரு வகையில் தனியாக ஒரு முனைவரியிலிருந்து பலமுனை வரியாக ஆக்கப்படுமானால் அதன் மூலம் தமிழ்நாட்டுக்கு நன்மைபயக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். கடைசியாக முக்கியமான ஒரு விஷயத்தைக் கூறி முடித்துக்கொள்ளுகிறேன். விவசாயத்தைப்பற்றி நிதிநிலை அறிக்கையில் சுமார் 24 பக்கங்களில் கூறிவிட்டு, இன்னொரு இடத்தில் இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு மேல் நீர் தேக்கங்கள் மூலம் வசதி பெற்றிருந்தும் நாம் எதிர்பார்த்த அளவுக்கு உற்பத்தி பெருகவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது நம்முடைய முயற்சி குறைவு என்று சொல்ல முடியாது. இப்போது இருக்கின்ற நீர்த்தேக்கங்களைக் கொண்டே இன்னும் அதிகமாக உற்பத்தி செய்யமுடியும் என்று நான் கருதுகிறேன்.

அநேகமாக பெய்ய வேண்டிய மழைகள் எல்லாம் காலாகாலத்தில் பெய்வதில்லை. கார்த்திகை மாதத்தில் பெய்ய வேண்டிய மழை மார்கழி மாதத்தில் பெய்கிறது. சாதாரணமாக புரட்டாசி மாதத்தில் பெய்யவேண்டிய மழை ஐப்பசி மாதத்தில் பெய்கிறது. ஆகவே இதைப்பற்றி விசாரித்து ஒவ்வொரு ஜில்லாவிலும் நல்ல அனுபவமுள்ள விவசாயிகளை அழைத்து, அதோடு நிபுணர்களும் உட்கார்ந்து ஆலோசித்துப் பார்த்து இதில் ஏதாவது மாற்றம் ஏற்படுத்த வேண்டுமானால் மாற்றம் ஏற்படுத்தி தண்ணீர் வினியோக காலங்களை, நீர்தேக்கங்களுக்கு ஏற்றவாறு ஏதாவது மாறுதல் செய்யவேண்டுமானால் அதையும் செய்து பார்த்து அதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்க முடியுமா என்பதைப்பற்றிய முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

[6th March 1961

SRI M. P. SUBRAMANIAM :
தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் சட்டமன்றத் துணைத்
கான நிதிநிலை அறிக்கையை ஏறத்தாழ 60 பக்கங்களில் தயாரித்து அவர்கள் 61-62-ம் ஆண்டுக்
இந்த சபையில் அளித்திருக்கிறார்கள். இந்த அறிக்கை முக்கிய
மான அறிக்கை என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அதற்கு
காரணம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டுக்குப்பின்னால்
டில்லி சர்க்கார் அமைச்சராக வரப்போகிறார் என்று செய்தித்தாள்
களில் காணும் செய்தியாகவும் இருக்கலாம். 1961-62-ல் பொது
தேர்தல் வரப்போகிறது என்கிற காரணத்திற்காக, நாட்டு
மக்களுக்கு அரசியல் கண்ணோட்டத்தில் ஒரு தேர்தல் விக்ஞா
பனத்தை கொடுக்கின்ற முறையில் இது அமைந்திருப்பதும்
இருக்கலாம். கடந்த பத்து ஆண்டு காலத்தில் இரண்டு
ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவடைந்து, மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்ட காலத்தை துவக்க இருக்கின்ற இந்த நேரத்தில் நாட்டு
மக்களுக்கு இதுவரை இந்த அரசாங்கம் சாதித்த காரியங்கள்
எல்லாம் எடுத்துச் சொல்லுகிற அளவில் இந்த அறிக்கை
தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இந்த்
அறிக்கையில் பல விஷயங்கள் சுட்டிக்காட்டியிருப்பதில் சில
அரிய உண்மைகள் வெளிவந்திருப்பதைப் பார்த்து நான் உண்மை
யிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அறிக்கையைத் துருவிப்
பார்த்தால் பல புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
இந்த நாட்டில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் அமுலாக்கப்
பட்டதின் காரணமாக உணவு உற்பத்தி கணிசமான அளவில்
பெருகியிருக்கிறது, ஜவுளி உற்பத்தி பெருகியிருக்கிறது, எண்ணெய்
வித்துக்களை போன்ற பல பொருள்கள் பெருகியிருக்கிறது, வேறு
பல துறைகளிலும் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று கூறி
புள்ளி விவரங்களை கொடுத்துவிட்டு பின்னால் நிதி அமைச்சர்
அவர்கள் கூறுகிறார்கள், "நாட்டின் உற்பத்தி சக்தி
கணிசமான அளவில் பெருகி, மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்
போதுதான் சமுதாயத்திலே இன்று காணப்படுகின்ற குறைகளும்
ஏற்றத்தாழ்வுகளும் நீங்க வழி ஏற்படும்" என்று குறிப்பிட்டிருக்
கிறார்கள். எவ்வளவோ புள்ளிவிவரங்களை கொடுத்திருக்கிறார்கள்.
ஆனால் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் ஒரு
பக்கத்தில் எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பல
முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன, என்று சொல்லிவிட்டு,
அதன் பின்னால் அதன் காரணமாக தனிநபர் வருமானம் போது
மான அளவுக்கு பெருகியிருக்கிறதா என்று பார்த்தால் வரவா
குறைந்து தான் வருகிறது என்று சொல்லக்கூடிய அளவுக்குத்
தான் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இன்னும்
சுருக்கமாகச் சொல்லப்போனால் கடந்த 14 ஆண்டு
களில் காங்கிரஸ் அரசாங்கம் கோடிக் கணக்கான
ரூபாய் செலவழித்தும் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்
கள் முடிவடைந்தும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட துவக்கத்தில்
என்ன நிலைமை இருக்கிறது என்று கேட்டால், ஏழை இன்னும்
ஏழையாகவே இருந்து கொண்டிருக்கிறான் என்பதைத்தான் காண
முடிகின்றது. இதை நான் சொல்லவில்லை, நிதி அமைச்சர் அவர்
களே அவர்களுடைய அறிக்கையில் சொல்லுகிறார்கள். தனி
நபரின் வாழ்க்கைத்தரம் குறைந்து வருகிறது என்றால் இதுதான்



6th March 1961] [Sri M. P. Subramaniam]

பொருள். வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்பது, பெரும் பணக்காரர்களாக இருப்பவாகள் 10 பஸ்களை வைத்து நடத்திக் கொண்டிருந்தவர் இப்போது 12 பஸ்களை வைத்து நடத்திக் கொண்டிருக்க முடிகிறது அல்லது 2 ஆலைகளை நடத்திக்கொண் டிருந்தவர் இப்போது மூன்று ஆலைகளை நடத்த முடிகிறது என்ப தல்ல. இந்த நாட்டிலே வீதியில் திரியக்கூடிய ஏழை மகனின் வருவாய் இந்த ஆண்டு 6 அணாவாக இருந்தது, அடுத்த ஆண்டு 7 அணா ஆயிற்று. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த இந்த நேரத்தில் 12 அணா ஆயிற்று என்று எடுத்துக் காட்டினால் அதுதான் நாட்டின் முன்னேற்றத்தைக் காட்டுவதாக இருக்கும். தனி மனிதனின் வருமானம் வரவரக் குறைகிறது என்று சொல்லக் கூடியதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். காரணம் நாங்கள் இது வரையில் சொல்லிக்கொண்டு வந்த குற்றச்சாட்டை ஒத்துக் கொள்ளுவது போல நிதி அமைச்சர் அவர்களே முன்வந்து ஒத்துக் கொண்டிருப்பதைக் காண நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். (குறுக்கீடு) ஏழை மேலும் ஏழையாகி விட்டான் என்று நாங்கள் சொல்வதை எதிர்த்துப் பேசிக்கொண்டிருந்து விட்டு இப்போது அதை மறைமுகமாக ஒப்புக்கொண்டிருப்பதைத்தான் நான் குறிப் பிட்டுச் சொல்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் இங்கே குறிப் பிடப்பட்டிருக்கிறது, இந்த ராஜ்யத்தில்தான் மற்ற எல்லா ராஜ்யங்களைக் காட்டிலும் அதிகப்படியான அளவுக்கு அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது என்று, ஒரு ஏக்கருக்கு 1,322 ராத்தல் அரிசி உற்பத்தி செய்யப்படுவதாகக் கூறி, இதை அரசாங்கத்தின் சாதனையாகவே காட்டப்பட்டிருக்கிறது. உண்மை நிலையைப் பார்த்தால் விவசாயத்திலே நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் எவ்வளவு மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை மற்ற மாநிலங் களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் இந்தியாவிலே மிகக் குறைந்த தனி நபர் உற்பத்தி எங்கே என்று கேட்கும்போது சென்னை மாநிலத்தில்தான் என்று சொல்லும்போது நாமெல்லோரும் வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது. 1,000 பேர்கள் செய்ய வேண்டிய வேலையை 2,000 பேர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். தனி நபர் உற்பத்தியை எடுத்துக்கொண்டால் அனைத்திந்தியா விலும் இது குறைவு என்பதை இந்த அறிக்கையிலேயே கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக இங்கே குறிப்பிட விரும்புவது, இந்த அறிக் கையில் முக்கியமாக எல்லோரும் மகிழ்ச்சி தெரிவிக்கத் தக்க வகையில் ஒரு சலுகை தரப்பட்டிருக்கிறது. 11-வது வகுப்பு வரையில் சாதி அடிப்படையில்லாமல் எல்லோருக்கும் இலவசமாக கல்வி கற்க சலுகை வழங்கப்பட்டுள்ளது. இதனால் நன்மை அடையக் கூடியவர்கள் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள் என்பது ஒரு புறமிருக்க, 100 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் வரக் கூடியவர்கள்தான் ஏழைகள் என்ற கருத்தில் அரசாங்கம் திட்டம் போட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தால் சாதாரண ஒரு தொழி லாளி கூட இன்றைய தினம் 100 ரூபாய் சம்பளம் வாங்கக் கூடிய நிலையில் இருக்கிறான். பல தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த

பிள்ளைகளும், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த பிள்ளைகளும்
பெற்றோருக்கு 100 ரூபாய் அளவுக்கு வருமானம் வருகிறது என்ற
அடிப்படையில் இந்தத் திட்டத்தின்கீழ் வரமுடியாமல் சலுகை
பெற முடியாமல் போய்விடலாம் என்று நான் இங்கே சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். இன்னும் மற்றொன்று கூற விரும்புவது.
எந்தச் சலுகையாக இருந்தாலும், அதைப்பற்றி முதன் முதலாக
சட்ட சபையில் அறிவிக்க வேண்டுமே தவிர, அரசியல் கட்சிக்
கூட்டங்களிலும் மற்ற இடங்களிலும் பேசிவிடுவது இந்தச்
சபையின் கௌரவத்திற்கு இழுக்குத் தேடுவதாக இருக்கிறது.
எதையும் இந்தச் சபைக்கு முதலில் அறிவிக்காமல் பொதுக்
கூட்டங்களில் அறிவிப்பதானது சரியல்ல என்று எடுத்துக்காட்ட
விரும்புகிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது இந்த அறிக்கையில்
நமது அரசாங்கதிற்கு டில்லி சர்க்காரினால் அளிக்கப்பட்டு வந்த
மானியங்கள் சில நிறுத்தப்பட்டுவிடும் என்று குறிப்பிடப்பட்டிருப்
பதைக் கண்டு மிகவும் வருத்தப்பட வேண்டியிருக்கிறது. இரண்
டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சில திட்டங்களுக்காக மத்திய
சர்க்கார் கொடுத்து வந்த மான்யங்களும், குறைந்த ஊதியம்
பெறும் ஊழியர்களின் ஊதியத்தை அதிகரித்த வகையில் மத்திய
சர்க்கார் அளித்து வந்த மான்யத்தொகையும், ஆக இந்த இரண்டு
தொகைகளும் நிறுத்தப்படும். நாங்கள் மத்திய சர்க்காருக்கு
வேண்டுகோள் விடுத்தும்கூட, மூன்றாவது நிதிக் கமிஷன் அறிக்கை
வரும் வரையிலாவது இருக்கவேண்டுமென்று சொல்லியும் அவர்கள்
ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது
மிகவும் கண்டிக்கத் தக்க போக்கு என்று நான் இங்கே குறிப்பிட
விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்
பிக்கப்பட்ட திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கும்,
வேறு பல திட்டங்களைப் போடுவதற்கும், மத்திய சர்க்கார்
கொடுத்து வந்த இனங்களுக்கும் வருவாய் தேட வழிவகைகளைச்
செய்ய வேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவது நிதிக்
கமிஷன் அறிக்கையில் மாநில சர்க்காருக்கு எலாஸ்டிக் இன்
கமாக வரக்கூடிய வரிகளை ஒதுக்குவார்கள் என்ற நம்பிக்கை
இருக்கிறது. இது வரையில் கொடுத்து வந்த கணிசமான உதவியை
நிறுத்திவிட்ட காரணத்தினால் பாதகம் ஏற்படாமல் தொடர்ந்து
அந்தத் திட்டங்களை நடத்துவதற்கு வருவாய் தேட வழிவகை
செய்யவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் மீண்டும் குறிப்பிட
விரும்புவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 12
லட்சம் டன் உற்பத்தி செய்யவேண்டும் என்று லட்சியம் வைத்துக்
கொண்டதில் 7 லட்சம் டன்தான் உற்பத்தி செய்ய முடிந்தது
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மைக் காரணம் இதற்கு
அவர்கள் சொல்வது உரத் தட்டுப்பாடு என்பதாகும். ஆனால் அது
காரணம் அல்ல. ஏனென்றால் இன்னும் தமிழ் நாட்டைப் பொறுத்த
வரையில் பல லட்சக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் இன்றும்
சாகுபடிக்குக் கொண்டுவரப்படவில்லை. பல அங்கத்தினர்கள்
சுட்டிக்காட்டியது போல 10 ஆண்டு காலமாக தரிசு நிலங்களை
ஏழை மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பகிர்ந்து கொடுத்



தும் இது வரையில் அவைகளில் பயிர் செய்யப்படவில்லை.
நிலமில்லாத ஏழையாக இருக்கக்கூடியவனுக்கு நிலத்தைக்
கொடுத்தும் அதனை சாகுபடி செய்ய மூலதனம் இல்லாத காரணத்
தினால் அப்படியே ஒன்றும் செய்யாமல் விட்டு வைக்கப் பட்டிருக்
கிறது. அரசாங்கம் இதற்கு இது வரையில் ஒரு திட்டம் வகுக்க
வில்லை, ஆகையால் தவறு இங்கே இருக்கிறது என்று நான் குறிப்
பிட விரும்புகிறேன். எவ்வளவுதான் உடத்தை அதிகமாகத் தயார்
செய்து கொடுத்தாலும் இந்த லட்சியத்தை ஒரு நாளும் நம்மால்
அடைய முடியாது என்று திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்பு
கிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது சிறிய நீர்ப்பாசனத்தைப்
பற்றி. இன்றையதினம் எவ்வளவுதான் அரசாங்கம் சினிமா படம்
போட்டுக் காண்பித்தாலும் மக்கள் நம்பிக்கை பெற மாட்டார்கள்.
நம்பிக்கை பெற வேண்டுமானால் சர்க்கார் இதைப் போன்ற காரியங்
களைப் புறக்கணிக்கக் கூடாது. இரண்டாவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் சிறிய நீர்ப்பாசனத்திற்காக 8 கோடி ரூபாய் செலவு
செய்திருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னும்
8 கோடி ரூபாய் செலவு செய்ய இருக்கிறார்கள் என்று
இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது ராஜ்யத்திலே 27,000
ஏரிகளும் குளங்களும் இருப்பதாக புள்ளிவிவரம் கூறுகிறது.
பெரும்பாலும் அதன்கீழ் இருக்கவேண்டிய ஆயக்கட்டு இல்லாமல்
இருக்கிறது. ஏற்கெனவே 100 ஏக்கர் ஒரு குளத்தின்கீழ் பயிரிடப்
பட்டு வந்ததென்றால் இன்றைய தினம் 50 ஏக்கர் நிலத்தைப்
பயிரிடக்கூட தண்ணீர் இல்லை பெரும்பாலான குளங்கள் செப்ப
னிடப்பட்டு, தூர் வாரி, ஆழப்படுத்தப்பட வேண்டும். இதற்காக
அரசாங்கம் நிதி ஒதுக்கியிருக்கிறதா என்றால் இல்லை. 36 லட்சம்
ரூபாய் ஒதுக்கி 47 குளங்களை இரண்டாவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் செப்பனிட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 80 லட்சம்தான் ஒதுக்கப்
பட்டிருக்கிறது. இந்த 80 லட்சம் ரூபாயில் 100 குளங்களைச்
செப்பனிடலாம். 27,000 குளங்களில் 100 குளங்களை மட்டும் செப்ப
னிட்டால் ஏற்கெனவே இருக்கக்கூடிய நீர்ப்பாசன வசதிகள்
அற்றுப்போய்விடும் என்று கூற விரும்புகிறேன். உணவு உற்பத்தி
பெருக இந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தில் அரசாங்கம் முக்கிய
அக்கறை செலுத்துவது மிகவும் அவசியம் என்று இந்த நேரத்தில்
குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இங்கே குறிப்பிட விரும்புவது, சமுதாய நலத்
திட்டத்தைப் பொறுத்த வரையில் சமுதாய நலத் திட்ட அதிகாரி
கள் தாங்கள் சர்க்கார் ஊழியர்கள் என்ற எண்ணமே இல்லாமல்
ஆளும் கட்சியை திருப்திப்படுத்த வேண்டியவர்களாக இருக்
கிறோம் என்ற எண்ணம் எல்லா கிராமங்களிலும் நிச்சயமாக
இருக்கிறது என்று சான்றோடு, உதாரணத்தோடு என்னால்
கூற முடியும். இந்த அதிகாரிகள் சமுதாய நலத்
திட்டத்தின்கீழ் பல விழாக்கள் கொண்டாடப்படும்போது
காங்கிரஸ்காரர்களை அழைத்து, விழாவைப் பற்றிய சுவரொட்டி
களில் போடும்போது மண்டல காங்கிரஸ் கமிட்டித் தலைவர் என்று
கூடப் போட்டு அத்தகைய விழாக்களில் அவர்களை அழைக்கிறார்

[Sri M. P. Subramaniam] [6th March 1961

கள். அதே நேரத்தில் மற்ற கட்சிக்காரர்களை அழைப்பது கிடையாது. அப்படி அழைத்தாலும் கம்யூனிஸ்ட் கட்சி, டி. எம். கே. கட்சித் தலைவர்களின் பெயரைப் போட அஞ்சுகிறார்கள். இதை நான் ஆதாரத்தோடு கூற விரும்புகிறேன். காங்கிரஸின் 60 ஆண்டு நிறைவு வைரவிழாவில் பல பி.டி.ஓ.-க்கள் பங்கு கொண்டு அதைச் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டிய வேலைகளைச் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள். காரணம் அப்போதுதான் அங்குள்ள காங்கிரஸ்காரர்கள் அமைச்சர் வரும்போது அவரைப்பற்றி நான்கு வார்த்தைகள் சொல்வார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நிலைமை இருக்கிறது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் அதிகமாகச் சொல்ல வேண்டுமானால் சமுதாய நலத் திட்டத்தை நிறைவேற்றும் முக்கிய பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற பெரிய அதிகாரிகள்கூட அதிகாரிகளைச் சந்தித்து ஐந்தாண்டுத் திட்டங்களில் காங்கிரஸ் இந்தக் காரியங்களைச் செய்திருக்கிறது, டி.எம்.கே. பிரசாரங்களை நம்பவேண்டாம் என்று மக்களுக்குச் சுட்டிக்காட்டுங்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு கட்சிப் பிரசாரம் இருக்குமானால் இந்த நாட்டிலே ஜனநாயகம் தழைத்து ஓங்குமா என்று நிதி அமைச்சர் அவர்கள் யோசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக முக்கியமான பிரச்னை தொழில் வளர்ச்சி. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 291 கோடி ரூபாய் நம் அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களின் வாதப்படி பார்த்தாலும் நம் ராஜ்யத்தில் 34 கோடி ரூபாய் அதிகம் செலவு செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். 13 கோடி ரூபாய் வருவாய் தேடிக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்த்ததில் 24 கோடி ரூபாய் கிடைத்தது என்று சொல்லுகிறார்கள். மக்களிடத்தில் எதிர்பார்த்ததை விட கடன் கிடைத்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். எல்லா விதத்திலும் ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்தி வைத்ததில் தங்களுக்கு தனிச் சிறப்பு இருக்கிறது என்று பெருமை அடித்துக் கொள்கிறவர்கள் அதிகப்படியான சலுகைகளை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றிருக்கவேண்டும். அதற்கு மாறாக கிடைக்க வேண்டிய தொகை குறைக்கப்பட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன். இது வரையில் மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் என்ன செலவு செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், பெரம்பூர் கோச் பாக்டரியைத் தவிர குறிப்பிடத் தகுந்த திட்டம் வேறு ஒன்றுமில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் 7,000 கோடி வரையில் செலவு செய்து, தமிழ் நாட்டில் காபிடல் இன்வெஸ்ட்மெண்ட் என்ன என்று கேட்டால் 7½ கோடி ரூபாயில் பெரம்பூர் கோச் பாக்டரியைத் தவிர வேறு ஒன்றுமில்லை. நெய்வேலியைத் துவக்கியிருக்கிறார்கள். என்ன ஆகப்போகிறது என்று பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

1 p.m. நெய்வேலித் திட்டத்தை பெரிய அளவில் ஏற்படுத்தப் போவதாகச் சொல்லப்படுகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நம்முடைய மாகாணத்திலே அதிக அளவில் தொழில் மயமாக்க



6th March 1961] [Sri M. P. Subramaniam]

இருக்கின்றோம் என்று இந்த அரசாங்கம் சொல்லிக்கொண்டு வருகிறது. அதுவும் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். நிதி மந்திரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது நீலகிரி ஜில்லாவில் கச்சா பிலிம் தொழிற்சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று. அதேபோல், கிண்டியில் ரண சிகிச்சை கருவிகள் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறினார்கள். நிதி அமைச்சர் அவர்கள் இந்த இரண்டையும்தான் உறுதியாக கூறியிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கனரக மின்சாரக் கருவிகளை உற்பத்தி செய்ய ஏற்படுத்தப்போகும் இரண்டு தொழிற்சாலைகளில் ஒன்றை இங்கு ஏற்படுத்தக்கூடுமென்றும் நிதி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த நம்பிக்கை பல ஆண்டுகளாக தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அது இங்கு ஏற்படப் போவதில்லை.

மூன்றாவது திட்டத்திலே ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்கின்ற இடத்திலே, மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய பங்கு 380 கோடி ரூபாய்தான். ஆகவே நமக்கு கணிசமான அளவு உதவித் தொகை கிடைக்கவில்லை என்று நன்கு தெரிகிறது. ஆகவே இதிலிருந்து நமக்கு இத்திட்டம் நிறைவேற்றப்படக்கூடும் என்ற நம்பிக்கை ஏற்படுவதற்கில்லை. ஆனால் இந்த இடத்திலே இதை ஏன் இப்படி குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், தேர்தலுக்கு முன்னாலே நாட்டு மக்களுக்கு இப்படி ஒரு திட்டம் அமைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது என்று அவர்களுடைய பிரசாரத்திற்கு ஒரு சாதனமாக அமைத்துக்கொள்ள செய்திருக்கிறார்களே தவிர உண்மையிலேயே நாட்டு மக்களுக்கு, குறிப்பாக ஏழை மக்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையில் இந்த வரவு செலவுத் திட்டம் அமைக்கப்படவில்லை. இந்த ஒரே குறிக்கோளைக் கருத்தில் கொண்டு, காங்கிரஸ் பிரசாரத்திற்காகவே சிரத்தையுடன் இந்த உரை தயாரிக்கப்பட்டிருக்கிறதே தவிர, இந்தச் சபையின் கவுரத்தைக் காப்பாற்றக்கூடிய முறையில் நிதி அமைச்சர் அவர்களின் உரையில்லை என்பதைக் கூறிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* SRIMATHI A. SUARES : Mr. Deputy Speaker, Sir, this year's budget estimate shows a revenue deficit of Rs. 2,85 lakhs. In the current year there was originally a deficit of Rs. 34 lakhs. Besides covering this deficit the Revised Estimates show a revenue surplus of Rs. 1,23 lakhs after paying Rs. 4 crores for the implementation of the Pay Commission recommendations for Government employees and teachers. I think this deficit of Rs. 2,85 lakhs will also be covered. The no-additional-taxation feature of the budget is welcomed by everyone.

I wish to congratulate the Government on their successful completion of the Second Five-Year Plan. They have not only reached the original target of Rs. 1,52 crores but it has been exceeded by Rs. 34 crores. The year 1961–62 will be the first year of the Third Five-Year Plan. The proposals laid down in the Budget

for the starting of the new plan present a hopeful picture of progress and advancement in every department. Emphasis is rightly placed on increased food production. This includes increase in chemical fertilisers, organic manures, improved seeds and increased minor irrigation. During the coming financial year we hope to secure lignite from the Neiveli lignite mines. The first generator of power will function at the same time and the subsidiary industries will be started. A new era of industrial progress is envisaged in the coming years and the whole State will look forward to the success of the Neiveli Lignite Project.

In the past years at the Budget session I have always made a plea for the special grants for Anglo-Indian Education. This year there is need for me to make this request, for the Budget Estimate shows provision for the full amount of grants given to Anglo-Indian schools in the past. Our protection period of 10 years ended in January 1960, and the Madras Government was kind enough to allot the same amount of grants in 1960-61. Since then we have received an assurance from the Hon. Minister for Education that the Madras Government considers Anglo-Indian education as a problem of their own and not a separate problem. The Government would not only maintain the high standards of this type of education but also improve them. This assurance was given by the Hon. Minister for Education to the heads of Anglo-Indian schools at a recent function. On that occasion, he was pleased to state that in the process of the integration of India, the Anglo-Indian community was playing a notable part and that the Government was fully conscious of the same. I would like to assure the Government that the Anglo-Indians will continue to play their part in the national development of the country.

There is a welcome announcement in the Budget speech about the extension of free educational concessions on the basis of economic backwardness rather than on the basis of communal status. I congratulate the Government on their decision to etxend free education up to the XI Standard to all children irrespective of caste or creed. I presume that this concession will apply also to Anglo-Indian schools. This is a great step forward. Free education up to XI Standard will ensure a minimum of High School education for larger number of boys and girls. This concession will provide a better type of worker in the numerous industries that are now springing up in the State. With this higher minimum of education polytechnic schools will attract larger numbers and these will in due course be absorbed in our factories.

Another encouraging announcement in the Budget speech is the implementation of the scheme of compulsory primary education during the Third Five-Year Plan. This scheme will bring all children within the age group of 6-11 to school. Attempts had been made during the last 4 or 5 decades to induce children from the villages to attend schools at least for a period of five years in order to attain permanent literacy. Great educationists like the late Mr. Champion and Mr. Statham tackled this problem in the



past but no tangible results could be achieved as there was no compulsion. Pilot schemes to enforce compulsion in small areas were tried but they had to be given up because of the poor response from the people. But things are different now and with the introduction of a planned programme of compulsory primary education to cover the whole State, the goal of permanent literacy is in sight. I am sure that the Madras State will once again lead other States in India in this educational reform.

Mention is made in the Budget speech, of the Integral Coach Factory which is making great progress. I wish to make a representation on behalf of the employees of the Integral Coach Factory. This factory went into production in 1955. It has developed rapidly and will produce 700 coaches per year from 1961-62. The number of employees has risen to about 6,000 or more. To provide for this large number only 1,000 quarters have been built. Consequently, at least 5,000 employees have to find accommodation wherever it is available. At present they live in Perambur, Ayanavaram, Villivakkam, Madras City and elsewhere. It is surprising that transport facilities have not been provided for the large number of workers.

There are two parallel roads near the Integral Coach Factory. One of them is Constable Road which is within railway territory and the other Konnur High Road has bus route No. 20 of the State Transport. Thousands of people have to go to work in the Coach Factory and in the Southern Railway Workshop. There is no bus connection to these places as well as to the Perambur Railway station. Between these two parallel roads there are Railway offices, the Railway hospital and Railway Quarters. To the north of the Constable Road are located the Integral Coach Factory and Southern Railway Workshop. To the south of Konnur High Road lie the Integral Coach Factory Colony and more Railway Quarters.

I would request the Government to take up this question at an early date and to provide a diversion of bus route No. 20 or any other route to touch Constable Road and Perambur Railway Station. Thousands of children have to attend schools in Villivakkam, Perambur and Madras City proper. At present, they have either to walk, or use jutkas and cycles to go to the Perambur Railway Station to catch a local train. If there is connection between the two parallel roads and the Perambur Railway Station, it would save time and also money. This is an important Coach Factory. Distinguished visitors like Her Majesty Queen Elizabeth, His Royal Highness Prince Philip and other high dignitaries of Europe have visited Coach Factory. In view of the importance of this factory and the large number of workers involved, I respectfully appeal to the Government to look into this matter and to request the Railway Authorities for a "right of way" through the railway ground. The General Manager is prepared to consider the proposal if the State Transport Authorities will make a representation to him. I hope the Government will take up this matter at an early date.

[6th March 1961

* SRIMATHI HEMALATHA DEVI : கனம் உதவி சபா
நாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள்
சமர்ப்பித்து உள்ள 1961-62-வது ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இது
வரையில் நமது அரசாங்கம் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள்
மூலமாக செய்துள்ள காரியங்களையும், இனி மூன்றாவது ஐந்
தாண்டுத் திட்டத்தில் செய்யப்போகும்படியான காரியங்களையும்
நல்ல விளக்கமாக தெளிவாக எடுத்து உரைத்திருக்கிறார். நான்
அதை மனமார வரவேற்று பாராட்டுகிறேன். நமது நிதி அமைச்சர்
அவர்களையும், இந்த அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வேண்டி உறு
துணையாக இருந்து ஆற்றல் புரிந்த அத்தனை பேர்களுக்கும் என்
னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாட்டின்
முன்னேற்றத்திற்காக வேண்டி நல்லெண்ணம் படைத்த எல்லோ
ருக்கும் இந்த அறிக்கையானது நல்லதோர் அறிக்கை என்றே
தோன்றும். ஆனால், எதிர்ப்பு பேசுகிறவர்களுக்கோ அப்படித்
தோன்றவில்லை. ஏதோ பொதுமக்களிடையே திராவிட நாடு
அமைத்துவிடுகிறோம் என்று தேர்தல் பிரசாரம் செய்யலாம்
என்றாலோ, திராவிட நாடு அமைப்பது என்பது பகல் கனவு என்று
பொது மக்கள் புரிந்துகொண்டு விட்டார்கள். அதைப்பற்றி பேசு
தல் பிரயோசனம் இல்லை என்று தெரிந்துவிட்டது. தமிழ் நாட்டுப்
பிரச்னையை வைத்து மக்களிடையே பிரசாரம் செய்யலாம்
என்றாலோ தமிழ் மொழியை ஆட்சி மொழியாக அமுலாக்கிய
அரசாங்கம் சென்னை ராஜ்யம் என்பதை தமிழ் நாடு என்று மாற்றி
அமைப்பதாக குறிப்பிட்டு விட்டார்கள். இனியும் அதைப்பற்றி
பேசுவதில் பிரயோசனம் இல்லை. எனவே தேர்தல் சமீபித்து
விட்டதே, இதுதான் கடைசி நிதி நிலை அறிக்கை, இதை வைத்து
ஏதாவது குற்றங்குறை கண்டுபிடிக்கலாம் என்று கண்ணில் விளக்
கெண்ணை போட்டுக்கொண்டு பார்க்கலாம் என்றாலோ, சென்ற
ஆண்டு நிதி நிலை சமர்ப்பிக்கும்பொழுது கனம் நிதி அமைச்சர்
அவர்கள் இனி வரி எதுவும் போடப்போவதில்லை என்று விளக்கம்
தந்தார்கள். அதுபோன்றே இப்பொழுது சமர்ப்பித்துள்ள அறிக்
கையிலும் ஒருவிதமான வரியையும் குறிப்பிடவில்லை. இது எதிர்க்
கட்சிக்காரர்களுக்கு ஒரு பெரிய ஏமாற்றத்தையும், பயத்தையும்
கூட அளித்திருக்கிறது என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு
இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏதோ மாநில சர்க்கார்
வரிபோடாவிட்டாலும், மத்திய சர்க்கார் வரி போட்டிருக்கிறார்
களே, அது ஒரு பெரிய குறைபாடு என்று சொல்லுகிறார்கள்.
மேலும் பஞ்சாயத்து யூனியன் மூலம் வரிகளை வசூலிக்கிறார்கள்
என்று கூறுகிறார்கள். ஆனால், அதை அவர்கள் சொல்லும்பொழுது
நான் ஒரு விளக்கத்தை மட்டும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.
ஆட்டுக்குட்டி ஓநாய் கதை என்று சொல்லுவது எல்லோருக்
கும் தெரியும். ஆட்டுக்குட்டி ஓடைக்கரையில் பள்ளத்தில் நின்று
கொண்டிருந்தது. மேட்டில் நின்றிருந்த ஓநாய் ஆட்டுக் குட்டியைப்
பார்த்து 'நான் குடிக்கும் தண்ணீரை கலக்கிவிட்டாயே? எனவே
நான் உன்னை கடித்துத் தின்றுவிடுகிறேன்' என்று சொன்னது.
ஆட்டுக்குட்டி அதற்கு என்ன சொல்லிற்று என்றால், 'நானோ
பள்ளத்தில் இருந்து தண்ணீர் குடிக்கிறேன். நீதானே மேட்டில்
இருக்கிறாய். அப்படியிருக்கும்பொழுது நான் எப்படி நீ குடிக்கும்
தண்ணீரை கலக்கிவிட்டிருக்க முடியும் என்று கேட்டது. அதற்கு



6th March 1961] [Srimathi Hemalatha Devi]

ஓநாய் 'நீ இப்பொழுது தண்ணீரை கலக்கவில்லை என்று சொன்னாலும் உன்னுடைய பாட்டனோ, பாட்டியோ முன்னொரு காலத்தில் கலக்கி விட்டிருக்க வேண்டும். ஆகவே, உன்னை இப்பொழுது கடித்துத் தின்னப் போகிறேன்' என்று சொல்லிற்றாம். அதுமாதிரி மாநில அரசாங்கம் வரி போடவில்லை என்றாலும், மத்திய சர்க்கார் வரி போட்டிருக்கிறார்கள், பஞ்சாயத்துகள் வரி வசூலிக்கிறார்கள் என்று குறை கூறுகிறார்கள். வீட்டுவரி மூலம் பஞ்சாயத்துகள் வசூலிக்கும் அளவிற்கு இணைப்பு மானியத்தை சர்க்காரிடமிருந்து பெறுகிறோம். உண்மையிலேயே நாடு முன்னேற்றம் அடையவேண்டுமென்றால் பஞ்சாயத்துப் பகுதிகளில் உள்ள குறைகளைப் போக்கவேண்டும் என்று சொன்னால், ஒரு பங்குத் தொகையை அந்தப் பகுதி மக்களிடமிருந்து வசூல் செய்து, அதற்கு இணைப்பு மானியத்தை அரசாங்கத்திலிடமிருந்து பெற்றால், அதுபற்றி சந்தோஷப்படவேண்டும். எதிர்ப்புப் பிரசாரம் செய்யக்கூடியவர்கள் பஞ்சாயத்து யூனியன்களில் போடும் வரியின் விவரத்தை கிராமந்திரங்களுக்குச் சென்று பிரசாரம் செய்வார்களேயானால், உண்மையிலேயே கிராம மக்கள் இவர்களுடைய பேச்சுக்கு இடம் கொடுக்கமாட்டார்கள். இது நம்முடைய காரியம். நம்முடைய பகுதிக்கு வேண்டிய ஒரு நல்ல திட்டம், பஞ்சாயத்து திட்டம், இதை நீங்கள் குறையாகச் சொல்லுகிறீர்களே இவ்வளவு நல்லது செய்யும் ஆளும் கட்சியினர் இருக்கையில் நீங்கள் எதற்கு அங்கத்தினர்களாய் அங்கு செல்வது என்று மக்களே நல்ல விளக்கமாக விடைகூறி அனுப்பிவிடுவார்கள். அந்த ஒரு பயத்தினால்தான் இதைத் தேர்தல் அறிக்கை என்றும் இம்மாதிரி குறையாகப் பேசுகிறார்கள்.

அவர்கள் நிதி நிலை அறிக்கையின் மீது கூறும் இன்னொரு குற்றச்சாட்டு என்னவென்றால், சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செய்யப்படக்கூடிய பிரசாரம் அத்தனையும் அரசாங்கத்தை பொறுத்தது அல்ல. ஆளும் கட்சியின் பலத்தை அதிகப்படுத்துவதற்கு அவர்கள் காரியங்களை செய்து வருகிறார்கள் என்றெல்லாம் குறை கூறுகிறார்கள். இதைக் குறித்து நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அரசியல் வேறு, அரசாங்கம் வேறு என்பதை முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும். அரசாங்கம் செய்யும்படியான காரியங்கள் அத்தனையும் செய்வதற்கும் மக்களிடம் எடுத்துக்கூறவும்தான் சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் இருக்கிறபடியால், அந்தப் பகுதிகளில் மக்களுக்கு நன்மை பயக்கும் வேலைகளை மேற்கொண்டு, அங்குள்ள குறைகளைப் போக்கி நல்ல காரியங்களைச் செய்யவேண்டும். அது அரசாங்கத்தினுடைய காரியம்தான். அரசாங்கத்தினுடைய காரியங்களைச் செய்யும் பொழுது அரசாங்கம் செய்த நல்ல காரியங்களையும் எடுத்துச் சொல்லித்தான் ஆகவேண்டும். அப்படி அரசாங்கத்தின் சார்பாகச் சொல்லும்பொழுது ஆளும் கட்சி காங்கிரஸ் கட்சியாக இருப்பதால், அவர்கள் கட்சிக்காக பிரசாரம் செய்துவருகிறார்கள் என்று குற்றம்சாட்டுவது பொருத்தம் ஆகாது என்பதையும் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

[Srimathi Hemalatha Devi] [6th March 1961

அடுத்தபடியாக, கல்வியைப் பொறுத்தமட்டில் 11-வது வகுப்பு
வரையில் எல்லா ஏழை குழந்தைகளும் ஜாதி அடிப்படையில்
இல்லாமல் வருமான அடிப்படையில் இலவசக் கல்வி அளிப்ப
தாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது மிக்க மகிழ்ச்சியுடன் வர
வேற்கத்தக்கதும் பாராட்டத்தக்கதுமாகும். ஔவையார் அவர்கள்
ஜாதி இரண்டு ஒழிய வேறு இல்லை என்று கூறியிருக்கிறார்கள்.
இன்றையதினம் ஜாதிகளையெல்லாம் ஒழித்துவிடவேண்டுமென்று
சொன்னால், அவ்வளவு சுலபம் அல்ல. அது அவ்வளவு சுலபமான
காரியம் அல்ல. பல்வேறு ஜாதிகளில் இருக்கும்படியான நடை,
உடை, பாவனை, பழக்கவழக்கங்கள் அத்தனையும் மாற்றப்பட
வேண்டும். அப்பொழுதுதான் ஜாதிகளை வேரோடு களைந்து
எறிய முடியும். அதற்கு காலதாமதம் ஆகும். சுதந்திரம்
அடைந்த பிறகு நாம் எல்லோரும் சோஷலிச சமுதாயம்
அமைக்கவேண்டும் என்று சொன்னால், முற்பட்டவர்கள்,
பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள்
என்று 3 பிரிவாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையில்
காரியங்களைச் செய்ய முற்படும் காலத்தில், ஹரிஜனங்
களும், பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களும், தாழ்த்தப்
பட்டவர்களும் முற்பட்டவர்கள் இருக்கும்படியான நிலைமையை
அடையவேண்டும். அப்பொழுதுதான் நாம் சோஷலிச சமு
தாயத்தை அடைபவர்களாக இருக்க முடியும் என்று உண்மை
யிலேயே நாம் காரியங்களைச் செய்துவருகிறோம். அந்த முறையில்
பார்க்கும்பொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்டவர்
களுக்கும் பல ஆண்டுகளாக சலுகைகள் வழங்கப்பட்டாலும்கூட
இப்பொழுதான் அதை ஓரளவுக்கு அவர்கள் உணர்ந்து அந்தச்
சலுகைகளைப் பெற முன்வருகிறார்கள். முற்பட்ட இனத்தைச்
சேர்ந்தவர்கள்கூட பிற்பட்ட இனத்தவர்கள் என்று கூறி சலுகை
களைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்று அறிகிறோம்.
இம்மாதிரி குறைகளைப் போக்கவேண்டும். பிற்பட்ட இனத்தவர்
களும், தாழ்த்தப்பட்டவர்களும் முற்பட்ட இனத்தவர்களுடன் சம
அந்தஸ்து அடையவேண்டும் என்றால் மேலும் இந்த சலுகைகளை
சில காலத்திற்கு நீடிக்கவேண்டும். அதேபோன்று உத்தியோகஸ்
தர்கள் நியமனம் செய்வதிலும் எல்லோரும் சமம் என்ற நிலைமை
ஏற்படுத்தவேண்டும். அதோடுகூட, தாழ்த்தப்பட்டவர்களுக்கு
இவ்வளவு தொகை, பிற்பட்ட இனத்தவர்களுக்கு இவ்வளவு
தொகை, முற்பட்ட இனத்தவர்களுக்கு இவ்வளவு தொகை
என்று ஒதுக்கி வைத்து அதில் எல்லா ஏழைக் குழந்தை
களுக்கும் சலுகை கொடுத்துவிட்டால் மிகச் சாலச் சிறந்ததாக
இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய தொகுதி சம்
பந்தப்பட்ட மட்டில் மான்யக் கோரிக்கைகள் விவாதத்தின்மீது
எடுத்து உரைக்கலாம் என்று எண்ணி, இத்துடன் என்னுடைய
உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* Sri P. JAYARAJ : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர்
அவர்களே, இந்த 1961-62-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை
கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்ததை வரவேற்று
என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். இவ்வாண்டு
அறிக்கையிலே ஏழை மாணவர்கள் எல்லோருக்கும் ஜாதிப்



6th March 1961] [Sri P. Jayaraj]

பாகுபாடு இல்லாமல் 11-வது வகுப்பு வரை இலவசக் கல்வி அளித்திருக்கிற திட்டத்தை ஏழை மக்களாகிய யாரும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இவ்வாண்டு 2 கோடி 85 லட்சம் ரூபாய் துண்டு விழுந்தாலும்கூட, எவ்விதமான வரி விதிப்பும் இல்லாமல் இந்த வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டுவந்திருப்பதை யாவரும் வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே சமயத்தில் தஞ்சை ஜில்லாவிலே சென்ற நவம்பர் மாதத்திலே பெய்த பெருத்த மழையின் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு, விளைச்சல் பாதிக்கப்பட்டு இன்று விவசாயிகள் கவலைக்குள்ளாகியிருக்கிறார்கள். இந்த வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட கஷ்டத்தைத் தணிக்க சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்து உணவு, உடை எல்லாம் கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் நீண்ட காலம் வாழ்வதற்கு, அவர்களுடைய வாழ்க்கையை வளம்பெறச் செய்வதற்கு சர்க்கார் வழிவகை செய்யவேண்டும். கிழக்கு தஞ்சைப் பகுதியிலே சுமார் 40,000 ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக சாகுபடியாளர்கள் நெல்லை அளக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து நெல்லை ஒரே அடியாக அளந்துவிடவேண்டுமென்று அங்கேயுள்ள மிராசுதார்கள் கேட்க முன்வரவில்லை. காரணம் என்னவென்றால், இந்த சாகுபடியாளர்கள் நெல் அளக்கவில்லை என்றால், அந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு ரெவென்யூ கோர்ட்டுக்குப் போய் எப்படியாவது அவர்களை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி விடலாமென்று நினைக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் அறுவடை செய்ததிலே கண்டுமுதல் சரியாகக் காணவில்லை. மிராசுதார்களும் நெல்லை எடுக்கவில்லை. ஆகவே, இந்த விவசாயிகளை நிலத்தை விட்டு அப்புறப்படுத்தாமல் இருப்பதற்கு சர்க்கார் உடனடியாக ஒரு சட்டத்தையோ அல்லது ஆர்டினன்ஸையோ கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கீழ்த் தஞ்சை ஜில்லாவிலே சீர்காழி, மாயவரம், நாகப்பட்டிணம், நன்னிலம், திருத்துறைப்பூண்டி போன்ற கடற்கரைப் பகுதிகளிலே உள்ள விவசாயிகள்தான் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குத்தகை பாக்கியிருந்தால் அதைத் தள்ளுபடி செய்து கொடுப்பதுடன், விவசாயிகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தாமல் இருப்பதற்கு சர்க்கார் உடனடியாக உத்தரவுபோடவேண்டும். இல்லையென்றால் அங்கே இருக்கிற பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ஏதுவாகும். அதை உடனடியாக சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு கன்ஸிலியேஷன் கோர்ட், ரெவென்யூ கோர்ட் என்று ரெண்ட் கோர்ட்டுகள் இருக்கின்றன. 40-வாரச் சட்டத்திலே கோர்ட்டில் விவசாயிகள் ஏஜண்ட் ஆஜராகலாம், மிராசுதார்கள் ஏஜண்ட் ஆஜராகலாம் என்று இருந்தது. 60-வாரச் சட்டம் வந்த பிறகு விவசாயிகள் ஆஜராகலாம் என்பது திருத்தப்பட்டு, அவர்களுடைய வக்கீல்கள் ஆஜராகலாம் என்று போடப்பட்டது. ஏழை விவசாயிகள் பணம் செலவு செய்து வக்கீல்கள் வைத்துக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. இதனால் அவர்களுடைய வாதத்தை எடுத்துச் சொல்ல முடியாமல்

[Sri P. Jayaraj] [6th March 1961]

இருப்பதனல், விவசாயிகள் அப்புறப்படுத்தப் படுகிருர்கள். விவசாயிகளுடைய ஏஜெண்டோ, மிராசுதாருடைய ஏஜெண்டோ ஆஜராகலாம் என்று இருந்தால் கோர்ட்டில் நியாயமான குறை களை எடுத்துச் சொல்ல முடியும். ஆனல் இப்பொழுது இருக்கிற நிலைமையில் மிராசுதார்கள் திறமையான வக்கீல்களை வைத்து எந்த வகையிலாவது விவசாயிகளை அப்புறப்படுத்தி விடுவதினல், அவர்கள் நிர்கதியாக இருக்கிருர்கள். ஆகவே 40-வாரச் சட்டத் திலிருந்தபடி ஏஜெண்டுகள் ஆஜராகலாம், வக்கீல்கள் ஆஜராகக் கூடாது என்றிருந்தால் விவசாயிகள் நன்மை பெறமுடியும். இல்லை யென்ருல் பணம் இல்லாத காரணத்தினல் கோர்ட்டில் தங்கள் கோரிக்கையை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் நிலத்தை விடவேண்டியிருக்கும்.

விவசாயப் பெருங்குடி மக்கள் சர்க்காரிலிருந்து விவசாயக் கடன், உழவு மாட்டுக்குக் கடன் என்று எல்லாம் கடன்கள் வாங்கி யிருக்கிருர்கள். இந்த ஆண்டு அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினல் ஒரு ஆண்டு ஒத்தி வைத்து, அடுத்த ஆண்டு வசூல் செய்து கொள்ளலாமென்று உத்தரவு போட்டால் கடனிலிருந்து தப்பிக்க முடியும். சர்க்கார் உடனடியாக இதைக் கவனிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்கு தஞ்சைப் பகுதியில் எங்கேயும் நியாய விலைக்கடைகள் இல்லை. ஆகவே நியாயவிலை கடைகளை அங்கே ஸ்பெஷலாகத் திறப்பதற்கு உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேவஸ்தான நிலங்களை கூட்டுறவு முறையில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்கார் திட்டம் இருந்தும் கூட, மொத்தக் குத்தகை என்ற பெயரால் இப்பொழுது நிலத்தை எடுத்துக் கொண்டு, கூட்டுறவு முறையில் கொடுப்பதற்கு முன்வருவதில்லை. இம்மாதிரி பல கோயில்கள், மடங்களுக்குச் சொந்தமான நிலங்களை மொத்தக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளுகிருர்கள். திருவாவடு துறை மடத்து நிலங்களை ஒரு பெரிய நிலச்சுவான்தார் எடுத்துக் கொண்டு அந்த நிலம் கூட்டுறவு முறையில் ரெஜிஸ்தர் செய்யப் பட்டும்கூட கொடுக்கப்படவில்லை. சர்க்கார் கொண்டுவந்திருக்கும் சட்டத்திலே அவர்களும் விவசாயிகள், சாகுபடியாளர்கள், ஆகவே அவர்களை அப்புறப்படுத்த முடியாது என்றிருப்பதால், கூட்டுறவு முறையில் நிலங்கள் கொடுக்கப்படுவதில்லை. கூட்டுறவு முறை இந்த நாட்டில் அதிகமாக விஸ்தரிக்கப்பட்ட வேண்டுமென்று சொல்லும் சர்க்கார் இந்த பாதுகாப்புச் சட்டத்தை திருத்தி அமைப்பார்களே யானல் ஏழை விவசாயிகள் இதிலே பங்கு கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரை யில் சர்க்கார் காலதாமதம் இல்லாமல் பணத்தை ஒதுக்கிஞர்களே யானல், கண்டிராக்டர்கள் அவசரம் அவசரமாக செய்யக்கூடிய நிலைமை ஏற்படாது. சமீபத்தில் நண்டலாற்றில் உடைப்பு எடுத்து 10,000 ஏக்கர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நண்டலார் குதிரைக் குத்தி வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டது. 4,000 ஆட்களால் கூட



6th March 1961] [Sri P. Jayaraj]

அதை அடைக்கமுடியவில்லை. அந்த கிராமத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு பாதுகாப்புக் கொடுப்பதுடன், அங்கே இருக்கிற நிலச்சுவான்தார்களுக்கு வரிவஜா செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் 6-ல் ஒரு பங்கு நிலத்திலிருந்து உற்பத்தி கிடைத்தால் வரி வஜா செய்வதற்கு சட்டமில்லை என்று சொல்லுகிருர்கள். 6-ல் ஒரு பருதிகூட கிடைக்காத கிராமமாக இருந்தால் சர்க்கார் விதிவிலக்கு அளிப்பார்களே யானல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை கிடைக்கும்.

வீரசோழனிலிருந்து கோவிந்தக்கால் வாய்க்காலாகவும் வடிகாலாகவும் வருகிறது. 20,000 ஏக்கர் பாசனம் செய்வதற்கு வசதி இருக்கிறது. கும்பகோணத்திலிருந்து நண்டலார் கழிவு நீர் அந்தக் கால் மூலம் வருகிறது. காவிரி ஆற்றிலிருந்து நேரடியாக தொடர்பு பெற்ற ஆற்றிலிருந்து இது பிரியவில்லை. இந்தக் கோவிந்தக்கால் வாய்க்காலை அகலப்படுத்திஞல். 20,000 ஏக்கர் பாசனத்திற்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த படியாக, ஹரிஜனங்களுக்காக கிட்டத்தட்ட மூன்று கோடியே ஆறு லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பதற்காகப் பாராட்டு கிறேன். இன்னும் அது பற்றவில்லையென்ருல், சர்க்கார் அதிகம் ஒதுக்குவார்கள் என்று நம்புகிறேன். அப்படி ஹரிஜனங்களுக்கு ஒதுக்குவதை மனமாற வரவேற்கிறேன். நாட்டிலே . .

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

**IV—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.**

*A.—Statutory Rules and Orders.*

173. *Notification issued with G.O. No. 4524, Revenue, dated 5—11—1960 under the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959. [Laid on the table of the House under Section 116 (3) of the Madras Hindu Religious and Chartable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).]*

174. *Amendment to the Madras Public Service Commission Regulations issued in G.O. Ms. No. 2011, Public (Services-A), dated 22—12—1960. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]*

*B.—Reports, Notifications and other Papers.*

84. *Madras Government's Review on the working of the Fertilizers and Chemicals, Travancore Limited, Alwaye, Kerala State, for the year ended 31st December 1959.*

[6th March 1961

## APPENDIX I.

[Vide answer to short notice question No. 6 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 6th March 1961, page 315 supra.]

[Cost of living index—Fall in the cost of living in January 1961.]

The cost of living index for Madras City decreased by 18 points from 488 in December 1960 to 470 in January 1961. Expressed in percentage, it was a fall by 3.7 per cent. This fall in January was only a reversal of the rise in prices which had occurred in the period immediately preceding that month. The level that had been reached in December was a peak for all the time. The price of rice stood at a high level due to declining stocks and retardation in arrivals caused by heavy rains. At the same time, the price of firewood had reached an unprecedented level which was also the result of continuous rains. There was also an abnormal increase in the price of vegetables because of scarcity conditions created by incessant rains.

2. In the month of January, market conditions rapidly improved. With good harvests, large supplies of paddy became available and the price of rice receded. The fall in the price of rice and also of vegetables and firewood, which mainly accounted for the fall in the index, is shown below :—

| Commodity. | Unit. | Price. December 1960. | Price. January 1961. | Index number. December 1960. | Index number. January 1961. | Variation in percentage. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | Rs. | Rs. | | | |
| Rice II Sort .. | Measure (Kgm.) | 1·01 (0·6630) | 3·92 (0·6039) | 631·25 | 575·00 | — 8·9 |
| Vegetables .. | Viss (Kgm.) | 0·76 (0·5238) | 0·71 (0·4893) | 475·00 | 443·75 | — 6·6 |
| Firewood .. | Quintal (100 kgm.) | 9·66 | 9·11 | 785·20 | 740·50 | — 5·7 |

3. The prices of other food articles like dhall, chillies, tamarind, coriander, mustard, ghee and jaggery also declined, although to a much smaller extent. A combination of all these decreases in prices resulted in a drop in the index in January 1961.

4. The fall occurred in the Madras Cost of Living Index in January, and in the mofussil urban centres of Coimbatore, Tiruchirappalli, Cuddalore, Madurai and Nagercoil, a month earlier.

5. The fall in Coimbatore and Tiruchirappalli, was almost of the same magnitude as in Madras in January, the fall being 18 points and 17 points respectively. The fall was 10 points for Cuddalore, 7 points for Madurai and one point for Nagercoil The decline in these index numbers was due mainly to a fall in the price of rice.



6th March 1961]

6. These mofussil urban cost of living index numbers continued to fall in January also, the fall being 4 points for Coimbatore, 3 points for Tiruchirappalli, 5 points for Cuddalore, 3 points for Madurai and 6 points for Nagercoil.

7. The cost of living index is calculated as a weighted average of the index numbers of price relatives of 42 representative items entering into the family budget. The price relative is the ratio of the current price to the price in the base period, multiplied by 100. The weight is a factor assigned to each item according to its relative importance in the family budget.

8. In the case of commodities entering into the index, each price is based on 66 recordings in a month. In the case of vegetables, it is based on as many as 396 recordings. All possible precautions are taken to ensure that the prices recorded are representative and correct, maintaining continuity.

**Appendix II.**

[Vide answer to starred question No. 600 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 6th March 1961, page 324 supra.]

*Statement showing the number of students who were fed under the midday meals scheme and number of students supplied with free clothes as on 30th June, 1960.*

| *Category.* (1) | *Number of schools in which midday meals were provided.* (2) | *Number of Children fed.* (3) |
|---|---|---|
| Government, Local and Aided Elementary Schools. | 23,652 | 801,297 |
| Harijan Welfare Schools .. .. .. | 852 | 67,727 |
| Kanyakumari District Schools .. .. | 475 | 14,100 |
| Madras City Corporation Schools .. .. | 254 | 26,706 |
| Madras City Private Schools .. .. | 61 | 2,990 |
| Total .. | 25,294 | 911,820 |

In addition 506 secondary schools provide midday meals to 133,19 students without any Government subsidy.

*Free clothes distribution.*—Free clothes were distributed to 231,153 children as gifts from public contribution.

423-452

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Wednesday, 8th March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF SRI GOVIND BALLABH PANT, UNION HOME MINISTER.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபா நாயகர் அவர்களே, நான் மிகுந்த ஆழ்ந்த வருத்தத்துடன் இந்தத் தீர்மானத்தை இந்தச் சபைமுன் சமர்ப்பிக்கின்றேன்—

"This House places on record its deep sense of sorrow at the demise of Pandit Govind Ballabh Pant, Union Minister for Home, and conveys its deep sense of sympathy to the members of the bereaved family."

நேற்றைய தினம் சபை நடந்து கொண்டிருக்கக்கூடிய மந்தியிலே இந்த துக்ககரமான செய்தி நமக்குக் கிடைத்தது. சென்ற 15 நாட்களாக ஸ்ரீ பந்த் அவர்களுடைய உடல்நிலையைப் பற்றி நாம் எல்லோரும் கவலையுடன் கவனித்துக் கொண்டு வந்தோம். அவர்களுடைய இறுதிக் காலம் கிட்டிவிட்டது என்கிற உணர்ச்சி நம்மிடத்திலே ஏற்பட்டு இருந்தாலும்கூட, இந்த முடிவைக் கேட்டவுடனேயே நம் எல்லோருக்கும் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்து ஸ்ரீ பந்த் அவர்கள் நம்முடைய நாட்டு அரசியலிலே பெரிய முக்கியத்துவமான பங்கு கொண்டு, முக்கியப் பணியாற்றி வந்திருக்கிறார்கள். அவர்கள் சுதந்திரம் வருவதற்கு முன்பே யுனைடெட் பிராவின்சாக இருந்த அந்த மாகாணத்து சட்டசபையிலும் சரி, அதற்குப் பிற்பாடு டெல்லியிலே இருந்த மத்திய சட்டசபையிலேயும் சரி அவர்கள் தங்களுடைய திறமையை நன்கு விளக்குகின்ற முறையிலே பணியாற்றி வந்தார்கள். காங்கிரஸ் சர்க்கார் நிர்வாகப் பொறுப்பை ஏற்றதற்குப் பிற்பாடு உத்திரப் பிரதேசத்திலே அவர்கள் முதல் மந்திரியாக இருந்து, அங்கே இருக்கக்கூடிய, அங்கே நடந்த பல்வேறு முன்னேற்றத் திட்டங்களுக்கு அவர்கள் பொறுப்பாக இருந்திருக்கிறார்கள். அரசியல் நிர்ணய சபை கூடியபோதும், அந்தச் சபையிலே ஒரு முக்கிய அங்கத்தினராக இருந்து, அங்கு ஏற்பட்ட பல சிக்கலானப் பிரச்னைகளுக்கு வழி காண்பதற்கு அவர்கள் உதவியாக இருந்தார்கள். அவர்களை நான் முதன் முதலில் நேரில் தெரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு அரசியல் நிர்ணய சபையில்தான் ஏற்பட்டது. இதற்குப் பிற்பாடு இன்னும் நெருக்கமாக தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டங்களிலே அவர்களுடன் பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அதற்குமேல் அவர்கள் உள்நாட்டு மந்திரியாக மத்திய சர்க்காரில் பதவியேற்ற பிற்பாடு, அதைவிட நெருங்கிய தொடர்பு கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக ஏற்பட்டது. எந்தவிதமான பிரச்னையாக இருந்தாலும் சரி, எந்தவிதக் கஷ்டம் ஏற்பட்டாலும்

எந்தவிதச் சங்கடம் ஏற்பட்டாலும் சரி அவர்கள் எல்லாவற்றிற்கும் வழி காணக்கூடிய முறையிலே நம்முடைய ராஜ்யத்திற்கும் உதவி வந்திருக்கிறார்கள். அதேபோல் மற்ற ராஜ்யங்களுக்கும் உதவி வந்திருக்கிறார்கள். நாட்டுக்கும் பொதுவாக உதவி வந்திருக்கிறார்கள். எதிலும், முக்கியமாக ராஜ்யங்களிடையே ஏற்படக்கூடிய எந்தப் பிரச்னைகளையும் தீர்த்து வைப்பதிலே அவர்களைப் போல் சுமுகமாக முடித்து வைக்கின்றவர்கள் இனிமேல் ஏற்படுவார்களா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

இந்தச் சபைக்குத் தெரிந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். கேரளத்திற்கும், நமக்கும் பரம்பிக்குளத் திட்டத்தைப் பற்றி சில கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டபோது, அதில் அவர்கள் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்ட காரணத்தினால் தான் அந்தக் கருத்து வேற்றுமைகளை வெகு சுலபமாக தீர்த்து வைக்க முடிந்தது. அது நமக்கு ஏற்பட்ட ஒரு நல்ல காரியம் என்பதால், இதை உதாரணத்திற்காகச் சொன்னேன். ஆனால் இதைவிட சிக்கலான பல பிரச்னைகளை அவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள். அதிலும் முக்கியமாக, மொழிப் பிரச்னை நமக்குத் தெரியும். அந்த மொழிப் பிரச்னையிலே எவ்வாறு ஒரு ஒற்றுமையான கருத்து நிலவப் போகின்றது, இதன் மூலமாக குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டாலும் ஏற்படுமே என்று பயந்த காலம் உண்டு. ஆனால் அந்தப் பொறுப்பை இவர் ஏற்றுக்கொண்டு, அந்த மொழிப் பிரச்னையைத் தீர்த்து வைத்தது உண்மையிலேயே நாட்டுக்குச் செய்த ஒரு பெரும் பணி என்று நான் கருதுகின்றேன். அதிலும் முக்கியமாக நாம் எடுத்த முடிவை அவர்களிடத்திலே நாம் கொண்டுபோய் கொடுத்தபோது, "இந்த அடிப்படையில் தீர்வு காண்பதற்கு எல்லாவிதமான முயற்சிகளும் செய்வேன்" என்று உறுதி சொன்னதோடு மாத்திரமல்ல. இதிலே அடிப்படையான மாறுதல்கள் ஏதாவது ஏற்பட வேண்டுமென்று சொன்னால், சென்னை அரசாங்கத்தை கலந்தாலோசிக்காமல் எந்த மாறுதலையும் செய்வதில்லை என்ற உறுதியையும் அவர்கள் கொடுத்து, அந்த முறையிலே இந்த மொழிப் பிரச்னையை சுமுகமாகத் தீர்த்து வைக்க உதவி செய்தார்கள்.

சர்க்கார் பணியில் மட்டுமல்ல. அதிலும் முக்கியமாக காங்கிரஸ் கட்சியில் இருக்கக்கூடிய எங்களுக்கு அவ்வப்போது மனத்தாங்கல் ஏற்படுமாயின், கருத்து வேற்றுமைகள் ஏற்படுமாயின்—இது எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்படக்கூடிய அனுபவம்—அப்போது இந்த நல்ல பண்பாடுள்ள தலைவர் அந்தக் கருத்து வேற்றுமைகளைக் களைந்தெறிந்து ஒற்றுமைச் சக்தியை வளர்ப்பதற்கு உதவியிருக்கிறார்கள். அம்முறையிலேயும் பல ஆண்டுகளாக அவர்கள் காங்கிரஸ் கட்சிக்கு பல பெரும் பணிகளை ஆற்றி வந்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையிலே அவர்கள் ஒரு தந்தையைப்போல் இருந்து, அவ்வளவு அன்புடன் நடந்து வந்திருக்கிறார்கள் என்று நான் சொல்லும்போது, அது என்னுடைய தனிப்பட்ட அனுபவம் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். ஆனால் இதே எண்ணம் ஆயிரக்கணக்கானவர்கள்



மனதிலே ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. அவர்களிடத்திலே யார் சென்றாலும், அவர்களை அன்புடன் வரவேற்று அவர்களுடைய கஷ்டங்கள் என்ன என்பதை அனுதாபத்துடன் கேட்டு உணர்ந்து, அந்தக் கஷ்டங்களைத் தீர்த்து வைப்பதற்கு என்றைக்கும் அவர்கள் முயற்சி செய்து வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் நம்மிடத்திலேயிருந்து இந்தச் சமயத்திலே நீங்கியது நாட்டிற்குப் பெரும் நஷ்டமென்பதில் சந்தேகமே கிடையாது. அவர்கள் இன்றைக்கு நம் நாட்டிலேயிருந்து மறைந்ததன் காரணமாக, நம் எல்லோருடைய பொறுப்பும் சற்று அதிகமாகி இருக்கிறது என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதுபோன்று பெரும் தலைவர்கள் மறையும்போது அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளை அவர்கள் கண்ட கனவுகள் எல்லாம் நினைவாகும்படி முயற்சி செய்வதுதான் நம்முடைய கடமை, நாம் அவர்களுக்குச் செய்யக்கூடிய, செலுத்தக்கூடிய நன்றி மரியாதை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்தச் சபையிலேயும் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள், அவர்கள் கண்ட கனவுகளை நனவாக்கும் முறையிலே, நாட்டிலே நல்லதொரு சமுதாயத்தை அமைக்கின்ற முறையிலே, இந்தச் சபையும் அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை இந்தச் சபை ஏற்றுக்கொள்வதுடன், இந்தத் தீர்மானத்தின் மூலம் அவர்களுடைய மக்களுக்கும், குடும்பத்தாருக்கும், நம்முடைய அனுதாபத்தைத் தாங்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**SRI P. S. CHINNADURAI:** மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் பிரரேபணை செய்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதிலே பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி முழுமனதுடன் இணைந்து நிற்க இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக நான் சிறுவனாக இருந்த நாள் முதற்கொண்டு ஸ்ரீ கோவிந்த வல்லப பந்த் அவர்களைத்தான் என் ஆதர்ச புருஷராக உள்ளூர நினைத்து, ஏகலைவனைப்போல் செயல்பட்டு வந்திருக்கிறேன் என்ற விஷயத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தேச பக்தியைப் பொறுத்தவரையிலே தளராத உறுதியும், தேசத்திற்காகக் கடைசி மூச்சு வரை உழைக்க வேண்டும் என்ற மனத்திட்பமும் இன்றைக்கு இந்த நாட்டில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் நிரம்பியிருக்க வேண்டும் என்பதற்கு அவர்களுடைய செயல்கள்தான் எனக்கு உதாரணமாக விளங்குகிறது. மிகவும் சங்கடமான கொள்கை வேறுபாடுகள் நேருகின்ற நேரத்திலும் ஸ்ரீ கோவிந்த வல்லப பந்த் அவர்களுடைய கடமை உணர்ச்சியையும், உறுதியையும் உள்ளூர பாராட்டாமல், அவரை நினைக்காமல் இருக்க முடிவதில்லை. பழந் தலைமுறையைச் சேர்ந்த தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக மறைந்து கொண்டிருப்பது உண்மையிலேயே நம்முடைய துரதிருஷ்டம். அது நம்முடைய தேசத்திற்காக நாம் ஆற்றவேண்டிய பொறுப்புகளையும் கடமைகளையும் மிகவும் அதிகப்படுத்துகின்றன என்று நான் கருதுகிறேன். ஒரு

வகையிலே பார்க்கப்போனால், ஸ்ரீ கோவிந்த் வல்லப பந்த் அவர்கள் அகால மரணம் அடைந்துவிட்டாரோ என்று கூட நான் நினைக்கிறேன். இந்த தேசத்தில் விளைந்து வருகின்ற பல்வேறு வகையான பிரிவினைச் சக்திகளும், ஆங்காங்கு மக்கள் மத்தியிலே தலைதூக்க ஆரம்பித்திருக்கிற குரோதத் தன்மைகளும் அவருடைய மனதை உண்மையிலேயே மிகவும் உறுத்தியிருக்கிறது என்றுதான் எண்ணுகிறேன். அவர்களுடைய மறைவினால் நமக்கு உண்மையிலேயே தாங்கமுடியாத ஒரு பொறுப்பு சுமந்திருக்கிறது. மிகவும் கஷ்டமான காலத்தில் இந்தப் பொறுப்பை சுமப்பதற்குரிய நிலையை இறைவன் தான் அருள வேண்டும். அவருடைய செயல்களே நாம் தேசத்திற்கு ஆற்றவேண்டிய நமது கடமைகளை சரிவர ஆற்றுவதற்குத் துணை என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRI M. KALYANASUNDARAM**: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் பிரேரேபித்துள்ள தீர்மானத்தை நான் எனது கட்சியின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் இருதயபூர்வமாக ஆதரிக்கிறேன். அவர் கூறிய கருத்துக்களையும் நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். கோவிந்த் வல்லப பந்த் அவர்கள் நம்முடைய நாட்டில் சுதந்திர போராட்டத்தின் ஒரு முக்கியமான காலகட்டத்தின் பிரதிநிதி. அவர் நடமாடிக் கொண்டிருந்ததே நம்முடைய சுதந்திரப் போராட்டம் எவ்வளவு கடுமையாக இருந்தது என்பதற்கு ஒரு நினைவு சின்னமாக இருந்தது. அவருடைய தலை நடுக்கமும், உடல் நடுக்கமும், அவர் உடல் நம்முடைய சுதந்திர போராட்டத்தில் அனுபவித்திருக்கக்கூடிய கஷ்டத்தை நமக்கு நினைவூட்டக்கூடியது. 1940-லோ அல்லது 1942-லோ நாம் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு எடுத்திருப்பது அவ்வளவு கடுமையல்ல. கோவிந்த் வல்லப பந்த் அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்று போலீஸ் துப்பாக்கிக்கு அஞ்சாமல், தடிக்கு அஞ்சாமல், அடக்குமுறைக்கு அஞ்சாமல் நின்று அடி உதைகளை அனுபவித்து நடமாடும் பிரதிநிதியாக இருந்து வந்திருக்கிறார். இப்பொழுது சுதந்திரத்தின் பலனை அனுபவிக்க நினைக்கக்கூடியவர்களுக்கு அவர் ஒரு எச்சரிக்கையாக இருந்து வந்திருக்கிறார் சுதந்திரம் பழுத்த மாம்பழத்தைப் போல் சுலபமாக அடைந்தது அல்ல, இவ்வளவு கஷ்டம் அனுபவித்த சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறோம் என்று நமக்கு நினைவூட்டக்கூடிய நினைவுச் சின்னமாக அவர் விளங்கினார்கள்.

சுதந்திரம் அடைந்தபிறகு கூட நம்முடைய நாட்டில் அநேக பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு எல்லாப் பிரச்னைகளையும் சுமுகமாகத் தீர்த்து ஜனங்கள் விரும்புகிறபடி அல்லது பல பிரிவினர்கள் விரும்புகிறபடி எல்லோருடைய ஆதரவையும் பெறமுடியும் என்ற நம்பிக்கை சில சந்தர்ப்பத்தில் ஏற்படலாம். சிலருடைய அதிருப்தியையும் பெறவேண்டியிருக்கலாம். பொறுப்பில் இருப்பவர்கள் இதை உறுதியுடன்





உணர்ந்து பணியாற்றவேண்டும் என்பதற்கு அவர் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார். "My head may shake, my hands may shake, but my heart never shakes." என்னுடைய தலை நடுங்கலாம், என்னுடைய கை நடுங்கலாம், ஆனால் என்னுடைய உள்ளம் நடுங்குவது கிடையாது என்று அவர் தன்னுடைய மன உறுதியை எடுத்துக் கூறியது எனக்கு ஞாபகம் வருகிறது. அவருடைய உள்ளத் துணிவை இது எடுத்துக் காட்டுகிறது. இந்திய மக்களுடைய ஒற்றுமை எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்து, இந்திய மக்களை ஒன்று திரட்ட மன உறுதியுடன் போராடிய பிரதிநிதி அவர். கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறியபடி மொழிப் பிரச்னை சம்பந்தமாக ஏற்படுகிற தகராறுகளை ஒற்றுமையையே குறிக்கோளாகக் கொண்டு அவர் தீர்த்து வைத்துப் பணி புரிந்ததுபற்றி, அவர் காட்டிய வழியை நாம் பின்பற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். எதிர் நோக்குகிற பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்போது—சில சமயங்களில் உடன்பாடு இருக்கலாம், சில சந்தர்ப்பங்களில் கருத்து மாறுபாடு இருக்கலாம்—சண்டை போடுகிறபொழுது மன உறுதியுடன் சண்டை போடுவார். தயவு தாட்சண்யமின்றி சண்டை போடுவார். ஆனால் சண்டை முடிந்த பிற்பாடு அந்தக் காயங்களை ஆற்றுவதற்கு அவர் வைத்தியர் மாதிரி நடவடிக்கை எடுத்துக் கொள்ள முன் வருவது மிகவும் பாராட்டத்தக்கது. சமீபத்தில் நடந்த கிளர்ச்சி சம்பந்தமாகக்கூட அவர் எடுத்த முடிவு நமக்கு இப்பொழுது ஞாபகம் வருகிறது. அப்பேர்ப்பட்ட பண்பு சுதந்திரப் போராட்டத்தில் முன் அணியில் நின்று பணி புரிந்தவர்களுக்குத்தான் ஏற்படும். இப்பொழுது நாட்டில் இருக்கக்கூடிய நிலைமையில் அந்தப் பண்போடு நிர்வாகத்தை நடத்தக்கூடிய திறமை உள்ளவர்கள் அந்த இடங்களுக்கு வருவார்களா என்ற கவலை அதிகமாக ஏற்படும். அப்பேர்பட்டவர்கள் மறையக்கூடிய சந்தர்ப்பத்தில் நமக்கு கவலை அதிகம். மரணம் யாராலும் தவிர்க்க முடியாது. மரணம் இயற்கையின் நியதி. அப்பேர்பட்ட பண்புடையவருடைய மரணத்திற்குப் பிறகு அவரைப் பின்பற்றக்கூடிய இதர மந்திரிகளும் சரி, நாட்டிலுள்ள மற்றவர்களும் சரி அவர் என்ன நல்ல கொள்கைகளுக்காக நின்றார்களோ அவைகளை மட்டும் ஞாபகப்படுத்திக் கொண்டு, அந்த நல்ல கொள்கைகளை மேலும் வளர்க்கவேண்டும் என்று உறுதி எடுத்துக் கொள்ளவேண்டியது நமது கடமை என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டு, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை என்னுடைய கட்சி சார்பிலும், என்னுடைய சார்பிலும் ஆதரிக்கிறேன் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொண்டு, அவரது ஆத்மாவுக்கு என்னுடைய கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**SRI C. N. ANNADURAI**: சட்டமன்றத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கோவிந்த் வல்லப பந்த் அவர்களுடைய மறைவுக்காக அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவிக்கின்ற தீர்மானத்தை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன். கட்சிக்கும்

நாட்டிற்கும் அப்பாற்பட்ட அளவிலே பெரிய புகழை பெறக் கூடியவர்கள் ஒரு சிலர்தான் தோன்ற முடியும். அப்படித் தோன்றுகின்ற ஒரு சிலரில் நம்முடைய காலத்தில் மிகுந்த கீர்த்தியோடு வாழ்ந்து, தன்னுடைய ஆற்றலின் ஒவ்வொரு பகுதியையும் நாட்டிற்காக அர்ப்பணித்து, கடைசி நிமிஷம் வரையில் தான் எடுத்துக் கொண்ட கடமையிலிருந்து வழுவாமல் அதிலே ஈடுபட்டு உயிர் நீத்த பெரியார் அவர். நாம் அனைவரும் எடுத்துக் கொண்டிருக்கிற காரியங்களிலே எவ்வளவு உறுதியாக இருக்கவேண்டும் என்ற பாடத்தையும், எவ்வளவு தியாக உள்ளத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நல்ல நெறியையும் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார். நம்மோடு இருந்தவர் என்ற நிலையிலிருந்து, இனி நாமும் எதிர்காலச் சந்ததியார்களும் பாடம் பெறத்தக்க வரலாற்று வீரராக மாறியிருக்கிறார். வரலாற்றிலே அவர் பெயர் இன்றையதினம் இணைந்துவிட்டது. வரலாற்றில் பெறத்தக்க நல்ல பாடங்களை நமக்குத் தந்துவிட்டு சென்றிருந்தவர்கள் இன்னும் நாட்டில் சில ஆண்டுகள் இருந்து பல சிக்கல்களை தீர்த்துவைக்கக் கூடாதா என்ற ஆவல் இருக்கிறது. இதுவரையில் அவர்கள் தந்திருக்கிற நல்ல பாடங்கள் நாட்டிற்கு வழிகாட்டியாக அமைய வேண்டும் என்ற உறுதியை துக்கத்தோடு சேர்த்து இணைத்து, இனி நம்முடைய கடமைகளைச் செய்யவேண்டும் என்பதைத் தான் இந்தத் தீர்மானம் எடுத்துக் காட்டுகிறது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், நானும் என்னுடைய பங்கினைச் செலுத்திக் கொள்ளுகிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதியமைச்சர் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். நம் நாட்டிலே ஒரு ஒப்பற்ற தலைவர் இப்பொழுது மறைந்து விட்டார்கள். தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பல பிரச்சினைகளின் நடுவில், அவர்களுடைய யோசனைகளும், உதவிகளும் வேண்டிய நேரத்தில், அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்ததைக் குறித்து வருத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். முக்கியமாக பிரதமர் நேருஜி அவர்களுக்கு வலது கைபோல் இருந்து, நாட்டிலே பல கோளாறுகள் இருந்த போதிலும், அவர்களுக்குப் பக்க பலமாக இருந்து பல பிரச்சினைகளையும் நன்றாகத் தீர்த்து வைக்கக்கூடிய பெரிய அரசியல் வாதியாக விளங்கினார்கள்; சுதந்திரப் போராட்டத்தில் பெரிய தியாகங்கள் செய்து, சைமன் கமிஷனைப் பகிஷ்காரம் செய்த ஒப்பற்ற தலைவராக விளங்கினார்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்த மாபெரும் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு நேருஜி அவர்களுக்கு வேறு நபர் கிடைப்பார்களா என்பது சந்தேகமே. இந்த தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். அவர்கள் ஆத்ம சாந்தி அடையப் பிரார்த்திக்கிறேன்.





MR. SPEAKER : The Chair would like to associate itself with the resolution just now moved by the Hon. the Leader of the House. Pandit Govind Ballabh Pant was one of the architects of our freedom. Together with Mahatma Gandhi, Sardar Vallabhai Patel and Pandit Jawaharlal Nehru, he struggled hard and suffered much for the attainment of freedom for our country. After the attainment of freedom, he was one of the pillars of our administration. Both in Uttar Pradesh where he was Chief Minister and at the Centre where he was the Home Minister, he showed administrative capacity of an extremely high order. He was respected by everybody for his honesty, integrity and steadfastness. His death creates a void which it is very difficult to fill. It is poignant that it should have occurred when our Prime Minister is not in Delhi, because Pandit Pant was our Prime Minister's great friend, philosopher and guide. I am afraid it will take a long time for us to discover another Govind Ballabh Pant who was very much respected by all. On his death, tributes were paid to him by all people belonging to all parties. I shall convey the resolution to the members of the bereaved family. May his soul rest in peace.

As a mark of respect and by way of passing the resolution moved by the Hon. the Leader of the House, I should like the hon. Members to stand in silence for two minutes."

The resolution was carried *nem con.* all the Members of the Assembly standing in silence for two minutes.

## II.—QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS.

### *Tanks*

*651 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம், போளூர் தாலூகாவில் இராமாபுரம், வேளானந்தல் கிராமங்களில் புதிய ஏரிகள் கட்டுவது எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : A proposal for the formation of a tank in Ramapuram village has been dropped. The formation of a tank in Velanandal village is considered not worthwhile.

### *Agriculturists (Eviction)*

*652 *Q.*—SRI P. S. CHINNADURAI : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, பழனி தாலூகா "கரிக்காரன் காட்டுப்" பகுதியில் சென்ற இருபது ஆண்டுகளுக்கு மேலாக விவசாயம் செய்து கொண்டு வரும் ஏழை விவசாயிகளை பிரஸ்தாபப் பகுதியில் விவசாயம் செய்ய விடாமல் தடுக்க ஒருசிலர்

முற்பட்டு வருவதாகவும், எனவே தாங்கள் விவசாயம் செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படாமலிருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி அவ்விவசாயிகளிடமிருந்து சர்க்காருக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) அப்படியானால், அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை யாது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) There is no area as "Karikkaran Forest area" in the Palni taluk, Madurai district.

It is presumed that the Member is referring to "Karankattu Saragam" at the bottom portion of Ayakudi ex-zamin forest in Palni taluk. No petition of the kind referred to in the question has been received by the Government.

(b) in view of the answer to clause (a), this question does not arise.

*Tourist Home (Nagercoil)*

*653 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the newly constructed Tourist Home at Nagercoil is open for the occupation of non-officials;

(b) if so, whether rules have been framed for letting the rooms to the public; and

(c) if not, why?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

(b) Not yet, Sir.

(c) Does not arise.

*Feeds for livestock*

*654 Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உலர்ந்துபோன ஆரஞ்சுபழத் தோல், அனுசிப்பழத் தோல்களிலிருந்து கால்நடைகளுக்கும், கோழி, வாத்துக்கும் மிகப் பிரியமான உணவுகளைத் தயாரிக்க முடியும் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

(இ) அதற்கான முயற்சி செய்ய உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) No, Sir.



*Electric crematorium*

*655 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to set up electric crematorium in the City of Madras to meet the inadequacy of burial-ground facilities; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) The Commissioner, Corporation of Madras, has reported that the Corporation has at present no such proposal.

(b) Does not arise.

SRI N. K. PALANISAMI: முன்பெல்லாம் சுடுகாடு ஒதுக்கமாக இருந்தது. இப்பொழுது ஜனத்தொகை பெருகப் பெருக, ஊர்கள் வளர்ந்து, வீடுகள் அதிகமாகக் கட்டப்படும் காரணத்தால், துர்நாற்றம் அதிகமாகிறது; அப்படித் துர்நாற்றம் இல்லாமல் செய்ய, இந்த மின்சார சிதையை சென்னை நகரத்திலாவது ஏன் அதிகமாக வைக்கக்கூடாது?

THE HON. SRI M. A. MANICKAVELU: எல்லா இடத்திற்கும் வைக்கவேண்டும் என்று அங்கத்தினர் சொல்கிறார். ஒரு இடத்தில் வைப்பதே கஷ்டமாக இருக்கிறது; நிறையச் செலவு ஆகிறது, குறைந்தது 2½ லட்ச ரூபாய் செலவு ஆகிறது ஒன்றுக்கு மட்டும். முதலிலே கார்பொரேஷன் வேண்டும் என்று கேட்டார்கள். பணச் செலவு அதிகம் என்ற காரணத்தால், அந்த ப்ரபோஸல் கைவிடப் பட்டது.

*Medical College Hostels*

*656 Q.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state the monthly mess bills (average) in the Medical College Hostels in Madras, Madurai and Thanjavur this year and last year?

THE HON. SRI M. A. MANICKAVELU: A statement[a] is placed on the table of the House.

SRI K. VINAYAKAM: From the statement placed on the table of the House, it is evident that vegetarian food costs more in mufassal places like Madurai when compared to the City of Madras. Will the Government account for this and explain how vegetarian food was costlier in the mufassal where vegetables were cheaper when compared to the city?

THE HON. SRI M. A. MANICKAVELU: That point struck me also. But, I am not able to give any explanation for it except to say that probably there are more vegetarians in Madurai than in Madras.

[a] Printed as Appendix on page 562 infra.

*Agricultural income-tax*

* 657 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount of agricultural income-tax realized ever since the Act came into force, yearwar; and

(*b*) the expenditure towards collection of this tax, yearwar?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The attention of the Hon. Member is invited to the administration reports of the Agricultural Income-tax Department relating to the years 1955–56 to 1958–59. The particulars for the year 1959–60 are as follows :—

Tax realized—Rs. 1,53,72,272.51.

Expenditure towards collection—Rs. 11,21,015·25.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : So far as I am concerned, I have not received the administration report of this department. May I have yearwar figures relating to the proportion of the expenditure towards the collection of this tax to the actual tax realized?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I have not worked out that proportion. There was, however, a slight fall in income in the year 1958–1959. That is due to various reasons. Probably, there were no large holdings.

*Influenza*

* 658 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken to counteract the increase in the number of influenza cases in the Madras City?

THE HON. SRI M. A. MANICKAVELU : No special measures were undertaken since there was no epidemic of influenza.

*Suicide*

* 659 *Q.*—SRI M. P. SARATHI : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில், தண்டலம் கிராமத்தில் ஒரு கிணற்றில் ஒரு குடும்பமே விழுந்து உயிர் துறந்தது அரசாங் கத்துக்குத் தெரியுமா?

(இ) அதுபற்றி நடத்திய விசாரணையின் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Investigation disclosed that Punyakoti, his wife and six children had committed suicide by drowning due to the heavy debts which he had incurred but could not repay.



SRI M. P. SARATHI : ஸார், அவர் தற்கொலை செய்துகொண்ட காலத்தில், சட்டைப் பையில் ஒரு கடிதத்தில் ரூ. 100 சம்பளம் வாங்கினாலும், குடும்பத்தை நடத்திக்கொண்டுபோக முடியவில்லை என்ற காரணத்திற்காகத் தற்கொலை செய்துகொள்கிறேன் என்று எழுதி வைத்திருந்தாரா? அது உண்மையா? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: யார், யார் என்ன எழுதி வைக்கிறார்கள் என்பதை விசாரிக்க வேண்டிய அவசிய மில்லை. போலீசார் விசாரித்ததில் அவர்கள் இறந்ததற்குக் காரணம் கடன் பளுவில் அவர் மூழ்கியிருந்தார் என்று நிர்ணயித் தார்கள். தற்கொலைக்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. செழுமையான அன்னிய நாடுகளில்கூட, தற்கொலைகள் நடை பெறுகின்றன.

*Medical statistics*

* 660 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether Training and Research in Medical Statistics are carried on in this State; and

(*b*) whether any scholars have been sponsored by our State for this purpose?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

*Loans to ryots*

* 661 *Q.*—SRI V. SUBBIAH : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

ரயத்துகளுக்கு வழங்கிய பல்வேறுவகைக் கடன்களை, அறுவடை காலத்தில் மட்டுமே வசூலிக்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. SUBBIAH : ஸார், இந்த நில வரியையும், அவர் களுடைய கடன்களையும் வசூலிக்கும் காலம் அவர்களிடம் விவசாயப் பொருள்கள் கிடைத்து வீட்டிற்கு வந்த பிறகு இருக்க வேண்டும். பல இடங்களில் நிலவரியையும், கடன் தொகையையும் போலீசை வைத்து வருமானம் இல்லாத காலத்தில், பலமுறுத்தி கண்டிப்பாக வசூலிக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி அவர் களுக்கு வருமானம் வரும் காலத்தில் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : Generally, the intensive period of collection was during the harvest season only. But, during the other seasons also, there will be some collection, especially in the matter of arrears. However, generally, officers see that the collection is mostly made after the harvest is over.

[8th March 1961

*Medical College (Thanjavur)*

* 662 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரிக் கட்டிட வேலை இப்போது எந்த நிலையில் இருக்கிறது?

(இ) காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

(உ) இதைத் தவிர்க்க என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) The first set of buildings required for starting the Medical College at Thanjavur are expected to be ready by July 1961.

(இ) The delay is due to the diversion of high-tension lines which were running across the site.

( ) The high-tension lines have since been diverted by the Electricity Board, and the building work is now in full swing.

SRI A. VEDARATHNAM: இந்தக் கட்டிடத்திற்கு ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு? அதன் வேலை எப்பொழுது துவக்கப்பட்டது? அதெல்லாம் பூர்த்தி ஆவதற்கு எவ்வளவு காலம் ஆகும்? அது எப்பொழுது பூர்த்தி ஆகும்?

9 a.m. THE HON. SRI M. A. MANICKAVELU : I think the total estimated cost is about Rs. 1 crore and 30 or 35 lakhs. Now, we hope that by July certain blocks of buildings will be available for starting classes. I hope the completion of the entire building may be over in a year and a half.

*Prisoners (facilities)*

* 663 *Q.*—SRI N. MARUDACHALAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள சிறைக் கைதிகளுக்குப் பீடி, சிகரெட் முதலியவைகள் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(இ) எப்போது முதல்?

(உ) சர்க்கார் செலவில் கொடுக்கப்படுகிறதா அல்லது கைதிகளின் சொந்தச் செலவிலா?

(எ) சர்க்கார் செலவில் என்றால் எந்த அளவு கொடுக்கப்படுகிறது?

(ஐ) பீடி, சிகரெட்டு தவிர வேறு என்னென்ன கொடுக்கப்படுகிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) From 1956.



8th March 1961]

(c) The prisoners are allowed to obtain tobacco at their own cost and also from their friends and relatives. Tobacco is given to certain prisoners at Government cost also on certain occasions.

(d) Prisoners working in the Textile Factory of the Central Jail, Coimbatore, and in the Carpentry and Handloom Weaving Sections in the Central Jail, Vellore, are allowed 1/6 oz. of tobacco per head per day as an incentive to better work. Prisoners from the Central Jail, Madras, who are employed in the Government Bus Service Depot and whose outturn of work comes up to the prescribed standard are given one anna worth of tobacco or betel daily.

(e) Prisoners are allowed to use soap, hair oil and unction oil and tooth powder at their own cost. Condemned prisoners are allowed at their request betelnuts, and tobacco in the form of cigarettes, beedies and snuff provided there is no medical objection.

*Maniamkaram and Thiruppuvaram*

* 664 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have considered the Damodaran Asan Committee Report on on Maniamkaram and Thiruppuvaram and have taken any decisions on the recommendations of that Committee which was set up by the former Travancore-Cochin Government;

(b) whether the Kerala Government have written to the Madras Government on the question of abolition of Maniamkaram and Thiruppuvaram in 1957 and 1958; if so, the details thereof;

(c) whether the Government have considered the Bills for abolition of Maniamkaram brought before the Kerala Assembly; and

(d) the total arrears of Maniamkaram and Thiruppuvaram up to date to be realized from the Kanyakumari district?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The question of abolishing " Maniamkaram " is engaging the attention of the Government. In that connection, all papers connected with " Maniamkaram " including the report of the Damodaran Asan Committee, are being perused.

(b) Regarding the rent due to Sri Padmanabhaswami temple on Sri Pandaravagai lands, certain proposals were received from the Kerala Government in December 1956. They were examined by this Government and the proposals of this Government have been communicated to the Kerala Government and they have been requested to state their decision and the decision of the temple authorities thereon. The Kerala Government's reply has not yet been received. The question of abolishing Thiruppuvaram is under the consideration of this Government.

(c) The Kerala Government have stated that no Bills for the abolition of Maniamkaram have been brought before the Kerala Assembly.

[8th March 1961]

(*d*) The arrear balance and the current balance as on 30th November 1960 relating to both "rent due to the temple on Sri Pandaravagai lands" and "Thiruppuvaram" are Rs. 4,12,229·68 and Rs. 39,614·57 respectively. Separate figures for Maniamkaram and Thiruppuvaram are not available. Rent in kind has been reduced to money value.

SRI T. S. RAMASWAMI: In view of the mounting up of arrears on the heads of poor ryots, may I know whether the Government will take immediate steps to abolish it?

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, Sir, we are also anxious to do the needful reform and we shall expedite it as soon as possible.

*Master Plan (Cities and Townships)*

MR. SPEAKER: As the hon. Member, who gave notice of question No. 665 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 665 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to have a Master Plan for Madras, Madurai, Tiruchirappalli and Coimbatore and for the various Townships in the State; and

(*b*) the nature of assistance received from the Centre?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) No assistance has been received so far from the Centre.

*S.S.L.C. Examination Fee*

* 666 *Q*.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the students from the Madras City appearing for the S.S.L.C. examination can remit the examination fee by postal orders;

(*b*) whether this concession is proposed to be extended to mufassal students; and

(*c*) if not, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) *to* (*c*) Till 1957, the examination fees from *private* candidates appearing for various Government examinations, from the City of Madras, were remitted into the Reserve Bank of India. As the Reserve Bank expressed its inability to receive small amounts over the bank's counter, it was ordered in 1957, that private candidates from the city may remit their examination fees in the shape of postal orders. As no special difficulty is experienced by the treasuries in the mufassal in receiving the remittances, from the private students, it is not proposed to extend the scope of the orders to such students outside Madras City.



8th March 1961]

SRI T. T. DANIEL: May I know whether there is any difficulty, so far as the Government are concerned, to extend this facility to the mufassal students?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, the difficulty would be that the postal orders would have to be sent by post and then the postal orders will have to be endorsed. In many cases there are likely to be defective endorsements and all that would lead to difficulties for students. That is why the procedure of regular payment into the treasury has been adopted.

*Nylon Nets*

* 667 *Q*.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the total value of Nylon nets and yarn supplied to fishermen in the Kanyakumari district in 1960; and

(*b*) the nature of concessions given by the Government to the fishermen in this regard?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (*a*) Four hundred and fifty pounds of Kenlon brand nylon twine valued at Rs. 4,200 were supplied to the fishermen of Kanyakumari district during 1960.

(*b*) The usual subsidy of 33-1/3 per cent was allowed on the cost of the above twine. The net cost of the material (i.e., the value of the yarn sold at 66-2/3 per cent of the cost price) is recoverable in 18 monthly instalments spread over a period of two years, excepting for three months in a year during the off-season.

*Meeladi Nabi*

* 668 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Chief Minister be pleased to state the reason for not declaring Meeladi Nabi as a Government holiday for the year 1961?

THE HON. SRI C. SUBRAMANIAM: In accordance with the recommendation of the Pay Commission, the number of holidays has been reduced. According to this scheme, a general holiday has been declared for Bakrid but not for Meeladi Nabi. In addition three optional holidays for religious purposes have been allowed, and those desirous of taking a holiday on Meeladi Nabi also can avail themselves of this facility.

*Tuberculosis Chemotherapy Centre, Madras*

MR. SPEAKER: As the hon. Member, who gave notice of question No. 669 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 669 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of International Experts provided by W.H.O. during 1960 for the Tuberculosis Chemotherapy Centre, Madras;

[8th March 1961

(b) the nature of assistance received from them; and

(c) the amount provided and spent for Tuberculosis Chemotherapy Projects from the regular Budget and from the Technical Assistance Budget?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Six personnel, of which one was withdrawn on 30th June 1960.

(b) The W.H.O. provides International Experts to man the Tuberculosis Chemotherapy Centre and also certain equipment and supplies including vehicles.

(c) The amount spent on the project and financed from the expanded programme of Technical Assistance for the calendar year 1959 was $84,109. The anticipated budget expenditure for 1960 is $91,220. Nothing has been spent on the project from the regular budget.

*N.G.Os. (Kanyakumari district)*

* 670 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether a memorandum has been submitted to the Government recently by the N.G.Os. Association, Kanyakumari district;

(b) what are the main demands contained in the Memorandum; and

(c) the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The main demands in the memorandum were—

(i) clarification regarding the application of Madras Revised Scales of Pay Rules, 1960, in respect of the persons allotted from the former Travancore-Cochin State;

(ii) to pass orders to the effect that the pay of the allottee lower division clerks who have put in similar number of years of services should not be fixed below that of their counter-parts in Madras; and

(iii) to promote lower division clerks who have reached maximum in the time-scale of pay as upper division clerks so as to give them a chance of periodical increase in their present emoluments.

(c) A reply was given to the Secretary, the Tamil Nad N.G.Os. Union, Madras, in Government Letter No. 81334/Spl-1/60-2, dated 14th September 1960, covering all the points and explaining the position.

SRI T. T. DANIEL : May I know whether the Government have passed an order revising the scale of pay of the N.G.Os. on the basis of the report of the Pay Commission and may I also know whether the Government have recently passed an order that the dearness allowance which the N.G.Os. have got according to



8th March 1961]

the Madras Scale of Dearness Allowance should be paid and that the N.G.Os.' Association has made a representation to the Government that that order should be stayed? Also, may I know what steps the Government have taken in this matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : The recommendations of the Pay Commission are an integrated one. Certain scales are fixed. Certain recommendations with regard to the dearness allowance have been made and that it should be cut down to a nominal figure of Rs. 10. They cannot have a higher scale of pay and the old dearness allowance.

*Pay and allowances*

* 671 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the amount of pay and dearness allowance and other allowance paid to the Gazetted and non-gazetted staff for the year 1958–59; and

(b) the total travelling allowance and daily allowance drawn by the gazetted and non-gazetted officers for the years 1958–59 and 1959–60?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The total expenditure on account of pay and dearness allowance and other allowances (including travelling allowance) during the year 1958–59 is Rs. 2,140·80 lakhs according to the actuals for the year 1958–59 as detailed below :—

| | (RS. IN LAKHS.) |
|---|---|
| Pay of officers ... ... ... ... | 193·22 |
| Pay of establishment ... ... ... | 926·51 |
| Allowances and honoraria ... ... | 1,021·07 |
| Total ... | 2,140·80 |

The attention of the Member is drawn to pages 306–309 of the Budget Memorandum for 1960–61 wherein the details regarding the pay and allowances paid to gazetted and non-gazetted officers are given.

(b) Separate figures for travelling allowance and daily allowance are not available as the expenditure on these item is clubbed under the common head " Allowances and Honoraria ".

SRI T. S. RAMASWAMI : May I know whether the Government have, at any time, reviewed the matter regarding travelling allowance and dearness allowance drawn by the officers and whether any economy can be brought about on this score?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is being reviewed periodically and we take steps to see that unnecessary expenditure is not incurred.

*Explosion (Engineering College Laboratory)*

* 672 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that an explosion occurred in the Laboratory of the Engineering College, Guindy, on the 24th November 1960;

(b) if so, the cause of the accident; and

(c) the number of persons injured?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

(b) While conducting an experiment to determine the calorific value of a solid fuel, the wooden cover of an apparatus (which has been used in more than 20 such experiments before) got loose accidentally as a result of the breaking of a crucible. This resulted in the lid being thrown up to the roof of the building with some force and as the lid happened to hit the florescent electrical tubing, there was an explosive noise.

(c) The Assistant Lecturer in Chemistry sustained a minor injury on his forehead and three students felt a burning sensation in the eyes due to the splashing of alkaline water on their face.

SRI A. A. RASHEED: May I know the total damage caused to the laboratory by this explosion?

THE HON. SRI C. SUBRAMANIAM: I have not calculated in financial terms. As I have stated the apparatus itself got damaged. The florescent lamp was also damaged.

*Aerodrome at Cape Comorin*

* 673 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to construct an aerodrome at Cape Comorin?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI T. T. DANIEL: May I know where there was a proposal during the Second World War to have an aerodrome constructed at Cape Comorin and that a railway from Tirunelveli to Cape Comorin should be extended to that area? May I know whether that proposal is now being pursued by our Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I am not aware of any such proposal. I may also tell the hon. Member that the Trivandrum aerodrome is quite near Cape Comorin and that there is a fine road connecting both the places. Therefore there may not be any justification for considering a proposal to have an aerodrome at Kanyakumari.





*Building sites*

* 674 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government of India have recommended to this Government to bring in a Legislation to control the prices of building sites?

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, Sir.

SRI A. A. RASHEED: May I know whether Government have fixed any economic price per ground for building sites in Madras City?

THE HON. SRI M. A. MANICKAVELU: The contemplated legislation may be on the following lines, i.e., that the amount of compensation to be awarded for land acquired should be taken on the basis of the actual use to which the land was put to at the date of the notification and not on the basis of the suitability or adaptability of the land for any use to which it is put on the date aforesaid.

*Bus accident*

* 675 Q.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the cause of the bus accident on the Cuddalore-Viruthachalam road on the 14th November 1960; and

(b) the number of lives lost and the number injured?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The accident was due to collapse of the culvert when the bus passed over it.

(b) Three lives were lost and 30 persons were injured.

*Metropolitan Board*

* 676 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to establish a Metropolitan Board for the City of Madras to tackle the water-supply, sewage, drainage and garbage disposal; and

(b) if so, when?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) No, Sir.

(b) Does not arise.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware of the fact that the Corporation of Madras is finding it difficult to cope with the ever-increasing problem of water-supply, drainage, etc.? Is the Government aware of the fact that in the metropolitan cities of Bombay and Calcutta, they have Metropolitan Boards for

[8th March 1961

Greater Bombay and Calcutta? If so, will the Government reconsider their previous decision and have a metropolitan board for Madras City also?

THE HON. SRI M. A. MANICKAVELU : Merely having a Board will not help the corporation. We will have to find finances for the Board. We are having now the Public Health Board which is looking after this matter.

*Sub-Inspectors (Transfer)*

* 677 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Sub-Inspectors transferred to this State from the former Travancore-Cochin State and the number removed from service from out of them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Fifteen Sub-Inspectors were transferred to this State from the former Travancore-Cochin State out of whom one Sub-Inspector was removed from service.

*Harijan students*

* 678 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of Harijan students (boys and girls) studying in various colleges and polytechnics in the Kanyakumari district to whom scholarships were given in 1959–60 ; and

(*b*) the number of students who were not given scholarships and the reasons therefor?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Ninety-one students (80 boys and 11 girls) studying in various colleges and polytechnics in Kanyakumari district were granted scholarships during the year 1959–60.

(*b*) Two applicants were not given college scholarships. Of the two applicants one by name M. Thaniel of S.T. Hindu College, Nagercoil, applied for both fresh and renewal scholarships. As his case was a renewal one, his renewal application was considered favourably and the fresh application was rejected.

The application of the other student by name V. S. Arulraj of Scott Christian College, Nagercoil, was rejected as he had failed in his last annual examination.

*Free education*

* 679 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அடுத்த ஆண்டு முதல் ஏழை மாணவர்களுக்கு 10-ம் வகுப்பு வரை இலவசக்கல்வி அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறதா? அதன் விவரமென்ன?



8th March 1961]

(இ) எந்த அளவு வருமானமுள்ளவர்கள் ஏழைகளாகக் கருதப்படுவார்கள் (Definition of poor students)

(உ) இதற்கு வெளி உதவி ஏதேனும் உண்டா? அதன் விவரமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) to (*c*) All poor pupils, the gross annual income of whose parents or guardians does not exceed Rs. 1,200 per annum, are exempted from the payment of school fees in elementary schools and in secondary schools up to and inclusive of Form III. A general concession up to XI Standard has been now given as per the Budget proposals.

*Minorities*

* 680 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have received any communication from the Union Government regarding better treatment of minorities in the State in making appointments and promotion?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government of India forwarded to this Government towards the end of December 1956, a "*Memorandum*" *indicating the matters* in respect of which safeguards should be provided for the linguistic minorities in each State. In order to formulate, in detail, the safeguards envisaged in the "Memorandum", a Zonal Ministerial Committee was formed under the aegis of the Southern Zonal Council. The detailed specification of safeguards recommended by the Committee was accepted by the Council. These recommendations have been accepted by this Government also and communicated in G.O. Ms. No. 1281, Public (Partition), dated 11th August 1960 to the Departments of Secretariat for taking necessary steps to implement them. This Government Order together with enclosures has been placed on the table of the House on 24th January 1961.

MR. SPEAKER : Questions are over.

## III.—GOVERNMENT MOTION.

[*Note.*—An asterisk (*) at the Commencement of a speech indicates revision by the Member.]

ORDER OF TAKING UP OF VOTING ON DEMANDS FOR GRANTS.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'That the voting on Demands for Grants for the year 1961–62 be taken up in the following order :

DEMANDS.

XIV. Police.

XII. Administration of Justice.

XIII. Jails.

XXII. Industries and Cinchona.

[Sri C. Subramaniam] [8th March 1961

DEMANDS.

XLI. Capital Outlay on Industrial Development.
III. Forest Department.
XVIII. Agriculture.
XIX. Fisheries.
XX. Animal Husbandry.
XXXVII. Capital Outlay on Forest.
XL. Capital Outlay on Agriculture.
VII. Irrigation.
XXXVIII. Capital Outlay on Irrigation.
XXV. Harijan Uplift.
XXIV. Labour including Factories.
XXXV. Road Transport Schemes.
XLIII. Capital Outlay on Road Transport Schemes.
VIII. Head of State, Ministers and Headquarters staff.
IX. State Legislature.
X. Elections.
I. Land Revenue Department.
II. Stamps Administration.
XI. District Administration and Miscellaneous.
XXXVI. Compensation to Zamindars.
IV. Registration Department.
XVI. Medical.
XVII. Public Health.
XXXIX. Capital Outlay on Public Health.
V. Motor Vehicles Acts Administration.
XV. Education.
XXVII. Civil Works—Works.
XLII. Capital Outlay on Civil Works.
XXVIII. Civil Works—Establishment and Tools and Plant.
XXIX. Civil Works—Grants-in-Aid.
XXVI. Community Development Projects, etc.
XXXIV. Other Miscellaneous Contributions and Assignments.
XXXII. Stationery and Printing.
VI. General Sales Tax and Other Taxes and Duties Administration.
XXI. Co-operation.
XXIII. Khadi.
XXX. Famine.



8th March 1961] [Sri C. Subramaniam]

DEMANDS.

XXXI. Pensions.
XXXIII. Miscellaneous.
XLIV. Commuted Value of Pensions.
XLV. Capital Outlay on Schemes of Government Trading.
XLVI. Loans and Advances by the State Government.'

The motion was put and carried.

MR. SPEAKER: When are we going to take the Police Demand? It should have been taken up to-day.

THE HON. SRI C. SUBRAMANIAM: We shall take up to-day itself after my reply.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Will it be possible to take up the Police Demand to-day when some leaders have to speak and the Hon. Minister has also got to reply?

MR. SPEAKER: It all depends on the leaders. If their speeches are short and the Hon. Minister's reply is also short, we can then take up the Police Demand.

Yesterday the hon. Member Sri C. N. Annadurai was speaking. To-day the hon. Member Sri M. Kalyanasundaram has also come and he has expressed his desire to speak to-day. I will give to Sri C. N. Annadurai 45 minutes and to Sri M. Kalyanasundaram 30 Minutes. Sri C. N. Annadurai may now speak.

### IV.—GENERAL DISCUSSION OF THE BUDGET FOR THE YEAR 1961-62—*cont.*

SRI C. N. ANNADURAI: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப்பற்றி நான் எனது கருத்துக்களை எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகின்ற நேரத்தில் அதிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துச் சொல்வதற்கான நிலை வருகிற அவசரத்தில் அதில் காணக்கூடிய, இந்தத் துறைத்தனத்தார் செய்திருக்கக்கூடிய சில நல்ல காரியங்களுக்காக எனது பாராட்டுதல்களை தெரிவிப்பதில் தவறிவிடுவேனோ என்ற அச்சமில்லாது, முதலில் அவர்கள் செய்திருக்கின்ற இரண்டொரு நல்ல காரியங்களுக்காக நான் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் மக்களின் நீண்ட கால விருப்பத்தை தமிழ் நாட்டுப் பண்புப்படி இன்றையதினம் ஏற்றுக்கொண்டு, அதைக் காலங்கடந்து ஏற்றுக் கொண்டதாயிருந்தாலும் ஓரளவு அதை ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களுக்கு அவர்களது உரிமைப் பெயரான தமிழ்நாடு என்ற பெயரை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருப்பதற்காக நாம் இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அதனை இன்னும் முழு மனதுடன், நல்ல வடிவத் துடன் செய்திருக்கலாம் என்ற கருத்தை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வதால் அவர்கள்தாம் செய்திருக்கிற காரியம் தவறோ என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் இந்தக்

காரியத்தை இன்னும் நல்ல வடிவத்திலே, அழகாகச் செய்திருந்
தால் தமிழ் மக்களின் எண்ணம், அவர்களது களிப்பு இன்னும்
முழு வடிவம் பெற்றதாக இருந்திருக்கும். என்றாலும் இந்த
அளவிற்காகிலும் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டதற்காக
அவர்களைப் பாராட்டுகிறேன்.

மற்றொன்று. எல்லா ஏழை மாணவர்களுக்கும் 11-வது வகுப்பு
வரை இலவசக் கல்வி அளிப்பதற்கான வசதிகளை இந்தச் சர்க்கார்
செய்து கொடுத்திருப்பதற்காக நான் அவர்களுக்கு நன்றி
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை மாணவர் அனை
வருக்கும் இலவசக் கல்வி தரப்படுகிறது என்ற காரணத்தினால்
சமுதாயத்தில் பிற்பட்ட நிலையில் இருக்கிற தாழ்த்தப்பட்ட நிலை
யில் இருக்கிற மக்களுக்குச் செய்யவேண்டிய சலுகைகளை, காட்ட
வேண்டிய வாய்ப்புகளை, வசதிகளைச் செய்யாமல் விட்டுவிடுவதற்கு
இதை ஒரு சாக்காக வைத்துக்கொள்ளாமல், ஏழைகள்
என்பதற்கு பிற்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்பதற்கு
சமுதாயத்தில் இருக்கக்கூடிய பெரிய மாறுபாட்டை உணர்ந்து
பிற்பட்ட மக்களைத் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துவதற்குத்
தனிச் சலுகைகள் இனியும் செய்வதும். அவர்களைக் கைதூக்கி
விடுவதினால் சாதி நிலை நிறுத்தப்படும் என்கிற அச்சத்தை வளர்ப்
பதற்குப் பதிலாக, சமுதாயத்தில் ஒரு சமநிலையை அடையச்
செய்ய முடியும் என்ற வகையிலே தொடர்ந்து அந்தக் காரியத்தில்
ஈடுபடவேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் துறைத்தனத்
தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக இந்தத் துறைத்தனம் இந்த ஆண்டு எந்த ஒரு
புதிய வரியையும் போடாமல் நிதி நிலை அறிக்கையைத்
தயாரித்துக் கொடுத்திருப்பதற்காக அவர்களை நான் பாராட்ட
வேண்டி நேரிட்டிருக்கிறது. ஏன் அதை நான் பாராட்ட வேண்டி
யிருக்கிறதென்று எடுத்துச் சொன்னேன் என்றால் இவர்கள் புது
வரி எதுவும் போடாவிட்டாலும் மத்திய அரசிலே நாம் தாங்க
முடியாத அளவுக்கு வரி போட்டுவிட்டதால் இனி இந்த மாநிலத்
திலே இந்த அரசு வரி போடுவதற்குத் தனி இனமே இல்லை என்ற
காரணத்தினால் விட்டுவிட்டார்கள் என்பதனால் பாராட்ட நேரிட்
டிருக்கிறது என்று சொன்னேன். நமது நிதி அமைச்சரிடையே
நல்ல அனுபவமும், வருமுன் சொல்வது, வருவதை நினைந்து
செய்வது அமைச்சரின் குணமாக இருக்கவேண்டுமென்ற
முறையில் நல்ல அறிவும் பெற்றுள்ள நிதி அமைச்சர் அவர்கள்—
அந்த வகையில் புதிய புதிய வரி போடுவதற்கு இல்லை என்று
சொல்லிவிட்டார்களோ என்று கருதுகிறேன். வரும் பொருள்
உரைக்கின்ற ஆற்றல் அமைச்சரின் இலக்கணம் என்று சொன்னது
போல் "பின் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு வரியும் இருக்
காது" என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னது அந்த வகை
யில்தான் இருக்கும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

"வரி போடுவதற்கு வேறு இனமே இல்லாது மத்திய அரசு
வரி போடப்போகிறது. இனி வரி போடுகிற உரிமைகூட
எங்களுக்கு அவர்கள் விட்டு வைக்கப் போவதில்லை" என்பதைத்



தெரிந்து கொண்டுதான், "நான் உங்களுக்குச் சொல்கிறேன்"
என்று நிதி அமைச்சர் அவர்கள் ஜாடையாக அதைக் குறிப்பிட்
டார்களோ என்று கருதவேண்டியிருக்கிறது. ஆகையால்
நம்முடைய அரசு புதுவரி எதுவும் போடவில்லை என்ற
மகிழ்ச்சியை மாய்க்கத் தக்க வகையிலே மத்திய சர்க்காரில்
60 கோடி ரூபாய்க்குப் புது வரிகளை விதித்திருக்கிறார்கள். விதித்
திருக்கிற வரிகளும் ஏழை மக்களை பாதிக்கக்கூடிய பண்டங்கள்
மீது விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, தாங்கக்கூடிய மக்கள் மீது
போடப்பட்ட வரியாக அமையவில்லை என்பதை எல்லாம் முன
கூட்டியே உணர்ந்து, மத்திய அரசு போட்ட வரிகளினால் பெரும்
அளவு ஏழை மக்கள் பாதிக்கப்படுகிற காரணத்தினால் இனி நம்
அரசு எந்த வகையில் வரி போட இருக்கிறது என்பதையும்
உணர்ந்துதான் இவர்கள் புது வரி இல்லை என்று சொல்லியிருப்ப
தானது நான் பாராட்ட நேரிட்டிருக்கிறது என்று குறிப்பிட
வேண்டியதாகச் செய்தது.

இதிலே இருக்கிற இன்னொரு பெரிய சங்கடத்தை நிதி
அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.
இந்த அரசு செய்திருக்கிற காரியங்களைச் சீர்தூக்கிப் பார்க்கிற
போது, இந்த மாநிலத்திலே இதற்கு முன்பு வேறு ஒரு அரசு
இருந்தது. அதற்குப் பின் இவர்கள் வந்தார்கள், அவர்கள் காலத்
திலே இவ்வளவுதான் செய்யப்பட்டது, இவர்கள் வந்தபின்
இத்தனை காரியங்களைச் செய்திருக்கிறார்கள் — என்கின்ற ஒப்பு
உவமைகளை எல்லாம் பார்த்துச் சீர்தூக்கி இவர்களைப்
பாராட்டவோ அல்லது பாராட்டாமல் விடவோ இடம் ஏற்பட்
டிருக்கும். அப்படி இரண்டு அரசுகளுடைய சாதனைகளைச் சீர்
தூக்கிப் பார்த்துப் பேசுவது சற்றுத் தெளிவு கொடுப்பதாகக்கூட
இருந்திருக்கும். ஆனால் அப்படி வேறு அரசு இந்த மாநிலத்தில்
இதுவரை இல்லாத காரணத்தினால்---அதாவது நாடு விடுதலை
பெற்ற பிறகு முழு பொறுப்புகளையும் அதிகாரங்களையும் கடந்த
பத்துப் பதினான்கு வருஷங்களாக காங்கிரஸ் கட்சியிடமே
தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது, இருந்து வருகிறது என்ற
காரணத்தினால்தான் மற்ற கட்சிகள் வந்திருந்தால் 11-வது வகுப்பு
வரை இலவசக் கல்வி அளித்திருப்பார்களா, மாட்டார்களா,
இன்னும் அதிகச் சலுகைகளும், வசதிகளும் இந்த
மாநில மக்கள் பெற்றிருப்பார்களா, மாட்டார்களா என்று
சீர்தூக்கிப் பார்ப்பதற்கில்லை. ஆகவே, இவர்கள்
தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்வதற்குப் பதிலாக,
இன்ன இன்னவைகளை அதுவும் இத்தனை ஆண்டுக்குள்
செய்திருக்கிறோம் என்று எடுத்துக் காட்டியிருப்பதைவிட ஒரு
வகையில் என்ன என்ன செய்திருக்கவேண்டும் என்று கணக்கு
எடுத்து, அதில் என்ன என்னதான் செய்ய முடிந்திருக்கிறது,
இன்னும் செய்ய முடியாதவைகள் இவ்வளவு இருக்கின்றன
என்பதை எடுத்துக் காட்டியிருப்பார்களேயானால் சாதிக்க
வேண்டியவைகளோடு சாதித்திருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்
போது இவர்கள் சாதித்திருப்பவை மிகவும் குறைவு என்பதை
அவர்களே ஒத்துக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்த நாட்டில் இந்த அரசே நீடித்து இருந்தாலும், வேறு எந்த
அரசு ஏற்பட்டாலும நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் வயிரா
உண்ண உணவு கொடுப்பது தலையாய கடமையாகக் கொண்டிருக்க
வேண்டும். ஏனென்றால் அரசு இருக்கிற நாடுகளுக்கும், அரசு
இல்லாத நாடுகளுக்கும் அடிப்படையில் இருக்கக் கூடிய வித்யாசம்
அரசு இல்லாத நாடுகளில் மக்கள் உண்ண உணவு இன்றித் தவிக்க
லாம், ஆனால் நிலையான நல்ல அரசு இருக்கக்கூடிய நாட்டு மக்கள்
நாகரீகமாகத் தொழில்களில் ஈடுபடவும், வயிரா உண்ண
உணவைப் பெறவும் வசதியும் வாய்ப்பும் இருந்தாக வேண்டும்.
அதுதான் நாகரீக அரசுக்கு இலக்கணம். ஆகையால் இந்த அடிப்
படைத் தத்துவத்தை அளவு கோலாகக் கொண்டு காங்கிரஸ் அரசு
நிறைவேற்றியிருக்கிற காரியங்களை, எடுத்துக் கொண்டிருக்கிற
முயற்சிகளைச் சீர்தூக்கிப் பார்த்தால் அது பெருமை அளிக்கக்
கூடியதாக, சிறப்பளிக்கக் கூடியதாக அமைந்திருக்கிறதா
இல்லையா என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மையில் பெருமைப்
பட்டுக் கொள்வதைவிட, தங்களால் இன்னும் சாதிக்க வேண்டிய
வைகள் அதிகமாக இருக்கின்றனவே என்று அவர்களே வருத்தப்
பட்டுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள்
இப்படி ஒப்பிட்டுப் பார்க்கத் தவறிவிடுகிற நேரத்தில் எதிர்க்
கட்சியில் இருக்கிற நாங்கள் அதை எடுத்துச் சுட்டிக் காட்டுகிற
போது, அதிலே உள்ள குற்றம் குறைகளை நாங்கள் எடுத்துச்
சொல்கிற நேரத்தில் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கோபப்படு
வதும், உண்மையை எடுத்துச் சொல்கிறபோது, நல்லதைப்
பாராட்டுகிறபோது "கோழி கூவித்தான் பொழுது விடியப்
போகிறது" என்கிற கதைகளை இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துப்
பேசுவதும் உண்மையை அவர்கள் புரிந்து கொண்டதற்கு
எடுத்துக் காட்டல்ல.

நாங்கள் வலியுறுத்தி பேசிய காரணத்தினால்தான் உண்மையில்
தமிழ்நாடு என்ற பெயரைக் கொடுத்தார்கள் என்று பாராட்டிச்
சொல்கிறோம் என்றால், நாங்கள் உண்மையில் கிளர்ச்சி செய்த
காரணத்தினால்தான் 11-வது வகுப்பு வரையில் இலவசமாக
ஏழைப் பிள்ளைக்குக் கல்வி வசதி தரவேண்டும் என்பதை ஒத்துக்
கொண்டார்கள் என்று பாராட்டுகிறோம் என்றால்—இந்தச் சிறு
சந்தோஷத்தைக் கூடவா நாங்கள் வெளியிட்டுக் கொள்ளக்
கூடாது. இதைக்கூட நாங்கள் அநுபவிக்க முடியாத
முறையில் நம்முடைய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்
கள் "கோழி கூவி பொழுது விடிய வில்லை" என்று
பேசுகிறார்கள் என்றால், நான் பழங்காலத்து மேதைகள்,
ஞானிகள்தான் குரங்கு பாஷை, கோழி பாஷை,
மிருகங்களுடைய பாஷை எல்லாவற்றையும் தெரிந்து வைத்துக்
கொண்டிருந்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்—ஆனால்
இன்றையதினம் ஆட்சியில் உள்ள காங்கிரஸ்காரர்களுக்கு கோழி
பாஷை புரிந்துவிடுகிறது, கோழி நினைக்கிற நினைப்பைப் புரிந்து
கொண்டு பேசுகிறார்களே என ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது.
இப்படி மிருகங்களுடைய பாஷையைப் புரிந்துகொள்வதற்கு
எடுத்துக்கொள்கிற முயற்சியில் ஒரு கால் அளவுக்காவது மனிதர்





களுடைய பாஷையைப் புரிந்துக்கொள்வதற்கு ஆளும் கட்சியில்
உள்ள காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் அமைச்சர்கள் முயற்சி
எடுத்துக் கொள்வார்களேயானால் பல பிரச்னைகள் தீர்க்கப்பட்டு
விடும் என்று நான் கருதுகிறேன். நாட்டில் நடைபெறுகிற
கிளர்ச்சியின் பயனாக ஒரு காரியத்தில் சர்க்கார் இறங்குகிறார்கள்
என்று சொல்வது இழுக்கல்ல. அந்தச் சர்க்கார் மக்களை மதித்து
நடக்கிறார்கள் என்பதற்காக எல்லோரும் சந்தோஷப்பட
வேண்டுமே தவிர—அது கோழி கூவி எழுந்ததா, கோழி கூவாமல்
எழுந்ததா என்கிற பிரச்னையில் ஈடுபட வேண்டிய அவசியம்
இல்லை. உண்மையில் அப்படிப் பேசுவது ஜனநாயகப் பண்பா
காது.

ஆகையால் நாங்கள் கிளர்ச்சி செய்த பயனாக ஆட்சியாளர்கள்
இந்தந்தக் காரியங்களைச் செய்தார்கள் என்று எடுத்துச் சொல்
வதைக் குற்றமுள்ளதாகக் கருதி, அதற்குப் பதில் சொல்வதற்கு
கோழி கூவி சூரியன் கிளம்பவில்லை என்று ஒருவர் சொல்வதும்,
மாலை வந்து மலரவில்லை என்று இன்னொருவர் சொல்வதும் இப்படி
யெல்லாம் உண்மையில் பேசிக் கொண்டிருப்பதானது ஜன
நாயகத்தை வளரவிடாது, ஜனநாயகப் பண்புக்கு ஏற்றதும் அல்ல
என்பதை உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

எதிர்க் கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்கிற கருத்துக்களை
உண்மையில் எண்ணிக்கை பலம் இருக்கிறது என்ற காரணத்தினால்
உதறிவிடுவதில்லை என்று முதன் முதலிலே நிதி அமைச்சர் அவர்
கள் வாக்குறுதி அளிக்கின்ற முறையில் மிக்க பெருந்தன்மை
யோடு பேசினார்கள். அவர்களையே நான் கேட்கிறேன். இந்த
நான்கைந்து ஆண்டு காலத்தில் எதிர்தரப்பில் இருந்து எடுத்துச்
சொல்கிற கருத்துக்களில் எந்தக் கருத்தை அவர்கள் உடனடி
யாக மட்டும் அல்ல நெடுநாளைக்குப் பிறகாவது ஏற்றுக்கொண்டு
காரியம் நடத்தியிருக்கிறார்கள் என்று—இந்த மன்றத்தில் சொல்ல
வேண்டாம்—அவர்களுடைய மனத்திற்குள்ளேயே பதில் சொல்
லிப் பார்க்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வியை
உங்கள் மனத்திற்குள்ளேயே கேட்டுப் பாருங்கள்.

SRI C. N. ANNADURAI : என்னுடைய மனத்திலே பேசி
விட்டுத்தான் அடுத்தபடியாக இங்கே பேசுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM அப்போது உங்களுடைய
மனத்திற்கு ரொம்ப மறதியாக இருக்கும்.

SRI C. N. ANNADURAI : ஆகையால்தான் அவர்கள் எந்த
எந்தக் காரியங்களில் எதிர்தரப்பில் உள்ளவர்கள் எடுத்துச்
சொன்னவைகளை நடை முறைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்
என்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
உடனே உங்களுடைய மனத்தைக் கேட்டுப் பாருங்கள் என்று
சொல்வதையும், நான் உடனே என் மனதைக் கேட்டுப்பாத்த பின்
தான் சொல்கிறேன் என்பதும், அப்போது மறதி அதிகம் இருக்கும்
என்பதும் காமன் பண்டிகையில் இவன் ஒன்று சொல்வதும், அவன்

ஒன்று சொல்வதும் இப்படியாகப் பேசுவது போன்ற முறையில்
பேசுவது வேடிக்கை விஷயம் அல்ல. நான் கொஞ்சம்
மன அலைச்சல் அதிகம் உள்ளவனாக இருக்கலாம். ஏனென்றால்
ஆட்சிப் பொறுப்பில் இல்லை. அவர்கள் ஆட்சிப் பொறுப்பில்
இருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பில் பெரிய பதவியில்
இருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள், இன்னும் பெரிய பதவிக்குப்
போகவேண்டிய அமைச்சர் அவர்கள் அதுபற்றி தெரிவிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைவிட்டு காமன்
பண்டிகையில் பேசுவதுபோல் பேசிக்கொண்டு போனால்
அது வேடிக்கைக்காகப் பயன்படுமே தவிர வேறு காரியத்திற்குப்
9-30 a.m. பயன்படாது. இன்னும் நான் நிதி அமைச்சர் அவர்களுக்கு
எடுத்துச் சொல்லுவேன். அந்த வித்தையை என்னிடம் வைத்துக்
கொள்ளாதீர்கள். உங்களுக்குத் தெரிந்ததைவிட, நான் அந்த
வித்தையில் கொஞ்சம் கைதேர்ந்தவன். ஆகவே அதிலே ஈடுபட
வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். பொறுப்பிலுள்ளவர்
கள், எதிர்கட்சியிலுள்ளவர்கள் சொல்லுகின்றவர்கள் எந்த அள
வுக்கு செயல் முறையில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை
சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதில் ஏதாவதை ஏற்றுக்
கொண்டால்தான் எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் உற்சாகம் அடை
வார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லு
கிறார்கள் பிற மாநிலங்களுக்கு நம்முடைய மாநிலம் எடுத்துக்
காட்டாக இருக்க வேண்டும் என்று. இந்த மாநிலத்தில்
நான் கொடுத்திருக்கின்ற பல பெரிய புத்தகங்களை
படித்துப் பார்த்து கருத்துக்களைத் தெரிவித்தால் நம்முடைய
விவாதத்தின் தரம் நன்றாக இருக்கும் என்று சொல்லி
யிருக்கிறார்கள். இந்த வகையில் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்கள்
ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்பதை அமைச்சர்
அவர்கள் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே
தான் முன்பு அவர்கள் ஒரு பெரிய லட்சியத்தை எடுத்துச்
சொன்னார்கள். எல்லா காரியங்களிலும் எதிர்க்கட்சிகளை கலந்து
கொண்டுதான் ஒரு முடிவுக்கு வருகிறேன். அதே முறையில் வரவு
செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்குக்கூட எதிர்க்கட்சிகளைக்
கலந்து கொண்டு தயாரிக்கலாம் என்று எண்ணியிருக்கிறேன்
என்றும் சொன்னார்கள். இவ்வளவு ஜனநாயகத்தை சொல்லக்
கூடிய அமைச்சர் அவர்கள் கருத்துக்களை சொல்லும்போது தனி
மனிதராகிவிடுகிறார். இது எந்த அளவுக்கு ஜனநாயகத்திற்குப்
பொருந்தும் என்பதை அமைச்சர் அவர்கள் தனது ஓய்வு நேரத்தில்
சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெறும் தத்துவ விளக்கத்திற்கு
மட்டும் ஜனநாயகத்தை பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. ஆகவே
எதிர்கட்சிக்காரர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை ஆளும் கட்சிக்
காரர்கள் கவனிக்காமல் விட்டுவிடுகிறார்கள் என்பதைப் பார்க்கும்
போது, எதிர்க்கட்சிக்காரர்கள் இங்கு கருத்துக்களைச் சொல்லு
கின்ற ஆர்வம் குன்றிவிடுகிறது என்பது மட்டுமல்ல. இந்தச்
சபையில் எண்ணிக்கை பலத்தோடு வந்தால் அல்லது இந்த
ஆளும் கட்சி ஒன்றுமே செய்யாது என்கின்ற திடமான முடிவுக்கு
வர .வேண்டியிருக்கிறது. அந்த நிலையில்தான் மக்களிடத்தில் இந்த





குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, அதில் மும்மரமாக ஈடுபட
வேண்டிய நிர்ப்பந்தமும் வந்து சேருகிறது. ஆகவே உண்மையி
லேயே ஜனநாயகத்தை செம்மைப்படுத்தவேண்டும் என்ற
எண்ணத்தில் கொஞ்சமாவது அக்கறை இருக்குமானால் எதிர்க்
கட்சி தரப்பில் சொல்லுகின்ற நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்
கொள்ள வேண்டும். நியாயமான கோரிக்கை என்று சொல்லும்
போது சர்க்கார் பாஷையில் நியாயம் எது என்பதை மட்டும்
எடுத்துக் கொள்ளக் கூடாது. எந்த கோரிக்கையை சர்க்கார்
ஏற்றுக்கொள்ளவில்லையோ அதை நியாயமற்றவை என்று சொல்லி
விடுவதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். ஆகவே எடுத்துச்
சொல்லப்படுகின்ற கருத்துக்களில் வாதத்திறமை குறைவாக
இருந்தாலும்கூட நன்மை கிடைக்கும் என்று தெரிந்தால் அவை
களை ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்போது கொண்டு வரப்பட்
டிருக்கும் நிதிநிலை அறிக்கையின்மீது சொல்லப்படும் கருத்துக்
களைக் கேட்டு உடனடியாக அதைத் திருத்திவிடப்போவதில்லை.
எந்தெந்த கோரிக்கைகளை யார் யார் கொண்டு வரவேண்டும்
என்பதையும் முன்பாகவே குறிப்பிட்டு விட்டார்கள்.
உங்களுடைய எண்ணிக்கை பலத்திற்கு தக்கபடி யார் யார்
ஒப்புதல் அளிக்கவேண்டும் என்பதை முன்பே எண்ணிக்கை
பலத்தால் முடிவு செய்து வைத்திருக்கிறீர்கள். ஆகவே
இப்போது நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்களால் இதை
நீங்கள் திருத்திவிடப் போவதில்லை. ஆனால் கழிந்த வருடத்தில்
நிதிநிலை அறிக்கைமீது சொல்லப்பட்ட கருத்துக்கள் எந்த அளவு
ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன, எந்த அளவு அது கவனிக்கப்
படவில்லை என்பதை இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப்
பார்க்கும்போது விளங்குகின்றது. நாங்கள் ஒரு பிரச்னையைச்
சொல்லுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், குழாய்க்
கிணறுகள் அதிகமாக வெட்டப்பட வேண்டும். சப் ஸாயில்
வாட்டர் எடுத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும்,
செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டத்திற்கு பயன்படக்கூடிய
முறையில் பாலாற்றில் தண்ணீர் கொண்டுவரவேண்டும் என்று பல
கருத்துக்களை இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறோம். இப்படி
சொல்லப்பட்ட எந்த விஷயத்தையாவது ஒரு வருஷ
மாக ஆலோசித்துப் பார்த்து இந்த நிதி நிலை அறிக்
கையில் கோடிட்டு காட்டி இதைச் செய்திருக்கிறோம் என்று
சொல்லிருக்கிறார்களா, எப்படிக் கோடிட்டு காட்ட முடியும் என்று
கேட்க முடியாது. ஏனென்றால் மந்திரி அபிவிருத்திக்காகப் பணம்
ஒதுக்கியதை தெரிவிக்கின்ற நேரத்தில் என்னைக் கொஞ்சம் கவன
மாகவே பார்த்து இதற்காக 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.
இது எங்களுக்கு ஆறுதல் அளிக்கும் என்ற முறையிலும் எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி தரப்பில் சொல்லப்படுகின்ற
கருத்துக்களில் இவைகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்
கின்றன என்று கோடிட்டு காட்டக்கூடிய அளவில் தெரிவித்திருந்
தால், அதைப் பார்த்து எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு சற்று
உற்சாகம் ஏற்படுவது மட்டுமல்ல மேலும் சிலவற்றைச் சொல்லு
வதற்கு வழி ஏற்படும். இந்த ஆண்டு எடுத்துச்சொல்லுகின்ற

கருத்துக்கள் மிகவும் நியாயமானவையாக இருந்தாலும்கூட
அதை ஏற்கனவே தீட்டப்பட்ட இந்த நிதி நிலை அறிக்கையில்
மாற்றி அமைக்கப் போவதில்லை என்பது உறுதியாக தெரிவித்தா
லும் எதிர்காலத்திற்காக இது பயன்படும் என்ற அளவில் சிலபல
கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன்.

எங்கள் கட்சி சார்பில் பல நண்பர்கள், என்னென்ன கருத்துக்
களைத் தெரிவிக்க வேண்டுமோ அவற்றை எடுத்துச் சொல்லியிருக்
கிறார்கள். அவைகளில் ஒரு விஷயத்தில் என்னுடைய திராவிட
முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்
திரு. ப. உ. சண்முகம் எடுத்துச் சொன்னதை நான் ஒரு வகையில்
வன்மையாகக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நம்
முடைய அமைச்சர்கள், அவர்கள் சுற்றுப்பிரயாணம் செல்லும்
நேரத்தில் கட்சி வேலை செய்கிறார், அது மட்டுமல்ல, பணமும்
திரட்டுகிறார் கட்சிக்காக என்று சொன்னதாகக் கேள்விப்பட்
டேன். அவ்விதம் கூறினது மிகவும் கண்டிக்கத்தக்கதுதான்.
ஏனென்றால், அவர்கள் சொன்னதற்கு காரணம் இருக்கிறது என்று
எண்ணுகிறேன். இரண்டு பேரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்த
வர்கள்.

(Deputy Speaker in the Chair.)

அமைச்சர் சுற்றுப்பயணம் செய்கின்ற வேளையில் கட்சி வேலை
செய்கிறார் என்பது மட்டுமல்ல, பணமும் திரட்டுகிறார் என்று
சொன்னதைக்கூட நான் குற்றச்சாட்டு என்று கருதவில்லை. நம்
முடைய மாணிக்கவேலர் அவர்கள் காங்கிரஸ் கட்சிக்காகப் பிரச்
சாரமும் செய்கிறார் என்ற விஷயத்தைத் தெரிவித்து விட்டார்
என்றே கருதுகிறேன். மாணிக்கவேலர் அவர்கள் காங்கிரஸ் கட்சிப்
பிரச்சாரமாக மக்களிடத்தில் எதைப்போய் சொல்லப்போகிறார்,
காங்கிரஸ் சரித்திரத்தைப்பற்றி பேசப்போகிறார்களா ? தண்டி
யாத்திரயைப்பற்றி பேசப்போகிறார்களா அல்லது அலிப்பூர்
சிறையில் ஆறாண்டு காலம் இருந்ததைப்பற்றி பேசப்போகிறார்
களா ? காந்தியார் உப்பு சத்தியாகிரகம் நடத்திய போது தென்னாற்
காடு மாவட்டத்தில் தான் தலைமை தாங்கி நடத்தியதைப்பற்றி
பேசப்போகிறார்களா ? எதைப்பற்றி பேசப்போகிறார்கள் ? இருக்
கிற அமைச்சர்களிலே வலுவிழந்து இருக்கக்கூடிய அவர்கள்
கட்சிப் பிரச்சாரம் செய்தார் என்று குறிப்பிடுவது, அதை எதிர்க்
கட்சியிலுள்ள ஒருவர் சொல்லுவது அமைச்சர் அவர்களுக்கு
வேண்டுமென்றால் பொதுத் தேர்தலுக்கு ஒரு சீட்டு வாங்கிக்
கொடுக்க உதவுமோ என்ற அளவில்தான் அதை நான் கண்டிக்
கிறேன். ஆகவே திரு. சண்முகம் அவர்கள் என்ன காரணத்திற்காக
இவ்விதம் சொன்னார்களோ தெரியவில்லை . . . (கனம் ஸ்ரீ சி. சுப்பிர
மணியம் : ஜில்லா நட்பாக இருக்கலாம்.) அதை அமைச்சர் அவர்
களும் ஏற்றுக்கொள்ளுகிற முறையில் நான் சுற்றுப்பிரயாணம்
செய்தேன், ஆசுபத்திரியைப் பார்வையிட்டேன், பின்னால் பல
இடங்களைப்போய் பார்வையிட்டேன். பின்னால் சாப்பிட்
டேன். பின்னால் ஓய்வு எடுத்துக்கொள்ளுகிற நேரத்தில்



போய் கட்சிப் பிரசாரம் செய்தேன், நிதி திரட்டினேன்
என்பதை ஏற்றுக்கொண்டார்கள். அதிலும் முக்கியமாக
'சாப்பிட்டேன்' என்பதை இந்த மன்றத்திலேயே தெளிவாகச்
சொன்னார்கள். திரு. சண்முகம் ஏதோ அந்த வேலையை அமைச்சர்
அவர்கள் தொடர்ந்து செய்துக்கொண்டு இருக்கிறார்கள் என்ற
அளவில் சொன்னார்கள் என்று நான் எண்ணவில்லை. அமைச்சர்
மாணிக்கவேலர் அவர்கள் எந்த அளவுக்கு கட்சியை காப்பாற்று
வார் என்பதை நான் முன்பே அறிந்திருக்கிறேன். முன்னால்
என்னுடைய கட்சியை ஆதரிப்பேன் என்று என்னிடமே
கையொப்பமிட்டு தந்துவிட்டு பின்னால் எப்படி நடந்து கொண்டார்
என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எப்படி அவர் தந்த
வாக்குறுதியின்படி எங்கள் கட்சியை காப்பாற்றினார்களோ அந்த
முறையில்தான் காங்கிரஸ் கட்சியை காப்பாற்றுவார்கள் என்பதை
காங்கிரஸ் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான்
கடமைப்பட்டிருக்கிறேன். அவ்விதம் செய்ததையும் இங்கு அவர்
களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் திரு. சண்முகம்
அவர்கள் எப்படி சொன்னார்கள் என்று தெரியவில்லை. நிதி
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி ஜில்லா பற்றுதலோ அல்லது
வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற பல சிறப்புகளில் இதுவும்
ஒன்றுதானு—ஒருவருக்கொருவர் கைபிடித்து கொள்கிறார்கள்—
என்று எண்ணவேண்டியிருக்கிறது. உண்மையில் அமைச்சர்கள்
கட்சிப் பிரச்சாரத்தை அமைச்சர்களாக இருக்கின்ற நேரத்தில்
மேற்கொள்ளலாமா என்ற தத்துவத்தை அவர் நன்றாக சிந்துத்துப்
பார்க்கவேண்டும், ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று அமைச்சர்
களை கேட்டுக்கொள்கிறேன். கட்சிப் பிரசாரத்தை அமைச்சர்
கள் செய்கின்ற நேரத்தில், பணம் திரட்டுவது என்றால், அது முறை
யாகுமா என்று கேட்கின்ற நேரத்தில் அதிகாரிகளுக்கு இருக்கின்ற
செல்வாக்கு அமைச்சர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கை விட
உயர்ந்ததா என்று கேட்பது எந்த ஜனநாயக வாதம் என்று
தெரியவில்லை. ஜனநாயக அடிப்படையை ஆராய்ந்து பார்த்தால்
அதிகாரிகளுக்கு இருக்கின்ற செல்வாக்கைவிடவும் அமைச்சர்
களுக்கு இருக்கின்ற செல்வாக்கைவிடவும் மக்களுடைய செல்
வாக்கு மிகவும் உயர்ந்தது என்பதை அமைச்சர்களும் ஏற்றுக்
கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். அமைச்சர் அவர்கள் எதோ
பணம் திரட்டுவதற்கு அதிகாரிகள் எங்களுக்குத் தேவையில்லை
என்று எடுத்துக்கூறினால் அமைச்சர்களாக இருக்கின்ற நேரத்தில்
பணம் திரட்டுவது என்ற முறை.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் அன்று
குறிப்பிட்டது, இது மாதிரி அதிகாரிகளை உபயோகித்து பணம்
திரட்டினார்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்கின்றதா
என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே அதிகாரிகளை உபயோகித்து
பணம் திரட்டினார்கள் என்று சொல்லுவது தவறு, அது பொருத்த
மாகவும் இல்லை என்பதை எடுத்துச் சொன்னேன். அமைச்சர்
அவர்கள் பணம் திரட்டினார்களா இல்லையா என்பது வேறு
விஷயம்.

[8th March 1961

**Sri K. ANBAZHAGAN:** அதை கனம் அமைச்சர் அவர்களே
ஒத்துக்கொண்டார்கள்.

**Sri C. N. ANNADURAI:** வசூல் செய்தது உண்மைதானா,
அல்லது வசூல் செய்தது எவ்வளவு என்கின்ற பிரச்னைக்கே நான்
போகவிரும்பவில்லை. அமைச்சர் பொறுப்பில் இருக்கின்ற
நேரத்தில் இம்மாதிரியான காரியங்களுக்கு ஈடுபடலாமா
என்கின்ற பொது தத்துவத்தைத்தான் நான் ஆராய்ந்து
பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான்
ஜனநாயகத்தில் எவ்வளவு தூய்மை இருக்கிறது என்பது தெரிய
வரும். அமைச்சராய் இருக்கின்றவர்கள் கட்சி வேலை நடத்தலாம்
என்பதில் யாருக்கும் இரண்டு விதமான அபிப்பிராயம் இருக்க
முடியாது. அமைச்சர்கள் போடுகிற சுற்றுப்பயணத் திட்டங்களை
பார்த்தாலும் சரி, சுற்றுப் பயண நேரத்தில் நடை பெறுகின்ற
நிகழ்ச்சிகளில் யார்யார் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்பதைப்
பார்த்தாலும் சரி, அமைச்சர்கள் ஈடுபடுகின்ற கூட்டங்களில்
எவ்வளவு கட்சிப் பிரசாரம் செய்யப்படுகிறது என்பதை கணக்
கெடுத்துப்பார்த்தால் அமைச்சர் பதவியை தவறாக பயன்படுத்தி
வருகிறார்கள் என்பதை மக்கள் நன்றாக தெரிந்து கொண்டிருக்
கிறார்கள். தனிப்பட்ட கல்நாட்டுவிழா காலையில் இருக்கும், மாலை
யில் பொதுக்கூட்டம் இருக்கும். பொதுக்கூட்டத்தில் எதை
வேண்டுமானாலும் சொல்லலாம், அதை யாரும் கேட்கமாட்டார்கள்.
ஆனால் கல்நாட்டுவிழா போன்ற விழா கூட்டங்களில் கட்சி
பிரச்சாரம் செய்யப்படுவதை நாம் பார்க்கிறோம். நானும் அமைச்
சர் கக்கன் அவர்களும் கலந்துகொண்ட கைத்தறி நெசவுத்
தொழிலாளர்கள் கூட்டத்தில் பொதுவானப் பிரச்னையை பேசுமாறு
கேட்டுக்கொண்டார்கள். இம்மாதிரி விழாக்களில் பிரிவினையைப்
பற்றி பேசக்கூடாது என்று பலர் இங்கும்கூட தெரிவித்தார்கள்.
அன்று நடந்த கூட்டத்தில் எனக்குப்பின்னால் பேசிய அமைச்சர்
கக்கன் அவர்கள், நான் பிரிவினையைப்பற்றி ஒன்றும் குறிப்பிடா
மல் இருந்தும்கூட, இந்தியாவினுடைய ஒற்றுமைக்காக பாடுபட
வேண்டும் என்று கடைசியில் தன்னுடைய கட்சிப் பிரச்சாரத்தை
செய்து கொண்டுதான் வந்தார்கள். இதிலிருந்து கட்சிப் பிரச்
சாரம் வெற்றி பெற்றுவிடும் என்று நான் சொல்லவில்லை. நான்
பேசிய பிறகு கனம் கக்கன் அவர்கள் பேசிக்கொண்டு போனார்கள்.
கனம் கக்கன் பேசியதைக் கேட்டு மக்கள், அண்ணாதுரை பேசி
யிருந்தால் நாட்டின் பிரிவினைக்கு ஆயிரம் காரணம் காட்டி
யிருப்பான் என்று சொன்னார்கள். ஒரு அமைச்சர் தன்னுடைய
அலுவலை முடித்துவிட்டு கட்சிப்பிரசாரம் செய்வதில் ஆட்சேபம்
ஏதும் இருக்க முடியாது. ஆனால் நமது அமைச்சர்களின் அலுவல்
களும் கட்சிப் பிரசாரமும் ஒன்றாகச் சேர்ந்து விடுகிறது. அவர்கள்
செய்யக்கூடிய அலுவலை பிரித்துப் பார்க்க இயலாத நிலை இருந்து
வருகின்றது. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்லுவார்கள்
'Caeser's wife should be above suspicion'— என்று. அந்த
முறையில் அமைச்சராக இருக்கின்றவர்கள் தெள்ளத்தெளிவாக
பிரித்துப் பார்க்கத்தக்க வகையில் தங்கள் நடவடிக்கைகளைத்
தூய்மை உள்ளதாக ஆக்கிக்கொள்ளவேண்டுமே தவிர, மாசு மறு



8th March 1961] [Sri C. N. Annadurai]

இருப்பதைச் சுட்டிக் காட்ட முடியாத அளவில் தடுத்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறார்கள்—ஆக, இனியாகிலும் அந்த மாதிரி
நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென்றும் எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன். எனது கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே பேசு
கின்ற நேரத்திலே மற்றவர்கள் எங்களுக்கு மதிப்புத்தரத் தேவை
யில்லை, எங்கள் மதிப்பு இருக்கவே இருக்கிறது என்று சொன்ன
வுடனே, 'உங்கள் மதிப்புத்தான் சந்தி சிரிக்கிறதே' என்று நிதி
அமைச்சர் அவர்கள் இங்கே பேசியதாக நான் அறிந்தேன்.
நம்முடைய நிதி அமைச்சர் இவ்வளவு தூரம் இறங்கி
வந்து பேசுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் நான்
துவக்கத்தில் சொல்லியதுபோல, மேல் நிலைக்கு வந்திருக்கிறார்,
இளம் வயதிலேயே. மேல் நிலைக்கு வந்திருப்பது மட்டுமல்ல,
இன்னும் மேலான நிலைக்குச் செல்ல வேண்டியவர். அப்படி அவர்
மேலான நிலைக்குச் செல்வதற்கு மிகத் தரம் குறைந்த மனோ
பாவத்தை அவர் விட்டுவிட வேண்டும். எதிர் வீட்டு ஜன்னலை
எட்டிப் பார்ப்பது என்பது மிகவும் தரக்குறைவான காரியமாகும்.
அதிலும் இவர் வட நாட்டுக்குச் செல்வதாகச் சொல்லுகின்றார்கள்.
அங்கே பர்தா முறை இருக்கிறது. ஆகையால் அத்தகைய இந்த
நடவடிக்கையை இந்த நாட்டோடு விட்டுவிடவேண்டுமென்று
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்:
எங்கு சென்றாலும் நம் நாட்டுக்குத்தான் செல்கிறேன்). அவர்கள்
அந்த நாட்டுக்குப் போகப்போகிறார்கள் என்று அட்வான்ஸாகவே
சொல்லிவிட்டார்கள். அந்த நாடும் நம் நாடுதான் என்று சொல்லு
கிறார்கள். எப்படியிருந்தாலும் இந்த முறை அங்கு வேண்டாம்
என்று சொல்லுகின்றேன். ஒரு கட்சிக்குள் ஏற்படக்கூடிய சிலபல
காரியங்களை—வெளியிலே உள்ளவர்கள் சொன்னாலும் பரவாயில்லை
—சந்தி சிரிக்கிறது என்று இந்த மன்றத்தில் பேசுவது எந்த ஜன
நாயகத் தத்துவப்படி நியாயமானது என்று அமைச்சர் அவர்கள்
கருதுகின்றார்கள்? அப்படிச் சொல்லவேண்டுமானால் ஒவ்வொரு
கட்சியிலும் இருப்பதைப்பற்றி எடுத்துச் சொல்லுவது இயலாத
காரியமா?—கூடாத காரியம் என்பதை ஒப்புக்கொள்கிறேன்—
இயலாத காரியமா என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கட்டும்
என்று சொல்லிக்கொள்கிறேன். இன்றைய தினம் காலையில்
கனம் நிதி அமைச்சர் அவர்கள் மறைந்த கோவிந்த வல்லப பந்த்
அவர்களைப்பற்றி அனுதாபத் தீர்மானத்தின்மீது பேசும்போது,
ஒவ்வொரு கட்சியிலும் பல முறைகளில் கருத்து வேறுபாடுகள் ஏற்
படும், அந்த முறையில் கட்சியில் ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடு
களை அவர்கள்தான் தீர்த்து வைப்பார்கள் என்று சொன்னார்கள்.
அப்படிப்பட்ட கருத்து குழப்பங்கள் ஒவ்வொரு கட்சியிலும் ஏற்
படும். ஒரு கட்சியை நடத்திக்கொண்டு செல்லுகின்றவர்களுக்குத்
தான் இந்தச் சங்கடங்கள் தெரியுமே தவிர கட்சியை வேடிக்கை
யாக எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கா தெரியும்? நம்முடைய
நிதி அமைச்சர் அவர்கள் ஒரு கட்சியை நடத்திச் செல்லும்
பொறுப்பை ஏற்றுக்கொள்ளாதவர். இருக்கக்கூடிய கட்சிகளில்
எந்தப் பக்கம் வலிவு அதிகமாக இருக்கிறது என்று கருது
கின்றாரோ அதில் சேர்ந்து வெளிச்சம் போடக்கூடியவர்கள்.
அடுத்த மந்திரி யார்?—ராஜாஜியா? காமராஜா?—என்று பிரச்னை

வந்த காலத்தில் வெளியிலே என்ன பேசப்பட்டது என்றால்
ஆச்சாரியாரின் அத்தியந்த நண்பர் என்று கூறுகிறார்கள்,
ஆச்சாரியாரும் நான் சிஷ்யப் பிள்ளையை தயார் செய்திருக்கிறேன்,
கோவையிலிருந்து வந்திருக்கக்கூடிய இளைஞர் அவர், பிரசித்தி
பெற்ற கிரிமினல் வக்கீல் என்று அவர் சொல்லிக் கொண்டு இருந்த
காலத்தில் இந்திராணி போன்று காட்சியளித்துக் கொண்டு வந்த
அவர்—இந்திராணி கதையை எல்லோரும் அறிந்திருப்பார்கள்
என்று நான் நினைக்கிறேன், இந்திரன் மாறினாலும் இந்திராணி
அதே இந்திராணி தான் என்று சொல்லுவார்கள், அந்த முறையில்
—ஆச்சாரியார் போய் காமராஜர் வந்தவுடனே அவரது பக்கத்தில்
பார்த்தால் நிதி அமைச்சர் உட்கார்ந்திருந்தார். இப்படிக் கட்சிப்
பற்றுகூட இல்லாத நிதி அமைச்சரைப் பார்த்து சந்தி மட்டும்
சிரிக்காது, வீட்டுக்கு வீடு சிரிக்கும், ஆளுக்கு ஆள் சிரிப்பார்கள்.
இதைப்பற்றியெல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல
வேண்டியதில்லை. இன்றையதினம், நிதி அமைச்சர் அவர்கள்
சந்தி சிரிக்கிறது என்று சொன்னதால் இப்படிப்பட்ட மனப்
போக்கை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்—மற்றவர்கள்
வேண்டுமானால் சொல்லட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை—
அதுவும் சபையை அலங்காரப்படுத்துவதற்குத் தேவைப்படுவதாக
இருக்கலாம்—எனது கண்ணோட்டத்தில் எப்படி இருக்க வேண்டு
மென்று கருதுகின்றேனோ அந்த முறையில், அதுவும் ஒரு
ஆண்டுக்கு முன்னால் எனக்கு ஒரு சிறு உரிமை கொடுத்ததால்.
அதாவது நான் எப்போதாவது தவறாக நடந்தால் அதை எடுத்துச்
சொல்லி திருத்துவதற்கு உரிமை எல்லோருக்கும் உண்டு, அண்ணா
துரைக்கும் உண்டு என்று எனக்கு தனியாக கொஞ்சம் உரிமை
கொடுக்கப்பட்டுள்ளதால் நம்முடைய நிதி அமைச்சர்
அவர்கள் இந்தப் போக்கைக் கைவிட்டு விடவேண்டும் என்று
தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கட்சியிலுள்ளவர்கள் ஒருவருக்
கொருவர் தெரிந்துகொண்டால்தான் பெரிய காரியங்கள் சாதிக்க
முடியும். அப்படி எடுத்துச் சொல்லுவதில் கட்சிக்குள் ஏற்பட்ட
சிறு குழப்பத்தை வைத்துக்கொண்டு சந்தி சிரிக்கிறது என்று
பேசியிருக்கின்றார்கள். உண்மையில் சந்தி சிரித்ததா இல்லையா,
என்ன நடந்தது என்று நிதி அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள
ஆசைப்பட்டால் என்னிடத்தில் இதைப்பற்றித் தனியாகப்
பேசினால் நான் எடுத்துச் சொல்வேன். அவர்களுக்கு இருக்கும்
ஆயிரத்தெட்டு வேலைகளில் இதைக் கேட்டுக் கொள்ள காலம்
இருக்காது. கேட்டுக்கொள்வதற்குக்கூட நேரம் இல்லாத இந்தப்
பிரச்னையைப்பற்றி யாரோ சொன்னதை காதின் வழியாகக் கேட்டு
வாயின் வழியாக விட்டுவிட்டிருக்கின்றார்கள். எதையும் காதின்
வழியாகக் கேட்டு, கண் வழியாகப் பார்த்து வாய் வழியாக வெளி
யிடவேண்டும். ஆகவேதான் பெரியவர்கள் இந்த மூன்று புலன்களை
யும் சேர்த்துச் சொல்லியிருக்கின்றார்கள். காதின் வழியாக வாங்கி
வாயின் வழியாக வருவது இருமலாக இருக்கலாம், தும்மலாக
இருக்கலாம். ஏப்பமாக இருக்கலாம், ஆனால் எண்ணமாக இருக்
காது. எதிர்க்கட்சியை ஏளனப்படுத்தத்தக்க போக்கை விட்டுவிட
வேண்டுமென்று சொல்லிக்கொள்கின்றேன்.



நான் துவக்கத்தில் சொல்லியபடி இவர்கள் சாதித்து இருக்
கின்ற காரியங்களை ஒப்பிட்டுப் பார்த்து மற்றவர்கள் அதிகம்
சாதித்திருக்கிறார்களா என்று எடுத்துச் சொல்லுகின்ற விதத்தில்
ஒரு "ஆல்டர்னேடிவ் கவர்ன்மெண்ட்" இல்லாத காரணத்தினால்,
சாதிக்கவேண்டியவை எவ்வளவு, அதில் எந்த அளவு சாதித்திருக்
கிறோம், இன்றைக்கு நம்முடைய மக்களுக்கு கொடுக்கத்தக்கது
எவ்வளவு, மக்களுக்கு கிடைத்தது எவ்வளவு என்று காட்டக்கூடிய
முறையில் கொடுத்திருந்தால் சாதனைகள் எவ்வளவு என்று
ஒப்பிட்டுப் பார்க்க முடியும். அதை விட்டு வெள்ளைக்காரன் காலத்
தில், ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் நடந்தவைகளை விட அதிகமாக
சாதித்திருக்கிறோம், ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் 12 பொலி
காளைகளை வாங்கிக் கொடுத்தார்கள், நாங்கள் தாலுக்கா
விற்கு 120 பொலி காளைகளை வாங்கிக் கொடுக்கிறோம்
என்று தற்பெருமை அடித்துக் கொள்வதில் அர்த்தமில்லை.
நாட்டுக்கு நம் ஆட்சியின் மூலமாக என்ன கிடைத்
தது? என்ன முற்போக்கு திட்டங்களினால் இந்த நாட்டு
மக்களுக்கு வசதி ஏற்பட்டிருக்கிறது? வறுமையை ஓட்டி
யிருக்கிறோமா? வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கியிருக்
கிறோமா? பயங்கர விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தியிருக்
கிறோமா? அல்லது கட்டுப்படுத்தியிருக்கிறோமா? எல்லா மக்க
ளுக்கும் தொழில் வாய்ப்பு தேடிக்கொடுத்திருக்கிறோமா? இயற்கை
செல்வங்களை விஞ்ஞான முறையில் பயன்படுத்த செயல்முறைகளைக்
கைக்கொண்டிருக்கிறோமா? வெளிநாட்டு ஏற்றுமதியை பெருக்கி
யிருக்கிறோமா? உழவர்கள் மனதில் சந்தோஷத்தை உண்டுபண்ணி
யிருக்கிறோமா? தொழிலாளியின் துயரத்தைத் துடைத்திருக்
கிறோமா? நடுத்தர வகுப்பினரின் நல்வாழ்வுக்கான காரியங்களைச்
செய்திருக்கிறோமா? இதைப் பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்க
வேண்டும். இவைகளைப்பற்றி எண்ணிப் பார்த்து எந்த அளவு
சாதித்திருக்கிறோம் என்ற கணக்கை எடுத்து அடக்க உணர்ச்சி
யோடு, இதைவிட சாதிக்கக் கூடியவைகள் எதிர்காலத்தில், வரக்
கூடும் என்ற ஒரு அரசியல் தெளிவோடு, எங்களால் இவ்வளவுதான்
சாதிக்க முடிந்தது, இன்னும் எவ்வளவோ சாதிக்க விரும்பினோம்,
ஆனால் முடியவில்லை என்று அப்படிப்பட்ட ஜனநாயகப் பண்பு
வளரவேண்டும் என்று இதனை இவ்வளவு வலியுறுத்திச் சொல்ல
விரும்புகின்றேன். அந்த இலக்கணப்படி பார்த்தால் இந்த அரசு
சாதித்திருக்கும் காரியங்களில் பெருமைப்படுவதற்கு அதிகம் இல்லை
என்று ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துச் சொல்லிக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இந்த அரசு ஏற்பட்ட
பிறகு நாம் ஒரு திட்டமிட்ட ஆட்சியை நடத்திக்கொண்டு
வருகிறோம்—அதாவது "ப்ளான்ட் இக்கானமி" என்ற முறையில்
திட்டமிட்ட பொருளாதாரத்தை வளரச் செய்கிற நடைமுறையில்
நாம் இருந்துகொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டங்களில்
இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவுற்று, மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அடி எடுத்து வைத்துக்கொண்டிருக்
கிறோம். இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் செலவழிக்கப்
பட்ட தொகை எவ்வளவு? நமக்குக் கிடைத்த ரிட்டர்ன், அதாவது
பலன்கள் என்ன? செலவழிக்கப்பட்ட தொகை ஒரு சீராக செல

வழிக்கப்பட்டதா? அல்லது இடத்திற்கு இடம் பேதம் இருக்கக் கூடிய முறையில் செலவழிக்கப்பட்டதா? செலவழித்த விதத்திலே சமுதாயத்திற்குப் பயன்படாமல் தாறுமாருக செலவழிக்கப் பட்டது எவ்வளவு? செலவழிக்கும் நேரத்தில் எதிர்பார்த்த பலன் என்ன? இப்போது கிடைத்துள்ள பலன் என்ன? இவைகளைப் பற்றி நிபுணர்களே தங்கள் மண்டையைப் போட்டு குழப்பிக் கொண்டிருக்கிருர்கள். இவைகளிலெல்லாம தெளிவு கிடைத்து விட்டது போல, எல்லா திட்டங்களும் வெற்றி பெற்றுவிட்டது போல டார்ஜெட்டுகளை எடுத்துக்காட்டி இவ்வளவு சாதிக்க விரும் பிருேம், அதைவிட அதிகம் சாதித்து விட்டோம் என்று எடுத்துக் காட்டுவதில் பயன் இல்லை. திட்டங்களை ஆராய்ந்து பார்த்த அத்தனை பேர்களும் சொல்லுகிருர்கள், திட்டங்கள் மூலமாக எதிர் பார்த்த பலன் இன்னமும் பெறவில்லை, மக்களின் வாழ்க்கைத் தரத்தை இன்னமும் உயர்த்த முடியவில்லை, தனி மனிதன் வரு வாயை நம்மால் இன்னும் பெருக்க முடியவில்லை என்று. தேசிய வருமானத்தை ஓரளவு பெருக்கியிருக்கிருேமே தவிர தனி மனிதன் வருமானத்தை—பர் காபிடா இன்கமை—பெருக்க முடியவில்லை என்று பொருளாதார நிபுணர்கள் புள்ளிவிவரக் கணக்கோடு எடுத்துக்காட்டுகிருர்கள். அரசியல் அனுபவம் படைத்தவர்கள் எங்கே சோரம் போய்விட்டது என்று தேடிக்கொண்டிருக்கிருர்கள். எண்ணிக்கை பலத்தை வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்கள் இந்தத் திட்டங்களால் இவ்வளவு சாதித்திருக்கிருேம் என்று எடுத்துப் பேசுவதாலுல் அது உண்மைக்குப் புறம்பானது மட்டு மல்ல, மக்களைத் தவருன பாதையில் திருப்பிவிடுவதாக ஆகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மக்களைத் தவருன பாதையில் எதிர்க்கட்சிகள் அழைத்துச் செல்வதாக சொல்லப்படு வதை நாம் பார்க்கின்ருேம். இன்று நாட்டில் நிறைவேற்றப்படு கின்ற திட்டங்களைச் சற்று கூர்ந்து கவனிக்கும்படி நிதி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களில், இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில், இந்த கடந்த 10 ஆண்டு களிலே இந்தியத் துணைக் கண்டத்திலே எவ்வளவு பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வந்திருக்கின்றன என்பதை கணக் கெடுத்துப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் பெரும் பாலான தொகைகள் கட்டிடங்கள் கட்டுவதிலே செல வழித்திருப்பது தெரியும். அப்படி கணக்கெடுத்துப் பார்த்து, அந்தக் கட்டிடங்கள் எல்லாம் யாருக்குப் பலனளித்தது என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும் வகையிலே கணக்கெடுத்துப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது. இந்தத் திட்டங்களிலுலே ஏழைமக்களுக்கு ஆர்வம் ஏற்படக்கூடிய விதத்திலே இந்த திட்டங்கள் அமைக்கப் படவில்லை. ஆகவே நீங்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்காத காரணத்திலுல், இந்தத் திட்டங்கள் விஷயத்திலே மக்கள் ஆர்வம் காட்டவில்லை என்று நாங்கள் எடுத்துச் சொல்கிருேம். ஆனால் நீங்கள் தப்பு பிரசாரம் செய்கிறீர்கள் அதனுலே மக்களுக்கு திட்டத்தின் பேரில் அவநம்பிக்கை ஏற்படுகிறது என்று எங்கள் பேரிலே குற்றம் சாட்டப்படுகிறது. திட்டங்களைப் பொறுத்த



வரையிலே அலுவலர்கள் செய்யக்கூடிய ஒரு பொழுதுபோக்கு காரியம்தான் இது என்று கிராமத்திலுள்ள மக்கள் கருதுகிருர்கள். நம்முடைய நிதி மந்திரி அவர்கள் விறகுக் கடைக்கும், அரிசிக் கடைக்கும் போவதற்குப் பதிலாக, திட்டத்தின் பேரால் கட்டப் பட்டுள்ள கட்டிடங்கள் உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்று, அந்த கிராமத்திலே உள்ள ஒரு பெரியவரை அழைத்து, தான் மந்திரி என்பதை அவரிடத்திலே கூருமல், அந்தக் கட்டிடத்தைச் சுட்டிக் காட்டி, இது என்ன கட்டிடம் என்று கேட்கட்டும். அதற்கு அவர் இது சர்க்கார் கட்டிடம் என்று பதில் சொல்வதைக் கேட்கலாம். ஆனால் நீங்கள் தெளிவாக அந்தக் கட்டிடத்தின் மீது சமுதாயக் கட்டிடம் என்று எழுதியிருக்கிறீர்கள். எல்லா கம்யூனிடி மக்களுக் காகவும் என்று கட்டியிருக்கிறவர்கள் எல்லோருடைய உழைப்பும் அதிலே இருக்கிறது. ஆனால் கிராமத்திலுள்ள மக்கள் அதைப் பார்க்கின்றபோது. எப்படி கிகப்புக் கட்டிடத்தைப் பார்த்தால், போலீஸ் ஸ்டேஷன் அல்லது கோர்ட் என்று சொல்கிருேமோ, அதைப்போல் கிராமத்திலுள்ள இந்தக் கட்டிடங்களைப் பார்த்த வுடனேயே இதைச் சர்க்கார் கட்டிடம் என்று சொல்கிருர்கள். இது இன்னும் சர்க்காருடைய வேலையாகக் கருதப்படுகிறதே தவிர, மக்களுடைய மனத்திலே ஆர்வத்தை இன்னும் ஏற்படுத்த வில்லை. அப்படி இந்தத் திட்டத்திலே மக்களுக்கு ஆர்வம் ஏற்பட வேண்டுமாலுல், இது மக்களுக்கு எப்படி நேரடியாக பலன் தருகிறது என்பதை நாம் விளக்கிக் காட்டினுலொழிய, எப்படி இதிலே மக்களுக்கு ஆர்வம் ஏற்பட முடியும்? கட்டிய கட்டிடங்கள் இடிந்து விழுவதைப்பற்றி நான் ஏற்கனவே கனம் கக்கன் அவர் களிடத்திலே சொல்லியிருக்கின்றேன். அதற்கு அவர்கள் "அண்ணு துரை அவர்கள் கண்களுக்கு இடிந்த கட்டடங்கள்தாஞ பட வேண்டும். வேறு நல்லக் கட்டிடங்கள் படவில்லையோ" என்று குறைபட்டுக்கொண்டார்கள். ஆனால் அதேசமயத்தில் இந்தக் கட்டிடங்கள் இடிந்து விழுவதற்கு என்ன காரணங்கள் என்பதை அறியும் வகையிலே தம்முடைய கோபதாபத்தைத் திருப்பி விட்டிருப்பாரேயாலுல் நன்ருய் இருந்திருக்கும். என்னுடைய பகுதியிலே கட்டப்பட்டுள்ள ஒரு கட்டிடத்தை வந்து பாருங்கள் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். ஒன்றும் பயனில்லை. இப்போது கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மழைக் காலத்தில் நல்ல மழை பெய்து, வெய்யில் வந்தவுடன் பாளம் பாள மாக வெடித்து விடுகிறது. அந்த வகையிலே எவ்வளவு பணம், எத்தனை கோடிக்கணக்கான ரூபாய் பாழாக்கப்பட்டு இருக்கிறது, விரயமாக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்ப்பார்களே யாலுல் எவ்வளவு பணத்தை ஏழை எளிய மக்கள் வாயைக் கட்டி, வயிற்றைக்கட்டி, பகல் சாப்பிட்டு ராத்திரி சாப்பிடாமல், மகன் சாப்பிட்டு, தாய் சாப்பிடாமல், கணவன் சாப்பிட்டு, மனைவி சாப் பிடாமல், அவர்கள் மிச்சப்படுத்திக் கொடுத்திருக்கும் பணத்தை வைத்துக்கொண்டு இவ்வளவு பணத்தை விரயமாக்கியிருக்கிருர்கள் என்பது தெரியும். இந்தப் பழி யார் தலையில் விழும்? இதற்கு எத்தனை காலத்திற்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற பயங்கர மான உண்மைகள் உங்கள் நெஞ்சிலே இருக்குமாலுல், கட்டப்

பட்டுள்ள கட்டிடங்களின் கணக்கைச் சொல்வதிலே ஏன் தயக்கம்? அப்படிச் சொல்லப்பட்டுள்ள காரியங்கள் எல்லாம் நடந்திருக்கிறதா என்று பார்த்தாலும் அதுவும் நடக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதன் முடிவில் விவசாயத்தினுடைய விளைவை 12 லட்சம் டன்னாக நாங்கள் உயர்த்த இருக்கிறோம் என்று சொன்னார்கள். இதைச் சொல்லி விட்டு 'இரண்டு வருஷத்திற்கு முன்னாலே கவர்னர் உரையிலே, 12 லட்சம் டன் என்று சொன்னோம், ஏற்கனவே 9 லட்சம் டன்னிற்கு வந்துவிட்டோம், இன்னும் 3 லட்சம் டன்னை திட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்துகொள்வோம்' என்று இந்த மன்றத்திலே படித்துக் காட்டப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பார்த்தால், "12 லட்சம் டன் என்று நாங்கள் ஒரு டார்ஜட்டை எல்லையாக வைத்திருந்தோம். ஆனால் பல்வேறு சங்கடங்களின் காரணமாக 7 அல்லது 8 லட்சம் டன்னுக்குத்தான் இப்போது போக முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று கூறியிருக்கிறார்கள். சர்க்காரே 7-லிருந்து 8 லட்சம் டன் தான் என்று சொன்னால், அது நிச்சயமாக 8 லட்சம் அல்ல, 7 லட்சம் டன் தான் என்று சொல்லலாம். 7 லட்சத்திலிருந்து இறங்காமல் இருந்தால் அதுவே விசேஷம். ஆகவே 12 லட்சம் என்று சொல்லிவிட்டு, இப்போது 7 லட்சம் டன் தான் என்று சொன்னால் போட்ட கணக்கிலே 40 பங்கு அளவு தவறியிருக்கிறோம் என்று ஏற்படுகிறது. மிகத் திறமைசாலிகள் ஆயிற்றே? ஏன் தவறுகிறார்கள்? மிக நல்ல நிர்வாகம் செய்பவர்கள் ஆயிற்றே? ஏன் இந்தத் தவறு ஏற்பட்டது? மிக நல்ல கணக்குப்பிள்ளைகள் ஆயிற்றே? ஏன் கணக்குப் போடுவதிலே குந்தகம் ஏற்பட்டது என்று சொன்னால், எதிர்க்கட்சியினரின் வேலையே இதுதான் என்று சொல்வதில் பிரயோசனம் இல்லை. கணக்கைச் சரியாக காட்டிவிட்டால், எதிர்க் கட்சியினரின் வாய் தானாகவே அடங்கிவிடும். அதை விட்டுவிட்டு தலையை எண்ணிக் கொள்ளுங்கள் என்று சொல்வதிலே அர்த்த மில்லை. எதிர்ப் பக்கத்திலே 15 தலைகள்தான், இந்தப் பக்கத்திலே 150 தலைகள் இருக்கின்றன எண்ணிக் கொள்ளுங்கள் என்றால் பயனில்லை. ஹிட்லர்கூட இந்தக் கணக்கைத்தான் சொன்னான். எல்லோரும் என் பக்கம், தலையை எண்ணிக் கொள்ளுங்கள் என்று சொல்லும்போது, யாராவது எழுந்திருந்து தலையை நீட்டினால் தலை சீவப்பட்டுவிடும். ஆகவே அப்படிப்பட்ட தலைக் கணக்கை காண்பிக்க வேண்டாம்.

எந்த வகையிலும் இந்த உணவு உற்பத்தி விஷயத்திலே இந்தக் குந்தகம் ஏற்பட்டதற்கு நீங்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். போதுமான உரம் கிடைக்காததால், இத்தகைய தட்டுப்பாடு ஏற்பட்டது என்று காரணம் காட்டப்பட்டிருக்கிறது. இரண்டு வருஷத்திற்கு முன்னால் இந்த மன்றத்தில் நாங்கள் இரண்டு லட்சம் டன் உரம் கிடைக்கும்படிச் செய்யப் போகின்றோம் என்ற உறுதி அளித்துவிட்டு, அதற்குப் பிறகு இப்போது 1.3 லட்சம்தான் கிடைத்தது என்று கூறுவதானது வேடிக்கையாக



இருக்கிறது. அனுமார் இலங்கைக்கு சீதையைக் காண்பதற்காகப் போய் சீதையைக் காட்டுவதற்கு முன்னால், 'கண்டேன் சீதையை' என்று சொன்னார். ஆனால் இவர்களோ இலங்கைக்கும் போகிறார்கள். ஆனால் சீதையையும் பார்க்கவில்லை, திரும்பியும் வரவில்லை. இராமன் அனுமான் வருகைக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறான். ஆனால் அனுமாரோ, எங்கோ ஒரு மரத்தின் கிளைமேல் ஏறிக் கொண்டு, முந்திரிப் பழத்தைத் தின்றுகொண்டு, அதன் கொட்டைகளை கீழே வீசி எறிவதுபோல், இவர்கள் எதிர்க் கட்சியினரைப் பார்த்து, நீங்கள் இதற்கு வழிச் சொல்லுங்கள் என்று கொண்டிருக்கிறார்கள். இதற்காகவா இவ்வளவு பெரிய இடத்திற்கு வரவேண்டும்? இதற்காகவா மக்கள் இந்த அளவுக்கு உங்களுக்கு ஆதரவு காட்டினார்கள். ஆகவே நீங்கள் அவர்களுக்கு அவசியம் நல்ல விளக்கங்கள் கொடுக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். விலைவாசியை எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என்று எடுத்துச் சொல்லக்கூடியதிலே வெட்கம் இருக்க வேண்டாமா இந்த அரசுக்கு. எதிர்த் தரப்பிலுள்ள பேர்களைப் பார்த்து, நீங்கள் இதற்கு வழிச் சொல்லுங்கள் என்று கேட்டால், நாங்கள் உங்களுக்குத் தெரிந்த கணக்குகளையெல்லாம், விஷயங்களையெல்லாம் எங்களுக்குச் சொல்லுங்கள் என்று சுலபமாகச் சொல்லிவிட முடியும். எங்களைப் பார்த்து வழிச் சொல்லுங்கள் என்பது உண்மையிலேயே ஜன நாயகத்திலே வேடிக்கையாகத்தான் இருக்கிறது. நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்வதற்கு என்று முத்திரை பொறித்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்களை அதற்காக மக்கள் சும்மாகூட அமர்த்தவில்லை. பணம் கொடுத்து அமர்த்தி இருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படும் தொகை உங்கள் தகுதிக்கு குறைவாக இருக்கலாம். அதிகம் கொடுக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. அதிலே நீங்கள் தியாகம்கூட செய்யக்கூடும். அதற்கு நான் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் உங்களுக்கு எஜமானர்கள் பொதுமக்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. எஜமானர்களாகிய பொதுமக்கள் உங்களைக் கணக்கு கேட்கிறார்கள். அதன்படி நீங்கள் கணக்குக் கொடுப்பதிலே தயக்கம் காட்டுவது ஏன்? விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில் இதுவரையில் நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டால், நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள். இந்த மன்றத்திலே எந்த தரப்பினராக இருந்தாலும், இதையேதான் எடுத்துக்கூறி வந்திருப்பதைப் பார்க்கலாம். காங்கிரஸ்காரர்களும் கம்யூனிஸ்டுகளும், வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் விலைவாசியைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதையே திருப்பித் திருப்பி எடுத்துக்கூறி வந்தார்கள். அமைச்சர்கள்கூட, யாரோ விலையை ஏற்றி விட்டதைப் போலவும், நாங்கள் சொல்லி விலையை இறக்காதது போலவும் சொன்னார்கள். விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட்டால்தான் ஏழைகள் பிரச்னை தீரும் என்பதை எங்கோ வெளிநாட்டிலிருந்து உபதேசம் செய்வதைப்போல் பண்ணுகிறார்களே தவிர, விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு

யாருடையது என்பதை அவர்கள் உணரவில்லை. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக அசோக் மேத்தா கமிட்டி கொடுத்த சில யோசனைகளை எந்த அளவில் இதுவரை நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், ஸ்டேட் டிரேடிங் மிக அவசியம் என்பதை உணவு அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள் இந்த மன்றத்திலே மிக அழுத்தமாகச் சொன்னார்கள். இந்த ராஜ்யத்தின் கருத்தும் இது தான். அண்டை ராஜ்யமாகிய கேரளத்தின் முதல் மந்திரி அவர்களை சந்தித்துப் பேசியபோது, இதுதான் நல்ல திட்டம் என்று அவர்கள் சொன்னதாகவும் கூறினார்கள். இதை நாங்கள் எல்லாம் மேலே அனுப்பியிருக்கிறோம், அது ஒப்புக்கொள்ளப்பட்டு விடும், அதன்படி ஸ்டேட் டிரேடிங் வந்தால் ஒரு நிரந்தரமான பரிகாரம் கிடைக்குமென்று உள்துறை அமைச்சரும், உணவு அமைச்சருமான கனம் பக்தவத்சலம் அவர்கள் சொன்னார்கள். என்ன ஆயிற்று ?

அதேபோல் நிலத்திற்கு உச்ச வரம்பு என்று சொன்னார்கள். என்ன நடந்தது அதற்கு? அதற்காக ஒரு குழு அமைத்தார்கள். அந்தக் குழு ஊர் ஊராகச் சுற்றி பல விஷயங்களை ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி ஒரு வரி கூட நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. நம்முடைய ஆயுட்காலத்திற்குள்ளே இந்த மசோதா நிறை வேற்றப்படும் என்று குறிப்பிட்டிருப்பார்கள் என்று துருவி துருவி பார்த்தேன். ஒன்றுமில்லை. ஆகவே நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாதியில் நிற்கிறது. நீங்கள் எடுத்துக் கொள்ளாத முயற்சிகளைப்பற்றி நாங்கள் எத்தனை எடுத்துச் சொன்னாலும், எதிர்க்கட்சிக்காரர்கள் தானே எடுத்துக் கூறு கிறார்கள், அவைகளைக் கவனிக்கிறோம் என்று கூறி சும்மா இருக்கிறார்கள். நான் மீண்டும் விலைவாசி விஷயத்திற்கு

10 a.m. வருகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் கடைக்குப் போய் விலையைத் தெரிந்து கொண்டதாக நேற்றையதினம் சொன்னார்கள். அவரே கடைக்குப் போய் தெரிந்துகொள்ளுவது என்றால், அவர் இந்த விஷயத்தில் அக்கறை காட்டுகிறார் என்பது மட்டுமல்ல. எங்கள் விஷயத்திலே எவ்வளவு அவநம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதையும் காட்டுகிறது. நான் இடித்து இடித்துச் சொல்லு கிறேன் விலைவாசி ஏறியிருக்கிறது என்று. என்னுடைய வார்த்தை களில் இருக்கிற அவநம்பிக்கை காரணமாக கடைக்கு அவரே நேரில் போய் தெரிந்துகொண்டு பத்திரிகை நிருபர்களைக் கூப்பிட்டு சொல்லுகிறார்கள். "சேதி தெரியுமா, விலைவாசி ஏறி விட்டது, எழுதிக் கொள்ளுங்கள்" என்று. கடைக்காரர் அமைச்சர் என்ற காரணத்தினால் ஒருக்கால் விலையைக் குறைத்துச் சொல்லக் கூடும். ஆனால் நாங்கள் அப்படி அல்ல. நம்முடைய அமைச்சர் என்ற உரிமையோடு, உண்மையை தெளிவாகச் சொல்லுகிறோம். இந்த மன்றத்தில் நான்கு ஆண்டுகளாக சொல்லுகிறோம், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை கேட்டுக்கொண்டிருக் கிறோம். நடவடிக்கை எடுக்கிற அதிகாரம் முழுவதும் உங்கள் கரத்தில் இருக்கிறதா ? அதைத் தெளிவாக நாட்டு மக்களுக்குச்



சொல்லிவிடுங்கள். திருப்பித் திருப்பி எங்களைக் கேட்காதீர்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்த எங்களால் முடியாது. அது மத்திய அரசாங்கத்தினால்தான் முடியும் என்று தெளிவாகச் சொல்லி விடுங்கள். நாங்கள் திருப்பித் திருப்பி உங்களைக் கேட்கும்பொழுது இந்த அதிகாரத்தை மத்திய சர்க்காருக்குக் கொடுத்துவிட்டு நீங்கள் என்ன அரசு நடத்துகிறீர்கள் என்ற வகையிலே கேட்க முடியும். மக்கள் நம்பும்படியாக விலைவாசியை கட்டுப்படுத்து கிறோம் என்று வாக்குறுதி அளிக்கிறீர்கள். வெளியிலே கொடுத்த எந்த வாக்குறுதியும் இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த மன்றத்திலே, இதற்கு முந்திய சட்டமன்றத் தில் சுயமரியாதை திருமணத்தைப்பற்றி தனி உறுப்பினர் ஒருவர் —கனம் ரங்கசுவாமி ரெட்டியார் என்று கருதுகிறேன்—ஒரு மசோதா கொண்டுவந்தபொழுது அந்த மசோதாவை அவர் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன நேரத்தில், நடைபெற்ற சுயமரியாதை திருமணங்களை செல்லுபடியாகச் செய்வதற்கு ஏற்ற ஒரு சட்டத்தை சர்க்காரே கொண்டு வர இருக்கிறது. ஆகையால் அவர் கொண்டு வந்த மசோதாவை திருப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார். எங்கள் கழகத்தைச் சேர்ந்தவர் சுயமரியாதை திருமணங்கள் சம்பந்தமாக மசோதா கொண்டுவந்தபொழுது, அதை நமது நிதி அமைச்சர் அவர்கள் தோற்கடித்தார்கள். இந்த மன்றத்திலே நடைபெற்ற சீர்திருத்த திருமணங்களை செல்லுபடியாக்கத்தக்க சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று உறுதி அளித்தார்கள். நம்முடைய வார்த்தைக்கு நாமாவது மதிப்பு அளிக்கவேண்டுமே, நாம் இந்த மன்றத்தில் சொன்ன வார்த்தைகளை நாம் காப்பாற்றவேண்டும் என்ற பொறுப்பு உணர்ச்சியுடன் இந்த மசோதாவை ஏற்றுக் கொண்டாரா என்றால், அதையும் தள்ளிவிட்டார்கள். அதேபோல விலைவாசிகளை கட்டுப்படுத்துகிறோம், ஸ்டேட் டிரேடிங் கொண்டு வருகிறோம் என்று வாக்குறுதி அளிக்கின்ற தன்மையிலே பேசினார்கள். அந்த வாக்குறுதியையும் விட்டுவிட்டார்கள். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதுபற்றி எல்லோரும் கூடிகூடிப் பேசினோம். அது இப்பொழுது கிணற்றிலே கல் போட்டாற்போல் இருக்கிறது. எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டீர்களா ? விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. அது இறங்காத வரையில் எந்தத் திட்டங்களை எடுத்துக் கொண்டா லும், என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும் அது நல்ல பலனைத்தராது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் இன்னொன்று கூற விரும்புகிறேன். விவசாயம் ஓரளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. புள்ளிவிவரங்கள் மட்டுமல்ல, கண்படைத்த யாருக்கும் அது தெரியும். நேற்றுவரை காடுகரம்பாக இருந்த நிலங்கள் இன்று கழனியாக இருக்கிறது. முன்பு ஒரு போக சாகுபடி செய்த நிலங்களில் இன்று இருபோக சாகுபடி செய்யப்படுகிறது. நேற்று வரைப்பு இல்லாத புறம்போக்கு நிலங்களாக இருந்த நிலங்கள்

வாப்பு போடப்பட்டு இன்று வயல் வெளியாகக் காணப்படுகிறது. கண்புடைத்த யாரும் இதை இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் பெருகியிருக்கிற விவசாயத்தினுடைய பலன் யாருக்குப் போய் சேர்ந்திருக்கிறது? உழவர்களுக்குப் போய் சேர்ந்திருக்கிறதா? நடுவிலே உள்ள தரகர்களுக்குப் போய் சேர்ந்திருக்கிறதா? வியாபாரிகளுக்குப் போய் சேர்ந்திருக்கிறதா? அல்லது நேராகக் கால்வாய் வெட்டினால் போல் சர்க்கார் கஜானாவுக்குப் போய் சேர்ந்திருக்கிறதா? அந்தப் புள்ளிவிவரத்தை கணக்கு எடுத்து அருள் கூர்ந்து ஆராய்ந்து துரைத்தனத்தார் பார்த்திருக்க வேண்டும். 'இதற்கெல்லாம் கணக்கு இருக்கிறது. நீலநிறப் புத்தகத்தில் 6-வது பக்கம், 17-வது வரி, என்று கணக்கை காட்டாதீர்கள். இந்தக் கணக்கு ஒவ்வொன்றும் குறை உடையது என்று கணக்குத்துறை இலாகாவே ஏற்றுக்கொள்ளுகிறது. உண்மையிலேயே நாட்டு மக்கள் இன்றையதினம் அடைந்திருக்கிற அவல நிலைமையைக் கணக்கெடுத்து, இந்தப் பலன் அங்கே போய் இருக்கிறதா என்று பார்த்துத் தெரிந்துக் கொள்ளவேண்டும். நான் அறிந்தவரையில் அந்தப் புத்தகத்தில்கூட—நம்முடைய நிதி அமைச்சர் 2, 3 நாட்களுக்கு முன்பு என்னிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்து, ஓய்வு இருந்தால் படித்துப் பாருங்கள் என்று சொன்னார்—ஆகையால் சொல்லுகிறேன். அதிலே சொல்லியிருக்கிறது, கிடைத்த விவசாய வருமானத்தின் பலனில் 30 பங்கு மேல் மட்டத்தில் உள்ள மிராசுதார்களிடம போய் இருக்கிறது. மற்ற அனைத்தும் ஜனங்களிடையே பரவியிருக்கிறது. ஆகையினால் தகுந்த பலன் கிடைக்கவில்லை, என்பதை அவர்கள் எனக்கு அளித்த புத்தகத்தில் ரொம்ப அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

" This significant increase in the per capita income has taken place only in a few States. If as much as 30 per cent of the increase in the total income during this period has accrued to the higher income group, is it surprising that the bulk of the population of this countryshould feel that they have not benefited in any obvious way from the development of the last decade?"

ஏற்பட்ட முன்னேற்றத்தில் இந்த அளவு முன்னேற்றம்தான் மக்களுக்கு கிடைத்திருக்கிறது என்று மக்களது மனதிலே சலிப்பு உணர்ச்சி இருந்தால், அது ஆச்சரியமா என்று அந்தப் புத்தகத்திலேயே கேட்கப்பட்டிருக்கிறது. அதிலேயே அதற்கு பதில் இருக்கிறது என்று சொல்லலாம். அதைக்கூட நிதி அமைச்சர் வேண்டுமானால் உபயோகப்படுத்தலாம். எனக்கு உபயோகப்படவேண்டிய அளவிற்கு உபயோகப்படுத்தப்பட்டு விட்டது. (குறுக்கீடு) நம்முடைய அமைச்சர் அவர்கள் அவருக்கு வேறு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவரிடம் இந்த நான்கு வருடங்களில் பெற்றது ஒன்றுமில்லை. எனக்கு இதையாவது கொடுத்திருக்கிறார் என்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். விவசாயத்திலே கிடைக்கக்கூடிய வருவாயில் போதிய வருவாய் ஏழை எளியவர்களுக்கு போய்ச் சேரவில்லை என்பதற்கு நல்ல தெளிவான கணக்கு இருக்கிறது என்று நமக்குத் தெரிகிறது. காரணம் கிராமங்களைப் பார்க்கும்பொழுது தெரிகிறது. 10 வருஷகாலத்தில் கிராமங்களி



லிருந்து நகரங்களுக்கு வருகிற மக்கள் தொகை குறைந்திருக்கிறதா, வளர்ந்திருக்கிறதா? சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், மதுரையைப் பொறுத்தவரையில், திருச்சியைப் பொறுத்தவரையில் கிராமங்களிலிருந்து மக்கள் சாரிசாரியாக நகரங்களுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். கிராமங்களில் எவ்வளவோ முன்னேற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று எடுத்துச்சொன்னாலும், அங்கிருந்து வாழ்க்கை நடத்துவதற்கு இயலாத காரணத்தினால் நகரங்களை நோக்கி இன்று படைஎடுப்பு நடப்பது இன்னும் குறைந்ததாகத் தெரியவில்லை . இந்த நிதி நிலை அறிக்கையில் 100-க்கு 70 பங்கு மக்கள் விவசாயத்தை நம்பி வாழக்கூடியவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால் ஏகாதசிக்கு முந்திய இரவிலே தான் நாம் இருக்கிறோம் என்ற பொருள் தானே அல்லாது, நன்றாக இருக்கிறோம், துவாதசியில் இருக்கிறோம் என்ற பொருள் அல்ல. துவாதசி என்றால் நன்றாகச் சாப்பிடுவது, அப்படி நன்றாக சாப்பிடக்கூடிய நிலையில் இல்லை. அவர்கள் உண்மையிலேயே இந்த விவசாயத்தில் கிடைத்த வருவாய் எங்கே போயிற்று என்று தேடிப்பார்த்தார்களா? விவசாயத்தில் மட்டுமல்ல, தொழில் துறையில் கிடைத்த வருவாய் பல தேக்கங்கள் ஏற்பட்டு புதிய செல்வ வளர்ச்சியால் ஏற்பட்ட வருவாய், இவை அத்தனையும் எங்கே போயிற்று என்று தேடிப்பார்ப்பதற்கு பண்டித நேரு அவர்கள் ஒரு குழுவை அமைத்திருக்கிறார். அந்தக் குழு பணியாற்றிக்கொண்டு வருகிறது என்று கருதுகிறேன். ஓடிப்போன மாட்டை எங்கே தேடிக்கண்டு பிடிப்பது, உடைந்த பூட்டை மறுபடியும் எப்படி சரிப்படுத்துவது, கொள்ளை போன பணத்தை எப்படி கண்டு பிடிப்பது என்ற திகைப்பு இருக்கிறது. இருந்தாலும் இது போன வழி என்று எந்த வழியையாவது காட்டினால், அந்த வழியையாவது அடைக்கலாம். போன பணம் போய்விட்டது. நான் தேர்தல் விஷயமாகச் சொல்லுகிறேன் என்று நிதி அமைச்சர் அவர்கள் தவறுதலாகக் கருதவேண்டாம். பிரிட்டிஷ் பேரரசி இங்கு வந்திருந்தபொழுது நாமும் அவர்களை வரவேற்றோம். ராஜஸ்தான் மாஜி மன்னவர்களும் வரவேற்றார்கள். எவ்வளவு கோலாகாலமாக அவரை வரவேற்க முடிந்தது? எங்கிருந்து இதற்கு பணம் கிடைத்தது? நீங்கள் இதற்கு அதிகப் பணம் செலவழித்தால், கேள்வி கேட்பதற்கு நாங்கள் இருக்கிறோம். ஆகவே நீங்கள் அளவாகத்தான் செலவழிக்கமுடியும். எதற்கு எவ்வளவு செலவழிக்கலாம் என்ற அளவும் உங்களுக்குத் தெரியும். ஆனால் மன்னர்களும், மாஜி மன்னர்களும் ராஜஸ்தானில் பிரிட்டிஷ் பேரரசியை கோலாகலமாக வரவேற்பதற்குச் செலவழித்த பணம் எங்கிருந்து வந்தது? நேரு பண்டிதர் அவர்கள் கண்டுபிடிக்கவேண்டிய பணத்தில் ஒரு பகுதி அந்தப்பணத்தில் முடங்கியிருக்கிறது. இப்படிப் பணம் தவறான முறையில் போய் நடுக்கொள்ளைக்காரர்களிடத்தில் சிக்கி இருக்கிறது. இதற்கு நமக்கு கணக்குத் தெரியவில்லை. ஒரு பஸ் முதலாளி 5 வருஷங்களில் 10 பஸ்களுக்கு சொந்தக்காரராகி, அங்கே ஒரு சினிமாக் கொட்டகையையும் விலைக்கு வாங்குவதைப் பார்க்கலாம். இந்த நாட்டில் லட்ச லாவண்யத்திற்கு வித்து

விதைக்கிறவர்கள் பல் முதலாளிகளைத் தவிர வேறு யார்? என்ன
விலே யாராக இருந்தாலும் சரி. ஆனால் அமைச்சர்களுக்கு தாத்
தக்க விலே கட்சித் தொண்டுதான். ஆகையால் அமைச்சர்கள்
வரை வருவதில்லை. மற்றவர்கள் யாருக்கும் லஞ்ச லாவண்யத்தைக்
கொடுக்க முன்வருகிறார்கள். இதைக் கண்டு பிடித்து சொல்ல
முடியாதா என்று உள்துறை அமைச்சர் இருந்தால் இப்பொழுது
கேட்கக்கூடும். போலீஸை வைத்துக்கொண்டு, போலீஸ் நாய்களை
வைத்துக்கொண்டு மோப்பம் பிடித்து கூட சில திருட்டுகளை கண்டு
பிடிக்க முடியவில்லை. அப்படியிருக்கும்பொழுது எங்களால் என்ன
முடியும்? கேள்விப்படுவதை சொல்ல முடியும். அதை வைத்துக்
கொண்டு ஆராய்ந்து பார்க்கவேண்டும். பல் முதலாளிகள் 10
வருஷங்களில் எவ்வளவு செல்வான்களாக ஆகியிருக்கிறார்கள்?
நேரடியாக மக்களுக்கு வந்திருக்கவேண்டிய பணம், பண்டாரத்
திற்கு வந்திருக்கவேண்டிய பணம்—பண்டாரம் என்று சொன்னால்
அமைச்சர் கேலியாகச் சொல்லுகிறேன் என்று கருதவேண்டாம்.
பண்டாரம் என்றால் பணம் கொட்டி வைத்திருக்கும் ஒரு இடம்—
பண்டாரத்திற்கு வரவில்லை. கொள்ளைக்காரர்களிடத்தில்
அந்தப் பணம் தங்கிவிட்டிருக்கிறது. ஆகையினால், ஏதாவது வழி
வகை உங்களுக்குத் தெரியுமா என்று எங்களைக் கேட்டால்,
தெளிவாகச் சொல்லுவோம். வருவாய் தரக்கூடிய தொழில்களை
சர்க்கார் தங்கள் உடைமையாக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று.
இன்றையதினம், எல்லாப் பொருளாதாரக் குழப்பங்களுக்கும்
நெருக்கடிகளுக்கும், உங்கள் "மிக்சட் எகானமி", கலப்படப்
பொருளாதாரத் திட்டம்தான் அத்தனைக்கும் காரணம் என்பதை
நான் முன்பு சொல்லியிருக்கிறேன். இன்றைக்கும் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். கலப்படப் பொருளாதாரத்தை
வைத்துக் கொண்டு இருப்பதால் நம்மால் எந்தக் காரியத்தையும்
வெற்றிகரமாகச் செய்ய முடியவில்லை. விலைவாசிக் கட்டுப்பாடு
செய்ய முடியவில்லை. விலைவாசிகளைக் கட்டுப்பாடு செய்ய
முடியவில்லை என்பதற்கு என்னைக் காரணம் கேட்டால்,
என்னைப் பொறுத்தவரை இதைக்கூடச் சொல்லுவேன்:
முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலே செய்
பொருள்களை, மான்யுபாக்சர்ட் கூட்ஸ், அந்தப் பொருள்
களைவிட கன்ச்யூமர் கூட்ஸ், உபயோகிக்கும் பண்டங்களை
அதிகப்படுத்தியிருந்தால், நமக்கு இந்த அளவுக்கு தட்டுப்
பாடு ஏற்பட்டிருக்க முடியாது என்று கருதுகிறேன்.
இதையே ரஷ்யாவில், முதல் திட்டத்திற்கும் இரண்டாவது திட்டத்
திற்கும் இடையே இந்த மாறுபாட்டைக் கண்டு கொண்டு, கன்ச்
யூமர் கூட்ஸை அதிகப்படுத்தினார்கள் என்று புத்தகத்தில்
படித்திருக்கிறேன். ஆகையினால், முதலிலே கன்ச்யூமர் கூட்ஸை
அதிகப் படுத்தி உற்பத்தி செய்துகொள்ளவில்லை. உணவுப் பொருள்
களைக் கூட வெளி நாடுகளிலிருந்து . . . .

DEPUTY SPEAKER: The Hon. Member has taken more time. He has already taken nearly one hour whereas only 45 minutes has been allotted to him.

SRI C. N. ANNADURAI: இன்னும் சில வினாடிகள்.
ஆகவே, உணவுப் பொருள்களையும், உபயோகிக்கும் பொருள்
களையும் இதில் இரண்டு திட்டங்களில் உண்டாக்காததுதான்





திட்டங்கள்
யிருந்த குறைபாடு. பொதுவாக இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் நடுக்
மூலமாக விவசாயத்தில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி
கொள்ளைக்காரர்களுக்கு போய் விட்டது என்று சொல்வது போல்,
தொழில் துறையிலும் முன்னேறியிருக்கிறோமா, இல்லையே என்று
எடுத்துச் சொல்லும்போது "இல்லை, இல்லை" எல்லா இடத்திலும்
முன்னேறி இருக்கிறோம் என்று அமைச்சர்கள் பேசுகிறார்கள்;
அதுவும் தொழில் அமைச்சரவர்கள் மிகச் சுறுசுறுப்பாக இந்த
வாரத்தில் புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டிப் பேசுகிறார்கள்;
மேற்கு வங்கத்தைப் பாருங்கள், பம்பாயைப் பாருங்கள், உத்தரப்
பிரதேசத்தைப் பாருங்கள் என்று சொன்னதாகப் பத்திரிகையில்
படித்தேன். நான் அறிய விரும்புவது "the total economic picture"
எத்தனை கம்பெனிகள் புதிதாகத் துவக்கப்பட்டது. அவைகளுக்கு
எவ்வளவு மூலதனம் போடப்பட்டது, நாலு வருஷத்தில், மூன்று
வருஷத்தில் எவ்வளவு என்ற கணக்கல்ல; மக்களின் வாழ்க்கைத்
தரத்தைக் கணக்கிடும் நோத்தில் பர் காபிடா இன்கம், தலைக்கு
வருமானம் எவ்வளவு என்ற கணக்கு. அதைப், பார்க்கும்போது,
நம் மாநிலம், மற்ற மாநிலங்களை விட அடித் தட்டிலேயே
இருக்கிறது என்பதை எந்தப் பொருளாதார நிபுணர் மறுத்துக்
கூறுகிறார்? எந்தப் பொருளாதார நிபுணர் இல்லை என்று சொல்லி
விட முடியும்? உண்மையிலேயே நம் பகுதி பின் தங்கியிருக்கிறது
என்பதை யாரும் உணரமுடியும். அண்மையில் மாநிலக் கவர்னர்
கள் மாநாட்டில், தென்னகத்திலிருந்து சென்றிருந்த மாநிலக்
கவர்னர்களெல்லாம், அது பிற்படுத்தப் பட்டிருக்கிறது என்று
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பெரிய பொருளாதார நிபுணர்
கள், அரசியல் விற்பன்னர்கள், அமைச்சர்களும் கூட இந்த நாட்டு
குடிமக்கள் என்ற கவனம் வரும் காலத்தில், அவர்களும் கூட இந்த
நாடு பின் தங்கியிருக்கிறது, பேஸிக் இண்டஸ்ட்ரிகள் பொருத்த
வரை பின் தங்கியிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்
கிறார்கள். ஆனால், நாங்கள் பேசுகிறபோது, வெட்டிய கிணறுகளைப்
பாருங்கள், கட்டிய பள்ளிக்கூடங்களைக் கணக்கெடுங்கள், பகல்
உணவு அளிக்கிறோம், வந்து சாப்பிட்டுப் பாருங்கள் என்கிறார்கள்.
புதுப்புது ரோடுகள் போட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.
இவைகளெல்லாம் ஒரு நாட்டின் முற்போக்கா? இவைளெல்லாம்
ஒரு நாட்டின் பொருளாதாரப் பெருக்கத்திற்கு ஏற்ற வசதிகள்,
வாய்ப்புகள். ரோடுகள் எதற்கு? பட்டினி கிடக்கும் மக்கள்
நடந்து போகவா? மூன்று வேளை வயிறார சாப்பிட்டு அழகாக
சிந்து பாடிக் கொண்டு நடந்து செல்வதற்கு. வெள்ளைக்காரன்
அந்த நாளில் தன் பட்டாளம் நடக்கப் பாதை போட்டது போல,
கம்யூனிடி டெவலப்மெண்ட் ஜீப்புகள் ஓட ரோடுகள் போடு
கிறார்கள். ஆகையினால் ஒரு நாட்டின் முன்னேற்றம் எதில்
இருக்கிறது என்று ஒன்று மட்டும் எடுத்துச் சொல்லி என்னுடைய
பேச்சை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று கருதுகிறேன்.

நமக்கு விவசாயத் துறையில் கிடைத்திருக்கும் வருமானத்தை
கணக்குக் கொடுத்திருக்கிறார்கள் சர்க்கார் துறையினர். இரண்
டாவது திட்டத்தை எடுத்துக் கொண்டால், ஆந்திராவில் 471
கோடியும், பீகாரில் 564 கோடியும், பம்பாயில் 518 கோடியும்,
மத்திய பிரதேசத்தில் 565 கோடியும், சென்னையில் 345 கோடியும்,

[Sri C. N. Annadurai] [8th March 1961

பஞ்சாபில் 488 கோடியும், உத்தரப்பிரதேசத்தில் 1,146 கோடியும் கிடைத்திருக்கிறது என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். நம் நாடு முக்கிய விவசாய நாடு; பம்பாய் தொழில் வளம் மிகுந்த நாடு. இருந்தும், விவசாயத்தில் அவர்களுக்கு 518 கோடி, நமக்கு 345 கோடி ரூபாய் வருவாய் வந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இப்படிக் கிடைத்திருப்பதைப் பார்த்து அமைச்சர்கள் பெருமைப் படுகிறார்களா? அல்லது வெட்கப் படுகிறார்களா? வெட்கப் படுகிறார்கள் என்றால், அதைத் திருத்த வழி என்ன காண்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். விவசாயத்தைப் போலவே தொழில் துறையின் மூலம் கிடைத்திருக்கும் வருவாய், பம்பாயில் 272 கோடி, சென்னைக்கு 56 கோடி, மேற்கு வங்கத்திற்கு 197 கோடி என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. மற்றும் ஒன்று, வாவாத் தொழில்கள் ஏற்படுகின்றன. சர்க்கார் நடத்தும் தொழில்களில் மட்டுமல்லாமல். தனிப்பட்ட கம்பெனிகள், போக்கு வரத்துக் கம்பெனிகள், இவைகளிலெல்லாம் ஏற்பட்டிருக்கும் வருவாயைக் கணக்கிட்டால் அது ஆந்திராவில் 667 கோடி; பம்பாயில் 411 கோடி; சென்னையில் 218 கோடி; உத்தரப் பிரதேசத்தில் 316 கோடி இருப்பதாகச் சொல்கிறார்கள். பர் காபிடா இன்கம்மை எடுத்துக் கொண்டால்; ஆந்திராவில் 266.1; அஸ்ஸாமில் 323.5; பம்பாயில் 313.2; மத்திய பிரதேசத்தில் 318;8; சென்னையில் 269.3 கோடி; பஞ்சாபில் 406 கோடி; மேற்கு வங்கத்தில் 398;4 என்று இந்தக் கணக்கைக் கொடுத்திருக்கிறது. எதை வேண்டுமானாலும் கணக்கெடுத்துக் கொள்ளுங்கள்; இந்த நாடு வளர்ந்திருக்கிறது என்று எதை வைத்துக் கொண்டு எங்களை நம்பச் சொல்கிறார்கள் என்று கேட்கும் நேரத்தில் உண்மையிலேயே எதை வைத்துக்கொண்டு இந்த நாடு முன்னேறியிருக்கிறது என்று நம்பச் சொல்கிறீர்கள் என்று கேட்கும்போது, ஒரு நாடு முன்னேறியிருக்கிறது என்பதற்கு ஒரு நிபுணர் எடுத்துக் காட்டியிருக்கும் ஒரு கருத்தை மட்டும் எடுத்துச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்—

"The question is being asked, 'Which is a backward area and what is the index of backwardness?' For example, when I mentioned that backward areas should be given due consideration so that there may be greater development in these areas, it was pointed out that so far as Madras is concerned, it has made greater progress than many of the other States in the educational field. The pace of rural electrification is more than in any other State. Road Transport system is about the best in India. It is therefore asked how can it be said that Madras State is a backward area? . . . Therefore, the proper index to assess the backwardness or otherwise of a region should be the capita income of that region. The per capita income of a region gives a clear indication of the economic development which has taken place in that region. Simply because there are more roads and more educated persons in a particular region, that does not mean that there is greater economic prosperity in that region . . . . The backwardness or the progressive nature of an area should not be judged from the percentage of school-going children or from the extent of the roads available. All that will not be the proper indication. The entire economic life of the community should be taken into consideration."



8th March 1961] [Sri C. N. Annadurai]

இதுதான் ஆதாரம் என்று சொல்லும் ஒரு நிபுணருடைய வாக்கியங்களை இந்த மன்றத்திலே கூறினேன்; இந்த சட்ட சபை அதை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்; ஏனென்றால், அந்த நிபுணர் நம் நிதியமைச்சர்தான் (பலத்த சிரிப்பு) என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை இந்த அளவில் முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI A. VEDARATHNAM: Sir, on a point of personal explanation.

DEPUTY SPEAKER: When the hon. Member Sri Annadurai has not said anything about the hon. Member, how can he rise on a point of personal explanation? Hon. Member Sri Kalyanasundaram may now speak.

**SRI M. KALYANASUNDARAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் சமர்ப்பித்திருக்கிற பட்ஜெட்டை, அந்த பிரசங்கத்தை சிறிது நாம் பார்க்கும்போது கடந்த பத்து வருஷ காலத்தில் நம்முடைய நாட்டிலேயே, நம்முடைய ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய (டிபுடி ஸ்பீக்கர்: ஆர்டர், ஆர்டர்) வளர்ச்சியைப் படம் பிடித்துக் காட்ட முயற்சித்திருக்கிறார். இந்த பட்ஜெட்டில் அவர் கூறியிருக்கக்கூடிய புள்ளி விவரங்களைப் பார்த்தால் இந்த பட்ஜெட்டானது நம் நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

இந்த வருஷம் பல மான்யங்களுக்காக செலவிடக்கூடிய தொகை 90 கோடிக்கு அதிகமாகவே இருக்கிறது. இப்படி துண்டு விழக்கூடியது என்பது ஒவ்வொரு வருஷமும் விழுவதுதான், அது ஒரு முக்கியமான பிரச்னை அல்ல. பத்து அல்லது பதினைந்து வருஷங்களுக்கு முன்பு இருந்த பட்ஜெட்டுடன் இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த ஆண்டில் ஒரு குறிப்பிட்ட மானியத்திற்காக மட்டும் அதாவது கல்விக்கு மட்டும் கோரக்கூடிய தொகை 20 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு முன் பட்ஜெட்டின் மொத்தத் தொகையே 16 கோடியாகத்தான் இருந்திருக்கிறது. ஆகவே, இப்பொழுது கல்விக்கு என்று ஒதுக்கி இருப்பதைப் பார்த்தால் அந்த அளவுக்கு இந்த ராஜ்யத்தின் வருவாய் உயர்ந்திருக்கிறது, என்பதைப் பார்க்க முடிகிறது. அதேபோல் இப்படி நாம் ஒவ்வொரு பக்கத்திலும் ஏற்பட்டிருக்கக்கூடிய வளர்ச்சியைப் பார்க்கவேண்டும். நமக்கு அதனால் அனுகூலம் வருமா அல்லது பிரதிகூலம் வருமா என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். எனவே இந்த ராஜ்

[Sri M. Kalyanasundaram] [8th March 1961

அதிலும் புஞ்சைப் பகுதியில் இப்பொழுது அதிகப்படியாக நில
வெளியேற்றம் நடைபெறுகிறது. விவசாயிகளை புஞ்சைப் பகுதியி
லிருந்து வெளியேற்றுகிறார்கள். மற்ற இடங்களில் இயற்றப்பட்ட
சட்டங்கள் அமுல் நடத்தப்பட்டாலும் புஞ்சைப் பகுதியில் வெளி
யேற்றம் நடைபெறுகிறது. இயற்றப்பட்டிருக்கிற சட்டங்களில்
பல பலஹீனங்கள் இருப்பதாலும் நில வெளியேற்றம் நடைபெறு
கிறது. கனம் அமைச்சர் சொல்லலாம் நில உச்சவரம்புச் சட்டத்
தைக்கொண்டு வருகிறோம் என்று. அந்த மசோதா வந்திருக்
கிறதே தவிர அதனால் எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை.
அது கல்லுப்போட்டது போல்தான் இருக்கிறது என்று கனம்
அண்ணாதுரை அவர்கள் சொன்னதுபோல் இருக்கிறது. ஆகவே,
விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய அளவில் சட்டத்தை
திருத்தி அமைக்க வேண்டியது அவசியமும் அவசரமுமாக இருக்
கிறது. ஆனால் சொல்லலாம் ட்ராக்டர்களை வாங்கிக்கொடுத்து
விட்டோம் என்று. உரங்களை வாங்கிக் கொடுத்துவிட்டோம்
என்று. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இன்னும்
அதிகப்படியாக உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் "லீப்
பார்வோர்டு" "டேக் ஆப்" என்று சொல்லுவார்கள். நம்முடைய
ராஜ்யத்திலுள்ள கேந்தரமாக இருக்கக்கூடியது விவசாயத்
தொழில்தான். அது பின்னேறிப் போகக்கூடிய நிலைமையில் இருக்
கிறது. 1958-59-ல் போட்டிருக்கும் "டேக் ஆப்" திட்டமாக நாம்
நம்ப முடியவில்லை. விவசாயிகள் உற்பத்தியை பெருக்க முடியாமல்
இருப்பதற்குக் காரணம் நிலப் பிரபுக்கள் பிடியிலிருந்து அவர்கள்
மீள முடியாமல் இருப்பதுதான். போட்டிருக்கக்கூடிய சட்டங்
கள் எல்லாம் நிலப்பிரபுக்களுக்குத்தான் சாதகமாக இருக்கிறது.
இந்த தேசம் விவசாயத் துறையில் முன்னேற்றம் காண வேண்டு
மானால் விவசாயிகள் அவர்களுடைய பிடிப்பிலிருந்து வெளி வர
வேண்டும். பழைய இனாம் நிலத்திலிருந்து எவ்வளவோ விவசாயி
கள் வெளியேற்றப்படுகிறார்கள். ஆகவே, இனாம் நிலங்களிலிருந்து
வெளியேற்றக்கூடாது என்று அவசரமாகவும் அவசியமாகவும் ஒரு
10-30 a.m. அவசரச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும், அல்லது ஒரு
சட்டத்தை இப்பொழுதே கொண்டுவந்து நிறைவேற்றவேண்டும்.
இந்த பட்ஜெட் கூட்டத்திற்குள்ளாகவே கொண்டுவந்து நிறை
வேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றினால்தான் அவர்களுக்கு
பாதுகாப்பு கொடுத்ததாக ஆகும். அந்தச் சட்டத்தைக் கொண்டு
வந்து நிறைவேற்றும்போது நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட
ஈடு கொடுத்தாலும் பாதகம் இல்லை. அப்படிச் சட்டம் கொண்டு
வந்து நிறைவேற்றினால்தான் புஞ்சை நிலங்களில் அபிவிருத்திக்கு
இடம் ஏற்படும் என்பதையும் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். அதனால் விவசாயத்தில் இருக்கக்கூடிய தேக்கத்தை,
நாம் தகர்ப்பதற்கு, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு
தீவிர நடவடிக்கை எடுத்தால்தான் வெளிநாட்டிலிருந்து
கோதுமையையும் சோளத்தையும் வாங்கிக்கொள்ளலாம், அரிசி
யையும் சேர்த்து வாங்கிக்கொள்ளலாம் என்று தற்போது ஈடுபடு
வதற்குப் பதிலாக அவசியமான தொழில் வளர்ச்சிக்குச் சாதக
மான நிலைமை ஏற்படும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்



8th March 1961] [Sri M. Kalyanasundaram]

தில் நமக்கு ஏற்பட்ட நெருக்கடிபோல மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்ட காலத்தில் ஏற்படாது இருக்கும், இல்லாவிட்டால் நிச்சயம்
அத்தகைய ஆபத்து இருக்கிறது என்பதை நம்முடைய அமைச்சர்
களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அவர் திட்ட குழுவின்
கூட்டத்திற்குப் போகக்கூடிய காரணத்தினால் இதையும் அங்கே
எடுத்து வற்புறுத்தவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தேசீய வருமானம் பெருகி இருக்கிறது
என்பதை எடுத்துச் சொன்னார்கள். தேசீய வருமானம் ஒட்டு
மொத்தமாகப் பார்த்தால் கட்டாயமாகப் பெருகியிருக்கிறது.
அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் ஒவ்வொரு ராஜ்யத்
திலும் எவ்வளவு பெருகியிருக்கிறது, அதில் உள்ள ஏற்றத்தாழ்வு
என்ன என்பதை நண்பர் அண்ணாதுரை அவர்கள் எடுத்துக்காட்டி
னார்கள். ஆனால் இதில் உள்ள அடிப்படையான விஷயம் என்ன?
நம்முடைய ராஜ்யத்தின் சராசரி வருமானம் அதிகரித்திருக்கிறது
என்று வைத்துக்கொண்டால்கூட அது சுபிட்சத்தின் அறிகுறியா
என்று அறிய விரும்புகிறேன். தேசீய வருமானம் அதிகரித்து
இருக்கிறது என்றால் இதில் யாருடைய பங்கு அதிகரித்திருக்
கிறது. உழைக்கக்கூடிய தொழிலாளர்களுடைய பங்கு அதிகரித்
திருக்கிறதா, படித்தவர்களுடைய பங்கு அதிகரித்திருக்கிறதா,
விவசாயிகளுடைய பங்கு அதிகரித்திருக்கிறதா? அல்லது நிலப்
பிரபுக்கள், முதலாளிகள் இவர்களுடைய பங்கு அதிகரித்திருக்
கிறதா என்று பார்க்கவேண்டும். தேசீய வருமானம் என்று
சொல்கிறபோது 5 கோடி ரூபாயை ஒளித்து பாக்கியை வருமானம்
என்று காட்டக்கூடிய திறமைபெற்ற முதலாளி, நிலப்பிரபுக்
களுடைய வருமானத்தையும் அன்றாடம் ஒரு ரூபாய், ஒன்னேகால்
ரூபாய் ஊதியம் பெறக்கூடிய தொழிலாளிகளுடைய சம்பளத்
தையும் சேர்த்து கணக்கிடப்படுகிறது. ஆகவே, தேசீய
வருமானம் உயர்ந்திருக்கிறது என்று சொல்லும்போது இதில்
பெரும்பகுதி யார் கைக்குப் போய்ச் சேருகிறது என்பதை
அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

கடந்த ஐந்து வருஷ காலமாக விலைவாசிகள் உயர்ந்து
கொண்டே போகின்றன என்று அமைச்சர் அவர்கள் கவலைப்பட்டுக்
கொண்டார்கள். அவர் அப்படிக் கவலைப்பட்டும் எவ்விதப் பயனும்
ஏற்பட்டதாகத் தெரியவில்லை. காரணம் அது இன்றைக்கு இருக்கக்
கூடிய அமைப்பின் விசேஷம். அதை நான் எடுத்துச் சொன்னால்
தொழில் அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும்
ஒத்துக்கொள்ளமாட்டார்கள். இரண்டு தொழிற்சாலைகள் வந்தன
என்றால் தொழிற்சாலையே இல்லாத தேசமாக இருந்தால் அவை
தனியார் கைக்கு வந்தால் என்ன, பொதுத் துறைக்கு வந்தால்
என்ன என்று பேசலாம். ஆனால் நம்முடைய நாட்டைப்
பொறுத்த வரையில் தனியார் துறையை மேலும் மேலும் வளர
விடுவது நம் தேசத்திற்கே ஆபத்து. விலைவாசிகள் உயர்ந்து
கொண்டே போவதும் அதைக்கட்டுப் படுத்த முடியாத அவல நிலை
பெறுவதும் அதன் காரணம் தான். உண்மையில் நாட்
டில் நல்லதொரு நிலச் சீர்திருத்தம் ஏற்பட்டு பொதுத்துறை

யத்திற்கு என்று தனிப்பட்ட திட்டம் கிடையாது. நம்முடைய நிதிக் கொள்கை நம்முடைய தொழில் கொள்கை, நம்முடைய விவசாய அபிவிருத்திக் கொள்கை இவைகள் எல்லாம் மத்தியப் படுத்தி அதை மத்திய அரசாங்கம் உருவாக்கக்கூடிய கொள்கை. அந்தக் கொள்கையைப் பார்த்தால் ஒரு ராஜ்யத்திற்கு என்று தனியான கொள்கை கிடையாது. சிறிதளவுதான் அதில் மாறுதல் இருக்குமேயொழிய பெரிய அளவில் மாறுதல் இருக்காது. அந்த அடிப்படையில்தான் மத்திய பொருளாதாரம் திட்டமிடுகிறது. அந்த திட்டத்தின் அளவிற்கு நம்முடைய ராஜ்யமும் திட்டமிடுகிறது. அப்படி நம் தேசத்தில் பார்க்கும்போது ஒட்டு மொத்தமாக உற்பத்தி பெருகி இருக்கிறதா என்று பார்க்கும்போது உற்பத்தி அளவில் ஒவ்வொரு வருஷமும் உற்பத்தி பெருகிக் கொண்டேதான் இருக்கிறது. தொழில் சம்பந்தப்பட்ட மட்டிலும் முன்னேறிக்கொண்டுதானிருக்கிறது. 1950-51-ல் வாழ்க்கைத்தர புள்ளி 100 என்று வைத்துக்கொண்டால் 1959-60-ல் அது 167 ஆக உயர்ந்திருக்கிறது. இந்த ஆண்டு இன்னும் அதிகமானாலும்கூட ஆகலாம் என்றுதான் மத்திய அரசாங்க நிதி அமைச்சர் கூறுகிறார். விவசாய உற்பத்தியை எடுத்துப் பார்க்கும்போது நம்முடைய ராஜ்யத்தில் அதிகம் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. 1958-59-ல் இருந்ததைவிட 1960-61-ல் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 1958-59-ல், 1959-60-ல் குறைந்திருக்கிறது. 1960-61-ல் குறையுமோ அல்லது அதிகரிக்குமோ? பாராட்டக்கூடிய அளவில் குறைவோ அதிகரிப்போ இருக்க முடியாது. விவசாயத்தில் நாம் அபிவிருத்தி அடைந்திருக்கிறோம். இருக்கக்கூடிய நீர்ப்பாசன திட்டங்கள் யெல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று காரணத்தைக் காட்டி ஓரளவு 1950-51-ல் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாற்பது சத விகிதம் அதிகமாக விவசாயத்தில் உற்பத்தி பெருகி இருந் தாலும்கூட நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால் இரண்டு மடங்கு 1950-51-ஐ விட உற்பத்தியில் பெருகி இருக்கிறது என்று பார்க்கலாம். கனம் அமைச்சர் சொல்லலாம் விவசாயத்தில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று. அதற்குக் காரணம் நமக்கு உரம் பற்றாக்குறை என்று நினைக்கலாம். ஆனால் நம்முடைய ராஜ்யம் சம்பந்தப்பட்ட மட்டில் தேவையான அளவில் உரம் கிடைக்கவில்லை என்பதில் உண்மை இருந்தபோதிலும்கூட ஒவ்வொரு இடத்தில் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. சாகுபடி நிலங்களின் விஸ்தீரணம் அதிகரித்திருக்கிறது என்பதும் உண்மை தான். இது புள்ளி விவரத்தில் மட்டும் அல்ல தெரிந்துகொள்ள வேண்டியது. இவைகளை கனம் அமைச்சர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் போடக்கூடிய திட்டங்கள் எல்லாம் ஏன் நிறை வேறவில்லை என்பதைப் பார்க்கவேண்டும். கடந்த இரண்டு ஐந்தாண்டு திட்ட காலத்தில் 12 லட்சம் டன் அளவில் உற்பத்தியை பெருக்கிக்கொள்ளலாம் என்று நினைத்தார்கள். அந்த அளவில் பெருக்கிக்கொள்ள முடியவில்லை. நாம் திட்டமிட்டபடி பெருக்கம் ஏற்படவில்லை. இதற்கு முன் ஒன்பது லட்சம் டன் உற்பத்தி செய்யலாம் என்று சொன்னார்கள். அது ஏழு அல்லது [illegible] லட்சம் டன்னுடன் நின்றுவிட்டது. அந்த அள



வில்தான் அதிகரித்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டது. ஒன்பது லட்சம் என்று சொன்னபோதும் பனிரெண்டு லட்சம் என்று சொன்னபோதும் அந்த [illegible] பத்தியை பெருக்க முடியவில்லை. கிட்டத்தட்ட [illegible] குறைந்து போய்விட்டது. தேசம் பூராவும் எடுத்துக்கொண்டால் அதிகரித்திருந்தாலும் நம் ராஜ்யத்தில் திட்டமிட்ட அளவில் உற்பத்தியாகவில்லை, குறைந்துதான் இருக்கிறது. பாசன திட்டம் விவசாய அபிவிருத்தி திட்டம் இவைகளையெல்லாம் நிறை வேற்றியும் உற்பத்தி பெருகவில்லை. அந்த அளவில் அதிகப்படி யாக நாம் உணவை உற்பத்தி செய்தபோதிலும் பல திட்டங்களை நிறைவேற்றிய போதிலும் நாம் அந்நிய நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் உணவை இறக்குமதி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பயங்கர நிலைமையை உண்டாக்கி இருக்கிறது. 1955-56-ல் உணவு தானியங்களை இறக்குமதி செய்த அளவில் கிட்டத்தட்ட 29 கோடி ரூபாய் அளவில் செலவு செய் திருக்கிறோம். 1959-60-ல் வெளி நாட்டிலிருந்து உணவு இறக்குமதி செய்ததில் கிட்டத்தட்ட 155 கோடி ரூபாய் செலவு செய்திருக் கிறோம். அதேபோல் 1960-61ல் முதல் ஆறு மாதங்களில் மட்டும் 114 கோடி ரூபாய் அளவுக்கு உணவு தானிய இறக்குமதி செய்யப்பட் டிருக்கிறது. இன்னும் வருஷம் பூராவும் எடுத்துப்பார்த்தால் இரண்டு மடங்காக ஆகலாம் என்றுகூட தோன்றுகிறது. இப்படி உணவு தானியங்களை இறக்குமதி செய்வதிலேயே செலவு அதிக மாகச் செய்துகொண்டே போனால் நம்முடைய தொழில் வளர்ச்சி பெரும் அளவிற்கு பாதிக்கும். ஆகவே, விவசாயத்தை பெருக்கி உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உள்ள நடவடிக்கையை துரிதமாக எடுக்கப்பட வேண்டும். அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். தேசம் பூராவும் அதிகப்படியாக உற் பத்தி செய்து நம்முடைய ராஜ்யத்திலும் அதிகப்படியாக உற்பத்தி செய்து நம்முடைய லட்சியத்தை அடைவதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அத்துடன் இதில் மற்ற ராஜ்யங் களும் ஒத்துழைக்கவேண்டும். மற்ற ராஜ்யங்களும் சேர்ந்து முயற்சி எடுக்கவேண்டும். அதற்கான ஒரு கொள்கை இருக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்த அளவில் விவசாயிகளுக்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

அப்படி விவசாயிகளுக்கு ஊக்கம் காட்டும் அளவில் எவ்வளவோ சட்டங்களை நாம் இங்கு நிறைவேற்றி இருக்கிறோம். நில வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றி இருக் கிறோம். இந்த அளவு விவசாயிகளுக்கு அவர்களுக்கு உரிய பங்கைக் கொடுக்க வேண்டுமென்ற சட்டத்தையும் நிறைவேற்றி இருக்கிறோம். அவைகளை நிறைவேற்றி இருக்கிறோமேயொழிய அதன் பலனை விவசாயிகள் அனுபவிக்க முடியவில்லை. அதற்குக் காரணம் அதை அமுல் நடத்துகிறவர்கள் விவசாயிகள் பலன் அடையும் அளவில் அமுல் செய்யவில்லை. அதன் காரண மாகத்தான் இப்பொழுது விவசாய உற்பத்தி குறைந்திருக்கிறது.

[Sri M. Kalyanasundaram] [8th March 1961

வளர்ந்தால்தான் விலைவாசிகளைக் குறைக்க முடியும். தனியார்
துறையையே வளரவிட்டுக்கொண்டு போவது எதிர்காலத்தில் நம்
தேசத்திற்கே பெரும் ஆபத்து. பொதுத்துறை வளராது தனியார்
துறை வளருவதனால் அரசாங்கத்திற்கு வருமானம் ஒன்றும்
இல்லை. அரசாங்க வருமானத்தை பொது மக்களிடமி
ருந்தேதான் வசூலித்தாக வேண்டும். தனியார் தங்களுக்குக்
கிடைக்கிற பெரும் லாபத்தை எப்படி ஒளித்து, கணக்குக்
காட்டுவது என்பதில் சிறந்தவர்கள். அரசாங்க வரியில் இருந்து
தப்பிக்கொள்ள திறமை உடையவர்கள். சோஷலிசம் அமைக்
கிறோமா இல்லையா என்பது ஒருபுறம் இருக்கட்டும். உடனடியாக
விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் பொதுத்துறை
வளர்வதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்
கொண்டாகவேண்டும்.

நிதி அமைச்சர் அவர்கள் இந்த வருஷம் நாம் புது வரி எதுவும்
போடவில்லை என்று நாம் எல்லோரும் மகிழ வேண்டுமென்பதாகக்
கூறினார்கள். அப்படிச் சொன்னபோது காங்கிரஸ் அங்கத்
தினர்கள்கூடக் கைதட்டினார்கள். ஆனால் உண்மையில் மத்திய
அரசாங்கத்தால் 30 கோடிக்கு அதிகமாக பொருள்கள்மீது இப்
போது வரி போடப்படுகிறது. அந்தப் பணத்தில் ராஜ்யத்திற்காக
2 கோடி கொடுக்கப்படலாம். அதுவும் நம் ராஜ்யத்திற்குக்
கிடைக்கக்கூடிய சில லட்சம் இருக்கும். ஆனால் இந்த வரிப்
பணத்தில் இந்த மாநில மக்களும் அதிகமாக பாதிக்கப்படுகிறார்
கள் என்பதை மறந்துவிடக்கூடாது. நம் ராஜ்ய மக்கள் கட்டுகிற
பங்கும் இதில் அடங்கியிருக்கிறது. "புதுவரி நான் போட
வில்லை" என்று நமது அமைச்சர் சொன்னால், "நான் போடுகிறேன்.
நீ போடவேண்டாம்" என அந்த அமைச்சரோடு பேசிக்கொண்
டிருந்திருக்கலாம். ஏற்கனவே பஞ்சாயத்து சட்டம் கொண்டு
வந்திருக்கிறோம். பஞ்சாயத்து போடுகிற வரியும் இவ்வாண்டு
முதல்தான் அமுலுக்கு வரப்போகிறது. ஆகவே, இப்படி வரிகள்
அதிகமாகியிருக்கிறதே தவிர எந்த வரியும் இல்லை என்று
சொல்வது—1962-ம் வருஷத் தேர்தலுக்கு வேண்டுமானால் பயன்
படலாமே தவிர, அனுகூலமாக இருக்கலாம் என்று நினைக்கலாமே
தவிர உண்மையில் மக்களுக்குப் பயன் இல்லை. அதுவும் வரிபோடு
வதை ஆட்சேபிக்கவில்லை. டைரெக்ட் டாக்ஸ் என்று நேரிடை
யாக தனி நபர் மீது வரி போடுவதை விடுத்து, இண்டைரெக்ட்
டாக்ஸ் என்று பொருள்கள்மீது வரி போடப்படுகிறது. பொருள்
கள் மீது போடப்படுகிறவரியையும்கூட சாதாரண ஏழை எளிய
மக்கள்தான் கொடுக்கிறார்கள் என்பதை நாம் உணரவேண்டும்.
டைரொட் டாக்ஸோ, இண்டைரெக்ட் டாக்ஸோ இரண்டும் ஜனங்
கள்மீதுதான் வரும். ஆனால் தனி நபர்மீது வரி போடப்படு
வதனால் சங்கடம் இருக்கிறது. தனி நபர் உண்மையான தங்கள்
வருமானத்தைக் காட்டமாட்டார்கள். அதுவும் பணக்காரர்கள்,
முதலாளிகள், நிலப்பிரபுக்கள் என்று அந்த வரி போகும். அதை
விட்டு இப்படி பண்டங்கள் மீது வரி போட்டால் ஏழைகள்தான்
அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். இதை உணர்ந்தும் பண்டங்
கள்மீது இப்போது வரி போட்டிருப்பதானது உண்மையில் இந்தச்



8th March 1961] [Sri M. Kalyanasundaram]

சர்க்கார் பணக்காரர்களுக்கு, முதலாளிகளுக்கு சாதகமாக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே ஏழை மக்கள் பெரும்பாலோருக்கு பாதிக்கப்படக்கூடிய வரிகளை எல்லாம் போட்டிருக்கும் சமயத்தில் புது வரி எதுவும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுவதில் அர்த்தம் இல்லை.

நம்முடைய ராஜ்யத்தில் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய வேலைகளை, பணிகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதி திருப்தி அளிப்பதாய் இல்லை. நெய்வேலி திட்டத்தில் எப்போது நிலக்கரி எடுக்கப்படும், எப்போது பயன்படும் என்பது ஒன்றும் இல்லை. மின்சார நிலையம் வரப்போகிறது என்பது மட்டும் கண்ணுக்குத் தென்படுகிறது. இன்னும் மற்ற தொழில்கள், அதுவும் உருக்குத் தொழிற்சாலைபற்றி உறுதியில்லை. ஏதோ அமைச்சர்கள் கொஞ்சம் சாமர்த்தியமாக அதற்கு 75 லட்சம் ஒதுக்கி, ஒரு அதிகாரியை நியமித்து இந்தஅதிகாரி வேலை செய்வதுபோலக் காட்டினால் வருகிற தேர்தலில் இது இடைஞ்சல் இல்லாமல் இருக்கட்டும் என்று செய்திருப்பதாகத் தெரிகிறது. உண்மையில் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்பது தெரியவில்லை. பரிட்சார்த்தமாக அனுப்பப்படவேண்டியது அனுப்பப்படுமா என்றும் தெரியவேண்டும். முதல் பரிட்சை வெற்றிகரமாக இருக்கிறது என்று சொன்னதுதான் ஆறுதல். அதுவும் அமைச்சர் நிதானமாக இந்த உருக்குதொழிற்சாலை லாபகரமானதாக இருக்குமா என்று பேசினார். நஷ்டமாகவே இருக்குமானாலும் பின் தங்கிய தென்னக வளர்ச்சிக்கு இதை ஏன் ஏற்படுத்தக்கூடாது? இப்போது உருக்குவிலை எல்லா இடத்திலும் கண்டிரோல் செய்யப்பட்டுத்தானே இருக்கிறது? இதில் நஷ்டம் என்றாலும் பொதுவாக எல்லாவற்றையும் சேர்த்து விலை நிர்ணயிக்கும்போது சரியாகி விடுகிறது. இங்கே உற்பத்திச் செலவு அதிகரித்தாலும்கூட சராசரி விலையில் சரிக்கட்டிவிட முடியும். ஆகவே, பின்தங்கிய நம் ராஜ்ய நிலைமையை உத்தேசித்து, இங்கு தொழில் பெருக, வேலைவாய்ப்புகள் அதிகரிக்க இந்த உருக்குத் தொழிற்சாலை ஏற்படுவதற்கு திட்டமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுவது பற்றி உத்தரவாதம் வேண்டும்.

நமது ராஜ்யத்தில் உற்பத்தி செய்யும் பொருள்களின், உற்பத்திச் செலவு கட்டுமா கட்டாதா என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். லாபகரமாக இருந்தால் நடத்துவோம் இல்லாவிட்டால் நடத்தமாட்டோம் என்ற அர்த்தம் தொனிக்கும் முறையில் அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். திட்டக் கமிஷனே அல்லது மத்திய அரசாங்கமோ லாபகரமாகயிருந்தால் தான் ஒப்புக்கொள்வோம் என்று சொன்னால் அதை ஒப்புக்கொள்ள முடியாது, நாலு உருக்குத் தொழிற்சாலைகளோடு கூட சேலம் உருக்குத் தொழிற்சாலையை ஐந்தாவதாக ஏற்படுத்தி சராசரி விலை வேண்டுமானால் நிர்ணயித்துக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தி அதை அடைய வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டிய முக்கிய ஐந்து திட்டங்களை அனுப்பினேம்

இந்த சபையிலிருந்து, ஏகோபித்த முறையில். அவற்றின் நிலை,
எந்தளவு முன்னேறியிருக்கிறது, அதன் சாத்தியக்கூறு என்ன?
மூன்றாவது திட்டகாலத்தில் அவை எந்தளவு நிறைவேறும்
என்பதுபற்றி விளக்கமாகக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றிய யோசனைகள்
குறித்து விவாதிக்கும்போது விரிவாக விவாதிக்க முடியும்.
தொகை ஒதுக்குவதுபற்றி, பணவசதிகள் பெறுவதுபற்றி, இது
பற்றிய பிரச்னைகளை அப்பொழுது எடுத்துக்கொள்ளலாம்.
உடனடியாக நமது அரசாங்கம் வற்புறுத்த வேண்டியது நமது
ராஜ்யத்தில் தேவையான தொழில் வளர்ச்சிக்கும், தேவையான
பாசன வசதி பெறுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்
பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாசன வசதியைப்
பெருக்குவது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது
நதி மூலம் கிடைக்கக்கூடிய ஜலத்தை எல்லாம் உபயோகப்படுத்தி
விட்டோம், இனி, நம் ராஜ்யத்திலிருந்து நதி மூலம் கிடைக்கக்
கூடிய ஜலம் குறைவு, அண்டை ராஜ்யங்களோடு பேசி ஜலத்தைப்
பெறவேண்டுமென்று சொன்னார்கள். அது ஒரு முறை. மீடியம்
இரிகேஷன், அதற்காக எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது.
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்று மேலெழுந்தவாரியாக
பார்க்கும்போது ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை மிகக் குறைவு.
29 கோடி ஒதுக்கியிருப்பதில் அவ்வளவும் பாம்பிக்குளத் திட்டத்
திற்கே ஆகிவிடுமென்றுதான் நான் கருதுகிறேன். எந்தப் பகுதி
பாசன வசதி பெற்றாலும் நான் அதை வரவேற்கிறேன். போட்டி
உணர்ச்சியை உண்டாக்க நான் விரும்பவில்லை. நடுத்தரப் பாசன
வசதி எல்லா ஜில்லாக்களுக்கும் கிடைக்கக்கூடிய முறையில் அதிக
நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவசிய
மானால் நம் ராஜ்ய நிதியிலிருந்தே தனியாக ஒதுக்கவேண்டும்.
அதற்காக பாம்பிக்குளத் திட்டத்தை மெதுவாக நாலாவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடர்ந்து மெதுவாக நடத்தலாம்,
அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைக் குறைக்கவேண்டு
மென்று நான் சொல்லவில்லை. நடுத்தர பாசன வசதிக்கு
ஒதுக்கப்பட்டுள்ள தொகை குறைவு. ஜில்லா ஒன்றுக்கு இரண்டு
திட்டங்களாவது எடுத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு நிதி
ஒதுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாத்தியமான
அளவிற்கு நடுத்தரப் பாசன திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள்
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

தேர்தல் வருவதற்கு முன், சர்வே செய்து சுண்ணாம்பு
அடித்துக்கொண்டிருக்கிறார்கள், சிலயிடங்களில். ஆக, நடுத்தரப்
பாசனத் திட்டங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, தூத்துக்குடி
துறைமுகத் திட்டம்பற்றி அமைச்சர் அவர்கள் விரிவாக பேசி
யிருக்கிறார்கள். ஆனால் அது சேதுசமுத்திரத் திட்டத்தின் ஒரு
பாகமாயிருக்கும் என்பதுபற்றி நமது ராஜ்ய அமைச்சர்கள் திட்ட



வட்டமாக சொல்கிறார்களே தவிர மத்திய அரசாங்க அமைச்சர்
களின் பதிலிலிருந்து அப்படி நம்பிக்கை பிறக்கவில்லை. சேது
சமுத்திரத் திட்டம் தமிழ் நாட்டிற்கு ஒட்டு மொத்தமாக, தமிழ்
நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அது மிக அவசியம். தமிழ்
நாட்டின் போக்குவரத்துத் தேவை மிகக் குறைவு. ரோடு போக்கு
வரத்தில் சிறிது அபிவிருத்தி ஏற்பட்டிருக்கலாம். ஆனால்
ரெயில்வே போக்குவரத்துதான் நம் நாட்டின் பிரதான போக்கு
வரத்து. கடலோரம் 600 மைல் இருந்தும்கூட கடலோரப் போக்கு
வரத்தால் இப்பொழுது நம் ராஜ்யத்திற்கு அனுகூலம் இல்லை.
நிபுணர்கள் எப்படி வேண்டுமானாலும் அபிப்பிராயம் கூறுவார்கள்.
நம் நாட்டில் கப்பல் போக்குவரத்தை அதிகப்படுத்த வேண்டும்.
சேதுசமுத்திரத் திட்டம் அமுலுக்கு வந்தால்தான் கப்பல்
போக்குவரத்தை விஸ்தரிக்க முடியும். அதனால் நம் ராஜ்யத்தில்
அதிக பலன் ஏற்பட முடியும் என்பதையும் எடுத்துச்சொல்ல
விரும்புகிறேன். ஆகவே, சேதுசமுத்திரத் திட்டத்தை வலி
யுறுத்தி அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இணைப்பதற்
குள்ள நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். பின், அண்டை ராஜ்யங்களோடு ஜலத்தை
பங்கிட்டுக் கொள்வது சம்பந்தமாக முயற்சிகள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன என்பது தெரியாததல்ல. அந்த முயற்சி
களுக்கு சங்கடம் உண்டாக்க வேண்டுமென்ற முறையில் நான்
பேச விரும்பவில்லை. அந்த முயற்சிகள் துரிதமாக நடைபெறு
வதற்கும், அவைகள் மூன்றாவது திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்
படுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு முக்கியமான
பிரச்னை. நமது ராஜ்யத்தில் தொழில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்
கிறது என்றிருந்தபோதிலும், வேலை வாய்ப்பு வசதிகள்
அதிகரிப்பது மந்தமாகயிருக்கிறது என்பதை அரசாங்கப் புள்ளி
விவரமே கூறுகிறது. வேலை வாய்ப்பு எவ்வளவு கிடைக்கிறது?
அதைவிட அதிகமாக வேலை தேடித்திரிபவர்களின், பதிவு செய்து
கொள்பவரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கிறது.
போன ஆண்டு எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்த
தோ அதைவிட வேலை கிடைக்க, அதற்காக பதிவு செய்து கொண்
டிருப்போரின் எண்ணிக்கை தேசம் பூராவும் அதிகரித்துக்
கொண்டிருக்கிறது. நம் ராஜ்யத்திலும் அதிகரித்துக்கொண்டிருக்
கிறது. பத்து வருடத் திட்டத்திற்குப் பிறகு வேலை வாய்ப்பு
குறைந்துகொண்டு போவது, அல்லது வேலை பெறுவதற்காக வரக்
கூடியவர்களை திருப்தி செய்விக்கக்கூடிய அளவு ஏன் வேலை
யில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியவில்லையென்று கேட்
கிறேன். ஏற்கனவேயுள்ள தொழில்களை அபிவிருத்தி செய்வதில்
சிக்கனச் சீரமைப்புகள் போரால் ஆள் குறைப்பு ஏற்படுத்துவதை
தடுக்கவேண்டும். இப்பொழுது பஞ்சாலைகளில் ஆள் குறைப்பு
எப்படி செய்யலாம் என்பதுபற்றி பேச்சு வார்த்தை நடந்துக்
கொண்டிருக்கிறது. கூலி உயர்வு கொடுத்துவிட்டால் உடனே ஆள்
குறைப்பு செய்யவேண்டுமென்பது முதலாளிகளின் திட்டமாக
யிருக்கிறது. ஆள் குறைப்பினால் தொழில் வளர்ச்சி ஏற்பட்டு

[Sri M. Kalyanasundaram] [8th March 1961]

விடாது. தொழில் வளர்ச்சி ஏற்படுகிற அளவு, மூலதனப்
பெருக்கம் ஏற்படுகிற அளவில் வேலைவாய்ப்பு வசதிகள் பெருக
வில்லை. அதனால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்
கொண்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.
இந்த சபைக்கு இதுதான் கடைசி பட்ஜட்டாக இருக்கப்
போகிறது. புதுச் சபையில்தான் அடுத்த பட்ஜெட் வரயிருக்கும்.
இந்த நிதியை செலவு செய்யும் முறையில், நிர்வாகத் திறமையோடு
லஞ்சம் போன்ற ஊழல்களுக்கு இடம் கொடுக்காமல் வேலை செய்ய
வேண்டும். அதில் வேண்டிய கவனம் செலுத்தவேண்டும்.
அமைச்சர்கள் கவனத்திற்கு கொண்டுவந்தால் நடவடிக்கைகள்
எடுக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதிகார வர்க்
கத்தை உபயோகிக்கும் முறையில் கொஞ்சம் மாறுதல் வேண்டும்.
அதிகாரிகளை அரசியல் காரணங்களுக்காக உபயோகப்படுத்தக்
கூடாது. அமைச்சர்கள் கட்சிப் பிரசாரத்திற்காக போகும்போது
அதிகாரிகளும்கூடச் செல்கிறார்கள். பாதுகாப்பிற்காக போகக்
கூடிய முறையில் இருக்கலாம். ஆனால் என்ன நிலை ஏற்படுகிறது?
அமைச்சர்கள் அரசியல் காரணங்களுக்காக செல்லும்போது,
அதிகாரிகளை பல கேள்விகள் கேட்டு, அவர்களைக் கண்டித்து பேசி,
ஜனங்கள் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு வோட்டளித்தால் சர்க்கார்
ஆதரவு காட்டாது என்ற பயத்தை மக்களிடை உண்டாக்கு
கிறார்கள். ஜனநாயகத்திற்கு இது பொருந்தாது. சட்டசபையில்
எவ்வளவு ஸ்தானங்கள் இருக்கவேண்டும் என் கட்சிக்கு என்ப
தல்ல என் கவலை, நாடு முன்னேறவேண்டு மென்பதுதான். நான்
சட்டசபையில் இருந்தாலும் சரி அல்லது சிறைச்சாலையில் இருந்
தாலும் சரி, நாட்டின் முன்னேற்றத்திற்காக நான் என் வாழ்க்கை
யையே அர்ப்பணிப்பேனே தவிர நான் சட்டசபைக்கு வந்தாலும்
அல்லது சிறைச்சாலைக்கு சென்றாலும் சரி மக்களுக்காக இரண்
டிடத்திற்கும் முகமலர்ச்சியோடுதான் செல்வேன். அதற்காக
பயந்து ஒன்றும் நான் கேட்கவில்லை. ஆனால் அமைச்சர்கள் பெருந்
தன்மையோடு இருக்கவேண்டும். பஞ்சாயத்துகளின் வரவேற்பில்,
எதிர்க்கட்சியிலுள்ளவர் பஞ்சாயத்து போர்ட் தலைவராகயிருக்கும்
பஞ்சாயத்துகளில் அமைச்சர்களை வரவேற்று வரவேற்பு கொடுக்
கிறார்கள். அதில் சில குறைகளையும், சில கோரிக்கைகளையும் சொல்
கிறார்கள். அதைக் கேட்கப் பொறுமையில்லாமல் எதிர்க்கட்சிக்
காரர்கள் அரசியல் பிரசாரம் செய்கிறார்கள் என்று தூக்கி
யடித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. அமைச்சர்கள் பொறுப்போடு
நடந்துகொள்ளவேண்டும்.

இதனால் எதிர்கட்சியினர் பயப்படுகிறார்கள் என்று எடுத்துக்
கொள்ளவேண்டாம். சர்க்கார் நடத்துகின்ற செயல்களில்
எல்லாம் அந்த பயம் தெரிகின்றது, அதை நம்மால் காண முடி
கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விதம் செய்து
கொண்டிருப்பது நியாயமா இல்லையா என்பதை மக்களுடைய
தீர்ப்புக்கு விட்டுவிட வேண்டும். மக்கள் எந்தவிதமான கஷ்டத்
திற்கும் உள்ளாகாத நிலையில் வோட்டு அளிக்கக்கூடிய சூழ்நிலையை
நாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதிகாரத்தைக் கொண்டு



8th March 1961] [Sri M. Kalyanasundaram]

எதிர்கட்சிகளினுடைய நடவடிக்கையை ஒடுக்கிவிட வேண்டும்
என்ற எண்ணம் அமைச்சர்களிடத்தில் இருந்து வருகின்றன.
அதற்குக் காரணம் தேர்தல் நெருங்குவதுதான் என்று எண்ணு
கிறேன். ஆகவே, அந்த மாதிரியாக இல்லாமல் தேர்தல் நியாய
மாக நடக்கக்கூடிய விதத்தில் ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு
எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் சர்க்கார் பெற
வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பேச்சுரிமை மிகவும் கட்டுப்படுத்தப்படுகிறது.
சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால், இடம், நேரம் இவைகள்
எல்லாம் கட்டுப்படுத்தப்படுகின்றன, எதிர்கட்சிகளுக்கு இருக்
கின்ற வசதிகள் எல்லாம் மைக்கும் பேச்சும்தான். வேண்டு
மென்றால் கட்சிப் பிரச்சாரத்திற்காக கார் வசதியும் வேண்டும்.
காங்கிரஸ் கட்சிக்கு வேண்டுமென்றால் இந்த வசதிகள் குறைந்த
அளவு போதுமானதாக இருக்கலாம். எதிர்கட்சிக்கு இது மிகவும்
தேவை. காங்கிரஸ் கட்சிக்கும் இம்மாதிரியேதான் உரிமை
கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் இதனால்
பாதிக்கப்படுவது காங்கிரஸ் கட்சி அல்ல, எதிர் கட்சிதான்.
அதிலும் முக்கியமாக கம்யூனிஸ்டு கட்சிதான் என்பதையும்
எடுத்துக்கூற விரும்புகிறேன். கம்யூனிஸ்டு கட்சிக்கு இருக்கின்ற
வசதி இந்த ஒன்றுதான். இப்போது இருக்கின்ற கட்டுப்பாட்டில்
மைக் லைசென்ஸ் இவைகளுக்கு ஒரு வாரத்திற்கு முன்பே மனுச்
செய்து கொள்ளவேண்டும், இம்மாதிரி பல இடையூறுகள் இருக்
கின்றன. இதற்கெல்லாம் இடம் அளிக்கக்கூடாது. இதற்கு மேலாக
போலீசை உபயோகப்படுத்தி நடத்தக்கூடிய அடக்குமுறை மிக
தீவிரமாக இருந்துகொண்டிருக்கிறது, ஜனநாயகத்தை காப்பாற்று
வதற்குத்தான் நாம் எல்லோரும் பாடுபடவேண்டும் என்று பேசப்
படுகிறது. நீதி மன்றங்கள், போலீஸ் நிர்வாகம் இவைகள் எல்லாம்
மக்களுக்கு பயன்படவேண்டும். போலீஸ் என்றால் சமூகத்தில்
ஒரு சில முதலாளிகளுக்கு மட்டும், அல்லது ஒரு சில நில பிரபுக்
களுக்கு மட்டும் பயன்படக்கூடிய முறையில் இருக்கக்கூடாது.
சர்க்கார் நிறைவேற்றுகின்ற சட்டங்களின் பயனை மக்கள்
அனுபவிக்க வேண்டுமென்றால் மக்கள் பக்கத்தில் போலீஸ் இருந்து
பாதுகாக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு போலீஸ் யார்
பக்கத்தில் இருக்கிறது என்று பார்த்தால், திருநெல்வேலி, ராம
நாதபுரம், திருச்சி, சேலம் போன்ற பல இடங்களிலும் நடந்திருக்
கின்ற பல சம்பவங்களைப்பற்றி போலீஸ் அமைச்சர் அவர்
களுடைய கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறேன். ஆனால்
அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள், போலீஸ் அதிகாரிகள் என்ன
ரிப்போர்ட் கொடுக்கிறார்களோ அதை மட்டும் உண்மை என்று
நம்பி, நாங்கள் சொல்லுகின்ற கோரிக்கைகளின் பேரில் எந்த
விதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. பெரும்பாலான போலீஸ்
தகராறுகளை எடுத்துக்கொண்டால், கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்
கள் சம்பந்தப்பட்டமட்டில் போடப்படுகிற வழக்குகளை நன்றாக
விசாரணை செய்யட்டும், கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்களாக இருக்
கட்டும், தொழிற்சங்க ஊழியர்களாக இருக்கட்டும், அதில்

ஏதாவது தவறு இருந்தால் அதை சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்கட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. நல்லதோ பொல்லாததோ எதையும் விசாரிப்பதற்கென்று நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆனால் நடப்பது என்ன, கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் கம்ப்ளெய்ண்ட் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பதில்லை. அமைச்சர்களுக்கு எத்தனை மனுக்கள் கொடுத்திருக்கிறேன், போலீஸ் ஐ.ஜி-க்கு எத்தனை மனுக்கள் கொடுத்திருக்கிறேன். அவைகளின்மீது முறையான நடவடிக்கை எடுப்பதில்லை. ஆட்சியில் இருக்கின்ற கட்சியின் செல்வாக்கை தவறாக பயன்படுத்திக்கொண்டு, கள்ளச்சாராயம் காய்ச்ச வேண்டுமென்றால் கதர் சொக்காய் போட்டுக்கொண்டால் போதும் தப்பித்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் வளருகின்ற அளவுக்கு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. நான் இவ்வாறு சொல்லுவதில் தவறு இருந்தால் அதைப்பற்றி அரசாங்கம் தெரிவிக்கவேண்டும். சொல்வதில் உண்மையிருக்கின்றதா என்பதை கட்சி பிரதிநிதிகளையும் வைத்துக்கொண்டு பரிசீலனை செய்யவேண்டும். பரிசீலனை செய்து அதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டுமோ அதற்குத் தகுந்தவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் சொல்லுவதில் ஏதாவது தவறு இருந்தால் அதற்குள்ள பலனை அனுபவிக்கவும் நான் தயாராய் இருக்கிறேன். போலீஸ் அதிகாரத்தினால் எதிர்கட்சிகளை அழித்துவிடலாம் என்று எண்ணுவது தவறு, அல்லது போலீஸ் உதவி இருந்தால்தான், அல்லது மந்திரியின் அனுதாபம் இருந்தால்தான் எதிர்கட்சி வளர முடியும் என்று நான் நினைக்கவில்லை. அமைச்சர்களும் அரசியல்வாதிகள்தான், அவர்களுக்கும் தங்கள் கட்சியை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கலாம். அது எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடியதே. ஆனால் நேர்மைக்கு மாறாக அமைச்சர்களோ அல்லது காங்கிரஸ் அங்கத்தினர்களோ கட்சியை வளர்க்க எண்ணுவார்களேயானால் அதனால் பாதகம்தான் ஏற்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஜனநாயகத்தில் இருக்கக்கூடிய நம்பிக்கையின் பிரகாரம் வேலை செய்வதற்கு வழியில்லை என்றால், நாட்டில் கிளர்ச்சிகள்தான் ஏற்படும். நாட்டில் சுமுகமான நிலை வளரவேண்டும், தொழில் உற்பத்தி பெருகவேண்டும், விவசாய அபிவிருத்தி அதிகரிக்க வேண்டும் என்றால் நாம் போட்டிருக்கும் திட்டங்கள் எல்லாம் நல்ல விதத்தில் முடிவு பெறவேண்டும், அதே நேரத்தில் எதிர்கட்சிக்காரர்கள் சொல்லுகின்ற யோசனைகளையும் ஏற்றுக்கொண்டு நல்ல முறையில் திட்டங்களை நிறைவேற்றினால்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாம் வெற்றி பெற முடியும் என்பதை தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திற்கு பதில் அளிக்க முன் வருவதற்கு முன், திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் அவர்கள் புதிய முறையில் பட்ஜெட்டில் சில அம்சங்களைப்பற்றி வரவேற்றதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.





சர்க்கார் சில நல்ல காரியங்களையும் செய்திருக்கிறது என்று சொன்னதுடன் என் பேரில் தனி அக்கரை கொண்டு என்னிடத்தில் இருக்கின்ற சில தவறுகளை எடுத்துக்காட்டி அதை திருத்திக்கொள்ளவேண்டும் என்று சொன்னதற்கும் நான் அதிக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை நான் ஏதோ உபசாரத்திற்காகச் சொல்லுகிறேன் என்று எடுத்துக்கொள்ளாமல் இதை உண்மையான வார்த்தையாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னிடத்தில் ஏதாவது தவறுகள் இருக்குமானால் அதைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை இந்தச் சபையிலுள்ளவர்களுக்கு உண்டு என்று சொல்லும்போது அத்துடன் எதிர்கட்சித் தலைவர்களாக இருக்கக்கூடியவர்களுக்கும் இதில் முக்கிய பொறுப்பு உண்டு என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அதிலும் முக்கியமாக கனம் சண்முகம் அவர்கள் பேசினதற்கு நான் பதில் சொல்லும்போது சற்று ஆத்திரமாகவே என்னையும் அறியாமலேயே பேசினேன் என்பது உண்மைதான். சில சமயங்களில் என்னையும் மீறி ஆத்திரத்தில் சில வார்த்தைகள் கடுமையாக வந்துவிடுகின்றன என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் அது இப்போது குறைந்துகொண்டே தான் வருகிறது என்பது என்னுடைய கருத்து. அப்படி இல்லை என்று சொல்லுவார்களேயானால் அதை மேலும் குறைப்பதற்கு முயற்சிக்கிறேன் என்றுமட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப்பற்றிச் சொல்வது ஒருபுறம் இருக்கட்டும், என் கட்சியில் இருக்கும் மற்றவர்களைப்பற்றி சொல்லும்போது நம்மை அறியாமலேயே ஆத்திரமாகப் பேசிவிடுகிறேன். ஆத்திரமாக பேசும்போது நாம் அளந்துகொண்டா பேச முடிகின்றது. அவசரத்தில் அவ்விதம் முடியாமல் போய்விடுகிறது. மற்றவர்களைப்பற்றி பேசும்போது அவர்களுக்கு ஆத்திரம் ஏற்படாத வகையில் பேசிக்கொள்வதற்கு நாம் பழகிக்கொள்ளவேண்டும். எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் எப்படி வேண்டுமானாலும் பேசலாம், அமைச்சர்களுக்குத்தான் இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் என்றில்லாமல் எல்லோருமே ஆத்திரம் வராத முறையில் பேசிக்கொள்வதற்கு பழகிக்கொள்ளவேண்டும். அதே சமயத்தில் திரு. அண்ணாதுரை அவர்கள் எனது சகா மாணிக்கவேலு அவர்களைப்பற்றி கிண்டலாகப் பேசியதும், இம்மாதிரி பேசுவதும் ஒரு கட்சிக்கு தலைவராய் இருக்கின்ற அவர்களுக்கு சரியானதுதானா, நல்லதுதானா என்பதைப்பற்றியும் அவர்கள் இப்போது இல்லாவிட்டாலும் பின்னாலாவது யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நானும் ஆத்திரத்தில்தான் பேசிவிட்டேன் என்று அவர்கள் சொல்லுவதாக இருந்தால் அவர்களும் ஆத்திரத்தை தணித்துக்கொள்ள வேண்டியதுதான். திரு. அண்ணாதுரை அவர்கள் பேசும்போதும் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும்போதும் நாங்கள் ஜனநாயக அடிப்படையில் பணி புரிவதற்கு பழகிக்கொள்ளவேண்டும் என்றும் அந்த முறையில் நம்முடைய நடவடிக்கைகளை திருத்திக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்திப் பேசினார்கள். அதைப்பற்றி நாங்கள் வாயளவில் மட்டும் அல்ல, செயலிலும் அந்த ஜனநாயகம் வளரவேண்டும்

என்பதற்காக எங்களால் இயன்ற அளவு—அது சிறிய அளவு
என்று சொல்லக்கூடும்—அந்த முறையிலாவது சர்க்கார் தன்னால்
இயன்ற அளவு முயற்சி செய்துகொண்டிருக்கிறது என்பதை
என்னால் சொல்லிக்கொள்ள முடியும். ஆனால் இதில் அவர்கள் எதிர்
பார்க்கின்ற அளவு வெற்றி காணவில்லை என்றால் அது தனிப்பட்ட
வர்களுடைய குறையாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.
ஆனால் எங்களுடைய கட்சியின் கொள்கை, எங்களுடைய
கட்சியின் லட்சியம் ஜனநாயக அடிப்படையில்தான் இந்த நாடு
இயங்கவேண்டும் என்பதுதான். ஜனநாயக அடிப்படையிலேயே
இந்த நாடு முன்னேற்றம் அடையவேண்டும் என்பதிலே இந்தச்
சர்க்கார் தீவிரமாக, உறுதியாக இருக்கிறது என்பதை எடுத்துச்
11 a.m. சொல்ல விரும்புகிறேன். அதே சமயத்தில் ஜனநாயக அடிப்
படையில் இயங்க வேண்டுமென்று சொன்னால், எந்த ஜனநாயக
நாட்டை எடுத்துக்கொண்டாலும், சில பொதுத் திட்டங்கள் இருக்
கும்போது கட்சியின் அடிப்படையில் இயங்கும்போதுதான் ஜன
நாயக அடிப்படையில் இயங்க முடியும் என்பதைப் பார்க்க
வேண்டும். உதாரணமாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்தியாவின் ஒற்று
மையை வலியுறுத்தியது கட்சிப் பிரச்சாரம் என்று சொன்னார்கள்.
இப்பேர்ப்பட்ட ஒரு நிலைமை நாட்டில் இருக்குமானால் அந்த
நாட்டிலே எந்த அளவுக்கு ஜனநாயக அடிப்படையில் இயங்க
முடியும் என்பதை, ஜனநாயக அடிப்படையில் இருக்கக்கூடிய
தத்துவங்களை ஆராய்ந்து பார்ப்பார்களானால் அதிலே ஓரளவு சரி
யான உண்மைகளைக் காண்பார்கள் என்று எண்ணுகிறேன்.
இதிலே இந்தியாவின் ஒற்றுமையை ஒரு கட்சிப் பிரச்னையாகச்
சொல்லவில்லை. இந்தியாவின் ஒற்றுமையை என்றைக்கு எல்லாக்
கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்களோ அன்றைக்குத்
தான் ஜனநாயக அடிப்படையில் இயங்க முடியும். ஒரு கட்சி
யாவது அதை ஒப்புக்கொள்ளாமல் இருக்குமானால் அந்த
அளவுக்கு ஜனநாயக அடிப்படையில் இயங்க ஒரு தடை இருந்து
கொண்டுதான் இருக்கும் என்று அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் ஷண்முகம் பேசும்போது
அவர்களுக்கே உரித்தான மொழியில் சொன்னார். நாட்டிலே முன்
னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று ஒப்பாரி வைக்கிறார்கள் என்று
சொன்னார்கள். மற்ற ராஜ்யங்களில் மந்திரிகள் அந்தமாதிரி பேசு
கிறார்களா?—அவர்கள் பாஷையிலேயே சொல்ல வேண்டுமென்றால்,
ஒப்பாரி வைக்கின்றார்களா என்று பார்த்தால் என்ன காரணத்திற்
காக இங்கே அந்த மாதிரி பேசவேண்டியிருக்கிறது? இன்றைக்கு
இங்கே ஒரு கட்சி நாட்டை பிரித்தாக வேண்டுமென்று ஒரு தீவிர
மான கொள்கையை கைக்கொண்டிருக்கிறது. அவர்கள் என்ன
வாதத்தை உபயோகப்படுத்துகிறார்கள் என்றால் நாட்டை
பிரிக்காத காரணத்தினால் முன்னேற்றம் ஒன்றும் ஏற்படவில்லை,
இந்த மந்திரிகள் எல்லாம் வெறும் பொம்மைகள், அதிகாரம்
ஒன்றும் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு எந்தக் காரியத்
தையும் சாதிக்கும் சக்தி இல்லை என்று எல்லா இடங்களிலும், சட்ட
சபையில் மட்டுமல்லாமல்—இங்கேயாவது முறையோடு செய்ய



வில்லை என்று சொல்லுகிறார்கள்—பொதுக் கூட்டங்களிலே மந்திரி
களைப்பற்றி எவ்வளவு கேவலமாக, கீழ்த்தரமாகப் பேசுகிறார்கள்
என்று எங்களுக்குத் தகவல் வந்துகொண்டிருக்கிறது. அப்படி
வரக்கூடிய தகவல்கள் பொய்யாக இருக்கவேண்டும் என்றுதான்
நான் ஆசைப்படுகிறேன். ஆனால் அம்மாதிரி இல்லை என்று
எங்களுக்குக் கிடைக்கக்கூடிய தகவல்களிலிருந்து, கேட்பவர்கள்
சொல்லக்கூடியதிலிருந்தும் தெரிகிறது. மக்களிடத்தில் சென்று
இந்த மந்திரிகளால் முடியாது, நாடு பிரிந்தால்தான் முடியும்
என்று சொல்லும்போது, அதை மறுத்துக் கூறுகின்ற முறையில்,
நாட்டிலே முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது
என்று அந்த முறையில் எடுத்துச் சொல்லவில்லையென்றால், சரி,
நாட்டுப் பிரிவினைக்கு உங்கள் இஷ்டம்போல் பிரச்சாரம் செய்து
கொண்டிருங்கள் என்று சொல்வதாகத்தான் ஆகும். என்றைக்கும்
அதற்கு இடம் கொடுக்க முடியாது என்று திராவிட முன்னேற்றக்
கழகத்தினருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்
களிடத்திலே ஏதோ தனிப்பட்டவர்கள் என்ற விரோத மனப்
பான்மையில் அல்ல, அடிப்படையான பிரிவினைக் கொள்கையின்
காரணமாக எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிலே
இருக்கக்கூடிய சங்கடங்கள்தான் இன்றைக்கு. நாங்கள்
சாதித்ததையெல்லாம் தண்டோரா போட்டுக்கொள்ளவேண்டும்
என்ற ஆசை இல்லை. மக்கள் நாட்டின் முன்னேற்றத்தை ஓரளவு
உணர முடியும். இருந்தாலும் இது போன்ற வாதங்கள் மேடை
களிலும், பத்திரிகைகளிலும், நாடகங்களிலும், எல்லா இடங்
களிலும் நாட்டுப் பிரிவினை சக்தியை உபயோகப்படுத்தும்போது
அதைத் தடுக்க எதிர்ப்பிரச்சாரம் செய்யவேண்டியிருக்கிறது.
ஆக, இந்த ஒப்பாரிக்குக் காரணம் யார் என்று திராவிட முன்
னேற்றக் கழகத்தினர் யோசித்துப் பார்க்கவேண்டும். இன்
னொன்றும் பார்க்க வேண்டியிருக்கிறது. திட்டங்களை நிறைவேற்றி
விட்டார்கள் என்று ஒப்பாரி வைப்பதாகச் சொன்னார்கள். இந்த
நிலைமையில் நாடு பிரிவினைப் பட வேண்டும், இல்லாவிட்டால் ஒன்
றும் முடியாது என்று சொல்லும்போது, ஒரு திட்டம் வரும்போதே
ஒப்பாரி வைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதைப் பார்க்க
வேண்டும். தயவுசெய்து கனம் அங்கத்தினர் ஷண்முகம் அவர்
களைக் கேட்டுக்கொள்வது, இந்த ஒப்பாரி வைக்கவேண்டிய நிலை
ஏன் ஏற்படுகிறது என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.
நாட்டுக்கு நல்ல திட்டம் வரும்போது சந்தோஷப்படுவதற்கு
பதிலாக, கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக
ஒப்பாரி வைக்க—அவர்கள் சொன்னாலும் ஒப்பாரி, நாங்கள்
சொன்னாலும் ஒப்பாரி என்று ஏற்படுமானால்—தவறு யார்மீது
என்று அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும் என்ற கருத்தை
அவர்கள் மத்தியில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று பார்த்தால், நாம் இன்றைக்கு பல கட்சிகள் அடிப்
படையில் இங்கே இயங்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். பல
கட்சிகள் இருக்கக்கூடிய நிலையில்தான் ஜனநாயகம் இருக்க
முடியும் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறோம்—அதுதான் எங்க

ளுடைய கொள்கைகூட. மற்ற சில நாட்டு அமைப்புகளைப் போல ஒரே கட்சி இருக்கவேண்டும் என்ற அமைப்பு இல்லை. காங்கிரஸின் கொள்கை அந்த அடிப்படையில் இல்லை என்று பல நிகழ்ச்சிகளால் நிரூபிக்க முடியும். பல கட்சிகள் இயங்கும்போது ஒரு கட்சி அதிகாரத்தில் இருந்து நடத்தவேண்டிய பொறுப்பு ஏற்படுகிறது. ஆக, இன்றைக்கு பல குறைகளை எடுத்துக் கூறும்போது, அதிகாரத்தில் இருப்பவர்களைக் குறை கூறும்போது நாம் சில லட்சியங்களை வகுத்துக்கொள்ளவேண்டிய, சில கோட்பாடுகளை வகுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு கட்சிக்கு நிதி திரட்டுவது என்ற நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி எல்லாக் கட்சிகளும் உட்கார்ந்து யோசனை செய்வதாக இருந்தாலும் ஆட்சேபனை இல்லை. அதைப்பற்றி கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு காங்கிரஸ் கட்சி நிதி திரட்டுவதாக பல இடங்களில் பல மேடைகளில், பத்திரிகைகளில், அதுவும் முக்கியமாக சுதந்திரா கட்சி மேடையிலிருந்து பலமாகக் கூறப்படுகிறது. இப்போது ஜனநாயக அடிப்படையில் இயங்க வேண்டுமென்று சொன்னால், ஜனநாயக அடிப்படையில் தேர்தல் நடைபெற வேண்டுமென்று சொன்னால், தேர்தலில் பல அரசியல் கட்சிகள் பங்கெடுத்துக்கொள்ளும் காலத்தில் கட்சிகள் தேர்தலில் செலவு செய்வது அவசியமா இல்லையா? எல்லோரும் சேர்ந்து அவசியம் இல்லை என்று சொன்னால் அது வேறு விஷயம். எல்லா நாடுகளிலும் தேர்தலுக்கு நிதி திரட்டிச் செலவழிக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். அந்த அடிப்படையில் பார்க்கும்போது சுதந்திரா கட்சியானது மற்றவர்கள் பேரில் குறை சொல்லிவிட்டு, அவர்கள் 10 லட்சம் அல்ல, 20 லட்சம் அல்ல, ஒரு கோடி ரூபாய் திரட்ட வேண்டும் என்று சொல்லி அதற்கு தீவிர முயற்சி எடுத்து வருகிறார்கள். அப்போது சுதந்திரா கட்சி மட்டும்—எதிர் கட்சி மட்டும்—நிதி திரட்டி தேர்தலில் பங்கெடுத்துக்கொள்ளலாம், அதிகாரத்தில் இருக்கும் கட்சி நிதி திரட்ட முடியாது என்ற நிலை இருக்குமானால் அது முடியுமா என்று பார்க்கவேண்டும். பாரபட்சமற்ற முறையில் நியாயமான முறையில் யோசனை செய்து பார்க்கும்போது ஒரு கட்சி நிதி திரட்டித்தான் ஆகவேண்டும். அதேபோலத்தான் அதிகாரத்தில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சியும் நிதி திரட்டி தேர்தலில் ஈடுபடவேண்டியிருக்கிறது. சுதந்திரா கட்சி ஒரு கோடி ரூபாய் நிதி திரட்டவேண்டும் என்று சொல்லும் போது காங்கிரஸ் கட்சியும் நிதி திரட்டித்தான் தீரவேண்டும். அதுவும் சுதந்திரா கட்சி பல பேரோடு கூட்டு சேர்ந்து ஒரு சில இடங்களில் போட்டிபோட வேண்டுமென்று சொல்லும்போது, அதற்கே ஒரு கோடி ரூபாய் வேண்டுமென்று சொல்லும்போது எல்லா இடங்களிலும், எல்லாப் பகுதிகளிலும் போட்டியிடக்கூடிய பொறுப்பு இருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு எந்த அளவு வேண்டும் என்றும் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: இதற்கு யார் பதில் சொல்வது?) இன்னும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருக்கு, சுதந்திரா கட்சி என்ற பெயரையும், ரூபத்தையும் இங்கே கொள்ளா



விட்டாலும் வேறு பெயரில் இங்கே மறைந்து உட்கார்ந்திருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை என்றால், அவருடைய அரசியல் ஞானத்தைப்பற்றி . . . (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: அங்கு இருப்பது கவர்னர்-ஜெனரல்) இப்போது நான் மந்திரியாக இருக்கிறேன் என்றால் எனக்குக் கொடுக்கக்கூடிய மதிப்பு சுப்பிரமணியத்திற்காக கொடுக்கக்கூடிய மதிப்பு அல்ல—மந்திரி என்ற ஸ்தானத்திற்குக் கொடுக்கக்கூடிய மதிப்பு. அதே போல எம்.எல்.ஏ. என்றாலும் மக்கள் பிரதிநிதி என்ற முறையில் அவர்களுக்கு மதிப்பு கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இங்கே இருப்பது கவர்னர்-ஜெனரல் பிரதிநிதியாக—நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. இவ்வாறு காங்கிரஸ் கட்சி நிதி திரட்டலாம் என்று சொல்லும்போது இன்றைக்கு யோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது, மந்திரிகளுக்கு விலக்கு இருக்கத்தான் வேண்டுமா? மந்திரிகளுக்கு விலக்கு இருக்கவேண்டுமா என்பதை சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். அப்படி விலக்கு இருந்தாலும் கட்சிக்காரர்கள் நிதி திரட்டுவார்கள் என்றால், மந்திரிகளாக இருப்பவர்கள், கட்சியில் இருப்பவர்கள் மக்களிடத்தில் போக வேண்டாமா என்ன? இன்னொரு விஷயம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். ஒரு தடவை ஒரு கட்சி அதிகாரத்தில் இருந்துவிட்டால் மறுமுறை அந்தக் கட்சி அதிகாரத்திற்கு வரக்கூடாது, மற்றவர்களுக்கு சான்ஸ் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அது வேறு விஷயம்.

ஆனால் அது ஜனநாயகம் கூட அல்ல. என்னவென்று சொன்னால், கட்டாயமாக சிலரை மட்டும் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்தத் தேர்தலை நடத்துவது என்ற நிலையை ஏற்படுத்துவது ஜனநாயகத்திற்கு பொருத்தமாகாது. ஆகவே இன்றைக்கு மந்திரிகள் அவர்களுடைய நீதிப் பொறுப்பிலிருந்தோ அல்லது அதிகார வரம்பிலிருந்தோ தவற மாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி நீதி தவறி நடப்பார்கள் என்று நினைப்பதுகூட தவறு. ஒரு மந்திரி ஒரு இடத்திற்குச் சென்று விருந்து சாப்பிட்டாலோ அல்லது டீ பார்ட்டியில் கலந்து கொண்டாலோ அல்லது யாரையாவது கூப்பிட்டு பேசிவிட்டாலோ அவர்களுக்குச் சாதகமாக மந்திரிகள் இருந்து விடுவார்கள் என்று நினைப்பது தவறு. பலர் இவ்வாறு நினைக்கிறார்கள், அப்படி நினைக்காவிட்டாலும்கூட சிலர் பிரசாரம் செய்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு, மனித சுபாவத்திலே சிறிது நம்பிக்கை வைக்க வேண்டுமென்று நான் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பொறுப்பேற்றுள்ள நாங்கள், எங்களுடைய பொறுப்புக்களையெல்லாம் உணராமல், இப்படி தயவு தாட்சண்யத்திற்காக சலுகையான காரியங்கள் செய்துவிடுவோம் என்று நினைக்காமல் இருப்பது நல்லது என்று கூற விரும்புகிறேன்.

அதேமாதிரி தேர்தல் நிதிக்காக வசூல் செய்யப்படும் தொகைக்கும் ஒரு திட்டத்தை நாம் வகுத்திருக்கிறோம். ஏதோ ஒளிவு மறைவாகச் செய்யக்கூடிய காரியமல்ல இது. சட்டத்திலே

கூட தனியாக இருக்கக்கூடிய பணத்திலே இப்படி தொகை கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டு, அதன்படிதான் கொடுக்கப் பட்டு வருகிறது. இன்றைக்கு நேரடியாக இதற்கு இவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற முறையிலே கணக்கு வைத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னர் இந்த இந்த கட்சி களுக்கு இவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரியும். அதை அவசியமென்று கருதினல் பரிசீலனை செய்து பார்க்கலாம். இந்த ஸ்தாபனத்திலிருந்து ஒரு லட்சம் கொடுத் திருக்கிறார்கள், 50 ஆயிரம் கொடுத்திருக்கிறார்கள் என்று எப்போது வேணடுமானலும் கணக்கு வைத்துக்கொண்டு பார்க்கலாம். இதே நிலைதான் எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்படுகிறது. ஆகவே இன்றைக்கு நிதி திரட்டுவது என்பது ஒரு கட்சி மட்டும் செய்யக் கூடிய காரியமல்ல.? என்னுடைய சக மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலர் அவர்கள் தெரியக்கூடிய முறையிலேதான் இந்தக் காரியததைச் செய்தார்கள். இன்றைக்கு நேரிலே மந்திரிகளுக்கு முன், பயந்துகொண்டு அல்லது வேறு யாருக்காவது பயந்துகொண்டு இன்றைக்கு நிதி கொடுத்து விடுவார்கள் என்ற நிலைமை இல்லை என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்களைவிட அதிகாரத்திலுள்ளவர் களுக்குத்தான் இதிலே பல கஷ்டங்கள், உபத்திரவங்கள் இருக் கின்றன என்பதை அவர்கள் உணரவேண்டும். அதிகாரத்தி லுள்ளவர்கள் போடும் உத்திரவுகள் யாவும் எல்லோருக்கும் எப்போதும் சாதகமாக இருக்காது. சிலருக்கு சாதகமாக இருக்கும். அதுவே சிலருக்கு பாதகமாகவும் இருக்கும். ஆகவே இந்த அடிப்படையிலும் மக்கள் ஆளும் கட்சியினருக்கு தேர்தல் நிதி கொடுத்து விடுவார்கள் என்று சொல்வதற்கில்லை.

இன்றைக்கு நாங்கள் 10 வருஷம், அதாவது சுதந்திரம் வந்ததிலே இருந்து இந்த அரசாங்கத்தை நடத்தி வந்திருப்பதைப் பற்றி ஸ்ரீ அண்ணதுரை அவர்கள் எடுத்துச் சொன்னர்கள். இந்த 10 வருஷ காலத்தில் உள்ள என் அனுபவத்தை வைத்துக்கொண்டு, மற்ற எதிர்க் கட்சிகளின் அனுபவத்தை வைத்துக்கொண்டு, இந்தக் கட்சி பொறுப்பிலே இருந்தால், பதவியிலே இருந்தால், முன்னேற்றம் ஏற்படுமா இல்லையா என்பதைப் பற்றி அவர்கள் மதிப்பிட்டு, அந்த மதிப்பின் அடிப்படையில், இந்தக் கட்சிக்கும் மற்ற கட்சிகளுக்கும் தேர்தலுக்கு என்னென்ன செய்யவேண்டு மென்று மக்கள் முன் வருகிறார்கள். ஆகவே இதைக்கொண்டே இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். அப்படிப்பட்ட தெளிவான கருத்தில் தேர்தல் நிதி திரட்டுவதை எல்லோருக்கும் தெரியக்கூடிய முறையிலே செய்வது தவறு ஆகாது. ஆனல் இந்த நிதி திரட்டுவதில் எங்காவது தவறான முறையை கடைப்பிடித் தால் அதைக் கண்டிப்பதற்கு எதிர் கட்சியினர் கடமைப்பட் டிருக்கிறார்கள். நேரடியாக மந்திரிகள் சென்று நிதி வசூல் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டாலும்கூட, தவறு ஒன்றுமில்லை. இதைப் பற்றி நீங்கள் யோசித்துப் பார்த்து, உங்களுடைய



கருத்தைச் சொல்வீர்களானல், அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தால், அதை இந்தச் சர்க்காரும், காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக் கொள்ளும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த விதமான விருப்பு வெறுப்பும் இதில் கிடையாது. பயந்துகொண்டு நிதி கொடுக்கிறார்கள் என்று கூறுவதோ அல்லது தயவு தாட்சண்யத்திற்காக நிதி கொடுக்கிறார்கள் என்று கூறுவதோ சரியாகாது. அந்த நிலை எங்களுக்கு லாபத்தை உண்டாக்காது என்பதும் எதிர் கட்சிகளுக்குத் தெரியுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போதும், ஸ்ரீ சண்முகம் அவர்கள் பேசும்போதும் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். தேர்தல் நிதி திரட்டுவதற்கு அதிகாரிகள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்றும், தேர்தலில் வெற்றி பெறுவதற்கு போலீஸ் உதவிகொண்டு, அவர்கள் பயத் தினல் தேர்தலில் வெற்றி பெறுகிறார்கள் என்ற கருத்தினை வெளி யிட்டார்கள். முன்னல் ஏற்பட்ட தேர்தல் அனுபவங்களை வைத்துக்கொண்டு சொல்லியிருந்தாலும் சொல்லியிருப்பார்கள். இன்றைக்கு அதிகாரிகளை உபயோகிப்பதாலும், போலீசாரை உபயோகிப்பதாலும் மக்களுடைய மனத்தை திருப்பிவிட முடியுமென்று நினைப்பது தவறு. அப்படி யாராவது நினைப் பார்களேயானல் அவர்கள் மந்திரிப் பதவிக்கே லாயக்கில்லை. இன்றைக்கு இதுமாதிரி அதிகாரிகளும், போலீசாரும் இருப்ப தால் மக்களுடைய மனது பெரிதும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு, செல்வாக்கு குறைந்து விடுவதற்கே சந்தர்ப்பம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஏமாற்றுவதற்கு வேண்டுமானல், இன்னும் அதிக மாகத் தூண்டும் வகையிலே இந்த யோசனையை இவர்கள் சொல்லி இருக்கக்கூடும் என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது (சிரிப்பு). இதனல் கஷ்டம்தான் ஏற்படும் என்பது எனக்குத் தெரியும். மக்களைப் பொறுத்தவரையில் அதிகாரிகள் மூலமோ அல்லது போலீசார் மூலமோ எந்த விதத்திலும் ஆதரவைத் திரட்ட முடியாது. அதனல் தேர்தலிலும் ஜெயித்துவிட முடியாது. அந்த அடிப்படையிலே இந்தக் கருத்தை அவர்கள் தெரிவித்திருப்பார் களாயின், அது தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனல் சில முக்கியமான விஷயங்களுக்கு அமைச்சர்களுடன் அதிகாரிகள் வரவேண்டியிருக்கிறது. என்னிடத்திலேகூட ஒரு செகியூரிடி ஆபீசர் இருக்கிறார். இருக்கக்கூடிய சில விதிகளை அனுசரித்து சில அதிகாரிகள் வரவேண்டியிருக்கிறது. இதையும் கூட தேர்தல் நெருங்க நெருங்க, தேர்தலுக்கு எட்டு அல்லது ஆறு மாதங்கள் இருக்கும்போது யாரைக்கூட அழைத்துக்கொண்டு போவது என்பதற்குக் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. அதனைப்பற்றி நானும் யோசனை செய்துகொண்டு வருகிறேன். பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதிலே எந்தெந்த அதிகாரி களை கொண்டுபோகலாம் என்பது பரிசீலனை செய்யப்பட்டு, அந்த

[Sri C. Subramaniam] [8th March 1961

அடிப்படையிலே எடுத்துக்கொண்டு போவதற்கு முடிவு செய்யப்படும். அந்த அடிப்படையிலே தேர்தல் நெருங்க நெருங்க அவரவர்களுக்குத் தகுந்த அளவிலே சாதக பாதகங்களை ஆராய்ந்து, எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று முடிவு செய்வதிலே எவ்வித ஆட்சேபணையும் இருக்க முடியாது. ஆகவே யாரும் அதிகாரிகளாலும், போலீசாராலும் ஓட் கிடைத்து விடுமென்று நினைக்க வேண்டாம். அப்படி அவர்களை வைத்துக்கொண்டு, ஓட் பெற்று எப்போதும் தொடர்ந்து பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கவும் யாரும் இங்கு விரும்பவில்லை. மக்களுக்கு நல்ல காரியம் செயவதற்காகவே இருக்கிறோம். அவர்கள் விரும்பவில்லை என்று சொன்னால், இன்றைக்கே இப்பதவிகளிலிருந்து நாங்கள் விலகத் தயார். அந்த அடிப்படையிலேதான் இந்த காங்கிரஸ் மந்திரி சபை இயங்கி வருகிறது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதற்குமேல் நாங்கள் ஏதாவது தவறுகள் செய்திருந்தால், அதை எடுத்துச் சொன்னால் அதை ஒப்புக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறோம்.

இதிலே முக்கியமாக தேர்தல் வருகின்றபோது, இன்றைக்கு இந்த நிதி நிலை அறிக்கையானது தேர்தல் பிரசாரமாக இன்று சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்றது என்று பல கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் சொன்னார்கள். அவ்வாறு அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். அதிலிருந்து மக்களைக் கவரக்கூடிய திட்டங்கள் அதிலே நிறைய இருப்பதினாலே, அதைத் தேர்தல் அறிக்கை என்று சொல்லப்பட்டது என்பது தெரிகிறது. அப்படிச் சொல்வதை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அதிலே அப்படி ஒன்றும் தவறான புள்ளிவிவரங்கள் கொடுக்கப்படவில்லை. அப்படிக் கொடுத்திருந்தால் சும்மா விட்டிருப்பார்களா? பிச்சி விடுவார்களே. உண்மையான விஷயங்கள் அதிலே சொல்லப்பட்டிருப்பதால், அதைத் தேர்தல் பிரசாரம் என்று சொல்கிறார்கள். அந்த அளவு அதற்கு மதிப்பு கொடுக்கப்படுகிறது என்பதைத் தான் என்னால் உணர முடிகிறது. நேரடியாக இந்த நிதி நிலை அறிக்கையை நல்ல அறிக்கை என்று ஒப்புக்கொள்வதற்கு முடியாவிட்டாலும், மறைமுகமாக இதைத் தேர்தல் பிரசார அறிக்கை என்று சொல்வதின்மூலம் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்று எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே தான் இன்றைக்கு இந்த அறிக்கையை நாங்கள் இப்படி எழுதி சமர்ப்பித்தவுடன் தேர்தல் அறிக்கை என்று பேசக்கூடிய அளவுக்கு இந்தச் சபையில் எல்லோராலும் பேசப்படுகிறது. தேர்தலை வைத்துச்கொண்டு சமர்ப்பித்திருக்கிற அறிக்கை அல்ல இது. சென்ற 10 ஆண்டுகளாக ஏற்பட்ட அனுபவம் என்ன, அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடர்ந்து எதிர்காலத்திலே எந்த முறையிலே எந்தத் திக்கை நோக்கி நாம் செல்லவேண்டும் என்கின்ற கருத்தை தெளிவாக்கவேண்டும் என்ற முறையிலே தான் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது எந்த



8th March 1961] [Sri C. Subramaniam]

அளவிற்கு எங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறது என்பது வேறு சமாசாரம். இம்மாதிரி ஒரு அறிக்கையை இந்தச் சபையின் முன் வைத்திருக்கக்கூடிய முக்கியமான நோக்கம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற மாறுதலைத் தொடர்ந்து எந்த முறையில் பணியாற்றவேண்டும் என்று குறிப்பிடவேண்டுமென்பது தான். இந்த சந்தர்ப்பத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் கூறிய ஒரு கருத்தையும் விளக்கவேண்டியதாக இருக்கிறது.

அவர்கள் சொன்னார்கள், சாதித்ததையெல்லாம் போட்டுவிட்டார்களே, சாதிக்காதது எவ்வளவு இருக்கிறது என்று கேட்டார்கள். உண்மையிலேயே அதை நாங்கள் பூரணமாக, தெளிவாக உணர்ந்திருக்கிறோம். நாங்கள் சாதித்திருப்பது கைமண் அளவு, சாதிக்க வேண்டியது மலை அளவு என்பது எங்களுக்குத் தெரிந்திருக்கிறது. நானும் இதை ஒப்புக்கொண்டு தான் வந்திருக்கிறேன். எந்தக் காரணத்தினால் நமக்கு இந்தத் தாழ்வு ஏற்பட்டது, இந்தக் குறைகள் ஏற்பட்டன, அவைகளை எப்படி அகற்ற முடியும் என்பதுபற்றி யோசித்துக்கொண்டுதான் இருக்கிறோம். சாதிக்கவேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது. ஆனால், இருக்கிற சூழ்நிலையிலே, இருக்கிற பொருளாதார அடிப்படையிலே, இருக்கக்கூடிய மக்கள் எண்ணிக்கையிலே, இருக்கக்கூடிய மற்ற வசதிகளின் அடிப்படையிலே, நாட்டிலே ஏற்பட்டிருக்கக் கூடிய தொழில் நுட்ப அறிவு, விஞ்ஞான அறிவு இவைகளையெல்லாம் அடிப்படையாக வைத்துக்கொண்டு, இதற்கு மேல் நாம் எந்த அளவிற்கு முன்னேற முடியும் என்கிற கருத்தை சொல்லியிருப்பார்களேயானால், நான் அதை மிகவும் வரவேற்றிருப்பேன். அதற்குப் பதிலாக, இன்னும் சாதிக்க வேண்டியது எவ்வளவு இருக்கிறது என்று கேட்கிறார்கள். சாதிக்கவேண்டியது நிறைய இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். நம்முடைய சராசரி வருமானம் இன்றைக்கு ரூ. 250, 300 என்ற அளவில் தான் இருந்துகொண்டிருக்கிறது, நாம் இத்தனை முயற்சிகளையும் எடுத்துக்கொண்ட பிற்பாடு. மற்ற நாடுகளிலுள்ள சராசரி வருமானத்தைப் பார்க்கும்பொழுது நம்மைவிட 20 பங்கு, 30 பங்கு என்று சொல்லக்கூடிய முறையில் சராசரி வருமானம் உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அந்த நிலைமையை நாம் அடைவதற்கு இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது. வெளிநாடுகளில் ஏற்பட்டிருந்த முன்னேற்றத்தை முன்பு ஒருவாறு யூகித்து அறிவோம். ஆனால் இப்பொழுது வெளி நாடுகளுக்கு சென்று வந்த பிற்பாடு நாம் சாதிக்கவேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்பதை நேரடியாகப் பார்த்துத் தெரிந்துகொண்டிருக்கிறேன். எல்லாவற்றையும் சாதித்து விட்டோம் என்ற நினைவில் இந்த அறிக்கையை சமர்ப்பித்திருப்பதாகச் சொன்னால், அது தவறான கருத்து என்று தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டிலே முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்று சொன்னால், பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்று சொன்

[Sri C. Subramaniam] [8th March 1961

னால், அது மக்களுடைய சக்தியைப் பொறுத்துத்தான் இருக்
கிறது. மக்கள் எந்த அளவிற்கு முன்னேறக்கூடிய வகையிலே
நாம் திட்டங்களை வகுத்துக்கொடுத்தாலும், அவர்கள் எந்த அள
விலே தன்னம்பிக்கையோடு பணியாற்ற முன்வருகிறார்கள்
என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது உண்மையான முன்
னேற்றம். ஆகையால் மக்களிடையே சக்தி வளரவேண்டும்,
மக்களுடைய மனதிலே தன்னம்பிக்கை ஏற்படவேண்டும் என்று
சொன்னால், 10 ஆண்டுகளாக மக்கள் ஒத்துழைத்து பணியாற்றிய
காரணத்தினால் திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன என்பதை
எடுத்துச் சொல்லவேண்டும். ஒன்றுமே முன்னேற்றம் ஏற்பட
வில்லை இவ்வளவு திட்டங்கள் நிறைவேறியும் என்று சொன்னால்,
மக்களுடைய சக்தியும், ஒத்துழைப்பும், தன்னம்பிக்கையும் வளர்வ
தற்குப் பதிலாக, ஒன்றுமே பலன் இல்லாத காரியங்கள்
போலிருக்கின்றனவே என்ற நிலையிலே, நடக்கின்ற காரியங்
கள்கூட இனி நடக்காத நிலைமைதான் ஏற்படும். எதிர்க்
கட்சிக்காரர்கள் தங்களுடைய கட்சிக்கு ஆதரவு தேடு
வதற்காக ஒன்றுமே முன்னேற்றம் ஏற்படவில்லை என்று
சொல்லுவார்களேயானால், மக்களுடைய தன்நம்பிக்கை குறைந்து,
சக்தி குறைந்து, இன்னும் பல திட்டங்களை நிறைவேற்று
வதற்கு சாதகமாக சூழ்நிலை ஏற்படாமல், பிற்போக்கான
நிலைமை வளர்வதற்குத்தான் இது உதவியாக இருக்கும்
என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பிரிவினை
அடிப்படையில், அதிகாரத்தில் உள்ள கட்சியின் பேரில் மக்க
ளிடையே அதிருப்தியை வளர்ப்பதற்காக, வெறுப்பை வளர்ப்ப
தற்காக, கோபத்தை உண்டுபண்ணுவதற்காக ஒன்றுமே முன்
னேற்றமான காரியம் நடைபெறவில்லை என்ற அடிப்படையிலே
செய்யும் தவறான பிரசாரமாக இருக்கும் அது, தவறான கருத்தாகத்
தான் இருக்க முடியும் அது. அம்மாதிரி தவறான பிரசாரம்
நம் நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றத்தை தடுக்கக்
கூடியதாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். ஆகையால் இன்றைக்கு சில புள்ளிவிவரங்களை எடுத்துச்
சொல்லி, நாம் எதிர்ப்பார்த்த அளவிற்கு மட்டுமல்ல, சில இடங்
களில் எதிர்பார்த்த அளவிற்கு மேலாக நாம் முன்னேறியிருக்
கிறோம் என்ற கருத்தைச் சொன்னால், விவசாய உற்பத்தி பெருகி
யிருக்கிறது என்று சொன்னால் எனது சகா பக்தவத்சலம் அவர்கள்
உழுது விவசாயம் வளர்ந்ததாக யாரும் சொல்ல முடியாது.
அதற்கு வேண்டிய நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த நாங்கள் முயற்சி
செய்யலாம். கடைசியில் குடியானவர்கள் நல்ல முறையில்
ஒத்துழைத்து பயிர் செய்தால் தான், நெல் விளைச்சல் அதிகமானால்
தான், விவசாய வளர்ச்சி ஏற்படும். அதற்கு வேண்டிய வசதி
களைத் தான் சர்க்கார் செய்துகொடுக்கலாம். கடைசியில் பரீட்
சையில் தேறுவது மாணவனைப் பொறுத்துத் தான் இருக்கிறது.
விவசாய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய வசதிகளை
சர்க்கார் ஏற்படுத்திக் கொடுக்கலாம். ஆனால் எந்த அளவிற்கு
மக்கள் அந்த வசதிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு



8th March 1961] [Sri C. Subramaniam]

ஒத்துழைக்க முன்வருகிறார்களோ அந்த அடிப்படையில் தான் விவசாய உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்படக்கூடும். அதிலும் கூட எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி காணவில்லை என்று குறிப்பிட்டார்கள். நாங்களே எடுத்துச் சொல்லியிருக்கிறோம் புள்ளி விவரங்களைக் கொடுத்து. இந்த அளவுக்கு குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச்சொல்லி, குறைவாக இருப்பதையும் எடுத்துக்காட்டி, என்ன காரணங்களினால் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் கூறி, அந்தக் குறைகளை நீக்குவதற்கு மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதை நாம் ஆராய்வதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே இதை பரிசீலனை செய்து பார்த்தால், நாம் இரண்டாவது திட்ட காலத்தில் 12 லட்சம் டன் அளவிற்கு அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருந்தோம். திட்டத்தின் அடிப்படையிலே தான் அவ்வாறு கணக்கிட்டிருந்தோம். இல்லாவிட்டால் அது வெறும் ஆசையாகத் தான் இருக்கலாம், அல்லது எண்ணமாக இருக்கலாம். திட்டமாக இருக்க முடியாது.

(Deputy Speaker in the Chair.)

புதிய நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் இத்தனை லட்சம் டன் அதிக உணவு உற்பத்தி செய்யலாம், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் வசதியைப் பெருக்கி இத்தனை லட்சம் டன் உற்பத்தி செய்யலாம், நல்ல பொறுக்கு விதைகளை வழங்குவதன் மூலம் இத்தனை லட்சம் டன் உற்பத்தி செய்யலாம், கம்போஸ்டு உரங்களை உபயோகப்படுத்தினால் இத்தனை லட்சம் டன் உற்பத்தி செய்யலாம், ரசாயன உரங்களை உபயோகப்படுத்துவதன் மூலம் இந்த அளவிற்கு அதிக உற்பத்தி செய்யலாம் என்ற முறையில் திட்டங்கள் போட்டு, ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவேற்றுவதன் மூலம் தான் 12 லட்சம் டன்கள் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென திட்டம் போட்டிருந்தோம். அப்படிச் செய்யும்பொழுது, குறைவு ஏற்பட்டால், எதில் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொண்டால், ஏதாவது காலதாமதம் ஆகியிருக்கிறதா என்று பார்த்தால், நாம் எடுத்துக்கொண்ட நீர்ப்பாசன திட்டங்கள் அனைத்தும் குறித்த காலத்திற்கு முன்பே முடிக்கப்பட்டிருப்பதுமல்லாமல், எதிர்பார்த்த அளவை விட குறைந்த செலவிலும் முடிக்கப்பட்டிருக்கிறது. மற்ற ராஜ்யங்களில் அணைகள் கட்டியும் நீர் போய் சேரவில்லை என்ற நிலைமையைப் பார்க்கிறோம். ஆனால், இங்கே அணை கட்டுகிற காலத்திலேயே வாய்க்கால்களை வெட்டி, பெரிய வாய்க்கால்கள் மட்டுமல்ல, சிறிய வாய்க்கால்களையும் வெட்டி, வயல்களிலுள்ள வாய்க்கால்களையும் வெட்டி, அணை கட்டிமுடிகின்ற காலத்திலேயே வயல்களுக்கு உடனடியாக தண்ணீர் உபயோகப்படுத்தப்

படவேண்டும் என்ற முறையில் தான் இந்த நீர்ப்பாசனத் திட்டங்
கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதைவிட இன்னொரு படி
11-30 a.m. அதிகமாகக் கூட சென்றிருக்கிறோம். பாதி அணை கட்டி முடிந்த
வுடனேயே எந்த அளவிற்கு தண்ணீர் தேக்க முடியுமோ அந்த
அளவிற்கு தேக்கி, அதை மக்கள் உடனடியாக உபயோகப்படுத்தக்
கூடிய அடிப்படையில் அணைகளைக் கட்டி உடனுக்குடன் தண்
ணீரை உபயோகப்படுத்துவதையும் பார்க்கிறோம். அந்த அடிப்
படையில் தான் பரம்பிக் குளத் திட்டம் ஐந்து ஆண்டுகள் ஆகும்
என்று கணக்குப்போட்டு, முதல் இரண்டு வருஷங்கள் முடிந்த
பிறகு ஒரு பகுதி தண்ணீர் கிடைக்கக்கூடிய முறையில் திட்டம்
போட்டிருக்கிறோம். 2 வருஷம் முடிந்த பிற்பாடு 50,000 எக்கருக்கு
தண்ணீர் உபயோகப்படுத்துவது, 3 வருஷங்களில் இன்னொரு
50,000 ஏக்கருக்கு தண்ணீர் கொடுப்பது என்ற அடிப்படையில்
வருஷா வருஷம் எந்த அளவிற்கு தண்ணீர் தேக்கி வைக்க
முடியுமோ அந்த அளவிற்கு தண்ணீர் தேக்கிவைத்து உபயோகப்
படுத்துகிறோம். இது என்ஜினியர்களது திறமையால் மட்டுமல்ல,
திட்டப்படி மக்களும் ஒத்துழைத்து தண்ணீரை உபயோகப்
படுத்துகிறார்கள் என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். ஆகையினால், அந்த திட்டத்தை எடுத்துக்
கொண்டால் குறைவு என்று சொல்ல முடியாது. அதே அளவில்,
சிறிய நீர்ப்பாசன வசதிகளை எடுத்துக்கொண்டு பார்த்தால், அதை
யும் பரிசீலனை செய்கிறோம். எதிர்பார்த்த அளவுக்கு பலன்
இருக்கிறதா என்று மூன்று மாதத்திற்கு ஒரு முறை பரிசீலனை
செய்கிறோம். குறைவு ஏற்பட்டால், அதிகமாக்கும் வழிகளையும்
கையாள்கிறோம்.

பொதுவாக எடுத்துக் கொண்டால், இன்றைக்கு குறைவு
எதில் என்று பார்க்கும் போது, இரண்டு இனங்களில் குறைவு
ஏற்பட்டிருக்கிறது. ஒன்று நல்ல விதைகள் உபயோகிக்கும் மூல
மாக உற்பத்தி பெருகவேண்டும் என்று செய்தோம். அதிலே
எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. இரண்டாவது
ரசாயன உரம். இதிலே நாலு லட்சம் டன் குறைவு ஏற்பட்டிருக்
கிறது. என்ன காரணத்தினால்? சட்ட சபையில் இருப்பவர்
களுக்குத் தெரியும், விதைப் பண்ணைகளை அவசரம் அவசரமாக
ஏற்படுத்தினோம்; பல கோளாறுகள் ஏற்பட்டன.

(Mr. Speaker in the Chair.)

இன்றைக்கு கொஞ்சம் அதை நிறுத்தி வைத்து, அதிகக்
கோளாறுகள் ஏற்படாத முறையிலே, மாற்றியமைத்து நடத்து
கிறோம். ஆகவே, திட்ட அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடிய
வில்லை. இன்னொன்று, சர்க்கார் பண்ணை விதைகளை கிராம மக்கள்
உபயோகித்து பெருக்க வேண்டும் என்ற திட்டமும் உண்டு.
அதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டன. ஆகவே, இதிலே குறைவு
ஏற்பட்டது. ரசாயன உரத்தைப் பொறுத்த வரை, போதிய
கணிசமான அளவு ரசாயன உரம் நம் நாட்டிலேயே உற்பத்தியாக



வில்லை; அன்னிய நாடுகளிலிருந்து தருவிக்க வேண்டியிருந்தது;
அன்னிய நாட்டுச் செலவாணிக் கஷ்டத்தால், போதிய அளவு ரசா
யன உரம் கொடுக்க முடியவில்லை. ஆகவே தான் இன்றைக்கு
ரசாயன உரத்திற்கு முதலிடம் கொடுத்திருக்கிறோம். பல ரசா
யன உரத் தொழிற்சாலைகள் ஏற்பட இருக்கின்றன. அதற்குக்
காரணம், வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்து வெற்றி
காண முடியாது என்பதுதான். நம் ராஜ்யத்தில் மட்டுமல்ல,
எல்லா ராஜ்யங்களிலும், மூன்றாவது திட்ட காலத்தில் ஓரளவு நம்
தேவையைப் பூர்த்தி செய்ய இன்றைக்கு ஏற்பாடு செய்யப் படு
கிறது. மூன்றாவது திட்டகாலத்திற்குள் பூராவும் நம் தேவையைப்
பூர்த்தி செய்யலாம் என்றாலும், அந்த கட்டத்தை அடையும்
போது, இன்னும் அதிகமாகத் தேவைப் படுமானால், அதற்கும்
ஏற்பாடு செய்தாக வேண்டும். ஆனால், இன்றைக்கு இப்பொழுது
தெரிந்த அளவில் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆகையினால்
விவசாயத்தில் நாம் 12 லட்சம் டன் என்று சொல்லி, 7, 8 லட்சம்
டன்தானே, அதற்குக் காரணம் என்ன என்பதையும் அறிந்து
சொல்ல வேண்டும். அதில் ஒன்றும் ரகசியமாக வைத்துக்
கொள்ளவில்லை. மக்கள் பிரதிநிதிகள், மக்கள் முன்னிலையிலே
வைத்து இவற்றைக் கூறியிருக்கிறோம். எந்த அளவுக்கு முன்
னேற்றம் என்றால், இந்த இரண்டு இடங்களில் குறைவு இருந்தா
லும் கூட, என் உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறபடி, மற்ற
ராஜ்யங்களில் ஏற்பட்டிருக்கும் உயர்வைவிட, நம் வளர்ச்சி
அதிகம் என்று இங்கே புள்ளி விவரங்கள் விரிவாக்க கொடுக்கப்
பட்டிருக்கிறது. அவைகளைப் பார்க்க வேண்டுமென்று நான்
சொன்னேன்.

முக்கியமாக விவசாய உற்பத்தியைப் பொறுத்த வரை, உற்
பத்தி மத்தியப் பிரதேசத்தில், ஆந்திராவில் அதிகம் என்று
எடுத்துச் சொன்னார்கள். ஆனால், அங்கெல்லாம் உள்ள
பரப்பளவு எவ்வளவு என்பதையும் கவனத்தில் கொண்டு, அங்கே
1½ அல்லது 2 மடங்கு என்பதைக் கருத்தில் கொண்டு பார்த்
தால் எந்த அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைப்
புரிந்து கொள்ள முடியும். ஆகவே பத்தாண்டு காலத்தில் உற்பத்தி
பெருகி யிருக்கிறது, முக்கியமாக வெற்றி கண்டிருக்கிறோம்
என்றெல்லாம் எந்த அளவுகோலை வைத்துக் கொண்டு பார்க்
கிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது. அப்படிப் பார்க்கும்
போது, நாம், எல்லா ராஜ்யங்களிலும் மூன்றாவதாக இருக்கிறோம்.
முதல் இடம் ராஜஸ்தான் வகிக்கிறது. ராஜஸ்தான் எப்படி முதல்
இடம் வகிக்கிறது என்று பார்த்தால், எப்படி 114 சதவிகிதம்
அடைந்தது என்றால், முன்னே புள்ளி விவரங்கள் கிடையாது.
விவசாயமே தெரியாமல் இருந்தது, அவ்வளவு மோசமான நிலையில்
இருந்தது. மன்னர் ராஜ்யங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்த்து,
புதிய நிர்வாகமுறை வந்ததால், அங்கே விளைச்சலே இல்லாத
நிலங்களும் விளைந்திருக்கின்றன. முன்பே விளைச்சல் உள்ள
நிலத்தை விட, முன்பு ஒன்றுமே இல்லாத நிலத்தில் கொஞ்சம்

அதிகமாக இருக்கும். அந்த முறையிலே அங்கே 114 சதவிகிதம்
அதிகம் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாபை எடுத்துக் கொண்டால்,
அங்கு அதிக உற்பத்திக்குக் காரணம், அங்கே பெரும் நதிகள்
பாயும் காரணம். அது ஐந்து நதிகள் கொண்ட பிராந்தியம்.
அங்கே 54 சதவிகிதம் உயர முடிந்தது. அவை அசாதாரணமான
நிலங்கள். சாதாரணமான நம் ராஜ்யத்தில் முயற்சியின் காரண
மாக 44.7 சதவிகிதம் உயர்வைக் கண்டிருக்கிறோம். அதற்கான
புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே தமிழ் நாட்
டில் சாதாரணப் பிராந்தியங்களை கணக்கெடுத்துப் பார்த்தால்,
நாம் முதலில் இருக்கிறோம்.

விவசாயத்தில் மட்டும் உற்பத்தி என்றால் போதாது.
வருவாயைக் கொண்டு பார்த்தால், தலை ஒன்றுக்கு 93 ரூபாய்
வருகிறது. ஆந்திராவில் 114 வருகிறது என்றால்—அதற்கு என்ன
காரணம், நாம் என்ன சாதித்து விட்டோம் என்றால்—நிலப்
பரப்பை வைத்துக் கொண்டு பார்க்க வேண்டும். இங்கே 56
லட்சம் சதுரமைல்; 3 கோடிக்குப் பக்கம் மக்கள் தொகை.
ஆந்திராவில் 126 லட்சம் சதுர மைல்; மக்கள் தொகை நம்மைவிட
10 லட்சம்தான் அதிகம். ஆகவே, 93 ரூபாய் என்று சொல்லும்
போது, அவர்களுடைய இரண்டு ஏக்கருக்கு நம்முடைய ஒரு
ஏக்கரைக் கணக்கெடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்த்
தால், நம்முடைய வருமானம் இரட்டிப்பு என்றாகிறது. அதை
அடிப்படையாக வைத்துக்கொண்டு கணிசமான முன்னேற்றம்
கண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறோம். ஸ்ரீ கல்யாணசுந்தரம்
ஒப்புக் கொண்டார்கள்; திராவிட முன்னேற்றத் தலைவரும் ஒப்புக்
கொண்டார்கள்.

**SRI C. N. ANNADURAI:** நம்முடைய மாகாணத்திற்கும்
மற்ற மாகாணத்திற்கும் இடையே விவசாய வளர்ச்சியில் ஏன்
குறைவு இருக்கிறது என்று கேட்கவில்லை; மொத்தத்தில் பொருளா
தார வளர்ச்சி குறைந்திருக்கிறதே, அதற்குக் காரணங்கள் கொடுக்க
வேண்டும் என்று கேட்டேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM:** அவர்கள் சொன்ன
கருத்தை முழுக்க, முழுக்க ஒப்புக் கொள்ளுகிறேன். எல்லா
வழியிலும் முன்னேற்றம் கண்டுவிட்டோம், நிதி அமைச்சருக்கு
வேலையில்லை, தொழில் அமைச்சர் வெங்கட்டராமனுக்கு வேலை
யில்லை, விவசாய அமைச்சர் பக்தவத்சலத்திற்கு வேலையில்லை
என்று சொல்லவில்லை. சில முயற்சிகள் வெற்றி பெற்றிருக்
கிறது. தொடர்ந்து அதே முறையில் முயற்சிகள் செய்தால்,
பெரிய அளவில் வெற்றி காண முடியும், நாம் போகும் பாதை சரி
யான பாதை என்பதைத்தான் சொல்லி யிருக்கிறேன். தயவு
செய்து அதைப் படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு
கிறேன். நாம் உச்சத்தை அடைந்து விட்டோம், அமெரிக்காவைப்
போல், மேலே போயாகி விட்டது, முயற்சி ஒன்றும் வேண்டிய
தில்லை என்று சொல்ல வரவில்லை.





தொழில் துறையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்
திருக்கிறோம் என்பதற்கும் புள்ளி விவரங்கள் கொடுக்கப் பட்டிருக்
கிறது. அதையும் பார்த்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.
இதிலே கணக்குப் பார்த்தால், முக்கியமாகப் பெரிய தொழில்களை
விட்டுவிட்டு—50 லட்சத்திற்கு மேலே பெரிய தொழில்கள், அதற்
குக்கீழே மீடியம் தொழில்கள், 5 லட்சத்திற்குக் கீழே ஸ்மால்
ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் என்று வைத்திருக்கிறோம். ஸ்மால் எண்டர்
ப்ரைஸஸ் என்கிற மீடியம், ஸ்மால்ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்
இரண்டையும் சேர்த்துப் பார்த்தால், அப்படிக் கணக்குப் பார்க்
கும்போது, நம் மாகாணம் மொத்தத்தில் மூன்றாவது இடம் வகிக்
கிறது. முதலாவதாக இருக்கிறது பாம்பே—பாம்பே மொத்தம்,
மகாராஷ்ட்ரா மட்டுமல்ல, இது 1958-59-ம் வருஷக் கணக்கு—அது
163 கோடி; அடுத்தது உத்தர பிரதேசம்; அது 131 கோடி; நம்
ராஜ்யம் 103 கோடி; மூன்றாவது இடம். அதைப் பார்க்கும்போது
பம்பாயில் 163 என்று இருக்கிறது. மேலும் பம்பாயில் இருக்கக்
கூடிய மக்கள் தொகையைப் பார்க்கும்போது அங்கே ஆறு கோடி,
5½ கோடி. உத்தரப் பிரதேசத்தில் 6½ கோடி மக்கள் இருக்
கிறார்கள். மற்ற தொழிலில் கணக்கை எடுத்துக்கொண்டால்
இங்கே மூன்று கோடிக்குக் கொஞ்சம் மேலாக இருக்கிறது.
அதாவது 163, 131, 103 என்ற அளவில் இருக்கிறது என்பதைப்
பார்க்கிறோம். ஆகவே இந்த பத்து ஆண்டு காலத்தில் இங்கே
கணிசமான அளவில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதே
மாதிரி இன்றைக்கு தலை ஒன்றுக்கு எவ்வளவு அதிகமாக வருவாய்
உயர்ந்திருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டியதாக இருக்
கிறது. இந்த பத்து ஆண்டு காலத்தில் மற்ற ராஜ்யங்களுடன்
கணக்கிட்டுப் பார்த்தால் நாம் எவ்வளவோ முன்னேற்றமடைந்
திருப்பதைக் காணலாம். பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்த
மற்ற ராஜ்யங்களின் நிலையையும் இந்த ராஜ்யத்தின் நிலையையும்
எடுத்துக் கணக்கிட்டுப் பார்த்தால் நாம் எவ்வளவோ வேகத்துடன்
முன்னேறி இருக்கிறோம் என்பது நன்றாகத் தெரிய வரும்.
மற்றவர்கள் நம்மைப்போல் அவ்வளவு வேகமாக முன்னேற்ற
மடையவில்லை என்பதைப் பார்க்கலாம். அதற்கு வேண்டிய
புள்ளி விவரங்களையும் எங்களால் கொடுக்க முடியும். ஒரு தலை
ஒன்றுக்கு நம் ராஜ்யத்தில் வருவாய் தகுந்த அளவில் உயர்ந்திருக்
கிறது. நம்முடைய வளர்ச்சி, மற்ற இடங்களோடு
ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் நாலாவதில் இருக்கிறோம்.
முதலில் இருப்பது ராஜஸ்தான், அதற்குக் காரணம்
அங்கே விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.
அதற்கு அடுத்தபடியாக பஞ்சாப், அதே மாதிரிதான் அங்கும்
விவசாயத்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அது
47.6-ல் இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக மத்திய பிரதேசம்,
அது 40.1. அங்கே புதிய புதிய தொழில்களை ஆரம்பித்திருக்
கிறார்கள். அதனால் பல பகுதிகள் அங்கே முன்னுக்கு வந்திருக்
கின்றன. அதற்கு அடுத்தபடியாக நாம் வருகிறோம்.
அதாவது 38.3 அந்த அளவில் இன்றைக்கு நம் ராஜ்யத்தில் இரு

தலைக்கு வருவாய் உயர்ந்திருக்கிறது. நம்மிடையே ஜன நெருக்கடி
அதிகமாக இருந்தாலும் கூட தலை ஒன்றுக்கு வருவாய் அதிகப்
படியாகிக்கொண்டுதான் வந்திருக்கிறது. அந்த அளவில் நம்
ராஜ்யம் முன்னேற்றமடைந்திருக்கிறது என்று சொல்லலாம்.
இன்று நம்முடைய ஜன நெருக்கடி அதிகமாக இருந்தாலும்
கூட இன்றைக்கு தலைக்கு வரக்கூடிய வருவாய் மற்ற
இடங்களில் வந்திருக்கக்கூடியதைவிட வெகு வேகமாய் ஏறிக்
கொண்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். அது
போதுமா போதாதா என்று கேட்கலாம். அது போதாது
என்றுதான் சொல்லலாம். அந்த முறையில் பேசும்போது திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒரு அங்கத்தினர் சொல்லு
கிறார், நிதி அமைச்சர் குழப்பம் அடைந்திருக்கிறார் என்று. அப்படி
எனக்கு குழப்பம் ஏற்பட்டிருந்தால் அதை நாட்டின் முன்னேற்
றத்தை அனுசரித்து மாற்றிக்கொள்ள தயாராக இருக்கிறேன்.
ஒருவர் சொல்லுகிறார் நான் சொல்லி இருப்பது ஒன்றுக்கு ஒன்று
முரணாக இருக்கிறது என்றும், அதற்கு தன்னால் மருந்து கொடுக்க
முடியாவிட்டாலும் திராவிட முன்னேற்றக் கட்சி தலைவர் அதற்குத்
தகுந்த மருந்து கொடுப்பார் என்றும் குறிப்பிட்டார். ஆனால்
திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவர் இதுவரையிலும் அதற்கு
மருந்து கொடுக்கவில்லை. அவர் மருந்து கொடுப்பார் என்று இது
வரையிலும் எதிர்பார்த்தேன். ஆனால் அவர் இதுவரையிலும் எந்த
விதமான மருந்தும் கொடுக்கவில்லை. நான் சொல்லுகிறேன்,
பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கக்கூடியது
விவசாயம் என்று சொல்லி இருக்கிறேன். இன்னொரு பக்கத்தில்
சொல்லியிருக்கிறேன், இப்பொழுது நாட்டில் இருக்கக்கூடிய
பெரும்பகுதி மக்கள் அதாவது 70 அல்லது 75 சதவித மக்கள்
விவசாயத்தை நம்பி இருக்கிறார்கள். அப்பேற்பட்ட நிலைமையில்
அவர்கள் வறுமையால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய
வறுமையைப் போக்க வேண்டுமானால் தொழில் வளம் பெருகினால்
தான் அவர்களுடைய வறுமை போகும். அந்த வகையில்தான்
நான் முரணைச் சொல்லி இருக்கிறேன். அவர்களுடைய
வருமானத்தைப் பெருக்கி அவர்களுடைய வறுமையைப் போக்க
முயற்சிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆனால் எந்த விதத்தில்
முரணை இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள முயற்சித்துப்
பார்த்தேன். அறிந்துகொள்ள முடியவில்லை. பின்னால் விளக்கு
வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஒருவரும் விளக்கவில்லை.
ஆகவே இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட உண்மை இது
என்பதை திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களுக்கு
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு விவசாய வளர்ச்சி
ஏற்படவேண்டும் என்று சொல்லும்போது விவசாயத்தில் அதிகப்
படியான மக்கள் போய் வேலை செய்ய வேண்டும் என்பது அல்ல.
அதிகப்படியான மக்கள் போய் வேலை செய்தால் உற்பத்தி பெருகி
விடும் என்பது அல்ல. அதிகப்படியான மக்கள் போய் வேலை
செய்தால் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதுதான் எங்களுடைய



கருத்து. அதுதான் உலகத்திலுள்ள எல்லோரும் அறிந்து
கொண்டிருக்கக்கூடிய உண்மை. இதுதான் எல்லோருடைய
அனுபவமும்.

**Sri C. N. ANNADURAI :** கனம் அமைச்சர் குறிப்பிட்ட
மூன்று துறைகளில் அதாவது விவசாயம், பெரும் தொழில், சிறு
கைத்தொழில் இவைகளில் எந்த ரேஷியோப்படி அவர்கள்
முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள் ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** இப்பொழுது சொல்லிக்
கொண்டு வருகிற கருத்தைச் சொல்லி முடித்து விட்டு அதன் பிறகு
அவர் கேட்பதைப்பற்றி சொல்லுகிறேன். இன்றைக்கு
விவசாயத்தில் இருக்கக்கூடிய ஒரு பகுதியை தொழிலுக்குக்
கொடுத்தால் ஓரளவு உற்பத்தி பெருகுமேயொழிய அதிகப்
படியான மக்களை வேலை செய்யச் சொன்னால் விவசாய உற்பத்தி
பெருகி விடாது. மக்கள் அதிகரிப்பதால் உற்பத்தியைப் பெருக்க
முடியாது. மக்கள் அதிகமாகப் போனால் விளைச்சல் குறைந்து
விடலாம். இது உலகத்தில் ஏற்பட்ட அனுபவம். அதிகப்படியாக
உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் விவசாயத்தில் அதிகப்
படியான இயந்திரங்களை உபயோகப்படுத்த வேண்டும், அத்துடன்
மற்ற கருவிகளையும் உரம் போன்றவைகளையும் அதிகப்படியாக
உபயோகிக்க வேண்டும். ஆகவே சமுதாயத்தில் விவசாயம் பெருகு
வதற்கு தொழில் வளம் பெருகவேண்டும். இதை கம்யூனிஸ நாடு
கள் கூட கண்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயத்தைப் பெருக்கும்
போது அதையொட்டி தொழிலுக்கும் முதலிடம் கொடுக்க
வேண்டியதாக ஏற்படுகிறது. இந்தக் கருத்தில்தான் சொல்லப்
பட்டிருக்கிறதேயொழிய எந்தவிதமான குழப்பமும் ஏற்பட
வில்லை.

இன்றைக்கு விவசாயத் துறையில் வறுமை ஏற்பட்டிருக்கிறது
என்று சொன்னால் அதிலிருந்து மக்கள் வெளி வரவேண்டும் என்று
சொன்னால் விவசாயத்தில் தொழிலை ஈடுபடுத்தினால்தான் பொரு
ளாதாரத் துறையில் வளர்ச்சி ஏற்படும். அதே சமயத்தில்,
இன்னொரு திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் சொன்னார்,
கிராமங்களிலிருந்து மக்கள் எல்லோரும் நகரங்களுக்கு வருகிறார்
கள் என்று, அதை குற்றமாகவும் சொன்னார். அப்படி கிராமங்
களிலிருந்து மக்கள் நகரங்களை நோக்கி வருவதை நாங்கள் வரவேற்
கிறோம். ஏனென்றால் அந்த அடிப்படையில் நகரங்களில் தொழில்
அதிகப்படியாக வளர்ந்து வருகிறது என்றுதான் நாங்கள் நினைக்க
வேண்டியதாக இருக்கிறது. தொழில் எந்த அளவிற்கு நகரங்
களில் முன்னேற்றமடைந்து வருகிறதோ அந்த அளவில்தான்
கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களுக்கு வருகிறார்கள். தொழில்
கள் நகரங்களில் வளர்ந்து வருகிறது என்றால் அந்த அளவுக்கு
கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களுக்கு வந்துதான் ஆக
வேண்டும். நகரங்களில் தொழில் வளருகிறது என்பதற்கு
அதுதான் அடையாளம் என்பதை நாம் தெரிந்து கொள்ள

வேண்டும். அதுதான் பொருளாதார இயற்கை விதி கூட. அதை ஒரு விதி என்று கூடச் சொல்லலாம். அப்படி நகரங்களில் தொழில் முன்னேற்றமடைந்து கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களுக்கு வந்து முன்னேற்றத்தைக் காணவேண்டும். அது உண்மையானால் அந்த அடிப்படையில் நாம் முன்னேற்றம் அடைந்து கொண்டு போகிறோம் என்றுதான் வைத்துக்கொள்ள வேண்டும் அந்த அளவில் நம் தேசம் போய்க்கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளவேண்டும்.

நகரங்களில் தொழில் வளர்ந்து வருகிறது என்றால் நகரங்களில் எல்லா விதமான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி முதலியவை கள் ஏற்பட வேண்டியதாக இருக்கிறது. நகரங்களுக்குப் பக்கத்தில் புதிய புதிய நகரங்களை அமைக்க வேண்டியதாக இருக் கிறது. அதற்கு வேண்டிய திட்டங்களையும் வகுக்க வேண்டியதாக ஏற்படுகிறது. ஆகவே கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களை நோக்கி வருகிறார்கள் என்றால் நகரங்களில் அந்த அளவில் தொழில் வளம் பெருகி இருக்கிறது என்று அர்த்தம். இதற்கு வேண்டிய புள்ளி விவரங்களையும் கொடுக்க முடியும். ஆனால் இங்கே ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கும் பதில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இப்படி பல தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லும்போது பிரிவினை சக்தி சில இடங்களில் இயங்கிக்கொண்டு வருகிறது. அதனால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அந்த நிலைமையில் அப்படி இயங்கி வருகிற பிரிவினை சக்தியை எடுத்துக்காட்ட வேண்டியதாக இருக்கிறது. அதை மாற்றுவதற்கு சில புள்ளி விவரங்களை கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு எந்தத் தொழிலாக இருந்தாலும் அந்தத் தொழில் கம்பெனி ரிஜிஸ்டர் செய்யப்பட்டதாக இருக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டு பல கம்பெனிகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. அந்த முறையில் சில தொழில் நடைபெற்று வருகின்றன. பொது துறையில் கூட தொழில்கள் கார்போரேஷன் என்று ரிஜிஸ்தர் செய்யப்பட்டு அந்த அடிப் படையில் இன்றைக்கு தொழில் இயங்கி வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள். அந்த அடிப் படையில் பார்க்கும்போது சில புள்ளி விவரங்களை கொடுக்க முடியும். 1956-57-லிருந்து 1960 டிசம்பர் வரைக்கும் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர்களுக்கு அது வேண்டுமானால் அதை எடுத்து அச்சடித்து கனம் அங்கத் தினர்களுக்கு வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன். அகில இந்தியாவில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எந்த அளவில் கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. எந்த அளவுக்கு பங்குகள் அவர்கள் சேர்த்திருக்கிறார்கள், எந்த அளவு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, பங்குகள் மூலமாக நமக்குக் கிடைத்த



பணம் எவ்வளவு, எவ்வளவு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது இப்படிப்பட்ட புள்ளி விவரங்கள் எல்லாம் கொடுக்கப்பட் டிருக்கிறது. அந்தக் கணக்கு அடிப்படையில் சொல்லுகிறேன், நமக்கு வருஷா வருஷம் பங்கு தொகை அதிகமாகிக் கொண்டே வந்திருக்கிறது. 1960-61-ஐ எடுத்துக்கொண்டால் புது தொழில் கள் எவ்வளவோ ஏற்பட்டிருக்கின்றன. அப்படி ஏற்பட்டிருப்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்றே நம்புகிறேன். ஐம்பது லட்சத்திற்கு மேல் முதலீடு செய்யக்கூடியவைகளுக்கு பெரும் தொழில் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட பெரும் தொழில்கள் வந்திருக்கிறது என்பதை வருஷா வருஷம் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கணக்கும் தெரியும். 1956-57-ல் மூன்று கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. 1957-58-ல் ஐந்து கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. 1959-60-ல் 7 கம்பெனிகள், 1960-61-ல் அதுவும் 14—12—1960 வரையில் 18 கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. அதுவும் முன்னைப்போல வெறும் நூல் மில்கள் மட்டும் இல்லை, என்ஜினியரிங் தொழில், ரசாயனத்தொழில் உரம் போன்ற பலவிதமான தொழில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனுடைய மொத்த முதலீடு 58 கோடி ரூபாய். மற்ற பகுதிகள் எப்படி வளர்ச்சி அடைந்திருக் கின்றன, நம் பகுதி எப்படி வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை இந்தப் புள்ளி விவரங்களைக்கொண்டு பார்த்தால் தெரியும். இதற்கு முன்பாகவாவது பெங்கால் முதலாக இருந்தது. நாம் இரண்டாவ தாக இருந்தோம். இப்போது நாம் முதலாவதாக இருக்கிறோம், அகில இந்தியாவிலும், திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவர் இதைப் பார்க்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு முன்னால் ஏற்பட்டிருந்த தொழில் வளர்ச்சி அவர் களுக்கு ஆதரவாக இருக்கிறது என்று சொல்லலாம். நாமும் இன்னும் பெரும் அளவுக்கு வளர்ச்சி அடைய வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்த்தால் இந்த 18 போதாது. 18-க்குப் பதில் ஐம்பது, அறுபது, நூறு என்றைக்கு ரிஜிஸ்டர் ஆகிறதோ அன்றைக்குத் தான் ஓரளவு தொழில் வளர்ச்சி அடையமுடியும் என்று சொல்லவேண்டும். இதில் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இதற்குமேல் ஒரு படி அதிக மாகவேண்டுமென்றால் அதுதான் எங்கள் கொள்கையும். அப்படி ஏற்படுவதற்கு முயற்சியும், வசதியும் செய்யவேண்டும் என்பது தான் எங்கள் எண்ணமும். அந்த முறையில் பார்க்கும்போது இப்போது ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி நூற்றில் ஒரு பங்குதான் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்தத் தொழில் வளர்ச்சி முழுவதையும் அடைவதற்கு எத்தனை வேகமாகப் போக வேண்டுமோ அத்தனை வேகமாகப் போகவேண்டும். முயற்சி செய்யவேண்டும் என்றுதான் நாங்கள் முயலுகிறோம். இந்தச் சபையில் உள்ளவர்களும் அதற்கு ஒத்துழைக்கவேண்டும். "ஒன்றுமே நடைபெறவில்லை. இங்குள்ளவர்கள் எல்லாம் பொம்மை" என்று காலைப் பிடித்து இழுத்துவிடாமல் இன்னும்

வேகமாகப் போக ஓரளவு சக்தி அளிக்கவேண்டும். ஓரளவு சுணங்கும் போது சுறுசுறுப்புக்கு முடுக்கிவிடவேண்டுமே தவிர, போகிற வேகம் தடைபடும்படியாகச் செய்யக்கூடாது. அப்போது தான் அவர்களும் வெற்றி பெறுவார்கள். அதைவிட்டு ஒரே ஒரு பாட்டைத் திருப்பித் திருப்பிப் பாடவேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

அதோடு இன்னொன்று சொன்னார்கள். நாங்கள் கிளர்ச்சி செய்த காரணத்தினால்தான் இன்ன இன்ன ஏற்பட்டது என்று சொல்லி சிறிதளவாவது நாங்கள் சந்தோஷப்படக்கூடாதா என்று கேட்டார்கள். நன்றாக சந்தோஷப்பட்டுக் கொள்ளட்டும். நாங்கள் செய்ததை அவர்கள் செய்ததாக, அவர்கள் செய்ததை நாங்கள் செய்ததாக எண்ணி ஒத்துழைக்கும் மனோபாவம்தான் வளர வேண்டும். அந்தக் கொள்கை அடிப்படையில் இவ்வளவுக்கும் நாங்கள்தான் பொறுப்பு என்று கொஞ்சம் சந்தோஷப்படுவதற்கு பேசுவார்களேயானால் எந்தக்காலத்திலும் நான் அந்தச் சந்தோஷத்திற்குக் குறுக்கே நிற்கமாட்டேன் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே சமயத்தில் ராமாயணத்தில் இருந்து உபமானத்தை எடுத்துச் சொல்லி எங்களை எல்லாம் அனுமார்கள் என்றார். (ஸ்ரீ ஸி. என். அண்ணாதுரை:—அந்தப் பட்டம் ஒருவருக்கு இல்லை.) எல்லோருக்கும் அந்தப் பட்டம் சார்ந்தது என்றால் ஆட்சேபணை இல்லை. இது மாதிரி உபமானம் சொல்வது சுலபம். உபமானம் சொல்லி யாரையும் ஏமாற்றிவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உபமானத்தின் மீது இவ்வளவு நம்பிக்கை வைக்காமல் உண்மையாக இருக்கக்கூடிய புள்ளி விவரங்கள் மீது நம்பிக்கை வைக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விலைவாசி கட்டுப்பாட்டைப்பற்றிச் சொன்னார்கள். கவர்னர் உரையின்போதே அதைச் சொல்லியிருக்கிறேன். அந்தக் குறையை நீக்கக்கூடிய சக்தி இன்னும் ஏற்படவில்லை என்று தெரிவித்துகொள்கிறேன். விலைக்கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியாத சூழ்நிலை, சிக்கல் இருக்கிறது என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். இது ஒரு கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் ஏற்படக்கூடிய சிக்கல் மட்டும் இல்லை. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இருக்கக்கூடிய சிக்கல். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே கட்டுப்பாடு வேண்டும் என்பதும், வேண்டாம் என்பதும், ஓரளவு அத்தியாவசியப் பொருள்கள் மீதாவது கட்டுப்பாடு இருக்கவேண்டும் என்பதுமாக கருத்துவேறுபாடுகள் இருக்கின்றன. இதை ஒப்புக் கொள்வதற்கு நான் தயங்கவில்லை. யுத்த காலத்தில் இருந்த ரேஷன் முறை வந்தால் விலை கட்டுப்படுத்தப்படும் என்றால் அதை யாரும் விரும்பமாட்டார்கள்.

இதில் அடிப்படையாக இருப்பது ஒரு விஷயம். பொருளாதார முன்னேற்றம் ஏற்படவேண்டியதாக இருக்கிறது. அந்தப் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுகின்ற காலத்தில் விலை உயர்வு ஏற்



படுகிறது. அந்த விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதில் நமக்குள் குழப்பம் இருக்கிறது. பொருளாதார முன்னேற்றம் ஏற்படாமல் அப்படியே இருந்தால் விலை உயராமல் இருக்கும். விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக பொருளாதார முன்னேற்றமே வேண்டாம் என்றால் அதை நான் ஒப்புக்கொள்ளத் தயாரில்லை. பொருளாதார முன்னேற்றம் வேண்டும். அதன் காரணமாக சிறிது விலை உயர்ந்தாலும் பரவாயில்லை. உற்பத்தி பெருகுவதற்கு, பல தொழில்கள் அமைவதற்குத்தான் முதல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொன்ன ஒரு கருத்தை மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அது அடிப்படையாக இருக்கக்கூடிய கருத்து வேற்றுமை. கன்ஸ்யூமர் குட்சை கட்டுப்படுத்தாமல் விட்டிருந்தால் விலை உயர்வைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும் என்கிற சுதந்திரா கட்சிக் கொள்கையை அவர் எடுத்துச் சொன்னார். அது பொருளாதார வளர்ச்சிக்கு உகந்தது அல்ல என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. காங்கிரஸ் கட்சியின் கொள்கை. கம்யூனிஸ்டுக் கட்சியும் அப்படித்தான் நினைக்கிறது. நம் நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமென்று சொன்னால் அடிப்படையாக இருக்கக்கூடிய பேசிக் இன்டஸ்டரி நம்மிடம் இருக்கவேண்டும். இதனால் இன்றைக்கு ஓரளவு நம் தலைமுறையில் கஷ்டம் ஏற்பட்டாலும் ஐந்து வருஷத்திற்குப் பிற்பாடு, பத்து வருஷத்திற்குப் பிற்பாடு நம் சந்ததியார்கள் நன்றாக வாழ முடியும் என்று உலகத்தில் ஏற்பட்டிருக்கக் 12.00 noon. கூடிய அநுபவத்தை வைத்துக்கொண்டு முடிவு செய்ய வேண்டியதாய் இருக்கிறது. விலையேறுவதற்கு இதுவும் ஒரு அடிப்படைக் காரணமாயிருக்கிறது. அதை ஒப்புக்கொள்கிறேன். பேஸிக் இண்டஸ்ட்ரீஸை எடுத்துக் கொள்ளலாம். ஒரு உருக்குத் தொழிற்சாலை கட்டுவதற்கு 120 கோடியாகிறதென்றால், அவை வெளிநாடுகளிலிருந்து வரக்கூடிய இயந்திரங்களுக்காக மட்டுமல்ல, வீட்டு வசதி போன்ற பல வசதிகள் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது முதலில். அப்படிச் செலவு செய்யும்போது அதனால் ஏற்படக்கூடிய உற்பத்திப் பொருள்கள் மக்களுக்கு உடனே கிடைப்பதில்லை. அதாவது, அதனால் விளைகிற பொருள்களை உடனே மக்கள் வாங்கிவிட முடியாது. அதில் கிடைப்பதை வைத்துக்கொண்டு வேறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டும். அதில் மக்கள் உபயோகிக்கும் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு பின்னர்தான் அவைகளை மக்கள் வாங்கி உபயோகிக்க வேண்டும். ஆக, ஒரு உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்கிறோம் என்றால் பல லட்சக்கணக்கான ரூபாய் கூலிக்காக கொடுக்கிறோம், இயந்திரங்களின் செலவு, இப்படி பல செலவுகள் இருக்கின்றன. அதை வைத்துக்கொண்டு பேஸிக் இண்டஸ்ட்ரீஸை அதிகப்படுத்த வேண்டுமென்ற நிலையில் தான் இன்வெஸ்ட்மெண்ட் செய்யப்படுகிறது. பொருள் உற்பத்தி குறைவாகயிருப்பதால் விலை உயர்வு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

[Sri C. Subramaniam] [8th March 1961

சுதந்திராக் கட்சி சொல்வது, பேஸிக் இன்டஸ்ட்ரீஸ் வேண்டாம், கன்ஸ்யூமர் இன்டஸ்ட்ரீஸ் வைத்துக்கொள்ளலாமென்று. அது, இன்று சரியாகயிருக்கலாம். ஆனால் பொருளாதார சக்தி நம் நாட்டில் பெருக பேஸிக் இன்டஸ்ட்ரீஸ்க்குத்தான், கனரகத் தொழில்களுக்குத்தான் நாம் முதலிடம் கொடுக்க வேண்டும். கருத்து வேறுபாடு இருந்தால் அது அடிப்படையான கருத்து வேறுபாடு. ஆகவே, அக்கருத்தை ஏற்றுக்கொள்ளும் நிலையில் நான் இல்லை. அவர்கள் இன்னும் கொஞ்சம் ஆலோசித்துப் பார்த்தால் எனது கருத்தை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள், என்பதில் சந்தேகமில்லை. (குறுக்கீடு). திராவிட முன்னேற்றக் கழகத்தை இன்னொரு கட்சியோடு இணைத்து விடுவதாக சொல்கிறார்கள். நான் நினைத்தால் அவர்கள் இணையப் போவதில்லை. ஆனால் அப்படி இணையப் போவதாக வதந்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அது அவர்கள் பொறுப்பு. இணைவது பற்றியோ அல்லது இணையாதிருப்பது பற்றியோ நான் கவலைப் படவேண்டிய அவசியமில்லை. அவர்கள் செய்யவேண்டிய முடிவு அது. பின், கல்யாணசுந்தரம் அவர்கள் சில விஷயங்களைப்பற்றி பேசினார்கள். நெய்வேலி பற்றி சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். எங்கள் பக்கத்திலுள்ள முத்தையா செட்டியார் அவர்களும் அதுபற்றிய கருத்தைத் தெரிவித்தார்கள். அங்கு ஏதோ காரியங்கள் சரியானபடி நடக்கவில்லை என்றும், தாமதமாகிக்கொண்டிருக்கிறது என்றும் சிலர் சொன்னார்கள். சமீபத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்பு நான் அங்கு போய் பார்த்து வந்திருக்கிறேன். அங்கு திறமையாகவும், வேகமாகவும் வேலைகள் நடந்துகொண்டு வருகின்றன என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்குள்ள அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் நான் செய்து கொடுக்கத் தயார், ஒவ்வொருவரும் நெய்வேலிக்குச் சென்று தயவுசெய்து பார்த்து விட்டு வாருங்கள், பின்னர் அது பற்றி தனியாக உட்கார்ந்துகொண்டு பேச வேண்டுமென்று சொன்னால் பேசலாம். அங்கு எப்படி பல தடைகளையும் மீறிக்கொண்டு வேலைகள் நடைபெறுகின்றன என்பதைப் பார்க்கும் போது காரியத்தைச் சாதிக்கக் கூடிய சக்தி நமக்கு இருக்கிறது என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. ஆகவே, வீணாகக் குறை கூறுவதில் பிரயோஜனமில்லை. எதை அடிப்படையாக வைத்துக் கொண்டு தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்களோ தெரியவில்லை. ஆறு மாத தாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அதற்குள்ள காரணம் என்னவென்று தெரிந்து கொண்டால் அதை தாமதம் என்றே கூற மாட்டோம். உடனடியாகவே, அங்கு லிக்னைட் இருக்கிறயிடத்திற்கு போய்விட முடியும். ஆனால் அதை எடுத்தவுடன் அதை உபயோகப்படுத்தியாக வேண்டும். உபயோகிக்காவிடில் நெருப்பு பிடித்துக் கொள்ளும். தொழில் அமைச்சர் அவர்கள் 2,000 டன் வேண்டுமென்று சொல்கிறார்களே அதை எப்படியாவது எடுக்க முடியாதா என்று பார்க்கப் போயிருந்தேன். இரண்டாயிரம் டன் எடுக்க முடியாது என்ப



8th March 1961] [Sri C. Subramaniam]

தல்ல. எடுக்கலாம். ஆனால் தொடர்ந்து இரு பக்கத்திலுமுள்ள 50 பம்புகள் ஆறு மாதத்திற்கு தொடர்ந்து அதேபோல் எடுத்துக் கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டு விடும். அவர்கள் எல்லாவற்றையும் காண்பித்து எல்லாம் கூறினார்கள். அவர்கள் சொல்வது சரி என்று ஒப்புக்கொள்ளும் நிலையில்தான் இருக்கிறது. மின்சாரம் உற்பத்தி செய்யும் இயந்திரம் எப்பொழுது வேலை செய்கிறதோ அப்பொழுது முதல் இந்த லிக்னைட் உபயோகிக்கும் நிலை ஏற்படும். கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னது அவர்களின் மனப்போக்கைக் காண்பித்தது. அங்கு, மின்சார நிலையம்தான் நம் கண்ணில் தெரிகிறதென்று கூறினார்கள். ஏனெனில், அது ரஷ்யாவிலிருந்து வருகிறது. அவர்களை அறியாமலேயே வெளிவருகிறது என்பதுதான் விநோதமாகயிருக்கிறது, பல நாடுகளிலிருந்தும் வந்திருப்பவை அவர்கள் கண்களுக்குத் தெரியும், இயற்கை கண் கொண்டு பார்த்தால், மின்சார உற்பத்தி நிலையம் மட்டுமின்றி, உர உற்பத்திசாலையும் ஆரம்பிக்கயிருக்கிறது, அதற்கான இயந்திரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. சுட்டகரியை பரிசோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னொரு டெண்டரும் வந்திருக்கிறது, அதுபற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நல்ல விதத்தில் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அது பற்றி நாம் மகிழ்ச்சியடையவேண்டும். இரும்பு தொழிற்சாலை பற்றி இங்கு கருத்து தெரிவித்தார்கள். வட நாட்டிலுள்ள இரும்பு உற்பத்தி விலையைவிட இங்கு அதற்குமேல் இருந்தாலும் கூட இங்கு ஏற்படுத்தவேண்டுமென்று. அதுபற்றி பரிசீலனை செய்யப்படுகிறது. அதற்கும் ஓரளவு இருக்கவேண்டும். அந்தளவிற்கு உள்ளாக இருக்கவேண்டுமென்பதுதான் என் கவலை. அங்கு 120 ரூபாய் விலை என்றால், அதைவிட இரண்டு மடங்கு வேண்டுமானாலும் போகலாம், அதற்கு மேல் போனால் அது சரியானபடியிருக்குமா என்று பார்க்கவேண்டும். புள்ளி விவரங்களை வைத்துப் பார்க்கும்போது, ஓரளவு குறைவான விலையில் இரும்பு உற்பத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுபற்றி நானோ அல்லது தொழில் அமைச்சர் அவர்களோ முடிவு கூற முடியாது, நிபுணர்கள்தான் கூறவேண்டும். வடக்கேயிருக்கக்கூடிய நிபுணர்களானால் நம்மை ஏமாற்றி விட்டார்கள், வஞ்சித்து விட்டார்கள் என்று சொல்லலாம். ஆனால் வெளி நாட்டிலுள்ளவர்கள் நம்மை வஞ்சிக்கவேண்டிய வஞ்சக மனம் அவர்களுக்கு கிடையாது. அவர்கள் முடிவை அடிப்படையாக வைத்து இரும்புத் தொழிற்சாலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதாயிருக்கிறது. அதுபற்றி விரிவாக சொல்லியிருக்கிறேன். அதிலும் தாமதம் இல்லை. திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் ஒருவர் கூறினார், 1957-58-லேயே பரிசோதனை நடக்கிறதென்று சொன்னார்கள், இப்பொழுதும் அப்படியே சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். பரிசோதனை பல கட்டங்களில் செய்யவேண்டியிருக்கிறது. லாபரட்டரி டெஸ்ட், பரிசோதனை நிலையத்தில் நடக்கவேண்டியது, பின், பைலட் டெஸ்ட்ஸ், பெரிய அளவில் நடக்கவேண்டியது, பின்னர் கமர்ஷியல் அளவில் உற்பத்

[Sri C. Subramaniam] [8th March 1961

தியை பெருக்கவேண்டியது. லாபரட்டரி டெஸ்ட் சாதகமாக முடிந்திருக்கிறது. பைலட் டெஸ்ட்க்கு 2,000 டன் நிலக்கரி வேண்டியிருக்கிறது. ஆகவே, முன்னால் பரிசோதனை செய்கிறோம் என்று சொன்னதையே இப்பொழுதும் சொல்கிறார்கள் என்றால், என்னென்ன பரிசோதனைகள் செய்யவேண்டுமென்பதை அவர்கள் தெரிந்து கொண்டிருந்தால் இதைப்பற்றி சொல்லியிருக்க மாட்டார்கள். பின்னர், இரிகேஷன் பெஸிலிட்டீஸ். பெரிய நீர்ப் பாசனத் திட்டங்கள் எல்லாம் தீர்ந்து போய் விட்டது, மத்தியதர பாசனத் திட்டங்கள் பலவற்றை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றி கவர்னர் உரைமீது நடந்த விவாதத்தின்போது பதில் சொல்லியிருக்கிறேன். அப்பொழுது குறிப்பிட்டதுபோல், நமக்கு விவசாயம் தவிர வேறு ஒன்றுமில்லையென்று சொன்னால், அதில் குறைவான வருவாய் வருவதாகயிருந்தாலும் சரி, ஏக்கர் ஒன்றுக்கு 5,000, 10,000 ரூபாய் செலவானாலும் அதை எடுத்துச் செய்யவேண்டுமென்றால், தொழில் துறை அபிவிருத்தியில் நாம் பெரிய அளவு பங்கு எடுத்துக்கொண்டிருக்கும்போது, நிறையப் பணம் செலவு செய்து எங்கள் பகுதிக்கும் நீர்ப்பாசன வசதித் திட்டம் வேண்டுமென்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தால், ஒன்று யோசித்துப் பார்க்கவேண்டும். ½% அளவு வட்டிக் கட்டக் கூடிய முறையில், அதாவது அந்தளவு உற்பத்தி பெருகுவதைக் கணக்கில் வைத்துக்கொண்டு அது சரியா அல்லது 3-லிருந்து 10% வரை பலன் தரத்தக்க திட்டங்கள் இருக்கும்போது அதில் போய் முதலீடு செய்வது சரியா என்பது பற்றி யோசித்து முடிவு செய்யும்போது, கோடிக்கணக்கில் விவசாயத்தில் போட்டால் பரவாயில்லை என்று சொன்னால் அது பற்றி பரிசீலனை செய்ய நான் தயாராயிருக்கிறேன்.

ஆனால் இன்றைக்கு அவ்வாறு செய்வது சரியல்ல என்பது என்னுடைய கருத்து. அதைத்தான் நான் அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிறேன். அந்த அடிப்படையில்தான் நீர்ப்பாசனத் திட்டங்களைபற்றி நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டியிருக்கிறது. எதை எதை நாம் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பார்த்து எதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று முடிவு செய்கிறோமோ, அதற்குப் பணம் குறுக்கே நிற்காது என்பது மட்டுமல்ல, வேண்டிய அளவுக்கு நிதி ஒதுக்க முடியும் என்கின்ற உறுதியை நீர்ப்பாசன மந்திரி அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் வெறும் விவசாயத் துறையை மட்டும் பார்க்காமல் இன்றைக்கு பொருளாதாரத் துறையிலும் மற்றத் துறைகளிலும் எப்படியிருக்கிறோம் என்பதைப் பார்த்துத்தான் நாம் எந்த முடிவுக்கும் வரவேண்டியிருக்கிறது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த முறையில் இன்றைக்கு நம் முன்னால் இருக்கக்கூடிய முக்கியமான திட்டங்களில் ஒன்று சேதுசமுத்திரத் திட்டம். இதை 'இன்டகிரேட்டடு பிராஜக்ட்'-டாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று பலர் சொன்னார்கள். அந்த முறையில்தான் இதை



8th March 1961] [Sri C. Subramaniam]

எடுத்துக்கொள்ளவும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அதை பரிபூரணமாக நடத்த முடியும் என்றும் நான் நம்புகிறேன். இதில் யாரும் குறுக்கே நிற்க முடியாது. இதற்கு 30 கோடி ரூபாய் செலவாகும் என்றும் 20 கோடி ரூபாய் செலவாகும் என்றும் கருத்து வேற்றுமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இருந்த போதிலும் இதைப்பற்றி தீவிரமான பரிசீலனை நடந்து கொண் டிருக்கிறது. இதற்காக டேவிஸ் அவர்கள் பரிசீலனை நடத்தித் தந்திருக்கின்ற திட்டத்தை நமது ராஜ்ய இன்சினியர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் ஒரு முடிவு எடுக்கப்பட்ட வுடன் சேதுசமுத்திரத் திட்டத்தை உடனடியாக எடுத்துக் கொள்ள முடியும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள் கிறேன். முப்பது கோடி செலவானாலும் சரி, 20 கோடி செலவானாலும் சரி, இது உடனடியாக எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றாலும்—குறைவான தொகையிலேயே முடியும் என்று இருந்தால் இப்போதே எடுத்துக்கொள்ளலாம்—எப்படியும் இதற் கான முடிவு வந்தவுடன் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற் கான எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இந்த சபை முன் உறுதியாகத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அதற்கடுத்தபடியாக, சில குறைகள் என்னுடைய பட்ஜெட் உரையில் இருப்பதாகக் கூறப்பட்டது. அதைப்பற்றி ஒரு பத்திரிகை தலையங்கமும் எழுதியிருந்தது. அதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கதர் உற்பத்தி அதிகமாகியிருந்தும் அதிகமான அளவுக்கு வேலை வாய்ப்பு பெருகவில்லை, ஆகவே இந்த திட்டத்தை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமா என்பதைப் பற்றியும் பலர் சொன்னார்கள். இதைப்பற்றி என்னுடைய பட்ஜெட் உரையில் வாசகம் தவறாக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்வதுடன், அதற்காக மன்னிப்பும் கேட்டுக்கொள் கிறேன். அதில் இருப்பது, "வருடம் ஒன்றுக்கு 164 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 66 லட்சம் கெஜம் துணி உற்பத்தியாகிக் கொண்டிருந்ததற்குப் பதிலாக இப்போது 2 கோடி ரூபாய் மதிப் புள்ள 80 லட்சம் கெஜம் துணி உற்பத்தியாகி வருகிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது வருடம் ஒன்றுக்கு 80 லட்சம் கெஜம் துணி உயர்ந்திருப்பதாக அர்த்தம் படும்படியாக இருக் கிறது. அதுமாதிரி இருப்பது தவறு. இதில் நான் சொல்ல நினைத்தது, இரண்டாவது ஐந்தாண்டு திட்ட கால முடிவில் 66 லட்சம் கெஜம் துணி உற்பத்தியாகியிருந்தது. பின்னால் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்திற்குள்ளாக 80 லட்சம் கெஜம் துணிக்கு மேலாக இருக்கும் என்ற பொருள் படும்படியான முறையில் இதை நான் குறிப்பிட்டிருந்தேன். இவ்வாறு தவறான வாசகப் பிழை ஏற்பட்டதற்காக இந்தச் சபையில் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது திட்ட கால முடிவில் 66 லட்சம் கெஜம் துணி உற்பத்தியானது, மூன்றாவது திட்ட காலத்தில் 80 லட்சம் கெஜம் உற்பத்தியாகும் என்றும்

இரண்டாவது திட்ட காலத்தில் 9,000 பேர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள், இப்போது இதில் ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றத்தின் காரணமாக அதாவது மூன்றாவது திட்ட காலத்தில் 15 ஆயிரம் பேர்கள் என்று உயரும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

இந்த முறையில் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றி அதன் மூலமாக முன்னேற்றம் காணவேண்டும் என்று சொல்லும்போது இந்த ஆண்டில் வரி விதிக்காமலேயே பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று சிலர் குறிப்பிட்டார்கள். அதை நான் பெருமையாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. பெருமையாக எடுத்துக்கொள்ளவும் இல்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் இதைப்பற்றி சொன்னபோது இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பாகவே இனிமேல் வரி போடாமல் இருப்பதற்கு தயார் செய்து கொண்டார் என்கின்ற கருத்தை தெரிவித்தார்கள். அப்போதும் தேர்தலை நினைத்துக்கொண்டுதான் சொன்னேன் என்று சொன்னால் அது வேறு விஷயம். அந்தச் சமயத்தில் ஒன்றிரண்டு வருடங்களுக்கு வரி விதிக்கவேண்டிய அவசியம் இருக்காது என்று நம்புகிறேன் என்று தெரிவித்திருந்தேன். அந்த அடிப்படையில்தான் இந்த நிதிநிலை அறிக்கை வரி போடாமல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் துண்டு விழுந்திருக்கிறது. இப்படி துண்டு விழுவதை எப்படி சரி கட்டுவது என்பதைப் பார்க்கும்போது நமக்கு இருக்கின்ற சூழ்நிலையில்—கூடியசீக்கிரத்தில் பைனான்ஸ் கமிஷன் வரப்போகிறது—என்கின்ற எண்ணத்தை எல்லாம் கொண்டு புதிய வரி எதுவும் போடாமல் துண்டு விடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதன் மூலமாக, இனிமேல், வரப்போகின்ற இதைவிட, இன்னும் சிறந்த முறையில் வேகமாகவும், திறமையாகவும் அதிகமாகப் பயன்தரக்கூடிய முறையிலும் இந்தத் திட்டங்களை நடைபெறச் செய்வதற்கு நாம் ஏற்பாடு செய்யவேண்டும். ஆகவே இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகள் எல்லாம், இன்றைக்கு நமக்கு உடனடியாக பலன் தரவில்லை என்றாலும், அது நம்முடன் நின்று விடாமல் நமக்குப் பின்னால் வருகின்ற தலைமுறையினராவது கஷ்டப்படாமல் இருக்கக்கூடிய வகையில் இந்தத் திட்டங்கள் எல்லாம் முழு அளவுக்கு வெற்றி பெறவேண்டும் என்கின்ற அளவில் நமக்கு இருக்கின்ற நேரத்தில், நமக்கு இதனால் பல அசௌகரியங்கள் இருந்தபோதிலும்கூட அவைகளை எல்லாம் நீக்கிவிட்டு இதற்காக பாடுபடவேண்டும் என்கின்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முக்கியமாக இந்த சபையிலுள்ளவர்களின் ஒத்துழைப்பு மட்டுமல்ல. இந்த நாட்டு மக்களினுடைய ஒத்துழைப்பும் பெற்று—அந்த சக்தியின் மூலமாகத்தான் நாம் வெற்றி பெற முடியும் என்பதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன், என்பது மட்டுமல்ல, எங்கள் கட்சியும் உணர்ந்திருக்கிறது, இந்தச்



சர்க்காரும் உணர்ந்திருக்கிறது. இந்த சக்திகள் எல்லாம் ஒன்றுபட்டு ஒரே சக்தியாக வலுப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட நாம் எல்லோரும் முன் வரவேண்டும் என்பதை தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**SRI C. N. ANNADURAI:** தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பேசுகின்ற பொழுது கைத்தறி போன்றவைகளை ஆதரிப்பதை வாதமாக வைத்துக்கொண்டு ஏதோ நாங்கள் பெருந்தொழில்களை வேண்டாம் என்று சொல்லுகிறோம் என்று சொல்லுவது போலத் தோன்றுகிறது, அது சரியல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவது, கிராமத்திலுள்ள மக்கள் நகரத்திற்கு வந்திருப்பது வளர்ச்சியின் அறிகுறி என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்த வகையில் கிராமத்தினுடைய பொருளாதாரத்தை பாதிக்கும் என்பதை யோசித்துப்பார்த்து உண்மையிலேயே அது நல்லதுதானா என்பதை புனராலோசனை செய்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவதாக, ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலை அறிக்கையை தயார் செய்கின்ற அதிகாரிகளுக்கு நன்றி செலுத்துவதை, இந்த ஆண்டு ஏன் விட்டிருக்கிறார்கள், அது வேண்டுமென்றே விடப்பட்டிருக்கிறதா அல்லது தவறாக விடுபட்டுப் போய்விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM:** எதிர்க் கட்சியிலிருந்து சொல்லப்படுகின்ற கருத்துகளை நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை என்று அவர்கள் பட்ஜெட்டிலே குறிப்பிட்டார்கள். முன்பு பருவ நிலையைப்பற்றி சொல்லியிருந்தேன், அது அவசியமில்லை என்று கூறினார்கள். ஆகவே இந்த ஆண்டு அதைப்பற்றி குறிப்பிடவில்லை. இந்த முறையில் எதிர்க்கட்சியினர் சொல்லுகின்ற கருத்துக்களை ஏற்றுக்கொள்வதில் நாங்கள் தயக்கம் காட்டுவதில்லை. அதேபோன்று அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிக்கின்ற காரியத்திலும் ஒருவருக்கொருவர் நன்றி தெரிவிப்பது அவசியமில்லை என்ற கருத்துக்கிணங்கித்தான் இது விடுபட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் எதிர்க்கட்சியினால் ஏற்பட்ட முன்னேற்றங்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அடுத்தபடியாக கிராமங்களிலிருந்து மக்கள் நகரத்திற்குப் போவதினால் கிராமங்களிலுள்ள மக்களுக்கு இருக்கின்ற பளு குறைந்து கிராம வாழ்வு செழிப்பு அடையும் என்கின்ற அடிப்படையான கருத்தை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**MR. SPEAKER:** இதோடு பொது விவாதம் முடிவடைந்தது. அடுத்தபடியாக, மான்யக் கோரிக்கைகளின் மீது விவாதம் நடக்கும், முதலாவதாக போலீஸ் மான்யத்தின் மீது விவாதம் ஆரம்பிக்கும். அமைச்சர் அவர்கள் இப்போது மான்யக் கோரிக்கையை பிரேரேபிக்கலாம்.

[8th March 1961

V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62 —DEMAND XIV POLICE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,63,20,700 under Demand XIV. Police."

MR. SPEAKER: Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,63,20,700 under Demand XIV. Police."

I understand that all the Opposition parties have agreed to hon. Member Sri K. Anbazhagan moving his Cut Motion. So, he may now move his cut motion.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, we find that we have got only one hour before us, but many hon. Members want to participate in the discussion on the Police Demand. So, may I sumbit that we can discuss it till 1-30 p.m. to-day and then continue it tomorrow morning and if necessary we will sit in the afternoon of tomorrow also.

MR. SPEAKER: That is the idea . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, we may have full discussion but I would suggest—if hon. Members would not mind—that the time allotted for the next Demand—Administration of Justice and Jails—may be cut down and still if necessary, we may sit in the afternoon of tomorrow also.

MR. SPEAKER: அதைப்பற்றி நாளை பார்த்துக்கொள்ளலாம். மூன்று மணி நேரம் விவாதம் நடத்தி விட்டு, அடுத்து மான்யங்களுக்கு எவ்வளவு வேண்டும் என்று பார்க்கலாம். . .

SRI A. GOVINDASAMI: சட்ட சபை இரவிலும் கூடலாமே.

MR. SPEAKER: பகலே இருக்கும்போது இரவு கூட்டம் எதற்காக? . . .

SRI K. ANBAZHAGAN: என் பெயரால் தரப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தை நான் இங்கே முன் மொழிகின்றேன்.

That the allotment of Rs. 6,63,20,700 under Demand No. XIV. Police be reduced by Rs. 100."

MR. SPEAKER: Cut Motion moved—

"That the allotment of Rs. 6,63,20,700 under Demand No. XIV. Police be reduced by Rs. 100."

SRI V. K. KOTHANDARAMAN: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது நம் முன்னால் இருக்கக்கூடிய போலீஸ் மான்யத்தின் மீது என்னுடைய ஒரு சில அபிப்பிராயங்களைச் சொல்ல



8th March 1961] [Sri V. K. Kothandaraman]

ஆசைப்படுகிறேன். இந்த போலீஸ் இலாகா இன்றைக்கு இருக்கிறது என்று சொன்னால் மக்களுக்கு இருக்கின்ற குறைகளைப் போக்குவதற்காக வேண்டி மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஒரு இலாகா. அதற்காக வேண்டியே அவர்களும் வருஷந்தோறும் ஒரு தினத்தைக் கொண்டாடுகிறார்கள். மரியாதை வாரம் என்ற பெயரிலும் இன்னும் பல பெயர்களிலும் அப்படி கொண்டாட்டங்கள் நடைபெற்றபோதிலும்கூட இன்றைக்கு போலீஸ் இலாகாவை எப்படி ஆளும் கட்சியினர் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள், போலீஸ் இலாகா ஆளும் கட்சியினருக்கு எந்த அளவு பயன்படக்கூடிய முறையில் இருந்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லாமல் இருக்க முடியாது. ஆகவே இன்றைக்கு மதுவிலக்கு பிரச்னையை எடுத்துக்கொண்ட போதிலும் சரி, அதே போன்று ஆளும் கட்சி உபயோகப்படுத்திக் கொள்ளும் பிரச்னையை எடுத்துக்கொண்டபோதிலும் சரி, குறிப்பாக உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் வட ஆற்காடு ஜில்லாவிலே எத்தனையோ பிரச்னைகளில் போலீஸை ஆளும் கட்சியினர் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. இதைப்பற்றி நான் சொல்லவேண்டியதில்லை—இது அமைச்சருக்கே தெரிந்த விஷயம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: என்னமோ கனம் அங்கத்தினர் அமைச்சருக்கே தெரிந்த விஷயம் என்று சொல்லுகின்றார். கனம் அங்கத்தினர் சொல்லுவது ஒன்றும் எனக்குத் தெரியாது.

SRI V. K. KOTHANDARAMAN: உண்மையாக நடக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள்கூட குறிப்பிட்ட ஒரு இடத்தில் நிரந்தரமாக இருக்க முடியாத நிலைமை இருந்து வருகிறது என்பதும் நமக்குத் தெரிந்த விஷயம். குறிப்பாக சென்ற ஒரு மாதத்திற்கு முன்னால் வட ஆற்காடு மாவட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் ஒரு சில கிராமங்களில் கொடியை இறக்கிவிட்டார்கள், கொடிமரத்தைத் தள்ளி விட்டார்கள் என்ற பெயரிலே இன்றைக்கு கேஸ்களைப் போடக்கூடிய அளவுக்கு, அதுவும் ஹரிஜனங்களால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு காங்கிரஸ் ஹரிஜன் லீக் என்ற ஸ்தாபனத்தை பலப்படுத்த, தேர்தல் நெருங்கி வருகின்ற இந்த நேரத்தில் பல ரூபத்தில் போலீஸ்காரர்களைப் பயன்படுத்தி இன்றைக்கு மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டாக்கும் அளவுக்கு வந்திருக்கிறது. குறிப்பாக ஒரு மாதத்திற்கு முன்னால் வேலூர் பக்கத்தில், கருகம்புதூர் பகுதியில், ஹரிஜனங்கள் இருக்கும் பகுதியில் அபாண்டமாக பல வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு ராஜ்யம் பூராவிலும் பல இடங்களில் பார்த்து வருகிறோம். அது மாத்திரமல்லாமல் ராமநாதபுரம் ஜில்லாவில் கீழப்பசலை கிராமத்தில் நடந்து வரக்கூடிய நிலைமையை எடுத்துச் சொல்ல உண்மையிலேயே வருத்தப்படவேண்டியிருக்கிறது. இன்றைக்கு விவசாயத் தலைவர்களாக இருக்கக்கூடியவர்கள் வீட்டிலே நுழைந்து அவர்களுடைய மனைவியைக் கையைப் பிடித்து

[Sri V. K. Kothandaraman] [8th March 1961

இழுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அது மாத்திரமல்லாமல் அந்த கிராமத்தில் இருக்கக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அந்த கிராமத்தில் வசிக்க முடியாத அளவுக்கு, அங்கே இருக்க முடியாத அளவுக்கு இன்றைக்கு நிலைமை இருந்து வருகிறது. சில இடங்களில் போலீஸ் அதிகாரிகள் செயலாற்றக்கூடிய நிலைமையில் மாகாண அதிகாரிகளுக்கோ, மற்றவர்களுக்கோ அதிருப்தி இருந்தபோதிலும் அவர்களை வேறு இடத்திற்கு மாற்றியிருப்பதாகக் கேள்விப்படுகின்றோமே தவிர அவர்கள் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருப்பதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாமல் போலீஸ் உதவியை வைத்துக்கொண்டு கிராமத்தில் இருக்கின்ற விவசாயிகளின் வீட்டிலே புகுந்து நெல்லை சூறையாடக்கூடிய அளவுக்கு, அதேபோன்று இன்னும் பல பொருள்களை கொள்ளை அடிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்குமானால் இவைகள் காவல் காக்க வேண்டிய காவல் நிலையங்களா அல்லது கொள்ளை அடிக்கக்கூடியவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கக் கூடிய காவல் நிலையங்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். நான் இப்படிக் கூறும்போது அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சியினர் எப்போதும் போலீஸ்காரர்கள் பேரில் அநாவசியமாக, அபாண்டமாகக் கூறுகிறார்கள் என்று சொல்லலாம், அல்லது நீங்கள் இவைகளைப் பற்றி தகவல் கொடுத்தால் நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லலாம். எத்தனையோ தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தகவல் கொடுத்தால்தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமா? நடவடிக்கை எடுப்பதற்கு தகவல்களை சேகரிக்க வசதி வைத்துக்கொண்டுள்ளது போலீஸ் இலாகா. கம்யூனிஸ்டுகள் எங்கே போகிறார்கள், என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்று அவர்கள் பின்னால் நிழலைப் போல இருப்பதற்கு மட்டிலும்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? ஊழல்கள் எங்கெங்கே நடைபெறுகின்றது, எப்படி ஏற்படுகின்றது என்று அவைகளைப் பார்த்து கண்டுபிடிக்க முடியவில்லையா? முடியும். ஆனால் அதிலே கவனம் செலுத்தக்கூடிய அளவுக்கு சர்க்கார் போக்கு இல்லை. இது போன்று நடப்பதற்காக இன்றைக்கு போலீஸ் இலாகா இருக்கிறதே தவிர, மற்றப்படி முயற்சி எடுத்து நடத்தக்கூடிய அளவுக்கு இல்லை. உடனுக்குடன் இலாகாவில் நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இப்படி பல ஊழல்கள் தொடர்ந்து ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதேபோன்று மது விலக்கை எடுத்துக்கொள்ளலாம். மது விலக்கு இன்றைய தினம் வெற்றிகரமாக நடக்கிறதா என்று பார்க்கும் நேரத்தில், கிடையாது. கள்ளச்சாராயம் காய்ச்சுவது எப்படி மேலும் மேலும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பது நமக்குத் தெரியும். அதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு, கடுமையான தண்டனை விதிக்கும் அளவுக்கு நிலைமை இருந்துவிட்டால் போதாது. இந்த மாதத்தில் இத்தனை வழக்குகள் போட்டாக வேண்டும் என்று மேலேயிருந்து ஓலை உத்திரவு போடும் நேரத்தில், யார் யார் பேரில் வழக்குகளைப் போட வேண்டும், யார் யார் பேரில் போடக்கூடாது என்று வைத்துக்



8th March 1961] [Sri V. K. Kothandaraman]

கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. மாமூல் என்பது சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது. எங்கு போனாலும் வாரம் இவ்வளவு, மாதம் இவ்வளவு என்று அந்தந்த லெவலில் அந்தந்த அளவுக்குக் கொடுக்கவேண்டும் என்ற நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. அது மாத்திரமல்லாமல் இன்றைய தினம் கள்ளச்சாராயம் ஒரு குடிசைத் தொழிலாக மாறி இருக்கிறது. ஒரு தனி நபரினால் முடியாத நிலை ஏற்படுமானால் உடனடியாக மூலதனம் கொடுத்து நடத்தக்கூடிய அளவுக்கு போலீஸ் இலாகா இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஏழை மக்கள், ஏழை ஹரிஜன மக்கள் பேரில் சாராயத்தைத் தெளித்து விட்டு கேஸைப் போடக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் சொல்லலாம் டாக்டர் ஸர்ட்டிபிகேட் கொடுக்கிறார் என்று. பரிசோதனை செய்ததற்குப் பிறகுதானே வழக்கு போடப் படுகிறது என்று சொல்லலாம். இன்றைக்கு பல டாக்டர்களுக்கும் போலீஸ் இலாகாவிற்கும் தொடர்பு இருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். பாதி ராத்திரியில் கொண்டுபோனால், என்ன தொல்லையாகப் போய்விட்டது என்று எண்ணிக்கொண்டு ஸர்ட்டிபிகேட் கொடுத்துவிடுகிறார் என்று நான் மாத்திரம் சொல்லவில்லை, காங்கிரஸ்காரர்களே சொல்லுகிறார்கள் என்று பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறோம். மதுவிலக்கு கமிட்டியில் காங்கிரஸ் அங்கத்தினர்களே சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்று பார்க்கிறோம். இந்த வேலைக்குக் காரணமாக இருக்கின்ற அதிகாரிகள் பேரிலே கடுமையான நடவடிக்கை எடுத்தாலொழிய இந்த இலாகா நல்ல முறையில் நடைபெற முடியாது.

ஆகவேதான் இந்த மதுவிலக்கு எப்படியும் இந்த 10 வருஷத்திலே வெற்றிகரமாக நடத்த முடியவில்லை என்பதை உணருகிற நாம், அதை வெற்றிகரமாக நடத்த எப்படி, என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி நாம் கவனம் செலுத்தவேண்டும். இதில் நாம் படுதோல்வி அடைந்திருக்கிறோம் என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். அது மாத்திரமல்ல. சமீபத்திலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலேகூட, கேரளத்திலே அமைச்சராக இருக்கக்கூடியவர், இது படுதோல்வியாகவே அடைந்திருக்கிறது என்று அந்த மகாநாட்டிலே கலந்துகொண்டு பேசியதாக நாம் பத்திரிகைச் செய்திகளைப் பார்த்திருக்கிறோம். இது பற்றிய உண்மையை நாம் பல ராஜ்யங்களிலும் பார்த்திருக்கிறோம். அமைச்சர்கள் மட்டும் வேண்டுமானால், மதுவிலக்கு நல்ல முறையிலே நடைபெறுகிறது என்று சொல்லலாம். அதே நேரத்திலே இன்றைக்கு கள்ளுக்குப் பதிலாக சாராயத்தைக் காய்ச்சிக் குடிக்கின்ற காரணத்தினால் பல வியாதிகள் ஏற்படுகிறது என்பதைப் பார்க்கின்றோம். இன்றைக்கு டி.பி. வியாதி அதிகமாக ஏற்பட்டிருப்பதற்கு இதுவும் ஒரு அடிப்படையான காரணமாகும். இன்றைக்கு காய்ச்சப்படுகின்ற சாராயத்தைவிட, கள்ளாக இருந்தாலும், அதிலே சத்து இருக்கிறது. அதற்காக கள்ளுக்கடை வைக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. p.m.

(Deputy Speaker in the Chair.)

[Sri V. K. Kothandaraman] [8th March 1961

தவிர, இந்த மதுவிலக்கினல் எப்படி எப்படி பல தொல்லேகளுக்கு கிராமத்தினர் ஆளாக வேண்டியிருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும். இங்கு காங்கிரஸ்காரர்கள் அல்லாதவர்கள் பேரிலே தப்பான கேஸ்கள் போடுவதற்கும் இது உபயோகிக்கப்படுகிறது என்ற அடிப்படையிலே இதை நாம் பார்க்க வேண்டும். ஆகவே இது மதுவிலக்கினல் ஏற்படக்கூடிய பெரிய தீமைகளே எப்படிப் போக்குவது என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும். அந்தக் காலத்தில் மிகக் கொடுமையான சட்டத்தையெல்லாம் பிரிட்டிஷ்காரர்கள் செய்ததுண்டு. அதற்கு முன்னல் ஒரு தப்பு செய்தால், கை, கால், தலே முதலியவை எடுக்கப்படவேண்டும் என்று சட்டத்தில் சொல்வதுண்டு. ஆனல் இந்தக் குடிவெறிப் பழக்கமானது அதைவிட மிகவும் தீவிரமான பழக்கமாக இருந்து வருகிறது. அப்படிப்பட்ட பழக்கமான அது இருக்கின்ற காரணத்தினல் சில காங்கிரஸ்காரர்கள்கூட குடிக்கிறதாக பல சந்தர்ப்பங்களில் பத்திரிகைகளிலே பார்க்கிறேம். ஆகவே இது சம்பந்தமாக அரசாங்கம் அவசியம் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது போன்று, ஒலி பெருக்கி அனுமதி வாங்குவது என்று சொன்னல், அதற்கு பணத்தைக் கட்டி, அனுமதி கொடுக்கும்படி கேட்டாலும் அனுமதி வழங்குவதில் பல கஷ்டங்கள் இன்று ஏற்படுகிறது. அப்படி அனுமதி பெற வேண்டுமானல் அது டி.எஸ்.பி., ஏ.டி.எஸ்.பி., அல்லது டிப்டி எஸ்.பி.-க்கும் போய்வரவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : காங்கிரஸ்காரர்கள் குடிப்பதாகச் சொல்கிருரே, அப்படிச் சொல்லலாமா ?

DEPUTY SPEAKER : பத்திரிகைகளிலேதான் செய்திகளைப் பார்ப்பதாகத்தான் சொல்கிருர், அது அவர் சொந்த அபிப்பிராயமல்ல.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பத்திரிகைகளில் என்று சொன்னரா அல்லது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் என்று சொன்னரா ?

DEPUTY SPEAKER : பத்திரிகைகளில் செய்தி பார்ப்பதாகத்தான் சொன்னர்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படியே இருந்தாலும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் என்று சொல்வது தவறு என்று சொல்கிறேன். பி.எஸ்.பி. கூட்டத்தில்தான் சொல்லப்பட்டது.

SRI V. K. KOTHANDARAMAN : அவரும் காங்கிரசோடு இணைந்திருக்கக்கூடிய மந்திரிதான். ஆகவே பி.எஸ்.பி. என்று சொல்லி தப்பிக்க முடியாது. இரண்டு பேரும் இணைந்து இருக்கக் கூடியதுதான்.



8th March 1961] [V. K. Kothandaraman]

ஒலி பெருக்கியிலே பேசி காந்திஜி அவர்கள் அந்தக் காலத்திலே லட்சக் கணக்கானவர்களுக்கு சுதந்திரத்தை வாங்கித் தந்தார். இன்றைக்கு உள்ள நிலேமையிலே நாம் 3 மணி நேரத்திற்கு மேல் பேசுவதற்கு உரிமையில்லே. அரிசி 6 அவுன்ஸ், 8 அவுன்ஸ் என்று ரேஷன் கொடுத்துக்கொண்டிருந்தோம், இப்போது அப்படியில்லாமல் மூட்டை மூட்டையாக கொடுக்கப்படுகிறது என்றெல்லாம் சொல்லக்கூடியவர்கள், இப்போது பேச்சுக்கு மட்டும் ரேஷன் வைத்துவிட்டார்கள். இப்படி பேச்சுக்கு ரேஷன் வைத்து பேசக்கூடியதைவிட படுமோசமான ஒரு நிலேமை வேறு ஒன்றுமே இருக்க முடியாது. ஆகவே இன்றைக்கு 2 ரூபாய் அல்லது 3 ரூபாய் பேசுவதற்கென்று லேசென்ஸ் பீஸ் வாங்கினலும், அதைக் கட்டிவிடுவதற்குத் தயார். ஆனல் பேசுவதற்கு மட்டும் ரேஷன் வைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மட்டும் வரையறை வேண்டாம். அதே சமயத்தில் ஒருவர் எவ்வளவு காலம் பேசினலும், கேட்கக் கூடியவர்கள்கூட உட்கார்ந்து கேட்க முடியாத ஒரு நிலேமை இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஜனங்களும் 3 மணி நேரத்திற்கு மேல் உட்கார்ந்து செய்திகளேக் கேட்கக்கூடாது என்ற ஒரு விதியைப் போடுவது போல் ஆகிறது. ஆகவே அதிகாரிகள் இந்தச் சட்டம் இப்படி இருப்பதற்கு பதிலாக, எவ்வளவு நேரமானலும் பேசலாம் என்கின்ற அளவுக்கு சட்டத்தைச் சற்று தளர்த்த வேண்டும். அதோடு இப்படி பேசப்படுவதற்கு லேசென்ஸ் வழங்கக்கூடிய அதிகாரம் டி.எஸ்.பி. அல்லது டிப்டி எஸ்.பி.க்கு என்றில்லாமல், அந்தந்த ஏரியாக்களிலுள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு, பொதுக்கூட்டங்களுக்கு லேசென்ஸ் வழங்குவதற்கு அதிகாரம் கொடுத்தால் அந்தந்த ஏரியாக்களிலுள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும். ஆகவே அந்தந்தப் பகுதி சப்-இன்ஸ்பெக்டர் அல்லது சர்கிள் இன்ஸ்பெக்டருக்கு இந்த லேசென்ஸ் கொடுக்கக்கூடிய அளவுக்கு நிலேமை இருக்கவேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே ஞாபகப்படுத்திக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் போலீஸ்சட்டத்தைக்கூட தலேகீழாக மாற்றி, திருத்தி அமைக்க வேண்டும். காரணம் என்னவென்றல் வெள்ளேக்காரன் காலத்திலே போடப்பட்ட சட்டங்கள் இப்போதும் அப்படியே இருக்கிறது. சுருக்கமாக உதாரணத்திற்காக ஒன்று சொல்கிறேன். ஒரு சண்டை பெண்களிடையே நடந்தது. அந்த சண்டை நடந்த காலத்திலே, ஒரு பெண்ணின் காதிலே போட்டிருந்த கம்மலே கையால் காதை அறுத்து எடுக்கப்பட்டது. ரத்தம் கொட்டியது. அந்த வழக்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போன நேரத்திலே அவர்கள் என்ன பண்ணுகிறர்கள் என்பதைப் பார்த்தால் கேஸ் எடுத்துக் கொள்ள முடியாது. கத்தியால் அறுக்கப்பட்டால்தான் கேஸ் எடுத்துக் கொள்ள முடியும் என்ற நிலேமை ஏற்படுகிறது. கையாலே காதை அறுத்துவிடக் கூடிய அளவுக்கு கை இன்றைக்கு கத்தியாக உபயோகப்படுத்தக்கூடிய நிலேமை இருக்கிறது. ஒரு காலத்தில் இப்படி சட்டம் இருந்திருக்கலாம். ஆனல் தற்காலத்திற்கு இது பொருத்தமாக இருக்காது.

இந்த மாதிரி இன்னும் எத்தனையோ இருக்கிறது. ஆகவேதான் இன்றைக்கு இருக்கக்கூடிய போலீஸ் சட்டத்தையும் பெரிய அளவில் மாற்றியமைப்பதற்கு சர்க்கார் முன்னுக்கு வரவேண்டு மென்று தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள் கிறேன்.

* **SRI M. A. MUTHIAH CHETTIAR :** உப தலைவர் அவர்களே, போலீஸ் மான்யத்தைப் பற்றிப் பேசும்போது, உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த போலீஸ் மான்யத்தை ஆத ரித்துப் பேசுகையிலே எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. என்னவென்றால் இந்த 30 வருஷமாக இந்த சட்டசபையில் போலீஸ் இலாகா மந்திரி கொண்டுவந்த பிரேரபணைக்கும், இப் போது நடக்கும் போலீஸ் விவாதத்திற்கும் எவ்வளவோ வித்தி யாசம் இருக்கிறது. அப்போது இருந்ததைப் போல் இப்போது ஒன்றுமே இல்லை. எந்தக் காலத்திலும் இப்போதுள்ளதைப் போல் விவரங்கள் சொல்லக்கூடத் தேவையில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. முப்பது வருஷத்தில் போலீஸ் அமைச்சர் அவர் கள் கொண்டுவரக்கூடிய இந்த டிமாண்டிலே இதுவரையில் எவ்வளவோ காரசாரமான பேச்சுக்கள் எல்லாம் கேட்டிருந்த போதிலும், இப்போது சொல்வதையெல்லாம் பார்க்கும்போது கிட்டத்தட்ட பாராட்டக்கூடிய நிலைமைதான் இப்போது ஏற்பட்டி ருக்கிறது என்று நினைக்கிறேன்.

இப்போது கொடுத்துள்ள வெட்டுப் பிரேரபணையைப் படித்துப் பார்த்தேன். அதை ஆதரித்து ஒரு நண்பர் பேசினார். அதற்குப் பிறகு நான் பேசுகிறேன். அவர்கள் பேசும்போது, போலீஸ்காரர் கள் ஆளும் கட்சியை அனுசரித்து நடந்து கொள்ளுகிறார்கள், காங்கிரசில் மெம்பர்களாகச் சேரும்படி சொல்கிறார்கள், அதோடு கூட்டங்களுக்கு லைசன்ஸ் கொடுப்பதிலே மிகவும் தாமதம் செய் கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். எனக்குத் தெரிந்த அளவில் 4 வருஷங்களுக்கு முன்னால், 9 வருஷங்களுக்கு முன்னால் இரண்டு பெரிய தேர்தல்கள் நடந்தது. அப்போதெல்லாம் இந்த போலீஸ்காரர்களைப் பற்றி எதிர் கட்சிக்காரர்கள் ஒன்றும் புகார் சொல்லவில்லை. ஆனால் இத்தனை வருஷகாலம் கழித்து இப்போது புகார் சொல்கிறார்கள். பொதுவாக இப்போது சொல்ல வேண்டு மானால், போலீஸ்காரர்கள் கொஞ்சம் சாப்ட் (soft) ஆக, தேசிய உணர்ச்சியோடு பணியாற்றி வருகிறார்கள் என்றுகூட சொல்லலாம். போலீஸ்காரர்கள் இப்போது மக்களிடத்திலே ஒரு குடும்பம் போலவே பழகி வருகிறார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். (**SRI K. ANBAZHAGAN : Soft towards ruling party**). It is a questionable question. அபிப்பிராயம் இல்லா விட்டால் இப்போது பேசுவதற்கே இடமில்லை. இப்போது ஆங்காங்கு போலீஸ் ஸ்டேஷன்கள் அதிகமாக ஏற்படுத் தப்பட்டு, மக்களுக்கு நல்ல முறையிலே சேவை செய்து வருகிறார்கள். அதே சமயத்தில் ஜனங்களையும் பாராட்ட வேண்டும். இதிலே முன்புள்ளதைப் போல் போலீஸ்



காரர்களுக்கு அவ்வளவு வேலை வைக்கவில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்? போலீஸ் இலாகாவிலே செய்கின்ற சேவையை நாம் சரியாக பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது நம்முடைய நாட்டிலே உள்ள பல ராஜ்யங்களோடு நாம் சென்னை ராஜ்யத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மற்ற ராஜ்யங்களைவிட சென்னை ராஜ்யத்தின் உள்துறை இலாகா ரொம்பவும் அமைதியாக இருந்து வருகிறது என்பதைப் பார்க்க லாம். அதற்காக உள்துறை அமைச்சர் அவர்களையும், இந்த இலாகாவிலுள்ள எல்லோரையும், பெரிய அதிகாரிகளையும், குறிப்பாக ஐ.ஜி. முதல் எல்லோரையும் நாம் பாராட்ட வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு பெரிய பொறுப்பு இருக்கிறது. ஜனத் தொகை ஜாஸ்தியாக இருக்கிறது. இந்த நிலைமையில் அவர்கள் செவ்வனே பணி புரிகிறார்கள். பெரிய குற்றங்கள் இப்பொழுது நம் நாட்டில் இல்லை. வழிப் பறி கிடையாது. காவல் பந்தோ பஸ்து நன்றாகச் செய்துவருகிறார்கள்.

ராணி அம்மையார் அவர்கள் வந்திருந்தபொழுது போலீஸார் செய்திருந்த ஏற்பாட்டை பாராட்டவேண்டும் என்று நானே நினைத்துக்கொண்டிருந்தேன். இந்த வெட்டுப் பிரேரபணையில் ராணி அம்மையார் விஜயத்தின்போது செய்யப்பட்டிருந்த போலீஸ் ஏற்பாடுகள் 'நாட் அடிகுவேட்' என்று சொல்லுகிறார் கள். சென்னை நகர போலீஸ் மட்டுமல்ல, வெளியூர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கில் இங்கு வந்து நல்ல பணி புரிந்திருக்கிறார்கள். பத்து மணிக்கணக்கில் நின்று நல்ல சேவை செய்திருக்கிறார்கள். ஒரு லட்சக் கணக்கில் ஜனக்கூட்டத்தை சமாளித்திருக்கிறார்கள். ஒரு இடத்தில்கூட 'ஸ்டாம்பீட்' கிடையாது. ஒரு குழந்தைகூட கெட்டுப்போய்விட்டது என்பது கிடையாது. அவ்வளவு அமைதி யாக நிலைமை இருந்தது. இந்த வெட்டுப் பிரேரபணை ராணி அம்மையார் விஜயத்தின்போது போலீஸார் செய்த பணியை பாராட்டுவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தது. மக்களே இதை ரொம்ப அழகாக பந்தோபஸ்து செய்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்; நான் மட்டும் சொல்லவில்லை. இவ்வளவு கூட்டத்தில் போலீஸார் அமைதியாக இருந்து செவ்வனே பணி புரிந்தார்கள் என்று மக்களே சொல்லுகிறார்கள். அவர்கள் கையில் 'லத்திகளைக்' கூட நான் பார்க்கவில்லை.

ஆனால் ஒன்று சொல்லுகிறேன். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நானும் அதை ஆமோ திக்கிறேன். கவர்ன்மெண்டார் போலீஸ்காரர்களுக்கு பல இடங் களில் பல வீடுகளை கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களை பாராட்டுகிறேன். ஆனால் இன்னும் அவர்களுக்காக அதிகமான வீடுகளை கட்டிக்கொடுக்கவேண்டும் என்று சொன்னதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அதோடுகூட, இன்னும் பல இடங்களில் போலீஸ் நிலையங்களும் ஏற்பட வேண்டும்.

[Sri M. A. Muthiah Chettiar] [8th March 1961

மற்றொன்று, டிராபிக் இப்பொழுது ரொம்பவும் அதிகமாக இருக்கிறது. ஆயிரக்கணக்கில் லாரிகள், கார்கள் அதிகமாகியிருக்கின்றன. ரோடு வசதிகள் செய்துகொடுத்து, டிராபிக்கை மாற்றி, கண்டிரோல் செய்யவேண்டும். நான் பல தடவை இதுபற்றி என்னுடைய அபிப்பிராயத்தை உள்துறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். ரோடு இலாகாதான் ரோடுகளைப் போடவேண்டும் என்று அவர் நினைத்தால், நான் சொல்லுகிறேன் டிராபிக்கும், ரோடும் ஒரே விஷயம்தான். 'பை-பாஸ்' ரோடுகள் போடவேண்டும். அச்சரப்பாக்கத்தில் 'பை-பாஸ்' ரோடு போட்டிருக்கிறார்கள். சிறிய ஊர்களிலே கிராமங்களுக்குள்ளே பஸ்கள் போவதற்குத் தேவையே கிடையாது. அந்த ஊருக்குப் போகக்கூடியவர்கள் 3, 4 பேர்கள்தான் பஸ்ஸில் இருப்பார்கள். அதற்காக பஸ் ஊருக்குள் போகவேண்டிய அவசியம் இல்லை. 'பை-பாஸ்' ரோடுகள் போட்டால் 'ஆக்ஸிடெண்டுகள்' குறையும். ஆகவே 'பை-பாஸ்' ரோடுகள் போடுவதற்கு பல இடங்களில் ஏற்பாடு செய்யவேண்டும்.

ஸ்லம்ஸ் அதிகமாக ஏற்படக்கூடாது என்ற அபிப்பிராயம் இருந்தாலும் சரி, ஜனங்கள் அதிகமாக இருக்கக்கூடாது என்ற அபிப்பிராயம் இருந்தாலும் சரி, ரோடு வசதிகள் செய்து டிராபிக்கை நன்றாக கண்டிரோல் செய்யவேண்டும். பெரிய லாரிகளை ஸிட்டிக்குள் விடக்கூடாது. ஆவடி, தாம்பரம், செங்கல்பட்டு, அரக்கோணம் போன்ற இடங்களில் 'சாடிலைட் டவுன்களையும்', 'கோடவுன் டவுன்களையும்' ஏற்படுத்தவேண்டும். நவதானியங்களைக் கொண்டு செல்லும் லாரிகள் சென்னைக்கு வந்து போய்க்கொண்டிருக்கிறது. சென்னைக்கு வராமல் அந்தப் பக்கத்திலிருந்து அப்படியே போவதற்கு இரண்டு ரயில்வே லைன்கள் போடவேண்டும். செங்கல்பட்டு, ஆவடி, தாம்பரம், அரக்கோணம் ஆகிய இடங்களில் 4 'கோடவுன்' டவுன்களை ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால் 2 லட்சம் ஜனங்கள், 4 லட்சம் ஜனங்கள் சென்னையை விட்டுப் போய்விடுவார்கள். லாரி ஓட்டுபவர்கள், கிளீடர்கள், வொர்க்ஷாப்பில் வேலை செய்பவர்கள், கூலிக்காரர்கள் இவர்கள் எல்லோரும் போய்விடுவார்கள். லாரி டிராபிக் குறையும். சில லாரிகளுக்கு சில ஊர்களுக்குத்தான் லைசென்ஸ் கொடுக்கவேண்டும். பம்பாயில் ஏற்படுத்தியிருப்பதுபோல் 'டிராபிக் லேன்ஸ்' ஏற்படுத்தவேண்டும். அகலமான வீதிகளில்தான் அம்மாதிரி 'டிராபிக் லேன்ஸ்' ஏற்படுத்த முடியும். டவுன்களில் மூலைகளை சீர்திருத்தம் பண்ணவேண்டும். நான்கு, 5 மாதங்களாகப் பார்க்கிறேன். சில இடங்களில் மூலைகளை சீர்திருத்தம் செய்து கொண்டு வருகிறார்கள். சி.ஐ.டி. இதைச் செய்யலாம். ஆனால் 'சி.ஐ.டி.' இதைச் செய்ய ஆரம்பித்தால் அவதூறு சொல்லுவார்கள். போலீசுக்கே அதை விட்டுவிடுவது நல்லது, அவர்கள் அதை நன்றாகச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

நம்முடைய சென்னை ராஜதானியின் போலீஸ் இலாகாவை மக்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தேர்தல் வருகிறது. போன எலக்ஷனிலும் சரி, அதற்கு முந்திய எலக்ஷனிலும் சரி, ஒருவிதமான 'கம்ப்ளெயிண்டும்' கிடையாது. எல்லா கூட்டங்களுக்கும் போலீஸ் நல்ல முறையில் லைசென்ஸ் கொடுத்தார்கள். ஒரு கட்சிக்கு மட்டும் உதவி செய்தார்கள் என்ற பேச்சே வரவில்லை. வரப்போகிற எலக்ஷனிலும் அவர்கள் முறையாக நடந்து கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பந்தோபஸ்து செய்யவேண்டியது அவசியம். பெண்மணிகள் வோட்டுப் போடுவதற்கு வருவார்கள். அதற்கு பந்தோபஸ்து செய்தாக வேண்டும். என்னுடைய அபிப்பிராயத்தில், பம்பாய், கல்கத்தா போன்ற மற்ற மாகாணங்களைவிட சென்னை ராஜதானியிலுள்ள போலீஸ் இலாகா நன்றாக திறமையாகப் பணிபுரிந்து வருகிறது. அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்—



8th March 1961] [Sri M. A. Muthiah Chettiar]

'Success of democracy is to be measured by the rule of law, to the extent the rule of law prevails'.

'ரூல் ஆப் லா' என்றால் உயர் நீதி மன்ற ஜட்ஜ்மெண்டு என்றுதான் பெரும்பாலும் அர்த்தம். ஆனால், நான் சொல்லுவது—

'that includes the administration of the Police Department'.

ஜனநாயகம் வெற்றி அடையவேண்டுமென்று நினைத்தால் அமைதி இருக்கவேண்டும். அப்பொழுதுதான் பல திட்டங்களை நிறைவேற்ற முடியும். இல்லாவிட்டால் அடிதடி, கலாட்டா இவைகளைக் கவனிப்பதிலேயே நேரம் போய்விடும். போலீஸ் இலாகா திறமையாக வேலை செய்வதற்காக அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM: கனம் தலைவர் அவர்களே, கனம் போலீஸ் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தப் போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். காவல் படையினர் என்று சொல்லும்பொழுது, அவர்கள் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு, நிறைந்த வேலைகளைச் செய்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. நாட்டிலே அவர்களுடைய பொறுப்பு மிக உயர்ந்ததாக இருக்கிறது. நாட்டை பாதுகாப்பதிலிருந்து வீட்டைப் பாதுகாப்பது வரையிலும், ஒவ்வொரு தனிப்பட்ட மக்களை பாதுகாக்கும் வரையிலும் அவர்களுடைய பொறுப்பு இருக்கிறது என்று சொன்னால், மக்களுக்காகவும், நாட்டிற்காகவுமே அவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு தொண்டுக்கும் நாம் எந்த விதத்தில் அவர்களுக்கு நம்முடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளவேண்டும் என்று நினைத்தாலும், அதற்கு வார்த்தைகள் வரவில்லை. அவர்களுடைய தொண்டானது உயர்ந்த முறையிலே அமைந்திருக்கிறது என்று சொன்னால், அதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் மக்களிடையே ஒழுங்கையும், சட்டத்தையும் நிலை நாட்டவேண்டும். ஒரு இடத்திலே கலவரம் ஏற்பட்டால், காலாகாலத்தில் அங்கு

[Srimathi P. K. R. Lakshmikantham] [8th March 1961

சென்று அவர்கள் நியாயம் வழங்குவதிலும், கொள்ளை, கொலை நடைபெறுகிற இடங்களுக்குச் சென்று அங்கு நியாயத்தை நிலைநாட்டுவதிலும் அவர்கள் தங்களுடைய கடமைகளை மிக நல்ல முறையிலே ஆற்றிவருகிறார்கள். அவர்களுடைய கடமை உணர்ச்சியைப் பார்க்கும்பொழுது, அவர்களுக்கு கொடுக்கிற ஊதியம் மிகவும் குறைவு என்று அந்த வகையில் எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னால், அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிற வீடுகள் போதாது என்று சொன்னால், அதையும் ஒத்துக்கொள்ளுகிறோம். அவர்களுக்கு எந்த வகையிலே நன்மையைச் செய்யவேண்டும் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னால், அதை நாங்கள் ஒத்துக்கொள்ளுவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், எதை எடுத்துக்கொண்டாலும் சரி, ஆளும் கட்சிக்காக போலீஸ்காரர்கள் உபயோகப்படுத்தப்படுகிறார்கள் என்கின்ற ஒரு பேச்சைத் தவிர, இந்த போலீஸ் மானியத்திலே மற்ற பேச்சை எதிர்க்கட்சிக்காரர்களிடத்தில் காணோம். எனக்கு முன்னால் பேசிய குடியாத்தம் தொகுதியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது, தங்களை காவல் படையினர் நிழல்போல் பின்னால் தொடர்ந்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு நம்முடைய அரசாங்கத்திற்கு உண்டு. காவல் துறையினருக்கு உண்டு. ஆகவே, இந்த நாட்டிலே நிலவிவருகின்ற ஐந்தாம் படையினர்களிடமிருந்து நாம் எப்படி நாட்டைப் பாதுகாக்கவேண்டும் என்று கருத்தான முறையிலே அவர்கள் விஷயங்களைச் சேகரிப்பதினால் எந்தவிதமான தவறும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

**SRI M. KALYANASUNDARAM:** இந்தப் பிரச்னைகளைப் பற்றி பதில் சொல்லுவதற்கு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அம்மையார் அவர்கள் பேசும்பொழுது நான் குறுக்கிட விரும்பவில்லை. இருந்தாலும் இந்த மாதிரி வார்த்தைகள் அந்த அம்மையாரின் வாயால் வரக்கூடாது.

**SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM:** நாட்டை பாதுகாக்கக்கூடிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. காவல்துறையினருக்கும் உண்டு என்பதை நான் இந்தச் சபையிலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். மேலும், 10, 12 வருஷங்களுக்கு முன்பு இருந்த காவல் துறையினருக்கும், இப்பொழுது இருக்கிற காவல் துறையினருக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. அன்று சட்டத்தையும், ஒழுங்கையும் மட்டும் நிலைநாட்டிக்கொண்டிருந்தார்கள் காவல் படையினர்கள். இன்று அவர்கள் மக்களுடைய தொண்டர்களாகவும் விளங்குகிறார்கள். அவர்களுடைய பொறுப்பானது விரிந்திருக்கிறது. ரிசர்வ் போலீஸ் என்று சொல்லக்கூடியவர்கள் தங்களுக்கு பணி இல்லாத நேரத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரோடுகள் போடுகிறார்கள். இன்னும் பல கிராமங்களுக்குச் சேவை செய்யும்பொழுது அவர்களுடைய உதவியைக் கொண்டு ரோடுகள் போடப்படுகின்றன, இன்னும் பலவித பணிகள்



8th March 1961] [Srimathi P. K. R. Lakshmikantham]

செய்யப்படுகின்றன. அதே போன்று, இப்பொழுது ராஜ்யத்திலே சொல்லப் போனால், யாராவது கீழே விழுந்து காயம் பட்டால், போலீசுக்குப் போன் செய்து அவர்களை ஆஸ்பத்திரிகளுக்கு போலீசாரே அனுப்பக்கூடிய விதிகள் பல இருக்கின்றன. அவர்களுக்கு மரியாதை வாரம் என்று நடத்தி மக்களிடம் மரியாதையாகவும், நல்ல முறையிலேயும் நடந்துகொள்ள பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் செய்யும் இந்தத் தொண்டு, பனி, வெயில் என்று பாராமல் தங்களுக்குள்ள சகல சுக போகங்களையும் விட்டு விட்டு, அவர்கள் அல்லும் பகலும் கால்கடுக்க நின்று மணிக்கணக்காக காவல் காக்கவே இருக்கிறார்கள். மனிதர்கள் தான் அவர்களும் என்று நினைத்து அவர்களைப் பாராட்டவில்லை என்று சொன்னால், அவர்கள் எப்படித்தான் மனமுவந்து தங்கள் தொண்டினை நிறைவேற்றுவார்கள் என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே, அதில் சற்றுக் கவனம் செலுத்த வேண்டும். அப்படி கடுமையாக உழைப்பவர்களுக்கு ஆளும் கட்சி, எதிர்க் கட்சி இருவர்களும் தங்கள் பாராட்டுதலைத் தெரிவிப்பது அவர்கள் கடினமான உழைப்பைச் செய்ய ஒரு தூண்டுதலாக இருக்கும். ஆளும் கட்சியினர் தங்களுடைய உதவிக்காகவும், செல்வாக்குக்காகவும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அவர்கள் எல்லோருக்கும் எத்தனையோ விதத்தில் பயன்படுகிறார்கள். ஆனாலும், ஆளும் கட்சிக்கு அவர்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பது வேண்டும் என்றே சொல்லப்பட்ட குற்றச் சாட்டு என்றுதான் கருதுகிறேன். சென்ற தேர்தலில் ஆனாலும் சரி, மற்ற தேர்தலிலானாலும் சரி, எங்கள் நகரத்தைப் பொறுத்த வரை, அங்குள்ள போலீஸ் உத்யோகஸ்தர்கள், நியாயமான முறையிலேயே நடந்து வந்திருக்கிறார்கள். கூட்டம் போட லைசென்ஸ் கொடுப்பதிலும், ஆளும் கட்சிக்காரர்களானாலும் சரி, எதிர்க்கட்சிக்காரர்களானாலும் சரி, ஒருதரம் ஒருவருக்கு லைசென்ஸ் கொடுத்துவிட்டார்கள் என்றால், மற்றவருக்கு அன்றைக்கே அதே இடத்திற்கு லைசென்ஸ் கொடுக்க மறுத்து விடுவார்கள். ஆளும் கட்சிக்காரர்களாகவே இருந்தாலும் சரி, அடுத்த ஞாயிற்றுக்கிழமை உங்கள் கூட்டத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுவார்கள். ஆகவே ஆளும் கட்சிக்கென்று ஒரு தனிச் சலுகையும் காட்டுவதில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்த போலீஸ் துறையினரைப் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கிறது. எவ்வளவு கஷ்டத்திற்கும், அபாயத்திற்கும் உள்ளானாலும், கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது என்று தெரிந்தால் அந்த இடத்திற்குச் சென்று, அவர்களைக் கண்டுபிடித்து, எந்த முறையிலே சட்டப்படி தண்டனைக்குள்ளாக்க வேண்டுமோ அப்படிச் செய்கிறார்கள். ஒரு சில இடத்திலே சில குறைகள் இருக்கலாம். அப்படிப் பார்த்தால் எல்லாத் துறையிலும் சில குறைகள் இருக்கத்தான் செய்யும். அதை வைத்துக்கொண்டு போலீஸ் துறை அவ்வளவும் அப்படித்தான் என்று மதிப்பிடுவது உகந்ததல்ல, பொருத்தமல்ல. கண்ணாரக் கண்டிருக்கிறேன்

அவர்கள் தைரியமாகச் சென்று மதுவைக் கைப்பற்றியிருக்கிருர்கள், சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள். பணக்காரர்களுக்கு ஒரு விதம், முதலாளிகளுக்கு ஒரு விதம், ஏழைகளுக்கு மற்ருெரு விதம் என்றெல்லாம் சொல்வது சரியல்ல.

இம்மாதிரிப் பணிபுரியும், தன் பணியில் கண்ணும் கருத்துமாக இருக்கும் நம் போலீஸ்காரர்களுக்கு பல சலுகைகளைக் கொடுக்க வேண்டும்; அவர்கள் குழந்தைகளுக்கும், குடும்பத்தினருக்கும் எல்லாச் சலுகைகளையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**Sri S. M. ANNAMALAI**: கனம் உதவித் தலைவர் அவர்களே, இந்த போலீஸ் இலாகா மானியத்தின்மீது கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 1958-வது வருஷ போலீஸ் இலாகா நிர்வாக அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவற்றைக் கூறும் அறிக்கை. 1959-60-ம் ஆண்டு நிர்வாக அறிக்கை சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு தரப்படவில்லை. அதை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த அறிக்கையில் நம் ஐ.ஜி. அவர்கள் நன்ருகச் சொல்லியிருக்கிருர்கள், குற்றங்கள் அதிகமாவதற்குக் காரணம் லிவிங் இண்டக்ஸ், வாழ்க்கைப் புள்ளி அதிகமாக இருப்பதால்தான் என்று. இதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே நாட்டில் வறுமைதான் அதிகமாக இருக்கிறது என்று புலனுகிறது.

போலீஸ் நன்ருகப் பணி புரிகிருர்கள். ஆனுல் அவர்களை நம் சர்க்கார் துப்பறிய விடுவதில்லை என்பது அறிக்கையிலிருந்து நன்கு விளங்கும். 37 பர்செண்டுதான் இழந்த சொத்துக்கள் மீட்கப்பட்டிருக்கிறது. ஏன் அதிகமாக அவர்கள் மீட்டுக்கொடுக்க முடியவில்லை? அவர்கள் அந்தப் பணியைச் செய்ய விட்டுவைக்கவில்லை. செக்யூரிடி கேசுகளை எடுத்துக்கொண்டால், 109, 110-வது செக்ஷன் கேசுகளை எடுத்துக்கொண்டால், அவைகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாக இருக்கிறது. 132-வது செக்ஷன் வழக்குகள், நீதி மன்றத்திற்குச் சென்ற பிறகு போலீஸ் இலாகாவினர் தவருன வழக்குகளை தயாரித்துவிட்டார்கள் என்று தள்ளப்பட்ட கேசுகள் அதிகம். இதைப் பார்க்கும்போது எத்தனை நிரபராதிகள்மீது தவருக வழக்குகள் தொடரப்பட்டு இருக்கிறது என்பது அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? அவர்களை சரியாகப் பணிபுரிய விட்டுவைக்கவில்லை.

ஐ.ஜி. அவர்கள் கேட்கிருர்கள், டியர்காஸ் கோர்ஸ் அதிகமாகத் தேவையென்று. நாட்டில் அமைதியின்மை என்ற அடிப்படையில் கண்ணீர் புகை கோர்ஸ் அதிகமாகத் தேவை என்று கேட்கிருர்களா? இதை என்னுல் உண்மையிலேயே புரிந்துகொள்ள முடியவில்லை. நிர்வாக அறிக்கையிலிருந்து ஒன்று நன்ருக விளங்குகிறது. போலீசார் நல்ல பந்தோபஸ்து வேலைக்கு உபயோகப்



படுத்தப்படுகிருர்கள் என்று. மத்தியானம் 12 மணிக்கு அமைச்சரவர்கள் வருகிருர்கள் என்ருல், காலை எட்டு மணி முதல் அவர்கள் பசியும் பட்டினியுமாக பாதையில் நிற்கிருர்கள். மொத்தத்தில் மாதத்தில் 25 அல்லது 29 நாட்கள் இவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்கிருர்கள். ஆகவே அவ்வளவு நாட்களும் இந்த போலீசார் பாதைகளில் நின்றுகொண்டு நல்ல பந்தோபஸ்துப் பணி புரிகிருர்கள். வெளி நாட்டிலிருந்து வரும் அதிகாரிகளானுலும் சரி மந்திரிகளானுலும் சரி, எப்பொழுதும் பந்தோபஸ்து வேலைக்கே அவர்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. துப்பறியும் வேலையில் ஈடுபட அவர்களை விட்டு வைப்பதில்லை.

காங்கிரஸ் கட்சிக்கு உடந்தையாக இருக்கவேண்டும் என்று, காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு என்று இவர்கள் பயன்படுத்தப்படுகிருர்கள். வேண்டுமானுல் சொல்லுகிறேன், ஆற்காட்டில் ஒரு வியாபாரி, அமைச்சரவர்களுக்கு வேண்டியவர், நன்ருகத் தெரிந்தவர், அவர் காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ற காரணத்திற்காக சுமார். . . . . .

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: "வேண்டியவர், நன்ருகத் தெரிந்தவர்" என்ருல் என்ன என்று புரியவில்லை. அதை விளக்கிச் சொல்லவேண்டும்.

**DEPUTY SPEAKER**: கனம் அங்கத்தினர் சட்ட சபையில் இல்லாதவர்களைப் பற்றி பேசக்கூடாது.

**Sri S. M. ANNAMALAI**: கட்சியைப் பற்றிச் சொல்லுகிறேன். போலீசாரை காங்கிரஸ் கட்சிக்குப் பயன்படுத்துகிருர்கள் என்பதைச் சொல்லுகிறேன். அவர் ஒரு மர டெப்போ வைத்திருக்கிருர். டி.எஸ்.பி. இருபத்தினுலு மணி நேரத்தில் மாற்றப்பட்டார். இது சம்பந்தமாக மூன்று நான்கு முறை கேள்விகள் போட்டேன். முதல் தரம், ரெஜிஸ்டர் செய்திருக்கிருேம் கேசை என்ருர்கள். இரண்டாவது முறையாகக் கேள்வி கேட்ட போது வழக்கு தொடர்ந்திருக்கிருேம் என்று சொன்னுர். மூன்ருவது முறை கேட்டதற்கு வழக்கு தொடர்ந்துவிட்டோம், ஆனுல் சொத்து யாருடையது என்று தெரியாது என்று சொன்னுர். நான்காவது முறையாக அந்தப் பொருள் யாருடையது என்று தெரியாமல் இருக்கும்போது அதை ஏன் கைப்பற்றக்கூடாது, கைப்பற்றி ஏன் ஏலத்தில் விடக்கூடாது என்று கேட்டதற்கு கனம் அமைச்சர் தைரியமாகச் சொன்னுர், அந்தச் சொத்து அந்த இடத்தில் இல்லை என்று. இப்படியெல்லாம் மனச்சாட்சிக்கு விரோதமாகப் பதில் சொல்லப்படுகிறது. ஆளும் கட்சி இப்படியெல்லாம் பதில் சொல்லலாமா? ஆளும் கட்சிக்கு செல்வாக்கு வேண்டும் என்கிற காரணத்தால் இப்படியெல்லாம் பதில் சொல்லலாமா? உண்மையை மறைத்துச் சொல்வது சரியல்ல. இன்றைக்கு அங்கு சென்று பார்த்தால் நன்ருகத் தெரிய வரும் மரம் அங்கேயே இருப்பது. அந்த மரம் அங்கே இருப்பதினுல் ட்ராபிக்குக்கு இடையூருக இருப்பது நன்ருகத் தெரியவரும். இன்றைக்கு நான் 1 p.m.

அழைத்துச் செல்கிறேன், அங்கு சென்று பார்த்தால் நன்றாகத் தெரியும் அங்கு மரம் இருப்பதும், அது ட்ராபிக்குக்கு இடையூறாக இருப்பதும். இப்படி உண்மையைத் திரித்துக் கூறினால் மக்கள் அதை நம்ப மாட்டார்கள். ஆனால் சட்ட மன்றத்தில் மாற்றுக் கட்சிக்கு விரோதமாகச் சொல்லி விட்டால் உண்மை இல்லாமல் போய்விடாது. மாற்றுக் கட்சிகள் சட்ட மன்றத்தில் வேண்டுமென்றே சொல்லுகிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் நேரடியாகச் சென்று பார்க்கும்போது உண்மை நன்றாக விளங்கும். அதன் விஷயம் மக்களுக்கு நன்றாகப் புரிந்து போகும். ஆகவே சட்ட மன்றத்தில் தவறான வார்த்தைகளைச் சொல்லக் கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் போலீஸ்காரர்களை உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். அந்த முறையில் அங்கு ஆளும் கட்சியைச் சேர்ந்தவராக அந்த வியாபாரி இருப்பதால் அதை மறைத்துக் கூறுகிறார்கள். இப்பொழுதுகூட அந்த மரம் அந்த இடத்தில்தான் இருக்கிறது. அதைப்போலவே வட ஆற்காடு மாவட்டத்தில் வெள்ளம்படுக்கம் என்ற ஒரு இடத்தில் பஞ்சாயத்து தகராறுகள் காரணமாக பெரிய தகராறுகள் நடந்து கொண்டு வருகின்றன. செக்ஷன் 107 படி செக்யூரிட்டி ப்ரொசீடிங்ஸ் மூலம் வழக்குத் தொடரப்பட்டது. அப்படி வழக்கு தொடரப்பட்டிருந்தாலும் அங்கு அமைதி இல்லை என்று மேலும் மேலும் மகஜர்கள் அனுப்பப்பட்டன. பல ரிமைண்டர்களும் அனுப்பி அங்குள்ள டி.எஸ்.பி.-யினிடம் நேரடியாகவும் சொல்லப்பட்டது. அங்கு அமைதியில்லை என்றும், அதன் காரணமாக செக்யூரிட்டி ப்ரோசீடிங்ஸ் மூலம் வழக்கு தொடரப்பட்டிருந்தும் கூட அங்கு அமைதி இல்லாமல் இருக்கிறது என்று தெரிவித்தும் அங்கு ஜாதி அடிப்படையில் அங்கு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பீதி அடைந்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள், அதிலும் பெரிய காங்கிரஸ்காரர்கள், செல்வாக்கு படைத்த காங்கிரஸ்காரர்கள் அங்கு இருப்பதால் போலீஸ்காரர்களால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள முடியவில்லை. அந்த அளவு அங்குள்ள காங்கிரஸ்காரர் செல்வாக்குப் பெற்றிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்த ஊர் அமைதி இல்லாத சீர்கேடான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. அந்த ஊரில் இப்பொழுதுகூட அமைதி இல்லாத நிலையில் இருக்கிறது. அதைப்போலவே பல இடங்களிலும் நாம் பார்க்கிறோம். பத்திரிகைகளிலும் பார்க்கிறோம். எங்கள் கட்சியின் பெயரால் நடைபெறுகிற கூட்டங்களில் காங்கிரஸ்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை அடித்தார்கள் என்றும், கொன்றார்கள் என்றும் அடிக்கடி பத்திரிகையில் வந்துகொண்டிருக்கின்றன. அந்த நிலையில் இன்றைய தினம் ஜனநாயகம் நாட்டில் இருக்கிறது. இந்த நிலை நீடித்துக்கொண்டிருந்தால் நாட்டில் ஜனநாயகம் வளராது. நாட்டில் ஜனநாயகம் வளர்ச்சி அடைய வேண்டுமானால் நியாயமாக இருக்கவேண்டும்





நியாயம் வழங்கப்பட வேண்டும். நியாயத்துடன் நடந்து கொண்டால்தான் நம்பிக்கை இருந்தால்தான் ஜனநாயகம் வளரும். அதை விட்டு விட்டு ஆளும் கட்சிக்கு செல்வாக்கு இருக்கிறது என்ற காரணத்தினால் போலீஸ் இலாகாவை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். இன்றைய நிலைமையில் 37 சத விகிதம் இழந்த சொத்துக்களைத்தான் மீட்டித் தரக்கூடியதாக இருக்கிறது அந்த இலாகா. அந்த நிர்வாகம் அந்த நிலைமையில்தான் இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் போலீஸ்காரர்களை உபயோகப்படுத்திக்கொண்டாலும் நல்ல போலீஸ்காரர்களும்தான் இருக்கிறார்கள். நியாயம் வழங்க வேண்டும் என்றும் சிலர் நடந்துகொண்டிருக்கிறார்கள். நீதியாக நடந்துகொள்ளவேண்டும் என்று சில போலீஸ்காரர்கள் நினைத்தால் அவர்களை அந்த இடத்தை விட்டு 24 மணி நேரத்தில் மாற்றி விடுகிறார்கள். அவர்களைப்பற்றி ஏதாவது சொன்னால் "It is confidential report and it should not be leaked out" என்று ஒரு வார்த்தை சொல்லி விடுகிறார்கள். அந்த இலாகா ஆளுகிற கட்சிக்கு சாதகமாக இருக்கவேண்டியதாக இருக்கிறது. அதனால் மக்கள் ரொம்பவும் பீதி அடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய சொத்துக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. எவ்வளவோ ரகசியமாக விஷயங்கள் இருந்தாலும்கூட போலீஸ் இலாகா ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு உதவியாகத்தான் இருக்கிறார்கள். அதனால் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக மது விலக்கு. கனம் கோதண்டராமன் சொன்னார், கேரள அமைச்சர் சொன்னார் என்றும், உத்திர பிரதேச அமைச்சர் குப்தா பதவி ஏற்றுக்கொண்டவுடன் சொன்னார் என்றும் குறிப்பிட்டார்: அதாவது மது விலக்குத் திட்டம் தோற்றுவிட்டது என்று. இந்தத் திட்டத்தை கைவிடவேண்டும் என்று கிளர்ச்சி செய்ததாகவும் சொன்னார். உண்மையிலேயே மது விலக்குத் திட்டம் தோற்றுப்போய் விட்டது. இது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். சமீபத்தில்கூட அந்தத் திட்டம் நல்ல முறையில் அமுல் நடத்தப்படவேண்டும் என்று சட்டம் இயற்றினோம். அதன் பலன் என்ன ஆயிற்று. ப்ரொகிபிஷன் கமிட்டி கூட்டத்தில் என்ன சொல்லப்பட்டது என்றால் புதுச் சட்டத்தின் விளைவாக வழக்குகள் குறைந்துபோய் விட்டன என்று சொல்லப்பட்டது. வழக்குகள் குறைந்துபோனாலும் உடைபடுகிற பானைகளுக்குக் குறைவு இல்லை. பானைகளும் அதிகப்படியாக உடைபடுகின்றன, ஊறல்களும் அதிகமாக கொட்டப்படுகின்றன. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. வழக்குகள் தொடரப்பட்டால் அங்கு 100 அல்லது 50 ரூபாய் தண்டனை விதிக்கிறார்கள். அதனால் அந்த அபராதப் பணத்தை வாங்கிக்கொண்டு எங்களுக்குக் கொடுத்துவிடுங்கள் அங்கு கொடுக்கக்கூடிய அபராத பணத்தை எங்களுக்குக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லி வாங்கிக்கொண்டு விடுவதால் வழக்குகள் தொடரப்படுவது இல்லையேயொழிய, வழக்குகள் இல்லாமல் இல்லை. மது விலக்கு கேஸ்

[Sri S. M. Annamalai] [8th March 1961

களைப் பற்றி தகவல் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படி
தகவல் கொடுத்தால் தகவல் கொடுத்தவர்களுக்கே அது ஆபத்
தாக முடிகிறது. அங்குள்ள டி.எஸ்.பி.-க்கு தகவல் கொடுத்தால்
யாரைப்பற்றி தகவல் கொடுக்கிறோமோ அவரிடமே அதைப்பற்றி
விசாரிக்கச் சொல்லுகிறார்கள். இன்னார், சாராயம் காய்ச்சுகிறான்
என்ற தகவலைக் கொடுத்தால் தகவல் கொடுத்தவருக்கு ஆபத்து
வந்துவிடுகிறது. களம்பூர், போளூர் முதலிய இடங்களில் இதைப்
பற்றி தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. கான்பிடென்ஷியல் ரிப்
போர்ட் வந்தவுடன் போலீஸ்காரர்கள் என்ன செய்கிறார்கள்
என்றால் இன்னார் அதாவது அண்ணாமலை உங்களைப்பற்றி புகார்
செய்திருக்கிறார் என்று சொல்லிவிடுகிறார்கள். ரகசியமாக எழுதி
னாலும் அவர்கள் தகவல் கொடுத்துவிடுகிறார்கள். அதன் பலன்
என்னவாகிறது என்றால் அன்று இரவே என்னுடைய மோட்டார்
ஷெட்டிலுள்ள சாமான்கள் இருக்காது. பம்பு செட்டுகள் இருக்
காது. திருட்டுப் போய்விட்டது என்று புகார் செய்தால் அதைப்
பற்றி என்ன செய்யமுடியும், இப்படிப்பட்ட சாமான்களை கண்டு
பிடிப்பது என்பது முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். ரகசிய
மாகத் தகவல் கொடுத்தாலும் பம்பு செட்டுகள் முதலியவைகள்
காணாமல் போய்விடுகின்றன. அதனால் மது விலக்கு சம்பந்தப்
பட்ட மட்டில் புகார் கொடுக்கவே முடியவில்லை. அப்படிக் கொடுத்
தாலும் அந்தக் குற்றத்தை செய்கிறவர்கள் காங்கிரஸ்காரர்களாக
இருந்துவிட்டால் யாராவது கதர் சட்டை போட்டுக்கொண்டிருக்
கிறவரிடம் சென்று சிபாரிசு செய்யச்சொல்லி வழக்குத் தொட
ராமல் பார்த்துக்கொள்ளுகிறார்கள். இந்த நிலைமையில் மது
விலக்குத் திட்டம் அமுல் நடத்தப்படுகிறது. உங்களைப்பற்றி
திராவிட கழகத்தைச் சேர்ந்த அண்ணாமலை புகார் செய்திருக்
கிறார்கள் என்று போலீஸ்காரர்கள் சொல்லிவிடுகிறார்கள். மது
விலக்குத் திட்டத்தை உண்மையிலேயே திராவிட முன்னேற்றக்
கழகம் வரவேற்கிறது. இதனால் மக்கள் நல்ல வாழ்வு வாழ்
கிறார்கள். மக்களுடைய பொருளாதாரம் உயர்ந்திருக்கிறது
எவ்வளவோ வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள். அதனால் அதை
நாங்கள் வரவேற்கிறோம். மது விலக்குத் திட்டம் நல்ல முறையில்
செயல்பட வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக்
கழகத்தின் நோக்கம். அந்த உண்மை நோக்கத்துடன்தான் நான்
இதைச் சொல்லுகிறேன்.

அடுத்தபடியாக பே கமிஷன் ரிபோர்ட். அதன் மூலம்
போலீஸ்காரர்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை.
குறைந்த பட்சம் ஐந்து ரூபாயாவது கிடைக்கவேண்டும் என்று
ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். அந்த முறையில் ஐந்து ரூபாயாவது
யாருக்காவது கிடைத்திருக்கிறதா என்று பார்த்தால் சொம்பப்
பேர்களுக்குக் கிடையாது. இரண்டு மூன்று ரூபாய்தான் அடைந்
திருக்கிறார்கள். சர்க்கார் ஜி.ஓ.-வில் குறிப்பிட்டபடி சிலருக்குக்
கிடைக்கவில்லை. இன்க்ரிமெண்டை எடுத்துக்கொண்டால் ஆறு
வருஷங்கள் சர்வீஸ் போட்டும்கூட increments சிலருக்குக்



8th March 1961] [Sri S. M. Annamalai]

கிடைக்கவில்லை. அதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்யவேண்டும்
என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிலருக்கு நான்கு ரூபாய்கூட
கிடைக்கவில்லை.

அடுத்தபடியாக அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய டி.ஏ., ஆன
ரோரியம் 1959-60-ல் செலவழித்த பணத்தைவிட 1960-61-ம்
வருஷத்தில் டி.ஏ. ஆனரோரியம் வகையில் 8½ லட்சம் ரூபாய்
குறைந்து இருக்கிறது. அப்படி குறைக்கப்பட்டு வரவு செலவு
திட்டத்தில் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. அப்படி குறைந்த
தற்குக் காரணம் என்ன? அதிகப்படியாக சுற்றுப் பிரயாணம்
செய்யக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார்களா? அந்தப்
பணத்தைக் குறைக்கவேண்டிய காரணம் என்ன? அதற்கு என்ன
காரணம் என்பதை கனம் அமைச்சர் எடுத்துச்சொல்லவேண்டும்,
விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுகின்ற கூட்டங்
களுக்குச் சுருக்கெழுத்தாளர்களை அனுப்புகிறார்களே தவிர ஆளும்
கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகின்ற கூட்டங்களுக்கு அனுப்பு
வது கிடையாது. அது சரியல்ல. எல்லாக் கட்சிக்காரர்களுடைய
பொதுக் கூட்டங்களுக்கும் சுருக்கெழுத்தாளர்களை அனுப்பி—
ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களையும் உள்ளிட்டு யார் ஒழுங்கு
மீறிப் பேசினாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள
வேண்டும். அதோடு இன்றையதினம் வேலூரில் மட்டும்தான்
சுருக்கெழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அப்படியின்றி ஒவ்வொரு
மாவட்டத்திலும் இரண்டு இரண்டு சுருக்கெழுத்தாளர்கள் இருக்
கும்படியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்தபடியாக இன்னொன்று. இப்போது "போலீஸ் நாய்
கள்" என்று வைத்திருக்கிறோம். எனக்கு என்னமோ இந்தப்
பெயர் பிடிக்கவில்லை. மிகவும் அவமானமாகக்கூட இருக்கிறது.
போலீஸ் என்ற சொல்லை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக
துப்பறியும் நாய் என்று பெயரை மாற்றி வைக்கவேண்டும்.
மேலும் இந்தத் துப்பறியும் நாய்களை குறைந்தபட்சம் ஒவ்வொரு
மாவட்டத்திற்கும் இரண்டு இரண்டாவது வைக்கவேண்டும்.
அதேபோல் இன்றையதினம் வேலூரில்தான் பிங்கர் ப்ரின்ட்
பீரோ இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இந்த
நிபுணர்களை இரண்டு இரண்டு பேர்களாக வைக்கவேண்டும் என்று
சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.
வணக்கம்.

**Sri P. S. CHINNADURAI**: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர்
அவர்களே, நம்முடைய ராஜ்யத்திலே சர்க்கார் நிர்வாகத்தின்
கீழே பணியாற்றி வரக்கூடிய பல்வேறு இலாகாக்களிலே மிகவும்
முக்கியமான இலாகாவாக, மக்களுடைய பாராட்டுதல்களுக்குப்
பொதுவாக உரித்தான ஒரு இலாகாவாக இருந்துவருவது
போலீஸ் இலாகா. இதை நான் பன்முறை இந்த மன்றத்தில்

[Sri P. S. Chinnadurai] [8th March 1961

எடுத்துக் கூறி வந்திருக்கிறேன். இவ்வாறு காவல் துறையினரது சாதனைகளைக் குறித்து, பொதுவான ஒழுக்கத்தைக் குறித்து, பொதுவாக நாணயத்தைக் குறித்துப் பேச இருக்கக்கூடிய நிலையிலே இங்கே போலீஸ் உயர்தர அதிகாரிகள் அமர்ந்திருப்பது ஒருவகையில் தர்ம சங்கடமாக இருக்கிறது. ஆனால் உண்மையாக நான் நம்புகிறேன். முகஸ்துதியான பேச்சுக்களிலோ, அல்லது அதிதீவிரமான அவதூறுப் பேச்சுக்களிலோ தங்களுடைய மனத்தை இலக்கு ஆக்கிவிடக்கூடிய அளவிலே அவர்கள் பொது ஒழுக்கம் அவ்வளவு தாழ்ந்துகிடக்கவில்லை என்பதினாலே அவர்கள் இந்த இடத்தில் இருப்பதனாலே தவறு இல்லை என்ற கருத்துக்கும் இடம் அளிக்கிறேன்.

காவல் துறையினருக்கு அளித்துவருகின்ற பலவகையான சலுகைகள் விஷயத்தில் சர்க்கார் இன்னும் சரியான கவனம் செலுத்த வேண்டுமென்பது என்னுடைய முதலாவது கோரிக்கையாகும். காவல் துறையினருக்கு வீடு கட்டுகின்ற திட்டத்தைச் சரிவர நம்முடைய சர்க்கார் இதுகாறும் நிறைவேற்றி வைக்கவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில்கூட சுமார் 80% காவல் துறையினருக்குத்தான் வீடுகள் இருக்கும் என்ற நிலைமையை நாம் காண்கிறோம். இதனை நூற்றுக்கு நூறு சாத்தியமாக ஆக்கிவிட முடியாதா என்பதை சர்க்கார் ஆராய்ந்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடுகள் கட்டினால் அந்த வீடுகளுக்கு மின்சார வசதி அளிக்க வேண்டுமென்பது இப்போது எல்லோரும் இயல்பாக நினைக்கிறதாக இருக்கிறது. ஆனால் என்றைக்கோ ஒரு காலத்தில் காவல் துறையினர் விடுதிகளுக்கு மின்சார வசதி அளிப்பதில்லை என்று முடிவு செய்திருந்தார்கள் என்றால் அதே விதியை இந்தக் காலத்திலும் பின்பற்றக்கூடாது. உடனடியாக காவல் துறையினர் விடுதிகளுக்கு எல்லாம் மின்சார வசதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. கோவை மாநகரத்தில் காவல் துறையினருக்கு கட்டப்பட்ட ஒரு காலனியை கனம் நிதி அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அவர்களிடத்தில் அப்போது காவல் துறையினர் சார்பாக ஒரு வேண்டுகோள் விடப்பட்டது. இந்தக் காலனியில் மின்சார விளக்குகள் போடக்கூட சர்க்கார் அனுமதி அளித்துவிட்டார்கள். ஆனால் பல்புகள் இல்லை. அதற்கு உதவி செய்யவேண்டும் என்றார்கள். அது ஒரு சின்ன விஷயமாகும் என்று அப்போது நினைத்தேன். ஆனால் அப்போது அங்கு வந்திருந்த மராமத்து இலாகா உயர்தர அதிகாரி ஒருவர் அது உண்மைதான் என்றும் ஒப்புக்கொண்டார். அதோடு 1940-ம் ஆண்டு போடப்பட்ட உத்தரவுப்படி பல்பு விநியோக விஷயத்தில் சங்கடம் இருந்து வருகிறது. அந்த உத்தரவு தளர்த்தப்பட்டு, இன்னும் தாராளமாக நடந்துகொள்ள வகை செய்தாலொழிய



8th March 1961] [Sri P. S. Chinnadurai]

இந்தச் சங்கடம் நிலவும் என்றார். அப்படி ஏதாவது உத்தரவு இருக்குமானால் இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், தயவு செய்து அந்த உத்தரவை தளர்த்த வேண்டும், தாராளமாக பல்புகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று.

காவல் துறையினருக்கு வருமானம் குறைவானது என்பதில் ஐயமில்லை. அவர்களில் பலருடைய குடும்ப வருமானத்தைப் பெருக்க சர்க்கார் தரிசு நிலங்களை அவர்களுக்கு விநியோகிக்கத்தக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அந்நிலங்களால் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பாடுபட்டு குடும்ப வருமானத்தைப் பெருக்கிக்கொள்வார்கள். அதேசமயம் உணவு உற்பத்தியும் அதிகப்படுவதற்கு வழியேற்படும். இதனைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

காவல் துறையினர் சம்பந்தமாக கனம் முத்தையா செட்டியார் அவர்கள் மிக அழகாகக் குறிப்பிட்டார்கள். முன்பெல்லாம் இப்படிப்பட்ட மானியக் கோரிக்கை வருகிறபோது சட்டசபையே அமளிபடும் என்று அநுபவ ரீதியாகச் சொன்னார்கள். இப்போதும் ஒன்றிரண்டு குறைகளைப் பற்றி எனது நண்பர்கள் குறிப்பிட்டார்கள். இவ்வளவு பெரிய இலாகாவில் அடியோடு குறைகள் இல்லாமல் இருக்கும் என்று நான் கூறமாட்டேன். எங்காவது ஒருசில குறைகள் இருக்கத்தான் செய்யும். நாம் என்ன கவனிக்க வேண்டுமென்று கேட்டால் காவல் துறையினரது பொது ஒழுக்கம், பொது நாணயம் எத்தகையது என்பதைத்தான் பார்க்க வேண்டும். அவர்களுடைய பொதுத் திறமை பாராட்டுவதற்குரியதா இல்லையா? மேலும் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோமா, இல்லையா என்பதை நன்கு ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கப் போனால் அரசாங்கத்தின் ஏனைய இலாக்காக்களோடு ஒப்பிடுகிறபோது அவர்களுடைய பொது ஒழுக்கம் சிறந்தது, பொது நாணயம் சிறப்பானது, பொதுத் திறமை அதிகமானது, மேலும் மேலும் அவர்களுக்கு அதிக ஊக்கமும், வசதிகளும் அளிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் முத்தையா செட்டியார் குறிப்பிட்டது போல எனக்கு முந்தைய போலீஸ் அநுபவம் உண்டு. இப்போதைய போலீஸ் அநுபவமும் உண்டு. இப்போதைய போலீஸ் அநுபவமும் இருக்கிறவன். முந்தைய போலீசுக்கும், இப்போதுள்ள போலீசுக்கும் இருக்கக்கூடிய மிகப் பெரிய வேறுபாட்டை நான் உணர்கிறேன். ஜனநாயகத்திற்கு ஏற்றபடி, ஜனநாயகக் கொள்கைகளுக்கு ஏற்றபடி இவர்கள் தங்களுடைய பண்பை நிறைய வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. காவல் துறையினரைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் ஆளும் கட்சியினர் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ள இயலாதவனாக இருக்கிறேன்.

[Sri P. S. Chinnadurai] [8th March 1961

கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் நடைபெற்ற கலவரங்களின்போது ஒருசில சம்பவங்கள், அப்படிப்பட்டவை தெரிந்தோ தெரியாமலோ எப்படியோ நேர்ந்திருந்தபோதிலும் அதுபோன்ற சம்பவங்கள் பல சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சியினாலோ அல்லது ஆளுகிற சர்க்காரினாலோ பயன்படுத்திக்கொள்ளப்படவில்லை என்பதுதான் என் அபிப்பிராயம். ராமநாதபுரம் ஜில்லாவில் நடைபெற்ற பிரசித்தி பெற்ற கலவரங்களின்போது போலீஸ் எப்படி அரசாங்கத்தால் கையாளப்பட்டது என்பது குறித்து எனது கடுமையான ஆட்சேபணைகளை இந்த மன்றத்திலேயே நான் தெரிவித்திருக்கிறேன். அதற்கு பிற்பாடு பார்த்தால் உண்மையிலேயே போலீஸை தங்கள் கட்சி நலனுக்காக பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று ஆளும் கட்சியின் பேரில் குறை சொல்லக்கூடிய நிலை எனக்கில்லை என்று நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கோவை ஜில்லாவில் நான் பெற்ற அனுபவங்களிலிருந்து ஆளும் கட்சியினர் சில சந்தர்ப்பங்களில் தவறாக போலீஸை பயன்படுத்திக்கொள்ள முயன்றாலும்கூட போலீஸார் அதற்கு உடன்படாமல்தான் இருந்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சியினர் என்று கூறும்போது அவர்கள் சந்தர்ப்பவசத்தால் அந்தக் கட்சிக்கு வந்து விட்டார்களேயல்லாது அந்தக் கட்சியே அப்படித்தான் இருக்கும் என்று அடியோடு குறை கூற நான் தயாராயில்லை. சந்தர்ப்பவசத்தால் சேர்ந்தவர்கள், ஒன்றிரண்டுபேர்கள், அப்படிப்பட்டவர்கள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்கள் கட்சிக்காக, ஒவ்வொரு இலாகாக்களை பயன்படுத்திக்கொள்ள முற்படுவதைப் பார்க்கிறோம். அப்படி எண்ணிப்பார்க்கிற நேரத்தில் சந்தர்ப்பவசத்தால் ஆளும் கட்சியில் சேர்ந்துவிட்ட ஒரு சிலர் போலீஸை தங்கள் நலனுக்காக, கட்சி நலனுக்காகக் கூட அல்ல, தங்கள் சொந்த நலன்களுக்காக பயன்படுத்திக்கொள்ள முற்படுகிற நேரத்தில் மன உறுதியோடு நின்று, மேலே உயர்தர அதிகாரிகளிடம் எங்களுக்கு செல்வாக்கு இருக்கிறது, அமைச்சர்கள் எங்களுக்கு சாதகமாகயிருக்கிறார்கள் என்று சொல்லியும் அவை எதற்கும் பணியாமல் இருந்த காவல் அதிகாரிகளிடம் எனக்கு பரிச்சயம் இருக்கிறது. குறைகள் ஆங்காங்கு இருக்கலாம், ஆனால் அவைகளை வெளியிட்டு கூறினால் அவைகளைத் திருத்திக்கொள்ள காவல் துறையினர் முன்வருவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆக, இந்த அரசாங்கம் ஒரு போலீஸ் ராஜ்யத்தை நடத்துகிறது என்றளவில் குற்றம் சொல்ல முடியாத ஒரு நிலையில் செயல்படுகிற ஒரு இலாகா இருக்கிறதெனில் என்னைப் பொறுத்தவரையில் உறுதியாகச் சொல்வேன், காவல் துறைதான் அது என்று. முத்தையா செட்டியார் அவர்கள் நன்கு கூறினார்கள், கடந்த தேர்தலின்போது அவர்கள் பாரபட்சமின்றி நடந்துகொண்டதுபற்றி. ஒருவிதமான கலவரமும் ஏற்படாதவாறு பார்த்துக்கொண்டது மட்டுமின்றி, ஒரு கட்சி சார்பாகவும் இல்லாது செயல்பட்டார்கள் என்று கூறினார்கள். அதைப் பாராட்டுகிறேன். பல்வேறு தொகுதிகளிலும் அதை நான் நேரில் கண்டேன். காங்கிரஸ் கட்சிதான்



8th March 1961] [Sri P. S. Chinnadurai]

அப்பொழுது ஆட்சியில் இருந்து வந்தது. மீண்டும் காங்கிரஸ் அரசாங்கம்தான் வரும் என்ற நிலைமை சென்ற தேர்தலின்போது நிச்சயமாக, வெளிப்படையாக தெரிந்திருந்தபோதிலும் அந்நிலைமையில்கூட காவல் துறையைச் சார்ந்தவர்கள் ஒரு போதும் அரசாங்கக் கட்சி சார்பிலோ அல்லது எதிர்கட்சியைச் சார்ந்தவர்களுக்கு கெடுதல் செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடோ பணியாற்றியதாக ஒருபோதும் மனச்சாட்சி பூர்வமாக என்னால் சொல்ல முடியவில்லை. ஆக, கெட்ட பழக்கத்தால் பாதிக்கப்படாத, திறமையான ஒரு இலாகா நமக்கு இருக்கிறதென்றால் அது காவல் துறைதான். அவர்களுக்கு நாம் இன்னும் பல சௌகரியங்கள் செய்துகொடுக்கவேண்டும். தனிப்பட்ட வாழ்வில் மட்டுமல்ல, அவர்களுக்கு வேண்டிய பயிற்சி கொடுக்கப்படவேண்டும். இங்கிலாந்து நாட்டின் போலீஸ்தான் மிகத் திறமையாக தெரியாது. நிதியமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அது குறித்து எனக்குக் கூட அதை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்கள். அந்நிலையில் நமது தமிழ்நாட்டு காவல் துறையினர் உயர்வதற்கு வேண்டிய பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும். பிரிட்டிஷ் அரசியார் சென்னை மாநகருக்கு வந்திருந்தபோது இரண்டு மூன்று தினங்கள் காவல் துறையினர் ஆற்றிய பணி மிகவும் போற்றத்தக்கது. முதல் தினத்தன்று மிகப் பெரிய கூட்டத்தை சமாளிப்பதற்கு முடியாத நிலையில் போலீஸார் சிரமப்பட்டதை நானே நேரில் பீச் ரோடில் கண்டேன். அவர்களால் முடியவில்லை. உயர்தர அதிகாரிகள் முயன்றும் முடியவில்லை. காரணம் என்னவென்று ஆழ்ந்து பார்த்தபோது, நம்மிடம் பொறுப்பு வேண்டும் என்ற எண்ணத்தை உணர்ந்தேன். கார்களை, போலீஸ் சொன்ன போக்கில் ஓட்டாமல் அவரவர்கள் விருப்பத்திற்கேற்றவாறு ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு போகவேண்டுமென்ற ஆசை காரணமாக—அந்த ஆசை இயல்பாகயிருக்கலாம்—அப்படி ஆசை இருந்தாலும் அதை கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும். ஒருவரை ஒருவர் முந்திக்கொள்ள முயன்றதின் காரணமாக போக்குவரத்து பெரிய அளவில் தடைப்பட்டது. அந்த போக்குவரத்துத் தடையில் சிக்கிக் கொண்டவர்களில் நானும் ஒருவன். போக்குவரத்துத் தடையில் சிக்கிக் கொண்ட மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் உள்பட நாங்கள் அதிலுள்ள சிக்கலை உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆனால் அதற்கு போலீஸ்தான் காரணம் என்று கூறினால் அது அவ்வளவு சரியல்ல. ஒழுங்காக நடந்துகொள்ளக்கூடிய முறைகளை நாம் அறிந்துகொள்வது உபயோகமாகயிருக்குமென்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். பிரிட்டிஷ் அரசியார் இங்கு வந்திருந்த காலத்தில் 10,000 போலீஸார் ஈடுபட்டதாக கேள்விப்பட்டேன். பல மாவட்டங்களிலிருந்தும் இங்கு அவர்கள் பந்தோபஸ்திற்காக வந்தார்கள் என்று கேள்விப் பட்டேன்.

DEPUTY SPEAKER: The hon. Member, Sri P. S. Chinnadurai can continue his speech to-morrow. The time is up.

[8th March 1961

SRI P. S. CHINNADURAI : இன்னும் சிறிது நிமிடங்கள்தான் இருக்கிறது, நானே 1-30 வரை பேசி முடித்துவிடுகிறேன்.

DEPUTY SPEAKER : All right.

SRI A. GOVINDASAMI : ஆதரித்துப் பேசுகிறார் அல்லவா?

SRI P. S. CHINNADURAI : அவரவர்கள் கருத்தைச் சொல்ல எங்கும் இடமிருக்கிறது. ஒருவரை ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ பேசுவதில்லை, உண்மையைத்தான் இங்கு பேசுகிறேன், உண்மையை மறைக்க என்னால் முடியவில்லை. அவர்களுக்கு அன்றாட தினசரிப் படி, அவர்களின் செலவிற்கான படி சரியாகக் கொடுக்கப்படவில்லை என்று அறிந்தேன். இது சம்பந்தமான உத்தரவுகூட பண்டைக்கால உத்தரவுபோல் இருக்கவேண்டு மென்று நினைக்கிறேன். புகாரியில் போய் சாப்பிடுவதற்குள்ள பணம் கொடுக்காவிட்டாலும், உடுப்பியில் சாப்பிடுவதற்கான பணமாவது கொடுங்கள். அதற்கு வேண்டிய பணம் எவ்வளவு என்பதை அறிந்து அதையாவது கொடுங்கள். இதற்கும் கீழே கொடுத்தால் அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு இருப்பதற்கு இடமும், சாப்பிடுவதற்கு சாப்பாடும் கொடுத்து விட்டால் அவர்கள் பணம் கேட்கமாட்டார்கள். அதைச் செய்வதை விடுத்து குறைவான பணம் கொடுத்தால், அதனால் அவர்கள் கட்டி வளர்க்க விரும்புகிற நல்ல பண்புகளுக்கு நாமே மாசு கற்பிக்கக் கூடியவழியைத் திறந்து விடுவோம். அந்த நிலையை உண்டாக்கக் கூடாது. அந்நிலை இந்த ஆண்டோடு போகவேண்டும். அண்ணாமலை அவர்கள் கேட்டார்கள், டி.ஏ.-யை எதற்காக குறைத்திருக்கிறீர்கள் என்று. அதை சர்வர் கவனித்து வேண்டியது செய்யவேண்டும். பின், மது விலக்கு சம்பந்தமாக இங்கு கருத்து தெரிவிக்கப்பட்டது. புவனேஸ்வரியில் நடைபெற்ற பிரஜா-சோஷியலிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் மதுவிலக்கு சம்பந்தமாக, கேரள அமைச்சர் அவர்கள், கேரளாவில் அது எப்படி அமுலாக்கப்பட்டு வருகிறது என்பது சம்பந்தமாக தமது கருத்துக்களை வெளியிட்டார்கள். இள வயதுடைய அவர் அக்கருத்தை வெளியிட்டது குறித்து நாங்கள் ஆச்சரியப்பட்டோம். பின்னால் விசாரித்ததில் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. இதற்கு முன்பிருந்த மந்திரி சபை கடைப்பிடித்த கொள்கை காரணமாகத்தான் அவர் அப்படி பேசவேண்டிவந்ததென்று. பின்னர், நீங்கள் அவசரப் பட்டு விட்டீர்கள், இளம் ரத்தம், நிதானமாக ஆராய்ந்து பார்த்தால் மதுவிலக்கு மூலம் நன்மைதான் ஏற்படும், அதை வெற்றிகரமான முறையில் அமுல் நடத்த முடியும் என்பதை நாம் நிரூபித்து காட்ட முடியும் என்று அவரோடு, அவர் பேசி முடிந்தவுடன் விவாதித்தவன் நான். நான் சொன்னவற்றை ஒப்புக் கொண்டு சென்றிருக்கிறார்கள். உறுதியாக நின்று தமது திறமை முழுவதையும், இளமை முழுவதையும், சக்தி முழுவதையும் அதற்காக உபயோகப்படுத்தப் போகிறேன் என்றுதான் சொல்லிவிட்டு அவர் போயிருக்கிறார்கள். மதுவிலக்கு குற்றங்கள் அதிகரித்துவிட்டது என்பதற்காக மதுவிலக்குத் திட்டத்தையே நிறுத்தி விடுவது என்று சொல்வது சரியல்ல. அந்தக் குற்றங்களை களைந்தெறிய முடியும். அப்படி அதைக் களைந்தெறிவதில் நாம் நமது வல்லமையை வெளிப்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதை விடுத்து மதுவிலக்குபற்றி புனர்பரிசிலனை செய்யவேண்டுமென்று பேசுவது அவ்வளவு சரியானதல்ல. மதுவிலக்குத் திட்டத்தினால் உண்மையில் பலன் அடைந்திருக்கிறது உழைப்பாளி மக்கள்தான். கிராமங்களில் இருக்கின்றவர்களாக இருந்தாலும் சரி, தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றவர்களாக இருந்தாலும் சரி, மதுவிலக்குக் கொள்கையின் காரணமாக உண்மையாகவே நல்ல பலனை அடைந்திருக்கிறார்கள். ஆகவே நாட்டிலே ஒரு சுபிட்சமான நிலைமையை ஏற்படுத்துவதற்கு மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக அமல் நடத்துவதில் எல்லாக் கட்சிகளும் ஆதரவு கொடுக்கவேண்டும். இதில் ஏதாவது தோல்வி இருந்தால் கூட அதை வெளிப்படையாக இந்தத் திட்டம் தோற்றுப்போய் விட்டது என்று சொல்லாமல் இருப்பதே இதற்காகச் செய்யும் ஒரு பெரிய வேலையாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



8th March 1961] [Sri P. S. Chinnadurai]

DEPUTY SPEAKER : The discussion on this Demand will be continued to-morrow.

The House will now adjourn and meet again to-morrow at 8-30 a.m. 1-30 p.m.

The House then adjourned.

## VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A.—Statutory Rules and Orders.*

175. *Notification issued with Government Order Press No. 4682, Revenue, dated 16th November 1960 under the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 [Laid on the Table of the House under Section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959)].*

### *B.—Reports, Notifications and other papers.*

Nil

TAMIL NADU ASSEMBLY LIBRARY
No. 61377
V211,31 N61
N62.4035

APPENDIX.

[Vide answer to starred question No. 556 asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly held on 8th March 1961, page 461 supra.]

| *Name of the hostel.* (1) | *Year.* (2) | *Vegetarian (average).* (3) | | *Non-vegetarian (average).* (4) | |
|---|---|---|---|---|---|
| | | RS. | NP. | RS. | NP. |
| Madras Medical College, Men Students' Hostel, Madras. | 1959–60 | 52 | 00 | 66 | 00 |
| Do. | 1960–61 (Up to end of October 1960). | 52 | 00 | 68 | 00 |
| Madras Medical College Women Students' Hostel, Madras. | 1959–60 | 57 | 00 | 63 | 09 |
| Do. | 1960–61 (Up to end of October 1960). | 56 | 00 | 60 | 00 |
| Stanley Medical College, Men Students' Hostel, Madras. | 1959 | 46 | 26 | 58 | 21 |
| Do. | 1960 (Average for ten months). | 48 | 21 | 60 | 97 |
| Stanley Medical College. Women Students' Hostel, Madras. | 1959 | 45 | 50 | 54 | 60 |
| Do. | 1960 (Average for ten months). | 46 | 86 | 55 | 69 |
| Kilpauk Medical College Hostel (both Men and Women Section), Madras. | 1959 | 48 | 00 | 53 | 00 |
| Do. | 1960 | 50 | 00 | 55 | 00 |
| | | (Contract mess for 6 months from January to April, July and August 1960). | | | |
| | | 47 | 67 | 65 | [illegible] |
| | | (Students mess cost for June and September onwards.) | | | |
| Madurai Medical College and * Thanjavur Medical College, Madurai. (Men and Women Students' Hostels.) | 1959 | 65 | 00 | 65 | 00 |
| Do. | 1960 | 65 | 00 | 65 | 00 |

* As the buildings of the Thanjavur Medical College are under construction, the students of the Thanjavur Medical College are accommodated at the Madurai Medical College and are messing in the hostels of Madurai Medical College, Madurai.

## LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
Messrs. CITY BOOK COMPANY, Madras-4.
Messrs HIGGINBOTHAMS, LIMITED, Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY Madras-1.
Messrs. VENKATARAMA & Co., Madras-1.
Messrs. M. DORAISWAMY MUDALIAR & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapetta, Madras-14.
Messrs. THE FREE INDIA CO-OPERATOR'S AGENCY Madras-4.
Messrs. PALANI & Co., Triplicane, Madras-5.

### IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
Messrs. THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTER, PUBLISHER AND BOOK-SELLER, Madurai
J. J. M. BOOK DEPOT AND STATIONERY EMPORIUM, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore North Arcot district.
Messrs. MUTHAMIZH MANRAM, Mayuram.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. PALANI PRACHURAM, BOOKSELLERS, Clock Tower, Pudukkottai.
Messrs. S. KRISHNASWAMI & Co., Tiruchirappalli district.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli district.
Sri M. DURAIRAJ, CENTRAL STORES, Main Road, Manapparai, Tiruchirappalli district.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. S. NELLAI PUTHAKA NILAYAM, BOOK SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction
Sri B. ARULDOSS. Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. THE EDUCATIONAL SUPPLIES COMPANY, Coimbatore (R.S. Puram).
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross-Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Messrs. SIVALINGA VILAS, BOOK DEPOT, Erode, Coimbatore district.
Messrs. ARIVU NOOLAGAM, BOOK-SELLERS, Market, Ootacamund, Nilgiris.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district

### IN OTHER STATES.

Messrs. S. VENKATARAMIAH & SONS, VIDYANIDHI BOOK DEPOT, Mysore, South India
Messrs. PANCHAYAT SAMACHAR, Gutala, West Godavari district.
Messrs. BOOK-LOVERS (PRIVATE), LIMITED, Guntur and Hyderabad.
Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. M. SESHACHALAM & Co., Masulipatnam, Krishna district.
Messrs. THE COMMERCIAL LINKS, Governorpet, Vijayavada, Krishna district.
Messrs. GUPTA BROTHERS, Visakhapatnam.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. C. M. JOSEPH & SONS, Trichur.

PRINTED AND PUBLISHED BY THE CONTROLLER OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.

1191